ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்




தமிழ் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
உ தி
அச்சகம்

MADURAI KAMARAJ UNIVERSITY
DR. T.P. MEENAKSHISUNDARAN LIBRARY
MADURAI-625 021.

Call Number

Accession Number 207865

Available for loan from

This book should be returned on or before the date last marked below.

Due date	Reg.No. of the member	Due Date	Reg. No. of the member
11 OCT 2013 15318			
23 JUL 2014 15079			

திரிசிரபுரம் மகாவித்துவான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்

Forwarded free of Cost, on behalf of the
Compliments of the Department of
Education Government of India New Delhi

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
எழுதியது.

DR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
நிழற்படப்பதிப்பு - 1986.

பதிப்புரிமை பெற்றுள்ள டாக்டர் உ . வே சாமிநாதையரவர்கள்
நூல்நிலையத்து ஆட்சிக் குழுவினரின் ஒப்புதல் பெற்று
இம்மறுபதிப்பு வெளியிடப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 45.

திருவள்ளுவர் ஆண்டு 2017 மாசி ; பிப்ரவரி 1986

ஆசிரியர் : உ . வே. சாமிநாதையர்

நூல் : ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

விலை : உரூ 120 -

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

உ

ஸ்ரீ தாயுமானவர் துணை

திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான்

திரிசிரபுரம்

ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

சரித்திரம்

இது

ஸ்ரீ பிள்ளையவர்கள் மாணாக்கர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் - உ. வே. சாமிநாதையரால்

எழுதப்பெற்று,

வெகுதான்யவரு ஆடிமீ

1938

முதற் பாகம்

DR. T.T.M. LIBRARY
M.KAMARAJ UNIVERSITY

இப்புத்தகத்தில் அடங்கியவை.

க. முகவுரை .... ix—xx

உ. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் — முதற் பாகம் ... க - ஙஙசு

1. முன்னோரும் தந்தையாரும் .... க - சு

மதுரையின் பெருமை - முன்னோர் நிலை - தந்தையார் - சிதம்பரம் பிள்ளை கணக்காயரானது - பழையகாலப் பள்ளிக் கூடங்கள்.

2. இளமைப் பருவமும் கல்வியும் .... எ - கரு

பிள்ளையவர்கள் ஜனனம் - சிதம்பரம் பிள்ளை சோம ரசம்பேட்டையில் இருந்தது - கல்வி பயிலத்தொடங் கல் - கல்விகற்ற முறை - செய்யுள் இயற்றப் பயிலு தல் - கல்விவளர்ச்சிக்குக் காரணம் - ரங்கபிள்ளை யென்பவரின் முயற்சி - நெல்லைப்பற்றிப் பாடிய சிலேடை - தந்தையார் பிரிவு - விவாகம்.

3. திரிசிரபுர வாழ்க்கை .... கரு - உ

சோமரசம்பேட்டையை நீங்கியது - புல்வர்கள் பழக் கம் - வித்துவான்கள் - பிரபுக்கள் - வேலாயுத முனி வர் முதலியோரிடம் பாடங்கேட்டது.

4. பிரபந்தங்கள் செய்யத் தொடங்கல் .... உக - உஎ

திட்டகுடிப் பதிகம் - திருவூறைப் பதிற்றுப்பத்தந் தாதி - மயில் ராவணன் சரித்திரம்.

5. திருவாவடுதுறைக்கு வந்தது .... உஎ - ஙசூ

சிவதீட்சையும் மணிகலிங்க பூஜையும் பெற்றது - கச்சியப்பமுனிவர் நூல்களைப் படித்தது - பட்டீச் சுரம் வந்தது - பசுபதி பண்டாரம் பரீட்சித்தது - பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி - திருவாவடுதுறை யை அடைந்தது - வேலூர் ஸ்ரீசுப்பிரமணிய தேசி கர் இயல்பு - ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரி சித்தது - திரிசிரபுரம் மீண்டது.

6. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி முதலியவற்றை இயற்றியது .... சஅ - நடு

லட்சுமண பிள்ளையென்பவரின் இயல்பு - திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி - திருவானைக்காத்திரிபந்தாதி - திரிசிராமலை யமக அந்தாதி - ஸ்ரீ அகிலாண்ட நாயகிமாலை - அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்.

7. சென்னைக்குச் சென்று வருதல் .... நடு - எக

சென்னைக்குச்செல்ல விரும்பியது - சென்னை சேர்ந்தது - சென்னை வித்துவான்களின் பழக்கம் - மழவை மகாலிங்கையரைச் சந்தித்தது - அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் அச்சிடப்பட்டது - 'நீங்கள்' என்பதற்குப் பிரயோகம் காட்டியது - திரிசிரபுரம் மீண்டது.

8. கல்வியாற்றலும் செல்வர் போற்றலும் .... எக - எசு

புதல்வர் ஜனனம் - பட்டீச்சுரம்போய் மீண்டது - 'புத்தகத்தை வாசித்தால் அழுகை வருமோ?' - சுப்பராயசெட்டியாரைச் சோடசாவதானி யாக்கியது - பிரபுக்கள் பாடங்கேட்டல்.

9. அம்பலவாண முனிவரிடம் பாடங்கேட்டல் .... எசு - அக

திருவாவடுதுறை சென்றது - அம்பலவாணமுனிவர் இயல்பு - அம்பலவாணமுனிவரிடம் பாடங்கேட்டது.

10. பெரியபுராணப் பிரசங்கமும் பாடஞ் சொல்லுதலும் .... அக - அகூ

மாணாக்கர்களிடத்து அன்பும் பாடஞ் சொல்லுதலில் விருப்பமும் - பெரியபுராணப் பிரசங்கம் - தியாகராச செட்டியார் - அரன்வாயில் வேங்கட சுப்புப் பிள்ளை - திருவீழிமிழலைச் சாமிநாத கவிராயர்.

11. சில பிரபந்தங்களும் தியாகராச லீலையும் இயற்றல் அகூ - கஅ

பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி - பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ் - தியாகராசலீலை இயற்றத் தொடங்கியது - சில செய்யுட்கள் இயற்றப்பட்ட வரலாறுகள் - தியாகராச லீலையின் அமைப்பு.

12. சிவதருமோத்திரச் சுவடி பெற்ற வரலாறு .... கo அ - கக சூ

சுந்தரம் பிள்ளையின் இயல்பு - சிவதருமோத்திரச் சுவடிபெற முயன்றது- சுந்தரம்பிள்ளை செய்த தந்திரம்- சுந்தரம்பிள்ளையின்பால் இவருக்கிருந்த அன்பு.

13. பங்களூர் யாத்திரை .... கக சூ - கங o

அருணாசல முதலியார் வீடு வாங்கியளித்தது - களத்தூர் வேதகிரி முதலியார் - உறையூர்ப்புராணம் இயற்றத் தொடங்கியது - பங்களூர்த் தேவராச பிள்ளை பாடங்கேட்க விரும்பியது - பங்களூர் சென்றது - தேவராச பிள்ளை பாடங்கேட்டது- சிவஞான முனிவருடைய தவசிப்பிள்ளையைக்கண்டது- உறையூர்ப்புராணம் பாடிவந்தது - சுசேலோபாக்கியானம் இயற்றியது - சூதசங்கிதை இயற்றியது - திரிசிரபுரம் மீண்டது.

14. உறையூர்ப்புராண அரங்கேற்றமும் பல பிரபந்தங்களும் இயற்றலும் .... கங க - கச o

உறையூர்ப்புராண அரங்கேற்றம் - உறையூர்ப்புராண அமைப்பு - பகைவரும் போற்றல் - வித்துவானென்னும் பட்டம் பெற்றது - காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் - கற்குடிமாலை - வாட்போக்கிக் கலம்பகம்.

15. இலக்கண விளக்கம் பாடங்கேட்டது .... கசக - கசடு

இலக்கண விளக்கம் கேட்க விரும்பியது - கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங்கேட்டல் - சிங்கவனம் சுப்பு பாரதியார் முதலியோர் - செவ்வந்திப் புராணம் பதிப்பித்தது - தருமபுர ஆதீனப் பழக்கம்.

16. சில மாணவர்கள் வரலாறு .... கசடு - கடுஅ

மாணவர் வகை - சவராயலு நாயகர் - வேதநாயகம் பிள்ளை பாடங்கேட்டது - வேதநாயகம் பிள்ளை செய்த உதவி- குளத்தூர்க்கோவை- தெய்வநாயகம் பிள்ளை - ஆரியங்காவற் பிள்ளை - அழகிரிராஜு.

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச் சென்றது .... கடுஅ - கசுஅ

சென்னைக்குச்சென்றது - சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை - வியாசைக் கோவை - திருமயிலைப் புராணம்

செய்யத் தொடங்கியது - குளத்தூர் முதலிய இடங்களுக்குச் சென்றது - சிதம்பரேசர் மாலை - திருச்சிரபுரம் மீண்டது - தாண்டவராயத் தம்பிரானவர்கள் பால் பேரூர்ப்புராணம் பெற்றது - மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இவரைப்பற்றி அறிதல் - தாண்டவராயத் தம்பிரானவர்களின் கடிதம்.

18. சீகாழிக்கோவை இயற்றி அரங்கேற்றல் .... கசூஅ-கஅ.அ

சீகாழிக்கு வந்தது - சீகாழிக் கோவை இயற்றியது - உடனிருந்த இருவர் செயல் - சீகாழிக் கோவையை அரங்கேற்றியது - சென்னைப் பிரயாணத்தை நிறுத்திக்கொண்டது - திருத்தில்லையமக அந்தாதி - மகாலிங்கம் பிள்ளை உபசரித்தது - திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் - திருக்குருகாவூர் சென்றது.

19. மாயூர வாஸம் .... கஅஅ-ககூஅ

மாயூர நகரத்தை இருப்பிடமாகக் கொண்டது - வேதநாயகம் பிள்ளை மாயூரம் வந்தது - மாணவர்கள் - மாயூரத்திலிருந்த வித்துவான்கள் - சச்சிதானந்த தேசிகர் மாலை இயற்றியது - நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - தனுக்கோடி முதலியார் - வேதநாயகம் பிள்ளையின் பதத்தைச் சிறப்பித்துப் பாடியது.

20. திருவாவடுதுறையாதீன வித்துவான் ஆகியது .... ககூஅ-உகக

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் முயற்சி - திருவாவடுதுறையாதீன வித்துவானாகியது - பாடஞ்சொல்லுதல் - அம்பலவாண தேசிகர்மீது கலம்பகம் இயற்றியது - மகாவித்துவானென்னும் பட்டம் பெற்றது - மகா வைத்தியநாதையருடைய பழக்கம் - பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளை.

21. பல நூல்கள் இயற்றல் .... உகக-உசஙு

திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் - திருவிடைக்கழிக் குறவஞ்சி - ஆற்றூர்ப்புராண முதலியன - ஆற்றூர்ப்புராணம் - விளத்தொட்டிப் புராணம் - வாளொளிபுற்றூர்ப் புராணம் - அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் - ஆறுமுக நாவலர் நூற்பதிப்புக்களுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - திருக்குறுக்கைப் புரா

ணம் இயற்றியது - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனூர் பதிற்றுப்பத்தந்தாதியும் ஆனந்தக்களிப்பும் - குருபரம்பரை அகவல் - மண்ணிப்படிக்கரைப் புராணம் - சேற்றூர்க்கந்தசாமிக் கவிராயர் - திருவாவடுதுறைக் கந்தசாமிக் கவிராயர் இவர் பாடும் நூல்களிற் பங்குகேட்டது - பந்தர்ப்பாட்டு - கோயிலூர்ப் புராணம்.

22. ரங்கசாமி பிள்ளையைத் திருவாவதுதுறை மடத்திற்கு வரச்செய்தது .... உசநி - உருசு

ரங்கசாமி பிள்ளையின் இயல்பு - அம்பலவாண தேசிகர் ரங்கசாமி பிள்ளையை வருவிக்க விரும்பியது - தஞ்சாவூர் சென்றது - ரங்கசாமி பிள்ளையைக் கண்டது - ரங்கசாமி பிள்ளை மடத்திற்கு வந்துசென்றது - பாலவனப் பதிற்றுப்பத்தந்தாதி.

23. கும்பகோண நிகழ்ச்சிகள் .... உருள - உஅ0

சாமிநாத தேசிகர் - கும்பகோண புராணம் இயற்றத் தொடங்கியது - சிவகுருநாத பிள்ளையின் மனம் வேறுபட்டது - கா. சபாபதி முதலியார் வந்தது - கோமளவல்லித் தாயார் பிள்ளைப்பருவத்தைப் பாராட்டிப்பாடியது - ஒரு சமயோசிதச் செய்யுள் - செய்யுட்களை விரைவிற் பாடியது - அரங்கேற்றத்தின் நிறைவு - மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் - குடந்தைத் திரிபந்தாதி - விஷ்ணுபுராணம் இயற்ற உடன்படாமை - கும்பகோணம் காலேஜிற்குச் சென்று பிள்ளைகளைப் பரீட்சித்தது.

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல் உஅ0 - நஙசு

'நாலடிக்குக் குறையாமற் பாடவேண்டும்' - சூரை மாநகர்ப் புராணம் - ஓர் ஏழை மனிதரால் உபசரிக்கப்பெற்றது - கண்டதேவிப்புராணம் - சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் நடைபெற்ற பாடங்கள் - வன்ரொண்டர் - திருத்துருத்திப் புராணம் - பதிகங்கள் - திருவாவடுதுறை யமகவந்தாதி - புதுச்சேரி சென்றது - தனியூர்ப் புராணம் - பெரியபுராணக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - மாயூரப் புராணம் - ஸ்ரீ காசிரகசியம் - வீரவனப் புராணம் -

கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ் - பிரிந்த மாணவர்கள் - சிவஞான சித்தியார் பதவுரைச் சிறப்புப்பாயிரம் - ஸ்ரீ பிரம்மவித்தியா நாயகி பிள்ளைத் தமிழ்- சாய்வுநாற்காலிப்பாட்டு-திருநாகைக்காரோணப் புராணம் இயற்றத் தொடங்கியது - கோபால பிள்ளையின் தருக்கு அடங்கினமை - சவேரிநாத பிள்ளை - திருநாகைக்காரோணப் புராண அரங்கேற்றம் - ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் - ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் - கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் - திருவாவடுதுறை போய் வந்தது - புராணங்கள் அச்சிடப் பெற்றமை - நாகைக்காரோணப் புராணம் சிறப்பிக்கப்பெற்றது - பொன்னூசற்பாட்டு முதலியன - மாயூரத்துக்குத் திரும்பியது - திருநாகைக்காரோணப் புராண அமைப்பு - சுப்பிரமணிய தேசிகர் மாலையும் நெஞ்சுவிடுதூதும் - வேதநாயகம் பிள்ளை சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்க வந்தது- அம்பர்ப்புராணம் இயற்றத் தொடங்கியது - மாயூரத்தில் வீடுவாங்கியது - திருவிடை மருதூருலா - ஸ்ரீ ஆதி குமர குருபர ஸ்வாமிகள் சரித்திரம் - சுந்தர நாயுடு - கல்லிடைக்குறிச்சி போய்வந்தது - மாயூர வாஸம்.

ங. செய்யுள் முதற் குறிப்பகராதி ஙஙஎ - ஙசo

ச. சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி .... ஙசக-ஙருசு

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உக	அ	குமகுரு	குமரகுரு
சுகூ	க	சென்னைக்குக்	சென்னைக்குச்
கூஎ	ககூ	தியாராச	தியாகராச
கஉக	உரு	சிவாசாரியருடைய	தேவருடைய
கஙக	ச	கிலர்	சிலர்
கஅஉ	எ	குலவுபுகழ்க்	குலவுபுகழ்ச்
உருஎ-எகூ	க	உச	உங
உஅகூ	உக	ஓடியதற்குக்காரணம்	ஓடியது
ஙoசு	ங	காசிரசிகயத்தை	காசிரகசியத்தை

உ

கணபதி துணை

முகவுரை.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

"ஒருமணியை யுலகுக்கோ ருறுதி தன்னை
உதயத்தி னுச்சியை யுருமா னேனைப்
பருமணியைப் பாலோடுஞ் சாடி னேனைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேனை தாகித்
தீங்கரும்பி னின்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை யாவடுதண் டுறையுண் மேய
அரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே."

திருச்சிற்றம்பலம்.

தமிழ் நூல்களை நன்றுகப் பயின்றும் வேறு பாஷைகளில் உள்ள நூற்கருத்துக்களை அறிந்தும் அவற்றின்பாலுள்ள பல வகைச் சுவைகளையும் நுகர்ந்து பிறரும் நுகரவேண்டுமென்னும் அவாவினால் பலவகை நூல்களையும் உரைமுதலியவற்றையும் இயற்றியும் பாடஞ்சொல்லியும் பேருதவி புரிந்த தமிழ்ப்புலவர் கள் பலர் பல்லாயிர வருஷங்களாக இத்தமிழ் நாட்டில் விளங்கி வந்து தங்கள் தங்கள் புகழை நிலைநாட்டி இருக்கின்றனர். தோலா நாவின் மேலோராகிய அவர்களுடைய கைம்மாறில்லாத பேருதவி யினால் தமிழ்மொழி அடைந்த பெருமையும் தமிழரசர்களும் தமிழ் நாட்டினரும் பெற்ற பயனும் அளவில் அடங்குவனவல்ல.

பலர் ஒருங்கு கூடியும் தனித்தனியே இருந்தும் அர சர்களாலும் பிரபுக்களாலும் ஆதரிக்கப்பட்டும் செல்வத்திற் சிறந் தும் வறுமையில் வாடியும் இன்பத்தில் இருந்தும் துன்பத்தில் தோய்ந்தும் தமிழை மறவாமல், "இருந்தமிழே உன்னால் இருந் தேன் இமையோர், விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்" என்ற

வீரத்துடன் விளங்கிய புலவர்களின் பெயர்கள் பல தெரிய வருகின்றன. இக்காலத்தில் பலதுறைகளிலும் உழைத்து ஆராய்ச்சி செய்து பயனடைவோர்களுக்கெல்லாம் அந்தப்புலவர்கள் இயற்றி வைத்துள்ள நூல்களே முக்கிய சாதனங்களாக உள்ளன.

ஆயினும், அவர்களுள்ளே பல புலவர்களின் உண்மை வரலாறுகளே நன்றாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. சிலருடைய வரலாற்றிற் சிலசில பகுதிகள்மட்டும் ஒருவாறு தெரிகின்றன. அவர்களே மிகச் சிறந்தவர்களாக எண்ணிப் பாராட்டிவருகின்றோம். அவர்களுக்கு முன்பு இருந்து விளங்கி அவர்களுடைய அறிவைப் பண்படுத்திய நூல்களே இயற்றிய புலவர்களின் நிலைகள் இன்னும் பலமடங்கு உயர்ந்தனவாக இருக்க வேண்டுமென்பதை நினைக்கும்பொழுது அவற்றையெல்லாம் அறியமுடியவில்லையே என்ற வருத்தம் அடிக்கடி உண்டாகிறது.

தமிழ்ப்புலவர்களின் வரலாறுகள் தமிழகத்தில் ஒரு வரையறையின்றி வழங்குகின்றன. கர்ணபரம்பரைச் செய்திகள் முழுவதையும் நம்ப முடியவில்லை எந்தப்புலவர்பாலும் தெய்விக அம்சத்தை ஏற்றிப்புகழும் நம் நாட்டினரில் ஒரு சாரார் புலவர்களைப்பற்றிக் கூறும் செய்திகளிற் சில நடந்தனவாகத் தோற்றவில்லை. அங்ஙனம் கூறுபவர்கள் அப்புலவர்களுக்கு மிக்க பெருமையை உண்டாக்க வேண்டுமென்பதொன்றனைமட்டும் கருதுகிறார்களே யல்லாமல் நடந்த விஷயங்களை நடந்தபடியே சொல்லுவதை விரும்புவதில்லை. கம்பர் முதலிய சில புலவர்களை வரகவிகளென்றும், கல்லாமலே பாடிவிட்டனரென்றும் ஸரஸ்வதிதேவியின் திருவருளால் அங்ஙனமாயினரென்றும் கூறுவதுதான் பெருமையெனவும், அவர்கள் பழம்பிறப்பிற் செய்த புண்ணியத்தாலும் திருவருளாலும் கிடைத்த நல்லறிவைத் துணைக்கொண்டு பல நூல்களைப் பயின்று செயற்கையறிவும் வாய்க்கப் பெற்று நூல் முதலியன இயற்றினரென்பது சிறுமையெனவும் சிலர் எண்ணுகின்றார்கள். மிகவும் புகழ்பெற்ற ஒரு புலவர் செய்தனவாகத் தெரிவித்தால் அவற்றிற்கு மதிப்புண்டாகுமென்று தாமாகவே கருதி அவருடைய தலையில் பிழைமலிந்த நூல்களையும் உரைகளையும் தனிப்பாடல்களையும் ஏற்றிவிடுகின்றனர்; சரித்திரங்களையும் அவற்றிற்கு ஏற்ப அமைத்துவிடுகின்றனர். ஒருவருடைய வரலாறும் அவர் செய்த நூல் முதலியனவும் வேறொருவ

ருடைய வரலாறுகவும் வேறொருவர் செய்தனவாகவும் வழங்கு கின்றன. தங்கள் தங்கள் அபிமானம் காரணமாகப் புலவர்களின் சாதி, மதம், தொழில், ஊர் முதலியவற்றை மாறுபாடாகக் கூறி அவற்றிற்கு உரியவற்றைக் கற்பித்தவர்களும் உண்டு.. ஆண்பா லாரைப் பெண்பாலாராகவும் பெண்பாலாரை ஆண்பாலாராகவும் மயங்கிக் கூறுவதும் ஒருகாலத்தில் இருந்தவரை வேறொருகாலத் தவராகக் கூறுவதும் பிறவுமாகிய தடுமாற்றங்கள் புலவர்வரலாறு களில் மலிந்திருக்கின்றன. மிகவும் சமீபகாலத்தில் இருந்த புல வர்களுடைய வரலாறுகளிற்கூட இத்தகைய செய்திகள் இருக் கின்றன.

பண்டைக்காலத்தில் முறையாகப் பாடஞ்சொல்லிவந்த வித்து வான்கள் நூலாசிரியர்களுடைய வரலாற்றை மாணாக்கர்களுக்கு முதலிற் சொல்லிவிட்டு அப்பால் நூலை அறிவுறுத்தி வந்தனர்; அதனால்தான் புலவர்களுடைய சரித்திரத்தை எழுதிவைக்கும் வழக்கம் இலதாயிற்றென்று தோற்றுகின்றது. இங்ஙனம் அவ் வரலாறுகள் வழிவழியே வழங்கிவந்தன. முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலும் தவறிய பிற்காலத்தில் ஆசிரியர் வர லாறுகள் பலபடியாக வழங்கத் தலைப்பட்டன. ஒருபுலவர்பால் பாடங்கேட்டவரேனும் பழகினவரேனும் அவருடைய பரம்பரை யினரேனும் அவரது சரித்திரத்தை எழுதிவைப்பது தமிழ்நாட்டில் இல்லாமற்போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே.

தமிழ்ப்புலவர் சரித்திரங்கள் இங்ஙனம் இருத்தலை எண்ணிய பொழுது சங்ககாலம் முதல் சமீபகாலம் வரையில் இருந்து விளங் கிய வித்துவான்களைப்பற்றி ஆராய்ந்து தெரிந்தவற்றைத் தொகுத்து எழுதவேண்டுமென்னும் அவா எனக்கு உண்டா யிற்று. ஆதலின் நூல்களை ஆராயும் பொழுதெல்லாம் ஆசிரி யர்கள் வரலாற்றைப்பற்றித் தெரியவந்தனவற்றையெல்லாம் குறித்துக்கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டேன். வெளியூர் களுக்கு யாத்திரையாகச் சென்றபோது கிடைத்த சிலருடைய வரலாறுகளையும் குறித்துவைத்துக் கொண்டேன். தக்க உதவியும் திருவருளும் இருக்குமாயின் அவற்றை முறையே வெளியிடும் விருப்பம் உண்டு. நிற்க.

எனக்குத் தமிழை அறிவுறுத்தி அதன்பாலுள்ள பலவகை நயங்களையும் எடுத்துக்காட்டி மகோபகாரம் செய்த ஆசிரியராகிய

திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் பற்றி நான் கண்டும் கேட்டும் அறிந்தவைகளிற் சிலவற்றை நண்பர்களிடம் பேசும் பொழுதும் வேறு சில காலங்களிலும் சொல்லி வந்ததன்றி, நான் ஆராய்ச்சிசெய்து பதிப்பித்த சில நூல்களின் முகவுரைகளிலும் தொடர்புடைய சில சரித்திரப்பகுதிகளை எழுதியிருப்பதுண்டு. அவற்றையெல்லாம் அறிந்த தமிழன்பர்கள் பலர் பிள்ளையவர்களுடைய சரித்திரம் முழுவதையும் எழுதி வெளியிட வேண்டுமென்று விரும்பினர்; நேரிற் பழகிப் பாடங்கேட்டும் பிறர்பால் அறிந்தும் நூல்களை ஆராய்ந்தும் பிள்ளையவர்களைப்பற்றி நான் அறிந்தவற்றை எழுதினால் இக்கவிஞர் பெருமானுடைய ஆற்றலை யாவரும் ஒருவாறு அறிந்து கொள்வார்களென்றும் வற்புறுத்தினர். அதனாலும் பிள்ளையவர்கள் திறத்தில் நான் செய்யத்தக்க பணி இதனினும் சிறந்ததொன்றில்லை யென்னும் எண்ணத்தினாலும் சற்றேறக்குறைய 45-வருஷங்களுக்கு முன்பு இந்த முயற்சியைச் செய்யத் தொடங்கினேன்.

'செய்வன திருந்தச்செய்' என்பது அமுத வாக்காதலின் தொடங்கிய முயற்சியை இயன்றவரையில் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டுமென்னும் அவாவினால், நான் அறிந்தனபோக வேறு செய்திகள் கிடைக்கலாமென எண்ணிப் பிள்ளையவர்களோடு பழகிய பலர்பாற் சென்று சென்று விசாரித்தேன்; இவருடைய கடிதங்கள், தனிப்பாடல்கள், நூல்கள் முதலியன கிடைக்குமென்று அறிந்த இடங்களுக்கெல்லாம் சென்றுசென்று தேடினேன்; நான் பார்த்துவந்த வேலைக்கும் நூலாராய்ச்சிகளுக்கும் இடையூறு வராமல், ஒழிந்த காலங்களிலெல்லாம் பலவகையாக முயன்று செய்திகளைத் தொகுத்துவந்தேன். பிள்ளையவர்கள்பால் நான் பாடங்கேட்ட காலத்திலேனும் அதன் பின்பு திருவாவடுதுறை மடத்தில் நான் இருந்த காலத்திலேனும் இவருடைய இளம் பிராய முதற்கொண்டு பழகிய தியாகராச செட்டியார், சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் முதலிய பெரியோர்கள் இருந்த காலத்திலேனும் இந்த முயற்சியை மேற்கொண்டிருப்பேனாயின் இன்னும் எவ்வளவோ அரிய செய்திகளும் செய்யுட்களும் முதலியனவும் கிடைத்திருக்கும்.

இக்கவிஞர் சிகாமணியோடு நெருங்கிப்பழகி இவருடைய பல வகை ஆற்றல்களையும் நேரிற்கண்டு இன்புற்றவர்களுள் ஒருவ ரேனும் இவருடைய சரித்திரத்தை எழுத முயன்றதில்லை. சீவக சிந்தாமணிப் பதிப்பில் திருத்தக்கதேவர் வரலாற்றை நான் எழுதிச் சேர்த்ததைக்கண்ட சோடசாவதானம் சுப்பராய செட்டி யார், "ஐயா அவர்களுடைய சரித்திரத்தை எழுதினால் நலமா யிருக்கும்" என்று சொன்னார்.

இப்புலவர்பெருமான்பாற் பாடங்கேட்டபொழுது இவர் மூலமாகவும் வேறுவகையாகவும் நான் அறிந்த செய்திகளையும் விசாரித்துத் தெரிந்துகொண்டவற்றையும் துணைக்கொண்டு, தொடங்கிய இம்முயற்சியை ஒருவாறு நிறைவேற்றலாமென்னும் எண்ணத்தால் அவ்வப்பொழுது குறிப்புக்களை எழுதித் தொகுத்து வந்தேன். 1900-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி வெளிவந்த சுதேசமித்திரனில், இச்சரித்திரத்தை நான் எழுதத் தொடங்கி யிருப்பதையும் தமிழ் நாட்டினர் தங்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை அறிவிக்க வேண்டுமென்பதையும் குறித்து ஒரு விரிவான வேண்டுகோளை வெளியிட்டேன். அதனைப் பார்த்தபின் அன்பர்கள் பலர் பலசெய்திகளை அனுப்பக்கூடுமென நான் எதிர்பார்த்திருந்தும் சிலரே சிலசெய்திகளைத் தெரிவித்தனர். பிள்ளையவர்களுடைய மாணவரும் புதுச்சேரியில் இருந்தவரு மாகிய செ. சவராயலு நாயகரென்பவர் தம் விஷயமாகப் பலர் பாடிய சிறப்புக்கவிகள் முதலியவற்றைத் தொகுத்து அச்சிட்ட புத்தகமொன்றை அனுப்பி ஒரு கடிதமும் எழுதினர். அது வரு மாறு :—

"† புதுவை,
22-10-1900.

"ம-ா-ா-ஸ்ரீ வே. சாமிநாத ஐயர் அவர்கள் சமூகத்துக்கு.

"தாங்கள் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் சரித்திரத்தை எழுத எத்தனித்திருக்கிறதாக இம்மாதம் 8ஆ திங்கட்கிழமை வெளிப்பட்ட 146-நெம்பர் சுதேசமித்திரன் பத்திரிகை யால் அறிந்து நான் மெத்தவுஞ் சந்துஷ்டி யடைந்தேன்.

"தியாகராச செட்டியார் என்பேரில் பாடியிருக்கும் இரட்டை மணி மாலையில் குரு வணக்கமாகக் கூறியிருக்கும் வெண்பாவை அப்

பத்திரிகையில் தாங்கள் எடுத்தெழுதியிருப்பதையும் பார்த்து மகிழ்ந்தேன். ஏறக்குறைய நாற்பத்தைந்து வருஷத்திற்குமுன் நானும் ஷெ தியாகராச செட்டியாரும் வேறு சிலரும் அந்த மகானிடத்தில் வாசித்தோம். அவருக்கு என்மட்டிலிருந்த பக்ஷத்தையும் மதிப்பையும் தாங்கள் அறியும்படிக்கும் பல சமயத்தில் அவரும் ஷெ தியாகராச செட்டியார் வல்லூர்த் தேவராச பிள்ளை முதலியவர்களும் என்பேரில் பாடியிருக்கும் பாடல்களைத் தாங்கள் காணும்படிக்கும் நான் கஅசுக - இல் அச்சிட்டிருக்கும் பாடற்றிரட்டு என்னும் ஓர் புத்தகத்தை இன்று தங்களுக்கு இணைகத் தபால் மார்க்கமாக அனுப்பியிருக்கிறேன்.

"இப்புத்தகத்திற் பற்பல இடத்தில் பிள்ளையவர்கள் பெயர் இருப்பதால் ஆங்காங்குக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகையால் முதல் ஏடு தொடங்கிக் கடைசி ஏடு வரையில் பார்வையிடும்படி தங்களைக் கோருகிறேன். இதனால் அவருடைய மாணாக்கர்களில் அநேகரைத் தாங்கள் தெரிந்துகொள்ளவும் கூடும்.

"தாங்கள் எழுதும் அவர் சரித்திரத்தில் நான் அவர்பேரில் பாடியிருக்கும் பாடல்களையும் பல சமயத்தில் அவருக்கு நான் செய்த தோத்திரங்களையும் அவர் என்பேரில் கூறியிருக்கும் தமிழ்மாலை முதலிய பற்பல பாடல்களையும் நன்றாக எடுத்துக் காண்பிக்கும்படி தங்களை நிரம்பவும் பிரார்த்திக்கின்றேன்.

"வேதநாயக விற்பன்னர் சரித்திரம் என்று அச்சிடப்பட்டிருக்கும் ஓர் சிறு புத்தகத்தில் பிள்ளையவர்களுடைய நல்ல பாடல்களும் அவர் பேரில் அநேகம் பாடல்களும் இருக்கின்றன.

"மிகவுஞ் சிறந்த இந்த ஆசிரியரின் சரித்திரத்தைத் தாங்கள் எழுதி அச்சிட்டால் தங்களைப் பற்பல வித்துவான்களும் மேலோர்களும் நெடுங்காலம் வாழ்த்துவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

"நான் முன்னதாகவே பிரியத்தோடே என் வாழ்த்துதல்களைத் தங்களுக்குக் கூறுகின்றேன்.

"தாங்கள் ஆரம்பித்த இச் சிறந்த வேலை இடையூறின்றி நிறைவேறும்படி கடவுளை மெத்தவும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

தங்கள் அன்பை விரும்புகின்ற

செ. சவராயலு."

பின்பு 1902-ஆம் வருஷத்தில் பல அன்பர்கள் விரும்பியபடி கும்பகோணம் போர்ட்டர் டவுன்ஹாலில் இரண்டு நாளும் கும்பகோணம் காலேஜில் ஒருநாளுமாக மூன்று நாள் தொடர்ந்து பிள்ளையவர்களுடைய சரித்திரத்தைப் பிரசங்கம் செய்தேன். அப்பொழுது காலேஜ் பிரின்ஸிபாலாக இருந்த அன்பர் ஸ்ரீமான் ஜே. எம். ஹென்ஸ்மன் முதலியவர்கள் கேட்டு மகிழ்ந்து விரைவில் இவர் சரித்திரத்தை எழுதி அச்சிட்டு வெளியிடவேண்டுமென்று வற்புறுத்தினர்கள்.

முன்பே பிள்ளையவர்களுடைய நூல்கள் சிலவற்றைத் தியாகராச செட்டியார், சுப்பராய செட்டியார் முதலியவர்களிடமிருந்தும் வேறு சிலரிடத்திலிருந்தும் சேகரித்து வைத்திருந்ததுண்டு; பின்பும் அவற்றை முயன்று தேடித் தொகுத்தேன். அவற்றை வெளியிடவேண்டுமென்னும் விருப்பமும் எனக்கு இருந்தது. ஆயினும், நூல்களெல்லாவற்றையும் வெளியிடுவதாயின் மிக்க பொருட்செலவும் உழைப்பும் வேண்டுமாதலின் பிள்ளையவர்களுடைய பிரபந்தங்களேயேனும் தொகுத்து வெளியிடலாமென்றெண்ணினேன். எவ்வளவோ முயன்று பார்த்தும் இவருடைய * பிரபந்தங்களுள்ளும் சில கிடைக்கவில்லை. கிடைத்தவற்றைத் திருவருளின் துணையால் 1910-ஆம் வருஷம் மே மாதம் † முதன்முறை வெளியிட்டேன். அப்புத்தகத்தின் முகவுரையில், "இவர்கள் ஒவ்வொரு காலத்திற் சமயோசிதமாகப் பாடிய தனிச் செய்யுட்களே இவர்கள் சரித்திரம் எழுதும்போது சந்தர்ப்பத்தைப் புலப்படுத்தி வெளியிடக் கருதி இதிற் சேர்க்காமல் வைத்திருக்கிறேன்" என்று இவருடைய சரித்திரத்தை வெளியிடும் எண்ணம் இருந்ததைப் புலப்படுத்தியதுண்டு.

தாம் இளமையில் இயற்றிய செய்யுட்களையும் நூல்களையும் சிறப்புடையனவாகக் கருதவில்லையாதலின் அவற்றைப் பிள்ளை

---

* கிடைத்த பிரபந்தங்கள் இன்னார் இன்னாரிடமிருந்து கிடைத்தனவென்பதைப் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு முதற் பதிப்பின் முகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

† இதன் இரண்டாம் பதிப்பு 1926-ஆம் வருஷம் வெளியிடப் பெற்றது. முதற் பதிப்பில் இல்லாத பிரபந்தங்கள் சில அதன்பாற் சேர்க்கப்பட்டுள்ளன.

யவர்கள் பாதுகாத்து வைக்கவில்லை. அந்தப் பாடல்களையும் நூல்களையும் பல இடங்களில் மிகவும் முயன்று தேடியபொழுது கிடைத்தவை சிலவே.

இவரைப்பற்றி நான் கேட்டறிந்த வரலாறுகளிற் பொய்யானவையும் பல இருந்தன. அவற்றை உண்மையல்லவெனப் பலவகையால் தெரிந்துகொண்டேன்:

ஒரு சமயம் சென்னையில் என்னைச் சந்தித்த கனவானொருவர், "நீங்கள் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டில் அவர்கள் இயற்றியுள்ள திட்டகுடி அசனம்பிகை பதிகத்தைச் சேர்க்காமல் விட்டுவிட்டீர்களே" என்று சொன்னார். அப்போது நான், "எனக்குப் பிரதி கிடைத்திருந்தால் சேர்த்திருப்பேன்; தாங்கள் கொடுத்தால் அதனை அடுத்த பதிப்பில் உபயோகிப்பேன்" என்று சொல்லி மறுநாட்காலையில் அவர் வீடுசென்று அதனைக் கேட்டேன்; அவர் அதனைக் கொடுத்தனர். அதைப் படித்துப் பார்த்ததில் அது வேறொருவரால் இயற்றப்பெற்றதாகத் தெரியவந்தது. அன்றியும் பிள்ளையவர்களுடைய செய்யுள் நடைக்கும் அந்நூற் செய்யுள் நடைக்கும் வேறுபாடுகள் இருந்தன. ஆனால் திட்டகுடி ஸ்வாமி விஷயமாகப் பிள்ளையவர்களால் ஒரு பதிகம் இயற்றப்பெற்றதுண்டு. அதுவே இம்மாறுபாடான செய்திக்குக் காரணமாக இருக்கலாம்.

இக்கவிஞர்பிரானிடம் நான் படிக்க வருவதற்கு முன்பும் இவரைப்பற்றிப் பல வரலாறுகளைக் கேள்வியுற்றதுண்டு. நான் குன்னம் (குன்றம்) என்னும் ஊரில் இருக்கையில் அங்கே வந்த * அரும்பாவூர் நாட்டாரென்னும் ஒருகனவான், "பிள்ளையவர்கள் நாகபட்டின புராணம் அரங்கேற்றியபோது நான் போயிருந்தேன். அப்பொழுது ஒருநாள் 'குறிப்பறிந் தீதலே கொடை' என்பதற்கு ஐம்பதுவகையாகப் பொருள் கூறி 'இன்னும் சொல்லலாம்' என்று முடித்தார்கள்" என்று சொன்னார். நான் படிக்கவந்தபின்பு இக் கவிநாயகரிடமே அச்செய்தியைக் கூறினேன். கேட்ட இவர் சிரித்துவிட்டு, "அதுபொய்; ஒரு பாட்டுக்குப் பல பொருள் சொல்லுதல் பெருமையென்ற கருத்துச் சொன்னவருக்கு இருக்கலாம்" என்று சொன்னார்.

---

* இவ்வூர் பெரும்புலியூர்த் தாலூகாவிலுள்ளது.

இங்ஙனம் நான் கேட்ட பொய் வரலாறுகள் பல.

பிள்ளையவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுக்குரிய செய்திகளைத் தொகுத்த பிறகு, கடிதங்கள், நூற் சிறப்புப்பாயிரங்கள் முதலியவற்றோடு பொருத்திக் காலமுறை பிறழாதபடி அமைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. பல சாதனங்களை வைத்துக் கொண்டு ஒன்றுக்கொன்று முரண்படாதவாறு தெரிந்தவரையில் கால அடைவை வகுத்துக்கொண்டேன். எழுத எழுத அவ்வப் பொழுது நினைவுக்கு வந்தவற்றையும் சேர்க்கவேண்டியிருந்தது. ஒருவகையாகச் சரித்திரத்தை எழுதிப் பூர்த்திசெய்த பின்பும், தனிப்பாடல்கள், கடிதங்கள் முதலியன கிடைக்கலாமென்னும் எண்ணத்தால் வெளியிடாமல் வைத்திருந்தேன். சில நண்பர்கள் இச்சரித்திரத்தை விரைவில் வெளியிடவேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்தினர்கள். அதனால், தமிழ் நாட்டினருக்கு மீண்டும் வேண்டுகோளொன்றை 30-12-31-இல் சுதேசமித்திரன் பத்திரிகையில் வெளியிட்டேன். அவ்வேண்டுகோளுக்கு விசேஷமான விடை ஒன்றும் கிடைக்கவில்லை. இனித் தாமதிப்பதிற் பயனில்லையென்று எண்ணி, தமிழ்த் தெய்வத்தின் திருவருளையும் என்னுடைய ஆசிரியரது பேரன்பையும் துணையாகக்கொண்டு இப்பொழுது வெளியிடலானேன்.

இதனை எழுதிவருகையிலும் பதிப்பித்து வருகையிலும் எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கும் ஊக்கத்துக்கும் அளவில்லை; இத்தகைய கவிஞர்பிரானைப்பற்றி எழுதும் பெறு கிடைத்ததை எண்ணி எண்ணி இன்புறுகின்றேன்.

இவர் 1815 முதல் 1876 வரையில் 61-வருஷங்கள் வாழ்ந்திருந்தனர். அக்கால முழுவதும் நிகழ்ந்தவற்றையெல்லாம் ஒரே புத்தகமாக வெளியிடலாமென எண்ணிப் பதிப்பிக்கத் தொடங்கினேன். அங்ஙனம்செய்வதால் புத்தகம் மிகப்பெரிதாகுமென்று அறிந்து பிள்ளையவர்களிடம் நான் பாடங்கேட்கத் தொடங்கியதற்கு முன்புள்ளவற்றை முதற் பாகமாகவும், பின்புள்ள நிகழ்ச்சிகளை இரண்டாம் பாகமாகவும் அமைத்துக்கொண்டேன். அவற்றுள் இது முதற்பாகமாகும்; இரண்டாம் பாகம் இன்னும் சில வாரங்களில் வெளிவரும்.

இச்சரித்திரத்தில் சிலருடைய பெயர்கள் முதலியவை அவை வழங்கியபடியே உபயோகிக்கப் பட்டுள்ளன. சமீப காலத்து

நிகழ்ச்சிகளாதலின் சில வரலாறுகளிற் சிலருடைய பெயர்களைச் சில காரணம்பற்றி எழுதவில்லை. பிள்ளையவர்களைக் குறிப்பிடும் பொழுது பலவிடங்களில் 'இவர்' என்றே எழுதிவந்திருக்கிறேன். இவருடைய நூல்களில் ஏதேனும் ஒன்றை எடுத்து ஆராய்ந்து எழுதுவதானால் அவ்வாராய்ச்சியே மிக விரியுமாதலின், நூல்களைப்பற்றிய செய்திகள் வரும் இடங்களில் சிலவற்றிற்குச் சிறிய ஆராய்ச்சி எழுதிச் சேர்த்தும் பெரும்பாலனவற்றிலிருந்து சில செய்யுட்களை மட்டும் எடுத்துக்காட்டியும், இன்றியமையாதவற்றிற்குச் சுருக்கமாகக் குறிப்புரை எழுதியும் இருக்கிறேன். இச் சரித்திரத்திற் கூறப்பட்ட சிலரைப்பற்றி எனக்குத் தெரிந்தவற்றுள் உரிய இடங்களிற் குறிப்பிட்டவை போக எஞ்சியவற்றைச் சுருக்கமாக எழுதிப் பின்னே 'சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி' என்னும் பகுதியிற் சேர்த்திருக்கிறேன்.

உரிய இடங்களில் எழுதாமல் விடுபட்ட செய்திகள், கடிதங்கள், தனிப் பாடல்கள் முதலியன இரண்டாம் பாகத்தின் இறுதியில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(இச்சரித்திரத் தலைவர் பலவகையான சிறப்பை உடையவர்; ஆசுகவி முதலிய நால்வகைக் கவிஞராகவும், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என்னும் மூவகை ஆசிரியராகவும், வித்தியா வீரராகவும் இருந்தனர். இந்தச் சரித்திரத்தால் இவர் பாடஞ்சொல்லுதலையே விரதமாக உடையவரென்பதும், மாணாக்கர்கள்பால் தாயினும் அன்புடையவரென்பதும், வடமொழி வித்துவான்களிடத்தில் மிக்க மதிப்புடையவரென்பதும், யாவரிடத்தும் எளியராகப் பழகும் இயல்புடையவரென்பதும், பொருளை மதியாமல் கல்வி அறிவையே மதிக்கும் கொள்கையுடையவரென்பதும், பரோபகாரகுணம் மிகுதியாக வாய்ந்தவரென்பதும், செய்ந்நன்றி மறவாதவரென்பதும், திருவாவடுதுறை தருமபுரம் மதுரை குன்றக்குடி திருப்பனந்தாள் முதலிய இடங்களிலுள்ள மடங்களில் சிறந்த மதிப்புப் பெற்றவரென்பதும், அக்காலத்தில் ஜனங்கள் படித்தவர்களையும் வித்துவான்களையும் அவமதியாமல் அவர்கள்பால் விசேஷ அன்பையும் ஆதரவையும் செலுத்தி வந்தார்களென்பதும், பிறவும் வெளிப்படும்.) இவர் காலத்திற்குப் பின்பு இவரைப் போன்றவர்களைக் காணுதல் மிக அரிதாக இருக்கின்றது.

இவர் காலத்தில் படம் எடுக்கும் கருவிகள் இருந்தும் இவரோடு பழகியவர்களுள் ஒருவரேனும் இவருடைய படத்தை எடுத்து வைக்க முயலாதது வருத்தத்தை விளைவிக்கிறது. என்னுடைய மனத்தில் இவருடைய வடிவம் இருந்து அவ்வப்பொழுது ஊக்கம் அளித்து வருகிறது; ஆயினும் பிறருக்கு அதனைக் காட்டும் ஆற்றல் இல்லாமைக்கு என்செய்வேன்! இக்கவிச் சக்கரவர்த்தியினுடைய பூதஉடம்பின் படம் இல்லையே என்னும் வருத்தம் இருந்தாலும் இவருடைய புகழுடம்பின் படமாக நூல்களும் செய்யுட்கள் முதலியனவும் இருக்கின்றனவென்றெண்ணி ஒரு வகையாக ஆறுதல் அடைகின்றேன்.

திரிசிரபுரம் மலைக்கோட்டையின் தெற்கு வீதியில் இவருக்குச் சொந்தமாக இருந்த வீடு இவர் குடும்பத்தில் உண்டான பொருள் முட்டுப்பாட்டினால் இவருக்குப் பிற்காலத்தில் இவருடைய குமாரராகிய சிதம்பரம்பிள்ளையினால் விற்கப்பட்டுப் போயிற்று. இக்கவிஞர் கோமானுடைய பெருமையை அறிந்துள்ள திரிசிரபுர வாசிகள் பலர் அந்த இடத்தை மீட்டும் பெற்று இவர் பெயராலே ஒரு ஸ்தாபனம் அமைக்கவேண்டுமென எண்ணியிருக்கிறார்கள். உண்மைத் தமிழபிமானிகளாகிய அவர்களுடைய எண்ணம் ஸ்ரீ தாயுமானவர் திருவருளால் நிறைவேறுமென்று நம்புகிறேன்.

இந்த வருஷத்தில் இச்சரித்திரத்தை நான் எழுதிவரும் காலத்தில் திரிசிரபுரத்திலும் தஞ்சையிலும் உள்ள சில அன்பர்கள் இப்புலவர் சிகாமணியினுடைய பிறந்த நாட்கொண்டாட்டமாகிய பெருமங்கல விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பு எனக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்தபடி கொண்டாடவேண்டிய பிறந்தநாள் வருகிற பங்குனி மாதத்தில் வருவதால் அதற்குமுன்னதாக இச்சரித்திரம் வெளியிடும்படி அமைந்ததைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியுறுகின்றேன்.

"நல்லார் குணங்க ளுரைப்ப தவும்நன்றே" என்பதை எண்ணி இந்த மகாவித்துவானுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளேன். இதன்கண் காணப்படுவனவற்றில் மாறுபாடு தோன்றினாலும், இதிற்காணப்படாத செய்திகள், செப்புட்கள் முதலியன தெரிந்தாலும் அவற்றை அன்பர்கள் தெரிவிப்பார்க

ளாயின் அடுத்த பதிப்பில் அமைத்துக் கொள்வதற்கு அநுகூல மாக இருக்கும். இதன்பாலுள்ள குறைகளை நீக்கி மற்றவற்றைக் கொள்ளும் வண்ணம் அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இச்சரித்திரத்தை எழுதிவருங்காலத்திலும், பதிப்பித்து வருங்காலத்திலும் வேண்டிய உதவிகள் புரிந்துவந்த சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயருக்கும், சென்னை, 'கலைமகள்' உதவிப் பத்திரிகாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாத ஐய ருக்கும் அவர்களுடைய நல்லுழைப்பிற்கு ஏற்றபடி தமிழ்த்தெய் வம் தக்க பயனை அளிக்குமென்று கருதுகின்றேன்.

என்னுடைய வேணவாவுள் ஒன்றுகிய இந்தப் பணியை ஒரு வாறு நிறைவேற்றிய ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசப் பெருமான் திருவரு ளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

(வெண்பா)

"மன்னும் அறிவுடையோர் வைகுமவைக் கண்ணெனையும்
துன்னுவித்த மீனுட்சி சுந்தரமான் - தன்னை
நினையேனென் னுது நினைப்பேனென் பேனேல்
எனையா ரிகழாதா ரீண்டு."

(தியாகராச செட்டியார் வாக்கு.)

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
12—12—1933.

இங்ஙனம்
வே. சாமிநாதையர்.

DR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

உ

கணபதி துணை.

திரிசிரபுரம் மகாவித்துவான்

ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

சரித்திரம்.

முதற் பாகம்.

1. முன்னோரும் தந்தையாரும்.

மதுரையின் பெருமை.

"பாண்டி நாடே பழம்பதி" என்று திருவாதவூரடிகளாற் சிறப்பிக்கப்பெற்ற பாண்டி நாட்டுள், பூலோக சிவலோகம் சிவராசதானி முதலிய திருநாமங்களைப் பெற்று விளங்குவதும், சொல்வடிவாகிய ஸ்ரீ மீனுட்சியம்மை தடாதகைப் பிராட்டியாராகியும் பொருள் வடிவாகிய ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் சுந்தர பாண்டியராகியும் முருகக்கடவுள் உக்கிர பாண்டியராகியும் அரசாட்சி செய்த பெருமை பேவியதும், ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை இயற்றியருளிய ஏற்றமுடையதும், தமிழைப்பலவாற்றாலும் வளர்த்து விளங்கிய பாண்டிய மன்னர்களாற் செங்கோல் செலுத்தப் பெற்றதும், "உலகமொருதலையாத் தானோர் தலையாப், புலவர் புலக்கோலாற் றாக்க - உலகமெலாந், தான்வாட வாடாத் தகைமைத்தே தென்னவன்றன், நான்மாடக் கூடனகர்", "அனலும் புனலுமியலறியும்", "யாரறிவார் தமிழருமை யென்கின் றேனென் னறிவீன மன்றேவுன் மதுரை மூதூர், நீரறியு நெருப்பறியும்" என்று ஆன்றோர்களாற் புகழப்பட்டதும், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளைத் தம்முள் ஒரு புலவராகப்பெற்ற சங்கப் புலவர்கள் பலர் புதிய பாக்களையும் புதிய உரையையும் இயற்றித் தமிழாராய்ந்த சிறப்பு வாய்ந்ததும், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் முதலிய உரையா

சிரியர்கள் விளங்கியதற்கு இடமாக உள்ளதுமாகித் திகழ்வது மதுரையம்பதியாகும்.

முன்னோர் நிலை.

அந்நகரின்கண், இப்போது ஆதிநாராயண பிள்ளை தெரு வென்று வழங்கப்படும் இடத்திற் சைவ வேளாளரும் நெய்தல் வாயிலுடையான் கோத்திரத்தினருமாகிய ஒரு குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் திருக் கோயிலுக்குரிய * முத்திரைக் கணக்கர்களுள் மீனமுத்திரைப் பணிக்குரியவர்களாக இருந்து விளங்கினர்கள். அவர்கள் தமிழ்க் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் இருந்தார்கள். † கோயிலார் வருஷந்தோறும் ஒரு தினத்தில் அப்பணிக்குரிய சிறப் பொன்றை அவர்களுக்குச் செய்விப்பது வழக்கம்.

தந்தையார்.

அக்குடும்பத்திற் பிறந்த சிதம்பரம்பிள்ளை யென்னும் ஒருவர் தம்மனைவியாராகிய அன்னத்தாச்சி என்பவருடன் இல்லறம் நடத்தி வந்தார். தம்முன்னோர்களைப் போலவே அவர் தேவார திருவாசகங்களில் அன்பும் அறிவும் பெற்றவர்; பெரியபுராணம் கம்பராமாயணம் கந்தபுராணம் திருவிளையாடற்புராணம் முதலிய பெருங் காப்பியங்களிலும் பலவகையான பிரபந்தங்களிலும் இலக் கணங்களிலும் உரைநூல்களிலும் முறையான பயிற்சியும், கற்பவர் களுக்கு அன்புடன் பாடஞ்சொல்லுந் திறமையும், விரைவாகச் செய்யுள் செய்யும் ஆற்றலும் வாய்ந்து விளங்கினர்; பரம்பரைக் கேள்வியும் உடையவர்; நற்குண நற்செய்கை அமைந்தவர்; யாவரிடத்தும் அன்புடையவர்; சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர்; சிவனடியாரைச் சிவனெனப் பாவித்து வழிபடுபவர்.

தம் முன்னோர்கள் மேற்கொண்டு வந்த திருக்கோயில் முத்திரைப் பணியை அவர் ஒப்புக்கொண்டு ஒழுங்காகப் பார்த்து வந்தனர்.

அப்படி இருந்து வருகையில் என்ன காரணத்தாலோ அக் காலத்திலிருந்த கோயிலதிகாரிகளுக்கும் அவருக்கும் மனவேறு

---

* இம் முத்திரைகள் ஐந்து வகையென்றும் மூன்று வகையென்றும் கூறப்படும்.

† இச் செய்தியைச் சொன்னவர்கள் இச்சரித்திரத் தலைவர்களே.

பாடு உண்டாயிற்று. அதனால் அவர் அவ்வேலையை வேண்டா மென்று விட்டுவிட்டுத் தம்மனைவியாரோடு மதுரையை நீங்கி வட திசையை நோக்கிச் செல்பவராய்ப் பல ஊர்களையுங்கடந்து *எண்ணெய்க் கிராமம் என்னும் ஊரை அடைந்தார்.

அவ்வூரார் அவருடைய நல்லமையையும், கல்வித்திறமையையும் அறிந்து அவர் இருப்பதற்குரிய இடமொன்றைக் கொடுத்து உதவியதன்றி உணவிற்குரிய பண்டங்கள் பலவற்றையும் பிறவற்றையும் அளித்து ஆதரித்து வந்தனர்.

கல்விமான்களேனும் எந்த வகையிலாவது சிறந்தவர்களேனும் ஏழை ஜனங்களேனும் தாம் இருக்கும் ஊருக்குவந்தால் வலிந்து சென்று பார்த்தும் விசாரித்தும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைக் கைம்மாறு கருதாமற் செய்தும் செய்வித்தும் வருதல் அக்காலத்தார் இயல்பு.

சிதம்பரம் பிள்ளை அவ்வூரிலேயே சில நாள் இருந்து தம்பால் வந்து கேட்பவர்களுக்குப் பிரபந்தங்களையும் காப்பியங்களையும் பாடஞ் சொல்லித் தமிழ்ச்சுவையில் அவர்கள் ஈடுபடும்படி செய்து வந்தனர். அவருடைய புலமையையும் பாடும் திறமையையும் அவர்கள் அறிந்து வியந்து அவர்பால் மேன்மேலும் அன்பு வைப்பாராயினர். யாரேனும் கொடுக்கும் † சமுத்தியை விரைவிற் பூர்த்தி செய்தல், தெய்வங்களைத் துதித்தல், தமக்கு உதவி செய்த ஒருவருடைய குணங்களைச் சிறப்பித்துச் சந்தர்ப்பத்திற் கேற்றபடி பாடுதல், இன்ன பொருள் அனுப்பவேண்டுமென்று யாரேனும் ஒருவருக்குச் ‡ சீட்டுக்கவி விடுத்தல் என்னும் ஆற்றல்கள் அவர்பால் அமைந்திருந்தன.

அவ்வூரார் அவருடைய தெய்வ பக்தியிலும் கவித்துவ சக்தியிலும் மதிப்பும் அவர்பாற் பயபக்தியும் உடையவர்களாக

---

*இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே காவிரியின் தென்பாலுள்ளது; எண்ணெய்மாகாணமென்றும் வழங்கும்.

† சமஸ்யை. சமஸ்யையை முடித்துப் பாடுவதிற் பேர்பெற்றவர்கள் **காளமேகப் புலவர்** முதலியோர்.

‡ இது பழைய நூல்களில் ஓலைத்தூக்கு, ஓலைப் பாசுரம், திருமுகப் பாசுரம் எனவும் வழங்கப்பெறும். இவ்வகையான கவிகளை இயற்றுதலிற் பிற்காலத்திற் புகழ் பெற்றவர் **அந்தகக்கவி வீராகவ** முதலியார் முதலியோர்.

இருந்தனர். அக் காலத்தில் அங்கே மழை சிறிதும் பெய்யவில்லை. அவ்வூரார், "மழை பெய்யும்படி தேவரீர் ஒரு பாடல் பாடியருளவேண்டும்" என்று அவரை வேண்டிக் கொண்டனர். அப்பொழுது அவர் சிவபெருமானைத் தியானித்து,

"சோகங்க ளுற்றவுயிர்த் * துன்பகல வேணியிடை
மேகங்க ளெத்தாங்கும் வித்தகனே—போகங்கள்
பாலித் தருளும் பரமனே கார்மழையை
ஆலித்துப் பெய்ய அருள்"

என்ற வெண்பாவைப் பாடினர். அவருக்கிருந்த நல்லாழினால் காக்கையேறப் பனம்பழம் வீழ்ந்ததென்பது போலச் சில நாட்களுள் நல்ல மழை பெய்தது. இப்படியே அவ்வூரிலும் அயலூர்களிலும் அவரால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சில உண்டென்பர். அவற்றால் அவ் வூரார்க்கு அவர்பால் இருந்த மதிப்பு முன்னையினும் மிகுவதாயிற்று. அவரைத் தம்மூரிலேயே நிலைத்திருக்கும்படி செய்து விடவேண்டுமென்று எண்ணி அவ்வூரார் பலர் கூடி, "உங்களுடைய வருஷச் செலவுக்கு எவ்வளவு நெல் வேண்டும்?" என்று அன்புடன் கேட்டனர்; அவர், "முப்பத்தாறு கலம் இருந்தாற்போதும்" என்றார். கேட்ட அவர்கள் அதனைத் தமக்குள்ளே தொகுத்து அவர்பாற் சேர்ப்பித்தார்கள். அவர் அதனைப் பெற்று உபயோகித்துக்கொண்டு உவகையுடன் விரும்பியவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தார்.

இப்படியிருக்கையில் அவருடைய புகழ் பக்கத்து ஊர்களிலும் பரவுவதாயிற்று. அப்பொழுது அதவத்தூரென்னும் ஊரிலுள்ளார் அவரிடம் வந்து தம்முடைய ஊரில் வந்து சில காலம் இருந்து தமக்கும் தமிழ் விருந்தளிக்கவேண்டுமென்று அன்போடு அழைத்தனர். அவர்கள்வேண்டுகோளுக்கு இணங்கிச் சிதம்பரம் பிள்ளை எண்ணெய்க் கிராமத்தாருடைய உடம்பாடு பெற்று அதவத்தூரை யடைந்து அங்குள்ளாருக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லி வந்தார். வருகையில் தமிழ் அறிவின் மூதிர்ச்சியை அறிந்த எல்லோராலும் பாராட்டப்பெற்றும் வேண்டிய உதவிகள் செய்யப் பெற்றும் வந்தாராதலின் அவருடைய மனம் மிக்க ஊக்கம் பெற்றது; நிலையான பொருள் வருவாய் இல்லாவிடினும்

* துன்பகலும்படி கார் பெய்ய அருளென இயைக்க.

கவலையின்றி இல்வாழ்க்கையை நடத்தலாமென்ற உறுதி அப் பொழுது அவருக்கு உண்டாயிற்று.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்பது பொய்யா மொழியன்றே?

சிதம்பரம்பிள்ளை * கணக்காயரானது.

அவர் பாடஞ் சொல்லும் அருமையையும் அவரால் தாம் பெற்ற ஊதியத்தையும் நினைந்து அவ்வூரார், 'இவரைக்கொண்டு நம்முடைய பிள்ளைகளையும் படிப்பித்தால் அவர்கள் தமிழ்ப் பயிற்சியையும் நல்லொழுக்கத்தையும் அடைந்து பிற்காலத்தில் நல்ல நிலைமையைப் பெற்று விளங்குவார்கள்' என்று எண்ணினர். எண்ணியவர்களுட் சிலர் கூடி அவர்பால் வந்து, "எங்களுக்குத் தமிழ்ச் சுவையைப் புலப்படுத்தியதுபோலக் கணக்காயனாராக இருந்து எங்களுடைய பிள்ளைகளுக்கும் உரிய தமிழ்ப் பாடங்களைக் கற்பிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே அங்கே ஒரு பள்ளிக்கூடம்வைத்து அவர் நடத்தலானர். அதனல் அவர் பெயர் சிதம்பரவாத்தியாரென்றும் வழங்கி வந்தது.

பழையகாலப் பள்ளிக்கூடங்கள்.

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் ஊர்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் இருந்தன. திண்ணைப்பள்ளிக்கூடங்களென்னும் பெயரால் அவை வழங்கப் பெறும். அங்கே தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குரிய அறிவு பெறுதற்குக் கருவிகளாகிய நிகண்டு, நீதிநூல்கள், பிரபந்தங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. கணிதத்துக்கு அடிப்படையான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தனர். அவற்றின் உதவியால் மிகச் சிறிய பின்னங்களையும் அமைத்துக் கணக்கிடும் ஆற்றல் மாணாக்கர்களுக்கு உண்டாகும். குடும்பத்துக்கு வேண்டிய வைத்திய முறைகளும், நாள் பார்த்தல் சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல் வழிகளும், ஆலய வழிபாட்டு முறை, குலாசாரங்கள் முதலியனவும், ஞாபக சக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் கற்பிக்கப்பட்டன. உபாத்தியாயர்கள் மாணவர்களுள் ஒவ்வொரு

* கணக்காயர் - உபாத்தியாயர்.

வரையும் தனித்தனியே கவனித்துத் தக்க உணர்ச்சியையுண்டாக்கும் படி செய்தார்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பல விஷயங்கள் அத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டன; ஆதலின் அவற்றிற்கு ஒருதனிச்சிறப்பு இருந்து வந்தது. கற்பிக்கும் உபாத்தியாயர்கள் மற்ற எல்லோராலும் நன்கு மதிக்கப் பெற்றனர்; "மங்கலமாகி யின்றியமையாது, யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப், பொழுதின் முகமலர் வுடையது பூவே" என்பதைப்போல அவர்கள் இன்றியமையாதவர்களாகவும் யாவரும் மகிழ்ந்து மேற்கொள்ளும் இயல்பினர்களாகவும் இருந்து வந்தார்கள். கணக்காயர்கள் சிறந்த தமிழ்ப் புலமையும் நற்குணநல்லொழுக்கமும் வாய்ந்தவர்களாக இருந்தமையே அத்தகைய நன்மதிப்பை அவர்கள் பெறுவதற்குக் காரணமாக இருந்தது. பண்டைக் காலத்தில் மிகச் சிறந்த தமிழ்ப்புலவர்களே கணக்காயர்களாக இருந்தனரென்று தெரிகின்றது. நக்கீரர் தந்தையாராகிய மதுரைக் கணக்காயனு ரென்பவரும் கணக்காயன் தத்தன் என்னும் சங்கப்புலவரும் அத்தகையவர்களே. பிற்காலத்திலும் பல புலவர்கள் கணக்காயர்களாக இருந்தனர். எல்லப்ப நாவலரென்று வழங்கப்படும் புலவர்பெருமானுடைய பெயர் ஏட்டுச் சுவடியில் எல்லப்ப வாத்தியாரென்று காணப்படுவதால் அவரும் ஒரு கணக்காயராக இருந்திருத்தல் வேண்டுமென்று ஊகிக்கப் படுகின்றது.

சிதம்பரம் பிள்ளைக்கு உயர்ந்த மதிப்பு இருந்து வந்ததற்கு முதற் காரணம் அவர் கணக்காயராக இருந்து பாடஞ் சொல்லி வந்தமையே யாகும். தாம் அறிந்த பலவற்றையும் மாணாக்கர்களுக்குச் சொல்லிப் பயன்படச்செய்யும் காலம் வாய்த்தது ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் பெருங்கருணையேயென்றெண்ணி அவர் மகிழ்ந்தனர்.

அப்படியிருக்கையில் ஒவ்வோர் ஆண்டிலும் தவறாமல் மதுரைக்குச் சென்று ஸ்ரீ மீனாட்சியம்மையையும் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்துக்கொண்டு வருதல் சிதம்பரம்பிள்ளைக்கு நியமமாக இருந்தது. அவர் திருவிளையாடற் புராணத்தை அன்புடன் படித்து மனம் உருகுவார்; விரும்புவோர்க்குப் பொருளும் சொல்லுவார். இவை அவருக்குப் பெரும்பான்மையான வழக்கங்களாக இருந்தன.

Dr. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

2. இளமைப் பருவமும் கல்வியும்.

பிள்ளையவர்கள் ஜனனம்.

சிதம்பரம்பிள்ளை இங்ஙனம் இருந்துவருகையில், தமிழ்நாடு செய்த பெருந்தவத்தால் பவ வரு பங்குனிமீ உசு-ஆம் தேதி (6-4-1815) அபரபட்சம் துவாதசியும் பூரட்டாதி நட்சத்திரமும் குருவாரமும் கூடிய சுபதினத்தில் இரவு இருபதே முக்கால் நாழிகையளவில் மகரலக்கினத்தில் அவருக்கு ஒரு புண்ணிய குமாரர் அவதரித்தார். இக்குழந்தை பிறந்த வேளையிலிருந்த கிரக நிலைகளை அறிந்து 'இந்தக் குமாரன் சிறந்த கல்விமானாக விளங்குவான்' என்றும், 'இவனால் தமிழ்நாட்டிற்குப் பெரும்பயன் விளையும்' என்றும் சோதிடநூல் வல்லவர்கள் உணர்த்த, மகிழ்ந்து சிதம்பரம்பிள்ளை 'நம் குலதெய்வமாகிய ஸ்ரீமீனாட்சி சுந்தரேசருடைய திருவருளினாலேயே இந்தச் செல்வப்புதல்வனைப் பெற்றேம்' என்றெண்ணி அக்கடவுளின் திருநாமத்தையே இவருக்கு இட்டனர்.

இவருடைய * ஜாதகம் வருமாறு:—

பவ வருஷம், பங்குனிமீ உசு, குருவாரம், அபரபட்சம் துவாதசி, நாழிகை முப்பத்தெட்டரையே யரைக்கால், சதயம் நாற்பத்திரண்டரையேயரைக்காலுக்குமேல் பூரட்டாதி நக்ஷத்திரம், சுபநாமயோகம் ஐந்தரையேயரைக்கால், கௌலவகரணம் ஆறரையே அரைக்கால், சேஷத்யாச்சியம் அரையே அரைக்கால், அகஸ் முப்பதேகால்: இந்தச் சுபதினத்தில் இராத்திரி இருபதேமுக்கால் நாழிகையளவில் மகரலக்கினத்தில் ஜனனம். குருமகாதசை ஜனன காலத்தில் நின்றது பங்குனிமீ ஏ நாள்.

---

* இந்த ஜாதகம் பிள்ளையவர்கள் தந்தையாராலேயே குறித்துவைக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரதி பிள்ளையவர்கள் குமாரராகிய சிதம்பரம் பிள்ளையிடமிருந்து கிடைத்தது.

அ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.





சிதம்பரம் பிள்ளை சோமரசம்பேட்டையில் இருந்தது.

இப் புதல்வர் பிறந்த சில மாதங்களுக்குப்பின் அதவத்தூருக்கு அருகேயுள்ள சோமரசம்பேட்டை யென்னும் ஊரிலுள்ளவர்கள் சிதம்பரம் பிள்ளையால் அதவத்தூராரும் அவ்வூர்ப் பிள்ளைகளும் அடைந்துவந்த பெரிய நன்மையை அறிந்து எவ்வாறேனும் அவரைத் தங்களூருக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென் றெண்ணினார்கள். அவருட் சிலர் அதவத்தூருக்கு வந்து அவரை மிகவும் வேண்டிக்கொண்டு அவ்வூரிலுள்ளார்க்கும் தக்க சமாதானம் கூறித் தங்களூருக்கு அழைத்துச் சென்று அவருக்கு வேண்டிய பொருள்களை உதவி வருவாராயினர். சிதம்பரம் பிள்ளை வழக்கம்போலவே விரும்புவோருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லியதுடன் அங்கே ஒரு பாடசாலையை அமைத்துப் பல பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துவந்தார். அப்பொழுது அவருக்கு வேறு ஓர் ஆண் குழந்தையும் அப்பால் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தைக்குச் * சொக்கலிங்கமென்றும் பெண் குழந்தைக்கு மீனாட்சி யென்றும் பெயர் இட்டார். இதனாலும் சிதம்பரம் பிள்ளைக்கு மதுரைச் சோமசுந்தரக் கடவுள்பாலும் மீனாட்சியம்மையின்பாலும் இருந்த அன்பு விளங்கும்.

---

* பிள்ளையவர்கள் சகோதரரை மட்டும் திருவாவடுதுறையில் ஒரு முறை பார்த்திருக்கிறேன்; மற்றவரைப்பார்க்கவில்லை. இவர்களைப் பற்றிய வேறு வரலாறொன்றும் தெரிந்திலது.

கல்வி பயிலத் தொடங்கல்.

* மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு ஐந்து பிராயமானவுடன் சிதம்பரம் பிள்ளை வித்தியாரம்பஞ் செய்வித்துத் தம் பள்ளிக்கூடத்திலேயே கல்வி பயிற்றத் தொடங்கினர். அங்கே மற்றப் பிள்ளைகளுடன் அக்கால வழக்கப்படி முறையே நெடுங்கணக்கு, ஆத்திசூடி முதலிய நீதி நூல்கள், எளிய நடையிலுள்ள அருணகிரியந்தாதி முதலிய அந்தாதிகள், கலம்பகங்கள், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பிள்ளைத் தமிழ்கள், நிகண்டு, கணிதம் முதலியவற்றைக் கற்றார். பழம்பிறப்பிற் செய்த புண்ணிய விசேடத்தாலும், பரம்பரையின் சிறப்பாலும் தந்தையாரின் பழக்கத்தாலும் இவருக்குக் கல்வியறிவு மேன்மேலும் எளிதிற் பெருகுதலுற்றது; "குலவித்தை கல்லாமற் பாகம்படும்" என்பது பெரியார் வாக்கன்றே? பாடசாலையிலுள்ள ஏனைப் பிள்ளைகளைக் காட்டிலும் எல்லாவற்றிலும் இவரே சிறப்புற்று விளங்கினர். சில வருடங்கட்குப்பின்பு அந்தப் பள்ளிக்கூடத்தில் இவர் சட்டாம்பிள்ளையாக அமர்த்தி வைக்கப்பட்டார்.

கல்வி கற்றமுறை.

யாவரும் பாராட்டும்படி ஞாபகசக்தி இவர்பால் நன்கு அமைந்திருந்தது. இவர் அப்பொழுதே செய்யுட்களின் கருத்துக்களைக் கூர்ந்து ஆராயும் அறிவைப்பெற்றிருந்தார். தம் தந்தையாரை அடிக்கடி வந்து வந்து பார்த்துப் பார்த்துச் செல்லும் கல்விமான்களும் அவரும் தமிழ் சம்பந்தமாகப் பேசிக் கொள்ளுவனவற்றை வலிந்து சென்று ஊன்றிக் கேட்கும் தன்மையும், படித்த செய்யுட்களின் கருத்துக்களை அமைத்து இனிமையாகப் பேசும் திறமையும் இவர்பாற் காணப்பட்டன. இவருடைய அறிவின் வளர்ச்சியை அறிந்த தந்தையார் மகிழ்ச்சியடைந்து மற்றப் பிள்ளைகளோடு படிக்கும் பாடங்களையன்றிப் பிரபந்தங்களையும் எளிய நடையாகவுள்ள சதகங்கள், மாலைகள் முதலியவற்றையும் வீட்டில் மனப்பாடம் பண்ணுவித்துப் பொருளுங் கூறிவந்தார். அன்றியும் நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் மூலபாடங்களையும் மனப்பாடம் பண்ணும்படி செய்வித்து

* பிள்ளையவர்களை இவ்வாறு பெயர் குறித்தெழுதுவதற்கு அஞ்சுகின்றேன்.

வந்தார். ஒய்வு நேரங்களில் இலக்கணக் கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிவுறுத்தினர். இவர் அவ்வாறு கற்ற பின்பு படித்த பிரபந்தங்கள் முதலியவற்றிற்கும் நைடதம் முதலிய சிறு காப்பியங்களுக்கும் ஏனைய நூல்களுக்கும் மற்றவர்களோடுசேர்ந்து பொருள் கேட்பாராயினர்.

அக்காலத்தில் நூல்கள் பெரும்பாலும் அச்சிற் பதிப்பிக்கப் படாமையாற் படிப்பவர்கள் அவற்றைப் பிரதிசெய்து படித்தல் இன்றியமையாத வழக்கமாக இருந்தது; ஆதலால் இவர் தந்தையார் நன்றாக ஏட்டில் எழுதவும் இவரைப் பழக்குவித்தார். அதனால் இவர், தாம் படிக்கப்புகுந்த நூல்களை, எழுதி எழுதித் தனியே வைத்துக்கொள்வார். அன்றியும் தம் தந்தையார் கட்டளையின்படி தாம் படிக்கும் நூல்களிலுள்ள இனிய செய்யுட்களைச் சமயோசிதமாகப் பிறர்க்குச் சொல்லிக் காட்டுவதற்குத் தொகுத்துத் தனியே எழுதி வைத்துக்கொண்டு மனனம் செய்வதும், தமக்கு மனனமான பாடல்களின் அடிவரையறையைத் தனியே குறித்து வைத்துக்கொள்வதும் உண்டு. * இங்ஙனம் செய்வது அக்கால வழக்கம். தம் தந்தையார் கற்பித்தவற்றையெல்லாம் பேரவாவுடன் இவர் கற்று விரைவில் அந்நூல்களிற் சிறந்த பயிற்சியை அடைந்தார்.

செய்யுள் இயற்றப் பயிலுதல்.

தந்தையாருடைய பழக்கத்தால் வருத்தமின்றிச் செய்யுள் செய்யும்திறமை இவர்பால் வளர்ச்சியுற்றது. இவர் தந்தையாரிடம்

---

* ஞாபகமுள்ள சிறந்த பாடல்களைக் குறித்து வைக்கும் சுவடிகளில் முதலிற் கையேடென்றேனும் அவசரப் பாடலென்றேனும் இன்ன நூலின் தெரிவென்றேனும் எழுதப்பட்டிருக்கும். இத்தகைய சுவடிகளைப் பல புலவர்கள் வீடுகளிற் கண்டிருக்கிறேன். அவற்றின் முதற் குறிப்பைத் தனியே எழுதி வைத்துக்கொண்டு அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதும் நூற்செய்யுள் முதற் குறிப்பைத் தொடர்பு பெறச் செய்யுளாக அமைத்து வைத்துக்கொள்வதும் பண்டைய வழக்கம். பின்னவை முதனினைப்புச் செய்யுளென்னும் பெயர் முதலியவற்றால் வழங்கும். பெரிய நூலாக இருப்பின் அகவலாகவும் சிறிய நூலாக இருப்பின் வேறு வகைச் செய்யுளாகவும் அம்முதற் குறிப்புச் செய்யுட்கள் பெரும்பாலும் இருக்கும். அதனை அடிவரவு, அடிவரையறை என்றும் கூறுவர். இத்தகைய செய்யுட்கள் யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றில் நூலின் பகுதியாகவே இருப்பதைக் காணலாம்.

மேன்மேலும் இலக்கணங்களையும் பல காப்பியங்களையும் கற்றுவந் தார். அன்றியும் இவருக்குள்ள செய்யுள் செய்யும் திறமையை அறிந்து சிதம்பரம் பிள்ளை அடிக்கடி சமுத்தி கொடுத்துச் செய் யுள் இயற்றச் சொல்லியும், திரிபு யமகம் சிலேடைகளை அமைத் துப் பாடல் செய்யும்படி சொல்லியும் வந்தார். அவற்றை இவர் விரைவில் முடித்து விடுவதையும் அச்செய்யுட்கள் எளிய நடையிற் செம்பாகமாக அமைந்திருத்தலையும் தேர்ந்து தந்தையார் மகிழ்ச்சி யுற்றார்; கேட்ட ஏனையோரும் மகிழ்ந்து பாராட்டினர்.

பாடும் வழக்கம் தமக்கு இயல்பாகவே இருந்தமையின் தினந் தோறுமுள்ள ஓய்வு நேரங்களில் இவர் ஏதாவது பொருளமைத் துப் புதியனவாகப் பாடல்கள் செய்துகொண்டேயிருப்பார். எந்த நூலையேனும் தனிப்பாடலையேனும் படிக்குங் காலத்தில் அவற் றைப்போலப் பாடவேண்டுமென்றும் அவற்றிலுள்ள சொற் றொடர்களையும் கருத்துக்களையும் அப் பாடல்களில் அமைக்க வேண்டுமென்றும் இவருக்கு விருப்பம் இருந்து வந்தமையால் அவ் வாறே பாடியும் வந்தார். இளமையில் விரைவாகப் பாடுந்திறமை இவருக்கு உண்டாயிருத்தலையறிந்து வியப்புறுவோர் பலரென்றும், அங்ஙனம் பாடிய பாடல்கள் மிகப் பலவென்றும் கேள்வி. அக் காலத்திற் புதியனவாகப் பாடல் செய்வோர் திரிசிரபுரத்திலும் உறையூரிலும் பிறவிடங்களிலும் சிலர் இருந்தார்கள். அவர்க ளோடு அடிக்கடி பழகிவந்ததும் அவர்கள் அளித்த ஊக்கமும் செய்யுளியற்றும் ஆற்றலை இவர்பால் மிகச்செய்தன.

கல்வி வளர்ச்சிக்குக் காரணம்.

சிதம்பரம் பிள்ளையிடம் படித்த பிள்ளைகள் பிற ஊர்களி லிருந்து படிக்கும் பிள்ளைகளிலும் தமிழிற் சிறந்த அறிவுள்ளவர் களாகவும் அவர்களுள்ளே இவர் சிறந்தவராகவும் இருத்தலை அயலூரார் கேட்டு மகிழ்வாராயினர். இவருடைய தந்தையாரைத் திரிசிரபுரம் முதலிய ஊர்களிலுள்ள பிரபுக்கள் தங்களூருக்கு அழைத்துச்சென்று உபசரித்து அனுப்புவதுண்டு. அவரும் அவர்களுடைய வேண்டுகோளின்படி ஓய்வுநாட்களிற் சென்றி ருந்து மகிழ்வித்துவருவார். சில சமயங்களில் சிதம்பரம்பிள்ளை இவரையும் உடனழைத்துக்கொண்டு சென்று தமக்குத்தெரிந்த செல்வர்களிடத்தில் இவரைப் பழையபாடல்களைச் சொல்லு வித்தும் அவற்றிற்குப் பொருள் சொல்லச் செய்தும் வந்தார்.

அதனால் இவருடைய இயல்பை அவர்கள் அறிந்து வியந்தார்கள். இத்தகைய செயல்களும் இவரது கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. இவ்வாறு இவருடைய கல்வி வளர்ச்சியைப்பற்றிய செய்தி இவர் தந்தையாருடைய புகழுடனே எங்கும் பரவியது.

ரங்கபிள்ளை யென்பவரின் முயற்சி.

வீட்டுக்கு வேண்டிய பொருள்களை விலைக்கு வாங்குதற்கு *வாவு நாட்களில் தந்தையாரால் அனுப்பப்பட்டு உடன்படிக்கும் பிள்ளைகளுடன் திரிசிரபுரம் கடைத்தெருவிற்கு இவர் போய் வாங்கி வருவதுண்டு. அப்படிச் செல்லுங்கால் அவர்கள் தாங்கள் மனப்பாடம் பண்ணிய பாடல்களைச் சொல்லிக்கொண்டும், ஒருவர் சொல்லிய பாடலின் இறுதிச்சொல்லை முதலாகவுடைய வேறு ஏதேனுமொரு பாடலை மற்றொருவர் சொல்ல இவ்வாறே தொடர்ந்து சொல்லிக்கொண்டும் செல்வார்கள். இங்ஙனம் சொல்லிப் பழகுவது பழையகாலத்தில் வடமொழி தென்மொழியாளர்களின் வழக்கம். இவர்கள் போகும் வழியில் இருந்த சுங்கச்சாவடியில் †சவுக்கீதாராக **ரங்கபிள்ளை** யென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் நூற் பயிற்சியும் படித்தவர்களை ஆதரிக்கும் தன்மையும் சிதம்பரம் பிள்ளையின்பால் மிக்க அன்பும் உடையவர். இவர் பல பிள்ளைகளுடன் அவ்வழியே செல்லும்பொழுது அவர்கள் சிதம்பரம் பிள்ளையிடம் படிக்கிறவர்களென்பதை யறிந்து அன்போடு அழைத்து 'இப்பொழுது என்ன பாடம் நடக்கிறது?' என்று விசாரிப்பதும், அவர்கள் மனப்பாடம் பண்ணிய செய்யுட்களைச் சொல்லச்சொல்லிக் கேட்பதும், அவற்றிற்குப் பொருள் கேட்பதும் உண்டு. அவ்வாறு கேட்கையில் அவர்களுள் இவர் நயமாகவும் பொருள் விளங்கவும் பாடல் சொல்வதைக் கேட்டு மகிழ்வார்.

ஒருநாள் பிள்ளைகளை நோக்கி, "உங்கள் ஆசிரியர் உங்களுக்குச் செய்யுள் செய்யும் பழக்கம் உண்டாக்கியிருப்பாரே. பிள்ளையார்மேல் ஒரு வெண்பாவைச் செய்யுங்கள்" என்று சொன்ன பொழுது மாணாக்கர்களெல்லாரும் பாடுதற்கு முயன்று கொண்டிருக்கையில் இவர்,

---

*வாவு : உவா வென்பதன் சிதைவு; விடுமுறை நாட்களின் பெயராக வழங்கும். †சுங்கம் வாங்கும் உத்தியோகஸ்தர்.

"பாரதத்தை மேருப் பருப்பதத்தி லேயெழுதி
மாரதத்தைத் தந்தையிவர் வண்ணஞ்செய்—சீருடையோய்!
ஈற்றடிழை யாங்க ணயந்துகற்றுத் தேறமனத்
துற்றருளே யெங்கட் குதவு"

என்னும் வெண்பாவை விரைவிற் பாடிமுடித்தார். அதைக்கேட்ட ரங்கபிள்ளை மிக வியந்தனர். இவ்வாறே இவர் வருஞ் சமயங் கள்தோறும் சமுத்தி (ஸமஸ்யை) கொடுத்துப் பாடச்செய்து கேட்டு மகிழ்ந்து இவரை வியந்து பாடலொன்றுக்கு ஒருபணம் (2 - அணை) விழுக்காடு கணக்குப்பண்ணிக் கொடுப்பது வழக்கம். கொடுத்ததை மகிழ்ந்துபெற்றுப் போய் வேண்டுவனவற்றைக் குறித்த அளவிற்கு மேற்பட மளிகைக்கடையில் வாங்கிக்கொண்டு சென்றுகொடுத்துத் தந்தையாரை மகிழ்விப்பார். இவர் தமிழ் நூல்களைக் கவனித்துப் படிப்பதற்கும் பொருளைக் கேட்டுச் சிந் திப்பதற்கும் மேன்மேற் பாடிப் பழகுவதற்கும் ரங்கபிள்ளையின் இந்த முயற்சிகளும் காரணமாக இருந்தன. இவர் இளமையில் இங் ஙனம் பாடிய பாடல்கள் பலவென்பர்.

நெல்லைப்பற்றிப் பாடிய சிலேடை.

இவரிடத்தில் அன்புடைய திரிசிரபுரம் மலையாண்டியாபிள்ளை யென்பவர் இவருடைய கவித்துவத்தை யறிந்து இவர் ஆற்றலை எல்லோரும் அறியச்செய்து ஏதாவது உதவி செய்விக்க நினைந் தார். ஒரு நாள் * முருங்கைப்பேட்டையென்னும் ஊரிலுள்ள ஒரு மிராசுதாரரிடம் அழைத்துச் சென்று இவருடைய திறமையை அவருக்குச் சொன்னார். பக்கத்திலிருந்த ஒருவர் இவரை நோக்கி ஒரு பாட்டைக் கூறி, "அப்பா, இப்பாட்டுக்கு அர்த்தஞ் சொல்" என்றார். அவ்வாறே அதற்கு இவர் பொருள் சொல்லியபின் அக் கனவான், "'இப்பாட்டுக் கருத்தஞ் சொல்' என்பதையே ஈற்றடி யாக வைத்து ஒரு வெண்பாப் பாடு" என்று கூறவே இவர், சொல் என்பதற்கு நெல் என்னும் பொருளை யமைக்க எண்ணி, வெண்பாவின் ஈற்றடியாக வைத்தற்கு அத்தொடர் பொருந் தாமையின் 'தூய' என்பதை முன்னே சேர்த்து, "தூயவிப்பாட் டுக்கருத்தஞ் சொல்" என்ற ஈற்றடியை அமைத்து நெல்லுக்கும்

* இவ்வூர் திரிசிரபுரத்துக்கு மேற்கே உள்ளது.

திரிமூர்த்திகளுக்கும் சிலேடையாக,

* "ஒண்கமலம் வாழ்ந்தன்ன மாகி யுரலணைந்து
தண்கயநீர்த் தூங்கித் தகுமேறார்ந் - தெண்கதிரின்
மேயவிதத் தான்மூவ ராகும் விளம்பியதென்
தூயவிப்பாட் டெக்கருத்துஞ் சொல்"

என்னும் வெண்பாவைப் பாடி முடித்தார்.

அதனைக் கேட்ட அந்தக் கனவான் மிக மகிழ்ந்து ஒரு வண்டி நெல் கொடுத்தனுப்பினர்.† இவ்வாறே பலரால் அழைக்கப்பட்டுச் சென்று விரைவிற் பாடிப்பாடி இவர் பெற்ற பரிசுகள் பல. இவைகளெல்லாம் தந்தையார்க்கு மகிழ்ச்சியை விளைவித்து இவரைப் படிப்பிக்கும் விஷயத்தில் ஊக்கமளித்து வந்தன.

தந்தையார் பிரிவு.

இங்ஙனம் கல்வி கேள்விகளிலும் செய்யுள் செய்தலிலும் மேன்மேலும் வளர்ச்சியுற்றுப் பலராலும் மதிக்கப்பெற்று வருங் காலத்தில் இவருடைய கரு - ஆவது பிராயமாகிய விரோதி வருடத்திற் சோமரசம்பேட்டையில் இவர் தந்தையார் சிவபதமடைந்தார். அருமைத் தந்தையாருடைய பிரிவால் இவருக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. அப்பொழுது வருந்தி இவர் செய்த பாடல்களுள்,

"மூந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும்
தந்தை யெனைப்பிரியத் தான்செய்த—நிந்தைமிகும்
ஆண்டே விரோதியெனு மப்பெயர்நிற் கேதகுமால்
ஈண்டேது செய்யா யினி"

---

* 'ஒண்கமலம்.....ஆகி' : இது பிரமனுக்கும் நெல்லுக்கும் சிலேடை. கமலம் - தாமரையில், நீரில்; அன்னம் - அன்னப்பறவை, சோறு. 'உரல்.....தூங்கி' : திருமாலுக்கும் நெல்லுக்கும் சிலேடை. உரல் அணைந்து - உரலில் யசோதையாற்கட்டப்பட்டு, குற்றப்படுவதற்கு உரலை அடைந்து; கயம் நீர்த்தூங்கி - ஆழமாகிய கடலில் நித்திரை செய்து, ஆழமாகிய நீரில் தங்கி. 'தகும்.....விதத்தால்' : சிவபிரானுக்கும் நெல்லுக்கும் சிலேடை. ஏறுஊர்ந்து - இடபவாகனத்தில் ஏறியருளி, மூட்டையாகக் கொண்டு போகப்படும்பொழுது எருத்தில் ஏறி (கடாவிடும் பொழுது ஏற்றுல் ஊரப்பெற்று என்பதும் பொருந்தும்); கதிரில் - சூரியனிடத்தே, தானியக்கொத்தில். மூவர் - பிரமன் முதலிய மூவர். சொல் - சொல்லென்னுமேவல், நெல்.

† இச்செய்தியையும் செய்யுளையும் சொன்னவர் இவர் மாணாக்கராகிய ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர்கள்.

என்னும் செய்யுள்மட்டும் கிடைத்தது. தந்தையார்க்கு அபரக் கிரியைகளைச் செய்து முடித்தபின்பு இவர் அங்குள்ளாருடைய ஆதரவால் அவ்வூரிலேயே இருந்து காலங்கழித்துவந்தார். அவ் வூரார் இவருக்கு வீட்டுக்கவலையில்லாதபடி வேண்டியவற்றைக் கொடுத்து உதவிவந்தார்கள்.

விவாகம்.

இயல்பாகவே இவருக்கு வேண்டியவற்றை யளித்து உதவி செய்துவந்த பல நண்பர்களும் வேறு பல கனவான்களும் பிறகு அதிக உதவிகளைச்செய்து இவருக்கு, காவேரியாச்சி யென்னும் பெண்ணை மிகவும் சிறப்பாக விவாகம் செய்வித்தனர்.

இவர் ஒய்வுநேரங்களில் அயலூர்களுக்குச் சென்று அங்கங்கே யுள்ள கல்விமான்களை அடைந்து விசாரித்துக் கிடைக்கும் நூல் களைப் பெற்றுக் கொணர்ந்து பிரதிசெய்து படித்துப் பொருள் தெரிந்து ஆராய்ந்துவருவார். இப்படிச் சிலவருடங்கள் சென்றன.

---

3. திரிசிரபுர வாழ்க்கை.

சோமரசம்பேட்டையை நீங்கியது.

தமிழ்ப்பயிற்சியை மேன்மேலும் அபிவிருத்தி பண்ணிக் கொள்ள வேண்டுமென்ற விருப்பம் அதிகமாக உண்டானமையா லும், மேலே படிக்கத்தக்க நூல்கள் சோமரசம்பேட்டையில் அகப் படாமையாலும், கிடைத்த நூல்களைப் பாடங்கேட்பதற்கும் உண் டாகும் ஐயங்களை உடனுடன் போக்கிக்கொள்ளுதற்கும் சிறந்த பெரியோர்கள் அங்கே இல்லாமையாலும் திரிசிரபுரத்திலேயே சென்றிருக்க நினைந்த இவர், அங்கே சென்று அந்நகரிலுள்ள அன்பர்களிடம் தமது கருத்தைத் தெரிவித்தார். அவர்கள், "நீர் இங்கே வந்திருத்தல் எங்களுக்கு உவப்பைத் தருவதாகும்; எங் களால் இயன்ற அளவு உதவிசெய்து வருவோம்" என்றார்கள். அதனைக்கேட்டுத் திரிசிரபுரத்திற்குப்போய் இருக்கலாமென்று நிச்சயித்துச் சோமரசம்பேட்டையில் தம்மை ஆதரித்தவர்க

ளிடத்தில் தம்முடைய கருத்தைத் தெரிவித்து அரிதின் விடை பெற்றுத் திரிசிரபுரம் வந்துசேர்ந்தனர். அங்கே மலைக்கோட்டைக் கீழைவீதியின் தென்பக்கத்துள்ள ஒரு பாறைமேற் கட்டப்பட்டிருந்த சிறியதான ஓட்டுவீடு ஒன்றில் மாதம் ஒன்றுக்குக் கால் ரூபாய் வாடகை கொடுத்து இருப்பாராயினர்.

புலவர்கள் பழக்கம்.

அக்காலத்தில் திரிசிரபுரத்திலும் அதனைச்சூழ்ந்துள்ள ஊர்களிலும் தாங்களறிந்தவற்றை மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லும் தமிழ்ப்புலவர்கள் சிலர் இருந்து வந்தனர். ஒவ்வொருவரும் சில நூல்களையே பாடஞ்சொல்லுவார். பலநூல்களை ஒருங்கே ஒருவரிடத்திற் பார்ப்பதும் பாடங்கேட்பதும் அருமையாக இருந்தன. இவர் அவ்வூரிலும் பக்கத்தூர்களிலும் இருந்த தமிழ்க்கல்வி மான்களிடத்திற் சென்று சென்று அவர்களுக்கு இயைய நடந்து அவர்களுக்குத் தெரிந்த நூல்களைப் பாடங்கேட்டும் அவர்களிடம் உள்ள நூல்களைப் பெற்றுவந்து பிரதிசெய்துகொண்டு திருப்பிக் கொடுத்தும் வந்தனர். இவருடன் பழகுவதிலும் இவருடைய ஆற்றலை அறிந்துகொள்வதிலும் வேண்டியநூல்களை இவருக்குக் கொடுத்து உதவுவதிலும் இவர் விரும்பிய நூல்களைப் பாடஞ் சொல்வதிலும் மகிழ்ச்சியும், இவரைப்போன்ற அறிவாளிகளைப் பார்த்தல் அருமையினும் அருமையென்னும் எண்ணமும் அவர்களுக்கு உண்டாயின. பழகப் பழக அவர்களிடம் படித்து வந்த ஏனை மாணாக்கர்களுக்கும் இவர்பால் அன்பு உண்டாயிற்று. * "மருவுக்கு வாசனைபோல்" வாய்த்த இவரது இயற்கையறிவையும் கல்விப் பயிற்சியாலுண்டாகிய செயற்கையறிவையும் விரைவிற் கவிபாடுந் திறமையையும் அறிந்து அவர்கள் எல்லோரும் இவரிடம் அன்புடன் பழகி வந்தார்கள். அப்போது ஒழிந்த காலங்களில் தமக்குத் தெரிந்த நூல்களைப் பாடங் கேட்க விரும்புகிறவர்களுக்குப் பொருள் சொல்லி வந்தார்.

வித்துவான்கள்.

அக்காலத்தில் திரிசிரபுரத்திலும் அதனைச் சூழ்ந்த ஊர்களிலும் பின்னே காட்டிய வித்துவான்கள் இருந்து வந்தார்கள்:

---

* வெங்கைக் கோவை.

1. உறையூர் முத்துவீர வாத்தியார் :

இவர் திரிசிரபுரம் வண்டிக்காரத் தெருவில் இருந்தவர்; சாதியிற் கொல்லர்; கம்மாள வாத்தியாரென்றும் கூறப்படுவார்; முத்துவீரியமென்னும் இலக்கண நூல் முதலியன இவராற் செய்யப்பெற்று வழங்குகின்றன. இவரை நான் பார்த்திருப்பதுண்டு.

2. திரிசிரபுரம் சோமசுந்தர முதலியார் :

இவர் தொண்டைமண்டல வேளாளர்; திரிசிரபுரம் மாணிக்க முதலியாருடைய வீட்டு வித்துவானாக இருந்து விளங்கியவர்; சைவ நூல்களில் நல்ல பயிற்சியை உடையவர்.

3. வீமநாயக்கன்பாளையம் இருளாண்டி வாத்தியார் :

இவருடைய கால்கள் பயனற்றனவாக இருந்தமையால் எருத்தின்மேலேறி ஒரு மாணாக்கனை உடன் அழைத்துக்கொண்டு செல்வவான்களிடம் சென்று தமது பாண்டித்தியத்தை வெளிப்படுத்திப் பரிசுபெற்றுவரும் இயல்புடையவர்.

4. பாலக்கரை வீராசாகவ செட்டியார் :

இவர் சோடசாவதானம் தி. சுப்பராய செட்டியாருடைய தந்தையார்.

5. கோட்டடி ஆறுமுகம் பிள்ளை :

இவர் இருந்த இடம் திரிசிரபுரம் கள்ளத்தெரு; தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலன்றி வைத்திய நூல்களிலும் பயிற்சி மிக்கவர். பலவகையான மருந்துகளைத் தொகுத்து ஒரு கொட்டகையில் வைத்துக்கொண்டு நோயாளிகளுக்குக் கொடுத்து வந்தமையால் இவர் பெயர்க்கு முன்னம் 'கொட்டடி' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதென்று சொல்வர். சென்னை இராசதானிக் கலாசாலையில் இருந்தவரும் குணகரமென்னும் நூல் முதலியவற்றை இயற்றியவருமாகிய சேஷையங்காரென்பவர் இவரிடம் பாடங்கேட்டவர். இவரும் சேஷையங்காரும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ளவேண்டிய செய்திகளைச் செய்யுட்களாகவே அஞ்சற் கடிதங்கள் மூலம் தெரிவித்துக்கொள்வது வழக்கம்; அச் செய்யுட்களிற் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன்.

6. கற்குடி மருதமுத்துப் பிள்ளை :

இவர் சோதிடத்திலும் வல்லவர்.

7. * திருநயம் அப்பாவையர் :

இவர் திருவிளையாடற் கீர்த்தனம் முதலியவற்றை இயற்றியவர்; பரம்பரையாகத் தமிழ்ப்புலமை வாய்ந்த குடும்பத்தினர்; அடிக்கடி திரிசிரபுரம் வந்து செல்வார்.

8. மருதநாயகம் பிள்ளை :

இவர் இலக்கிய இலக்கணங்களிலும் மெய்கண்ட சாத்திரத்திலும் நல்ல பயிற்சியுடையவர்; முதன் முதலாக மெய்கண்ட சாத்திரங்களைப் பதிப்பித்தவர் இவரே.

பிரபுக்கள்.

அப்பொழுது பிள்ளையவர்களை ஆதரித்து வந்த பிரபுக்கள் (க) பழனியாண்டியா பிள்ளை, (உ) லட்சுமண பிள்ளை, (ங) ஆண்டார்தெரு சிதம்பரம்பிள்ளை, (ச) சிரஸ்தேதார் செல்லப்ப முதலியார், (ஞ) வரகனேரி நாராயணபிள்ளை, (சு) சொக்கலிங்க முதலியார், (எ) உறையூர் அருணாசல முதலியார், (அ) உறையூர்த் தியாகராச முதலியார், (கூ) உறையூர்ச் சம்புலிங்க முதலியார் என்பவர்கள்.

வேலாயுத முனிவர் முதலியோரிடம் பாடங்கேட்டது.

இவர் இங்ஙனம் திரிசிரபுரத்தில் இருந்து வருகையில் வேலாயுத முனிவரென்பவர் அங்ஙகருக்கு வந்தார். அவர் திருவாவடுதுறையாதீன மடத்தில் முறையாகப் பலநூல்களைப் பெரியோர்கள்பாற் கற்றுத் தேர்ந்தவர். ஆதீனத் தலைமைஸ்தானம் ஒருவேளை தமக்குக் கிடைக்கலாமென்பதை எதிர்பார்த்துப் பல நாள் காத்திருந்தார். என்ன காரணத்தாலோ அவர் அவ்வாறு நியமிக்கப்படவில்லை; அதனாற் பிணக்குற்று உசாத்துணைவர்களும் தூண்டுபவர்களுமாகிய சில நண்பர்களுடன் தாம் படித்த சுவடிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, மதுரைத் திருஞான சம்பந்தமூர்த்தி ஆதீனத்திற்காவது குன்றக்குடியிலுள்ள திருவண்ணமலை ஆதீனத்திற்காவது சென்று காத்திருந்து தலைமைஸ்தானத்தைப் பெறலாமென்றெண்ணி புறப்பட்டுத் திரிசிரபுரம் வந்து ஆண்டுள்ளார். வேண்டுகோளின்படி மலைக்கோட்டையிலுள்ள மௌனஸ்வாமிகள் மடத்திற் சில மாதங்கள் அவர் தங்கியிருந்தார்.

* இக்காலத்தில் இவ்வூர்ப்பெயர் திண்ணியமென வழங்கும்.

அங்ஙனம் இருக்கையில் திரிசிரபுரத்திலிருந்தும் அயலூர்களிலிருந்தும் வந்து அவரிடம் படித்தோர் பலர். பிள்ளையவர்கள் அவருடைய கல்வியறிவின் மேம்பாட்டையறிந்து அவரிடம் காலை மாலைகளில் தவறுது சென்று முயன்று வழிபட்டு நூல்களை முறையே பெற்றுப் பிரதிசெய்துகொண்டு படித்தும் பல நாட்களாகத் தாம் படித்த நூல்களில் உள்ள ஐயங்களை வினவித் தெளிந்தும் வந்தனர். அம் முனிவரால் இவருக்குப் பல தமிழ் நூற் பெயர்களும் தெரிய வந்தன. அக்காலத்தில் இவருடன் திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீ கோவிந்தபிள்ளை யென்பவரும் அவரிடம் பாடங்கேட்டுவந்தனர். அவரிடம் தாம் படித்தமைக்கு அறிகுறியாகத் தாம் எழுதும் கடிதங்களின் தலைப்பிலே, கோவிந்தபிள்ளை 'வேலாயுத முனிவர் பாதாரவிந்தமே கதி' என்று எழுதி வந்தனர். அம்முனிவரிடம் படித்த நூல்கள் இன்ன இன்னவென்று கோவிந்த பிள்ளையே பிற்காலத்தில் என்னிடம் சொல்லியதுண்டு.

பின்பு, இவர் கம்பராமாயணம் முதலிய நூல்களை எழுதிப் பல முறை படித்துத் தமக்கு உண்டாகும் சந்தேகங்களை அங்கங்கே சென்று தெரிந்தவர்களிடம் கேட்டு நீக்கிக்கொண்டு வந்தனர்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னுட் நான்கு இலக்கணங்களையும் இவ்வண்ணமே இவர் இளமை தொடங்கித் தக்கவர்களிடம் பாடங்கேட்டும் ஆராய்ந்தும் வாசித்து முடித்தார். பின்பு தண்டியலங்காரம் படிக்க வேண்டுமென்று விரும்பினர்; அதைப் பாடஞ்சொல்லுபவர்கள் கிடைக்கவில்லை. யாரிடமிருந்தேனும் அந்நூல் கிடைத்தால் பிரதி செய்துகொண்டு படிக்கலாமென்று எண்ணிப் பலவாறு முயன்றார். அவ்வூரில் ஒவ்வொருநாளும் வீடுதோறும் சென்று அன்னப்பிட்சை யெடுத்து உண்டு காலங்கழித்து வந்த பரதேசி ஒருவர் தமிழ் நூல்களிற் பழக்கமும் அவற்றுள் தண்டியலங்காரத்தில் அதிகப் பயிற்சியும் உடையவராயிருந்தார். ஆனாலும் அவர் பிறரை மதிப்பதில்லை; முறையாக ஒருவருக்கும் பாடம் சொன்னதுமில்லை. அவர் தாம் இருக்கும் மடத்திற் சில ஏட்டுப் புத்தகங்களைச் சேமித்து வைத்திருந்தார். அவர் தாமாக விரும்புவாராயின் ஏதேனும் சில தமிழ் நூல்களிலுள்ள கருத்துக்களை வந்தோருக்குச் சொல்லுவார்; "தானே தரக்கொளினல்லது தன்பால், மேவிக் கொளக்கொடா

விடத்தது மடற்பனை" என்னும் உவமைக்கு அவரை இலக்கியமாகச் சொல்லலாமென்பர்.

அவர் நன்றாகப் படித்தவரென்பதையும் அவரிடம் தண்டியலங்காரப் பிரதியிருப்பதையும் கேள்வியுற்ற இவர், எவ்வாறேனும் அவரிடம் தண்டியலங்காரத்தைப் பெற்றுப் பாடங்கேட்க வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு அவர் பிட்சையெடுக்க வரும் காலமறிந்து தெருத்தோறும் கூடவே தொடர்ந்து பேசிக்கொண்டு சென்றும், அவருக்குப் பிரியமான கஞ்சாவை வாங்கி வைத்திருந்து உரிய காலத்திற் சேர்ப்பித்தும் அவர் உவகையோடு இருந்த சமயத்தில் தம் கருத்தை மெல்லப் புலப்படுத்தி அவரிடமிருந்த புத்தகத்தைப் பெற்று எழுதிக்கொண்டு பாடமும் கேட்டார். இவ்வாறு பணிவுடன் தம்மோடு தொடர்ந்து வந்து கேட்டது அவருக்குத் திருப்தியே. அதனால் இவருக்கு அவரிடம் இருந்த வேறு சில நூல்களும் கிடைத்தனவாம்.

இவ்வாறு ஐந்திலக்கணங்களையும் முறையே தெரிந்தவர்களிடம் சென்று சென்று இவர் கற்றுக்கொண்டார். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள கற்குடியில் இருந்த ஒரு பெரியவரிடத்தில் பொருத்த இலக்கணத்தையும் அஷ்டநாகபந்தம் முதலிய சித்திரகவிகளின் இலக்கணத்தையும் அறிந்துகொண்டார்.

இவர் இப்படி * அங்கங்கே கலைகளைத் தேடியறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலத்தில் இவருடன் ஒத்த பிராயத்தினர் சிலர் தமிழ்க்கல்வி கற்று வந்தனர். அவர்களும் இவரும் ஒருவரையொருவர் விஞ்சவேண்டுமென்று நினைந்துகொண்டு மிக முயன்று படித்தார்கள்.

---

* "அங்கங்கே கலைக டேடு மறிவன்போல் விளங்கிற் றம்மா" திருவிளை. தருமிக்கு.

4. பிரபந்தங்கள் செய்யத் தொடங்கல்.

பிள்ளையவர்கள், தம் தந்தையாருடைய கட்டளையின்படி தினந்தோறும் தேவார திருவாசகங்களைப் பாராயணஞ் செய்தலும் பொருள் தெரிந்து ஈடுபட்டு மனமுருகுதலும் வழக்கம். கிடைக்குமிடத்திற்குச் சென்று விசாரித்துப் பலவகைத் தமிழ்ப் பிரபந்தங்களை வாங்கி ஆவலோடு படித்து வருவார்; பிள்ளைப் பெருமாளையங்காருடைய அஷ்டப்பிரபந்தம், சிவப்பிரகாச ஸ்வாமி. கள் பிரபந்தங்கள், குமரகுருபர ஸ்வாமிகள் பிரபந்தங்கள் முதலிய வற்றை முறையே படித்து அவற்றின் சுவைகளை அறிந்து இன்புறுவார்; தமிழ் நூலாக எது கிடைத்தாலும் அதை வாசித்து நயம் கண்டு மகிழ்வார். அன்றியும், புறச்சமய நூல்களாக இருந்தாலும் தமிழாயின் அவற்றைப்படித்துப் பொருளறிவதில் இவருக்கு விருப்பமுண்டு.

திட்டகுடிப் பதிகம்.

அவ்வாறிருக்கையில் இவர் சில அன்பர்களுடன் *திட்டகுடி, ஊற்றத்தூர், பூவாளூர், திருத்தவத்துறை (லாலுகுடி) முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று சிவதரிசனம் செய்துவிட்டு வந்தார். திட்டகுடிக்குச் சென்றிருந்தபொழுது அந்தத் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வஜ்ரேஷ்வரர் விஷயமாக அக்கோயில் தர்மகர்த்தர் கேட்டுக்கொள்ள ஒரு பதிகம்பாடினரென்றும் அது கோயிற்குச்சென்று தரிசித்த பின்பு அக்கோயிலிலேயே இருந்து சில நாழிகையிற் செய்யப்பட்டதென்றும் சொல்லுவார்கள். அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. முதன் முதலாகப் பிரபந்தங்கள் பாடத்தொடங்கினவர் பதிகம், இரட்டைமணிமாலை முதலிய எளியன பலவற்றைப்பாடியிருத்தல் கூடும்.

திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி.

ஒரு தலத்திற்கு நண்பர்களுடன் சென்றால் அத்தலத்திலுள்ளார் இவரது கவித்துவத்தை அறிந்து அத்தல விஷயமாகத் தனிப்பாடல்களையோ பிரபந்தங்களையோ இயற்றும் வண்ணம்

---

* வதிட்டகுடியென்பது திட்டகுடியென்று ஆயிற்றென்பர். இது வடவெள்ளாற்றின் கரையிலுள்ளது; ஒரு வைப்புஸ்தலம்.

கேட்டுக்கொள்வார்கள். செய்யுள் இயற்றுவதற்குரிய சமயம் வாய்க்கும்போதெல்லாம் அந்த ஆற்றலை வளர்ச்சியுறச் செய்து கொள்ள வேண்டு மென்னும் அவாவுடையவராக இருந்த மையால், இவர் அவர்களுடைய விருப்பத்தின்படியே பாடல்கள் முதலியன இயற்றுவதுண்டென்பர். ஒரு முறை * ஊற்றத்தூருக்குச் சென்றிருந்தபொழுது பல அன்பர்கள் விரும்பியவண்ணம் திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி யென்ற ஒரு பிரபந்தம் இவராற் செய்யப்பட்டது.

இவர் பிற்காலத்திற் பாடிய பிரபந்தங்களுக்கும் இளமையிற் பாடியவற்றிற்கும் வேறுபாடுகள் பல உண்டு. பிற்காலத்து நூல்களிற் கற்பனைநயங்களும் அணிகளும் சிறந்த கருத்துக்களும் அங்கங்கே அமைந்திருக்கும்; சைவ சித்தாந்தநூற் கருத்துக்களும் பழைய இலக்கியங்களிலுள்ள சொற்களும் பொருள்களும் காணப்படும். இளமையிற் பாடியவை எளிய நடையில் அமைந்தவை. சிவபெருமான்பால் இயல்பின் எழுந்த அன்பினுல் பக்திச்சுவைமட்டும் மலிந்த செய்யுட்கள் அவற்றிற் காணப்படும். தேவார திருவாசகங்களிலுள்ள கருத்துக்கள் அமைந்த சில பாடல்களும் திரு ஊறைப்பதிற்றுப் பத்தந்தாதி முதலியவற்றில் உள்ளன. இவ் வந்தாதி,

"செய்ய முகிலின் மெய்யனயன் றெரிய வரிய பெரியானென்
ஐயன் வளர்தென் திருவூறை யந்தா தியையன் பாலுரைக்க
நையன் பரைவிட் டகலாத நால்வாய் முக்க †ணிரண்டிணையோர்
கையன் மதத்த னழகியநங் கயமாமுகத்த னடிதொழுவாம்"

என்னுங் காப்புடனும்,

"பூமா திருக்கு மணிமார்பன் புயநா லிணையன் புருகூதன்
நாமா றுறவே வழுத்தூறை நகர்வாழ் நம்பா நாதிதழித்
தாமா லினது தாட்குமலர் சாத்திப் பிறவிக் கடனீந்த
ஆமா றிதுவென் றறியேனே யாண்டாய் காண்டற் கரியானே"

---

* இஃது ஊட்டத்தூரென வழங்கும். இது வைப்புஸ்தலங்களுள் ஒன்று. இதனைத் தலை நகராகக் கொண்ட நாடு ஊறை நாடென்றும் அந்நாட்டில் இருந்த ஒரு பகுதியினராகிய வேளாளர் ஊற்றை நாட்டா ரென்றும் வழங்கப்படுவர்.

† இரண்டு இணை - மோத்தலுணர்ச்சியும் பரிச உணர்ச்சியும் ஆகிய இரண்டும் பொருந்திய.

என்னும் முதற் செய்யுளுடனும் தொடங்கப்பட்டுள்ளது. இச் செய்யுளில், "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என்ற குறளின் கருத்தை அமைத்திருக்கின்றனர்.

* "பணிகின் றேனிலை நாத்தழும் புறநினைப் பலகவி யாற்பாடத்
தணிகின் றேனிலை தீவினை தொலைக்கநின் றெண்டரிற் றெண்டாகத்
தணிகின் றேனிலை யுள்ளநெக் குருகியுள் ளுள்களி னறும்பூக்கொண்
டணிகின் றேனிலை யெங்ஙன மும்குவே னரதன புரத்தானே" (கக)

† "இல்லையுன்க ழற்கணன்றி யெற்குவேறி ருப்புடற்
கல்லையன் றெடுத்துவில்லை னக்குனித்த காவலா
வல்லையம்பு யப்பொகுட்டை மத்தகத்தை யெற்றியே
வெல்லைகொண்ட கொங்கைபங்க வேத வூறை நாதனே" (நந)

‡ "சம்பு சங்கர வூறைச் சதாசிவ
அம்பு பம்பு நெடுஞ்சடை யாயெனு
வெம்பு கின்றிலன் வீரிட் டலறிலன்
நம்பு கின்றிலன் ஞனுய்யு மாறென்னே" (கூக)

§ "சூட வேண்டுநின் னடிகள் போற்றியான்
சுற்ற வேண்டுநின் னூறை போற்றிவாய்
பாட வேண்டுநின் சீர்கள் போற்றிகண்
பார்க்க வேண்டுநின் வடிவம் போற்றியான்
கூட வேண்டுநின் னடிகள் போற்றியுட்
கொள்ள வேண்டுநின் னன்பு போற்றிமால்
தேட வேண்டருண் மேகம் போற்றிநுண்
சிற்றிடைக் குயில் பாகம் போற்றியே" (கூள)

என்னும் செய்யுட்களில் திருவாசகக் கருத்துக்களும் சொற்றொடரமைப்பும் இலங்குவதைக் காணலாம். நீர்வளங்களையும் நிலவளங்களையும் புனைந்து மிக அரிய கற்பனைகளை மேகம்போலப் பிற்காலத்துப் பொழிந்த இப்புலவர் பெருமான் இந்நூலிற் பெயரளவில் நிலவளமென்னும்படியுள்ள சிலவற்றைக் கூறியிருத்தல் அறிதற்குரியது. அவற்றுட் சில வருமாறு :—

$ "அளிக்கும் புறுபங் கயப்பொகுட்டி லளிந்த தேமாங் கனியுடைந்து
துளிக்கும் பிரசம் பெருகிவய றேறும் பாய்ந்து வினைசெந்நெல்
களிக்குங் கழுக மீப்பாய்ந்து காட்டு மூறை" (கo)

---

* ஒப்பு: திருச்சதகம், 31. † ஒ : திருச்சதகம், 94. வெல்லை - வெல்
‡ ஒ : திருச்சதகம், 14. § ஒ : திருச்சதகம், 100. [லுதலை.
$ அளிக் கும்பு - வண்டின் கூட்டம்.

" ... ... தேமா
துளத்தின் மந்திபாய்ந் தக்கனி பறித்துவின்
டொகுகழங் கென வோச்சு
வளத்தின் விஞ்சிய வூறை " (கசு)

" குருகுழத்தியர் கண்ணிழன் மீனெனக்
கொத்துதண் பணைச்செந்நெல்
அருகு சென்றன மடையுறு மூறை " (கஎ)

" ஆலையிற் கழைக ளுடைந்தசா றோடி
யலர்தலை யரம்பையைச் சாய்த்துச்
சோலையிற் புகுந்து கழுகினே மாய்த்துத்
துன்னுசெந் நெல்வயற் பாய்ந்து
வேலையிற் பெருகு மூறை " (சக)

" கொண்டறவழ் பெருஞ்சோலைப் பலவீன்ற கனியுடைந்த
கொழுஞ்சா றோடி
ளெண்டமையு மிடமுதலாப் பணைகடொறும் புகுமூறை." (எடு)

பிற்காலத்தில் திரிபு யமகப்பாடல்கள் பலவற்றை எளிதிற் பாடிய இப்பெருங்கவிஞர் இந்த நூலில் அந்த ஆற்றலைச் சிறிது காட்டி யிருக்கின்றார்:

* " புரம டங்கமுன் வென்றவ னூறைவாழ்
புண்ணியப் பெருஞ்செல்வன்
சிரம டங்கலுஞ் செஞ்சடைக் காட்டினன்
றிரண்டதூண் டனிற்றோன்றும்
நரம டங்கலை யுடல்வகிர்ந் தாண்டவ
ளுயினுங் கடையேனை
உரம டங்களைந் தாண்டுகொண் டானிதை
யொக்குமூ தியமென்னே " (கஉ)

† " அகத்திரா தெடுங்கோ ணென்னலிற் கழிந்த
தாகுமீ தெனப்பலர் கூடிச்
சகத்திரா வருமுன் றிலைக்குது மெனவே
சாற்றுதன் முன்னமெட் டிரண்டு

---

* புரம் மடங்க. சிரம் அடங்கலும், நரமடங்கலை - நரசிங்கத்தை. உரத்தையுடைய மடத்தைக் களைந்து ; மடம் - அறியாமை.

† சகத்து இரா வரும்முன். தாள் நகத்திர் - திருவடியின் நகத்தை யுடையவரே.

மூகத்திரா வணன்வெற் படிவிழுந் தலற
முன்னநின் றடர்த்திடு மலர்த்தாள்
நகத்திரா டரவப் பணியிரு றையினும்
நல்லடி காணநின் றேனே" (சச)

* "செய்க்குவளே நயனமர விந்தமுகங் கோங்கரும்பு
திரண்ட கொங்கை
கைக்குவளே பொருந்தலின்மின் சுற்றியயாழ் கடிதடங்காக்
கணம்பூ வென்ஞ
மெய்க்குவளே வுறுமளவு மடவார்பாற் றிரிந்துழலும்
வீண ஞனேன்
ஐக்குவளேச் செவிபாகற் கூறையற்கெஞ் ஞான்றுநல்ல
ஞவனெஞ் சே" (எக)

என்பனவற்றில் திரிபின் முளேதோன்றியிருத்தல் காண்க. இடையிலே சக - ஆம் செய்யுள் முதல் சஅ - ஆம் செய்யுள் வரையில் மரணகாலத்துண்டாகும் துன்பினின்றும் போக்கியருளவேண்டுமென்னும் கருத்து அமைந்துள்ளது. இங்ஙனம் ஒரே கருத்தைப் பலவிதமாக அமைத்துச் சில செய்யுட்களைத் தொடர்ந்து இவர் பாடியிருத்தலே இளமைக்காலத்திற் செய்த பிரபந்தங்களிற் காணலாம்.

தலசம்பந்தமான செய்திகளை இவ்வந்தாதியின்பால் உரிய இடங்களில் அமைத்துள்ளார்; "அன்ன வூர்தியன் மான்முதலோர்க்கரு மரதன புரத்தம்மான்", "அணையரி வையைமேற் சூடியரதன புரத்து ளானே", "வெம்புகின்றன னரதன புரத்துறை விமலா" (கஉ, உசு, அஉ) என்னுமிடங்களில் தலத்தின் வேறு பெயராகிய அரதனபுர மென்பதனையும், "ஊறை நகருறை தேவவேற்பு, மானவா", "வேயநேகமுற்ற தேவவேற்ப னூறை யற்புதன்" (உஉ, ஙசு) என்று அத்தலத்திலுள்ள தேவகிரியையும், "இருக்குமோதுதற்கரிய நந்தாநதிக்கிறைவா" (அச) என அத்தலத்தாநதியையும், காப்பில் தலத்துவிநாயகரையும், "ஊறையம் பதிவாழையனே துய்யமாமணியே", "துய்யமாமணியே பரஞ்சோதியே" (நo, சுச) என அத்தலத்து மூர்த்தியின் திருநாமமாகிய சுத்தரத்தினேசுவரனென்பதன் பரியாயத்தையும் அமைத்துள்ளார்; "மருள்கடந்தவர் சூழ்தரு மூறைவாழ் மாசிலாமணியே", "ஊறைக் கோதிலா மணி

* ஐக்கு வள்ளேச்செவி பாகற்கு; ஐக்கு - தலைவனுக்கு.

யைத் தானே" (கஅ, உஉ) என்று அந்நாமம் குறிப்பாற் புலப்படும் படி சேர்த்தும், "சீரவாணி பாகனேக ணுகர் தேவர் தேவனே" (ஙக) என அத்தலத்து அம்பிகையின் பெயரைக் காட்டியும் பாராட்டியிருத்தல் காண்க. சுற்றிலுள்ள பத்துப்பாடல்களுள் ஒவ்வொன்றும் போற்றி போற்றியென்று முடிகின்றது.

"காதும் பிறவிக் கடல்வீழ்த் திருவினையின்
நீதுங் குறைத்துமுத்தி சேர்க்குமே—போதம்
அடையூறை யந்தாதி யைக்கருது வாருக்
கிடையூறை நீக்குவதன் றி"

என்னும் பயனுடன் இந்நூல் நிறைவுறுகின்றது.

இந்நூலுக்குப் பலர் சிறப்புப்பாயிரம் கொடுத்திருத்தல் கூடும். செய்தவர் பெயர் தெரியாத ஒரு செய்புள்மட்டும் இப் பொழுது கிடைக்கின்றது. அது வருமாறு:

"உய்ய மணிமார் பரியயன்விண் ணோரும் புகழ்ந்த திருவூறைத்
துய்ய மணியீ சருக்கன்பு துலங்கந் தாதி சொற்றுயர்ந்தான்
செய்ய மணிச்சீர்ச் சிதம்பரமன் சேயா வுதித்தெம் மானருளைப்
பெய்ய மணிமாக் கவிசொலுநாப் பெறுமீ னாட்சி சுந்தரனே."

மயில்ராவணன் சரித்திரம்.

ஒருசமயம் இவர் பூவாளூருக்குச் சென்றிருந்தார். அப் பொழுது அங்கே உத்தமதானபுரம் * லிங்கப்பையர் குமாரர்களாகிய சேஷையர், சாமிநாதையரென்ற இருவர் சிகாழி அருணாசல கவிராயர் இயற்றிய இராமாயணக் கீர்த்தனத்தையும் † பம்பரஞ் சுற்றிச் சுப்பையரென்பவர் இயற்றிய மயில்ராவணன் சரித்திரக் கீர்த்தனத்தையும் படித்துப் பொருள் சொல்லிக் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தனர். அவர்களுடைய வேண்டுகோளின்படி இவர் மயில்ராவணன் சரித்திரத்தை நூறுபாடலாகச் சிலநாட்களிற் செய்துமுடித்து அவர்களுக்குக்கொடுத்தார். அவ்விருவரும் அதனைப் பெற்றுத் தாம் செல்லும் பல இடங்களிலும் அருணாசல கவி ராமாயணத்தைச் சொல்லும்பொழுது இடையிடையே கம்ப ராமாயணப் பாட்டுக்களைச் சொல்வதுபோல் மயில்ராவணன் சரித்திரக் கீர்த்தனங்களைச் சொல்லும்பொழுது இவர் செய்த

* இவர் சாமிமலைக் குறவஞ்சி முதலிய பிரபந்தங்களைச் செய்து அரங்கேற்றியவர். † பம்பரஞ்சுற்றி யென்பது ஓரூர்.

செய்யுட்களைச் சொல்லிப் பொருட் பயனடைந்து வந்தனர். இச் செய்தியை அவ்விருவருள் ஒருவராகிய சாமிநாதையரே கூறக் கேட்டிருப்பதுடன் அந்நூற் செய்யுட்களிற் சிலவற்றையும் நான் இளமையிற் கேட்டதுண்டு. அவற்றின் நடை எளிதாக இருந்தது.

5. திருவாவடுதுறைக்கு வந்தது.

சிவதீட்சையும் கூஷ்மாண்டகலிங்க பூஜையும் பெற்றது.

இவர் தலதரிசனங்கள் முதலியவற்றில் மிக்க விருப்புடையவராக இருந்தனர். அன்றியும் சிவபெருமானை விதிப்படியே தினந் தோறும் பூசித்துவர வேண்டுமென்னும் அவா இவருக்கு உண்டாகி வளர்ந்து வந்தது. அதனால் இவர் சிவதீட்சை செய்துகொள்ள விரும்பினர். அப்பொழுது திரிசிரபுரம் கீழைச் சிந்தாமணியில் இருந்த செட்டி பண்டாரத்தையா என்னும் அபிஷிக்தர் ஒருவர் இவருக்குத் தீட்சை செய்வித்து கூஷ்மாண்டகலிங்க பூஜையும் எழுந்தருளச் செய்வித்தார். அதுமுதல் இவர் பூஜையை அன்போடு நாடோறும் செய்துவருவாராயினர்.

கச்சியப்ப முனிவர் நூல்களைப் படித்தது.

இவர் புத்தகங்களைத் தேடுகையில் திருவானைக்காக்கோயில் தர்மகர்த்தாவின் வீட்டில், திருவாவடுதுறையாதீனத்து வித்துவானுகிய ஸ்ரீகச்சியப்பமுனிவராற் செய்யப்பெற்ற நூல்களுள் ஒன்றுகிய திருவானைக்காப்புராணம் கிடைத்தது. அதை முறையே படித்து வருகையில் கடவுள் வாழ்த்தின் அழகும், நாட்டுச்சிறப்பு முதலிய காப்பிய உறுப்புக்களின் அமைதியும், அவற்றிற்பழைய நூற் பிரயோகங்களும், இலக்கண அமைதிகளும், தம்மால் அதுவரையில் அறியப்படாத சைவசாஸ்திரக்கருத்துக்களும், சைவபரிபாஷைகளும், புதியபுதிய கற்பனைகளும் நிறைந்து சுவை ததும்பிக் கொண்டிருத்தலையறிந்து இன்புற்றுப் பன்முறை படித்து ஆராய்ச்சி செய்வாராயினர். அதைப் படிக்கப்படிக்க அதுவரையிற் படித்த பல நூல்களினும் வேறு தலபுராணங்களினும் அது மிக்க சுவை

யுடையதென்று அறிந்துகொண்டார். பின்னர், கச்சியப்பமுனிவர் செய்த வேறு நூல்கள் எவையென்று ஆராய்ந்து தேடிய பொழுது விநாயக புராணத்திற் சில பகுதிகளும், பூவாளூர்ப் புராணமும், காஞ்சிப்புராணமும் கிடைத்தன. அந்நூல்களையும் வாசித்து இன்புறுவாராயினர். இடையிடையே ஐயங்கள் சில நிகழ்ந்தன. அவற்றைத் தீர்ப்பவர்கள் அந்தப்பக்கத்தில் இல்லை. ஆதலின் தமக்கு உள்ள ஐயங்களைத் திருவாவடுதுறை யாதீனத்திற்குச் சென்று தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் அவ் வாதீனத்தின் தொடர்பை எந்த வழியாகவேனும் பெற வேண்டுமென்னும் விருப்பமும் இவருக்கு உண்டாயின. அப் பொழுது இவருடைய பிராயம் இருபத்தொன்று.

பட்டீச்சுரம் வந்தது.

அப்பால் திருவாவடுதுறை செல்ல நினைந்து அன்புள்ள பாணக்கரொருவரை உடன் அழைத்துக்கொண்டு வழியிலுள்ள தலங்களைத் தரிசனம் செய்பவராய் அங்கங்கேயுள்ள தமிழபிமானிகளையும் தமிழ் வித்துவான்களையும் கண்டு அளவளாவிப் பட்டீச்சுரம் என்னும் தலத்திற்குவந்தார். அங்கே, திருச்சத்திமுற்றப் புலவர் பரம்பரையினராகிய அப்பாப்பிள்ளை யென்பவருடைய வீட்டுக்குச் சென்றார். அவர் பட்டீச்சுரயமகவந்தாதியென்னும் நூல் முதலியவற்றை இயற்றியவர். இவரும் அவரும் தாம் தாம் இயற்றிய செய்யுட்களை ஒருவர்க்கொருவர் கூறித் தம்முள் மகிழ்ந்தனர். இளமையில் இவருக்கிருந்த கல்விப்பெருமையை அறிந்து அவர் பாராட்டுவாராயினர். அவர் இவரை அவ்வூரிலிருந்த பெரிய செல்வவானும் உபகாரியுமாகிய நமச்சிவாயபிள்ளை யென்பவரிடம் அழைத்துச் சென்றார்.

அந்த நமச்சிவாய பிள்ளை அபிஷிக்த மரபினர். வருவோரைத் தக்கவண்ணம் உபசரித்துப் பொருளுதவிசெய்து அனுப்பும் இயல்பினர். வந்தவர்களுக்கெல்லாம் அன்புடன் உணவு அளிப்பவர். தமிழறிஞர்பால் மிக்க அன்புடையவர். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பாராதவர்களாக இருந்தாலும் கேள்வியினால் ஒருவரையொருவர் பார்த்துப் பழகவேண்டுமென்ற விருப்பம் உடையவர்களாக விருந்தார்கள். ஆதலால், நமச்சிவாயபிள்ளை தம் வீட்டுக்கு வந்த இவரை உபசரித்து அளவளாவிக் கொண்டிருந்தார்.

பசுபதிபண்டாரம் பரீட்சித்தது.

அப்போது அங்கே * ஆலூர்ப் † பசுபதிபண்டார மென்பவர் வந்திருந்தனர். அவ்விடத்தில் இருந்தவர்களுட் சிலர் அவரைக் கொண்டு இவருடைய படிப்பை அளந்தறிய எண்ணி நமச்சிவாய பிள்ளையிடம் தங்கள் கருத்தைக் குறிப்பித்தார்கள். அதனையறிந்த நமச்சிவாய பிள்ளையும் பிறரும் பசுபதிபண்டாரத்தைப் பார்த்து, "ஐயா! இவர்களைப் பரீட்சிக்க வேண்டுமானால் ஏதாவது கேட்டிடுக" என்றனர். இவருடைய அளவையறியாத அவர்,

‡ "நன்கொடிச் சிக்கை யருந்தரி சேய்க்குற்ற நாகவல்லி
மென்கொடிச் சிக்கை விடுக்கு மயிலை விமலர்வெற்பில்
என்கொடிச் சிக்கை புரிந்தாய் திலோயுண் டிலையுடுக்கும்
புன்கொடிச் சிக்கைய நின்போல் பவர்க்கிது பொற்பல்லவே"

(மயிலையந்தாதி, கூசு)

என்னும் செய்யுளைச் சொல்லி, "இப்பாட்டுக்குப் பொருள் சொல்லும்" என்றார். தம்மைப் பரீட்சிக்கச் செய்தவர்களிடத்தாவது கேள்வி கேட்டவரிடத்தாவது சிறிதேனும் மனவருத்தம் உடையாமல் இவர், அச் செய்யுளை இரண்டாமுறை மெல்லச்சொலலும்படி செய்து அச்செய்யுள் அகத்திணைத்துறைகளுள் பாங்கி குலமுறை கிளத்தலென்பதற்கு இலக்கியமாக உள்ளதென்பதை முதலிற் கூறினர்; அப்பாற் பதங்களைப் பிரித்துக்காட்டிப் பொருளும் சொன்னதன்றி அச்செய்யுளைப்போன்ற வேறு செய்யுட்கள் சிலவற்றையும் மேற்கோளாக எடுத்துக்கூறி விளங்கச்செய்தனர்.

---

* ஆலூர்: பட்டீச்சுரத்தின் தென்பாலுள்ளதும் தேவாரம்பெற்றதுமான ஒரு சிவஸ்தலம்.

† அவர் தேவாரம் முதலியவற்றிற் பயிற்சியுற்று அவற்றைப் பண்ணோடு ஓதுபவர்; பெரியபுராணம், திருவிளையாடல் முதலிய சைவநூல்களிலும் பிரபந்தங்களிலும் முறையான பயிற்சியும் பிரசங்கம் செய்யும் வன்மையும் பெற்றவர்; சுற்றுப் பக்கங்களில் உள்ளவர்களால் தமிழ்வித்துவானென்று மதிக்கப்பெற்றவர்.

‡ நன்கு ஒடிச்சு இக்கை அருந்து அரி; இக்கு - கரும்பு; அரி - குரங்கு. நாகவல்லி மென்கொடி-வெற்றிலைக்கொடி. மென்கொடி யினது பிணக்கை. என்கொடு இச்சிக்கைபுரிந்தாய்; இச்சிக்கை - விரும்புதல். என்கொடு - என்ன விசேடத்தை யறிந்து. புன்கொடிச்சிக்கு இச்சிக்கைபுரிந்தாய்; கொடிச்சிக்கு - கொடிச்சி யின்பால்.

அப்போது உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த வித்துவான் *தேவிபட்டணம் முத்துசாமிபிள்ளை, வெள்ளைவாரணம் பிள்ளை, அப்பாப்பிள்ளை முதலியோர் இவருடைய ஆராய்ச்சியையும் பல நூற்பயிற்சியையும் இன்றியமையாதவற்றை விளங்கும்படி சொல்லுதலையும் பெருமிதமின்மையையும் அடக்கத்தையும் பார்த்து, "இவருடைய காட்சி எம்போலியர்களுக்குக் கிடைத்தற்கரியது!" என்று வியந்து புகழ்ந்தனர். வினவிய பசுபதிபண்டாரம் விம்மிதமுற்றுச் சிறிதேனும் பெருமிதமின்றி இவரிடம் மரியாதையோடு ஒழுகுவாராயினர்.

இங்ஙனம் சில நாட்கள் அங்கே சென்றன. அவ்வூரில் அப்பொழுது இருந்தவர்களும் இச்செய்தியைக் கேட்ட பிறரும் அடிக்கடி வந்து அளவளாவி மகிழ்ந்து செல்வாராயினர்.

பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

அப்போது அவ்வூரார் வேண்டுகோளின்படி பட்டீச்சுரம் ஸ்ரீ தேனுபுரேசர்மீது ஒரு பதிற்றுப்பத்தந்தாதி இவரால் இயற்றி அரங்கேற்றப்பெற்றது. அது † பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி யென வழங்கும்.

இவர் அவ்வந்தாதியில் இடையிடையே தாம் படித்த திருவாசகம் முதலிய பிரபந்தங்கள், திருவிளையாடல் முதலிய காப்பியங்களென்பவற்றிலுள்ள சொல்லையும் பொருளையும் விரவவைத்திருப்பதைக் காணலாம். கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, அருணைக்கலம்பகம், கந்தரனுபூதி, சிவப்பிரகாச ஸ்வாமிகள் பிரபந்தங்கள் முதலியவற்றிலும், நளவெண்பா, பிரபுலிங்கலீலை, திருவிளை

---

* அவர் பட்டீச்சுரம் நமச்சிவாய பிள்ளையால் ஆதரிக்கப்பட்ட வித்துவான்களுள் ஒருவர்; சிறந்த தமிழ்க்கவிஞரென்று புகழ்பெற்றவர்; சிவஸ்தலங்களோறும் சென்று சென்று ஸ்வாமிதரிசனம்செய்து ஒவ்வொரு நேரிசைவெண்பா இயற்றிக் காலங்கழித்தவர். அவ்வெண்பாக்கள் தலத்தின் பெயரையாவது ஸ்வாமியின் பெயரையாவது திரிபிலேனும் யமகத்திலேனும் எதுகையிற்பெற்றுப் பொருட் சிறப்புடையனவாய் விளங்கும். அவர் அங்ஙனம் செய்த வெண்பாக்கள் நூற்றுக்கணக்கானவையென்பர். அவற்றுட் சில பாடல்களே கிடைக்கின்றன.

† பட்டீச்சுரம் முதலிய பல தலங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிற பழையாறு என்னும் பழைய நகரத்தின் மரூஉவாகிய பழசை யென்னும் பெயர் பட்டீச்சுரத்திற்குத் தலைமைபற்றி வழங்கும்.

யாடற்புராணம், முதலியவற்றிலுமுள்ள கருத்துக்கள் சில அந் நூலிற் காணப்படுகின்றன :

" பூவாய் நெடுங்கோட் டிறுபசுந்தேன் கைகான் முடங்கு பொறியிலிதன் நாவா யொழுகிற்றென "

என்ற பிரபுலிங்கலீலையின் அடிகளை,

" .....கைகான் முடங்கு மறிவிலிவாய்த்
தண்டே னெடுங்கோட் டிருந்தொழுகுந்
தன்மை யெனக்கண் ணெங்களிப்புக்
கொண்டேன் " (கூ)

என வேற்றுருவில் அமைத்திருப்பதும்,

" குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டீ "

என்ற பரஞ்சோதி முனிவர் வாக்கை,

" கலம்புனை குடங்கை நீரு நறியபச் சிலையு மிட்டோர்க்
கலம்புபாற் கடலு மென்பூ வணையுநாற் கோட்டு மாவும்
இலங்கிட வளிப்பாய் " (சூஉ)

எனச் சொற்பொரு ளொப்புமை யிலங்க அமைத்திருப்பதும்,

" தினியான மஞ்சிலை மீதுனதாள்
அணியாரர விந்த மரும்புமதோ "

என்னுங் கந்தரனுபூதிச் செய்புட் கருத்தை,

" தாவின் மெல்லடித் தாமரை வாழுமே,
தீவி னேச்சிறி யேனுட் சிலையினே " (சுஞ)

எனப் பெயர்த்து வைத்திருப்பதும்,

" காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக்
கவின்றகல் லாடைமேற் புனைந்து
நாமெலாம் வழுத்தும் துறவியா யிருந்து
மொருத்தித னிளமுலைச் சுவடு
தோமுறக் கொண்டார் "

என்ற காஞ்சிப்புராணச் செய்புட் கருத்தின் பெரும்பாகத்தை,

" செய்யிருக்குங் கழைகுழைக்கு மைங்கணைக்கா ளையைவிழியா நு
சினந்து சுட்டீர்
ஐயிருக்குஞ் சடைதரித்தீர் விற்கருஞ்செங் கற்றூய்த்த
வாடை கொண்டீர்

மையிருக்கு மணிமிடற்றீர் துறவியர்சூழ் பழசைநகர்
வாழ்வீர் நீவிர்
பொய்யிருக்கு மருங்குலாண் முலைச்சுவடு கொண்டதென்னே
புகலு வீரே ” (அஎ)

என வைத்தும் இருத்தல் காண்க.

இராமனுற் சிவபெருமான் அத்தலத்திற் பூசிக்கப் பெற்றதும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முத்துப் பந்தர் பெற்றதும், அவருடைய கோலத்தைச் சிவபெருமான் காணுதற்பொருட்டு அவர் கட்டளையின்படி நந்திதேவர் விலகியதுமாகிய அத் தலவரலாறுகளை இடைப்பெய்து பாடியுள்ள செய்யுட்கள் சில அவ்வந்தாதியில் உண்டு.

* “என்னிது விடையு நீவீற்
றிருந்தருள் பொருப்பும் வெள்ளி
மன்னிய கலையும் வில்லு
மாதங்க மதிண்மூன் றெய்யப்
பொன்னிற வாளி கொண்ட
புராதனு பழசை வாணு
சென்னியி லிரந்துண் பாய்நன்
செய்கைநின் செய்கை தானே” (சடு)

என்று சிவபெருமானை விளவுதல் போன்ற செய்புட்கள் சில அந்நூலின்கண் நயம்பெற விளங்குகின்றன.

“.....கடையே னுகித் திரிவேனைத்
தெள்ளு தமிழ்நற் றொடைப்பாடல்
செய்து பணியப் பணித் தாண்டான்” (டு)

எனவும்,

“.....அலைவேனைக்
கருப்பை நீக்கித்தன் றாள்களிற் செந்தமிழ்க்
கண்ணிசூட் டிடச்செய்தான்” (கஉ)

எனவும்,

---

* வெள்ளி - வெள்ளை நிறமுடையது, வெள்ளியென்னும் உலோகம். மாதங்கம் - யானைத்தோல், பெரியதங்கம் (மேரு.) பொன்னிறவாளி - திருமகளை மார்பிலே உடைய திருமாலாகிய அம்பு, நிறத்தை யுடைய பொன்னாலாகிய அம்பு.

" .....யான்றன்
மணங்கமழ் மலர்த்தாள் பாடி வழிபட வருளி னானே "

எனவும் காணப்படும்பகுதிகள் இவர் சிவபெருமானைப் பாமாலைகள் புனைந்து வழிபடும் பேரார்வம் பூண்டிருந்தனரென்பதும், அதற்கேற்ற செவ்விவாய்த்துச் செய்யுளியற்றியதால் இவருள்ளத்தே இன்பம் ஊறிப்பெருகியதென்பதும் புலனாகின்றன.

" மூவாதானை மூத்தானை " (அ)
" ஆனமருங் கொடிவலத்தா னஞ்சுமருங் கொடியிடத்தான் " (ஈ)

என்னும் மூரண்களும்,

" .....கூரானை நீரானைக் கொன்றை வேய்ந்த
பொன்றிகழ்செஞ் சடையானை விடையானை " (கo)

என்னும் வழியெதுகையும் அந்நூலிற் காணப்படும் சில நயங்களாம்.

திருவாவடுதுறையை அடைந்தது.

பழசைப் பதிற்றுப்பத்தந்தாதியை அரங்கேற்றிய பின்னர் இப் புலவர்கோமான் தாம் திருவாவடுதுறைக்குச் செல்லவேண்டுமென்று வந்ததை அவ்வூராரிடம் கூறி விடை பெற்றுக்கொண்டார். அவர்கள், " நீங்கள் அடிக்கடி இவ்வூருக்கு வந்து எங்களை உவப்பிக்கவேண்டும் " என்று கேட்டுக்கொண்டார்கள்; நமச்சிவாயபிள்ளை, " இந்த வீட்டினை உங்கள் சொந்த இடமாகவே எண்ணி அடிக்கடி வந்து எங்களை மகிழ்விக்கவேண்டும் " என்று கேட்டுக் கொண்டனர். அப்படியே செய்வதாக அவர்களுக்கு வாக்களித்து விட்டுப் புறப்பட்டுத் திருவலஞ்சுழி, ஸ்வாமிமலை, கும்பகோணம், திருவிடைமருதூர் முதலிய தலங்களையடைந்து ஸ்வாமிதரிசனம் செய்துகொண்டு அங்கங்கேயுள்ளவர்களாற் பாராட்டப்பெற்றுத் திருவாவடுதுறையை அடைந்தார்; தக்கவர்களுடைய உதவியைப் பெற்று அங்குள்ள மடத்துக்குச் சென்றார்.

அந்த மடம் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி காலத்தில் ஸ்தாபிக்கப் பெற்றது. அங்கே சென்றவுடன் அங்குள்ள காட்சிகளைக் கண்டு இவர் மிக்க வியப்பையும் மனமகிழ்ச்சியையும் அடைந்தார். சிவவேடமும் தவவேடமும் உடைய பல துறவிகள் காஷாய உடை அணிந்தவர்களாகித் தூய்மையே உருவெடுத்தாற் போன்ற தோற்றப் பொலிவுடன் அங்கே நிறைந்திருப்பதையும், அடிக்கடி

பல ஊர்களிலிருந்து அடியார்களும் பிரபுக்களும் வித்துவான் களும் வந்து வந்து சென்றுகொண்டிருப்பதையும் கண்டார். வித்துவான்கள் தங்கள் தங்கள் ஆற்றலையும் தாங்கள் பெற்ற பரிசுகளையும் கூறி அங்கங்கேயிருந்து மகிழ்ந்துகொண்டிருத் தலையும் கவனித்தார். மலர்மாலைகளும் சிவார்ச்சனைக்குரிய பத்திர புஷ்பங்களும் பழங்களும் உரிய இடங்களில் நிறைந்திருத்தலை நோக்கினர். அங்கங்கே பல தொண்டுகளைச் செய்பவர்கள் தங்கள் கடமைகளைத் திருத்தமாகச் செய்துகொண்டிருத்தலைப் பார்த் தார். இவற்றையெல்லாம் பார்த்த இவர், "இத்தகைய காட் சியை இதுவரையில் நாம் கண்டிலோமே. எங்கே பார்த்தாலும் சிவமணமும் தமிழ் மணமும் உள்ள இந்த இடத்தைப்போன்ற வேறு ஓர் இடம் உலகத்தில் இருக்குமோ! ஸ்ரீ சிவஞான முனிவர், ஸ்ரீ கச்சியப்ப முனிவர் முதலியவர்கள் இத்தகைய இடத்தில் இருக்கப்பெற்றதனால்தானே சுவை மிகுந்த நூல்களை இயற்றினர் கள்" என்று எண்ணி விம்மிதமுற்று நின்றார். பின்னும் அங் குள்ள பல காட்சிகளையும் தனித்தனியே கண்டு மகிழ்ந்தார்.

வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இயல்பு.

அப்பொழுது, நமச்சிவாய மூர்த்திக்குப்பின் 14-ஆம் பட்டத் தில் வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரென்பவர் ஆதீனகர்த்தராக வீற்றிருந்தார். அவர் வடமொழி தென்மொழி நூல்களிலும் சிவாகமங்களிலும் மெய்கண்ட சாஸ்திரம், பண்டார சாஸ்திரம், சித்தநூல்கள் முதலியவற்றிலும் பயிற்சிமிக்கவர்; பரம்பரையே பாடங்கேட்டவர்; பாடஞ்சொல்லுதலில் மிக்க ஆற்றலுடையவர்; பிரசங்க சக்திவாய்ந்தவர்; வடமொழி வித்துவான்கள் தென் மொழி வாணர் பலருடைய இடையே இருந்து தினந்தோறும் அவர்களுடன் சல்லாபம் செய்துகொண்டு மகிழ்ச்சியோடு காலங் கழிப்பவர். அவர் அப்பொழுதப்பொழுது சமயோசிதமாகப் பேசிவந்த வார்த்தைகளும், சிலேடையான மொழிகளும், வாக்கி யங்களும் இன்றும் அங்கங்கே பலரால் மிகவும் பாராட்டி வழங்கப்படுகின்றன. அம்மடத்தில் இப்பொழுது பலவகையாக எழுதப்படும் திருமுக ஸம்பிரதாயங்களும், கடித வக்கணைகளும், உள்ள சட்ட திட்டங்களும் அவர் புதுப்பித்தனவேயென்பர். தமக்குப் பட்டமாவதற்கு முந்திய வருஷத்தில் ஸ்ரீ கச்சியப்ப

முனிவரால் நன்கு படித்து வரும்படி செவியறிவுறுத்தப் பெற்றவ ரென்று கேள்வி.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்தது.

அவரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேரவா பிள்ளையவர் களுக்கு உண்டாயிற்று. தாம் தரிசித்தற்கு வேணவாவுற்றிருத் தலை மெல்ல அங்கேயிருந்த தக்காரொருவரிடம் தெரிவித்துக் கொண்டார். அவர் தலைவருடைய சமயமறிந்து சொல்லி அனு மதி பெற்றுவந்து அழைப்ப, இவர் கையுறைகளுடன் சென்று அவரை ஸாஷ்டாங்கமாக வணங்கித் திருநீறு பெற்றுத் தாம் அவர் விஷயமாக இயற்றிக்கொண்டு வந்த சில செய்யுட்களைக் கண் களில் நீர்வார நாக்குழற விண்ணப்பித்துக் கொண்டார். அச் செய்யுட்களை இவர் சொல்லுகையில் அவற்றினது இனிய கருத் தையறிந்தும் இவருடைய பயபக்தியைக்கண்டும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இவர் சிறந்த கல்விமானென்பதை உடனே தெரிந்து கொண்டார்; மிக்க அன்போடு இவருடைய வரலாற்றை விசாரித் தார். இவர் சுருக்கமான மொழிகளால் பணிவுடன் மெல்ல அதனைக் கூறினர். பின் தாம் படித்த நூல்களையும் ஸ்ரீ ஈசியப்ப முனிவருடைய நூல்களில் தமக்கு உள்ள ஈடுபாட்டையும் தெரி வித்துக்கொண்டனர். தேசிகர் இவரோடு அன்புடன் பேசி ஆதரிக்க இவர் சிலதினம் அங்கேயிருந்துவருவாராயினர்.

அப்பொழுது அங்கே ஆதீன வித்துவான்களாகக் * கந்த சாமிக் கவிராயரென்பவரும் † சரவண ஒதுவாரென்பவரும் வேறு சிலரும் இருந்தார்கள். தமிழிற் சைவ வைணவ சமயச்சார்பான கருவிநூல் படிப்பவர்களும் கந்தபுராணம், பெரியபுராணம், கம்ப ராமாயணம் முதலிய நூல்கள், திருமுறை முதலியவைகள், ஸ்தல புராணங்கள், சைவசாஸ்திரங்கள் முதலியவற்றைப் படிப்பவர் களும் அங்கே உண்டு. மடத்தில் உணவிற்குரிய பண்டங்களைப் பெற்றுத் திருவாலங்காடு, திருக்கோடிகா, பாஸ்கரராசபுரம்,

---

* இவர் உடையார்பாளையத்தில் ஜமீந்தாராக இருந்த கச்சிக் கல்யாணரங்கதுரையென்பவர்மீது ஒரு கோவை பாடிப் பரிசும் சர்வ மானியமாகப் பத்துக்காணி நிலமும் பெற்றவர்.

† இவர் பிற்காலத்தில் கோயம்புத்தூரையடைந்து அங்கே உள்ள பிரபுக்களாலும் வித்துவான்களாலும் ஆதரிக்கப்பெற்றுப் பலருக்குப் பாடஞ்சொல்லிப் புகழ் பெற்றவர்.

குற்றாலம் முதலிய ஊர்களிலுள்ள வடமொழி வித்துவான்களிடம் சென்று படித்துவந்த அந்தண மாணவர்களும் பலர் இருந்தனர். உக்கிராணம், களஞ்சியம், பந்திக்கட்டு, பண்ணை முதலிய எல்லா இடங்களின் விசாரணைவேலைகளில் தம்பிரான்களே அதிகாரிகளாக இருந்து பக்தி சிரத்தையோடும் நம்பிக்கையோடும் தங்களுக்குக் கிடைத்த பணியையே செய்துகொண்டிருந்தார்கள்; அவர்களுட் பலர் படித்தவர்கள். அதனால் தலைவர் தம்முடைய நேரத்திற் பெரும்பான்மையான பாகத்தைப் படிப்பு சம்பந்தமாகவே செலுத்தி இன்புற்று வந்தார்.

இவர் ஆதீனகர்த்தரைத் தரிசித்தற்குக் காலைமாலைகளில் போகுங்கால் அருமைபாராட்டி இவருடைய கல்வியின் அளவை ஆராய்வாராய்ச் சிலசில பாடல்களைச் சொல்லி, "இவற்றிற்குப் பொருள் சொல்லும்" என்று அவர் கேட்பதுண்டு. இவர் அச் செய்யுட்களை மனத்திற்கொண்டு ஒருமுறை இருமுறை மும்முறை ஆலோசித்து அவசரப்படாமல் விடை சொல்லுவர். விளுவுங் காலத்துப் பொருள்புலப்படாதபடி தேசிகர் செய்யுளைக் கூறுவர்; இப் புலவர்பிரான் மயக்கமடையாமல் அச்செய்யுளை நன்றாக ஆராய்ந்து செவ்வனே பொருள் கூறுவர். அவற்றுள் இரண்டு செய்யுட்கள் வருமாறு:—

* 1. "இந்தவசம் அந்தவசந் தன்மலைதற் கேதுசெயும்
நொந்தவச முற்றாட்கே நோக்குங்காற்—பைந்தொடியாய்
ஆண்டகுருத் தென்றுறைசை யம்பலவா ணன்புய்த்திற்
பூண்டநிறச் செங்கழுநீர்ப் பூ."

2. "இத்தை யனையவுரு வில்லான் விடுமலரே
வைத்தகரை யோதடுக்க மாட்டாதே—நித்தநித்தம்

---

* குறிப்பு: (1) இந்த அசம் - இந்த ஆடு. வசந்தன் - மன்மதன். பைந் தொடி: வினி. செங்கழுநீர்ப் பூவை ஆய்வாயாக; ஆய்தல், ஈண்டுத்தேடிக் கொணர்தல்.

(2) இத் தையல் நைய - இப்பெண்மெலியும்படி. மலர் ஏவை-மலர்ப் பாணத்தை. தகர் - ஆடு. அம்பலவாணன்: இவர் இந்த ஆதீனத்தில் கூ - ஆம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்தவர். அன்னையே செங்கழுநீர்த் தாரைத்தேடு.

இச்செய்யுட்கள் இரண்டும் வெறி விலக்கு. இவை தொட்டிக் கலைச் சுப்பிரமணிய முனிவர் வாக்கு.

அங்கமுகங் காத்துறைசை யம்பலவா ணன்புயத்திற்
செங்கழுநீர்த் தாரனையே தேடு."

தெரிந்தவற்றை மட்டும் விளங்கச் சொல்லிவிட்டுத் தெரியாத வற்றிற்குப் பொருள்கேட்டுத் தெரிந்துகொள்வர். இவருக்கு இருந்த சந்தேகங்களிற் பல அக்காலத்தில் அவரால் தீர்ந்தன. விநாயகபுராணத்தின் பாயிரத்தில் உள்ள,

"மரந்துளைத்த கணையாலுஞ் சோவெறிந்த திறலானு
மதிக்குந் தோறும்
சிரந்துளக்க வலைகடலுஞ் சேணிகந்த பெருவரையுங்
திறத்திற் குன்றக்
கரந்துளக்குங் குறுமுனிக்குங் கருத்தின்மயல் பூட்டியகை
தவஞ்சால் வெற்பின்
உரந்துளைத்த சேயிலவேல் வலனுயர்த்த விளையவனை
யுளத்துள் வைப்பாம்"

என்னும் செய்யுளிலுள்ள, 'கரந்துளக்குங் குறுமுனிக்கு' என்னும் பகுதிக்கு இவருக்கு நெடுநாளாகப் பொருள் விளங்காமலிருந்தது. பலரிடத்தும் இதைப்பற்றி வினவியதுண்டு. அவர்கள் சொல்லிய பொருள்களில் ஒன்றேனும் இவருடைய புத்திக்குப் பொருந்தவே யில்லை. அச்செய்யுளை ஒருபொழுது தேசிகர்பால் இவர் விண்ணப் பம் செய்தனர். உடனே அவர் உள்ளங்கையையேந்தி மறித்துக் காட்டிக் கடலை உண்டது கையை ஏந்தினமையாலென்றும் விந் தத்தை அழுத்தியது கையைக் கவித்தமையாலென்றும் பொருள் கூறவே, உயர்ந்தோர்களிடத்துச் சிலபொழுதேனும் பழகுதலா லுண்டாகும் பெரும்பயனை இவர் அறிந்து அவரிடம் ஈடுபட்டு, "இந் தப் பெரியவர்களை இதுகாறும் தரிசியாமல் பலரிடத்தும் அலைந் தலைந்து வீணே காலங்கழித்து விட்டோமே" என்று மனம் வருந் தினர். 'கரந்துளக்கும்' என்பதற்கு அவர் பொருள்கூறிய அரு மைப்பாட்டையும் பிறநிகழ்ச்சிகளையும் இவர் அடிக்கடி சொல்வ துண்டு. இவ்வாறு காலை மாலைகளிற் சமயம் பார்த்துச் சென்று அவர்பாற் கேட்டுக் கேட்டு இவர் தீர்த்துக்கொண்ட ஐயங்கள் பல. தமக்கு நெடுநாளாகப் பொருள் விளங்காதிருந்த ஒலியல், கழு வாய், சைலாதி, வரூதினி, வாதராயணரென்னும் சொற்களுக்கு முறையே ஈயோட்டி என்னும் விருது, பிராயச்சித்தம், திருநந்தி

தேவர், சேனை, வியாசர் என்று பொருள் தெரிந்து கொண்டது அவரிடத்திதான் என்பர். முல்லையந்தாதியிலுள்ள,

* "கட்டோம் புதலெனக் காமாதி யாறுங் கரிசறுத்தோம்
உட்டோம் புதவு திறந்தின்ப வீடுபுக் குச்சரித்தோம்
சிட்டோம் புதல்விமண் ணோருந்தி கஞ்சந் தெளிவின்முன்பின்
விட்டோம் புதலுறு ளள்ளெழுத் தான்முல்லை மேவப்பெற்றே"

என்னும் செய்யுளிலுள்ள நடுவெழுத்தலங்காரப் பொருளையும்,

† "பொருதவி சாகரஞ் சத்தியுங் கும்பனும் பொற்பழிக்க
விருதவி சாகரந் தானும் வருத்துமெய் யன்பருள்ளம்
ஒருதவி சாகரந் தென்முல்லை யாவுடை யாரருளார்
இருதவி சாகர நெஞ்சேயல் லாற்செய லியாதுனக்கே"

---

* குறிப்பு: காமாதி ஆறும் கட்டோம்; கட்டோம் - களைந்தோம். உள் தோம் கரிசு அறுத்தோம் -அகக்குற்றமாகிய ஆணவமலத்தை அறுத் தோம். புதவு - கதவு. சிட் ஓம் உச்சரித்தோம் - ஞானமயமாயுள்ள பிரணவத்தை உச்சரித்தோம். புதல்வி மண், ஓர் உந்தி (ஆறு), கஞ்சம், தெளிவு என்பவற்றின் முதலெழுத்தையும் ஈற்றெழுத்தையும் விட்டுப் பாதுகாகக்பெற்ற நடுவெழுத்துக்களால்; இது நடுவெழுத்தலங்காரம். இதனுற் குறிப்பிக்கப்பட்ட தொடர் மாசிலாமணி என்பது; குமாரி (புதல்வி), காசினி (மண்), பாலாறு (ஓர் உந்தி), தாமரை (கஞ்சம்), துணிவு (தெளிவு) என்னும் ஐந்து சொற்களின் நடுவெழுத்துக்கள் ஐந் தும் சேர்ந்தால் மாசிலாமணியென்றுதல் காண்க. மாசிலாமணியென் பது வடதிருமுல்லைவாயிற் சிவபெருமான் திருநாமம். முல்லை - திரு முல்லைவாயில். முல்லை மேவப்பெற்று மாசிலாமணியால் கட்டோம், அறுத்தோம், உச்சரித்தோம் என இயைக்க. இது திருமுல்லைவாயி லந்தாதியிலுள்ள 50 -ஆம் பாட்டு.

† பொருதவிசாகர் அம் சத்தியும் கும்பனும் பொற்பு அழிக்க; விசா கர் - முருகக்கடவுளுடைய; சத்தி - வேல்; கும்பன் - அகத்தியமுனிவர். விருது அவி சாகரம்தானும்; விருது - வெற்றி. சாகரம் வருத்தும். அன்பர் உள்ளத்தை ஒரு தவிசாகவும் தென்முல்லையை ஆகரமாகவும் உடையவர்; ஆகரம் - இருப்பிடம். இரு, தவி, சா, கர - இருந்தால்தான் இரு, தவித்தால்தான் தவி, செத்தால்தான் சா, ஒளித்தால்தான் ஒளி; இங்ஙனம் செய்வதன்றி வேறு செயல் உனக்கு என்னஇருக்கின்றது! அவர் அருளாமையின் நீ என்ன நிலை அடைந்தால்தானென்னவென்ற படி. இஃது அவ் வந்தாதியிலுள்ள 33-ஆம் பாட்டு.

† இது தலைவியின் கூற்று.

* "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வருந்தினைவல்
லினமென் றுலும்
உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென்
றுரைத்தா லென்னும்
நரையேற விட்டமுத ளவனுக் கொண்டுவட
புலிசை மேவும்
கரையேற விட்டமுதல் வாவுனையன் றியுமெனக்கோர்
கதியுண் டாமோ"

என்பன போன்றசெய்யுட்களின் பொருளைத் தெரிந்துகொண் டதும் அவரிடத்தேதான். அவருடைய தரிசனத்தின் பின்புதான் தமிழின் பரப்பும் பெருமையும் இவருக்கு விளங்கின; தமிழில் பல நூல்களும் அவற்றில் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த பகுதி களுமுள்ளன வென்றறிந்தனர். 'இந்த மடத்தின் சம்பந்தத் தைப் பெற்றது பெரும் பாக்கியம்' என்றும், 'இத்தொடர்பை எப்பொழுதும் பெற்றுய்யவேண்டும்' என்றும் இவர் எண்ணினர்.

திரிசிரபுரம் மீண்டது.

அப்பால் அடிக்கடி வந்து தரிசிப்பதாக விண்ணப்பித்துப் பிரியா விடை பெற்றுத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். பின்னர், இடையிடையே திருவாவடுதுறை சென்று ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து வேண்டியவற்றைத் தெரிந்துகொண்டு வருவதுண்டு.

---

* வரையேல் - என்னை நீக்காதே. சேந்தன் தவிட்டமுதம் இட அருந்தினை; தவிட்டமுதம் - தவிட்டாலாக்கிய களியை. உரையே - சொல்வாயாக. 'ற' இ 'ட' வல்லினம் என்றுலும் முதலாகுமோ - றகரமும் இந்த டகரமும் வல்லினமாக இருந்தாலும் மொழிக்கு முதலாகு மோ; ஆகா. உன்னைப்போல எனக்குச் சித்தென்னும் பெயர்வழங்கினும் நான் முதன்மை உறுவேனு; அடிமைத் தன்மையையே உடையேன் என்றபடி. அவிட்டம் முதல் நாளவனை நரையேறுகக்கொண்டு; அவிட்ட நட்சத்திரத்திற்கு முதல் நாளாகிய திருவோணத்திற்குரிய திருமாலை இடப வாகனமாகக்கொண்டு. வடபுலிசை - திருப்பாதிரிப்புலியூர். கரை யேற விட்டவரென்பது அந்தத் தலத்திலெழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம்.

6. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி முதலியவற்றை இயற்றியது.

—

லட்சுமணபிள்ளை யென்பவரின் இயல்பு.

திரிசிரபுரத்தில் இவரை ஆதரித்தவர்களுள் ஒருவராகிய லட்சுமண பிள்ளை யென்பவர் தமிழ் நூல்களில் அபிமானம் உடையவர்; செய்யுள் நயங்களை அறிபவர்; படித்தவர்களைத் தேடிப் போய் வலிந்து உபசரிப்பவர். அவர் இக் கவிஞர்பெருமானுடைய சிறப்பையும், இவர் பல இடங்களிலுள்ளவர்களாலும் போற்றப் பட்டு வருதலையும் அறிந்து ஏனையோர்களைக் காட்டிலும் மிக்க அன்புடன் இவரை ஆதரித்துவந்தார். நாளடைவில் இவருடைய கல்வித்திறமையில் ஈடுபட்டு இவருக்கு வேண்டிய பலவகை அநுகூலங்களையும் செய்து வந்தார்.

திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி.

இவ்வாறு இருந்துவருகையில் பிள்ளையவர்கள் திருப்பைஞ்ஞீலிக்குச் சில அன்பர்களுடன் ஒருமுறை சென்றிருந்தார்; அப்பொழுது உடன்சென்றவர்களும் அங்கேயுள்ளவர்களும் அந்தத் தலசம்பந்தமாக ஒரு பிரபந்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பல திரிபுயமக அந்தாதிகளை வாசித்த பழக்கத்தாலும் வேளூர்ச் சுப்பிரமணியதேசிகரிடம் பல திரிபுயமகப் பாடல்களின் உரையையும் அவற்றின் போக்கையும் அறிந்து கொண்ட வன்மையாலும் திரிபுயமகங்களைத் தாமும் பாடவேண்டுமென்னும் அவாவுடையவராக இருந்துவந்தனராதலின் அவர்கள் விருப்பத்திற்கிணங்கி அத்தலத்திற்கு ஒரு திரிபந்தாதி சில தினத்தில் இவராற் செய்யப்பெற்றது.

அது மிக எளியநடையில் அமைந்துள்ளது. இடையிடையே அகப்பொருட்டுறைகளுள்ள பாடல்கள் காணப்படும். அவற்றுள் பாங்கிவிடுதூது, அன்னவிடுதூது, கிள்ளைவிடுதூது, வண்டுவிடுதூது, நாரைவிடுதூது, மேகவிடுதூது முதலியவை உள்ளன. தலத்தின் பெயராகிய கதலிவனமென்பதை, உக-ஆம் பாடலில் திரிபிலமைத்துப் பாடியிருத்தல் கருதற்குரியது. சிவபெருமான்

திருநாமங்களாகிய, 'சங்கரனே' (உக), 'சிவசம்பு' (சஉ) என் பனவற்றைத் திரிபிலமைத்துப் பாடியுள்ளார்.

"வினை வாட்டுதலின், உருத்தா மரைபடுவேனை" (க),
"அருமந்த கல்வி" (ஙசு),
"மதனப் பயல்" (சுஉ)

என்றவிடங்களில் உலகவழக்குச் சொற்கள் அமைந்து மிக்க இன் பத்தைச் செய்கின்றன. உவமான சங்கிரகம் முதலிய இலக்கண நூல்களில் எடுத்தோதப் பெற்றனவாகிய, கூந்தல் முதலியவற் றிற்குக் கொன்றைக்கனி முதலிய உவமைகளை அங்கங்கே காண லாம்.

* "அத்தத்தி லங்குச பாசமுள் ளாற்கத் தனைவினையேன்
சித்தத் திலங்கும் பரனைப்பைஞ் ஞீலியிற் சென்றுதொழார்
கத்தத் திலங்குழைப் பார்போல் யமன்கசக் கத்திரிபட்
டுத்தத் திலங்கு மிழிந்திங்குந் தோன்றி யுலைபவரே" (ஙஉ)

என்ற செய்யுளில் யமனுக்கு எள்ளாட்டுவாரை உவமை கூறியிருத் தல் பாராட்டற்குரியது. முன்னோர் மொழி பொருளை இடத்திற் கேற்ப அங்கங்கே எடுத்தாண்டதன்றி இக்கவிஞர்பிரான், "இலங் கையிலாதரன்" (திருவரங்கத்தந்தாதி) என்பதிலுள்ள அயிலாதர னென்ற சொல்லை, "எல்லையிலாதரன்றந்தாய்" (ருடு) என்ற விடத் தும், "அந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே" (கந்த ரலங்காரம்) என்ற தொடரை "அந்தகா வந்துபாரொரு கையினி யே" (எக) என்ற விடத்தும், "அவனிவனென் றெண்ணி யலையா திருத்தி" (அழகர் கலம்பகம், உ) என்பதை, "அவனிவனென் றலையாம னெஞ்சே" (அசு) என்றவிடத்தும் அமைத்து அவர்கள் சொல்லையும் பொன்னே போற் போற்றினமை அறிந்து இன்புறற் குரியது. இந்நூலிலுள்ள சில சுவையுள்ள பாடல்கள் வருமாறு:—

†1. "அத்தனை வாம்பரி யேற்றனை நீலி வனத்தமர்ந்த
நித்தனை வாவென்றென் குற்றே வலுங்கொ ணிருமலனைக்

---

* அத்தத்தில் - கையில். உள்ளாற்கு - உள்ள விநாயகக் கடவு ளுக்கு. அத்தனை - தந்தையை. சித்தத்து இலங்கும். கத்த - கதறும்படி. திலங்குழைப்பார்போல் - எள்ளாட்டுவார்போல். திரிபட்டுத் தத்தில்; தத்து - ஆபத்து.

† 1. பரியேற்றனை - இடபத்தையே குதிரையாக உடையவனை. நீலிவனம் - திருப்பைஞ்ஞீலி; நீலிச்செடி இத்தலத்துக் குரியது. தொழாதவர்களுடைய பழைய கருமமலங்கள். ஏது: இல்லையென்றபடி.

கத்தனே வாய்மன மெய்யாற் றொழார்மூற் கருமங்களால்
எத்தனே வாசித் திருக்கினு நீங்குவ தேதவர்க்கே.'' (கக)

2. ''வருந்தா ரெனமகிழ்ந் தேனிற்றை ஞான்று வரையுஞ் சும்மா
இருந்தா ரனுப்புத லின்றிவண் டூரின்று போய்ச்சொலுங்கோள்
பெருந்தா ரணிபுகழ்ந் தேத்தும்பைஞ் ஞீலிப்பெம் மானுக்குத்தேன்
திருந்தார் முடியுடை யாருக்குத் தேவர்தந் தேவருக்கே.'' (சுo)

3. ''எண்ணு தவனன் பொடுகின் பதத்தையென் றூலுமெனை
உண்ணுத வன்னஞ்ச முண்டது போல வுவந்தருள்வாய்
விண்ணுத வன்கதிர் தோற்று வரம்பை வியன்வனமுக்
கண்ணு தவனன் குடையார் மனத்துறை காரணனே.'' (சுக)

இந்நூலுக்குரிய சிறப்புப்பாயிரப் பாடல்

* ''மறைநூ றுகளே யறவோர்ந்து ளாரு மகிழ்ந்துபவக்
கறைநூறு மாறுணர்ந் துய்ந்திடு மாறு கயிலையொப்ப
உறைநூறு மாடங்கொள் பைஞ்ஞீலி நாதற் குவந்துகவித்
துறைநூறு சொற்றனன் மீனாட்சி சுந்தரத் தூயவனே''

என்பது. இதனை இயற்றினவர் இன்னரென்று தெரியவில்லை.

திருவானைக்காத் திரிபந்தாதி.

பிரபந்தம் இயற்றும் ஆற்றல் இவர்பால் இவ்வாறு நாடோறும்பெருகி வந்தது. ஒன்றன்பின் ஒன்றுக இயற்றப்பெற்று வந்த பிரபந்தங்கள் பல வரவரச் சுவைகளில் வளர்ச்சியுற்று வந்திருத்தலைக் காணலாம். இக் கவிஞருடைய இருபத்தாறும் பிராயத்திலே இவை நிகழ்ந்தன. திரிபந்தாதி யொன்று திருவானைக்காவிற்கும் இவரால் அப்பொழுது இயற்றப்பெற்ற தென்பர். அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

---

2. இது வண்டுவிடுதூது. தார் (மாலை) வரும் என மகிழ்ந்தேன். அனுப்புதலின்றிச் சும்மாயிருந்தார். தேன் திருந்து ஆர் ; ஆர் - ஆத்தி மாலை.

3. யான் எண்ணுதவனென ஒருசொல் வருவிக்க. வல் நஞ்சம். எனை உவந்து அருள்வாய். ஆதவன்கதிர் - சூரியகிரணங்கள். அரம்பை வனம் - வாழைவனம் ; வாழை இத்தலத்திற்குரிய விருட்சம். தவம் நன்கு உடையார்.

* மறைநூல் துகளே அற ஓர்ந்து.

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. சுரு

திருச்சிராமலை யமக அந்தாதி.

திரிபந்தாதிகள் சிலவற்றை இயற்றிய பின்னர் யமக அந்தாதி இயற்றத் தொடங்கினர். முதலிலே தாம் வாழ்ந்துவரும் திரிசிரபுர விஷயமாகவே ஒன்று இயற்றினர். அது திரிசிராமலை யமக அந்தாதியென வழங்கும். இவர் அந்த அந்தாதியை நன்கு ஆய்ந்து சுவை பெறச் செய்யவேண்டு மென்னும் நோக்கமுடையவராக இருந்தார். இளமைப்பருவத்துப் பாடியதாதலின் அந்நூலுக்கு முன் ஆர்வமிகுதியால், விநாயகக்கடவுள், ஸ்ரீ தாயுமானவர், ஸ்ரீ மட்டுவார்குழலம்மை, ஸ்ரீ செவ்வந்தி விநாயகர், முருகக்கடவுள், கலைமகள், திருநந்திதேவர், சைவசமயாசாரியர் நால்வர், சண்டேசுர நாயனார், மற்றைத் திருத்தொண்டர்கள், சேக்கிழார் முதலியோர்களை வாழ்த்திப் பதினொரு செய்யுட்களையும் அவையடக்கமாக ஒன்றையும் நூதன முறையாகப் பாடியுள்ளார். பிற அந்தாதிகளில் இம்முறை இல்லை.

"கங்காதர" (அ), "அப்பாசிராமலையாய்" (உக), "கந்தரத்தா" (உடு), "கையிலாய னம்பன்" (சச), "பகவகங்காள" (கூகூ) எனவரும் சிவபெருமான் திருநாமங்களையும், "குந்தனஞ் சந்தனம்" (நடு) எனவரும் வழியெதுகையையும், "தரங்கந் தரங்கம்" (நஅ) என்ற மடக்கையும் யமகத்திற் பொருத்திப் பாடியிருப்பது அறிந்து மகிழ்தற்குரியது. இடையிடையே திருவிளையாடற் புராணச் செய்திகளையும் நாயன்மார்கள் வரலாறுகளையும் காணலாம்.

அந்நூலிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு:

*1."கலக்கந் தரமட வார்மயல் வாரி கலந்தவென்முன்
கலக்கந் தரவெஞ் சமன்வருங் காலங் கடுக்கைதப்ப
கலக்கந் தரநதி சூடுஞ் சிராமலை யாய்கன்னிபா
கலக்கந்தரநினை வேண்டிக்கொண்டேனெனைக் கண்டுகொள்ளே."()

---

*1. கலம்கந்தரம்-ஆபரணத்தைப்பூண்ட கழுத்தையுடைய. கலக்கந்தரம்-மனக்குழப்பத்தைத் தருவதற்கு. தப்பு அகல் அக்கு அந்தரநதி - குற்றமற்ற உருத்திராட்சத்தையும் கங்கையாற்றையும். கன்னிபாக லக்கந்தரம் நினைவேண்டிக் கொண்டேன்; லக்கந்தரம் - லட்சந்தரம்.

2. ஆய் ஆவப்பால் அரி அம்பா - ஆராயப்படுகின்ற அம்பரூத் தூணியிடத்தில் திருமாலாகிய அம்பை உடையாய். நின்னை ஆயாமல். மனம் புண்ணாய் ஆ அப்பு ஆர் சடையாய்: ஆ-ஐயோ! வையச்சிலரை-பூமி

2. "ஆயாவப் பாலரி யம்பா சிராமலை யையநின்னே
யாயாவப் பாணிற்கும் வெவ்வினைப் பட்டலைந் தேமனம்புண்
ணையாவப் பார்சடை யாயுழல் வேற்குவை யச்சிலரை
யாயாவப் பாவென் றினிப்பிறந் தோத லதைத்தவிரே." (கூ)

3. 'ஆவணங் காட்ட மதிக்கச் சுமக்கவப் போதுதெரி
யாவணங் காட்ட நரியையெல் லாம்பரி யாக்கமுதி
ராவணங் காட்டநம் மையன் சிராமலை யானைவைத்த
தாவணங் காட்டன்மை யாரன்பன் றேயி தறிமனமே." (அக)

அந்த நூல் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றது. அதற்கு முன்பு இவர் செய்த நூல்களெல்லாவற்றினும் சிறந்ததென்னும் பெருமை அதற்கு உண்டாயிற்று. அக்காலத்தில் இவருடைய அறிவின் ஆற்றல் எல்லோராலும் அறிந்து வியக்கப்பெற்றது. இச்செய்திகள்,

"பூவார் பொழிற்சிர பூதரம் வாழ்முக்கட் புண்ணியனும்
தேவாதி தேவனுக் கந்தாதி மாலையைச் செய்தணிந்தான்
பாவார் தமிழின் றவப்பய னுவரு பண்புடையான்
நாவார் பெரும்புகழ் மீனாட்சி சுந்தர நாவலனே"

"தேன்பிறந்த கடுக்கையணி சடைப்பெருமான் ரூயான
செல்வ மாய்ச்சேர்
வான்பிறந்த தலப்பனுவல் பிறதலநூல் களினுமென்னே
வயங்கு மென்னிற்
கான்பிறந்த குவளையந்தார் மீனாட்சி சுந்தரமா
கவிஞர் கோமான்
தான்பிறந்த தலநூன்மற் றையதலநூ லினுஞ்சிறத்தல்
சகசந் தானே"

என்ற அந்நூற் சிறப்புப்பாயிரங்களால் உய்த்துணரப்படும். இவற்றை இயற்றியவர்களின் பெயர்கள் இப்பொழுது தெரியவில்லை.

யிலுள்ள சிலபேரை. ஆயா - தாயே. அடியேனுக்குப் பிறப்பை நீக்க வேண்டுமென்பது கருத்து.

3. ஆவணம் காட்டம் மதிக்க சுமக்க - கடைவீதியில் விறகை விலை மதிக்கும்படி சுமக்கவும். காட்டநரியை தெரியாவணம் - காட்டிலே உள்ள நரிகளை பிறர் அறியாவாறு. முதிர் ஆவணம் - பழைய ஓலையை. வைத்தது ஆ வணங்கு ஆள் தன்மையார் அன்பு; ஆ: வியப்பின்கட் குறிப்பு. சுமக்கவும் ஆக்கவும் காட்டவும் வைத்தது அன்பன்றே என இயைக்க.

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. சரு

ஸ்ரீ அகிலாண்டநாயகி மாலை.

இவர் சில அன்பர்களுடன் ஒருதினம் திருவானைக்காவிற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்காகப் புறப்பட்டுக் காவிரியின் தென்பாலுள்ள * ஓடத்தில் ஏறியபொழுது உடனிருந்த சிதம்பரம்பிள்ளை யென்னுங் கனவான் இவரை நோக்கி ஸ்ரீ அகிலாண்டேசுவரியின்மீது ஒரு மாலை இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்; அப்பொழுது உடன் சென்றவருள் ஒருவர், "முன்னமே திருவண்ணுமலையை வலம்வரத் தொடங்கிய துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள் ஒருமுறை வருவதற்குள் சோணசைலமாலையைப் பாடிமுடித்தது போல நீங்கள் சம்புநாதரைத் தரிசனஞ் செய்து திரும்புவதற்குள் அம் மாலையைச் செய்வதற்கு இயலுமா?" என்று கேட்டார். இவர் நேருமானால் செய்யலாமென்று சொல்லிப் பாடத்தொடங்கி, எழுதியும் எழுதுவித்துக்கொண்டும் சென்று கோபிலுக்குப்போய்த் தரிசனம் செய்த பின்பு, சில நாழிகை அங்கே ஓரிடத்தில் தங்கிப் பாடல்களைச் செய்துகொண்டே இருந்துவிட்டுத் திரும்பி வீடுவந்து சேர்வதற்குள் அந்நூல் முடித்தனரென்று சொல்வார்கள்.

அம்மாலையிற் பலவிதமான கற்பனை நயங்கள் அமைந்துள்ளன. சிவபெருமானுக்கு இடப்பாகத்தில் அம்பிகை வீற்றிருக்கும் ஒரு செய்தியிலிருந்து கிளைத்த பலவகைக் கற்பனைகளும், நாயன்மார்களைப்பற்றியும் மதுரை ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களைப்பற்றியும் உள்ள செய்திகளும் அதில் அங்கங்கே அமைவுற்றுச் சுவைநிரம்பி விளங்குகின்றன. தலசம்பந்தமான செய்திகளும் தற்குறிப்பேற்றவணியும் அம்மாலையை அழகு செய்கின்றன.

"பெருவள னமைந்த நீருரு வாய பெருந்தகை" (கஎ)

"புண்ணிய வெள்ளை நாவலோ ரூரம்
பூண்டவ னெனும்பெயர் புனைந்தான்" (சுசு)

"ஒளிமிகு சம்பு லிங்கநா யகர்" (எக)

என அத்தலத்துச் சிவபெருமானைப்பற்றிய செய்திகளையும்,

"இடையரு வன்பு பெருக்கிநீ பூசை
யியற்றிட வினிதுள முவந்து

---

* அக்காலத்திற் காவிரிக்குப் பாலங்கட்டப்படவில்லை.

சடையரு முடியோ னுறைதரப் பெற்ற
தண்ணிழ லுவலந் தருவோ" (கூ0)
"சிலம்பி யியற்றுநூற் பந்தரு முவந்து
புணரருள் புரிந்தான்" (சூ0)

எனத் தலவரலாறுகளையும்,

"நினது பிறங்குபே ராலயஞ் சூழ்ந்த
பொருவினீ றிட்டான் மதில்" (எசு)

எனத் திருநீறிட்டான் மதிலையும்பற்றி அங்கங்கே கூறியது இவர் திருவானைக்காப் புராணத்தைப் படித்துப் பலவிஷயங்களையறிந்த மையைப் புலப்படுத்துகின்றது.

அந்நூலிலிருந்து வேறு சில பாடல்கள் வருமாறு:—

"அளவறு பிழைகள் பொறுத்தரு ணின்னே
யணியுருப் பாதியில் வைத்தான்
* தளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச்
சடைமுடி வைத்தன னதனுற்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே." (எ)

"உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு
முண்மையென் றுரைப்பதற் கேற்ப
இலகுசீ காழி மழவழ வளித்தா
யின்முலைப் பாலூ விடினும்
அலகற விரங்கி யளிப்பவ ரிலையோ
வத்தகு மழுவுயா னருள்வாய்." (உஅ)

† "அம்பலத் தாட வெடுத்ததா ணையென்
றறைவனோர் கான்மலை யரையன்
வம்பலர் முன்றிற் றிருமணத் தம்பி
வைத்ததா ணையென்ப னோர்காற்
செம்பொரு ணியா னென்றெனை யிகழேல்
தேர்ந்தொரு வழிநின்றே னன்னே
கம்பலர்த் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே." (எங)

---

* தண்ணீர் மூன்றுபிழை பொறுக்குமென்பது ஒரு பழமொழி.

† இரண்டு செயலும் இடத்தாளின் செயலாதலின் இங்ஙனம் கூறினர்.

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. சை

அந்த நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் நயம் அமைந்திருப் பதைக் கண்ட யாவரும் இவ்வளவு விரைவில் இத்துணைச் சுவை மிக்க செய்யுட்களைப் பாடிய இவர் இறைவன் திருவருள்பெற்ற வரேயென எண்ணி வியந்தனர். சிதம்பரம் பிள்ளை இவருக்குத் தக்க ஸம்மானம் செய்தார்.

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.

பின்பு இவர் லட்சுமணபிள்ளை கேட்டுக்கொள்ள அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழை இயற்றினர். இவர் இயற்றியவற்றுள் முதற் பிள்ளைத்தமிழ் அதுவே. பல சுவைகளும் மிகுந்து அது விளங்குகின்றது. "தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்பதற் கிணங்க இவர் அதுகாறும் கற்ற நூல்களிலுள்ள பல கருத்துக்களும் கற்பனைகளும் அதிலமைந்துள்ளன. புதிய புதிய கற்பனைகளும் அதில் மலிந்து விளங்கும்.

முதன் முதலாகப் பிள்ளைத்தமிழை இயற்றத் தொடங்கிய இக்கவிஞர்பெருமான் தம் முயற்சிக்கு இடையூறு நேராமற் காக்கும் பொருட்டு விநாயகர், பரமசிவம், பராசத்தி, விநாயகர், சுப்பிர மணியக் கடவுள், நந்திதேவர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசக ஸ்வாமி கள், தண்டீச நாயனர், திருத்தொண்டர்கள் என்பவர்களுக்கு வணக்கங் கூறி நூலுக்குக் காப்பமைத்துக் கொண்டார். இக் காப்புச் செய்யுட்கள் பன்னிரண்டும் அவையடக்கச் செய்யுள் ஒன்றும் சேர்த்துப் பாயிர உறுப்பை நூதனமாக அமைத்துக் கொண்டு நூலைத்தொடங்குகின்றார். வேறு பிள்ளைத்தமிழ்களிலும் இவரே பிற்காலத்திற் செய்த பிள்ளைத்தமிழ்களிலும் இத்துணை விரிவான துதிகள் இல்லை.

இங்ஙனம் அமைத்துக்கொண்ட துதிகளுள் முதலில் உள்ள விநாயக வணக்கத்தின்கண், 'சம்புவனமமர் தேவியைச்-சகல வண்டமுமளிக்கும் பிராட்டியை யுரைசெய் தண்டமிழ் வளம் பெருக', 'ஒருகோட் டிருபதத் திரிகடாக் குஞ்சரத்தை நினை வாம்' என்று வணங்குகின்றார். விநாயகருடைய சிறுவிளையாட்டு ஒன்று இச்செய்யுளிற் கூறப்படுகின்றது: 'வானத்தில் சந்திரன் விளங்குகின்றது; வெண்சோற்றுக் கவளமென்றெண்ணி அதனைக் கவர்வதற்கு விநாயகர் தமது துதிக்கையை நீட்டுகின்றார்;

அதுகண்டு இந்தச் சந்திரன் இன்றோடே தொலைந்துவிடும், இனி இதனால் வரும் துன்பங்கள் இனி இல்லையாமென்று விரகதாப முடைய மகளிர் களிக்கின்றனர். அதேசமயத்தில், நம்முடைய நாயகனுக்குத் துன்பம் வந்ததேயென்று நட்சத்திரக் கூட்டங் களும், நமது குடையாகிய சந்திரனுக்குத் தீங்குவந்துவிட்டதே யென்று மன்மதனும் திலகக்கின்றனர். இங்ஙனம், ஒருசாரார்க் குக் களிப்பும் மற்றொருசாரார்க்குத் துயரும் உண்டாக விநாயகர் தம் பனையெழில் காட்டும் கையை நீட்டுகின்றார்.' இச்செய்திகள் சுருங்கிய உருவில்,

"சீருலவு வனசமகள் புரையுமட வாரிகல்
தீர்ந்தோ மெனக்களிப்பச்
செறியுகெக் கணமுருவில் புத்தே டிகைப்பவிது
தீங்கவள மென்றுதிதோய்
காருலவு மாகநடு வட்பொலியு மாம்பலங்
காதன்மதி மீப்பனையெழில்
காட்டுங்கை நீட்டுமொரு கோட்டிரு பதத்திரி
கடாக்குஞ் சரத்தைநினைவாம்"

என்று காணப்படுகின்றன. விநாயகர் ஒருவரே விக்கினத்தை நீக் குவதும் ஆக்குவதுமாகிய செயல்களையுடையவரென்னுங் குறிப் பும் இதனாற் பெறப்படுகின்றது. இங்ஙனம் முதலில் விநாயகக் கடவுளை வணங்கிப் பின்னர்ப் பரமசிவவணக்கம், பராசக்தி வணக் கம் செய்து, அவர்களுடைய திருக்குமாரர் என்னும் முறைபற்றி மீண்டும் ஒருமுறை விநாயகருக்கு வணக்கம் கூறுகின்றார்:

"கோமேவு மதிலொருமூன் றெரிக்கு ஞான்றெங்
குனிமதிசெஞ் சடைச்செருகும் பெருமா னன்பர்
நாமேவு தமிழ்க்கொருபூங் கொடிபாற் றூது
நடந்தநா யகன்விநா யகவென் றேத்தி
மாமேவு கதிர்க்காற்றேர் நடத்து மாறு
வருமடிக டிருவடிகள் வணக்கஞ் செய்வாம்
பூமேவு திருக்காவை மேவு ஞானப்
பூங்கோதை பாடல்வளம் பொலிய வென்றே." (பாயிரம், ஈ)

இவர் திருவானைக்காப் புராணத்தைப் படித்து இன்புற்று அதன் கண் ஈடுபட்டவராதலின், அந்நூற் காப்புச்செய்யுளில் விநாயகர், சிவபெருமான் தம்மை வழிபட்டு வேண்ட அவரது தேரை ஓடும்

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. சகூ

படியருளிய விளையாடலை அதன் ஆசிரியர் எடுத்தாண்டிருத்தலைப் போல இவரும் இச்செய்யுளில் அதனை அமைத்திருக்கின்றார்.

அடுத்துவரும் சுப்பிரமணியக் கடவுள் வணக்கத்தில், அவர் சூரபன்மனை அடக்கித் தேவர்களுக்குப் பெருவாழ்வளித்தவர் என்பதை,

"இரசத விலங்கன்மிசை யொழுகருவி புரையவீ
ரிருமருப் பாம்பன்மாரு
திழிமுக் கடாம்பொழிய மென்சினைப் பைந்தரு
விளங்காடு நறவுபொழியச்
சுரபிபல் வளன்பொழிய வேமவுல காளுமொரு
தோன்றன்மனை யாட்டிகண்டஞ்
சூழுமங் கலநா ணுறுதுறை கழித்துவே
ரெட்டவனை யஞ்சலிப்பரம்" (கு)

என மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். அச்செய்யுளிற் சிவபெருமான் திருமேனியில் ஒரு பாகத்தை அகலாமல் உமாதேவியார் வீற்றிருப்பதற்கு ஒரு காரணத்தைக் கற்பிக்கிறார்: 'நாகம், சிங்கம், துடி, மான் முதலியன தம்முடைய அவயவங்களில் ஒவ்வொன்றைக்கண்டு அஞ்சிச் சிவபெருமான் திருக்கரத்தை அடையும்படி அவருடைய பாகத்தை அகலாதிருக்கும் உமாதேவியார்' என்னும் கருத்தமைய,

"உரகம்வல விலங்குதுடி நவ்விமுத லமலர்மே
லுரறிவரு காலையிற்றன்
ஒளிரவ யவங்களிலொவ் வொன்றுகண் டொவ்வொன்
ரெதுங்கியவர் கையடையவப்
பரமரிட மகலா திருந்ததுனை" (பாயிரம், கு)

என்கின்றார். காப்புப்பருவத்துள், இந்திரனைப்பற்றிச் சொல்லும் பொழுது, அவன் தன் மனைவியினது குழல் முதலிய அவயவங்களுக்குப் பகையானவையென்று மேகம் முதலியவற்றை அடக்கியாள்கின்றானெனக் கற்பிக்கின்றார்:

"மோகத்தை யாங்கொண்ட போதெலா மிக்கின்ப
முனியா தளித்திடுசசி
மொய்குழ னுசுப்புமுலை சொற்பகைக ளிவையென
முராரிமகிழ் வெய்தவேறி

நம மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

மேகத்தை யோட்டித் திசாதிசை திரிந்தலைய
மின்னைத் துரத்தியோங்கும்
வெற்பைத் துணித்தமுதை வாய்ப்பெய்து தருநீழல்
மேவுமொரு கடவுள்காக்க." (காப்புப். சு)

திருமகளைப்பற்றிய காப்புப்பருவச் செய்யுள் மிக்க சுவையுடைய கற்பனையோடு திகழ்கின்றது: 'இடைச்சியர்கள் வீட்டில் உள்ள பால் முழுவதையும், அவர்கள் தங்கள் வீட்டுக்கதவைத் தாழிட்டு மூடியிருப்ப அதனைத்திறந்து உட்புகுந்து உண்டு பின் அவர்களுடைய மத்தடியைப்பெற்று வருந்தும் தன் கணவராகிய திருமாலை, உம்முடைய விருப்பத்தின்படி பாலை உண்டுகொண்டு சுகமாகத் தூங்குகவென்று, தன் பிறந்தகமாகிய பாற்கடலில் செய்தவள்' என்னும் கருத்தமைய,

"முத்தநகை விதுமுகப் பொதுவியர் கடப்பான்
முழுக்கவன் முழ்வலித்து
மூடுங் கவாடந் தடிந்துமனை புக்குண
முனிந்தவர் பிணித்தடிக்கும்
மத்தடி பொறுத்துவரு தூணைமுகிலை யுண்டகண்
வளர்ந்துறைதி யென்றுதன்னை
வயிறுளைந் தீன்றவொரு பாற்கடற் குடியாக்கு
மடமானை யஞ்சலிப்பாம்" (காப்புப் எ)

என்று கற்பிக்கின்றார். சப்பாணிப் பருவத்தில், சூரியனை,

"கலைமணக் குங்கொடிக் கொருபீட மானநாக்
கடவுளொரு வாதமர்ந்த
கமலபீ டமுமகில மகளிடை பொதிந்தபூங்
கலைவயி றுளைந்துயிர்த்த
சிலைமணக் குஞ்சிறு முதல்கின கரப்பூஞ்
செழுங்கபா டமுந்திறக்குந்
திறவுகோல்" (சப்பாணிப். கூ)

என்கின்றார். அப்பருவத்திலேயே அம்பிகையின் திருக்கரத்தை,

"……வழுதிப் பொன்மனையிற்
றையலார் மைக்கண் புதைக்குங் கை" (சப். க)

"……வரைக்கரைய னெனுமுன்
தந்தைதர வெந்தையார் தொட்டகை" (சப். உ)

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. நிக

"அருமறைக் கிழவன்முத லேவருக் குந்தொழில்க
ளாந்தெண்ண லளவை செய்ய ஐவிரல் படைத்தகை"

"....சுட்டிலே டவர்க் கத்தொழில் காட்டுகை"

"பருமூல மருப்புற வளைக்குறி படத்துகிர்
பட்டகோ டரமுடியெம் பரமனைத் தழுவுகை"

"வளரறங்கள்முப் பத்திரண்டும் புரிகை"

"குருமணி குயிற்றிய விருங்கங் கணக்கை"

"கொடியேனையஞ்ச லென்ற கோலக்கை"

"....மடப் பொய்தற் பிணக்களொடு
குளிர்பனி வரைச் சோலைதண்
—ருநறவு கொட்டுமலர் கொய்யுங்கை" (சப். ச)

"....இணைக்கணெழு கருணைவெள்ளம்
எங்கும் பரந்தப் பரற்குமீ திட்டடிய
நிருவினையை வாரியோடக்
கோகனக மதின்முளைத் தாலெனப் பொலிகை" (சப். கு)

"....எம்மா னளவில் வேடிரண் டெனவரச்செய்து
....கவின்முடி தரித்தரி யணைக்கண்வைத் திருகயல்
களிக்கநோக் காவொருகயல்
கொள்ளென விரும்பிக் கொடுத்தகை" (சப். சு)

எனப் பலபடப்புனைவர். முத்தப்பருவத்தில்,

"சிறுபுரச்சந் ததிதழைக்க மூலைகொடுத்த தலைவிமுத்தந் தருகவே
திருமகட்குங் கலைமகட்கு மெழில்சிறக்கு மிறைவிமுத்தந் தருகவே
தரணிமுற்றுந் தனிதழைக்க நனிபுரக்கு மமலைமுத்தந் தருகவே
சடைமுடித்தும் பியைவிருப்ப முடனுயிர்த்த விமலைமுத்தந் தருகவே
மரகதப்பொன் சிமயவெற்பு நிகர்தழைக்கும் வடிவிமுத்தந் தருகவே
மழைமுகிற்கண் டெழுபசுத்த மடமயிற்கு நிகரண்முத்தந் தருகவே
உரகபொற்கங் கணரிடத்து மருவுசத்தி கவுரிமுத்தந் தருகவே
உரலடிக்குஞ்சரவனத்துமெனதுளத்துமுறைவண்முத்தந்தருகவே"
(முத்தப். கo)

என்னும் செய்யுள் சந்தத்தில் அமைந்ததேனும் எளிதிற் பொருள் விளங்க இருத்தல் அறிந்து இன்புறற்குரியது. அம்பிகையின் திருச்செவியில் குழைத்தோடிலங்குவதைத் தற்குறிப்பேற்ற அணியோடு.

"கம்பக் களிற்றுரியர் கட்சுடரி லங்கியைக்
கைத்தலையி ருத்திமதியைக்
கங்கைமுடி வைத்தல்போல் வையாமை கண்டுசெங்
கதிர்ந்தனது செவிபுகுந்தோர்
கும்பத்த னஞ்சடை யிடைக்கரந் தார்ந்தனது
கொழுநரென மொழிதலேய்ப்பக்
குழைத்தோ டிலங்க" (வாரானைப். க)

என வருணிக்கின்றார். அம்புலிப்பருவத்தில் முறையே சாமபேத தானதண்டம் பொருந்தச் செய்யுட்களை அமைக்கின்றார். பேதத்தைச் சொல்லும்பொழுது சந்திரனை இழித்து,

*"மாலெச்சி லெச்சுற்று முனியெச்சி லேன்றியொரு
மாசுணத் தெச்சிலானுப்" (அம்புலிப். ச)

எனச் சதுர்படக் கூறுகின்றார்.

ஸ்தல சம்பந்தமான விஷயங்களை இப்புலவர் கோமான் இந்நூலிற் பலவகையாக எடுத்தாள்கின்றார். காவை, மதகரிவனம், அத்தியாரணியம், தானப்பொருப்புவனம், உரலடிவனம், மதமாதங்கவனம் என்ற தலப்பெயர்களையும், சம்புநாதர், சம்புலிங்கப்பெருமான், சம்புநாயகர், அழுதப்பெருமான் என்ற சிவபெருமான் திருநாமங்களையும் எடுத்துப் பாராட்டுகிறார்.

"வெண்ணுவலெம் புண்ணியன்", "பூமேவு வெண்ணுவனீழலமர் முக்கட் புராதனர்", "வெள்ளாநாவ லடிமூளைத்த தன்னேரிலி" என்பவை முதலிய இடங்களில் தலவிருட்சத்தைக் குறிப்பிக்கின்றார்; "சிலந்தி பணிந்தநகர்" என்பதிற் சிலந்தி இத்தலத்திற் பூசித்ததும், "முறைபுகும் வழக்கா றிழுக்காது கோலோச்சு முருகாத்தி யபயன்மகிழ்-முடியில்வெள் ளென்பையே கொத்தார மிட்டவரை முத்தார மிட்டவதனல்" என்பதிற் சிவபெருமான் ஆரங்கொண்டதும், "திரையெற்று கமலந்திரட்டாய்", "சலிலந்திரட்டியது விரியாது", "விரிபுனன் மலிந்துள வெனச்செங் கரங்கொடு வியப்பிற் றிரட்டிடாமே" என்பவற்றில் அம்பிகை தீர்த்தத்தைத் திரட்டிச் சிவலிங்கத் திருவுருவமைத்ததும், பிரமன், இந்திரன், திருமால் என்பவர்களுடைய பாவத்தைத்

* மாலெச்சி லென்றது பூமியை; அதனைச் சுற்றும் முனி எச்சி லென்றது கடலினை; அகத்திய முனிவரால் உண்ணப்பட்டதாதலின் இங்ஙனம் கூறினர்.

6. அந்தாதிகள் முதலியவற்றை இயற்றியது. நிகழ்த்தியதுமாகிய தலவரலாறுகளை இடையிடையே அமைத்துள்ளார்.

"ஏனையுமாளிருங்கருணையார்" என அப்பரையும், "எனையாள் வாதவூரடிகள்" என மாணிக்கவாசகரையும் கூறுவதால் இவருக்குச் சைவ சமயாசாரியர்கள்பால் உள்ள ஈடுபாடு புலப்படுகின்றது.

"ஒருத்தி பொற்ரு ளருத்திகொண்டு ளிருத்திநிற்பாம்"

"பையரா நண்ணுலகு மண்ணுலகும் விண்ணுலகும்"

"கொம்புவரை பம்புவன வம்பிகை விரும்பிநின்
கொவ்வைவாய் முத்தமருளே"

"முத்தி யளித்திடு மத்திவ னத்தவள் முத்த மளித்தருளே"

"அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி"

"நாவிரி பாவிரி பூவிரி காவிரி நன்னீ ராடுகவே"

என்பன முதலியவைகளில் உள்ள எதுகை நயமும்,

"அருட்டுறையுள்வந் தருட்டுறை யளவளாய்"

"பயத்தன் பயத்தனுக"

என்பனபோன்ற மடக்குக்களும்,

"நிம்பர் குலத்துறு செந்தேனே"

"வேம்பர் குடிக்கோர் செங்கரும்பே"

"மதமா தங்க வனத்துமட மானே"

"போதக வனங்குடி புகுந்தமென் காமர்பிடி"

என்பன போன்ற முரண்வகைகளும் பிறவும் இந்நூலில் மலிந்து சுவைதருகின்றன.

"இள மென்சிறு புதுத்தென்றல் வந்தரும்ப
எங்குமொளிர் செந்தழ லரும்புதேமா"

"துதிக்குமடியா ருளக்கோயிற் றூண்டா விளக்கே"

"கபாய்"

என்பவை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலிருந்து அமைத்துக் கொண்டவை.

"மந்த மந்தச் சென்று"

என்பது கம்பராமாயணத்திலிருந்து எடுத்துத் தொடுத்த தொடர்.

"மருங்கணை யாடைகை வெந்நிட் டுதையா"

என்பது திருவிளையாடற் புராணம் படித்ததைக் காட்டும் அடையாளம்.

"பங்கய மலர்த்திவரு செங்கதிர் நிறத்தவுடல்
பனிமதி நிறங்கொளாது
படரரி மதர்த்தகண் குழியாது நாடிகள்
பசந்துநா றாது நுனைவாய்
கொங்கைகள் கறாதுமட் சுவைநாப் பெறாதகடு
குழையா துறாதினம்பல்
குறிபடா தருமையொ டுயிர்த்திமய மாதேவி
குளிர்புனல்பொன் வளைகுளிறிடும்
அங்கையி லெடுத்தாட்டி நீறிட்டு மட்காப்
பணிந்தொழுகு திருமுலைப்பால்
ஆர்வமொ டருத்தவுண் டயறவழ்ந் தேறிமலை
யரையன் புயத்தவன்பொற்
செங்கைவிரல் சிரமீது பற்றிநின் றாடுமயில்
செங்கீரை யாடியருளே
தென்காவை யம்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடியருளே" (செங்கீரைப், க)

என்பதில் கல்லாடம், திருவிளையாடற்புராணம், பிரபுலிங்கலீலை என்பவற்றிலுள்ள கருத்து அமைந்துள்ளது.

இக்கவிஞர்பிரான் இதன்கண் உலகவழக்கில் வழங்கும் கும்பு (கூட்டம்), ஒட்டியாணம் என்பனபோன்ற சொற்களை அமைத்துள்ளார்.

இங்ஙனம், பிள்ளையவர்கள் தம்முடைய பலவகையாற்றல்களையும் வெளிப்படுத்தி இந்நூலை இயற்றியிருத்தல் ஆராய்ந்து அறிந்து இன்புறற்குரியது.

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழினால் இவருக்கு உண்டாகிய புகழ் அதுவரையில் இயற்றிய வேறு எந்நூலாலும் உண்டாகவில்லையென்பது மிகையன்று. இவருடைய கவியாற்றல் நாளடைவில் வளர்ச்சியுற்றது. அதனுடன் இவருடைய புகழும் வளர்ந்தது. திரிபந்தாதிகளில் தளிர்த்துத் திரிசிரபுர யமகஅந்தாதியில் அரும்பி அகிலாண்ட நாயகிமாலையிற் போதாகிய இப்புலவர் சிகாமணியினது கவித்திறனும் புகழும் அகிலாண்டநாயகி பிள்

னைத்தமிழில் மலர்ந்து நின்றன. இவரினும் சிறந்த கவிஞரொருவர் இலரென்ற பெருமதிப்பும் மரியாதையும் அப்பக்கத்தில் எங்கும் பரவலாயின. இத்தகைய சுவைப்பிழம்பாகிய நூலை அச்சிட்டு வெளிப்படுத்தினால் யாவரும் எளிதிற் பெற்றுப் படித்து இன்புறுவாரென்று அன்பர்கள் பலர் பதிப்பிக்கும்படி வேண்டிக் கொண்டனர்; இவரும் அதற்கிணங்கிப் பதிப்பிக்க எண்ணியும் தக்க சாதனங்கள் இன்மையின் அம்முயற்சி அப்பொழுது நிறை வேறவில்லை.

---

7. சென்னைக்குச் சென்றுவருதல்.

சென்னைக்குச்செல்ல விரும்பியது.

இவருடைய அறிவு வரவர வளர்ச்சியுறுதலைப்போலக் கற்றவர்களோடு பழகவேண்டுமென்னும் ஆர்வமும் இவர்பால் மிக்கு வந்தது. "நவிறொறு நூனயம்போலும் பயிறொறும், பண்புடையாளர் தொடர்பு" என்னும் ஆன்றோர்முதுமொழியை அறிந்த இவர் நூனயத்தை அறிந்ததோடன்றிப் பண்புடையாளர் தொடர்பையும் விரும்புதல் இயல்பன்றே? பின் எந்த எந்த ஊரில் தமிழ் வித்துவான்கள் இருக்கிறார்களென்றும் அவர்கள் எவ்வெந்நூலிற் பயிற்சியுடையவர்களென்றும் அறிந்துகொள்வாராயினர். அவ்வாறு விசாரித்துவருகையில் சென்னையில் தமிழ்ப் புலவர்கள் பலர் இருப்பதாக அறிந்தனர்.

அக்காலத்திற் சென்னையில் துரைத்தனத்தார், *கல்விச்சங்கமொன்றை யமைத்துப் பல ஊர்களிலிருந்த சிறந்த தமிழ் வித்து

---

*சென்னைக் கல்விச் சங்கத்தின் தலைவர் போர்ட்டு துரையென்பவர். அச்சங்கத்திற் பலர் தமிழ்ப்புலமை நடாத்தினதாக அக்காலத்து அச்சிட்ட நூல்களால் தெரியவருகின்றது. அப்பொழுது இருந்த புலவர்களிற் சிலருடைய வரலாறும் பதிப்பித்த நூல்களும் வருமாறு:

தாண்டவராய முதலியார்: இவர் கல்விச்சங்கத்துத் தலைமைப்புலமையை 1839 - ஆம் வருடம்வரையில் நடத்தியவர். பின்பு வேறு உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டு விசாகப்பட்டணம் சென்றார். இலக்கணவிளக்கவிடை யென்னும் நூலொன்று இவரால் இயற்றப்பட்டு, 1826 - ஆம்

வான்களை வரவழைத்துக் கூட்டி அவர்கள்வாயிலாக மாணாக்கர் களுக்குப் பாடஞ்சொல்லுதல், பிரசங்கம்புரிவித்தல், பழைய தமிழ்நூல்களை ஆராய்ச்சிசெய்து பதிப்பித்தல், செய்யுள்வடிவ மான நூல்களை வசனமாக எழுதுவித்தல், பாடசாலைகளுக்கு உபயோகமாகும்படி வசனநடையில் இலக்கணங்களையும் பாடங் களையும் இயற்றுவித்தல், வடமொழி முதலிய வேறுமொழிகளி லுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பித்தல் முதலியவற்றை

வருடம் பதிப்பிக்கப்பெற்றது. இவர் நாலடியாரையும் திவாகரம் முதல் எட்டுத் தொகுதிகளையும் ஆராய்ந்து பதிப்பித்தற்குச் சித்தம் செய்தார். இச்செய்தி கீழ்வரும் அவர் கடிதத்தால் விளங்கும்:

ம-ரா-ரா-ஸ்ரீ கொற்றமங்கலம் இராமசாமிப்பிள்ளை யவர்களுக்கு விஜ் ஞாபனம்:

நாம் அச்சிற் பதிப்பிக்கத்தொடங்கிய சேந்தன்றிவாகரத்தி லொன் பான்றொகுதி தொடங்குவதற்கு எனக்கு வாய்த்த வேறு தேயத்திருக் கையாலும், பிறிதுகருமத்தைக் கருத்திலுலுந் தீண்டவொண்ணாக் கருமந் தலைப்படலாலும், நான் கருதியவாறு முற்றுவித்தற்கியலாத மற்றைத் தொகுதிகளையு மொருவாறு புதுக்குவித்துச் சேர்த்துப் புத்தகத்தை, நிறைத்து வெளிப்படுத்துவீராக வென்ற, என் வேண்டுகோளை மேற் கொண்டு அவற்றிலிரண்டாயினுஞ் சேர்த்தமைக்கு அகமகிழ்வுறு கின் றேன். மறவியால் விடுபட்ட சில பொருள்களுஞ் சொற்களும் பின்னர்ச் சேர்ப்பித்தற்பொருட்டு நான் முன்குறித்திருந்த குறிப்பேடெனக்குக் காணப்பட்டாற் காலந் தாழ்க்காமற் பயன்படுத்துவேன்.

விசாகப்பட்டணம்
ஆகஸ்டுமீ எஉ

இங்ஙனம்,
தாண்டவராய முதலியார்.

இவரிடம் 22 மாணாக்கர்கள் பாடங் கேட்டு வந்தார்களென்றும் அவர்களில் தாமும் ஒருவரென்றும் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் என்னிடம் சொல்லியதுண்டு.

மதுரைக் கந்தசாமிப்புலவர்: கல்விச் சங்கத்திலிருந்தவர்; ஸ்மிருதி சந்திரிகை முதலியவற்றைத் தமிழில் இயற்றியவர். அந் நூல் 1825 - ஆம் வருஷம் பதிப்பிக்கப்பெற்றது.

பு. நயனப்ப முதலியார்: இவர் அந்தச் சங்கத்து வித்துவானாக இருந்தவர்; தாண்டவராய முதலியாருடைய அநுமதிப்படி திவாகரம் 9, 10 - ஆம் பகுதிகளைப் பரிசோதித்தளித்தவர்.

ஞானசாமிப் பிள்ளை: கல்விச்சங்கத்துப் புத்தக பரிபாலகர் (Librarian) ஆக இருந்தவர்; தாண்டவராய முதலியாராற்பரிசோதிக்கப்

நடத்தி வருகிறார்களென்பதை யறிந்து, அங்கே சென்று அவர் களுடைய பழக்கத்தால் நல்ல பயிற்சியை அடையலாமென்றும் பல நூல்களில் தமக்கிருந்த ஐயங்களை நீக்கிக்கொள்ளலாமென் றும் இவரெண்ணினர். ஆயினும் அங்குச்சென்று இருத்தற்காகும் செலவிற்குரிய பொருள் இல்லாமையால் அங்ஙனம் செய்ய முடிய வில்லையே யென்ற வருத்தம் இவருக்கு இருந்துவந்தது.

சென்னை சேர்ந்தது.

இவ்வாறிருக்கையில் இவரை ஆதரித்து வந்த லட்சுமண பிள்ளை யென்பவர் தமக்குச் சென்னை ஹைகோர்ட்டிலிருந்த வழக் கொன்றை அங்கே சென்று நடத்துவதற்குத் தக்கவர் யாரென்று ஆலோசித்தனர். அப்பொழுது எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமைந்த இவருடைய நினைவு வந்தது. இவரைச் சென்னைக்கு அனுப்பினால் காரியத்தை ஒழுங்காக முடித்துக்கொண்டு வருவ தோடு தமக்கும் மிக்க கௌரவத்தை உண்டுபண்ணுவாரென் றெண்ணி இவரைப் பார்த்து, "என்னுடைய குடும்பவழக்கொன் றன் சம்பந்தமாகச் சென்னைக்குப் போய்வருவதற்கு உங்களுக் குச் சௌகரியப்படுமா? அங்ஙனம் போய் வருவதாகவிருந்தால் எனக்கு அநுகூலமாக இருக்கும்" என்று கேட்டுக்கொண்டார்.

பட்ட திவாகரத்தை 1839 - ஆம் வருஷத்திற் பதிப்பித்தவர். இவர் ஊர் கொற்றமங்கலம்.

இயற்றமிழாசிரியர் இராமாநுச கவிராயர்: இவர் வின்ஸ்லோ அகராதி பதிப்பிக்கும்பொழுது உடனிருந்து சகாயஞ்செய்தவர்களுள் ஒருவர். இவர் பரிசோதித்தும் உரையெழுதியும் பதிப்பித்த நூல்களிற் சில:

திருக்குறள் பரிமேலழகருரை-பதிப்பித்தவரு		1840
நன்னூல் விருத்தியுரை	,,	1845
கொன்றைவேந்தன்	,,	1847
இலக்கணச் சுருக்கம்	,,	1848
ஆத்திசூடி, வெற்றிவேற்கை		

இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர்: கல்விச் சங்கத்துத் தமிழாசிரியர்; இலக்கணம் விசாகப் பெருமாள் கவிராயரெனவும் வழங் கப்படுவர்.

மழவை மகாலிங்கையர்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சி னார்க்கினியருரையைப் பதிப்பித்தவர் - வரு 1847.

அப்பொழுது, 'சென்னைக்கு நாம் எப்பொழுது செல்வோம்? அங்குள்ள பெரிய பண்டிதர்களுடன் அளவளாவிப் பல ஐயங்களை எப்பொழுது தீர்த்துக்கொள்வோம்; இதுவரையில் நாம் பெறுதனவும் கேள்விநிலையி லுள்ளனவுமாகிய நூல்களை எப்பொழுது பெறுவோம்; படிப்போம். அப்படிப்பட்ட நல்ல காலம் நமக்கு வருமோ! அதற்குரிய பொருள் இல்லையே!' என்று ஒவ்வொரு நாளும் எண்ணிக்கொண்டேயிருந்த இவருக்கு, லட்சுமண பிள்ளையின் வார்த்தை மிக்க பசியுள்ளவர்களுக்குக் கிடைத்த அமுதத்தைப்போல ஆனந்தத்தை விளைவித்தது. அந்த மகிழ்ச்சிக் குறிப்பைத் தமது முகம் புலப்படுத்த அவரைப் பார்த்து, "என்னைச் சென்னைக்கு அனுப்பினால் உங்களுடைய காரியத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துவிட்டு வருவதுடன் பலநாளாக உள்ள என்னுடைய மனக்குறையையும் எளிதில் தீர்த்துக்கொண்டு வருவேன்" என்றார். அவர், "உங்களுடைய மனக்குறையென்ன?" என்று கேட்ப, "சென்னையிலுள்ள தமிழ் வித்துவான்களையெல்லாம் பார்த்துப் பழகி அறிந்துகொள்ள வேண்டுவனவற்றை அறிந்துகொள்ளுதலும் இதுகாறும் எனக்குள்ள பல ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளுதலுமே" என்றார். அவர் தமது அருகிலிருந்தவர்களை நோக்கி, "இந்நகரத்திற் புகழ்பெற்று விளங்கும் இக்கவிஞர் பெருமானுக்கும் கல்வி விஷயத்தில் மனக்குறை இருக்கின்றதே! அக்குறையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று இவர்களுக்குள்ள ஆவலைப்பாருங்கள். பிறரிடத்துத் தெரிந்துகொள்ளவேண்டுவன பல உள்ளனவென்று இங்ஙனம் வெளிப்படையாக யாரேனும் இக்காலத்திற் சொல்லுவார்களா? அற்பக் கல்வியையுடையவர்களும் தம்மை எல்லாமறிந்தவர்களாகக் காட்டிப் பிறரை வஞ்சித்துத் தாமும் கெட்டுத் தம்மைச் சார்ந்தவர்களையுங் கெடுத்துவிடுவார்களே!" என்று இவருடைய குணங்களைப் பலவாறாக வியந்து புகழ்ந்தனர். பிறகு உடனிருந்து இவருக்கு உதவி செய்வதற்கு வேலைக்காரனொருவனை நியமித்து இருவருடைய பிரயாணத்துக்கும், சிலமாசம் சென்னையில் இருத்தற்கும் வேண்டிய பொருளை உதவி முகமன் கூறியனுப்பினர்.

இவர் திருச்சிராபுரத்திலும் அதனைச் சார்ந்த ஊர்களிலுமுள்ள தம்முடைய மாணாக்கர்களையும் உண்மையன்பர்களையும் பார்த்துத் தம்முடைய பிரயாணச்செய்தியை அவர்களுக்குத்தெரிவித்து ஒரு நல்ல தினத்திற் புறப்பட்டனர். அப்பொழுது நல்ல நிமித்தங்கள்

பலஉண்டாயின. வழியனுப்புவதற்கு வந்த முதியவர்கள் அந்நிமித்தங்களை அறிந்து, "ஐயா! நீங்கள்நல்லபலனே யடைந்து பெருஞ்சிறப்போடுதிரும்பிவருவீர்கள்" என்று உளங்கனிந்து அனுப்பினர்கள். உடன்பழகியவர்கள் இவருடைய பிரிவை ஆற்றுதவர்களாகி, "இவருடன் நாமும் சென்னைக்குச் செல்லக் கூடவில்லையே!" என வருந்தினர்கள். பின்பு எல்லோரிடமும் விடைபெற்றுப் பட்டீச்சுரம், மாயூரம், சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்தும், ஆங்காங்குள்ள தமிழ்வித்துவான்களோடு பழகி அளவளாவியிருந்தும் குறிப்பிட்ட காலத்திற் சென்னைவந்து சேர்ந்தனர்.

தாம் வந்த காரியத்தை ஆண்டுள்ள வக்கீல் ஒருவரிடம் சொல்லி அவரால் சில மாதம் தாம் அந்நகரில் இருக்கவேண்டியிருக்குமென்பதை யறிந்துகொண்டார்; அதனை லட்சுமணபிள்ளைக்குக் கடிதமூலமாகத் தெரிவித்தனர். பின்பு அந்நகரிலுள்ள தமிழ் வித்துவான்களிடம் சென்று சென்று அறிய வேண்டுவனவற்றை அறிய நிச்சயித்தனர்.

சென்னை வித்துவான்களின் பழக்கம்.

அப்பொழுது சென்னையில் இருந்த வித்துவான்கள்: திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரான், காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், எழும்பூர்த் திருவேங்கடாசலமுதலியார், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை, *போரூர் வாத்தியார், அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலியவர்கள்.

இவர், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப்புராணம் முதலிய சைவநூல்களிலும் சைவப் பிரபந்தங்கள் பலவற்றிலும் திருவாரூர்த் தலபுராணம் முதலியவற்றிலும் உள்ள ஐயங்களைக் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடத்தும், கல்லாடம், திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார், திருக்குறள் - பரிமேலழகருரை முதலியவற்றிலுள்ள ஐயங்களைத் திருவம்பலத் தின்னமுதம் பிள்ளையிடத்தும் கேட்டுத் தெளிந்

* இவர் கச்சியப்ப முனிவர் சென்னையிலிருந்து விநாயக புராணத்தை அரங்கேற்றியபொழுது சிறப்புப்பாயிரம் அளித்தபெரியார்களுள் ஒருவர்.

DR. T. P. M. LIBRARY

தனர். எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியார் கம்பராமாயணம் முதலிய பெரிய காப்பியங்களிலும் செவ்வைச்சூடுவார் பாகவதத் திலும் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களிலும் முறையே பாடங் கேட்டு நல்ல பயிற்சி உடையவரென்பதைத் தெரிந்து அவற்றி லுள்ள ஐயங்களை அவரிடத்து விளவித் தெளிந்தனர். இம்மூவர் களிடமும் இருந்த அரிய நூல்களைப்பெற்றுப் பிரதிசெய்து கொண்டு பாடங்கேட்டும், பின்னும் சென்னையில் ஆங்காங்குள்ள கற்றுத்தேர்ந்த பெரியோரிடத்து ஒழிந்த காலங்களிற் சென்று அவர்களுக்கு என்ன என்ன நூல்களிற் பயிற்சி உண்டோ அவற் றை முன்னதாக அறிந்துகொண்டு அந்நூல்களைக் கேட்டுத்தெளிந் தும் மனமகிழ்ச்சியோடு காலங்கழிப்பாராயினர். ஒவ்வொரு தினத்தும் பகலின் முற்பாகத்திற் காஞ்சீபுரம் சபாபதி முதலி யாரிடத்தும் பிற்பகலில் எழும்பூர்த் திருவேங்கடாசல முதலி யாரிடத்தும் அஸ்தமனத்திற்குப் பின்பு மயிலாப்பூரில் உள்ள திருவண்ணுமலை மடத்தில் இருந்த திருவம்பலத் தின்னமுதம் பிள்ளையினிடத்தும் சென்று அவரவர்களுக்கு ஆக வேண்டிய எழுதுதல் ஒப்புநோக்குதல் முதலிய காரியங்களை முன்னரே அறிந்து ஒழுங்காகச்செய்து அவர்கள் அன்போடு பாடம் சொல்லுதலைக் கேட்டுவருதல் இவருக்கியல்பாக இருந்தது. அம் மூவர்களுள் யாருக்கேனும் பாடஞ்சொல்லுதற்கு அமயமில்லையா யின் அதனை முன்பே தெரிந்துகொண்டு அக்காலத்தில் மற் றப் பெரியோர்களிடத்துச் சென்று வேண்டியவற்றைத்தெரிந்து கொள்வார். காலத்தின் அருமையை அறிந்தவராதலின் அரி தின் வாய்த்த இச்சந்தர்ப்பத்தைக் கணமேனும் வீண்போக்கக் கூடாதென்னும் எண்ணம் மிக உடையாராயினர்.

பிற்காலத்தில், தாம் இவ்வாறு படித்துவந்த செய்தியை இவர் எங்களுக்குச் சொல்லுகையில், " திருவம்பலத் தின்னமுதம் பிள்ளைவீட்டிற்குச் செல்லும்பொழுது ஸ்ரீகபாலீசுவரர் கோயிலின் வாயிலின்வழியேதான் செல்வேன். அப்பொழுது உள்ளேசென்று ஸ்வாமியைத் தரிசித்துக்கொண்டு போகவேண்டுமென்னும் விருப் பம் இருப்பினும் நேரமாய்விடுமே யென்னும் கவலையால் சந் நிதியில் நின்றே அஞ்சலிசெய்து விட்டுச் செல்வேன் " என்று சொன்னதுண்டு.

இடையிடையே ஓய்வுகாலம் நேருமாறால் தம்மிடம் பாடங் கேட்க விரும்பினவர்களுக்கு அவர்கள் விரும்பிய நூல்களைப்

பாடஞ்சொல்லி வருவார். அப்பொழுது படித்தவர்கள் * புரச பாக்கம் பொன்னம்பலமுதலியார், கரிவரதப்பிள்ளை முதலியவர் கள். காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் படிக்கும் காலத்தில் உடன்படித்தவர்கள் மேற்குறித்த † தாண்டவராயத் தம்பிரானும் அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரும். தாண்டவராயத் தம்பி ரானும் இவரும் பலமுறை சந்தித்துத் தம்முள் அளவளாவுவ துண்டு. அதனால் அவருக்கு இவர்பால் அன்பு மிகுதியுற்றது. இவ ருடைய அறிவின்வன்மையும் நற்குணமும் அவரை வயப்படுத்திக் கொண்டன.

காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடத்து இவர் படிக்கும் பொழுது இவரெழுதிக்கொண்ட கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூதின் பழைய கடிதப்பிரதி பென்சிலால் அங்கங்கே குறித்த சில அரும்பதக் குறிப்புடன் இருந்ததை நான் பார்த் திருக்கிறேன்.

சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம் பலத்தின்னமுதம் பிள்ளையென்னும் மூவரும் ஒருவருடைய வீட் டிற்கு ஒருவர்போய் நூலாராய்ச்சியின் விஷயமாக ஒருவரோ டொருவர் அளவளாவி இன்புறுவது வழக்கம். அக்காலங்களி லெல்லாம் அவர்கள் பிள்ளையவர்களுக்குத் தமிழ் நூல்களிலுள்ள வேட்கைப் பெருக்கத்தையும் இயற்கையறிவினையும் முன்னரே இவருக்கு அமைந்திருக்கும் அகன்றநூலாராய்ச்சிப் பெருமையை யும் ஞாபகசக்தியையும் அடக்கத்தையும் தருக்கின்மையையும் நட்புடைமை முதலியவற்றையும் குறித்து வியந்தார்கள். இவர் சந்தேகமென்று வினவுகின்ற வினாக்களிற் பெரும்பாலன அவர் களுக்குப் புதிய விஷயங்களே அந்தச் சமயங்களில் தோன்றச்செய் யும்; விடைதரவேண்டி மேன்மேலும் பல நூல்களே ஆராயும் படி அவர்களே அவை தூண்டும். இவருடைய பாடல்களையும் அவற்றிலுள்ள நயங்களையும் அவர்களறிந்து இவருடைய ஆற்றலைப் பாராட்டினர்கள். இளமையிலே இவ்வளவு நல்லாற்றல் வாய்ந் தமை யாருக்குத்தான் வியப்பைக்கொடாது?

---

* இவர் கும்பகோணம் காலேஜில் தமிழாசிரியராக இருந்து பின்பு சென்னை இராசதானிக் கலாசாலையிலும் அவ்வேலையில் இருந்தவர்.

† இவர் சென்னையில் கோவிந்தப்பன் நாயக்கன் தெருவிலுள்ள திரு வாவடுதுறை மடத்தில் இருந்து விளங்கியவர்.

மழவை மகாலிங்கையரைச் சந்தித்தது.

அவர்கள் மூவரும் இவரை மகாலிங்கையருக்குக் காட்டி அவரை மகிழ்விக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். அந்த விருப்பம் இவருக்கும் நெடுநாளாக இருந்துவந்தது. ஓர் ஆதிவாரத்தில் மேற்கூறிய மூவர்களும் வேறு சிலரும் இவரை அழைத்துக்கொண்டு மழவை மகாலிங்கையருடைய வீட்டிற்குப் போனார்கள்.

மழவை மகாலிங்கையரை அறியாதவர் யாவர்? மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தலென்பது அவர் ஊர். அதன் பெயரின் மரூஉவே மழவையென்பது. மகாலிங்கையர், திருத்தணிகை விசாகப்பெருமாளையரிடத்தும் அவர் சகோதரர் சரவணப்பெருமாளையரிடத்தும் தமிழ் நூல்களை முறையே பாடங்கேட்டவர்; கேட்டவற்றை ஆராய்ந்து தெளிந்தவர்; கம்பராமாயணம், திருத்தணிகைப்புராணம் முதலிய பெருங்காப்பியங்களில் நல்ல பயிற்சி உள்ளவர். இலக்கண அறிவை விசேஷமாகப் பெற்றவர்; அஞ்சா நெஞ்சினர்; விரைந்து செய்யுள் செய்யும் ஆற்றலுடையவர்; ஸங்கீத லோலர்; சிநேக வாத்ஸல்ய சீலர்; ஆதிசைவகுல திலகர்; தாண்டவராயத் தம்பிரானுக்கு உயிர்த்தோழர். பிற்காலத்தில் * ஆறுமுகநாவலர்

---

* "சென்னபட்டணம் போய்ச்சேர்ந்தவுடன் பைபில் அச்சிடுவதற்காகப் பார்சிவல் வந்தாரென்று கேள்விப்பட்டு அங்குள்ள மிசியோனரிமார் (Missionaries) அவரிடத்திலே வந்து, யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வி குறைவாதலானும், செந்தமிழ் பேசுவோர் அரிபராதலானும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பண்டிதரால் திருத்தப்பட்ட பைபில் இங்குள்ள பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழை இல்லை என்றும் வசனநடை நன்றாயிருக்கின்றதென்றும் சொல்வார்களாயின் அச்சிற் பதிப்பிக்கலாமென்றும், அப்படிச் செய்யாது அச்சிற் பதிப்பிக்கின் நாங்கள் அதனை அங்கீகரிக்கமாட்டோம் என்றும் சொல்லிப் போயினர்.

"இவைகளைக் கேட்டமாத்திரத்தே பார்சிவல் மனம் தைரியவீனப்பட்டுத் தமது பண்டிதரை (ஆறுமுகநாவலர்) நோக்கி 'நாங்கள் அச்சிற் பதிப்பித்துக் கொண்டு சீக்கிரம் போய்விடலாமென்று வர இங்கே தடையுண்டுபட்டிருக்கின்றதே. நாங்கள் அவர்கள் சொல்லுக்குச் சம்மதித்து இங்குள்ள பண்டிதர் முன்னிலையில் வாசித்தால் அவர்கள் பிழையென்று சொல்லுகிறார்களோ சரியென்று சொல்லுகிறார்களோ தெரியவில்லையே;

சென்னைக்கு வந்திருந்தபொழுது பலருடைய வேண்டுகோட் கிணங்கி அவரெழுதிய பைபிள் தமிழ் வசன புத்தகத்தைப் பரி சோதித்தற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர். விசாகப்பெருமாளை யர், சரவணப்பெருமாளையரென்னு மிருவருடைய ஆசிரியராகிய இராமாநுச கவிராயர் அவ்விருவரையும் பிற வித்துவான்களையும் இழிவுபடுத்திப் பேசுவதும் தம்மையே புகழ்ந்துகொள்வதும் கண்டு வருந்திய அறிஞர் பலர் அவருடைய இந்தச் செயலை நீக்க வேண்டுமென்று மகாலிங்கையரிடம் வற்புறுத்திக் கூறினர்கள். அவர் அதற்கு இணங்கி இராமாநுச கவிராயரை எந்தவிடத்தில் எவ்வளவு கூட்டத்துக்கு இடையிற் கண்டாலும் தமிழ் நூல்களி லுள்ள விடுத்தற்கரிய பல கேள்விகளைக் கேட்டு அவரை விடை யளிக்கவொண்ணாதபடி செய்துவந்தார். இதனால் மகாலிங்கைய ருக்குப் பெருமதிப்பும், குற்றத்தைப் பட்சபாதமின்றிக் கண்டிக் கும் இயல்புடையவரென்னும் பெயரும் உண்டாயின.

சபாபதிமுதலியார் முதலியவர்கள் பிள்ளையவர்களை அழைத் துக்கொண்டு அவர் வீட்டிற்குச் சென்றபொழுது அவர் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றுத் தக்க இடங்களில் இருக்கச்செய்து தாமும் இருந்தார். பிள்ளையவர்கள் வணக்கத்தோடு ஒருபக்கத் தில் இருந்தனர். மகாலிங்கையர் இவரைச் சுட்டி, "இவர் யார்?"

பிழையென்றுவது வசனநடை நன்றுயில்லையென்றுவது சொல்வார்களா யின், நமக்கெல்லாம் அவமானம் நேரிடுமே' என்று சொல்லினர். பண்டி தர் அதற்கு உத்தரமாக, 'நாங்கள் திருத்திய பைபிலில் ஒரு பிழையு மில்லை; வசனநடையும் நன்றுயிருக்கின்றது. அப்படியிருக்க அவர்கள் குற்ற மேற்றுவார்களாயின் அதிலே ஒரு குற்றமுமில்லையென்று பல பிர மாணங்கொண்டு தாபித்து எங்களாலே திருத்தப்பட்டபடியே அச்சிடு விப்போம். ஆதலால் அவர்கள் கருத்துக்கிசைந்து யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் உண்டெனத் தாபித்தலே தகுதி' என்று சொன்னர். அவர் கள் கேள்விக்கு இவர்கள் உடன்பட்டபோது அவர்கள் அதனைப் பார்வை யிடும்படி அக்காலத்திலே சென்னபட்டணத்தில் சிறந்த வித்துவானு யிருந்த மகாலிங்கையரை ஏற்படுத்தினர்கள். மகாலிங்கையர் பைபில் முற்றும் வாசித்து அதிலே பிழையில்லையென்றும், வசனநடை நன்று யிருக்கிறதென்றும், இந்தப்பிரகாரம் அச்சிடுதலே தகுதியென்றும், அவர்களுக்குச் சொல்லி யாழ்ப்பாணத்துத் தமிழையும் நன்கு பாராட்டி வியந்தனர்"—கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய ஆறுமுக நாவலர் சரித்திரம், 1882; ப. 14-6.

என்றார். சபாபதி முதலியார், "இவர் இருப்பது திரிசிரபுரம்; மீனாட்சிசுந்தரம் பிள்ளையென்பது இவருடைய பெயர். இந்த ஊருக்குச் சில காரியமாக வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார்; தமிழ் பயின்றவர்; செய்யுட்களை இயற்றும் பயிற்சியுமுடையவர்" என விடை கூறினர். தமிழ் பயின்றவர் என்றதைக்கேட்ட மகாலிங்கையர் இவரைநோக்கி, "நீர் எந்த எந்த நூல்கள் வாசித்திருக்கிறீர்?" என்றார். இவர் தாம் படித்த நூல்களின்பெயர்கள் சிலவற்றைச்சொன்னர். பின்னர் அவர், "ஏதாவது ஒருபாடல் சொல்லும்" என்றார். உடனே இவர்,

"இரசத வரையமர் பவள விலங்க
லிடம்படர் பைங்கொடியே
இமையவர் மகிழ்வொடு புகழுஞ் சிமயத்
திமயம் வரும்பிடியே
சரணினை பவருட் டிமிரஞ் சிதறச்
சாரு மிளங்கதிரே
சதுமறை யாலு மளப்பரி தான
தயங்கு பொலாமணியே
மரகத வரையிள கியவெழி லெனவெழில்
வாய்த்த செழுஞ்சுடரே
மதுரித நவரச மொழுகக் கனியும்
வளத்த நறுங்கனியே
தரணி பிசைப்பொலி தருமக் குயிலே
தாலோ தாலேலோ
தழையுந் தந்தி வனத்தமர் மயிலே
தாலோ தாலேலோ" (தாலப். சு)

என்னும் பாடலைப் பொருள் விளங்கும்படி மெல்லச் சொன்னர். இவர் செய்யுளை அவ்வாறு சொல்லும் முறைபினாலே அவர் இவர் நல்ல அறிவுடையராகவிருக்க வேண்டுமென்றெண்ணினர். 'இப் பாடல் ஒருபிள்ளைத் தமிழிலுள்ளதுபோலிருக்கிறது. சொற்களும் பொருளும் நயம்பெற இதில் அமைந்துள்ளன. அப்பிள்ளைத் தமிழ் எந்தக் கவிசிகாமணியின் வாக்கோ! இந்த நூல் அந்தத் திரிசிரபுர முதலிய இடங்களில்மட்டும் வழங்குகின்றதுபோலும்! இதன் பெயரையாவது இவ்வூரில் ஒருவரும் நம்மிடத்துச் சொன்னரில்லையே!" என்று பலவாறுக நினைந்து இவரைநோக்கி,

"இச்செய்யுள் எந்த நூலிலுள்ளது?" என்று கேட்டார். இவர் வணக்கத்தோடு, "அடியேன் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழில் உள்ளது" என்றார். உடனே அவர் மிகவும் வியப்புற்று, 'இவ்வளவு அருமையான நூலைச்செய்த இவர் அடங்கியிருப்பது என்ன ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது! இவர் எவ்வளவோ நூல்களைப் படித்திருக்கவேண்டுமே! எவ்வளவோ செய்யுட்கள் செய்து பழகியிருக்கவேண்டுமே! அளவற்ற பாடல்களைச் செய்திருந்தால்தானே இங்ஙனம் செய்யுள் செய்ய வரும்! இவருடைய அடக்கமே அடக்கம்! இவரைப்போன்றவர்களை இதுகாறும் யாம் கண்டிலமே! இங்ஙனம் இருப்பதன்றோ கல்விக்கழகு!' என்று தம்முட் பலவாறாக நினைத்து இவரை நோக்கி, "தயைசெய்து இச்செய்யுளை இன்னும் ஒருமுறை சொல்லுங்கள்" என்று சொல்லி இரண்டு மூன்று முறை சொல்வித்துக் கேட்டார். பின்னும் அந்நூலிலிருந்து சில செய்யுட்களைச் சொல்லும்படி செய்து கேட்டு அவற்றின் பொருட்சுவைகளை நுகர்ந்து இன்புற்றார். பின்பு சிறிதுநேரம் யோசித்து, "நானும் ஒருபாடல் சொல்லுவேன்; கேட்கவேண்டும்" என்று கூறி,

"தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார் * பகழிக் கூத்தனெனத் தரணி யோர்சொல்
இருவருமே நன்குபிள்ளைத் தமிழைச் செய்தற்
கேற்றவரென் றிடுமுரைவெங் கிட்டதம்மா
அருமைபெறு † காவையகி லாண்ட வல்லி
யம்மைமேன் மேற்படிநற் றமிழை யாய்ந்து
சுருதிநெறி தவறுத குணன்மீ ளுட்சி
சுந்தரமா லன்பிலெடு சொல்லும் போதே"

என்னும் செய்யுளைச்சொல்லிக் காட்டினர். அப்பால், சபாபதி முதலியார் முதலியவர்களை நோக்கி, "இவ்வளவுபடித்துப் பாடத் தெரிந்தும் இவர்கள் எவ்வளவு அடக்கமாயிருக்கிறார்கள்! என்ன ஆச்சரியம்!" என்று வியந்து பாராட்டினர். கேட்ட சபாபதி முதலியார், "அதைத்தான் நாங்கள் அறிவிக்கவந்தோம்" என்றார். மகாலிங்கையர் இவருடைய வரலாற்றை விசாரித்து வியந்து புகழ்ந்துவிட்டு, பின்பு இவரைப்பார்த்து, "இந்நூல் அச்சிற்

* இவர் இயற்றிய நூல் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

† காவை - திருவானைக்கா.

பதிப்பிக்கப்பெற்றதோ? இல்லையாயின் விரைந்து பதிப்பித்துவிட வேண்டும். படித்தவர்களுக்கு இது நல்ல இனிய விருந்தாக விளங்கும்" என்று அன்புடன் சொன்னதோடு, "நீங்கள் இங்ஙகரில் எவ்வளவு நாள் இருத்தற்கு எண்ணியிருக்கிறீர்கள்? வேறு எவ்வளவு காரியங்கள் இருப்பினும் என்னோடு கூடவிருந்தே பெரும்பாலும் பொழுதுபோக்கவேண்டும். உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் என்னவிருந்தாலும் அதனைச் செவ்வனே செய்துமுடித்தற்குச் சித்தனாகவிருக்கிறேன்; யோசிக்கவேண்டாம்" என்று மிகவும் வற்புறுத்தினர். அங்ஙனம் செய்விக்கவேண்டுமென்று சபாபதி முதலியார் முதலியோரையும் கேட்டுக்கொண்டனர். இவர் அவர்களுடைய குறிப்பையறிந்து அங்ஙனம் செய்வதாகவே உடன்பட்டனர். அப்பால் எல்லோரும் மகாலிங்கையரிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தம் உறைவிடம் சென்றார்கள்.

பிள்ளையவர்கள் அக்காலந்தொடங்கி மகாலிங்கையரோடு பழகுதலே மிகுதியாக வைத்துக்கொண்டு அவரிடம் நன்னூல் விருத்தியுரை, காரிகையுரை, தண்டியலங்காரவுரை, நாற்கவிராச நம்பியகப்பொருளுரை முதலியவற்றிலும் பிறவற்றிலும் தமக்கிருந்த ஐயங்களைக் கேட்டுத்தெளிந்து அதுவரை தமக்கு அகப்படாமல் இருந்ததாகிய இலக்கணக்கொத்துரையையும் அவர்பாற் பாடங்கேட்டனர். இலக்கணக் கொத்துரையை மகாலிங்கையர் இவரிடம் கொடுத்தபொழுது, "இந்நூலைப் பெறவேண்டுமென்னும் ஆர்வத்தினாற் பல இடங்களில் தேடினேன்; திருவாவடுதுறை மடத்திலும் சென்று மிக முயன்றேன்; கிடைக்கவில்லை. பின்பு நண்பர் தாண்டவராயத் தம்பிரானவர்களிடத்தே பெற்றேன். இதனை மிகவும் சாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டும்" என்றார். இவர் அதனைப்பெற்றுப் பிரதிசெய்துகொண்டார். அவர் எவ்வெவ்விடங்களுக்குப் போவதாக இருந்தாலும் இப் புலவர் பெருமானைத் தம்முடைய வண்டியிலேயே வைத்துக்கொண்டு சென்று மீளுவதும், அக்காலங்களில் இலக்கணசம்பந்தமான ஸல்லாபமே இவருடைய விருப்பத்தின்படி இவரிடம் மிகுதியாகச் செய்வதும், தமக்குத் தோற்றாதவற்றை இவர்பால் தெரிந்து கொள்வதும் அவருக்கு வழக்கமாக இருந்தன.

ஒருநாள் பல இடங்களுக்குப்போதற்கு இருவரும் வண்டியொன்றில் ஏறிப் புறப்பட்டபொழுது பிள்ளையவர்கள் மகாலிங்

கையரைப் பார்த்து, "நீங்கள் காலேஜில் இலக்கணக்கேள்விகளை எவ்வாறு கேட்பது வழக்கம்?" என்று கேட்டார். அவர் ஒரு பாடலைச் சொல்லச் சொல்லி அந்தப்பாடலில் அமைந்துள்ள சொன்முடிபு பொருண்முடிபுகளையும் புணர்ச்சி விதிகளையும் பிற இலக்கணங்களையும் கேட்டுக்கொண்டே வந்தனர். அவ்வாறு கேட்டு வருகையில் நன்னூலிலுள்ள பெரும்பான்மையான இலக்கண விதிகளும் பிற இலக்கண நூல் விதிகளும் அவ்வொரு பாடலில் அமைந்தவற்றைக்கொண்டே கேட்டுவிட்டனர். பார்க்க வேண்டிய இடங்களுக்கெல்லாம் போய்ப்பார்த்து வீடுதிரும்பும் வரையில் அவ்வொரு பாட்டிலுள்ள இலக்கண அமைதிகளையே பல வகையாகக் கேட்பதிலும் விடையளிப்பதிலும் பொழுதுசென்றது. அதனாற் பல விஷயங்கள் இவருக்குப் புதியனவாகத் தெரியவந்தன. * இவ்வாறு இருவரும் அளவளாவிப் பல விஷயங்களை அறிந்தும் அறிவித்தும் வந்தனர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அன்றோ?

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் அச்சிடப்பட்டது.

மகாலிங்கையர் முன்னரே வற்புறுத்தியபடி அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் திரிசிரபுரம் லட்சுமண பிள்ளையின் பொருளுதவியால் புரசப்பாக்கம் பொன்னம்பல முதலியாரால் மகாலிங்கையர் முதலிய பலர் வழங்கிய சிறப்புப்பாயிரங்களோடு அச்சிற் பதிப்பிக்கப்பெற்று நிறைவேறியது. அது வெளிவந்த வருஷம் 1842 (பிலவஞ) பங்குனிமீ); அதற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்தவர்கள்: (1) மழவை மகாலிங்கையர், (2) தாண்டவராயத் தம்பிரான், (3) காஞ்சிபுரம் சபாபதி முதலியார், (4) திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை, (5) அஷ்டாவதானம் சபாபதி முதலியார், (6) இராமநாதபுரம் அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர், (7) பொன்னம்பல ஸ்வாமிகள், (8) காரைக்கால் முத்துச் சாமிக் கவிராயர், (9) காயாறு சின்னையா உபாத்தியாயர், (10) திரிசிரபுரம் சோமசுந்தரமுதலியார், (11) உறையூர் முத்துவீர உபாத்தியாயர், (12) திரிசிரபுரம் வீரராகவ செட்டியார்,

* இச்செய்தி, நான் கும்பகோணம் காலேஜில் வேலையை ஏற்றுக் கொண்ட தினத்தில் ஸ்ரீ தியாகராச செட்டியாரவர்கள் தமக்குப் பிள்ளையவர்களே சொல்லியதாகக் கூறியது.

(13) புரசப்பாக்கம் பொன்னம்பல முதலியார், (14) பென்னலூர் நாராயணசாமி நாயகர், (15) திருச்சிராபுரம் நாராயண பிள்ளை.

அந்நூல் லட்சுமண பிள்ளையின் விருப்பத்தாற் செய்யப்பட்ட தென்பது,

"... ... ... சிராப்பள்ளிவாழ்
மருவளர் பூங்குவ ளைத்தாம லட்சு மணன்விரும்பத்
தருவளர் சம்பு வனவல்லி பிள்ளைத் தமிழியற்றி
உருவளர் மீனாட்சி சுந்தரன் றந்தா னுணர்பவர்க்கே"

என்னும் பொன்னம்பல முதலியார் செய்யுளாலும் வெளியாகின்றது.

"சிற்பரன்சேர் சிரகிரியெம் மீனாட்சி சுந்தரமாஞ்
சீரார் கொண்மூ
கற்பனைவண் கடலைமுகந்து... ... ...
பற்பலரும் புகழ்பிள்ளைக் கவிமழையைப் பொழிந்ததென்பர்
பாவ லோரே"

என்று காண்டவராயத் தம்பிரானும்,

"கலைமுழு துணர்ந்த கவிஞர் குழாத்துள்
தலைமை நடாத்துஞ் சைவ சிகாமணி
நாச்சுவை யமுதினு மூங்குநனி சிறக்கும்
பாச்சுவை யமுதைப் பற்பக ரூறும்
பெருவா னுட்டுப் புலவரும் பெட்புறத்
தருமீ னுட்சிசுந் தரநா வலனே"

என்று திருவம்பலத்தின்னமுதம்பிள்ளையும் தத்தம் சிறப்புப் பாயிரங்களில் இப்புலவர்கோமானைப் பாராட்டியிருத்தலால் அக்காலத்தே இவருக்கு இருந்த பெருமை விளங்கும். இராமநாதபுரம் அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர் பாடிய,

"கந்தவே ளோவலது கலைமகளோ விவ்வுருக்கொண்
டாய்கா னுன்னை
அந்தநாட் டவமிருந்து புலவோருக் கரசுசெய
வன்பாற் பெற்ற
தந்தையே தந்தையுனைத் தான்படிக்க வைத்தவனே
தமிழுக் காசான்
சுந்தரமா மதிவதனு மீனாட்சி சுந்தரனே
துலங்கு மாலே"

என்ற செய்யுளும், உறையூர் முத்துவீர உபாத்தியாயர் பாடிய,

"தண்ணறுமுண் டகப்போதி லிருந்துலக மாக்கியவே
தாவே யிந்தக்
கண்ணகன்ற புவியினிற்றன் னுருமாற்றி மக்களுருக்
கவினத் தாங்கி
வண்ணமுறு மீளுட்சி சுந்தரமென் றொருநாமம்
வயங்க வின்பம்
விண்ணவரும் பெறத்தந்தி வனப்பிள்ளைத் தமிழினிதா
விளம்பி னனே"

என்ற செய்யுளும் இவர்பால் அவர்களுக்கிருந்த நன்மதிப்பைப் புலப்படுத்துகின்றன.

திரிசிராமலை யமகவந்தாதி முதலிய நூல்களையும் இவர் பதிப்பிக்க எண்ணியிருந்தும் பொருண்முட்டுப்பாட்டால் அவ்வாறு செய்ய இவருக்கு இயலவில்லை.

இடையிடையே வக்கீலிடம் சென்று ஹைக்கோர்ட்டிலுள்ள வழக்கின் நிலைமையைத் தெரிந்து லட்சுமண பிள்ளைக்கு அச்செய்தியை எழுதி அனுப்பியதோடு தமக்குச் சென்னையில் மேன்மேலுங் கிடைத்துவருகிற கல்விப் பயனையும் நூல்களையும் அவருக்கு நன்றியறிவோடு தெரிவித்துக் கொண்டு வந்தார். சபாபதி முதலியார் முதலிய பெரியோர்கள் இவரை ஒரு மாணாக்கராக நினையாமல் தம்மை ஒத்தவராகவே பாவித்து மரியாதையோடு நடத்திவந்தார்கள். புதியநூல் இயற்றுபவர்கள் சபாபதிமுதலியார் முதலியவர்களிடத்திற் சிறப்புப்பாயிரம் வாங்கும்பொழுது அவர்கள் மூலமாகப் பழக்கஞ் செய்துகொண்டு இவருடைய சிறப்புப்பாயிரங்களையும் பெற்றுமகிழ்ந்து பதிப்பித்து வந்தார்கள்.

'நீங்கள்' என்பதற்குப் பிரயோகம் காட்டியது.

ஒருநாள் எழுமூர் திருவேங்கடாசல முதலியார் வீட்டிற்கு இவர் போனபொழுது அவராற் பதிப்பிக்கப்பெற்று வைத்திருந்த கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தை எடுத்துப் பார்க்கையில் குகப்படலத்தில், "நைவீரலீர்" என்ற ௯௬-ஆம் செய்யுளில் 'நீங்களேவீரும்' என்றதொடர்* 'நீர்களேவீரும்' என்று பதிப்பிக்கப்

* அவர் பதிப்பிலும் அதனைப்பின்பற்றி அச்சிடப்பெற்ற பிறபதிப்புக்கள் சிலவற்றிலும் 'நீர்கள்' என்றேயிருத்தலை இன்றும் காணலாம்.

பட்டிருந்ததைநோக்கி முதலியாரவர்களைப் பார்த்து, "ஐயா, நீங்களென்பதே பாடமன்றே? இதில் நீர்களென்று இருக்கிறதே' என்று வினவினர். அவர், "நீங்களென்பதற்குப் பிரயோகம் இல்லையே. கல்விகுதி யேற்ற நிலைமொழி இன்னதென்று தெரியவில்லை" என்றார். உடனே இவர், "இந்தப் பிரயோகம் பழைய நூல்களிற் காணப்படுகின்றதே.

'ஆங்கது தெரிந்து வேதா
வாவிகள் வினைக்கீ டன்றி
நீங்கிவ் வாறு செய்கை
நெறியதன் றென்ன லோடும்' (கந்த. உருத்திரர். 60)

என்பதில் எதுகையிலேயே நீங்களென்பது வந்திருக்கின்றதே" என்றார். அதனைக்கேட்ட முதலியாரவர்கள், "தம்பி! உங்களுக்கு ஞாபகமுள்ளது எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லையே ஒருசொல்லின் உருவத்தைப் புலப்படுத்துவதற்குரிய மேற்கோள்களை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பது வியக்கத்தக்கதே!" என்று பாராட்டினர்.

திரிசிரபுரம் மீண்டது.

இவ்வாறு சற்றேறக்குறைய ஒருவருடகாலம் இவர் சென்னையில் இருந்தார். பின்பு லட்சுமணபிள்ளையினுடைய வழக்கு முடிவடைந்தமையினாலும் தாம் வந்து பலநாட்களானமையினாலும் இவர் திரிசிரபுரத்திற்குப் புறப்பட்டுச் செல்ல எண்ணினர். சென்னையிலுள்ள பல பண்டிதர்களைப் பிரிவது இவருக்குத் தாங்கொணாவருத்தத்தை உண்டாக்கியது. சபாபதி முதலியார் முதலியவர்களுக்கும் இவரிடம் பாடங்கேட்ட மாணவர்களுக்கும் இவர் பிரிவு அவ்வாறே இருந்தது.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்பது உண்மையன்றே? அப்பால் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு அரிதிற் சென்னையைவிட்டுப் புறப்பட்டார். சபாபதி முதலியார் இவரைப்பார்த்து, "உங்களுடைய பிரிவை நினைந்தால் மனம் கலங்குகின்றது. உங்களுடைய அருமை பழகப்பழக அதிகமாக விளங்கியது. உங்களால் தமிழுலகம் பெரும்

பேறடையப் போகின்றதென்பதை நினைந்து என் நெஞ்சம் அள வற்ற மகிழ்ச்சியை அடைகின்றது. இறைவன் உங்களுக்குத் தீர்க்காயுளையும் அரோக திடகாத்திரத்தையும் அளித்தருள வேண்டும். அடிக்கடி கடிதம் எழுதவேண்டும்" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினர்.

---

8. கல்வியாற்றலும் செல்வர் போற்றலும்.

அப்பால் திரிசிரபுரத்தில் இருந்து வழக்கம்போலவே இக்கவிஞர்பிரான் தாம் செய்யவேண்டியவற்றை ஒழுங்காகச் செய்தும் பிறரைக்கொண்டு செய்வித்தும் வருவாராயினர். சென்னையில் இருந்தபோது பழகிய அறிஞர்களுள் ஒவ்வொருவரிடத்தும் இன்ன இன்னவிதமான திறமைகள் உள்ளனவென்று கவனித்து அவற்றைத் தாமும் பயிலவேண்டுமென்று பயின்றுவந்தார். அதனால், செய்யுட்களுக்குப் பொருள் கூறுதல், இலக்கண விஷயங்களை எடுத்தாளல், பதசாரம் சொல்லுதல், நூல்களை ஆராய்தல் முதலிய பலவகையான பயிற்சிகள் இவர்பால் முன்னையினும் சிறந்து விளங்கின. பலவகை மாணாக்கர்கள் வந்து வந்து தாம் கேட்டற்குரிய பாடங்களைக் கேட்டுவந்தனர். அக்காலத்துப் படித்துவந்த மாணாக்கர்களுள் முக்கியமானவர் தி. சுப்பராய செட்டியார்.

பெரும்பாலும் இவர் ஆண்டார் தெருவிலிருந்த * சிதம்பரம் பிள்ளை யென்பவரது வீட்டு மெத்தையிலும் கீழைச் சிந்தாமணியிலுள்ள சொர்க்கபுரம் மடத்திலும் இருந்து காலங்கழித்து வந்தனர்; ஆகாரத்துக்காக மட்டும் தம் வீட்டுக்குப்போய் வருவார். ஏதாவது விஷயங்களைக் கொடுத்து மாணவர்களைப் பாடும்படி பழக்குவிப்பார்; அவர்கள் செய்யமுடியாமல் வருந்துகையில் தாம் அவற்றை முடித்துக் காட்டுவார். அக்காலத்தில் இவருக்கு

---

* இவர் உப்பு வியாபாரத்தால் மிக்க செல்வம் பெற்றுத் தரும சிந்தையுள்ளவராய்ப் பரோபகாரஞ்செய்து காலங்கழித்து வந்தவர்.

யாதொரு கவலையுமில்லாதபடி உடனிருந்து பணிசெய்து பாது காத்து வந்தவர் * அகிலாண்டம்பிள்ளையென்பவர்.

படிப்பவர்கள் தம் இடஞ் சென்றபின், தினந்தோறும் இர வில் ஒய்வு நேரங்களில் புதியனவாகக் கிடைத்த நூல்களை இவர் பரீசோட்டிற் பிரதிசெய்தலும் தனியேயிருந்து வெகுநேரம் படித் துக்கொண்டிருத்தலும் வழக்கம். இரவில் இவர் தூங்குங்காலம் மிகக் குறைவேயாகும். இவருடைய பலவகையான ஆற்றலையும் அறிந்து உடனிருந்து ஊக்கமளித்து வந்தவர்கள் வித்துவான் சோமசுந்தர முதலியார், வீரராகவ செட்டியார் முதலிய முதி யோர்கள்.

இவருடைய புகழ் தமிழ்நாடெங்கும் பரவி எல்லோருடைய உள்ளத்திலும் குடிகொண்டு விளங்கிற்று. அக்காலத்தில் தாம் இயற்றிய நூல்களை இவருக்குக் காட்டித் திருத்திக்கொள்வதற்கும், அவற்றிற்குச் சிறப்புப்பாயிரம் பெறுவதற்கும், அவற்றை அரங் கேற்றும் காலத்தில் உடன் இருப்பதற்காக அழைப்பதற்கும், தம்மைச் சார்ந்தவர்களைப் படிப்பித்தற்குக் கொண்டுவந்துவிடு தற்கும், படித்த நூல்களில் தமக்குள்ள ஐயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும் பற்பலர் வந்து போவாராயினர்.

புதல்வர் ஜனனம்.

இங்ஙனம் இருந்துவருகையில் இவரது இருபத்தோன்பதா வது பிராயமாகிய சோபகிருது வருஷம் ஆடி மாதம் கச-ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவில் இவருக்கு ஒரு புதல்வர் பிறந்தனர். அக்குமாரருக்கு இவர் தம்முடைய தந்தையாரின் பெயராகிய சிதம்பரம் என்ற நாமத்தையே வைத்து அழைப்பாராயினர்.

பட்டீச்சுரம்போய் மீண்டது.

சில மாதங்கள் சென்றபின் பட்டீச்சுரம் நமச்சிவாய பிள்ளை முதலியோர்கள் விருப்பத்தின்படி இவர் சில அன்பர்களுடன் சென்று பட்டீச்சுரத்தில் அவர்களால் ஆதரிக்கப்பெற்றுச் சிலநாள் தங்கியிருந்தார். இவர் அங்கிருப்பதைத்தெரிந்து பட்டீச்சுரத்தைச் சார்ந்த † மூழையூரில் தன்வந்தராகவிருந்த வையாபுரி பிள்ளை யென்பவர் இவரை உபசாரத்துடன் அழைத்துச்சென்று ஆறை

---

* இவரால் இச்சரித்திரச் செய்திகளிற் சில தெரிந்தன.

† இது தேவாரவைப்புத்தலங்களுள் ஒன்று.

வடதளி அல்லது வள்ளலார் கோயிலென்னும் தலத்திலுள்ளதான துறையூர் வீரசைவ ஆதீனத்தின் மூலபுருஷர் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகருடைய மடத்தில் இவரை இருக்கும்படி செய்வித்து அன்புடன் ஆதரித்து வந்ததன்றித் தாமும் தம்முடைய அன்பர்களும் கேட்கவேண்டிய நூல்களைப் பாடங்கேட்டுவந்தனர். இங்ஙனம் சில மாதங்கள் சென்றன. அப்பொழுது அந்த மடத்திலிருந்த பல ஏட்டுச்சுவடிகளை இவர் பார்த்தனர்; சிலவற்றை வாங்கிக் கொண்டனர். இங்ஙனமே அயலூர்களிலிருந்த வேளாளப் பிரபுக்களும் வேறு சிலரும் தத்தம் இடங்களுக்கு இவரை அழைத்துச் சென்று உபசரித்துச் சில நாட்கள் வைத்திருந்து அனுப்பியதுண்டு. அப்பால் திரிசிரபுரம் வந்து மேற்கூறிய சிதம்பரம்பிள்ளையின் வீட்டு மெத்தையிலேயே இருந்து காலங் கழிப்பாராயினர்.

புத்தகத்தை வாசித்தால் அழுகை வருமோ?

இவரைப் பார்த்தற்காக ஒருநாள் அயலூரிலிருந்து முக்கியஸ்தராகிய ஒரு வேளாளப் பிரபு வந்தார். அவர் இவரைக் கண்டு பாராட்டிவிட்டு உண்ட பின்பு சிதம்பரம் பிள்ளை வீட்டின் மேல்மாடத்தில் ஒருபக்கத்திற் சயனித்துக் கொண்டார்; சொல்ல வேண்டிய பாடங்கள் முடிந்தவுடன் மாணாக்கர்களை அனுப்பிவிட்டு வேறு ஒருபுறத்திலே இவர் துயின்றார். துயின்றவர் வழக்கம்போலவே பதினைந்துகாழிகைக்குமேல் விழித்துக் கொண்டு காஞ்சிப்புராணத்தின் இரண்டாங் காண்டத்துள்ள ஒரு பகுதியைப் படித்து அதன்பாலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை நுகர்ந்து இன்புற்றுக் கவிஞர் பெருமானாகிய கச்சியப்ப முனிவரது அருமை பெருமைகளை நினைந்து மனமுருகிக் கண்ணீர் வீழ்த்தியும ஆடையால் கண்களைத் துடைத்தும் படித்துக் கொண்டே இருந்தனர். இப்படி யிருக்கையில் அங்கே அயலிடத்தே துயின்ற புதிய பிரபு விழித்தெழுந்து ஜன்னல் வழியாக வெளிச்சந் தெரிந்தமையால் இவரைப் பார்த்தனர்; இவர் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொள்ளுதலையும் படிப்பதையும் கவனித்தார். சிறந்த நூல்களிற் சுவையுள்ள பாகங்களைப் படிக்கும் பொழுது கல்விமான்களுக்கு அடிக்கடி மனம் உருகுமென்பதும் கண்ணீர் பெருகுமென்பதும் அவர் அறியாதவர்; ஆதலால், 'ஏதோ இவர் அழுகிறார்' என்று எண்ணிக்கொண்டார். திடீரென்று எழுந்து பரபரப்புடன் வந்து இவர் கையிலிருந்த புத்த

கத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கீழே எறிந்துவிட்டு இவரை நோக்கி, "ஐயா நீங்கள் வாசித்தது போதும்; நிறுத்துங்கள். இந்த அகாலத்தில் நீங்கள் தூங்காமல் வருந்தி அழுவதற்குக் காரணம் என்ன? ஏதேனும் குடும்பக்கவலை உண்டோ? உங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் குறிப்பறிந்து செய்வதற்குச் சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் இருக்கும்பொழுது எதற்காக இப்படி வருத்தமடையவேண்டும்? மனத்திலிருக்கும் வருத்தத்தை வெளியிடாமற் புத்தகம் வாசிப்பதாகப் பாவனை செய்துகொண்டு ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறீர்கள்? உங்கள் மனத்தில் உள்ளதைச் சொல்லுங்கள். ஏதாயிருந்தாலும் நான் முடித்துவிடுவேன். நீங்கள் வருத்தப்படுவது என்னுடைய மனத்தை வருத்துகின்றது" என்றார். இவர் அவருடைய பேச்சைக்கேட்டு நகைத்தனர். அவர், "இந்தமாதிரி சிரித்துவிட்டால் நான் ஏமாந்து போவேனென்று நினைக்கவேண்டாம். என்னதான் சிரித்தாலும் உங்கள் வருத்தம் எங்கே போகும்? உண்மையாகக் கேட்கிறேன்; உங்கள் மனவருத்தம் இன்னதென்று சொல்லவேண்டும்" என்றார்.

பிள்ளையவர்கள்: "ஒன்றும் இல்லை; ஐயா! இந்நூலை நான் படித்து வரும்போது ஒரு பாகம் என் மனத்தை உருக்கிவிட்டது. அதனால் என்னையறியாமல் கண்ணீர் வந்தது."

அவர்: "புத்தகத்தை வாசித்தால் அழுகை வருமோ? அழுகை நீங்கிவிடுமே! எனக்காகச் சொல்லவேண்டாம். உள்ளதைச் சொல்லுங்கள்" என்று மிகவும் வற்புறுத்திப் பின்னும் வேண்டினார். அவரைச் சமாதானப்படுத்தித் தமக்கு வருத்தமில்லையென்பதைத் தெரிவித்தற்கு இவர் பெரும் பிரயத்தனம் செய்தார். ஆனாலும் அவருக்கு இவருடைய வார்த்தைகளில் முழு நம்பிக்கை உண்டாகவில்லை. மறுநாட்காலையில் அவரே சிதம்பரம் பிள்ளையிடத்தும் அங்குவந்த ஏனையோரிடத்தும் முதல் நாள் இரவில் நடந்தவற்றைச் சொல்லி, "பிள்ளையவர்களை நன்றாகக் கவனித்துக்கொள்ளவேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றனர். எல்லோரும் அதனைக் கேட்டு, "இப்படியும் ஒரு மனிதருண்டா!" என்று விம்மிதமுற்றுத் தம்முள் அடிக்கடி சொல்லிக்கொண்டு மகிழ்வாராயினர். பிள்ளையவர்களைக் கண்டு அவர்கள் கேட்டபொழுது அவருக்குத் தம்பாலுள்ள அன்பே அச்செயலுக்குக் காரணமென்று விடை பகர்ந்தார்.

8. கல்வியாற்றலும் செல்வர் போற்றலும். எரு

சுப்பராய செட்டியாரைச் சோடசாவதானியாக்கியது.

சேது யாத்திரை சென்று திரிசிரபுரத்திற்கு வந்த புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் தம்முடைய நண்பராகிய பிள்ளையவர்களைக் கண்டார். இவர் சிலதினம் இருந்து செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்; அதற்கு அவரிசைந்து அவ் வாறே இருப்பாராயினர். அப்பொழுது அவருடைய கல்விப் பெருமையையும் அவதான விசேடத்தையும் இவரால் தெரிந்து கொண்ட பல பிரபுக்களும் வித்துவான்களும் அவர் அஷ்டாவ தானம் செய்வதைத் தாம் பார்க்க வேண்டுமென்று பிள்ளையவர் களைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கிசைந்து இவர் ஒரு பெரிய சபை கூட்டிச் சபாபதி முதலியாரைக் கொண்டு அஷ்டாவதானஞ் செய்வித்தபொழுது யாவருங் கண்டு களித்து உபசரித்தனர். அப்பொழுது அங்கு வந்திருந்த சிரஸ்தேதார் செல்லப்பா முதலி யாரென்ற பிரபு இவரை நோக்கி, "இவர்கள் அஷ்டாவதானம் செய்தது மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. இங்ஙனம் செய் யும்படி உங்களுடைய மாணாக்கர்களுள் யாரையேனும் பழக்க முடியுமா?" என்று கேட்டனர். இவர் அப்பொழுது ஒன்றும் விடைபகராமல் இருந்துவிட்டுச் சபாபதி முதலியார் ஊர்சென்ற பின்னர், தம்முடைய மாணாக்கருள் ஒருவரும் மிக்க ஞாபகசக்தி யுள்ளவருமாகிய சுப்பராய செட்டியாரைப் பதினறு அவதானம் செய்யும்படி சில மாதங்களிற் பயிற்றுவித்து ஒரு மகாசபைகூட்டி, அதற்கு மேற்கூறிய செல்லப்பா முதலியார் முதலியவர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் பதினறு அவதானமும் செய்யச்செய்து அவருக்குச் சோடசாவதானி யென்ற சிறப்புப் பெயரை அளித்துத் தக்க சம்மானங்களையும் வழங்குவித்தார். அதுமுதல் அவர்பெயர் சோடசாவதானம் சுப்பராயசெட்டியா ரென்று கௌரவப் பட்டத்துடன் வழங்குவதாயிற்று.

பிரபுக்கள் பாடங் கேட்டல்.

அப்பால் இவருடைய பெருமையை அறிந்து வரகனேரியி லுள்ள நாராயணசாமி பிள்ளை யென்னும் செல்வர் ஒருவர் சில நூல்களை இவர்பாற் பாடங்கேட்க நினைந்து தாமே வலிந்துவந்து இவரை அழைத்துச் சென்று மலைக்கோட்டை வாயிலுக்கு எதிரே யுள்ளதும் தமக்குச் சொந்தமானதுமாகிய பெரியதொரு வீட்டில்

இருக்கச் செய்து இவருக்கும் உடனிருப்பவர்களுக்கும் ஆகாராதி களுக்குரிய சௌகரியங்களை அமைப்பித்து ஒய்வுகாலங்களில் வந்து தாம் அறிந்துகொள்ள வேண்டிய நூல்களைப் பாடங் கேட்டார்; விரும்பிய பலரையும் கேட்கும்படி செய்து ஆதரித்தும் வந்தார்.

பின்பு, உறையூரிலுள்ள அருணாசல முதலியாரென்பவர் ஒரு சமயம் இவரை மாணாக்கர் முதலியவர்களோடு அழைத்துச் சென்று தம்முடைய வீட்டிலேயே உபசாரத்துடன் பலமாதங்கள் வைத்திருந்தார். அப்பொழுது அவர் தாம் முன்பு படித்திருந்த நூல்களிலுள்ள ஐயங்களைப் போக்கிக் கொண்டதன்றித் திருக் கோவையார் முதலியவற்றிற்கும் பொருள்கேட்டுத் தெளிந்தனர். அவர் செல்வமும் ஈகையும் வரிசையறிதலும் உடையவராதலின் எவ்வகையிலும் இவர் பிறரை எதிர்பாராதபடி தக்க உதவி செய்து வருவாராயினர். அக்காலத்திலே பிள்ளையவர்களுக்குப் பிராயம் 30.

இவர்பாற் பாடங்கேட்டவர்களுள் ஒருவராகிய சுப்பராய முதலியாரென்பவர் இவருடன் இடைவிடாமல் இருந்து செய்ய வேண்டியவற்றைக் குறிப்பறிந்து செய்து செல்லுமிடங்களுக்கும் ஊர்களுக்கும் உடன் சென்று சுற்றுத்தேறினர்.

---

9. அம்பலவாண முனிவரிடம் பாடங்கேட்டல்.

திருவாவடுதுறை சென்றது.

இப்படி இவர் திருச்சிராப்பள்ளியில் இருந்து வருகையில், திரு வாவடுதுறை யாதீனத்தலைவராகிய வேளூர்ச் சுப்பிரமணிய தேசி கரைத் தரிசித்துக்கொண்டு வரவேண்டுமென்னும் விருப்பம் இவ ருக்கு உண்டாயிற்று; ஒருநாள் அங்ஙனமே புறப்பட்டுத் திருவா வடுதுறைக்கு வந்துசேர்ந்தார். வந்தகாலத்தில் அவர் சில தினத் துக்குமுன்பு *பரிபூரண தசையையடைந்து விட்டதாகத் தெரிந்த

---

* பரிபூர்ணதசையை அடைந்தது குரோதிஷு கார்த்திகைமீ கார்த் திகை நட்சத்திரம்.

மையால், "இனி அறியவேண்டிய அரிய விஷயங்களை எவ்வண் ணம் தெரிந்துகொள்வோம்? யார் சொல்வார்கள்? எல்லா முடனே கொண்டேகினையே" என்று அவரைப்பற்றி வருந்தித் தம்முடைய வருத்தத்தைச் சில செய்யுட்களாலே புலப்படுத்தினர். அப்பால் அங்கே பதினைந்தாம் பட்டத்தில் ஆதீனத் தலைவராக விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிகரைச் சில பெரியோர்கள் முகமாகத் தரி சித்துப் பழக்கஞ்செய்துகொண்டார். அவர் திருமந்திரம் முதலிய நூல்கள், சைவசித்தாந்த சாஸ்திரங்கள், சித்த நூல்கள் முதலிய வற்றைத் தக்கவர்களைவைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து வந்த மையின் அவரிடம் வேண்டியவற்றை எளிதில் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்த ஆதீனத்திற் பரம்பரைக் கேள்வியையுடைய பெரியோர்களிடம் நூதனமாக அரியநூல்களைப் பாடங்கேட்க எண்ணி அதற்கு ஏற்ற பெரியார் யாரென்று இவர் விசாரித்த பொழுது அங்கேயுள்ளவர்கள் அம்பலவாண முனிவரென்ற பெரி யாரே அதற்குத் தக்கவரென்று சொன்னார்கள்.

அம்பலவாண முனிவர் இயல்பு.

அவர் வடமொழி தென்மொழியிரண்டிலும் முறையான பயிற்சியுடையவர். பல சிவபுராணங்களிலும் பல பிரபந்தங்களி லும் சைவ சாஸ்திரங்களிலும் அவருக்கு நல்ல ஆராய்ச்சி உண்டு. சிறந்த ஒழுக்கமுடையவர். இடைவிடாமற் படித்தலிலேயே காலத் தைப் போக்குபவர். மடத்திற் பல தமிழ்நூல்கள் கிடைக்குமாயி னும் ஒவ்வொன்றையும் ஒரே அளவுள்ள சுவடிகளில் எழுதி வைத்துக் கொள்வதில் அவருக்குத் திருப்தியதிகம். அவ் வாறு அவர் எழுதிய சுவடிகள் மிகப் பல. அவர் கல்வி கேள்வி களிற் சிறந்தவராக விருந்தாலும் உலகப்பயிற்சியே இல்லாதவர். யாருக்கேனும் பாடஞ்சொல்லுதலில் அவர் பழகவில்லை. அவர் கூசு-பிராயத்திற்கு மேற்பட்டு வாழ்ந்திருந்தவர். ஸ்ரீ சூரியனார் கோயிலிலுள்ள ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் மடத்துத்தலைவராக அம்பலவாண தேசிகராற் பின்பு நியமிக்கப்பெற்றவர்.

அம்பலவாண முனிவரிடம் பாடங்கேட்டது.

பிள்ளையவர்கள் ஏனையோர்களால் தூண்டப்பெற்று அவ ரிடம் சமயம்பார்த்துச் சென்று வந்தனஞ்செய்து தம்முடைய

மனக்குறையைத் தெரிவித்துக்கொண்டார். அவர், "மற்றொரு சமயம் வாரும்; யோசித்துச் சொல்லுவோம்" என்றார். அப்படியே மறுநாட்காலையில் இவர்போய் வந்தனஞ் செய்துவிட்டு அவருடைய கட்டளையை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார். "நல்லது; இரும்" என்று அவர்சொல்ல இவர் இருந்தார். "நீர் என்ன என்ன படித்திருக்கிறீர்?" என்று அவர் கேட்டார். இவர் தாம் படித்தவற்றுள் சில நூல்களின் பெயர்களைச் சொன்னார். "அவற்றைச் சிறந்த கல்விமான்களிடம் முறையாகப் பாடங்கேட்டிருக்கிறீரா?" என்று அவர் வினவினர். இவர், "இவ்விடமிருந்து திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளிச் சிலமாதங்களிருந்த ஸ்ரீவேலாயுத சாமியிடத்தும் வேறு சிலரிடத்தும் ஏதோ ஒருவாறு சிலசில நூல்களைக் கேட்டதுண்டு. எனக்குள்ள சந்தேகங்கள் பல. அவற்றையெல்லாம் சாமிகளே தீர்த்தருளவேண்டும்" என்று விநயத்தோடு தெரிவித்தார். வேறு பலரிடம் இவர் பாடங்கேட்டிருந்தனராயினும், அந்த மடத்தின் தொடர்புடையாரைச் சொன்னல் முனிவருக்குப் பிரீதி உண்டாகுமென்று எண்ணியே இங்ஙனம் கூறினர் அவர், "இந்த ஆதீனத்துச் சிஷ்யர்களுக்கே நாம் பாடஞ் சொல்லுவோமேயல்லாமல் மற்றவர்களுக்குச் சொல்லுவதில்லை; அது முறையுமன்று" என்று கண்டிப்பாகச் சொன்னர். இவர், "அடியேன் சாமிகளுடைய சிஷ்யபரம்பரையைச் சார்ந்தவன்தானே? இப்பொழுது அடியேன் கேட்கப்போவதும் சாதாரணமான நூல்களிலுள்ள சிலவற்றின் கருத்துக்களேயல்லாமல் சைவசாஸ்திரங்களல்ல" என்று பலமுறை மன்றாடவும், அவர் சிறிதும் இணங்கவில்லை. "ஒவ்வொரு நூலையும் எவ்வளவோ சிரமப்பட்டு நாங்க ளெல்லோரும் கற்றுக்கொண்டு வந்தோம். அவற்றை மிகவும் எளிதிற் கற்றுக்கொண்டு போகலாமென்று வந்திருக்கிறீரோ?" என்று சொன்னர். சொல்லியும் இவர் விடாமற் சென்று சென்று பாடங்கேட்டற்கு முயன்றுகொண்டேவந்தார்; சிலதினங்கள் இங்ஙனஞ் சென்றன. விடாமல் அலைந்தலைந்து இவர் கேட்டுக்கொள்வதைத் தெரிந்து ஒருநாள் மனமிரங்கி அவர், "இங்கே நீர் முதலிற் படிக்கவேண்டிய நூல் என்ன?" என்று கேட்டனர். "இப்பொழுது கம்பரந்தாதியே" என்றார் இவர். முனிவர், "நல்லது, ஒரு நல்ல நாள் பார்த்துக்கொண்டுவாரும்" என்றார்.

அப்படியே நல்லநாள் பார்த்துக்கொண்டு இவர் சென்றூர். அப்போது அவர் புத்தகங் கொணர்ந்தீராவென்று கேட்டார். இவர் இல்லையென்றூர். அவர் சென்று தம்முடைய புத்தகத்தை யெடுத்துவந்து கொடுத்தார். இவர் இருந்தபடியே அதை வாங்கிக்கொள்ள ஆரம்பித்தபொழுது அவர், "என்னகாணும், உமக்குச் சம்பிரதாயம் தெரியவில்லை! நீர் முறையாகப் பாடங் கேட்டவரல்லரென்பது மிகவும் நன்றூகத் தெரிகின்றது. இதற் காகத்தான் நாம் பாடஞ் சொல்லமாட்டோமென்று முன்னமே சொன்னேம். நமக்குக் குற்றமில்லை. இப்படிப்பட்டவர்களுக் குப் பாடஞ்சொன்னல் இடத்தின் கௌரவம் போய்விடுமே" என்று சினக்குறிப்புடன் சில வார்த்தைகள் சொன்னர். இவர், 'வெண்ணெய் திரண்டு வருகையில் தாழியுடைந்ததுபோல நாம் நல்ல பயனையடையக்கூடிய இச்சமயத்தில் கோபம் வந்துவிட்டதே! என்ன விபரீதம்? இதற்குக் காரணம் தெரியவில்லையே!' என்று மனம் வருந்தி, "சாமீ, அடியேன் புத்திபூர்வமாக யாதொரு தவறும் செய்யவில்லையே; அப்படி ஏதேனும் அடியேன் செய் திருந்தால், அதனை இன்னதென்று கட்டளையிட்டால் நீக்கிக் கொள்ளுவேன். அடியேன் நடக்கவேண்டிய நல்வழிகளையும் கற்பித்தருளல் வேண்டும்" என்று பலமுறை பிரார்த்தித்தார். அவர், "நாம் கொடுத்த புத்தகத்தை நீர் இப்படியா வாங்கு கிறது?" என்றூர். இவர், "எப்படி வாங்குகிறது? கட்டளையிட் டருள வேண்டும்" என, அவர், "இங்கே தம்பிரான்களிடத்திற் படித்துக்கொண்டிருக்கும் குட்டித் தம்பிரான்கள் செய்வதைப் பார்த்துக் கற்றுக்கொண்டு வாரும், போம்" என்றூர். இவர், "அங்குத்தியே அந்த ஸம்பிரதாயத்தை விளங்கச் சொல்லவேண் டும்" என்று பலமுறை வற்புறுத்திக்கேட்டுக்கொண்டார். அவர், "நூதனமாகப் படிக்கத் தொடங்கும்பொழுது ஆசிரியர்களைப் பத்திர புஷ்பங்களால் முதலில் அர்ச்சித்து வந்தனங்கள் செய்து புத்தகத்தைப் பெறவேண்டும்; அப்பால் சொல்லெனச் சொல்லல் வேண்டும்" என்று சொன்னர். உடனே இவர் பத்திரபுஷ்பங் களைக் கொணர்ந்து அர்ச்சித்து வந்தனங்கள் செய்து நின்றூர். அவர் புஸ்தகத்தைக் கொடுத்தனர். அதைப் பெற்றுக்கொண்டு மறுமுறை வந்தனஞ்செய்து புஸ்தகக்கயிற்றை அவிழ்த்துப் படிக் கத் தொடங்கியபொழுது அவர், "நில்லும்; பூசைக்கு நேரமாகி விட்டது; நாளைக்காலையில் வாரும்" என்றூர். இவர், "நல்ல வேளை

யில் தொடங்கிவிட வேண்டாமோ?" என்றார். "நாம் நல்ல வேளையிற் புத்தகத்தைக் கொடுத்துவிட்டோம். அதுவே போதியது" என்று சொல்லி உடனே அவர் எழுந்து போய்விட்டனர்.

அதன்பின் இவர் அங்கே படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கரொவ்வொருவரும் இங்ஙனமே வழிபாட்டோடு தத்தம் பெரியோரிடத்திற் கற்றுக்கொண்டு வருதலையறிந்து தாமும் இங்ஙனமே செய்யவேண்டுவதுதான் முறையென்று நிச்சயித்துக் கொண்டார். பின்பு தம்முடைய உறைவிடஞ்சென்று ஆகாராதிகளை முடித்துக்கொண்டு கம்பரந்தாதியின் முதலிரண்டு பாடல்களை ஒரு சுவடியிற் பெயர்த்தெழுதிக்கொண்டார். மறுநாட்காலையில் அவரிடம்சென்று முன்கூறியவண்ணம் அர்ச்சித்து வந்தனங்கள்செய்து அப்பால் அவருக்கு விசிறிப்பணிவிடை செய்துகொண்டு நின்றார். அதனால் மிக்க மகிழ்ச்சியுற்ற அவர், "நல்லது; இருந்து படியும்" என்ன, இவர் இருந்து மூதற்செய்யுளைப் படித்தார். இவர் பாடங்கேட்கத் தொடங்கினாலும் தெரிந்து கொள்ளவேண்டிய பாகம் மிகச் சிலவாகவே யிருக்குமென்பதை அவர் தெரிந்துகொள்ளாமல் அச்செய்யுளைப் பதம்பதமாகப் பிரித்து விரிவாக அர்த்தஞ்சொல்லி நெடுநேரம் போக்கினர். இந்த முறையில் அந்நூல் சில தினங்களில் முற்றுப் பெற்றது. அதனைக்கேட்டுவருகையில் சைவசாத்திரக் கருத்துக்களை நுணுகி இவர் வினவுவாராயின் முனிவர், "இப்பொழுது இதனைச் சொல்லக் கூடாது; பின்பு பார்த்துக்கொள்ளலாம்" என்பர். பலநாளிருந்தும் அந்த ஒரு நூலுக்குமேல் அப்பொழுது ஒன்றும் கேட்க இயலவில்லை.

அப்பால் இவர் அந்த நூல் முற்றுப்பெற்றதையும் அதிலுள்ள அரியவிஷயங்களைத் தெரிந்துகொண்டதையுமே பேருதியமாக நினைந்து மகிழ்ந்தனர்; 'இந்த ஆதீன சம்பந்தமுள்ள இவ்வம்பலவாண முனிவர் நமக்கு வித்தியாகுருவாகக் கிடைத்ததே பெரும்பயன்' என்று ஆறுதலுற்றனர். பின்பு அவர்பால் விடைபெற்றுக்கொண்டு திருச்சிரபுரம் வந்து சேர்ந்தார்.

அவரிடம் பாடங்கேட்டதை மறவாமல், பின்பு இவர் செய்த தியாகராச லீலையில் அம்முனிவரைத் துதித்துள்ளார். அச்செய்யுள்,

10. புராணப்பிரசங்கமும் பாடஞ்சொல்லலும். அக

"மின்னுமான் மழுவும் வெவ்வழல் விழியும்
மிளிர்கறைக் கண்டமு மறைத்துப்
பன்னுமா னிடமாய் வந்தெனை மறைத்த
பழமல வலிமுழு தொழித்து
மன்னுமா னந்தம் புணர்த்தியாள் கருணை
வள்ளலா வடுதுறைப் பெருமான்
முன்னுமா தவர்சொ லம்பல வாண
முனிவர னிணையடி போற்றி"

என்பது. அக்காலத்தில் ஆதீனத்திலிருந்த ஞானசிரியரைத் துதிப்பதாக விருந்தால் அம்பலவாண தேசிகர் என்று அமைத் திருப்பார்; முனிவரென்றல் ஆதீன ஸம்பிரதாயமன்று.

திரிசிரபுரம் வந்தபின்பு இவர் திருவாவடுதுறைக்கு அடிக்கடி சென்று அங்கே கல்வி கேள்விகளிற் சிறந்திருந்த தம்பிரான் களோடு பழகித் தமக்குள்ள ஐயங்களை வினவித் தெளிந்துகொள் வார். அம்பலவாண முனிவரிடத்தும் சிலவிஷயங்களைக் கேட்டுக் கொள்வார். அவரிடத்தும் அங்கே உள்ள தம்பிரான்களிடத்தும் சைவ சாஸ்திரங்களை உரைகளுடன் முறையே பாடங்கேட்டுத் தெளிந்தனர். அங்ஙனம் தெளிந்ததை இவர் பின்பு இயற்றிய பிரபந்தங்களிலும் காப்பியங்களிலும் அமைந்துள்ள சைவ சாத் திரக் கருத்துக்கள் புலப்படுத்தும்.

---

10. பெரியபுராணப் பிரசங்கமும் பாடஞ்சொல்லுதலும்.

மாணாக்கர்களிடத்து அன்பும் பாடஞ்சொல்லுதலில் விருப்பமும்.

பலரிடத்தும் சென்று சென்று அவர்களுக்கு வேண்டியவற் றைச் செய்து பலமுறை அலைந்து ஒவ்வொரு நூலையும் சிறிது சிறி தாகக் கற்றுக்கொண்டு வந்தவராதலின், யாதொரு வருத்தமு மின்றி மாணாக்கர்களைப் பாதுகாத்து அவர்களை அலைக்கழியாமல் அவர்களுக்கு வேண்டியவற்றை உடனுடன் கற்பித்துவர வேண்டு மென்ற எண்ணம் இவருக்கு இருந்துவந்தது. அதனால், பாடங்

கேட்க வரும் செல்வர்களுக்கும் ஏனையோருக்கும் விரும்பிய நூல் களைத் தடையின்றிப் பாடஞ்சொல்லி ஆதரிக்கும் இயல்பு அக் காலந்தொடங்கி இவருக்கு முன்னையினும் அதிகமாக ஏற்பட்டது. சில ஏழைப் பிள்ளைகளுக்கு ஆகாராதிகளுக்கும் உதவிசெய்து வரு வாராயினர். தம் நலத்தைச் சிறிதும் கருதாமல் மாணாக்கர் களுடைய நன்மையையே பெரிதாகக் கருதும் இயல்பு இப்புலவர் பெருமானிடத்து நாளடைவில் வளர்ச்சியுற்று வந்தது.

மாணாக்கர்களிடத்து இவர் காட்டிவந்த அன்பிற்கு எல்லையே இல்லை. தமக்கு ஏதேனும் தீங்கு செய்தாலும் பொறுத்துக்கொள் வார்; மாணாக்கர்களுக்கு யாரேனும் தீங்கு செய்துவிட்டால் இவரு டைய மனம் அதைச் சிறிதும் பொறாது. அத் தீங்கு செய்தவர் களை இவர் பகைவரைப்போலவே நினைந்து கடிந்தொழுகுவார்.

பாடஞ் சொல்வதில் இயல்பாகவே இவருக்கு விருப்பம் அதிகம். இவருடைய கல்வி வளர்ச்சிக்கும் கவித்துவத்திற்கும் காரணம் இங்ஙனம் பாடஞ்சொல்லி வந்ததேயென்று சில பெரி யோர்கள் சொல்லியிருக்கிறார்கள். திருவாவடுதுறை யாதீனத்தில் மேலகரம ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்திற் சின்னப்பட்டத் தில் இருந்தவரும் இவருடைய மாணாக்கரும் இடைவிடாமற் பாடஞ் சொல்லுதலையே தம்முடைய கடப்பாடாகக்கொண்டு ஒழு கியவருமாகிய ஸ்ரீ நமச்சிவாய தேசிகர், "ஒருமுறை பாடஞ்சொல் வது ஆயிரந்தரம் படிப்பதற்குச்சமானம்" என்று சொல்லுவ துண்டு. ஒருகாலத்தில் ஸ்ரீ சி. தியாகராச செட்டியார் இவரோடு பேசிக்கொண்டிருக்கையில் இவரை நோக்கி, "நீங்கள் இடைவிடா மற் பாடஞ்சொல்லுவதாகப் பேர்வைத்துக்கொண்டு நன்றாகப் படித்துவருகிறீர்கள்" என்று சொன்னதை நான் உடனிருந்து கேட்டிருக்கிறேன்.

"ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல ஞகும்"

"அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையற புலமை மாண்புடைத் தாகும்"

என்பன இக்கருத்தை விளக்கும்.

10. புராணப்பிரசங்கமும் பாடஞ்சொல்லலும். அரு

பெரியபுராணப் பிரசங்கம்.

இங்ஙனம் இருந்துவருகையில் சிலர் இவரிடம் பெரிய புராணத்திற்குப் பொருள் கேட்பாராயினர். பாடங்கேட்பவர்களேயன்றி வேறு சிலரும் வந்து உடனிருந்து கேட்டுச் செல்லுவது வழக்கம். அங்ஙனம் செல்பவர்கள் பலருங் கேட்கும்படி பெரிய தோர் இடத்தில் இவரைக்கொண்டு பெரிய புராணப் பிரசங்கம் செய்வித்தால் தமிழ்ச்சுவையையும் பக்திரசத்தையும் பலரறிந்து உய்தல் கூடுமேயென்றெண்ணினார்கள். அக்காலத்தில் இத்தகைய காரியங்களைச் செய்வித்தலில் ஊக்கமுடையவராய் அங்கேயிருந்த ஒரு செல்வரிடம் அவர்கள் சென்று தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் சொல்லியதற்கு அவர் இணங்கித் தம்முடைய வீட்டில் நூற்றுக் கணக்கானவர் இருக்கக்கூடிய இடமொன்றில் நாள்தோறும் பிரசங்கம்செய்யும்படி இவரைக் கேட்டுக்கொண்டனர். அவ்வாறே பிரசங்கம் நடைபெற்றது. மேற்கூறிய அன்பர்களும் வேறு பலரும் நாடோறும் வந்து கேட்டு மகிழ்வாராயினர். இவர் உரிய இடங்களிற் சொல்லும் பதசாரங்களும் அப்பொழுதப்பொழுது எடுத்துக்காட்டும் தேவாரம் முதலிய மேற்கோள்களும் சைவ சாஸ்திரக் கருத்துக்களும் எல்லாருடைய உள்ளத்தையும் கனிவித்தன. அயலூர்களிலிருந்தும் பலர் நாடோறும் கேட்பதற்காக வரத்தொடங்கினர். இவருடைய புகழ் முன்னெயினும் பலமடங்கு எங்கும் பரவியது. இதுதெரிந்த அக்கனவான் இவருக்கு மாதந்தோறும் தக்க பொருளுதவி செய்துவருவாராயினர்.

இந்த நிலைமையைக்கண்டு பொறுமையுற்ற வேறு மதத்தினர் ஒருவர் எப்படியாவது இந்தப் பிரசங்கத்தை நடைபெறுமற் செய்துவிடவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு மேற்கூறிய கனவானிடம் வந்தார். இந்தப் பிரசங்கத்தைச் செய்வித்தலால் தமக்கு மிகுந்த கௌரவம் உண்டாயிற்றென்று எண்ணிக்கொண்டிருந்த அந்தப்பிரபு வந்தவரைநோக்கி, "இங்கே நடக்கும் பெரிய புராணப் பிரசங்கம் எவ்வளவு சிறப்பாக நடக்கிறது பார்த்தீர்களா?" என்று தம்முடைய நல்ல எண்ணத்தை வெளியிட்டார். கேட்ட அவர், "அதைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசவேண்டுமென்பது என் கருத்து. அதற்காகத்தான் இங்கே வந்தேன்; கேட்டாற் சொல்லுவேன்" என்றார். தனவான் சொல்லவேண்டு

மென்றுகூற வந்தவர் எந்தவழியாகச் சொன்னல் அந்தப்பிரபு விற்கு வெறுப்புத்தோன்றுமோ அதைத் தேர்ந்து அவரை நோக்கி மிகவும் தைரியமாக, "அப்புராணம் மிக்க சுவையுள்ள தென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆனலும் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வொருவர் இறந்தாரென்ற முடிவே அமைந் திருக்கின்றது. அது மங்களகரமாகவில்லை. அதை ஒரு வீட்டில் வைத்து நடத்துவது சுபகரமானதன்றென்று சிலர் சொல்லு கிறார்கள். கோயில் முதலிய இடங்களுள் ஒன்றில் வைத்து நடத்தச்செய்தால் உத்தமமாக இருக்கும். தாங்கள் பெரிய குடும்பியாதலாலும் எனக்கு அன்பராதலாலும் இந்த உண்மை யைத் தங்களிடம் சொல்லாமலிருக்க என்மனம் துணியவில்லை. தங்கள் க்ஷேமத்தை உத்தேசித்து இதனை இன்று வெளியிட் டேன். இது தங்கள் மனத்திலேயே இருக்கவேண்டும். நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். அப்பால் தங்கள் சித்தம்போலப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி விடைபெற்றுத் தம்மிடம் சென்றார்.

அவருடைய பேச்சைக்கேட்ட அக்கனவானுக்கு மனம் பேதித்துவிட்டது. அவர் தமிழ்ப்பயிற்சியும் நாயன்மார்களிடத் திற் பக்தியும் இல்லாதவர்; ஆயினும் எல்லோரும் விரும்பும் காரி யத்தைச் செய்வித்தால் தமக்கு மதிப்புண்டாகுமென் றெண்ணிய வர்; பிறர் கூறுவதை அவ்வாறே நம்பிவிடும் தன்மையுடை யவர்; ஆதலால் பெரியபுராணப் பிரசங்கத்தைப்பற்றிய ஐயம் அவர் மனத்திற் குடிகொண்டு விட்டது. அந்தரங்கமாகச் சிலரை அழைத்து அதைப்பற்றி விசாரிக்கலானர். கேட்ட அவர்கள், "ஈது என்ன விபரீத உணர்ச்சியாக இருக்கிறது. யாரோ ஒருவன் விஷமம் பண்ணிவிட்டான் போலிருக்கின்றது. இந்தப் பைத்தி யக்கார மனுஷ்யரும் இதை உண்மையென்று நம்பிவிட்டாரே! இதை மாற்றுவது மிகவும் அசாத்தியமாயிற்றே!" என்று நினைத்து அதனைப் பிள்ளையவர்களிடம் தெரிவித்தனர்.

இவர் அதனைக்கேட்டுப் புன்னகைகொண்டு அவர்களை அனுப்பிவிட்டு அந்தப்பிரபுவிடம் வந்து, "உங்களுக்குக் கவலை யுண்டாயிருப்பது எனக்குத்தெரிந்தது. புராணத்தை இன்றோடே நிறுத்திக்கொள்வேன். அதனுற் குற்றமில்லை" என்றுசொல்லி அன்று அங்கேவந்து சொல்லவேண்டிய பகுதியைச்சொல்லி முடிவில், "நாளை முதல் இங்கே பிரசங்கம் நடைபெறுது; இங்கே

நீங்கள் வந்து அலையவேண்டாம்" என்று கேட்பவர்களுக்குச் சொல்லிவிட்டு உரியவரிடம் விடைபெற்றுக்கொண்டு தம்மிடம் சென்றனர்.

பெரியபுராணப் பிரசங்கம் நின்றுவிட்டதை யறிந்த அவ்வூரி லுள்ள வேறொரு கனவான் தாமே அதனை மேற்கொண்டு நடத்த எண்ணினர். எண்ணியவர் தினந்தோறும் பிரசங்கத்தை மிகச் சிறப்பாக நடத்துவிப்பதாகவும், நிறைவேறியவுடன் பிள்ளையவர் களுக்குத் தக்க சம்மானம் செய்விப்பதாகவும் சிலர்முகமாக இவ ருக்குச் சொல்லியனுப்பினர். அந்தக் கனவானும் முன்னவரைப் போன்றவரே.

அந்தப் புதிய கனவானது வேண்டுகோளைச் சிலர் இவரிடம் வந்து சொன்னர்கள். கேட்ட இந்தக் கல்விச் செல்வர், "தமிழ்ப் பாஷா ஞானமும் அதில் உள்ளன்புமின்றி வெறுங் கௌரவத்தை மட்டும் உத்தேசித்துத் தொடங்கும் செல்வர்களை நம்பக் கூடாது. தம்முடைய செல்வ இறுமாப்பினால் எல்லோரும் தமக்குக் கீழ்ப் படிந்து தம் இஷ்டம்போல் நடக்கவேண்டுமென்று கருதுவார்கள். அவர்களுடைய தொடர்பே வேண்டாம். ஏழைகளாயினும் பாஷை யில் அன்புடையவர்கள்பாற் பெறும் ஆதரவுதான் சிறந்தது" என்று சொல்லி அங்ஙனம் செய்ய உடன்படவில்லை.

பின்பு பல அன்பர்கள் பிள்ளையவர்களிடம் வந்து பெரியபுரா ணத்தில் எஞ்சிய பாகத்தையும் பிரசங்கம்செய்து பூர்த்திசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அப்படியே வேறு ஓர் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு அது பூர்த்தியாயிற்று. அந்த நகரத் தார் ஒருங்குகூடித் தக்க சம்மானம்செய்து பிள்ளையவர்களை ஆதரித்தார்கள். அதன் பின்பு அவ்வூரினர் எல்லாரும் பெரிய புராணத்தில் ஈடுபட்டு அதைப் படித்தும் படிப்பித்தும் பொருள் கேட்டுப் பொழுது போக்குவராயினர்.

இவர் தமிழ்நூல்களை நன்கு பாடஞ்சொல்லி வருதலை அறிந்து சில மாணவர்கள் பிற ஊர்களிலிருந்தும் இவரிடம் வந்து உதவி பெற்றுக் கவலையின்றிப் பாடங்கேட்பாராயினர்.

தியாகராச செட்டியார்.

தியாகராச செட்டியாரென்பவர் பூவாளூரிலிருந்து வந்து இவரிடம் பாடங்கேட்டவர். அவர் கேட்கவந்த காலம் குரோதி

வருஷமென்று தெரிகின்றது. பூவாளூரில் வியாபாரத்திலும் பயிர்த் தொழிலிலும் புகழ்பெற்று விளங்கிய ஒரு குடும்பத்தில் அவர் பிறந்தவர். அவருடைய தந்தையாரின் பெயர் சிதம்பரஞ்செட்டியா ரென்பது. பூஸ்திதியும் இருந்தமையால் தியாகராசசெட்டியார் வேளாண்மையையும் வியாபாரத்தையும் கவனித்துவந்தார். இள மைதொடங்கிப் பூவாளூரிலும் அயலூர்களிலும் உள்ள அறிஞர் கள்பால் தமிழ்க்கருவிநூல்களைப் பாடங்கேட்டுவந்தனர். இயற்கை யாகவே நல்லறிவுவாய்ந்தவராதலின் கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிந்து பயன்படுத்திக் கொள்வதிற் சிறந்தவரானர், "மதிநுட் பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை."

அவர் வந்து பிள்ளையவர்களிடம் முதலிற் பாடங்கேட்டது திருச்சிற்றம்பலக்கோவையாரென்றும் மற்ற நூல்கள் யாவும் அப் பாற் கேட்கப்பட்டனவென்றும் அவரே சொல்லியிருக்கிறார். கேட் கும் நூற்கருத்துக்களை அவர் ஊன்றிக்கேட்டுப் பயில்வதும் சிந்திப் பதும் தெளிவதும் இவருக்கு அவர்பால் அதிக அன்பை உண்டாக் கின. புதியனவாகச் செய்யுள் செய்யும்வன்மையும் அக்காலத்தில் அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. அதனாலும் இக்கவிஞர் தலைவருக்கு அவர்பாலுள்ள அன்பு வளர்ச்சியுற்றது. இவர்பாற் படிக்கவந்த காலந்தொடங்கி நூதனமாகப் பாடங்கேட்க வரு பவர்களுக்குப் பாடஞ்சொல்லுதலும் இவர் நூதனமாகச் செய்யும் நூல்களையோ தனிச் செய்யுட்களையோ பனையேட்டில் அப்பொழுது அப்பொழுது எழுதுதலுமாகிய இப்பணிகளை அவர் பிறருக்குக் கொடுத்துவிடாமல் தாமே வகித்துக் கொண்டனர்; ஒரு நிமிஷமேனும் இவரைவிட்டுப்பிரிந்திரார்; புதியசெய்யுட்களை இவர் சொல்லத் தாம் எழுதும்பொழுது அவற்றின் சொல்லின் பம் பொருளின்பங்களையறிந்து மனமுருகிக் கண்ணீர் வீழ்த்து வார்; அவற்றின் நயங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவார். இவைகளே அவருக்கு உண்டாகிய கல்வி முதிர்ச்சிக்கும் மற்ற மாணாக்கர்களைக் காட்டிலும் மேற்பட்டு விளங்கியதற்கும் காரண மாக இருந்தன. பிள்ளையவர்கள் செட்டியாரிடம் வைத்திருந்த அன்பு ஒப்பற்றது;

"நெஞ்சுற வருங்கலைகள் கற்குமவர் தம்மளவில்
நேயநிக ழாதவர்கள் யார்?" வி. பா. குருகுலச்.

10. புராணப்பிரசங்கமும் பாடஞ்சொல்லலும். அள

செட்டியார் பாடல் சொல்லுதலும் பொருள் சொல்லுதலும் செய்யுள் செய்தலும் அவரது குரலும் பிள்ளையவர்கள் பாடல் சொல்லுதல் முதலியவற்றிற்குப் படியெடுத்தாற் போலவேயிருக்கும். பிள்ளையவர்களுக்கு எவ்வளவு புகழுண்டோ அந்தப் புகழுக்கு அடுத்தபடியான புகழைத் தமிழ்நாட்டிற் பெற்று விளங்கினவர் அவரே.

அவர் திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பின்பு தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றைப் பாடங் கேட்டு வந்தார். அக்காலத்தில் நாடோறும் ஒவ்வொரு செய்யுளாகப் பிள்ளையவர்கள்மீது அவர் செய்துவந்த ஒரந்தாதி அபூர்த்தியாக இருக்கின்றது.

அந்நூற் பாடல்களுட் சில வருமாறு :—

" உன்னெயொப் பாரிங் கெவரு மிலையொப் புரைத்திடினீ
நின்னெயொப் பாயருண் மீனுட்சி சுந்தர நின்மலவெற்
கன்னெயொப் பாய்பின்னு மத்தனெப் பாய்நின் னருளைப்பெற்ற
என்னெயொப் பாருமுண் டோகடல் சூழு மிரும்புவிக்கே." (உ)

" பெற்றரு ணின்னைப்பெற் றூர்போற்பெற் றூர்களும் பேண்பிறப்பை
உற்றரு ணின்றனைப் போலவுற் றூர்களு மூன்னருளை
நற்ற ரணியு னெனைப் போற்பெற் றூர்களு நாடுறினு
மற்றூர்மூற் றூர்தரு மீனுட்சி சுந்தர மாமணியே." (கo)

" தக்கார் தகவில ரென்ப தவரவர் தம்மெச்சத்தால்
மிக்கா ரறியப் படுமென னின்னை விரும்பிப்பெற்றூர்
தக்கா ரெனநின்றன் னுலுணர்ந் தன்றுகொ றண்டமிழ்தேர்
மிக்கார் புகழ்தரு மீனுட்சி சுந்தர மெய்ம்மையனே." (கள)

" உள்ளும் பவமொரு கோடி யுறினு முறுகவந்த
வள்ளும் பவந்தொறு மீனுட்சி சுந்தர மெய்ம்மையநீ
எள்ளுஞ் செயலிற் புகுத்தாதென் பானின்குற் றேவலையே
கொள்ளும் படிதொண்ட னுக்கொள்வை யேலிக் குவலயத்தே." (சள)

* அரன்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை.

அப்பால் இவரிடம் அரன்வாயில் வேங்கடசுப்புப்பிள்ளை என்ற ஒருவர் படிக்க வந்தார். அவர் இவர்பால் வந்து ஆதரிக்கப்

---

* அரன்வாயிலென்பது தொண்டைநாட்டிலுள்ளதோரூர்.

அ.அ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

பெற்று முறையாகப் பாடங்கேட்டு நல்ல தமிழ்ப் பயிற்சியையும் செய்யுள் செய்யும் ஆற்றலையும் அடைந்து சென்று புகழ்பெற்று விளங்கினர். அவர் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட செய்தி வேதநாயகம் பிள்ளைக்கு ஒருமுறை அவர் எழுதிய கீழ்க்கண்ட பாடலால் விளங்கும்:

"மீனாட்சி சுந்தரனு மேலோன் சிரகிரியில்
தானாட்சி யாவாழ் தருணத்தே—தேனாட்சிச்
செந்தமிழ வன்பாற் சிறிதுணர்ந்தேன் மன்னவித்தாற்
பந்தமெனக் குண்டேயுன் பால்."

திருவீழிமிழலைச் சாமிநாத கவிராயர்.

திருவீழிமிழலைச் சாமிநாத கவிராயரென்பவர் அத்தலத்திலுள்ள கல்விமான்கள் சிலர் சிலரிடம் கருவிநூல்களையும் திருவிளையாடற் புராணம் முதலிய காப்பியங்களையும் முறையே பாடங் கேட்டுத் தெளிந்தனர். பின்பு கம்பராமாயணம் பெரிய புராணம் முதலியவற்றை வாசிக்கவேண்டுமென்னும் விருப்பமுடையவராய்க் குரோதி வருஷத்தில் திருச்சிரபுரம் வந்து இவர்பால் முதலில் கம்பராமாயணத்தைப் பாடங்கேட்டார். அவருடைய நுண்ணறிவையும் இனிய சாரீரத்தையும் அறிந்த பிள்ளையவர்கள் பிரியத்துடன் பாடஞ் சொன்னார். * தாமே எழுதிவைத்த கம்பராமாயண ஏட்டுச்சுவடியொன்றை அவருக்குக் கொடுத்தார். அவர் இவருடைய பேரன்பினால் அந்நூலில் நல்ல பயிற்சியையடைந்தார்; அதிலிருக்கும் கருத்தைப் பிறருக்குச் சுவைபடச்சொல்லி மகிழ்விக்கும் ஆற்றலையும் பெற்றார்; அடிக்கடி பிறருடைய முயற்சியினால் இவருக்குத் தெரியாமல் தனியே வேறிடஞ் சென்று கம்பராமாயணப் பிரசங்கம் செய்து வந்தார். அதற்குக் காரணம் இவர்பாலுள்ள அச்சமும் நாணமுமே.

அவ்வாறு அவர் இருத்தலை யறிந்து ஒரு நாள் இவர் அவர் பிரசங்கம் செய்யுமிடஞ் சென்று மறைவாக இருந்து கேட்டு வியப்புற்று அவரைப் பின்னும் பிரகாசப்படுத்தவேண்டும் என்று

---

* கம்பராமாயணத்தை இவர் ஒன்றன்பின் ஒன்றாக மூன்றுபிரதிகள் எழுதிவைத்திருந்தனர்; அவற்றுள் ஒன்றைச் சாமிநாத கவிராயருக்கும், வேறொன்றைப் பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளைக்கும் கொடுத்தனர்; மற்றொன்றைத் தாமே வைத்துக்கொண்டிருந்தனர்.

நினைந்தார். சில காலத்துக்குப் பின்பு ஒரு சபை கூட்டிக் கம்ப ராமாயணத்திலுள்ள சில சுவையான பாகங்களை எடுத்துப் பிர சங்கிக்கச் செய்து 'கம்பராமாயணப் பிரசங்கவித்துவான்' என்ற பட்டத்தை அளித்ததன்றிச் சால்வை யொன்றையும் தமது கையாலேயே வழங்கினர். அதுமுதல் அவருக்குத் தமிழ்நாட் டிற் கம்பராமாயணப் பிரசங்க விஷயத்தில் மிக்க கௌரவம் உண் டாயிற்று. வாழ்நாள் முழுவதும் கம்பராமாயணம் முதலியவற் றைப் பிரசங்கம்செய்து காலங்கழித்துவந்தார். தம்மை நன் னிலைக்குக் கொண்டுவந்த பிள்ளையவர்களை மறவாமல் எந்த இடத் திற் பிரசங்கம்செய்தாலும் இவ்வாசிரியருடைய துதியாக ஒரு பாடலைச் சொல்லிவிட்டுத்தான் பின்பு பிரசங்கிக்கத் தொடங்கு வார். இங்ஙனம் அவர் துதியாகச் செய்த பாடல்கள் பல.

---

11. சில பிரபந்தங்களும் தியாகராச லீலையும் இயற்றல்.

பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.

ஒரு சமயத்தில் தியாகராச செட்டியார் முதலியோர்கள் கேட்டுக்கொள்ள இவர் பூவாளூர் சென்றிருந்தார். அப்பொழுது சிலர் விரும்பியபடி பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதியென்ற பிரபந்தம் இவரால் இயற்றி அரங்கேற்றப்பெற்றது. சைவ சாஸ் திரங்களைக் கற்றபின்னர்ப் பாடப்பட்டதாதலின் அப்பிரபந்தத் தில் அவற்றின் கருத்துக்கள் அமைந்திருத்தலைக் காணலாம்:

"பாவிய கரும மின்றியே பசுவும்
பதியும்பா சமுமென வுரைக்கும்
நாவினன் மதமே கொண்டுழ லாம
லுயினேற் கென்றருள் புரிவாய்"

"அவனவ ளதுவென் றுரைத்திடும் புவன
மாகியு மதற்குவே றுளாய்
நவவடி வுடையாய் * காமர்பூம் பதியாய்
நாயினுங் கடைப்படு வேற்குத்

---

* காமர்பூம்பதி - பூவாளூர்.

தவலறு மூல மலச்செருக் கொழிந்து
சத்திநி பாதமென் றுறுமே.''

''பொருந்துசன் மார்க்க நெடுஞ்சக மார்க்கம்
புத்திர மார்க்கமு மில்லேன்
திருந்திய தாத மார்க்கமு மில்லேன்
நீவினை மார்க்கமே யுடையேன்.''

''காலைக் கதிராய்ச் சில்லுயிர்க்குக்
கவினு மதியாய்ச் சில்லுயிர்க்கு
மாலை யிருளாய்ச் சில்லுயிர்க்கு
வைகும் பொருணீ யென்றறியேன்.''

இவற்றையன்றித் திருவாசக முதலியவற்றிலுள்ள கருத்துக்களைத் தம்முட்கொண்ட சில செய்யுட்களும் இதில் உண்டு :—

''ஆலும்விட மமுதாக்குங் காமர்பதித் திருமூல
வமல னூர்க்குச்
சாலுமணிக் குழையொருபாற் றோடொருபான் முத்தொருபாற்
சர்ப்ப மோர்பால்
ஏலுநற்குங் குமமொருபா னீறொருபாற் பட்டொருபா
லியைதோ லோர்பால்
ஒலிடுபொற் சிலம் பொருபாற் கழலொருபாற் பன்னூல
மொளிரு மன்றே''

எனவரும் அர்த்த நாரீசுவரமூர்த்தியின் செய்தி * திருவாசகத்தைத் தழுவியமைத்தது.

''புலையரும் விரும்பாப் புன்புலாற் சுமை''

என்பது அரிச்சந்திர புராணத்தைத் தழுவியது.

''ஏலக் குழலியோர் பாகம் போற்றி
எனக்கு வெளிப்படும் பாதம் போற்றி
மாலைப் பிறைமுடி வேணி போற்றி
மான்மழு வைத்த கரங்கள் போற்றி

---

*''தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும், பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ், சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக், கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி'' நீதுவா.

காலைக் கதிர்த்திரு மேனி போற்றி
காமனைக் காய்ந்தகண் போற்றி யென்றே
ஓலிட் டருமறை தேடும் பூவா
ரூரரை யான்சொல்லி யுய்வ தென்றே ''

எனவரும் செய்யுட்களின் சந்தம் *தேவாரச் சந்தத்தைப் பின் பற்றியது.

அந்நூல் முற்றும் இப்பொழுது கிடைக்கவில்லை; † காப்பும் 24 பாடல்களுமே கிடைக்கின்றன.

பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ்.

இவர் ஒரு முறை திருத்தவத்துறை (லாலுகுடி) சென்றிருந்த பொழுது அங்கே இருந்த அன்பர்களின் விருப்பப்படி அவ்வூரில் எழுந்தருளியுள்ள பெருந்திருப்பிராட்டியார் (ஸ்ரீமதி) மீது ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றினர்.

அந்தப் பிள்ளைத் தமிழிலும் இக்கவிஞர் முதலில் விநாயகர் முதலியவர்களுக்கு வணக்கம் கூறுகின்றனர். ஆயினும் அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழிலுள்ளதுபோல அவையடக்கம் இதில் இல்லை. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழைக் காட்டிலும் இந்நூல் எளிதிற் பொருள்விளங்கும் சொற்களையும் சிறந்த கருத்துக்களையும் உடையதாக இருக்கின்றது. இவருடைய கற்பனைத் திறனும் பிறவும் இதன்கண் உயர்வுபெற்று விளங்குகின்றன.

மருதத்திணையுள் தாமரைமலர் நிறைந்திருப்பதை நினைந்து, 'பிரமதேவர் தம்முடைய தந்தையாகிய திருமாலுக்குக் குடையாக உதவிய மலையின் சிறகுகளை இந்திரன் அரிந்த பகைமையை எண்ணி அவனுக்குரிய மருதத்திணையில் அவன் தங்குவதற்கு இடமில்லாதபடி தமக்கும், தம் தாயாகிய திருமகளுக்கும், தம் மனைவியாகிய கலைமகளுக்கும் இருப்பிடங்களாகவும், தம் தம்பியாகிய மன்மதனுக்கு ஆயுதசாலையாகவும், தம்முடைய வாகனமாகிய அன்னத்துக்கு இருப்பிடமாகவும் பல தாமரைகளை எங்கும் உண்டாக்கி மகிழ்கின்றார்' என்னும் கருத்தமைய,

---

* "மைம்மரு பூங்குழல்" என்னும் திருப்பதிகம் முதலியவற்றைப் பார்க்க.

† ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 2645—69.

* "தண்ணந் துழாய்ப்படலை துயல்வரு தடம்புயத்
தாதைக்கு நீழல்செய்யத்
தந்தவரை யின்பறை யரிந்தபகை கண்டரி
தங்குதற் கிடமிலாமல்
எண்ணுந் தனக்குமனை யாய்க்குமனை யிற்குமனை
யிளவலுக் கேதியுறையுள்
எகினுறையு ளாகமரு தத்திணையி லாக்கிமகி
ழெண்கைப் பிரான்புரக்க" (காப்புப். கு)

என்று ஒரு கற்பனையை அமைக்கின்றார்.

'தன் கணவர் செய்வதைப்போன்றே தானும் செய்யவேண்டு மென்றெண்ணிய கலைமகள், அவர் தம் நிறமமைந்த பொற்றாமரை யில் வீற்றிருப்பதைப்போலத் தானும் தனது நிறம்பொருந்திய வெண்டாமரையில் வீற்றிருக்கின்றாள்' என்ற கருத்தையமைத்து,

"தேனுறுவட்டெழப் பாய்தரு மடுக்கிதழ்
செறிந்தசெம் பொற்றாமரைச்
செழுமலரின் மேற்றனது பொன்மேனி யொப்புமை
தெரிந்துறையு மகிழ்ஈனேய்ப்பக்
கானுறு வெண்டா மரைப்போதின் மேற்றனது
கவின்மேனி யொப்புமைதேரிக்
காதலி னமர்ந்தருள் கொழிக்குமறை முதலளவில்
கலைஞான வல்லிகாக்க" (காப்புப். அ)

என்கின்றார். உமாதேவியார், சிவபெருமான் திருமேனியிற் பாதிகொண்டதற்குக் காரணத்தை, 'சிவபெருமான் திரிபுரசங் காரம் செய்கையில், வில்லைமட்டும் வளைத்தாரேயன்றி அம்பைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதனையறிந்து அந்த அம்பாக வந்திருந்த திருமால் இனி இவருக்குப் பயன்படவேண்டுமென்று கருதி இடபவாகனமானார். அவர் தம்முடைய தமையனாராத லின், அவர் மீது தாம் தனியே ஒரு வடிவத்தோடு இருத்தற்கு உமாதேவியார் நாணினார்; ஆதலின் சிவபிரான் திருமேனியோடு கலந்து ஒரு வடிவாயினார்' என்னும் கருத்துத் தோன்ற,

---

* வரை - கோவர்த்தனகிரி. பறை - சிறகு. அரி - இந்திரன். யாய்க்கு - திருமகளுக்கு. இற்கு - மனைவிக்கு; கலைமகளுக்கு. இளவல் - மன்மதன். ஏதி - ஆயுதம். எகின் - அன்னம்.

"ஒன்னூர்த மும்மதி லொருங்கவிய வாங்குபொன்
னேங்கல்விற் பழமையறிவார்
உற்றதனே யன்றியேத் தொழிலையெஞ் ஞான்று
முஞற்றவல் லாமைகண்டு
கொன்னூர் வலைக்கையுல குண்டமுன் னேனிமிற்
கொல்லேற தாயதான்மேற்
கொள்பொழுது வேறுறைய நாணியோ ருடல்செய்த
கொள்கைபோ லம்மகிழ்நனூர்
பொன்னுரு மேனியிற் பாதிகொண் டாளும்
பொருப்பரைய னீன்றபிடியே" (செங்கீரைப். கூ)

எனக் குறிப்பிக்கின்றூர். இத்தகைய கற்பனைகள் பலவற்றை இந்நூலின்கண்ணே காணலாம்.

கச்சியப்ப முனிவர் நூல்களில் அதிகமாக ஈடுபட்ட இவர் திருவானைக்காப் புராணக் கருத்துக்களை,

"அளவில்பல வலியுடைய வாணவ மகன்றவா
லறிவன்றி யுருவ மில்லா ஜயன்" (பாயிரம், கூ)

"..... பரமனூர்
சிலவுயிர்க் கினனுகியும்
பகற்சில வுயிர்க்குமுன் மதியாகி யுஞ்சில
படிற்றுமூழ் கியவுயிர்க்குப்
பாயுமிரு ளாகியும் பொலிவது தெரிப்ப" (பொன்னுசற். டு)

என்பனபோன்ற இடங்களிலும், விநாயகபுராணக் கருத்தை,

"மூத்தமைந் தன்பா லளித்தவற் கார்வமெனு
மூதுரை வழக்குடைமையான்" (பாயிரம், ச)

என்ற இடத்திலும், தணிகைப் புராணச் சொற்ரொடராட்சியை,

"சுஃறெலிச் சூரற் படைக்கைப் பிரான்" (பாயிரம், சு)
"நந்தாத கஃறெலிக் கானிற் சரித்த" (வாரானைப். டு)

என்ற இடங்களிலும் எடுத்தாண்டிருக்கின்றூர்.

"குருவார் துகிர்ச்சடை திசைதட வரக்கங்கை
குழமதியி னேடுதுள்ளக்
குழையசை தரத்திருப் புருவமுரி தரவெழுங்
குறுமூர னிலவெறிப்ப
மருவார் கடுக்கைவெண் டலையரவு திண்டோள்
வயிற்றுயல் வரக்கதிர்த்து

மணிநூ புரங்குமு றிடப்படைப் பேற்றதுடி
வாய்த்ததிதி யபயமாய்த்தல்
உருவார் கொழுந்தழ றிரோதமூன் றியதா
ளுவப்பரு ளெடுத்ததாளில்
ஓங்கத் தெரித்துமன் றிடையென்று நின்றுட
வொருவர்தமை யாட்டுமயிலே
திருவார் தவத்துறைக் கருணைப் பிராட்டி நீ
செங்கீரை யாடியருளே
தேமலர்க் கண்ணிபூனை கோமளப் பெண்ணமுது
செங்கீரை யாடியருளே" (செங்கீரைப். உ)

"ஒருமூ வகையா யெண்ணிலவா யுணர்த்த வுணர்சிற் றறிவினவாய்
உண்மை யினவாய்ச் சதசத்தா யுறுகண் ணியல்பா யுழல்பசுக்கள்
அருமா தவசன் மார்க்கநெறி யடைந்த ஞதி யாயளவில்
ஆற்ற லுடைத்தாய்ச் செம்புறுமா சான மூல மலநீங்கி
உருவோ டருவங் குணங்குறியற் றொளியாய் நிறைந்த பதியையுணர்
வுணர்வானுணரும்பொருளொழியாதொழிந்துகதிர்மீன்போற்
திருவாரின்ப முறவருள்வாய்" [கலந்து
(முத்தப். க)

என்பனபோன்ற இடங்களிற் சைவசித்தாந்த நூல்களின் கருத்துக்களை அமைத்திருக்கின்றனர்.

"நற்றவத்துறை வளர் பெருந்திருப்பெண்"
"அளகைப் பெருந்திருவம்மை"
"அளகாபுரிக் கன்னி"
"தடநிரம்பும்வயி றயிவனங்குடிகொ டருபெருந்திருநன்
மங்கையைக் காக்கவே"
"எமையா டரும்பஞ்ச புண்ணியத் தலமென
வியம்பு நான்மறை"

என்பவற்றில் இத்தலப்பெயர்களாகிய திருத்தவத்துறை, அளகை, அளகாபுரி, வயிரவி வனம், *பஞ்ச புண்ணியத்தலம் என்பவற்றை எடுத்து ஆள்கின்றார்.

"மின்னிய பெரும்புகழ்க் கொள்ளிடத் திருநதியின்
வெள்ளநீ ராடியருளே"

---

*பஞ்ச புண்ணியத் தலமாவது நதி, வனம், புரம், புஷ்கரிணி, சேத்திரமென்னும் ஐந்தும் அமைந்தது; திருத்தவத்துறைப் புராணம், பஞ்சபுண்ணியத்.

11. பிரபந்தங்களும் தியாகராசலீலையும் இயற்றல். கூறு

"மறையா யிரமுக் தொடர்வரும் பெண்
* வடகா விரிநீ ராடுகவே"

என்பவற்றிற் கொள்ளிட நதியும்,

"மக்கட் புரோதிதன் மனைக்கற் பழித்துமழ
வன்பெற்ற வெண்குட்டநோய்
மாற்றவுல கெங்குந் திரிந்தித் தலத்துவர
மாற்றிச் சிறப்புமுதவிச்
செக்கர்ச் சடாமகுடர் தாண்மலர்க் கன்புந்
திருந்தக் கொடுத்ததீர்த்தம்" (அம்புலிப். கூ)

என்பதில் அத்தலத்திலுள்ள சிவகங்கைத் தீர்த்தமும் இதிற் கூறப்படுகின்றன. காப்புப் பருவத்தில் இத்தலத்து விநாயகராகிய திருவாளப் பிள்ளையாருக்குரிய செய்யுளொன்றுள்ளது. இத் தலத்துச் சிவபெருமான் திருநாமம் அழைத்து வாழ்வித்த பெருமானென்பது. அத்திருநாமத்தைச் சந்தத்தில் அமைத்துக் காப்புப் பருவத்தில் ஒரு செய்யுள் கூறப்பட்டிருக்கிறது. "அழைத்து வாழ்வித்தவர் திருப்புகழு மெஞ்ஞான்றும் வாழ" எனப் பொன்னூசற் பருவத்திறுதிச் செய்யுளிலும் அத் திரு நாமம் கூறப்படுகிறது.

"முனிவரர் குழுவிய வளகையில் வளர்பவள்
முத்தமளித் தருளே" (முத்தப். கூ)

"செய்தவத் தருமுனிவர் மொய்தவத் துறையில்வளர்
தெய்வதக் கொடிவருகவே" (வாராஅனப். க)

என்பவற்றில் இத்தலத்தில், எழுமுனிவர் பூசித்தமை குறிப்பாகப் புலப்படுத்தப்பட்டிருக்கின்றது. அம்புலிப் பருவத்தில் வரும்

"இமையாத பவளச் சரோருகக் கண்ணனும்
இருநிதிக் குரியகோவும்
இருடியர்க ளெழுவரும் வயிரவியு நன்புக
ழிலக்குமிய பின்னுமளவில்
கமையார் தவத்தினரு மாகமப் படிபூசை
கடவுளி யியற்றியுள்ளம்
கருதரும் பேறெண்ணி யாங்குறப் பெற்றவிக்
கரிசருந் தெய்வத்தலம்"

---

* வடகாவிரி - கொள்ளிடம்.

என்னும் செய்யுளில் திருமால், குபேரன், எழுமுனிவர், வயிரவி, இலக்குமி என்பவர்கள் பூசித்த வரலாறு கூறப்பட்டிருக்கின்றது. இப்பிள்ளைத்தமிழின் ஈற்றுச் செய்யுளில் இக் கவிநாயகர் வாழ்த்தை உடம்படுபுணர்த்தி,

"மறைமுதற் பலகலைகள் வாழவந் தணர்வாழ
மாமகத் தழலும்வாழ
மன்னுமா னிரைவாழ மழைபொழியு முகில்வாழ
மற்றுமெவ் வுயிரும்வாழ
நிறைதரு பெரும்புகழ் விளங்குசை வமும்வாழ
நீடுவை திகமும்வாழ
நெக்குருகி நின்னன்பர் துதிசெய்த சொற்பொரு
ணிலாவுபா மாலைவாழ
இறையவ ரழைத்துவாழ் வித்தவர் திருப்புகழு
மெஞ்ஞான்று நன்குவாழ
யார்க்குமினி தாம்பெருந் திருவென்று நின்பெய
ரிலங்கிநனி வாழவுலகிற்
பொறையரு டவந்தானம் வாழவெம் பெருமாட்டி
பொன்னூச லாடியருளே
பொன்னகர நிகரான தென்னளகை நகர்மாது
பொன்னூச லாடியருளே"

என அமைக்கின்றார். இம்முறை அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களைப் பின்பற்றியது. அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழில் இத்தகைய அமைப்பு இல்லை. இதிலுள்ள சுவைமிக்க சில பாடல்கள் வருமாறு :

"பவத்துயர் பாற வெனக்கரு ளைச்செ யருட்பாவாய்
பனிக்குல மால்வரை பெற்று வளர்த்த சுவைப்பாகே
சிவத்திரு வாள னிடத்தி லிருக்கு மியற்றோகாய்
திருப்பெணி லாவு கலைப்பெ ணிவர்க்கிர சத்தேனே
நவத்தளிர் வேர்மலர் மொய்த்தவிர் மைத்த குழற்றாயே
நயப்ப வெணாலற முற்றும் வளர்த்த கரத்தாலே
தவத்துயர் வார்க ளுளத்தவள் கொட்டுக சப்பாணி
தவத்துறை வாழு மடப்பிடி கொட்டுக சப்பாணி"

(சப்பாணிப். ௯)

11. பிரபந்தங்களும் தியாகராசலீலையும் இயற்றல். கூ

பேதம்.

"ஏற்றநின் வாயினில வமுதஞ் சகோரமெனு
மிருகாற்பு ளுண்டுமெகிழும்
இவள்வாயி னிலவமுத ஈரமடங் கலவென்ற
வெண்காற்பு ளுண்டுமெகிழும்

போற்றநீ மாலவ னெனச்சொல்லு மொருமுகப்
புலவனைப் பெற்றெடுத்தாய்
புலவர்க்கு மேலவ னெனச்சொல்லு மறுமுகப்
புலவனைப் பெற்றுளிவள்

தேற்றமீன் மாதரிரு பானெழுவ ருளரீ
சிறக்குமிவ ளோங்குகல்வி
செல்வமீன் மாதர்முத லளவிலா மாதர்பணி
செய்யவுள் ளாளாதலால்

ஆற்றவு நினக்கதிக மென்றெவரு மறிவர்கா
ணம்புலீ யாடவாவே
அமரா வதிக்குநிக ரளகா புரிப்பெணுட
னம்புலீ யாடவாவே."
(அம்புலிப். கூ)

* தியாராசலீலை இயற்றத் தொடங்கியது.

தியாகராச செட்டியாருடைய குடும்பத்திற்கு வழிபடுதெய்வமாகிய திருவாரூர்த் தியாகராசப்பெருமானைத் தரிசிப்பதற்காக அவருடைய சிறியதந்தையார் முதலியவர்கள் அடிக்கடி திருவாரூர் செல்வதுண்டு. செல்லும்பொழுது இவரையும் உடன் அழைத்துப் போவார்கள்; தாமே தனித்தும் இவர் சில முறை சென்று வருவார். அப்படிச் செல்லுங்காலங்களில் அத்தலத்திற் சில நாட்கள் தங்கி அவ்வூரிலிருந்த வித்துவான்களுடன் ஸல்லாபம் செய்து மகிழ்ந்தும் மகிழ்வித்தும் வருவார். தக்கவர்கள் இவருடைய கல்வி மேம்பாட்டையும் இவருடைய செய்யுளின் சுவையையும் அறிந்து இவர்பால் நன்மதிப்பு வைத்துப் பாராட்டி வருவாராயினர்.

இவர் தம்முடைய 30-ஆம் பிராயமாகிய குரோதிவருஷம் பங்குனி மாதத் திருவிழாவிற்குத் திருவாரூர் சென்றிருந்தார். ஒரு

* இந்நூல் குறிப்புரையுடன் என்னுற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

கூஅ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

நாள் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து ஆண்டுள்ள அன்பர் களுடன் பேசிக்கொண்டிருக்கையில் இவருடைய அரிய சம் பாஷணையையும் இவரியற்றிய செய்யுட்களையும் கேட்டு மகிழ்ந்த சில பெரியோர்களாகிய திருக்கூட்டத்தார் பலர் இவரைக்கொண்டு தியாகராசலீலையைச் செய்யுள் நடையிற் செய்விக்க வேண்டு மென்று நெடுநாளாகத் தமக்கிருந்த விருப்பத்தை வெளிப்படச் சொல்லி, செய்யத் தொடங்கும்படி வற்புறுத்தினர்கள். இவர் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி அவ்வாறே தியாகராச லீலையைப் பாடத் தொடங்கினர். இவ்வரலாறு அந்நூலில்வரும்,

"காரெலாந் தவழுஞ் சென்னிக் கதிர்மணி மாடந் தோறும்
நீரெலா மமைந்தார் மேவும் நிறைசெல்வத் திருவா ரூரிற்
பாரெலாம் புகழ்ந்து போற்றும் பங்குனித் திருவி ழாவிற்
சீரெலாந் திருந்து தேவா சிரயனுங் காவ ணத்தில்"

"தண்ணிய குணத்தர் சுத்த சைவசித் தாந்த ராய
புண்ணியர் பலருங் கூடிப் புகழ்மிகு தியாக ராசர்
பண்ணிய வாடன் முற்றும் பாடுக தமிழா லென்று
மண்ணிய மணியே நேரும் வாய்மலர்ந் தருளி னாரால்"

"பொற்றுணை தழி வேய்ந்த புற்றிடங் கொண்ட பெம்மான்
நற்றுணர் மலர்மென் மூளே நாடுமென் புடைய ராய
மூற்றுணர் பெருமை சான்றோர் மொழிந்தசொற் றலைமேற் கொண்டு
சிற்றுணர் வுடைய யானுஞ் செப்பிட லுற்றேன் மாதோ"

என்னும் செய்யுட்களால் விளங்கும்.

இதன் வடநூலைப் பெறுவதற்கு இவர் முயன்றகாலத்தில் முதலிற் பதின்மூன்று பகுதிகளும் பதினான்காவது பகுதியிற் பாதியுமே கிடைத்தமையால் அவற்றைத் தமிழ்வசன நடையாகப் பெயர்த்து எழுதுவித்து அவற்றை ஆதாரமாகக் கொண்டு அக் காப்பியத்தை இயற்றத் தொடங்கினர். அப்பால் எத்தனையோ வகையாகப் பலரைக் கொண்டு முயன்றும் அந்நூலின் மற்றைப் பாகம் கிடைக்கவேயில்லை. ஆதலால் மேற்பட்டபகுதி செய்யப்பட வில்லை

இதன் திருவிருத்தத்தொகை 699. லீலைகள் முந்நூற்றறுப தென்று கேள்வியுற்றமையால் அவற்றிற்குத் தக்கபடி காப்பிய உறுப்புக்கள் விரிவாக இருக்கவேண்டுமென்று நினைந்து கடவுள்

வாழ்த்து முதலியன மிக விரிவாகவும் அலங்காரமாகவும் அன்பர்கள் விரும்பியபடி செய்யப்பெற்றன. 'மேற்பட்டுள்ள பாகம் கிடைக்கவில்லையே; இந்நூலைப் பூர்த்திசெய்யும் பாக்கியம் நமக்கில்லையே' என்ற வருத்தம் இக்கவிஞர்கோமானுக்கு ஆயுள்பரியந்தம் இருந்துவந்ததுண்டு. இந்நூலைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று யாரேனும் சொன்னால் அப்பொழுது, "ஸ்ரீ தியாகராசப் பெருமான் திருவருள் இது விஷயத்தில் எனக்கு இவ்வளவுதான்!" என்று சொல்லுவார்.

இப்புலவர் சிகாமணி இயற்றிய பெருங்காப்பியங்கள் பலவற்றுள் தியாகராசலீலையே முதலிற் செய்யத் தொடங்கியதாதலால் இவரே பாடல்களை நெடுநேரம் யோசித்துத் தனித்தனியான ஏடுகளிலெழுதிச் சிலமுறை பார்த்துத் திருத்திவந்தார். அவ்வொற்றை யேட்டிலிருந்த பாடல்களை வேறு பிரதிபிற் செவ்வனே எழுதிவந்ததன்றி இவர் அவ்வப்பொழுது சொல்லிவந்த அந் நூற் பாடல்களைப் பின்பு எழுதிவந்தவர் சி. தியாகராச செட்டியாரே. அங்ஙனம் இவர் எழுதித் திருத்திய ஒற்றையேடுகள் திரிசிரபுரத்தைச் சார்ந்த வரகனேரியிலிருந்தவரும், இவருடைய மாணாக்கர்களுள் ஒருவரும், செல்வரும், இவரை அன்புடன் ஆதரித்தவருமாகிய சவரிமுத்தா பிள்ளை யென்பவரிடமிருந்து பல வருடங்களுக்கு முன் எனக்குக் கிடைத்தன.

சில செய்யுட்கள் இயற்றப்பட்ட வரலாறுகள்.

தியாகராச செட்டியாரும் நானும் சற்றேறக்குறைய 50 வருஷத்திற்குமுன் பூவாளூருக்குப் போயிருந்தபொழுது அங்கே ஊரின் பக்கத்தில் ஓடும் பங்குனியாற்றின் தென்பாலுள்ள படித்துறை யொன்றில் பெரிதாயிருந்த கருங்கற் பாறையொன்றைக் காட்டிச் செட்டியார், "இவ்வாற்றில் ஸ்நானம் செய்துவிட்டு இப்பாறையிற் பார்த்திவபூசை செய்வதற்கு ஐயா அவர்கள் இருந்தபொழுது பத்திரபுஷ்பம் கொணர்ந்து சேர்ப்பித்துவிட்டு நான் வேறோரிடத்தில் இருந்தேன். அவர்கள் நெடுநேரம் தியானித்தவண்ணமாகப் பூசையில் இருந்தார்கள். அவர்கள் அவ்வாறு இருத்தல் வழக்கமன்றுதலால் நான் அருகிற்சென்று, 'ஐயா! நேரமாயிற்றே' என்றேன். உடனே அவர்கள், கண்ணைத்திறந்து என்னைப் பார்த்து, 'தியாகராசு, ஏட்டைக் கொண்டுவா' என்றார்கள். அப்படியே நான் கொண்டுவந்து நின்றேன். உடனே அவர்கள்,

'இந்துதவ ழித்தளிமே வெங்கடியா கப்பொருளே
வந்துவழி படலன்றி வானவர்காள் கவரமனம்
முந்துவிரே லுடன்முறிய முட்டுவமென் றுறைவனபோல்
நந்துமுயர் மணிமதின்மே னன்குறையும் விடைகள்பல'

(திருநகரப் படலம், கடுக)

என்று திருமதில் மேலுள்ள நந்திகளைப் பற்றிய கற்பனைப் பாடலைச் சொன்னார்கள்; நான் எழுதினேன்" என்றுசொல்லி இவருடைய கவித்துவமுதலிய உயர்குணங்களை எடுத்துப் பாராட்டினர். அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டேயிருந்தது. அந்நிலை இந்த நிமிஷத்தில் நினைத்தாலும் மனத்தை உருக்குகின்றது. தம்பால் வந்தவர்களிடத்தும் பாடங்கேட்பவர்களிடத்தும் மையோசிதமாக இந்நூலிலுள்ள பாடல்களைச் சொல்லி ஊக்கத்துடன் பிரசங்கிப்பதே செட்டியாருக்குப் பெருவழக்கமாக இருந்தது. இந்நூல் முழுவதும் அவருக்கு மனப்பாடம்.

பிள்ளையவர்களுடைய சரித்திர சம்பந்தமான செய்திகள் பலவற்றைச் சொன்னவரும் இவருடைய மாணாக்கர்களுள் ஒருவருமாகிய உறையூரைச் சார்ந்த திருத்தாந்தோன்றியிலிருந்த மதுரைநாயக முதலியாரென்பவரைப் பல வருடங்களுக்கு முன்பு நான்கண்டு கேட்டபொழுது இந்த லீலையின் சம்பந்தமாக அவர் அன்புடன் சொல்லிய செய்தி வருமாறு:—

"தியாகராசலீலை செய்துகொண்டிருக்கும் நாட்களுள் ஒரு நாள் சூரியோதயத்தில் திருசிரபுரத்திலிருந்து உறையூருக்குச் சிலருடன் சென்ற பிள்ளையவர்கள் இடையேயுள்ள ஒரு வாய்க்காலின் கரையிலிருந்து பற்கொம்பினால் தந்தசுத்தி செய்யத் தொடங்கினர்கள். அப்பொழுது அவர்களுடைய தலையிற் கட்டியிருந்த வஸ்திரத்திற் பல ஒற்றையேடுகளும் எழுத்தாணியும் செருகப்பட்டிருந்தன. அந்த இடம் பலர் சென்றுவரக் கூடிய சாலையின் பக்கத்திலுள்ளதாதலால் அநேகர் அவர்களைப் பார்த்துக் கொண்டே போனார்கள். பகல் பத்து நாழிகைக்கு மேற்பட்டும் தம்முடைய சரீரத்தில் வெயில் மிகுதியாகத் தாக்கியும் அவர்கள் அவ்விடம் விட்டு எழவேயில்லை; வேறு பக்கம் திரும்பவுமில்லை; தந்தசுத்தி செய்தலும் நிற்கவில்லை. காலையில் அவர்களை அங்கே பார்த்துவிட்டு உறையூர் சென்று வந்தவர்களிற் சிலர்

மீட்டும் அவர்களை அதே நிலையிற்கண்டு, 'இன்று காலை தொடங்கி இந்நேரம்வரையில் இவர்கள் தந்தசுத்தி செய்துகொண்டே யிருப் பதற்குக் காரணமென்ன?' என்று நினைந்து கவலையுற்றுத் தங் களுள் மெல்லப் பேசிக்கொண்டே அருகில்வந்து, 'உதயகால முதல் இவ்விடத்திலேயேயிருந்து பல்விளக்கிக் கொண்டிருப்பதற் குக் காரணம்என்ன?' என்று கேட்டபொழுது பிள்ளையவர்கள் திடீரென்றெழுந்து கையையும் வாயையும் சுத்திசெய்து கொண்டு தலை வஸ்திரத்திலிருந்த ஏடு எழுத்தாணிகளை யெடுத்து அந்நேரம் வரையில் யோசித்து முடித்து வைத்திருந்த சில செய்யுட்களை முடிந்த வண்ணமே எழுதிக்கொண்டு அவர்களோடு திரிசிரபுரம் வந்துவிட்டார்கள். அச் செய்யுட்கள் நைமிசப்படலத்தில் உள் ளவை."

இச்செய்தியைப் பலராற் கேள்வியுற்றே இந்த லீலையின் ஒற்றை யேடுகளைத் தாம் வாங்கிவைத்திருந்ததாக வரகனேரிச் சவரிமுத்தா பிள்ளையும் சொன்னர்.

இவற்றால் இந்நூலை இயற்றுங்காலத்துப் பிள்ளையவர்களுக்கு மனவொருமையிருந்து வந்ததென்பதும், மிக ஆராய்ந்தே ஒவ் வொரு பாடலையும் செய்தாரென்பதும் வெளியாகின்றன.

இவர் நாட்டுப் படலத்தைப் பாடிக்கொண்டு வருகையிற் சில செய்யுட்கள் பாடிமுடித்த பின்பு சில அன்பர்களும் புலவர் களும் இருக்கும்பொழுது அவற்றைப் படித்துக்காட்டினர். சோழ வள நாட்டைப் பலவிதமாகச் சிறப்பித்து இவர் பாடியிருத்தலைக் கேட்ட அக்கூட்டத்திலிருந்த பாண்டிநாட்டாரொருவர், "நீங்கள் சோழவள நாட்டை எவ்வாறு சிறப்பித்தாலும் பாண்டிவள நாட்டின் பெருமை சோழநாட்டிற்கு வாராது" என்று சொல்லிப் பல நியாயங்களைக் கூறிச் சேது புராணத்தில் திருநாட்டுச் சிறப்பி லுள்ள,

"பன்னுசீர்க் கிள்ளி நாடும் பைந்தமிழ் நாடு தேனும்
இன்னிசைத் தமிழி ஞசா னிருப்பது மலய வெற்பிற்
பொன்னிபோற் பொருநை தானும் பூம்பணை வளங்க ளீனும்
கன்னிநாட் டிதுபோன் முத்தங் காவிரி கான்றி டாதே" (60ஏ)

என்ற செய்யுளை எடுத்துச் சொன்னர்.

அவற்றைக்கேட்ட இப்புலவர்பிரான் அவர் கூறியவற்றைத் தக்க ஆதாரங்களைக்கொண்டு மறுத்துக் கூறினர். அந்த நிகழ்ச்சி

யின் நிலைவோடு மேலே நாட்டுப் படலத்தைத் தொடர்ந்து பாடுகையில்,

"பழுதி லபயன் றிருநாடு பரவு பொன்னி யுடையதென
வழுதி நாடும் பொருநையுடைத் தெனினவ் வழுதி வளநாடு
செழுநீர் நாடன் றிதுபோலச் சென்று சென்று பலநதியாய்
ஒழுகா வளங்கள் பலவாக்கும் உயர்வு முளதோ வதற்குணர்வீர்"

(திருநாட்டுப். அச)

என்னும் செய்யுளொன்றை அமைத்தார்.

பிற்காலத்தில் இவர் சேதுபுராணத்தை எங்களுக்குப் பாடஞ் சொல்லி வருகையில் மேற்காட்டிய செய்யுளுக்குப் பொருள் சொல்லும்பொழுது இவ்வரலாற்றையும் கூறினர்.

தியாகராசலீலையின் அமைப்பு.

ஸ்தல புராணங்கள் வடமொழியில் சரித்திரத்தை மட்டும் புலப்படுத்திக் கொண்டிருக்குமேயன்றி அவற்றிற் கற்பனைகள் அமைந்திரா. அவற்றை வடமொழியில் உள்ளவாறே பண்டைக் காலத்திற் பலர் தமிழில் மொழிபெயர்த்து வந்தார்கள். பின்பு சிலர் சில வேறுபாடுகளை அமைத்தார்கள். சிலர் சொல்லணி பொருளணி முதலியவற்றை மட்டும் அமைத்துப் பாடிவந்தார்கள். பின்பு சில தமிழ்க்கவிஞர் * ஸ்தல புராணங்களை, "பெருங்காப்பிய நிலை" என்னும் தண்டியலங்காரச் சூத்திரத்தின்படி காவிய இலக்கணங்களை அமைத்துப் பாடினர்கள். பெரியபுராணம், கந்த புராணம் முதலியவற்றைப் பின்பற்றி நாடுநகரச் சிறப்புக்களுடன் விரிவாகப் பழையநூற் கருத்துக்களையும் சாஸ்திரக் கருத்துக்களையும் அமைத்துப் பலர் செய்ய ஆரம்பித்தனர். அவ்வாறு செய்தவர்கள் அந்தகக்கவி வீரராகவ முதலியார், எல்லப்ப நாவலர், மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர், பரஞ்சோதி முனிவர், துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள், திருவாவடுதுறையாதீன வித்துவான் சிவஞான ஸ்வாமிகள், கச்சியப்ப ஸ்வாமிகள், திருக்குருகைப்

---

* ஸ்தல புராணங்களும் காப்பியமாக அமைக்கப்பட்டனவென்பது "தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவ னாக, முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலா முகம னன்றே, அன்னது தனதே யாகு மண்ணலே பாண்டி வேந்தாய், இந்நகர்க் கரச னாவானிக்கவிக் கிறைவ னாவான்" (திருவிளை. நகரப். கoஅ) என்பதனாற் புலப்படும்.

பெருமாள் கவிராயர் முதலியோர். அப்புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களைப் பின்பற்றிப் பெருங்காப்பிய இலக்கண அமைதிகளோடு தியாகராசலீலையைச் செய்யத் தொடங்கின பிள்ளையவர்களுக்குக் காப்பியத் தலைவராகத் 'தேவிற்சிறந்த கிண்கிணித் தாட் சிங்காதன சிந்தாமணி' ஆகிய தியாகராசப் பெருமானும், நாட்டுவளம் கூறுதற்குச் சோழவளநாடும், நகரவளம் கூறுதற்கு நிறைசெல்வத் திருவாரூரும் கிடைத்தமைபின் இவர் தமது ஆவீறு முழுவதையும் இம்முதற் காப்பியத்திலே காட்டியுள்ளார்.

இந்நூலில் இக்கவியரசர் தாம் அங்கங்கே கண்டும் கேட்டும் கற்றும் தொகுத்த பலவகைச் செய்திகளைப் பலவகை யமைப்புக்களில் இணைத்து அழகுபடுத்தியிருக்கின்றார்.

"முகத்தினுக் குரிய வங்க முழுமையு மிலாத வொன்றைத்
தகத்திரு முகமென் றுள்வார் தழைகவிக் குரிய வங்க
மகத்துவ ஞான வாய்மை மருவிலாச் சிறியேன் பாடல்
அகத்திலை யெனினு நல்ல பாடலென் றெடுத்தாள் வாரால்"

என்பது போன்றுள்ள அவையடக்கச் செய்புட்களிலேயே இவர் தமது கற்பனையைக் காட்டத் தொடங்குகின்றார்: *'உலகிற் கெட்டதைப் பெருகிற்றென்று கூறுவதைப்போல என்னுடைய கவிகள் நயமில்லாதனவாயினும் நயமுள்ளன வாகுமென்பர் பெரியார்' என †அவைக்கு அடங்கிக் கூறிய இவர்,

"ஞானமார் தருதென் ஞாரூர் நாயக னுடல் வாரி
மானமா ரதனை நாடும் வளத்தவென் பாடன் மாரி
தானமா ருணர்ச்சி மிக்க தன்மையார் மயில்க ளுளும்
ஈனமார் பொருமை மிக்க யாவருங் குயில்கண் மாதோ"

என அவையை அடக்கியும் பாடுகிறார். 'ஈனமார் பொறுமை மிக்க' பலர் செயல்களால் வந்த துன்பத்தை அநுபவித்த இவர் அச்செயல்களை நினைந்தே இச்செய்புளை இயற்றினர்போலும்!

‡இந்நூலுள் ஒரு சொல்லே பலமுறை பின்வரப் பாடிய பாடல்களும், ஒருபொருட் பெயருக்கு இயல்பாக உள்ள காரணத்

---

* தியாகராசலீலை, அவையடக்கம், ச.

† அவையடக்கம் அவைக்கு அடங்குதலென்றும், அவையை அடக்குதலென்றும் இருவகைப்படும்.

‡ பின் எடுத்துக் காட்டப்பெறும் நயங்களுள் விரிவஞ்சிச் சிலவற்றிற்கே உதாரணங்கள் காட்டப்பெற்றுள்ளன.

தோடு வேறுபல காரணங்களையும் கூறும் கவிகளும், ஒரு நிகழ்ச்சிக்கு உரிய காரணத்தைக் கூறுமல் வேறொரு காரணத்தைக் கற்பித்தமைத்தபாடல்களும், தற்குறிப்பேற்ற அணிகள் அமைந்த கவிகளும், முன்வைத்துள்ள கருத்தொன்றை வேறு ஒரு கருத்தைப் பின்வைத்து முடிக்கும் வேற்றுப் பொருள்வைப்பமைதியுள்ள செய்யுட்களும் பல; அவற்றிற் சிலேடைப்பொருளமைத்த பாடல்கள் பல:

"தலைவ ரைத்தணந் திரங்குறு தாழ்குழன் மடவார்
அலைது யர்க்கெதி ராற்றுரு தரற்றுதன் மான
நலமு டைக்கடல் பெருமுழக் கஞ்செயு * நாவாய்
பலப டைத்திடிற் பெருமுழக் கஞ்செயப் படாதோ."

(திருநாட்டுப். கசஉ.)

அகப்பொருட் செய்திகளைக் குறிக்கும் கவிகளும் இலக்கண விஷயங்களைப் பலவகையில் எடுத்தமைத்த செய்யுட்களும் பலவகை உவமைகளும் இதிற் காணப்படும். நாயன்மார்களுடைய அருமைச் செயல்களை உவமை கூறும் செய்யுட்கள் பல:

"இழிதக விறைச்சி யெச்சி லெம்பிரா னுண்ண நல்கி
அழிவில்பே ரின்பந் துய்த்த வன்பர்கண் ணப்ப ரேபோல்
இழிதக வுவர்நீ ரெச்சி லெழிலிக ளுண்ண நல்கி
அழிவிலின் சுவைய நன்னீ ரருந்திய தாழி மாதோ."

(திருநாட்டுப். உஅ.)

இயற்கைப் பொருள்களை உவமை கூறுவதும் உண்டு:

"சுரும்புசெறி கோகனக மலர்நடுவ ணறனின்றுந்
துள்ளி வீழ்ந்த
பருங்கயல்பைந் தருக்கினையிற் குருகெடுத்துத் தாதகலப்
படர்நீர் தோய்த்தல்
இருந்தைசெறி யழனடுவ ணியைத்தவிர சதக்கட்டி
யினைப்பொற் கொல்லன்
திருந்தியகைக் குறட்டெடுத்து வெப்பமற நீர்தோய்க்குந்
திறமே மானும்."

(திருநாட்டுப். எடி.)

சைவ சித்தாந்த சாஸ்திரக் கருத்துக்களை உவமையாக எடுத்தாண்ட பாடல்கள் பல:

---

* நாவாய் - கப்பல், நாவும் வாயும்; சிலேடை.

11. பிரபந்தங்களும் தியாகராசலீலையும் இயற்றல். கo௫

பலா, மா.

" சிறந்த தீஞ்சுளை யகம்புறஞ் சிறவாச்
செறிமுள் கொண்டபா கற்கனி நாளும்
சிறந்த சத்துவ மகம்புறஞ் சிறவாத்
திறத்த தாமத முடையதே நிகரும்
சிறந்த தீஞ்சுவை புறமகஞ் சுவைகொள்
சிறப்பு றாதவித் துடையமாங் கனிகள்
சிறந்த சத்துவம் புறமகஞ் சிறவாத்
திறத்த தாமத முடையமா னிகரும்."

(நைமிசப். ச.)

மடக்குவகைகளும், திரிபும், எதுகை நயங்களும், உலக வழக்குக்களும், பழமொழிகளும் அமைந்துள்ள செய்யுட்கள் பல இடங்களிற் காணப்படும்.

அங்கங்கேயுள்ள சிவஸ்துதிகள், சிறந்த கருத்துக்கள் தம்பால் அமையப்பெற்று விளங்கும்:

" வானாடு வெறுத்துநெடு மண்ணாடு குடிபுகுந்த வள்ளால் போற்றி
தேனாடு செங்கழுநீர்த் தேமாலை செறிந்தபுயத் தேவா போற்றி
ஆனாடு கொடியுயர்த்த வம்மானே கம்பிக்கா தழகா போற்றி
பானாடு பூங்கோயி லிடமேய கிண்கிணிப்பொற் பாதா போற்றி."

(முதலாவது, ௩௬.)

திருநாட்டுப் படலத்தில் ஐந்திணைகளை வருணிக்கும் பகுதியும், திணைமயக்கம் கூறும் பகுதியும், திருநகரப்படலத்திற் பொதுவர்ணனையும், புறநகர் இடைநகர் அகநகர் எனப் பிரித்துப் புனைந்து கூறுவதும், ஒவ்வொரு சாதியார்க்குமுரிய வீதிகளைக் கூறுகையில் அவரவர் இயல்புக்கேற்றபடி புனைவதும், பிறவும் சுவை நிரம்பி விளங்கும்.

" பழுதின் மாணவர்க் கிலக்கண முணர்த்துநர் பலரால்"
" படாத காப்பியப் பாடஞ்சொல் வார்களும் பலரால்"
" பாய சாத்திர பாடமோ துநர்களும் பலரால்"
" ஆகமஞ் சாற்றுநர் பலரால்" (திருநகரப். கசக-ச)
" சடையர் நீற்றொளி மேனியர் கண்மணி ததைந்த
தொடைய ரைந்தெழுத் தழுத்திடு மனத்தினர் தூய
நடையர் வாய்மையர் நற்றவர் நகுநறுங் காவி
உடையர் வாழ்திரு மடங்களும் பற்பல வுளவால்"

(திருநகரப். கசசு)

என்பன முதலிய செய்யுட்கள் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை யாதீனத்திற் கண்டு இன்புற்ற காட்சிகளை நினைந்து பாடப்பெற் றனவாகத் தோற்றுகின்றன. திருக்கோயிலை வருணிக்கும் பகுதி பலவகைக் கற்பனைகளோடு விளங்குகின்றது. பலவகை மரங் களைப்பற்றிய உவமை முதலியனவும், முனிவர்களது இயல்பும், சூதமுனிவர் பெருமையும், அவர்பால் முனிவர்கள் பணிந்து கேட்கும் பண்பும் நைமிசப் படலத்திற் காணப்படும்.

பின்பு லீலைகள் தொடங்கப்படுகின்றன. அவற்றில் நரசிங் கச் சோழனென்பவன் வேட்டைமேற் சேறலும், சங்கரசேவகச் சோழன் சிவபெருமானைப் பணிந்து வரம்பெறுதலும், தியாக ராசப் பெருமான் அரசத் திருக்கோலங் கொள்ளுதலும், அவ ரோடு வந்த சேனைகளின் சிறப்பும், அவர் மந்திரிகளுக்கு இடும் கட்டளை வகைகளும், பல நதிக்கரையிலுள்ள மறையோர்களின் பெருமையும், பலநாட்டு மன்னர்கள் சீரும், அவர்கள் நாட்டு வளங்களும், பிறவும் இனிய சொற்பொருளமைதியுடன் கூறப்படு கின்றன.

அவ்வக்காலத்திற் பிள்ளையவர்கள் தம் உள்ளத்தில் ஆராய்ந்து தொகுத்து வைத்திருந்த அரிய கருத்துக்களும் இனிய கற்பனைகளும் நிறைந்து விளங்கும் இத்தியாகராசலீலை தேனீக் கள் பல மலர்களில் உள்ள தேனைப் பலநாள் தொகுத்து அமைத்த தேனிறுலைப்போல உள்ளது. இவராற் செய்யப்பெற்ற முதற் காப்பியமாதலின் இதில் ஒரு தனியான அழகு அமைந் திருக்கின்றது. அக்காலத்திலே இவரோடு பழகிய பலர் இத் தியாகராசலீலைப் பாடல்களை அடிக்கடி அங்கங்கே எடுத்தெடுத் துப் பாராட்டி மகிழ்வதுண்டு.

பிற்காலத்திற் பிள்ளையவர்கள் திருவாவடுதுறையாதீனத்து வித்துவானாக விளங்கியபொழுது மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் பல வித்துவான்களும் செல்வர்களும் நிறைந்த சபையில் இந்நூற் செய்யுட்களைச் சொல்லச்செய்து கேட்டும்கேட் பித்தும் இன்புற்று வருவதுண்டு. ஒருமுறை அங்ஙனம் பலர் கூடியுள்ள சபையில் ஸம்ஸ்கிருத வித்துவான்கள் பலர் பல காவி யங்களிலுள்ள நயமான பகுதிகளை எடுத்துக்கூறிப் பிரசங்கஞ் செய்தார்கள். அப்பொழுது தமிழிலும் அத்தகைய சுவையுள்ள கவிகள் உண்டென்பதை அறிவிக்கக் கருதிய தேசிகரவர்கள்

11. பிரபந்தங்களும் தியாகராசலீலையும் இயற்றல். கoள

அங்கிருந்த பிள்ளையவர்களைப் பார்த்து, "தியாகராசலீலையில் நைமிசப்படலத்தில் விளாமரம் முதலியவற்றைப்பற்றித் தாங்கள் சொல்லியிருப்பதைச் சொல்லவேண்டும்" என்று கட்டளையிட, இவர் பின்வரும் மூன்று பாடல்களைச் சொல்லிக் காட்டினர்:

விளாமரம்.

"தடிசி னத்தமென் சாதுநீர் மையர்க்குத்
தன்ன மாயினும் பயன்படார் சினந்து
கொடிறு டைத்திடு கூன்கையர் கொள்ளை
கொள்ள வுள்ளன வெலாங்கொடுப் பார்போற்
படியின் மென்பற வைக்கணுத் தினையும்
பயன்ப டாதுமும் மதக்கொடுங் களிறு
கடித லத்திடக் குலைகுலைந் துள்ள
கனியெ லாமுகுத் திடும்விளப் பலவால்."

அசோக மரம்.

"அருக னுர்க்குநன் னிழல்புரி தருவென்
றறைதல் போக்கவோ வணியிழை மடவார்
பெருக வந்துதைத் திடறவிர்ந் திடவோ
பெற்ற தம்பெயர்ப் பொருட்குமா றுக
ஒருக யற்பதா கையன்கரங் கொண்டே
உலகி னுக்கனு ருறுத்தறீர்த் திடவோ
மூருக சோகமற் றவருரூச் சைவ
முனிவர் வாழிடங் குடிபுகுந் தலரும்."

தராமரம், ஏழிலைப்பாலை.

"வீர மாதவிர் நீவிர்வா ழிடம்யாம்
மேவி நீள்வரி விழிமட மார்தர்
ஆர வந்துவந் தணைப்பது தவிர்ந்தேம்
அரிய நும்மையொத் தனமென நிற்கும்
ஈர மார்குர வங்களு மவர்கட்
பிரித்த தன்மையா னுய்மைமற் றியாமும்
சார வொத்தன மாலென நிற்குந்
தழைத்த வேழிலைப் பாலையும் பலவால்."

இவற்றைக்கேட்டு அங்குள்ள வித்துவான்களும் பிறரும் மிக மகிழ்ந்தனர். அவர்களுள் ஸ்ரீ காளஹஸ்தி ஸமஸ்தானத்திலிருந்து வந்திருந்தவரும் சதாவதானம் செய்யும் ஆற்றலுடைய

வரும் ஸ்ரீ வைஷ்ணவருமாகிய வடமொழி வித்துவானொருவர் பிள்ளையவர்களது கவித்திறமையில் ஈடுபட்டு மனமுருகி உடனே இவரைப் புகழ்ந்து பொருட்பொலிவையுடைய ஐந்து சுலோகங் களை இயற்றிச் சொன்னர்.

---

12. சிவதருமோத்திரச்சுவடி பெற்ற வரலாறு.

சுந்தரம்பிள்ளையின் இயல்பு.

பிள்ளையவர்களிடம் அக்காலத்துப் படித்த மாணவர்களுள் சுந்தரம் பிள்ளையென்றவொருவர் இவரிடத்தில் மிக்க பக்தி உள்ளவ ராக இருந்தனர். இவருக்கு ஏதேனும் குறையிருக்கின்றதென்பதை அறிவாராயின் எவ்வாறேனும் முயன்று அதனைப்போக்க முற்படு வார். இவரையாரேனும் சற்றுக் குறைவாகப் பேசுவதைக் கேட் டால் அவரோடு எதிர்த்துப்பேசி அடக்கி அவரைத் தாம் செய்த தற்கு இரங்குமாறு செய்துவிடுவார். உலக அனுபவம் மிகவுடைய வர். சாதுர்யமாகப் பேசவல்லவர். இன்ன காரியத்தை இன்ன வாறு செய்யவேண்டுமென்று யோசித்து நடத்தும் யூகி. அவ ருக்குப் பல நண்பர்கள் உண்டு. அவருடைய நல்ல குணங்கள் அந்நண்பர்களை அவர் சொற்படி எந்தக் காரியத்தையும் இயற்று மாறு செய்விக்கும்.

சிவதருமோத்திரச்சுவடி பெற முயன்றது.

பிள்ளையவர்கள் ஒருசமயம் சென்னையிலுள்ள காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடமிருந்து திருத்தணிகைப் புராணத்தை வருவித்துத் தாமே பிரதி செய்துகொண்டு பொருளாராய்ந்து படித்து வருவாராயினர். அப்புராணத்தில் அகத்தியன் அருள் பெறு படலத்திற் சிலபாகத்திற்குச் செவ்வனே பொருள் புலப் படவில்லை. அதைப்பற்றி இயன்றவரையிற் பலரிடத்துச் சென்று சென்று விளவினர்; விளங்கவில்லை. பின்பு, சிவதருமோத்தர மென்னும் நூலின் உதவியால் அப்பகுதியின் பொருள் விளங்கு மென்று ஒருவரால் அறிந்தார். உடனே அந்நூல் எங்கே

கிடைக்குமென்று விசாரிக்கத் தொடங்கினர்; இன்னவிடத்தி லுள்ளதென்பதுகூடத் துலங்கவில்லை.

பின் பலவகையாக முயன்று வருகையில் அது திரிசிரபுரத்தி லுள்ள ஓர் அபிஷேகஸ்தரிடம் இருப்பதாகத் தெரியவந்தது. அவரிடம் சென்று தம்மிடம் அதனைக் கொடுத்தாற் பார்த்துக் கொண்டு சில தினங்களில் திருப்பிக் கொடுத்துவிடுவதாக இவர் பலமுறை வேண்டியும் அவர் கொடுக்கவில்லை. வேறு தக்கவர் கூலைக் கொண்டும் கேட்கச் செய்தார். அம்முயற்சியும் பயன் படவில்லை; கேட்குந்தோறும் ஏதேனும் காரணங்கூறிக் கொண்டே வந்தார்: அது பூசையிலிருக்கிறதென்றும், அதனை அப்பொழுது எடுக்கக்கூடாதென்றும், அதனுடைய பெருமை மற்றவர்களுக்குத் தெரியாதென்றும், அதிலேயுள்ள இரகசியக் கருத்துக்கள் எளிதிற் புலப்படாவென்றும் பலபடியாகச் சொல்லி விட்டார். பலமுறை கேட்கக்கேட்க அவருடைய பிடிவாதம் பலப் பட்டுவந்தது. பொருள் தருவதாகச் சொன்னுற் கொடுக்கக் கூடுமென்று நினைந்த இவர் தக்க தொகை தருவதாகவும் புத்த கத்தைச் சில தினத்தில் திருப்பிக் கொடுப்பதற்காகத் தக்க பிணை கொடுப்பதாகவும் சொல்லிப்பார்த்தார். எந்தவகையிலும் அவர் இணங்கவில்லை. இவர் தம் முயற்சி சிறிதும் பயன்படாமை கண்டு மிகவும் வருத்தமுற்றார். 'புத்தகம் எங்கேயாவது இருக்குமோ வென்று தேடியலைந்து வருத்தம் அடைந்தோம். இந்த ஊரிலேயே இருப்பதாகத் தெரிந்தும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமலிருக் கிறதே! அந்தப் பிடிவாதக்காரருடைய நெஞ்சம் இளகாதா?' என எண்ணி எண்ணி நைந்தார்.

ஒருநாள் அவ்வெண்ணத்தினுல் முகவாட்டமுற்றவராகி இருந்த இவரைப்பார்த்த மேற்கூறிய சுந்தரம்பிள்ளை இவரருகிற் சென்று வணக்கத்தோடு நின்று, "இவ்வளவு கவலைக்குக்காரணம் என்ன?" என்றனர். இவர், தாம் திருத்தணிகைப் புராணம் படித்துக்கொண்டு வருவதும் அதிலுள்ள அகத்தியன் அருள் பெறு படலத்திற்குப் பொருள் புலப்படாமலிருப்பதும் சிவதரு மோத்திரம் இருந்தால் அந்தப் பாகத்தின் பொருளை எளிதில் அறிந்துகொள்ளலாமென்று கேள்வியுற்றதும் அங்ஙகரில் உள்ள அபிஷேகஸ்தர் ஒருவரிடம் அந்நூல் இருப்பதாக அறிந்ததும் பல வகையாக முயன்றும் அதனை அவர் கொடுக்க மறுத்துவிட்டதும்

சொன்னர். சுந்தரம்பிள்ளை, "அப்பிரதி அவரிடத்தில் இருப்பது உண்மையாக இருந்தால் எப்படியும் கூடிய விரைவில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். ஐயா அவர்களுக்குச் சிறிதும் கவலைவேண்டாம்" என்று சொல்லிப்போயினர். தாம் பலவாறு முயன்றும் கிடையாத அப்புத்தகம் சுந்தரம் பிள்ளைக்கு மட்டும் எவ்வாறு கிடைக்குமென்னு மெண்ணத்துடன் இவர் இருப்பாராயினர்.

சுந்தரம்பிள்ளை செய்த தந்திரம்.

இவர் இப்படியிருக்கையில் ஒருநாள், மேற்கூறிய தேசிகருடைய வீட்டிற்கு எதிரே தக்க பிரபு ஒருவர் இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியொன்றில் வந்து இறங்கினர். முன்னர் ஒருசேவகன் ஓடிவந்து தேசிகருடைய வீட்டின் இடைகழியில் நின்று, இந்தவீடு இன்னாருடைய வீடுதானேவென்று மெல்ல விசாரித்தான். உள்ளே இருந்த ஒருவர், "ஆம்; நீர்யார்? ஏன் அவரைத் தேடுகிறீர்? வந்த காரியம் யாது?" என்றார். அவன், இன்ன பெயருள்ள ஐயா அவர்கள் உள்ளே இருக்கிறார்களா? அவர்களோடு தான் வந்த காரியத்தைச் சொல்ல வேண்டுமென்றான். அவர் விரைவாக அவனை அணுகி, "அப்பெயருள்ளவன் நானே. சொல்லவேண்டியதைச் சொல்லலாம்" என்றார்.

இவர்களிருவரும் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையில், வேறொரு சேவகன் உயர்ந்த விரிப்பொன்றைக் கொணர்ந்து அவ்வீட்டுத் திண்ணையின்மேல் விரித்தான். மற்றொருவன் திண்டைக் கொணர்ந்து சுவரிற் சார்த்தினன். முன் கூறிய பிரபு திண்ணையின்மேல் விரிக்கப்பட்ட விரிப்பில் அமர்ந்து திண்டிற் சாய்ந்த வண்ணமாகப் பெருமிதமான தோற்றத்துடன் இருந்தார். திண்ணையின் கீழே உயர்ந்த ஆடையையும் உடுப்புக்களையும் தரித்து அவற்றிற்கேற்பத் தலைச்சாத்தணிந்த வேலைக்காரர்கள் சிலர் வரிசையாகக் கைகட்டி வாய்பொத்தி அந்தப்பிரபுவின் முகத்தை நோக்கிக்கொண்டே வணக்கத்துடன் நின்றார்கள். அவர்களைக் கண்டவுடன் உள்ளே நின்று பேசிக்கொண்டிருந்த சேவகன் சடேலென்று வெளியே வந்துவிட்டான்.

இந் நிகழ்ச்சியை வந்து இடைகழியில் நின்று கண்ட தேசிகர் வாயிற்படியின் உட்புறத்தினின்று தெருப்பக்கத்தைப் பார்த்தனர். பார்த்து, 'யாரோ தக்கவரொருவர் பரிவாரங்களுடன்

வந்திருக்கின்றனர். வந்தது நம்மைப் பார்ப்பதற்கோ? வேறு யாரைப்பார்த்தற்கோ? தெரியவில்லை; எல்லாம் சீக்கிரம் தெரிய வரும். இப்போது இந்தப் பிரபுவினிடம் திடீரென்று நாம் போவது நமக்குக் கௌரவமன்று; அழைத்தாற் போவோம்' என் றெண்ணி உள்ளேசென்று ஓரிடத்திற் பலகையொன்றில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டேயிருந் தனர்.

அவர் அப்படி யிருக்கையில் முன்பு அவரோடு பேசிக்கொண் டிருந்த சேவகன் மீட்டும் மெல்ல உள்ளே சென்றான். தேசிகர் உள்ளே போயிருப்பதையறிந்து அழைக்கலாமோ, ஆகாதோ வென்னும் அச்சக் குறிப்பைப் புலப்படுத்திச் சற்றுநேரம் அடி ஓசைப்படாமல் நின்றான்; பிறகு கனைத்தான். அப்பொழுது அவர், "ஏன் நிற்கிறீர்?" என்று வினவ, அவன், "எச மானவர்கள் உங்களுடைய சமயத்தைப் பார்த்துவரச் சொன்னர் கள்" என்றான். அவர் மிக்க பரபரப்புடன் எழுந்து நின்று, "உள்ளே அழைத்து வரலாமே" என்றார். அவன், "அவர்கள் இப்போது ஆசௌசமுள்ளவர்களாக இருத்தலால் உள்ளேவரக் கூடவில்லை; திண்ணையிலேயே இருக்கிறார்கள்" என்று மெல்லச் சொன்னன்.

உடனே அவர், "நானே வந்து பார்க்கிறேன்; வருவதனற் குற்றமில்லை" என்று சொல்லிவிட்டுக் கண்டி முதலியவற்றை அணிந்துகொண்டு வெளியே வந்து பிரபுவைப் பார்த்தனர். அவர் அஞ்சலிசெய்து இருக்கும்படி குறிப்பித்தனர். தேசிகர் அப் படியே இருந்து பிரபுவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந் தனர். அப்பொழுது பிரபுவுடன் வந்த ஒருவர் பக்கத்தில் வந்து நின்றார். அவரைப் பார்த்து இரகசியமாகத் தேசிகர், "இவர் கள் யார்? எங்கே வந்தார்கள்?" என்று மெல்லக்கேட்டார். அவர், "எஜமானவர்கள் தென்னாட்டில் ஒரு ஜமீன் பரம்பரை யைச் சேர்ந்தவர்கள். தாயார் முதலியவர்களோடு சிதம்பர தரி சனத்திற்காக வந்து இவ்வூரில் இறங்கி ஜம்புநாதரையும் தாயு மானவரையும் ரங்கநாதரையும் தரிசனம் பண்ணிக்கொண்டு மூன்று நாளைக்குக் குறையாமல் இங்கே தங்க வேண்டுமென்று கண்டோன்மெண்டிலுள்ள பங்களா ஒன்றில் இருந்தார்கள். அப்படியிருக்கும்போது தாயாரவர்களுக்குச் சுரங்கண்டது. எவ்

வளவோ செலவிட்டு வைத்தியர்களைக்கொண்டு தக்க வைத்தியம் செய்தார்கள் ; ஒன்றாலுங் குணப்படவில்லை. நேற்று அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்கள். உடனே தகனம் முதலியவற்றை நடத்தினார்கள். தம்முடைய ஊரில் அவர்கள் இறந்திருந்தால் இன்னும் எவ்வளவோ மேலாகக் காரியங்களை நடத்தியிருப்பார்கள். என்ன செய்கிறது ! எல்லாம் தெய்வச் செயலல்லவோ? நம்முடைய செயலில் என்ன இருக்கிறது ! இன்று காலையிற் சஞ்சயனமும் நடந்தது. சில விவரங்களை விசாரிப்பதற்கு நினைந்து தக்கவர்கள் யாரென்று கேட்டபொழுது சிலர் உங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதனாலேதான் நேரே இங்கு விஜயம் செய்தார்கள். வேண்டிய பதார்த்தம் விலை கொடுத்தாலும் அவ்விடத்தைப் போல இங்கே அகப்படமாட்டாது. பண்ணிவைக்கக்கூடிய தக்கவர்களும் அவ்விடத்தைப் போலக் கிடைக்கமாட்டார்களென்றும் தோற்றுகிறது. எல்லாம் நேற்றுப் பார்த்துவிட்டோம். அதனாலே இன்று இராத்திரி புறப்பட்டு ஊருக்குப்போய் மேற்காரியங்களையெல்லாம் நடத்த இவர்கள் கருதுகிறார்கள் " என்றார்.

கேட்ட தேசிகர், " இந்த ஊரில் எல்லாப் பொருள்களும் கிடைக்கும் ; பணம் மட்டும் இருந்தால் எதுதான் அகப்படாது? இவ்வூரிலுள்ள தச்சர், தட்டார், பாத்திரக் கடைக்காரர் முதலிய எவ்வகையாரையும் நான் அறிவேன் ; அபரக்கிரியை செய்தற்கும் தக்க இடம் இருக்கிறது. என் கையிற் பணமட்டும் இல்லையேயன்றிச் சொன்னால் எதுவும் இந்த ஊரில் எனக்கு நடக்கும். ஒரு விதமான யோசனையும் பண்ணவேண்டாம். இவ்விடத்திலேயே செய்துவிடுவதாக நிச்சயித்துவிடச் சொல்லுங்கள் " என்று மிகவும் வற்புறுத்திக் கூறினர். கேட்ட அவர், " செலவைப் பற்றி எஜமான் சிறிதும் யோசனை பண்ணவில்லை. பதார்த்தங்களை வாங்கி வருவதற்கும் வேண்டிய பேர்கள் இருக்கிறார்கள். ஸமுகத்திற்கு ஓர் எண்ணமிருக்கிறது. சிவதருமோத்திரமென்று ஒரு புஸ்தகம் இருக்கிறதாம் ; இந்த ஸமயம் அதைப் படித்துக் கொண்டே பொழுதுபோக்க வேண்டுமென்பதுதான் அவர்கள் கருத்து. மூன்பு பிதா எஜமான் அவர்கள் சிவபதமடைந்த பொழுது கூடச் சில பெரியோர்கள் சொல்லத் தெரிந்து எங்கிருந்தோ வருவித்து அந்த நூலைத்தான் பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தார்களாம். அது கிரந்தமாக இருந்தால் உதவா

தாம்; தமிழாகவே இருக்கவேண்டுமாம்; இதற்காகவே அங்கே போகவேண்டுமாம்" என்று சொல்லிக்கொண்டே வந்தவர் பின்பு மெல்ல, "இங்கேயே இருந்து முடித்துக்கொண்டு போகலாமே யென்று சிலர் எவ்வளவோ சொல்லியும் காதிலேறவில்லை. இந்தப் புஸ்தகத்தைப் படிக்காமற்போனால் என்ன?" என்று இரகசிய மாகச் சொன்னர்.

அப்போது தேசிகர் அந்தப் பிரபுவை நோக்கி, "சிவதரு மோத்திரம் என்னிடம் தமிழிலேயே உள்ளது. வேண்டுமானால் உபயோகித்துக்கொள்ளலாம். உங்களைப் போன்ற பிரபுக்களுக் கல்லாமல் பின்னே வேறு யாருக்குத்தான் கொடுக்கப் போகி றேன்?" என்றனர்.

நின்றவர் உடனே பிரபுவின் நோக்கத்தை அறிந்து வந்து அபரக்கிரியைக்குரிய எல்லாவற்றிற்கும் ஒரு குறிப்பு எழுதித் தரும்படி அவரைக்கேட்டனர். தேசிகர் உள்ளேயிருந்து ஏடு எழுத்தாணிகளைக்கொணர்ந்து விரிவாக ஒரு குறிப்பு எழுதிக் கொடுத்தனர். "ஊரிற் செய்தால் இன்னும் அதிகச் செல வாகும்" என்று பிரபுவைச் சேர்ந்தவர் சொல்ல, "இவ்வளவு செலவு செய்பவர்களே இந்தப்பக்கத்தில் யாரிருக்கிறார்கள்?" என்று தேசிகர் சொன்னர். கேட்ட பிரபு, "நீங்களே இருந்து எல்லாவற்றையும் நடத்துவிப்பதன்றி வாங்கவேண்டியவற்றையும் உடனிருந்து வாங்கித்தர வேண்டும்" என்று சொல்லி அஞ்சலி செய்து உடனே எழுந்து சென்று வண்டியில் ஏறினர். பக்கத்தில் நின்றவர், "நான் எப்பொழுது வரவேண்டும்?" என்று கேட்கவே, தேசிகர், "கருமாதியின் ஒரு வாரத்திற்குமுன் வந்தாற் போதும்; பரிஷ்காரமாக எல்லாவற்றையும் வாங்கிவிடலாம்" என்று சொல்லி வேகமாகச் சென்று பிரபுவை நோக்கி, "கூணம் தாமலிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய்ச் சிவதருமோத்திர ஏட்டுப் பிரதியை எடுத்து வந்து அவர் கையிற் கொடுத்து, "இந்தப் புஸ்தகத்தை முன்னமே கொடா ததற்காக க்ஷமிக்கவேண்டும்; தங்களைப் போன்றவர்களுடைய பழக்கம் எனக்குப் பெரிதேயல்லாமல் இந்தப் புஸ்தகம் பெரி தன்று. குறிப்பறிந்து உபகரிக்கும் மகாப்ரபுவாகிய தங்களுக்கு என்போலியர்கள் தெரிவிக்கவேண்டியது என்ன இருக்கிறது?" என்று வண்டியைப் பிடித்துக்கொண்டே நின்று சொல்ல அந்தப்

பிரபு, "எல்லாந் தெரிந்துகொண்டோம்; அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை" என்று சொல்லி ஐந்து ரூபாயை அவரிடம் சேர்ப்பித்தார். வண்டி அதிக வேகமாகச் சென்றது. நின்றவர்கள் வண்டியின் முன்னும் பின்னுமாக ஓடினார்கள். இக் காட்சிகளையெல்லாம் பார்த்த தேசிகர் மிக்க மகிழ்ச்சியுடையவராகி வீட்டுக்குள்ளே சென்றனர்.

ஒருநாள் சுந்தரம்பிள்ளை பிள்ளையவர்களிடம் வந்து, "இது சிவதருமோத்திரம்" என்று சொல்லிப் புத்தகத்தைக் கொடுத்தனர். இவர், "இப்புத்தகம் எங்கே கிடைத்ததப்பா?" என்று மிக்க வேகமாக அதனைப் பிரித்துப் பார்த்துவிட்டு அவரை நோக்கி, "உன்னுடைய வீட்டில் என்ன விசேஷம்? வீசையை ஏன் எடுத்துவிட்டாய்? உனக்கு நேர்ந்த துக்கம் எனக்குத் தெரியாதுபோயிற்றே! ஏன் எனக்குச் சொல்லியனுப்பவில்லை?" என்று வினவினர். சுந்தரம்பிள்ளை, "அந்த விஷயத்தைப் பின்பு சொல்லுவேன். இந்தப் புஸ்தக முழுவதையும் ஒரு வாரத்திற்குள் பிரதிசெய்துகொண்டு என்னிடம் கொடுத்துவிடக்கூடுமானால் மிகவும் நலமாயிருக்கும்; பிரதிசெய்வது ஒருவருக்கும் தெரியவேண்டாம்" என்றார். இவர் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு தம்மிடம் அப்பொழுது படித்துவந்த மாணாக்கர்களிடத்தும் நண்பர்களிடத்தும் பத்துப்பத்து ஏடாகக் கொடுத்து ஒரு வாரத்துள் எழுதித்தரவேண்டுமென்று சொல்லி, எஞ்சிய ஏடுகளைத் தாம் கைக்கொண்டு எழுதுவாராயினர். ஏழு தினத்துள் புஸ்தகம் எழுதி முடிந்தது. எட்டாவது தினத்தில் ஒப்பிட்டுக்கொண்டு சுவடியைச் சுந்தரம் பிள்ளைக்கு அனுப்பிவிட்டார். அப்பால் சிவதருமோத்திரத்தைப் படித்துத் தணிகைப் புராணப் பகுதியிலுள்ள அரிய விஷயங்களை இவர் அறிந்து தெளிந்தனர்.

முன்பு சேவகவேடம் பூண்டவராகிய ஒரு நண்பரிடம் சுந்தரம்பிள்ளை சிவதருமோத்திரப் பிரதியையும் ஒரு பவுனையும் கொடுத்து அவற்றை அத்தேசிகரிடம் சேர்ப்பித்துவரும்படி சொல்லியனுப்பினர். அவர் சென்று தேசிகரைக் காணவே அவர் மகிழ்வுற்று, "வரவேண்டும், வரவேண்டும்!" என்று கூறி வரவேற்றனர். சேவக வேடம் பூண்டவர் பவுனையும் சுவடியையும் அவர் கையிற் கொடுத்துவிட்டு, "ஊரிலேயே போய்த்தான் கரு,

மாதி செய்யவேண்டுமென்று உடனிருந்த பந்துக்கள் வற்புறுத்தினர். அதனால் எல்லாரோடும் புறப்பட்டு எசமானவர்கள் ஊருக்குப் போய்விட்டார்கள். உங்களிடம் சொல்லிவிட்டுப் போகக் கூடவில்லையேயென்று அவர்கள் வருத்தமுற்றார்கள். சீக்கிரத்தில் உங்களை அவ்விடத்துக்கு வருவிப்பார்களென்று எனக்குத் தோற்றுகிறது'' என்று சொல்லி அஞ்சலிசெய்து போய்விட்டார். தேசிகர் அதனைக்கேட்டு முதலில் வருத்தமுற்றாயினும் பவன் கிடைத்ததை நினைந்து சிறிது சமாதானமடைந்தார்.

பிள்ளையவர்கள் அப்பால் வேறொருவரால் நிகழ்ந்தவற்றையெல்லாம் அறிந்து வியப்புற்றுச் சுந்தரம்பிள்ளையின் அன்புடைமையை எண்ணி மகிழ்ந்தார்.

தாம் செய்த இந்தத் தந்திரத்தைக்குறித்துப் பிள்ளையவர்கள் என்ன சொல்வார்களோவென்று அஞ்சிச் சுந்தரம்பிள்ளை சில தினங்கள் வராமலே இருந்துவிட்டார். அதுதெரிந்த இவர் வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியனுப்பினர். அப்பால் சுந்தரம்பிள்ளை வந்தார். இவர் அவரை நோக்கி, ''என்ன அப்பா! இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டபொழுது அவர், '''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்' என்னும் திருக்குறளை அனுசரித்து அடியேன் நடந்தேன். இதனால் யாருக்கும் ஒருவிதமான துன்பமும் இல்லையே. ஏதோ செய்தேன். அச்செயல் ஐயாவுக்குக் குற்றமாகத் தோற்றினும் பொறுத்துக்கொள்ள வேண்டும்'' என்று கூறினர்.

சுந்தரம்பிள்ளையின்பால் இவருக்கிருந்த அன்பு.

இதனால் மாணாக்கர்களுக்கு இவர்பால் உள்ள உண்மையான அன்பு புலப்படும். பிள்ளையவர்கள் தம்முடைய 58-ஆவது பிராயமாகிய ஆங்கிரஸ வருஷத்திற் கும்பகோணத்தில் ஒரு சபையில் நாகபட்டின புராணத்திலுள்ள சில பாடல்களுக்குப் பொருள் கூறி வருகையில் அவற்றிலுள்ள சில விஷயங்களைப்பற்றித் தியாகராச செட்டியார் ஆட்சேபித்தார்; சற்றே கடுமையாகவும் பேசினர். பேசிவிட்டு அவர் போனபொழுது அருகில் இருந்தவர்களிடம் பிள்ளையவர்கள், ''சுந்தரம்பிள்ளை உயிரோடிருந்தால் தியாகராசு இவ்வளவு கடுமையாக என்னை நோக்கிப்பேசுவானா? அவன் சும்மா விட்டுவிடுவானா?'' என்று சொன்னர். இவருடைய

மாணக்கர்களுள் ஒப்புயர்வற்ற அன்பினரென்று எல்லோராலும் கருதப்பெற்றிருக்கும் தியாகராச செட்டியாரையே தாழ்த்திச் சுந்தரம்பிள்ளையை உயர்த்துச் சொன்னரென்றால் அந்தச் சுந்தரம் பிள்ளையினுடைய குருபக்தி யாராற் சொல்லுந் தரத்தது? அவருடைய ஞாபகம் இவருக்கு அடிக்கடி உண்டாகும். அவரைப் பற்றிப் பிற்காலத்திற் பலமுறை சொல்லியிருக்கின்றனர். அவருக்கு இந்த விசேடம் அமைந்திருந்தும் ஆயுளின் குறை நேர்ந்ததைப்பற்றியும் எல்லோரும் பார்க்கக்கூடாமற் போனதைப் பற்றியும் பிற்காலத்து மாணக்கர்களுக்கெல்லாம் உண்டான வருத்தம் அதிகமே.

---

13. பங்களூர் யாத்திரை.

அருணசல முதலியார் வீடு வாங்கியளித்தது.

இவருக்குச் சொந்தவீடு இல்லாமையையும் குடிக்கூலி கொடுத்துச் சிறியதொரு வீட்டில் இருத்தலையும் அறிந்த அருணசலமுதலியாரென்பவர் இவருடைய 33-ஆம் பிராயமாகிய பிலவங்க வருஷத்தில் மஹல்கோட்டைத் தெற்கு வீதியிற் சைவத்தெருவில் தென்சிறகிலிருந்த மெத்தை வீடொன்றைத் தமது சொந்தப் பொருள்கொடுத்து இவர் பெயருக்கு வாங்கி இவரை அதில் இருக்கச்செய்து இல்வாழ்க்கை நடைபெறுதற்குரிய பண்ட வகைகளும் பொருளும் பிறவும் வேறுவேறாக அப்பொழுதப்பொழுது உதவி செய்து ஆதரித்துவந்தார். திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்களென்று உலகமெல்லாம் கொண்டாடும் வண்ணம் செய்தது இந்த அருணசல முதலியாருடைய பேருதவியே.

அந்த வீட்டில் இவர் இருந்து வழக்கம்போற் பாடஞ் சொல்லுதல் முதலியவற்றைச் செய்து வருவாராயினர். தமக்கு இத்தகைய சௌகரியங்கள் அமைந்தது திருவருட் செயலேயென நினைந்து மகிழ்ந்தார். மாணவர்களைப் பிறருடைய விருப்பத்தை எதிர்பாராமல் தங்கியிருக்கச் செய்வதற்கு அவ்விடம் தக்கதாயிருந்ததுபற்றி இவருக்குண்டான களிப்பிற்கு அளவில்லை.

ஆயினும் ஸ்ரீரங்கம் முதலிய அயலூர்களிலிருந்து அடிக்கடி நடந்துவந்தும் காலத்தில் உணவில்லாமலும் நல்ல உடையில்லாமலும் விவாகமில்லாமலும் வீடில்லாமலும் பல மாணவர்கள் வருந்தியிருந்தமையால், அவர்களுக்கு நல்ல சௌகரியங்கள் அமைய வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. அது குறித்துத் தெய்வப்பிரார்த்தனை செய்வதும் உண்டு.

அக்காலத்தில் இவரிடம் பாடங்கேட்ட மாணவர்களிற் பலர் இவர் செய்யுள் செய்யுங் காலத்தில் அவற்றை ஏட்டில் எழுதுவார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் வயலூர் வாத்தியாராகிய சுந்தரம் பிள்ளையும் சோமரசம் பேட்டை முத்துசாமி முதலியாருமாவர்.

களத்தூர் வேதகிரிமுதலியார்.

களத்தூர் வேதகிரி முதலியார் என்ற வித்துவான் ஒருவர் சென்னையிலிருந்து ஒரு சமயம் திரிசிரபுரத்திற்கு வந்தார். அவர் இயற்றமிழாசிரியர் இராமானுசகவிராயருடைய மாணாக்கர்; அக்காலத்திற் பல தமிழ் நூல்களை அச்சிட்டவர். அவர் வந்த பொழுது திரிசிரபுரத்தார் அவரை மிகவும் பாராட்டினர்கள். பிள்ளையவர்களிடத்தில் அழுக்காறுற்ற சிலர், "இவரைக் கண்டால் பிள்ளையவர்கள் அடங்கிவிடுவார்கள்" என்று நினைத்து அவரை இவரிடம் அழைத்து வந்தார்கள். அவரோடு சென்னையிலிருந்து வந்தவர்கள் சிலர் இவருடைய ஆற்றலை அறிந்துகொள்ளாமல் அயலிலிருந்து அவரை மிகச் சிறப்பிப்பாராய், "முதலியார் இலக்கண இலக்கியத்தில் அதிகப்பயிற்சியுள்ளவர். இலக்கணச் சூத்திரங்களில் ஐம்பதினாயிரம் இவருக்கு மனப்பாடமாக இருக்கின்றன" என்றார்கள். முதலியார் அவ்வளவுக்கும் உடன்பட்டவர்போன்று நகைத்துக்கொண்டிருந்தார். உடனே இவர், "அப்படியா!" என்றுவியந்து தம் பக்கத்திலிருந்த தியாகராச செட்டியாரை நோக்கி, "முதலியாரவர்கள் படித்த நூல்களிலுள்ள சூத்திரங்களின் எண்களை நூல்களின் விவரணத்துடன் கேட்டு எழுதிக் கூட்டிச்சொல்லவேண்டும்" என்றார். அவரும் அப்படியே கேட்டுவர முதலியார் மிக முயன்று சொல்லியும் சில ஆயிரங்களுக்குமேற் சூத்திரங்களின் தொகை செல்லவேயில்லை. முதலியாரைப் புகழ்ந்தவர்கள் ஒன்றும் மேலே சொல்ல இயலாதவர்களாகி விழித்தார்கள். அப்போது ஊரார் உண்

மையை நன்றாக அறிந்துகொண்டவர்களாய்ப் படாடோபத்தினாலும் பிறர் கூறும் புகழ்ச்சியினாலும் ஒருவருடைய கல்வியை அளவிடுவது பிழையென்பதை உணர்ந்துகொண்டார்கள். இவரோ ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்துவிட்டார். அப்புறம் இவரிடத்துச் சிலநேரம் பேசியிருந்துவிட்டு முதலியார் தம்மிடம் சென்றனர்.

உறையூர்ப் புராணம் இயற்றத் தொடங்கியது.

இவர் இவ்வாறு திரிசிரபுரத்தில் இருந்து வருகையில் உறையூரிலுள்ள நண்பர்களும் பிரபுக்களுமாகிய சிலர் இவரிடம், "தாங்கள் உறையூர்ப் புராணத்தைத் தமிழிற் செய்யுள்நடையிற் செய்துதரவேண்டும்" என்று விரும்பினர்கள். "தியாகராசலீலையைப் போல நாடு நகரச் சிறப்புக்களுடன் கற்பனைகள் பலவற்றை அமைத்துப் பாடவேண்டும். அந்தத் தியாகராசலீலை முற்றுப் பெறவில்லை. இப்புராணம் முழுமையும் வடமொழியில் இருப்பதால் தாங்கள் இதனைப் பாடி முடிக்கவேண்டும்" என்றார் சிலர். அவ்வாறு செய்வதற்குச் சமயம் எப்பொழுது நேரப்போகிறதென்று காத்திருந்த இவருக்கு அவர்கள் வேண்டுகோள் ஊக்கத்தை அளித்தது. வடமொழியிலுள்ள புராணத்தை வடமொழிப் பயிற்சியுள்ள தக்க வித்துவான்கள் சிலருடைய உதவியால் தமிழ் வசன நடையாக மொழி பெயர்த்து வைத்துக் கொண்டு நல்ல நாள் பார்த்துப் பாடத் தொடங்கினர்.

பங்களூர்த் தேவராசபிள்ளை பாடங்கேட்க விரும்பியது.

அக்காலத்தில் இவருடைய கீர்த்தி நெடுந்தூரம் பரவலாயிற்று. பங்களூரிலிருந்த தேவராசபிள்ளையென்னும் கனவான் சில நண்பர்களால் இவருடைய கல்வி மிகுதியையும் பாடஞ் சொல்லுந் திறமையையும் கேள்வியுற்றார். அவர் இருந்தவிடம் பங்களூர்த் தண்டு. அவர் மிகுந்த செல்வமுடையவர். அவருடைய தந்தையார் கம்பெனியாருக்கும் மைஸூர் ராஜாங்கத்தாருக்கும் பொதுவான ஒரு துபாஷ் வேலையில் இருந்தவர். தேவராச பிள்ளைக்குப் பங்களூரிற் சில பெரிய வீடுகளும் தோட்டங்களும் இருந்தன. அவர் மிக்க பொருள்வருவாயோடு கௌரவமும் வாய்ந்தவர்.

அவர் தமிழிற் சில நூல்களை ஆங்குள்ள கல்விமான்களிடத்து முறையே கற்றவர்; மேலும் பலநூல்களைக் கற்றறிய

விரும்பினர். பிள்ளையவர்களிடம் படித்தால் விரைவில் விசேஷ ஞானத்தை அடையலாமென்பது அவருக்குத் தெரியவந்தது. இவர்பால் தாமும் பாடங்கேட்கவேண்டுமென்ற ஆசையால் தமக்குப் பழக்கமுள்ள தக்கவர்களை இவரிடம் அனுப்பித் தமது கருத்தைத் தெரிவித்தனர். வந்தவர்கள் இவரைக் கண்டு தேவராச பிள்ளையினுடைய செல்வ மிகுதியையும் குண விசேடங்களையும் படித்தவர்களை ஆதரிக்கும் இயல்பையும் ஓய்வுநேரங்களில் தக்கவர்பால் தமிழ் நூல்களை அன்புடன் பாடங்கேட்டு வருதலையும் தெரிவித்ததுடன், "உங்களிடம், தாம் முன்னமே கற்ற நூல்களை ஒருமுறை மீட்டுங் கேட்டுத் தெளிந்துகொண்டு பின்பு கேளாதவற்றை முறையே பாடங் கேட்டுத் தம்மாலியன்ற சௌகரியங்களை உங்களுக்குச் செய்விக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு மிகுதியாக உண்டு. அவருக்குப் பங்களூரிலுள்ள லௌகிக வேலைகளின் மிகுதியால் இங்கே வந்து படித்தற்கு இயலவில்லை. நீங்கள் பங்களூருக்கு வந்தால், தாம் ஜாக்கிரதையாக நடந்துகொள்வதற்குத் தடையிராதென்று சொல்லி உங்களுடைய கருத்தை அறிந்து வரவேண்டுமென்று எங்களை அனுப்பினர்" என்றனர். இவர், "இங்கே படித்துக்கொண்டு உடனிருப்பவர்களை அழைத்து வரலாமோ?" என்று கேட்க, வந்தவர்கள், "எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் அழைத்து வரலாம்" என்றார்கள். விருப்பத்தோடு பாடங் கேட்பவர்களுக்குப் பாடஞ் சொல்லுதலையே விரதமாகக் கொண்டவராதலால், இவர் சிறிது யோசித்து, "அங்கு வந்தே சொல்லுவதற்கு யாதொரு தடையுமில்லை" என்று விடையளித்தனர். வந்தவர்கள் இதைக்கேட்டு மனமகிழ்ந்து பங்களூர்சென்று தேவராச பிள்ளையிடந் தெரிவிக்கவே அவர் மிகவும் ஆனந்தத்தை அடைந்தார்.

பங்களூர் சென்றது.

உடனே தேவராசபிள்ளை, "இங்கே எழுந்தருளிப் படிப்பித்து என்னை உய்விக்கவேண்டும்" என்று பிள்ளையவர்களுக்கு ஒரு கடித மூலமாக விண்ணப்பம் செய்துகொண்டனர்; பின்பு பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுத்து ஜாக்கிரதையாக இவரைப் பங்களூருக்கு அனுப்ப வேண்டுமென்று திருச்சிரபுரத்திலுள்ள தம்முடைய நண்பர்களுக்கும் எழுதினர். அவர்கள் அவ்வண்ணமே செய்தமையால் இவர் சௌகரியமாகக்

குடும்பத்துடனும், உடன்வருவதாகக் கூறிய சுப்பராய செட்டியார் முதலிய மாணாக்கர்களுடனும் பங்களூருக்குச் சென்றனர். செல்லுகையில் அந்நகருக்கு அருகில் உள்ள ஸ்ரீ மடவாளீசுவரமென்னும் சிவஸ்தலத்தில் இவர் தங்கினர். சீதோஷ்ண நிலையின் வேறுபாட்டால் இவருக்கு அங்கே சுரநோய் கண்டது. இவர் வந்திருத்தலையும் சுரத்தால் வருந்துதலையும் தேவராசபிள்ளை அறிந்து அங்கே சென்று எல்லோரையும் பங்களூருக்கு அழைத்து வந்து தக்க வைத்தியர்களைக் கொண்டு மருந்து கொடுப்பித்தனர். சிலநாளில் இவருக்கிருந்த சுரநோய் நீங்கியது.

தேவராசபிள்ளை இவருக்குத் தனியே ஒரு வீட்டை அமைத்துச் சொன்னவற்றைக் கவனித்துச் செய்தற்குரிய வேலைக்காரர்களை நியமித்து உடன்வந்தவர்களுக்கும் இவருக்கும் வேண்டிய எல்லாவித சௌகரியங்களையும் செய்வித்தனர். அவருடைய அன்புடைமையையும் வள்ளன்மையையும் கண்ட பிள்ளையவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பங்களூருக்கு இவர் வந்தகாலம் இவருடைய 35-ஆம் பிராயமாகிய ஸௌமியவருஷம்.

தேவராசபிள்ளை பாடங்கேட்டது.

தேவராசபிள்ளை நல்லதினம் பார்த்துப் பாடங்கேட்க ஆரம்பித்தார். முன்பே தாம் படித்திருந்த நூல்களிலுள்ள ஐயங்களை வினவி முதலில்தெளிந்துகொண்டார். பின்பு திருவிளையாடல் முதலிய காப்பியங்களையும் நன்னூல் முதலிய இலக்கணங்களையும் முறையே கற்றுச் சிந்தித்து வருவாராயினர். இம்முறையில் ஐந்திலக்கணங்களையும் பல காப்பியங்களையும் கற்றனர். ஐந்திலக்கணங்களையும் அவர் கற்றமையை அவர் இயற்றிய,

"சிவபரஞ் சுடரி னிணையடி மலரைத்
திரிகர ணத்தினும் வழாது
பவமறத் தினமும் வழிபடு குணனன்
பகர்திரி சிரபுரத் தலைவன்
சிவமுறு தென்சொ லைந்திலக் கணத்திற்
றெளிவுறச் சிறியனேற் கருளும்
நவமுறு புகழ்மீ னுட்சிசுந் தரவே
ணண்மல ரடிமுடி புனைவாம்"

என்னும் துதிச்செய்யுளாலும் உணரலாம்.

சிவஞானமுனிவருடைய தவசிப் பிள்ளையைக் கண்டது.

பிள்ளையவர்கள் வந்து இருத்தலே யறிந்து அப்பக்கத்தில் தமிழ்பயில்வோர்கள் சிலர், 'நாம் முறையே கற்றுக்கொள்வ தற்கு இதுதான் சமயம்' என்றெண்ணித் தாம் கற்றுக்கொள்ள வேண்டிய நூல்களை இவருக்குள்ள ஒய்வுநேரங்களில் வந்து பாடங் கேட்பாராயினர். தமிழ்ப்பண்டிதர்களும் அப்படியே அடிக்கடி வந்து சல்லாபஞ்செய்து தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டு சென்றனர். அவர்களோடு பேசிக்கொண் டிருக்கையில் இவர், "இவ்வூரில் தமிழ்படித்தவர்கள் யார் யார் இருந்தார்கள்?" என்று விசாரித்தபொழுது அவர்கள் சிலரைக் குறிப்பிட்டதன்றி, "திருவாவடுதுறை யாதீன வித்துவான் சிவ ஞான முனிவரிடம் தவசிப் பிள்ளையாக இருந்தவர் இப்போது முதியவராக இங்கே இருக்கிறார்" என்று தெரிவித்தார்கள்.

உடனே இவர் கையுறைகளுடன் சென்று அவரைப்பார்த்து, சிவஞான முனிவருடைய உருவ அமைப்பு, அவருடைய இயற்கைகள், அவருக்கு உவப்பான உணவுகள், அவருடைய பொழுது போக்கு, உடனிருந்தவர்களின் வரலாறு, கச்சியப்பமுனி வர் வரலாறு, பிற சரித்திரங்கள் முதலியவற்றைப்பற்றிய செய்தி களைத் தெரிந்துகொண்டார். தாம் அவ்வூரில் இருந்தவரையில் அவருக்கு வேண்டிய பொருள்களை அனுப்பிவந்தார். இவர் பிற் காலத்தில், அவரைச் சந்தித்ததைப்பற்றிச் சொல்லியபொழுது தாம் அறிந்துகொண்டனவாக அறிவித்த செய்திகள் வருமாறு:

"சிவஞான முனிவர் காஞ்சிபுரத்தின் ஒருபாலுள்ள திருவா வடுதுறை மடத்தில் இருந்துவந்தார். அந்த மடத்தில் மெய்கண்ட தேவருடைய கோயில் இருந்தது. அவ்வூரிலிருந்த செங்குந் தர்கள் தினத்திற்கு ஒரு வீடாக முறைவைத்துக்கொண்டு உணவுப் பண்டங்கள் கொடுத்து அவரை ஆதரித்து வந்தார்கள். அங்கே இருக்கையில் காஞ்சிப்புராணம், சிவஞானபோத பாஷியம் முத லியவற்றை இயற்றினர். தம்மை ஆதரித்துவந்த செங்குந்தர்க ளுக்குப் பஞ்சாட்சர உபதேசமும் தீட்சையும் செய்வித்துப் பூசை யும் எழுந்தருளுவித்தார். ஒருமுறை சென்னைக்குச் சென்றிருந்த பொழுது அங்கே உள்ள கனவான்களிற் பலர் அவரை ஆதரித்து உபசரித்தனர். சில காரணம் பற்றி அவர் வேறு ஒன்றும்

உண்ணுமல், 'இப்பொழுது ஒருமண்டலம் விரதம் அநுஷ்டிக்க வேண்டியவனாக இருக்கிறேன்' என்று சொல்லிப் பாலும் பழமுமே உண்டு வந்தார்."

இந்தச் செய்திகளைத் தமக்குச் சொன்ன தவசிப்பிள்ளைக்கு அப்போது பிராயம் 90 இருக்குமென்று பிள்ளையவர்கள் கூறியதுண்டு.

உறையூர்ப்புராணம் பாடிவந்தது.

இவர் பங்களூருக்கு வருகையில் உறையூர்ப் புராணத் தமிழ் வசனத்தைக் கையில் எடுத்து வந்திருந்தனர். ஓய்வுநேரங்களில் மெல்ல மெல்ல யோசித்து அதனைச் செய்புளாகப் பாடிவந்தனர். யாதொரு கவலையும் இல்லாத காலத்தில் அப்புராணம் பாடப் பெற்றமையால் அதற்கும் பிற்காலத்திலே பாடியவற்றிற்கும் வேறுபாடுகள் காணப்படும்.

பிற்காலத்தில் ஒரு சமயம் இவர் இயற்றிய அம்பர்ப் புராணத்திற் சில பகுதிகளைக் கேட்டு வந்த தியாகராச செட்டியார், "பாலியத்திற் செய்த உறையூர்ப் புராணத்தைப் போல இப் புராணம் யோசித்துச் செய்யப்படவில்லை. அம்மாதிரி செய்தால் மிக நன்றாகவிருக்கும்" என்றபொழுது இவர், "அவ்வாறு அந் நூல் அமைந்ததற்குக் காரணம் வல்லூர்த் தேவராச பிள்ளையின் பேருபகாரந்தான். அவ்வாறு யாரேனும் என்னைக் கவலையில்லா மல் ஆதரித்து வைத்திருந்தால் இன்னும் எவ்வளவோ செய் வேனே!" என்று விடையளித்தார்.

குசேலோபாக்கியானம் இயற்றியது.

இவரிடம் பாடங் கேட்டுவந்த தேவராசபிள்ளை இவர் உறை யூர்ப் புராணச் செய்யுட்களைப் பாடிவரும் சில சமயங்களில் உட னிருப்பதுண்டு. யாப்பிலக்கணத்தைப் படித்ததனாலும் இவர் பாடிவருவதைக் கண்டதனாலும் அவருக்குத் தாமும் பாடவேண்டு மென்னும் அவா உண்டாயிற்று. சில தனிப்பாடல்களைப் பாடி இவரிடம் காட்டித் திருத்திக்கொண்டார். பின்பு தெலுங்கு பாஷையில் வழங்கிவந்த குசேலோபாக்கியானத்தை மொழி பெயர்த்துச் செய்யுள் நடையில் இயற்றவேண்டுமென்று நினைத் தார். அதனைத் தெலுங்கிலிருந்து தமிழ் வசன நடையிற் பெயர்த்து வைத்துக்கொண்டு ஆரம்பித்தார். நூலொன்றைத் தொடர்ந்து

பாடிக்கொண்டு போகும் ஆற்றல் அவருக்கு அப்போது இல்லாமையால் சில பாடல்களைப் பாடுவதற்குள் அவருடைய ஊக்கம் தளர்ந்துவிட்டது; தேகமும் மெலிந்து விட்டது.

அவர் அவ்வாறு குசேலோபாக்கியானத்தைப் பாடி வருவதையும் அதனைச் செய்வதனால் வருந்துவதையும் சிலராலறிந்த பிள்ளையவர்கள் அவரைக் கண்டபொழுது, "உங்களுக்குக் குசேலோபாக்கியானத்தைச் செய்யுளுருவத்திற் பார்க்க எண்ணமிருந்தால் ஒய்வு நேரங்களிற் பாடி முடித்துவிடுகிறேன். நன்றாகப் பாடுதற்குப் பழகிக்கொண்டு பின்பு ஏதேனும் நூல் இயற்றலாம். இப்போது இதனை இம்மட்டோடே நிறுத்திவிட்டுக் கவலையின்றி இருங்கள்" என்று சொன்னர். ஆசிரியருடைய வார்த்தையை மறுத்தற்கஞ்சி அவர் அம் முயற்சியை நிறுத்திவிட்டார்.

ஆனாலும் அந்த நூல் செய்யப்படவில்லையே யென்ற குறை அவருக்கிருந்ததைக் குறிப்பாலறிந்த இக் கவிஞர்கோமான் அவர் பாடியிருந்த செய்யுட்களைத் திருத்தி அவருக்குக் காட்டிவிட்டு மேலே உள்ள பாகத்தை அவர் முன்பாகவே நாளொன்றுக்கு ஐம்பது செய்யுட்களுக்குக் குறையாமற் பாடிக்கொண்டே வந்து சில தினங்களில் முடித்தனர். இவர் பாடுங் காலத்தில் யாதொரு வருத்தமுமின்றிப் பாடுவதையும் வந்தவர்களோடு இடையிடையே பேசிக்கொண்டிருப்பதையும் அதனாற் பாடுதலுக்குச் சிறிதும் இடையூறில்லாமையையும் நேரே அறிந்த தேவராச பிள்ளை மிகவும் வியப்புடையவராகி, "ஐயா! நீங்கள் தெய்வப் பிறப்போ! சாதாரண மனிதராக உங்களை நினைக்கவில்லை. சில பாடல்கள் செய்வதற்குள்ளே நான் பட்டபாடு தெய்வத்திற்கும் எனக்குமே தெரியும். இனிமேல் நான் உங்களிடத்தில் விசேஷ மரியாதையோடு நடப்பேன். இப்பொழுதுதான் உங்களுடைய பெருமை எனக்குத் தெரியவந்தது. ஒரு பாட்டையாவது நீங்கள் திரும்பத் திருத்தச் சொல்லவில்லையே. நீங்கள் இவ்வளவையும் மனத்திலே யோசித்து முடித்துக்கொள்கிறீர்களே! ஒருபாட்டெழுதுவதற்குள் நான் கிழித்த காகிதங்கள் எவ்வளவோ இருக்கும்!" என்று சொல்லிச் சொல்லி ஆனந்தமுறுவாராயினர்.

குசேலோபாக்கியானம் எளிய நடையில் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற நூல்களில் உள்ளவற்றைப்போல நாட்டுச் சிறப்பு நகரச்சிறப்பு முதலியன இதன்கண் விரிவாக இல்லை.

சம்பாஷணைகளாக உள்ள பகுதிகள் மிக்க விரிவாகவும் வாசிப்பவர்களுக்கு மேன்மேலும் படிக்கவேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டுபண்ணுவனவாகவும் இருக்கின்றன. குசேலரது இல்வாழ்க்கைத்தன்மையும், அவருடைய வறுமைநிலையும், அவருடைய மக்கள்படும் பசித்துன்பமும், பொருளுடையார் இயல்பும், முயற்சியின்பெருமையும், குசேலர் மிக வருந்தித் துவாரகைசென்று சேர்வதும், அங்கே கண்ணபிரானது அரண்மனையின் வாயில் காவலர் அவரைக்கண்டு இகழ்ந்து கூறுவதும், துவாரபாலகருள் ஒருவர் உண்மை ஞானியரது தன்மையைக் கூறுதலும், குசேலர் உள்ளே சென்றவுடன் கண்ணபிரான் அவரை உபசரித்தலும், அவர் கொணர்ந்திருந்த அவலை உண்டலும், அவலை ஒரு பிடிக்குமேல் உண்ணுமல் உருக்குமிணிப்பிராட்டி தடுத்ததும், குசேலர் வெறுங்கையோடு அனுப்பப்பட்டபோது பலமகளிர் பலவிதமாகக் கூறுதலும், கண்ணன் பொருளொன்றுங்கொடாமல்வறிதே தம்மை அனுப்பியது நன்மையே என்று குசேலர் எண்ணித் திருப்தியுறலும், அவர் தம் ஊர்வந்து சேர்ந்து கண்ணன் திருவருளால் உண்டாகிய செல்வமிகுதியைக் காண்டலும், பிறவும் இனிய நடையில அமைக்கப்பட்டுள்ளன. உலகியல்புகள் பல அங்கங்கே விளக்கப்பட்டிருக்கின்றன. நகைச்சுவையையுடைய செய்யுட்கள் பல இதன்கண் உண்டு. இறுதியிற் குசேலர் திருமாலைத் தோத்திரம் செய்வதாக உள்ள பகுதியிற் பத்து அவதாரமூர்த்திகளுடைய பெருமைகளும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் இராமாவதாரம், கிருஷ்ணவதார மென்பவற்றைப்பற்றிய சரித்திரங்கள் சில செய்யுட்களிற் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. இந்நூலிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :

இரத்தலின் இழிவு.

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்."

குசேலருடைய மக்கள் உணவு முதலியவற்றை விரும்பிப் படும்பாடும் தாயின் துயரமும்.

"ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைநீட்டு
முந்தி மேல்வீழ்ந்

திருமகவுங் கைநீட்டு மும்மகவுங் கைநீட்டு
மென்செய் வாளாற்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற் றொருமகவு
புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங் ஙனஞ்சகிப்பாள்
பெரிதும் பாவம்.''

''அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென
அழுமா லோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன் ஞயெனப்பொய்
செப்பு மோர்சேய்
மூந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ தினிலொருசேய்
மூடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச் சிந்துதற்கு
நயக்கு மோர்சேய்.''

''அடுத்தமனைச் சிறுஞெருவ னின்றுநும தகங்கறியென்
னட்டா ரென்று
தொடுத்துவிஞ யினஞலைச் சொற்பொருள்யா ததுதானைச்
சுவைத்தன் ஞய்நீ
எடுத்துரையென் றிமெழவுக் குரைப்பினது செய்யெனிலென்
செய்வா மென்று
மடுத்தவஃ தறிந்திலே னெனமற்றொன் றுரைத்ததனை
மறக்கச் செய்வாள்.''

''குண்டலமோ திரங்கடகஞ் சுட்டியயன் மனையார்தங்
குழவிக் கிட்டார்
புண்டரிகக் கண்ணன்னே யெனக்குநீ யிடாதிருக்கும்
பொருமை யென்னே
கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக் கில்லாதான்
கடன்றந் தானுக்
கெண்டபச்சொல் வார்த்தையென நாலைக்கு நாலைக்கென்
றியம்பிச் சோர்வாள்.''

செல்வத்தின் இழிவு.

''கோடிபொன் னளிப்ப னின்றே கோடிரோர் மாத்தி ரைக்குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தை யுரைத்தடை குவனென் றுலும்
தேடிய கால தூதர் சிமிழ்த்தல்விட் டொழிவ ரேகொல்
வாடிய மருங்கு னங்காய் மாண்பொருட் பயன்கண் டாயோ.''

வாயில் காவலர் துசேலரை அவமதித்துக் கூறல்.”

“வகுத்தபல் லுலகும் போற்ற மாற்றலர் கூற்றூர் மேவச்
செகுத்தர சாளுங் கண்ணச் செம்மலெங் கேநீ யெங்கே
இகுத்தபல் துவாரக் கந்தை யேழைப்பார்ப் பானே சற்றும்
பகுத்தறிந் திடலற் றுய்கொல் பயனின்மூப் படைந்தாய் போலும்.

“சிவிகைமுன் னூர்தி வேண்டுஞ் செழும்பொருட் செலவு வேண்டும்
குவிகையே வலரும் வேண்டுங் கோலமார்ந் திருக்க வேண்டும்
கவிகைதாங் குரும் வேண்டுங் கையுறை சிறப்ப வேண்டும்
அவிகையில் விளக்கம் வேண்டு மரசவை குறுகு வார்க்கே.”

அப்போது துசேலர் எண்ணுதல்.

“மின்செய்த மதாணி யாமுத் தாரமாம் விளங்கு பட்டாம்
பொன்செய்த வூர்தி யாகிப் போதியாம் பெறுவ தெங்கே
நன்செய னம்மூ தாதை நானினுங் கேட்ட தின்றுல்
என்செய்வா மெண்ணு தொன்றை யியற்றுத லென்றுந் தீதே.”

கண்ணபிரான் அவலை உண்டல்.

“முன்னுமிவ் வவலொன் றேனு முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றுகும் பட்டவங் கையும ணக்கும்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம குளமும் வேண் டுவதின் றென்னு
உன்னுபல் லுலகு முண்டோ வொருபிடி யவற்கின் றுனே.”

மகளிர் கூற்று.

“எளியோன் பாவ மித்தனை தூர மேன்வந்தான்
அளியார் தேனே பாலே யெனவினி தாப்பேசிக்
களியா நின்றோர் காசும் மீயான் கழிகென்றுன்
தெளியார் நல்லோ ரிவனுரை யென்றூர் சிலமாதர்.”

சூத சங்கிதை இயற்றியது.

தேவராசபிள்ளையினுடைய அவலையறிந்தபிள்ளையவர்கள் அவ்வப்பொழுது செய்யுள் செய்யும் முறைகளையும் கருத்தை அமைக்கும் வழிகளையும் அவருக்குக்கற்பித்து வந்தனர். அவ்வாறு இவர் கற்பித்தமையால் தேவராச பிள்ளைக்கு ஊக்கமுண்டாயிற்று. நண்பர்கள் சிலருடைய தூண்டுதலினால் சூதசங்கிதையைத் தமிழில் வசன நடையாக மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு செய்யுள் நடையாக இயற்றத் தொடங்கினர். அதுவும் சுசேலோபாக்கியானத்தின் செய்தியாகவே முடிந்தது. அதனால், பெரிய நூலாகிய

அதனை நிறைவேற்றுவது அசாத்தியமென்று நினைத்து அதுவரையில் தாம் இயற்றியிருந்த பாடல்களைக் கிழித்தெறிந்துவிட்டார். ஆனாலும் செய்யக் கூடவில்லையே என்ற குறை அவருடன் போராடிக் கொண்டிருந்தது. அதனைக் கேள்வியுற்ற பிள்ளையவர்கள் அவரிடம் வலிந்து சென்று, "நீங்கள் இதுவிஷயத்திற் சிரமம் வைத்துக்கொள்ள வேண்டாம். இந்த அருமையான வேலையை என்னிடம் ஒப்பித்துவிடுங்கள். உங்கள் முன்னிலையிலேயே செய்து முடித்துப் பின்பு திரிசிரபுரம் செல்லுவேன்" என்று சொல்லி அவரிடம் இருந்த மொழிபெயர்ப்புவசனத்தைத் தாம் வாங்கி வைத்துக்கொண்டு பாட ஆரம்பித்துச் சில மாதங்களிற் செய்து முடித்தார்.

சூதசங்கிதையென்பது ஸ்காந்த புராணத்திலுள்ள ஆறு சங்கிதைகளில் ஒன்று. சிவமான்மிய காண்டம், ஞானயோக காண்டம், முக்தி காண்டம், எக்கியவைபவ காண்டமென்னும் நான்கு பிரிவுகளை உடையது; சிவபெருமானுடைய பலவகைப் பெருமைகளையும், பல தலவரலாறுகளையும், தீர்த்த வரலாறுகளையும், பல உபநிஷத்துக்களின் கருத்தையும் விளக்கிக் கூறுவது. சிவபிரான் புகழைப் பாடிப்பாடிச் சுவைகண்ட பிள்ளையவர்களுடைய அன்புப் பெருக்கு, சூதசங்கிதையில் நன்கு வெளிப்படும். தலவரலாறுகளைக் கூறுவதிலும், அவற்றைப் பலவகையாகச் செய்யுட்களிற் பொருத்தி அணி செய்வதிலும் இவருக்கு விருப்பம் அதிகம். ஆதலின் இந்நூலில் தலவரலாறுகள் கூறப்படும் இடங்களில் அத்தலப் பெயர்களைத் திரிபிலமைத்தல், அத்தலவிசேடங்களைச் சுருக்கி ஒரு செய்யுளிற் கூறல், அத் தலப்பெயர்க்கு ஏற்ற சந்தத்தை எடுத்தாளல் முதலியன காணப்படும். வஞ்சித் துறைபோன்ற சிறிய பாட்டுக்களில் வரலாறுகளை விரைவாகக் கூறிக்கொண்டு போகும் இடங்கள் சில இதில் உண்டு. இந்நூலிலிருந்து சில பாடல்கள் வருமாறு:

மாங்கனியைத் தரும்த உதிர்த்தல்.

"ஒற்றைமாங் கனிமெய் யடியவர்க் குதவி
யும்பர்க்கு மரியநன் கதியை
உற்றசி ரம்மை யார்தொழி னன்றென்
றுவந்தெனப் பன்முசுக் கலைகள்

சொற்றவவ் வனத்திற் செற்றதே மாவிற்
றூங்கிய தேங்கனி பலவும்
நற்றவச் சைவர் பெரியவர் கொள்ள
நாடொறு நாடொறு முதிர்க்கும்."

(புராண வரலாறு, எ.)

நாகங்கள்.

"பொறிய டக்கமும் போகுகா லின்மையும் பொருந்தி
நெறியின் * வந்ததே யுண்டுகந் தரந்தொறு நிலவும்
குறிகொள் யோகியர் தங்நிகர்த் தாரெனக் குறித்துச்
செறியு மாமணிப் புறவிளக் கிடுஞ்செழும் பணிகள்."

(ஞானயோகத்தை யுணர்ந்தவா றுரைத்தது, உ0.)

வாரணவாசி (காசி.)

"சேரணவா சிரியனருள் வழிநின்று செறிசென்ம
காரணவா சிரியவிரித் தருண்மேவுங் கருத்தினலுய்த்
தோரணவா சிகைமலியுஞ் சுடர்வீதி நெடுமோட
வாரணவா சியையடைந்து மாண்கங்கைத் துறைமூழ்கி."

மடக்கு.

"மூவருக்கு மிலையான்றீ முயற்சியினு மிலையான்வெம்
பாவவினைத் திறமொழியான் படிறுகுடி கொளுமொழியான்
ஓவின்மறை யொழுக்கொருவி யுறுபொருள்கண் மிக்கீட்டி
யேவிகக்கு நெடுங்கண்விலே யேழையரில் லகத்திறுப்பான்."

(அடியார் பூசாவிதியு மவரைப்
போற்றினோர் பேறு முரைத்தது, கக, உஎ.)

துதி.

"மூவா முதலே முடியா முடிவே முக்கண்ணு
தேவா தேவர்க் கிறையே கறையேய் சீகண்டா
கோவா மணியே முத்தே யமுத குணக்குன்றே
ஆவா வடியே னுற்றே னுடையா யருளாயோ."

(ஞானி பணிவிடைப் பேறு சொற்றது, ஙூ.)

பங்களூரில் இருந்தபொழுது இவர், தம்முடன் வந்திருந்த தம் மாணவராகிய சோடசாவதானம் சுப்பராய செட்டி

---

* வந்ததே - காற்றையே, கிடைத்ததையே; சிலேடை.

யாரைக் கொண்டு தமிழருமையறிந்த சில பிரபுக்களின் முன்னிலையில் சிலமுறை அவதானம் செய்வித்துத் தக்க பொருளுதவி பெறச் செய்வித்தனர்.

திரிசிரபுரம் மீண்டது.

அப்பால் பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திற்கு வரவேண்டிய இன்றியமையாத காரியம் இருந்தபடியால் ஊர்செல்ல வேண்டுமென்று தேவராச பிள்ளைக்குக் குறிப்பித்தனர். அது விஷயத்திற் சிறிதும் உடன்பாடில்லாத அவர் பிறகு ஒருவாறு உடன்பட்டு ரூபாய் ஐயாயிரமும் உயர்ந்த பீதாம்பரம் முதலியவைகளும் இவர் முன்னே வைத்துச் சாஷ்டாங்கமாக வந்தனம் செய்து, "இவற்றை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் ஐயா அவர்கள் விஷயத்தில் கடப்பாடுடையேன்; நான் அவ்விடத்திற்கு அடிமை" என்று தம்முடைய பணிவைப் புலப்படுத்தி மிகவும் வேண்டினர். அதுவரையில் அத்தகைய தொகையைக் காணுதவராதலால் அதனை மிகுதியென்று இவர் எண்ணி அடைந்த வியப்பிற்கு அளவில்லை. தேவராச பிள்ளையினுடைய அன்புடைமையை நோக்கிய பொழுது கைம்மாறு கருதாமற் பாடஞ்சொல்லும் இயல்பினராகிய பிள்ளையவர்களுக்கு, 'இவருக்கு நாம் யாது செய்வோம்?' என்ற எண்ணம் உண்டானமையால் அவரை நோக்கி, "உங்களுடைய அன்பிற்கு நான் வேறு என்ன செய்யப் போகிறேன்? இங்கே நான் வந்தபின்பு உங்கள் உபகாரத்தால் முற்றுப்பெற்ற குசேலோபாக்கியானம், சூதசங்கிதை யென்னும் இரண்டையும் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். உங்கள் பெயராலேயே இவற்றை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டுக் கொள்ளுங்கள். அங்ஙனம் செய்தால்தான் எனக்குத் திருப்தியாகவிருக்கும். தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகளிற் கவிகள் தாம்செய்த நூல்களை இவ்வாறு தங்களை ஆதரித்த பிரபுக்களின் பெயராலே வெளியிடுவது பழைய வழக்கந்தான். இதைப்பற்றித் தாங்கள் சிறிதும் யோசிக்கவேண்டாம். இல்லையாயின் நான் மிக்க குறையுடையவனாவேன். என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்" என்று இரண்டு புத்தகங்களையும் அவர் கையிற் கொடுத்தார். அவர் ஒன்றும் விடைசொல்லத் தெரியாமல் பிரமித்து நின்றார். அவருக்கு அவற்றைத் தாம் பெற்றுக்கொள்வதில் விருப்பம் இல்லை; அஞ்சினர். பக்கத்தில்

இருந்தவர்கள் இவருடைய குறிப்பையறிந்து அதை வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்திப் பின்பு அவர்பொருட்டுத் தாங்களே வாங்கி வைத்துக் கொண்டனர்.

புறப்படுகையில் வேறு சில பிரபுக்களும் இவருக்குப் பொருளுதவிசெய்தனர். அப்பால் பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் தேவராச பிள்ளையாற் செய்விக்கப் பெற்றன. இவர் மாணாக்கர்களுடன் ஸௌக்கியமாகத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தனர்.

பின்பு * அந்நூல்கள் தேவராச பிள்ளையைச்சார்ந்தவர்களால் அச்சிடப் பெற்றன. அச்சிடுவதற்கு முன் அச்செய்தி சிலரால் இவருக்குத் தெரிய வந்தது. இவர் தாமே சிறப்புப் பாயிரம் பாடிக் கொடுத்ததன்றித் தம் மாணவர்களையும் நண்பர்களையும் பாடிக் கொடுக்கச்செய்தனர். அந்நூல்களிரண்டும் அச்சிடப்பெற்றுத் தேவராச பிள்ளையின் பெயராலேயே உலாவி வரலாயின.

தேவராச பிள்ளை அடிக்கடி பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதி வருவார் ஒவ்வொரு கடிதத்தின் தலைப்பிலும் குருஸ்துதியாக ஒரு செய்யுள் எழுதுவதுண்டு. அவ்வாறு எழுதியவற்றுள் இரண்டு குருவணக்கமாகச் சூதசங்கிதையிற் சேர்க்கப்பட்டன. அவர் பின்பு செய்யுள் செய்யும் பயிற்சியை விருத்தி செய்து கொண்டு பல பிரபந்தங்களை இயற்றினர். அவற்றை அப்பொழுதப்பொழுது இவருக்கு அனுப்புவார். இவர் அவற்றைச்செப்பஞ் செய்து சிறப்புப்பாயிரம் பாடி அனுப்புவார். அவை அச்சுப் பிரதிகளிற் காணப்படும்.

---

* சுசேலோபாக்யானம் பதிப்பிக்கப்பட்ட காலம் சாதாரண வருஷம் சித்திரை மாதம்; சூதசங்கிதை பதிப்பிக்கப்பட்ட காலம் இராக்ஷஸ வருஷம் கார்த்திகை மாதம்.

14. உறையூர்ப் புராண அரங்கேற்றமும் பல பிரபந்தங்களை இயற்றலும்.

பங்களூரில் மிகுந்த கௌரவமடைந்து வந்த செய்தியைக் கேட்டுத் திரிசிரபுர வாசிகளிற் சிலர் இவரிடம் வந்து, "உங்களுடைய கல்விப் பெருமையையும் மற்றைப் பெருமைகளையும் நாங்கள் அறிந்துகொள்ளாமற் போய்விட்டோம். அடிக்கடி பங்களூரிலிருந்து வருபவர்களால் உங்களுக்கு அங்கே நடந்த சிறப்புக்களையெல்லாம் அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தோம். உங்களால் எங்களுக்கும் இந்த நகரத்திற்கும் உண்டான கௌரவம் அதிகமே. ஆனல் முன்னமே நாங்கள் உங்களுடைய பெருமையை உள்ளபடி அறிந்துகொண்டு நாங்கள் செய்யவேண்டிய கடமைகளை நன்முகச் செய்யாமலிருந்து விட்டோம். இனிமேல் நாங்கள் தவறமாட்டோம்" என்றார்கள். "எல்லாவற்றிற்கும் தாயான செல்வத்தின் திருவருளும் உங்களுடைய அன்புடைமையுமே காரணம்; வேறே எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?" என்று பணிவுடன் இவர் விடை கூறினர். இங்ஙனமே சந்தோஷம் விசாரிப்பவர்களுக்கெல்லாம் விடை கூறிவந்தார்.

அப்பால் திரிசிராமலை திருவானைக்கா முதலிய ஸ்தலங்களிலுள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகஅர்ச்சனைகள் செய்வித்தும் முன்னமே தாம் வாங்கியிருந்த கடன்களைத் தீர்த்தும் மாணக்கர்களில் ஏழைகளாக உள்ளவர்க்கு நன்கொடையளித்தும் விவாகம் ஆகாதவர்களுக்கு விவாகம் செய்வித்தும் தம்மிடம் இல்லாத ஏட்டுச் சுவடிகளை விலைக்கு வாங்கியும் பங்களூரிலிருந்து தாம் கொணர்ந்த திரவியத்தை மெல்ல மெல்ல நாளடைவிற் செலவு செய்து விட்டனர்.

உறையூர்ப்புராண அரங்கேற்றம்.

பங்களூரிற் பாடி முடித்த உறையூர்ப்புராணத்தை அரங்கேற்றவேண்டும் என்று யாவரும் கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கோயிலைச் சார்ந்த இடமொன்று மிக்க அலங்காரங்களமைந்த பந்தருட

னும் மேற்கட்டிகளுடனும் அமைக்கப்பெற்றது. பல வித்துவான்களும் தமிழருமையறிந்த கனவான்களும் சைவச் செல்வர்களும் கூடியிருந்த கூட்டத்தின் நடுவே இருந்து பிள்ளையவர்கள் புராணத்தை அரங்கேற்ற ஆரம்பித்தனர். அதில் உள்ள நாட்டுச் சிறப்பைக் கேட்டு மகிழ்ந்தோர் சிலர்; நகரச்சிறப்பைக் கேட்டு மகிழ்ந்தோர் சிலர்; நகரப்படலத்திலுள்ள சாதி வருணனையைக்கேட்டுச் சந்தோஷித்தோர் சிலர். அதில் ஓரிடத்திற் கூறப்பட்டுள்ள நரக வருணனையைக் கேட்டுக்கொண்டே வந்த அக்கோயில் தருமகர்த்தர் கண்ணீர் விட்டுக்கொண்டே கேட்டனரென்பர்.

அப்பால் அப் புராணம் செவ்வனே அரங்கேற்றப் பெற்று நிறைவேறியது. எல்லோருங்கூடிச் சிறந்த பூஷணங்களும் பொன்னாடைகளும் பொருளும் பிள்ளையவர்களுக்கு ஸம்மானம் செய்தார்கள்.

* உறையூர்ப்புராண அமைப்பு.

காப்பிய உறுப்புக்களெல்லாம் அமையப் பாடவேண்டுமென்றெண்ணித் தொடங்கிய தியாகராச லீலையானது முற்றுப்பெறுமற்போகவே இக் கவிஞர்கோமான் மனக்குறையுள்ளவராகவே இருந்தார். அக்குறை உறையூர்ப் புராணம் பாடியதால் தீர்ந்துவிட்டது. மலை, நாடு, நகர், ஆறு முதலியன நன்கு புனைந்து கூறப்பட்டுள்ளதன்றி இப்புராணத்தில் சூரியோதயம், சூரியாஸ்தமனம், சந்திரோதயம், மணம் முதலிய பலவகையான காப்பிய உறுப்புக்கள் அமைந்துள்ளன. சிவபெருமான் தோத்திரங்கள் பலவகையில் இடையிடையே அமைந்து அன்பைப் பெருகச் செய்கின்றன.

அவையடக்கம் மிக அழகாக அமைந்துள்ளது. நூற்பாயிர உறுப்பில், நூலினுள் வரும் செய்திகளைப் பலவகையில் எடுத்தாளுதல் சிறந்த கவிஞர்களின் மரபு; அதனைப் பின்பற்றி இக் கவிஞரும் அவையடக்கச் செய்யுட்களுள் ஒன்றில்,

† "உயர்குண நிறத்தி னோடு மற்றைய குணங்கட் குள்ள
பெயர்வறு நிறங்க ளுந்தன் மேனியிற் கொண்ட பெம்மான்
உயர்வுறு பெரியோர் சொற்ற வொண்சுவைப் பாட லோடு
பெயர்வறு சிறியேன் சொற்ற பாடலும் பெரிது கொள்வான்"

---

* இந்நூல் தியாகராச செட்டியாரால் விஷ்ணு ஆனீ பதிப்பிக்கப்பட்டது. † உயர்குணமென்றது சத்துவத்தை; அதன் நிறம் வெண்மை.

என இத்தலத்திற் சிவபெருமான் பஞ்சவர்ணம் கொண்ட வரலாற்றை எடுத்துக் கூறுகின்றார்.

சோழ நாட்டைச் சிறப்பிக்கையில் அது தேவலோகத்தினும் சிறந்ததென்னும் கருத்துப் புலப்பட,

"அறவினைப் போக மூட்டி யமைத்தநா ளொழிந்த ஞான்றே
திறமிறக் கீழே தள்ளுந் தெய்வநாட் டினைப்போ லாது
பெறலறந் தரும மூட்டிப் பிறங்குதற் சார்ந்து ளோரை
நிறமரு வுறமே லேற்று நிலையது சோழ நாடு"

என்று கூறுவதில் இவருடைய தேசாபிமானம் புலப்படுகின்றது.

ஐந்திணை வளங்களையும் ஒப்புயர்வின்றிச் சிறப்பித்துச் சொல்லும் இப் பெருங்கவிஞர் நெய்தல்வளம் சொல்லும்பொழுது, அந்நிலத்து வாழ்வார் தம் தெய்வமாகிய வருணனை வழிபடும் முறையொன்றை அறிவித்துள்ளார்:

"நீடு தம்வலை வளம்பொலி தரநிகழ் சுறவக்
கோடு நாட்டுபு பரதவர் தொழுந்தொறுங் குறைதீர்த்
தாடு சீர்ப்புன லிறையவ னுட்கிகொண் டமரும்
பாடு பெற்றது கானல்சூழ் பரப்புடை நெய்தல்."

இதிற் கூறப்பட்ட செய்தி பண்டை நூல்களிற் காணப்படுவது.

திருநகரப்படலத்தில்,

"செந்தமி ழருமை நன்கு தெரிபவர் தெரிதற் கேற்ப
மும்திநற் பொன்பூ ணுடை முகமனை தெய்வ வல்லார்
அந்தமில் புகழ்வே ளாள ரணிமறு கியல்பென் சொற்றும்" (அடு)

என்றசெய்யுள் இவருடைய தமிழருமையை நன்கறிந்து பாராட்டி ஆதரித்த உறையூர்ச் செல்வர்களை நினைந்து பாடப் பெற்றிருத்தல் வேண்டும். தங்களை ஆதரித்துப் போற்றியவர் பெயர்களைப் புலவர்கள் தாம் செய்த நூல்களில் நல்ல இடத்தில் வைத்துப் பாராட்டும் மரபு பண்டைக் காலம் முதலே இருந்து வருவதன்றோ?

புராணத்திற் கூறப்படும் வரலாறுகள் அந்த அந்த இடங்களுக்கேற்ற மன உணர்ச்சியை எழுப்பத் தக்க சொற்பொருளமைதியுடன் விளங்குகின்றன. திருப்பராய்த்துறை யென்னுந் தலத்தில் சிவபெருமான் திருக்கோயிலில் தரிசனம் செய்யவந்த சிலருடன் ஒரு வணிகனும் வந்து நின்றான். அக்கோயிலிலுள்ள ஆதிசைவர் வழக்கம்போல் யாவருக்கும் திருநீறு வழங்கினர். அத

னைப் பிறர் பக்தியுடன் பெற்று அணிந்துகொண்டனர். வணிகன் கீழே சிந்திவிட்டான். அதனைக்கண்ட ஆதிசைவர் அஞ்சிச் சினந்து கூறுவதாக உள்ள ஒரு பகுதி சிவத்துரோகத்தின் பயனை நன்கு அறிவிக்கின்றது.

"நீற்றைச் சிந்தினை யல்லையிங் நிகழ்பவத் தடையும்
பேற்றைச் சிந்தினை யறவினை யுளனெனப் பேசும்
கூற்றைச் சிந்தினை யிவணடைந் துறுசுகங் குலவும்
ஆற்றைச் சிந்தினை சிந்தினை நின்றிரு வனைத்தும்"

(வில்வாணியப். கஉ)

என்று ஆதிசைவர் சொல்லுவதாக அமைந்த செய்புள் அவர் உள்ளத்தெழுந்த சினத்தையும் இரக்கத்தையும் ஒருங்கே தெரிவிக்கின்றது.

உதங்கமுனிவரென்பவர் உறையூரை நோக்கி வரும்பொழுது பல தலங்களைத் தரிசித்து வந்ததாகச் சொல்லப்படும் பகுதி அத் தலங்களின் வரலாற்றைச் சுருக்கமாகவும் அழகாகவும் புலப்படுத்துகின்றது:

"அனைபோலு நல்லானை யடையாரிற் புல்லானை
வினையாவு மில்லானை விளங்குமறைச் சொல்லானைப்
புனைமேரு வில்லானைப் புரிசடையிற் செல்லானை
எனையாள வல்லானை யெழிற்காஞ்சி யிடைப்பணிந்தான்"

"அடுபுலித்தோ லுடையானை யனைத்துலகு முடையானை
வடிவில்களங் கரியானை மாலயனுக் கரியானை
படுபுனன்மா சடையானைப் பவமெனுமா சடையானை
நெடுமணிப்புற் றுறைவானை நிறைவானைப் பூசித்தான்."

(உதங்கமுனி பொலிவடைந்த படலம், அஉ, கஅஉ.)

பஞ்சவர்ணப் படலத்தில் உறையூர்ச் சிவபெருமான் உதங்க முனிவருக்கு ஐந்துவர்ணமுடைய திருக்கோலத்தை ஐந்து சாமங்களிற் காட்டியருளியசெய்தி சொல்லப்படுகிறது. இப்பகுதியில் சிவபெருமான் தமக்குக் காட்டியருளிய ஒவ்வொரு திருக்கோலத்தையும் தரிசித்து இன்புற்ற உதங்கமுனிவர் அவ்வக்கோலத்தைச் சிவபெருமான்கொண்டதற்குப் பலவகைக்காரணங்களைக் கூறுவதாக இந்த வித்தாரகவி அமைத்துள்ளனர்.

14. அரங்கேற்றமும் பிரபந்தங்கள் இயற்றலும். கஉடு

படிக உருவத்தைக்கண்டு உதங்கமுனிவர் கூறுதல்.

" வெள்ளிய மால்வரை வெள்ளிய மால்விடை வெண்டும்பை
வெள்ளிய வான்மதி வெள்ளிய வான்புனல் வெண்ணீறு
வெள்ளிய வார்குழை கொண்டு விளங்குறு தற்கேற்ப
வெள்ளிய மாபடி கத்துரு வாயினை மேலோயே. "

(பஞ்சவர்ணப் படலம், சுடி.)

சூரவாதித்தன் என்னுமரசன் உறையூரைத் தலைநகராக ஆக்கியதும், வேட்டைமேற் சென்று காந்திமதி யென்னும் நாக கன்னிகையைக் கண்டு காதல் கூர்ந்து மணஞ்செய்ததும், பிறவும் சூரவாதித்தப் படலத்திற் சொல்லப்படுகின்றன. காந்திமதியின் கேசாதிபாத வருணனை சிறந்த உவமை முதலிய அணிகளுடன் காணப்படும். சந்திரோதயம், சந்திரோபாலம்பனம் முதலியன இப் படலத்தில் வந்துள்ளன.

சந்திரோதயம்.

" வாத வூரர் தில்லைநகர் மருவிப் பிடகர் வாய்மூடக்
காத லொருபெண் வாய்திறப்பக் கடவு ளருளாற் செய்ததெனச்
சீத மதியம் வான்மருவிச் செழுந்தா மரைகள் வாய்மூடத்
தாத வாம்பல் வாய்திறப்பத் தண்ணங் கதிராற் செய்ததே. "

சந்திரோபாலம்பனம்.

" ஒருபா தலத்து வந்தவெழிற் காந்தி மதியென் னுள்புகுந்து
பொருபான் மையரின் வருத்துமது போதா தென்று மீதலத்து
வருபா னிறத்த செழுங்காந்தி மதியே வெளிநீ வருத்துவையால்
இருபா லளரா லுள்ளுறவும் வெளியே கவுமென் னுயிரஞ்சும். "

(சூரவாதித்த. கடுக, கசுக.)

பகைவரும் போற்றல்.

பிள்ளையவர்கள் பங்களூர் சென்றுவந்ததை அநேகர்பாராட்டி வந்தாலும் இவருக்கு அங்கே கிடைத்த ஸம்மானம் அதிக மென்றும், 'ஆலையில்லா வூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை' என் பது போலக் கன்னட தேசத்திற் சென்று இவர் பாராட்டப் பெற்றது ஒரு கௌரவமாகாதென்றும் சில பொறுமைக்காரர்கள் அங்கங்கே சொல்லித் திரிந்தனர். அவர்கள் இவர் இவ்வுறையூர்ப்

புராணத்தை அரங்கேற்றியபொழுது பதசாரங்கள் சொல்வதையும் விஷயங்களைத் தக்க மேற்கோள்களைக் காட்டி விளக்குவதையும் இவருக்குள்ள நூலாராய்ச்சியின் விரிவையும் அப்புராணத்தில் இவர் அமைத்துள்ள நயங்களையும் கேட்டு ஆனந்தமடைந்து தங்கள் எண்ணங்களையெல்லாம் மாற்றி, "பங்களூரிற் பெற்ற பரிசிற்கு இவர் பாத்திரரே. இன்னும் எவ்வளவு வேண்டுமாயினும் கொடுக்கலாம். இவருடைய புலமை அகன்றும் அறிவரிதாயும் விளங்குகின்றது" என்று வியந்து தங்கள் பொருமைக் குணத்தைப் போக்கிக்கொண்டனர்.

வித்துவானென்னும் பட்டம் பெற்றது.

இவருடைய சிறந்த கல்வியாற்றலையறிந்த பல வித்துவான்களும் பிரபுக்களும் இவருக்கு ஏதேனும் ஒரு பட்டம் அளிக்க வேண்டுமென்று தம்முள்ளே நிச்சயித்தார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்கு அந்த அபிப்பிராயம் நெடுநாளாக இருந்ததாகவும் யாரேனும் ஒருவர் தொடங்கினால் தாமும் அக்கருத்தை ஆதரிக்க வேண்டுமென்று எண்ணியதாகவும் கூறித் தம்முடைய உட்கோட்பாட்டைத் தெரிவித்தனர். பின்பு நல்ல நாளொன்றில் ஒரு மகாசபை கூட்டி இவருடைய கல்வித் திறமையைப்பற்றிப் பேசி இவருக்கு வித்துவானென்ற பட்டத்தை அளித்து அதற்கு அறிகுறியாகச் சால்வை முதலிய மரியாதைகளையும் செய்தார்கள். அதுமுதல் இவரை வித்துவான் பிள்ளையவர்களென்றே குறிப்பித்து வரலானார்கள். அதன் பின்பு பதிப்பிக்கப்பெற்ற குசேலோபாக்கியானத்தில் இவர் பெயருக்கு முன்பு 'வித்துவான்' என்பது காணப்படும்.

* காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்

திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்று உலாவிவருவதையும் இவர் திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டி பிள்ளைத்தமிழ் இயற்றியிருப்பதையும் அறிந்த அன்பர்கள் உறையூர் ஸ்ரீ காந்திமதியம்மை மீது ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவ்வாறே வழக்கப்படி செய்து முடித்து ஸ்ரீ காந்திமதியம்மையின் சந்நிதியில் அரங்கேற்றினர். அங்கே வந்திருந்த வித்து

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 276-387.

வான்கள் அந்நூலை மிகவும் பாராட்டிச் சிறப்புப் பாயிரங்களால் தங்கள் நன்மதிப்பைப் புலப்படுத்தினர்கள். அந்தச் செய்யுட்களுள்,

"தூமேவு திருமூக்கீச் சரப்பஞ்ச வன்னேசச்
சோதி பால்வாழ்
ஏமேவு திருக்காந்தி மதிபிள்ளைத் தமிழமிழ்த
மெமக்கீந் தாலுல்
நாமேவு தமிழ்ப்புலமைக் கோரெல்லை யாயுறைந்த
நல்லோன் வல்லோன்
மாமேவு சிரகிரிவாழ் மீனுட்சி சுந்தரநா
வலவ ரேறே"

என்னும் செய்யுள் மட்டும் கிடைத்தது. அந்நூலை அரங்கேற்றி வருகையிற் பொருமையால் துராட்சேபஞ் செய்து குழப்பி விடுகிறதென்று நினைந்து சிலர் வரப்போவதாகக் கேள்வியுற்ற சிரஸ்தேதார் செல்லப்பா முதலியாரென்பவர் தக்கவர்களைக் கொண்டு முதலில் அங்ஙனம் நடைபெறுமற் செய்ததன்றிப் பின்னும் அன்னோர் ஒருவரும் வாராமல் தக்க பாதுகாப்பையும் செய்வித்தனர்.

அதனை அரங்கேற்றிய பின்பு பல கனதனவான்களால் இவருக்குத் தக்க ஸம்மானங்கள் அளிக்கப்பட்டன. ஒருவர் விலையுயர்ந்த கடுக்கனும் மோதிரமும் வழங்கினர்.

அந்நூல் விரோதிகிருது ஹூ (1852) வைகாசிமீ அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது.

கற்குடிமாலை.

சிலருடைய வேண்டுகோளுக்கிணங்கி எறும்பீச்சரம் வெண்பாவந்தாதி, திரிசிரபுரத்துள்ள கீழைச் சிந்தாமணி தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கற்குடிமாலை முதலியன செய்யப்பட்டு அங்கங்கே உரியவர்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டன. அவற்றுள் எறும்பீச்சரம் வெண்பாவந்தாதியில் ஒரு செய்யுளின் பகுதியாகிய, "கூடல்வளை, விற்றூணை மேருமலை வில்லானை" என்பது மட்டும் ஞாபகத்தில் இருக்கின்றது.

* கற்குடிமாலை எளிய நடையில் அமைந்தது. இந்நூலுள், திருக்குறட் பாக்களின் கருத்து 9, 65, 91-ஆம் செய்யுட்களிலும்,

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 2810-2914. மற்ற இரண்டு நூல்களும் கிடைக்கவில்லை.

கஉஅ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

திருவுந்தியார் திருக்களிற்றுப் படியாரென்பவற்றின் கருத்துக்கள் 10,11-ஆம் செய்யுட்களிலும், திருவாசகத்தின் கருத்துக்கள் 87, 98-ஆம் பாடல்களிலும், பெரிய புராணத்தின் கருத்து 89-ஆம் செய்யுளிலும், பழமொழிகள் 4, 19-ஆம் செய்யுட்களிலும், திருவிளையாடற் புராணத்தின் கருத்து 16-ஆம் செய்யுளிலும், நாயன்மார்களுடைய அருஞ்செயல்கள் 17, 27, 34-5, 47, 72-3, 84-ஆஞ் செய்யுட்களிலும், யாப்பருங்கலக் காரிகையின் கருத்து 77-ஆம் பாடலிலும், சிலேடை 12, 44-ஆம் செய்யுட்களிலும், அகப்பொருளிலக்கணச் செய்தி 43-ஆம் பாடலிலும், ஒருவகைக் கற்பனை நயங்கள் 21-2-ஆம் பாடல்களிலும், உலோபிகளுடைய செயல் 94-ஆம் பாடலிலும், பிரார்த்தனைகள் 23, 80-ஆம் பாடல்களிலும் மிக அழகாக அமைந்துள்ளன. இதிலுள்ள சில பாடல்கள் வருமாறு :—

"புண்ணிய வடிவாம் வேடர்தம் பிரானுர்
பொன்னடித் தாமரைச் செருப்பு
மண்ணிடைத் தோய வேட்டஞ்செய் நாளவ
வழிப்புலாய்க் கிடப்பினு மும்வேன்
எண்ணுவ தினியா திமையவ ருலக
மிறுதிநா ளழிவது நோக்கிக்
கண்ணகன் குடுமி மதியினு னகைக்குங்
கற்குடி மாமலைப் பரனே."

"மறையவர் திருவை வைதிகர் துணையை
வருபர சமயகோ ளரியைக்
குறைவிலா வமுதைக் காழியுண் ஞானக்
கொழுந்தினைத் துதிக்குமா றருள்வாய்
நறைகம ழலங்கற் கதுப்பரம் பையர்க
ணன்குமைத் திலகந்தீட் டதற்குக்
கறைதபு சுனைக ளாடியிற் பொலியுங்
கற்குடி மாமலைப் பரனே." (சு, சஅ.)

* வாட்போக்கிக் கலம்பகம்.

இவர் ஒருமுறை இரத்தினகிரி யெனவழங்கும் வாட்போக்கியென்னுந் தலத்திற்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார். அப்

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, 947-1048.

14. அரங்கேற்றலும் பிரபந்தங்கள் இயற்றலும். கஙக

பொழுது அந்தத்தலத்தின் அடியவர்களாகவுள்ள பன்னிரண்டாஞ் செட்டிமார்களிற் பலர் விரும்ப, அந்தத்தலவிஷயமாக ஒரு கலம்பகம் இவராற் பாடப்பெற்றது. அது 'வாட்போக்கிக் கலம்பகம்' என வழங்கும். அத் தலத்தின் பெயர்களாகிய வாட்போக்கி, அரதனசலம், சிவாயமென்பவைகளும், ஸ்வாமியின் திருநாமங்களாகிய வாட்போக்கி, முடித்தழும்பர், இராசலிங்கர், மலைக்கொழுந்தென்பவைகளும், அம்பிகையின் திருநாமமாகிய சுரும்பார்குழலி யென்பதும், சத்தகன்னியர் வழிபட்டு இறைவன் கட்டளையால் இங்கே தங்கியிருப்பதும், வயிரப்பெருமாளென்னுந்தெய்வம் இத்தலத்தைப் பாதுகாத்துக்கொண்டிருத்தலும், இடி பூசை செய்ததும், ஆரியவரசன் வெட்டினமையாலுண்டான வாளின்தழும்பு இறைவன் திருமுடியிலிருத்தலும், ஓரிடையன் அபிஷேகத்திற்காகக் கொண்டுவந்தபாற்குடத்தைக் கவிழ்த்தகாகம் எரிக்கப் பெற்றதும், ஆரியர் திருமஞ்சனம் கொண்டுவருதலும், காக்கையின் செய்தியைப் புலப்படுத்த அதன் வடிவம் அக்குடங்களில் அமைக்கப் பெற்றிருத்தலும், சிவநேசச் செல்வர்களும் தம்முடைய பொருள் வருவாயுட் பன்னிரண்டு பங்கில் ஒருபங்கை இறைவனுக்கு அளித்துவருபவர்களுமாகிய பன்னிரண்டாஞ் செட்டிமார்களின் அருமைச் செயலும் உரிய இடங்களிற் செவ்வனே இந்நூலுள் அமைக்கப் பெற்றுள்ளன.

கலம்பகத்திற்குரிய உறுப்புக்கள் எவ்வளவு செவ்வையாக அமையவேண்டுமோ அங்ஙனமே இதில் அமைந்து விளங்குகின்றன. இதிலுள்ள கூத்தராற்றுப் படையகவலில், இத்தலத்தையடைந்து வழிபட்டுப் பெருஞ்செல்வமடைந்து தன்னிடம் செல்லும் ஒரு கூத்தன், வறுமையால் துன்புற்றுத் தன்னை யாசித்த மற்றொரு கூத்தனை நோக்கி, இத்தலத்தை யடையும் முன்னம் தான் அடைந்திருந்த வறுமைத் துன்பத்தைக் கூறும் பகுதி படிப்பவர்களுடைய மனத்தை யுருகச் செய்யும். இந்நூலிலுள்ள,

> "தழுவுமையான் முன்னுந் தமிழிறையாற் பின்னும்
> தொழுமிறையான் மேலுஞ் சுவடு--கெழுமுவகிழ்
> இன்ற லெனுங்குறைபோ மென்மனஞ்சேர் வாட்போக்கி
> அன்ற லமர்ந்தா யடி" (எ)

என்ற செய்யுளில், தொழும் இறையால் மேலும் சுவடு கெழுமியதாகச் சொல்லியது இத்தலவரலாறுகும். 'உமையினல் முன்னும்,

பாண்டிய அரசனுற் பின்னும், ஆரிய அரசனுல் மேலும் சுவடுகள் உண்டாயின ; கீழேமட்டும் சுவடு இல்லை ; என்னுடைய கல்லைப் போன்ற நெஞ்சில் தேவரீருடைய திருவடிகளைச் சேர்ப்பின் அக் குறை நீங்கும்' என்பது இச் செய்யுளின் பொருள்

இந்நூலிலுள்ள வேறு சில நயமுள்ள பாடல்கள் :

" குறையின்மா ணிக்கமலை வெள்ளிமலை நாளுங்
குலவுசோற் றுத்துறைபாற் றுறைநெய்த்தா னமுநீர்
உறையில்கரச் சிலையம்பொன் வரைநெடுமான் முதலோர்க்
குறுபோகங் கொடுப்பதுநுந் திருவருள்பா லுறைவாள்
கறையிலறம் பலவளர்ப்பா ளொருதோழ னிதிக்கோன்
கரையில்போநுட் பங்களிப்பார் கனவணிக நுளர்நீர்
முறையிலெலும் பாதியணிந் தையமேற் றுழல்வீர்
முடித்தழும்பீ ரிதுதகுமோ மொழிமினடி யேற்கே." (கடு)

வண்டுவிடு தூது.

" இன்று பைங்கிளியை யேவி னம்மைகை
இருக்கு மோர்கிளியொ டுரைசெயும்
எகின நேடியறி யாத தேமுடிமுன்
எங்க னின்றுசெவி யருகுறும்
ஒன்று மங்குலரு குறின்வ ளைத்திவையொ
டுறுதி யென்றுசடை சிறைசெயும்
உறுக ருங்குயிலொர் செவிலி பட்டதை
உணர்ந்த தேசெலவு ளஞ்சிடும்
துன்று தென்றலெதிர் சென்றி டிற்கடிது
தோள்கொள் பூணிரையெ னக்கொளும்
துச்சி லல்லவென வண்டு வாழ்செவி
தூனெந்து சேரும்வலி யார்க்குள
தன்று தொட்டெனது கொண்டை வாழும்வரி
வண்டிர் காண்மய லடங்கவும்
அரத ஞசல ரிடத்து ரைத்தவர்
அணிந்த மாலைகொணர் மின்களே." (உசு)

பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகங்களில் இது முதலாவ தாகும். இவர்கள் சொல்ல இந்நூலை அப்பொழுதப்பொழுது எழுதிவந்தவர் சி. தியாகராச செட்டியார்.

15. இலக்கண விளக்கம் பாடங் கேட்டது.

இலக்கண விளக்கம் கேட்க விரும்பியது.

பிள்ளையவர்கள் பல மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லியும் பல நூல்களை இயற்றியும் வந்தகாலத்திலுங்கூடத் தாம் அறியாத விஷயங்களை யாரேனும் சொல்வார்களாயின் அன்புடன் கேட்பது வழக்கம் இலக்கண இலக்கியநூல்கள் பலவற்றை இடைவிடாமற் பயின்று வந்தாலும் ஒவ்வொரு நூலையும் உரையையும் பரம்பரைக் கேள்வியினுலறிந்துகொண்டவர்களிடத்து அவர்கள் விருப்பப் படி ஒழுகியேனும் பொருளுதவி செய்தேனும் கேட்கவேண்டியவற் றைக் கேட்டுத் தெளிந்துகொள்வார். ஐந்திலக்கணங்களும் ஒருங்கேயமைந்ததும் குட்டித்தொல்காப்பியமென வழங்கப்படு வதும் சைவவித்துவானுல் இயற்றப்பெற்றதுமாகிய இலக்கண விளக்கத்தை உரையுடன் பெற்று அதனை ஆராய்ந்து பலமுறை படித்தார். படித்தும் அதிற் சிலசில இடத்துள்ள கருத்து விளங்க வில்லை. பல மேற்கோட் செய்யுட்களுக்குப் பொருள் தெரியவில்லை. ஆதலால் அதனை முறையே பாடங்கேட்டுத் தெளியவேண்டு மென்னும் எண்ணம் இவருக்கு உண்டாயிற்று.

கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்டல்.

உண்டாகவே அதனைப் பாடஞ் சொல்லும் திறமை யுடைய வர், அந்நூலாசிரியராகிய திருவாரூர் வைத்தியநாத தேசிகரிடம் கற்றுத்தேர்ந்த மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்தவரான கீழ் வேளூர்ச் * சுப்பிரமணிய தேசிகரென்று விசாரித்தறிந்தார். பின்பு, மிகமுயன்று அவரைக் கையுறைகளுடன்போய்த் தரிசித் துத் தம்முடைய குறிப்பைத் தெரிவித்தார். அப்பால் அவருடன் இருக்கும் ஒருவரைத் தனியே அழைத்து, "பாடங் கேட்பேனு யின் இவர்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட் டார். அவர், "ஐயா அவர்களை ஆறுமாதத்திற்குக் குறையாமல் வைத்திருந்து மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாயாவது அவர்கள் செலவுக்குக் கொடுக்கவேண்டும். பாடம் கேட்டாலும் கேளா

* இவர் சுப்பையா பண்டாரமெனவும் வழங்கப்பெறுவர்.

விட்டாலும் சொன்னபடி கொடுத்து விடவேண்டும். ஆறுமாதத் திற்குப் பின் ஏதாவது தக்க ஸம்மானம் செய்யவேண்டும். அவர் களுடைய கைக்குறிப்புப் புத்தகத்துள்ள மாணாக்கர்களின் பெயர் வரிசையில் உங்களுடைய பெயரை மாணாக்கரென்பது புலப்பட உங்கள் கையினாலேயே எழுதிவிடவேண்டும். மூன்றுமாதத்தின் தொகையை முன்னதாகக் கொடுத்து விடவேண்டும். பாடங் கேட்கும்போது ஆஸனப் பலகையில் அவர்களை இருக்கச்செய்து மரியாதையாகக் கேட்கவேண்டும்" என்று சொன்னர். இவர் அங்ஙனமே செய்வதாக அவரிடஞ் சொல்லிப் பிரயாணச் செல விற்குப் பணம்கொடுத்து விட்டு, "திரிசிரபுரம் எழுந்தருளவேண் டும்" என்று தேசிகரிடம் சொல்லித் தாம் முன்னர் வந்துவிட்டார். பிறகு குடும்பத்துடன் தேசிகர் இருத்தற்கு ஒரு தனி விடுதியை அமைத்து, வரவேண்டுமென்று அவருக்கு விண்ணப்பப் பத்திரிகை யொன்றை யனுப்பிவிட்டு அவர் வரவை இவர் எதிர்பார்த்திருந்த னர். குறிப்பிட்ட காலத்தில் சுப்பிரமணியதேசிகர் வந்துசேர்ந்து அவ்விடுதியில் தங்கினர்.

அப்பொழுது முன் வாக்குத்தத்தம் செய்தபடி அவருக்கு மாதவேதனம் கொடுப்பதற்குக் கையிற் பொருளில்லாமையால், காந்திமதியம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய காலத்தில் தமக்குக் கிடைத்த கடுக்கன் ஜோடியைக் கழற்றி விற்று ஆறுமாதத் தொகையையும் முன்னதாகக் கொடுத்தனர். அவரை உயர்ந்த ஆஸனத்தில் இருக்கச்செய்து தாம் கீழேயிருந்து அவர் கொடுத்த கைப்புத்தகத்திலுள்ள மாணாக்கர் பெயர்வரிசையில் தம்முடைய பெயரையும் வரைந்து கொடுத்துவிட்டுப் பாடங்கேட்கத் தொடங் கினர். அதிற்கேட்கவேண்டிய பாகங்களையெல்லாம் சிலமாதங்களிற் கேட்டு முடித்துவிட்டு அப்பால் திருக்குறள் பரிமேலழகருரை, யாப்பருங்கலக்காரிகை உரை, நன்னூல் விருத்தியுரை இவைகளி லுள்ள உதாரணச்செய்யுட்களுக்குப் பொருளும் பிறவும் கேட் டுத் தெளிந்தார்; 'இவ்வளவு தெளிந்த பயிற்சியுள்ள பெரியவ ரிடத்தே பாடங்கேட்கும்படி நேர்ந்தது நம்முடைய பாக்கியம்' என எண்ணி மகிழ்ந்தார். இலக்கண விளக்கமூலமானது பழைய இலக்கணநூல்களாகிய தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலவிருத்தி, தண்டியலங்காரம், வச்சணந்திமாலை முதலிய பாட்டியல்கள்

ஆகிய இவற்றின் மூல அமைப்பையும், அதன் உரையானது அவற்றின் உரைகளையும் தழுவி, 'பின்னேன்வேண்டும் விகற்பங்கூறி' என்னும் வழிநூல் விதிக்கேற்பச் சிறிதுசிறிது வேறுபடுத்தி இயற்றப் பட்டவை. உரையிலுள்ள உதாரணங்களுட் பெரும்பாலன பழைய உரைகளில் உள்ளனவே. ஆதலின் அந்நூலை நன்றாகப் பாடங்கேட்டமையால் முன்னமே படித்திருந்த மேற்கூறிய நூல்களிலும், அவற்றின் உரைகளிலும், அவற்றிற் காட்டப்பட்டிருக்கும் உதாரணங்களிலுமுள்ள ஐயங்கள் இவருக்கு அடியோடே நீங்கிவிட்டன. அதனால் இவருக்குண்டான தெளிவும் திருப்தியும் அதிகம்; 'பலரிடத்திலும் சென்று சென்று பலவருடத்தில் அறியவேண்டிய பல அரிய விஷயங்களைச் சிலமாதங்களில் இவர்களாற் பெற்றோம்' என எண்ணி இவர் இன்புற்றார்.

திரிசிரபுரத்தில், தாம்படித்ததே போதுமென்று நினைந்து தம்மக்குள்ளே திருப்தியடைந்திருந்த சிலர், இவர் கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங்கேட்டலையறிந்து, "சிறந்த வித்துவானான இவரும் பாடங்கேட்கின்றாரே! இவர் பாடங்கேட்க வேண்டுவதும் உண்டோ? என்ன கேட்கின்றார்?" என்று நினைந்து இவர் பாடங்கேட்கத் தொடங்கியபின் வந்துவந்து அருகில் இருந்து கேட்பாராயினர். இவர் மற்றவர்களைப்போல நூல் முற்றும் கேளாமல், வாசித்துக் கொண்டேபோய் இடையிடையே ஐயங்களைமட்டும் கேட்பதையும் அவற்றை அவர் விளக்கிச்செல்வதையும் கேட்ட அவர்களுக்குப் பொருட்டொடர்பும் இன்னவிஷயம் கேட்கப்படுகின்றதென்பதும் புலப்படாமல் இருந்தமையால் மீண்டும் வருவதை நிறுத்திக்கொண்டார்கள். நூல்களை முறையே படித்திருந்தாலல்லவோ சந்தேகங்கள் உண்டாகும்? சந்தேகங்களை நீக்குதற்குரிய விடைகளும் விளங்கும்?

இவ்வாறு பல ஐயங்களைத் தீர்த்துக்கொண்டும் அரிய விஷயங்களைத் தெரிந்துகொண்டும் வருகையில் ஆறுமாதங்கள் ஆயின. பின் இவர் தேசிகருக்குத் தக்க மரியாதைகள் செய்தும் பிறரைக் கொண்டு செய்வித்தும் மனமகிழுமாறு செய்து அவரை ஊருக்கு அனுப்பினர். இவருக்குப் பாடஞ்சொல்லி வருகையில் இவருடைய இலக்கிய இலக்கணப்பயிற்சி, நுண்ணறிவு, பணிவு முதலிய குணங்களையறிந்து அவர் இவரை நன்கு மதிப்பாராயினர். இவருக்குப் பாடஞ்சொல்ல வாய்த்தது தமக்கு ஒரு பெருமையென்பதையும்

அவர் உணர்ந்தார். அவர் ஊர்சென்ற பின்னர் இவர் அடிக்கடி சென்று அவரைப்பார்த்துச் சல்லாபம் செய்துவருவார். அவருடைய கேள்விவன்மையையும் ஞாபகசக்தியையும் பாடங் கேட்டிருந்த முறையையும்பற்றி இவர் பிற்காலத்திற் பலமுறை வியந்து பேசியதுண்டு.

கல்விப்பெருமை மிக்குடைய இவர் கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பணிவுடன் பாடங்கேட்டதை நினைக்கும் பொழுது, துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள், சிறந்த கல்விமானென்று பெயர்பெற்றபின்பு, திருநெல்வேலியிற் சிந்துபூந்துறையிலிருந்த தருமை வெள்ளியம்பலத்தம்பிரானவர்கள்பால் தொல்காப்பியம் பாடங்கேட்ட செய்தி ஞாபகத்திற்கு வருகின்றது.

சிங்கவனம் சுப்புபாரதியார் முதலியோர்.

பிள்ளையவர்களுக்குப் பாடஞ் சொன்னமையால், கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடத்திற் பலருக்கு மதிப்புண்டாயிற்று. பிள்ளையவர்களே சென்று பாடங்கேட்கும் தகுதி இருத்தலாற் பல நூல்களை அவர்பால் அறிந்துகொள்ளலாமென்று சிலர் அவரிடம்சென்று படித்து வரலாயினர். அவர்களுட் சிங்கவனம் சுப்பு பாரதியார் என்பவரும், கிருஷ்ணபுரம் சுப்பிரமணிய பாரதியார் என்பவரும் முக்கியமானவர்கள். சிங்கவனம் சுப்புபாரதி அவரிடம் இலக்கணவிளக்கம் முதலியவற்றைக் கேட்டார்; பின்பு அவருடைய ஏவலின்மேல் திரிசிரபுரம் வந்து பிள்ளையவர்களிடம் சில நூல்களைப் பாடங்கேட்டு வரலாயினர்.

செவ்வந்திப்புராணம் பதிப்பித்தது.

இவர் இயற்றிய உறையூர்ப்புராணத்தின் நயத்தையும், அதனை யாவரும் வாசித்து இன்புறுவதையும் அறிந்த திரிசிரபுரத்திலிருந்த தமிழபிமானிகளும், செல்வர்களும் திரிசிரபுரத்திற்கு வடமொழியில் சுச - அத்தியாயங்களுடன் இருந்த புராணத்தைத் தமிழிற் செய்யுளாக மொழிபெயர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இவர், "முன்னமே இத்தலத்திற்கு எல்லப்ப நாவலராற் செய்யப் பெற்ற புராணம் ஒன்று உண்டு; அது நல்ல நடையுள்ளது" என்று சொல்லி அதிலுள்ள சில பகுதிகளைப் படித்துக் காட்டினர். கேட்ட திரிசிரபுரவாசிகள், "அதையேனும் அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டும்" என்று இவரை வேண்

டிக்கொள்ள, அவ்வாறே இவர் அதனை எழுதுவோரால் நேர்ந்த பிழைகளறப் பரிசோதித்து விரோதிகிருதுவருஷத்தில் (1851) அச்சிட்டு வெளியிட்டார். அப்பதிப்பில் இவர் பெயருக்கு முன் வித்துவானென்னும் அடைமொழி இருத்தலைக்காணலாம்.

தருமபுர ஆதீனப்பழக்கம்.

இடையிடையே இவர் திருவாவடுதுறை மடத்திற்குச்சென்று, படித்த தம்பிரான்மார்களோடு சல்லாபம் செய்துவிட்டு வருவார். அப்பால் அழைக்கப்பெற்று ஒருமுறை தருமபுர ஆதீனத்திற்குச் சென்று அப்பொழுது ஆதீனத் தலைவராக இருந்த ஸ்ரீ சச்சிதானந்த தேசிகரைத் தரிசித்து அவருடைய பேரருளுக்குப் பாத்திரராயினர்; அவரால் வழங்கப்பெற்ற பல மரியாதைகளையும் ஏற்றுக்கொண்டார். இவருடைய கல்வித் திறத்தையறிந்த தேசிகர் அடிக்கடி வந்துபோகவேண்டுமென்று கட்டளையிட அவ்வாறே இவர் செய்துவந்தார்.

---

16. சில மாணவர்கள் வரலாறு.

மாணவர் வகை.

இவர் தம்பால் யார் வந்து கேட்பினும் அவர்களுக்குப் பாடஞ் சொல்வார். இவரிடம் படித்தவர்களிற் பல சாதியினரும் பல சமயத்தினரும் உண்டு: பிராமணர்களில் ஸ்மார்த்தர்கள், வைஷ்ணவர்கள், மாத்வர்கள் என்னும் வகுப்பினரும், வேளாளரிற் பல வகுப்பினரும், பிறசாதியினரும், கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும் இவர்பாற் பாடங்கேட்டதுண்டு.

நாகூரிற் புகழ்பெற்று விளங்கிய குலாம்காதர் நாவலரென்னும் மகம்மதியர் ஒருவர் இவர்பால் வந்து சீறுப்புராணம் முதலியவற்றைப் பாடங்கேட்டனர்.

சவராயலு நாயகர்.

புதுச்சேரியில் இயன்றவரையில் தமிழ்ப்பாடங்களைக் கற்றுப் பாடப் படிக்கப் பிரசங்கிக்க ஒருவாறு பயிற்சியுற்றிருந்த செ. சவராயலு நாயகரென்னும் கிறிஸ்தவர் இவர் படிப்பிக்கும் நலத்தைக்

கசசு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

கேள்வியுற்றுத் திரிசிரபுரம் வந்து தியாகராச செட்டியார் முதலியோர் முகமாகக் கையுறைகளுடன் இவரைக் கண்டு, வீரமாமுனிவரென்னும் புனைபெயர் கொண்ட டாக்டர் பெஸ்கியாற் செய்யப் பெற்ற தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் முதலியனவாய தங்கள் சமயநூல்களைப் பாடஞ் சொல்லவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அதற்கிசைந்த இவர் அவரைப் பரீட்சித்து அவருடைய தமிழ்க் கல்வியின் நிலையை அறிந்து சில கருவி நூல்களை முதலிற் பாடஞ் சொல்லிவிட்டுப் பின்பு அவர் விரும்பிய வண்ணம் தேம்பாவணி முதலியவற்றிற்குப் பொருள் கூறித் தமிழில் நல்ல பயிற்சியை உண்டாக்கி அனுப்பினர். அதன் பின்பு சவராயலு நாயகருக்குக் கிறிஸ்தவர் குழாங்களில் உண்டான மதிப்பும் பெருமையும் அதிகம். பிள்ளையவர்கள் தேகவியோகம் அடையும் வரையும் இவரிடத்தும் இவர் மாணாக்கர்களிடத்தும் அவர் காட்டி வந்த அன்பும் செய்த உதவிகளும் மிக உண்டு. இவரிடத்தில் தாம் பாடங் கேட்டதை மறவாமல் தம்முடைய கல்வி உயர்ச்சிக்குக் காரணம் இவரேயென்னும் எண்ணம் அவர்பால் என்றும் இருந்து வந்தது. இவர் விஷயமாக அவர் பல செய்யுட்கள் இயற்றியிருக்கின்றார்; அவற்றிற் சில வருமாறு:

" ஓதுதற் கருநூ லியாவையு மூணர்ந்த வுணர்வினன் றிரிசிர கிரியாம்
மேதகு பதியி லொளிர்தரு ஞான விளக்கமா யடியவ ருளத்திற்
றீதுறு மவிச்சை யாமிருள் சீத்துத் திகழுமெஞ் தேசிக னைய
கோதின்மீ னாட்சி சுந்தர னருளாற் கூறுது மிஃதுளந் துணிந்தே."

இச் செய்யுள் அவர் பிரசங்கம் செய்யத் தொடங்குவதற்குமுன் சொல்லப்படுவது.

" விளங்குறுவெண் புகழ்வனைந்த மீனாட்சி சுந்தரப்பேர்க்
களங்கமில்தே சிகனென்பாற் கருணைகனி புரிந்ததனாற்
றுளங்குறுதேம் பாவணிக்குச் சொலத்துணிந்தே னுரைவிரித்து
வளங்கெழுமவ் வருளிலேயேல் வகுத்தலரி தரிதரிதே."

இச்செய்யுளால் அவர் தேம்பாவணிக்கு உரைசொல்லிப் பிரசங்கம் புரியும் வன்மையைப் பெற்றது பிள்ளையவர்களாலேயென்பது வெளியாகின்றது.

" முத்திக்கு வித்தா முரிமனத்துக் காறுதலாம்
எத்திக் கினும்பொரூஉ மீவதுவாம்--சுத்தகலை

ஓது கருணைமிகு முத்தமவென் சற்குருநிற்
கேதுசெய்கு வன்கைம்மா றின்று.''

'' கற்றற் கெளியனவாக் காட்டியரும் பாடலெல்லாம்
பற்றச்செய் நற்குணவென் பண்ணவனும்--உத்தமநீ
ஞானப் பொருள்வழங்கி நற்றருமஞ் செய்வதுபோற்
றூனமுண்டோ விவ்வுலகிற் றூன்.''

எனவரும் செய்யுட்களால் அவருடைய குருபக்தி விளங்குகின்றது.

தண்டு, அ. சந்திரப்பிள்ளை யென்பவர்மீது அவர் பாடிய செய்யுட்களுள்,

'' வண்டுதொட ரலரணியுங் குழலன்ன மெனுமனைவி
வாழ்த்த வோங்கும்
தண்டுசந்தி ரப்பிள்ளை யாங்குலோத் துங்கனையிச்
சபையி லேவெண்
பெண்டுறையும் நாவினனம் மீளுட்சி சுந்தரநற்
பெருமா னுக்கே
தொண்டுபுரி மாணாக்க நிற்சிறியேன் கவிகளிஞற்
றுதிக்கின் றேனே''

என்னும் செய்யுளால் இவரிடம் அவர் பாடங்கேட்டமை வெளியாகின்றது.

பிற்காலத்தில் பிள்ளையவர்கள் பாடிய திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலைக்கு அவர் கொடுத்த சிறப்புப்பாயிரங்களுள்ளும் இவரைத் தம் ஆசானென்று குறிப்பிட்டுள்ளார் :

'' பார்புகழும் விநாயகவே டிருமயிலைச் சத்திரமாம்
பாத்தி ரத்தில்
ஏர்குடிகொண் டோங்கிவளர் மீளுட்சி சுந்தரப்பே
ரெங்க ளாசான்
நார்நனிகொண் டமைத்துவைத்த நற்பாவாஞ் செவியுணவை
நயந்தே விண்ணோர்
சீர்தருதெய் வதவுணவை யவியவியென் றேவெறுத்துச்
செப்பு வாரால்.''

'' இலக்கண விலக்கிய மினிதுற வெவர்க்கும்
கலக்க மறப்புகல் கரிசில் குணுளன்
தன்னிடைக் கற்பவர் மன்னவைக் களத்துள்

என்னையு மொருவனுத் துன்னுவித் தருளி
மெய்யருள் சுரந்த மீனாட்சி சுந்தர
நல்லா சிரியன்."

சவராயலு நாயகரைப் பாடிய பலர் அவர் பிள்ளையவர்களுடைய மாணாக்கரென்பதைத் தம் செய்யுட்களிற் புலப்படுத்தியிருக்கின்றனர்:

வேதநாயகம் பிள்ளை.

"சாதிநா யகனை சவராய லுத்தமனே சவரி யாரென்
சோதிநா யகனும நீதரித்தாய் மீனாட்சி சுந்த ரப்பேர்
நீதிநா யகனன்றே நினக்காசா னுலகமெலா நியமித் தாளும்
ஆதிநா யகனனமே னீபாடி னுன்கவியை யார்மெச் சாரே."

சித்திலிங்கமடம், தி. அ. சிவாநந்த ஸ்வாமிகள்.

"தேமேவு செவ்வந்தி யலர்சிர கிரிக்கண்வரு
சிவனடிய ரிற்சிறந்து
திகழுமீ னாட்சிசுந் தரதேசி கன்வயிற்
செந்தமிழெ லாமுணர்ந்து"

போம்மையபாளையம் பால சித்தானந்தர்.

"மீனாட்சி சுந்தரப்பேர் மேவு தமிழ்க்கடலிற்
றானாட்சி யாமமிர்தந் தானுண்டு—வானுள்
புரந்தரனே மீறுசவ ராயலுபொற் பார்மால்
புரந்தருளு மென்னுரையும் பூண்டு."

சவராயலு நாயகர் பிள்ளையவர்களிடம் தாம் சென்று படித்தற்குரிய உதவியைச் செய்யவேண்டுமென்று தம்மை ஆதரித்த தாசில்தார் அ. சஞ்சீவி நாயகருக்கெழுதிய செய்யுளில் ஒருபகுதி வருமாறு:

*"ஆர்கொள்புகழ் சேர்சிராப் பள்ளியின் மகத்துவ
அகத்திய னெனத்தோன்றிவந்
தவதரித் திட்டமீ னாட்சிசுந் தரகுருவை
அண்டிநற் றமிழையோர்தற்

---

* இச் செய்யுட் பகுதியும் இதற்குமுன் காட்டிய செய்யுட்களும் செய்யுட் பகுதிகளும் 'புதுவை மகாவித்துவான் செ. சவராயலு நாயகருக்குச் சம்பந்தமான பாடற்றிரட்டு' (1905 ஆம்) என்னும் புத்தகத்திலிருந்து அறியப்பட்டன.

காயவழி காட்டவுனே யன்றிவே றிலையென்
றடித்துள மிரங்குமென்றன்
அனுபவ மறிந்தெனக் காதரவே செய்யினை
தகங்களித் திடல்வேண்டுமே.''

சவராயலு நாயகருக்கு இவர் தாம் முன்பு படித்து வைத் திருந்த பழக்கத்தால் தேம்பாவணி முதலிய நூல்களைத் தெளி வாகச் சொல்லிவந்தனர். இவர்பால் அழுக்காறுற்ற சில சைவர் கள், '' இவர் சைவராக இருந்தும் புறச்சமய நூல்களைப் படித்த லும் பாடஞ்சொல்லுதலும் புறச்சமயத்தாருடன் அளவளாவி மாணுக்கராகக் கொள்ளுதலும் தகுதியல்ல '' என்று குறைகூறத் தலைப்பட்டனர். அதனை அறிந்த இவர், அங்ஙனம் குறைகூறி வந்த சிலரும் தம் நண்பர்கள் சிலரும் ஒருங்கிருக்கும்பொழுது, தம் நண்பர்களைப் பார்த்துக் கூறுவாராய், '' நான் தேம்பாவணி யைப் பாடஞ் சொல்லுதலும் கிறிஸ்தவர் முதலிய பிறமதமாணாக் கர்கள் என்பாற் பாடங்கேட்டலும் கூடாத செயல்களென்று சிலர் சொல்லி வருவதாகத்தெரிகிறது. மாணுக்கராக யார் வந் தாலும் அன்போடு பாடஞ் சொல்லுதலையே எனது முதற்கடமை யாக எண்ணியிருக்கிறேன். எல்லாத் தானத்திலும் வித்தியா தானமே சிறந்தது. அன்னமிடுதற்குப் பகியுள்ளவரே பாத்திரர்; அதுபோலப் பாடஞ்சொல்லுதற்கு, படிப்பில் ஆர்வமுடைய யாவரும் பாத்திரர்களே. அன்றியும் தமிழ் நூல் யாதாயிருப்பி னும் அதிலுள்ள சொற்பொருள் நயங்களை உணர்தல் பிழையா காதே! கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரஞ்செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்தன்று. தமிழ் நூல் என்னும் முறையில் யாதும் விலக்கப்படுவது அன்று '' என்று தம் கருத்தைப் புலப் படுத்தினர். குறை கூறியவர்கள் இவருடைய உண்மைக்கருத்தை அறிந்து அடங்கிவிட்டனர்.

வேதநாயகம்பிள்ளை பாடங்கேட்டது.

முன்ஷீப் வேதநாயகம் பிள்ளையின் பெருமையைத் தமிழ் நாட்டார் யாவரும் அறிவார். அவர் இங்கிலீஷ்ப் பாஷையிலும் தமிழ்ப்பாஷையிலும் நல்ல தேர்ச்சிபெற்றுத் திருச்சிராப்பள்ளி ஜில்லாக் கோர்ட்டில் டிரான்ஸ்லேடர் வேலை பார்த்துவந்தார். ஓய்வு நேரங்களில் தமிழ் நூல்களைப்படித்து இன்புறுவதும் படித்

தோர்களைக் கண்டால் நல்ல செய்யுட்களைக் கூறி அவற்றிலுள்ள நயங்களை எடுத்துக் காட்டுவதும் அவர்கள் கூறுவனவற்றைத் தாம் கேட்டு மகிழ்வதும் அவருக்கு இயல்பாக இருந்தன.

தம்முடைய இளமைப் பிராயந்தொடங்கிப் பிள்ளையவர்களையும் இவருடைய தமிழ்க் கல்வியின் வளர்ச்சியையும் செய்யுள்செய்யும் வன்மையையும் அறிந்தும் பிறர் மூலமாகக்கேட்டும் இவருடைய பழக்கத்தைச் செய்துகொள்ளுதல் தமக்கு இன்றியமையாததென்றெண்ணி வலிந்துவந்து மிகப் பழகுவாராயினர்; பல நாளாகத் தாம் படித்த நூல்களிலிருந்த ஐயங்களை நீக்கிக்கொண்டு புதியனவாகச் சில நூல்களைப் பாடங்கேட்டனர். கேட்கும் பொழுது இவரிடத்தில் மிக்க அன்பு அவருக்கு உண்டாயிற்று. எத்தனை விதமாகத் தம்முடைய அன்பை இவர்பாற் புலப்படுத்த வேண்டுமோ அத்தனை வகையாலும் புலப்படுத்தி நடப்பாராயினர். இப்புலவர் பிரானுக்கும் அவர்பால் மிக்க பிரியமும் மதிப்பும் உண்டாயின. அவருக்குச் செய்யுள்செய்யும் பழக்கமும் நன்றாக அமைந்திருந்தது. ஆதலால் அவர் தாம் செய்யும் செய்யுட்களை இவரிடம் நேரிற் சொல்லியும் பிறரைக்கொண்டு சொல்வித்தும் வருவதுண்டு. கேட்ட இவர் அவற்றின் விஷயமாகத் தமக்குத் தோன்றிய கருத்துக்களைத் தெரிவித்துவருவார். ஒருநாள் அவர், தாம் இயற்றிய கீர்த்தனங்களைச் சொல்லிக்காட்டும்படி ஒருவரை அனுப்பியபொழுது அக்கீர்த்தனங்களைக் கேட்டு இவர் மகிழ்ந்து,

"கலைபுகலும் பதமில்லாக் கடவுள்கொளத் தமையடைந்தோர்
களிப்ப நாளும்
தொலைவில்சுவைப் பதமுதவு வேதநா யகவள்ளல்
சூட்டுந் தூய
விலையில்பல பதத்துளொரு பதத்துளொரு பதமுணர்ந்த
மெய்ம்மை யோரத்
தலைமையவ னிருபதமே பெறுவரவ ரெப்பதமுஞ்
சரவல் லாரே"

என்னும் பாடலைச்சொன்னர்.

வேதநாயகம்பிள்ளை செய்த உதவி.

அப்பொழுது கால விசேஷத்தால் மலைக்கோட்டைத்தாயுமானவர் கோயில் விசாரணைக்காகத் தருமபுர ஆதீனகர்த்தரால் நிய

மிக்கப்பட்டிருந்த கட்டனைத்தம்பிரானொருவர் வியவகாரத்திலும் வருவாயிலும் விருப்பமுடைய சிலருடைய தூண்டுதலினால் அக் கோயில் நிருவாகங்களில் தருமபுர ஆதீனத்தலைவருக்கு அடங் காமல் விரோதமாக நடக்க ஆரம்பித்தார். அதனையறிந்த ஆதீ னத்தலைவர் அவர்மேல் வழக்குத்தொடுத்தார். அவ்வழக்கிற் கட்டனைத் தம்பிரானுக்கு மேற்கூறிய சிலர் உதவிபுரிய முன்வந் தார்கள். இந்நிலையில் ஆதீனத் தலைவர் தம்முடைய உரிமையை இங்கிலீஷில் எடுத்து விளக்கி ஒரு விண்ணப்பத்தை விரைவிற் கோர்ட்டாரிடம் கொடுக்கவேண்டி யிருந்தமையால் அவ்விஷயத் தைக் கவனித்து முடிக்கும்படி அவர் பிள்ளையவர்களுக்குத் தக்கவர்களை யனுப்பித் தெரிவித்தார். இவர் அதனை நன்கு எழுதித்தருபவர் வேதநாயகம்பிள்ளையேயன்றி வேறு யாரும் இல்லையென நினைந்து அவரிடமே இதனைத் தெரிவிக்க எண்ணினர்.

இவ்வாறிருக்க, எதிர்க்கட்சியாரும் தமக்குரிய ஆதாரங் களைக் காட்டி ஒரு விண்ணப்பம் வேதநாயகம் பிள்ளையைக் கொண்டு எழுதுவிக்க நினைந்து அவருக்கு பிடுந்த பொருளும் கொடுப்பதென்று நிச்சயித்துக் கொண்டு சென்றார்கள். அச் சமயத்திலே பிள்ளையவர்களும் சென்றனர். சென்று எதிர்க்கட்சி யார்கள் கூடி யிருப்பதையறிந்து வேறிடத்தில் வந்து இருந்து,

"மையேறுங் கண்ணி யொருபாகன் காரிய மற்றிதுதான்
பொய்யே யலமுகிற் கேதுகைம் மாறு பொறையினெடு
மெய்யே யுருக்கொள் புகழ்வேத நாயக வித்தகன்றன்
கையே யுனைப்புகழ் வேன்புகல் வேறிலை கண்டுகொள்ளே"

என்னும் செய்யுளை எழுதியனுப்பிக் குறிப்பாகத் தம்முடைய கருத்தை ஒரன்பர் மூலமாகத் தெரிவித்தனர். அவர் அந்தச் செய்யுளைப் பார்த்து மனமுருகி உடனே எதிர்க்கட்சிக்கார ருடைய வேண்டுகோளை மறுத்து அவர்களை அனுப்பிவிட்டு இவரைப்பார்த்து, "தாங்கள் இவ்வளவுதூரம் சிரமப்படலாமா? செய்யுள் எழுதித் தெரிவிக்கவேண்டுமா? ஒரு வார்த்தை சொல்லி யனுப்பினால் நான் கவனிக்கமாட்டேனா?" என்று சொல்லித் தம் முடைய ஓய்வு நேரங்களில் முழுக்கருத்தையும் அதிலேயே செலுத்தி மிகத்தெளிவாக விண்ணப்பத்தை இங்கிலீஷில் எழுதிக் கொடுத்தனர். அது கோர்ட்டிற் கொடுக்கப்பட்டது. அதனைப்

பார்த்த கோர்ட்டார் உண்மையை அறிந்து வழக்கை நியாயப்படி ஆதீனத்தலைவர் சார்பாக முடிவுசெய்தார்கள்.

பல தக்க கனவான்கள் கூடி மிக்க பொருள் கொடுப்ப தாக முன்வந்தும் அவர்களுக்கிணங்காமல் இவருடைய விருப்பத் தின்படி செய்தது இவர்பால் அவருக்கிருந்த இணையிலா அன் பைப் புலப்படுத்துகின்றதன்றே? இச்செயலால் வேதநாயகம் பிள்ளையிடத்து அதிக நன்மதிப்பும் நன்றியறிவும் இவருக்கு உண் டாயின.

* குளத்தூர்க் கோவை.

அப்பால் வேதநாயகம் பிள்ளையினுடைய அருமை பெருமை களையும் அவர் செய்யுட்சுவையை நன்றாக அனுபவித்தலையும் பாராட்டி அவர்மீது ஐந்திணைக்கோவை யொன்றை இவர் இயற்றி னர். அக்கோவை இயற்றப்பட்ட காலம் பரிதாபிவரு (1853.) இலக் கண விளக்கம் பாடங்கேட்டதற்குச் சமீபகாலமானதால் அது சிறந்த சுவையுடையதாயமைந்திருக்கின்றது. அதன் செய்யுட் டொகை, 438.

அக்கோவைச் செய்யுட்களிற் சில வருமாறு:—

தெய்வத்திறம் பேசல்.

"எறியுங் கலிதன் றலைசாய்த் திடத்தமி ழின்னருமை
அறியும் புருட மணிவேத நாயக வண்ணல்வெற்பிற்
செறியும் படிநம் மிருபே ரையுமின்று சேர்த்ததெய்வம்
முறியும் படியிடை யேசெய்யு மோசற்று முன்னலையே." (உச)

கற்றறிபாங்கன் கழறல்.

"சொற்றது நாட்டுந் துரைவேத நாயக துங்கன்வெற்பில்
உற்றது சொற்றதென் காதா டழல்புக் குலாவலொத்த
திற்றது வென்னிடைக் கிவ்வாறு வாடுவை யேற்கலைகள்
கற்றதுங் கேட்டது நன்றுநன் றுலெங்கள் காவலனே." (சச)

தெய்வநாயகம் பிள்ளை.

பிள்ளையவர்கள் திருச்சிராபுரத்தில் இருக்கையில் வந்து படித்த வர்களுள் தெய்வநாயகம் பிள்ளை யென்பவரும் ஒருவர். அவர்

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, 4611 - 5048.

பிள்ளையவர்களிடம் படித்து மிக்க புகழ்பெற்றவர். அவர் பால் தியாகராச செட்டியாருக்கு அடுத்தபடியான மதிப்பு யாவருக்கும் இருந்துவந்தது. ஆறுமுக நாவலர் பதிப்பித்த திருக்குறள் முதலியவற்றிற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்தவர்களுள் அவரும் ஒருவர். அவர் தாம் பிள்ளையவர்களிடம் கல்விகற்றமையைக் குறித்து ஓரிடத்திற் பின்வருமாறு கூறியுள்ளார்:

* "துரிசிரா திலங்குந் திரிசிராப் பள்ளியிற்
கடன்மருங் குடுத்த தடநெடும் புடவியில்
உற்றநூல் யாவுங் கற்றவ னென்றும்
தோலா நாவின் மேலோர் வகுத்துத்
தந்தருள் பலபிர பந்த மென்பன
எல்லாஞ் சொல்ல வல்லோ னென்றும்
உமிழ்சுவை யாரியத் துற்றபல் புராணமும்
தமிழின்மொழி பெயர்க்கத் தக்கோ னென்றும்
தனையடைந் தவரை நினைதரு தனைப்போல்
வல்லவ ராக்க நல்லதன் னியற்கையாம்
மெலியா வன்பிற் சலியா னென்றும்
மற்றவர் பிறரைச் சொற்றன போலா
துற்ற குணங்கண் முற்ற வுணர்ந்து
செப்பமுள் ளோர்பலர்க் கொப்பயா னுள்ளன
நினைந்துரை செய்வது புனைந்துரை யன்றெனக்
காட்சியின் விளக்கி மாட்சியி னமர்வோன்
கற்றவர் குழுமி யுற்றபே ரவையிற்
கனக்குநுண் ணறிவிலா வெனக்குமோ ரொதுக்கிடம்
தந்தமீ னாட்சி சுந்தரப் பெரியோன்."

ஆரியங்காவற்பிள்ளை.

பின்னொரு காலத்தில் திருநெல்வேலிப் பக்கத்திலிருந்து ஆரியங்காவற் பிள்ளையென்ற சைவ மாணவரொருவர் இவரிடத்துப் பாடங்கேட்க வந்தனர். வந்தவர்களைப் பரீட்சித்து அவர்களுடைய தகுதிக்கேற்பக் கற்பிப்பது இவருக்கு வழக்கமாதலின் அவரை அவ்வாறு பரீட்சிக்கத்தொடங்கி ஒருபாடல் சொல்லும்படி

---

* மீ. பிரபந்தத்திரட்டு, 2809.

வினவினர். அவர்,

"நீர்நாடு நீங்கியுமே நீங்காது தனைத்தொடரும்"

என்ற தொடக்கத்தையுடைய திருக்குற்றாலப் புராணத்துள்ள மந்த மாருதச் சருக்கச் செய்யுளொன்றைக் கூறினர். அதனைக் கேட்கும் பொழுதே இவருடைய செவியும் உள்ளமும் குளிர்ந்தன. அதனை மறுமுறை சொல்லும்படிசெய்து கேட்டபின்பு, "இச் செய்யுள் எந்த நூலிலுள்ளது?" என்று கேட்டார். அவர் "திருக்குற் றாலப் புராணத்திலுள்ளது" என்றார். பின்பு அச்செய்யுளின் சந்தர்ப்பத்தையும் வரலாற்றையும் அவரா லறிந்துகொண்டு அச் செய்யுளைத் திரும்பத்திரும்பச் சொல்லச்செய்தார். அந்நூலி லிருந்து வேறு சில செய்யுட்களையும் சொல்லச்சொல்லிக் கேட்டு அவற்றின் சொல்லினிமை பொருளினிமைகளில் ஈடுபட்டு இன்புற் றார். பின்பு, "அந்நூலாசிரியர் யார்?" என்றபொழுது அவர், "மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர்" என்றனர். அது தொடங்கி அப்புராணத்தைப் பெற்றுப் படித்துப்பார்க்க வேண்டு மென்ற ஆவல் இவருக்கு உண்டாயிற்று.

ஆரியங்காவற்பிள்ளை தினந்தோறும் இவரிடம் பாடங்கேட்டு வந்தார். ஒவ்வொன்றையும் அழுந்திக் கேட்பதும் செய்யுள் செய்யும் பயிற்சியும் அவர்பால் இருத்தலையறிந்து இவர் அவ ரிடத்து மிக்க அன்பு பாராட்டிவருவாராயினர். மற்ற மாணாக்கர் களும் அவர்பாற் பிரியமுடையவர்களாகவே இருந்தார்கள். அய லூரிலிருந்து வந்தவராதலின் அவர் இவருடன் இடைவிடாமல் இருந்து வந்தார்.

ஒருநாள் இரவில் அவருக்குப் பாடஞ்சொன்ன பின்பு வழக் கம் போலவே தெருத்திண்ணையில் அவரைப் படுக்கச்சொல்லி விட்டு இடைகழி(ரேழி)யில் இவர் சயனித்துக்கொண்டார். அப் பொழுது நிலவு நன்றாக எறித்தது. சிலநேரமானபின் வழக்கம் போலவே இவர் விழித்துக்கொண்டார். அப்பொழுது அம் மாணாக்கர் படுத்துக்கொள்ளாமல் தூணிலே சாய்ந்துகொண்டு இருத்தலைச் சன்னல் வழியாகக் கண்டனர். பிறகு சிலநேரம் தூங்கிவிட்டுத் திரும்ப விழித்துக்கொண்ட காலத்தும் அவர் நித் திரை பண்ணாமல் அவ்வாறே இருந்தமையையறிந்து, "ஏன் இவர் இப்படி இருக்கிறார்?" என்று நினைந்து அவர் நோக்கத்தை அறிவ

தற்குப் படுத்தபடியே விழித்தவராய்க் கவனித்துக் கொண்டே இருந்தார். அப்பொழுது அந்த மாணாக்கர் வாக்கிலிருந்து,

"*விடவாளே வென்ற விழியாளைப் பூமியின் மேலதிர
கடவாளைப் பெண்கள்தம் நாயக மாமொரு †நாயகத்தை
மடவாளை யென்னுள் வதிவாளை யின்ப வடிவையென்சொற்
கடவாளை யான்றெய்வ மேயென்று போயினிக் காண்பதுவே"

என்னும் செய்யுள் எழுந்தது. அவர் அதனை மீட்டும் மெல்லச் சொல்லி மனம் உருகிக்கொண்டிருந்தார். அதனைக்கேட்ட இவர் அவருக்கு உள்ள கவலை இன்னதென்பதை யறிந்து தாம் அன்று தெரிந்து கொண்டவற்றை வெளியிடாமலே இருந்துவிட்டுச் சில நாளைக்குப் பின்பு அவரிடத்து இயல்பாகப் பேசுங்காலங்களில் அவருடைய ஊரை ஒருதினத்தும், தாய் தந்தையர் வரலாற்றை ஒருதினத்தும், விவாகம் நடைபெற்றதா இல்லையாவென்பதை ஒருதினத்தும் மெல்ல மெல்ல விசாரித்து அறிந்து கொண்டனர். அவ்வாறு விசாரித்ததனால் அவருடைய தந்தையார் இருப்பிடமும், அவருக்கு விவாகமாகிச் சில மாதங்களேயாயின வென்பதும் தெரியவந்தன. பின்பு அவருடைய தந்தையாருக்கு, "உங்களுடைய குமாரர் இங்கே சௌக்கியமாகப் படித்துக்கொண்டு வருகிறார். சிறந்த புத்திமானாகவும் காணப்படுகிறார். அவருடைய நற்குண நற்செய்கைகள் மிகவும் திருப்தியை உண்டுபண்ணுகின்றன. ஆனாலும் ஆகாரம் செய்து கொள்வதற்கு வசதியான இடம் இல்லாமையினால் அவருடைய தேகம் வரவர மெலிந்து வருகிறது. ஆதலால் அவருடைய தாயாரையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு நீங்கள் இங்கு வந்து சில மாதங்கள் இருந்து அவருக்கு ஆகாராதி சௌகரியங்களைச் செய்வித்துவந்தால் அவர் சௌக்கியமாகவிருப்பதன்றி நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெறுவார். இங்கே வந்துகாலங்கழிக்க வேண்டியதைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலையுறவேண்டாம். இங்கே எல்லா வசதிகளும் அமைக்கப்படும். உங்களுடைய வரவை எதிர் பார்க்கிறேன். நீங்கள் வருவதைப்பற்றி முன்னதாக எனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்று அம்மாணாக்கரறியாமலே

---

* இதனைப் போன்ற வேறு 2-பாடல்கள் உண்டு; அவை இப்பொழுது கிடைக்கவில்லை. † நாயகமென்பது அவர் மனைவியின் பெயர்.

ஒரு கடிதம் எழுதியனுப்பிவிட்டு இவர் வழக்கம்போல் அவருக்குப் பாடஞ் சொல்லிவந்தார்.

சில தினங்களுக்குப் பின்பு ஒருநாள் பகலில் கந-நாழிகைக்கு மேல் அவருக்கும் வேறு சிலருக்கும் பாடஞ் சொல்லிக்கொண்டு தம்முடைய வீட்டுத் திண்ணையில் இவர் இருக்கையில் மேலே குறிப்பிட்ட அவருடைய தந்தையார் தாயார் மனைவியாகிய மூவரும் இவருடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வந்தனர். அவர்கள் இரண்டு மூன்று வீட்டிற்கு அப்பால் வரும்போதே ஆரியங்காவற்பிள்ளை கண்டு திடீரென்று கீழே குதித்துச் சென்று அவர்களைக் கண்டு, "எப்பொழுது இங்கே வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்? நான் எழுதாமலிருக்கையில் நீங்கள் எப்படி வரலாம்?" என்று கோபமுற்றுக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது, இவர் அவர்கள் இன்னராக இருக்கலாமென்று ஊகித்தறிந்துகொண்டு எழுந்துசென்று அம் மாணவரைக் கையமர்த்தி, "தம்பி! என்ன கோபித்துக்கொள்ள வேண்டும்? உம்முடைய போஷணைக்காகத் தான் நான் எழுதி இவர்களை வரச்செய்தேன். சும்மா இரும்" என்று சொன்னர். அவர்கள் வரக்கூடுமென்று எதிர்பார்த்து முன்னரே அமைத்திருந்த ஒரு விடுதிக்கு அவர்களை அனுப்பி ஆகாரம் முதலியன செய்விக்குமாறு சொல்லியனுப்பினர். அப்பால் தாம் சென்று அவர்களுக்கு வேண்டியவற்றைக் குறைவின்றி அமைத்துக் கொடுத்துத் தந்தையாரைத் தனியே யழைத்து, "உங்களுடைய குமாரர் உங்களைக் கோபித்துக்கொண்டாலும் நீங்கள் அதனைப் பொருட்படுத்தாமற் பக்குவமாகச் சமாதானம் சொல்லிவிடுங்கள். அவர் மிக்க புத்திசாலி; விருத்திக்கு வரக்கூடியவர். அவர் இந்நகரத்தில் தனியாக இருத்தலைவிடக் குடும்பத்தோடு இருந்தால் நன்மை உண்டாகுமென்று எனக்குத்தெரிந்ததனால்தான் உங்களை வருவித்தேன்" என்றுமட்டும் சொன்னர். அவரும் இவருடைய பேரன்பைப் பாராட்டினர். தம் குமாரர் படிக்கும்வரையில் தாய் தந்தையர் முதலியோர் உடனிருந்து வந்தார்கள். அவசியமான காலத்தில் அம்மாணவருடைய தந்தையார்மட்டும் தம்மூருக்குச் சென்று வருவார். இவ்வாறு சில மாதங்கள் அங்கிருந்து கேட்க வேண்டிய பாடங்களைக் கேட்டுக்கொண்டு தமிழில் தக்க பயிற்சி பெற்று ஆரியங்காவற்பிள்ளை தம் குடும்பத்துடன் ஊர் போய்ச்

சேர்ந்தனர். பின்பு அடிக்கடி வந்து இவரிடம் வேண்டியவற்றைத் தெரிந்துகொண்டுசெல்வார்.

இவ்வாறு, தம்முடைய மாணவர்களுக்கு எந்த எந்த வகையிற் குறைகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் தாமே அறிந்து ஆராய்ந்து தீர்க்கும் அரிய தன்மை இக்கவிஞர் கோமான்பால் இருந்து வந்தது.

அழகிரி ராஜு.

இவரிடம் சில வருடங்கள் இருந்து பாடங் கேட்டுச்சென்றவர்களுள் இராமநாதபுரம் அழகிரி ராஜு என்பவரும் ஒருவர். அவர் தமிழ் வித்துவான்கள் நிரம்பியுள்ள இராமநாதபுரத்தவராதலால், இயன்ற வரையில் நல்ல தமிழ்ப்பயிற்சியுள்ளவராக இருந்தார். ஒருநாள் அவர், பயிர்களுக்கு ஜலம் பாய்ச்சுதற்கு ஒரு கிணற்றிலிருந்து ஏற்றம் இறைத்துக்கொண்டிருக்கையில் சரியாக அவர் அவ்வேலையைச் செய்யாதது கண்டு உடன் இருந்த அவருடைய உறவினர் ஒருவர் மிகவும் கோபங்கொண்டு, "நீ என்ன சுத்த முட்டாளாக இருக்கிறயே!" என்றார். அதனைக்கேட்டு அவர், "இவ்வாறு உங்களோடு இருந்ததனாலேயே நான் முட்டாளாக ஆனேன். தமிழ்க் கல்வியை இனி நன்கு பயின்று தேர்ச்சியுற்று இங்கு வருவேனேயன்றி அதற்கு முன்பு வருவதில்லை" என்று சத்தியஞ் செய்துவிட்டு அவ்வூரிலிருந்த வேலாயுதக் கவிராயர் வாயிலாகப் பிள்ளையவர்கள் பெருமைகளையும் மாணவர்களுக்கு அன்புடன் தடையின்றி இவர் பாடஞ்சொல்லிவருதலையும் அதற்கு முன்பே அறிந்தவராதலால் உடனே புறப்பட்டுத் திருச்சிராபுரம் வந்து இவரிடம் பாடங்கேட்டுவந்தனர். படிக்கவேண்டுமென்ற ஊக்கமுள்ளவராக இருந்ததனாற் பல நூல்களைக் கற்று விரைவில் நல்ல பயிற்சியையும் பாடஞ்சொல்லும் திறமையையும் அடைந்தார். சில காலத்திற்குப் பின் தம்மூருக்குச் சென்று, "இனி மேற் கல்வியினாலேயே பிழைக்கவேண்டும்" என்ற விரதம் பூண்டு சிலருக்குப் பாடஞ் சொல்லி வருவாராயினர். அங்ஙனம் சொல்லி வருகையில் அவருடைய திறமையால் பாலவனத்தம் ஜமீந்தாராகிய ஸ்ரீமான் பாண்டித்துரைஸ்வாமித் தேவரவர்களுக்கு இளமையில் தமிழ் ஆசிரியராக அமர்த்தப்பெற்றார். இப்போதுள்ள மதுரைத்தமிழ்ச்சங்கத்து ஸ்தாபகரும், அருங்கலை விநோதருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள், "இப்பொழுது

தமிழ்நாட்டில் உள்ள தமிழ்ப் பண்டிதர்களிற் பெரும்பாலோர் பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களும் மாணாக்கர் பரம்பரையைச் சார்ந்தவர்களுமே. எனக்குத் தமிழாசிரியர்களாக இருந்த நால்வர்களில், பிள்ளையவர்களுடைய மாணாக்கர்கள் மூவர்; அம்மூவர் அழகிரி ராஜாவும் மதுரை இராமசாமிப் பிள்ளை (திருஞான சம்பந்தபிள்ளை)யும் திருவாவடுதுறையாதீன வித்துவானுகிய பழனிக்குமாரத் தம்பிரானவர்களும் ஆவர். அவர்களுள் அழகிரி ராஜா என்பவர் பாடங் கற்பிக்கும் அழகும் தமிழ்நயத்தைச் சுவைபடப் புலப்படுத்தும் விதமும அன்புடைமையும் சொல்லியடங்குவன அல்ல; எனக்குத் தமிழிற் பிரீதியுண்டானது அவராலேயே. பிள்ளையவர்களுடைய குண விசேடங்களையும் பாடல் நயங்களையும் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பார்'' என்று என்னிடத்திலும் வேறுபலரிடத்திலும் பிற்காலத்திற் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள்.

இங்ஙனம் அவ்வப்போது வந்துவந்து சிலநாள் இருந்து பாடங்கேட்டுப் பயன்பெற்றுச் சென்றவர் பலர்.

---

17. இரண்டாவது முறை சென்னைக்குச் சென்றது.

சென்னைக்குச் சென்றது.

சென்னையிலிருந்த கா. சபாபதி முதலியார் முதலியவர்கள் இவருடைய கல்வி வளர்ச்சியைக் கேள்வியுற்று இவரைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பமுடையவர்களாய் இவருக்கு எழுதும் கடிதங்களில் தங்கள் கருத்தைக் குறிப்பித்துவந்தார்கள். இவருக்கும் அவ்வாறே அவர்களைக்கண்டு மீண்டும் அளவளாவவேண்டும் என்னும் ஆவல் இருந்தது. அதனால் சென்னைக்குப் புறப்பட்டு இடையிலேயுள்ள பட்டீசுவரம், திருவாவடுதுறை, தருமபுரம், சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு சில வாரங்களில் சென்னை வந்து சேர்ந்தார். அங்கே சபாபதி முதலியார் முதலியோர்களால் வரவேற்கப் பெற்றனர். தாண்டவராயத் தம்பிரானவர்களைக் கண்டு ஸல்லாபம்

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச் சென்றது.கடிகை

செய்துகொண்டும் மற்ற வித்துவான்களோடு பழகி இன்புற்றும் வந்தனர். திரிசிரபுரம் சென்ற பின்பு இவர் இயற்றிய காப்பியங் களிலும் பிரபந்தங்களிலும் உள்ள செய்யுட்களை அவர்கள் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தனர்.

* சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.

அப்பொழுது திருமயிலைத் திருக்குளத்தின் தென்கரையி லுள்ளதும் இப்பொழுது சித்திரச் சத்திரமென்று வழங்கப் பெறு வதுமாகிய சத்திரத்தைக் கட்டுவித்து அதற்குப் பலவகையான வருவாய்களையும் ஏற்படுத்திப் புகழ்பெற்று விளங்கிய வியாஸர் பாடி விநாயகமுதலியார் மீது கா. சபாபதி முதலியார் முதலியவர் கள் பல செய்யுட்கள் இயற்றிப் பாராட்டினர். இவரையும் பாடும் படி கேட்டுக்கொண்டனர். அவர்கள் விருப்பத்தின்படி இவர் அச் சத்திரத்தின் பெருமையைச் சிறப்பித்து 100-விருத்தங்களடங் கிய மாலையொன்று இயற்றிப் பலபுலவர்களுக்கு இடையே யிருந்து அரங்கேற்றினர். அம்மாலை சித்திரச்சத்திரப் புகழ்ச்சி மாலை யென்று பெயர்பெறும். அந்நூலைப் பாராட்டி, சபாபதி முதலியார் முதலியவர்கள் கொடுத்த சாத்துக்கவிகள் பல அந் நூலின் பெருமையைப் புலப்படுத்தும். அதிலுள்ள செய்யுட் களுட்சில வருமாறு :

"தெருள்பெற்றான் வியாசநகர் விநாயகமா லதற்கேற்பச்
செயிர்தீர் மிக்க
பொருள்பெற்ற னதற்கேற்ப மயிலையிற்சத் திரங்கட்டிப்
புகழ்சால் பெம்மான்
அருள்பெற்ற னிவனன்றிப் பொருள்பெற்றும் அறஞ்செய்யா
அவனி யுள்ளார்
மருள்பெற்றார் சிறுமைபெற்ற ரின்னுமென்பெற் றாரென்னின்
வசைபெற் றாரே."

"கருதரிய புகழ்மயிலைக் காபாலி தீர்த்தநெடுங்
கரையோர் நான்குட்
பொருவருகீழ் கரைகபா லீச்சரத்தா லேக்கழுத்தம்
பூண்டு மேவும்

---

* ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் பிரபந்தத்திரட்டு, 3954-4083.

அருமைகொள்தென் கரைவிநா யகமுகில்சத் திரத்தாலஃ
தடையு மற்றை
இருகரையு மென்செய்வா மென்செய்வா மென்றேங்கி
யிருக்கு மாலோ.”

“நனையமலர்ப் பொழின்மயிலை விநாயகமால் சத்திரத்தில்
நலஞ்சா லோவர்
வினையமுற வாய்ந்தமைத்த வவனுருவப் படமொருபான்
மேவி வைகும்
அனையவன்பாற் பேசவரு மறையவரப் படத்தினைக்கண்
டாசி கூறித்
தினையளவும் விடார்மொழிய வவனருகே யிருந்துநகை
செய்வன் மாதோ.”

விநாயக முதலியார் அந்தப் பிரபந்தத்திற்குப் பரிசிலாக நூறுவராகன் இவருக்கு ஸம்மானஞ் செய்தனர். அத்தொகை இவர் சென்னையிலிருந்து காலங் கழிப்பதற்கு அனுகூலமாக இருந்தது. அந்தப் பிரபந்தம் பின்பு நளவருஷ சித்திரைமீ (1856) பதிப்பிக்கப்பெற்றது. பின் விநாயகமுதலியார்மீது இவர் சில தனிச் செய்யுட்களும் இயற்றினர்.

* வியாசைக் கோவை.

இப்படியிருந்து வருகையில் இவர்செய்த பல செய்யுட்களைக் கேட்டுவந்த கா. சபாபதி முதலியாரும் பிறரும் ஒருசமயம் வேதநாயகம் பிள்ளையின்மீது இவர் இயற்றிய குளத்தூர்க் கோவையிற் சில செய்யுட்களைக் கேட்டு இன்புற்று விநாயக முதலியார் மீதும் ஐந்திணைக் கோவை யொன்று செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர்கள். அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கி அவ்வண்ணமே செய்யத்தொடங்கி நூறுசெய்யுட்கள் செய்து முடித்தனர். அவற்றைக்கேட்ட விநாயக முதலியார் பெரிதும் மகிழ்ந்து விரைவில் நிறைவேற்றித் தரும்படி கூறி ரூபாய் நானூறு பரிசிலளித்தனர். பின்பு அக்கோவையைத் திருச்சிராபுரம் போய் முடித்தனுப்புவதாகக் கூறினர். இவருடைய கட்டளையின்படி அக்கோவையின் எஞ்சிய பகுதி சி. தியாகராச செட்டியாரால் இயற்றப்பெற்றது. அக்கோவை சம்பந்தமான ஒருசெய்தியை இங்கே குறிப்பிடுகிறேன் :

---

* மீ. பிரபந்தத்திரட்டு, 4160-4609.

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச்சென்றது. ஈசுக

தியாகராசசெட்டியார் உபகாரச்சம்பளம் பெற்றுக்கொண்டு உறையூரில் இருந்தபொழுது அவரைப் பார்ப்பதற்கு நான் சென்றிருந்தேன். அப்போது ஒருநாள், "ஐயா அவர்களும் நீங்களும் இயற்றிய வியாசைக்கோவையை நான் பார்த்ததில்லை. இதுவரையில் அது கிடைக்கவில்லை. தங்களிடம் உண்டோ?" என்றேன். "ஓர் அச்சுப்பிரதியே என்னிடம் இருக்கிறது. அதனைக் கொடுப்பதற்கு என்மனம் துணியவில்லை" என்றார் செட்டியார். நான், "படித்துவிட்டுத் தந்துவிடுவேன்" என்றேன். அவர் அப்பால் அதனைக் கொண்டுவந்து கொடுத்தார். அவர் முன்னிலையில் ஒருநாட் காலை தொடங்கி அதனைப் படித்துப் பொருள்கேட்டுவந்தேன். அவர் கடினமான இடங்களுக்குப் பொருள்சொல்லிக் கொண்டுவந்தார். நூறுபாடல்கள் ஆனவுடன் திடீரென்று அவர், "இனிமேல் வாசிக்கவேண்டாம்; நிறுத்திவிடவேண்டும்" என்றார். அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் விளங்கவில்லை; "ஏன் நிறுத்தச்சொல்லுகிறீர்கள்? நேரமாக வில்லையே. இன்னும் சில பாடல்கள் படிக்கலாமே. நல்ல இடமாக இருக்கிறதே" என்றேன். "இல்லை. உங்களுக்கு என்னிடத்தும் என் பாட்டினிடத்தும் மிக்க மதிப்புண்டு. இனி, மேலே வாசித்தால் அந்த மதிப்புக் குறைந்துவிடும்" என்றார். "என்ன காரணம்?" என வினவினேன். "இதுகாறும் உள்ள பாடல்கள் ஐயா அவர்கள் பாடியவை; இதற்குமேலுள்ளவை அவர்களுடைய கட்டளையின்படி நான்செய்தவை. அவர்களுடைய இனிய செய்யுட்களை வாசித்தபின் தொடர்ந்து என்பாட்டுக்களையும் வாசித்தால் என் யோக்கியதை வெட்டவெளியாய்விடும். அமிர்தத்தையுண்டவன் பிண்ணாக்கை உண்டதுபோலிருக்கும்" என்று சொல்லிவருந்தினர்; அப்பொழுது அவர் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. பிள்ளையவர்களது கவிச்சுவையை நன்கு அறிந்து அதில் ஈடுபட்டவர்களுள் செட்டியார் முதல்வரென்பதும் அந்நூலின் சிறப்பும் இதனாலும் வெளியாயின.

அக்கோவைப் பாடல்களிற் சில வருமாறு:

தலைவன் தலைவியைப் புகழ்தல்.

"புரவோன் கவிஞர்வைப் பாளென் விநாயக பூபனெனும்
உரவோன் வரையிவர் தம்வாண் முகத்தெழி லுட்சிறிதா
தரவோ னிரந்து கொளத்திரி தன்மையிற் றூனலவோ
இரவோ னெனும்பெயர் பெற்ற னுபதி யென்பவனே."

தலைமகன் மறுத்தல்.

"நீர்வேட் டடைந்திரந் தோரைப் பிரமற்கு நேடரிய
ஆர்வேட்ட வேணிப் புனல்கொண்டுண் பாயென் றறைதலொக்கும்
பார்வேட்ட சீர்த்தி விநாயக மால்வரைப் பான்மொழியாய்
தார்வேட்ட மங்கையை நீவரைந் தெய்தென்று சாற்றியதே."

திருமயிலைப்புராணம் செய்யத் தொடங்கியது.

விநாயக முதலியார் இவர் செய்த தியாகராசலீலை, உறையூர்ப்புராணம் முதலியவற்றைக்கேட்டு வியந்து, "திருமயிலைக்கு நீங்கள் ஒரு புராணம் செய்யவேண்டும்" என்று வற்புறுத்திக் கூறி அத்தலத்தின் வடமொழிப் புராணத்தையும் கொடுத்தனர். அக்காலத்தில் திருமயிலைக் கைக்கோளத் தெருவில் இருந்த சாமி முதலியாரென்னும் அன்பர் ஒருவர், "இப்புராணத்தைச் செய்து முடித்தால் விநாயக முதலியார் தக்க ஸம்மானம் செய்வார்; அன்றியும் நாங்களும் எங்களாலியன்றதைச் செய்வோம்" என்று நூறு ரூபாய் செலவுக்குக் கொடுத்தார். அவர்களுடைய வேண்டுகோளின்படி பாயிரமும் நாட்டுப்படலம் நகரப்படலங்கள்மட்டும் செய்யப்பட்டன. அப்பகுதி இப்பொழுது கிடைக்கவில்லை. அதிலுள்ள சில அருமையான பாடல்களை நான் கேட்டிருக்கிறேன்.

இச்செய்தி நடைபெற்றது இவரது 39-ஆம் பிராயத்திலாகும்.

குளத்தூர் முதலிய இடங்களுக்குச் சென்றது

இவர் இங்ஙனம் சென்னையில் இருந்துவருகையில், சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் ஆகியவர்கள் பெரும்பாலும் தங்கித் தமிழை அபிவிருத்தி செய்தும் பலருக்குப் பாடஞ்சொல்லியும் தமிழ் நூல்களை இயற்றியும் விளங்கிய இடங்களைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் இவருக்கு உண்டாயிற்று. உண்டாகவே விநாயகபுராணம் அரங்கேற்றப்பட்ட இடமாகிய சென்னை ஐயாப்பிள்ளைதெருவிற் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ பிரஸந்ந விநாயகரைத் தரிசித்தார்; விநாயக புராணம் செய்வித்த சிதம்பர முதலியாரென்பவரின் பரம்பரையினராகிய ஒருவரால் அழைக்கப்பெற்றுக் குளத்தூர் சென்றார். அங்கே கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சோமேசரையும் ஸ்ரீ அமுதாம்பிகையையும் தரிசனம் செய்தார். அவர்கள் இருந்து

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச்சென்றது. ஈசுஉ

வந்த மடத்திற்றங்கினர். அவர்களுடைய பெருமையை ஆண்டுள்ளார்க்கெல்லாம் எடுத்துரைத்தார். "சிவஞான முனிவர், சோமேசர் முதுமொழி வெண்பாவும் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழும் குளந்தைப் பதிற்றுப்பத்தந்தாதியும் இயற்றுவதற்கும் ஸ்ரீ கச்சியப்ப முனிவர் விநாயக புராணம் செய்தற்கும் அவர் பெரும்பாலும் வாசம் செய்வதற்கும் இடமாகவிருந்த இவ்வூர் என்ன புண்ணியம் செய்ததோ? இந்தப் பெருமையைப் பெரிய நகரமும் பெற்றிலதே!" என்று மனமுருகினர்; சில நாள் அங்கிருந்தனர்.

அப்பால் தொட்டிக்கலைக் கேசவ முதலியார் பரம்பரையினராகிய கிருஷ்ணசாமி முதலியாரால் அழைக்கப்பெற்றுத் தொட்டிக்கலை சென்றார். அங்கே முற்கூறிய சிவஞான முனிவர் முதலிய மூவரும் இருந்த மடத்தையும் அவ்வூரிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செங்கழுநீர் விநாயகரையும், ஸ்ரீ சிதம்பரேசுவரரையும், ஸ்ரீ சிவகாமி அம்மையையும், ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளையும் தரிசனம் செய்தார். * சிவாலயத்தின் முன்மண்டபத்திற் சிலாரூபமாக எழுந்தருளியிருக்கும் சிவஞான முனிவரையும் தரிசித்தார். சிலதினம் அங்கே அவர்களால் உபசரிக்கப்பட்டுத் தங்கியிருந்தார்.

---

* "ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலா
முற்றபே ராகரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியி லற்புதத்
தொருவடிவு கொண்டருளியே
பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகையாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேருவாகி
ஆதரித் தடியேங்க ளுண்ணத் தெவிட்டாத
வமிர்தசா கரமாகியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மணிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே."

* சிதம்பரேசர் மாலை

அங்கே இருக்கும்பொழுது சிவஞான முனிவராலே இயற்றப் பட்ட செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், கலிசைப் பதிற்றுப் பத்தந்தாதி, சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலிசைச் சிலேடை வெண்பா, கலிசைக்கோவை முதலியவற்றின் நயங்களை அன்பர் களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது கிருஷ்ண சாமி முதலியார், "இந்த ஸ்தலத்துச் சிதம்பரேசுவரர்மீது ஒரு சந் நிதிமுறை சுப்பிரமணிய முனிவராற் செய்யத் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாமல் நின்றுவிட்டமையால் தாங்கள் அதைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று வேண்டினர். அவ்வண்ணமே இவர் செய் யத் தொடங்கிச் சிதம்பரேசர் மாலையொன்றைமட்டும் அங்கே செய்து முடித்தனர். பின்பு திரிசிரபுரம் போய் எஞ்சியவற்றைச் செய்தனுப்புவதாகச் சொல்லி விடைபெற்றுத் திரும்பினர். பின்பு அச்சந்நிதிமுறை முற்றுப்பெறவில்லை. சிதம்பரேசர் மாலையி லுள்ள சில செய்யுட்களின் பகுதிகள் வருமாறு :

"வட்டநாண் மலர்மேற் கடவுளென் றலைமேல்
வருந்துறக் கடவையென் றெழுதி
இட்டதீ யெழுத்து நீரெழுத் தாதற்
கெத்தவஞ் செய்துளே னடியேன்" (கூ)

"என்றுமை யாற்றை மேவுமென் மனதின்
இணையிலை யாற்றைமே வாது
சென்றுயர் தில்லை தரிசித்த தில்லை" (எஉ)

"மறைவனங் கொடிய பாவியேன் விழிக்கு
மறைவன மாயின தாரூர்
அறையருள் பெறுவான் புகுதயா ளூரு
ராறெனி னஞ்சுவன் மூழ்க" (எக)

"குதித்தநீர்க் கோலக் காவுறேன் வீணே
கோலக்காத் தோறுமுற் றுழல்வேன்" (எந)

"அரும்பிய மலர்நீர் வாஞ்சிய மொருரா
ளாயினும் வாஞ்சியம்" (எசு)

---

*ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 2915 - 3015.

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச்சென்றது. ஈசுரு

"உடற்பரங் குன்ற நின்பரங் குன்ற
முற்றிரு காற்றிரு ழேன் கருவூர்
விடற்கரு மாசை கொண்டெழேன் கருவூர்
விடற்கரு மாசைமிக் குடையேன்" (எஎ)

"நெற்படு பழனம் பற்பல வேண்டி
நின்றன னீயினி திருக்கும்
மற்படு பழனம் வாஞ்சியேன் கொடிய
வஞ்சக னல்லனே கடையேன்" (அடு)

திரிசிரபுரம் மீண்டது.

இப்படியே அம்முனிவர்கள் இருந்த இடங்களையெல்லாம் இடையிடையே பார்த்துக்கொண்டு சென்னை வந்து சேர்ந்து சிலநாள் தங்கி அங்கிருந்த வித்துவான்களோடு பழகிக் கிடைத்த நூல்களைச் சேகரித்துக்கொண்டு பின்பு எல்லாரிடமும் பிரியா விடைபெற்றுச் சென்னையைவிட்டுப் புறப்பட்டார். இடையிலே உள்ள பல ஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு வருகையில் திருப்பாதிரிப்புலியூரில் சிலநாள் தங்கினர். அப்பொழுது இவருக்குத்தக்க உபசாரங்களைச்செய்து ஆதரித்தவர் இவர் மாணாக்கராகிய சிவசிதம்பர முதலியாரென்பவர். பின்பு அவ்விடத்தினின்றும் நீங்கித் திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். வந்து வழக்கம் போலவே பாடஞ் சொல்லுதல் முதலியவற்றைச் செய்து வருவாராயினர்.

தாண்டவராயத் தம்பிரானவர்கள்பால் பேரூர்ப்புராணம் பெற்றது.

ஆனந்த வருஷத்தில், சென்னையிலிருந்த தாண்டவராயத் தம்பிரானவர்கள் கல்லிடைக்குறிச்சி செல்வதற்குப் பயணமாகித் திரிசிரபுரம் வந்து மௌனஸ்வாமிகள் மடத்தில் சிலநாள் தங்கினர். அவர் வரவையறிந்த இவர், மாணாக்கர்களுடன் சென்று தரிசித்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அப்போது இவர், ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய பேரூர்ப் புராணம் தம்பாலில்லையென்றும் அதனைப் படித்து இன்புற வேண்டுமென்னும் விருப்பம் தமக்கு உள்ளதென்றும் அதனை வருவித்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அவர், "இப்பொழுது என் கையில் அது வந்துள்ளது. ஆனால் கல்லிடைக் குறிச்சிக்கு அதனைக் கொண்டு போகவேண்டியவனாக விருக்கிறேன்" என்றார்.

மீ: அதைப் படித்துப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் அடியேனுக்கு மிகுதியாக இருத்தலால் *அங்குத்தி கொடுத்தருளு மாயின் விரைவிற் பிரதி செய்துகொண்டு கொடுத்துவிடுவேன்.

தாண்டவ: நான் இன்னும் சில தினங்களே இங்கு இருப் பேன். அதற்குள் நீங்கள் எப்படிப் பிரதி செய்துகொள்ள முடி யும்? ஒரு மாதமாவது அதற்கு வேண்டாமா?

மீ: வேண்டாம். அங்குத்தி குறிப்பிடும் காலத்திற்குள்ளா கவே பிரதி செய்து கொடுத்துவிடுவேன். அதைப்பற்றி அங்குத் திக்குச் சிறிதேனும் கவலை வேண்டாம்.

தாண்டவராயத் தம்பிரானவர்கள், "நான் பாடஞ் சொல் வதற்கு வைத்திருக்கும் பிரதியாதலால் அவசியம் கொண்டு போக வேண்டும்" என்று சொல்லி அதனைக் கொடுத்தனர். உடனே அதனை இவர் வாங்கிச்சென்று தம்முடைய மாணாக்கர் களுள் பணியோலையில் எழுதக்கூடியவர்கள் சிலரைத் தேர்ந்து அழைத்து, அப்புத்தகத்திலுள்ள ஏடுகளைப் பிரித்து அவர்களிடம் கொடுத்து ஒரு பாகத்தைத் தாம் வைத்துக்கொண்டு எழுதுவித் தும் எழுதியும் சில தினங்களுள் முடித்து உடனுடன் ஒப்பு நோக்கிவிட்டுத் தம்பிரானவர்கள் புறப்படுவதற்குள் பிரதியைச் சேர்ப்பித்துவிட்டார்.

இடையிடையே மாணாக்கர்களுடன் போய்த் தாண்டவராயத் தம்பிரானவர்களைத் தரிசித்து வருவதுண்டு. அக்காலத்தில் மாணாக்கர்களுள் ஒவ்வொருவரையும் அவர் பரீட்சித்து அவர்கள் பாடங்கேட்ட முறையைத் தெரிந்து சிலகாலத்துப் பல நூல்களை மாணாக்கர்கள் ஒழுங்காகப் பாடங்கேட்டிருத்தலையும் இவர் வருத்த மின்றி இடைவிடாமற் பாடஞ்சொல்லிய அருமையையும் பற்றி மிகவும் வியப்புறுவாராயினர். அவர் ஒவ்வொன்றையும் சிரமப் பட்டு ஆசிரியரிடம் கற்றவராகையால் அவருக்கு இவருடைய அரு மை நன்கு புலப்பட்டது. 'இவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து பாடஞ் சொல்வாராயின் இவருடைய கல்வி பலர்க்குப் பயன்படக்கூடும்; ஆதரவும் ஊக்கமும் இவருக்கும் வளர்ச்சியடை யும்' என்று அவர் எண்ணினர்.

---

*தாங்கள் என்னும் பொருளுடைய இச் சொல்லைத் தம்பிரான் மார்களோடு பேசும்பொழுது கூறுதல் சம்பிரதாயம்.

17. இரண்டாவதுமுறை சென்னைக்குச் சென்றது. கசுள

மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இவரைப்பற்றி அறிதல்.

சில தினங்களுக்குப் பின்பு தம்பிரானவர்கள் கல்லிடைக் குறிச்சிக்குச் சென்றார். திருவாவடுதுறை யாதீனத்தில் அப் போது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த மேலகரம் சுப் பிரமணிய தேசிகர் அங்கே இருந்தார். அவர் தாண்டவராயத் தம் பிரானவர்களிடம் பல தமிழ் நூல்களைப் பாடங்கேட்டவர். அவ ரைக்கொண்டே மாணாக்கர்களுக்கும் பாடம் சொல்லச் செய்யலா மென்று தேசிகர் எண்ணி அக்கருத்தை அவரிடம் வெளியிட்ட னர். தாண்டவராயத் தம்பிரானவர்கள், "என்னுடைய தேக நிலை அவ்வாறுசெய்ய இடந்தராது; வழக்கமும் இல்லை. திரிசிர புரத்தில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யென்று ஒரு வித்துவான் இருக் கிறார். அவர் இரண்டுமுறை சென்னைக்கு வந்திருந்தார். அக் காலத்தில் அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் வாய்த்தது. பின்பு திரிசிரபுரத்திலும் பழகினேன். அப்பொழுது அவருடைய அருமை நன்கு விளங்கிற்று. பாடஞ்சொல்வதிலும் செய்யுள் செய்வதிலும் அவருக்கு இணையாக இக்காலத்தில் யாரும் இல்லை யென்றே சொல்லலாம்; இடைவிடாமற் பாடஞ் சொல்வதிற் சிறி தேனும் சலிப்பில்லாதவர்; நிறைந்த கல்விமான். இந்த ஆதீன வித்துவானை அவர் நியமிக்கப்படுவாராயின் ஆதீனத்தின்புகழ் எங்கும்பரவும். அவரைக்கொண்டு பல மாணாக்கர்களைப் படிப்பிக்க லாம்" என்று விண்ணப்பித்துக் கொண்டனர். அக்காலமுதல் சுப்பிரமணிய தேசிகர் இவரை ஆதீனத்தில் இருக்கச்செய்ய வேண்டுமென்னும் எண்ணம் உடையவராகித் தக்க காலத்தை எதிர்பார்த்திருந்தார். நிற்க.

தாண்டவராயத் தம்பிரானவர்கள் பிரதியைப் பார்த்தெழு திய பேரூர்ப்புராணம் பின்பு படிப்பவர்களாற் பல பிரதிகள் செய்யப்பட்டது. அப்பால் இச்செய்தியை அறிந்த பிள்ளையவர் களுடைய மாணாக்க பரம்பரையினர் ஒவ்வொருவரும் அப்பிரதி யைப் பார்த்துக்கொண்டே கைவழிப் போக்கியதில் இவருடைய மாணாக்கருள் ஒருவரும் அருங்கலை விநோதரும் வரகனேரிப் பட்டாதாருமாகிய சவரிமுத்தாபிள்ளையிடம் வந்து தங்கிற்று. அவர் அதனைப் பொன்னேபோற் போற்றிச் சேமத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தனர். அது தெரிந்த நான் பிற்காலத்து அவ ரிடம்சென்று கேட்டு அதனை அரிதிற்பெற்று வந்து என்பால்

வைத்து, பிள்ளையவர்களைப் பார்ப்பதுபோல் பார்த்து வருகிறேன்.

தாண்டவராயத் தம்பிரானவர்களின் கடிதம்.

தாண்டவராயத் தம்பிரானவர்கள் கல்லிடைக்குறிச்சியிலிருந்து மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டுச் செல்கையில் முகத்தில் ஒரு பரு உண்டாகி வருத்தினமையால் திருச்சிராப்பள்ளியில் ஐந்து தினங்கள் தங்கினர். பிள்ளையவர்கள் சென்று ஸம்பாஷித்து வந்ததும் அப்பொழுது அங்கே இருந்ததும் அக்காலத்தில் இவரோடு பழகி இன்புற்றதும் மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்கு அவர் எழுதிய விண்ணப்பத்திலுள்ள அடியிற்கண்ட வாக்கியத்தால் விளங்கும்.

"அடியேன் திரிசிரபுரத்தில் மௌனஸ்வாமிகள் மடத்தில் தங்கிப் * பருவரலாற் பருவரலுற்று வித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய சம்பாஷணையினல் † அஞ்சு தினங்களையும் அஞ்சுதினங்களாகக் கழித்தேன்."

---

18. சீகாழிக் கோவை இயற்றி அரங்கேற்றல்.

சீகாழிக்கு வந்தது.

பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் இங்ஙனம் இருந்து வருகையில் சென்னையிலிருந்த விநாயக முதலியார் முதலிய பிரபுக்களும் வித்துவான்களும் அடுத்தடுத்துக் கடிதம் எழுதி மயிலைப்புராணம் பூர்த்தியாயிற்று வென்பதை விசாரித்து வந்தார்கள். அக்காலத்துப் பலவகையான செலவுகளால் இவருக்கு ஆயிரக்கணக்கான கடன் உண்டாயிற்று. அதனைத் தீர்த்தற்கு நினைந்து நகரப் படலம் இறுதியாகப் பாடிவைத்திருந்த திருமயிலைப் புராணத்தை எடுத்துக் கொண்டு சென்னை சென்று பூர்த்திசெய்து அரங்கேற்றினல் கடனைத் தீர்ப்பதற்கு வேண்டிய தொகையும் பிற சௌகரியங்களும்

* பருவரல் - பரு (ஒருவகைச் சிரங்கு) வருதல் ; துன்பம். † அஞ்சு தினம் - ஐந்து தினங்கள் ; அம் சு தினம் - அழகிய நல்ல தினம்.

பெறலாமென்று எண்ணிச் சில மாணாக்கருடன் சென்னைக்குப் பிரயாணமாகிச் சீகாழிக்கு வந்தனர். அப்போழுது இவருடைய பிராயம் நாற்பத்தைந்து.

அக்காலத்திற் *சீகாழியில் வேதநாயகம் பிள்ளை முன்சீபாக இருந்தார். அவர் இவரைச் சீகாழிக்கு வந்து சிலநாள் தம்முடன் இருக்கவேண்டுமென்று விரும்பிப் பலமுறை இவருக்கு முன்னமே கடிதம் எழுதியிருந்ததுண்டு. அதனால் இவர் சென்று அவ்வூரில் அவர்வீட்டில் தங்கினர். அக்காலத்தில் அவர் †நீதிநூலைச் செய்து முடித்து வைத்திருந்தமையின் இவர் வரவை நல்வரவாக நினைந்து சில காலம் இருக்கும்படி செய்து, தாம் இயற்றிய அந்நூலை முற்றும் படித்துக்காட்டி வேண்டிய திருத்தங்களைச் செய்துகொண்டார். அப்பொழுது அவருடைய தம்பியும் தமிழபிமானியுமாகிய ஞானப் பிரகாசம் பிள்ளையென்பவர், "நீதிநூலுக்கு நீங்கள் சிறப்புப்பாயிரம் அளிக்கவேண்டும்; பிறரிடத்திலிருந்தும் வாங்கிக்கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவர் விருப்பத்தின் படியே சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இவராற் செய்யப்பெற்றன.

சீகாழிக்கோவை இயற்றியது.

அச் செய்யுட்களைப் பலர் முன்னிலையிற் படித்துக் காட்டிக் கொண்டிருக்கையில்,

"நூலியற்றி யீதலொன்றே யுன்னதெனக் கோடலபன்
னூலு மோர்ந்
மாலியற்றிக் கொடுத்திடுமைந் திணைக்கோவை யேற்றனையா
லளவி லாத
சேலியற்று புன்கருளத்தூர் வேதநா யகமகிபா
சிறப்பச் செய்யுட்
பாலியற்ற லேற்றலிவை யிரண்டினுநீ யெப்போதும்
பயிலு வாயே"

என்ற செய்யுளால் வேதநாயகம்பிள்ளைமேல் இவர் ஒரு கோவை செய்திருத்தல் அவ்வூராருக்கு வெளியாயிற்று. ஆகவே

---

* வேதநாயகம் பிள்ளை சீகாழிக்கு வந்த காலம் 1858-ஆம்வு என்று வேதநாயக விற்பன்னர் சரித்திரத்தால் தெரியவருகிறது.

† இந்நூல் காளயுக்திவு தைமீ (1859) அச்சிற் பதிப்பிக்கப் பெற்றது.

அக்கோவையிலிருந்து சில பாடல்கள் சொல்லிக் காட்டவேண்டு மென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே அதிலுள்ள சில அருமையான செய்யுட்களை இவர் சொல்லிக் காட்டினர். கேட்டசைவச்செல்வர்கள் அவற்றின் நயத்தையும் பொருளமைதி யையும் அறிந்து இன்புற்று, "ஐயா! இத்தலத்துக் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீபிரமபுரேசர்மீது தாங்கள் ஒரு கோவை இயற்றித் தந்தால் எங்களுக்குப் பரமதிருப்தியாக இருக் கும்" என்று தெரிவித்தனர். இவர், "சென்னை சென்று திருமயி லைப் புராணத்தை அரங்கேற்றி வருவதாகப் புறப்பட்டுவிட்டேன். பொருள் முட்டுப்பாட்டினால் விரைவில் அவ்வாறு செய்யவேண்டி யது மிகவும் அவசியமாயிருக்கிறது. நான் சென்று திரும்பும் பொழுது இங்கே வந்து உங்கள் விருப்பத்தை நிறைவேற்று வேன்" என்றார். அதனைக் கேட்டவர்கள் பின்னும் வற்புறுத்தி வேதநாயகம் பிள்ளையிடமும் தெரிவித்துக்கொண்டார்கள். கேட்ட அவர் பிள்ளையவர்களைப்பார்த்து, "நீங்கள் இவர்கள் சொல்லிய படி செய்தால் எனக்கு எவ்வளவோ பயனுண்டாகும். உங்க ளோடு உடன் இருந்து வருவதைவிட வேறு சந்தோஷம் ஒன்று மில்லையென்பது உங்களுக்குத் தெரியாததன்று. நானும் அவர் களைப்போலவே, தாங்கள் இங்கிருந்து அக்கோவையை இயற்றி அரங்கேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார். கேட்ட இவர் அவ்விடத்திலேயே இருப்பாராயினர். உடனே வேண்டிய விடுதியும் பிற சௌகரியங்களும் அவ்வூரிலும் அய லூரிலும் இருந்த * கனவான்களால் அமைக்கப்பட்டன.

அப்பால் நூல் இயற்றத் தொடங்கி ஒவ்வொரு தினத்தும் பத்து அல்லது பதினைந்து செய்யுட்களாக ஆராய்ந்து ஆராய்ந்து செய்து உடன் இருப்பவர்களுக்கு அப்போதப்போது படிப்பித் துக்காட்டி நூல்நயங்களைப் புலப்படுத்திக் கொண்டுவந்தார். சில மாதங்களில் அக்கோவை பூர்த்தியாயிற்று.

---

* அப்பொழுது இவரை ஆதரித்த கனவான்கள் : சீகாழிச் சிங்கய முதலியார், கருப்பையா முதலியார், குப்பையம் திருவேங்கடம் பிள்ளை, வரிசைப்பற்று லிங்கப்ப நாயக்கர், நெய்ப்பற்றூர்ச் சாமி ஐயர், கடைவாசல் ராமதுரை ஐயர், ஆச்சாபுரம் சிவலோகத்தியாக முதலியார் முதலியவர்கள்.

18. சீகாழிக் கோவை இயற்றி அரங்கேற்றல். களக உடன் இருந்த இருவர் செயல்.

சீகாழிக் கோவை இயற்றி வருகையில் இடையிடையே ஞாயிற்றுக்கிழமை தோறும் வேதநாயகம்பிள்ளையின் வேண்டு கோளின்படி அவர் வீடு சென்று தாம் இயற்றிக்கொண்டு வரும் அந்நூலில் ஆனவற்றை இவர் படிப்பித்துப் பொருள் கூறி மகிழ் விப்பது வழக்கம்; தம்மோடுகூட இருப்பவர்களிற் சிலரை உடனழைத்துச் செல்வார். ஒருநாள் கோவைச் செய்யுட்களிற் சிலவற்றைப் படிப்பித்துக் கேட்டு வேதநாயகம் பிள்ளை மிக்க மகிழ்ச்சியோடு இருக்கையில் இவர் ஏதோ ஒரு காரியார்த்த மாக வீட்டின் புறம்பே சென்றனர். அப்பொழுது வேதநாயகம் பிள்ளை இவருடன் வந்து அங்கே இருந்த இருவரை நோக்கி, "இந்தக் கோவைச் செய்யுட்கள் எவ்வளவு நயமாக இருக் கின்றன பார்த்தீர்களா?" என்று கேட்டனர். உடனே அவ் விருவருள் ஒருவர், "இத்தலத்திற்கு வேறொரு பெரியவர் முன்பு ஒரு பிரபந்தம் செய்திருக்கிறார். அதிலுள்ள செய்யுட்கள் நிரம் பச் சுவையுள்ளனவாக இருக்கும். அவற்றை நீங்கள் கேட்ட தில்லை போலும்" என்றார். அதனைக் கேட்ட வேதநாயகம் பிள்ளை அவரை ஏற இறங்கப் பார்த்து, "இவர் அழுக்காறுடையவராகத் தோற்றுகிறார்" என்றெண்ணி அக்கருத்தை வெளிப்படுத்தா மல் மனத்தில் அடக்கிக்கொண்டு அவரை நோக்கி, "அந்நூலி லிருந்து ஒரு செய்யுளைச் சொல்லும்" என்றார். அவர் ஒரு செய் யுளைச் சொன்னார்; அதில், "சமையவிசேடமாச்சுது" என் றுள்ள பகுதியைக்கேட்ட உடனே வேதநாயகம் பிள்ளை சட்டென நிறுத்தும்படி குறிப்பித்து, "பன்மை எழுவாய்க்கு ஒருமைப் பயனிலை வந்திருத்தலும் ஆயிற்றென்றது ஆச்சுதென்று வந் திருத்தலும் பிழையல்லவோ? மற்றைச் செய்யுட்களும் இப்படித் தானே இருக்கும்? இந்தப்பிழை மலிந்த செய்யுட்களையா சிறந்த செய்யுட்களென்றெண்ணுகிறீர்கள்?" என்று சினக்குறிப் போடு சொல்லிவிட்டு மேலும் கடிந்து, "பிள்ளையவர்களுடைய செய்யுளைப்பற்றி நான் பாராட்டிச் சொல்லுகையில் அதைச் சிறி தேனும் காதில் வாங்கிக்கொள்ளாமல் திடீரென்று வேறு ஏதோ ஒன்றைச்சொல்ல ஆரம்பித்துவிட்டீரே. உம்மை உபசரித்துத் தம்முடன் ஆகாரம் அளித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்கு அவமதிப்பை உண்டாக்க முயலுகின்றீரே. அவர்களிடம் வேண்

டியவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கே கேடுநினைக் கின்ற நீர் மற்றவர்கள் விஷயத்தில் என்னதான் செய்யத்துணிய மாட்டீர்? அவர்களிடத்திற் பிரீதியுள்ளவனும் அதிகாரியுமாகிய என்னிடத்திலேயே இப்படிச் சொல்லுவீராயின் வெளியில் எவ் வளவுதான் சொல்லமாட்டீர்?" என்று சொன்னர்.

புறம்பே சென்றிருந்த இவர் வந்தனர். அங்கிருந்த இருவரும் வேதநாயகம் பிள்ளையினுடைய வார்த்தைகளைக்கேட்டு ஒன்றும் தோன்றுமல் விழித்துக்கொண்டிருப்பதையும் அவர் மேலும் கண் டிப்பதையும் கண்டு இவர் சமாதானமாகச் சில வார்த்தைகள் சொல்லத்தொடங்கினர். அப்பொழுது வேதநாயகம் பிள்ளை, "நல்ல ஸ்வபாவமுடையவர்களைக் கூட வைத்துக்கொள்ள வேண் டுமேயன்றி இத்தகையவர்களைச் சேர்த்துக்கொள்ளலாகாது. உங் களுக்குச் சாதகர்களாக இருக்கிறார்களென்று எண்ணியே நான் இவர்களை உள்ளே அழைத்துக் கேட்கச்சொன்னேன். இவர்களு டைய தீயகுணம் எனக்கு இதற்கு முன்பு தெரியவில்லை. உங்களு டைய அருமையான பாடல்களில் எனக்கு அவமதிப்பு வரவேண்டு மென்று சங்கற்பித்துக்கொண்டு ஏதோ சிலவார்த்தைகளை நீங் கள் இல்லாத சமயம் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்களே" என்றார். இவர், " தக்கவர்கள் எங்கே கிடைக்கிறார்கள்? கிடைத் தவர்களைக் கொண்டுதான் நாம் ஸந்தோஷத்தை யடையவேண்டி யிருக்கிறது. இவர்கள் மிகவும் நல்லவர்களே. தம்மை அறியாமல் ஏதோ தவறு செய்துவிட்டார் போலும்! இனி ஒருபொழுதும் அவ்வண்ணம் செய்யமாட்டார். பொறுத்துக்கொள்ளவேண் டும்" என்று சொல்லி அவருடைய கோபத்தை ஆற்றுவித்தார். பின்பு அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு இவர் தம்முடைய வீடுதிவந்து சேர்ந்தனர்.

சீகாழிக் கோவையை அரங்கேற்றியது.

பின்பு சீகாழிக் கோவையை அரங்கேற்றுவித்தற்கு நிச்ச யித்து ஒரு நல்ல தினம் குறிப்பிட்டு, சீகாழியிலிருந்த பிரபுக்க ளும் வித்துவான்களும் அயலூரிலுள்ள பிரபுக்களுக்கும் வித்து வான்களுக்கும் சொல்லியனுப்பினர்கள். கேட்க விருப்பமுற்ற ஒவ்வொருவரும் வந்து சீகாழியில் இருப்பாராயினர். ஸ்ரீ பிரம புரேசர் திருக்கோயிலின் தெற்குப் பிராகாரத்திலுள்ள வலம்புரி மண்டபம் அரங்கேற்றுதற்குரிய இடமாகப் பலராலும் நிச்சயம்

செய்யப்பெற்றது. அம்மண்டபத்தில் இருந்து இவர் அரங்கேற்றத் தொடங்கினர். அப்பொழுது மூலத்தைப் படித்தவர் சாமிநாத கவிராயர். மூன்று காப்புச் செய்யுட்களும் முடிந்தன. நூலில் இரண்டு செய்யுட்கள் நிறைவேறின. இவர், செய்யுளின் நயத்தையும் பல நூல்களிலிருந்து அருமையான செய்யுட்களை மேற்கோளாகக்கூறி யாவருக்கும் விளங்கும்படி பொருள் உரைக்கும் அழகையுங் கேட்டுக்கேட்டு யாவரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனர்; 'இந்த வித்துவானைக் காண்டற்கும் இவர் கூறும் இனிய அரிய மொழிகளைக் கேட்பதற்கும் நாம் என்ன புண்ணியம் செய்தோம்!' என்று ஒவ்வொருவரும் தம்மிற் கூறி வியந்தனர்.

கேட்பதற்கு வந்திருந்த வித்துவான்களுள் குருசாமி பிள்ளையென்பவர் ஒருவர். அவர், திருவாசகத்திற்கு உரையெழுதிய இராசாத்துரைப் பிள்ளையின் குமாரர். பிற்காலத்திற் பிள்ளையவர்களுடைய சம்பந்தியாகவும் ஆயினர்.

கோவை அரங்கேற்றப்பட்டு வருகையில்,

"நாமகண் மாமகள் சேர்காழி நாதர் நகுமிமயக்
கோமகள் பாகர் விடைப்பாகர் தென்கழுக் குன்றத்தொப்பி
லாமகள் கோதைநம் போல்வா டலினிமை யாடலிற்றூள்
பூமகள் சூடலி னேயமின் றூலிவள் பூமகளே" (கூ)

என்னும் செய்யுள் படிக்கப்பட்டது. அதற்குரிய அவதாரிகையைச் சொல்லிவிட்டு இவர் அதற்குப் பொருள்கூறி முடித்தனர். அப்பொழுது ஒருவர் அழுக்காறுடைய சிலரால் மந்தணமாக ஏவப்பெற்று, "வித்துவானுகிய நாம் மற்றவர்களைப்போலே இந்தச் சமயத்திற் பாராட்டிக்கொண்டே யிருந்தால் நம்முடைய கல்விப் பெருமைக்குப் பயனென்ன? நாளை யாரேனும் நம்மை மதிப்பார்களா? இந்நூல் முடிந்துவிட்டால் இவர் ஊர்போய் விடுவார். நாமல்லவோ இங்கிருந்து ஊராருடைய மதிப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்? எப்போதும்போலே இனிச் சும்மா இருக்கலாகாது. சமயம் வந்தபொழுதல்லவோ நம்முடைய யோக்கியதையையும் கௌரவத்தையும் பிரகாசப்படுத்த வேண்டும்?" என்று நூலை அரங்கேற்றத் தொடங்கும் முன்னரே யோசித்துச் சமயம் பார்த்துக்கொண்டு இருந்தவராதலின், "இந்தப் பாட்டில் ஓராட்சேபம் இருக்கிறது" என்று சிலரோடு

பேசிக்கொண்டு கேள்வி கேட்கத் துணிவுற்றார். பிள்ளையவர்கள் அவர் இரகசியமாகப் பிறருடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து, "என்ன விசேடம்?" என்றனர். அவர், "சீகாழிக்குக் கோவை பாடவந்த நீங்கள் இச்செய்யுளில் திருக்கழுக்குன்றத்தைக் கூறியதற்கு நியாயமென்ன? சொல்லவேண்டும்" என்று கூசாமல் நிர்ப்பயமாகக் கேட்டனர். இவர் அவருடைய மாறுபாடான எண்ணத்தை அறிந்துகொள்ளவில்லை. 'இக்கருத்தைப் பலரும் அறிந்துகொள்ளும் பொருட்டே அன்புடன் வினவுகின்றனர். இவருக்கு விடை கூறுவது போலவேகூறிப் பலருக்கும் விஷயத்தைப் புலப்படுத்தவேண்டும்' என்றெண்ணிச் சொல்வாராயினர்.

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்பது பொய்யா மொழியன்றே?

"சிவபெருமான் எங்கும் வியாபகர், எல்லாமுடையவர்; ஆதலின், மற்றத்தலங்களும் அவருடையனவே யென்பதை அறிவித்தற்கு இங்ஙனம் கூறுவது மரபு. திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய கோவைகளில் இதைப்போன்ற பிரயோகங்கள் வந்துள்ளன. *'விண்ணிறந்தார்' என்னும் செய்யுளில், 'தில்லையம்பலத்தார் கழுக்குன்றினின்று, தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றார்' எனவும், †'உருகுதலைச் சென்ற' என்னும் செய்யுளில், 'பெருந்துறைப் பிள்ளை கள்ளார், முருகுதலைச் சென்ற கூழைமுடியா' எனவும், ‡'வேலன் புகுந்து' என்னும் செய்யுளில், 'எழிற்றில்லைநின்ற, மேலன் புகுந்தென்கணின்று னிருந்தவெண் காடனைய, பாலன்' எனவும் வேறு தலங்கள் கூறப்பட்டிருத்தல் காண்க" என்று சொல்லிவிட்டு வேறு கோவைகளிலிருந்தும் உதாரணங்களைச் சொல்லத் தொடங்கினர்.

கேள்வி கேட்டவர் இவர் கூறிய ஒன்றையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றும் பேச இயலாமல் மேலே என்ன கேட்கலாமென அறியாராய் மயங்கியிருக்கையில், இவர் திருச்சிற்றம்பலக்

* சீர். 107.
† ஷை 104. ‡ ஷை 286.

கோவையாரென்றதனால் அவருக்கு ஒரு நினைவு வந்தது. தாம் கேட்பதற்கும் அந்தச் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமில்லை யென்பதையும் விபரீதமாகுமென்பதையும் அறியாதவராகி, "ஐயா, திருச்சிற்றம்பலக்கோவையார்தான் கோவை; மற்றக் கோவைகளெல்லாம் கள்ளிமேற்படர்ந்த கோவைகளென்கிறார்களே; அதற்கு என்னவிடை சொல்லுவீர்கள்?" என்று தைரியமாகக் கேட்டார். சபையிலிருந்தவர்கள் யாவரும் அவருடைய வரம்பு கடந்த செயலையறிந்து வருத்தமடைவாராயினர். இவர், 'அவர் ஆட்சேபம் செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்; என்ன சமாதானம் கூறினாலும் அவர் அங்கீகரிக்கமாட்டார்' என நினைந்து மௌனமாக இருந்தார். சபைத்தலைவராக வீற்றிருந்த வேதநாயகம் பிள்ளைக்கு அப்போது வந்த கோபத்திற்கு அளவில்லை; "இந்த மனுஷ்யரை அங்கீகரிக்கவேண்டாம்; உடன் வைத்துக்கொள்ளவேண்டாம்; உங்களிடத்துச் சிறிதும் அன்பில்லாதவரென்று முன்பு இவரைப்பற்றியும் இவரைப்போன்ற சிலரைப்பற்றியும் நான் சொன்னதுண்டு. நீங்கள் அதைக் கவனிக்கவில்லை. இனி நான் சும்மா இருத்தல் அழகன்று" என்று சொல்லிவிட்டு அங்கே நின்ற சேவகர்களை நோக்கி, "இவரை உபசாரமாக வெளியே அழைத்துப்போய் விட்டுவிட்டு வாருங்கள்" என்று சொல்லவே சேவகர்கள் அவ்வாறே செய்யவந்தனர்.

அப்பொழுது அவர் தமக்கு நேர்ந்திருக்கும் அவமானத்தைப்போக்கிக் கொள்ளுதற்கு வேறு வழியின்மையையும் தமக்கு அனுகூலம் செய்பவர் ஒருவரும் அங்கில்லாமையையும் அறிந்து பிள்ளையவர்களைப் பார்த்து, 'எனக்கு நேர்ந்துள்ள இந்த அவமானத்தை எப்படியாவது இச்சமயத்திற் பரிகரிக்கவேண்டும்' என்பதைத் தம்முடைய விநயமான பார்வையாற் புலப்படுத்தினர். அப்பார்வையின் குறிப்பை யறிந்த இவர், * மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந், தகுதியால் வென்று விடும் உயரிய குணத்தினராதலின் சேவகர்களை நோக்கிக் கையமர்த்திவிட்டு, வேதநாயகம் பிள்ளை முதலியவர்களைப் பார்த்து, "ஆட்சேபிப்பதும் சமாதானம் கூறுவதும் எங்களுக்கு வழக்கம்; ஆதலின் நாங்கள் பேசிக்கொள்வதைக் குற்றமாக எண்ணவேண்டாம்" என்று சொல்லி அவர் கோபத்தைத் தணிப்பித்து, ஆட்சேபித்தவரை

* திருக்குறள், கடுஅ.

அங்கே வந்து இருக்கச்செய்துவிட்டு நூலின் மேற்பாகத்தைப் படிப்பிக்கச்செய்து பிரசங்கம் செய்வாராயினர்.

அரங்கேற்றுதல் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. வந்து கேட்போர்களும் நாளுக்கு நாள் மிகுதியுற்றார்கள். மரியாதை யறியாத யாரேனும் வந்து வெறுப்புண்டாகும்படி நடந்து இக்கவி ஞர்பிரானுடைய அருமையை யறியாமல் இடையூறு செய்வார் களோ வென்று நினைந்து வேதநாயகம்பிள்ளை, அக்கோயில் விசா ரணைக்காரரிடம், "தினந்தோறும் நான் வந்தபின்பே தொடங்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு நாளும் பிற்பகலில் வந்திருந்து கேட்டின்புற்றார். அப்பொழுது ஒவ்வொருநாளும்அரங் கேற்றுதல் முடிந்தவுடன் அந்நூலையும் இவரையும் சிறப்பித்து ஒவ்வொரு செய்யுள் பாடினர். அவற்றுள் *இருபது செய்யுட் களே இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுட் சில வருமாறு:

"குற்றமில்சீர் மீனாட்சி சுந்தரவா ரியநின்னைக்
கோயின் மேவ
நற்றவமென் செய்தனனு மகடமிழ்செய் தவமெவனீ
நவிலு மேன்மை
உற்றதிருக் கோவைபெறப் புகலிசெய்பாக் கியமெவனவ்
வுயர்நூல் கேட்கப்
பெற்றவென்போ லியர்புரிந்த மாதவமென் னேதுறுவாய்
பெருமை மிக்கோய்"

"இன்பாவிற் கோவைசொன்ன மீனாட்சி சுந்தரப்பே
ரிறைவ யானும்
உன்பாவிற் கவிசொல்வே னென்கவிபார்ப் போரிதைமீண்
டோரா தான்றூர்
முன்பாச்சொ னூல்களையே துதிப்பருன்பா வுணர்வோர்கண்
முன்னோர் நூலைப்
பின்பாகச் சொலிவெறுப்பர் நல்லவனீ யோயாரை
பேசு வாயே"

"விதியெதிரி லரிமுதலோர் புகல்புகலி மீசரே
விண்ணோர் மண்ணோர்
துதிபொதிபல் பாமாலை பெற்றிருப்பீர் மீனாட்சி
சுந்த ரப்பேர்

---

* இவற்றைப் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டிற் காணலாம்.

18. சீகாழிக் கோவை இயற்றி அரங்கேற்றல். களவு

மதிமுதியன் கோவையைப்போற் பெற்றீர்கொ லிக்காழி
வைப்பி னீதி
அதிபதிநா மெனவறிவீர் நம்முன்னஞ் சத்தியமா
வறைகு வீரே.''

''நல்லார்க்கு நல்லவனு மீஞட்சி சுந்தரவே
ணவின்ற கோவை
இல்லார்க்கு நிதிதுறவா வில்லார்க்கு விதிபுவிவாழ்
வெல்லா நீத்த
வல்லார்க்குத் திதிஞானங் கல்லார்க்கு மதிவேலை
வைய கத்திற்
பல்லார்க்குக் கதிபுகலிப் பதியார்க்குத் துதியதன்சீர்
பகர்வோர் யாரே.''

இவ்வாறே கேட்கும் வித்துவான்கள்பலரும் சிறப்புக் கவிகளை இயற்றித் தங்கள் தங்கள் நன்மதிப்பை வெளியிட்டார்கள். அவர்கள் கூறிய கவிகள் இப்பொழுது கிடைக்கவில்லை.

வேதநாயகம் பிள்ளை சொல்லிய சிறப்புக் கவிகளையெல்லாம் கேட்ட இவர் அவருடைய அன்புடைமையைப் பாராட்டி,

''நாட்டுக்கு நல்லகுளத் தூர்வேத நாயகனன்
னுமமாலே
வீட்டுக்கு வாயிலெனுங் காழிக்கோர் கோவையெனை
விளம்பச் செய்தே
ஏட்டுக்கு மடங்காத துதிகவிகள் சொற்றனைநின்
னியற்பாட் டுள்ளோர்
பாட்டுக்கு நான்செய்த தொன்றேபல் செய்தாலும்
பற்று வன்றே''

என்ற ஒரு செய்யுளைச் சொன்னர்.

அக்கோவை அரங்கேற்றப்பட்ட பின்னர் மேலே சொல்லிய கனவான்களும் பிறரும் தலைக்கு ரூ. 50 முதல் 300 வரை ஸம்மானம் செய்தார்கள். சிலர் பொன்னுடை முதலியன தந்தார்கள்; சிலர் பூஷணம் தந்தனர்; தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் தக்க பரிசுகளை அனுப்பிக் கௌரவித்தார். இவ்வாறு பலர் இவருக்கு ஸம்மானம் செய்து ஆதரித்ததனால் மகிழ்வுற்ற வேதநாயகம் பிள்ளை,

களஅ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

"தேமாரி பொழிபொதும்பர்த் திருக்காழி யிறைமுன்
திகழாண்டு சித்தார்த்தி திங்கள்பாத் திரத்தில்
பூமாரி சுரர்பொழியச் செல்வர்பலர் கூடிப்
பொன்மாரி மிகப்பொழியப் புலவர்குழாந் துதித்துப்
பாமாரி நனிபொழியப் பல்லியங்கண் முழங்கப்
பலம்புரிய நலம்புரியும் வலம்புரிமண் டபத்துத்
தூமாரி யெனப்புகலிக் கோவையைமீ னுட்சி
சுந்தரப்பேர் மதிவல்லோ னரங்கேற்றி னனே"

என்ற செய்யுளைக்கூறினர். இதனால் சித்தார்த்தி ஆண்டு (1861) புரட்டாசி மீ அந்நூல் அரங்கேற்றப் பெற்றதென்பது தெரியவருகின்றது.

சிகாழிக்கோவை நூறு செய்யுட்களை உடையது. இத்தல சரித்திரங்களும், ஏனைய சிவதல சரித்திரங்களும், நாயன்மார்களுடைய அருஞ் செயல்களும், சைவசாஸ்திரக் கருத்துக்களும் இந்நூலுள் அங்கங்கே சந்தர்ப்பத்திற் கேற்றவண்ணம் செவ்வனே அமைக்கப்பெற்றுள்ளன. மற்றக் கோவைகளிற் காணப்படாத பல தூறைகள் இதிற் காணப்படும். அவை இலக்கண விளக்கத்தின் விதியைத் தழுவி அமைக்கப்பட்டவை. இதில் உவமைகளாகக் காட்டப்படுவனவற்றுட் பெரும்பாலன சைவசம்பந்தமாகவே உள்ளமையால் இந்நூல் சிவநேசச் செல்வர்களாற் படித்து இன்புறற்பாலது.

இந்நூலிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :

ஐயம்.

"வெள்ளாம்ப லான்கொல்செந் தாமரை யான்கொலொண் மேனிகருங்
கள்ளாங் குவளையன் னான்கொனங் காழிக் கடவுள்வெற்பில்
உள்ளா மிவரடி தோய்தவ முன்ன ருஞற்றுலக
நள்ளாங் குடிகொண் டரசா டவஞ்செய் நலத்தினனே" (உ)

இடையூறுகிளத்தல்.

"ஞாலம் பொலியப் பொலிகாழி நாதர் நறுமலர்க்கைச்
சூலம் பொலியக்கொள் வார்பவர் வேணிச் சுடர்மதிபோற்
பாலம் பொலியநிற் பீர்மிசை யேயன்றிப் பாணியுள்ளால்
நீலம் பொலியவைத் தீர்தகு மோவென் னிலகண்டமே" (கூ)

18. சீகாழிக் கோவை இயற்றி அரங்கேற்றல். கஎகூ

பிரியேனென்றல்.

"வரியேன் மதர்விழிச் சங்கிலி காண மகிழடியிற்
பிரியேனென் றேதிப் பிரிந்துவன் றொண்டர்முன் பெற்றதையான்
தெரியே னலேன்வண் புகலியன் னீர்நுமைத் தீர்ந்துமுயிர்
தரியேன் பிரியே னெனச்சட்டை நாதர்முன் சாற்றுவனே" (கூ0)

பாங்கனை உன்மகிழ்ந் துரைத்தல்.

"ஒருகா னடந்தென் வருத்தந் தணித்த வொருவன்முனம்
இருகா னடந்துதன் றேழன் வருத்த மிரித்தபெருங்
குருகான் மலர்ப்பொய்கைக் கொச்சைப் பிரானிற்குலவுநல்லோன்
அருகா லவனட் பெழுமையு மோங்க வளியனுக்கே" (எஅ)

இறைவன்றனக்குத் தறைநேர் பாங்கி இறைவிக்கு அவன் தறை உணர்த்தல்.

"அருவ ருருவ ரருவுரு வாள ரவிர்புகலித்
திருவ நிருவ ருணரார் வரைநஞ் செழும்புனத்தே
வருவ ரொருவ ரரியர் பிரியர் வயமுருகே
பொருவர் தருவர் தழையவர்க் கென்ன புரிதுமின்னே" (கடுசு)

தலைவி தலைமகனூர்க்குத்தச் செல்ல ஒருப்படுதல்.

"தாரூர் தடம்புயத் தோணிப் பிரானரு டாங்கியன்பர்
சேரூ ரடையத் தடையெவ ணேமுன் சிறந்தவரைப்
பாரூர் புகழ்மிகு நும்மூ ரெதுவெனப் பன்னிரண்டு
பேரூரென் றூரெங்கு நாந்தேடிச் செல்வது பெண்ணணங்கே."(உடுஅ)

சென்னைப் பிரயாணத்தை நிறுத்திக்கொண்டது.

சீகாழிக்கோவை அரங்கேற்றி முடிந்தபின்பு, இவர் வேத நாயகம்பிள்ளை விருப்பத்தின்படியே பின்னும் சில மாதங்கள் சீகாழியில் இருந்துவந்தார். அக்காலத்துத் தம்மை நாடிவந்த *மாணாக்கர்களுக்கு வேண்டிய பாடங்களைச் சொல்லிவந்தார். சென்னைக்குச் செல்லவேண்டுமென்னும் கருத்து, பொருள் முட்டுப்பாட்டால் உண்டாயிற்றுதலின் சீகாழியிற் போதிய பொருள்

---

* அக்காலத்தில் வந்து பாடங்கேட்டவர்கள்: முத்தைய வாத்தியார் குமாரர் சிதம்பர வாத்தியார், சீயாலம் சிவசிதம்பரம் பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர்ச் சிவசிதம்பர முதலியார், சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகர், வல்லம் கந்தசாமி பிள்ளை, மாயூரம் நடராச பிள்ளை, தில்லை விடங்கன் முத்துக்குமாரபிள்ளை, திட்டைச் சோமசுந்தரம்பிள்ளை.

கிடைத்தமையாலும் சென்னை போய் வருவதிற் சிரமம் மிக உண்டாகுமென்று தோற்றினமையாலும் அப்பிரயாணத்தை நிறுத்திக்கொண்டார். சென்னையிலுள்ள நண்பர்களுக்குச் சில அசௌகரியங்களால் வரக்கூடவில்லையென்றும இறைவன் திருவருளிருப்பின், புராணத்தை முடித்துக்கொண்டே வருவதாகவும் கடிதங்கள் எழுதிவிட்டார். திருமயிலைப்புராணத்தின் எஞ்சியபகுதி பின்பு பாடப்பெறவேயில்லை; பாடியிருந்த பகுதியும் கைதவறிப் போயிற்று.

திருத்தில்லையமக அந்தாதி.

சீகாழியிலிருந்த காலத்தில் இவர் ஸ்ரீ நடராசதரிசனத்தைக் கருதி அடிக்கடி சிதம்பரம் சென்றுவருவதுண்டு. அப்படிச் சென்றிருந்த ஒரு சமயம் வாமதேவ முருகபட்டாரகர் முதலிய தமிழ் வித்துவான்களுடைய விருப்பப்படி திருத்தில்லை யமக அந்தாதியை இயற்ற ஆரம்பித்துச் சில தினங்களிற் பூர்த்திசெய்தார். இவ்வந்தாதி அருமையான அமைப்பையுடையது. இதனைப் போன்று நயமும் உயர்ந்த யமகவிசித்திரமுமுடைய நூல் இக்காலத்தில் வேறொன்றும் இல்லை. அம்பலவா வம்பலவா, கருமங் கருமங் கணம்பரமா, கனியக் கனிய மனம், அருத்த மருத்த மென்றே, வருந்த வருந்த, சிவசிவசங்கர என்பவைகளும், இன்னம் பரம்பரனே, நந்தாதரத் தகரவித்தை, கடுகத்தனை யன்பு, தேவாரமா திருவாசகமா, மதியாதவனங்கி, சிற்றம்பலங்கண்டு, தமனியமன்ற, பேரம்பலம்பல, பொன்னம்பலவன், பதஞ்சலியாதவனே, பரமானந்தத்தை, பாடகந்தண்டை, மாதங்க மடங்கல், மூவாயிரவரும், மாணிக்கவாசக ரென்பவைகளும் இவ்வந்தாதியில் யமகத்தில் அமைந்தவை.

அயலூர்களிலிருந்த பிரபுக்கள் இவரைச் சீகாழியிலிருந்து தங்கள் தங்கள் ஊருக்கு அழைத்துச் சென்று இவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து சிலநாட்கள் வைத்திருந்து அனுப்பி வருவதுண்டு.

மகாலிங்கம்பிள்ளை உபசரித்தது.

அவர்களுள் இவருடைய நண்பரும் திருவாவடுதுறை யாதீனத்தைச்சார்ந்த அடியவரும் ஆகிய தில்லைவிடங்கன் மகாலிங்கம்பிள்ளை யென்பவர் ஒருநாள் பல நண்பர்களோடும் இவரைச்

18. சீகாழிக் கோவை இயற்றி அரங்கேற்றல். கஅக

சீகாழியிலிருந்து அழைத்துச் சென்று தம்முடைய வீட்டில் உபசாரத்தோடு ஒரு நல் விருந்தளித்தனர். அது யாரும் வியக்கத் தக்கதாக இருந்ததன்றி அவருடைய பேரன்பையும் புலப்படுத்தியது. விருந்துண்டபின் இவர் திண்ணையில் வந்து அமர்ந்து சந்தனம் பூசிக்கொண்டு தாம்பூலம் தரித்துக்கொள்ளுகையில் மனங் கனிந்து ஒரு பாட்டைச் சொல்லி ஒரு மாணவரைக்கொண்டு அதை எழுதுவித்து எல்லோரும் கேட்குமாறு படித்துக் காட்டச் செய்தனர். அப்பாட்டு வருமாறு:

"மாமேவு நந்திருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய சாமி
பூமேவு மலரடிக்கன் புடையமகா லிங்ககுண
புருட மேரு
தேமேவு சுவையமுத நவையறப்பன் முகமலெடு
சிறப்ப வூட்டித்
தாமேவு தாயிலா னடியவருக் கென்றுமொரு
தாயா னனே."

இதனைக் கேட்டவர்கள் இவருடைய அன்புடைமையையும் புலமையையும் அறிந்துவியந்து இவரைநோக்கி, "தமக்கு உணவு அளித்தவர்களிடத்து நன்றி பாராட்டி ஒளவையாரும் கம்பரும் பாடினர்களென்று சில செய்யுட்களைக் கூறுவார்கள். இதுகாறும் அதனை நம்பாமல் இருந்தோம். இப்போது தங்களுடைய செயலால் அச்செய்திகளை உண்மையென்று நம்புகிறோம்" என்று சொன்னர்கள். உடனே மகாலிங்கம்பிள்ளை விம்மிதமுற்றுத் திருவாவடுதுறைக் குருபூசையில் தமக்குக் கிடைத்த அழகிய வஸ்திர ஜோடியைக் கற்கண்டு பழம் புஷ்பம் தாம்பூலங்களுடன் வைத்து வணங்கி, "சிறியேனுகிய என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, இவ்வளவுதூரம் எழுந்தருளியதற்கு அடியேன் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! தங்களாற் புகழப்படுவதற்கு நான் எவ்வளவினேன்! என்னபாக்கியஞ் செய்தேனே! இனிமேல் எனக்கு யாதொருகுறையுமில்லை. தங்களுக்கு எளியேனுடைய அன்பின் அறிகுறியாகச் சமர்ப்பிக்கப்படும் இந்தச் சிறுகாணிக் கையை அங்கீகரித்துக் கொண்டருளவேண்டும். இது ஸ்ரீநமசிவாய மூர்த்தியின் பிரசாதமே" என்று விநயத்தோடு வேண்டினர். இவர் புன்னகையோடும் அவருடைய அன்பிற்கு மகிழ்ந்து அதனை ஏற்

றுக்கொண்டார். வரிசைப்பற்றென்னும் ஊரிலிருந்த கனவானாகிய லிங்கப்பநாயகரென்பவர் ஒருமுறை இவரை வருவித்துத் தாம் அவ்வூரில் அமைத்திருந்த சத்திரத்தில் தங்கச்செய்து உபசரித்துச் சிலநாள் இருக்கச்செய்து அனுப்பினர். அப்பொழுது இவர் அச்சத்திரத்தைச் சிறப்பித்து,

"குலவுபுகழ்ச் சுந்தரர்க்குக் கட்டமுது கொடுத்தருக்
குருகா வூரர்
நிலவுமஃ திக்காலஞ் செய்திலரா லசத்தரலர்
நிகழ்த்தக் கேண்மோ
வலவுசித நயசுகுண லிங்கப்ப மகிபால
வள்ளல் தானும்
உலவுமறு சுவையமுது பலர்க்குமகிழ்ந் தூட்டுவதா
லுவந்து மாதோ"

என்னும் செய்யுளைப்பாடி அங்குள்ளாரை மகிழ்வித்தனர். இவ்வண்ணமே அங்கங்கே சென்ற காலங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மனமகிழ்ந்து பாடிய பாடல்கள் பலவென்பர்.

திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்.

ஆச்சாபுரம் என்று வழங்குகிற பெருமண நல்லூரிலிருந்த சிவலோகத் தியாக முதலியாரென்னும் சைவச் செல்வர் ஒருவர் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்து இவரைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். பின்பு அத்தலத்து எழுந்தருளியுள்ள திருவெண்ணீற்றுமையம்மையின்மீது பிள்ளைத்தமிழ் ஒன்று இயற்றும்படி அவர் கேட்டுக்கொண்டார். அங்ஙனமே இவரால் ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றி அரங்கேற்றப் பெற்றது. அந்நூல் மண்ணைவைப் பிள்ளைத்தமிழென வழங்கும். அது பிற்காலத்தில் (விக்கிரம ஆண்டு தைமீ) சி. தியாகராச செட்டியாரால் அச்சிடப்பெற்றது.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது திருநாமம் சிவலோகத் தியாகரென்பது. அது காப்புப்பருவத்தில்,

"நாடுதிரி யக்கரு ளாளர்மண வைக்கிறைவர்
நாதர்சிவ லோகத்தி யாகரைப் போற்றுவம்"

எனச் சந்தச்செய்யுள் ஒன்றில் அமைக்கப்பெற்றுள்ளது. அங்கே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருமணம் நடை

பெற்ற காலத்தில் அம்பிகை அங்கே உள்ள ஸ்ரீ பஞ்சாக்கர தீர்த்தத்தின் கரையில் நின்று அடியார்களுக்கு வெண்ணீறளித்தருளின மையின் திருவெண்ணீற்றுமையென்னும் திருநாமங்கொண்டனள். இவ்வரலாறு இந்நூலில் அம்புலிப்பருவத்தில்,

"வையமுழு துய்யவொரு வாவியங் கரைநின்று
வாய்மலர்ந் தழுதபிள்ளை
மதுரமிகு செவ்வாய்க் கருங்குழற் காதலியை
மாமணஞ் செய்தஞான்று
செய்யமலர் மீதனந் துஞ்சுபஞ் சாக்கரத்
தீர்த்தக் கரைக்கணின்று
சேர்ந்தார் களங்கமுற் றொழியவெண் ணீறுதன்
செங்கரத் தாலளித்தாள்
உய்யவிவள் வாவென் றுரைத்தபடி யேவிரைந்
தொருவனீ வந்துசேரின்
உன்களங் கந்தவிர வெண்ணீறு நல்காள்கொ
லோவிதனை யுணராததென்
ஐயமன மோவித் திருப்பெரு மணத்துமையொ
டம்புலீ யாடவாவே" (அ)

என்னும் செய்யுளிற் கூறப்படுகிறது.

மேற்கூறியுள்ள பஞ்சாக்கரத் தீர்த்தத்துடன் அத்தலத்துள்ள கங்கையென்னும் தீர்த்தமும்,

"உலகுபுகழ் பஞ்சாக் கரப்பெருந் தீர்த்தமென்
றொன்றுண்டு மூழ்கி னோருக்
கொழியாத பிணிமுழு தொழிப்பததன் மான்மிய
முரைக்கரிது முகம னன்றுல்
இலகுமீஃ தன்றியுங் கூபவடி வாய்க்கங்கை
யென்பதொன் றுண்ட தன்சீர்
எம்மனோர் பேசுதற் கரியதரி யதுபெரிய
தித்தலப் பெருமை கண்டாய்" (அம்புலிப். சு)

எனப் பாராட்டப் பெறுகின்றது.

அத்தலப் பெயர் பெருமணம், நல்லூர், பெருமணநல்லூர், நல்லூர்ப் பெருமணம் என நான்குவகையாக வழங்கும். அதனை நினைந்து, வாயென்றும் காலென்றும் கால்வாயென்றும் வாய்க்காலென்றும் வழங்கப்படும் வாய்க்கால்கள் பல அத்தலத்திற்கும்

தமக்குமுள்ள ஒப்புமைகருதி, அறிஞர் வலஞ்செய்தல்போல இத்தலத்தைச் சூழ்ந்திருக்கின்றன வென்பது பின்னுள்ள செய்யுளிற் கூறப்பட்டிருக்கிறது:

"வண்கா லென்ன வாயென்ன வாய்க்கா லெனக்கால் வாயெனப்பேர்
மருவி மாரு வனங்கொணமை மான நல்லூர் பெருமணம்வான்
எண்கா நல்லூர்ப் பெருமணமே ரேய்பெ ருமண நல்லூரென்
றிலகு பெயர்பூண் டுறைவன்மேய்ந் தென்றும் விளங்கு மிந்நகரைத்
தண்கா லறிஞர் பலர்குழுமித் தவாது சூழ்ந்து மருவுதலாற்
ரூவா நாமு மெஞ்ஞான்றும் தவாது சூழ்த றகுதியென
ஒண்கால் பலசூழ் சிவலோகத் துறைவாய் தாலோ தாலேலோ
உலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ."
(தாலப். உ)

பெண்மகவைப்பெறுதல் சிறப்பன்றெனக் கருதுவோர்களும், ஆண்மகவைப் பெறுகவென்று ஆசிகூறுவோர்களும், பிறவாறு உரைப்போர்களும் நாணும்படி, அம்பிகை இமவானுக்குப் புதல்வியாகிப் பெண்பிறப்பைச் சிறப்புறச் செய்தாளென்னும் கருத்தமைய இப்புலவர்பிரான் செங்கீரைப்பருவத்தில்,

*"பேசுபுகழ் சால்பெரும் புவனத்தி லாண்மகப்
பெறல்சிறப் பென்று மற்றைப்
பெண்மகப் பெறலத் துணைச்சிறப் பன்றுதுயர்
பெற்றதொப் பாகுமென்றும்
மாசுபடு துன்பமே பெண்ணுருவ மாயெந்த
வைப்பினும் வருமதென்றும்
மதிக்கிலெரு மகவுமக வாவென்று மிந்நனம்
வகுத்துரைப் பார்களோடு
கூசுத லிலாதக மலர்ந்தாண் மகப்பெறுதி
குறைவுதப வென்றுசிமுற்
கூறுநரு மூள்ளநாண் கொள்ளவெள் ளப்படாக்
குவடுவா னணவவோங்கும்

---

* பெரியநாயகி யம்மை கட்டளைக்கலித்துறையிலுள்ள

"கற்ரு றறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்ரு லெருபெண் ணெழித்ததென் பாரொடு தொல்லுலகில்
நற்ரூண் மகப்பெறு கென்ரூசி சொல்பவர் நாணவுனைப்
பெற்ரூன் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே" (கஉ)

என்னும் செய்யுளின் கருத்தை இச் செய்யுள் ஒருபுடை தழுவியது.

தேசுமலி பனிமலைக் கொருபுதல்வி யாயவுமை
செங்கீரை யாடியருளே
திருப்பெரு மணத்தம ருருட்பெரு மணச்செல்வி
செங்கீரை யாடியருளே ” (உ)

என்று பாடியுள்ளார். முத்தப்பருவத்தில் உமையம்மையின் திருவாய் முத்தத்தைப்போல ஏனைய முத்தங்கள்சிறவாவென்றும் அவை இன்ன இன்ன காரணத்தாற் குறைபாடுடையனவென்றும் எடுத்துக் காட்டுவர் :

“ மதிமுத்தம் வீரன்வயி ரக்கழற் காறேய்க்க
மண்ணிடைத் தேய்ந்ததுயர்வேய்
வருமுத்த மதிலெழுந் தழலால் வெதுப்புண்டு
மாமைகரு கியதுசெஞ்சொற்
பொதிமுத்தம் வன்புகடு காலுழக் கப்பிளவு
பூண்டதால் இப்பிவளைமீன்
பொலிமுத்தம் வெய்யபுல வொழியாது நாறும்.....
.....இக்குச்
சுடர்முத்தம் ஆலயி னெரிந்ததிவை வேண்டேந்
தொடுத்தபற் பலவுயிர்க்கும்
பதிமுத்த மேற்றுமகிழ் நிதிமுத்த மன்னசெம்
பவளமுத் தந்தருகவே
பல்லூர் விரும்புமெயி னல்லூ ரரும்புமயில்
பவளமுத் தந்தருகவே.” (சு)

சோடற் பருவத்தில் உள்ள,

“ நள்ளாறு பழையாறு கஞ்சாறு கோட்டாறு
நல்லாறு தருமையாறு
நாவலா ரூழுகுவட மேருமுற் பலதேம்
நயந்தவர் சடைக்குமஞ்சா
வெள்ளா றெனப்பரவு கொள்ளிடத் திருநதியின்
வெள்ளநீ ராடியருளே ” (உ)

என்பதில் சிவபெருமான் திருக்கோயில் கொண்டுள்ள தலங்களில் ஆறென்னும் முடிவுடைய தலங்களே இடத்துக்கேற்ப அமைத்துள்ளனர்.

சூரனுடைய பெரிய வீடு, பெரும்பறைமுழக்கம், பெருந் தேரோட்டமென்பவை கெட முறையே சிற்றிலழித்தும் சிறுபறை

முழக்கியும் சிறுதேருருட்டியும் விளையாடிய முருகக்கடவுளைப் பெற்றுயென்று அம்பிகையைப் பாராட்டுவர் :

"வலியவர ணுலமரர் வானகங் கூட்டுண்டு
மகிழ்முரட் சூரனிளவல்
மக்களொடு வாழ்கின்ற பேரிலழி யச்சிற்றில்
மறுகூடு லாயழித்தும்
கலியவவன் வாய்தற் பெரும்பறை முழக்கறக்
காமர்சிறு பறைமுழக்கம்
கண்டுமவ ணூருமிழ் திரளுால மென்றுரை
கதிர்ப்பொலந் தேருருளுரு
தொலியசிறு தேரினி துருட்டியும் விளையாடும்
ஒண்சதங் கைச்சிறியதாள்
ஒருகுழவி யைத்தனி யுவந்தெடுத் துப்புல்லி
ஒண்மணித் தொட்டிலேற்றிப்
பொலியவினி தாட்டுந் திருப்பெரு மணத்தம்மை
பொன்னுச லாடியருளே
பொருவின்மந் திரசொரூ பத்தனி விமானத்தி
பொன்னுச லாடியருளே."

(ஊசற். அ.)

திருக்குருகாவூர் சென்றது.

திருக்குருகாவூரென்னும் ஸ்தலத்தில் இருந்த ஒரன்பர் தம் வீட்டில் திதியொன்று நடக்கப்போவதால் அத்தினத்தில் மாணவர்களுடன் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுமென்று இவரிடம் கேட்டுக் கொண்டனர். அவ்வாறே இவர் பல மாணவர்களுடன் சீகாழியிலிருந்து சென்றிருந்தார். இவருடைய வரவை நினைந்து அவர் விரிவான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார். அதனால் சமையலாதற்கு மிக்க நேரம் ஆகிவிட்டது.

இவருக்கும் மாணாக்கர்களுக்கும் பசி அதிகமாயிற்று. மாணாக்கர்கள் பசிக்கொடுமையைத் தம்முள் மந்தணமாகப் பேசிக் கொண்டு வருந்துவாராயினர். அப்பொழுது இப்புலவர் தலைவர் அதனையறிந்து அவர்களுடைய ஞாபகத்தை வேறொரு விதத்தில் திருப்ப நினைந்து அவர்களுள் திட்டைச் சிதம்பரம் பிள்ளையென்னும் ஒருவரை அழைத்து, "இங்கே பசியோடிருத்தலை அமைத்து ஒரு செய்யுள் சொல்லும்" என்று சொன்னர். அவர் சிறிது நேரம் யோசித்து ஒரு செய்யுளைப் பூர்த்தி செய்து சொன்னர். எல்லோ

ரும் அதுவரையில் அவர் என்ன சொல்லப்போகிறாரென்று எதிர்பார்த்த வண்ணமாக இருந்தமையின் அவர்களுக்குப் பசி தோன்றவில்லை. அப்போது அவர் பாடிய செய்யுள் வருமாறு :

" தருகா முறுபொழில் சூழ்நாவ லூரந் தணர்முதலோர்க்
குருகார்வத் தோடு பசிநீங்க வுண்டி யுதவியநீ
குருகா புரத்துறை வெள்விடை யீச குறைந்தடைந்து
பருகார்வத் தேமுக் கஃதின் றுதவாப் பரிசென்னையே."

அதன் பின்பு அங்கே எல்லாம் ஆயத்தமாய்விட்டபடியால் அழைக்கப்பெற்று யாவரும் உண்டு உவந்தனர்.

பல பிரபுக்கள் இவரைத் தங்கள் தங்கள் ஊருக்கு அழைத்து உபசரிப்பதையும் அதனால் அவர்கள் புகழ்ப் பெறுவதையும் அறிந்து, ஒரு கிராமத்திலிருந்த பிரபு ஒருவர், கௌரவம் பெறுவ தொன்றையே நோக்கமாகக் கொண்டு ஒருநாள் இவரை அழைத் தார். இவர் மாணவர்களோடு சென்று அவரால் செய்விக்கப்பெற்ற விருந்தை உண்டனர். பின்பு, ஓரிடத்தில் வந்து இருந்தபொழுது உடனிருந்த நண்பர்களிற் சிலர் சீகாழிக் கோவையின் சிறப்பைப் பற்றிப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தனர். உபசரித்த பிரபு தாமும் அந்தச் சம்பாஷணையிற் கலந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிப் பிள்ளையவர்களைப் பார்த்து, " அந்தக் கோவை ஸ்வாமி யின்மேற் செய்யப்பட்டதா ? அம்மன் மேற் செய்யப்பட்டதா ?" என்று கேட்டார். அவருடைய அறியாமையை அறிந்து யாவரும் இரங்கினர். இவர் அவ்விரக்கத்தைப் புலப்படுத்திக்கொள்ளாமல், " சுவாமிமேலேதான் " என்று விடை கூறிச் சும்மா இருந்து விட்டார்.

ஒரு சமயம் திருநகரியென்னும் ஊரிலிருந்து தமிழ்ப் பயிற்சி யுடையவராகிய வேங்கடராமையர் என்னும் அந்தணர் ஒருவர் இவரிடம் வந்து, தாம் வீடு கட்டவேண்டியிருத்தலின் அதற்கு வேண்டிய மரம், செங்கல் முதலியன கொடுத்து உதவும்படி ஒரு செல்வரிடம் சொல்லவேண்டும் என்று வேண்டினர். உடனே இவர் அவரிடம்,

" வளமருவு திருநகரி வாழும்வேங் கடராம
மறையோய் கேண்மோ
களமருவும் வரிசைப்பற் றினில்விளங்கும் லிங்கப்பக்
கனவான் பாற்செல்

உளமருவு நின்மனைக்குச் செங்கல்புக லூரரன்போ
லுதவு மொண்பூந்
தளமருவுந் தருவேண்டிற் கண்ணன்போ லெந்தருவுந்
தருவன் மெய்யே ”

என்னும் பாடலை எழுதிக் கொடுத்து * வரிசைப்பற்று லிங்கப்ப நாயகர்பால் அனுப்பினர். அவர் அதனைக் கண்டு மகிழ்ந்து அவ் வந்தணர் வீடு கட்டுதற்கு எவ்வெப்பொருள்கள் வேண்டுமோ அவற்றையெல்லாம் உடனே கொடுத்துதவினர்.

இவர் தமக்குச் சீகாழியிலும் பிற இடங்களிலும் கிடைத்த பணத்தில் ஒரு பகுதியைக்கொண்டு தம்முடைய மாணவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வைத்தும் அவருள் மூத்தக் குமார பிள்ளை என்பவருக்கு மணம் செய்வித்தும் வீடு கட்டிக் கொடுத்தும் செலவு செய்துவிட்டு எஞ்சிய தொகையைத் திரிசிர புரத்திற் செலுத்தவேண்டிய கடனுக்காக அனுப்பி விட்டார்.

---

19. மாயூர வாலம்.

மாயூர நகரத்தை இருப்பிடமாகக் கொண்டது.

பின்பு, கலியாணசோழபுரம் சிதம்பரம் பிள்ளை என்னும் செல்வரும் அவர் சகோதரர்களும் இவரை அழைத்துச் சென்று தம் ஊரில் சிலநாள் இருக்கச்செய்து உபசரித்து அளவளாவி மகிழ்ந்து வந்தார்கள். அதன்பிறகு மாயூரத்திலிருந்த சில பிரபுக்களின் வேண்டுகோளால் அங்கே சென்று இருந்தார். அப்பொழுது அங்கே இருந்தவர்களும் அயலூர்களில் இருந்த பிரபுக்களும் இத்தகைய அரிய வித்துவானைத் தங்கள் ஊருக்கு அருகிலேயே இருக்கச்செய்ய வேண்டுமென்று எண்ணி இருப்பதற்குரிய விடுதி முதலியவைகளை அமைத்து இவரை மாயூரத்திலேயே இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ‘அடிக்கடி திருவாவடுதுறை சென்று வரலாம்’ என்னும் எண்ணம் இருந்தமையால் இவருக்கும் அது சம்மதமாயிற்று. பிரபுக்களில் தக்கவர்க

---

* வரிசைப் பற்று - சீகாழித் தாலூகாவில் உள்ள ஓரூர்.

ளாகிய * 12-பேர்கள் மாதம் மாதம் ஒவ்வொருவராகப் பப்பத்து ரூபாய் இவருடைய செலவுக்குக் கொடுத்து வருவதென்று தீர்மானித்தார்கள்.

† இவர் மாயூரத்தில் இருக்கத் தொடங்கியது ரௌத்திரி வருஷம் (1860) ஆகும்.

ஒருசமயம் பல்லவராயப்பட்டில் இருந்த சடையப்பபிள்ளை யென்னும் பிரபு இவருக்கு நெல் அனுப்பினர். அதனை உபயோகித்து வருகையில் அசௌகரியம் உண்டாயிற்று. அது நெல்லால்வந்ததென்பதனைத் தெரிந்து இவர், "தில்லை நாயகன் பித்தனென்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அந்தச்செய்தி உண்மையென்பதை இப்பொழுது அறிந்துகொண்டேன்" என்ற கருத்தமைந்த செய்யுளொன்றை அவருக்கு எழுதியனுப்பினர். அதனைக்கண்ட அவர், 'நாம் அனுப்பிய தில்லைநாயகனென்னும் நெல் பித்தத்தை உண்டுபண்ணுகின்றதாயிற்றே; நாம் யோசியாமல் அனுப்பிவிட்டோமே!' என்று நினைந்து வேறு பழைய ஈர்க்குச் சம்பா நெல்லை அனுப்பிப் புதியதாகிய அதனை வருவித்துக் கொண்டார்.

வேதநாயகம்பிள்ளை மாயூரம் வந்தது.

சீகாழியில் முன்ஸீபாக இருந்த வேதநாயகம்பிள்ளை 1858-ஆம் வருஷத்தில் மாயூரத்திற்கு மாற்றப்பட்டு வந்து சேர்ந்தார். அவர் மாயூரம் வந்ததனலும் பிள்ளையவர்களுக்குச் சந்தோ

---

* அவர்களாவார்: 1. திருப்பனந்தாள் இராமலிங்கத் தம்பிரான்வர்கள், 2. கலியாணசோழபுரம் சிதம்பரம் பிள்ளை, 3. பல்லவராயப்பட்டு சடையப்ப பிள்ளை, 4. மாயூரம் ஆற்றங்கரை முதலியார், 5. அம்பர் வேலுப் பிள்ளை, 6. வள்ளலார் கோயில் அகோர சாஸ்திரிகள், 7. பூங்காவூர்ச் சாமி ஐயர், 8. குற்றூலம் சிங்காரவேலு முதலியார், 9. கூறை நாட்டுச் சாலியச் செல்வர்களுள் ஒருவர், 10. நெய்ப்பற்றூர்ச் சாமி ஐயர், 11. திருவெண்காட்டு நடராச பிள்ளை, 12. வல்லம் பரமசிவம் பிள்ளை.

† முதலில் தெற்குரத வீதியின் தென்பாலுள்ள செட்டிகுளத்தின் கீழ்கரையிலிருந்த ராமபிள்ளை யென்பவர் வீட்டில் ஆறு வருஷம் இருந்தார். அந்த வீடு இப்பொழுது இடிந்துபோய்விட்டது. அப்பால் தெற்கு வீதியில் வடசிறகில் குப்பபிள்ளை யென்பவர் வீட்டில் நான்கு வருஷம் இருந்தார். அதன்பிறகு அவ்வீதியிலே தென்சிறகில் நாராயணபிள்ளை யென்பவருடைய வீட்டை விலைக்கு வாங்கிக்கொண்டு இருந்தார்.

ஷம் உண்டாயிற்று. வேதநாயகம்பிள்ளையும் இவர் மாயூரத்தை இருப்பிடமாகக் கொண்டதையறிந்து அடிக்கடி பழகி வரலா மென்ற எண்ணத்தினல் அளவில்லாத மகிழ்ச்சியுற்றார். அப் பொழுது பஞ்சமுண்டாயிற்று. பரதேசி ஜனங்களும் ஏழை ஜனங் களும் பசியினல் துன்புறுவதை யறிந்து வேதநாயகம்பிள்ளை ஒரு கொட்டகை போடுவித்து அதில் அவர்களுக்கு உணவளித்து வருமாறு செய்துவந்தார். இந்த அறச்செயலால் அவருக்குமிக்க புகழ் உண்டாயிற்று. ஒருமுறை பிள்ளையவர்கள் அவ்விடத்திற்குச் சென்றார். அப்பொழுது உடனிருந்தவர்கள் கேட்டுக்கொண்ட தற்கிணங்க வேதநாயகம்பிள்ளையைச் சிறப்பித்து,

"வாயுதவு மினியபத நுகர்ந்தறிவு பெருத்திடலான் வானந் தாங்கா
தாயுதவு கருணையினுங் கையுதவு மினியபத மவாவி யார்ந்து
வேயுதவு மூடல்பெருத்த லான்மண்ணுந் தாங்காது மெலியா நிற்கும்
மீயுதவு புகழ்வேத நாயகமா லிளைப்பாற்றும் விதமெற் றுமே"

என்னும் செய்யுளை இவர் பாடினர்.

மாணவர்கள்.

இவரிடம் அப்பொழுது பாடங் கேட்டவர்களுள் முக்கிய மானவர்கள் :

1. வல்லம் கந்தசாமி பிள்ளை : இவர் சொந்த ஊர் வல்லம்; இவர் திருவழுந்தூரிலிருந்து கொண்டு அடிக்கடி பாடங் கேட் டுச் செல்லுவார்.

2. மாயூரம் தெற்குவீதி முத்துசாமி பிள்ளை : இவர் யாதவ குலத்தைச் சார்ந்தவர்; இவர் படித்துக்கொண்டு வந்ததன்றிப் பிள்ளையவர்கள் சொல்வனவற்றை எழுதிவருதலையும் பிரபந்தம் முதலியவற்றைப் பிரசங்கம் செய்யும்போது ஏடுவாசிப்பதையும் மேற்கொண்டிருந்தார்.

3. சித்தக்காடு நமச்சிவாயபிள்ளை.

4. சிவலிங்க வாத்தியார்.

5. சிங்கவனம் சுப்பு பாரதிகள்.

6. திருப்பாம்புரம் சாமிநாத பிள்ளை.

7. கர்ணம் வைத்தியலிங்கம் பிள்ளை : இவர் மாயூரம் கீழை வீதியில் இருந்தவர்; ராமாபுரமென்னும் கிராமத்துக் கணக்கு

வேலை பார்த்து வந்தவர்; எப்பொழுதும் உடனிருந்து பிள்ளையவர்களுடைய குடும்ப காரியங்களைக் கவனித்துக் கொண்டு வந்தவர்; படிப்பவர்களை ஊக்கிவருவார்.

8. கூறைநாட்டு முத்துக்குமார பிள்ளை.

9. முத்தாம்பாள்புரம் கோபாலபிள்ளை.

10. சுந்தரப்பெருமாள்கோயில் அண்ணாசாமி ஐயர்: இவர் எழுதியும் வந்தார்.

11. திருமங்கலக்குடி சேஷையங்கார்: இவர் பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் சிலவற்றைப் பனையேட்டில் எழுதியவர்.

12. திருவாவடுதுறை வெங்குவையர்.

இவர்களில் இசையோடு படித்துக்காட்டும் வன்மையை உடையவர்கள் கந்தசாமி பிள்ளை, முத்துசாமி பிள்ளை, சிவலிங்க வாத்தியார், அண்ணாசாமி ஐயர், சேஷையங்கார், வெங்குவைய ரென்பவர்கள்; எழுதுபவர்கள் கந்தசாமி பிள்ளை, முத்துசாமி பிள்ளை, கோபால பிள்ளை, சேஷையங்கார், அண்ணாசாமி ஐயர், வெங்குவையரென்பவர்கள்.

ஒரு மாதத்தில் ஐந்து ரூபாய்க்குள் தமக்கு வேண்டிய சௌகரியங்களை அக்காலத்திற் செய்துகொள்ளக் கூடுமாதலால் முற்கூறியவர்களிற் பெரும்பாலோர் மாயூரத்தில் இருந்து தம்முடைய பொருளைக்கொண்டேனும் பிறரிடம் பெற்றேனும் செலவழித்து உண்டு படித்து வந்தார்கள். அதற்கும் சௌகரியம் இல்லாதவர்களும் உடன் உண்ணக் கூடியவர்களும் பிள்ளையவர்கள் வீட்டிலேயே ஆகாரம் செய்துகொண்டு வந்தார்கள்.

மாயூரத்திலிருந்த வித்துவான்கள்.

அக்காலத்தில் தமிழ் வித்துவான்களென்று பெயர் பெற்றுப் பிரசங்கம் முதலியன செய்து மாயூரத்திலிருந்துகொண்டு இவர் நூதனமாகச் செய்யுள் செய்வதைக்கேட்டும் பாடஞ் சொல்லுகையில் உடன் இருந்து கேட்டும் மகிழ்ந்துசெல்வோர்:

1. தர்மதானபுரம் கண்ணுவையர்: இவர் பாரதப் பிரசங்கம் செய்து புதுச்சேரி முதலிய இடங்களில் மிகுந்த புகழ்பெற்றவர்; நல்ல வாக்கி.

2. மாயூரம் பட்டமங்கலம் சபாபதி ஐயர்: இவர் எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியாரிடத்திற் பாடங்கேட்டவர்; தம் முடைய இளமை தொடங்கிக் கூறைநாட்டில் சாலியச்செல்வர்க ளிடத்தில் இராமாயணப் பிரசங்கம் செய்து ஜீவித்தவர்.

3. கூறைநாட்டுச் சாமிநாத வாத்தியார்: இவர் சிலருக்குத் தமிழ் நூல்கள் பாடஞ்சொல்லிக் கொண்டு பாடசாலை வைத்து ஜீவித்தவர்; வீரசைவர்.

கூறைநாட்டில் இருந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் துறவு பூண்டவர்களும் வேதாந்த சாஸ்திரங்களில் நிபுணர்களு மாகிய இருவர் இவரிடம் அடிக்கடி வந்து ஸல்லாபம் செய்து போவார்கள்.

வடமொழி வித்துவான்கள் பலர் இருந்தார்கள்.

அக்காலத்தில் அங்கே இருந்த ஸங்கீத வித்துவான்கள்:

(1) திருநாஸப்போவார் சரித்திரக் கீர்த்தனை இயற்றிய முடி கொண்டான் கோபாலகிருஷ்ண பாரதிகள், (2) சாத்தனூர்ப் பஞ்சுவையர், (3) திருத்தருப்பூண்டி பாகவதர், (4) பெரிய ராம சாமி ஐயர், (5) சின்னராமசாமி ஐயர்: இவர் கோபாலகிருஷ்ண பாரதியாரின் முதன் மாணாக்கர்; தம்முடைய வீட்டிலேயே பாரதி யாரை இருக்கச் செய்து அவர் சிவபதம் அடையும் வரையில் உப சரித்தவர்.

முன்ஸீப் கோர்ட்டில் பெரும்பான்மையான உத்தியோகஸ் தர்களுக்குச் சங்கீதப் பயிற்சி இருந்துவந்தது.

மேற்கூறியவர்கள் யாவரும் பிள்ளையவர்களுக்குப் பழக்கம் உடையவர்களே. இவர் வீட்டிற்கு அவர்கள் வருவதும் செல்லக் கூடியவர்கள் வீட்டிற்கு இவர் போவதும் உண்டு.

* சச்சிதானந்த தேசிகர்மாலை இயற்றியது.

மாயூரத்தில் இருந்தபொழுது திருஞானசம்பந்த தேசிகரது குருபூசைக்கு அழைக்கப்பெற்று இவர் தருமபுர மடத்திற்கு ஒரு முறை போயிருக்கையில் அங்கிருந்த அடியார்கள் ஆதீனத் தலை வராக இருந்த ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்மீது ஒரு பிரபந்தம்

---

*ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 3221-3321.

இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோட்கிணங்கி அந்த மடத்துச் சம்பிரதாயங்கள் புலப் படும்படி சச்சிதானந்த தேசிகர்மாலை என்ற நூல் ஒன்றைச் செய்து அவருடைய முன்னிலையில் இவர் அரங்கேற்றினர். கேட்டு மகிழ்ந்த தலைவரால் தக்க ஸம்மானங்கள் செய்யப்பெற்றன.

அந்நூலிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :

"மருந்து பிடகர் சுமப்பதெல் லாம்பிறர் மாட்டடைந்த
அருந்து பிணிமுற் றொழிப்பதற் கேபிற வாருயிர்கள்
பொருந்து வினையொழிப் பான்றனுத் தாங்குபு போந்தனைமெய்
திருந்து புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே." (இ)

"பாடிவந் தார்க்கென் பரிசளிப் பாயுட் படுமறையிற்
கூடிவந் தார்வ முறப்பேசி மூன்றையுங் கொள்ளைகொள்வாய்
நாடிவந் தாருண் மகிழ்வள்ள லேபன் னகரினரும்
தேடிவந் தார்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே." (கக)

"நின்பார்வை யாலிரு ணீங்கிடு மாலிந் நெடுநிலத்திற்
கென்பார் கதிர்மதி யாலிரு ணீங்குத லென்வியப்பு
வன்பா ரகவிரு ளென்றே யுளத்து மதித்தனன்காண்
தென்பா ரணித்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே." (கஅ)

"வளிதாழ் விசும்பைப்பைந் தோலிற் சுருட்டிட வல்லவனும்
அளிதாழ்நின் பேரரு டீர்ந்தின்ப மார்தற் கமைபவனும்
ஒளிதாழ் புவனத்தி லொப்பரன் றேவுண ராதவர்க்குந்
தெளிதாழ் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே." (உஎ)

"எல்லா மறைத்துஞ் சடையொன்று மேபுனைந் திங்கமர்ந்தாய்
வல்லா வெமரு முணர்வர்கொ லோவல் லவருணர்வார்
வில்லார்நற் ரூலிபு லாகத்தின் மற்றும் விளங்குமென்று
செல்லார் மதிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே." (உஅ)

நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது.

அக்காலத்தில் திருநாளைப்போவார் சரித்திரத்தைக் கீர்த்த னங்களாகச் செய்த மேற்கூறிய கோபாலகிருஷ்ண பாரதியார் அடிக்கடி இவரை வந்துபார்த்துச் செல்வது வழக்கம். அவர் நந்தன் சரித்திரம் செய்து முடித்தபோது அந்தச் சரித்திர அமைப்பையும் ஹிந்துஸ்தானி சம்பந்தமான சங்கீதப்பகுதிகள் பல அதில் நன்முக அமைந்திருத்தலையும் அதிற் காணப்படும் பக் திச் சுவையையும் அறிந்து பலரும் பாராட்டுவாராயினர். இசைப்

பயிற்சியுள்ள ஏழைஜனங்கள் அதிலுள்ள கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் பிறரிடம் பாடிக் காட்டிப் பொருள் வருவாயடைந்து கவலையின்றி வாழ்ந்து வந்தார்கள். பலர் ஒழுங்காகப் பாடிக் கதை பண்ணிக்கொண்டும் வரலாயினர். கிராமாந்தரங்களில் அதனைக்கேட்டவர்களிற் சிலர் பக்திமேலீட்டால் திருப்புன்கூர் சென்று நந்திவிலகியதைப் பார்த்துவிட்டுச் சிதம்பரம் சென்று நந்தனார் தீயில் மூழ்கிய குண்டமென்று சொல்லப்படுகிற ஓமக் குளத்தில் நீராடி. ஸ்ரீ நடராசப்பெருமானைத் தரிசனம் செய்து கொண்டு வர ஆரம்பித்தனர். அந்தச் சரித்திரத்தைப்பற்றிய பேச்சு தமிழ்நாடு முற்றும் அக்காலத்திற் பரவி இருந்தது.

ஆயினும், அச்சரித்திரம் பெரிய புராணத்திலுள்ள திருநாளைப்போவார் புராணப்படி அமையாமலும் தமிழ் இலக்கண வழுக்கள் பொருந்தியும் இருந்ததுபற்றித் தமிழ்வித்துவான்களிற் சிலர் அதைக் குறை கூறுவாராயினர். பிள்ளையவர்களுடைய கருத்தும் அவ்விதமே இருந்தது. இவருடைய நோக்கத்தை யறியாத கோபாலகிருஷ்ண பாரதியார் இவரிடம் அந்த நூலுக்கு எப்படியேனும் ஒரு சிறப்புப்பாயிரம் பெறவேண்டுமென்று பல முறை அலைந்தார். அப்படி அலையுந்தோறும், யார் வந்தாலும் தடையின்றிச் சிறப்புப்பாயிரம் கொடுத்தனுப்பும் இவர், "மற்றொருசமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்றே சொல்லிவந்தார். அப்படிச் சொன்னதன் நோக்கம் பின்பு கொடுப்பதற்கன்று; அலைவதை அஞ்சி, வருவதை அவர் நிறுத்திவிடவேண்டுமென் பதே. ஆயினும் பாரதியார் அடுத்தடுத்து முயல்வதைச் சிறிதும் நிறுத்தவேயில்லை.

ஒருநாள் அவர் வந்தபோது இவர் பகற்போசனத்திற்குப் பின் வழக்கம்போல் நித்திரை செய்துகொண்டிருந்தார். அதனை யறிந்த பாரதியார் திண்ணையில் அமர்ந்து "கனவோ நினவோ", "வாராமலிருப்பாரோ", "சிந்தனை செய்துகொண்டிருந்தால்", "தீயினில் மூழ்கினர்" என்னும் கீர்த்தனங்களை மெல்லப் பாடித் தாமே * இன்புறுகொண்டிருந்தார். இவர் விழித்துக்கொண் டார். அப்போது,

"கனகஸபாபதி தரிசன மொருநாள்
கண்டால் கலிதீரும்"

* இவ்வாறு தாங்களேபாடி இன்புறுதல் சங்கீத வித்துவான்கள் இயல்பு.

என்ற கீர்த்தனத்தைப் பாடத் தொடங்குகையில் இவர் அங் கிருந்தபடியே எழுந்து பாயலிலிருந்து அந்தக் கீர்த்தனத்தைக் கேட்கலாயினர். கேட்கக் கேட்க அவ்விசைப்பாட்டு இவரது மனத்தை உருக்கி அதில் இவரை ஈடுபடச்செய்தது. பாரதியார் பின்னும் சில கீர்த்தனங்களைப் பாடினர். இவருடைய மனம் கனிந்துவிட்டது; இவரையறியாமலே பக்தி மிகுதியினற் கண்ணீர் வெளிப்பட்டது. உடனே எழுந்து புறம் போந்து பாரதியாரைக் கண்டு நல்வரவு கூறினர். பின்பு,

"கோமேவு திருத்தில்லை நடராசப் பெருமான்றுள்
கூடி யுய்ந்த
பூமேவு பேரன்பர் திருநாளைப் போவார்தம்
புனிதச் சீரைப்
பாமேவு பலவகைய விசைப்பாட்டா லினிமையுறப்
பாடி மீந்தான்
ஏமேவு கோபால கிருட்டினபா ரதியென்னு
மிசைவல் லோனே"

என்னும் பாடலை இயற்றி அவர்பாற் கொடுத்து, "இதை உப யோகப் படுத்திக்கொள்ள வேண்டும். சாம்பவர்களாகிய உங்களை இதுவரையில் அலைக்கழித்ததைப் பொறுத்துக்கொள்ளவேண் டும்" என்று முகமன் கூறினர். அவர் மிக்க களிப்படைந்து அதனைப் பெற்றுக்கொண்டு சென்றார்.

தனுக்கோடி முதலியார்.

காரைக்காலில் தபேரியோமென்னும் வேலையில் இருந்த தனுக்கோடி முதலியார் என்னும் கிறிஸ்தவ கனவான் ஒருவர் அடிக்கடி மாயூரம் வந்து வேதநாயகம் பிள்ளையுடன் சிலநாள் இருந்து செல்வார். அவர் தமிழில் விருப்பமும் தமிழ் வித்து வான்களையும் ஸங்கீத வித்துவான்களையும் ஆதரிக்கும் இயல்பும் உடையவராகையால் அவருக்கும் பிள்ளையவர்களுக்கும் வேதநாய கம் பிள்ளை மூலம் மிக்க பழக்கம் உண்டாயிற்று. அதனற் சில சமயங்களில் நாகபட்டினம் முதலிய இடங்களுக்கு இவர் போகும் பொழுது காரைக்காலுக்கும் சென்று வருவது வழக்கம். அப் பொழுது தனுக்கோடி முதலியார் இவரைத் தமது பங்களாவில் இருக்கச்செய்து இராசோபசாரம் செய்வார். இவர் திருவாவடு

துறை முதலிய இடங்களில் இருக்கும்பொழுது பூசைக்காகச் சந்தனக்கட்டை, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலியன அனுப்புவதன்றி இவருக்குப் பிரியமான நல்ல மாம்பழங்களையும் அனுப்பிவருவார். மாம்பழத்திற் காரைக்கால் பெயர்பெற்ற தன்றே? அவர் மூலமாகக் காரைக்காலிலுள்ள சிவநேசச்செல் வர்களிற் பலர் இவர்பாற் பிரீதி வைப்பாராயினர்.

வேதநாயகம் பிள்ளையின் பதத்தைச் சிறப்பித்துப் பாடியது.

வேதநாயகம்பிள்ளை அக்காலத்திற் பல சங்கீத வித்துவான்க ளோடு மாயூரத்திற் பழகி வந்தனர். அவர்கள் சொல்லும் தியாக ராசையர் கீர்த்தனம் முதலிய பலவகையான கீர்த்தனங்களைக் கேட்டு மகிழ்வடைவார். அக்கீர்த்தனங்களுள் தமக்குப் பிரீதி யான மெட்டில் தாமும் தமிழ்மொழியிற் பல கீர்த்தனங்க ளைச் செய்தார். அவற்றை இசையில் வல்லவர்களைக் கொண்டு பாடுவித்துக் கேட்டும் கேட்பித்தும் பொழுது போக்கு வது அவருக்கு வழக்கமாக இருந்தது. அவருக்குக்கீழ் இருந்த உத்தியோகஸ்தர்களிலும் வக்கீல்களிலும் பாடக்கூடியவர்கள் அவருடைய பாடல்களைப் பாடியும் தம் குழந்தைகளுக்குச் சொல் லிக்கொடுத்துப் பாடச்செய்தும் வந்தனர். பிள்ளையவர்களுக்கும் அப்பொழுதப்பொழுது தாம் செய்த கீர்த்தனங்களை வேதநாயகம் பிள்ளை பாடிக்காட்டச் செய்வதுண்டு.

ஒருநாள் அவர் தாம் இயற்றிய சிலகீர்த்தனங்களை இராம சாமி ஐயங்காரென்னும் வக்கீல் ஒருவரைக் கொண்டு இவரிடம் பாடிக்காட்டச் செய்தார். அவர் சில கீர்த்தனங்களைப் பாடிவிட் டுக் கடைசியில் பின்னுள்ள கீர்த்தனத்தைப் பாடினர்:

இராகம் - காம்போதி ; ஆதிதாளம்.

பல்லவி.

எவ்வகை யிலும் நானே—நல்வழிபற்றி
உய்வகை அருள்கோனே.

அனுபல்லவி.

செவ்வழி நிற்போர்மனத் தேன்கள் வளரும்பூவே
பௌவமாகப் பேரின்பம் பழுக்குங்கற் பகக்காவே (எவ்வகை)

சரணங்கள்.

1. வறியர்க் கிடவென்றூலென் குறியகை களிற்சூலை
வாங்கநீட் டின்உலகும் வானமும் எந்தமூலை
பிறர்நோய்செய் யிலெனக்குப் பெருங்கோபாக் கினிச்சுவாலை
பேதையென் பிழையெழுதின் வேண்டெங் கோடியோலை (எவ்வகை)

2. நல்வழி நடக்கவென் றூலிருகாற் குந்தலை
நாளுந்துர் வழிநடப் பதில்எனக் குண்டோகலை
புல்வினை யேன்செவி பொய்கள் றுழையும்வலை
புண்ணியோப தேசமென்றூற் புகஅதி லேதுதுலை (எவ்வகை)

3. உன்னைத் துதிக்கவென்ற லுலகிலென் வாய்க்குநோயே
ஊர்வம்பு பேசஎனக் குடம்புமுழு வதும்வாயே
மின்னை நிகர்பிரபஞ்ச வேதனை நீக்குவாயே
வேதநா யகனுக்குச் சாதக மானதாயே. (எவ்வகை)

இதைக்கேட்டு இவர் குற்றமொன்றுமில்லாத வேதநாயகம் பிள்ளை தம்மைத் தாமே இகழ்ந்துகொண்டு பாடியதை நினைந்து பாராட்டி ஒரு விருத்தமும் ஒரு கீர்த்தனமும் பாடி அவரிடங் கொடுத்தார். அவைவருமாறு :

விருத்தம்.

"மன்னரரு ளதிகார மானம்வழு வாமலற
வழிந டாத்திப்
பின்னரெரு தறமியற்றும் வேதநா யகசுகுணப்
பெரியோய் நாளும்
நன்னரறங் கொள்ளைகொண்டும் இலனெனைப்பொய் அனுதினமும்
நவிலு வாய்நின்
முன்னரஃ துரைப்பவரை முனிவாயோ முனியாயோ
மொழிவாய் நீயே."

கீர்த்தனம்.

ராகம் - தோடி ; தாளம் - சாபு.

பல்லவி.

பொழிந்தானே பதமாரி வேதநாயக
பூபதி யருள்வாரி.

அநுபல்லவி.

வழிந்துபல் லுயிருள வளவயல் புகுந்து
மருவலி னறிவெனு மாண்பயிர் மிகுந்து

மொழிந்த பரசுக வீளவு நீட
முனிந்த கொடுமையல் குடிய தோட (பொழிந்)

சரணங்கள்.

1. என்னகற் ருணுதி சேடனே—இவற்கு
எதிருறு வானெனின் மூடனே
பன்னு மிவனிடைக் காடனே—மிகு
பல்கலை யோர்ந்தவி சேடனே (பொழிந்)

2. மன்னுங் கழனி வளக்குளத் தூரன்
வையம் புகழுங்கோ ளூட்டுக்கு பேரன்
மின்னுங் கருணைமுன் னீபதி காரன்
மெய்ப்பொரு டேர்ந்து விளங்குமு தாரன் (பொழிந்)

3. இன்னும் புகலென யாவருந் துதிக்க
எண்டி சாமுகத் தாரு மதிக்க
முன்னும்யா வர்க்கு ஞான முதிக்க
மூடும்பா சமப்பாற் போய்க் குதிக்க (பொழிந்)

---

20. திருவாவடுதுறையாதீன வித்துவான் ஆகியது.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் முயற்சி.

இவர் திருவாவடுதுறைக்குச் சென்று வரும்பொழுது அங்கே சின்னப்பட்டத்தில் இருந்த சுப்பிரமணிய தேசிகர் இவர் பால் அன்புடன் பேசியிருந்து மகிழ்வது வழக்கம். (அவர் தமிழ்ப் பெருங்கவிஞராகிய மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் பரம் பரையில் அவதரித்தவர். இயல்பிலேயே தமிழார்வம் மிக்கவர். தாண்டவராயத் தம்பிரானிடத்துப் பல தமிழ் நூல்களைப் பாடங் கேட்டவர். நுணுகிய அறிவு வாய்ந்தவர். வித்துவான்களுடைய திறமையை நன்முக அறிந்துகொள்ளும் ஆற்றலுடையவர்.)* பிள்ளை யவர்களைப்பற்றித் தாண்டவராயத் தம்பிரானவர்கள் மூலமாக முன்னரே அறிந்தவர். நேரிற் பார்த்துப் பழகிய பின்னர் இவ

* ககூஅ - ஆம் பக்கம் பார்க்க.

ரிடத்து அவருக்கு அதிகமான அன்பு ஏற்பட்டது. இவரைத் தம் மூடைய மடத்திலேயே இருக்கச்செய்து தம்பிரான்களுக்கும் பிற ருக்கும் தமிழ்நூற்பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கச் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு உண்டாகி வளர்ச்சி யுற்றது. அவ்வாறு செய்வதற்கு அப்பொழுது ஆதீன கர்த்தராக இருந்தவரும் தம்முடைய ஞானுசிரியருமான அம்பலவாண தேசிகருடைய கட்டளையைப் பெறவிரும்பி ஒருநாள் அவர் அம் பலவாண தேசிகரிடம் இவருடைய பெருமைகளைப்பற்றி விரி வாகச்சொல்லி, "தமிழில் மிக்க பயிற்சியுள்ள மீனாட்சிசுந்தரம் பிள்ளையை இவ்விடத்திலே இருக்கச்செய்து தம்பிரான்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழ்ப் பாடங்களை முறையாகச்சொல்லி வரு மாறு சந்நிதானத்திற் கட்டளையிட்டால் நலமாயிருக்கும். படிப் பதற்குப் பலர் காத்திருக்கிறார்கள்" என்று விண்ணப்பித்தார். அப்போது இருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

அம்பல: இங்கே கந்தசாமிக் கவிராயரும் சில தம்பிரான் களும் இருக்கிறார்களே; அவர்களைக்கொண்டே சொல்விக்கலாமே.

சுப: சிற்சில நூல்களைப் பாடஞ் சொல்லுவாரேயன்றி இக் காலத்தில் வழங்கும் தமிழ்ப் பிரபந்த வகைகளையும் பெரிய காப்பியங்களையும் இலக்கண நூல்களையும் திருக்குறள் - பரிமே லழகருரை முதலியவற்றையும் வருத்தமின்றித் தெளிவாகச் சொல்வதற்குக் கவிராயரால் இயலாது. இதுவரையிற் பாடஞ் சொல்லி வந்ததில் அவரிடம் படித்து நல்ல தேர்ச்சி பெற்றவர் ஒருவரையும் காணவில்லை. வெகு காலத்துப் பழக்கத்தினால் கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்ப வற்றைப்படித்து அவர் கதை சொல்லிக்கொண்டு வருகிறார். அதனை ஒரு பெரிய செயலாக மதிக்கலாகாது. படித்தவர்க ளுடைய இயல்பு பாடஞ்சொல்வதனாலேதான் விளங்கும்.

அம்பல: இவர் மட்டும் அதிகமாகப் படித்தவரென்பது உமக்கு எப்படித்தெரியும்?

சுப: இந்த ஆதீன வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் இவரைப்பற்றிப் பலமுறை அடியேனிடம் சொல்லியிருப்பதுண்டு. இப்பொழுது வழங்கும் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை யெல் லாம் யாதொரு சிரமமும் இல்லாமல் மிகவும் சுலபமாக இடை

விடாமற் பாடஞ் சொல்லும் ஆற்றலையுடையவரென்றும் அங்ஙனம் சொல்வதொன்றே இவருக்குத் திருப்திதரப் போதுமானதென்றும் பல நூல்களை இயற்றி யுள்ளாரென்றும் சொல்லியிருக்கிறார். இவருக்கு அவ்வாறு பாடஞ் சொல்லுவதே பொழுது போக்காக இருக்கிறதாம். இதனை அவர் சென்னை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் பன்முறை அறிந்திருந்தனராம். இவரைப்போற் சிரமமில்லாமற் பாடஞ் சொல்வதற்குச் சிறிதேனும் தம்மால் இயலாதென்றும் இவர் இருந்தால் மடத்திற்கு இன்னும் விசேஷமான கௌரவங்கள் உண்டாகுமென்றும் வித்துவான்கள் பலரிடத்தும் சென்று பாடங்கேட்டதனால் இந்த ஆதீனத்திலிருந்த சிவஞான முனிவர், கச்சியப்பமுனிவர் முதலியவர்களுடைய நூல்களை இவரையன்றிச் சொல்லுபவரில்லையென்றும் அடிக்கடி இவரைப்பற்றி அடியேனிடம் பாராட்டிப் பேசி மகிழ்வார். அன்றியும் இவர் பல வருஷங்களுக்குமுன் வேலூர் மகா ஸந்நிதானத்தின் காலத்தில் அவர்களைத் தரிசித்து அவர்களாற் பாராட்டப்பெற்றவராம்.

அம்பல: ஓ! இவரைப் பார்த்தால் நமக்கு அப்படித் தோற்றவில்லையே. நீர் மிகச் சிறந்தவராகக் கூறுகின்றீரே!

சுப: ஆம். இவரையொப்பாரும் மிக்காரும் இத் தமிழ்நாட்டில் வேறொருவரும் இல்லை.

அம்பல: பார்ப்பதற்கு மிக்க சாதுவாக இருக்கிறாரே!

சுப: நன்றாகப் படித்தவர்கள் அவ்வாறே இருப்பார்கள். பிறர் தாமே அறிந்து தங்களை உபசரித்தால்தான் தம்முடைய ஆற்றலை அவர்கள் புலப்படுத்துவார்கள்.

அம்பல: இவரை யாராவது உபசரித்ததுண்டா?

சுப: இவர் சென்னையிற் பல பிரபுக்களாலும் வித்துவான்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர். தாண்டவராயத் தம்பிரான் சென்னையில் இருந்தபொழுது அவர்கள் இவரை உபசரித்ததை நேரிற் கண்டாராம். அன்றியும் பங்களூரில் இவர் மிக்க சிறப்பை அடைந்திருக்கின்றாராம். இந்தப் பக்கத்துப் பிரபுக்கள் யாவரும் இவருடைய நண்பர்கள்.

அம்பல: அது சரிதான். இவருடன் பலர் இருக்கிறார்களே; அவர்கள் இவரைவிட்டு நீங்கமாட்டார்கள்போல் இருக்கிறதே.

இவரோடு எல்லோரும் இங்கே இருப்பாராயின் அதிகச் செலவாகும் அல்லவா? அதைப்பற்றியும் கொஞ்சம் யோசிக்கிறேம்.

சுப: அவ்வளவுபேரும் இவருடைய மாணுக்கர்கள். இவர் எங்கே இருந்தாலும் உடனிருப்பார்கள். அவர்களுள் முன்னமே படித்தவர்கள் சிலர்; இப்பொழுது படிப்பவர்கள் சிலர்; இனிப் படிப்பதற்கு முயற்சிசெய்பவர்கள் சிலர்; அவர்களிற் பந்தியிலே உண்ணத்தக்கவர்களுக்குப் பந்தியிலும் ஏனையவர்களுக்கு அவரவர்க்கேற்றபடியும் ஆகாரம் செய்விக்கலாம். இங்கே சாப்பாட்டுச் செலவில் ஒன்றும் குறைவில்லையே. படித்த வித்துவான்கள் இருத்தலும் அவர்களைக்கொண்டு பலரைப் படிப்பித்தலும் மடத்துக்கு ஏற்றவையாகும். அது ஸந்நிதானத்திற்குத் தெரிந்ததே. ஸம்ஸ்கிருத வித்துவான்களாக மடத்திற் பல காலமாக இருந்தவர்களில் திருக்கோடிகாவல் கோதண்டராம சாஸ்திரிகள், ராமகுட்டி சாஸ்திரிகள், திருவாலங்காட்டு விசுவபதி தீட்சிதர், அப்பாதீட்சிதர், அப்பையதீட்சிதர், தியாகராஜ சாஸ்திரிகள் முதலியோர்கள் இருந்து வடமொழியைப் பிரகாசப்படுத்துகிறார்களே? இங்கே ஸம்ஸ்கிருதம் படிக்கவருபவர்களுக்கு ஸௌகரியம் செய்துகொடுத்துப் படிப்பிப்பதுபோலத் தமிழ் கற்பவர்களுக்கும் அனுகூலம் செய்யவேண்டுவது அவசியமே. ஸம்ஸ்கிருதத்தில் அவர்களெல்லோரும் எவ்வாறு சிறப்புற்று விளங்குகிறார்களோ அவ்வாறே இவரும் தமிழிற் பெரியவராக விளங்குகிறார். சிவஞானமுனிவர் முதலிய பலபெரிய வித்துவான்கள் தமிழைப் பரிபாலனம் செய்தமையால் வித்தியா தானத்தில் மிகக் கீர்த்திபெற்ற இந்தஇடத்தில் இவர் அவசியம் இருத்தல் வேண்டும். அதனல் மடத்தின் கௌரவம் பெருகும்; துரைத்தனத்தாரும் நம்மை மதிக்கும் நிலை உண்டாகும். இவருக்குப் பல உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களும் பழக்கம் உண்டு; ஆதலால் அவர்களெல்லாரும் நம்மை இன்னும் அதிகமாகக் கௌரவிக்கக் கூடும்.

அம்பல: அவர்கள் நம்மை மதித்தாலென்ன? மதியா விட்டாலென்ன?

சுப: அவ்வாறு சட்டஜீயிடலாமா! அவசியம் துரைத்தனத்தாருடைய பிரியமும் உத்தியோகஸ்தருடைய மதிப்பும் இந்தக் காலத்திற்கு வேண்டியனவே. அரசாங்கத்தார் கல்வி விஷயத்தில் மிக்க அபிமானத்தைக் காட்டி வருகிறார்கள் என்பது தெரியுமே?

ஆதலின் இந்தத்துறையில் நாம் நன்மை செய்து வருதலே அவர்களறிந்து கொள்வார்களாயின் நம்மிடத்தில் அவர்களுக்குள்ள நல்ல அபிப்பிராயம் அதிகமாகும்.

அம்பல: ஆமாம்! இவரை இங்கே அமர்த்தினால் தக்க சம்பளம் கொடுக்க வேண்டுமே. என்ன கொடுக்கலாம்? இங்கே உயர்ந்த சம்பளம் ஐந்து கலம் தானே? அதற்குமேற் கொடுக்க முடியாதே! கொடுத்தால் மற்றவர்கள் தங்களுக்கும் அவ்வளவு கொடுக்கவேண்டுமென்று கேட்கக்கூடும். ஆதலால் இதைப்பற்றி நமக்கு ஒரு முடிவும் தோன்றவில்லை.

சுப: அதைப்பற்றிய கவலை சிறிதும் வேண்டாம். இவருடைய மாணாக்கர்களைப் போஷித்துப் பாதுகாத்தலே போதும். அதனாலேயே இவர் மிகவும் திருப்தியடைவார். அதற்கு மேல் ஒன்றும் வேண்டாம்.

அம்பல: அப்படியா! என்ன இது மிக ஆச்சரியமாக இருக்கிறது? அவ்வாறு இருந்தால் நமக்கு ஒன்றும் சிரமமே இல்லை. அவ்வாறே செய்து விடலாம். இந்த விஷயத்தைப்பற்றி நீர் சொன்னது மிகவும் சந்தோஷத்தை விளைவிக்கின்றது.

திருவாவடுதுறையாதீன வித்துவானாகியது.

இங்ஙனம் ஒப்புக்கொண்டு மடத்திலுள்ள முக்கியமான அதிகாரிகளுக்குப் பிள்ளையவர்களை ஆதீன வித்துவானாக நியமித்திருப்பதாகவும் வேண்டிய ஸௌகரியங்களையெல்லாம் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவ்வாறே யாவும் செய்யப்பட்டன. இவருக்கு இரண்டு தவசிப்பிள்ளைகளைத் திட்டம் செய்தனர்; மடத்திலிருந்தே அவர்களுக்கு மாதச்சம்பளம் அளிக்கப்பட்டது.

பாடஞ் சொல்லுதல்.

அப்போது பிள்ளையவர்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. முன்பு ஒருகாலத்தில் அம்பலவாண முனிவரிடம் வருந்தி வருந்திப் பாடங்கேட்டு இவ்வளவேனும் இவ்வாதீன சம்பந்தம் உண்டாயிற்றேயென உவகை கொண்டிருந்த தம்மை ஆதீனத்து வித்துவானாக ஆக்குவித்தது திருவருளேயென நினைந்துருகினார். பின்பு நல்லதினம் ஒன்றிற் பாடஞ்சொல்ல ஆரம்பித்தார். படிக்க விரும்பிய பல தம்பிரான்களும் படிக்கவேண்டுமென்று முன்னமே

வந்திருந்து மடத்தில் உண்டுகொண்டிருந்த சிலரும் பாடங்கேட்க ஆரம்பித்தார்கள். இவருடன் முன்பு இருந்தமாணாக்கர்களும் உடனிருந்து பாடங்கேட்டு வருவாராயினர். பரீட்சித்து அவரவர்களுடைய தகுதிக்கேற்ற வண்ணம் இரண்டு மூன்று பிரிவாகப் பாடஞ்சொல்லி வந்தனர். படிக்கவேண்டிய புத்தகங்கள் அச்சிடப்பட்டவைகளாயின் மடத்துச் செலவில் விலைக்கு வருவித்து மாணாக்கர்களுக்குக் கொடுப்பித்தும் அச்சிடப்படாதவைகளாயின் வேறே பிரதி செய்து கொள்ளும்படி செய்தும் இவர் பாடங்களை நடத்தி வந்தார்.

அப்பொழுது படித்தவர்கள் (திருநெல்வேலிப் பேட்டையிலிருந்து வந்து அங்கே காஷாயம் பெற்றுப் படித்துவந்த) நமச்சிவாயத்தம்பிரான், மதுரை இராமசாமி பிள்ளை, தேவகோட்டை நாராயண செட்டியார் முதலியவர்கள். அவர்கள் அப்பொழுதே சிறந்த வித்துவான்களாக மதிக்கக்கூடிய நிலையில் இருந்தவர்கள்.

அவர்களுள் நமச்சிவாயத் தம்பிரான், பாடங்கேட்கும் நூலை முன்னதாகவே படித்து வைப்பதும் படித்த பின்பு சிந்தனை பண்ணுவதும் வழக்கம். இதனால் மற்றவர்களைக் காட்டிலும் அவருடைய படிப்பு ஓங்கி நின்றது.

இக்கவிஞர்பிரான் இருப்பதற்காக மடத்திற்கு எதிரில் இருந்த ஒரு பசுத்தொழுவம் செப்பனிடப்பட்டு விடுதியாக அமைக்கப்பட்டது. அது விசாலமான முற்றத்தையுடையது. அதனை மிகவும் பரிசுத்தமான இடமென்று நினைந்து இவர் அங்கேயே இருந்து வருவாராயினர். பாடஞ்சொன்ன காலங்களையன்றி மற்றக் காலங்களில் தாம் பாடவேண்டிய நூல்களைப்பாடி மாணவர்களைக் கொண்டு எழுதுவித்தும் வந்தார். தம்முடைய மாணவர்கள் கவலையின்றி உண்டு பாடங்கேட்பதற்குரிய சௌகரியங்கள் அமைந்தமையால், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதற்கில்லையே யென்று முன் கவலையுற்றிருந்த இவருக்கு அளவற்ற சந்தோஷமும், இதுவும் * ஸ்ரீசுவர்ணத்தியாகர் திருவருளும் நமச்சிவாய மூர்த்தியின் திருவருளுமே என்னும் எண்ணமும் உண்டாயின. அந்த உவகையினால் இவர் மிக்க ஊக்கமும் பெற்றனர்.

---

* இது திருவாவடுதுறையிற் கோயில் கொண்டருளிய சிவபிரானது திருநாமம்.

அம்பலவாணதேசிகர்மீது கலம்பகம் இயற்றியது.

திருவாவடுதுறை மடத்திலுள்ள சம்பிரதாயங்களையும் மற்ற வற்றையும் பார்த்த இவருக்கு அப்பொழுது தலைவராக விருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் விஷயமாக ஒரு பிரபந்தம் இயற்ற வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. தோன்றவே, மடத் தின் சம்பிரதாயங்களை யெல்லாம் நன்கு விசாரித்து அறிந்து கொண்டு சில தினங்களில் அம்பலவாண தேசிகர்மீது கலம்பக மொன்றை இயற்றி முடித்தார்.

மகாவித்துவானென்னும் பட்டம் பெற்றது.

அப்பால் ஒரு விசேடகாலத்தில் திருவாவடுதுறையில் அம்பல வாணதேசிகர் முன்னிலையில் பல வித்துவான்களும் பிரபுக்களும் சூழ்ந்தமகாசபையில்அந்நூல் அரங்கேற்றப்பட்டது. அதைக் கேட்ட எல்லோரும் அதிசயித்தார்கள். திருவாவடுதுறை சம்பந்த மாகப் பல பிரபந்தங்கள் இருந்தாலும் அக் கலம்பகம் எல்லாவற் றிலும் சிறந்ததாகவும் பொருள்நயம் செறிந்ததாகவும் சைவசம் பிரதாயங்களையும் ஆதீன சம்பிரதாயங்களையும் விளக்கிக்கொண் டிருப்பதாகவும் உள்ளதென்று கொண்டாடினர்கள். அப் பொழுது பெரிய காறுபாருகவும், ஆதீன வித்துவானுகவுமிருந்து விளங்கிய கனகசபைத்தம்பிரான் முதலியோர்கள் இவருடைய புலமைத் திறத்தைக்கண்டு மகிழ்ந்து, "இவர்களுக்குச் சந்நிதா னம் தக்க மரியாதை செய்தருள வேண்டும்" என்று தலைவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதனைக்கேட்ட அம்பலவாண தேசிகர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரோடும் ஆலோசித்து 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கினர். எல்லோரும், "அத்தகைய பட்டத்திற்கு இவர்ஏற்றவரே" என்று கூறிச் சந்தோஷித்தார்கள். பட்டம் அளித்தகன்றி அம்பல வாண தேசிகர் சால்வை முதலிய பரிசில்களும் இவருக்கு வழங்கி மடத்தில் இல்லறத்தார் உண்ணும் வரிசையில் முதல் ஸ்தானத் தையும் கட்டளையிட்டார்.

அந்தக் கலம்பகத்திலுள்ள சில அரிய விஷயங்களும் பாடல் களும் வருமாறு:

திருவாவடுதுறை மடத்தில் வழிபடப் பெற்றுவரும் மூர்த்தி ஸ்ரீ நடராஜப் பெருமான்; இது,

20. திருவாவடுதுறையாதீன வித்துவானுகியது. உஂடு

"கடிமலர் கைக்கொண் டன்பு கனியவம் பலவா ணன்பொன்
அடியருச் சனைகோ முத்தி யம்பல வாணு செய்வாய்
தடிதலில் விதியான் முன்னந் * தன்னைத்தா னருச்சித் தேத்தும்
படிநினைந் தனைகொல் யார்க்கும் பழக்கவா தனைவி டாதே"

என்பதிற் புலப்படுத்தப் பட்டிருக்கின்றது.

அடியேனுடைய உடல் பொருள் ஆவி மூன்றையுங்கொண்டு முத்தியாகிய ஒன்றை மட்டும் ஈவதற்கு வருத்தம் என்ன என்னும் கருத்து,

"அருவி யருவரை போன்முத்த மாலை யவிரிலஞ்சூழ்
பொருவிய லோவு திருவா வடுதுறைப் புண்ணியமா
சொருவிய வம்பல வாணு வடிய னுடன்முதலா
மருவிய மூன்றுங்கொண் டொன்றீ வதற்கு வருத்தமென்னே"

என்னும் செய்யுளில் அமைந்துள்ளது.

'நீர் அணிந்துள்ள பிறை, எலும்பு முதலிய பொருள்களும், உமக்கு இருப்பிடமாகிய கைலைமலை, ஊர்தியாகிய இடபம் முதலியவைகளும் வெண்ணிறமுடையன; இங்ஙனம் வெண்ணிற முடைய பொருள்களையே நீருடைமையால் அடியேனுடைய வெள்ளறிவையும் கொள்ளுதல் முறையாகும்' என்னும் கருத்தை அமைத்து,

"துணிபிறை வெண்மை யெலும்பணி வெண்மை
சுடுகங் காளமும் வெண்மை
துரோணமும் வெண்மை கபாலமும் வெண்மை
துவலைசால் கங்கையும் வெண்மை
பணிதரு கொக்கின் றூவலும் வெண்மை
பயில்குழை யருக்கமும் வெண்மை
பரவுறு கயிலை வாகனந் துவசம்
பரிக்குமக் கிவைகளும் வெண்மை
மணியொளி நீறு வாளிதுஞ் சாவம்
வயங்குதோற் பாகிலா லில்லம்
மதம்பொழி யயிரா வணமிவை வெண்மை
மற்றியன் மேனியும் வெண்மை

---

* சிவபிரான் தம்மைத்தாமே அருச்சித்தது திருவிடைமருதூரிலும் திருவையாற்றிலும்; குருவைச் சிவமாகப் பாவிக்கவேண்டுமென்பது இச்செய்யுளில் அறியற்பாலது.

அணிகிளர் முன்னு ணினக்கெனி னிங்ஙாள்
அவிர்புகழ் நீற்றெரு டுறைசை
அம்பல வாண வாரிய வடியேன்
அறிவுவெண் மையுங்கொளல் வழக்கே ''

என்று பாடிய செய்யுள் மிக்க சுவையுடையதாக விளங்குகின்றது.

அந்நூலிலுள்ள வேறு சில பாடல்கள் வருமாறு :—

'' தரைகமழ்வண் பொழிற்றிருவா வடுதுறைக்கட் குரவர்பிரான்
தாளுய்த் தெய்வ
விரைகமழும் பலவாண மேலோனுண் மையையுணர்ந்தேன்
விளம்பக் கேளீர்
உரைகமழ்தண் கயிலாயத் தொருவன்கா ணுலவனத்
துறைந்தான் முன்னம்
புரைகமழிவ் வரசவனத் துறைவானிப் போதவன்சீர்
புகல்வார் யாரே ''

[அரசவனம் - திருவாவடுதுறை]

'' அருந்தவருக் கரசுகலை யறுபத்து நான்கினுக்கு மரசு ஞானம்
பொருந்தவருக் கரசுகுரு வருக்கெல்லா மரசுநெடும் பொன்மா மேருப்
பெருந்தவருக் கரசுதுறை சைப்பதியம் பலவாண பிரானீ யென்றே
வருந்தவருக் கரசுபெரு நினைநிழற்றுந் திருவரசு மகிழ்ந்து தானே ''

[வருந்து அவருக்கு - வீண்செயலால் வருந்துகிறவர்களுக்கு; அவம் - வீண்.]

சித்து

'' விள்ளரும் புகழ்சா லாவடு துறையுண்
மேவிய வம்பல வாண
வித்தகன் நிருமு ணெருதினஞ் சென்று
மெய்யுறப் பணிந்தன மனேயான்
தள்ளருங் கருணை கூர்ந்துவேண் டுவதென்
சாற்றுக வென்றுநீ ரளித்தான்
தளர்விலாப் புடைவீங் கிடவுணல் வேண்டுந்
தயைபுரி யென்றலுந் தேற்றேம்
எள்ளருஞ் சுவைய வடிசின்முன் னளித்தா
னிலேதவிர்த் தியாவையு முண்டோம்
இவன்செய்பே ருதவிக் கினிச்செய லியாதென்
றெண்ணினேஞ் சாமியாய் விளங்க

20. திருவாவடுதுறையாதீன வித்துவானுகியது உஎள

உள்ளரு மனையான் றிருமட முழுது
முளுற்றினே நமதுசித் தருமை
உணர்பவ ரியாரே யாவயிற் சென்று
லுணரலா மோதுவார் பலரே.

[சாமீ-பொன், துறவி. ஓதுவார்-சொல்பவர், தேவாரம் ஓதுபவர்கள்.]

மகாவைத்தியநாதையருடைய பழக்கம்.

அப்பொழுது நிகழ்ந்த மகரத்தலைநாட் குருபூஜையில் (தை மாதஅசுவதிநட்சத்திர குருபூஜையில்) ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கு நடந்த பட்டணப் பிரவேசத்தில் பாதசாரியாக உடன்வந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் கோமுத்தி தீர்த்தத்தின் தென்கரையில் வாண வேடிக்கை நடக்கும்பொழுதுஅங்கே நிற்பதிற் சிறிது தளர்ச்சியுற்று அயலிலிருந்த சத்திரத்தின் திண்ணையில் அமர்ந்தார். அப்பொழுது மாணுக்கர்களோடு பிள்ளையவர்களும் உடன்சென்றிருந்தார்கள். அவர்கள் வரவையறிந்து, அங்கே தங்கியிருந்த மகாவைத்தியநாதையர் தம் தமையனராகிய இராமஸாமி ஐயருடன் வந்துகண்டு சுப்பிரமணிய தேசிகருடைய விருப்பத்தின்படி பக்கத்தில் இருந்தார். மற்ற வித்துவான்களும் சூழவிருந்தார்கள். அந்த இருவர்களும் சங்கீதத்தில் உயர்ந்தபயிற்சியுடையவர்களாக இருந்ததன்றித் தமிழிலும் நல்ல அறிவுவாய்ந்தவர்கள். எதனே யாவது ஒருமுறை கேட்டார்களானுல் அதனே மறக்கமாட்டார்கள்; அதனுல் ஏகஸந்தக்கிராகிகளென்று புகழ்பெற்று விளங்கினர்கள். பிரசங்க சக்தி அவர்களிடத்தில் நன்றுக அமைந்திருந்தது. அவ்வளவுக்கும் காரணம் சுப்பிரமணிய தேசிகருடைய பழக்கமும் ஆதரவுமே. அவர்களைப் பிள்ளையவர்களுக்குப் பழக்கம்செய்து வைக்க வேண்டுமென்னும் கருத்து சுப்பிரமணிய தேசிகருக்குப் பலநாளாக இருந்துவந்தது. ஆனலும் சமயம் நேரவில்லை. அப்பொழுது அவ்விருவருடைய பெருமையையும்பற்றிப் பிள்ளையவர்களிடமும் பிள்ளையவர்களைப்பற்றி அவர்களிடமும் பிரஸ்தாபித்துவிட்டு அவ்விருவரையும் நோக்கி, "உங்கள் வாக்கினுல் ஏதேனும் ஒரு பாடல் சொல்லவேண்டும்" என்றனர். அவர்கள், இக்கவிஞர் பெருமானைப்பற்றி இளமையிலிருந்து அறிந்திருந்ததன்றி இவருடைய நூல்களைப்படித்து ஞாபகத்திலும் வைத்திருந்தார்கள். இவரைப்பார்க்கவேண்டுமென்னும் ஆவல் நெடுநாளாக உடையவர்களாகையினுல் அளவிலா மகிழ்ச்சியுற்று இவரைப்பற்றிச்

சிறிதுநேரம் பாராட்டினர். பின்பு

* "பூங்காவனக் குயிலே,தழை பொலியத்திரி மயிலே
நீங்காமலெவ் வுயிர்க்கும்முயி ராய்நின்றரு ணிமலன்
பாங்காருமை யாளோடு பசுங்கொன்றை மணப்ப
ஈங்கார்வழிச் சென்றுன்கொ லிசைப்பீரெமக் குறவே"

"மாவேறும் பலவேபுனன் மண்டுந்தட மலர்ந்த
பூவேசெழுங் காவேறலம் புணர்ஞான முணர்ந்தோர்
நாவேபுகழ் பெரியோனெனை நன்றாட்கொள வுரியோன்
தேவேசனிவ் வதிமாதொடு சென்றுன்கொ லுரைப்பீர்"

"குருந்தேறுங் கொன்றுய்கொடி முல்லாய்செழுங் குரவே
திருந்தேனென நிற்கும்மொரு சிறியேனையும் பொருளா
வருந்தேலென வாண்டானுமை மாதோடுமிவ் வழியே
மருந்தேயெனச் சுரரேத்திட வந்தான்கொ லுரைப்பீர்"

என்னும் பாடல்களை இசையோடு சொல்லிக் காட்டினர்கள். அவற்றைக்கேட்ட இவர், "இவை எந்த நூலிலுள்ளவை?" என்றார்.

அவர்கள்: தாங்கள் இயற்றிய சூதசங்கிதையில் பிரமன் முதலியோர் தில்லையில் நோற்று ஞானம் பெற்ற அத்தியாயத்தில் உள்ளவை.

மீ: அப்படியா! இன்னும் அந்த நூலில் வேறு செய்யுட்கள் உங்களுக்குப் பாடம் உண்டோ?

அவர்கள்: நிறைய உண்டு. கோடகநல்லூர்ச் சுந்தரஸ்வாமிகள் எங்களை அடிக்கடி சொல்லச்சொல்லிக் கேட்டு மகிழ்வார்கள். அவர்கள் வடமொழிச் சூதசங்கிதையில் அதிகப் பழக்கமுள்ளவர்களாதலால் இந்தப் பாடல்களைக் கேட்டு மிக ஆச்சரியப்படுவதன்றித் தங்களைப் பாராட்டிக்கொண்டே யிருப்பார்கள்.

மீ: இந்நூலை நான் செய்ததாகச் சொன்னீர்களே. அதனை அறிந்ததெப்படி?

அவர்கள்: திருநெல்வேலியில் வேதாந்த சாஸ்திரப் பரிசயமுள்ளவராக இருக்கும் ஐயாசாமி பிள்ளையவர்களும் எங்களுக்குத் தெரிந்த மற்ற வித்துவான்களும் சொன்னார்கள்.

---

* இவை திருமால் கூற்று.

20. திருவாவடுதுறையாதீன வித்துவானுகியது. உ0கூ

சுப்பிரமணிய தேசிகர், பிள்ளையவர்களை நோக்கி, "அந்த உண்மையை நீங்கள் எவ்வளவு மறைத்தாலும் மறைவுபடுமா? உங்கள் கவித்துவத்தையும் புகழையும் யாரால் மறைக்க முடியும்? சூரியனை மறைப்பதற்கு யாரால் இயலும்" என்றுசொல்லி மகிழ்ந்தார்.

அந்த இருவர்களுடைய தோற்றப் பொலிவும் விபூதிருத்தி ராட்சதாரணமும் சிவபக்திச் செல்வமும் இசையோடு பொருள் விளங்கப் பாடல்களைச் சொல்லும் அழகும் அங்கசேஷ்டையின்றிப் பாடுவதும் ஆலாபனம் செய்கையில் 'சங்கரா' என்று சொல்லுவதும் இம்மகாவித்துவானுடைய மனத்தைக் கவர்ந்தன. பின்பு, "ஐயா! அந்தப் பாடல்கள் உங்கள் வாக்கிலிருந்து வரும் பொழுது தனிச்சுவையையுடையனவாக இருக்கின்றனவே. உங்களைப் போலத் தமிழ்ப்பாடல்களை இவ்வளவு அழகாகச் சொல்பவர்களை இதுகாறுங் கண்டிலேன். உங்களுடைய க்ஷேமத்தைக் குறித்துப் பரமசிவனைப் பிரார்த்திக்கிறேன். உங்களுடன் அடிக்கடி பழக வேண்டுமென்பது என்னுடைய விருப்பம்" என்றார். அவர்கள், "எங்களுடைய முழுவாழ்விற்கும் காரணம் ஸந்நிதானமே. அந்த அன்பே உங்களையும் பார்க்கும்படி கூட்டி வைத்தது. உங்களைப் பார்த்துப் பழகிப் பாடங்கேட்கவேண்டுமென்று நீண்ட நாளாகக் காலத்தை எதிர்பார்த்திருந்தோம். இன்று எங்கள் பாக்கியத்தால் அது நிறைவேறியது. எல்லாவற்றிற்கும் காரணம் சிவகிருபையே" என்றார்கள்.

மறுநாள் பிற்பகலில் மடத்தில் பல பிரபுக்களும் பலவகையான வித்துவான்களும் இருந்த சபையில் வழக்கம் போலவே அவ்விருவருடைய இசைப்பாட்டு நடைபெற்றது. அப்பொழுது மகாவைத்தியநாதையர் வடமொழி தென்மொழிகளிற் சிவசம்பந்தமான கீர்த்தனங்களைப் பாடுவதைக் கேட்டு இவர் அவற்றில் ஈடுபட்டுப் பின்வரும் பாடல்களைச் சொன்னர்

"பொருவில்மகா வைத்தியநா தன்பாடு மிசைப்பெருஞ்சீர்
பொருவா னெண்ணில்
ஒருவிலருட் டுறைசையெங்கள் குருமணியம் பலவாண
ரெளிர்கூ டற்கண்
வெருவில்சிறப் புறமுனம்பா டிசைப்பெருஞ்சீ ரேபொருவும்
விருத்த ரூபம்
மருவிலனிந் தனச்சுமையு மெடுத்திலன்வேற் றுமையிவையே
மதிக்குங் காலே."

உக0 மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

"அனேகர்சுப் பிரமணிய மணியொடமோ வடுதுறையி
லமரா நின்ற
தனேகரம் பலவாண பரசிவன்மற் றெங்கள்குரு
சாமி மேன்மேற்
புனேயும்வயித் தியநாத னிசைவிரும்பி ஞனிதுவும்
புகழோ வென்னின்
இனேயன் * வயித் தியநாத னிசைவிரும்பல் பரம்பரையின்
இயைந்த வாறே."

இவர் புராணம் அரங்கேற்றும் இடங்களுக்கு அவ்விருவரும் போகும்படி நேர்ந்தால் இரண்டு மூன்றுநாள் அங்கே இருந்து கேட்டு வருவது அக்காலமுதல் அவர்களுடைய வழக்கமாக இருந்தது. அப்பொழுது இவர்சொல்லும் அருமையான பாடல்களிற் சிலவற்றை மனப்பாடம் செய்துகொண்டு கதை பண்ணுகையில் உபயோகித்து வந்தார்கள்.

பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளை.

இடையிடையே வழக்கம்போலப் பட்டீச்சுரத்திற்குப் பிள்ளையவர்கள் சென்றுவருவதுண்டு; அங்கே நமச்சிவாயபிள்ளை காலஞ்சென்ற பின்னர் அவருடைய குமாரராகிய ஆறுமுகத்தா பிள்ளை யென்பவரும் இவரிடத்தில் மிக்க மரியாதையுடையவராகி இவரைத் தம் தந்தையாராகவும் குருவாகவும் பாவித்திருந்தார். திருவாவடுதுறைக்கு வந்து இவரை அழைத்துச்சென்று சில மாதம் வைத்திருந்து உபசரித்து அனுப்புவார்.

இயல்பாகவே இவருக்கு வடமொழி வித்துவான்களிடத்தும், சங்கீத வித்துவான்களிடத்தும் அன்புஉண்டு. தியாகராசலீலை முதலியவற்றை இயற்றுகின்ற காலமுதற்கொண்டே வடமொழி வித்துவான்களுடைய பழக்கமும் அவர்களுடைய உதவியும் அமைந்திருந்தன. திருவாவடுதுறை மடத்திற்கு வந்தபிறகு அத்தகைய பழக்கம் அதிகமாயிற்று. அந்தமடம் பலவகை வித்துவான்கள் ஒருவர்பின் ஒருவராக நாடோறும் வந்து பரிசுபெறும் இடமாதலின் அவர்கள்பால் பல அரியசெய்திகளை அறிந்துகொள்வதும், பல சுலோகங்களையும் அவற்றின்பொருளையும் கேட்டுத்தமிழில் மொழிபெயர்ப்பதும், அக்கருத்துக்களை ஞாபகத்தில் வைத்திருந்து

* வைத்தியநாதரென்பது திருவாவடுதுறை மடத்துப் பெரிய பூசையிலுள்ள உடையவர் திருநாமம்.

தாம் இயற்றும் நூல்களில் இடத்திற்கேற்ப அமைத்துக்கொள் வதும் இவருக்கு வழக்கம். அந்த வித்துவான்களும் இவருடைய அறிவின்திறத்தை அறிந்துவியந்து இவரோடுபழகுதலையும் இவரு டைய செய்யுட்களைக் கேட்டலையும் பெரிய லாபமாகக் கருதியிருந் தனர். "சான்றோர் சான்றோர் பாலராப" என்பது மெய்யன்றே?

---

21. பல நூல்கள் இயற்றல்.

திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்.

ரௌத்திரி வருஷம் திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழை இவர் இயற்றினர். அதனை ஆக்குவித்தோர் அந்தஸ்தலத் திலிருந்த காக்காத்த வேளாளப் பிரபுவாகிய சுப்பராய பிள்ளை யென்பவர். அந்தப் பிள்ளைத்தமிழை அரங்கேற்றத் தொடங் கிய பொழுது ஒருவர் அப்பிரபுவினிடம் எதனையோ காதோடு முணுமுணுத்துவிட்டுவந்து இவர்க்குமுன்னம் அமர்ந்து செய்யுள் நிரம்ப நன்றுயிருக்கிறதென்று தலையசைத்துச் சந்தோஷித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது சபையில் இருந்தவர்களில் ஒரு வராகிய சிங்கவனம் சுப்புபாரதியார், "அவர் சொல்லியது என்ன?" என்று கேட்டார். சுப்பராயபிள்ளை, "இச்செய்யுளின் முதற்சீர் பொருத்தம் இல்லாதது; ஏதேனும் கடுமையான தீங்கு உங்களுக்கு விளைந்தாலும் விளையலாமென்று அவர் சொன்னார்" என்று மெல்லச் சொன்னர். அதனைக் கேட்ட பாரதியார் குற்றம் கூறியவரை விசாரிக்கவேண்டுமென்று நினைந்து பார்க்கையில் அயலிலிருந்த அவர் காணப்படவில்லை; எங்கேயோ போய்விட் டார். உடனே பிள்ளையவர்களுக்கு இச்செய்தியைத் தெரிவித்த னர். இவர், "குற்றம் கூறியவரை அழைத்துவரும்படிசெய்தால் உள்ள குற்றத்தை விசாரித்தறிந்து சமாதானம்சொல்லுகிறேன்" என்றார். சுப்பராயபிள்ளையினுடைய ஏவலினால் சிலர் சென்று பலவிடத்தில் தேடிக் கண்டுபிடித்து அவரை அழைத்துவந்து சபையில் நிறுத்தினர்கள். அவர் உடம்பு நடுங்கியது; 'ஏன் தெரியாமல் இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோம்?' என்று அவர் நினைத்தார். அப்பொழுது சுப்புபாரதியார், "ஐயா,

இச்செய்யுளின் முதற் சீரிலிருக்கும் பொருத்தக் குறைவு யாது?" என்று அவரைக் கேட்டனர். அவர் ஒன்றும் சொல்லாமல் இருந்தார். பாரதியார், "பொருத்த இலக்கணத்தைச் சொல்லும் நூல்களுள் எதையேனும் படித்திருக்கிறீரா?" என்றார். "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று அவர் விடையளித்தார். சுப்புபாரதியார், "அவ்வாறிருக்க நீர் ஏன் இப்படி இரகசியமாகக் குற்றம் கூறவேண்டும்?" என்றார். அவர் சரியான விடை கூறுதற்கு இயலாதவராகி விழித்தார். இவற்றைக்கண்ட இக்கவிஞர் பெருமான் அவருடைய அறியாமைக்கு இரங்கி அவ் விசாரணையை நிறுத்தச் செய்தார். அப்பால் அரங்கேற்றுதல் முறையாக நடந்து நிறைவேறியது.

இத்தலத்தின் பெயர் விடைக்கழி யெனவும் இடைக்கழி யெனவும் வழங்கும். இத்தலத்தில் முருகக்கடவுள் குராமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ளார்; இவை,

"குலவிடைக் கழியின் * மகிழ்வனத்திலொரு
குரவடிக்கணமர் நீபமாலைப்புய வேளைப்புரக்கவே."
(காப்பு. உ)

"தேமலர் மேய குராநிழல் வாழ்பவ செங்கோ செங்கீரை"
(செங்கீரைப். கo)

என்பவற்றால் விளங்கும்.

இத்தலத்தில் எழுந்தருளிய சிவபெருமான் திருநாமம் பாவநாசப்பெருமானென்பது; இது,

"வழுவில் பத்திமைய ரிருதயத்தளியின் மணிவிளக்கினமர்
பாவநாசப்பெரு மானைப்பழிச்சுதும்"

எனச் சந்தத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்றோர் இன்னாரின்னா ரென்பது,

"பொருள்சால் பொகுட்டிதழ் மணத்தவிசி னன்முகப்
புத்தேண் முதற்புலவரும்
பொறிபுல னடக்கியொரு நெறியுற வசிட்டன்முற்
புண்ணியத் திருமுனிவரும்

---

* மகிழ்வனம் - மகிழமரக்காடு; திருவிடைக்கழியில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம்; "இலஞ்சியங்கான நோக்கி" என்றார் கந்தபுராணமுடையாரும்.

வெருள்சான் முனைத்தலைய வேற்கைமுரு குந்தனெடு
வேந்தன்முற் பலவரசரும்
மேவிப் பணிந்துளத் தெண்ணிய தடைந்தவிம்
மேதகுதலம்" (அம்புலிப். கூ)

என்னும் பகுதியால் அறியப்படும்.

இந்நூலுள் தன்மை நவிற்சி, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் அமைந்த பாடல்கள் பல உள்ளன.

இந்திரனும் திருமாலும் இந்திரன் உபேந்திரனெனப்பொருந்திய முறைமைக் கேற்ப அவ்விருவருடைய மகளிராகிய தெய்வயானையம்மையையும் வள்ளி நாயகியையும் முறையே முருகக்கடவுள் மணஞ் செய்துகொண்டனரென்ற கருத்தை,

"தார்கொண்ட விந்திர னுபேந்திர னெனப்புரந்
தரன்வலைக் கரன்மரீஇய
தன்மைக் கிணங்கமுன் றெய்வயா னைக்குவண்
டார்புனைந் திறவுளர்குலத்
தேர்கொண்ட கோதைக்கொர் கோதைபின்
சூட்டியுல கின்புற்று மகிழமேவும்
இறைநிறை பொழிற்றிரு விடைக்கழிக் குமரேச
னின்றமிழ்க் கவிதழையவே"
(விநாயக வணக்கம்)

என்னும் செய்யுளில் அமைத்துள்ளார்.

முருகக்கடவுள் ஆறு சமயங்களுக்கும் ஆறுதாரங்களுக்கும் ஆறு அத்துவாக்களுக்கும் தாமே முதல்வரென்பதைத் தெரிவிக்க ஆறு திருமுகங்களோடு விளங்குகின்றாரென்னும் கருத்து,

"ஆட்டுஞ் சமய மாறினுக்கு மாதா ரங்க ளாறினுக்கும்
அத்து வாவோ ராறினுக்கு மமையுந் தானே முதலென்று
தீட்டும் படியா வருந்தெளியத் தெளித்தாங் காறு முகந்திகழச்
செல்வ மலியு மிடைக்கழிவாழ் சேயைப் பரிந்து காக்கவே"

என்னும் காப்புப்பருவச் செய்யுளொன்றி லமைந்துள்ளது.

சிற்றிற் பருவத்தில், மகளிர் முருகக்கடவுளை நோக்கி, "தேவரீரை நினைந்து உருகும் அடியார்களுடைய வினைமுதலியவற்றைச் சிதைத்தருள்க; எம்முடைய சிற்றிலைச் சிதையாதீர்" என்றும், "தேவரீர் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருந்த காலத்து உமாதேவியார் அங்குவந்து ஒரே

உகச மீளுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

திருவுருவமாகச் செய்தபொழுது ஆறு திருமுகங்களமைத்ததற் கேற்பப் பன்னிருகைகள் செய்ததுபோலப் பன்னிரண்டு கால்க ளும் அமையாமல் விட்டது நாங்கள் முற்பிறப்பிற் செய்த நல் வினையே" என்றும் கூறுவதாக உள்ள செய்யுட்கள் படித்தின் புறற்பாலன :

"கண்ணீர் பெருக வுருகியுளங் கசிநின் னடியார் மலமாயா
கன்ம முழுதுஞ் சிதையவர்முற் கடிய வினையைச் சிதையவர்தம்
எண்ணீர் பிறவிக் கணக்கெழுது மேட்டைச் சிதைநீ யேபரமென்
றெண்ணு திழுதை யுறுமுனக ரெண்ணஞ் சிதைமற் றிவைதவிர்ந்து
புண்ணீர் கவரும் வடிவேற்கைப் புலவா புலவர் போரேறே
பொறியி லேஞ்சிற் றிலஞ்சிதைத்தல் புகழோ வலது புண்ணியமோ
தெண்ணீர் வளங்கூர் விடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே." (சு)

"நையா நின்ற சிறுமருங்கு னங்கை யுமையாள் பரமனெடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரைவாய் நண்ணி முகமா றினுக்கேற்பக்
கையா றிரண்டு புரிந்ததுபோற் காலா றிரண்டு செய்யாது
கருதி யிரண்டே செய்தனண்முற் கடையேஞ் செய்த நல்வினையால்
மெய்யா விரண்டா யிருந்துமவை விளக்குங் குறும்பு பொறுக்கிதா
விளைந்த தினியாஞ் செயலென்னே வீடு தோறும் விடாதமர்ந்து
செய்யாண் மகிழும் விடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே." (கூ)

சிவபெருமான் திருக்கரத்திலுள்ள தமருகத்தைப் பறை யென்று நினைந்து அதனை அடிப்பதற்குக் குணில் தேடிய முருகக் கடவுள், தம்பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்த விநாயகக் கடவு ளுடைய கையிலுள்ள கொம்பைப் பிடித்து இழுக்க, விநாயகரும் எதிரே இழுக்க, அதனால் உண்டான கலகத்தை யறிந்த உமாதேவியார் அவ்விருவர்க்கும் இடையே புகுந்து அக்கலகத் தைத் தவிர்த்துச் சிவபெருமான் சடையிலுள்ள பிறையைக் கொடுப்ப அதற்கு முருகக்கடவுள் மனமகிழ்ந்தன ரென்னும் கற்பனையொன்று சிறுதேர்ப் பருவத்தில்,

"ஆக்கும் பெருந்தொழி லமைந்தவொரு தமருக
மவாவுபறை யென்றுளங்கொண்
டன்னதை யடித்திடக் கைக்கொளுங் குணிதேடி
யருகுவிளை யாடிநின்ற

தாக்குந் திறற்களிற் ரெருகர தலக்கோடு
தனையுறப் பற்றியீர்க்கத்
தவாவலிகொ ளக்களிறு மெதிர்பற்றி யீர்க்கத்
தழைந்திடு கலாமுணர்ந்து
வாக்குஞ் சுவைத்தேறன் மாலைக்குழற்ரூய்
வயங்குற நடப்புகுந்து
மறையோதி மந்தேடு வேணிப் பிறைக்குணில்
வயங்கக் கொடுக்கவுவகை
தேக்குந் திறற்குக விடைக்கழி யுடைக்குழக
சிறுதே ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருந்தே ருருட்டிசேய்
சிறுதே ருருட்டியருளே.'' (ச)

என்னும் செய்யுளில் அமைந்துள்ளது.

திருவிடைக்கழிக் குறவஞ்சி.

திருவிடைக்கழியில் அந்தப் பிள்ளைத் தமிழை அரங்கேற்றிக் கொண்டிருந்த பொழுது உடனிருந்த சிங்கவனம் சுப்புபாரதியார் இவரிடம் குற்ரூலக் குறவஞ்சியிலிருந்து சிலபாடல்களைச் சொல்லிக் காட்டினர். இவரும் உடனிருந்தவர்களும் கேட்டு ஆனந்தித்தனர். அப்பொழுது முற்கூறிய சுப்பராயபிள்ளை, ''இந்த ஸ்தலத்திற்கும் ஒரு குறவஞ்சி இயற்ற வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார். அவ்வாறே ஒரு நூல் இவராற் செய்து அரங்கேற்றப் பெற்றது. அரங்கேற்றுகையில் அதனைப் படித்தவர் இசைப்பயிற்சி யுள்ளவராகிய வல்லம் கந்தசாமிபிள்ளை யென்பவர். அந்நூல் திருவிடைக்கழிக் குறவஞ்சியென வழங்கும். இப்பொழுது அது கிடைக்கவில்லை.

ஆற்ரூர்ப் புராணம் முதலியன.

ரௌத்திரி வருஷத்திலேயே ஆற்ரூர்ப் புராணமும் விளத்தொட்டிப் புராணமும் திருவாளொளிபுற்ரூர்ப் புராணமும் இவரால் இயற்றப்பெற்றன. ஆற்ரூர்ப் புராணத்தைச் செய்வித்தவர் கலியாணசோழபுரம் கணபதி பிள்ளையின் குமாரர் சிதம்பரம் பிள்ளை யென்பவர். விளத்தொட்டிப் புராணம் செய்வித்தவர்கள் அவ்வூரிலிருந்த சைவ வேளாளர்கள். திருவாளொளி புற்ரூர்ப் புராணம் செய்வித்தவர்கள் அத்தலத்துச் சைவ வேளாளர்களே.

இவற்றை முறையே அவ்வப் புராணங்களிலுள்ள,

" தழைதருநல் லாற்றூர்மான் மியமுழுது மொழிபெயர்த்துத்
தமிழிற் பாடி
விழைதருமா தருகவெனக் கலியாண சோழபுரம்
விரும்பி வாழ்வோன்
உழைதருகைப் பெருமானு ருவந்துறையத் தலப்பணிமுற்
றிருருங்கு செய்தே
இழைதருபொன் னூலியன்ற கும்பாபி டேகமுஞ்செய்
தின்பந் துய்ப்போன் "

" தில்லைநட ராசருக்குச் சொன்னவிமா னமுங்கலனுஞ்
செய்து நல்கி
வல்லையவர் சூழ்சிதத்தா மரைக்கொருதா மரைசூட்டி
மகிழு மேலோன்
எல்லையிலாப் புகழ்படைத்த சிதம்பரமால் கேட்கவுவந்
தேற்று மாறுத்
தொல்லைவினை முழுதொழிப்பான் ஞானமிலா யான்பாடத்
துணிந்தேன் மன்னே "

(ஆற்றூர்ப்புராணம், பாயிரம், உஉ - கூ)

" தண்ணியவா னவர்புகழும் பெருமானூர் விளத்தொட்டித்
தலப்பு ராணம்
நண்ணியவான் புகழ்மிகுமந் நகர்ச்சைவ வேளாளர்
நயந்து கேட்பக்
கண்ணியவான் றமிழாற்செய் தான்றிரிசி ராமலையிற்
களித்து வாழும்
புண்ணியவான் மீனாட்சி சுந்தரநா வலவனியற்
புலவ ரேறே "

(விளத்தொட்டிப் புராணம், சிறப்புப்பாயிரம்)

" ஈகைமேற் கொண்ட நல்லா ரீசனுக் கன்பு சான்றூர்
ஓகைசால் புகழின் மிக்கா ரொலிகெழு வேளாண் மாந்தர்
பாகைநேர் தமிழாற் பாடித் தருகெனப் பரிந்து கேட்க
* வாகையா ரணிய நாதன் மான்மியம் பாட லுற்றேன் "

(திருவாளொளிபுற்றூர்ப்புராணம், பாயிரம், உக)

எனவரும் செய்யுட்களால் அறியலாகும்.

---

* வாகையாரணியம் - திருவாளொளிபுற்றூர்.

ஆற்றூர்ப் புராணம்.

* ஆற்றூரென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளிய விநாயகர், சிவபெருமான், அம்பிகை யென்னும் மூவருடைய திருநாமங்கள் முறையே மந்தாரவன விநாயகர், சொன்னயான நிரோதன நாதர், அஞ்சனாட்சியம்மை என்பனவாகும். இத்தலத்திற்குச் சொன்னயான நிரோதனபுரம், நதிபுரம், நடனபுரமென வேறு பெயர்களும் வழங்கும்.

சோழநாட்டை ஆண்டுவந்த சோழேந்திரனென்னும் ஓரரசன் தன்நாட்டெல்லையைப் பார்ப்பதற்காக யானைமேலிவர்ந்து நாடுகளையெல்லாம் கண்டு பின்பு காட்டின் வளங்களைக் கண்டு களிக்கச் சென்றனன். யானைக்குக் காட்டினுட் செல்ல முடியவில்லை. அதனையறிந்த அரசன் மயனை அழைத்துப் பொன்விமானம் ஒன்றை இயற்றுவித்து அதில் தன் மந்திரிமார் முதலியவரோடு ஏறிச் சென்றனன். அதுவும் அங்கே ஒரு மந்தாரமரத்தின் நேரே தடைப்பட்டு நின்றது. அதன் காரணத்தை அறியவிரும்பிய அரசன் விமானத்தினின்றும் இறங்கி அம்மரத்தினடியிற் சென்று பார்த்தபொழுது ஒரு புற்றையும், அதனை அகழ்ந்த பின்பு சுயம்புவாக எழுந்தருளிய சிவலிங்கப் பெருமானையும் கண்டனன். இந்தக்காரணத்தால் இவ்வூருக்குச் சொன்னயான நிரோதனபுரமென்றும், சிவபெருமானுக்குச் சொன்னயான நிரோதனரென்றும் திருநாமங்கள் உண்டாயின. அச்சோழன் இவ்வூரின் தென் கிழக்கில் மாளிகையொன்றமைத்து விரும்பியவர்க்குக் கலியாணம் செய்வித்து அளித்தான் அக்காரணத்தால் கலியாணசோழபுரமென்னும் பெயரும் இதற்கு அமைந்தது. இவை,

"சொன்ன யானந் தடுத்தாண்ட தோலா வருளா லிறையவர்க்குச்
சொன்ன யான † நிரோதரெனத் துதிக்கு மொருநா மஞ்சூட்டிச்
சொன்ன யான நிரோதபுர மென்று நகர்க்கும் பெயர்சூட்டிச்
சொன்ன யான மூன்னூர்ந்த சோழேந் திரனுண் மகிழுவான்"

"மன்னு மனைய நகர்த்தென்கீழ் வளமா ளிகையொன் றமைத்தமர்ந்து
மின்னு மளவாக் கலியாணம் வேட்டோர்க் களித்தான் கலியாணந்

---

* இத்தலத்தின் திருநாமம் மந்தார வனமென்றும் வழங்குமாதலின், "வக்கரை மந்தாரம் வாரணசி" என்ற க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகப் பகுதியில் வந்துள்ள மந்தாரமென்ற வைப்புஸ்தலமாக இது கருதப்படுகின்றது. † நிரோதம் - தடை.

தன்னுந் திறத்தாற் கலியாண சோழ புரமா கியதவ்வூர்
இன்னு மறிஞர் காரணப்பே ரென்னப் பொலியு மந்நகரே''
(சொன்னயான் நீரோதனபுரப் படலம், சுஅ, கூ0)

எனவரும் பாடல்களால் அறியலாகும்.

தன் விமானம் உடைப்பட்டபொழுது சோழன் தன்மந்திரி மாரை நோக்கிக் கூறுவதாக உள்ள,

''பொன்செய்த விவவி மானம் புட்பக விமான மன்று
மின்செய்த மலரித் தாரு வெள்ளியங் கைலை யன்று
கொன்செய்த மதியீர் யானுங் கொடியவா ளரக்க னல்லன்
தென்செய்த மான நின்ற காரணந் தெரியே னென்பான்''
(ஷை கடு)

என்னும் செய்யுள் சோழனுடைய அன்பைப் புலப்படுத்துகின்றது.

தவஞ்செய்வோர்க்குத் தோன்றுத பெருமான், சன்மார்க்க மென்பதைச் சிறிதும் அறியாத அடியேனுக்கு வெளிப்பட்டுப் பித்தனென்னுந் திருநாமத்தைப் புதுப்பித்தானென்னும் கருத்தமைந்த,

''அகன்றிடு கடும்பி னோரா யடவிபுக் கருந்த வஞ்செய்
யுகன்றிடு மவர்க்குச் சற்றுந் தோன்றிலான் மெழுஞ்சன் மார்க்கத்
திகன்றிடு மெனக்குத் தோற்ற மெய்திஞன் பித்த னென்று
புகன்றிடு மொருநா மத்தைப் புதுக்கினன் கொல்லோ வென்பான்''
(ஷை உடு)

[செய்து கன்றிடுமென்க.]

என்பது போன்ற பல அருமைச் செய்யுட்களை இந்நூலின் கண்ணே காணலாம்.

கயற்கண்ணி என்னுமோ ரந்தணப்பெண் சுன்னை மனை செய்து கொண்டருள்கவென்று சிவபெருமானை நோக்கிக் கூறுவனவாகவுள்ள பாடல்கள் தேவாரச்சந்தத்தைபொத்த சந்தத்தமைந்து அழகுபெற விளங்குகின்றன :

''ஓங்குமந் தார வனத்து மேவு
முத்தம னேயீஃ தொன்று கேணீ
வாங்கு மதிலுயர்ந் தோங்கு கூடன்
மன்னன் மகளை மணம்புரிந் தாய்
ஈங்கொரு பூசுரன் பெற்ற பெண்யான்
என்பது நீயறி யாத தன்றே
பாங்கு மலியவென் னூளின் மாலை
சூட்டியென் பையு ளகற்று வாயே.

"திருந்துமந் தாரவ னத்து மேவுஞ்
சிவபெரு மானிஃ தொன்று கேணீ
பொருந்து * கலவர் குலத்துதித்த
பூவை யையுமண மாலை யிட்டாய்
அருந்தவர் சங்கர னென்ப ருன்னை
அன்ன பெயர்ப்பொருண் மாறு ரூமே
வருந்துமென் ரோளணி மாலை சூட்டி
மருவிய பையு ளகற்று வாயே."

"நாடுமந் தாரவ னத்து மேவு
நாயக னேயிஃ தொன்று கேணீ
மாடு மிசையு முகிலு லாவும்
மலைக்கு மகளை மணம்பு ரிந்தாய்
ஆடுகின் ரூளென்றும் போற்றி செய்வேன்
அன்புக் கிரங்கி யெழுந்தருளிச்
சூடுகின் மாலையென் ரோளிற் சூட்டித்
தொக்கவென் பையு ளகற்று வாயே."

(கயற்கண்ணி திருமணப். நக - கூ)

தலவிசேடந் தேவிக்குணர்த்திய படலத்தில், சிவபெருமான் சாம்எழுந்தருளிய தலங்களுள், ஊர், குடி, வாயில், பள்ளி, ஈச்சரம், காடு, துறை, குன்றம், புரமென்னும் சொற்களை ஈற்றிலுடைய வற்றை முறையே சொல்லிச்செல்லுவதாக அமைத்துள்ள பகுதி இவ்வாசிரியருக்குத் தலங்களைப் பற்றியுள்ள ஞாபகவிசேடத்தைப் புலப்படுத்துகின்றது.

இந்நூலிலுள்ள படலங்கள், கள ; செய்யுட்டொகை, நூஉடு.

விளத்தோட்டிப் புராணம்.

† விளத்தோட்டியில் எழுந்தருளிய ஈசன் திருநாமம், பிரமபுரீசரென்பது ; அம்பிகையின் திருநாமம் கரும்பிரதாயகி. இத்தலத்தின்பெயர் வில்வாரணிய மெனவும் வழங்கும். இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றோர், வயிரவர், வேணுகோபாலர், பிரமதேவர், திக்குப்பாலகரெண்மர் முதலியோர் ஆவர்.

இத்தலத்து விருட்சம் கூவிளம் (வில்வம்) ஆதலாலும் இத்தலத்திற் கரும்பிரத நாயகியம்மை முருகக்கடவுளைத் தொட்டிலி

---

* கலவர் - கப்பலையுடையவர் ; இங்கே வலைஞர்.

† இது தேவாரவைப்புஸ்தலங்களுள் ஒன்று ; "வெண்ணி விளத் தொட்டி வேள்விக்குடி" திருநா. கூ.

லிட்டு வளர்த்தமையாலும் இத்தலம் இப்பெயர் பெறும். இப்பொழுதும் இவ்வூரிலுள்ளார் தம்குழந்தைகளைத் தொட்டிலில் வளர்த்துவதில்லையென்பர். இவை இப் புராணத்துள்ள,

" அன்றுமுத * ரொட்டிகடை யடுத்தேகூ விளமுதறீர்ந்
தென்றும்விளத் தொட்டியென வெய்தியதந் நகர்நாமம்
நன்றுமணித் தொட்டியின்மே னாடோறு மினிதமர்ந்து
தொன்றுமுரு கன்பால சுப்பிரம ணியனானான்"

" தொட்டியமர்ந் தொருபால சுப்பிரம ணியச்செம்பொற்
கட்டியினி தென்றுமுறுங் காரணத்தா லனையவிளத்
தொட்டிநகர் வாழ்வார்தஞ் சூழ்மனையின் மழத்தொட்டி
கட்டியறி யார்வேறு கட்டிவளர்த் தோங்குவார் "

(விளத்தொட்டிப் படலம், உ0, உஉ)

என்னும் செய்யுட்களால் உணரப்படும்.

இந்நூலிலுள்ள படலங்கள், கஎ; செய்யுட்கள், ௩௫உ.

வாளொளிபுற்றூர்ப் புராணம்.

வாளொளி புற்றூரென்னுந்தலம் அரதனபுரமெனவும் வழங்கும்; தேவாரம் பெற்றது. இத்தலத்து ஸ்வாமியின் திருநாமம் மாணிக்கலிங்கரென்பது; அம்பிகையின் திருநாமம் வண்டுவார் குழல் நாயகியென்பது. இத்தல விருட்சம் வாகை. குசகேதுவென்னும் ஒரு சோழவரசன்பொருட்டு அரதனப்பாறையிலிருந்து சிவபெருமான் சிவலிங்க வடிவாகத் தோற்றினமையால் இத்தலம் அரதனபுரமெனப் பெயர்பெற்றது. வாசுகியென்னும் மகாநாகம் இத்தலத்தையடைந்து சிவபெருமானை வழிபட்டு ஆபரணமாகும் பேறுபெற்றது. அப்பாம்பு ஒரு புற்றிலுறைந்தமையால் புற்றூரென்று முதலில் ஒரு பெயருண்டாயிற்று.

தீர்த்தயாத்திரை செய்துவந்த அருச்சுனன் இத்தலத்தையடைந்தபொழுது மிக்க நீர்வேட்கையால் வருந்தினன். அப்பொழுது சிவபெருமான் ஒரு வயோதிகப் பிராமணராக அவன் முன் தோன்றி ஒரு தண்டைக்கொடுத்து, " இதனை ஊன்றுமிடத்துத் தண்ணீர் தோன்றும்; அதனைப்பருகிச் சோகம் தீர்வாய் " என்று அருளிச்செய்தனர். அருச்சுனன் தன்னுடைய வாளை

* தொட்டில் தொட்டியென வழங்கலாயிற்று.

அவா முன்னேவைத்து, "யான் நீர் பருகித் திரும்புமளவும் வேறொருவர் இதனைக் கவர்ந்து கொள்ளாதபடி பார்த்துக்கொண்டிரும்" என்று சொல்லித் தடாகத்திற்குச் சென்றனன். இறைவர் அவ்வாளை முன்கூறிய புற்றில் ஒளித்துத் திருவுருக்கரந்தனர். இதனால் வாளொளி புற்றாரென இத்தலத்திற்கு ஒரு பெயருண்டாயிற்று. கோடையை வருணிக்கும் பகுதியில்,

"* தாலமெலாம் வறண்டதெனத் தவாமலிரட் டுறமொழிய
ஞாலமெலா மெவ்வுயிர்க்கு நாவிடத்தும் புனலில்லை
சீலமெலாந் திரியாது சேரவவை நினைப்பதனுக்
கோலமெலாம் பொலிகடன்மண் ணுலகிடத்தும் புனலில்லை"

"புவியகத்து வாழ்வார்கள் புளிந்தயிரும் புளிஞ்சோறும்
குவியகத்துப் புளிங்கறியு மல்லாது கூட்டுண்ணார்
சவியகத்த பெருங்குடிஞைத் தலனடைந்து வசிப்பவரும்
செவியகத்துப் புகுமாறு வினவுவதீம் புனல்வளமே"

(வாளொளி புற்றூர்ப் படலம், கடு, கஎ.)

எனவரும் செய்யுட்களும், தன்னுடைய வாள் ஒளிக்கப்பெற்றமையால் அருச்சுனன் அதனைத் தேடிக் காணுமற் சிவபிரானிடம்வந்து,

"மறங்கொண்ட விராவணற்கு வாள்கொடுத்தாய் முன்னடியேன்
நிறங்கொண்ட வாள்கவர்த னிலவுகரு ணைக்கழகோ
அறங்கொண்ட மலர்வாகை யரதநமா நகர்மேவும்
நிறங்கொண்ட மாணிக்க நின்மலநா யகவென்றான்" (ஷி சஎ)

என்று முறையிடுவதாகவுள்ள செய்யுளும் பிறவும் படித்தறிந்து மகிழ்தற்குரியன.

இந்நூற் படலத்தொகை, உ0; செய்யுட்டொகை, நிஉள.

இம் மூன்று புராணங்களையும் அப்பொழுதப்பொழுது எழுதி உபகரித்தவர் மதுரை இராமசாமி பிள்ளையென்பவர்.

† அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.

இம்மூன்று புராணங்களும் இயற்றிய பின்பு திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் மீது பிள்ளைத்தமிழொன்று இவராற் செய்யப்பட்டது. அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழென்று அது வழங்கும். சற்பனை நயமும் சைவ சாஸ்திரக் கருத்துக்

* தாலம் - உலகம், நா.

† ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 835 - 937.

களும் திருவாவடுதுறை யாதீன சம்பிரதாயப் பகுதிகளும் அதில் அங்கங்கே அமைந்துள்ளன.

பிள்ளையவர்கள் அதீன அரங்கேற்ற வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டபொழுது, அம்பலவாணதேசிகர் ஆதீனத்துத் தம்பிரான்கள் பலரையும் வித்துவான்கள் பிரபுக்கள் பலரையும் ஒருங்கு சேர்த்து ஒரு சபை கூட்டிச் சுப்பிரமணிய தேசிகருடன் தாம் வீற்றிருந்து அப்பிள்ளைத் தமிழ்ச்செய்யுட்களைக் கேட்டு அவற்றிலுள்ள நயங்களை அப்பொழுதப்பொழுது தெரிந்து மகிழ்ந்தும் எடுத்துப் பாராட்டி மகிழ்வித்தும் வருவாராயினர். அக்காலத்தில் முத்தப் பருவத்திலுள்ள,

"ஒளிவார் திருப்பனந் தாளின்முன் ஞளிலுள்
ளுருகிநி னடிப்பூசையாற்
றெருமாது சூட்டுபூ மாலையை விரும்பிநின்
னுருவமிக வுங்குனிந்தாய்
அளிவார் மனத்தினெம் பாமாலை வேண்டுமே
லவ்வளவு குனியல்வேண்டா
ஐயசற் றேகுனிந் தெண்ணியதை யன்புட
னளித்தரு ளவேண்டுமின்னும்
வளிவார் பெரும்புவி தெரிக்கவவ் வணநிற்கின்
மாண்புடைக் கலயனரை
மற்றெங்கு யாஞ்சென்று தேடுவே மாதலால்
வளமிக்க கழகந்தொறும்
தெளிவார் குழாங்குழுமி யோங்குமா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே"

என்னும்பாடலை இவர் வாசித்துப் பிரசங்கம் புரிகையில் அம்பலவாணதேசிகர் மகிழ்வுற்றவராய்த் தாம் சேமத்தில் வைத்திருந்த கல்லிழைத்த ஏறுமுகருத்திராட்ச கண்டியொன்றை வருவித்து இவரை அருகில் அழைத்து, "நாம் குனிகின்றோம்; நீங்களும் இப்பொழுது சற்றே குனியவேண்டும்" என்று சொல்லி அதனை இவர் கழுத்திற் பூணந்தாரென்பர்.

அம்பலவாண தேசிகர் சுப்பிரமணிய தேசிகரை அருகிலிருத்தி அவருடைய குணவிசேடங்களைப் பாராட்டி அடிக்கடி அவர் முதுகு தைவருதலை இவர் நேரிற் பார்த்தவராதலின் அதனை

யும் பின்னும் அவர்பால் வைத்துள்ள கருணைமிகுதியையும் பின் வருஞ் செய்யுட்களில் எடுத்துப் பாராட்டி இருக்கின்றனர்:

"பொருவாய் தரினு மிலாதவ னேனும் போற்றி வளர்த்தமுனைப்
பொய்யில் பழக்கம் விடுத்தில னிங்குப் போந்து மெனப்புகல
உருவாய் மையுநல் லொழுக்க விழுப்பமு மொள்ளறி வுங்குணனும்
உண்மையு மோருபு நந்தி குலத்திற் கொருகதிர் நீயென்று
திருவாய் மலருபு குறுநகை கொண்டொளி திகழ்சுப் பிரமணிய
தேவனை முதுகுதை வருமலர் புரையுஞ் செங்கையி னுன்மணிசால்
குருவாய் மாடக்*கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாண கொட்டுக சப்பாணி"

வேறு. (சப்பாணிப். க)

"போற்றுநாம் வருகென் றழைத்தபொழு தெய்திலான்
புகலிவ னெனத்திருக்கண்
போதச் சிவந்துழிக் குரவற் பிழைத்ததன்
புகரெண்ணி யிருவினைகளும்
காற்றுதிரு முன்னர்வர வஞ்சினு னென்றருகு
கவினமே வுற்ற வினையான்
கண்மணியை யினையசுப் பிரமணிய தேவனைக்
கண்சிவப் பாற்றுவித்தான்." (அம்புலிப். எ)

"வாளுடு மேவும் புறத்தொண்டர் சொற்றபடி
வையமு டாத்திலையிம்
மண்ணுடு மேவிய வகத்தொண்ட ரேம்யாம்
வகுத்தபடி கேளாமையென்
காளுடு மதுசொற்ற படிநடத் தோமெனிற்
கைகுவித் தெய்தினினது
கண்மணியை யினையசுப் பிரமணிய தேவன்முன்
கரைவோங் கரைந்தபொழுதே
பாளுடு மனையனின் பால்வந் துரைக்கினைப்
படிமறுத் திடுவை யினைய
பக்கநீ தவிர்வதே யிலையாத லால்யாம்
பகர்ந்தபடி கேட்டல் வேண்டும்
தேளுடு பூம்பொழிற் சோணு டளிப்பவன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே."

---

* திருவாவடுதுறை.

உஉசு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

இப்பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் வேறு பிள்ளைத் தமிழ்களைப்போலத் திருமால் முதலியவர்களைக் காப்பாகக் கூறுதலைத்தவிர்த்துத் திருவாவடுதுறையாதீனத்துக் குரு பரம் பரையினர்களைக் கூறுகின்றார். அவ்வகையில், திருஞான தேவர், சனற்குமாரமுனிவர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர், அருணமச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர், நமச்சிவாய மூர்த் திகள் முதலியவர்களைக் காப்பாகக் கூறும் பதினெரு செய்யுட்கள் காப்புப் பருவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் ஒரு புதிய அமைப்பைமேற்கொண்டதற்குக் காரணம்,

"வழிபடுதே வுளுங்கொலதீர் தெய்வதங்காப் புரைக்கவென
வகுத்த வான்றோர்
மொழியுணர்ந்து மவ்வழிச்சென் றிலர்முன்னே ரிரும்புகழ்க்கோ
முத்தி யெங்கள்
பொழிகருணைச் சின்மயனம் பலவாண தேசிகன்மேற்
புகலப் புக்க
கழிமகிழ்யா மவ்வழிச்சென் றனஞ்சிறக்கு மிப்பிள்ளைக்
கவியுந் தானே"

என்று இவர் இயற்றிய செய்யுளாற் புலப்படும்.

மடத்தைப்பற்றிய செய்திகளாகிய காவித்துவசமமைத்தல், பரிகலசேடத்தை அடியாருக்கு அளித்தல், அவர்களுக்கு நெற்றி யில் திருநீறணிதல் முதலியன இந்நூலுள் உரிய இடங்களிற் பாராட்டிக் கூறப்படுகின்றன :

"ஓங்கு நினது திருமுன்ன ருயர்த்த காவிக் கொடிமதனன்
உயர்த்த மீனந் தனக்கினமா யுள்ள வனைத்துங் கீழ்ப்படுத்தி
வீங்கு மமரர் நாட்டினுக்கும் விடுத்த நினது திருமுகம்போல்
வேந்தன் சுதன்மை கிழித்தெழுந்து மேவ"

"கூருங் கருணை நின் காவிக்கொடி" (தாலப். கூ-ச)

வேறு.

"நீடிய வன்பு நிகழ்த்திடு தொண்டர் நெருங்கி வணங்குதொறு
நிறைதரு திருவருள் பொங்குற நோக்குபு நிலவுவெ ணகைசெய்து
நாடிய வன்னர் பசிப்பிணி யும்படர் நல்கு மூடற்பிணியும்
நாளும் விலங்க லிலாது பவம்புக நாட்டு மலப்பிணியும்

ஓடி யவிந்திட வுண்கலசேடம தூதவு திருக் * கையினுல்
உறுவிடை யின்மையி னுமுறு வாமென வுன்னுபு வானிடபம்
கூடிய மதில்சூழ் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி."

(சப்பாணிப். அ)

"செய்யநங் குருநாத னினையாட வாவென்று
திருவாய் மலர்ந்தபொழுதே
திருந்தக் குடந்தமுற் றடியனேன் வந்தனென்
திருவுள மெவன்கொ லென்று
நையவுளம் விரையவந் தான்றதிரு வடிபணியி
னகுகருணை பூத்து நீறு
நலினத் திருக்கரத் தள்ளியுன் னுதலிடுவ
னுமெப் பெரிய பேற்றுல்
வெய்யகின் கயரோக மும்பழியு மாறியுயர்
மேன்மையும் பெறுவை." (அம்புலிப். சு)

சிவஞான முனிவரிடத்தும், கச்சியப்ப முனிவரிடத்தும் தமக்குள்ள பேரன்பை,

† "நின்னையொப் பில்லாத சின்மய னெனக்கலை
நிரம்புபா டியமுனிவனும்
நெடியசிவ ஞானமுனி யாலுணர்ந் தேந்துதி
நிகழ்த்தலிவ் வாறதென்றே
அன்னையொப் பாங்கச்சி யப்பமுனி யானன்
றறிந்தன மினித்துதித்தற்
கஞ்சுறே மெங்கள்செய லிற்றுக வெங்களி
னகப்படா தகல்வையலோ" (சப்பாணிப். கூ)

என்னும் செய்யுட் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

இந்நூலிலுள்ள வேறு நயமுள்ள பாடல்கள் சில:—

"ஒள்ளிய கந்தர மேவிய கருமை யொழிந்தனை யப்பொழுதே
உற்ற மலத்தின் கருமையும் யாங்க ளொழிந்தனம் வெங்கொலைசால்
வெள்ளிய கோட்டுக் கரியுரி போர்த்தல் விலங்கினை யப்பொழுதே
மேவிய மாயை போர்த்தலும் யாங்கள் விலங்கின மேவுபண்பு

---

* கையினுற் கொட்டுக வென்க.

† சிவஞான முனிவரியற்றிய சிவஞான போதச் சிற்றுரை முதலிய வற்றையும் கச்சியப்ப முனிவரியற்றிய பஞ்சாக்கரதேசிகரத்தாதியையும் நினைந்து இச்செய்யு ளியற்றப்பெற்றதென்று தெரிகின்றது.

புள்ளிய வாளர வத்தொகை பூணுதல் போக்கினை யப்பொழுதே
பொங்கு வினைத்தொகை பூணுதல் யாமும் போக்கின மலர்நடவில்
அள்ளிய வாவிய கோகழி நாயக ஞடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண ஞடுக செங்கீரை.''

(செங்கீரைப். அ)

'' பரசம யத்தவர் வாயு ணுழைந்து பயின்றிடு பிருதுவியே
பற்றிய தொண்டின் வழிப்படு சைவப் பைங்கூழ் பாய்புனலே
விரச வழுத்துநர் வெவ்வினை யடவி வெதுப்பி யெழுங்கனலே
மெய்யுற நோக்கினர் பாவ மெனுந்துய் விலக்க வுலாம்வளியே
வரசர ணத்தின் மனத்தை நிறுத்தி வயக்கி முயக்குறுவான்
மாதவ மாற்றுந ருள்ளந் தோறும் வளைந்து விராம்வெளியே
அரச வனத்தம ருங்குரு நாத ஞடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண ஞடுக செங்கீரை.'' (ஷை. கூ)

[இதில் ஆசிரியரை ஐந்துபூதங்களாக உருவகித்து முறையே கூறி இருத்தல் காண்க.]

வேறு.

'' அழிக்கு நினது பழம்பகையு ளாய்ந்து வடிவம் பலதாங்கி
அடுத்த கருவி யொடுமதவே ளமைந்து நிற்கு நிலையென்னக்
கொழிக்குங் கரிய காஞ்சிகளுங் கொடியால் வளைந்த பலகரும்பும்
கூவா நின்ற மாங்குயிலுங் குலவு மருதக் கிள்ளைகளும்
விழிக்குங் கமல முதன்மலரும் விரிந்த கமுகம் பாளைகளும்
மீன மெழுந்து பாய்தலுமாய் விளங்கா நின்ற கருங்கழனி
செழிக்குந் திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ.''

(தாலப். கு)

வேறு.

'' உரைசெயப் புவனத்தி னுங்கைப் பரச்சுமை
யொழித்தவர்க டக்கவேலை
ஒன்றினி தியற்றுதற் கெண்ணுவ ரதன்றியு
முரைக்குமுன் செயவும் வல்லார்
கரைசெ தது நிற்கமழு மானெடுஞ் சூலங்
கபாலமெஞ் தழற மருகம்
காணுமிவை முற்சுமை கழித்தலி னுடம்படுதல்
கடன்மையே கன்று மென்னின்
விரைசெய்மலர் செற்றுபொழில் சுற்றுமது ரையில்விறகு
வெட்டிமண் வெட்டி யங்கம்

வெட்டிப் பயின்றவங் கைத்தலங் கொடுகவில
வேண்டுமென் போமென்செய்வாய்
தரைசெய்பய னென்னவந்த மெய்ஞ்ஞான பாற்கரன்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டி யருளே.''

(சப்பாணிப். க.)

இந்நூல் ருதிரோத்காரி வரு (1863) சி. தியாகராச செட்டியாராற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆறுமுக நாவலர் நூற்பதிப்புக்களுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது.

மதுரை இராமசாமிபிள்ளை இவரிடத்திற் படிக்கும்பொழுதே அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களைப் பார்த்துச் சம்பாஷணை செய்து வருவார். அதனால் இராமசாமி பிள்ளைக்கும் நாவலருக்கும் நல்ல பழக்கம் உண்டாயிற்று. இராமசாமி பிள்ளை இராமநாதபுரத்தினர்; பொன்னுசாமித் தேவருக்கு உசாத்துணைவராக இருந்தவர். நாவலருடைய சில பதிப்புக்களைக் கண்ட அவர், பொன்னுசாமித் தேவருக்குப் பழைய தமிழ் நூல்களை வெளியிடும் விருப்பம் இருப்பதையும் நாவலர் தக்க பொருளுதவி இல்லாமல் இருப்பதையும் அறிந்து தேவரிடம் சொல்லி நாவலரால் திருக்கோவையாருரை திருக்குறட் பரிமேலழகருரை முதலியவற்றைப் பதிப்பிக்கச் செய்யவேண்டு மென்றெண்ணினர். அவ்வாறே முயலுகையில், தம்மையும் பதிப்பிப்போரையும் புகழ்ந்துள்ள சிறப்புப் பாயிரங்களைப் பெற்றுக்கொள்வதான், பாட்டுக்களிற் பிரியமுடைய தேவர் மகிழ்ந்து உதவி செய்தலை மேற்கொள்வாரென்றறிந்தார்.

ஆதலின், சென்னையிலிருந்த வித்துவான்களிடமிருந்து சிறப்புப்பாயிரங்கள் வாங்கி அனுப்பும்படி நாவலருக்கு எழுதினர். சென்னையில் இருந்தவர்களோடு அளவளாவி நாவலர் அக்காலத்துப் பழகவில்லை. அதனால் அவர்களிடம் சிறப்புப்பாயிரம் பெறுதற்கு இயலவில்லை; ''இங்கே உள்ள சபாபதி முதலியார் முதலியவர்கள்பால் எனக்கு நல்ல பழக்கமில்லை. ஆதலின் அங்கே திருவாவடுதுறையாதீன மகா வித்துவானுக விளங்கும் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடமிருந்தும் அவர்களுடைய மாணாக்கர்களிடமிருந்தும் சிறப்புப் பாயிரங்கள் வாங்கி உதவி

செய்யவேண்டும்" என்று அவர் இராமசாமி பிள்ளைக்கெழுதினர். அதனால், இராமசாமி பிள்ளை திருவாவடுதுறைக்கு வந்து இரண்டு தலைவர்களிடமும், "பொன்னுசாமித் தேவர் உதவியால் நாவலரவர்கள் திருக்கோவையார் திருக்குறள் முதலியவற்றைப் பதிப்பிக்க எண்ணியிருக்கின்றார்கள். அதற்குச் சிறப்புப் பாயிரங்கள் பிள்ளையவர்களைக்கொண்டும் அவர்களுடைய மாணாக்கர்களைக் கொண்டும் பெற நாவலரவர்கள் விரும்புகிறார்கள். பிரபு அவர்களும் அவற்றைக் கண்டால் திருப்தியுற்று உதவி செய்வதற்கு முன்வருவார்கள்" என்று சொன்னதன்றிப் பிள்ளையவர்களிடத்தும் இதனைத் தெரிவித்தார். மடத்திற்குப் பொன்னுசாமித் தேவர் வேண்டியவராகையினால் தலைவர்கள் பிள்ளையவர்களை அவ்வாறே செய்யும்படி சொன்னார்கள். இவரும் பாடிக் கொடுத்தார் இவர் கட்டளையின்படி தியாகராச செட்டியார் முதலியவர்களும் சிறப்புப்பாயிரம் கொடுத்தார்கள். அவற்றைக்கண்ட பொன்னுசாமித் தேவர் மிகவும் மகிழ்ந்ததன்றிப் பிள்ளையவர்களுடைய பாடலின் நயத்தில் ஈடுபட்டார்.

அயலாரிலிருந்து வேறு யாராவது வந்து தம்மீது பாடல் சொல்லத் தொடங்கினால், "அது கிடக்கட்டும்; அதென்ன மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடலா? அவர்கள் பாடலல்லவா பாடல்! அந்தப் பாட்டைக் கேட்ட காதில் இந்தப் பாடல் ஏறவில்லை. பின்பு வாருங்கள்" என்று தேவர் சொல்வது வழக்கமென்றும், "தங்களை அழைத்து உபசரிக்கவேண்டுமென்னும் எண்ணம் உடையவர்களாகிப் பிரபு அவர்கள் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றும் "பதினெண் புராணங்களுள் இதுகாறும் தமிழிற் செய்யப்படாதவற்றைத் தங்களைக்கொண்டு இயற்றுவிக்க எண்ணியிருக்கிறார்கள்" என்றும் இராமசாமி பிள்ளை இவருக்கு எழுதி வந்ததன்றித் தியாகராசசெட்டியார் முதலியோருக்கும் ஏற்றவண்ணம் எழுதி ஊக்கம் உண்டாக்கிவந்தார். பொன்னுசாமித் தேவர் தமிழ்ப்பயிற்சி உடையவரென்றும் தமிழ் வித்துவான்களை ஆதரிப்பவரென்றும் செய்யுள் நயங்களை யறிந்து வியப்பவரென்றும் அறிந்த இவர், இராமசாமி பிள்ளையின் வேண்டுகோளின்மேல் நாவலர் பதிப்பிக்கத்தொடங்கிய தருக்கசங்கிரகம் முதலிய நூல்களுக்கும் சிறப்புப்பாயிரம் கொடுத்துவந்தார். ஒன்றைவிட ஒன்று சிறந்ததாகவே இருந்தது. உண்மையில் பொன்னுசாமித்

தேவர் செய்யுட்களின் சுவையை அறிபவராயினும், இராமசாமி பிள்ளை இவருக்கும் தியாகராச செட்டியார் முதலியவர்களுக்கும் எழுதுவன மிகையே; சிறப்பான பாடல்களைப் பெறவேண்டு மென்னும் நோக்கத்தினாலே அங்ஙனம் எழுதிவந்தார்.

இச்செயலைப்பற்றிப் பின்பு ஒருகால் இராமசாமி பிள்ளை திருவாவடுதுறைக்கு வந்திருந்தபொழுது தியாகராச செட்டியார் என்னிடம், "இந்த மனுஷர் பொய்யும் புளுகும் எழுதி எங்களை ஏமாற்றிவிட்டார். எங்களை யெல்லாம் வரவழைத்து உபசாரம் செய்யக் கருதியிருப்பதாக ஒரு சமயமும், எந்தவிதமான மரியாதைசெய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களென்று ஒரு சமயமும் எழுதினர். எல்லாம் முழுப்பொய். காரியத்தை மட்டும் சாதித்துக்கொண்டுவிட்டார்" என்று சொன்னர். உடனே இராமசாமி பிள்ளை நகைத்துக்கொண்டே, "ஆம் ஐயா, நான் இவ்வாறெல்லாம் எழுதாவிட்டால் நீங்கள் நன்றுகச் சிறப்புப்பாயிரம் பாடித் தருவீர்களா?" என்று செட்டியாரிடம் சொல்லிவிட்டு என்னை நோக்கி, "நான் அப்படி எழுதுவேன். இவர்கள் அதிக உழைப்பெடுத்துக்கொண்டு பாடுவார்கள்" என்றார்.

இவ்வாறு நாவலருக்குக் கொடுத்த சிறப்புப்பாயிரங்கள் பல. அவற்றுட் சில பதிப்பிக்கப்பட்டன. இறையனாரகப்பொருள் முதலிய சில நூற்பதிப்புக்களை நிறைவேறுமையின் சிறப்புப்பாயிரங்கள் வெளிவர வழியில்லை. அவை தியாகராச செட்டியாரிடத்தும் சதாசிவ பிள்ளையிடத்தும் இருந்தன. பிற்காலத்தில் அவற்றைப் பெறுவதற்கு எவ்வளவு முயன்றும் கிடைக்கவில்லை.

திருக்குறுக்கைப் புராணம் இயற்றியது.

தண்மதிவேல், தருமபுர ஆதீனத்தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் விரும்பியதற்கு இணங்கி, இவரால் திருக்குறுக்கைப் புராணம் இயற்றப்பட்டது. அந்நூலை அரங்கேற்றும்பொழுது பல பிரபுக்கள் வந்து கேட்டு ஆதரித்தார்கள். கார்குடியிலிருந்த பிரபுவாகிய சரவணப்பிள்ளை யென்பவர் உடனிருந்து சிறப்பாக நடத்தி வைத்தார். அரங்கேற்றுவதற்குமுன் தருமபுரம் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் அவருக்கு அனுப்பிய திருமுகம் வருமாறு

ஒ-

"குருபாதம் துணை.

சகலகுண சம்பன்னரான பிள்ளையவர்கள் சரவணப் பிள்ளையவர்களுக்குப் பண்டாரத் திருவுளத்திலே சிவஞானமும் தீர்க்காயுளும் அரோகதிடகாத்திரமும் சிந்தித மனோரத சித்தியும் சகல பாக்கியமும் மேன்மேலும் உண்டாகுக. இத்தத் துன்மதிவரு தைமீ உயிவ வரைக்கு நாமும் தம்பிரான்களும் பண்டாரத் திருவுளத்திலே பரிணமத்தில் இருக்கிறோம். இப்போது குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுர சுவாமிக்குத் தமிழில் தலபுராணம் செய்யும்படி வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கு நாம் சொல்ல அது முற்றுப்பெற்றிருப்பதால் ஸ்திரவார தினம் அரங்கேற்றுதல் செய்யும்படி அவ்விடத்துக்கு அனுப்பியிருக்கிறோம். தாங்கள் கூடஇருந்து அரங்கேற்றுதல் செய்யும்படி செய்விக்கவேண்டியது: மகாகூத்திரமானபடியால் அந்த ஸ்தலத்தைப் பிரகாசம் செய்விப்பது புராணமேயன்றி வேறில்லை. தேவாரங்களிருந்தபோதிலும் புராணமில்லாவிடின் ஸ்தலத்தினுடைய வரலாறு விளங்கமாட்டாது. அன்றியும் ஒரு புராணப் பிரதிட்டை ஒரு ஸ்தலப்பிரதிட்டை செய்வதுபோலாகும். அதற்குரிய அபிமானிகளாகிய தாங்கள் கூடஇருந்து சிறப்பாக நடப்பிக்கவேண்டும். மற்றப்படி தாங்களும் மற்றுமுண்டாகியபேர்களும் சுகமே இருக்கிறசெய்தியை யெழுதியனுப்ப வேண்டியது. சதாகாலமும் பண்டாரத்திருவருளே கண்ணுக இருந்து வரும்படி சிந்திக்க.

ஞானஸம்பந்தன்."

குறுக்கைப்புராணம் துன்மதிவரு மார்கழிமீ 13-ஆம் தேதி வியாழக்கிழமை பகல் 27 நாழிகைக்குப் பாடி நிறைவேறியது என்று புராண ஏட்டுப் பிரதியின் இறுதியில் எழுதப்பட்டிருந்தது.

குறுக்கை யென்பது அட்டவீரட்டானங்களுள் மன்மதனை எரித்த தலம்; தேவாரம் பெற்றது. தீர்க்கவாகு வென்னும் ஒரு முனிவர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஸ்தலங்கடோறும் சென்று அவ்வத் தலத்திலுள்ள இறைவனுக்கு ஆகாய கங்கை நீரைக்கொண்டே திருமஞ்சனம் செய்யுமியல்புடையவர். அவர் இத்தலத்தை அடைந்து அங்ஙனமே அபிஷேகம் செய்ய விரும்பித்

தம் நீண்ட கைகளை உயரத்தூக்க அவை குறுகின. அக்காரணத் தால் இத்தலத்தின் பெயர் குறுக்கையென்றே வழங்கலாயிற்று. இத்தலத்திற்கு * அரிதகிவனம், யோகீசபுரம், ஞானம்பிகாபுரம், காமதகனபுரம், கம்பகரபுரமென வேறு திருநாமங்களும் வழங் கும்.

இத்தலத்துச் சிவபெருமான் திருநாமம் யோகீசரென்பது. அம்பிகையின் திருநாமம் ஞானம்பிகை. தலவிருட்சம் கடு.

இந்நூலிலுள்ள மாணிக்கவாசகர் துதி மிகச் சுவையுள்ளது:

"மன்னுமருட் குரவனுய்க் குருந்துறையும் பெருந்துறையில்
வதிந்த கோமான்
கொன்னுமொலி மலிகுதிரைச் சேவகனுய் மண்சுமக்குங்
கூலி யாளாய்
இன்னுமொரு தரஞ்சொலெனக் கேளாமற் சொற்றபடி
எழுது வோனுய்த்
துன்னும்வகை நெக்குருகு வாதவூ ரண்ணலடி
தொழுது வாழ்வாம்."

அவையடக்கங் கூறுகையில், மொழிமுதலாகாத ஙகரம் அகரவுயிரொடு கூடிச் சுட்டு முதலிய எழுத்துக்களின் பின்னே வருதல்போலத் தம் பாடலும் யோகீசருடைய கதையைச் சார்த லால் சிறப்புப்பெறுமென்பதை அமைத்து,

"மொழிமுதலா காதஙக ரமுமகரஞ் சார்ந்துமுத
லாய்ச்சுட் டாதி
வழிவரல்போன் மொழிமுதலா காதவென்பா டலுங்குறுக்கை
வளர்மா தேவன்
பழிதபுகா தையைச்சார்ந்து முதலாய்ச்சுட் டாதிவழி
படரு மாலீ
தழிவிலிய லுணர்ச்சியரோர் குவரதனுல் யானவர்க்கொன்
றறைவ தில்லை"

என்னும் பாடலைப் பாடியுள்ளார்.

மேகம் மாதமும்மாரி பெய்ய அந்த நீர் காவிரியைச்சார்ந்து ஓடிக் கடலில் விழுந்து அதை நிரப்புதலால் கடல் முந்நீரென்னு பெயர்பெற்றது போலும் என்னும் கருத்து அமைய,

---

* அரிதகி - கடுமரம்.

"மழைவரை முகட்டி லேறி மாதமும் மாரி பெய்யத்
தழைதரு புனல்கா வேரி சார்ந்தொருங் கோடி வீரை
விழைதர நிறைத லாலவ் வீரைக்கு மூன்றீ ரென்று
பழையநூ லுணர்ந்தோர் கூறும் பரிசிஃ துணர்ந்து போலும்"

(நாட்டுப். கஎ)

என்று பாடி யிருக்கின்றனர்.

பேரளவென்னும் பொருளுள்ள பனைபொருந்தியுங் கடைப்பட்ட நெய்தல்போலாகாமல் சிறிய அளவென்று கூறப்படும் தினை விளைக்கப்பட்டும் குறிஞ்சி முதன்மையாயிற்றென்னும் கருத்து,

"கரைசெய் பேரள வாம்பனை பொருந்தியுங் கடையாந்
திரைசெய் நெய்தல்போ லாதறி வாளர்சிற் றளவென்
றுரைசெய் தண்டினை பொருந்தியு முதன்மையுற் றோங்கும்
வரைசெய் வான்றினை போல்வது மற்றெது மண்மேல்"

(ஷை உச)

என்னும் செய்யுளில் அமைந்துள்ளது.

உழவர்கள் காவிரியில் புது வெள்ளத்தைக் கண்டு மகிழ்ந்ததற்கு அப்பூதி நாயனார் திருநாவுக்கரசு நாயனாரைக்கண்டு மகிழ்ந்ததையும் ஸ்ரீ மாணிக்கவாசகர் குருந்தமரத்திலெழுந்தருளிய சிவபெருமானைக்கண்டு மகிழ்வுற்றதையும் பின்வரும் பாடலில் உவமையாகக் கூறியுள்ளார்:

"ஆன்றவப் பூதி நாயனார் நாவுக் கரையரைக்
கண்டது போலும்
கான்றசோ றென்றே யிருமையுங் கண்டு கழிக்குநா
லாவது சத்தி
ஊன்றநேர் வாத வூர்கோன் குருந்தி னொருவனைக்
கண்டது போலும்
ஈன்றதா யனைய காவிரி நறுநீ ரெதிருறக்
கண்டனர் களமர்."

(ஷை சசு)

சிவாலயங்களின் திருமதில் முதலியவற்றில் ஆல் அரசு முதலியன தோன்றி அவற்றை அழிவடையும்படி செய்வது இவருடைய மனத்தைத் துன்புறுத்தியதென்பது,

"நட்டபன் முதலுந் தாம்புதி தடித்த
நானில மகட்குற வணங்கி
உட்டழைந் தெழல்போற் சாய்ந்துபி னிமிர்ந்தாங்
குமாதர னடியர்கைக் கொடுக்கப்
பட்டதன் பலமொன் றனந்தமா வதுபோற்
பல்பல கிளைத்தெழும் பொழுதே
அட்டமெய் யுடையா னுலயத் திடையால்
அரசென மூளைத்தபல் களையே"

"அறப்பரி பால ரெம்பிரான் கோயில்
அகத்தெழு மாலர சாதி
உறப்பறித் தெழல்போ னெற்பயிர் வளர்ச்சிக்
கூறுசெய் களையெலா மொருங்கு
மறப்படை நெடுங்க ணுழத்தியர் வயலுள்
வயங்குமோ திமமெனப் புகுந்து
நறப்படு களைகள் யாவையுங் களைந்து
நகுவரப் பேற்றின ரெழுவார்" (நாட்டுப். குடி - சு)

என் வரும் செய்யுட்களால் விளங்கும்.

"'எம் வினையை அரி; தகி' என்று எண்ணி அரிதகி எனமாகிய இத்தலத்தை அடைபவர் பெரியர்; போகத்தை விரும்பி அடைபவர் சிறியர். தன் சரீரத்தைச் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணுக்கு விருந்தாக்க எண்ணி இத்தலத்தை அடைந்த மன்மதனைப் பெரியனென்பேனே? சிறியனென்பேனே?" என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

"* அரிதகி வனத்தி லெயவெம் வினையை
அரிதகி யென்றுவந் தடைவார்
பெரியவர் சிறியர் போகமே வேட்டுப்
பெரிதுவந் தடைவர்தன் மேனி
எரியழல் விருந்து செய்திட வுள்ளத்
தெண்ணிவந் தடைந்தன னென்றுல்
தெரிவரு மதனைப் பெரியவ னென்கோ
சிறியனென் கோவெது புகல்வேன்"

(காமதகனப் படலம், கூ)

என்னும் செய்யுளும், சிவபெருமானுல் எரிக்கப்பட்டுத் தோற்றபின்பும் மன்மதன் தோற்றிலனென்பதைச் சமத்காரமாக அமைத்து,

* அரிதகிவனம் - கடமைவனம்.

"தனியெழின் மாரன் விடுத்தது * முளரி
தம்பிரான் விடுத்தது முளரி
பனிமதிக் குடையோ னெண்ணமு † மருளே
பரம்பர ‡ னெண்ணமு மருளே
கனிவரு மதவே ணீறுடை மெய்யன்
கடவுளு நீறுடை மெய்யன்
வனிதையோர் பாகத் தெம்பிரான் றனக்கு
மனைபவன் தோற்றிலன் போலும்" (ஷை உகு)

என்று இயற்றியுள்ள செய்யுளும் படித்து இன்புறற்பாலன.

குறிஞ்சி முதலிய திணைகளை வருணிக்கும்பொழுது அவ்வத் திணையிலுள்ள தலங்களை யெடுத்துப் பாராட்டுவர். அவ்வகையில் ஈங்கோய்மலை, வாட்போக்கி, திரிசிராமலை, கற்குடிமாமலை, எறும் பியூர் என்னும் குறிஞ்சி நிலத்தலங்களும், நெடுங்களம், நியமம், மேலைத்திருக்காட்டுப்பள்ளி, கங்கைகொண்டசோளேச்சுரம் முத லிய முல்லை நிலத்திலுள்ள தலங்களும் எடுத்துப் பாராட்டப் படுகின்றன. தீர்க்கவாகுவென்னும் முனிவர் தலயாத்திரை செய்ததை வருணிக்கும் பகுதியிற் சிவதலங்கள் பலவற்றைக் குறிப்பால் தெரிவித்திருக்கும் அருமை வியக்கத்தக்கது.

இந்நூலிலுள்ள படலங்கள் - உக ; செய்யுட்டொகை - எஉசு. இப்புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

$ திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பதிற்றுப்பத்தந்தாதியும் ஆனந்தக்களிப்பும்.

துந்துபி (1862) வருஷத்திற் பல சிவஸ்தலங்களைத் தரிசனம் செய்ய இப்புலவர்பிரான் புறப்பட்டார். அப்பொழுது இராமசாமி பிள்ளையின் வேண்டுகோளின்படி மதுரைக்குச் சென்றனர். அங்கே திருஞானசம்பந்தமூர்த்தியாதீனமடத்தே தங்கி ஸ்ரீசோமசுந்தரக் கடவுளைத் தரிசனம் செய்துகொண்டு சிலதினம் இருந்தனர். அப் போது அங்கே பாடசாலைப் பரிசோதகராக இருந்த பம்மல் விஜயரங்க முதலியாருடைய விருப்பத்தின்படியே, திருஞான சம்பந்தமூர்த்தி பதிற்றுப்பத்தந்தாதியும் திருஞானசம்பந்தர்

---

* முளரி - தாமரைமலர், நெருப்பு. † மருள் - மயக்கம். எண்ணமும் அருள்.

$ ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 2670-2808.

ஆனந்தக்களிப்பும் இவரால் இயற்றி மடத்தில் அரங்கேற்றி அவராலே அச்சிற் பதிப்பிக்கப் பெற்றன.

மதுரையாதீனத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரையே பூர்வாசாரியராகக் கொண்டு வழிபடுதல் முறையாதலால் இவ்வந்தாதியிலும் ஆனந்தக் களிப்பிலும் அவருடைய அருமைச் செயல்களே எடுத்தாளப்படும்.

அப் பதிற்றுப்பத்தந்தாதியிலிருந்து சில செய்யுட்கள் வருமாறு:—

விருத்தம்.

" அழகிய மயிலே யத்தியைப் பூவை
அரசுசெய் தனையுத வாமை
பழகிய பெண்ணே பலவுமின் குரும்பை
பலகொளப் பாடினே பற்பல்
கழகமுற் ரேங்கு மாலவா யமுதே
கவுணியர் பெருங்குல விளக்கே
மழவிளங் களிறே யென்மனந் திருத்தின்
மற்றுமப் புகழொடொப் பாமே." (கசு)

" ஒன்றுவெங் காமம் வெகுளியுண் மயக்கம்
ஓங்குமும் மதமெனக் கொண்டு
கன்றுமென் மனமாங் கரிறகல் பவஞ்சக்
காடெலா முழிதரு மதனே
வென்றியா னடக்க வலியிலா மையினுன்
மேதகு கூடலென் றுரைக்கும்
குன்றில்வாழ் தெய்வக் குருபர சமய
கோளரி சரணடைந் தேனே." (கள)

வேறு.

" அடைய வினிமை யருளுநின்பொன்
அடிக ளடைந்தே னதற்கேற்ப
இடைய ருத வன்பில்லேன்
எனினுங் கூடற் சம்பந்தா
தடையி லடியா னினக்கென்றே
சாற்ரு நிற்ப ரெனையுலகர்
மிடைசில் லுறுப்பி லார்தமையும்
மக்க ளென்றே விளம்புதல்போல்." (உச)

வேறு.

"வானமும் புகழ்திரு மதுரை பாற்கடல்
ஞானசம் பந்தனர் நயக்கு நல்லமு
தூனமில் சைவர்க ளுவந்த வானவர்
தீனவெவ் வமணரே திதிதன் மைந்தர்கள்." (அஎ)

மதுரையை விட்டு நீங்கி வேறு சில தலங்களைத் தரிசனஞ் செய்துகொண்டு திருவாவடுதுறை வந்து சேர்ந்தார்.

* குருபரம்பரை அகவல்.

திருவாவடுதுறையிலிருக்கையில் சில அன்பர்களுடைய வேண்டுகோளின்படி அந்த ஆதீனத்து முன்னோர்களாகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் முதல் வேளூர்ச்சுப்பிரமணியதேசிகரிறுதியாக இருந்த ஞானசிரியர்கள் சிவபதமடைந்த மாதம், நட்சத்திரம், சமாதித்தலமென்பவற்றை முறையே யமைத்து, 'திருவளர் கைலைச் சிலம்பு' என்னும் தலைப்பையுடைய அகவலொன்றை இயற்றி அளித்தனர். அது குரு பரம்பரை அகவலென வழங்கும்; அவ்வகவல் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

மண்ணிப்படிக்கரைப் புராணம்.

திருவாவடுதுறை ஆதீனத்துப் பெரிய காறுபாறும் வித்துவானுமாகிய கனகசபைத் தம்பிரானவர்களுடைய விருப்பத்தின்படி மண்ணிப்படிக்கரைப் புராணம் இவரால் இயற்றப்பெற்றது.

"வானளவு புகழ்த்திருவா வடுதுறையிற் குருநமச்சி வாய மூர்த்தி
ஆனபர சிவனருளான் ஞானகலை முதற்பிறவு மமையக் கற்று
மோனமிகு சாத்தியனுய் மிளிர்கனக சபாபதிமா முனிவர் கோமான்
கூனன்மதி முடித்தபிரான் மதுரகவனப் புராணீ கூறு கென்ன"

(பாயிரம்)

என்னும் செய்யுளாலும் இது விளங்கும்.

இரக்தாட்சி வரு (1864) சித்திரை மாதத்தில் அப்புராணம் அந்தத்தலத்தில் ஸ்வாமி சந்நிதியில் பலர் முன்னிலையில் அரங்கேற்றப்பெற்றது. அதனை இயற்றும்படி அடிக்கடி தூண்டிவந்தவரும் அரங்கேற்றுதற்குப் பலரிடத்துஞ் சென்று பொருளீட்டிக் கொடுத்துதவியவரும் அந்தக் கோயிற் காரியஸ்தர் கோதண்டராமைய ரென்பவராவர்.

---

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 1049.

மண்ணிப்படிக்கரையென்பது மாயூரத்துக்கு வடபாலுள்ள தேவாரம் பெற்றதலம்; மண்ணியாற்றின் படிக்கரையில் முற் காலத்து இருந்தமையின் இப்பெயர் பெற்றது. இக்காலத்தில் இலுப்பைப்பட்டென வழங்கும். இத்தல விருட்சம் இருப்பை.

இத்தலத்திற்குரிய விநாயகமூர்த்திகள் வலம்புரி விநாயகர், நடன விநாயகரென இருவர். சிவபெருமான் படிக்கரைநாயகர், நீலகண்டேசர், முத்தீசர், பரமேசர், மகதீசரென ஐந்து மூர்த்தி களாக எழுந்தருளியுள்ளார். மங்கள நாயகி, அமுதகரவல்லி யென அம்பிகைகள் இருவருளர். இவர்களுக்குத் தனித்தனியே துதிகள் கூறப்பட்டுள்ளன.

அப்புராணச் செய்யுட்களுட் சில வருமாறு:—

மகதீசர் துதி.

" ஒப்பாரும் மிக்காரு மில்லானென் முரணங்கள்
உரைத்தற் கேற்ப
இப்பாரும் விண்ணுலகு மெடுத்தேத்து மகதீசன்
எனும்பேர் பூண்டு
தப்பாரு மறிவினருஞ் சங்கையறத் தழலங்கைத்
தலத்தி னேந்திக்
கப்பாரு மதுகவனங் குடிகொண்ட பெருமானைக்
கருதி வாழ்வாம்."

(கடவுள் வாழ்த்து)

தலவிருட்சமாகிய இருப்பையின் சிறப்பு.

" இனிய நீழலெங் குஞ்செய் தருக்குலம்
நனிய வாந்தளி ராதிக ளேநல்கும்
கனிய மைந்தவிக் காம நிருப்பைதான்
மினிய நாளும் விளக்கமும் நல்குமே."

(தீருநகரப்படலம், உக)

" காம தகன நினைத்தொழுதேன்
கால கால நினைத்தொழுதேன்
சோம சூட நினைத்தொழுதேன்
துணைவி விடாது வீற்றிருக்கும்
வாம பாக நினைத்தொழுதேன்
மதுக வனத்தாய் நினைத்தொழுதேன்
ஏம வுருவ நினைத்தொழுதேன்
என்று நடனம் புரிகின்றான்."

(நடனவிநாயகப் படலம், கக)

" வானமுழு வதுங்காத்த மணிகண்டர் பேரருளால்
ஆனநய வுணர்வுற்ற வக்காகம் பிரமதடத்
தானமில்வண் புனன்மூழ்கி யோங்குசின கரஞ்சூழ்ந்து
கானமுரு தடியேனைக் காகாவென் றுறக்கரையும்."

(காகம் முத்தியடைந்த படலம், உஅ)

கருமசேனன் முத்தியடைந்த படலமென்பது முழுவதும் வஞ்சித்துறையாலே இயற்றப்பெற்றுள்ளது ; அதிலுள்ள செய்யுட்களுட் சில வருமாறு :

" அன்ன வன்னிவன்
தன்னை நோக்கியே
பொன்னை நேடினேன்
என்ன செய்குவேன்."

" உங்கள் பேரிளந்
கங்கை யாடிநான்
திங்க ளாறினில்
இங்கு மேவுவேன்."

(கருமசேனன் முத்தியடைந்த படலம், எ,கo)

இப்புராணத்திலுள்ள படலங்கள் - உo ; செய்யுட்கள் - நிoக ; இஃது அச்சிடப் பெற்றுளது.

சேற்றூர்க் * கந்தசாமிக் கவிராயர்.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்களின் பரம்பரையினரும், சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங்கேட்டவரும், விரைவாகச் செய்யுள் செய்பவருமாகிய கந்தசாமிக் கவிராயரென்பவர், சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்கும் பொருட்டு வழக்கம்போலவே திருவாவடுதுறைக்கு வந்தார். பிள்ளையவர்களுடைய புகழைக் கேள்வியுற்றவராதலின் இவரைக் கண்டு அளவளாவ வேண்டுமென்னும் விருப்பம் அவருக்கு மிகுதியாக இருந்துவந்தது. சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துவிட்டு இவரைப்பார்க்க வந்தார். அப்பொழுது இவர் ஏதோ ஒரு நூலின் பகுதிக்குரிய செய்யுட்களை இயற்றி எழுதுவித்துக்கொண்டிருந்தார். ஒரு செய்யுள் செய்வதற்கே பல நாழிகை யோசித்து உபகரணங்களைத் தேடிவைத்துக் கொண்டு பாடுபவர்களை அக் கந்தசாமிக் கவிராயர் பார்த்தவராதலின், இவர் அநாயாஸமாகப் பாடுதலையும் இடையிடையே நண்பர்களோடு பேசுவதையும் அப்பேச்சினுல் செய்யுள் இயற்றுதலில் யாதொரு தடையும் நேராமையையும் கண்டு அளவற்ற ஆச்சரியம் அடைந்தார். உடனே வியப்பு மிகுதியால்,

* இவருடைய தம்பியின் குமாரருக்கும் கந்தசாமிக் கவிராயரென்று பெயருண்டு.

[கட்டளைக்கலிப்பா]

"ஓலை தேடி யெழுத்தாணி தேடியாள்
ஓய்ந்தி ருக்கு மிடந்தேடி யேயொரு
மூலை தேடி யிருந்துதன் மூக்குக்கண்
ணுடி தேடி முகத்திற் பொருத்தியே
மாலை தேடி வருமட்டு மோர்கவி
வந்த தென்று வரைந்து வழுத்துவன்
சாலை நீடிய பாப்பாங் குளத்துக்குத்
தக்க சொக்கலிங் கக்கவி ராயனே"

என்னும் பழைய தனிப்பாடலை அங்கே உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லி இவரை மிகவும் பாராட்டினர். சிலநாள் இருந்து இவருடன் சல்லாபம் செய்துவிட்டுச் சென்றார். இப்படியே வரும் பொழுதெல்லாம் இவரோடிருந்து இவருடன் பழகி இவரது கவித் திறத்தைப் பாராட்டிச் செல்லுவார்.

திருவாவடுதுறைக் கந்தசாமிக் கவிராயர் இவர் பாடும் நூல்களிற் பங்கு கேட்டது.

இவர் புராணங்களைப் பாடி வரும்பொழுது இயல்பாகவே முன்பு திருவாவடுதுறை ஆதீனவித்துவானாக இருந்த கந்தசாமிக் கவிராயரென்பவர், "நீங்கள் பாடும் புராணத்திற் சில பாகத்தை என்னிடம் கொடுத்தால் நான் பாடி முடிப்பேன். இந்த இடத்திலேயே காத்துக்கொண்டிருக்கும் என் பெயரும் பிரகாசப்படுவதற்கு வழியாகும்" என்று வற்புறுத்திப் பலமுறை கேட்டுக் கொண்டேவந்தார். இவர் நேரில் மறுப்பதற்குத் துணியாமல், "ஆயிரக் கணக்கான பாடல்கள் அமையக்கூடிய புராணமாக இருந்தால் உங்களுக்கும் சில பாகங்களைப் பகிர்ந்து கொடுப்பேன். இவை நூற்றுக்கணக்கான பாடல்களாற் செய்யப்படுவனவே. ஆகையால் என்னுடைய நாவின் தினவைத் தீர்ப்பதற்கே போதியனவாக இல்லை. உங்களுக்குப் புராணம் செய்யும் விருப்பம் இருந்தால் வேறே ஒரு ஸ்தலத்திற்குத் தனியாகச் செய்யலாமே" என்பார். அவர் பின்னும் வற்புறுத்துவார். இவர் இவ்வாறே விடையளிப்பார். அவர், "நான் வருந்திக்கேட்டும் கொடுக்கவில்லை" என்று அயலிடங்களிற் சென்று குறைகூறுவர். இவ்வாறு அவர் கேட்பதும் இவர் விடை கூறுவதும் அடிக்கடி நிகழும்.

இங்ஙனம் நிகழ்ந்துவருங் காலத்தில் ஒருநாள் பகற் போசனத்தின்பின் இவர் மடத்தின் முகப்பிலிருந்து பலருடன் பேசிக் கொண்டிருக்கையில் கந்தசாமிக் கவிராயர், தமக்குத் தெரிந்தவர் பலர் அங்கே இருப்பதைக் கண்டார். இதுதான் கேட்பதற்கு நல்ல சமயமென்றெண்ணிவந்து வழக்கம்போற் பாடுவதிற் பங்கு கேட்டார். கேட்டபொழுது அங்கே இவரைப் பார்த்தற்கு வந்திருந்த சேற்றூர்க் கந்தசாமிக் கவிராயர், 'இந்தப் போராட்டத்தை இப்பொழுதே எவ்வாறேனும் நாம் ஒழித்துவிட வேண்டும்' என்றெண்ணி அவரை நோக்கி, "நீங்கள் என்ன என்ன நூல்கள் படித்திருக்கிறீர்கள்?" என்று விசாரித்துக் கடினமான சில கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். அவர் தெளிவாக விடைகூறமாட்டாமல் விழித்துக்கொண்டேயிருந்தார். சேற்றூர்க் கவிராயர் பின்னும் அவரைப்பார்த்து, "பிள்ளையவர்களுக்கும் உங்களுக்கும் படிப்பிற் பலவகை வேறுபாடுகள் உண்டு. அவ்விஷயத்தை நீங்கள் அறிந்துகொள்ளாமல் இவர்களைக் காணும் பொழுதெல்லாம் இந்த வண்ணம் துன்புறுத்துவது சிறிதும் நன்றேயில்லை. உங்களுடைய நிலைமையை நீங்களறியாமல் இவர்களை ஏன் நோவச் செய்கிறீர்கள்? உங்களுக்கு இயற்கையில் திறமை இருந்தால் எத்தனையோ விதத்தில் அதனை வெளிப்படுத்தலாமே. இனி இவ்வாறு இவர்களிடம் வாக்குவாதம் செய்தால் ஸந்நிதானத்தினிடம் விண்ணப்பம் செய்துவிடுவேன்" என்றார். ஸந்நிதானத்தினிடம் தெரியப்படுத்துவதாகச் சொன்ன வார்த்தைதான் அவர் மனத்தைக் கலக்கிவிட்டது. பழையகாலத்து மனிதராகிய அவர் இயற்கையிலேயே பயந்தவர். கடிந்து பேசுவாரின்மையாற் பிள்ளையவர்களிடம் அவ்வளவு காலம் போராடினர். இந்தச் சேற்றூர்க் கவிராயர் எங்கிருந்தோ முளைத்து, 'ஸந்நிதானம்' என்று பயமுறுத்தினால் அவர் அஞ்சமாட்டாரா? "இனி இந்த வழிக்கே வருவதில்லை; என்னைவிட்டுவிடுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டார். அதுமுதல் இந்த விஷயத்தைப்பற்றிக் கேட்பதற்குப் பிள்ளையவர்களிடம் வருவதை அவர் நிறுத்திக்கொண்டார்.

இரக்தாட்சி வருஷம் (1864) வைகாசி மாதம் இரண்டாந் தேதி திருவாவடுதுறையாதீனம் காறுபாறு கண்ணப்பத் தம்பிரானவர்களுக்கும் இவருக்கும் அம்பலவாண தேசிகரவர்களால் நிர்வாணதீக்ஷை (தீக்ஷைக்குறை) நடந்தேறியது.

பந்தர்ப் பாட்டு.

அப்பொழுது மடத்திற் சிலநாள் காறுபாறுயிருந்த ஒருவர் பிள்ளையவர்களிடத்தில் அழுக்காறும் விரோதமும் உள்ளவராக இருந்தார். அதற்குக் காரணம் மடத்தில் இவருக்கு அதிக உபசாரம் நடந்துவருதலும், வருபவர்கள் தம்மைப் பாராட்டாமல் இவரைப் பாராட்டி வந்தமையுமே. அதுபற்றி இவருக்கு ஆக வேண்டிய காரியங்கள் சுப்பிரமணிய தேசிகருடைய கட்டளையின் படியே நடைபெறும். இவர் இருந்த விடுதியின் முற்றம் விசாலமாக இருந்தமையால் கோடைக்காலத்து வெப்பம் தாங்கமுடியாமல் இருந்தது. அதுபற்றி ஒரு பந்தர் போட்டுக் கொடுக்கும்படி கட்டளையிடவேண்டுமென்று இவர் விண்ணப்பித்துக் கொண்டார். அப்படியே சுப்பிரமணிய தேசிகருடைய உத்தரவினுல் கீற்று, பந்தர்க்கழி முதலியன மெய்க்காட்டுக் கணக்குப் பிள்ளையால் கொணர்ந்து சேர்க்கப்பட்டன. அதை எப்படியோ தெரிந்து கொண்டு மேற்கூறிய அதிகாரி தம்முடைய அனுமதியில்லாமல் இச்செயல் நிகழ்ந்துவிட்டதேயென நினைந்து ஏதோ ஒரு காரணத் தைக் காட்டிக் கீற்று முதலியவற்றை எடுத்துப் போகும்படி செய்துவிட்டார். அது தெரிந்த பிள்ளையவர்கள் மனவருத்த முற்றுப் பின்வரும் பாடலை இயற்றிச் சுப்பிரமணிய தேசிகருக்கு விண்ணப்பம் செய்யும்படி ஒரு மாணாக்கரை அனுப்பினர்:

"மந்தரச் சிகரி * நீலமா வனத்து
வாகீசர் வரவுதேர்ந் திடைநீ
பந்தரொன் றமைத்துப் பொதியுண வளித்த
பான்மைதேர்ந் தீண்டிருப் பேனுக்
கிந்தவெங் கோடை தனிற்பந்தர்க் காக
எய்திய பொருள்கணீங் கியவென்
சுந்தரத் துறைசைச் சுப்பிர மணிய
தூயதே சிககுணக் குன்றே."

இதைப் பார்த்த உடனே சுப்பிரமணிய தேசிகர் இன்னரால் ஏற்பட்டிருக்குமென்று நினைத்து, மெய்க்காட்டுக் கணக்குப் பிள்ளையை அழைத்துவரச் செய்து, "இந்த நிமிஷமே பிள்ளை யவர்களுடைய விடுதியின் முற்றத்தில் பந்தரைப் போட்டுவிட வேண்டும்; இல்லையெனில் உமக்குக் கட்டளையிட்டவருடைய

* நீலமாவனம் - திருப்பைஞ்ஞீலி.

வேலை நிலைபெறுதென்று அவருக்கு அறிவியும்" என்று கட்டளை யிட்டார். பின்னர் வெகுசீக்கிரத்திற் பந்தர் போடப்பட்டது.

ஒருமுறை திருவாவடுதுறைக்கு ஆறுமுக நாவலர் வந்திருந்த பொழுது மடத்திற்படித்துக்கொண்டிருந்த நமச்சிவாயத் தம்பிரா னைக்கண்டு, "அங்குத்தி பிள்ளையவர்களிடம் பல நூல்களைப் பாடங்கேட்டுக் கொள்ளவேண்டும். அவர்கள் இங்கே இருப்பது பெரும்பாக்கியம். அவர்களைப்போல இப்பொழுது பாடஞ் சொல்பவர்கள் இல்லை" என்று சொல்லிப் போனர்.

கோயிலூர்ப்புராணம்.

இவருக்கு அடிக்கடிநேரும் பொருள் முட்டுப்பாட்டினால் இவர் வருந்துவதை இவரிடம் பாடங்கேட்டுவந்த தேவிகோட்டை நாராயண செட்டியார் அறிந்து இவருக்கு எவ்வகையிலேனும் பொருள் வருவாய் கிடைக்கும் வண்ணம் செய்விக்க வேண்டு மென எண்ணினர். பாண்டிநாட்டில நகரவட்டகையிலுள்ள சிவ ஸ்தலங்கள் சிலவற்றிற்கு இவரைக் கொண்டு புராணம் இயற்று விக்கலாமென்றும் அங்கங்கேயுள்ள பிரபுக்களைக் கொண்டு அவை காரணமாக இவருக்குத் தக்க பரிசில்கள் கொடுக்கச் செய்யலா மென்றும் நிச்சயித்து அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருவாராயினர். நகர வைசியப் பிரபுக்கள் இக்கவிஞர் கோமா னது பெரும்புகழை அறிந்திருந்தவர்களாதலின் நாராயண செட்டியாருடைய முயற்சிகள் பயனுற்றன. அப்பொழுது கோயி லூர் வேதாந்தமடத்துத் தலைவராக இருந்த ஸ்ரீ சிதம்பர ஐயா வின் விருப்பப்படி கோயிலூர்ப்புராணம் இவராற் பாடப்பெற் றது. இவரைக் கோயிலூருக்கு வருவித்துத் தக்கவர்கள் கூடிய சபையில்அந்நூலை அரங்கேற்றுவித்து ஸ்ரீ சிதம்பர ஐயா இவருக்கு உயர்ந்த சம்மானம் செய்ததன்றிப் பலவகையான உதவிகளும் செய்வித்தார்.

கோயிலூரிலிருந்து திருவாவடுதுறைக்கு வந்தவுடன் மடத்தி லிருந்த சில தம்பிரான்கள் அப்புராணத்தைப்படிக்கச் சொல்லிக் கேட்டபொழுது அதனை ஆக்குவித்தோராகிய சிதம்பர ஐயாவைச் சிதம்பர தேசிகரென்று கூறியிருத்தலை அறிந்தார்கள்; "சைவரும் இந்த மடத்து வித்துவானுமாகிய இவர் அவரைத் தேசிகரென்று சொல்லுதல் முறையா? பணங்கொடுத்தால் வித்துவான்கள், யாரையும் எப்படியும் புகழ்வார்கள்" என்று தம்முள் சொல்லிக்

கொண்டிருந்தனர். அதனைச் சிலராலறிந்த இப்புலவர் கோமான் அவர்களுள் முக்கியமானவரைச் சந்தித்தபொழுது, "இந்தமாதிரி அங்குத்தி சொல்லிக்கொண்டிருந்ததுண்டோ?" என்று கேட்டார். "ஆம்" என்றார் அவர். இவர், "பதினோராவது நிகண்டு ஞாபகத்தில் இருக்கின்றதா? தேசிகனென்பதற்கு அதிற் பொருளென்ன கூறியிருக்கிறது?" என்றுகேட்டார். அவர், "தேசிகன் வணிக ஞசான்" என ஒப்பித்தார். "அந்த நிகண்டின் பொருளைத்தான் நானும் பின்பற்றிச்சொல்லியிருக்கிறேன். அடியேன் சொன்னதில் ஒன்றும் தவறில்லையே" என்றார் இவர். அவர் இக் கவிஞர்பிரானது சமத்காரமான விடையைக் கேட்டு ஒன்றும் கூற இயலாமல் வறிதே சென்றார். அன்று முதல் யாரும் இவ் விஷயத்தைப் பற்றிக் குறைகூறுவதில்லை.

கோயிலூரென்பது சமிவனம், கழனியம்பதி, வன்னிவனம், சாலிவாடி, ஸ்ரீவல்லபமெனவும் வழங்கும். இத்தலத்தில் எழுந்தருளிய சிவபெருமான் திருநாமங்கள் திரிபுவனேசர், கொற்றவாளீசர், கழனிநாதரென்பன. அம்பிகையின் திருநாமங்கள் திரிபுவனேசை, நெல்லைநாயகி யென்பன. இத்தலத்து விருட்சம் வன்னி.

இந்நூலைச் செய்வித்தவர் சிதம்பர ஐயாவென்பது,

"ஆயமுத்தி ராமலிங்க தேசிகன்பே ரருள்பெற்றேன்
சுகுண ஞானம்
மேயவரு ஞசலதே சிகனவன்பா லருள்பெற்று
விளக்கஞ் சான்ற
பாயபுகழ்ச் சிதம்பரதே சிகன்கேட்க வுயர்கழனிப்
பதிப்பு ராணம்
வாயமையப் பூனந்துரைத்தான் மீனாட்சி சுந்தரநா
வலன்மிக் கோனே"

வேறு.

"திகழ்தருசின் மயரூப சிதம்பரதே
சிகன்மொழிய
இகழ்தருத லிலாதவன்சொ லேற்றபெரும்
புண்ணியத்தாற்
புகழ்தருமிப் புராணத்தைப் பாடினேன்
புன்மையெலாம்
அகழ்தருபே ரறமுதல யாவுமடைந்
தனன்யானும்"

எனவரும் செய்யுட்களால் அறியப்படும்.

சிதம்பர ஐயாவின் விருப்பத்தின்படி வடமொழியிலுள்ள வாறே இந்நூலுள் வேதாந்த விஷயங்கள் அங்கங்கே பலவகையில் அமைக்கப்பெற்றன.

அப் புராணத்துப் பாடல்களுட் சில வருமாறு :—

ஸ்ரீ நமச்சிவாயழர்த்தி துதி.

" கண்ணிய பிறப்பை யாருங் கரிசென வெறுப்பர் மேலோர்
அண்ணிய சிறப்பான் மிக்க வாவடு துறைக்கண் மேய
புண்ணிய நமச்சி வாய குருபரன் பொற்ருள் போற்ற
நண்ணிய பிறப்பை நாயேன் வெறுப்பது நன்ருங் கொல்லோ."

மழை பெயீதலும் பயிர் செழித்தலும்.

வேறு.

" மழையெ னப்படுந் தேசிகன் றிங்கண்மும் மழையாம்
விழையு மூப்பதப் பொருளினை விருப்பொடு பொழியக்
குழைத ரப்படு கோடையா மவித்தைபோய்க் குலைந்து
தழையு யிர்ப்பயிர் தம்மியல் படைந்தன மாதோ."

உழவர்கள் வயலின் வரம்பை அரிந்து உயர்த்தல்.

வேறு.

" எத்துணைநூல் கொளுத்திடினு மேற்கும்வலி யுண்டாதற்
கொத்தபெருங் *கட்டளைமுன் னேற்றிவலி யுறுத்துதல்போல்
எத்துணைநீர் பாய்த்திடினு மேற்கும்வலி யுண்டாதற்
கொத்தகுலக் கங்கரிந்தாங் கேற்றிவலி யுறுப்பரால்."

களைபறித்தல்.

" மிடிகெடுக்கும் பயிர்க்கூறாய் மேவியமுண் டகமாம்பல்
கடிகெடுக்குந் தன்மையிலாக் கருநீல முதல்யாவும்
வடிகெடுக்குங் கருங்கண்ணூர் வயலினிடைக் களைந்தெறிந்தார்
குடிகெடுக்கு மிராகாதிக் குற்றங்கள் களைவார்போல்."

நகர வணிகரின் இயல்பு.

வேறு.

" பொருளினை யீட்டும் போது புத்திரர் முதலோர்க் கென்று
மருளுற வீட்டா நிற்கு மடமையோர் நாணுக் கொள்ளத்
தெருண்மிகு மன்ன தானஞ் சிவாலய தரும மேற்றோர்
வெருண்மிடி யகற்றற் கென்றே மீட்டுவர் விரும்பி நாளும்."

---

* கட்டளை - நாளுஜீவவாதக் கட்டளை முதலியன; இச்செய்யுள் அந்த மடத்தின் சம்பிரதாயத்தைத் தழுவி இயற்றப்பெற்றது.

மடத்தின் சிறப்பு.

" தெளிதரு புகழ்வே தாந்த சிரவணந் திருந்தச் செய்தே
ஒளிதரு மனன மாதி யிரண்டினு முரவோ ராகிக்
களிதரு பவஞ்ச மூற்றுங் கான்றிடு சோற்றிற் கண்டு
வெளிதரு பிரம மேயாய் மேவுவார் மடமொன் றுண்டால்."

இலக்கண வமைதி.

வேறு.

" கிழக்கிருந்து மேற்கேகிக் கெழுமாடத் தியநாஞ்சில்
வழக்கமிகு தெற்கிருந்து வடக்கேக நடத்திடுவார்
பழக்கமிகு சுழிகுளமென் றெடுத்திசைக்கு மொருபாவை
முழக்கமிகு பெரும்புலவர் மொழிந்துநடத் துதல்பொருவ."

இப்புராணத்துள்ள படலம் - கச ; திருவிருத்தம், அசகூ ; இஃது அச்சிடப் பெற்றுள்ளது.

---

22. ரங்கசாமி பிள்ளையைத் திருவாவடு துறை மடத்திற்கு வரச் செய்தது.

ரங்கசாமி பிள்ளையின் இயல்பு.

அக்காலத்தில், மதுரையிலிருந்து தஞ்சாவூருக்குப் பிரின்ஸிபல் ஸதர்மீனுக மாற்றப்பட்டு ரங்கசாமி பிள்ளை யென்பவர் வந்திருந்தார். அவர் மிக்க பரிசுத்தர். யாரையும் சென்று அவர் பார்ப்பதில்லை. அவர் வீட்டிற்கும் யாரும் போவதில்லை. அவரிடம் பழகுவதில் எல்லோருக்கும் பயம் இருந்தது. அவ்வாறு இருந்து வேலை பார்ப்பதுதான் ஒழுங்கென்பது அவருடைய கருத்து. ஆனலும், தெய்வபக்தியும் தமிழ்ப் பாஷையிற் பயிற்சியும் உள்ளவர்.

அம்பலவாண தேசிகர் ரங்கசாமி பிள்ளையை வருவிக்க விரும்பியது.

அவர் தஞ்சாவூரில் இருக்கையில் தைமாதக் குருபூஜைக்குத் திருமுகம் அவருக்கு அனுப்பலாமா வென்று திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் யோசித்து விசாரிக்கையில், அங்கே வந்திருந்த சில சைவப் பிரபுக்கள், " அவர் முன்பிருந்தவர்களைப்

போன்றவரல்லர். சற்றுக் கடுமையுள்ளவர். அவர் எந்த இடத்திற் கும் போவதில்லை. அவருக்கு அனுப்புவதிற் பயனே இல்லை. அவர் எங்கேயாவது வந்திருக்கிறதாக ஸந்நிதானம் கேட்டதுண்டா? அவரைப் பார்க்கவெண்ணிச் சென்றவர்கள் பாராமலே வந்து விட்டார்கள்" என்று சொன்னார்கள். அம்பலவாண தேசிகர் அதனைக்கேட்டு, "எவ்வாறேனும் அவரை வரவழைக்கவேண் டும்" என்று நினைத்தார். 'முன்பிருந்தவர்களெல்லோரும் வருவ தண்டே; இவர்மட்டும் வராமல் இருக்கலாமா?' என்று எண்ணி னர். பிறர் அவரைப்பற்றிப் பல செய்திகளைச் சொல்லச் சொல்லத் தேசிகருடைய எண்ணம் அதில் வலியுற்றதேயன்றிக் குறையவில்லை. 'அவரை அழைத்துவரத் தக்கவர்களை யனுப்ப முயல வேண்டும். அந்தக் காரியத்தை முடிக்கும் ஆற்றலுடையவர்கள்யார்?' என்று அடுத்தபடி அவருடைய மனம் யோசனையில் ஆழ்ந் தது. 'வந்துள்ள பிரபுக்களோ அவர் வரவேமாட்டாரென்று அபசகுனம்போற் சொல்லுகிறார்கள். அவரிடத்தில் எல்லோருக் கும் அச்சம் இருக்கிறது. யாரை அனுப்பலாம்?' என்று தினமும் எண்ணி எண்ணிக் கவலையுற்றார். அப்பொழுது சுப்பிரமணிய தேசிகர் தம் ஆசிரியருடைய திருவுள்ளம் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துக் கவலையுறுவதாக அறிந்து சென்று, "ஸந்நிதானம் எதைப்பற்றி யோசிக்கிறது?" என்று கேட்டார். அவர் கவலையின் காரணத்தைக் கூறினர்.

சுப்: இதுதானா பெரிய விஷயம்! யாராயிருந்தாலென்ன? நமச்சிவாய மூர்த்தியின் திவ்யப் பிரசாதத்தை விரும்பாதவர் களும் இருக்கிறார்களா? இந்தப் பிரபுக்களெல்லாம் அவரைப் பார்க்கவும் பேசவும் முடியா விட்டால் ஒருவராலும் அது முடியா தென்று நினைத்துவிடுவது சரியா!

அம்பல: அப்படி இல்லை. அவர் வேறு எந்த இடத்திற்கும் போவதில்லையாமே.

சுப: இருக்கட்டும். அதற்கேற்றவர்கள் நம்மிடத்தில் இருக் கிறார்கள். அவர்களைக் கொண்டு காரியத்தை முடித்துக் கொள்ள லாம்.

அம்பல: அப்படிப்பட்ட ஒருவரும் நம்மிடத்தில் இருப்ப தாகத் தெரியவில்லையே. பெரிய பிரபுக்களே போவதற்கு நடுங்கும்பொழுது யார் அவரைப்போய்க் காண்பார்கள்?

சுப்: இந்தப் பிரபுக்களால் ஆகாத காரியங்களை அடியேன் குறிப்பிட்டவர்கள் செய்து விடுவார்கள்.

அம்பல: யார் அவர்?

சுப்: நம் ஆதீன மகா வித்துவான் பிள்ளையவர்களை அனுப்பினால் ரங்கசாமி பிள்ளை அவசியம் தரிசனத்திற்கு வருவார். இவர்களை அறியாதவர்களும் மதியாதவர்களும் இல்லை.

அம்பல: இவர் பரம ஸாதுவாய் இருக்கிறாரே! இவரைக் கண்டால் அந்த அதிகாரி மதிப்பாரா? மதிப்பாரென்று எனக்குத் தோற்றவில்லை.

சுப்: அப்படி நினைக்கக்கூடாது. இவர்களை மதியாதவர் இந்தத் தமிழ் நாட்டில் எங்கும் இல்லை. அந்த ரங்கசாமி பிள்ளையல்ல; அவருக்குமேல் எவ்வளவு பெரியவராயிருந்தாலும் இவர்களை அசட்டை செய்யார். ஸந்நிதானம் அதைப்பற்றி எள்ளளவும் கவலைப்பட வேண்டாம்.

அம்பலவாண தேசிகருக்கு அந்தப் பிரபுக்கள் சொன்னவை நெஞ்சில் ஊன்றிப் போயிருந்தமையின் சுப்பிரமணிய தேசிகருடைய வார்த்தைகள் அவருக்கு முழு நம்பிக்கை கொடுக்கவில்லை. 'ஆனாலும் பார்ப்போம்' என்று எண்ணி, "அவ்வாறே செய்க" எனக் கட்டளையிட்டார்.

தஞ்சாவூர் சென்றது.

உடனே சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களை அழைத்துத் தஞ்சாவூருக்குச் சென்று எப்படியாவது ரங்கசாமி பிள்ளையைக் குருபூஜா தரிசனத்திற்கு அழைத்துவர வேண்டுமென்றும் அவ்வாறு செய்தால் மஹாஸந்நிதானத்தின் திருவுளத்திற்கு உவப்பாயிருக்குமென்றும் சொல்லிப் பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்து அனுப்பினர்.

இவர் அவ்வாறே தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே இவருக்குப் பழக்கமானவராகிய இலக்கணம் * இராமசாமி பிள்ளை யென்பவரொருவர் இருந்தார். அவர் இவருடைய மாணவர்களுள் ஒருவர்; திருவாவடுதுறைக்கு அடிக்கடி வந்து தமக்கு நூல்களிலுள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொண்டு செல்வார். அவர்

---

* இவர் பின்பு கொழும்பு ஸர். பி. இராமநாத முதலியாருக்கு ஞானசிரியராக விளங்கினவர்; இஃது அம்முதலியாருடைய சரித்திரத்தால் விளங்கும்.

தஞ்சாவூரிலுள்ளவர்களால் நன்கு மதிக்கப்பெற்றவர். அவரைக் கண்டு அவர் மூலமாக எவரையேனும் பார்த்துத் தம்முடைய காரியத்தை முடித்துக்கொள்ளலாமென்று இவர் நினைந்தார். ஆதலினால், வேறு பலர் அவ்வூரிற் பழக்கமுள்ளவர்களாயிருந்தும் அவர்கள் வீட்டிற்குச் செல்லாமல் இராமசாமி பிள்ளை வீட்டிற்குச் சென்று தங்கினர் அப்பொழுது அவர் வீட்டில் இல்லை. சிறிது நேரங் கழித்தபின் அவர் வந்தார். தம் வீட்டில் இவரைக் கண்டவுடன் வியப்புற்று, "என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்" என்று கூறி க்ஷேம சமாசாரங்களை விசாரித்துவிட்டு உபசாரங்கள் செய்து வேண்டிய பொருள்களை உதவி உடன் வந்த தவசிப் பிள்ளைகளைக் கொண்டு விருந்தமைக்கச் செய்தனர். இவர் ஆகாரம் செய்துவிட்டு நெடுநேரம் பேசிக்கொண்டேயிருந்து சயனித்துக் கொண்டார்.

விடியற்காலையில் எழுந்து தனியே இருவரும் வெளியில் உலாவச் சென்றார்கள். அப்பொழுது இவர் இராமசாமி பிள்ளையை நோக்கி, "இந்தவூருக்குப் புதியவராக வந்திருக்கும் பிரின்ஸிபல் ஸதாசிவனவர்களைத் திருவாவடுதுறைக் குருபூஜா தரிசனத்திற்காக அழைத்துச் செல்லவந்திருக்கிறேன். யார்மூலமாக முயன்றால் இது கைகூடும்? எப்படியாவது இக்காரியத்தை நிறைவேற்றித் தரவேண்டும்" என்றனர். அவர், "ரங்கசாமி பிள்ளையவர்கள் யாரையுமே பார்க்கிறதில்லை. எவ்விடத்திற்குமே செல்லுகிறதில்லை. ஆனாலும் நான்மட்டும் அவர்களுடைய ஓய்வுநேரத்திற் சென்று திருவிளையாடல், பெரியபுராணம் முதலியவற்றைப் படித்துக்காட்டிவருவதுண்டு. தமிழிலும் தமிழ்வித்துவான்களிடத்திலும் பிரீதியுடையவரே. தாங்களே வந்திருக்கும்போது இக்காரியம் நிறைவேறுவதற்கு என்னதடை இருக்கின்றது? அடியேன் முந்திச்சென்று அவரிடத்தில் தங்களுடைய நல்வரவைத் தெரிவித்துவிட்டு வருவேன். அடியேன் வரமுடியாவிட்டாற் சொல்லியனுப்புவேன். அந்தப்படி வரவேண்டும்" என்று சொல்லிவிட்டுத் தாம் மட்டும் அங்கேசென்றார். இவர், "தேடிப்போன மருந்துக்கொடி காலில் அகப்பட்டது போலக் காரியம் முடிவதற்கு ஏற்றவரிடமே வந்து சேர்ந்தோமே. வேறெருவரிடத்தும் செல்லாதிருந்தது நன்மையாய்விட்டது' என்று காலவிசேடத்தை எண்ணிமகிழ்ந்தார்.

22. ரங்கசாமி பிள்ளை மடத்திற்கு வந்தது. உசுகூ

இராமசாமி பிள்ளை சென்று ரங்கசாமி பிள்ளையைக் கண்டார். அவர் வழக்கம்போலவே கையிற் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு பாடங்கேட்கத் தொடங்கினர்.

இராம: ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லப்போகிறேன். அதற்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

ரங்க : சொல்லலாமே.

இராம : இக்காலத்துக் கம்பரென்று எல்லோராலும் கொண்டாடப்படும் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப்பற்றித் தாங்கள் கேட்டிருக்கலாமே. தம்பர் செய்த செய்யுள் பதினாயிரமே. பிள்ளையவர்கள் இதற்குள் செய்திருப்பன எத்தனையோ பதினாயிரம்; இனி எவ்வளவு செய்வார்களோ? அளவிடமுடியாது; நிமிஷகவி; சிவபெருமான் திருவருளைப் பெற்றவர்கள்; ஸரஸ்வதிதேவி அவர்களுடைய நாவிற் குடிகொண்டிருக்கிறாள். எத்தனையோ பேர்களுக்குக் கைம்மாறு கருதாமற் பாடஞ்சொல்லி அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்து முன்னுக்குக் கொணர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. நூல்களில் நெடுநாளாக எனக்கு இருந்த பல சந்தேகங்கள் அவர்களாலேதான் தீர்ந்தன. இப்போது அவர்கள் திருவாவடுதுறை மடத்தில் ஆதீன மகாவித்துவானாக இருந்து பலருக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டு விளங்குகிறார்கள்.

ரங்க : நானும் அவர்களைப்பற்றித் தக்கவர்களாற் கேட்டிருக்கிறேன். பார்க்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கு மிகுதியாக உண்டு. இந்த உத்தியோக நிர்ப்பந்தத்தால் யாரையும் பார்க்கக் கூடவில்லை; எங்கும் போகக்கூடவில்லை. நான் என்ன செய்வேன்!

இராம : அவர்கள் நேற்றுப் பிற்பகலில் இவ்வூருக்கு வந்து என்னுடைய வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பழக்கமுள்ளவர்கள் எத்தனையோபேர்கள் இந்த ஊரில் இருந்தும் எனது வீட்டிற்கு வந்தது என்னுடைய பாக்கியமே. அவர்களுடன் நான் தனியே பேசிக்கொண்டிருந்தபொழுது, தங்களைப் பற்றி விசாரித்ததோடு தங்களைப் பார்க்கவேண்டுமென்றும் குறிப்பித்தார்கள். அவர்களிடத்திற் படித்த அநேகர் பெரிய உத்தி

யோகங்களில் இருக்கின்றனர். மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையைத் தங்களுக்குத் தெரிந்திருக்கலாமே. அவரும் அவர்களுடைய மாணாக்கரே. இன்னும் அவர்களிடத்தில் ஒரு விசேஷம் இருக்கிறது. சிலகாலம் அவர்களிடத்திற் படித்தாலே பல வருஷங்கள் படித்து அறியவேண்டியவற்றை அறிந்துகொள்ளலாம். அதனை நான் என் சொந்த அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். அப்படிப்பட்ட பெரியவர்கள் தங்களைப் பார்க்க விரும்புவது தங்களுடைய புண்ணியமே.

ரங்க : அவர்கள் தங்களுடைய வீட்டில்தானே வந்திருக்கிறார்கள்! நான் அங்கே வந்து பார்க்கலாமா? எப்பொழுது பார்க்கலாம்?

இராம : அவ்வாறு செய்தால் அவர்களுக்கு மிக்க வருத்தமாகவிருக்கும். அவர்கள் தங்கள் கௌரவத்தை நன்கு அறிந்தவர்களாதலால் என்னைக் கோபித்துக்கொள்வார்கள். தாங்கள் பார்க்கலாமென்று சொன்னால் நான் போய் அழைத்து வருகிறேன்; அல்லது தங்கள் மனிதர்களையாவது அனுப்பலாம்.

ரங்க : அப்படிச் செய்வது மரியாதையாகத் தோற்றவில்லை. நானேதான் போய்த் தரிசிக்கவேண்டும்.

இராமசாமி பிள்ளை, "அது தாங்கள் இதுவரையில் வைத்துக் கொள்ளாத வழக்கமாதலால் அவ்விதம் செய்ய வேண்டாம். நானே போய் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டார். ரங்கசாமி பிள்ளை தம்முடைய வண்டியிலாவது அவர்களை அழைத்து வரலாமேயென்று தமது வண்டியை அனுப்பினர். அதில் ஏறிக்கொண்டு இராமசாமி பிள்ளை தம் வீட்டிற்குச் சென்றார்.

ரங்கசாமி பிள்ளையைக் கண்டது.

இராமசாமி பிள்ளை போன காரியத்தை அனுகூலமாக முடித்துக்கொண்டு வரவேண்டுமென்று பிள்ளையவர்கள் தம்முடைய இஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்து அவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இராமசாமி பிள்ளையைக் கண்டவுடன், "காயோ? பழமோ?" என்றார். இராமசாமி பிள்ளை, "பழந்தான்" என்று சொல்லி, "அவர் தங்களை இயல்பாகவேயறிந்திருக்கிறார்; தாமே இங்கு வருவதாகச் சொன்னார். அடியேன்தான் அதைத் தடுத்துத் தங்களை அழைத்து வருவதாகச் சொல்லி

வந்தேன். இதோ அவர் வண்டி வந்திருக்கிறது. புறப்படலாம்'' என்றார். இவர் மகிழ்ந்து அவ்வாறே புறப்பட்டுச் சென்றார். போகும்போது இராமசாமிபிள்ளை இவரைப் பார்த்து, ''அவர் தங்களிடத்தில் மிகப்பிரீதியாகவே இருக்கிறார். அவருடைய அன்பை அதிகப்படுத்துவதற்குத் தங்களுடைய கவித்வம் வெளிப் படவேண்டும். எந்தச் சமயத்தில் நான் எதைச் சொல்வேனே அதற்குத் தாங்கள் சித்தமாக இருக்கவேண்டும்'' என்று குறிப் பித்து வைத்தார்.

இவருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு வீட்டின் முன் புறத்தில் நின்ற ரங்கசாமி பிள்ளை இவரைக் கண்டவுடன் அஞ்சலி செய்து உள்ளே அழைத்துச்சென்று தக்க ஆசனத்தில் இருத்திப் புஷ்பமாலைசூட்டிச் சிறந்த பழவர்க்கங்களை முன்வைத்து வந்தனம் செய்தார். செய்து, ''ஐயா, பெரிய அரசர்களெல்லாம் மதித்துப் பாராட்டுதற்குரிய பெரும்புலமை வாய்ந்த கவிஞர் பெருமானாகிய தாங்கள் எளியேனை ஒரு பொருட்படுத்தி இந்த வீட்டிற்கு எழுந் தருளியதற்கு அடியேன் பழம்பிறப்பில் என்ன புண்ணியஞ் செய் தேனோ தெரியவில்லை. தங்களுடைய வரவை யறிந்து தாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்து தரிசிக்க எண்ணிய அடியேனை இவர் கள் தடுத்துவிட்டார்கள். அந்தக் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்'' என்றார்.

அப்பொழுது இராமசாமி பிள்ளை இக்கவிநாயகருடைய பெரு மையையும் அன்புடைமையையும் பின்னும்சொல்லத் தொடங்கிப் பலவகைச் செயல்களை எடுத்துரைத்தார். பின்பு, ''இவர்களால் பாடப்பெற்ற பாக்கியசாலிகள் பலர்; அந்த விசேடத்தால் அவர் களிற் சிலர் உயர்வடைந்திருக்கிறார்கள். இவர்கள் எந்தச் சமயத் தில் எப்படிக் கேட்டுக் கொண்டாலும் பாடுவார்கள். இப்பொழுது தங்கள் விஷயமாக ஒரு செய்யுள் சொல்லும்படி விண்ணப்பித் துக்கொண்டாலும் உடனே சொல்லிவிடுவார்கள்'' என்றார்.

ரங்க: அவர்களுடைய திருவாக்கினால் அடியேனைப் பாட வேண்டும்? வேறு எந்த விஷயத்தைக் குறித்தாவது பாடலாமே. பாண்டிநாட்டைச் சிறப்பித்து ஒரு செய்யுள் சொன்னால் போதும்.

இராமசாமி பிள்ளை, ''தங்களையும் பாண்டி நாட்டையும் இணைத்துப் பாடினால் நம் இருவருடைய விருப்பமும் பூர்த்தியா கும்'' என்று சொல்லிவிட்டு, ''எளியேங்கள் விண்ணப்பத்திற்கு

இணங்கிப் பாண்டி நாட்டின் சிறப்பும் இவர்கள் சிறப்பும் அமையும் படி ஒரு செய்யுள் இப்பொழுது பாடியருள வேண்டும்" என்று மிக்க பயபக்தியோடு இவரை நோக்கிக் கேட்டுக்கொண்டார்.

அப்பொழுதுதான் இக்கவிஞர்பிரானுக்கு இராமசாமிபிள்ளை எந்தச் சமயத்தில் எது சொன்னாலும் அதனைச் செய்தற்குச் சித்தமாக இருக்கவேண்டுமென்று சொன்னதன் கருத்து விளங்கியது. இராமசாமி பிள்ளை கேட்டுக்கொண்டவுடனே தாமதியாமல் இவர் பின்வரும் செய்யுளைச் சொன்னார்:

விருத்தம்.

"பாமினு ளோடு பூமினுள் விளங்கும்
பாக்கியம் படைத்தது நெஞ்சில்
தோமிலா வடியார்க் கருள்புரி யுமையாள்
சுந்தர நாயகன் கந்தன்
தாமினு தகற்றி யரசுசெய் பெருமை
தாங்கிய தினையிலா வங்க
சாமியாம் நீதி பதிமுறை நிறுத்தத்
தழைத்தது பாண்டிநன் னாடு."

அதனைக் கேட்ட இராமசாமிபிள்ளைக்கே வியப்பு மிக்கது. அதனை இரண்டாமுறையும் சொல்லும்படி விண்ணப்பித்துக் கொண்டார். இவர் அவ்வாறே சொன்னார். ரங்கசாமிபிள்ளை ஸ்தம்பித்து ஓவியம்போல் நின்றுவிட்டார்; மன உருக்கத்தால் அவர் கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் உண்டாயிற்று; சற்றுநேரம் வியப்பில் மூழ்கியவராய்ப் பேச இயலாமல் நின்றார். பின்பு, "ஒன்றுக்கும் பற்றுத சிறியேனைப் பொருட்படுத்திப் பழக்கமில்லாதவனாக இருந்தும் இவ்வளவு பாராட்டிய தங்கள் பெருங்கருணைக்கு அடியேன் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? எப்பொழுதும் தங்களை நினைந்துகொண்டேயிருப்பதுதான் என்னுடைய கடமையாகும்" என்று சொல்லிக்கொண்டே இருக்கும்பொழுது, "ஸ்நானத்திற்கும் பூசைக்கும் நேரமாய்விட்டது" என்று இராமசாமிபிள்ளை சொன்னார். ரங்கசாமிபிள்ளை உடனே வண்டியில் இவர்களை ஏறச்செய்துவிட்டு இராமசாமி பிள்ளையைத் தனியே அழைத்து, "அவர்களுக்கு ஆகாராதிகள் சரியாக நடக்கின்றனவா? வேண்டிய சௌகரியங்கள் செய்வித்திருக்கக் கூடுமே! அவற்றை நன்றாகக் கவனிக்கவேண்டும். பரமசிவமே இங்கே எழுந்தருளியதாக

நான் நம்புகிறேன். நான் அவர்களுக்கு ஏதேனும் தக்க மரியாதை செய்யவேண்டுமென்று எண்ணுகிறேன். என்னுடைய சில மாதச் சம்பளங்களை அவர்களுக்கு அர்ப்பணம் செய்யலாமென்பது என் கருத்து. வேறு என்ன செய்யச்சொன்னாலும் செய்யக் காத்திருக் கிறேன். உங்களையன்றி எனக்கு உற்றதுணை வேறு யாருள்ளார்? அவர்களையும் என்னையும் அறிந்தவர்கள் நீங்களே'' என்று கூறினர்.

இராமசாமி பிள்ளை, ''திரவியத்தில் அவர்களுக்குச் சிறிதேனும் விருப்பமில்லை. கொடுத்தாலும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய குறிப்பையறிந்து நான் சாயங்காலம் வந்து தெரிவிக்கிறேன். அதைப்பற்றிச் சிறிதும் நீங்கள் கவலைப்படவேண்டாம்'' என்று சொல்லிவிட்டுப் பிள்ளை யவர்களோடு வீட்டிற்குவந்தனர்.

பூசையும் போசனமும் ஆனபின்பு இராமசாமிபிள்ளை தக்க பொருளளிக்க வேண்டுமென்று ரங்கசாமி பிள்ளை எண்ணியிருப் பதாக இவரிடம் கூறினர். இவர், ''அவர் திருவாவடுதுறைக்கு வருதலொன்றே எனக்கு எல்லாம் தருதற்குச் சமானம்'' என்று சொன்னர். பின்பு ரங்கசாமி பிள்ளை வீட்டிற்கு இராமசாமி பிள்ளை சென்றார். அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரங்க சாமி பிள்ளை, ''ஏதாவது தெரிந்ததா?'' என்று கேட்டனர்.

இராம : அவர்களுக்குப் பொருளில் விருப்பமில்லை. அது விஷ யத்தில் யாதொரு குறைவுமில்லை. அவர்களுக்குள்ள விருப்பம் ஒன்றுதான். அதாவது அவர்களுடைய ஞானகுரியர்கள் எழுந் தருளியிருக்கும் திருவாவடுதுறைமடத்தில் தைமாதத்தில் நிகழும் குருபூஜாவிசேஷத்திற்குத் தாங்கள் வந்து சிறப்பிக்கவேண்டுமென் பதுதான். அங்ஙனம் செய்வதைக்காட்டிலும் திருப்தியளிக்கும் காரியம் அவர்களுக்கு வேறே இல்லை.

ரங்கசாமி பிள்ளை, ''அவர்களுக்கும் குருஸ்தானம் இருக் கிறதா? திருவாவடுதுறைக்கு நான் வரவேண்டுமென்று அவர் களுக்கு விருப்பமிருந்தால் அவ்வாறு செய்வதற்கு என்ன தடை இருக்கிறது? அவர்கள் இருக்கிற இடத்திற்கு நான் செல்வதில் யாதோர் அச்சமும் இல்லை. ஆனாலும் குருபூஜா காலத்தில் ஜனக் கூட்டம் அதிகமாக இருக்கக்கூடுமே! அப்போது போய் வரு வதைக்காட்டிலும் சாதாரணமான காலத்திற்போய் அவர்

களையும் அவர்கள் முகமாக அவர்களுடைய ஆசிரியர்களையும் தரிசித்து வரச் சித்தமாக இருக்கிறேன். தாங்களும் உடன் வரவேண்டும். இந்தச் சமாசாரத்தை அவர்களிடம் தெரிவிக்கலாம். ஆனாலும் இதனால் அவர்களுக்கு என்ன பயன்? என் விஷயத்தில் அவர்கள் செலுத்திய கருணைக்கு நான் கடனாளியாகவல்லவோ இருக்கிறேன்! அதுதான் எனக்கு வருத்தம். நான் வேண்டுமாயின் இப்பொழுதே பிள்ளையவர்களைப் பார்ப்பதற்கு உங்கள் பின்னாலே வருகிறேன்" என்றார். இராமசாமி பிள்ளை, "தாங்கள் வரவேண்டாம். அவர்களையே அழைத்து வருகிறேன்" என்று சொல்லிச் சென்று வண்டியில் பிள்ளையவர்களை அழைத்து வந்தார். ரங்கசாமி பிள்ளை மிக்க மரியாதையோடு இவரை வரவேற்று இருக்கச் செய்து பல உபசார வார்த்தைகளைச் சொல்லிப் பின்பு, "என்னுடைய கடமையை நான் செலுத்தக் கூடாதபடி இராமசாமிபிள்ளையவர்கள் தடுத்துவிட்டார்கள். ஆனாலும் தங்களுடைய கருத்தைப் பூர்த்திசெய்யக் காத்திருக்கிறேன். தங்கள் விஷயத்தில் ஏதேனும் அபசாரம் செய்திருந்தால் பொறுத்தருளவேண்டும். கிருபையிருக்கவேண்டும். மற்றப்படி நான் சொல்லியவற்றை இவர்கள் தெரிவித்திருப்பார்கள்" என்று சொன்னார்.

அப்போது பிள்ளையவர்கள், "குருபூஜா காலத்தில் தாங்கள் வரவேண்டுமென்பதில்லை. தங்களுடைய இஷ்டப்படியே சாதாரணமான காலத்தில் திருவாவடுதுறைக்கு விஜயம் செய்தாலே போதும்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஜாகைக்கு வந்து திருவாவடுதுறைக்குப் புறப்பட்டார்; புறப்பட்டவர் இராமசாமி பிள்ளையைப் பார்த்து, "தம்பிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? எப்படியாவது இவர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும். வரும் சமயத்தை முன்னதாகவே தெரிவிக்கவேண்டும்" என்று சொல்ல, அவர் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

பின்பு திருவாவடுதுறைக்கு இவர் வந்து நிகழ்ந்த செய்திகளையும் ரங்கசாமி பிள்ளை விரைவில் வரக்கூடுமென்பதையும் சுப்பிரமணியதேசிகரிடம் தெரிவித்தார். கேட்ட அவர் அம்பலவாண தேசிகருக்கு இதனை விண்ணப்பஞ் செய்தார். அவர், "ரங்கசாமி பிள்ளை எப்போது வேண்டுமானாலும் வரட்டும்; குருபூஜைக்கு வரவேண்டுமென்பது இல்லை. அவர் மடத்துக்கு வந்து போவதே

நமக்குக் கௌரவம். ஆனல் அவர் வந்தபிறகுதான் இது நிச்சயம்; நான் முற்றும் நம்பவில்லை" என்று கூறினர்.

ரங்கசாமி பிள்ளை மடத்திற்குவந்து சென்றது.

சிலநாள் சென்ற பின்பு விடுமுறைக்காலம் வந்தமையின், "அந்தப் பிரபுவை அழைத்துக்கொண்டு இன்னகாலத்தில் தரிசனத்துக்கு வருகின்றேன்" என்று இராமசாமிபிள்ளையிடமிருந்து இவருக்கு ஒரு கடிதம் வந்தது. இவர் சுப்பிரமணிய தேசிகரிடம் அதைத் தெரிவிக்கவே திருவாவடுதுறையில் அவர் வரவை முன்னிட்டுத் தக்க வசதிகள் அமைக்கப்பட்டன. குறிப்பிட்ட காலத்தில் ரங்கசாமி பிள்ளை வந்தார்; பிள்ளையவர்களை முன்னிட்டுக் கொண்டு பாதகாணிக்கைகளோடும் கையுறைகளோடும் சென்று அம்பலவாணதேசிகரையும் சுப்பிரமணிய தேசிகரையும் முறையே தரிசித்தார்; அவ்விருவருடைய தோற்றத்தையும், அங்கே பலர் படித்துக்கொண்டிருப்பதையும், அன்னதானம் குறைவின்றி நடந்து வருதலையும், பிற சிறப்புக்களையும் கண்டு மகிழ்ந்தார். "இவ்வளவு காலம் இங்கு வராமல் இருந்துவிட்டோமே!" என்ற வருத்தம் அப்பொழுது அவருக்கு உண்டாயிற்று; ஆயினும், "இங்கே வந்ததனல் பலவிஷயங்களைத் தெரிந்துகொண்டோம்" என்ற திருப்தியை அடைந்தார். தலைவர் கொடுக்கும் எதிர்பாராத யொன்றும் பெறாமல் திருநீற்றுப் பிரசாதத்தை மட்டும் பெற்றுப் பிள்ளையவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு இராமசாமி பிள்ளையுடன் தஞ்சைவந்து சேர்ந்தார்.

அப்பால் அம்பலவாண தேசிகருக்குப் பிள்ளையவர்களிடத்து மிக்க மதிப்பும் கருணையும் உண்டாயின. "இவர் இருப்பது மடத்திற்குக் கௌரவமென்று சின்னப்பண்டாரம் சொன்னது சரியே. இவருக்கு என்னதான் செய்விக்கக்கூடாது!" என்று எண்ணிக் காறுபாறு முதலிய மடத்து உத்தியோகஸ்தர்கள் பலரையும் அழைத்து, "இவருக்கு எந்தச்சமயத்தில் எதுவேண்டுமாயினும் குறிப்பறிந்து கொடுக்கவேண்டும்; யாதொரு குறையுமின்றி இவரைப் பாதுகாத்துவர வேண்டும்" என்று கட்டளையிட்டார். *

சுப்பிரமணிய தேசிகர் இவருடைய கௌரவத்தை நன்றாக அறிந்தவராதலின் அதனை அம்பலவாண தேசிகருக்கும் மடத்தி

* இச்செய்திகள் தஞ்சை இராமசாமி பிள்ளையாலும் பிள்ளையவர்களாலும் தெரிந்தன.

லுள்ள பிறருக்கும் எப்படியாவது அறிவிக்க வேண்டுமென்னும் விருப்பமுடையவராக இருந்தார். யாரேனும் தக்க பிரபுக்கள் தரிசனத்தின் பொருட்டு மடத்திற்கு வந்தால் அவர்கள் பிள்ளையவர்களையும் பார்த்துச் செல்வது வழக்கம். அவ்வாறு பிரபுக்களெல்லாம் இவர்பால் மதிப்பு வைத்திருப்பதை அவ்வப்போது சுப்பிரமணிய தேசிகர் அம்பலவாண தேசிகருக்கு அறிவித்து வருவார். அன்றியும் வந்த பிரபுக்களும், "இத்தகைய மகாவித்துவானை ஆதரித்து வருதலும் இவர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்வித்து வருதலும் மடத்திற்கு ஏற்ற தருமங்களேயாகும். இந்த வித்துவானால் மடத்தின் புகழ் மிகுதிப்படும்" என்று தலைவரிடம் சொல்லிப் போவார்கள். இவற்றாலும் அம்பலவாண தேசிகருக்குப் பிள்ளையவர்கள்பால் மதிப்பு அதிகரித்து வந்தது.

* பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி.

அப்பால் ஒரு சமயம், வழுவூருக்கு அருகில் தென்கிழக்கிலுள்ள பாலையூரென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கிற சிவபெருமான் விஷயமாக அவ்வூர் வைத்தியலிங்க உடையாரென்னும் ஒரன்பர் கேட்டுக்கொள்ள இவரால் ஒரு பதிற்றுப்பத்தந்தாதி இயற்றப்பெற்றது. அது, 'பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி' என வழங்கும்.

அந்நூற் செய்யுட்களிற் சில வருமாறு:—

கலிநிலைத்துறை.

"சொல்லத் தக்கது நின்புகழ் அடிமையிற் றுணைந்து
புல்லத் தக்கது நின்கழல் புண்ணிய மிகையால்
வெல்லத் தக்கது மலர்திருப் பாலையூர் விமலா
கொல்லத் தக்கது கூற்றினை நலங்குறிப் பவரே." (நிஅ)

விருத்தம்.

"அடையானை யுரிபோர்த்த பெருமானை யொருமானை
அங்கை யேந்தும்
சடையானை வெஞ்சூலப் படையானை யுலகமெனத்
தக்க யாவும்
உடையானை நெடும்பாலை வனத்தானை யெழுவிடையும்
ஒருங்கு சாய்த்த
விடையானைப் பூசிக்கப் பெற்றவரே நற்றவர்மேன்
மேலுந் தானே." (கூங)

---

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, 2339-2440.

23. கும்பகோண நிகழ்ச்சிகள்.

சாமிநாததேசிகர்.

இவருடைய மாணாக்கர்களாகிய புரசபாக்கம் பொன்னம் பல முதலியாரும், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் குமாரராகிய சாமிநாத தேசிகரும் கும்பகோணம் காலேஜில் ஒருவர் காலத்திற்குப்பின்பு ஒருவர் தமிழ்ப்பண்டிதராக நியமிக்கப்பெற்று வேலை பார்த்துவந்தார்கள். அவர்களுடைய விருப்பத்தின்படி அந்தப்பக்கம் செல்லுங் காலங்களிற் கும்பகோணத்திற் சிலநாள் இவர் இருந்து வருவதுண்டு. அதனால் அங்கே காலேஜில் இங்கிலீஷ் உபாத்தியாயராக இருந்து நாடெங்கும் புகழ்பெற்று விளங்கிய ராவ்பகதூர் தண்டாலம் கோபாலராயரவர்களுடைய பழக்கம் இவருக்கு மிகுதியாக உண்டாயிற்று. நான் அந்தக் காலேஜில் வேலையாக இருந்தபொழுது ராயரவர்கள் இவருடைய கல்வி மிகுதியையும் கம்பீரமான தோற்றத்தையும் ஆற்றலையும்பற்றிச் சொல்லிப் பாராட்டிவிட்டு, "அவர்களுடைய நெற்றி விசாலத்தைக் கண்டபொழுதே சிறந்த அறிவாளியென்பதைக் கண்டுகொள்ளலாம்" என்றும் சொன்னார்கள்.

ஒருசமயம் திருவனந்தபுரம் திவான் மாதவராயரவர்களிடமிருந்து அங்ஙகரிலுள்ள மகாராஜா காலேஜிற்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வேண்டுமென்றும் அவருக்குத் தக்க சௌகரியங்கள் பண்ணிவைக்கக் கூடுமென்றும் கோபாலராயருக்குக் கடிதம் வந்தது. காலேஜில் அப்பொழுது பண்டிதராக இருந்த சாமிநாத தேசிகரை அவர் அழைத்து, "அவ்வேலைக்குத் தக்க பண்டிதர்கள் கிடைப்பார்களா?" என்று கேட்கவே, தேசிகர், "என்னுடைய ஆசிரியராகிய பிள்ளையவர்கள் வந்திருக்கிறார்கள்: அவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன்" என்றார். "அப்படியா? அவர்கள் இங்கே வந்திருக்கிறார்களா?" என்று சொல்லிப் பின்பு ராயரவர்கள் பிள்ளையவர்களைச் சந்தித்து, "மாதவராயரவர்களைப்பற்றித் தங்களுக்குத் தெரியுமே. அவர்கள் இப்பொழுது திருவனந்தபுரத்தில் திவானாக இருக்கிறார்கள். தாங்கள் திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்

டிதர் வேலையை ஒப்புக்கொண்டால் முதலில் மாதவேதனம் ரூ. 100 கொடுப்பார்கள். பின்பு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வைப்பார்கள். எங்களுக்கும் கௌரவமாக இருக்கும். ராஜாங்க வித்துவானுகவும் இருக்கலாம். சமஸ்தானத்திற்கும் கௌரவம் ஏற்படும்'' என்று வற்புறுத்திச் சொன்னார்கள். அப்பொழுது இப் புலவர் பிரான், ''பராதீனமாக இருந்தால் என்னுடைய நோக்கத் திற்கு மிகவும அஸௌகரியமாக இருக்கும். ஏழைகளாக இருக்கும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொண்டும், அவர்களுடன் ஸல் லாபஞ் செய்துகொண்டும், காவேரிஸ்நானமும் சிவதரிசனமும் செய்துகொண்டுமிருப்பதே எனக்குப் பிரியமான காரியமாக இருக் கின்றது. சாதாரண ஜனங்களோடு பழகுதல்தான் இன்பத்தை விளைவிக்கும். திருவாவடுதுறை மடத்தில் எல்லாவிதமான சௌகரி யங்களும் இப்பொழுது கிடைக்கின்றன'' என்று தமக்கு உடன் பாடின்மையைத் தெரிவித்தனர். இவருக்கு வேண்டிய சௌகரி யங்களைப் பண்ணிவைக்கலாமென்றெண்ணி யிருந்த கோபாலராயர் தம் எண்ணத்தை நிறைவேற்றக் கூடவில்லையே யென்று வருத்த முற்றார்; பின்பு, ''தங்களிடம் படித்த மாணக்கர்களுள் சிறந்த கல்விமானுகிய ஒருவரைக் குறிப்பிட்டால் நான் அவரைப் பற்றி எழுதி அனுப்புகிறேன்'' என்றார். இவர், ''இப்பொழுது தங்கள் காலேஜில் உள்ள சாமிநாத தேசிகரையே அனுப்பலாம். அவர் தஞ்சாவூர் அரண்மனையிலும் சென்னைக் கல்விச்சங்கத்திலும் முன்பு தமிழ்ப்பண்டிதராக இருந்த சிவக்கொழுந்து தேசிகரு டைய குமாரர்; என்னிடத்திலும் வாசித்தவர். அவருக்கு அவ் வேலையைச் செய்வித்தால் நன்றுகப் பாடஞ் சொல்லுவார்; எனக்கும் மிகவும் திருப்தியாக இருக்கும்'' என்றார்.

அங்ஙனமே ராயரவர்கள் சாமிநாததேசிகரைப் பற்றித் திரு வாவடுதுறைக்கு எழுதி அந்தக் காலேஜ் தமிழ்ப்பண்டித வேலையை அவருக்குக் கிடைக்கும்படி செய்தார். அதன்பின்பு சி. தியாகராச செட்டியார் கும்பகோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதர் வேலை பார்க்க அமர்த்தப் பெற்றார். அவர் அவ்வேலை பார்க்க ஆரம் பித்தகாலம்: 3-7-1865.

செட்டியார் தமிழ்ப்பண்டிதராக வந்தபின்பு அவர் விருப்பத் தின்படி பிள்ளையவர்கள் அடிக்கடி கும்பகோணம் சென்று சில நாள் இருந்துவிட்டு வருவார்கள். அக்காலங்களில் அங்குள்ள

பலவகையாரும் வந்து வந்து பிள்ளையவர்களுடைய பழக்கத்தால் தமிழ்ச்சுவையில் ஈடுபட்டு இன்புற்றுச் செல்வார்கள்.

கும்பகோண புராணம் இயற்றத் தொடங்கியது.

அக்காலத்திற் கும்பகோணத்தில் தாசில்தாராக இருந்த சிவ குருநாதபிள்ளை யென்பவரும், பல சைவப் பிரபுக்களும் கும்ப கோண புராணத்தை இக்கவிஞர்தலைவரைக் கொண்டு தமிழ்ச் செய்யுளாக இயற்றுவிக்க வேண்டுமென்று எண்ணினர்கள். அவர் களுடையவேண்டுகோளின்படி குரோதன ஷ (1865) இவர் திருவாவடுதுறையிலிருந்து கும்பகோணம் சென்று பேட்டைத் தெருவிலுள்ள திருவாவடுதுறை மடத்தைத் தம்முடைய இருப் பிடமாகக்கொண்டு பரிவாரங்களுடன் இருந்தார். கும்பகோண புராணத்தை வடமொழியிலிருந்து முதலில் தமிழ்வசனமாக மொழி பெயர்த்து வைத்துக் கொண்டார். அவ்வாறு மொழி பெயர்த்தற்கு உதவியாயிருந்தவர்கள் ஸ்ரீ சங்கராசாரியர் மடத்து வித்துவானாகிய மண்டபம் நாராயண சாஸ்திரிகள் முதலியவர்கள். பின்பு புராணத்தை இவர் செய்யுள் நடையாக இயற்ற ஆரம்பித் தார். அப்புராணச் செய்யுட்களை இவர் சொல்ல அப்பொழுதப் பொழுது எழுதிக்கொண்டே வந்தவர் இவர் மாணாக்கருள் ஒருவராகிய திருமங்கலக்குடி சேஷையங்காரென்பவர்.

அந்தப் புராணத்தில் சிறுசிறு பகுதிகள் ஒவ்வொருநாளும் இயற்றப்பட்டு அன்றன்று பிற்பகலில் ஸ்ரீ ஆதி கும்பேசுவர ருடைய ஆலயத்தின் முன் மண்டபத்தில் அரங்கேற்றப்படும். அரங்கேற்றுகையிற் பலர் வந்து கேட்டு இன்புற்றுச் செல்வார்கள்; அங்கே தியாகராச செட்டியாரும் நாடோறும் தவறாமல் வந்து கேட்டு மகிழ்வார். அந்நகரில் நிகழும் விசேஷங்கட்கு வரும் மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் இடையிடையே வந்து கேட்டு இன்புறுவார்கள். சிவகுருநாதபிள்ளையே சபாநாயகராக இருந்து அரங்கேற்றத்தை நடப்பித்து வந்தார்.

அப்பொழுது சிவகுருநாத பிள்ளையுடன் பல உத்தியோகஸ் தர்களும் தினந்தோறும் வந்து கேட்டுச் சிறப்பிப்பாராய்ச் செய்யுட்களின் சுவையை அறிந்து சந்தோஷம் அடைந்து வந்த னர். இங்ஙனம் முயன்ற சிவகுருநாத பிள்ளையின் கௌரவம் நாளுக்குநாள் அதிகரிக்கத் தொடங்கியது.

சிவகுருநாத பிள்ளையின் மனம் வேறுபட்டது.

இப்படி இருக்கையில், பிள்ளையவர்கள்பால் அழுக்காறுள்ள வேறு மதத்தினராகிய ஒருவர், 'சிவகுருநாத பிள்ளையாலேயே இவருக்குக் கௌரவம் உண்டாகிவருகின்றது. அவருடைய ஆதரவை நீக்கிவிட்டால் எல்லாம் ஒய்ந்துவிடும்' என்று தம்முள் நிச்சயஞ்செய்துகொண்டு தனித்த சமயத்திற் சென்று சிவகுருநாத பிள்ளையைப் பார்த்தனர்.

சிவ : இப்பொழுது பிள்ளையவர்கள் அரங்கேற்றும் புராணப் பிரசங்கத்திற்கு நீங்கள் வரவில்லையே. பலபேர்கள் வந்துகேட்டுச் சந்தோஷித்துச் செல்லுகின்றார்கள். நீங்கள்மட்டும் ஏன் வரவில்லை?

வந்தவர் : வேலை மிகுதியால் வர இயலவில்லை. இது சம்பந்தமாகச் சில விஷயங்கள் எனக்குத் தெரிந்தமையால் அவற்றைச் சொல்லிப் போவதற்குத்தான் இப்போது வந்தேன். அவை கவனிக்க வேண்டியவையே.

சிவ : என்ன விஷயம்? சொல்லவேண்டும்.

வந்தவர் : பிள்ளையவர்கள் சிறந்த வித்துவானென்பதற்கும் அவர்களால் இயற்றப்படும் நூல் மிகச்சிறந்ததென்பதற்கும் அதனால் ஊரிலுள்ளவர்கள் சந்தோஷிக்கின்றார்களென்பதற்கும் யாதொரு ஸந்தேகமும் இல்லை. ஆனாலும் இப்பொழுது நான் கேள்விப்பட்ட சிலவற்றைத் தங்களிடத்தில் உண்மையான அன்புடையனதலால் சொல்ல வந்தேன். சொல்லலாமென்றுற் சொல்லுகிறேன்.

சிவ : அவசியம் சொல்லவேண்டும்.

வந்தவர் : ஊரிலுள்ள வர்த்தகர்களும் பிறரும் இந்தப் புராணம் அரங்கேற்றிமுடிந்தவுடன் தாங்கள் மிகுதியாகச் சம்மானம் செய்ய உத்தேசித்திருப்பதாகவும் அதற்காகத் தாங்கள் தங்களைப் பொருள் கேட்கக் கூடுமென்றும் பேசிக்கொள்கிறார்கள். நாடோறும் போய் உட்னிருந்து பிள்ளையவர்களிடம் தாங்கள் அளவிறந்த பிரீதி பாராட்டுவதும் அந்த அபிப்பிராயத்தைப் பெருக்கிவிட்டது. எல்லோரும் தாங்கள் என்ன கேட்பீர்களோ என்று எண்ணி அங்கங்கே கூடிக் கூடிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரஸ்தாபம் நேற்றுக் கலெக்டராபீஸ் சிரஸ்தேதார் வீட்டி

லும் நான் போயிருந்தபொழுது நடந்தது. கோள் விண்ணப்பம் எழுதுவதில் வல்லவர்கள் சிலர் இந்த ஊரில் இருப்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே. எனக்கு அதைப்பற்றி யோசனையாகத் தான் இருக்கிறது. முக்கியமானவர்கள் யாரிடத்திலாவது இதை மேற்போட்டுக் கொள்ளும்படி ஒப்பித்துவிட்டுத் தாங்கள் மெல்ல விலகிவிட்டால் நல்லதென்பது என்னுடைய அபிப்பிராயம். தாங்களும் இதைப்பற்றி நன்றாக யோசிக்கவேண்டும். சில வார்த்தைகளை நான் சொல்லிவிட்டேனேயென்று குற்றமாக நினைக்கக் கூடாது. தங்கள் நன்மைக்காகத்தான் சொன்னேன்.

சிவ குருநாத பிள்ளை, "யோசித்துப் பார்த்தால் நீங்கள் சொல்வது மிகச் சரியென்றே எனக்குப் படுகிறது. நான் யோசியாமல்தான் இத்துறையில் இறங்கி விட்டேன். எதையும் யோசித்துத்தான் செய்யவேண்டுமென்று பெரியவர்கள் சொல்வார்கள். ஏதோ நல்ல விஷயமாயிற்றே என்று என் மனந் துணிந்தது. நீங்கள் இந்த விஷயத்தை எடுத்துச் சொன்னதைக் குறித்து நான் தங்கள்பால் நன்றியறிவுடையவனாக இருக்கிறேன். இனி மேல் ஜாக்கிரதையாகத்தானிருப்பேன். இது சம்பந்தமாக ஏதேனும் காதில் விழுந்தால் உடனே வந்து எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று அவரை அனுப்பிவிட்டார். நிஷ்கபடியாதலால் மனம் வேறுபட்டுச் சிவகுருநாதபிள்ளை, 'யோசியாமற் செய்த இந்தச் செயல் என்ன விபரீதத்தை விளைவித்துவிடுமோ' என்று திகிலடைந்தவராகி மனக்குழப்பமுற்று எப்படியாவது இந்தச் சம்பந்தத்தை இன்றேடே விட்டுவிடவேண்டுமென்று நினைத்துக்கொண்டேயிருந்து ஸ்நானம் செய்து ஆகாரம் செய்யச் சென்றார். மனக்கவலையினால் அவருக்கு ஆகாரம் செல்லவில்லை. ஒருவாறு முடித்துக்கொண்டு கச்சேரிக்குப் போனார். அவருக்கு ஒரு வேலையிலும் புத்தி செல்லவில்லை. கச்சேரிவேலையானவுடன் வழக்கம்போல் அரங்கேற்றம் நடைபெறுகின்ற இடத்திற்குப் போகாமல் வீட்டிற்கே வந்துவிட்டார்; வந்து சாய்வு நாற்காலியிற் சாய்ந்து யோசித்துக்கொண்டே இருந்தனர். பிரசங்கம் கேட்பதற்கு வழக்கப்படி போகக்கூடுமேயென்று மாட்டை யவிழ்த்துவிடாமல் வண்டிக்காரன் காத்துக்கொண்டிருந்தான்; அதை வேலைக்காரன் வந்துசொல்ல அவர், "இப்பொழுது போகவில்லை" என்று சொல்லிவிட்டார்.

கோயிலிற் புராணப் பிரசங்கம் ஆரம்பிக்க எண்ணிய பிள்ளையவர்கள் சிவகுருநாத பிள்ளையின் வரவை நெடுநேரம் எதிர்பார்த்தும் வாராமையால் அன்று நடத்தவேண்டிய ஒரு பகுதியை நடத்தி முடித்தார். விசாரித்ததில் ஏதோ அஸௌக்கியமாக இருத்தலால் சிவகுருநாத பிள்ளை வரவில்லை என்று ஒரு செய்தி இவர் காதுக்கு எட்டியது.

அப்பால் மறுநாட் காலையில் இவர் அவரைப் பார்ப்பதற்கு அவருடைய வீட்டிற்குச் சென்றார்; சென்றவர் தாமே ஒரு நாற்காலியிலமர்ந்தார். கண்ட அவர் எப்பொழுதும்போல முகமலர்ச்சியோடு இவரை நோக்குதலின்றித் தலைப்பொட்டைக் கையாற் பிடித்துக்கொண்டு யோசித்த வண்ணமாக இருந்தார். மிகுதியான வேலையுள்ளவர்போலப் பின்புகையை எடுத்துவிட்டு அங்கேயிருந்த ஏதோ ஒரு புத்தகத்தை அடிக்கடி புரட்டிப் பார்த்துக் கொண்டும் கடிதங்களை எழுதி எழுதிக் கிழித்துக் கிழித்து அயலில் வைத்திருந்த பெட்டியில் எறிந்துகொண்டும் இருந்தார்; முகங் கொடுக்கவுமில்லை; முதல்நாள் வாராமைக்குக் காரணம் சொல்லவுமில்லை.

அந்த நிலையைக்கண்ட இவர், 'இனி நாம் பேசாமல் இருப்பது முறையன்று' என்றெண்ணி, "உங்களுக்கு என்ன அசௌகரியம்? நேற்று மாலையில் அரங்கேற்றுமிடத்திற்கு நீங்கள் வராதிருந்தது ஒரு குறைவாகவே இருந்தது. நெடுநேரம் பார்த்தும் நீங்கள் வராமையால் ஆரம்பித்து முடித்துவிட்டேன். தேகஸ்திதி உங்களுக்கு ஸௌக்கியமாக இல்லையென்று கேள்வியுற்றேன். இப்பொழுது என்ன நிலையிலிருக்கிறதென்று பார்ப்பதற்கு வந்தேன்" என்றார்.

சிவகுருநாத பிள்ளை, "நான் உங்களிடம் சில வார்த்தைகள் சொல்ல எண்ணிக் கொண்டிருக்கையில் நீங்களே வந்துவிட்டீர்கள். நான் சொல்வதைப் பொறுமையாகக் கேட்கவேண்டும். நான் மற்றவர்களைப்போலக் கைளம் உடையவனல்லன். எலுமிச்சம் பழங் கூட யாராவது கொண்டுவந்துகொடுத்தால் வாங்கமாட்டேன். ஏதோ நல்ல காரியமென்று சிலபேருடைய போதனையின்மேல் இத்துறையில் இறங்கினேன். நீங்கள் ஏதோ என்னுடைய முயற்சியினால்தான் புராணம் நடைபெறுகிறதென்று பல இடங்களிற் பிரஸ்தாபிப்பதாகவும் சிலர் என்னுடைய நிர்ப்பந்தத்திற்காகப் புரா

ணத்திற்கு நன்கொடையளிக்கப் போவதாகவும் நான் கேள்வியுற் றேன். எனக்கு அது வருத்தத்தைத் தந்தது. அவர்கள் பிரஸ் தாபித்தாலும் நான் இந்த விஷயத்தில் அதிக முயற்சியுடையவனு யிருக்கிறேனென்று நீங்கள் சொல்லலாமா? நான் சிலபேரை நிர்ப்பந்திப்பதாக மேலதிகாரிகள் அறிவார்களாயின் என் உத்தி யோக நிலைக்கு அது பரம விரோதமல்லவா? நான் ஒழுங்காக இருந்து காலங்கழித்துப் பென்ஷன் வாங்கவேண்டியவனல்லவா? என் சம்பந்தத்தை இன்றுமுதல் நிறுத்திக்கொள்ளுகிறேன். வேறு யாரைக் கொண்டேனும் தாங்கள் தக்க சௌகரியங்கள் செய்வித்துக்கொள்ளுங்கள். இனி என்னைப்பற்றிய பிரஸ்தாபத் தையே செய்யவேண்டாம்" என்று அதிகப் படபடப்பாகச் சொன்னார். பிள்ளையவர்கள் ஏதாவது சமாதானம் சொல்லக் கூடுமென்பதை அவர் எதிர் பாராமலே பேசினார். கேட்ட பிள்ளையவர்கள் பரம சாந்தமூர்த்தியாக இருந்தாலும் மிகுந்த குற்றம் செய்யினும் குணமெனக்கொண்டு வாழ்பவர்களாகவிருந் தாலும் நிந்தகளுள் தீத்தோன்றியதுபோல மிக்க கோபமுற்ற வர்களாகி, 'இவருடைய சம்பந்தத்தை ஏன் யோசியாமல் நாம் பெற்றோம்! இந்த வார்த்தைகளைக் கேட்கும்படி நேரிட்டது முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே!' என்று நினைந்து, "ஐயா! நான் உங்களையே நம்பிக்கொண்டு இவ்வூருக்கு வர வில்லை. அந்த வழக்கமும் எனக்கு இதுவரையிற் கிடையாது. அன்புள்ளவர்கள் எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் அவர் களை மதிப்பேனேயன்றி, அன்பில்லாதவர்கள் குபேர சம்பத்தை உடையவர்களாக இருந்தாலும் மதியேன். உங்களாலே நான் கௌரவத்தையடைய வேண்டுமென்பதில்லை. இயல்பாகவே இருக்கிற கௌரவம் எனக்குப் போதுமானது. உங்களைக்காட் டிலும் எவ்வளவோ மேலான அதிகாரத்தில் இருப்பவர்கள்கூட என்னிடத்தில் அன்பு பாராட்டி வருகிறார்கள். என்னை இத் தமிழ்நாடுமுற்றும் அறியுமன்றே? உங்கள் பெயரைச் சொல் லித்தான் நான் ஜீவிக்கவேண்டும்? உங்களுடைய தயைதான் எனக்குவேண்டும்? என்னை நீங்கள் சிறிதும் அறியவில்லையே. நீங் கள் இனி இதில் சம்பந்தப்படுவதாயிருந்தாலும் நான் விரும்பேன். உங்களுடைய சம்பந்தத்தை இன்றே இப்பொழுதே அடியோடே விட்டுவிட்டேன்" என்று சொல்லிவிட்டு உடனே எழுந்து

கூடவந்தவர்களோடும் புறப்பட்டுத் தம்முடைய விடுதிக்கு வந்து விட்டார். அன்றைத் தினம் இவருக்கு வந்த கோபத்தையும், நடந்த விஷயத்தையும் உடனிருந்த சில பெரியோர்கள் சொல்லிப் பிற்காலத்தில் ஆச்சரியப்பட்டதை நான் கண்டிருக்கிறேன்.

அப்பால் சிவகுருநாத பிள்ளை இவர் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு அச்சங்கொண்டு இவருடைய கோபம் தமக்கு என்ன தீங்கை விளைவிக்குமோ என்றெண்ணித் தமக்கு நம்பிக்கையுள்ள ஒருவரை அழைத்து, "நீர் திருவாவடுதுறைக்கு இப்பொழுதே சென்று சுப்பிரமணிய தேசிகரவர்களிடம் அவர்களாதீன வித்துவானுகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை, என்னிடத்தில் மிகுந்த கோபம் உடையவராயிருக்கிறரென்றும் மரியாதையாக நடந்து கொள்ளவில்லை யென்றும் என்னைப் பார்த்துத் தாறுமாறுக அவர் பேசிவிட்டாரென்றும் என்னிடம் மரியாதையாக நடக்கும் படிக்கும் கோபமில்லாமலிருக்கும்படிக்கும் அவருக்குக் கட்டளை யிடவேண்டுமென்றும் சொல்லி வரவேண்டும்" என்று சொல்லி அனுப்பினர். அவர் அவ்வண்ணமே சென்று தெரிவித்தார். உடனே ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், "எதிர்பாராத விபரீதச்செயல் ஏதோ நடந்திருக்கிறதே. பிள்ளையவர்கள் மிகவும்ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுவார்களே ; எப்படியேனும் சமாதானம் செய்விக்கவேண்டும்" என்று எண்ணி, ஆதீன வித்துவான் தாண்டவராயத் தம்பிரானிடத்திற் படித்தவரும் சொல்வன்மையுடையவரும் ஆகிய விசுவலிங்கத் தம்பிரானென்பவரை அழைத்து, "சிவகுருநாத பிள்ளைக்கும் பிள்ளையவர்களுக்கும் ஏதோ மனவருத்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை நீக்கிவிட்டு வரவேண்டும்" என்று சொல்லி அனுப்பினர். அவர் சிவகுருநாத பிள்ளை வீட்டிற்கு வந்து அவரைக் கண்டார்.

கண்டவுடன் சிவகுருநாத பிள்ளை, "உங்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்னிடத்தில் மரியாதையின்றி நடந்துகொண்டார்; அளவுக்குமேற் பேசினர். என்னுடைய கௌரவத்தை அவர் அறிந்து கொள்ளவில்லை. அவரைக் கண்டிக்கவேண்டும். இவ்வூரில் இருக்கும்வரையில் என்னிடத்தில் மரியாதையுடன் நடந்துகொள்ளும் படி சொல்லிவிட்டுப் போகவேண்டும். அவர் உங்களுடைய ஆதீன வித்துவானல்லவா ?" என்றார்.

விசுவலிங்கத் தம்பிரான், "நிகழ்ந்தவற்றையெல்லாம் சந்நிதானம் கட்டளையிடத் தெரிந்துகொண்டேன். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை நீங்கள் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லையென்று எனக்குத் தோற்றுகின்றது. அவர்கள் சாமானிய மானவர்களா? பழைய காலத்தில் இருந்த கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியவர்களைப் போன்றவர்கள். அவர்கள் இருப்பதால் மடத்திற்குக் கௌரவமேயன்றி மடத்திலிருப்பதால் தனியாக அவர்களுக்கு ஒரு கௌரவமும் ஏற்படவில்லை. மடத்து வேலைக்காரர்களாகவாவது மடத்துக்கு அடங்கியவர்களாகவாவது அவர்களை நினைக்கக்கூடாது. அவர்கள் அவதார புருஷர்கள்; ஏதோ பக்தி விசேஷத்தால் மடத்திற்கு வந்து பாடஞ் சொல்லிக் கொடுக்கிறார்களே யன்றி மடத்தின் அதிகாரத்திற்குள் அடங்கி அவர்கள் இருக்கவில்லை. மடத்திலிருந்து அவர்களுக்குச் சம்பளம் யாதும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் மட்டும் கவனிக்கப்பெற்று வருகின்றன. நாங்கள் அவர்களைக் கண்டிக்க இயலாது. ஒருபொழுதும் நடவாத விஷயம் இது. அவர்கள் மரியாதை ஒன்றுக்கே கட்டுப்பட்டவர்கள். பெரிய அதிகாரிகளெல்லாம் அவர்களிடம் மரியாதையாக இருப்பார்கள். தமிழ் நாடு முழுவதிலும் அவர்களுக்குச் செல்வாக்குண்டு. எல்லோரும் தமிழ்த் தெய்வமாக அவர்களை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; எல்லோரிடத்திலும் மிகவும் மரியாதையாக அவர்கள் நடப்பார்கள். அவர்களுக்கு மனவருத்தமுண்டாகும்படி தாங்களே நடந்திருக்கலாமென்று தோற்றுகிறது" என்று பின்னும் பிள்ளையவர்களுடைய பெருமையைச் சொல்லி வருங்கையில், சிவகுருநாத பிள்ளை, 'பிள்ளையவர்களால் நமக்கு என்ன என்ன விபரீதங்கள் உண்டாகுமோ' என்று அச்சத்தையும் முன்னையினும் அதிகக் கவலையையும் அடைந்து, "ஒன்றையும் கவனியாமல் அவர்களிடத்தில் தாறுமாறுகப் பேசிவிட்டேனே! என்னுடைய கால வித்தியாசத்தால் இந்தச் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டேனே" என்று கையை மேஜையில் ஓங்கி அடித்தார்; கைகளைப் பிசைந்தார். பின்பு விசுவலிங்கத் தம்பிரானைப் பார்த்து, "ஸ்வாமீ, பிள்ளையவர்களிடம் ஒன்றும் சொல்லவேண்டாம்: என்னிடம் வித்தியாசமான எண்ணங் கொள்ளாமல் அன்போடு இருக்கும்படி மட்டும் எப்படியாவது செய்யவேண்டும். நானும்

ஜாக்கிரதையாகவும் மரியாதையாகவும் இனி நடந்துகொள்வேன்" என்றார்.

விசுவலிங்கத் தம்பிரான், "வேண்டுமாயின் அது செய்ய முடியும். அவர்களும் சம்மதிப்பார்கள். அதைப்பற்றி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். அவர்கள் யாருடைய குற்றத்தையும் உடனே மறந்துவிடுவார்கள்; நீங்கள் மாத்திரம் அவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். நான் சொல்லவேண்டுவது அதுதான்; நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் பிள்ளையவர்களிடம் வந்தார். பிள்ளையவர்கள் எழுந்து அவரை இருக்கச் சொல்லி வந்தனம் செய்து, "இவ்வூருக்கு எழுந்தருளியது என்ன விசேஷம்? புராணம் நடந்து வருகின்றது. கூட இருந்து நடத்த வேண்டும்" என்றபொழுது விசுவலிங்கத் தம்பிரான் நிகழ்ந்தவற்றைச்சொல்லித் தாசில்தாரிடம் வருத்தமில்லாமல் இருக்கவேண்டுமென்று தெரிவித்தனர். இவர், "அவரிடத்துப் பிரீதியுள்ளவனுகத்தான் இருந்தேன்: இருக்கிறேன்; இருப்பேன். அவராகவே தம்மை *இன்னுரென்று மிக எளிதில் தெரிவித்துவிட்டார். நமச்சிவாய மூர்த்தியின் திருவருளாலும் சந்நிதானங்களின் திருவருளாலும் அங்குத்தியின் ஆதரவாலும் எனக்கு என்ன குறைவுண்டாகும்? எல்லாம் நன்கு நிறைவேறி வருகின்றனவென்று சந்நிதானத்திற்கு விண்ணப்பம் செய்யவேண்டும்" என்று சொல்லியனுப்பினர். விசுவலிங்கத் தம்பிரான் திருவாவடுதுறை சென்று சுப்பிரமணிய தேசிகரிடம் நிகழ்ந்தவற்றைச் சொல்ல அவர் ஸந்தோஷம் அடைந்தனர்.

மேலே புராண அரங்கேற்றம் நடைபெறுதற்கு வேண்டிய முயற்சிகள் சில நண்பர்களாற் செய்விக்கப்பெற்றன. அவர்கள், சில பிரபுக்கள் உதவிசெய்ய நிச்சயித்திருக்கிறார்களென்றும் அவர்களை ஒருமுறை சென்று பார்த்துவந்தால் நலமாக இருக்குமென்றும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இசைந்து சிலரிடம் இவர் சென்றபொழுது அவர்களுட் சிலர் தமிழருமையறியாதவர்களாதலின் வாக்களித்தபடி செய்யவில்லை; இவர் தங்களைப் பார்க்க வந்தாரென்று பலரிடம் கூறிவந்தார்களேயன்றி வேறொன்றும் உதவிசெய்ய அவர்கள் முன் வாராமையால், 'அத்

*இன்னுரென்பதற்குப் பகைவரென்னும் பொருளும் இங்கே கொள்ள வேண்டும்.

தகையவர்கள்பால் இனிச் செல்லலாகாது என்று இவர் உறுதி பூண்டனர். அதனால் இவருக்கு மனவருத்தமுமுண்டாயிற்று; உண்டாகவே யாதொரு முயற்சியும்செய்யாமல் திருவருளையே சிந்தித்துக்கொண்டு சும்மா இருந்தனர்.

அப்படியிருக்கையில், இதனைக் கேள்விபுற்ற வேறு தக்க கனவான்கள் * சிலர் இவரிடம் வலியவந்து, "நீங்கள் இந்த விஷயத்திற் சிறிதேனும் கவலையடையவேண்டாம். வழக்கம்போலவே அரங்கேற்றம் நடைபெறவேண்டும்" என்று கூறித் தம்முடைய நண்பர்களிடத்தும் சொல்லி இவருக்கு வேண்டிய சௌகரியங்களை அமைக்கச்செய்து புராணம் அரங்கேற்றி முடியும் வரையில் ஆதரித்து வந்தார்கள். புராணப்பிரசங்கம் செவ்வனே நடைபெற்று வந்தது.

அந்தப் புராணம் முதலில் சிவகுருநாத பிள்ளையின் வேண்டுகோளின்படி தொடங்கப்பெற்றதாதலின் புராணம் செய்வித்தோரைக் குறிக்கும் செய்யுளில் அவர் பெயரை இப்புலவர்பிரான் அடியில் வருமாறு அமைத்திருந்தார்:

விருத்தம்.

"சீர்பூத்த நடுநாட்டிற் றிகழுமஞ்சை நகர்வாழ்
சிவஞானச் செல்வனமச் சிவாயமுகின் மைந்தன்
பார்பூத்த மன்னரிரு கண்மணியிற் பொலிவோன்
பலகலைதேர்ந் தவனுட்டிற் கியனீதி யுடையோன்
வர்பூத்த மயற்பரமங் கையரிரக்க மில்லான்
எனவுள்ளான் றருமம்வளர்த் தெழுமேழிக் கொடியான்
கார்பூத்த கொடைத்தடக்கைப் பேரதிகா ரஞ்செய்
கனதனவான் கருதுசிவ குருநாத வள்ளல்"

(ஏட்டுச்சுவடியிலிருந்த பழைய பாட்டு)

வேறு.

"சதுமுகன் முதலோர் போற்றுந் தம்பிரான் கும்ப கோண
முதுவட மொழிப்பு ராண முழுமையு மொழிபெ யர்த்துக்
கதுமெனத் தமிழாற் பாடித் தருகெனக் கனிந்து கேட்ப
அதுகடைப் பிடித்தவ் வாறே யறைதர லுற்றேன் மன்னே."

(தடநீதைப்புராணம், பாயிரம், உக.)

---

* இவர்கள் பேட்டைத் தெருவிலிருந்த கோபு நடலஞ் செட்டியார், கோபு சுப்பராய செட்டியார், பஞ்சநத செட்டியார், மூக்குத்தெருக் கந்தப்ப செட்டியார் முதலியோர்.

அவர் பின்பு மனவேறுபாட்டால் தம்முடைய தொடர்பு எவ்வகையிலும் இருத்தலே கூடாதென்று வேண்டிக்கொண்டமையின், அவ்விரண்டனுள் முதற் செய்யுளை மாற்றி வேறு செய்யுளொன்று இயற்றிச் சேர்க்கப்பட்டது. அதுவே அச்சுப் பிரதியிற் காணப்படும். "சீர்பூத்த" என்னும் பழைய செய்யுள் ஏட்டுச் சுவடியில் எழுதி அடிக்கப்பட்டிருந்தது; பின்பு அமைக்கப்பட்ட செய்யுள் வருமாறு:

"அத்தி சூழ்வைப் பவாவுங் குடந்தையார்
பத்தி யேயுரு வாகிய பண்பினர்
தித்தி யாநின்ற செஞ்சொற் பெருமையார்
முத்தி வேட்கு முதற்பெருஞ் சைவர்கள்."

(குடந்தைப்புராணம், பாயிரம், உஅ.)

முதலில் இயற்றப்பட்ட சிறப்புப்பாயிரச் செய்யுளிலும் சிவகுருநாத பிள்ளையின்பெயர் அமைக்கப்பட்டிருந்தது.

"நீதியுரு வமைந்தசிவ குருநாத மகிபனரு ணிரம்பு மேனிப்
பாதியிறை கும்பகோ ணப்புரா ணந்தமிழாற் பாடு கென்ன
ஓதியுணர் பவர்விரும்பப் பாடினனே சிராமலைவாழ் வுடையா னன்ன
மாதியல்பா தியனருள்சான் மீனுட்சி சுந்தரநா வலவ ரேறே"

என்ற அச்செய்யுளின் முதலடிமட்டும் முற்கூறிய காரணத்தால், "நீதியுருவமைந்த சிவ சமயத்தார் பலருமரு ணிரம்பு மேனி" என மாற்றி அமைக்கப்பட்டது.

கா. சபாபதிமுதலியார் வந்தது.

அப்போது ஸ்ரீ லைதுஸ்நானத்திற்குக் குடும்பத்துடன் சென்றிருந்த காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் மீண்டுவருகையில் கும்பகோணத்தில் இவர் புராணம் அரங்கேற்றி வருதலைத் தெரிந்து அங்கேவந்தார். இவர் அவருக்குத் தக்க விடுதியமைத்துச் சிலதினம் இருந்து செல்லும்படி கேட்டுக்கொண்டு வேண்டிய சௌகரியங்களைச் செய்துவைத்தார். அவர் சிலநாள் அங்கே இருந்து இவர் புராணம் அரங்கேற்றுகையில் இவருடைய பிரசங்கத்தைக் கேட்டு இன்புற்றார். அவர் காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம் முதலிய நூல்களை வாசித்தறிந்தவராதலின் அந்நூல்களை இயற்றியவர்களுடைய ஆசாரிய பீடமாகிய திருவாவடுதுறை ஆதீனமடத்துக்குச் சென்று குருமூர்த்திகளைத்

தரிசனம் செய்யவிரும்பினர். அதுதெரிந்த இவர் அவரையும் உடன்வந்தவர்களையும் திருவாவடுதுறை மடத்துக்கு அழைத்துச் சென்றார்; இரண்டு குருமூர்த்திகளையும் தரிசனம் செய்வித்தார்; சபாபதி முதலியாருடைய பெருமைகளைத் தலைவர்களுடைய முன்னிலையில் எடுத்துப் பாராட்டி மிக்கமரியாதையோடு நடந்துவந்தார். தாண்டவராயத் தம்பிரானவர்களாலும் சபாபதி முதலியாரைப்பற்றிச் சுப்பிரமணிய தேசிகர் முன்னரே அறிந்திருந்தாராதலின் அவரை அன்போடு விசாரித்துத் தக்க ஸம்மானங்களைச் செய்வித்தனுப்பினர்.

பிள்ளையவர்கள் அவரிடம் மரியாதையோடு நடந்து கொண்டதைப் பற்றிப் பிற்காலத்திற் சுப்பிரமணிய தேசிகர், "பிள்ளையவர்களுக்கு மேற்பட்ட தமிழ்வித்துவான்கள் இல்லையென்றும் இவர்களுக்கே எல்லோரும் மரியாதைசெய்ய வேண்டுமென்றும் எண்ணியிருந்தோம். காஞ்சீபுரம் சபாபதி முதலியார் இங்கே வந்திருந்தபொழுது அவரைத் தம் வித்தியாகுருவென்று சொல்லி இவர்கள் மிகப் பாராட்டினர்கள். அன்றியும் அவருக்கே முதல் இடத்தைக் கொடுத்துத் தாம் அப்பால் இருந்தார்கள். இவர்களுடைய செயலைப் பார்க்கையில் நமக்கு வியப்பும் இன்பமும் உண்டாயின. அவரிடத்துச் சில நூல்களை இவர்கள் கேட்டிருத்தல் கூடும். அதற்காக இவர்கள் பாராட்டிய நன்றியறிவின் திறம் இவர்களுடைய உயர்ந்த குணத்தைப் புலப்படுத்தியது. இவ்வாறு இக்காலத்தில் யார் இருக்கின்றார்கள்?" என்று ஒருமுறை எங்களிடம் சொன்னதுண்டு.

கோமளவல்லித் தாயார் பிள்ளைப்பருவத்தைப் பாராட்டிப் பாடியது.

இவர் கும்பகோண புராணம் அரங்கேற்றி வருகையில், சார்ங்கபாணிப் பெருமாள் கோயில் தர்மகர்த்தாவாக விருந்த ஸ்ரீனிவாஸ பாட்ராச்சாரியாரென்பவருடைய விருப்பத்தின்படி அப்புராணத்தில் ஆராவமுதப் படலத்தில் ஸ்ரீ கோமளவல்லித் தாயாருடைய அவதாரத்தைச் சொல்லுகையிற் பத்துப் பருவங்களையும் பத்துப்பாடல்களில் அமைத்து இனிமை பயப்பப் பாடியுள்ளார். அவை அப்படலத்தில் உசு-ஆவது முதல் ஊரு-ஆவது வரையுள்ள செய்யுட்களாக அமைந்துள்ளன. அவை வருமாறு :

" பலகதிர் விரிக்கும் பகன்மூன மலரும்
பங்கயத் தவிசென நெடியோன்
நலநிற மமர்ந்து கணக்கில்பல் லுயிர்க்கும்
நாடுகோப் பியற்றிடு பவட்கு
நிலமளந் தறியாப் பெருந்தவ முனிவன்
நிறைபெருங் கருணையிற் சேர்த்த
வலனுயர் தெய்வம் பலவுணர் தரக்கூய்
வயங்குகாப் பியற்றினன் மாதோ. "

[நிறம் - மார்பு; முனிவன் - ஏமருஷி.]

" பதியெனக் காளேன் வயினுற்று வந்தும்
பயந்தவ னென்றுளங் கொளாது
மதிவிருப் பமைந்து புவிமக ளேயம்
மாயனே மணுளனுக் கொண்டாய்
திதியுனே நோக்கே னெனத்தலை யசைக்கும்
செய்கையிற் கோமள வல்லி
துதிமுக நிமிர்த்துச் சென்னிமற் றசைத்துத்
தூயசெங் கீரையா டினளே. "

" பெற்றதாய் செம்பொற் றுமரை யாகப்
பிறங்குற வளர்க்குந்தா யெல்லாம்
கற்றமா முனிகைத் தாமரை யாகக்
கலந்தருள் கோமள வல்லி
குற்றமோ விதய தாமரை மலர்ந்து
குவலயத் துயிரெலாந் தழையப்
பொற்றதா லோதா லென்றிட வுவந்து
பொற்றிருத் தொட்டின்மே வினளே. "

[பொற்ற - பொலிவுபெற்ற.]

' அறிதுயி லராமே லமருமெம் பெருமான்
அடிமலர் வருடல்செய் யாது
பொறியறப் பிரிந்த செங்கைகா ளும்மைப்
புடைத்தன்றி விடேனென முயன்று
முறிவறப் புடைக்குஞ் செயலென வகங்கை
முகிழ்த்தொன்ற னேடொன்று தாக்கச்
செறிகருங் கூந்தற் கோமள வல்லி
திகழ்ந்துசப் பாணிகொட் டினளே. "

" மூடங்கலின் முத்த மதன்றழல் குளிக்கும்
முகின்முத்த மிடித்தழன் மூழுகும்
மடங்கலில் யானைக் கோட்டுறு முத்தம்
மற்றதன் கட்டழ லழுந்தும்
உடங்கிவை யன்னுய் வெப்பமுண் மையினுல்
வேண்டிலோ முனதுசெம் பவளத்
தடங்கரு முத்தந் தாவென முத்தம்
அளித்தனள் கோமள வல்லி."

[மூடங்கல் - மூங்கில்.]

" வருகதெள் ளமுதே வருகசெங் கரும்பே
வருகசெந் தாமரை மகளே
வருகபொற் கொம்பே சிறுசிலம் பாதி
மலரடி யிடைக்கல கலென
வருகவற் புதமே யெங்குலக் கொழுந்தே
வருகபே ரானந்த வாழ்வே
வருகசித் திரமே யென்றுப சரிப்ப
வருவள்பூங் கோமள வல்லி."

*" மூன்னீ யுதித்த விடத்திவ ளுதித்தாள்
முயற்கறை சிறிதுமில் லாதாள்
நன்னர்நீ யிந்தத் தலத்தினே யடைந்தால்
நைதலற் றுயர்வது சரதம்
உன்னரும் விடவா யாயிர மமைந்த
உரகமற் றிவண்மொழி கேட்கும்
மன்னவம் புலியே வருகென வழைப்ப
மகிழ்ந்தனள் கோமள வல்லி."

" மலர்செழுங் கரந்தா மரையெனக் கருதி
வந்துவீழ் பலகருஞ் சுரும்பர்
புலர்தலி லமீதன் றெனத்தெளிந் தெழுந்து
போதல்போ லொன்றன்பி னொன்று

---

*இச்செய்யுளில் ' மூன்னீ.....உதித்தாள் ' என்றதனுல் சாமமும், ' முயற்கறை சிறிதுமில்லாதாள் ' என்றதனுற்பேதமும், ' நன்னர்நீ..... சரதம் ' என்றதனுல் தானமும், ' உன்னரும்.....கேட்கும் ' என்றதனுல் தண்டமும் ஒருங்கே குறிப்பிக்கப்பட்டுள்ளன. பிள்ளைத்தமிழ்களில் அம் புலிப் பருவத்துக்குரிய செய்யுட்கள் பத்தில் அமைக்கப்பெறும் இவ் வரிய செய்திகளை இச்செய்யுளொன்றிலேயே அமைத்த திறன் மிகப் பாராட்டற்பாலது.

பலர்புகழ் நீல மணியிழைத் தனவே
பற்பல தொடர்ந்தெழ வினமென்
றலர்விழிச் சுரும்புந் தொடரவம் மனைதொட்
டாடினள் கோமள வல்லி."

"கயல்விழிக் கயலைச் சைவல நறிய
கருங்குழ லாயசை வலத்தை
அயல்வரால் கணைக்கா லாகிய வராலை
அங்கொடி மருங்குனுண் கொடியை
இயல்பல கமல முகமுத லாக
இயைபல கமலத்தை நட்க
உயலுற வந்த கோமள வல்லி
உவந்துநீ ராடினள் பொன்னி."

"செய்யதா மரைமே னெடியவ னிறமேற்
செறிந்தமர் தருதிறம் விளங்க
ஐயசெம் மணியா னீலவொண் மணியால்
ஆய்வெவ்வே றுய்ப்பொலி பலகை
எய்யநன் கேறி யிருளீர்ப் பல்லோர்
இருபுறம் வடங்கடொட் டாட்டத்
தையலங் கொழுந்து கோமள வல்லி
தவாவொளி யூசலா டினளே."

[எய்ய - பலரும் அறிய.]

ஒரு சமயோசிதச் செய்யுள்.

அக்காலத்தில் சைவ வைணவ சமயத்தவர்களாகிய இரு வகையாரும் மிகுந்த அன்பு பாராட்டி இவரை ஆதரித்து வந்தார்கள். இரு திறத்தாருடைய மனத்திலும் வேறுபாடு தோற்றுத படி அவ்வக்காலத்திற்குத் தக்கவண்ணம் இவர் நடந்துவந்தார். ஒருநாள் அப்புராணச் செய்யுட்கள் செய்யுங்காலத்தில் மேற்கூறிய இருதிறத்தார்களும் இருந்து ஒவ்வொரு செய்யுளும் முடிந்தவுடன் கேட்டு ஆனந்தித்துக்கொண்டு வந்தார்கள். அச்சமயம் கும்பேசு வரரையும் சார்ங்கபாணிப் பெருமாளையும் பற்றிச் சொல்லவேண்டிய தருணத்தில் இவர் சிறிதும் கவலைபின்றி, 'கும்பேசுவரரையும் ஆராவமுதப் பெருமாளையும் அடியார்கள் தந்தை தாயென்று போற்றுவார்களாயின் பலவகைப் போகங்களையும் நுகர்ந்து சிவலோக வாழ்வைப் பெறுவார்கள்' என்னும் பொருளமைய,

விருத்தம்.

"எண்ணிய கும்ப லிங்கநா யகரை
இலங்குமா ராவமு தரைச்சீர்
நண்ணிய சைவர் யாவருங் கண்டு
நாடொறுந் தந்தைதா யென்றே
கண்ணிய சிறப்பிற் போற்றிடு வாரேற்
கருதுபல் போகமுந் துய்த்துப்
புண்ணிய மிகுந்த பெருஞ்சிவ லோகம்
புக்குவாழ்ந் தமர்வது சரதம்"

(ஆராவமுதப். ஏ0.)

என்ற செய்யுளைச் சொல்லி முடிக்கவே இருதிறத்தாருங் கேட்டு ஒருவரை ஒருவர் மெல்ல நோக்கிச் சந்தோஷம் அடைந்தனர். நுண்ணிய அறிவுள்ள சைவரிற் சிலர் இவருடைய புத்திசாதுரியத்தை மெச்சினர்.

செய்யுட்களை விரைவிற் பாடியது.

புராணம் அரங்கேற்றுங் காலத்துட் சில நாட்களில் மாலையில் அரங்கேற்றவேண்டிய செய்யுட்களைக் காலையிற் பாடி எழுதுவிப்பது வழக்கம். ஒருநாட் காலையில் அன்பர்கள் சிலர் வந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தமையால் செய்யுட்கள் செய்யப்படவில்லை. அப்பாற் பகற் போசனத்தின் பின்பு அயர்ச்சி மிகுதியால் இவர் நித்திரைசெய்தார். மாணாக்கர் முதலியோர், 'இன்று மாலையில் அரங்கேற்றுவதற்குச் செய்யுட்கள் செய்யப்படவில்லையே; எழுந்தால் ஏன் ஞாபகப்படுத்தவில்லை யென்று சேஷையங்காரைக் கோபித்துக்கொள்வார்களே' என் றெண்ணி அச்சத்தோடு இருந்தார்கள். அப்போது இவர் எழுந்திருந்து தாகசாந்தி செய்துகொண்டார்; பிறகு அங்கே வந்த சிலரோடு யாதொரு கவலையுமின்றிப் பேசிக்கொண்டே இருந்தார். சேஷையங்கார் வந்து நின்றார். இவர், "என்ன விசேடம்?" என்று கேட்க, அவர், "இன்று மாலையில் அரங் கேற்றுவதற்குப் பாடல்கள் இயற்றப்படவில்லை; முன்னமே தெரிவிக்கக் கூடவில்லை; இன்று காலையிலும் தெரிவித்தற்குச் சமயம் வாய்க்கவில்லை" என்று கவலைக் குறிப்போடு தெரிவித் தார். இவர் சிறிதேனும் கவலையுறாமல், "ஏட்டைக்கொண்டு வர லாமே" என்றார். சேஷையங்கார் புராணச்சுவடியைக் கொண்டு

வரவே, நடந்தவற்றுள் இறுதிச் செய்யுளைப் படிப்பித்துக் கேட்டு விட்டுக் கதைத் தொடர்ச்சியை அறிந்துகொண்டு சிலநேரம் யோசனை செய்து பின் அவர் கையோயாம லெழுதும்படி சில நாழிகைக்குள் ஐம்பது செய்யுட்களைப் பாடி முடித்தார். அச் செயலில் இவர் ஒரு வியப்பையும் புலப்படுத்தவில்லை. உடனிருந் தவர்களெல்லோரும் அதனைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். அவ்வூரிலும் அதனைச் சுற்றிய ஊர்களிலுமுள்ளவர்கள் இந்த ஆச்சரியச் செய்தியைச் சொல்லிக்கொண்டு வருவாராயினர்.

அரங்கேற்றி வருகையிற் சில வைஷ்ணவர்களாலும் பிற ராலும் இடையிடையே சில இடையூறுகள் நேர்ந்தன. ஒருநாள் அயலூரிலிருந்து வந்த ஸ்ரீ வைஷ்ணவ வித்துவானொருவர் வலிந்து வந்து அடிக்கடி விதண்டாவாதம் செய்ய ஆரம்பித்தார். பின்பு தியாகராச செட்டியாருடைய சமாதானங்களால் தம் முயற்சியை நிறுத்திக்கொண்டு அவர் சென்றுவிட்டார். இங்ஙனம் அவர் வந்து வாதித்தது பிள்ளையவர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக் கியது; நெடுநாள் வரையில் அவ்வருத்தந் தணியவில்லை. அது பின்பு இவர் இயற்றிய திருக்குடந்தைத் திரிபந்தாதியிலுள்ள,

கட்டளைக் கலித்துறை.

"பேசவந் தானல மார்க்கமுள் ளாரினெர் பேதையுள்ளார்
ஏசவந் தானல மோநிற் கெனவேகி ஞன்விடம்பூ
வாசவந் தானல மார்குட மூக்கர் வயக்கிடினே
யோசவந் தானல வோவவன் முழ்புரு டோத்தமனே" (குஅ)

என்னும் பாடலால் விளங்கும்.

அரங்கேற்றத்தின் நிறைவு.

கும்பகோண புராணம் அரங்கேற்றி முடிந்தபின்பு அவ்வூரி லுள்ள பிரபுக்கள் இவருக்குச் சால்வை, பட்டு, வஸ்திரம் முதலிய சம்மானங்களும் பொதுவில் தொகுத்த ரூபாய் இரண்டாயிரமும் வழங்கினர். புராணமெழுதிய சுவடியை வெகுவிமரிசையுடன்யானை மேலுள்ள தவிசில் வைத்து ஊர்வலம் செய்வித்தார்கள். அப்பொ ழுது பெரிய *மேளப்பல்லக்கு ஒன்றை விலைக்கு வாங்கிக் கொடு

*இந்தப் பல்லக்கு இவருடைய தேகவியோக காலம் வரையில் வேண்டிய சமயங்களில் இவரைத் தாங்கிச் செல்லும் பேறு பெற்றிருந் தது.

தது அதில் பிள்ளையவர்களை இருக்கச்செய்து தக்கபிரபுக்களிற் சிலர் தாமே சிலதூரம் சுமந்துசென்று தமிழ்மொழியில் தங்களுக் குள்ள அன்பைப் புலப்படுத்திப் பண்டைக்கால வழக்கத்தைத் தெரிவித்தார்கள். அப் புராணம் அரங்கேற்றிப் பூர்த்தியான காலம் குரோதன ஹு தைமீ (1866.) அந்நூல் அச்சிடப்பெற் றுள்ளது.

அது திருக்குடந்தைப் புராணமென வழங்கும். அதிலுள்ள படலங்கள் சுஅ; செய்யுட்கள் உகஅச. அதில் அவையடக்க மாக நான்கு செய்யுட்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று வரு மாறு:

விருத்தம்.

"விதிவழி யாயுஞ் சில்லோர் விதிவிலக் காகத் தத்தம்
மதிவழி யாயுஞ் சில்லோர் மாதேவன் றனைப்பூ சித்தார்
கதிவழி காணு நில்லை கடையனேன் பாட்டிற் குற்றப்
பொதிவழி தருவ தேனும் வெறுத்திலா னனைய புத்தேள்."

இத்தலத்தில் மார்க்கண்டேய முனிவர் பூமிதேவியை மக ளாகப் பெற எண்ணி உப்பில்லாத உணவைப் புசித்துப் பல வரு டங்கள் நோற்றனர். அவர் தவத்திற்கு மகிழ்ந்து அத்தேவி மக ளாக அவதரித்து வளர்ந்து வந்தாள். அப்பொழுது அவளை மணந்து செல்ல எண்ணித் திருமால் மூப்புவேடம் பூண்டுவந்தனர். அவரை மார்க்கண்டேயர் வினவுதலும் அவர்விடை கூறுதலுமாக உள்ள செய்யுட்களில் ஒன்றுவருமாறு:

விருத்தம்.

"வந்தது பசித்தீ மாற்ற வென்றனன் மாயக் கள்வன்
அந்தநன் மொழிகேட் டைய வலவண வுணவுண் டிங்கே
நந்தவுண் டிவாப் கொல்லோ வென்றன னற்ற வத்தோன்
எந்தமண் ணினு முண்பே னென்றனன் விருத்த மாயன்."

(திருநாகேச்சுரப். உஉ.)

இதன்கண் 'எந்தமண் ணினு முண்பேன்' என்பது அவசரத் தில் உலகினர் கூறும் வாக்கியமாக இருந்தாலும் மண்மகளைத் திருமால் விரும்பிய குறிப்பும் அதிற் புலப்படுகின்றது.

சிவபெருமான் அமுதகும்பத்தில் தோற்றியதைப்பற்றிக் கூறும் செய்யுட்களில் ஒன்று வருமாறு.

"மேடமூர் மதலை கடகமென் மலர்க்கை
விளங்கருஞ் சிங்கமென் மருங்குல்
ஆடக மகரக் குழைச்செவி மீனம்
அடுவிழி படைத்துலாங் கன்னி
மாடமர் தரவ விருச்சிக மிதுனம்
மரூஉந்தனு வதுவென வடியார்க்
கூடவோ ரிடபந் தோன்றிடும் பொருளோர்
கும்பத்துத் தோன்றிய தன்றே."

(தம்பேசுரப்படலம், ஙக.)

[மாடு அமர்தர அவிர் உச்சி கம் மிதுனம் மரூஉம் தனுவதுவென; கம் மிதுனம் மரூஉம் தனுவதுவென - மேகத்தையும் மிதுன் ராசியையும் பொருந்தும் உயர்ச்சியையுடைய வில்லாகிய மேருமலையைப்போல. இச் செய்யுளின்கண் பன்னிரண்டு இராசிகளின் பெயர்களும் தொனித்தல் காண்க.]

* மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்.

பின்பு அந்நகரிலுள்ள ஜவுளிக்கடைக் கனகசபைப்பிள்ளையென்னும் ஒரன்பருடைய வேண்டுகோளின்படி ஸ்ரீ மங்களாம்பிகை பிள்ளைத்தமிழும், அம்பலவாண செட்டியாரென்பவர் வேண்டுகோளின்படி திருக்குடந்தைத் திரிபந்தாதியும் இவராற் செய்யப்பட்டன. பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவத்திலுள்ள † கணித சம்பந்தமான சிலேடைகள், அப்பொழுது கும்பகோணத்திற்கு வந்திருந்த மன்னார்குடி ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய ராஜா தீக்ஷிதரவர்களிடம் அறிந்து செய்யப்பட்டன.

அப் பிள்ளைத்தமிழ்ச் செய்யுட்களுட் சில வருமாறு :—

"ஈன்றவற் கில்லவளு முணவுமா கப்புவியும்
இயல்கடி மணஞ்செய்தேமும்
இனியவுவ ளகமுமா கக்கடலு மாலையும்
இருப்பிடமு மாகவனமும்
தோன்றவழி யுங்குடையு மாகவரை யுஞ்செய்து
சுதன்மகன் றிறவுகோலாத்
தாயதாய் மனைவிதற் குறையுளுஞ் செய்துமகிழ்
தோன்றனுன் முகனளிக்க

---

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 389-490.

† இச் செய்தியைப் பிள்ளையவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

நான்றசடை யார்கும்ப நாயக ரெனும்பெயர்
நயத்தல்கண் டங்கண்மீன
நாயகி யிடைச்சிங்க நாயகி யருட்கன்னி
நாயகி யறம்பலவும்வாழ்
ஆன்றகைக் கடகநா யகிகாது மகரநா
யகிநுதற் றனுநாயகி
அடியமித யத்துலா நாயகி யெனப்பல
அமைந்தமங் களவுமையையே." (காப்புப். டு)

"தானே தனக்குச் சரியாய தாயே வருக வுரைக்கவினை
தடிவாய் வருக நினைக்கமுத்தி தருவாய் வருக மலர்பொதிந்த
கானே புரையுங் கருங்கூந்தற் கவுரி வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக வருள்பழுத்த கனியே வருக தெவிட்டாத
தேனே வருக வானந்தத் திருவே வருக பெருவேதச்
செல்வீ வருக வெங்கள்குல தெய்வம் வருக வுருகுமருள்
மானே வருக விமயவரை வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே."
(வருகைப். க0)

"பொருள்செயிவள் வாவென்று திருவாய் மலர்ந்தவப்
பொழுதுந் வந்தாயிலை
பொலியுகின் முகத்தெதிர்ப் படவஞ்சி ஞனெனப்
போதவுரை செய்துகாத்தேம்
தெருள்செயிவ ளின்னும்வந் திலனெனச் சிறிதுகண்
சேந்திடிற் புவனத்துளோர்
திக்கிலை நினக்கஞ்ச லென்பாரு மிலையிவள்
சினந்தவிர்ப் பாருமில்லை
வெருள்செய்பணி பலவுளொன் றிவள்கொழுந னேவிடின்
விழுங்கியே விடுமைதத்த
வீரனு மூளானிவை யுணர்ந்துய்ய வேண்டிடின்
விரைந்துவந் தடியர்யார்க்கும்
அருள்செய்குட மூக்கெங்கண் மங்களாம் பிகையுடன்
அம்புலீ யாடவாவே
அலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ
டம்புலீ யாடவாவே." (அம்புலிப். க0)

இந்தப் பிள்ளைத்தமிழ் அக்ஷயவரு சித்திரை மாதத்தில் (1866) இயற்றி அடுத்த ஆனி மாதத்தில் அரங்கேற்றப்பட்டது. பின்பு விபவவரு ஆனிமீ (1867) அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

* குடந்தைத் திரிபந்தாதி.

குடந்தைத்திரிபந்தாதி மிகவும் சுவைமலிந்தது. அதில் இவர் அனுபவச்செய்திகள் சில அங்கங்கே காணப்படும். சிவகுருநாத பிள்ளையின் பிற்கால நடையும் பின்பு சிலர்பால் தாம் அலைந்தமையும் இவருடைய நெஞ்சில் இருந்து வருத்தி வந்தன. அவ்வருத்தம்,

"† திறம்பாவ மென்று குறிப்பார் மனைதொறுஞ் சென்றுழன்ற
மறம்பாவ மென்று மறிதரும் " (கஅ)

" என்னையப் பாவலர் தூற்றுநர் தூற்ற " (உக)

என்ற பாடற்பகுதிகளால் விளங்கும்.

இவ்வந்தாதியின்கண் அமைந்துள்ள திரிபு மிகவும் விசித்திரகரமானது. இந்த அந்தாதி அரங்கேற்றப்பட்டபொழுது இதனைச் செய்வித்தவராகிய அம்பலவாண செட்டியாரென்பவர் ரூ. உ00 ஸம்மானம் செய்தனர்.

விஷ்ணுபுராணம் இயற்ற உடன்படாமை.

பின்பு பலரால் ஆதரிக்கப்பெற்று இவர் சிலதினம் கும்பகோணத்திலேயே இருந்துவருகையில் ஒருநாள், அவ்வூரில் வராகக் குளத்தின் கரையிலுள்ள ரங்கசாமி ஐயங்காரென்னும் ஸ்ரீமானொருவர் இவருடைய கவித்துவத்தை யறிந்து, " விஷ்ணுபுராணத்தை வடமொழியிலிருந்து தமிழில் செய்யுள் நடையாக மொழிபெயர்த்து நீங்கள் செய்துதரவேண்டும். செய்து தந்தால் ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் நாங்கள் தொகுத்துத் தருவோம். எங்களைச் சேர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் மிக்கவிருப்பத்தோடிருக்கின்றனர்" என்றார். இவர், " நான் சைவனுதலின் அவ்வாறுசெய்தல் கொண்டகோலத்திற்கு மாறுகும். ஆதலால் அது செய்ய என்னுல் இயலாது. சென்னையைச் சார்ந்த எழும்பூரில் திருவேங்கடாசல முதலியாரென்னும் வைணவவித்துவானொருவர் இருக்கின்றார்; அவர் வைணவ நூல்களில் நல்லபயிற்சியுள்ளவர்; நூல் இயற்றுதலிலும் வன்மையுடையவர். அவரைக்கொண்டு உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று

---

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, 2129-2230.

† திறம்பாவம்மென்று - மாறுபாடாக வாருமென்று

சொல்லி விட்டார். வேறொருவரைக் கொண்டு செய்விக்க ரங்க சாமி ஐயங்காருக்கும் பிறருக்கும் விருப்பமில்லாமையால் அம் முயற்சி அன்றோடு நின்று விட்டது.

கும்பகோணத்தைவிட்டு இவர் புறப்படுங்காலத்து ஸம்மான மாகக் கிடைத்த பொருள்கள்யாவும் அரிசிக்கடை மளிகைக்கடை முதலியவற்றில் இருந்த கடன்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட் டன. ஆடைவகைகளை மாணாக்கர்கள், சிநேகிதர்கள் முதலியவர் களுக்கு இவர் கொடுத்துவிட்டார். புறப்படும்பொழுது வண்டிச் செலவுக்கு இவர் கடன் வாங்கிக்கொண்டே புறப்பட்டாரென்று சொல்லுவார்கள்.

கும்பகோணம் காலேஜிற்குச் சென்று பிள்ளைகளைப் பரீட்சித்தது.

தியாகராச செட்டியாருடைய வேண்டுகோளால் ஒருமுறை கும்பகோணம் காலேஜுக்கு இவர் போயிருந்தபொழுது இவரை நாற்காலியில் அமரச் செய்துவிட்டுச் செட்டியார் நின்று கொண் டிருந்தார். இவர், "பாடத்தை நடத்தலாமே" என்றபோது அவர், "ஐயா அவர்கள் மாணாக்கர்களைப் பரீட்சை செய்ய வேண்டும்" என்றார். இவர் சில பிள்ளைகளைப் பரீட்சித்து விட்டு ஒரு மாணாக்கனைப்பார்த்து, "ஏதாவது ஒரு பாடலைச் சொல்" என்று சொன்னர். அவன்,

"கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்"

என்ற நளவெண்பாப் பாடலைச் சொல்லி இவருடைய கட்டளை யால் சுருக்கமாகப் பொருளுங் கூறிவிட்டு, "இன்றைக்கு எங்க ளுக்கு உண்டான மகிழ்ச்சியும் அத்தகையதே" என்றான். இவர் சந்தோஷமடைந்து, "இவ்வாறு சமயத்திற்குத் தக்க பாடலைச் சொல்லும்படி நீ சற்பித்துவைத்திருப்பது மிகப் பாராட்டற்குரி யது" என்று செட்டியாரைப் பார்த்துச் சொல்லி மகிழ்ந்தார்.

எப்பொழுதாவது இவர் தியாகராச செட்டியார் வீட்டிற்குப் போனால், இவரை உபசரிப்பதற்காகச் செட்டியார் காலேஜுக் குப் போகாமல் இருக்க உத்தரவு வாங்கிக் கொள்வது உண்டு. அதற்காக விண்ணப்பம் செய்து கொள்ளுகையில், "என்னுடைய

ஆசிரியர் இங்கே எழுந்தருளியிருக்கின்றார்; உடனிருந்து உபசரிக்க வேண்டியவனாக இருக்கிறேன்" என்று எழுதுவது வழக்கம். இவருடைய அருமையை அறிந்தவர்களாதலின் காலேஜ் தலைவர்கள் உடனே அவருக்கு உத்தரவு கொடுத்துவிடுவார்கள். ஒருமுறை இங்ஙனம் எழுதி அனுப்பியபொழுது காலேஜில் அக்காலத்தில் ஆசிரியராக இருந்த ராவ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார் எம். ஏ., பிள்ளையவர்கள் செட்டியார் வீட்டிற்கு வந்திருப்பதை அக்கடிதத்தாலறிந்து உடனே சில அன்பர்களுடன் சென்று பார்த்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்தார். இவரைக்கண்டு பேசியதைப் பெரிய லாபமாக நினைத்து மகிழ்ந்ததன்றிப் பிறரிடத்தும் இவருடைய பெருமையைப் பாராட்டினர்.

---

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல்.

அட்சய வருஷம் வைகாசி மாதத்திற்குமேல் (1866) பாண்டிநாட்டின்கண் உள்ளனவாகிய சூரைக்குடி (சூரைமாநகர்) கண்டதேவி என்னும் இரண்டு ஸ்தலங்களின் புராணங்கள் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழிற் செய்யுள் நடையாக இவராற் செய்யப்பட்டன. அவ்விரண்டு ஸ்தலங்களிலுமுள்ள செல்வர்களுக்கு இவருடைய பெருமையை எடுத்துக் கூறி இவரைக் கொண்டு புராணங்கள் செய்விக்கும்படி தூண்டியவர் கோயிலூர்ச் சிதம்பர ஐயாவும் இவருடைய மாணாக்கராகிய நாராயண செட்டியாரும் ஆவர். இத்தலங்களுக்கும் முன் புராணஞ் செய்த கோயிலூர் என்னும் ஸ்தலத்திற்கும், பிற்காலத்துப் புராணஞ் செய்த வீரவனத்திற்கும், புறப்பட்டுப் போகுங் காலத்தில் பிரயாணச் செலவுகள் திருவாவடுதுறை ஆதீனத்தாராலும், அந்த ஸ்தலங்களில் இருக்குங் காலத்திலும் மீண்டு வருங் காலத்திலும் ஏற்படும் செலவிற்குரிய பொருள்கள் அப்புராணங்களே ஆக்குவிக்கும் தனவைசியப் பிரபுக்களாலும் கொடுக்கப்பட்டன. மேற்கூறிய நான்கு புராணங்களுள் ஒவ்வொன்றற்கும் இவர் பெற்ற பரிசில் அவ்வப் புராணங்களிலுள்ள செய்யுட்களின் தொகை

யளவே. இந்தப் புராணங்கள் நான்கும் இயற்றி அரங்கேற்றிய காலத்தேதான் பரிசிற்றொகைகளைச் செலவிடாமல் இவர் கண்ணிற் கண்டனரென்பார்கள். நூல் செய்யத் தொடங்கிய காலமுதல் அரங்கேற்றிப் பரிசில்பெற்று நகர வட்டகையிலிருந்து மீளும் வரையில் உடனிருந்து ஆதரித்து வந்தவர் மேற்கூறிய நாராயண செட்டியாரே.

சூரைமாநகர்ப் புராணம் இயற்றி அரங்கேற்றுவதற்கு அவ்வூருக்குச் சென்று ஒரு மைதானத்தின் பக்கத்திலுள்ள ஒரு விடுதியில் இவர் மாணவர்கள் முதலியவர்களுடன் தங்கியிருந்தார். அவ்வூரிலுள்ள நகரவைசிய கனவான்கள் அடிக்கடி வந்து விசாரித்து இவரைத் தக்க வண்ணம் கவனித்து ஆதரித்து வந்தார்கள். ஒவ்வொரு நாளும் பிற்பகலில் ஸ்ரீ சங்கரநாதர் சந்நிதியிற் பலர் கூடிய அவைக்களத்திற் புராணம் அரங்கேற்றப்பெற்று வந்தது. யாவரும் கேட்டு மகிழ்வாராயினர். ஒவ்வொருநாளும் அரங்கேற்றுவதற்கு வேண்டிய செய்புட்கள் காலையில் இவரால் இயற்றப்பெற்று வந்தன.

'நாலடிக்குக் குறையாமற் பாடவேண்டும்'.

அப்பொழுது அத்தலத்திற்பக்தியுள்ள சனங்களுள் அயலூரார்கள் ஒருசாரார் கற்கண்டு பழம் முதலிய பொருள்கள் நிறைந்த பல தட்டங்களை ஏந்திக் கொண்டு கூட்டமாக வந்து முன்னே வைத்து இவரைக் கண்டு சில உபசார வார்த்தைகளைச் சொல்லி ஒடுக்க வணக்கத்தோடு நின்றனர். அவர்கள் நின்ற நிலை ஏதோ ஒன்றைச் சொல்லும் நோக்கத்தோடிருப்பதாக இவருக்குப் புலப்படுத்தியது. இவர் அக்குறிப்பையறிந்து, "ஏதேனும் சொல்ல எண்ணியிருந்தால் நீங்கள் சொல்லலாமே" என்றனர். அவர்கள் தங்கள் எண்ணத்தை உடனே வெளியிடுதற்குத் துணியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, "இவ்வளவு பெரியவர்களிடம் நாம் ஒன்றைச் சொன்னல் ஏதாவது தீமை விளைந்துவிட்டால் என்ன செய்கிறது!" என்று அஞ்சினார்கள்; பின்பு எவ்வாறேனும் தங்கள் எண்ணத்தைத் தங்களுக்குள் பிராயத்தில் முதிர்ந்த ஒரு பெரியவரைக் கொண்டு சொல்லிவிட வேண்டுமென்று துணிந்து அங்கேயுள்ள ஒரு பெரியாரைச் சொல்லச் சொன்னார்கள்.

அப்பெரியவர் உடல் நடுங்க மருண்ட பார்வையோடு, "ஐயா, நாங்கள் பூர்வசன்மத்திற் செய்த பெரும்புண்ணியமே உங்களை இவ்விடம் வருவித்தது. இல்லாவிட்டால் வருவீர்களா? உங்களுக்குள்ள பாட்டுப் பாடும் திறமையையும் வாக்கின் பெருமையையும் நாங்கள் அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனாலும் எங்களுக்கெல்லாம் பெரிய கவலையொன்று ஏற்பட்டிருக்கின்றது. அதைச் சொல்லுவதற்கும் அச்சமாயிருக்கிறது; சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. இந்த ஊரார் கொடுக்கும் பொருள் அழிந்துபோகக்கூடியது. நீங்கள் செய்யும் நூலோ எந்த நாளிலும் அழியாதது; எந்தக் காலத்தும் உங்களுடைய பெருமையையும் தலத்தின் பெருமையையும் தெரிவித்துக்கொண்டே அது விளங்கும். ஆதலால் நாங்கள் அறிவில்லாதவர்களென்பதை உத்தேசித்துப் பாடல்களைக் குறைத்துவிடக்கூடாது. நாங்கள் ஏதாவது குற்றஞ் செய்தல் கூடும்; அதை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்கள்மேற் கோபங்கொண்டு அறம் வைத்துப் பாடவுங் கூடாது. ஒவ்வொரு பாடலும் நாலடிக்குக் குறையவும் கூடாது. அப்படிக் குறைந்தாற் கோயிலைச் சேர்ந்தவர்களுக்கும் அடுத்த ஊரிலுள்ள எங்களுக்கும் கெடுதி நேருமல்லவா? எங்களை வாழ்விக்க வந்த தெய்வம் போல நீங்கள் விளங்குவதனால் துணிந்து எங்கள் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொண்டோம்" என்று தழுதழுத்த நாவாற் சொல்லிமுடித்தார்.

அப்போது மற்ற எல்லோரும், "எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று ஒருமிக்கச் சொல்லி அஞ்சலிசெய்தார்கள். இவர் எல்லோரையும் இருக்கும்படி செய்து, "நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். பாடல்களையும் பாடல்களின் அடிகளையும் குறைக்க மாட்டேன்; அறம் வைத்தும் பாடமாட்டேன். ஒவ்வொரு பாட்டும் நான்கு அடிகளுக்குக் குறையாமலே இருக்கும். உங்களுடைய அன்பை மிகவும் பாராட்டுகிறேன்" என்றார். உலகியலறிவு மிக்க இக் கவிஞர்பெருமான்கூறிய சொற்கள் அந்தக் கூட்டத்தினருக்கு இருந்த அச்சத்தை அடியோடே நீக்கிவிட்டன. அவர்கள் தங்கள் வேண்டுகோள் பயனுற்றதென்ற மகிழ்ச்சியோடும் எழுந்து விடை பெற்றுச் சென்றார்கள்.

அக்கூட்டத்தினருடைய சாத்துவிக இயல்பைத் தெரிந்த இவர், "இத்தகையவர்கள் இருக்கும் இடத்தில் நாம் வருதற்கு

முடியுமா? நாம் இங்கே வந்து பாடுதற்குக் காரணம் நாராயண செட்டியாரல்லவா?" என்று நினைந்து,

வெண்பா.

"பாடுவதெங் கேயிந்தப் பாண்டிநாட் டெல்லைவந்து
கூடுவதெங் கேயொருபாற் கோதையான் - நீடுபுகழ்ப்
பாரா யணனென்றிப் பார்முழுதுங் கொண்டாடும்
நாரா யணனிலையேல் நாம்"

என்ற செய்யுளைப் பாடினர்.

சூரைமாநகர்ப் புராணம்.

சூரைமாநகர்ப் புராணத்துள்ள படலங்கள் - கo; செய்யுட்கள் - நிருகூ. இந்நூலை ஆக்குவித்த பிரபு காரைக்குடி மூரு. லெ. இலக்குமணச் செட்டியாருடைய புத்திரரும் பெருங்கொடையாளியென்று புகழ்பெற்று விளங்கியவருமான கிருஷ்ண செட்டியாராவர்: அவருடைய பெருமையும் அவர் இந்நூல் செய்வித்தமையும் பின்புள்ள செய்யுட்களால் புலப்படும்:

விருத்தம்.

"முகைமுறுக் குடைந்து நறவுகொப் புளிக்கும்
முண்டகத் தடம்புடை யுடுத்துத்
தகைகெழு வளஞ்சால் சூரையம் பதியிற்
றவலரும் வதரிநன் னீழல்
நகையமர் சிறப்பி னுளும்வீற் றிருக்கும்
நலங்கெழு சுந்தரப் பெருமான்
பகைதவிர் தெய்வ மான்மிய மென்னப்
பகர்தரு பெருவட மொழியை"

"மொழிபெயர்த் தெடுத்துத் தமிழினுற் பாடி
முடித்திட வேண்டுமா லென்று
கழிமகிழ் சிறப்பக் காரையம் பதிவாழ்
கனமிகு வணிகர்தங் குலத்தோன்
பொழிபெருஞ் சீர்த்தி புனையிலக் குமணப்
புண்ணியன் புரிதவத் துதித்தோன்
வழிவழி யறமே பயின்றிடு நலத்தான்
மழையெனப் பொழிகர தலத்தான்"

"வளரொளி யனைய தளிப்பணி சிறப்பின்
மல்குறப் புதுக்கிய வள்ளல்
கிளர்மணித் தடந்தோட் கிருட்டின மகிபன்
கெழுதரு சிரத்தையிற் கேட்பத்

உமாபதி சிவாசாரியர் பிள்ளையவர்கள் சரித்திரம்.

தளர்வகன் றரிய தவம்பல வியற்றிச்
சார்தருஞ் சிவபத மெளிதே
விளர்தபப் புகுவா மென்பதுட் கருதி
விருப்பமிக் குரைத்திட லுற்றேன்."

(சூரைமாநகர்ப் புராணப் பாயிரம்.)

இந்த ஸ்தல விநாயகர்கள் : காட்சி விநாயகர், சங்கர விநாயக ரென இருவர்; இறைவன் திருநாமங்கள் : சங்கரநாதர், சுந்தர நாத ரென்பன; அம்பிகையின் திருநாமங்கள்: பார்வதி, மீனாட்சி என்பன.

இந்நூற் செய்யுட்களுட் சில வருமாறு :

தூதரைகளின் வருணனை.

" வாதவூ ரடிகளுக் காக வையமுற்
றூதரஞ் செயப்பிரா னமைத்த வாம்பரி
போதர லுற்றது போற்றுஞ் சூரைவாழ்
மேதகு பரிக்குமு னிற்றல் வெள்கியே."

ஸ்தல விருட்சமாகிய இலந்தை.

"புரிந்து நீழன்மாத் திரஞ்செயுங் கடம்புபோ லாது
பரிந்து நீழலும் படர்சுவைக் கனிகளு முதவித்
தெரிந்து தீங்கனி தெவ்வுவா னடைதரு தெவ்வும்
இரிந்து போகுகண் டகமுங்கொண் டிலகுமோர் வதரி."

[கடம்பென்றது மதுரையில் ஸ்தலவிருட்சமாக உள்ள கடப்பமரத்தை.]

கண்ணைப் பெறுதற்குச் சூரியன் செய்த துதி.

"முழுதுல கிறைஞ்சா நிற்கு முதல்வனின் முகத்துக் கண்ணு
இழுதையே னமர்த லாலே யெவ்வுயிர்க் குங்கண் ணுனேன்
பழுதிலத் தகையே னேக்கும் பார்வையின் றிருத்த னன்றே
எழுவிடம் பருகி வானத் தெவரையும் புரந்து ளாயே."

சங்கப்புலவர்கள் சிவஸ்தலதரிசனம் செய்யப் புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்து இங்கே வந்து பூசித்தனரென்ற வரலாறு சங்கப்புலவர் பூசித்த படலத்திற் சொல்லப்படுகின்றது. அவர்கள் திருப்பரங்குன்றம் முதலிய தலங்களைத் தரிசித்து வந்தார்களென்றுள்ள பகுதியில் ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு பாடல் அமைந்துள்ளது. ஒவ்வொரு செய்யுளும் சிவபிரான் புகழை எதுகை நயத்தோடு புலப்படுத்துகின்றது.

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். உ அநு

"ஒருபுற நீலி யானை யொண்பிட்டுக் கூலி யானை
மருவருள் கோலி யானை மட்ர்க்கருள் பாலி யானை
இருளறு வாலி யானை யிருஞ்சடா மோலி யானைக்
கருதுநெல் வேலி யானைக் கைகுவித் திறைஞ்சிப் போற்றி."

அப்புலவர்கள் சூரைமாநகரில் நெடுநாள் தங்கியிருந்து ஒரு நாள் மதுரை ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளை நினைந்து ஆராமை மீதூர, "திருவாலவாயுடையான் சேவடிகள் மறந்தனமால்" என வருந்தினர்கள். அச்செய்தியைக் கூறும் செய்புட்களில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களும் முறையே அழகுபடச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

ஓர் ஏழை மனிதரால் உபசரிக்கப்பெற்றது.

இப்புலவர்கோமான் கண்டதேவிப்புராணம் செய்வதற்குத் தேவிகோட்டை நகரவைசிய கனவான்களால் அழைக்கப்பெற்றுச் சுப்பு ஓதுவாரென்பவரோடும் மாணுக்கர்களோடும் வேலைக்காரர் களோடும் திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்; பட்டுக்கோட்டையைக் கடந்து போகும்பொழுது சூரியாஸ்தமயன மாயிற்று. தங்குவதற்கு ஓர் இடமும் காணப்படவில்லை. செல்லச் செல்ல ஊரொன்றும் காணப்படவில்லை. அப்பால் 9-மணிக்கு மேல் ஒரு சிற்றூர் போய்ச் சேர்ந்தனர். அங்கே சந்தித்தவர் களைச் சமையல் செய்வதற்கு இடம் அகப்படுமாவென்று விசா ரித்தபொழுது அவர்கள் அக்கிரகாரத்திற்குப் போகலாமென்று சொன்னர்கள். விசாரித்துக்கொண்டு அந்த இடத்திற்குப்போய்ச் சேர்ந்தார். அங்கே ஒரு வீடே இருந்தது. அதுவும் மிகச்சிறிய பனையோலைக் குடிசை. அங்கேபோய் உடன்வந்த வேலைக்காரர்க ளைக்கொண்டு சமையல் செய்வதற்கு இடம் அகப்படுமோவென்று கேட்கச் சொன்னர்; ஒருவர் சென்று விசாரித்தார். அந்த வீட்டில் ஆண்பாலார் ஒருவரும் அப்பொழுது இல்லை. சில குழந்தை களோடு கணவனுடைய வரவைப் பார்த்துக்கொண்டே திண்ணையி லிருந்த ஓர் இளம்பார்ப்பனி பல ஆண்பாலார்களின் கூட் டத்தைப் பார்த்துப் பயந்து, "இங்கே அதற்குச் சௌகரியப்பட மாட்டாது" என்று சொல்லித் திடீரென்றெழுந்து கதவைச் சார்த் திக்கொண்டு உள்ளே போய்விட்டாள். இவர் உடன்வந்த வண்டி களை அவ் வீட்டின் முன்புறத்திலுள்ள களத்தில் அவிழ்த்துப் போடச் சொல்லிவிட்டுச் சிலரோடு சென்று சிறிது தூரத்திலிருந்த

ஊருணியொன்றைக் கண்டுபிடித்து அதில் அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டார். சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இவர் மீண்டும் மேற்கூறிய களத்திற்குவந்து சமையல் செய்துகொள்வதற்கு வேறு ஒருவித வழியும் இல்லாமையை அறிந்து படுக்கையை விரிக்கச்சொல்லிப் பொறுக்க முடியாத பசியோடும் உடன் வந்தோருடைய பசியைத்தீர்க்கக் கூடவில்லையே யென்ற வருத்தத்தோடும் படுத்துக்கொண்டனர். மற்றவர்கள் பக்கத்திலிருந்து தம்முள்ளே பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் அங்கேயுள்ள வீட்டுக்காரராகிய பிராமணர் உணவுப் பொருள்கள் முடிந்த ஒரு மூட்டையைத் தலையில் வைத்துக்கொண்டு வெகு வேகமாக வந்து தம்முடைய வீட்டுக் கதவைத் தட்டினர். அதுதெரிந்த இவருடைய மாணாக்கர்கள் அவரை வற்புறுத்தி யழைத்தார்கள். அவர், 'இவர்கள் யாரோ? அன்னம் போடவேண்டுமென்று ஒருவேளை கேட்டால் நாம் இவ்வளவு பேர்களையும் எப்படி உண்பிப்போம்' என்று அஞ்சி விரைவாக உள்ளேசென்று தம்மனைவியைக் கூடையொன்றைக்கொண்டு வரச்செய்து தாம் கொணர்ந்த தானியத்தை அக் கூடையிற் கொட்டி, "இரண்டு நாளைக்கு நமக்கு ஆகாரத்துக்குக்கவலையில்லை" என்று சொல்லி மனைவியை மகிழ்வித்தார். பின்பு தம்முடைய நியமத்தை முடித்துக்கொண்டு மத்தியான்னமே நீரிற் சேர்த்திருந்த அன்னத்தை யுண்டார். அப்பாற் கவலையற்றுப் பனையகணிக் கட்டிலொன்றை ஆரற்சுவர் சூழ்ந்த அந்தவீட்டு உள்முற்றத்திலே போட்டு அதிற் படுத்துக்கொண்டனர். படுத்தவர் தமக்கு இரண்டு நாளைக்கு ஆகாரத்துக்குக் கவலையில்லை யென்ற மகிழ்வினால்,

விருத்தம்.

"உனதுசரற் காலமதி யனைய மெய்யும்
உடல்குழைந்த பிறைச்சடையுங் கரங்க ணான்கும்
அனவரத முறுமபய வரத ஞான
அருட்பளிங்கு வடமொடுபுத் தகமு மாக
நினைகிலர்முன் வழுத்திலர்பின் வணங்கா ரெங்ஙன்
நிறைத்தபசுந் தேனுமடு பாலுந் தூய
கனியுமென மதுரம்விளைந் தொழுகு பாடற்
கவிதைபொழி வதுகயிலைக் கடவுள் வாழ்வே"

(லெளந்தரியலஹரி.)

என்னும் செய்யுளை இசையோடு பாடினர். பின்னும் சில பாடல்களைச் சொல்லி இன்புறுவாராயினர். அப்பாட்டுக்கள் இவருடைய பக்கத்திலிருந்த மாணாக்கர்களுடைய காதில் விழவே அவர்கள், "இவ்வீட்டு ஐயர் தமிழ் படித்தவர்போலே காணப்படுகிறார். இப்பொழுது, 'உனது சரற்காலம்' என்னும் பாடல் முதலியவற்றைச் சொல்லுகிறார்" என்றார்கள். கேட்டஇவர், "அவரை எப்படியாவது இங்கே அழைத்து வந்து அந்தப் பாடல்களை என் முன்னே சொல்லச் செய்யுங்கள்" என்று சொன்னர். அவர்கள் அவ்வாறே சென்று அவ்வீட்டுக் கதவைப் பலமாகத்தட்டி உள்ளே இருந்தவரை அழைத்தார்கள். அவர் முன்னமே இக்கூட்டத்தைக் கண்டு பயந்தவராதலின் உடனே வெளியே வரவில்லை. 'இவர்கள் சமையல்செய்து போடும்படி சொல்வார்கள்போலிருக்கிறது; நாம் என்னசெய்வோம்!' என்றெண்ணி, "காலை முதல் அயலூருக்குச் சென்று அலைந்து இப்பொழுதுதான் வந்து கிடைத்த ஸ்வல்ப ஆகாரத்தையுண்டு களைத்துப் படுத்திருக்கிறேன். என்னால் இப்பொழுது ஒன்றுஞ் செய்யமுடியாது" என்று உள்ளே இருந்தபடியே கூறினர். அவர்கள், "ஐயா, நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். எங்கள் எசமானவர்கள் உங்களுடைய பாடல்களைக் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இங்கேயிருந்து சொல்லுகிற பாடல்களை அங்கேவந்து சொன்னால் திருப்தியடைவார்கள்" என்று சொன்னார்கள். "நான் பாடும் பாட்டைக் கேட்டு இந்த நடுக்காட்டில் மகிழக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? அப்படியானால் வருவதற்கு என்ன ஆட்சேபமிருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டே விரைந்துவந்து கதவைத்திறந்தார்; திறந்தவர் தமது பணியகணிக்கட்டிலையும் கையிலெடுத்துக்கொண்டு இவரிருக்கும் இடத்திற்கு வந்து அந்தக்கட்டிலைப் பக்கத்திற் போட்டுக்கொண்டு அதன்மேல் இருந்தார். பக்கத்திலுள்ளவர்கள் பாடல்களைச் சொல்லச் சொன்னார்கள். பின்பு தாம் முற்கூறிய செய்யுளை மற்றொருமுறை சொன்னர். அடுத்த செய்யுட்களையுஞ் சொன்னர். அவற்றைக்கேட்ட இவர், "நீங்கள் என்ன என்ன படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்கவே, அவர், "நான் யாசகம்பண்ணப் படித்திருக்கிறேன். தமிழ் வித்துவானாக இருந்த என்னுடைய தகப்பனார் எனது இளமையில் சொல்லிக்கொடுத்த சில நூல்களிலுள்ள பாடல்கள் எனக்கு ஞாபகமுண்டு. அவற்றை எப்

உஅஅ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பது வழக்கம். படிக்கவேண்டு மென்றுற் புத்தகங்கள் இல்லை. என் வீட்டிலிருந்த புத்தகங் களை யெல்லாம் யாரோ வாங்கிக்கொண்டு போய்விட்டனர். அவர்கள் அவற்றைத் திரும்பக் கொடுக்கவில்லை. யாரிடத்தி லாவது போய்ப் பாடம் கேட்பதற்கும் நேரம் இல்லை. சூரியோ தயமுதல் அஸ்தமயனம்வரையில் வயிற்றுப் பிழைப்புக்கே அலைய வேண்டியிருக்கிறது. அப்படி யாரிடத்திலாவது சென்று புத் தகம் வாங்கிப் படிக்கலாமென்றால், என்னை நம்பி யார்கொடுப்பார் கள்? என்னைப்பார்த்தால் அவர்களுக்குப் படிப்பவன்போலத் தோற்றுதே. எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து எங்களுக்கு இந்தப் பக்கங்களில் மகமை உண்டு. அறுப்புக்காலங்களில் களங்களுக்குச் சென்று காத்திருந்து கிடைக்கும் தானியங்களை வாங்கிவருவேன். என்னுடைய நாட்களெல்லாம் இப்படியே போகின்றன. இந்தநிலையில் தெரிந்தவற்றையாவது ஒய்ந்தவேளை யிற் சொல்லிக்கொண்டிருப்பது வழக்கம். இந்தமட்டிலாவது தேவி அனுக்கிரகம் இருப்பதைக் குறித்துப் பாடிக்கொண்டிருந் தேன். தமிழ்ப் பாஷையில் எனக்கு விசேஷமான பிரீதியுண்டு. யாரிடத்திலாவது போய்ப் பாடங்கேட்கலாமென்று நினைத்தா லோ, இந்தப்பக்கத்திற்பாடஞ் சொல்லத் தக்கவர் யாருமில்லை; சொல்லக் கூடியவர்கள் இருந்தாலும் சுலபமாக அவர்கள் சொல் லிக்கொடுப்பதில்லை. அவர்களுக்கு நாள் முழுதும் பணிவிடை செய்தாலும் ஏதோ கடனுக்காகச் சொல்லிக்கொடுப்பார்கள். என்னுடைய நிலைமை ஜீவனத்திற்கே தாளம்போடும்பொழுது அவர்களை அண்டி நான் எப்படி கற்கவேண்டிய நூல்களைக் கற்க முடியும்?

"மாயூரத்தில் மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் என்று ஒரு சிறந்த தமிழ்வித்துவான் இருக்கிறாராம்; ஏழைகளாயுள்ளவர்க ளுக்கு அன்னமும் வஸ்திரமும் அளித்துச் சிலவருஷம் வைத் திருந்து அவர்களை நன்றாகப்படிப்பித்து அனுப்புவது அந்த மகானுக்கு வழக்கமாம். அவரிடத்திற் சிலமாதம் படித்தாலும் படிப்பவர்கள் கல்விப்பெருக்கத்தை யடைவார்களென்று சொல் லுகிறார்கள். இப்படிப்பட்ட மகோபகாரியைப் போல இக் கலிகா லத்தில் யார் இருக்கிறார்? அந்தப் புண்ணியவானிடத்திலே போய்ப் படிக்க அவா இருக்கிறது. அதற்கும் முடியவில்லை. எனக்குக்

*கால் விலங்கு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த லக்ஷணத்திற் சில குழந்தைகளும் உண்டாகியிருக்கின்றன. நான் இவர்களைப் பாதுகாப்பேனா? அவரிடத்திற் போய்ப்படிப்பேனா? சாணேற முழஞ் சறுக்குகிறதே. நான் என்ன செய்வேன்! அந்த மகானை ஒரு முறை இந்தக் கண்களாற் பார்த்துவிட்டாவது வரலாமென்று முயன்றாலோ அதற்கும் முடியவில்லையே! என்னுடைய நிலைமை ஒன்றுஞ் சொல்லக் கூடியதன்று" என்று சொல்லிவிட்டுப் பின்னும் தம்முடைய கஷ்டங்களைச் சொல்லினர்; பக்கத்திலிருந்த மாணாக்கர்களில் ஒருவர் 'இதுதான் நல்ல சமயம்' என்றெண்ணி அவருடைய சமீபத்தில் வந்து மூதுகைத்தட்டி அவர் செவியிற்படும்படி ரகஸ்யமாக "இங்கேபடுத்திருக்கும் இவர்களே நீர் சொல்லிய பிள்ளையவர்கள். இப்பொழுது கண்டதேவிப் புராணம் அரங்கேற்றுவதற்குப் போகிறார்கள்" என்று சொன்னர். உடனே ஹாஹா வென்று அவர் துள்ளி எழுந்தார். அவருடைய வியப்பு அவரைச் சில நிமிஷ நேரம் மௌனமாக இருக்கச் செய்துவிட்டது; "நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ? இந்த இடம் என்ன மாதவம் செய்ததோ?" என்று ஆடிப்பாடித் திகைத்து ஒன்றுந் தோன்றுதவராய் நின்றார். நின்றவர், "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு ஓடினர்; அவர் ஓடியது, விரைவிற் சமையல் செய்வித்து எல்லோருக்கும் ஆகாரம் பண்ணுவிக்க நினைந்து அரிசி முதலியவை எங்கேனும் வாங்கி வருதற்காகவே. அப்பொழுது உடன் இருந்தவர்கள் அவருடைய நிலைமையையும் அன்பின் மிகுதியையும் கண்டு வியந்தனர்; "இவருக்கு நாம் சிரமம் கொடுக்கக் கூடாது. இந்த அகாலத்தில் வறியவராகிய இவர் எங்கே போவார்? என்ன பொருளை இந்நேரத்தில் இவ்வூரில் இவரால் தேடிக் கொண்டு வருதற்குமுடியும்?" என்று எண்ணி அவரைப் பின்தொடர்ந்து ஓடிச் சென்று தடுத்தார்கள். அவரிடம், "உங்களுக்கு வேண்டிய பொருள்களை நாங்கள் தருகின்றோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று கூறி அவரை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு வந்து வேண்டிய பாத்திரங்களையும் அரிசி முதலியவற்றையும் கொடுத்தார்கள். அவர் அவற்றைப் பெற்றுத் தம் மனைவியையும் துணையாகக் கொண்டு விரைவிற் சமையல் செய்து பிள்ளையவர்களையும் மற்றவர்களையும் உண்பித்தார்.

---

* கல்யாணம் ஆகியிருக்கிறதென்று பொருள்.

அப்பால், மகிழ்ச்சி மேலீட்டால் இராமுழுதும் நித்திரை செய்யாமலே இருந்து தமக்குப் பல நாளாகச் சில நூல்களிலிருந்த ஐயங்களைக் கேட்டுக் கேட்டு நீக்கிக் கொண்டார். காலையில் இவர் புறப்பட வேண்டுமென்று சொல்லவே அவர் ஒரு வேளையாவது தம் வீட்டில் ஆகாரம் செய்து போகவேண்டுமென்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்தார். இவரும் அதற்கு உடன்பட்டு அன்று பகற் போசனத்தை அவரில்லத்திற் செய்து கொண்டு புறப்பட்டார். புறப்படுகையிற் பிரிவாற்றாது கண்ணீர் விட்டு அவர் வருந்துவாராயினர். அதைக் கண்ட இவர் தம்முடன் கூட வருவதில் அவருக்கு விருப்பம் இருத்தலையறிந்து அவருடைய குடும்பப் பாதுகாப்பிற்குப் போதிய உணவுக்குரியபொருள்களை வாங்கிக் கொடுக்கும்படி பொருளுதவி செய்துவிட்டு அவரையும் உடனழைத்துச் சென்றார். சில மாதம் அவரை உடன் வைத்திருந்து படிப்பித்து அப்பால் ஊருக்கு அனுப்பினர்.

பிற்காலத்தில் அவர் வருடந்தோறும் திருவாவடுதுறை வந்து சில மாதம் இருந்து வேண்டிய நூல்களைப் பாடங்கேட்டு அறிந்து கொண்டும் மடாதிபதிகளிடம் பரிசு பெற்றுக் கொண்டும் செல்வார்.

கண்டதேவிப் புராணம்.

கண்டதேவிப் புராணம் கண்டதேவியின்கண் உள்ள திருக்கோயிலில் ஸ்ரீ சிறையிலிநாதர் ஸந்நிதியில் மிகச் சிறப்பாக அரங்கேற்றப்பட்டு நிறைவெய்தியது. அதிலுள்ள படலங்கள் - ககூ; செய்யுட் டொகை - அஅச.

அப்புராணத்தை ஆக்குவித்தோர் தேவிகோட்டைத் தனவைசியப் பிரபுக்கள்; இது,

விருத்தம்.

"தரைபுகழ் வேத சாரமாம் விபூதி
சாதன மேபொரு ளாக்கொண்
டுரைபுகழ் சிறந்த *தேவிசா லப்பேர்
உத்தம வணிகர்கள் யாரும்
வரைபுக ழமைந்த கண்டதே வியிற் †பொன்
மாரிபெய் தருளிய பெருமான்

---

* தேவிசாலம் - தேவிகோட்டை.

† காங்கேயனென்னும் அரசனுக்காகச் சிவபெருமான் இத்தலத்

குரைபுகழ் விளங்கு தெய்வமான் மியமாய்க்
குலவிய பெருவட மொழியை ”

“ மொழிபெயர்த் தெடுத்து மதுரமிக் கொழுகி
முழங்கிமுப் புவனமும் போற்றப்
பழிதபுத் துயர்ந்து பரவுசெந் தமிழாற்
பாடுக வென்றலு மனையார்
கழிசிறப் புவகை மீக்கொளப் புகன்ற
கட்டுரை மறுப்பதற் கஞ்சி
உழிதரற் றகைய மனமுடை யானும்
உரைசெயத் துணிந்தனன் மன்னே ”

என்னும் செய்யுட்களால் விளங்கும்.

அப்புராணத்திலுள்ள செய்யுட்களிற் சில வருமாறு :—

(அகத்திய முனிவர் துதி)

“ பன்னிரு தடங்கைச் செம்மல் பாற்சிவ ஞானம் பெற்றுப்
பன்னிரு கதிரு மொன்றும் பான்மையின் விளங்கி நாளும்
பன்னிரு தவமா ணுக்கர் பழிச்சிட மலய மேவப்
பன்னிரு சரண நாளுந் தலைக்கொடு பரவு வோமே.”

[மலயம் மேவு அப்பன்]

[திருஞானசம்பந்தமூர்த்தி நாயனூர் துதி]

“ அறைவட மொழிந வின்ற பாணினி யகத்து நாண
இறையமர் மயிலை மூதூ ரிருந்தவோர் தாதுக் கொண்டே
நிறைதர வொராறு மேலு நிரப்புதென் மொழிந வின்ற
மறையவன் காழி வேந்தன் மலரடிக் கன்பு செய்வாம் ”

[ஒரு தாதுவிலிருந்து வேறு தாதுக்களுண்டாகா வென்பது பாணினீய முடையார் கொள்கை. ஓர் தாது - எலும்பு.]

செருந்திமரம்

“ நன்மலர் செறிதரு நந்த னந்தொறும்
மின்மலர் செருந்திகள் வீயு குப்பன
அன்மலர் களத்திலு னருளின் மூன்னாட்
பொன்மழை பொழிந்ததைப் புதுக்கி னலென.”

(நகரப்படலம்)

திற் பொன்மாரி பெய்வித்தனரென்பர். அதனால் இத்தலத்திற்குப் பொன்மாரியென்று ஒரு பெயருண்டு.

சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் நடைபெற்ற பாடங்கள்.

அப்பால், இவர் திருவாவடுதுறைக்கு வந்து வழக்கம் போலவே பாடம் சொல்லிக்கொண்டு இருந்தனர். அப்பொழுது படித்தவர்கள் முற்கூறிய நமச்சிவாயத்தம்பிரான், தருமபுரம் பரமசிவத் தம்பிரான், நாராயண செட்டியார், இராமசாமி பிள்ளை முதலியவர்கள். அக்காலத்திற் பெரும்பாலும் சுப்பிரமணிய தேசிகரது முன்பே பாடம் நடைபெறும். அவர் ஸம்ஸ்கிருத வித்துவான்களோடு சாஸ்திர ஆராய்ச்சி செய்யும்பொழுது மட்டும் இவர் வேறோரிடத்திற் பாடம் நடத்துவார். கம்பராமாயணம் பாடஞ்சொல்ல ஆரம்பித்தபின் சுப்பிரமணிய தேசிகர் இவரைப்பார்த்து, "மற்றப் பாடங்கள் எப்படி நடந்தாலும், கம்பராமாயணப் பாடம்மட்டும் நம்முடைய முன்பே நடத்த வேண்டும்" என்று கட்டளையிட அவ்வாறே அது நடைபெற்றுவந்தது. அந்நூலை இவர் பாடஞ்சொல்லி வருகையில் இயல்பாகவே அதிற் பழக்கமும் பிரியமும் உள்ள சுப்பிரமணிய தேசிகர் இவர் சொல்வனவற்றைக் கேட்டு மிக்க சந்தோஷத்தை அடைந்து வந்தனர்.

பின்பு கோவைகள் பாடஞ்சொல்லும்பொழுது சுப்பிரமணிய தேசிகர் கட்டளையின்படி அப்பொழுது மடத்திலிருந்து கிடைத்த பல கோவைப்பிரதிகளையும் உடன்வைத்துக்கொண்டு பாடங்கேட்பவர் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு கோவையைக் கொடுத்து ஒவ்வொருதுறைக்கும் உரியனவாக அக்கோவைகள் எல்லாவற்றிலுமுள்ளபாடல்களை முறையே இவர் அவர் முன்னே படிக்கச் செய்துவந்தார். பல ஆசிரியர்களுடைய கருத்தையும் ஆற்றலையும் ஆராய்ந்து அறிந்து தேசிகரவர்கள் மகிழ்ந்தார்கள். இதைப்பற்றிச் சுப்பிரமணிய தேசிகர் பின்னொரு சமயம், "கோவைகளுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநயம் இருந்து வந்தது. ஒரே துறையாக இருந்தாலும் பல வித்துவான்கள் தங்களுடைய புத்திசாதுர்யத்தைக் காட்டியிருத்தல் நன்றாகப் புலப்பட்டது" என்று எங்களிடம் சொன்னதுண்டு.

வன்றொண்டர்.

இவரிடம் பாடங்கேட்ட மேற்கூறிய நாராயண செட்டியாரென்பவர் தேவிகோட்டையில் தருமஞ் செய்தலிற் புகழ்

பெற்ற குடும்பத்திற் பிறந்தவர்; நேத்திரம் இல்லாதவர். ஆனாலும் நுண்ணிய அறிவுடையவர். வேறொருவர் படிக்க அவர் பாடங்கேட்பார். மடத்திற் கேட்பதன்றி இவர் வீட்டிற்குச் சென்றும் கேட்பதுண்டு. படித்துக் காட்டுவதற்காக ஒருவரும் இல்லாவிடின், பிள்ளையவர்களே படித்துச் சொல்வார்கள். அங்ஙனம் இவர் படிக்க அவர் பாடங்கேட்ட நூல் விநாயகபுராணம். அவருக்கு ஞாபகசக்தி அதிகம் உண்டு. பாடம் நடக்கையில் இவ்வளவு பாடல்களாயின; நிறுத்தலாமென்பார். ஒருபாடலை மறுமுறை கேட்கவேண்டின் 'மறுத்து' என்று சொல்வது அவரது இயல்பு. தம்முடைய ஊருக்குச்சென்று பாடங்களைச் சிந்தித்து ஐயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்து மீண்டும் பிள்ளையவர்களிடம் வந்து சிலநாளிருந்து நீக்கிக்கொண்டு செல்வது வழக்கம். கேட்கும்பொழுது இன்னபடலத்தில் இன்னசெய்யுளில் இன்ன அடியென்று ஞாபகம்வைத்திருந்தே கேட்பார். அது யாவருக்கும் ஆச்சரியத்தைத் தரும். அவருடைய நித்திய நியமங்கள் பின்வருமாறு: ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்நானம் செய்து பின்பு விநாயகருக்கு ஆயிரத்தெட்டுக் குட்டுக்கள் குட்டிக்கொண்டு முடித்துவிட்டுப் பஞ்சாட்சரம் ஆயிரத்தெட்டு உரு ஜபிப்பார். அகதிபத்திரட்டைப் பதம்பதமாக நிறுத்தி உச்சரித்து முழுவதும் பாராயணஞ்செய்து தேவாரத்தில் வேறு சில பதிகங்களையும் திருவாசகத்திற் சிலபதிகங்களையும் பாராயணம் செய்துவிட்டுப் பின்பு திருமுருகாற்றுப்படையை ஆறுமுறை பாராயணஞ்செய்வார். அவ்வாறு குறைவின்றிச் செய்துமுடித்துவிட்ட பின்புதான் ஆகாரம் செய்துகொள்வார். நியமம் பகலில் முடியாவிடின் மாலையில் தொடர்ந்து செய்துவிட்டுத்தான் சாப்பிடுவார். ஒருநாள் செய்யாவிடின் மறுநாள் நிறைவேற்றி விட்டே உண்பார். அவருடைய கல்வியறிவின் மூதிர்ச்சிக்குக் காரணம் அவருடைய சிவபக்தியும், நித்திய நியமங்களுமே என்று உடனிருந்த எல்லோரும் சொல்வார்கள். அவர் திருவாவடுதுறைக்கு வந்திருந்த ஒருசமயம் பல சிவநேசச் செல்வர்கள் கூடி அவருடைய ஒழுக்க விசேஷத்தையும் சைவப்பற்றையும் திடபத்தியையும் அறிந்து அவருக்கு வண்ருண்டரென்றே பெயரிட்டு வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். பிள்ளையவர்கள் கேட்டு, 'நீங்கள் சொன்னது தக்கதே' என்று அங்கீகரித்து,

நேரிசை வெண்பா.

" சத்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற் ரூட்கமலப்
பத்தியாற் றேவார பாராய—ணத்திலுல்
வான்ரேய் புகழ்மிகுத்த வன்ரொண்ட னென்னும்பேர்
சான்ரேய் நினக்குத் தகும் "

என்னும் பாடலைக்கூறி அன்றுமுதல் வன்ரொண்டரென்றே அழைத்து வருவாராயினர்.

இந்தச் சமயத்திற் செய்த வேறு ஒரு விருத்தமுமுண்டு. அஃது இப்பொழுது கிடைக்கவில்லை.

ஒருசமயம் பெரியபுராணம் நடைபெறும்பொழுது ஒருவர் மிக வேகமாகப் படித்துக்கொண்டுபோனர். அந்நூலில் மேல் வரும் ஒரு பாட்டின் பொருளை நன்றாகத் தாம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று மிக்க கவலையோடு வன்ரொண்டச் செட்டியார் கவனித்து எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தார். படித்தவர் வழக்கம்போல் அந்தப் பாட்டையும் வேகமாகப் படித்துச் சென்றார். அவரைப்பார்த்து, வன்ரொண்டர், "ஐயா, இந்தப்பாட்டிற்கு அர்த்தம் செய்துகொண்டீர்களா?" என்று வினவ அவர் பொருள் தெரியாமல் விழித்தார். " ஊரிலிருந்து வரும்பொழுது சந்தேகமாக இருந்த பாடல்களில் முக்கியமான பாடல் இது. எப்பொழுது இது வருமென்று காத்துக்கொண்டே இருந்தேன். வேகமாகப் படித்துச் சென்றதனால் உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைத்தேன். யாவும் முறையே தெரிந்த ஐயா அவர்கள் இங்கே இருக்கும்பொழுது ஐயங்களை நன்றாக நீக்கிக்கொள்ளாமற் போகலாமா? வேறு யாரிடத்தில் கேட்கப்போகிறோம்? நான் சொல்வதைப்பற்றிக் கோபித்துக்கொள்ளக் கூடாது " என்றார். பிள்ளையவர்கள் அந்தப் பாட்டிற்கு நன்கு பொருள் கூறினர். அந்தப் பாடல் இன்னதென்று இப்பொழுது தெரியவில்லை.

திருத்துருத்திப்புராணம்.

குற்றாலமென்று வழங்குகின்ற திருத்துருத்தி ஸ்தலபுராணத்தை அத்தலத்திலுள்ள ஆதிசைவர்களும் மற்றத்தொண்டர்களும் கேட்டுக்கொள்ள இவர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துக் காப்பியமாகச் செய்தனர். வடமொழிப் புராணத்தைத் தமிழில்

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். உகூடு

மொழிபெயர்த்துச் சொன்னவர் திருக்கோடிகாவல் ராமகுட்டி சாஸ்திரிகளென்பவர்; அதைத் தமிழில் எழுதியவர் திருவாவடு துறை நமச்சிவாயத் தம்பிரானவர்கள். அப்புராணம் இயற்றி முடிந்தவுடன் அவ்வூரின்கண் உள்ள திருக்கோயில் மகா மண்ட பத்திற் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது அவ்வூர்ச் செங்குந்தச் செல்வர்களாகிய சிங்காரவேல் முதலியாரென்பவரும் அவருடைய சகோதரராகிய தியாகராச முதலியாரென்பவரும் இப்புலவர் பெருமானுக்கு உயர்ந்த சம்மானங்கள் செய்தார்கள். தங்களுடைய இனத்தாரையும் மற்றச் செல்வர்களையும் செய்யும் படி செய்வித்தார்கள். பிற்காலத்தும் பலவகையாக இவரை ஆத ரித்து வந்தார்கள்.

திருத்துருத்திப்புராணம் கூ-படலங்களும் கசுகள-செய்யுட் களும் அடங்கியது.

இந்தத்தலம் காவிரி ஆற்றினிடையில் இருந்தமையின் திருத் *துருத்தியெனவும், குத்தாலமென்னும் ஒருவகை மரத்தைத் தல விருட்சமாக உடைமையின் †குத்தால மெனவும் வழங்கப்படும். குத்தாலமென்பதன் சிதைவே குற்றாலமென்பது. அப்பெயர் உத்தாலகமெனவும் வழங்கும். பாண்டி நாட்டிலுள்ள திருக் குற்றாலம் தெனுது உத்தாலகவனமெனவும் இத்தலம் வடாது உத்தாலகவனமெனவும் வழங்கப்பெறும். இங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் திருநாமம் சொன்னவா றறிவாரென்பது; அது,

"சொன்னவா றறிவார் துருத்தியார்"

எனச்சுந்தரமூர்த்தி நாயனரால் தேவாரத்திலும் அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இத்திருநாமம் வடமொழியில் உக்தவேதீசுவர ரென்று வழங்கும்.

இப்புராணத்தில் உள்ள சுந்தரதீர்த்தப் படலத்தில் ஸ்ரீசுந்தர மூர்த்தி நாயனர் சரித்திரம் விரிவாக அமைக்கப்பட்டுள்ளது.

அம்பிகை பசுவடிவங்கொண்டருளித் திருவாவடுதுறைக்கு வந்து ஸ்ரீமாசிலாமணி யீசரைப் பாலால் அபிடேகம் செய்ததைக் கூறும் பகுதியிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :—

---

* துருத்தி - ஆற்றிடைக்குறை.

† குத்தாலம் - ஒருவகை ஆத்திமரமென்பர்.

விருத்தம்.

" உண்மை யாண்மனத் துத்தமர் பரசிவன்
ஒருமகன் பரைக்கென்று
வண்மை யாகம மோதுவர் மற்றது
வாய்மையென் றுறத்தேர்ந்தாம்
அண்மை யேயன்றிச் சேய்மையே சிவலிங்கத்
தண்ணலைக் கண்டாலும்
கண்மை நீத்தபைங் கோழுலை சுரந்துபால்
கனிந்துகுத் திடலானே "

வேறு.

" இறைவன்பா லுவந்தா ளிறைவியென் றெவரும்
எடுத்தியம் பிடுவது மிருக்க
இறைவிபா லுவந்தா னிறைவனென் றெவரும்
எடுத்தியம் பிடுவது மெழுந்த
திறைவனன் றுடப் பர்ல்பொழி வதிலோர்
இணையிலா தமைகுறித் தன்றே
இறைவியை யின்னு மொப்பிலா மூலையாள்
என்றிசைத் துய்யுமா லுலகம்."

(கோழத்திப் படலம், சு, எ.)

[திருவாவடுதுறையிலுள்ள அம்பிகையின் திருநாமம் ஒப்பிலா முலையாளென்பது.]

சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட் கொள்ளுதற்காக விருத்தவடிவம் கொண்டருளியதைக் கூறும் பகுதியிலுள்ள இரண்டு செய்யுட்கள் வருமாறு :—

விருத்தம்.

" கிழவடி வன்றி வேறு கிளரொரு வடிவங் கொள்ளிற்
பழவழக் கென்று ஞாலங் கொளாதெனும் படியை யுன்னி
விழவுமை திருமு கத்தோர் வெள்ளிய முறுவ றோன்ற
அழகிய விருத்த ராகு ரறையுமூ வடிவு மில்லார் "

" வளமலி திருநெல் வேலி வைப்பிடைக் கொண்ட தேயோ
உளமலி பாசூ ரென்னு மோரிடங் கொண்ட தேயோ
கொளமலி பிறிதோர் தேத்துக் கொண்டதோ வுணர்த்த றேற்றேம்
தளமலி மலர்க்கை வேணுத் தண்டமொன் றூன்றக் கொண்டு "

(சுந்தரதீர்த்தப். 37, 41.)

[திருநெல்வேலியிலும் பாசூரிலும் ஸ்தல விருட்சம் மூங்கில்.]

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். உகூள

பதிகங்கள்.

மேற்கூறிய சிங்காரவேலு முதலியார்முதலிய செங்குந்தச் செல்வர்கள் தங்களுடைய தெருவிற் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் * கச்சிவிநாயகர்மீது ஒரு பதிகமும் † சுப்பிர மணியக்கடவுள்மீது ஒரு பதிகமும் இயற்றவேண்டுமென்று விரும் பியபடி இரண்டும் அக்காலத்தில் இவராற் செய்யப்பெற்றன.

"கலைவழி நினைப்பரவு செங்குந்தர் மரபும்
கதித்துநீ டிழிவாழ்க"

எனக் கச்சிவிநாயகர் பதிகத்திலும்,

"விருப்பொடு நினைப்போற்று செங்குந்தர் தம்மரபு
மேன்மேலு மோங்கிவாழ்க"

எனச் சுப்பிரமணிய ஸ்வாமி பதிகத்திலும் இவர் செந்தந்தர் கூலைப் பற்றிக் கூறியிருக்கின்றனர்.

‡ திருவாவடுதுறை யமக அந்தாதி.

"சிவஞான சுவாமிகள் காஞ்சீபுரத்திற்கு யமகவந்தாதி செய்திருக்கிறார்கள். இத்தலத்திற்கு என்ன காரணத்தாலோ செய்யவில்லை. தங்கள் வாக்கினாலாவது ஒரு யமகவந்தாதி செய்ய வேண்டும்" என்று திருவாவடுதுறையிலிருந்த சில தம்பிரான் களும் பிறரும் கேட்டுக்கொள்ள அவ்வாறே ஒரு யமகஅந்தாதியை இவர் இயற்றினர். அவ்வந்தாதியில் யமகவகை அழகாக அமைந் திருக்கின்றது; 'நவகோடி சித்த', 'கனகத்தியாகந்த', 'மாளி கைத் தேவனே', 'பஞ்சாக்கரவை', 'அரசவனத்தை', 'காமாசி லாமணி' என்று அத்தலத்தின் தொடர்புடைய சொற்றொடர் கூலையும், 'அண்ணுமலையத்தனே', 'தக்க சிதம்பரவா', 'வர சங்கமங்கை', 'தலையாலங்காடவர்' என்று பிறதலப்பெயர் கூலையும், 'மானக்கஞ்சாற', 'கண்ணப்பரை வரை' என்று நாயன்மார் பெயர்கூலையும் யமகத்திலமைத்து அவற்றிற்கேற்பப் பொருளை முடித்திருத்தல் இவருடைய கவியாற்றலைப்புலப்படுத்து கின்றது.

---

* ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 1—10.
† ஷை ஷை 11-20.
‡ ஷை ஷை 1925-2026.

புதுச்சேரி சென்றது.

பிரபவ வருஷ ஆரம்பத்தில் (1867) திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ அம்பலவாண தேசிகரும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரும் திருவண்ணாமலைக்கு யாத்திரையாகப் புறப்பட்டார்கள். உடன் வரும்படி விரும்பினமையால் மாணாக்கர்களோடு இவரும் சென்றனர். அங்கங்கேயுள்ள ஸ்தலங்களைத் தரிசித்தும் நிகழ்ந்த சிறப்புக்களைக் கண்டு ஆனந்தித்தும் இவர் திருவண்ணாமலையை அடைந்தார். அத்தலத்திலேயே ஸ்வாமி தரிசனஞ் செய்துகொண்டு சில தினம் இவர் இருந்தார். அப்போது அங்கே புதுச்சேரியிலிருந்து வந்து அழைத்த சவராயலு நாயகர் முதலிய அன்பர்கள் விருப்பத்தின்படி, ஆதீன கர்த்தரவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு இவர் புதுச்சேரிக்குப் புறப்பட்டுச் சென்றார். போகும்போது அந்த நகரத்துக்கு அருகிலுள்ள சிவஸ்தலமாகிய *வில்வராயநல்லூர் சென்று அதிலுள்ள ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். அந்தச் சத்திரம் புதுச்சேரியிலே செல்வவானாகவிருந்தவரும் பெருங்கொடையாளியும் வக்கீலுமாகிய தானப்பாசாரியாரென்பவராற் கட்டப்பட்டது. அதில் இருந்த காரியஸ்தர்கள் இவரைத் தக்கவாறு உபசரித்து இவருக்கு விருந்து செய்வித்தனர். அங்கே இப்புலவர் சிகாமணி வந்து தங்கியிருத்தலை யறிந்த புதுச்சேரி வாசிகளிற் சிலர் அங்கேவந்து இவரை வரவேற்று வேண்டிய உபசாரங்களைச் செய்தார்கள். தானப்பாசாரியாரைச் சார்ந்தவர்களும் வந்து புதுச்சேரிக்கு வரவேண்டுமென்று அழைத்தார்கள். அப்பொழுது தானப்பாசாரியாருடைய செல்வப் பெருக்கத்தையும் கௌரவத்தையும் தமிழுணர்ச்சியையும் அவர் வித்துவான்களை ஆதரிக்கும் வண்மையையும் பிற இயல்புகளையும் அவர்கள் வாயிலாகக்கேட்டு இவர் மகிழ்ந்தனர். முன்பும் அவரைப்பற்றிப் பலர் சொல்லக் கேட்டிருந்தவராதலின் மிகுந்த மகிழ்ச்சியை யடைந்து,

விருத்தம்.

† "தானப்பா வடிக்களிறும் பாய்மாவுங் கலையுணர்ச்சித்
தன்மை சால்வி

---

* இது வில்லையெனவும் வில்வேச்சுரமெனவும் வழங்கும்; இதற்குத் தமிழ்ப் புராணமும் இத்தலத்துள்ள அம்பிகைமீது ஒரு பிள்ளைத்தமிழும் உண்டு.

† தானம் பா அடி களிறு; தானம்.- மதம். விதானப்பாவலர் -

தானப்பா வலர்க்குதவிப் புகழ்ப்படாங் கொடுபுதுவை
தன்னில் வாழும்
தானப்பா வில்வையினின் சத்திரச்சீ ரென்னுரைக்கேன்
சசிகோன் மன்றம்
தானப்பா வரம்பையொடு கற்பகமா தியதருக்கள்
சான்ரு மன்ரே''

என்னும் செய்யுளை எழுதி அவருக்கு அனுப்பினர். அதைப் பார்த்த அவர் ஆனந்தமுற்று உடனே புறப்பட்டு வில்வராயநல்லூருக்கு வந்து மிக்க விமரிசையோடு இவரை அழைத்துச்சென்று புதுச்சேரியில் வேண்டிய சௌகரியங்களை அமைத்துக் கொடுத்து அவ்வூரிலேயே சிலதினம் இருந்துசெல்ல வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவ்வண்ணமே இவரும் இருந்தனர். அதுவரையில் இவர் செய்துள்ள நூல்களிற் சில சில பகுதிகளைச் சொல்லச் சொல்லிக் கேட்டு இன்புற்று அவர், ''இதுவரையில் இத்தகைய ஆனந்தத்தை நான் அடைந்ததில்லை'' என்று மகிழ்ந்தார். பழகப் பழக இவருடைய பெருமையை அறிந்து அவர் செய்த உபசாரங்கள் அதிகரித்தன. அவருடைய பேரன்பை நினைந்து அவர்மீது 'தசவிடுதூது' என்னும் ஒரு நூல் இவரால் இயற்றப் பெற்றதன்பர். இப்பொழுது அது கிடைக்கவில்லை.

தானப்பாசாரியாருக்கு நெருங்கிய உறவினரொருவர் பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலருடைய பாடல்களையும் பிரபந்தங்களையும் கீர்த்தனங்களையும் படித்துக்கொண்டே காலங் கழித்து வந்தார். அந்த நாவலர் இயற்றிய குமரனந்தாதிக்குப் பொருள் சொல்லவேண்டுமென்று அவர் இவரைக் கேட்டுக் கொண்டார். அதுவரையில் இவர் அதனைப் படித்திராவிட்டாலும் அவருக்கு அன்புடன் பாடஞ் சொன்னர். அதன் நடையைக் குறித்துப் பாராட்டி, ''மாம்பழக் கவிராயர் நல்ல தமிழ்க் கவிஞர்; அக் கவிராயருடைய செய்யுளை முதன்முறை கேட்டது இங்கேதான்'' என்று இவர் கூறினர்.

அப்பால் இவர் இயற்றிய * துறைசையந்தாதியிற் சில பாடல்களைக் கேட்டவர்கள் அந்நூல்முழுவதற்கும் பொருள் கேட்க

கூட்டமாகிய கவிஞர். சசிகோன் - இந்திரன். மன்றம் - சுதன்மை. அரம்பை - வாழை, தெய்வப்பெண். கற்பகம் - தென்னை, கற்பகமரம்.

* துறைசை - திருவாவடுதுறை.

விரும்பினர்கள்; அச்சுப் புத்தகம் இல்லாமையால், "இதனை அச்சிற் பதிப்பித்தால் எல்லோரும் எளிதிற் பெற்றுப்படிக்கவும் பாடங்கேட்கவும் அனுகூலமாக இருக்கும்" என்று இவரிடம் தங்களுடைய கருத்தை வெளியிட்டார்கள். அவர்களுடைய விருப்பத்தின்படி அவ்வந்தாதி பிரபவ ஆனி (1867) புதுச்சேரியில் அச்சிடப்பெற்றது. அதனைப் பெற்றுப் பலர் இவரிடம் பாடங்கேட்டு இன்புற்றனர்.

அப்பால் தாணப்பாசாரியார், சவராயலு நாயகர் முதலியவர்களால் வலிந்து செய்யப்பெற்ற சிறந்த ஸம்மானங்களையெல்லாம் பெற்றுக்கொண்டு புதுச்சேரியைவிட்டுப் புறப்பட்டு இவர் இடையேயுள்ள தலங்களைத் தரிசித்து அங்கங்கேயுள்ள அன்பர்களாற் பாராட்டப் பெற்றுத் திருவாவடுதுறை வந்து சேர்ந்தார்.

தனியூர்ப் புராணம்.

மாயூரத்திற்கு மேல்பாலுள்ள கூறைநாட்டைச் சார்ந்ததாகத் தனியூர் என்னும் சிவஸ்தலமொன்றுண்டு. அது புழுகிச்சரம் என்றும் வழங்கும். புழுகுபூனை இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றமையால் அத்தலம் அப் பெயர்பெற்றது. அவ்வூர் சாலியச்செல்வர்களுக்கு இருப்பிடமாக உள்ளது. அங்கே பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்த தமிழ்வித்துவானாகிய சாமிநாதையரென்னும் வீரசைவரொருவரது முயற்சியால் முத்துச்செட்டியாரென்னும் சாலியப்பிரபு வேண்டிக்கொள்ள அத்தலத்திற்கு ஒரு புராணம் இவராற் செய்யப்பட்டது. மற்ற நூல்களிற் போலப் புராணத்தின் உறுப்பாகிய கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, கைமிகாரணிய வருணனை, மூர்த்தி தலதீர்த்த மான்மியங்களென்பவை சுருக்கமாக அதில் அமைந்துள்ளன. இவர் அப்புராணத்தில் நாட்டுச் சிறப்புச் செய்து வருகையில் ஸம்மானம் செய்வதற்காகச் சாலியச் செல்வர்களிடம் முற்கூறிய சாமிநாதையர் பணம் சேகரித்து வந்தார். அவர்களுட் சிலர், "எங்கள் சாதியாரைப்பற்றி ஏதாவது அதிற் சொல்லியிருக்கிறார்களா? இந்த ஸ்தலத்திற்குப் புராணம் செய்யும்பொழுது எங்களைப்பற்றியும் சொன்னால்லவோ எங்களுக்குக் கௌரவமாக இருக்கும்?" என்று சொன்னார்கள். அவர் அச்செய்தியை இவரிடம் அறிவிக்கவே இவர், "அதில் என்ன ஆட்சேபம்? அவர்களைப்பற்றிப் பாடவேண்டுவது

இன்றியமையாததே'' என்று சொல்லிவிட்டு அச் சாதியாருடைய தொழிற்சிறப்பு முதலியவற்றைப் பாராட்டிச் சிலேடை முதலிய அணிகளமைய நகரச்சிறப்பிற் பாடினர். அப்பகுதியிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :—

விருத்தம்.

''சீர்தூ செய்த வெள்ளூ முதலிய செழும்பாக் கொண்டு
பார்பர வணியு மிக்க பொருளுமீப் படரச் செய்யும்
ஆர்தரு கலைக ளாலே புலவரு மானூர் நாளும்
தேர்தரு கோசி கத்தாற் செழுமறை யவரு மானூர்.''

[கலைகள் - ஆடைகள், நூல்கள். கோசிகம் - சாமவேதம், பட்டாடை.]

''கோடியுள் ளவரை யிந்தக் குவலயங் குபேர னென்றும்
நாடிய மகவா னென்றும் நவின்றிடு மனையார் மாடத்
தூடிய லொருசா ரெண்ணில் பற்பல கோடி யோங்கும்
நீடிய வளத்த தென்னி னிகரெடுத் துரைப்ப தெங்கே.''

[கோடி - கோடி யளவானபொருள், புதிய ஆடை.]

''கண்ணகன் ஞால மெல்லாங் கலிவளம் பரவு மாறே
எண்ணகன் றொழில்கள் செய்து குரவரு மென்ன நின்றூர்
பண்ணமை யுலக மெங்குந் தானைகள் பரவச் செய்து
வண்ணவில் லரசர் போன்ற ரவர்திறம் வகுக்க லாமோ.''

[குரவர் - ஆசிரியர். தானைகள் - சேனைகள், ஆடைகள்.]

''திருவமிக் கோங்கு மந்தச் செழுநக ரகத்து வாழும்
தருநிகர் புருடர் யாருஞ் சாலிய ரதான்று வெய்ய
பொருவருங் கூற்றின் மேலும் போர்த்தொழில் தொடங்கும் வேற்கண்
உருவமிக் குடைநல் லாருஞ் சாலிய ருண்மை மாதோ.''

[சாலியர் - சாலியச் சாதியிலுள்ளார், அருந்ததியைப் போன்றவர்கள்.]

புழுகிசப்படலத்தில், யானை முதலிய பல அஃறிணைப்பொருள்கள் சிவபிரானைப் பூசித்துப் பேறுபெற்றனவென அத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்ற புழுகு பூனை ஒன்று எண்ணியதாக உள்ள பகுதி சிவநேசச் செல்வர்களுக்கு இன்பத்தை உண்டாக்கும்.

அப்புராணம் அரங்கேற்றப்படுகையில் முத்துச் செட்டியார் முதலிய செல்வர்களும் வித்துவான்கள் பலரும் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர். அப்பொழுது வாசித்தவர் கம்பராமாயணப் பிரசங்கியும் இவருடைய மாணாக்கருமாகிய சாமிநாதக் கவிராயர். பின்பு

சாலியச் செல்வர்கள் தக்க ஸம்மானம் செய்தார்கள். அந்தப் புராணத்தைப்பற்றிச் சுப்பிரமணிய தேசிகர், "இது செய்யுளளவிற் சிறிய புராணமாக இருந்தாலும் பல விஷயங்களும் கற்பனைகளும் பெரிய நூலிற்போலவே நிறைந்து எளிதில் இன்பத்தைத் தருவதாக இருக்கின்றது" என்று சொல்லுவதுண்டு. அதில் உள்ள படலங்கள் எட்டு; செய்யுட்டொகை உ0உ.

அந்தப் புராணம் விபவஷ மார்கழிமீ (1868) அச்சிடப் பட்டது.

பெரியபுராணக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது.

சில சிவநேசச்செல்வர்கள் கேட்டுக்கொண்டபடி ஸ்ரீ மகாவைத்தியநாதையர் தமையனாராகிய ஸ்ரீ இராமசாமி ஐயர் பெரிய புராணத்தைக் கீர்த்தனரூபத்தில் மிகச் செவ்வையாகச்செய்து முடித்துப் பின்பு திருவாவடுதுறையில் ஆதீன கர்த்தர்கள்முன்பு அதனை அரங்கேற்றினர். அப்பொழுது இவர் அந்நூல் பெரிய புராணக் கருத்திற்கு மாறுபாடின்றி நன்றாக அமைந்திருத்தலை அறிந்து மகிழ்ந்து பின்வரும் சிறப்புப்பாயிரச் செய்யுட்களை அளித்தனர்:—

விருத்தம்.

"நாடுவா னவர்முனிவர் தொழுதேத்த வானந்த
நடன மன்றுள்
ஆடுவா னடியெடுத்துக் கொடுப்பவுயர் சேக்கிழார்
அருளிச் செய்த
பாடுவான் புராணத்தை யெழுதுவார் வாயாரப்
படிப்பா ரின்பம்
நீடுவான் சிந்திப்பா ரானுர்க ளாலுலும்
நிலத்து வாழ்வார்"

"அடியெடுத்துக் கொடுத்தவன்போற் றண்ணுமையா கிடமுவி
அளவா வின்பம்
படியெடுத்துக் கொளப்புரியா விதமுணர்ந்தாங் கதினுளநாற்
பதமுங் கொண்டோர்
கொடியெடுத்த நிறத்தவன்வாழ் பதமுதற்பல் பதங்கடத்து
குணரும் வேட்கைக்
கடியெடுத்து வீசுபல பதஞ்செய்தா னனையவன்யார்
கரைவா யென்னின்"

" பொன்னிவளந் தருநாடு புரிதவத்தால் * வையையெனும்
புரிதோன் றிற்று
மின்னியது செய்தவத்தாற் பஞ்சநத மாமறையோன்
விருப்பின் வந்தான்
மன்னியவன் புரிதவத்தான் மறைநாலு மெனவுதித்த
மைந்தர் தம்முட்
பன்னியது தன்னதெனத் தன்னியல்பி னுணருமொரு
பான்மை மேயோன் "

" சாம்பமூர்த் திக்கிளையா னென்பதலா விளையானெத்
தமிழ்வல் லோர்க்கும்
மேம்படுமா வயித்தியநா தனுக்குமூத் தானென்று
விளம்பல் போல
ஆம்பலவா மிசையினுமூத் தானொழுக்கம் பலதிரண்டால்
அன்ன மெய்யான்
ஓம்பல்புரி யிராமசா மிச்சுகுண மாமறைதேர்
உயர்ச்சி யோனே "

" ஓங்குபுக ழிராமசா மிச்சுகுண மறையவன்பாட்
டுவந்தான் வாமம்
தாங்குகற்றோ கையுமருட்சுப் பிரமணிய குருவெனுஞ்சேய்
தானு மேவ
வீங்குதுறை சையினாளு மெய்கண்டான் சந்தானம்
விளங்க மேயோன்
பாங்குபுனை பேரருளம் பலவாண தேசிகனெம்
பரமன் றானே."

[வாமம் தாங்கு கல் தோகை-இடப்பக்கத்தில் நாலவிட்ட காவியுடையின் தலைப்பு, இடப்பாகத்தில் கொண்ட உமாதேவியார்; ' வாமம் .....மேவ ' என்பது சிவபெருமானுக்கும் அம்பலவாண தேசிகருக்கும் சிலேடை.]

மாயூரப் புராணம்.

" மற்ற ஸ்தலங்களுக்கெல்லாம் புராணம் செய்கின்றீர்களே ; இந்த ஸ்தலத்திற்கு நாடுநகரச் சிறப்புக்களுடன் ஒரு புராணம் செய்ய வேண்டாமா ? நீங்கள் இவ்வூரில் வாசம்செய்தற்கு அடையாளமாக ஒருபுராணம் செய்தால் நன்றாயிருக்கும் " என்று ஸ்ரீ மாயூரநாதர் கோயிற் கட்டளைத் தம்பிரானாக இருந்த முத்துக்

* இது வையைச் சேரியெனவும் வழங்கும்.

குமாரத் தம்பிரானவர்களும் சில சைவப்பிரபுக்களும் மற்றத் தமிழபிமானிகளும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவ்வண்ணம் அது வடமொழிப் புராணத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுத் தமிழிற் செய்யுள் நடையாக இவரால் இயற்றப்பட்டது. மாயூரம் ஸந்நிதித் தெருவிலிருந்த ஓரபிஷேகஸ்தர் வேண்டு கோளின்படி சைவர்களுக்குரிய நித்தியகர்ம விதிகள் செய்யுள் நடையாகச் செய்யப்பெற்று அப்புராணத்தின் இறுதியிற் சேர்க்கப்பட்டன. அப்புராணத்தை எழுதியவரும் அரங்கேற்றும் பொழுது படித்தவரும் அவ்வூரில் இருந்த முத்துச்சாமிபிள்ளை யென்பவர்.

அப்புராணத்திலுள்ள படலங்கள் கூக ; செய்யுட்டொகை கஅகூச.

அந்நூலில், தருமன் பூசித்த படலம் மூழுவதும் சுட்டளைக் கலித்துறையால் அமைந்திருக்கின்றது. அகத்தியர் பூசித்தபடலத்தில் சுவைபொதிந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஒன்று உண்டு. அம்பிகைகொண்டருளிய மயில்வடிவத்தின் சிறப்பைக் கூறும்,

கலிநிலைத்துறை.

"வரையு தித்திடு மயிலென்று மயிலிய லென்றும்
புரையில் கேள்விய ருருவகஞ் செய்தலும் போற்றி
உரைசி றப்பவன் மொழித்தொகை செய்தலு மொருவக்
கரைசெய் சாதிப்பே ரெனமயி லாயினள் கவுரி"

(மாயூரப்படலம், ச)

என்னும் செய்யுளும், அம்பிகை மயில் வடிவங்கொண்டவுடன் ஸ்ரீ மாயூரநாதரும் மயில் வடிவங்கொண்டதைக் கூறும்,

கலிநிலைத்துறை.

"சத்த னெவ்வுருக் கொள்ளுமவ் வுருவிற்குத் தகவே
சத்தி யும்முருக் கொளுமெனச் சாற்றலு மிருக்கச்
சத்தி யெவ்வுருக் கொள்ளுமவ் வுருவிற்குத் தகவே
சத்த னும்முருக் கொளுமென றரையெழுந் தன்றே"

(ஷை, உக)

என்னும் செய்யுளும், அகத்தியர் முருகக்கடவுளைத் துதிசெய்ததாகவுள்ள,

தாவு கோச்சகக் கலிப்பா.

"கடியேறு மலரோனைக் கடுஞ்சிறையில் வைத்துப்
படியாதி யெவ்வுலகும் படைத்தருளும் பிரானை
முடியாத முதலோனை மூவர்பெரு மானை
வடிவேலன் றனைப்பேசா வாயென்ன வாயே
வள்ளிமண வனைப்பேசா வாயென்ன வாயே"

(அகத்தியர் பூசைப்படலம், உஉ.)

என்னும் செய்யுளும் சுவை யமைந்து விளங்குகின்றன.

அந்தப் புராணம் அரங்கேற்றி முடிந்தவுடன் அதனை அச்சிட வேண்டுமென்று சிலர் விரும்பியபடி விபவ வரு புரட்டாசிமீ (1868) சென்னையிலுள்ள தி. சுப்பராய செட்டியாருக்கு அப்புத்தகத்தை அனுப்பினர். அவருடைய மேற்பார்வையில் அந்நூல் அந்த வருடம் தைமாதத்துக்குள் அச்சிடப்பட்டு நிறைவேறியது. தைமாதத்தில் சுப்பராய செட்டியார் மனைவியார் தேகவியோகம் அடைந்தனர். சுபஸ்வீகரண காலத்தில் வந்த வித்துவான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் சுப்பராய செட்டியார் அப் புராணத்திலுள்ள சிலபகுதியைப் படித்துக்காட்டினர். முதலியார் அதைக்கேட்டு அதன் அருமையை வியந்தனர்.

"அந்தியேஷ்டியின்போது காஞ்சீபுரம் ம-ள-ள-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் வந்திருந்தார்கள். மாயூர புராணத்தில் சில சில பகுதிகளை வாசித்துக் காட்டினேன். மிகவும் ஆராமைப்பட்டார்கள்" என்று பிள்ளையவர்களுக்குச் சுப்பராய செட்டியார் (மாசிமீ சுவ) எழுதிய கடிதத்தின் பகுதி இதனைத் தெரிவிக்கின்றது.

ஸ்ரீ காசிரகசியம்.

காசியாத்திரை பலமுறை செய்தவரும் அக்காலத்தில் திருவிடைமருதூர்க்கட்டளை அதிகாரம் பெற்றுப் பார்த்துவந்தவருமான ஸ்ரீசுப்பிரமணியத் தம்பிரானவர்களுடைய விருப்பத்தின்படி ஸ்ரீ காசியின் தலவரலாறுகளைக் கூறும்நூல்களுள் ஒன்றுகிய ஸ்ரீ காசிரகசியமென்னும் நூல் இவரால் தமிழிற் செய்யுள் வடிவாக இயற்றப்பட்டது. அந்நூலை அவர் காசியிலிருக்கும்பொழுதே ஒரு வடமொழி வித்துவானைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்து

தமிழ் வசன நடையில் தாமே எழுதிவைத்திருந்தனர். அதைத் துணையாகக் கொண்டே இவர் ஸ்ரீ காசிரகசியத்தை இயற்றினர். இச்செய்தியை,

விருத்தம்.

" ஆனதிரு வாவடுதண் டுறைசமச்சி வாயனடிக்
கடிமை பூண்டு
ஞானநெறி யடைந்தவனற் காசியாத் திரைபலகால்
நயந்து செய்தோன்
ஈனமினற்குணமனைத்து மோருருக்கொண்டெனப்பொலிவோன்
எண்ணி லாத
மோனமுனி வர்புகழப் பொலிதவச்சுப் பிரமணிய
முனிவ னென்போன் "

" உரவுமலி கருங்கடல்சூ ழுலோகோப காரமிதென்
றுள்ளத் தோர்ந்து
விரவுவட மொழியைமொழி பெயர்த்தெடுத்துச் செந்தமிழால்
விளங்கு மாறு
கரவுதவிர் சிறப்புடைத்தா யறமுதலுற் பயனளிக்கும்
காட்சித் தாய
பரவுபுகழ்த் திருக்காசி மான்மியமா மந்தணத்தைப்
பாடு கென்ன "

[மந்தணம் - இரகசியம்.]

வேறு.

" அனையவன் மொழிந்த வார்த்தை யாருயிர்க் குறுதி யாகும்
வினையம துணர்ந்து பாடும் விதஞ்சிறி துணரே னெனும்
தனையில்பே ராசை தூண்ட நாணைனுந் தளையி னீங்கிப்
புனைதரு தமிழி னுலே பாடிடப் புகுந்தேன் மன்னே "

(காசிரகசியம், பாயிரம், 24 - 6)

என்னும் செய்புட்களால் உணரலாம்.

அந்நூல் திருவிடைமருதூர் மகாலிங்கஸ்வாமி திருக்கோயிலி லுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் அரங்கேற்றப்பெற்றது.

அதனை வடநாட்டிலிருந்து சுப்பிரமணியத் தம்பிரானவர்கள் கொணர்ந்த அருமையை,

விருத்தம்.

"வானுறைதி யாகரா சரையிங்குக் கொடுவந்த
வள்ளல் போலும்
தேனுறைகாக் கயிலையமர் போதமிங்குக் கொடுவந்த
செல்வன் போலும்
மானுறைகா சியினின்றம் மந்தணஞ்செந் தமிழ்த்தேயம்
வரக்கொ ணர்ந்த
மீனுறைநீர்த் துறைசையிற்சுப் பிரமணிய முனிவர்பிரான்
மெய்ச்சீர் வாழ்க"

[போதம் - சிவஞானபோதம். கொடுவந்த
செல்வன் - ஸ்ரீபரஞ்சோதி முனிவர்.]

என்னும் இந்நூலின் இறுதிச் செய்யுளிலும் இவர் பாராட்டியுள்ளார்.

அந்நூலை இவர் செய்து வருகையில் எழுதியவரும், அரங்கேற்றுகையிற் படித்தவரும் இவரிடத்தில் அப்பொழுது பாடங் கேட்டுக்கொண்டிருந்தவரான சுந்தரப்பெருமாள்கோயில் அண்ணாசாமி ஐயரென்பவர்.

அந்நூல் உசு அத்தியாயங்களையும் சoகஉ செய்யுட்களையும் கொண்டது; அந்நூலிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு:—

விருத்தம்.

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.)

"போகமென் பனவ ருந்தல்
பொருந்தன்மற் றவைக ளுள்ள
ஆகவோர் பகலி னள்ளும்
ஆன்றதோ ரிரவி னள்ளும்
பாகமார் பதஞ்சென் றேற்றும்
பரிந்துசென் றாடல் தீர்த்தும்
ஏகநா யகனே நிற்றற்
கியைந்தவர் துணைத்தாள் போற்றி."

வேறு.

"கந்த மூல பலமருந்திக்
காற்ரு லுதிர்ந்த சருகருந்தி
முந்த வெழுநீர்த் துளியருந்தி
முகிழ்க்கும் பசும்பொற் கொழுந்தருந்தி
வந்த தருந்தி யதுவுநீத்
தமர்வார் காசி மாதேவன்

எந்த வுணவுண் டமர்ந்தாலும்
எளிதி னருளும் வகையுணரார்.''

(திருமால் திருமகளுக்குபதேசித்த. உங)

[வந்தது - காற்றை; வந்து - காற்று.]

வீரவனப் புராணம்.

பின்பு புதுவயல் முருகப்ப செட்டியார் முதலிய சில தனவைசியப் பிரபுக்கள் வேண்டுகோளின்படி * வீரவனப் புராணம் இவரால் இயற்றப்பெற்றது. அதிலுள்ள படலங்கள் கச; செய்யுட்கள், எ0ச.

வீரவனக் கோயிலில் இறைவன் ஸந்நிதானத்தில் அப்புராணத்தை இவர் அரங்கேற்றினர்; கேட்ட தனவைசியப் பிரபுக்கள் தக்க ஸம்மானஞ் செய்து அனுப்பினர்கள்.

அத்தலத்திற் புதைந்திருந்த சிவலிங்கப் பெருமானைக் கிழங்கென்றெண்ணித் தன்னுடைய கருவியினல் குத்தித் தழும்புபடச் செய்து பின் அறிவு வரப்பெற்று உண்மையை உணர்ந்த வீரனென்னும் வேட்டுவன் இரங்கியதாக உள்ள,

விருத்தம்.

''என்னையாள் தரவிக் கானகத் திருந்தார்
இருந்ததை யறிந்தில னந்தோ
பொன்னைநேர் சடிலத் திறைவனு ரிங்குப்
பொருந்திய தறிந்தில னந்தோ
அன்னையே பொருவும் அறவனு ரிங்ஙன்
அமர்ந்ததை யறிந்தில னந்தோ
முன்னையூழ் கொல்லோ பலருமுள் ளிரங்க
முடித்தனன் முடிந்திலே னென்பான்''

(வீரசேகரர் திருமுடித்தழும்பேற்ற படலம், உஅ)

என்னும் செய்யுளும், அப்பொழுது அவனுக்கிரங்கிய சிவபெருமான் ஓரந்தண உருவத்தோடுதோன்றிக் கூறிய விடையாக உள்ள,

விருத்தம்.

''பரம்பரன் முடியிற் றழும்புறச் செய்தேம்
பாவியே மென்றுநீ கவலல்
பிரம்படித் தழும்பும் வில்லடித் தழும்பும்
பெயர்த்தெறி கல்லடித் தழும்பும்

---

* இவ்வூர் சாக்கோட்டை யெனவும், சாக்கையெனவும் வழங்கும்.

வரம்பறு சிறப்பிற் செருப்படித் தழும்பும்
வயங்கிய* வாள்வெட்டுத் தழும்பும்
நிரம்பிய வியலிற் பரிக்குரத் தழும்பும்
நிகழுறு பூசைவாய்த் தழும்பும்''

''குடம்புரை செருத்தற் றேனுவோ டடுத்த
குழக்கன்றின் குளப்படிச் சுவடும்
தடம்புயத் தொருவன் கதையடிச் சுவடுந்
தாங்கிய நமக்கிதோர் பொருளோ
இடம்பட வுணரி னின்னமும் பலவால்
இசைப்பது நமக்குமுற் றுது
திடம்படு மிவைபோற் பலவுநந் தமக்குத்
திருவிளை யாட்டெனத் தேர்தி'' (ஷே, கூகூ - ச)

என்னும் செய்யுட்களும் படித்து இன்புறற்பாலன.

கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்.

இவர் நாட்டுக்கோட்டை நகர்களுக்குச் சென்று தம் கவியாற்றலைப் புராணங்கள் செய்வதனால் வெளிப்படுத்தி வருகையில் கன்னபுரம் என்னும் ஊரிலிருந்த சிவபக்தர்கள் சிலர் இவர் பல பிள்ளைத்தமிழ்களைப் பாடியிருக்கின்றனரென்பதை அறிந்து இவர் பால்வந்து தங்கள் ஊரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள பாகம்பிரியாளென்னும் அம்பிகையின்மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே ஒரு பிள்ளைத்தமிழ் இவரால் இயற்றி அரங்கேற்றப்பட்டது. கேட்டுக்கொண்ட கனவான்கள் தக்க ஸம்மானம் செய்தார்கள். அந்நூற் செய்யுட்கள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். எவ்வளவோ முயன்றும் அந்நூல் கிடைக்கவில்லை.

பிரிந்த மாணவர்கள்.

மாயூரத்திலிருக்கும்பொழுது இவரிடம் பாடங்கேட்பவர்களிடம் உள்ளூரார் சிலரும் வெளியூர்களிலிருந்து வருவோர் சிலரும், ''ஐயாவிடம் இருந்தால் எப்பொழுதும் உடனிருக்க

---

*வாள் வெட்டுத் தழும்புற்றதலம் வாட்போக்கி; குதிரைக் குளம்புத் தழும்புற்ற தலம் தென்திருமுல்லைவாயில்; பூசைவாய்த் தழும்புற்ற தலம் மாயூரத்துக்கருகிலுள்ள குன்றமருகர்; பசுக்கன்றின் குளம் படிச்சுவடு பெற்ற தலம் திருப்பேரூர்.

வேண்டும்; ஊருக்கு அனுப்பமாட்டார்கள்; ஆதலால் சிலநூல்களைப் பாடங்கேட்டுக்கொண்டு மெல்ல நழுவிவிடுங்கள். நீங்கள் இவரைவிட்டுப் பிரிந்துவந்து பிரசங்கம் முதலியன செய்தால் நல்ல பொருள்வருவாயும் புகழும் உங்களுக்கு உண்டாகுமே. இப்படியே இருப்பதனால் என்ன பிரயோசனம்?" என்றுகூறிக் கலைத்தார்கள். அதனால் சில மாணாக்கர்கள் இவரை விட்டுப் பிரிந்து செல்லவே இவருக்கு மனவருத்தம் மிகுதியாக இருந்து வந்தது.

அங்ஙனம் பிரிந்துசென்றவர்களுள் ஒருவர் பிள்ளையவர்களைப் போலவே தாமும் இருக்கவேண்டுமென்னும் நினைவினராய் இவரைப் போலவே நடையுடைபாவனையை மேற்கொண்டு ருத்திராட்சகண்டி, வெள்ளிப்பூணூல்ள பிரம்பு, விபூதி வைத்தற்குரிய வெள்ளி ஸம்புடம் முதலியவற்றோடு, மாணவர்களாகச் சிலரை உடனழைத்துக் கொண்டு இவரை அறியாத பிரபுக்களிடத்திற் சென்று, "இன்னகனவான் இன்னாரைக்கொண்டு இன்ன புராணத்தை இயற்றுவித்தார்; தாங்களும் ஒருபுராணம் என்னைக் கொண்டு செய்வித்தால் தங்களுடைய புகழ் மிகவும் பரவும்" என்றுகூறியும் பிறரைக்கொண்டு கூறுவித்தும் சில ஸ்தலபுராணங்களும், சில பிரபந்தங்களும் பாடிவந்தனர். முதலிற் பாடல்கள் சாதாரணமாக இருந்தாலும் பிள்ளையவர்களிடம் சிலகாலம் இருந்து வந்த பழக்கத்தாற் பின்பு செப்பமுற்று விளங்குவனவாயின. அவர்களுட் சிலர், வெளியிடங்களில் இவரிடம் பாடங் கேட்டதாகமட்டும் கூறி இவரைத்தோத்திரஞ்செய்து பயனடைந்தார்களேயன்றிப் பின்பு இவருடைய இறுதிக்காலம்வரை இவரைப் பார்க்க வரவேயில்லை. அதற்குக்காரணம் தம்மைக்கண்டால் ஏன் வரவில்லையென்று இவர் கேட்பாரென்ற அச்சமே.

சிவஞான சித்தியார் பதவுரைச் சிறப்புப்பாயிரம்.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறையில் சைவசித்தாந்த சாஸ்திர பாடம் சொல்லி வருவதுண்டு. அப்பொழுது படிப்பவர்கள் இடர்ப்படுவதை யறிந்து சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு ஒருபதவுரையை அத்தேசிகர் வரைந்தளித்தனர்; அவ்வுரை மிகப்பயன்படுவதாயிற்று. அதனை இக் கவிஞர் பார்த்த பொழுது இன்புற்றுச் சில அன்பர்கள் விருப்பத்தின்படி அவ்வுரைச் சிறப்புப்பாயிரமாக ஐந்து செய்யுட்கள் இயற்றினர். அவை வருமாறு :—

விருத்தம்.

"ஒருபரைநேர் தரவுலகத் துயிர்பலவும் விருத்தியுற
ஓம்பி மீட்டும்
கருமலவே ரறுத்தருளித் தானெக்கும் பெருங்கருணைக்
கடவுள் ஞானப்
பெருவலிய னெமக்கெளியன் பேணுதார் தமக்கரியன்
பெருகா னந்தம்
தருதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகன்பொற்
சரணஞ் சார்வாம்."

"மூற்றுணர்ந்த வருணந்தி சிவனருள்செய் சித்தியெனும்
முடிபா நன்னூற்
குற்றுணர்ந்த சிவஞான மாமுனிவ னுரைத்தபொழிப்
புரையிம் மண்மேற்
கற்றுணர்ந்த சிலர்க்கன்றிப் பலர்க்குமுப காரமுறுக்
கருத்தா ழத்தைச்
சற்றுணர்ந்த வெம்மனோர் களுமிடர்தீர்ந் தெளிதுணரும்
தன்மை யோர்ந்து,"

"வளர்திருவா வடுதுறையம் பலவாண தேசிகன்கண்
மணியாய் நாளும்
தளர்வறவந் தருள்பொழிசுப் பிரமணிய வெங்கள்குரு
சாமி யென்பான்
விளர்த்துமப் பொழிப்புரையின் விரோதமுறுப் பதவுரையாம்
விளக்கந் தந்தான்
கிளர்தருமற் றவற்கியாது புரிதுமென்றும் பணிதலன்றிக்
கிளக்குங் காலே."

"நல்லானந் துறைசையிற்சுப் பிரமணிய குருசாமி
நவிறல் போன்முன்
இல்லாமை யானன்றே சமவாதப் படுகுழிவீழ்ந்
திழிந்தார் சில்லோர்
ஒல்லாத மாயாவா தக்கரிய சேறழுந்தி
உழன்றூர் சில்லோர்
பொல்லாத வினுமூளபல் புகர்மதக்கோட் பாட்டழுந்திப்
போனூர் சில்லோர்."

"இனியாது மெண்ணராய்த் திகழ்திருவா வடுதுறையை
எய்தி யாரும்
தனியாரு மவனடியார்க் கடியாராய்ச் சித்தாந்த
சைவ ராகி
நனியாருஞ் சிவானந்தப் பெரும்பரவை யிடைத்தோய்ந்து
நாளும் வாழ்வார்
பனியாரு மிவரினைய ரேலவற்காட் படுமெஞ்சீர்
பகரொ ணுதே."

ஸ்ரீ பிரம்மவித்தியாநாயகி பிள்ளைத்தமிழ்.

திருவெண்காட்டுக்கு ஒருமுறை இவர் ஸ்வாமி தரிசனம் செய்யப் போனர். அப்பொழுது அங்கே இருந்த சிவநேசச் செல்வரும் வேளாளப் பிரபுவுமாகிய நடராசபிள்ளையென்பவருடைய வேண்டுகோளின்படி அந்தத் தலத்திற் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீ பிரம்மவித்தியாநாயகி மீது இவர் ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றினர். அது மிக்க சுவையுள்ளது; அந்நூல் அரங்கேற்றப்படவில்லை; பின்பு சில வருடம் வரையில் இவர்பால் இருந்துவந்தது; சிலர் படித்தும் இன்புற்றார்கள்; அப்பால் இரவலாக வாங்கிச் சென்ற ஒருவர் திரும்பக் கொடுக்கவில்லை. பின்பு எவ்வளவோ முயன்று பார்த்தும் அது கிடைக்கவில்லை.

சாய்வுநாற்காலிப் பாட்டு.

இவர் திருவாவடுதுறைபிலிருந்து அடிக்கடி மாயூரஞ்சென்று சிலதினம் இருந்துவிட்டு வருவார். ஒருமுறை மாயூரம் சென்றிருந்தபொழுது இவருக்குச் சுரநோய் கண்டது. அதனால் உடம்பு தளர்ச்சியுற்றது; இருப்பதற்கும் படுப்பதற்கும் இயலவில்லை. வைத்தியர்கள் சாய்வு நாற்காலியை உபயோகித்துக்கொண்டால் சௌகரியமாக இருக்குமென்று சொன்னர்கள். அப்பொழுது தரங்கம்பாடிக் கோர்ட்டில் உத்தியோகத்திலிருந்தவரும் வேதநாயகம் பிள்ளையின் தம்பியுமாகிய ஞானப்பிரகாசம் பிள்ளைக்குச் சாய்வு நாற்காலி யொன்று வேண்டுமென்று குறிப்பித்து,

குறள் வெண்பா.

1. "பேராளா ஞானப் பிரகாச வள்ளலெனும்
சீராளா விக்கடிதந் தேர்"

விருத்தம்.

2. "உறுவலியி னிடங்கொண்டு வனப்பமைந்த நாற்காலி
ஒன்று வேண்டும்
மறுவறுநாற் காலியெனல் யானேயன்று குதிரையன்று
வல்லே றன்று
கறுவகல்பாற் பசுவன்ரு லிவையெல்லா மியங்குதல்செய்
கடன்மேற் கொள்ளும்
பெறுபவர்பா லியங்காது வைத்தவிடத் தேயிருக்கப்
பெற்ற தாமே"

3. "அத்தகைய தொன்றனுப்பி னதிலமர்ந்து மிக்கசுகம்
அடைவேன் யானும்
உத்தமநற் குணத்திலுயர் நீயுமிகு சீர்த்தியையா
ஒளிரா நிற்பை
வித்தகமற் றஃதெவ்வா றிருப்பதற்கு மிடங்கொடுத்தல்
வேண்டு மேய
சுத்தமிகு மதனேவரு பவன்பாலே யனுப்பிதெல்
தூய தாமே"

என்னும் மூன்று செய்யுட்களைப் பாடி ஒரு வேலைக்காரன் வசம் அனுப்பினர். அவற்றைக் கண்டவுடனே அவர் நல்ல சாய்வு நாற்காலி ஒன்று வாங்கி அவனிடம் கொடுத்தனுப்பினர். அதனை இவர் உபயோகித்துவந்தார்; அது பின்பு இவருடைய வாழ்நாள் முழுதும் இவர்பாலே இருந்து உதவியது.

* திருநாகைக் காரோணப் புராணம் இயற்றத்தொடங்கியது.

விபவ வருஷ ஆரம்பத்தில் (1868 ஏப்ரலில்) நாகபட்டினத்தில் ஓவர்ஸியராக இருந்த அப்பாத்துரை முதலியார் முதலிய உத்தியோகஸ்தர்களும் தேவாரத் திருக்கூட்டத்தலைவராகிய வீரப்ப செட்டியார் முதலியவர்களும் இவரைத் திருநாகைக் காரோணப் புராணத்தைப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே செய்தற்கு இவர் இணங்கினர். ஒரு தலபுராணம் பாடுவதற்கு முன் அத்தலத்திற்குச் சென்று அதனையும் அதனைச் சார்ந்த இடங்களையும் பார்த்து அவற்றைப்பற்றிய செய்திகளை முதியோர் முகமாக அறிந்துகொண்டு தொடங்குதல் எப்பொழுதும் இவருக்கு வழக்கமாதலால் இவர் மாயூரத்திலிருந்து நாகபட்டினம்

* திருநாகைக்காரோணம் - நாகபட்டினம்.

சென்று சிலகாலம் இருந்து பார்க்கவேண்டிய இடங்களைப் பார்த்து விசாரிக்க வேண்டியவற்றை யெல்லாம் விசாரித்து அறிந்து கொண்டனர்; அத்தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தை அப்பொழுது அங்கே இருந்த திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மகாதேவ சாஸ்திரிகளென்பவரைக் கொண்டு தமிழில் வசனநடையாக மொழிபெயர்ப்பித்து எடுத்துக்கொண்டு மாயூரம் வந்தார்.

மாயூரத்துக்குப் புறப்படும்பொழுது அன்பர்களிற் சிலர், "நீங்கள் செய்யும் இப் புராணம் காஞ்சிப்புராணத்தைப்போல் இருக்கவேண்டும். அதில் சுரகரீசப் படலத்தில் மந்தரகிரியின் வளத்தைக் கூறப்புகுந்த சிவஞான முனிவர் பல சித்திரகவிகளை அமைத்ததுபோல நீங்களும் இப்புராணத்தின்கண் ஏற்ற இடத்தில் அவற்றை அமைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளின்படியே நாகைக் காரோணப் புராணத்தில் நந்திநாதப் படலத்திற் சித்தாச்சிரம வருணனையிற் பல வகைச் சித்திர கவிகளை இவர் செய்தமைத்திருக்கின்றார்.

கோபால பிள்ளையின் தருக்கு அடங்கினமை.

புராணம் தொடங்கிச் செய்யப்பெற்று வருகையில் அதனை எழுதி வந்தவர் முத்தாம்பாள்புரம் (ஒரத்த நாடு) கோபால பிள்ளை யென்பவர். மாணக்கராக இவரிடம் வருவதற்கு முன்பு அவர் முத்தாம்பாள்புரம் தமிழ்க்கலாசாலையில் உபாத்தியாயராக இருந்து சிறந்த கவிஞராக விளங்கிய நாராயணசாமி வாத்தியா ரென்பவரிடம் பாடங் கேட்டவர்; நல்ல இயற்கை அறிவுடையவர். பனையேட்டில் எழுதுவதில் அவருக்கு மிக்க ஆற்றல் உண்டு. இயல்பாகவே, 'எழுதும் வன்மை நமக்கு அதிகம்' என்று அவர் எண்ணிக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்கையில் ஒருநாள் இவருடைய வீட்டு விசாரணையைப் பெரும்பாலும் வகித்து வந்தவரும் இவரிடத்தில் மிக்க அன்புடையவருமாகிய வைத்தியலிங்கம் பிள்ளையென்பவர் இவர் சயனித்திருக்கையில் மாணக்கர் கூட்டத்திலிருந்து பேசிக்கொண்டிருந்தார். அவர் கோபாலபிள்ளையை விரைவாக எழுதுவதிற் சமர்த்தரென்று பாராட்டினர். அதனைக் கேட்ட கோபாலபிள்ளை, "எல்லாம் சரிதான்; ஐயா அவர்கள் என்னுடைய கை வலிக்கும்படி பாடல் சொல்லுகிறார்களில்லையே" என்று விடை பகர்ந்தார். அந்தச் சமயம் அவர் எவ்வளவோ மெல்லப் பேசியும் சயனித்திருந்த

இவருடைய காதில் அவருடைய சொல் விழுந்தது. உடனே எழுந்து வந்தால், தாம் சொல்லியதைக் குறித்துக் கோபால பிள்ளை நாணமும் அச்சமும் அடைவாரென்று நினைந்து சிறிது நேரம் படுக்கையிலேயே இவர் படுத்திருந்துவிட்டு அப்பால் எழுந்து வந்தார்; பாடஞ்சொல்லுதல், நூல் எழுதுவித்தல் முதலியன அப்பால் வழக்கம்போல் நடைபெற்றன.

பின்பு ஒருநாட்காலையில் வழக்கப்படியே அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்தார். எழுதவேண்டிய ஏடும் கையுமாகக் கோபால பிள்ளை வந்தனர்; அவருடன் வேறு சில மாணாக்கர்களும் செய்யுள் செய்வதைக் கவனிக்கும் அன்பர்களும் வந்து வேறு வேறிடத்தில் இருந்து வழக்கப்படியே கவனித்துக்கொண்டிருந்தார்கள். இக் கவிஞர்பிரான் அப் புராணத்தில் மேலே நடக்கவேண்டிய பகுதியின் வசனத்தைப் படிக்கச்சொல்லிக் கேட்டுவிட்டு உடனே செய்யுள் செய்யத் தொடங்காமல் ஒரு நாழிகைவரையில் யோசனை செய்து மூக்குத்தூளைப் போட்டுக்கொண்டு கையை உதறிவிட்டுப் பாடல் சொல்ல ஆரம்பித்தார்.

இவர் மூக்குத்தூளை அபூர்வமாக உபயோகிப்பது வழக்கம். அதைப் போட்டுக்கொண்டு தொடங்கிவிட்டால் யாதொரு தடையுமின்றிப் பாடல்களைச் சொல்லிக்கொண்டே செல்வார். அப்போது பக்கத்திலுள்ளவர்களெல்லாம் அன்றைக்கு மிக்க வேகமாகச் செய்யுட்கள் இயற்றப்படுமென்று அறிந்துகொள்வார்கள்.

ஆரம்பித்த இவர் ஓய்வின்றிச் சொல்லிக்கொண்டே சென்றார். அன்று நடந்த பகுதி சுந்தரவிடங்கப்படலம். அது கற்பனை நிரம்பிய பாகம். எழுதினவரும் கையோயாமல் எழுதிக்கொண்டேசென்றார். தொடங்கிய காலம் காலை 7-மணி; 10-மணி வரையிற் சொல்லிக்கொண்டு வருவதும், 10 - மணிக்குமேலே பூஜை செய்வதற்கு எழுந்து ஸ்நானத்திற்குப் போய்விடுவதும் இவருக்கு வழக்கம். மிக விரைவாக இவர் செய்யுட்களைச் சொல்லிக்கொண்டே சென்றமையால் எழுதுபவராகிய கோபால பிள்ளைக்குக் கையில் நோவுண்டாயிற்று. 'எப்பொழுது பத்து மணியாகும்' என்று எதிர்பார்த்திருந்தார். 10 - மணியாகியும் ஸ்நானத்திற்கு எழாமல் இவர் பாடல்களைச் சொல்லிக்கொண்டே போனார்.

அப்பொழுது தவசிப்பிள்ளை வந்து ஸ்நானத்திற்கு எழவேண்டு மென்று குறிப்பித்தான். சரியென்று சொல்லிவிட்டு எழாமல் மேலும் செய்யுட்களைச் சொல்லிக்கொண்டே வந்தார். மணி பதி னொன்றும் ஆய்விட்டது. கோபால பிள்ளைக்கு வலக்கைச் சுண்டு விரலின் பின்புறத்திலும் இடக்கைக் கட்டை விரலின் நுனியிலும் ரத்தம் குழம்பிவிட்டது. வலி அதிகமாயிற்று; அவராற் பொறுக்க முடியவில்லை. தம்முடைய கஷ்டத்தை ஒருவாறு புலப்படுத்தினால் நிறுத்துவாரென்று நினைந்து ஏட்டைக் கீழேவைத்துவிட்டு இடக் கையை வலக்கையாலும் வலக்கையை இடக்கையாலும் தடவிக் கொண்டும் பிடித்துக்கொண்டும் குறிப்பாகத் தம்முடைய கஷ் டத்தைப் புலப்படுத்தினர். இவர் அதனைக் கவனியாராகிப் பாடல் களைச் சொல்லிக்கொண்டே சென்றார். மணி பதினொன்றரை ஆகி விட்டது. கோபாலபிள்ளை வாய்விட்டுக் கூறுவதற்கு நாணிப் பல் லைக் கடித்துக்கொண்டு எழுதிவந்தார். பக்கத்தில் இருந்தவர்களிற் பெரும்பாலோர் பதினொரு மணிக்கே எழுந்து சென்று விட்டார் கள். இவர் நிறுத்தவேயில்லை. மணி பன்னிரண்டும் ஆயிற்று. அப்பாற் சிறிதளவேனும் தம்மால் எழுத முடியாதென்றுணர்ந்த கோபால பிள்ளை இவர் சிறிது யோசித்துக்கொண்டிருந்த சமயத் தில் திடீரென எழுந்து கையிலே உள்ள ஏடுகளைச் சேர்த்துக் கயிற் றுற்கட்டி எழுத்தாணியை உறையிற் செருகிவிட்டு எல்லாவற்றை யும் இவருக்கு முன்னே வைத்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி எழாமலே கிடந்தார். இவர் அவரைப் பார்த்துவிட்டு, "தம்பி! ஏன் இப்படி? என்ன விசேடம்? எழுந்திரு" என்றார்.

கோபால: "இனி என்னால் எழுதவேமுடியாது. என்னைப் போல எழுதுகிறவர்கள் யாருமில்லை யென்றிருந்த எண்ணம் எனக்கு அடியோடே இன்று நீங்கிவிட்டது. இது கிடக்க; ஐயா அவர்களுடைய பெருமையை இன்றுதான் உண்மையில் அறிந்து கொண்டேன். தேவரீர் எந்தத்தெய்வத்தின் அவதாரமோ, எந்தப் பெரியோர்களுடைய அம்சமோ யான் அறியேன்! இப்படிச் செய் யுள்செய்யும் ஆற்றலை யாரிடத்தும் நான் கண்டிலேன்; கேட்டு மிலேன். இன்றைக்கு நடந்த பாகம் சாதாரணமானதன்று. இதனை மற்றக்கவிஞர்கள் செய்வதாக இருந்தால் எத்தனையோ நாள் பிடிக் குமே. அது யாதொரு வருத்தமுமின்றி விரைவாகப் பாடப்பட் டதே! இந்தப்பணிக்கு உரியவனாக ஆவதற்கு அடியேனுக்குப்

பலநாள்செல்லுமென்று தோற்றுகிறது. இடையிலே நிறுத்திவிட்டேனென்று கோபித்துக்கொள்ளக்கூடாது. கூமிக்கவேண்டும்.''

மீ: ''என்னப்பா! உனக்குச் சிரமமாயிருக்கிறதென்பதை முன்னமே தெரிவித்திருந்தால் நான் நிறுத்தியிருப்பேனே. இது மிகவும் சிறந்த பகுதியாக இருந்ததனால் மத்தியில் நிறுத்த மனம் வரவில்லை. முன்பே மனத்திற் செய்துகொண்ட ஒழுங்கு பின்பு தவறிவிடுமேயென்று நினைந்து சொல்லிவந்தேன். நீ ஸ்நானம் செய்துகொண்டு வரலாம்'' என்று அவரை அனுப்பிவிட்டுத் தாமும் ஸ்நானம் செய்யப் போய்விட்டார். பக்கத்திலிருந்த சிலரால் இச்செய்தி மாயூரத்திலும், அயலூர்களிலும் பரவலாயிற்று. கேட்ட யாவரும் மிகவும் விம்மிதமுற்று வந்து வந்து பிள்ளையவர்களைப் பார்த்துப் பாராட்டிச் செல்வாராயினர்.

மிகவும் முகம் வாடிச் சோர்வோடு கோபால பிள்ளை அங்கேயிருத்தலைப் பிற்பகலில் வந்த மேற்கூறிய வைத்தியலிங்கம் பிள்ளை கண்டு, ''ஏன் இப்படி இருக்கிறீர்?'' என்று கேட்டு நிகழ்ந்தவற்றை அயலாரால் தெரிந்துகொண்டு அவரைப் பார்த்து, ''என்ன! உம்முடைய கொட்டம் இன்றைக்கு அடங்கிற்றுமே. கையில் வலியுண்டாகும்படி ஐயா அவர்கள் பாடல் சொல்லுகிறார்களில்லையேயென்று அன்றைக்குச் சொன்னீரே! அன்றைத்தினம் நீர் சொன்னது எனக்கு மிக்க வருத்தந்தான். துள்ளின மாடு பொதி சுமக்கும்'' என்று சொன்னார். அந்தச் சமயத்தில் அங்கே வந்த இப்புலவர்பிரான், ''தம்பி, அவனை ஒன்றும் சொல்லவேண்டாம். அவன் கல்ல பிள்ளை. மிகவும் வருந்துவான்'' என்று சொல்லி அவரை அடக்கினர். அப்பால் கோபால பிள்ளையின் கைவலிதீரப் பலநாள் சென்றன. அவர் மறுபடியும் வந்து எழுதுவதை ஒப்புக்கொள்ளும் வரையில் எழுதிவந்தவர் மாயூரம் முத்துசாமி பிள்ளையாவர்.

இயல்பாகவே பிள்ளையவர்களிடத்தில் பக்தியுள்ளவராக இருந்த கோபால பிள்ளைக்கு இந்த நிகழ்ச்சிக்குப்பின் இவர்பால் அளவிறந்த மதிப்புண்டாயிற்று. உண்மையில் இவரை ஓர் அவதார புருஷரென்றே நினைத்து அச்சங்கொண்டு இவரிடம் ஒழுகிவருவாராயினர். இச் செய்தி பின்பு அவர் இயற்றிய,

விருத்தம்.

* "சீர்பூத்த மயிலாடு துறைத்தளிமே வருட்பெருமான்
சீர்த்தி யாய
பேர்பூத்த மான்மியமாம் வடமொழியைத் தென்மொழியாற்
பிறங்கச் செய்தான்
பார்பூத்த ஞானகலை முதற்பலவு முணர்ந்துபுகழ்
பரந்து மேய
வார்பூத்த சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரஈ
வலவ ரேறே"

"மாலாதில் லறத்தமர்ந்து துறவறத்தார் புகழவருள்
மாண்பு பூண்டு
பாலோடு தேன்கலந்த தெனத்தளிக டொறுஞ்சென்று
பதிகஞ் சொற்ற
ஆலால சுந்தரமே மீனாட்சி சுந்தரப்பேர்
அமைய வாய்ந்து
தோலாத மாயூரப் புராணமொழி பெயர்த்தனனேற்
சொல்வ தென்னே"

என்னும் செய்யுட்களால் விளங்கும்.

சவேரிநாத பிள்ளை.

வேதநாயகம் பிள்ளையால் அனுப்பப்பட்டுச் சவேரிநாத பிள்ளையென்ற ஒருவர் இவரிடம் அக்காலத்திற் படிக்கவந்தார். அவருடைய ஊர் காரைக்கால். அவர் நல்ல அறிவாளி. பிள்ளையவர்களிடத்தில் மிக்க பக்தி உள்ளவர். பிரசங்கசக்தி மிக்கவர். மற்றவர்களைக் காட்டிலும் பிள்ளையவர்களுக்கு வேண்டிய தொண்டுகளை அதிகமாகச் செய்துவந்தவர். கிறிஸ்தவ மதத்தினர்; சைவர்களைப் போலவே சிலமுடையவராகவும் மிகுந்த மரியாதையாகவும் நடந்துவந்தார். ஒருநாளேனும் இப்புலவர் சிகாமணியைப் பிரிந்திருக்க மாட்டார். இனிய சாரீரமுடையவர். இக் கவிஞர் பிரானுடைய இறுதிக்காலம் வரையில் நம்பிக்கையாக இருந்தவர்களில் அவரைப் போன்றவர் வேறு எவரும் இல்லை.

---

* இவை மாயூரப் புராணம் அச்சிடும்போது பாடப்பட்டு அதிற் பதிப்பிக்கப்பெற்றன.

திருநாகைக் காரோணப் புராண அரங்கேற்றம்.

நாகைப் புராணத்திற் சுந்தரவிடங்கப் படலத்திற்குமேலே சில பாகம் ஆனவுடன் விபவவரு (1869) தைமாதக் கடைசியில் அத்தலத்திலுள்ளாரால் அரங்கேற்றுவதற்கு அழைக்கப்பெற்று இவர் நாகபட்டினம் சென்றார். மாணவர்கள் முதலியோரும் உடன் சென்றார்கள். பங்குனிமாதம் அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. அப் புராணம் இயற்றுவிக்க முயற்சிசெய்தவர்களுள் ஒருவரான முற்கூறிய வீரப்ப செட்டியார் முதலிய அன்பர்களுடைய வேண்டுகோளின்படி முத்திமண்டபத்தில் அப்புராணத்தை இவர் அரங்கேற்றத் தொடங்கினர்.

அந்நகரில் அப்போதிருந்த கிருஷ்ணஸாமி உபாத்தியாயர் முதலிய தமிழ் வித்துவான்களும், அங்கே ஒரு கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவரும் இவருடைய மாணாக்கருமாகிய புருஷோத்தம நாயுடு என்பவரும் உடனிருந்து அவ்வப்பொழுது வேண்டிய அனுகூலங்களைச் செய்து வந்தார்கள்.

ஒருவருஷகாலம் அந்தப் புராணப்பிரசங்கம் நடைபெற்றது. இடையிடையே சிலமாதங்கள் நின்றதுண்டு. பொறுமையுள்ளவர்களாகிய சிலர் இடையிலே ஆட்சேபித்தபொழுது இவருக்குச் சிரமம் கொடாமல் வேதாகமப் பிரமாணங்களோடு தக்க சமாதானங் கூறி உபகரித்தவர் முன்பு தெரிவித்த மகாதேவ சாஸ்திரிகள் முதலியோர்.

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள்.

அரங்கேற்றம் நடைபெற்றுவருகையில், பரமசிவனுடைய ஏற்றத்தை யாவரும் எளிதில் உணரும்படி எங்கும் பிரசங்கித்து வந்தவரும் ஸ்ரீசூதசங்கிதையை ஏழுநாளில் உபந்யஸித்து அதன் பொருளைச் சிவபக்தர்கள் அறியும்படி செய்துவந்தவரும் தமக்குப் பழக்கமுள்ள சிவபக்தர் யாவரையும் ஏகருத்திராட்சதாரணம் செய்து கொள்ளும்படி செய்வித்தவரும் மகாவைத்திய நாத சிவன் முதலியவர்களுடைய மந்திரோபதேச குருவுமாகிய கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் அந்நகர்க்கு வந்திருந்தார்; இவர் புராணம் அரங்கேற்றுவதைக் கேள்வியுற்று உடனே அரங்கேற்றுமிடத்திற்கு வந்தனர்; அவரைக்கண்ட எல்லாரும் உபசரிக்க, அவர் இருந்தார். பிள்ளையவர்கள் அவருடைய வரவை அறிந்து

எழுந்து பாராட்டிச் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கிய பொழுது அவர் இவரை நோக்கி, "சிவபக்த சிரோமணீ! வித்வத் சிகாமணீ! உங்களைப்போலத் தமிழிற் சிவபுராணங்களையும் சிவஸ்துதிகளையும் நன்றாகச் செய்பவர்கள் இப்பொழுது யார் இருக்கிறார்கள்? நீங்கள் செய்த சூத சங்கிதைப் பாடல்களை அப்பொழுதப்பொழுது மகாவைத்தியநாத சிவனும் திருநெல்வேலி ஐயாஸாமிபிள்ளையும் சொல்லக்கேட்டிருக்கிறேன்; மொழி பெயர்ப்பு மிக நன்றாக இருக்கிறது. சில சமயங்களில், நான் பிரசங்கம் செய்யுங்காலத்தில் அப்பொழுதப்பொழுது அதிலுள்ள சில பாடல்களை அவர்களையாவது வேறுயாரையாவது கொண்டு சொல்லச்செய்வேன். உங்களைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் எனக்கு நெடுநாளாக இருந்தது. இன்று அது ஸ்ரீ காயாரோக ணேசுவரர் கிருபையால் நிறைவேறியது. உங்களைப் போன்றவர்களே உலகத்திற்கு உபகாரிகள். நீங்கள் க்ஷேமமாக இருக்க வேண்டும்" என்று பாராட்டி அன்று பிரசங்கம் பூர்த்தியாகும் வரையில் இருந்து கேட்டு மகிழ்ந்துவிட்டுத் தம் இருப்பிடம் சென்றார்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்.

கும்பகோணம் மடத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக அக்காலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அப்போது நாகபட்டினத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். அந்த மடத்து ஸம்ஸ்கிருத வித்துவான்களால் இவர் அங்கே ஸ்தலபுராணப் பிரசங்கம் செய்வதை ஸ்வாமிகள் அறிந்து இவரைப் பார்க்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டார்கள். அப்பொழுது இவர் மகாதேவ சாஸ்திரிகளுடன் ஒருநாள் பிற்பகலிற் சென்று தரிசனம் செய்தார். ஸ்வாமிகள் மிகுந்த கருணையுடன் இவருடைய பெருமைகளை அங்கிருந்த கனவான்களுக்கு எடுத்துக் கூறினார்கள். பிரசங்கம் செய்யப்படும் புராணத்திலிருந்து சில பகுதிகளையும் கேட்டுச் சந்தோஷித்தார்கள். அப்பாற் கம்பராமாயணத்திலிருந்து ஏதேனும் சொல்ல வேண்டுமென்று ஸ்வாமிகள் கட்டளை யிட்டார்கள்; அந்நூலிற் சுவையுள்ள ஒரு பாகத்தை இவர் எடுத்துப் பிரசங்கித்தார். கேட்ட ஸ்வாமிகள் ஆனந்தித்துத் தக்க ஸம்மானம் செய்து இவரை ஆசீர்வதித்து அனுப்பினார்கள்.

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். கூஉக

கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர்.

இவருக்கு இலக்கணவிளக்கம் பாடஞ் சொல்லிய கீழ் வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் இவருடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் சிலநாள் வந்திருந்து புராணப் பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்து சென்றார். அவர் வந்திருந்தபொழுது இக்கவிஞர் கோமான் தாம் அவரிடம் பாடங்கேட்ட நன்றியை மறவாமல் மிகவும் மரியாதையாக உபசரித்து யாவருக்கும் அவருடைய பெருமையை எடுத்துக் கூறினர்.

நாகபட்டினத்தில் இருக்கும்பொழுது இக் கவிஞர்பிரானுக்கு வேண்டிய சௌகரியங்கள் முற்கூறிய அப்பாத்துரை முதலியார் முதலியவர்களால் ஒழுங்காகச் செய்யப்பெற்று வந்தன.

திருவாவடுதுறை போய் வந்தது.

புராணம் அரங்கேற்றிக்கொண்டு வருகையில் சுக்கிலஹ (1869) ஆடிமீ திருவாவடுதுறையில் அம்பலவாண தேசிகர் பரி பூரணம் ஆயினரென்றும், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுக்குப் பெரிய பட்டம் ஆயிற்றென்றும் அறிந்த இவர் இடையில் திருவாவடுதுறை சென்று ஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்களைத் தரிசித்துக்கொண்டு விடைபெற்று மீண்டும் நாகபட்டினம் வந்தனர்; வந்து அரங்கேற்றிப் புராணத்தைப் பூர்த்தி செய்தார்.

புராணங்கள் அச்சிடப்பெற்றமை.

இவர் நாகபட்டினத்தில் இருக்கும்பொழுது, மாயூரத்திலிருந்த அரங்கக்குடி முருகப்பிள்ளையவர்கள் குமாரர் வைத்தியலிங்கம் பிள்ளையின் உதவியால் மாயூரப் புராணமும், முற்கூறிய அப்பாத்துரை முதலியார் உதவியால் நாகைக் காரோணப்புராணமும் சோடசாவதானம் சுப்பராய செட்டியாருடைய மேற்பார்வையில் சென்னையில் அச்சிடப்பெற்று நிறைவேறின. அரங்கேற்றி முடிவதற்குள்ளாகவே திருநாகைக் காரோணப் புராணம் பதிப்பிக்கப்பட்டது.

நாகைப் புராணம் சிறப்பிக்கப்பெற்றது.

புராண அரங்கேற்றம் பூர்த்தியான தினத்தில் புராணச் சுவடி பல்லக்கில் வைக்கப்பெற்று மிக்க சிறப்புடன் ஊர்வலம் செய்யப்பட்டது. அப்பாத்துரை முதலியாரும் அந்நகரத்தாரும்

எவ்வளவு உயர்ந்த ஸம்மானங்கள் செய்யலாமோ அவ்வளவும் செய்து உபசரித்துப் பாராட்டினர்கள்.

பொன்னூசற் பாட்டு முதலியன.

இவர் நாகபட்டினத்தில் இருக்கையில் இவரைப் பலவகையாக உபசரித்து ஆதரித்து வந்த அப்பாத்துரை முதலியாருடைய குமாரராகிய தம்பித்துரை முதலியாருக்குக் கல்யாணம் நடைபெற்றது. பிள்ளையவர்கள் கல்யாண காலத்தில் கூட இருப்பதை அவர் ஒரு பெரிய பாக்கியமாக எண்ணி மகிழ்ந்தார். அவருடைய பந்துக்களிற் சிலரும் அவரும் இக்கவிஞர் கோமானை, அந்தக் கல்யாணத்திற் பாடுவதற்கேற்றபடி மணமகன் மணமகளாகிய இருவருடைய நல்வாழ்வையுங் கருதிச் சில பாடல்கள் இயற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அப்பாத்துரை முதலியாருடைய தூய அன்பில் இவர் ஈடுபட்டவராதலின் அவருடைய விருப்பத்திற் கிணங்கிப் * பொன்னூசல், லாலி, கப்பற்பாட்டு, மங்களம், வாழ்த்து என்பவற்றைப் பாடியளித்தனர். அவற்றை அப்பாத்துரை முதலியாரும் பிறரும் பாடுவதற்குரியாரைக் கொண்டு பாடச் செய்து கேட்டு மகிழ்ந்தார்கள். "இப்புலவர் பிரானுற் பாடப்பெறும் பாக்கியம் இந்தத் தம்பதிகளுக்குக் கிடைத்தது இவர்கள் முற்பிறப்பிற் செய்த புண்ணியப் பயனே" என்று சொல்லி யாவரும் பாராட்டினர்.

மாயூரத்துக்குத் திரும்பியது.

இவர் நாகபட்டினத்தில் ஒருவருஷ காலத்திற்கு மேல் இருந்துவந்தார். அப்பால், பிரமோதூதவரு (1870) ஆரம்பத்தில் மாயூரத்திற்கு வந்து வாசஞ் செய்யலானர்.

திருநாகைக் காரோணப் புராண அமைப்பு.

இப்புலவர் கோமான் இயற்றிய புராணக் காப்பியங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது திருநாகைக்காரோணப் புராணம். இவர் மாணவர்களிற் பலர் இப்புராணத்தை இவர்பாற் பாடங் கேட்டனர். மிகவும் உழைத்து எல்லா அழகுகளும் செறியும் வண்ணம் இயற்றப்பெற்றதாதலின் இந்நூலினிடத்து இக் கவிஞருக்கே ஒரு தனி அன்பு இருந்து வந்தது. சிவஞான முனிவர்

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் தீரட்டு, 5179-5201.

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். ஈஉஈ

கச்சியப்பமுனிவர் என்பவர்களுடைய நூல்களில் இவருக்குள்ள அனுபவ முதிர்ச்சியும், கவி இயற்றுவதில் இவருக்குள்ள பேராற்றலும், வியக்கத்தகும் கற்பனை சக்தியும் இந்நூலின்கண் நன்றாக வெளிப்படும். இவர் செய்த நூல்களுள் ஒவ்வொன்றிற் சில சில அமைப்புக்கள் சிறப்பெய்தி விளங்கும். இந்நூலிலோ ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையிற் சிறப்புற்று விளங்கும்.

"உழைகுலாம் நயனத் தார்மாட்
டொன்றென்றே கருதற் கொத்த
தழகெலாம் ஒருங்கே கண்டால்
ஆரதை யாற்ற வல்லார்"

என்ற கம்பராமாயணச் செய்யுள் இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது. தமிழ்க் காப்பியங்களிற் பரந்து கிடக்கும் பலவகை அணி நயங்களும் இதன் கண்ணே ஒவ்வோரிடத்தில் அமைந்து இலங்கும். சொல்லணி, பொருளணி, தொடை நயம், பொருட் சிறப்பு, சுவைநயம், நீதி, சிவபக்திச் சிறப்பு, சிவஸ்தலச் சிறப்பு, நாயன்மார் பெருமை முதலிய பலவும் இதன்கண் நிரம்பியுள்ளன. தமிழ்க் காப்பியத்தின் இலக்கணம் முழுவதும் உள்ளதாய்ப் பலவகையிலும் நயம் சிறந்து, சுவைப் பிழம்பாக விளங்கும் இக் காப்பியத்தைப் பெறுதற்குத் தமிழ்நாடு தவம் செய்திருத்தல் வேண்டும். பல பழைய புலவர்கள் வாக்கினை ஒருங்கே பார்த்து மகிழ வேண்டுபவர் இந்நூலைப் படித்தாற் போதும். அந்த அந்தப் புலவர்களின் நடைநயமும் பொருள்நயமும் இடையிடையே இப்புராணத்தில் விளங்கித்தோன்றும். இந்நூலைப்பற்றி எவ்வளவு பக்கம் எழுதினாலும் இதன் பெருமையை ஆராய்ந்து கூறிவிட்டதாக ஆகாது. யார் யாருக்கு எந்த எந்த நயங்களில் விருப்பமோ அந்த அந்த நயங்களை இதன்பாற் கண்டு இன்புறலாம். ஸ்தாலீ புலாக நியாயம் பற்றிச் சில செய்யுட்கள் பின்னே காட்டப்படுகின்றன:

தட்சிணைமூர்த்தி துதி.

விருத்தம்.

"பதிபசு பாச மென்னப் படுமொரு மூன்றுஞ் சுத்தம்
பதிநிலை யொன்றற் கொன்று பயில்வியாப் பியமா மின்னும்
பதியொடு பசுக்க ளக்கும் பண்புமிற் றென்றோர் செங்கைப்
பதிவிர லளவிற் சேர்ப்பிற் பகர்பவற் கடிமை செய்வாம்."

ஈஉச மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

[இதன்கண் சின்முத்திரையின்பொருள் கூறப்பட்டிருக்கின்றது. சுத்தம்பதி நிலை - சுத்தாவஸ்தை. வியாப்பியம் - அடங்கியிருத்தல். இச்செய்யுளுக்கு நிரனிறையாகப் பொருள் கொள்க.]

மாணிக்கவாசகர் துதி.

"எழுதிடும் வேலை பூமே லிருப்பவ னியற்றப் போக்கி
எழுதுத லில்லா நூல்சொற் றினிதமர் தருமா தேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற் றியைதரப் பெயரு மீற்றில்
எழுதிடச் செய்த கோமா னிணையடி முடிமேல் வைப்பாம்."

[பூமேலிருப்பவன் - பிரமன். எழுதுதலில்லா நூல் - வேதம்.]

அவையடக்கம்.

"காற்றுபல் குறையு மேற்றூர் விகாரமுங் கலப்பக் கொண்டார்
வேற்றுமை விலக்கல் செய்யா ரல்வழி விரவி நிற்பார்
சாற்றுமன் மொழியுஞ் சொல்வா ரிலக்கணத் தலைமை வாய்ந்தார்
போற்றுமற் றவர்முன் யானெவ் வேதுவாற் புறத்த னுவேன்."

[குறை முதலியன சிலேடை. குறை - ஆறும்வேற்றுமையும் எச்சமும், குறைவு. விகாரம் - புணர்ச்சி விகாரங்களும் செய்யுள் விகாரங்களும், திரிபுணர்ச்சி. வேற்றுமை - எட்டுவேற்றுமைகள், வேறுந்தன்மை. அல்வழி - அல்வழிச்சந்தி, அறமல்லாத வழி. அன்மொழி - அன்மொழித் தொகை, இடத்துக் குரியதல்லாத மொழி.]

அகத்திய முனிவர் நீலாயதாட்சி அம்மையைச் செய்த துத.

ஆசிரியத்தாழிசை.

"ஆய கருந்தடங்க ணம்மை திருப்பாதம்
பாய பிறவிப் பரவை கடப்பதற்கு
நேய மலியு நெடுங்கலமே போலும்."

"ஆன்ற கருந்தடங்க ணம்மை திருப்பாதம்
என்ற பிறவி யிருங்காடு மாய்ப்பதற்குக்
கான்ற சுடர்வைக் கணிச்சியே போலும்."

"அன்பார் கருந்தடங்க ணம்மை திருப்பாதம்
வன்பார் பிறவித் துணங்கறன் மாய்த்திதெற்
கின்பா ருதய விரவியே போலும்."

[கருந்தடங்கணம்மை - நீலாயதாட்சி யம்பிகை. கலம் - கப்பல். கணிச்சி - மழுப்படை. துணங்கறல் - இருள்.]

(அகத்தீசப்படலம், ஈச.)

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். கூடு

விளா, தென்னை, நாரத்தை யென் பவற்றின் கனிகள்.

கலிநிலைத்துறை.

"ஒரும லத்தடை யுயிரினை விளங்கனி யொக்கும்
இரும லத்தடை யுயிரினை யிலாங்கலி யேய்க்கும்
பொரும லத்தடை மூன்றுடை யுயிரினைப் புரையும்
குரும லர்ப்பசுந் தழைவிரி குலப்பெரு நரந்தம்."

[ஒரு மலத்தடையுயிர் - விஞ்ஞானகலர். இருமலத்தடையுயிர் - பிரளயாகலர். இலாங்கலி - தேங்காய். தடைமூன்றுடையுயிர் - சகலர். நரந்தம் - நாரத்தங்கனி.]

"பலாசு பற்பல செறியுமீ ரெழிந்தவும் பலவே
நிலாவு மாண்பல நெருங்குமீ ரெழிந்தவு நெருங்கும்
குலாவு தண்புளி மாவுமீ ரெழிந்தவுங் கூடும்
அலாத காஞ்சிரைக் குழுவுமீ ரெழிந்தவு மமலும்."

[பலாசு - புரசு; அதன் ஈரெழிந்தது பலா. ஆண் - ஒரு மரம்; அதன் ஈரெழிந்தது ஆ; ஆ - ஆச்சாமரம். புளிமா - ஒரு மரம்; அதன் ஈரெழிந்தது புளி. காஞ்சிரை - எட்டி; அதன் ஈரெழிந்தது காஞ்சி.]

(நைமிசப்படலம், உக - உ.)

பரவச்சாதிமகளிர் வருணனை.

கலிநிலைத்துறை

"அம்ப ரத்தியர் கொங்கையம் பரத்தியர் மருங்குல்
அம்ப ரத்தியர் மற்றது சூழ்பல வன்ன
அம்ப ரத்திய ராள்வழக் கறுத்திடு நெடுங்கண்
அம்ப ரத்திய ரன்னராற் பொலியுமச் சேரி."

[அம் பரத்தியர் - அழகிய பரவச்சாதிப் பெண்கள். கொங்கை அம் பரத்தியர்; பரம் - பாரம். மருங்குல் அம்பரத்தியர் - இடையாகிய ஆகாசத்தை உடையவர்; அம்பரம் - ஆகாசம். பல வன்ன அம்பரத்தியர் - பல நிறங்களையுடைய ஆடையையுடையவர்; அம்பரம் - ஆடை. கண் அம்பு அரத்தியர் - கண்களாகிய அம்பையும் அரத்தையும் உடையவர்.]

(அதிபத்தப்படலம், கo.

* சுப்பிரமணிய தேசிகர் மாலையும் † நெஞ்சுவிடு தூதும்.

சுப்பிரமணிய தேசிகர் பெரிய பட்டத்திற்கு வந்தவுடன் இவர், தம்முடைய அன்பிற்கு அறிகுறியாக அவர் மீது மாலை ஒன்றும் நெஞ்சுவிடுதூது ஒன்றும் முறையே இயற்றி அரங் கேற்றினர். அவ்விரண்டு நூல்களாலும் மடத்திலுள்ள சம்பிர தாயங்களும் சுப்பிரமணிய தேசிகருடைய அருஞ்செயல்களும் கல்வி வளர்ச்சியும் பிறவும் விளங்கும். சுப்பிரமணியதேசிகர் மாலையிலுள்ள செய்யுட்களுட் சில வருமாறு :

விருத்தம்.

" ஆன்றநின் கருணை யென்னென வுரைக்கேன்
ஐயநின் பணிக்கமை நாற்கால்
சான்றபல் பசுவு நின்பொது நாமம்
தம்முடற் பொறித்திடப் படுவ
என்றவிவ் விருகாற் பசுவெனு மெங்கட்
கியைந்தில வவைசெய்புண் ணியமென்
தோன்றவெவ் விடத்துங் கழகமார் துறைசைச்
சுப்பிர மணியதே சிகனே."

[திருவாவடுதுறையில் மடத்துப் பசுக்களுக்குப் பஞ்சாட்சர முத் திரை பொறிப்பது வழக்கம். ஆதீனகர்த்தர்களாக இருப்பவர்கள் யாவருக்கும் பொதுநாமம் 'நமச்சிவாய' என்பது.]

" வஞ்சனேன் மலநின் மூட்கெதிர் நமனே
வாய்ந்தகைக் கெதிர்விதி தலையோ
மஞ்சவாங் களத்திற் கெதிர்கொடு விடமோ
மறைந்தகட் கெதிர்சில மதனே
எஞ்சுறு நெடிய சடைக்கெதிர் புனலோ
இனியவாய் நகைக்கெதிர் புரமோ
துஞ்சன்மே வுதற்கு நவில்பெருந் துறைசைச்
சுப்பிர மணியதே சிகனே."

சுப்பிரமணியதேசிகர் நெஞ்சுவிடுதூதிலுள்ள சில கண்ணி கள் வருமாறு :—

---

* ஸ்ரீ மீனுட்சிசுந்தாம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 3119 - 3219. † ஷ 3322 - 3.

24. புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல். கூஉள

கலி வெண்பா.

"ஒருமா னெமக்கொளிக்க வோர்கை அமரும்
ஒருமா ளெளித்த வொருவன்—பெருமான்
மதிமறைத்த மாசெமக்கு மாற்றி யருள
மதிமறைத்த மாசடையா வள்ளல்—நிதியம்
இருள்கண்ட யாமவ் விருள்காணு வண்ணம்
இருள்கண்டங் காட்டா திருப்போன்—பொருள்கண்ட
மானிடனே யென்ன மருவி யிருந்தாலும்
மானிடனே யென்ன வயங்குவான்." (அ - கக.)

[மான் - மகத்தத்துவம், திருக்கரத்தி லேந்திய மான். மதி - புத்தி, பிறை. இருள் - அஞ்ஞானம், விடத்தின் கருமை. மானிடன் - மனிதன், மானே இடக்கரத்திலே உடைய சிவபெருமான். ஆசிரியரைச் சிவ பெருமானாகவே எண்ணுதல் மரபு.]

"நெடியகுணக்
குன்றேமெய்ஞ் ஞானக் கொழுந்தே யருட்கடலே
நன்றே யுயிர்க்கருளு நாயகமே—அன்றே
அடித்தமல பந்த மகற்றவுருக் கொண்டு
மடித்த பெருங்கருணை வாழ்வே—படித்தமைந்த
மைம்மாறு சிந்தை வயங்கு மடியார்பாற்
கைம்மாறு வேண்டாத கற்பகமே—பொய்ம்மாறெம்
பேறேயா னந்தப் பெருக்கேளா னக்கருப்பஞ்
சாறேமெய் யன்பர் தவப்பயனே—நாறுமருட்
சிந்தா மணியே செழுங்காம தேனுவே
சந்தாபந் தீர்க்குந் தனிச்சுடரே—நந்தா
வரமணியே கோமுத்தி வாழ்வே யருட்சுப்
பிரமணிய தேசிகப்பெம் மானே." (கூ0க - க)

வேதநாயகம்பிள்ளை சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்கவந்தது.

ஒருமுறை வேதநாயகம்பிள்ளை சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிப்பதற்கு வந்தார். தரிசித்துவிட்டுத் தாம் அவர் விஷய மாக இயற்றிவந்த சில செய்யுட்களைச் சொல்லிக் காட்டினர். கேட்ட யாவரும் மகிழ்ந்தனர். அப்பொழுது உடனிருந்த பிள்ளையவர்கள் அவ்விரு வரையும் பாராட்டி,

விருத்தம்.

"கூடுபுகழ் மலிதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய
குரவ ரேறே
மீடுமலி வளக்குளந்தை வேதநா யகமேகம்
பெய்யும் பாமுன்
பாடுதிற லாளர்பா வுயிர்முனங்குற் றியலுகரம்
படும்பா டெய்தும்
நீடுதிற னின்புகழ்முன் னேனையோர் புகழ்போலாம்
நிகழ்த்த லென்னே"

என்னும் செய்யுளைக் கூறினர்.

வேதநாயகம் பிள்ளை சுப்பிரமணியதேசிகருடைய இயல்புகளை மேன்மேலும் அறிந்து ஈடுபட்டனர். ஊர் சென்றவுடன் பிள்ளையவர்களுக்கு அவர்,

விருத்தம்.

"கற்றவர்சி ரோமணியா மீனாட்சி சுந்தரமா
கலைவல் லோய்மா
சற்றுயர்சுப் பிரமணிய தேசிகனைத் தினங்காண
அவன்சொல் கேட்க
மற்றவனே டுரைகூறப் பெற்றநின்கண் காதுநா
மண்ணிற் செய்த
நற்றவம்யா தறிதரவென் கண்காது நாவறிய
நவிலு வாயே"

என்னும் செய்யுள் எழுதியனுப்பினர்.

அம்பர்ப்புராணம் இயற்றத் தொடங்கியது.

சோழநாட்டில் உள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய திருவம்பரென்னும் தலத்தில் இருந்த வேளாளப்பிரபுவாகிய வேலுப் பிள்ளை முதலியவர்கள் அத்தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தை மொழிபெயர்த்துத் தமிழிற் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இவர் வடமொழிப் புராணப்பிரதியைப் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. அப்பொழுது திருமங்கலக்குடிச் சேஷையங்காரைத் தஞ்சைக்கனுப்பிச் சரசுவதி மகாலில் தேடிப்பார்க்கச் செய்தார். சேஷையங்கார் இந்த முயற்சியை விபவ வருஷத்திலிருந்தே மேற்கொண்டு பார்க்கவேண்டிய உத்தி

யோகஸ்தர்களைப் பார்த்து மிகவும் சிரமப்பட்டு அந்தப் புராணம் அங்கே இருப்பதை அறிந்து பிரதிசெய்வித்துப் பெற்றுச் சுக்கிலஸ (1869) மார்கழி மாதத்தில் அதை இவருக்கு அனுப்பினர். இவர் தக்க வடமொழி வித்துவான்களுடைய உதவியால் அதைத் தமிழ் வசனநடையில் மொழிபெயர்ப்பித்து வைத்துக் கொண்டு பாட ஆரம்பித்தார்; அப்பொழுது எழுதிவந்தவர் சிவப்பிரகாசையரென்னும் மாணாக்கர்.

மாயூரத்தில் வீடு வாங்கியது.

பிள்ளையவர்கள் தம்முடைய மாணாக்கர்களுக்கு இருக்கவும் படிக்கவும் நல்ல வசதியான இடம் இல்லாமையை யறிந்து மாயூரம் தெற்கு வீதியில் திருவாவடுதுறை மடத்திற்கு மேல் புறத்துள்ள இரண்டுகட்டுவீடு ஒன்றைச் சுக்கில வருஷத்தில் 900 ரூபாய்க்கு வாங்கினர். அந்த வீட்டின் தோட்டம் பின்புறத்திலுள்ள குளம் வரையிற் பரவியிருந்தது. அந்தக்குளத்தின் கரையிற் படித்துறையுடன் ஒரு கட்டிடம் கட்டுவித்து அதிலிருந்து பாடஞ் சொல்லவேண்டுமென்றும் சேமம் முதலியவற்றை அமைத்து அங்கேயிருந்து சிவபூசை செய்யவேண்டுமென்றும் இவர் எண்ணினர். அதனைக் குறிப்பால் அறிந்த பட்டீச்சுரம் ஆறுமுகத்தாபிள்ளை வேண்டிய மரங்களை அனுப்பியதன்றிக் கட்டிடங் கட்டுதற்கு வேண்டிய செலவிற்குரிய பொருளையும் அனுப்பினர். அவர் செயலைக் கண்டு மனமுவந்த இவர் தம்முடைய நன்றியறிவைப் புலப்படுத்தி ஒரு கடிதம் எழுதியனுப்பினர். வழக்கப்படியே அக்கடிதத்தின் தலைப்பில் எழுதப்பெற்ற பாடல் வருமாறு :—

(விருத்தம்)

"அருளினற் பெருங்கடலை மீகையாற் பசுமுகிலை யளவாக் கல்வித்
தெருளினற் பணியரசைப் புரத்தலாற் றிருமாலைச் சிறுப ழிக்கும்
வெருளினை லறக்கடவு டனேவென்று ஈன்றபுரி மேம்பா டற்றுப்
பொருளினற் பொலிந்துவள ராறுமுக மகிபன்மகிழ்பூத்துக் காண்க."

அம் மரங்கள் முதலியவற்றைக்கொண்டு அன்பர்கள் அக் கட்டடத்தை இவர் விருப்பத்தின்படியே பூர்த்திசெய்வித்தனர். அதன் பின்பு அவ்விடத்திலேயே இவர் பாடஞ் சொல்லுதலும் சிவபூசை செய்தலும் நடை பெற்றுவந்தன.

அதுகாறும் திரிசிரபுரத்தில் வசித்துவந்த தம் மனைவியாரையும் புதல்வர் சிதம்பரம் பிள்ளையையும் இப்புலவர்பிரான் வருவித்தனர்; சுக்கில வருஷத்தில் மகர சங்கராந்தியில் அவர்களுடன் புதிய வீட்டிற்குக் குடிவந்து மனமுவந்து அதில் ஸ்திரமாக இருப்பாராயினர்.

* திருவிடைமருதூருலா.

திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் தமிழ்ப் பண்டிதராக இருந்த சாமிநாத தேசிகர் முன்பு இவர்பாற் பாடங்கேட்ட காலத்தில் அவர் தந்தையாராகிய சிவக்கொழுந்து தேசிகர் செய்த திருவிடைமருதூர்ப் புராணம் முதலியவற்றை இவர் அவருக்குப் பாடஞ் சொன்னதுண்டு. அப்பொழுது ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியுடைய திருவருட் செயலிலும் அந்த ஸ்தல சரித்திரத்திலும் இக் கவியரசருடைய மனம் ஈடுபட்டது. ஆதலின் ஏதேனும் ஒரு பிரபந்தம் திருவிடைமருதூர் விஷயமாகச் செய்யவேண்டுமென்ற விருப்பம் இவருக்கு உண்டாயிற்று. அது தெரிந்த பலர், "தங்கள் வாக்கினல் இத்தலத்திற்கு ஒருலாச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். இவர் மேற்கூறிய புராணத்திலும், முன்பு ஞானக்கூத்தரால் அத்தலத்திற்குச் செய்யப்பட்டிருந்த பழைய புராணத்திலும், தேவாரத் திருமுறைகளிலும், திருவாசகத்திலும், பட்டினத்துப் பிள்ளையார் இயற்றிய மும்மணிக் கோவையிலும் உள்ள தலவரலாறுகளையெல்லாம் அறிந்து உலாவைப் பாட ஆரம்பித்து அரிவைப் பருவம் வரையிற் செய்து வைத்தனர்.

பின்பு தஞ்சாவூருக்கு இவர் ஒரு முறை போயிருந்தபொழுது உடன் சென்றிருந்த முத்துசாமி பிள்ளை என்பவரால் ஞாபகப் படுத்தப்பட்டுக் கரந்தையிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் இருந்து அவ்வுலாவை நிறைவேற்றி முடித்தார். அந்நூல் பிரமோதூதவரு (1870) திருவிடைமருதூர்க் கோயிற் சந்நிதியில் அக்கோயிற் கட்டளை விசாரணை செய்துவந்த ஸ்ரீ சிவதாணுத் தம்பிரானவர்களுடைய முன்னிலையில் அரங்கேற்றப்பெற்றது. அப்போது அங்கே வந்துகேட்டு ஆனந்தித்தவர்கள் ஸ்ரீ ராஜாகன பாடிகள் முதலிய வடமொழி வித்துவான்களும் அவ்வூரிலிருந்த அபிஷிக்த வகையினரைச் சார்ந்த பல பெரியோர்களும் சில மிராசுதார்களும் ஆவர். ஒவ்வொருநாளும் உலா அரங்கேற்று

* ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, 1705-6.

கையில் தியாகராச செட்டியார் கும்பகோணத்திலிருந்து வந்து வந்து கேட்டுவிட்டுச் செல்வார்.

அந்த உலாவிலுள்ள கண்ணிகள் : எஉக. அவற்றுட் சில வருமாறு:—

சிவபெருமான்.

(கலிவெண்பா)

"சொல்லமுதைப் பாகுவந்து தோயவைத்தோன் கைப்பகழி
வில்லமர்பூ நாரிதனே மேவவைத்தோன்—அல்லற்
சிறுவிதியா கத்திற் றினகரற்கு முன்னம்
குறுகியிருள் கூடவைத்த கோமான்." (கக - உ)

[சொல்லமுது - ஸரஸ்வதி. பாகு - பாகன்; என்றது பிரமதேவனை; சொல்லப்படுகிற அமிர்தத்தைத் தேம்பாகு வந்து தோயவென்பது மற்றொரு பொருள். கைப்பகழி - திருமால். வில் அமர் பூ நாரி - ஒளி அமர்ந்த பூவிலுள்ள பெண்ணகிய திருமகள்; வில்லிற்பூட்டிய நாணியை அம்பு மேவவென்பது மற்றொரு பொருள். சிறுவிதி - தக்கன். கண் ணைப் பறித்தமையால் சூரியனுக்கு முன்னே இருள் கூடியது.]

உடன் வருவோர்கள்.

"நயங்குல வின்ப நறும்பலம்பெற் றுய்ய
வயங்கு மொருகோட்டு மாவும்—சயங்கொள்சத
கோடி யரசின் குலந்தழைய வெம்பகையைத்
தேடியவோர் வேல்கொள் செழுங்குருந்தும்

* * * * *

ஆய்மனைசெந் தாமரையே யாக வுறைவாளைத்
தாய்மனை யென்றழைக்கத் தக்கோனும்—தூயவையை
நீரு நெருப்பு நிரம்பு தமிழ்ப்பெருமை
ஓரும் படியருள்கொ ளொண்மழவும்—தீராத்துன்
பாய கடலமண ராழ வரையொடலை
மேய கடன்மிதந்த வித்தகனும்

* * * * *

கைச்சிலம்பின் றேலுடைத்தன் காற்சிலம்பி னேசைசெவி
வைச்சிலம்பி னுண்டெய்ந்த வானவனும்—பச்சுமைகை
ஆய்நீர் கரந்த வரியமுடி மேல்வழிய
வாய்நீர் பொழியன்பு மாமுகிலும்" (ககஅ - உ0க)

[பலம் - பயன்; பழமென்பது மற்றொரு பொருள். ஒரு கோட்டுமா - ஒரு கொம்பையுடைய விநாயகர்; ஒரு கிளையையுடைய மாமரம். சதகோடி - வச்சிராயுதம். அரசு - இந்திரன். குருந்து - முருகவேள். இப்பகுதியில் மரங்களின் பெயர்கள் தொனிக்கின்றன. தக்கோன் - ஐயனூர். மழவு - சம்பந்தமூர்த்தி நாயனூர். கைச்சிலம்பின் - யானையின். வைச்சு இல்லத்தில். வானவன் - சேரமான் பெருமாணயனூர். உமைகை நீர் - கங்கை. முகில் - கண்ணப்ப நாயனூர்.]

தோழிமார் கூற்று.

"நீயருகு மேவுவையே னீடுலகி லுகமெலாம்
போயவர்பூ ணுகிப் பொலியுமே—தூயமன

மானக்கஞ் சாறர் மகள்கோதை யன்றிமற்றோர்
தேனக்க கோதைகளுஞ் சென்றேறி—மேனக்க

பஞ்சவடி யாமே பரவொருத்தர் கல்லன்றி
விஞ்சவெவர் கற்களுமெய் மேவுமே—துஞ்சும்

இருவ ரெலும்பன்றி யெல்லா ரெலும்பும்
பொருவரிய மேனி புகுமே—மருவுசிலை

வேடனெச்சி லல்லாது வெங்கா னுழலுமற்றை
வேடரெச்சி லும்முணவாய் மேவுமே—நாடுமறை

நாறும் பரிகலம்போன் ஞாலத்தார் மண்டையெலாம்
நாறும் பரிகலமா நண்ணுமே—தேறுமொரு

மான்மோ கினியாய் மணந்ததுபோல் மற்றையரும்
மான்மோ கினியாய் மணப்பரே—நான்மறைசொல்

வல்லா னவனேயன்றி மாலா தியபசுக்கள்
எல்லாம் பிரமமெனப்படுமே—வல்லார்

திருவருட்பா வோடுலகிற் சேர்பசுக்கள் பாவும்
திருவருட்பா வென்னச் செலுமே—பொருவா

வரமணிமா டத்தா வடுதுறைவா ழுஞ்சுப்
பிரமணிய தேசிகன்போற் பேண—உரனமையா

எல்லாரு மெய்க்குரவ ரென்று வருவாரே
நல்லாயென் சொன்னுய் நகையன்றே."

(சக0-சஉ0)

[ஏகநாயகரைத் தரிசித்து, "உமாதேவியாரைப் போல என்னையும் இவரருகே இருக்கச்செய்யுங்கள்" என்ற பெதும்பையை நோக்கித் தோழியர் கூறும் கூற்று இது.]

உலாவை அரங்கேற்றி வருகையில் அதன் அருமையை அறிந்து பலர் பாராட்டினர்கள். அங்கிருந்தவர்களிற் சிலர் பொறாமையால் புறம்பே இவரைப்பற்றித் தூஷித்து வந்தனர். அதை யறிந்த தியாகராச செட்டியார் ஒவ்வொரு நாளும் உலா அரங்கேற்றப்பட்ட பின்னர் அங்கே வந்திருந்தவர்களை நோக்கி, "இதில் எவருக்கேனும் ஏதாவது ஆட்சேபமுண்டா? இருந்தால் நான் சமாதானம் கூறுவேன்" என்று சொல்லுவது வழக்கம். ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. அப்பால் அந்நூல் அரங்கேற்றி நிறைவெய்தியது. யாவரும் அந்நூலை மிகப் பாராட்டி, "இதனைப் போல வேறொருலாவைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்றுசொல்லி இவருக்கு நல்ல ஸம்மானஞ்செய்தார்கள்.

* ஸ்ரீ ஆதிகுமரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம்.

திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீகாசிமடத்துத் தலைவராகவிருந்த ஸ்ரீ காசிவாசி இராமலிங்கத் தம்பிரானவர்களுக்கும் இவருக்கும் மிக்க பழக்கம் உண்டு. இவரைக்கொண்டு ஸ்ரீ ஆதிகுமர குருபர ஸ்வாமிகள் சரித்திரத்தைக் காப்பியச் சுவைபடச் செய்விக்க வேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு இருந்தது. ஒரு தினம் இவருடன் சம்பாஷணை செய்துகொண்டிருந்தபொழுது அந்தச் சரித்திரத்தைச் செய்யவேண்டுமென்றும் அதில் இன்ன இன்ன பாகங்களை இன்ன இன்னவிதமாகப் பாடவேண்டுமென்றும் அவர் வற்புறுத்திச் சொன்னர். அவர் சொல்லியவற்றிற் சில இவருக்கு உடன்பாடாக இராவிட்டாலும் மறுத்தற்கஞ்சி அவர் விரும்பிய வாறே அந்நூலைச் செய்து நிறைவேற்றினர். அதில் ஸ்ரீ குமர குருபர ஸ்வாமிகளுடைய இளமைப் பருவ வருணனையும், ஸ்தல யாத்திரையும், திருச்செந்தூராண்டவன் அருளிச் செயலும், பிறவும் மிக நன்முக அமைக்கப்பெற்றுள்ளன.

அந்நூலிலுள்ள பாடல்கள்: ஈஈஅ. அவற்றுட் சில வருமாறு :—

பாண்டிநாட்டு வளம்.

(தரவு கொச்சகக்கலிப்பா)

"சாலெலாம் வெண்டளைத் தலையெலாஞ் செஞ்சாலி
காலெலாங் கருங்குவளை காவெலாங் கனிச்சாறு

---

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 3409-3750.

பாலெலாங் கழைக்கரும்பு பாங்கெலா மிகத்திருந்தி
நூலெலா நனிவிதந்து நுவல்வளத்த தந்நாடு.'' (கூ)

ஸ்ரீ வைதண்ட நகரம்.

'' ஆய்ந்தபுகழ்ப் போர்வையுடை யத்திருநாட் டினுக்கழகு
தோய்ந்ததிரு முகமென்னத் துலங்குநக ரொன்றதுதான்
ஏய்ந்தபெருஞ் சைவர்குழாந் திருக்கயிலை யென்றிசைப்ப
வாய்ந்தவயி ணவர்கடிரு வைகுண்ட மெனுநகரம்.'' (கஉ)

செந்திலாண்டவன் இலேவிபூதியின் சிறப்பு.

(விருத்தம்)

'' இலேயமில் குமர வேண்முன் வணங்குவார்க் கென்றுந் துன்பம்
இலேயடு பகைசற் றேனு மிலேபடு பிணிநி ரப்பும்
இலேயளற் றுழன்று வீழ்த்த லிலேபல பவத்துச் சார்பும்
இலேயென விலேவி பூதி யெடுத்தெடுத் துதவல் கண்டார்.'' (சச)

[இலேயம் = லயம் - அழிவு. நிரப்பு - வறுமை. அளறு - நரகம்.]

சுந்தர நாயுடு.

சுரங்கம்பாடியில் நீதிபதியாக இருந்த சுந்தரநாயுடு என்பவர் தம் ஊருக்குப் போகும்பொழுது ஒவ்வொரு வருஷத்திலும் திருவாவடுதுறைக்கு வந்து தங்கி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துச் சில தினமிருந்து சம்பாவித்துவிட்டுச் செல்வார். வைஷ்ணவத்திற் பற்றுடையவர். தெலுங்கு மொழியிற் செய்யுள் இயற்றும் வன்மை அவருக்கு உண்டு. ஒருமுறை வழக்கப்படி அவர் திருவாவடுதுறை மடத்திற்கு வந்திருந்தபொழுது தாம் இயற்றிய தெலுங்குப் பத்தியங்களைச்சொல்லிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். உடனிருந்த பிள்ளையவர்கள் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய குறிப்பையறிந்து உடனே அவர் விஷயமாக,

(விருத்தம்)

'' தூமேவு பாகவத சிரோமணியாஞ் சுந்தரப்பேர்த்
தோன்றூல் நீபின்
பூமேவு மால்பதத்துச் சூரிகளோ டிருத்தறனைப்
புலப்ப டுத்தற்
கேமேவு தரங்கையிடைச் சூரிகளோ டவையினில்வீற்
றிருக்கப் பெற்றாய்

மாமேவு நினதன்புஞ் சீர்த்தியுமீண் டெடுத்துரைக்க
வல்லார் யாரே ”

[சூரிகள் - நித்திய சூரிகள், ஜ்ஞாநி யங்கத்தினர்கள்.]

என்னும் செய்யுளைக் கூறிப்பாராட்டினர். அந்தச் செய்யுளை இவர் விரைவில் இயற்றியதையும் அதில் தம்முடைய உத்தியோகச் செய்தியும் நித்திய சூரிகளைப்பற்றிய செய்தியும் சிலேடையாக அமைந்திருப்பதையும் அறிந்த சுந்தரநாயுடு இவருடைய கவித் துவத்தை வியந்து புகழ்ந்து சென்றனர்.

கல்லிடைக்குறிச்சி போய்வந்தது.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பெரிய பட்டத்திற்கு வந்த பின்பு முன்னமே நிச்சயித்திருந்தபடி இவரிடம் படித்துவந்த முற்கூறிய ஸ்ரீ நமச்சிவாயத் தம்பிரானவர்களுக்கு அபிஷேகம் செய்வித்து நமச்சிவாய தேசிகரென்ற பெயருடன் சின்னப்பட்டம் அளித்தனர்; பின்பு வழக்கப்படி கல்லிடைக்குறிச்சி மடத்திற்கு அவரை அனுப்பினர். ஸ்ரீநமச்சிவாய தேசிகர் விரும்பியபடி அவருடன் கல்லிடைக் குறிச்சிக்கு இப்புலவர் பெருமானும் சென்றனர். அங்கே சிலநாள் இருந்து அவரை மகிழ்வித்து அவரால் உபசரிக்கப்பெற்று மீண்டும் திருவாவடுதுறை வந்து சேர்ந்தார். அப்பால் அங்கே ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய அவையை அலங்கரித்து வந்தனர்.

மாயூரவாசம்.

தாம் புதிதாக மாயூரத்தில் வாங்கிச் செப்பஞ் செய்திருந்த வீட்டில் வசிக்கவேண்டுமென்ற விருப்பம் இவருக்கு அப்போது உண்டாயிற்று. ஆதலின் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய அனுமதிபெற்றுக்கொண்டு மாயூரஞ்சென்று அவ்வாறே இருந்து வருவாராயினர்.

மாயூரம் சிறந்த சிவஸ்தலமாதலாலும் கல்விமான்களாகிய பல பிரபுக்களும் தமிழபிமானிகளும் வித்துவான்களும் நிறைந் திருந்த நகரமாதலாலும் இவருக்கு அவ்வூர் வாழ்க்கை ஏற்றதா கவும் உவப்புள்ளதாகவும் இருந்தது. அங்கே இருந்துகொண்டு அடிக்கடி திருவாவடுதுறை சென்று ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துச் சிலநாள் அங்கே இருந்துவிட்டு வருவார்.

இவருடைய வீடு ஒரு கலைமகள் நிலயமாகத்திகழ்ந்தது. பல மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்வதும், தம்மைப் பார்க்கவந்த பிரபுக்களிடம் தமிழ்நூல்களிலுள்ள அருமையான செய்திகளைக் கூறிமகிழ்வித்தலும், புதிய செய்யுட்களை இயற்றுதலும் ஆகிய தமிழ்த் தெய்வ வழிபாடுகளே காலை முதல் இரவு நெடுநேரம் வரையில் இவருடைய வேலையாக இருந்தன. எதை மறந்தாலும் தமிழை மறவாத பெருங்கவிஞராகிய இவர் இங்ஙனம் தமிழறிவை வரையாமல் வழங்கிவரும் வண்மையைப் புகழாதவர் அக்காலத்து ஒருவரும் இல்லை. தமிழை நினைக்கும் பொழுதெல்லாம் இக்கவிஞர் கோமானையும் உடனினைத்துப் புகழ்தலைத் தமிழ் நாட்டினர் மேற்கொண்டனர். அவர்களுள்ளும் சோழநாட்டார் தங்கள் 'சோறுடைய சோணாடு' தமிழுலகுக்கும் சோணாடாகவும் இப்புலவர் பிரானுல் ஆணமையை எண்ணி எண்ணி மகிழ்ந்து வந்தனர். அச் சோழநாட்டுள்ளும் மாயூரத்தைச் சார்ந்த பிரதேசத்திலுள்ளவர்கள் தமிழ்த்தெய்வமே ஓர் அவதாரம் ஆகித் தங்களை உய்விக்க வந்திருப்பதாக எண்ணிப் போற்றிவரலாயினர். தமிழ்ப் பயிற்சி இல்லாதவர்கள் கூட இப்புலவர் சிகாமணியைப் பார்த்தல் ஒன்றே பெரும்பயனென்று எண்ணி வந்துவந்து இவரைக் கண்டுகளித்துச் செல்வார்கள். இங்ஙனம் இப்பெரியாருடைய புகழ் தமிழ்மணக்கும் இடங்களிலெல்லாம் பரவி விளங்கியது.

முதற்பாகம் முற்றிற்று.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

[எண் - பக்க எண்.]

[மேற்கோள்கள், சிறப்புப்பாயிரங்கள், தனிப்பாடல்கள், நூற் செய்யுட்களாகவுள்ள முழுச் செய்யுட்களின் முதற் குறிப்புக்கள் மட்டும் இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.]

அகத்திரா, 24.
அகன்றிடு, 218.
அடியெடுத்து, 302.
அடுத்தமனைச், 125.
அடுபுலித்தோல், 134.
அடையவினிமை, 235.
அடையாளை, 256.
அத்தகையது, 313.
அத்தத்திலங்கு, 41.
அத்தனைவாம்பரி, 41.
அத்திசூழ், 268.
அந்தோவென், 125.
அம்பரத்தியர், 325.
அம்பலத்தாட, 46.
அரிதகி, 233.
அருகனுர்க்கு, 107.
அருந்தவருக்கு, 206.
அருவருருவர், 179.
அருவியருவரை, 205.
அருளினுற், 329.
*அவ்வினையாளர், 82.
அழகிய மயிலை, 235.
அழிக்கு நினது, 226.
அளவறு பிழைகள், 46.
அறப் பரிபாலர், 238.
அறவினைப், 133.
அறிதுயில், 270.
அறைவட மொழி, 291.
அன்பார்கருந், 324.
அன்றுமுதல், 220.
அன்னவன்னிவன், 238.
அனேகர், 210.
அனேபோலும், 134.
அனையவன் மொழிந்த, 306.
ஆக்கும் பெருந், 214.
*ஆசானுரைத்தது, 82.
ஆய்ந்தபுகழ், 334.
ஆயகருந், 324.
ஆயாவப்பால், 44.
ஆலும்விடம், 90.
ஆவணங்காட்ட, 44.
ஆன்றகருந், 324.
ஆன்றதின், 326.
ஆன்றவப்பூதி, 232.
ஆனதிருவா, 306.
*இத்தையனைய, 36.
*இந்தவசம், 36.
இந்துதவழ், 100.
இரசதவரை, 64.
இல்லையுன்கழல், 23.
இழிதக, 104.
இறைவன்பால், 296.
*இன்பாவிற், 176.
இன்று பைங்கிளி, 140.
இனியநீழல், 237.
இனியாதும், 312.
ஈகைமேற், 216.
ஈன்றவற்கு, 276.
உங்கள்பேரிளுற், 238.
உண்மையாண், 296.
*உய்யமணிமார்பு, 26.
உயர்குண, 132.
உரவுமலி, 306.
உரை செயெப், 226.

* பிள்ளையவர்கள் வாக்கல்லாத செய்யுட்களின் முதற் குறிப்புக்களின் முதலில் இந்த நட்சத்திரக்குறி இடப்பட்டிருக்கின்றது.

*உலகமொருதலேயா, 1.
*உவப்பத் தலைக்கூடி, 70.
*உள்ளும்பவம், 87.
உறுவலியின், 313.
*உன்னையொப், 87.
*உனதுசரற், 286.
எண்ணுதவன், 42.
எண்ணிய, 273.
எத்துணை, 244.
எல்லாமறைத், 193.
*எவ்வகையிலும் (கீர்த்தனம்), 196.
எழுதிடும் வேலை, 324.
எளியோன்பாவம், 126.
எறியுங் கலி, 152.
என்னிது விடையும், 32.
என்னையாடர, 308.
ஏலக் குழலியோர், 90.
ஏற்றநின், 97.
ஒண்கமலம், 14.
ஒப்பாரும், 237.
ஒருகானடந்தென், 179.
ஒருபரைநேர், 311.
ஒருபாதலத்து, 135.
ஒருபுறநீலி, 285.
ஒருமகவுக்கு, 124
ஒருமலத்தடை, 325.
ஒள்ளியகந்தரம், 225.
ஒளிவார், 222.
ஒற்றைமாங்கனி, 127.
ஒன்றுவெங், 235.
ஓங்குபுகழ், 303.
ஓங்குமந்தார, 218.
*ஓதரிய, 163.
*ஓதுதற்கரு, 146.
*ஓலைதேடி, 239.
*கட்டோம்புதல், 38.
கடிமலர்க்கைக் கொண்டு, 205.
கடியேறுமலரோனை, 305.
கண்ணகன் ஞாலம், 301.
கண்ணிய பிறப்பை, 244.
கண்ணீர் பெருக, 214.
கந்தமூலபலம், 307.
*கந்தவேளோ, 68.
கயல்விழிக், 272.
கருதரியபுகழ், 159.
கரை செய், 232.
கலக்கந்தர, 43.
கலைபுகலும், 150.
*கற்றவர் சிரோமணி, 328.
*கற்றற்கெளியன, 147.
*கற்றூரறிகுவர், 184.
காதும் பிறவிக், 26.
காமதகன, 237.
*கார்பெற்ற, 279.
காரெலாம், 98.
காற்றுபல் குறையும், 324.
கிழக்கிருந்து, 245.
கிழவடிவன்றி, 296.
குடம்புரை செருத்தல், 309.
குண்டலமோதிரம், 125.
குருந்தே றுறங், 208.
குருவார் துகிர், 93.
குலவுபுகழ்ச் சுந்தரர், 182.
*குற்றமில்சீர், 176.
குறையின் மாணிக்க, 140.
கூடுபுகழ்மலி, 328.
கோடிபொன்னளிப்ப, 125.
கோடியுள்ளவரை, 301.
கோமேவுதிருத், 195.
கோமேவுமதில், 48.
சடையர்நீற், 105.
சத்தனைவ்வரு, 304.
சத்திவாழ், 294.
சதுமுகன்முதலோர், 267.
சம்புசங்கர, 23.
*சாதிநாயகனை, 148.
சாம்பமூர்த்திக், 303.
சாலெலாம், 333.
சிரபுரச் சந்ததி, 51.
*சிவபரஞ்சுடரின், 120.
சிவிகைமுன், 126.
சிறந்த தீஞ்சுவை, 105.
சீர்தவை செய்த, 301.
சீர்பூத்த நெநாட்டில், 267.
*சீர்பூத்த மயிலாடு, 318.
சீரணவா, 128.
சீருலவு வனசமகள், 48.
சுரும்புசெறி, 104.

சூடவேண்டுநின், 23.
செய்க்குவளை, 25.
செய்ய தாமரை, 272.
செய்யமுகிலின், 22.
செய்யிருக்குங், 31.
சொல்லத்தக்கது, 256.
சொற்றது நாட்டுந், 152.
சொன்னயானந், 217.
*சோகங்களுற்ற, 4.
ஞாலம் பொலியப், 178.
ஞானமார்தரு, 103.
*தக்கார் தகவில, 87.
தடிசினத்த, 107.
*தண்ணறுமுண், 69.
தண்ணிய குணத்தர், 98.
தண்ணிய வானவர், 216.
*தருகாமுறுபொழில், 187.
*தருமைவள்ர், 65.
தரைகமழ்வண், 206.
தரைபுகழ், 290.
தலைவரைத்தணந், 104.
தழுவுமையால், 139.
தழைதருநல், 216.
*தன்னிகருயர்ச்சி, 102.
தனியெழின், 234.
தாரூர் தடம்புயத், 179.
தாலமெலாம், 221.
தானப்பாவடிக், 298.
தானேதனக்கு, 277.
தீகழ்தருசின், 243.
திருந்துமந்தார, 219.
திருவமிக்கோங்கும், 301.
தில்லைநட, 216.
துணிபிறை, 205.
*தூமேவு திருமூக்கீச், 137.
தூமேவுபாகவத, 334.
*தூயமுத்திராம, 243.
தெருள் பெற்றான், 159.
தெளிதருபுகழ், 245.
*தேமாரிபொழி, 178.
*தேன்பிறந்த, 44.
தொட்டியமர்ந்து, 220.
*தோலுந்துகிலும், 90.
நட்டபன்முதலுந், 233.
*நல்லார்க்கு நல்லவனும், 177.
நல்லானந், 311.
*நன்கொடிச்சிக்கை, 29.
நன்மலர் செறி, 291.
நனையமலர்ப், 160.
நாட்டுக்கு நல்ல, 177.
நாடுமந்தார, 219.
நாடுவானவர், 302.
நாமகண்மாமகள், 173.
நின்பார்வை, 193.
நீடியவன்பு, 224.
நீடுதம்மலை, 133.
*நீதியுரு, 268.
நீர்வேட்டடைந்து, 162
நீற்றைச் சிந்தினை, 134.
நூலியற்றியீதல், 169.
நையா நின்ற, 214.
பங்கயமலர்த்தி, 54.
பணிகின்றேனிலை, 23.
பதிபசுபாசம், 323.
பதியெனக்கு, 270.
பரசமயத்தவர், 226.
பரம்பரன் மூடியிற், 308.
பல்லெலாந்தெரிய, 124.
பலகதிர் விரிக்கும், 270.
பலாசுபற்பல, 325.
பவத்துயர்பாற, 96.
பழுதிலபயன், 102.
பன்னிருதடங், 291.
பன்னுசீர்க்கிள்ளி, 101.
பாடிவந்தார்க்கு, 193.
பாடுவதெங்கே, 283.
பாமிளாடு, 252.
*பார்புகழும் விநாயக, 147.
பாரதத்தைமேரு, 13.
புண்ணிய வடிவாம், 138.
புரமடங்கமுன், 24.
புரவோன்கவிஞர், 161.
புரிந்துநீழன், 284.
புவியகத்து, 221.
பூங்காவனக், 208.
பூமாதிருக்குமணி, 22.
*பூவார் பொழிற், 44.
பெற்றதாய் செம், 270.

*பெற்றருள், 87.
பேசவந்தான், 274.
பேசுபுகழ்ச்சால், 184.
பேராளா, 312.
*பொருதவிசாகரஞ், 38.
பொருவாய், 223.
பொருவில்மகா, 209.
பொருள்செயிவள், 277.
பொருளினையீட்டும், 244.
பொழிந்தானே (கீர்த்தனம்), 197.
பொற்றுணரிதழி, 98.
பொறியடக்கமும், 128.
பொன்செய்த, 218.
பொன்னிவளம், 303.
போகமென்பன, 307.
மதிமுத்தம், 185.
மந்தரச்சிகரி, 241.
*மரந்துளைத்த, 37.
மருந்துபிடகர், 193.
மலர்செழுங், 271.
மழையெனப்படு, 244.
மழைவரை, 232.
மறங்கொண்ட, 221.
*மறைநூறுகளை, 42.
மறைமுதற்பல, 96.
மறையவர்திருவை, 138.
மன்னரருளதிகார, 197.
மன்னுமருட், 231.
மன்னுமனைய, 217.
மாமேவுநந்திருவா, 181.
*மாலாதில்லறத், 318.
மாவேநறும், 208.
மீடிகெடுக்கும், 244.
மின்செய்த, 126.
மின்னுமான், 81.
*மீனாட்சி சுந்தரப்பேர், 148.
*மீனாட்சிசுந்தரனும், 88.
முகத்தினுக்குரிய, 103.
முகை முறுக்கு, 283.
முடங்கலின், 271.
*முத்திக்கு, 146.
முந்தையறிஞர், 14.
முழுதுலகு, 284.
முற்றுணர்ந்த, 311.
முன்னநீ, 271.
முன்னுமீவ், 126.
மூவருக்கு, 128.
மூவாமுதலே, 128.
மேடமூர் மதலை, 276.
மையேறுங், 151. [283.
மொழிபெயர்த்தெடுத்துரைத்தமி,
மொழிபெயர்த்தெடுத்து மதுர,
மொழி முதலா, 231. [291.
வகுத்தபல், 126.
வஞ்சனேன், 326.
வண்கர்லென்ன, 184.
வண்டுதொடர், 147.
வந்தது பசித்தீ, 275.
வரியேன்மதர், 179.
வருகதென், 271.
வருந்தாரென, 42.
வரையுதித்திடு, 304.
*வரையேற, 39.
வலியவரனல், 186.
வழிபடுதேவனுங், 224.
வளமருவு, 187.
வளமலி, 296.
வளர்திருவா, 311.
வளரொளி, 283.
வளிதாழ், 193.
வாதனூரடிகளுக், 284.
வாதனூரர், 135.
வாயுதவு, 190.
வானமும் புகழ், 236.
வானமுழுவதுங், 238.
வானளவு புகழ், 236.
வானுடுமேவும், 223.
வானுடுவெறுத்து, 105.
வானுறை, 307.
*விடவாளை, 155.
*விதியெதிரில், 176.
விதிவழி, 275.
விள்ளரும், 206.
*விளங்குறு, 146.
வீரமாதவிர், 107.
வெள்ளாம்பலான், 178.
வெள்ளியமால்வரை, 135.
வையமுழுதுய்ய, 183.

*சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி.

அகத்தியத் திரட்டு, 293.
அகத்தியர், 304, 324.
அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், 47, 54-5, 65-7, 91, 96, 136.
அகிலாண்ட நாயகி மாலை, 45, 54.
அகிலாண்டம் பிள்ளை (திரிசிரபுரம்), 72.
அகிலாண்டேசுவரி, 45.
அகோர சாஸ்திரிகள் (வள்ளலார் கோயில்) : துலாமாதத்திற் காவேரி ஸ்நானத்திற்கு மாயூரம் வருபவர்களுக்கு இரவும் பகலும் சிறந்த உணவை அளித்து வந்த ஒரு செல்வர், 189.
அஞ்சனுட்சியம்மை, 217.
அண்ணாசாமி ஐயர் (சுந்தரப் பெருமாள் கோயில்), சுந்தரப்பெருமாள் கோயில் மூப்பனார் குடும்பத்திற் கணக்குவேலை பார்த்துக் கொண்டும் தமிழ் நூல்களைப் படித்து இன்புற்றும் வாழ்ந்தவர், 191, 307.
அதவத்தூர் : திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள ஓரூர், 4, 8.
அந்தகக்கவி வீராகவ முதலியார், 3, 102.
அந்தியேஷ்டி-அபரக்கிரியை, 305.
அப்பாத்துரை முதலியார், 313, 321-2.
அப்பா தீட்சிதர் (திருவாலங்காடு): இவர் வடமொழியிற் சிறந்த வித்துவான் ; வியாகரணத்திலும் சைவ சாஸ்திரத்திலும் மிக்க அறிவாற்றலுடையவர் ; வருஷந்தோறும் திருவனந்தபுரம் ஸமஸ்தானத்தில் ரூ00 ரூபாய் ஸம்மானம் பெற்று வந்தவர் ; அப்பைய தீட்சிதர் பரம்பரையினர், 201.
அப்பாப்பிள்ளை (திருச்சத்தி முற்றம்), 28,30.
அப்பாவையர் (திருநயம்), 18.
அப்பைய தீட்சிதர், 201.
அம்பர், 189, 328.
அம்பர்ப்புராணம், 122, 328.
அம்பலவாண செட்டியார், 276, 278.
அம்பலவாண தேசிகர், 77, 81, 199-202, 204, 207, 222, 245-7, 255-6, 298, 303, 321. [204.
அம்பலவாண தேசிகர் கலம்பகம், [81, 202.
அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், 221-7.
அம்பலவாண முனிவர், 77, 80-
அமுதகரவல்லி, 237.
அமுதப்பெருமான், 52.
அமுதாம்பிகை, 162. [163.
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், 96,
அரங்கக்குடி : மாயூரத்தைச் சார்ந்ததோர், 321. [280.
அரங்கநாத முதலியார் (பூண்டி),
அரதனபுரம் (ஊற்றத்தூர், வாளொளிபுற்றூர்), 25, 220.
அரதனசலம் (வாட்போக்கி), 139.

*இப்புத்தகத்தில் வந்துள்ள வித்துவான்கள், பிரபுக்கள் முதலியவர்களின் பெயர்களும் ஊர், நூல் முதலியவற்றின் பெயர்களும் இவ்வகராதியிற் காணப்படும். அப்பெயர்களுள் புத்தகத்தினுல் விளங்காதவற்றிற்குமட்டும் தெரிந்தவரையிற் சுருக்கமாக வரலாறு எழுதப்பட்டுள்ளது.

அரன்வாயில், 87.
அரிச்சந்திர புராணம், 90.
அரிதகி வனம் (திருக்குறுக்கை), [231.
அருணகிரியந்தாதி, 9.
அருணந்தி சிவாசாரியார், 224.
அருணமச்சிவாயர் : உமாபதிசிவாசாரியாரின் சிஷ்யர், 224. [26.
அருணாசல கவிராயர் (சீகாழி),
அருணாசல தேசிகர் : கோயிலூர் வேதாந்த மடத்தில் முத்துராமலிங்க தேசிகருக்குப் பின்பும் சிதம்பர ஐயாவுக்கு முன்பும் ஆசிரியராக இருந்து விளங்கியவர், 243.
அருணாசல மூதலியார் (உறையூர்), 18, 76, 116.
அருணைக்கலம்பகம், 30.
அழகர் கலம்பகம், 41.
அழகிரிராஜன், 157 - 8.
அழைத்து வாழ்வித்த பெருமான், [95.
அளகாபுரி (அளகை), 94.
அன்னத்தாச்சி, 2.
அஷ்டப்பிரபந்தம், 21.
ஆச்சாபுரம், 182.
ஆத்திசூடி, 9, 57.
ஆதிகும்பேசுவரர், 259.
ஆதிகுமரகுருபர ஸ்வாமிகள், 21. 65, 333. [திரம், 333.
ஆதிகுமரகுருபர ஸ்வாமிகள் சரித்
ஆதிகேசவப்பெருமாள், 163.
ஆதிநாராயணபிள்ளை தெரு, 2.
ஆராவமுதப்பெருமாள், 272-3.
ஆரியங்காவற்பிள்ளை, 153-4, 156.
ஆரியவரசன், 139 - 40.
ஆவூர், 29.
ஆற்றங்கரைமுதலியார் (மாயூரம்), [189.
ஆற்றூர், 217.
ஆற்றூர்ப்புராணம், 215. [329.
ஆறுமுகத்தாபிள்ளை, 88, 210,
ஆறுமுக நாவலர், 62, 153, 227, 242.
ஆறுமுக நாவலர் சரித்திரம், 63.
ஆறுமுகம்பிள்ளை (கொட்டடி), 17.
ஆறைவடதளி, 73.
ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது, 61.
இடைக்கழி (விடைக்கழி), 212.
இரத்தினகிரி, 138.
இராசலிங்கர், 139.
இராசாத்துரை பிள்ளை (சீகாழி); பிள்ளையவர்கள் சம்பந்தியின் தந்தையார்; திருவாசகத்துக்கு உரை யெழுதியவர்; அவ்வுரையையும் இவர்பாலிருந்த பதிஞ்ஞராந் திருமுறையையும் ஆறுமுக நாவலர் வாங்கிச் சென்றனரென்பர், 173.
இராமகுட்டி சாஸ்திரிகள் (திருக்கோடி காவல்): திருவாவடுதுறை ஆதீன வித்துவான்களுள் ஒருவர்; வடமொழி வியாகரணத்திலும் அலங்கார நூலிலும் வல்லவர்; தம்பிரான்களுக்கு ஸம்ஸ்கிருத பாடஞ் சொன்னவர்; தெலுங்கப் பிராமணர், 201, 295.
இராமசாமி ஐயங்கார், 196.
இராமசாமி ஐயர் (வையைச்சேரி), 207, 302.
இராமசாமிப்பிள்ளை (கொற்ற மங்கலம்), 56. [247-56,
இராமசாமிப் பிள்ளை (தஞ்சை),
இராமசாமிப் பிள்ளை (மதுரை), 158, 203, 221, 227-9, 292.
இராமநாதபுரம், 157, 227. [247.
இராமநாதமுதலியார் (கொழும்பு),
இராமலிங்கத் தம்பிரான் (காசிவாசி), 189, 333.
இராமானுச கவிராயர், 57, 63, 117.
இராமாயண கீர்த்தனம், 26.
இருளாண்டி வாத்தியார், 17.
இலக்கணக் கொத்து, 66.
இலக்கணச் சுருக்கம், 57.
இலக்கண விளக்கம், 141-2, 144, 152, 178, 321.
இலக்கண விளுவிடை : தாண்டவராய முதலியாரால் இயற்றப் பெற்ற நூல், 55.

இலக்குமணச் செட்டியார் (காரைக் இலுப்பைப்பட்டு, 237. [குடி), 283.
இறையனாரகப் பொருள், 229.
ஈங்கோய்மலை, 234.
உக்த வேதீசுவரர், 295.
உடையார்பாளையம், 35.
உத்தமதானபுரம், 26.
உதங்கமுனிவர், 134.
உமாபதி சிவாசாரியார், 224.
உமையம்மை, 185.
உவமான சங்கிரகம், 41.
உறையூர், 11, 17-8, 76, 100, 133-6.
உறையூர்ப் புராணம், 118, 122, 131-2, 144.
ஊட்டத்தூர் (ஊற்றத்தூர்), 21-2.
ஊற்றை நாட்டார், 22.
ஊறை நாடு, 22.
எண்ணெய்க் கிராமம், 3-4.
எல்லப்ப நாவலர், 6, 102, 144.
எழும்பூர், 59.
எறும்பியூர், 234. [தாதி, 137.
எறும்பீச்சரம் வெண்பாவந்
ஏக நாயகர், 332.
ஏமரிஷி, 270.
ஐயாசாமி பிள்ளை (திருநெல் வேலி) : கோடக நல்லூர்ச் சுந் தரஸ்வாமிகள் சிஷ்யர்; மகா வைத்திய நாதையருக்குப் பழக் கமுள்ளவர்; தமிழ் அத்வைத நூல்களிற் பயிற்சியும் இசைப் பயிற்சியு முடையவர்; ஒரு பஜனை மடம் கட்டிக்கொண்டு அதில் பஜனைசெய்து வாழ்ந்த வர், 208.
ஒட்டக்கூத்தர், 265.
ஒப்பிலாமுலையம்மை, 296.
ஓலைத்தூக்கு - சீட்டுக்கவி, 3.
ஓலைப்பாசுரம், 3.
ஔவையார், 181. [234.
கங்கைகொண்ட சோளேச்சுரம்,
கச்சியப்ப முனிவர் (கச்சியப்ப ஸ்வாமிகள்), 27, 34-5, 59, 73, 93, 102, 121, 162-3, 165, 200, 225, 323.
கச்சியானந்தருத்திரேசர் வண்டு விடுதூது, 61.
கச்சிரங்கதுரை : உடையார்பாளை யம் ஜமீன்தாராக இருந்தவர்; கனம் கிருஷ்ணையர் வீணைப் பெருமாளையர் முதலிய ஸங்கீத வித்துவான்களையும், கந்தசாமிக் கவிராயர் பாலசரஸ்வதி சுப்பிர மணியக் கவிராயர் சார்வாய் குமாரசாமிக் கவிராயர் முதலிய தமிழ் வித்துவான்களையும் ஆத ரித்தவர், 35.
கச்சி விநாயகர் பதிகம், 297.
கண்டதேவி, 280. [289-90.
கண்டதேவிப் புராணம், 285.
கண்ணப்பத் தம்பிரான், 240.
கண்ணப்ப நாயனூர், 332. [191.
கண்ணுவையர் (தர்மதானபுரம்),
கணபதி பிள்ளை, 215.
கந்தசாமிக் கவிராயர் (சேற்றூர்), 238, 240.
கந்தசாமிக் கவிராயர் (திருவாவடு துறை), 35, 199, 239 - 40.
கந்தசாமிப் புலவர் (மதுரை), 56.
கந்தசாமிபிள்ளை (வல்லம்) : இவ ராற் செய்யப்பெற்ற நூல்கள் சில உண்டு, 179, 190-91, 215.
கந்தப்ப செட்டியார் (கும்பகோ ணம்), 267.
கந்தபுராணம், 35, 59, 70, 102, 199, 212.
கந்தரநுபூதி, 30-31. [231.
கந்தரலங்காரம், 41.
கப்பற்பாட்டு, 322.
கபாலீசுவரர், 60. [320, 323.
கம்பகரபுரம் (திருக்குறுக்கை),
கம்பர், 181, 249, 265.
கம்பரந்தாதி, 78, 80.
கம்பராமாயணம், 26, 35, 53, 60, 62, 69, 88-9, 119, 292, 301,
கயற்கண்ணி, 218.
கரந்தை : தஞ்சாவூரைச் சார்ந்த கருந்தட்டான் குடியென வழங் கும் ஓரூர், 330.
கரிவரதப் பிள்ளை, 61.

கருந்தடங்கணம்மை, 324.
கருப்பையா முதலியார், 170.
கரும்பிரத நாயகி, 219. [30.
கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி,
கரையேற விட்டவர், 39.
கல்லாடம், 54, 59. [335.
கல்லிடைக்குறிச்சி, 165, 168,
கல்விச்சங்கம் (சென்னை), 55-7.
கலியாணசோழபுரம்: மாயூரத்திற்கு வடக்கே உள்ளது; பண்டைக் காலத்திற் கலிகால சோழபுரமென்று இது வழங்கி வந்ததென்பர், 188-9, 215, 217.
கலைசைக் கோவை, 164. [164.
கலைசைச் சிலேடை வெண்பா,
கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி,
கழனிநாதர், 243. [164.
கழனியம்பதி - கோயிலூர், 243.
கற்குடி, 17, 20, 234.
கற்குடிமாலை, 137.
கன்னபுரம், 309.
கனகசபைத் தம்பிரான், 204, 236.
கனகசபைப்பிள்ளை, 276.
காசி, 305.
காசிரகசியம், 305 - 6.
காஞ்சிப்புராணம், 28, 31, 59, 73, 121, 268, 314.
காஞ்சிபுரம், 121, 297.
காட்சிவிநாயகர், 284.
காந்திமதி (நாககன்னிகை), 135.
காந்திமதியம்மை, 136.
காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், காமதகனபுரம், 231. [136, 142.
காமர்பூம்பதி, 89.
காயாரோகணேசுவரர், 320.
காயாறு - தொண்டை நாட்டிலுள்ள தோரூர், 67.
கார்குடி: மாயூரத்திற்கு வடக்கே உள்ளதோரூர், 229.
காரிகை, 66.
காரைக்கால், 1, 318.
காவிரி, 231, 295.
காவேரியாச்சி, 15.
காவை - திருவானைக்கா, 52.
காளமேகப்புலவர், 3.
காளஹஸ்தி ஸமஸ்தானம், 107.
கிருஷ்ணசாமி உபாத்தியாயர்: நாகபட்டினத்திலிருந்த ஒரு தமிழ் வித்துவான்; சில பிரபந்தங்களை இயற்றியுள்ளார், 319.
கிருஷ்ணசாமி முதலியார்: தொட்டிக்கலையில் இருந்த ஒரு பிரபு; இவருடைய பரம்பரையினர் சென்னை ஐயாப்பிள்ளைத் தெருவில் இருக்கின்றனர்; அவர்கள் பூண்டி அரங்கநாத முதலியாரின் உறவினர்கள், 163.
கிருஷ்ண செட்டியார், 283.
கிருஷ்ணபுரம், 144.
கீழ்வேளூர், 141-4, 321.
குசகேது-ஒரு சோழன், 220.
குசேலோபாக்கியானம், 122-3, 129-30, 136.
குணகரம்: சென்னை இராசதானிக் கலாசாலையில் ஆசிரியராக இருந்த சேஷையங்கார் என்பவர் இயற்றிய செய்யுள் நூல், 17.
குப்பபிள்ளை, 189.
குப்பையம்: சீகாழிக் கருகிலுள்ள தோரூர், 170. [274.
கும்பகோணபுராணம், 259, 269,
கும்பகோணம், 33, 61, 258-9, 268, 276, 278-9, 320, 331.
கும்பகோணம் காலேஜ், 67, 257-8, 279.
கும்பேசுவரர், 272.
குமரனந்தாதி, 299.
குருசாமி பிள்ளை: பிள்ளையவர்கள் குமாரரின் மாமனார், 173.
குருபரம்பரை அகவல், 236.
குலாம் காதர் நாவலர், 145.
குளத்தூர்: வேதநாயகம் பிள்ளை பிறந்த ஊர்; திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது, 152.
குளத்தூர்க்கோவை, 152, 160.
குளந்தைப் பதிற்றுப்பத்தந்தாதி, குற்றாலக் குறவஞ்சி, 213. [163.

குற்றுலம்-திருத்துருத்தி, 36,294.
குறுக்கைப் புராணம், 229-30.
குன்றக்குடி, 18. [309.
குன்றமருதூர்: ஒரு சிவஸ்தலம், கூறைநாடு, 189, 191-2, 300.
கேசவ முதலியார்: தொட்டிக் கலையிலிருந்த ஒரு பிரபு; சிவஞான முனிவர் முதலியவர்களை ஆதரித்தவர், 163.
கோட்டையூர்: கோடீச்சுரம் என்னும் சிவஸ்தலம்; கும்பகோணத்தைச் சார்ந்தது, 257.
கொள்ளிடநதி (வடகாவிரி), 95.
கொற்றமங்கலம், 57.
கொற்றவாளீசர், 243.
கொன்றைவேந்தன், 57.
கோடகநல்லூர்: திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளதோரூர், 208, 319.
கோதண்டராம சாஸ்திரிகள் (திருக்கோடிகா), 201.
கோதண்டராமையர் (இலுப்பைப் பட்டு), 236.
கோபால கிருஷ்ண பாரதிகள், 192-4. [புரம்), 191, 314-7.
கோபாலபிள்ளை (முத்தாம்பாள்
கோபால ராயர் (தண்டாலம்), 257-8.
கோபு சுப்பராய செட்டியார், 267.
கோபு நடலஞ் செட்டியார், 267.
கோமளவல்லித்தாயார், 269.
கோமுத்தி தீர்த்தம், 207.
கோயம்புத்தூர், 35.
கோயிலூர், 242-3, 280.
கோயிலூர்ப் புராணம், 242.
கோவிந்தபிள்ளை: இவர் திரிசிரபுரத்திலிருந்த வைணவ வித்துவான்; சிலகாலம் சென்னையிலிருந்தார்; கம்பராமாயணம் சுந்தர காண்டத்திற்கும் சடகோபரந்தாதி முதலியவற்றிற்கும் உரையெழுதியவர்; திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களிற் சிறந்த பயிற்சி உள்ளவர், 19.
சங்கரசேவகச் சோழன், 106.
சங்கரநாதர், 281, 284.
சங்கர விநாயகர், 284.
சங்கராசாரிய ஸ்வாமிகள், 320.
சங்கராசாரியார்மடம் (கும்பகோணம்), 259.
சச்சிதானந்த தேசிகர்: தருமபுர ஆதீனத் தலைவராக இருந்தவர்; இவருடைய ஜனனபூமி அரியலூர்; கார்காத்த வேளாள மரபினர், 145, 177, 192, 229-30.
சஞ்சீவி நாயகர், 148.
சடையப்ப பிள்ளை (பல்லவராயப் பட்டு), 189.
சத்திமுற்றப் புலவர், 28.
சத்தியஞான தரிசனிகள்: ஸ்ரீ சனற்குமார முனிவரின் சிஷ்யர், 224.
சதாசிவ பிள்ளை (யாழ்ப்பாணம்): ஆறுமுக நாவலர் மாணாக்கர்; அவர் முதலிற் பதிப்பித்த நூல்களைப் பின்பு பதிப்பித்தும் அவர் இயற்றிய தர்மங்களைப் பரிபாலனஞ் செய்துகொண்டும் வந்தவர், 229.
சந்திரப்பிள்ளை, 147.
சபாபதி ஐயர், 192.
சபாபதி முதலியார் (அஷ்டாவதானம்), 56, 59, 61, 67, 75.
சபாபதி முதலியார் (காஞ்சீபுரம்), 59 - 61, 63-7, 69-70, 108, 158-60, 227, 268-9, 305.
சம்புநாதர், 45, 52. [18.
சம்புலிங்க முதலியார் (உறையூர்),
சமஸ்யை (சமுத்தி), 3, 11, 13.
சமிவனம், 243.
சரசுவதி மகால், 328.
சரவண ஓதுவார், 35. [30.
சரவணப்பிள்ளை (கார்குடி), 229-
சரவணப் பெருமாளையர், 62-3.
சவராயலு நாயகர், 145-9, 298, 300.
சவரி முத்தாபிள்ளை: பிள்ளையவர்களிடம் பேரன்பு பூண்ட

வர்; கிறிஸ்தவ மதத்தினர்; பல சைவநூல்களைச் சேகரித்துப் படித்து வந்தவர், 99, 101, 167.
சதாசிவநாத பிள்ளை, 318.
சனற்குமார முனிவர், 224.
சாக்கை (சாக்கோட்டை), 308..
சாத்தனூர்: திருவாவடுதுறைக்கு அருகிலுள்ளதோரூர்; இங்கே மிகப் பிரசித்திபெற்ற ஐயனார் கோயில் ஒன்றுண்டு; இதில் உள்ள அந்தணர்களில் ஆயிரவர்; திருவாவடுதுறை ஸ்ரீமாசிலாமணியீசருக்குக் கைங்கரியம் செய்து வந்தாரென்று சேந்தனூர் திருவிசைப் பாவால் தெரிகிறது; சாந்தை யெனவும் வழங்கும்; பெரியபுராணத்திலும் இவ்வூர் கூறப்பெற்றுள்ளது, 192.
சாமி ஐயர் (நெய்ப்பற்றூர்), 170,
சாமி ஐயர் (பூங்காவூர்), 189. [189.
சாமிநாத கவிராயர், 88, 173, 301. [யூர்), 257-8, 330.
சாமிநாத தேசிகர் (கொட்டை
சாமிநாதபிள்ளை (திருப்பாம்புரம்), 190.
சாமிநாத வாத்தியார் (சாமிநாதையர்; கூறைநாடு): இவர் வீரசைவர், 192, 300.
சாமிநாதையர் (உத்தமதானபுரம்): இசையிலும் தமிழிலும் பயிற்சியுள்ளவர்; திண்ணைப்பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தவர், சாமிமலைக்குறவஞ்சி, 26. [26.
சாமிமுதலியார், 162.
சார்ங்கபாணிப்பெருமாள், 272.
சாலிவாடி - கோயிலூர், 243.
சிங்காரவேலு முதலியார் (திருத்துருத்தி), 189, 295, 297.
சித்தக்காடு: மாயூரத்திற்கு மேற்கேயுள்ள தோரூர்; வித்தவனமென வழங்கும்; பல வித்தர்கள் இருந்தமையால் இப்பெயர் பெற்ற தென்பர், 190.
சித்தநூல்கள், 34, 77.
சித்தர் சிவப்பிரகாசர், 224. [159.
சித்திரச் சத்திரப்புகழ்ச்சிமாலை,
சிதம்பரஐயா: கோயிலூர் வேதாந்த மடத்தின் தலைவராக இருந்தவர், 242-4, 280.
சிதம்பரஞ் செட்டியார் (பூவாளூர்), 86. [227.
சிதம்பரம், 59, 158, 180, 194,
சிதம்பரம் பிள்ளை (கலியாணசோழபுரம்), 188-9, 215.
சிதம்பரம் பிள்ளை (திரிசிரபுரம்), 18, 45, 47, 71, 73 - 4.
சிதம்பரம் பிள்ளை (பிள்ளையவர்கள் குமாரர்), 72, 330.
சிதம்பரம் பிள்ளை (பிள்ளையவர்கள் தந்தையார்), 2, 3, 6-9, 11-2.
சிதம்பர முதலியார்: சென்னை ஐயாப்பிள்ளை தெருவில் இருந்தவர்; கச்சியப்ப முனிவரைக் கொண்டு விநாயக புராணத்தை இயற்றுவித்து இரண்டாயிரம் ரூபாய் ஸம்மானம் செய்து குளத்தூரில் அம் முனிவருக்கு ஒரு மடமும் கட்டிக்கொடுத்தவர், 162.
சிதம்பர வாத்தியார், 179.
சிதம்பரேசர்மாலை, 163 - 4.
சிதம்பரேசுவரர், 163 - 4.
சிந்ய முதலியார், 170.
சிவக்கொழுந்து தேசிகர்: இவர் வரலாற்றைச் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத்திரட்டினலறிந்து கொள்ளலாம், 257-8,
சிவகங்கைத் தீர்த்தம், 95. [330.
சிவகாமி அம்மை, 163.
சிவகுருநாத பிள்ளை, 259 - 62, 264 - 5, 267, 278.
சிவசிதம்பரம் பிள்ளை (சீயாலம்): இவர் செய்த சில சிறப்புப்பாயிரங்கள் உண்டு, 179.
சிவசிதம்பர முதலியார் (திருப்பாதிரிப்புலியூர்): யோகப் பயிற்சி உள்ளவர்; திருப்பாதிரிப்புலி

யூர் விஷயமாகச் சில பிரபந்தங்கள் இயற்றினவர், 165, 179.
சிவஞான சித்தியார், 310.
சிவஞானபோதச் சிற்றுரை, 225.
சிவஞானபோத பாஷ்யம், 121.
சிவஞான ஸ்வாமிகள் (சிவஞான முனிவர்), 34, 102, 121, 162 - 3, 200, 201, 225, 297, 314, 322. [111 - 4.
சிவதருமோத்திரம், 108 - 9,
சிவதாணுத் தம்பிரான், 330.
சிவப்பிரகாச தேசிகர் மடம், 73.
சிவப்பிரகாச ஸ்வாமிகள் (துறைமங்கலம்), 21, 30, 45, 102, 144.
சிவப்பிரகாசையர், 329.
சிவலிங்க வாத்தியார் (மாயூரம்): இவராற் செய்யப்பெற்ற பிரபந்தங்கள் சில உண்டு, 190 - 91.
சிவலோகத்தியாக முதலியார், 170, 182.
சிவாக்கிர யோகிகள்: சூரியனூர் கோயிலிலுள்ள சைவ ஆதீன ஸ்தாபகர், 77.
சிவாநந்த ஸ்வாமிகள், 148.
சிவாயம் - இரத்தினகிரி, 139.
சிறையிலிநாதர், 290.
சின்னராமசாமி ஐயர்: மாயூரம் தெற்கு மடவளாகத்திலிருந்தவர்; சிறந்த ஸங்கீதப் பயிற்சியுடையவர்; கோபாலகிருஷ்ண பாரதிகளுடைய சிஷ்யர்; அவரை மரண பரியந்தம் ஆதரித்துப் பாதுகாத்தவர்; அவர் செய்த கீர்த்தனங்கள் முற்றும் இவருக்குப் பாடம் உண்டு, 192.
சின்னையா உபாத்தியாயர் (காயாறு), 67.
சீகாழி, 26, 169, 175, 179- 81, 188-9. [178, 187.
சீகாழிக் கோவை, 169, 171-2,
சீட்டுக்கவி, 3.
சீயாலம்: ஓரூர், 179.
சீரவாணி (க்ஷீரவாணி), 26.
சீரூப்புராணம், 145.
சூத்தரத்தினேசுவரர், 25.
சுந்தரநாதர், 284.
சுந்தர நாயகி, 334. [307.
சுந்தரப் பெருமாள்கோயில், 191,
சுந்தரம் பிள்ளை, 108 - 10, 114-8.
சுந்தரமூர்த்தி நாயனார், 295-6.
சுந்தரவிடங்கப் படலம், 315.
சுந்தர ஸ்வாமிகள், 208, 319.
சுப்பராய செட்டியார் (சோடசாவதானம்), 17, 71, 75, 120, 128, 305, 321.
சுப்பராய பிள்ளை (திருவிடைக்கழி), 211, 215.
சுப்பராய முதலியார் (திரிசிரபுரம்), 76. [297.
சுப்பிரமணியக் கடவுள் பதிகம்,
சுப்பிரமணிய தம்பிரான், 305-6.
சுப்பிரமணிய தேசிகர் (கீழ்வேளூர்): சுப்பையா பண்டாரமென்றும் வழங்கப்படுவர்; இவர் தேவாரம் முழுவதையும் பண்ணோடு ஓதுதலிற் புகழ்பெற்று விளங்கிய சொக்கலிங்கதேசிகருடைய தந்தையார், 141 - 4, 321.
சுப்பிரமணிய தேசிகர் (மேலகரம்): 82, 106, 167 - 8, 198, 204, 207, 209, 222, 238, 241, 246 - 7, 254 - 6, 264, 269, 292,298, 302, 310, 321, 326-8, 334 - 5.
சுப்பிரமணிய் தேசிகர் (வேளூர்), 34 - 5, 39 - 40, 76, 236.
சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது 326.
சுப்பிரமணிய தேசிகர் மாலை, 326.
சுப்பிரமணிய பாரதியார், 144.
சுப்பிரமணிய முனிவர் (தொட்டிக்கலை), 36, 162, 164.
சுப்பு ஓதுவார் (திருவாவடுதுறை): தமிழ் இலக்கியப்பயிற்சியுடையவர்; திருவாவடுதுறை யாதீன ஓதுவார்களில் ஒருவர்; மதுரை இராமசாமி பிள்ளை யென்பவர் ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் முன்பு

அடங்கன் முறையைப் பரிசோதித்த பொழுது முழுவதையும் பண்ணோடு படித்துக் காட்டியவர், 285.
சுப்பு பாரதியார், 144, 190, 211-2, 215.
சுப்பையர் (பம்பரஞ்சுற்றி), 26.
சுரும்பார் குழலி, 139.
சுவர்ணத்தியாகர், 203. [20.
சூதசங்கிதை, 126 - 30, 208, 319-
சூரிகள், 335.
சூரியனார் கோயில்: ஆடுதுறைக் கருகில் உள்ளது; நவக்கிரக ஸ்தலம்; இங்கே உள்ள சிவாக்கிரயோகிகள் மடம் ஸ்கந்தபரம் பரையென்று சொல்லப்படும், 77.
சூரைக்குடி (சூரைமாநகர்): நகரவைசியர்களுடைய ஒரூர், 280, 285.
சூரைமாநகர்ப் புராணம், 281, 283 - 5.
சேங்கழுநீர் விநாயகர், 163.
செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், 164.
செட்டி பண்டாரத்தையா, 27.
செல்லப்ப முதலியார், 18, 75,
செவ்வந்திப் புராணம், 145. [137.
செவ்வந்தி விநாயகர், 43.
செவவைச்சூடுவார்: தமிழ்ப்பாகவதம் இயற்றியவர்; இவர் ஊர் வேம்பத்தூர், 60.
சென்னை (சென்னபுட்டணம்), 55, 57 - 63, 69 - 70, 108, 117, 121, 158, 160, 162, 165, 168 - 70, 179 - 80, 200, 227 - 8, 305, 321. [17, 61.
சென்னை இராசதானிக்கலாசாலை,
சென்னைக் கல்விச் சங்கம், 55,
சேக்கிழார், 43. [258.
சேதுபுராணம், 101 - 2. [332.
சேரமான் பெருமாள் நாயனூர்,
சேற்றூர்: பாண்டி நாட்டிலுள்ள தோரூர், 238.
சேஷையர் (உத்தமதானபுரம்), 26.
சேஷையங்கார் (சென்னை), 17.
சேஷையங்கார் (திருமங்கலக்குடி), 191, 259, 273, 328.
சொக்கலிங்கம், 9.
சொக்கலிங்க முதலியார், 18.
சொர்ச்சபுரம் மடம், 71.
சொன்னயான நிரோதன நாதர்,
சொன்னவாறறிவார், 295. [217.
சோணசைலமாலை, 45. [179.
சோமசுந்தரம் பிள்ளை (திட்டை),
சோமசுந்தர முதலியார் (திரிசிரபுரம்), 17, 67, 72.
சோமரசம்பேட்டை, 8, 14 - 5,
சோமேசர், 162. [117.
சோமேசர் முதுமொழி வெண்பா,
சோழேந்திரன், 217. [163.
ஞானக்கூத்தர்: துறையூரிலுள்ள வீரசைவ ஆதீனத் தலைவர்களில் ஒருவர்; திருவிடைமருதூர், விருத்தாசலம், திருவையாறென்னும் ஸ்தலங்களின் புராணங்களைத் தமிழ்ச்செய்யுளாக மொழிபெயர்த்தவர், 330.
ஞானசம்பந்தர், 230.
ஞானப்பிரகாசம் பிள்ளை, 169,
ஞானாம்பிகாபுரம், 231. [312.
ஞானாம்பிகை, 231.
தசவிடுதூது, 299.
தஞ்சாவூர் (தஞ்சை), 245, 247-8, 255, 258, 328, 330. [137.
தண்டபாணிபதிற்றுப்பத்தந்தாதி,
தண்டாலம்: கும்பகோணத்துக்குத் தெற்கேயுள்ளதோரூர், 257. [142.
தண்டியலங்காரம், 19 - 20, 102,
தண்டியலங்காரவுரை, 66.
தணிகைப் புராணம், 93, 268.
தம்பித்துரை முதலியார், 322.
தர்மதானபுரம்: மாயூரத்திற்குக் கீழ்பாலுள்ளதோரூர், 191.
தரங்கம்பாடி (தரங்கை), 312,
தருக்க சங்கிரகம், 227. [334 - 5.

தருமபுரம், 145, 150-51, 158, 177, 192, 229, 292.
தலையாலங்காடு, 297.
தனியூர்ப் புராணம், 300
தனுக்கோடி முதலியார், 195.
தாண்டவராயத் தம்பிரான் : திருவாவடுதுறை யாதீன வித்துவான், 59, 61-2, 66 - 8, 158, 165 - 8, 198 - 9, 264, 269.
தாண்டவராய முதலியார், 55-6.
தாயுமானவர், 43, 111, 150.
தானப்பாசாரியார், 298, 300.
தீட்டகுடிப்பதிகம், 21.
திட்டை : சீகாழிக்குப் பக்கத்திலுள்ள தோரூர், 179.
திண்ணைப்பள்ளிக்கூடங்கள், 5.
தியாகராச செட்டியார், 14, 67, 82, 85-7, 89, 97 - 100, 115 - 7, 122, 132, 140, 146, 153, 160 - 61, 182, 227 - 9, 258-9, 274, 279, 331, 333.
தியாகராசப்பெருமான், 97, 99, 103, 106. [18.
தியாகராச முதலியார் (உறையூர்),
தியாகராச முதலியார் (குற்றாலம்), 295.
தியாகராசலீலை, 80, 97 - 8, 100, 103, 106-7, 118, 132, 162, 210.
தியாகராஜ சாஸ்திரிகள், 201.
திரிகூடராசப்ப கவிராயர், 102, 154, 198.
திரிசிரபுரம் (திருச்சிராப்பள்ளி), 11 - 20, 27, 39, 40, 43, 58, 64, 70, 71, 75 - 6, 78, 80, 81, 88, 99 - 101, 109, 116-9, 127, 129-31, 137, 142-4, 146, 149, 152, 157, 159- 60, 164-5, 167-8, 188, 200, 227, 249, 314, 330.
திரிசிராமலை, 131, 234. [69.
திரிசிராமலையமகவந்தாதி, 43, 54,
திரிபுவனேசுரர், 243.
திருக்கழுக்குன்றம், 174.
திருக்களிற்றுப்படியார், 138.
திருக்காவலூர்க்கலம்பகம், 146.
திருக்குடந்தைத் திரிபந்தாதி, 274, 276, 278.
திருக்குடந்தைப்புராணம், 275.
திருக்குருகாவூர், 186.
திருக்குருகைப் பெருமாள் கவிராயர் : ஆழ்வார் திருநகரியில் இருந்தவர்; வேளாண் மரபினர்; இலக்கண இலக்கியங்களில் மிகச் சிறந்த அறிவு வாய்ந்தவர்; மாறனலங்காரம், மாறனகப்பொருள், நூற்றெட்டுத் திருப்பதிக் கோவை, நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் கிளவி மணிமாலை, குருகா மான்மியம் முதலியவற்றின் ஆசிரியர், 102.
திருக்குற்றாலப் புராணம், 154.
திருக்குற்றாலம், 294.
திருக்குறள், 59, 153, 227 - 8.
திருக்குறள் பரிமேலழகருரை, 23, 57, 142, 199.
திருக்கோடிகா : காவிரியின் வடபாலுள்ள தேவாரம் பெற்ற ஸ்தலம், 35, 201, 295.
திருச்சிற்றம்பலக் கோவையார், 59, 76, 86-7, 175-6, 227 - 8.
திருச்செந்தூர், 333. [65.
திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்,
திருஞானசம்பந்த தேசிகர்: தருமபுர ஆதீனஸ்தாபகர், 192.
திருஞானசம்பந்தம் பிள்ளை (மதுரை), 158.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆனந்தக்களிப்பு, 234.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப்பத்தந்தாதி, 234.
திருஞானசம்பந்தமூர்த்தி மடம், 18, 234. [108 - 9.
திருத்தணிகைப் புராணம், 62,
திருத்தருப்பூண்டி பாகவதர்: மாயூரத்தில் இருந்தவர்; ஸங்கீதத்தில் நல்ல பயிற்சி யுடையவர்; உஞ்சவிருத்தி செய்தே காலத்

தைக் கழித்தவர்; கோபாலகிருஷ்ண பாரதிகளின் நண்பர்; இவர் இயற்பெயர் தெரியவில்லை, 192. [136.
திருத்தவத்துறை, 21, 91, 94,
திருத்தவத்துறைப்புராணம், 94,
திருத்தாந்தோன்றி, 100.
திருத்தில்லை யமகஅந்தாதி, 180.
திருத்துருத்திப்புராணம், 294 - 5.
திருநகரி : சீகாழியைச் சார்ந்த ஒரு விஷ்ணுஸ்தலம், 187.
திருநயம்: ஓரூர்; திந்நயமெனவழங்கும், 18. [313 - 4, 319.
திருநாகைக்காரோணப் புராணம்,
திருநாளைப்போவார் சரித்திரக் கீர்த்தனை, 192, 321 - 2..
திருநீற்றிட்டான்மதில்: இது திருவானைக்காக் கோயிற் பெரிய திருமதில்; ஸ்ரீசம்புநாதர் சித்த வடிவங் கொண்டு எழுந்தருளியிருந்து, தம்முடைய வேலைக்குத்தக்கபடி பொன்னுகும் வண்ணம் வேலை யாட்களுக்குத் திருநீறளித்துக் கட்டுவித்தமையின் இஃது இப்பெயர்பெற்றது; **திருவானைக்காப் புராணம்,** திருநீற்றுத் திருமதிற்படலம், ககஆம் திருவிருத்தம்பார்க்க, 46.
திருநெல்வேலி, 144, 153, 203, 208, 296, 320.
திருப்பரங்குன்றம், 284.
திருப்பராய்த்துறை, 133.
திருப்பனந்தாள், 189, 333. [165.
திருப்பாதிரிப்புலியூர், 39, 158,
திருப்பாம்புரம் : நன்னிலந் தாலுகாவிலுள்ளது; தேவாரம்பெற்றஸ்தலம், 190.
திருப்புன்கூர், 194.
திருப்பேரூர், 309.
திருப்பைஞ்ஞீலி, 40, 241.
திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி, 40.
திருமங்கலக்குடி: தேவாரம்பெற்றஸ்தலம்; ஆடுதுறைக்கு அருகிலுள்ளது, 191, 328.
திருமந்திரம், 77.
திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை, 147, 159.
திருமயிலைப் புராணம், 162, 168, 170, 180.
திருமுகப் பாசுரம், 3.
திருமுருகாற்றுப்படை, 293.
திருமுல்லைவாயில், 38.
திருவண்ணுமலை, 45, 298.
திருவண்ணுமலை மட்டம், 18, 90.
திருவண்ணுமலை யாத்திரை, 298.
திருவநந்தபுரம், 257 - 8, 330.
திருவம்பர், 328. [59, 61, 68.
திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை,
திருவரங்கத்தந்தாதி, 41.
திருவலஞ்சுழி, 33. [190.
திருவழுந்தூர் (திருவிந்தளூர்),
திருவாசகம், 23, 30, 59, 90, 138, 173, 293, 330.
திருவாரூர், 97, 103, 141.
திருவாரூர்த் தலபுராணம்: பதினேழாவது நூற்றாண்டில் இருந்த அளகைச் சம்பந்த முனிவரென்பவரால் இயற்றப்பெற்றது; நாகரகண்டமென்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு; உகஉஉ-செய்யுட்களையுடையது,
திருவாலங்காடு, 35, 201. [59.
திருவாலவாயுடையார், 284.
திருவாவடுதுறை, 18, 27-8, 33, 39, 59, 66, 76, 81 - 2, 102, 106, 121, 145, 158, 166, 180, 188, 191, 195, 198, 204, 210, 221 - 2, 224 - 8, 236, 238, 242, 245, 247 - 9, 253-4, 259, 264, 266, 268 - 9, 280, 285, 290, 292 - 3, 295, 297 - 9, 302, 310 - 12, 321, 326, 328 - 9, 334 - 5.
திருவாவடுதுறை யமகவந்தாதி (துறைசையந்தாதி), 297 - 9.
திருவாளப் பிள்ளையார், 95.
திருவாளொளிபுற்றூர்ப் புராணம், 215, 220.

திருவானைக்கா, 27, 42, 45, 131, 136.
திருவானைக்காத்திரிபந்தாதி, 42.
திருவானைக்காப் புராணம், 27, 46, 48, 93.
திருவிடைக்கழிக் குறவஞ்சி, 215.
திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ், 211.
திருவிடைமருதூர், 305-6, 330.
திருவிடைமருதூர்ப் புராணம், 33, 205, 330. [கோவை, 330.
திருவிடைமருதூர் மும்மணிக்
திருவிடைமருதூருலா, 330.
திருவிளையாடற் கீர்த்தனம், 18.
திருவிளையாடற் புராணம், 30, 43, 54, 59, 88, 120 138, 199, 248.
திருவீழிமிழலை, 88.
திருவுந்தியார், 138. [21 - 2.
திருவூறைப்பதிற்றுப்பத்தந்தாதி,
திருவெண்காடு, 189, 312.
திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழ், 182 - 3.
திருவேங்கடம் பிள்ளை : குப்பைய மென்னும் ஊரிலிருந்த காராத்த வேளாளப் பிரபு; தென் குரங்காடு துறையிலும் ஆடு துறைப் பெருமாள் கோயிலிலும் அன்ன சத்திரம் கட்டுவித்தவர்; பாடசாலைகளையும் சில விஷ்ணுவாலயங்களிற் கட்டளைகளையும் ஏற்படுத்தியவர், 189.
திருவேங்கடாசல முதலியார் (எழும்பூர்), 59-61, 69, 192, 278.
திருவையாறு, 205.
திவ்யப்பிரபந்த வியாக்கியானங்கள், 60.
திவாகரம், 56 - 7. [
தீர்க்கவாகு, 230, 234.
துறைமங்கலம் : பெரும்புலியூர்த் தாலுகாவிலுள்ளதோரூர்; இங்கே சிவப்பிரகாச ஸ்வாமிகளுக்காக அண்ணாமலைரெட்டியாரால் அமைக்கப்பெற்ற அழகிய நடைவாவி ஒன்றுண்டு, 45, 102, 144.
துறையூர் மடம், 73. [
தெய்வநாயகம் பிள்ளை, 152 - 3.
தென்திரு முல்லைவாயில், 309.
தேம்பாவணி, 146, 149.
தேவகிரி, 25.
தேவராச பிள்ளை, 118 - 20, 122 - 3, 126, 129 - 30.
தேவாரச்சந்தம், 91, 218. [330.
தேவார திருவாசகங்கள், 21 - 2,
தேவிகோட்டை (தேவகோட்டை), 242, 285, 292. [பிரபுக்கள், 290.
தேவிகோட்டைத் தனவைசியப்
தேவிபட்டணம், 30.
தேனுபுரேசர், 30.
தொட்டிக்கலை : தொண்டை நாட்டில் சென்னைக்கு வடக்கே உள்ளதோரூர், 163.
தொல்காப்பியம், 57, 142, 144.
நக்கீரர், 6.
நச்சினார்க்கினியர், 1. [189, 312.
நடராச பிள்ளை (திருவெண்காடு),
நடராச பிள்ளை (மாயூரம்), 179.
நடனபுரம், 217.
நடனவிநாயகர், 237.
நதிபுரம் - ஆற்றூர், 217.
நந்தன் சரித்திரம், 193.
நந்தாநதி, 25.
நமச்சிவாயத் தம்பிரான் - (நமச்சிவாய தேசிகர்; திருவாவடுதுறை), 82, 203, 242, 292, 295. [190.
நமச்சிவாய பிள்ளை (சித்தக்காடு),
நமச்சிவாய பிள்ளை (பட்டீச்சுரம்), 28-30, 33, 72, 210.
நமச்சிவாயமூர்த்தி, 33-4, 181, 203, 224, 244, 246, 266.
நயனப்ப முதலியார், 56.
நரசிங்கச்சோழன், 106.
நல்லூர் - பெருமணநல்லூர், 183.
நளவெண்பா, 30, 279.
நன்னூல், 9, 67, 120, 142.
நன்னூல் விருத்தியுரை, 57, 66.
நாகபட்டினம், 195, 313, 319 - 22.
நாகூர், 145. [
நாயகம் : ஒரு பெண், 155.

நாராயணசாமி நாயகர், 68.
நாராயணசாமி வாத்தியார் (ஒரத்தநாடு): திருக்கண்ணபுரப் புராணம் முதலியவற்றை இயற்றியவர், 314. [பம்), 259.
நாராயண சாஸ்திரிகள் (மண்ட
நாராயண செட்டியார் (வன் ருண்டர்), 203, 242, 280-81, 283, 292. [68.
நாராயண பிள்ளை (திரிசிரபுரம்),
நாராயண பிள்ளை (மாயூரம்), 189.
நாராயண பிள்ளை (வரகனேரி), 18,
நாலடியார், 56. [68, 75.
நாற்கவிராச நம்பியகப்பொருள், 66, 142.
நாஞ்சீவவாதக்கட்டளை, 244.
நீகண்டு, 9.
நித்தியகன்ம விதிகள், 304.
நியமம்: ஒரு சிவஸ்தலம்; நேம மென வழங்கும், 234.
நீதிநூல், 169.
நீலகண்டேசர், 237.
நீலாயதாட்சி யம்மை, 324.
நீலிமாவனம், 241.
நெடுங்களம்: தேவாரம் பெற்றஸ்தலம், 234. [ரம், 2.
நெய்தல்வாயிலுடையான் கோத்தி
நெய்ப்பற்றூர்: சீகாழிக்கு அருகிலுள்ள தோரூர், 170, 189.
நெல்லை நாயகி, 243.
பகழிக்கூத்தர், 65.
பங்களூர், 118 - 20, 122, 128, 131, 135 - 6, 200.
பங்குனியாறு, 99. [30.
பசுபதிபண்டாரம் (ஆவூர்), 29 -
பஞ்சநத செட்டியார், 267.
பஞ்சபுண்ணியத்தலம், 94.
பஞ்சாக்கர தீர்த்தம், 183.
பஞ்சாக்கர தேசிகரந்தாதி, 225.
பஞ்சுவையர் (சாத்தனூர்): பழைய காலத்திலிருந்த ஸங்கீத வித்துவான்களுள் ஒருவர்; வடமப் பிராமணர்; பெரிய வித்துவான்களுடைய சபையிலிருந்து பாடிப் பரிசுபெற்றவர், 192.
பட்டினத்துப் பிள்ளையார், 330.
பட்டீச்சுரம், 28, 59, 72, 88, 158, 210, 329.
பட்டீச்சுர யமகவந்தாதி, 28.
பட்டுக்கோட்டை, 285.
படிக்கரை நாயகர், 237.
பண்டார சாஸ்திரம், 34.
பதிணேராவது நிகண்டு, 243.
பம்பரஞ்சுற்றி: ஓரூர், 26.
பரஞ்சோதி முனிவர்: திருக்கைலாய பரம்பரை ஞானசிரியர்களில் ஒருவர், 224.
பரஞ்சோதி முனிவர்: திருவிளையாடற் புராண நூலாசிரியர், 31, 102.
பரமசிவத்தம்பிரான்: தருமபுர ஆதீனத்துச் சிஷ்யர்; வடமொழி தென்மொழிகளில் நல்ல பயிற்சியுள்ளவர்; செய்யுள் இயற்றும் ஆற்றலுடையவர்; சில நூல்களும் இயற்றியுள்ளார், 292.
பரமசிவம் பிள்ளை (வல்லம்), 189.
பரமேசர், 237.
பல்லவராயப்பட்டு: மாயூரத்திற்கு வடக்கேயுள்ள தோரூர், 189.
பழனி, 299.
பழனிக்குமாரத்தம்பிரான்: சேற்றூர்க் கந்தசாமிக் கவிராயருடைய புதல்வர்; தமிழ் நூல்களிலும் சைவ சாஸ்திரங்களிலும் பயிற்சியுள்ளவர்; இராமநாதபுரம் பாண்டித் துரைத் தேவருக்குச் சாஸ்திர பாடம் சொன்னவர், 158.
பழனியாண்டியா பிள்ளை, 18. [30.
பழைசைப்பதிற்றுப்பத்தந்தாதி,
பழையாறு, 30. [139.
பன்னிரண்டாஞ் செட்டிமார்கள்,
பாகம்பிரியாள், 309.
பாகவதம், 60.
பாசூர், 296.
பாண்டித் துரைஸாமித் தேவர், 157.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி நூற்நூ

பார்சிவல் (பர்லிவல்) : பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்த ஒரு பார்வதி, 284. [பாதிரியார், 62.
பால சித்தானந்தர் (பொம்மைய பாளையம்), 148.
பாலவனத்தம், 157.
பாலியூர், 256. [256.
பாலிவனப்பதிற்றுப் பத்தந்தாதி,
பாவநாசப் பெருமான், 212.
பாஸ்கரர்சபுரம் : திருவாவடுதுறைக்கருகிலுள்ளது ; ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் இயற்றிய பாஸ்கராசாரியார் இருந்த ஊர், 35.
பிரபுலிங்கலீலை, 30 - 31, 54.
பிரமபுரேசர், 170, 172, 219.
பிரமவித்தியாநாயகி பிள்ளைத்தமிழ்,
பிரஸந்ந விநாயகர், 162. [312.
பிள்ளைப் பெருமாளையங்கார், 21.
புதுச்சேரி, 145, 191, 298, 300.
புதுவயல் : தனவைசியர்களுள்ள தோரூர், 308.
புருஷோத்தம நாயுடு, 319.
புழுகீச்சுரம் : தனிபூர்க்கோயில், 300.
புழுகுபூனை, 300 - 301. [220.
புற்றூர் - திருவாளொளிபுற்றூர்,
புறப்பொருள் வெண்பாமாலை, 142.
பூங்காவூர் : மாபூரந் தாலுகாவிலுள்ள தோரூர், 189.
பூவாளூர், 21, 26, 85 - 6, 89, 99.
பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி, 89.
பூவாளூர்ப்புராணம், 28.
பெரியபுராணக் கீர்த்தனம், 302.
பெரியபுராணம், 35, 59, 83 - 5, 88, 102,138, 199, 248, 294, 302.
பெரியராசாமி ஐயர் : மாபூரத்திலிருந்த சங்கீத வித்துவான்களில் ஒருவர், 192.
பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழ், 91, 136.
பெருமணநல்லூர், 182 - 3.
பெஸ்கி (டாக்டர்), 146.
பேரூர்ப்புராணம், 165, 167.
பைபிள், 62 - 3.
பொன்னம்பல முதலியார் (புரசைபாக்கம்), 61, 67-8, 257.
பொன்னம்பல ஸ்வாமிகள், 67.
பொன்னுசாமித் தேவர், 227-8.
பொன்னுசற்பாட்டு, 322.
போர்ட்டுதுரை, 55.
போரூர் வாத்தியார், 59.
மகதீசர், 237.
மகாதேவ சாஸ்திரிகள் 314, 319-20.
மகாலிங்கம் பிள்ளை (தில்லைவிடங்கன்), 180-81.
மகாலிங்கமூர்த்தி, 306, 330.
மகாலிங்கையர் (முழுவை), 57, 62-7.
மகாவைத்தியநாதையர், 207, 209, 259, 302, 320.
மங்களநாயகி, 237.
மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், 276.
மட்டுவார்குழலம்மை, 43.
மடவாளீசுவரம், 120.
மண்டபம் : கும்பகோணத்திலுள்ள ஒரு தெரு, 259.
மண்ணிப்படிக்கரை, 237.
மண்ணிப்படிக்கரைப்புராணம், 236.
மணவைப் பிள்ளைத்தமிழ், 182.
மதுரை, 2-3, 18, 56, 62, 235-6, 245.

மதுரைக்கணக்காயனார், 6.
மதுரைத் தமிழ்ச்சங்கம், 157.
மதுரைநாயக் முதலியார் (திருத்தாந்தோன்றி), 100.
மந்தாரவன விநாயகர், 217.
மயில்ராவணன் சரித்திரம், 26.
மயிலாப்பூர், 60
மயிலைப்புராணம், 168.
மயிலையந்தாதி, 29.
மருதநாயகம் பிள்ளை, 18.
மருதமுத்துப் பிள்ளை (கற்குடி), 17.
மலைக்கோட்டை, 16. [புரம்), 13.
மலையாண்டியாபிள்ளை (திரிசிர
மழவராயனேந்தல் (முழுவை): மதுரைக்குத் கிழக்கே வையையாற்றின் வடகரைபிலுள்ள தோரூர், 62.
மறைஞானசம்பந்தர், 224.
மாசிலாமணீசர், 295. [17.
மாணிக்கி முதலியார் (திரிசிரபுரம்),
மாணிக்கிலிங்கர், 220.
மாதவராவ் (திவான்), 257.
மாம்பழக் கவிச்சிங்க நாவலர், 299.
மாபூரநீதி, 303 - 4.
மாபூரப்புராணம், 303, 318, 321.

மாயூரம், 59, 188 - 91, 195 - 6, 237. 250, 288, 300, 304, 309, 312 - 4, 317, 321 - 2, 329, 335-6.
மீனாமுத்திரை, 2.
மீனாட்சி, 9, 284.
மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஜாதகம், 7 - 8. [53.
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 9,
முடிகொண்டான் - ஓரூர், 192.
முடித்தழும்பர், 139.
முத்தாம்பாள்புரம் - ஓரத்தநாடு, 191,
முத்தீசர், 237. [314.
முத்துக்குமாரத் தபதிரான், 303.
முத்துக்குமாரபிள்ளை (கூறைநாடு). 191.
முத்துக்குமாரபிள்ளை (தில்லை விடங்கன்) : பிள்ளையவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு பாடங் கேட்டவர்; பிற்காலத்தில் திருவாவடுதுறை மடத்தில் காஷாயம் பெற்றுச் சில சிவஸ்தலங்களில் கட்டளை வேலையிலும் கல்விடைக்குறிச்சி மடத்திற் காறுபாறுவேலையிலும் இருந்தவர்; அப்பால் பெரிய காறுபாறு வேலை பெற்றுச் செவந்திபுரத்திலிருந்து நன்மதிப்புப் பெற்றவர், 179, 188, 191.
முத்துச் செட்டியார் (கூறைநாடு), 300 - 301.
முத்துசாமிக் கவிராயர் (காரைக்கால்), 67.
முத்துசாமி பிள்ளை (தேவிபட்டணம், 30.
முத்துசாமி பிள்ளை (மாயூரம்), 190 - 91, 304, 317, 330
முத்துசாமி முதலியார் (சோமரசம் பேட்டை), 117.
முத்துவீர உபாத்தியாயர் (உறையூர்), 17, 67, 69.
முத்துவீரியம், 17.
முத்தைய உபாத்தியாயர், 179.
முருகப்ப செட்டியார், 308.
முருகப்பிள்ளை, 321.
முருங்கைப்பேட்டை, 13.
முல்லையந்தாதி, 38.
முழையூர், 72.
மெய்கண்ட சாஸ்திரம், 34.
மெய்கண்டதேவர், 121, 224, 236.
மேலைத்திருக்காட்டுப்பள்ளி : தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று, மைஸூர், 118. [234.
மௌனஸ்வாமிகள் மடம் (திரிசிரபுரம்), 18, 165, 168.
யாப்பருங்கலக்காரிகை, 138, 142.
யோகீசபுரம் - திருக்குறுக்கை, 231.
யோகீசர், 231.
ரங்கசாமி ஐயங்கார் (கும்பகோணம்), 278 - 9.
ரங்கசாமி பிள்ளை, 245, 247.
ரங்கநாதர், 111.
ரங்கபிள்ளை, 12 - 3.
ராமகுட்டி சாஸ்திரிகள் (திருக்கோடிகாவல்), 201, 295.
ராமதுரை ஐயர் (கடவாசல்), 170.
ராமபிள்ளை (மாயூரம்), 189.
ராமாபுரம் : மாயூரத்தைச் சார்ந்த ஓரூர், 190.
ராஜா கனபாடிகள் : இவருடைய ஊர் திருவிடைமருதூர்; புகழ் வாய்ந்த ராமசேஷ சாஸ்திரிகளின் பரம்பரையினர்; வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் வல்லவர்; மிக்க கவித்துவசக்தி உள்ளவர்; இவருடைய வார்த்தை இன்பத்தை யுண்டு பண்ணும்; மேலகரம் சுப்பிரமணிய தேசிகருடைய அவைக்களத்திற்கு வரும் வடமொழி வித்துவான்களில் முதன்மை பெற்றவர்; பல ராஜசபைகளில் உயர்ந்த சம்மானமும் வாங்கியவர், 330.
ராஜா தீட்சிதர் (மகாமகோபாத்தியாயர்), 276.
லட்சுமணபிள்ளை (திருச்சிராப்பள்ளி), 18, 40, 47, 57 - 9, 67 - 70.
லாவி - ஒருவகை இசைப்பாட்டு,
லாலுகுடி, 21, 91. [322.
லிங்கப்ப நாயக்கர் (வரிசைப் பற்று), 170, 182, 187 - 8.
லிங்கப்பையர் (உத்தமதானபுரம்) : ஒரு தமிழ்வித்துவான், 26.
வச்சணந்திமாலை : பிரபந்த இலக்கணநூல்களில் ஒன்று, 142.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி கூறிடு

வண்டுவார் குழல்நாயகி : திருவாளொளிபுற்றூரிலுள்ள அம்பிகை, 220,
வதிட்டகுடி - திட்டகுடி, 21.
வயலூர் : திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள சுப்பிரமணியஸ்தலம், 117. [94.
வயிரவிவனம் - திருத்தவத்துறை,
வரகனேரி : திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ளதோரூர்; இப்பெயர் வரகுணனேரி யென்பதன்சிதைவெனபர், 18, 75, 99, 101, 167.
வரிசைப்பற்று : சீகாழித்தாலூகாவிலுள்ள ஓரூர், 182, 188.
வல்லம் : தஞ்சாவூருக்கருகிலுள்ளதோரூர், 179, 190 - 91, 215, மாயூரத்தைச் சார்ந்ததோரூர், 189-90.
வலம்புரி விநாயகர் : மண்ணிப் படிக்கரைஸ்தல விநாயகர், 237.
வழுவூர் : எட்டு வீரட்டத்துள் ஒன்று, 256.
வள்ளலார் கோயில் : மாயூரத்திற்கு வடக்கேயுள்ளதொரு சிவஸ்தலம், 73.
வன்றொண்டர், 292-4.
வன்னிவனம் - கோயிலூர், 243.
வஸிஷ்டேசுவரர்: திட்டகுடியிலுள்ள ஸ்வாமியின் திருநாமம், 21.
வாகை யாரணியம் - திருவாளொளிபுற்றூர், 216.
வாட் போக்கி - ரத்னகிரி; தேவாரம் பெற்றதலம், 138 - 9, 234, 309.
வாட்போக்கிக் கலம்பகம், 138-9.
வாமதேவ முருகபட்டாரகர், 179-80.
வாழ்த்து : வாழ்த்திய பாடல்கள்; பிள்ளையவர்கள் வாக்கு, 322.
வாளொளி புற்றூர், 220 - 221.
வாளொளி புற்றூர்ப் புராணம், 220.
விசாகப் பெருமாளையர் (திருத்தணிகை), 57, 59, 62 - 3.
விசாகப்பட்டணம், 55 - 6.
விசுவபதி தீட்சிதர் (திருவாலங்காடு): வடமொழியில் மீமாம்ஸா சாஸ்திரத்தில் அதிநிபுணர்; திருவநந்தபுரம் மகாராஜா குலசேகரப் பெருமாள காலந் தொடங்கி அங்கே ஆஸ்தானபண்டிதராக இருந்து விளங்கியவர், 201.
விசுவலிங்கத் தம்பிரான் : தாண்டவராயத் தம்பிரானவர்களுடைய மாணக்கர்; சிறந்த புத்திமான், 264 - 6.
விடைக்கழி : இடைக்கழி யென்பது இப்பெயரின் சிதைவு, 212.
விநாயக புராணம் : ஸ்ரீகச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றுச் சென்னை ஸ்ரீபிரஸந்ந விநாயகர் ஸந்நிதியில் அரங்கேற்றப் பெற்றது; இதில் நகரச் சிறப்பிற் கூறப்படுவது சென்னையே, 28, 37, 59, 93, 162-3, 293.
விநாயக முதலியார் : 159, 162, 168.
வியாசர்பாடி - சென்னையைச் சார்ந்ததோரூர், 159.
வியாசைக்கோவை, 160 - 62.
வில்வ நல்லூர் : புதுச்சேரியைச் சார்ந்தது; தேவாரவைப்புஸ்தலங்களுள் ஒன்று, 298-9.
வில்வாரணியர் : விளத்தொட்டியிலுள்ள ஸ்வாமி, 219.
வில்வை - வில்வ நல்லூர், 298.
விளத்தொட்டி, 219.
விளத்தொட்டிப் புராணம், 215, 219.
விஸ்லோ அகராதி, 57.
விஜயரங்க முதலியார் (பம்மல்), 234.
விஷ்ணுபுராணம், 278.
வீமநாயக்கன் பாளையம் : திருச்சிராப்பள்ளியைச் சார்ந்ததோரூர், 17.
வீரட்டேசுரர் (திருக்குறுக்கை), 230.
வீரப்ப செட்டியார் (நாகபட்டினம்), 313, 319.
வீரமாமுனிவர் (பெஸ்கி), 246.
வீரராகவ செட்டியார் (திரிசிரபுரம்), 17, 67, 72.
வீரவனப் புராணம், 308.
வீரவனம், 280, 308.
வீரனென்னும் வேட்டுவன், 308.
வீராசாமி செட்டியார் (அஷ்டாவதானம்), 59. [191.
வெங்குவையர் (திருவாவடுதுறை),
வெள்ளியம்பலத் தம்பிரான் (தருமபுரம்), 144.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

வெள்ளைவாரணம் பிள்ளை : பட்டிச் சுரத்திலிருந்த ஒரு பெரியார், 30.
வெற்றிவேற்கை, 57.
வேங்கடசுப்புப் பிள்ளை : ஒரு சிறந்த கவிஞர், 87.
வேங்கடராமையர் (திருநீகரி) : ஒரு சிறந்த கவிஞர், 187.
வேணுகோபாலர் : விளத்திதாட்டியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமாள், 219.
வேதகிரி முதலியார் (களத்தூர்), 117.
வேதநாயகம் பிள்ளை (குளத்தூர்), 88 148 - 52, 160, 169 - 72, 175 - 7, 179, 189 - 90, 195-7, 250, 312, 318, 327 - 8.
வேதநாயக விற்பன்னர் சரித்திரம் : வேதநாயகம் பிள்ளையினுடைய சரித்திரம், 169.
வேலாயுத கவிராயர் (ஸ்ரீராமநாதபுரம்) : சிறந்தவாக்கி ; திருட்டுக்கும்மி முதலிய நூல்களைச் செய்தவர் ; திருச்சிராப்பள்ளி, அரியிலூர் முதலிய இடங்களிலுள்ள செல்வர்களால் ஆதரிக்கப்பெற்றவர். 67-8, 157.
வேலாயுத முனிவர் (வேலாயுத சாமி), 18 - 9, 78.
வேலுப்பிள்ளை : அம்பர்ப்புராணம் செய்வித்த கனவான், 189, 328.
வைத்தியநாத தேசிகர் (திருவாரூர்) : இலக்கண விளக்கம் முதலியவற்றை இயற்றிய ஆசிரியர், 141.
வைத்தியலிங்க உடையார், 256.
வைத்தியலிங்கம் பிள்ளை (மாயூரம்), 190, 314, 317, 321.
வையாபுரி பிள்ளை (முழையூர்), 72.
வையைச் சேரி : திட்டை ஸ்டேஷனைச் சார்ந்ததோரூர். 303.
ஜம்புநாதர், 111.
ஸ்ரீமதி, 91.
ஸ்ரீரங்கம், 117.
ஸ்ரீவல்லபம் - கோயிலூர், 243.
ஸ்ரீவைகுண்டம், 334.
ஸ்ரீனிவாச் பாட்ராச்சாரியார் (கும்பகோணம்), 269.
ஸ்காந்த புராணம், 127.
ஸ்மிருதிசந்திரிகை, 56.
ஸ்வாமிமலை, 33.
ஸௌந்தரிய லஹரி, 286.
ஹரிணிகலிங்க பூஜை, 27.

இரண்டாம் பாகம்

இப்புத்தகத்தில் அடங்கியவை

இப்புத்தகத்தில் வந்துள்ள சிறப்புப்பெயர்முதலியவற்றின் முதற் குறிப்பகராதி ix

முகவுரை .... x-xv

பிள்ளையவர்கள் ஏட்டுச் சுவடிகளில் எழுதிய எழுத்தும் கடிதங்களில் போடும் கையெழுத்தும் xvi

ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—இரண்டாம்பாகம் ... க-உ.அஅ

1. என்னை ஏற்றுக்கொண்டது .... க-கூ

எனது இளமைக்கல்வி - நான் பிள்ளையவர்களைக் கண்டது - என்னைப் பரீட்சித்தது - என் தந்தையாரது வேண்டுகோள்.

2. நான் பாடங்கேட்கத் தொடங்கியது .... கூ-உசு

யாப்பிலக்கணத்தில் என்னைப் பரீட்சித்தது - நல்லதினத்தில் நான் பாடங்கேட்க ஆரம்பித்தது - என் தந்தையார் விடைபெற்றுச் சென்றது - எனக்கிருந்த குறை - தளிரால் தளிர்த்த அன்பு - இவர்பால் நான் நேரே பாடங் கேட்டது - ஒரு தவசிப்பிள்ளை - உள்ளன்பு - திருக்குற்றாலயமக அந்தாதி படித்தது - என் பெயரை மாற்றியது - என் இசைப்பயிற்சியை நிறுத்தியது - ஒருமாணாக்கர் எண்ணெய்வாங்கி வந்தமை - மூன்று சமஸ்யைகள் - முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - பெரிய புராணப் பாடம் - கண்ணப்பநாயனார் புராணம் - 'இன்று நெய் கிடைத்தது' - சடகோப ஐயங்காரைப் பாராட்டியது - ஆனிக்குருபூஜைக்குத் திருவாவடுதுறை சென்று வந்தது - ஆறுமுகத்தாபிள்ளை பட்டீச்சுரத்துக்கு அழைத்தது.

3. திருவாவடுதுறை நிகழ்ச்சிகள் .... உசு-நெச

திருவாவடுதுறை சென்றது - ஸ்ரீசுப்பிரமணிய தேசிகராற் பாராட்டப் பெற்றது - சுப்பிரமணிய தேசிகர் என்னைப் பரீட்சித்தது - திருவாவடுதுறைக் காட்சிகள் - தம்பிரான்

கள் சந்தேகம் கேட்டது - சுப்பிரமணிய தேசிகர் எனக்குப் புஸ்தகங்கள் அளித்தது-திருவாவடுதுறையிலிருந்து பாடஞ் சொல்லும்படி வேண்டப்பட்டது - திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டது.

4. பட்டீச்சுரம் போய்வந்தது .... கூச-எ0

திருவிடை மருதூர் சென்றது - தியாகராச செட்டியாரைப் பார்த்தது - தியாகராச செட்டியாரோடு சம்பாஷித்தது- பட்டீச்சுரம் முதலியவற்றின் வரலாறு - பட்டீச்சுரம் முதலியவற்றின் பெருமை - தமிழபிமானிகள் முதலியோர் வரவு - ஆறுமுகத்தாபிள்ளையின் அன்பு - ஸ்ரீ சிவஞானமுனிவர் காஞ்சிப்புராணம் அரங்கேற்றிய வரலாறு - நான் திருநாகைக்காரோணப்புராணம் பாடங் கேட்டது - மாயூரப்புராணம் பாடங்கேட்டது - ஆறுமுகத்தாபிள்ளை என் புஸ்தகத்தை ஒளித்துவைத்தது - ஒரு போலிப்புலவர் வந்து சென்றது-அகாலபோஜனம் மாறியது - சில் பிராமணர்களின் அன்பு - நூலுக்கும் நீருக்கும் சிலேடை - புறங்கூற்றாளர் அடங்கியது - எனக்கு நைடதம் அளித்தது - பாடஞ் சொல்லப் பயிற்றல் - தன்பெருமை தானறியாத் தன்மையன்' - தியாகராச செட்டியார் வாதஞ் செய்தது - மதவாரணப் பிள்ளையார் துதி - நான் விடைபெற்றுச் சென்றது.

5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள் .... எக-அங

திருவாவடுதுறையில் நான் இவரைப் பார்த்தது - தம் பிரான்கள் பாடங்கேட்டது - சுப்பிரமணியதேசிகர் பரிசளித்தல் - ஆவூர்ப் பசுபதி பண்டாரத்திற்குப் பாடல் அளித்தது - இவர் பாடலாற் பசுபதி பண்டாரம் பரிசு பெற்றது - பலர் இவர் பாடலாற் பரிசுபெற்றது - சுப்பிரமணிய தேசிகர் பாராட்டியது - காசிக்கலம்பகம் முதலியன பாடஞ் சொன்னது - மாயூரத்திற் பாடஞ் சொன்னது - நான் திரு அம்பர்ப்புராணம் பாடங் கேட்டது.

6. திருவாவடுதுறை வாசம் .... அச-கங கூ

அம்பர்ப்புராணம் - திருவாவடுதுறையிற் பாடம் ஆரம்பித்தது - எனக்கு ஆகாரம் பண்ணுவித்தது - நான் படித்த முறை - உடையவர் பூஜைபெற்றது - நான் மல்லிகை மாலை பெற்றது - ஸ்ரீ அப்பாதீட்சிதர் ஆட்சேபித்தது - 'தர்மசங்கடமான விஷயம்' - ஒருபாடலின் சரியான பாடம் - மகா வைத்தியநாதையர் பெருமையை நான்

அறிந்தது - ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் வந்தது - மகா வைத்தியநாதையருடைய இசைப்பாட்டு - பட்டீச்சுரப்புராணம் - என்பால் உண்டான கோபம் - கோபம் மாறியது - குமாரருக்கு விவாகம் நடைபெற்றது - விகட கவியும் வேதநாயகம் பிள்ளையும் - சவராயலு நாயகர் மாலை - சமாசாரப் பத்திரிகையில் வந்த செய்தி - தமிழே நோய்க்கு மருந்து - பலபட்டடைச் சொக்கநாதப் புலவருடைய செய்யுட்களைப் பாராட்டியது - என்னைத் திருவாவடுதுறைக்கு அனுப்பியது - திருப்பெருந்துறைப் புராணம் இயற்றும்படி சுப்பிரமணிய தம்பிரானவர்கள் விரும்பியது - ஒரு செய்யுளின் ஈற்றடி - திருவாவடுதுறை சென்றது - சுப்பிரமணிய தேசிகருக்கு இவர்பாலுள்ள பேரருள் - மொழி பெயர்ப்புப் பாடல் - திருப்பெருந்துறைப் புராணம் பாடத் தொடங்கியது - 'சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன்' - பார்க்க வருபவர்கள் - வன்றொண்டரது ஞாபகசக்தி - என் தந்தையாருக்கு எழுதிய கடிதம் - 'உலகெலாம்' என்னும் செய்யுளின் உரை - பெரியபுராணப்பாடத்தை நிறுத்தியது - பல ஊர்களுக்குச் சென்றது - ஒரு பாட்டிற்குப் பொருள் கூறியது - திருவாவடுதுறைக்கு மறுபடி வந்தது - என்னைப்பற்றிய கவலை - மகாமகம் - சிறப்புப்பாயிரங்கள் - சேற்றூர் ஜமீன்தார் - திருவாவடுதுறைக்கு நான்திரும்பி வந்தது - சுப்பிரமணிய தேசிகர் விடுதி அமைத்துக் கொடுத்தது - அநந்த கிருஷ்ண கவிராயர் - ஸ்ரீ நமச்சிவாய கவிராயருடைய பாட்டைப் பாராட்டியது - அண்ணுசாமி முதலியார் - குற்றாலச்சிலேடைவெண்பா - வீரபத்திரபிள்ளை - திருக்குற்றாலப் புராணம் படித்தது - இரண்டு புறங்கூற்றாளர் பாடங்கேட்டது - வேலுச்சாமிபிள்ளை - சபாபதி முதலியாருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது.

7. பட்டீச்சுர நிகழ்ச்சிகள் ... கங-கூ-கசுங

பட்டீச்சுரம் சென்றது - திருப்பெருந்துறைப் புராணம் பாடி வந்தது - ஆறுமுகத்தாபிள்ளை எழுத்தாணியை ஒளித்து வைத்தது - பாலசுந்தர முதலியார் - இவருடைய கௌரவம் - 'அத்துக் கெட்டுவிடும்' - 'மூன்றுவது தெரு' - ஸ்ரீ பிரம்ம வித்தியா நாயகி பிள்ளைத் தமிழ் - சாமிநாத தேசிகர்செய்த உதவி - எனக்குப் பாலபோத இலக்கணம் வாங்கித்தந்தது - திரு ஆலூர்த் திரிபந்தாதியின் அரங்கேற்றம் - ஆறுமுகத்தாபிள்ளையின்கோபம் - ஆலூர்த்திரிபந்தாதிச் சிறப்புப்பாயிரம் - இன்னும் சில

வருஷம் படிக்கட்டுமே' - துரைசாமி பிள்ளைக்காகச் செய்த செய்யுட்கள் - தனுக்கோடி முதலியாருக்குக் கடிதம் எழுதியது - 'உடுக்கையும் பம்பையும் இல்லாதது தான் குறை' - சுப்பையாபண்டாரம் மாம்பழம் வாங்கி வந்தது - திருச்சிராப்பள்ளி சென்றது - சதாசிவபிள்ளை பாடல் - காலப்போக்கு - உபதேசியார் ஆட்சேபித்தது - தஞ்சாவூர் சென்றது - சின்னத்தம்பியாபிள்ளை - முத்துக்குமார பத்தரைப் பாராட்டியது - பிரான்மலை ஓதுவார்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் .... கசுஙு - கக்கூ

விருத்தமும் கீர்த்தனமும் - திருவாவடுதுறைக்கு வந்தது - சுப்பராய செட்டியார் கடிதம் - திருமாளிகைத் தேவர் பூஜை - இரத்தினம்பிள்ளையின் உதவி - திருப்பெருந்துறைக்குப் புறப்பட்டது - ஒரு பழைய நண்பர் - வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் - வேம்பத்தூர்ப்பிச்சுவையர்-சின்னச்சாமி வீரப்பனானது-புராண அரங்கேற்ற ஆரம்பம் - சுப்பிரமணிய தம்பிரானதுகோபம் - மனவருத்தத்தோடு இவர் இயற்றிய செய்யுட்கள் - ஸ்ரீமாணிக்க வாசகர் சரித்திரம் - ஆத்மநாதபாகவதர் - சுப்புபாரதியாருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் சிறப்புப்பாயிரம் - எனக்கு ஜ்வர நோய் கண்டது - நான் ஊர்சென்றது - சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - அப்புசாமிப் புலவருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - சிங்காரவேலுடையார் - அரங்கேற்றத்தின் பூர்த்தி - திருப்பெருந்துறைப் புராண அமைப்பு.

9. பலஊர்ப் பிரயாணம் .... கக்கூ - உகஎ

திருப்பெருந்துறையினின்றும் புறப்பட்டது - குன்றக்குடி சென்றது - குருபூஜை மான்மியம் - குன்றைத்திரிபந்தாதிக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - சிங்கவனம் சென்றது - புதுக்கோட்டை சென்றது - தியாகராச செட்டியாரைச் சந்தித்தது - பட்டீச்சுரம் சென்றது - திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தது - கஞ்சனூர்ச் சாமி நாதையர் - வீழிதாஸநயினார் - மருதவாணர் பதிகம் - 'சூரியமூர்த்திசாட்சி' - ஷஷ்டியப்த பூர்த்தி - அம்பர் சென்றது - நான் அம்பருக்குச் சென்று இவரைப் பார்த்தது - கொங்குராயநல்லூர் சென்றது - நான் மீண்டும் காரைக்குச் சென்றது-அம்பர்ப்புராண அரங்கேற்றம் - சிவராமலிங்கம்பிள்ளை - சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய விண்ணப்பம் - திருவாவடுதுறைக்குத் திரும்பியது.

10. தேக அசௌக்கிய நிலை .... உகள - உருசு

நான் திருவாவடுதுறைக்கு வந்தது-இவர் கம்பராமாயணம் பாடம் சொல்லியது - சூரியனார் கோயில் ஸ்ரீ அம்பல வாண தேசிகர்-அம்பலவாண தேசிகர் தொடுத்த வழக்கு-சிங்கப்பூர் நாராயணசாமி நாவலர் - நோயின் தொடக்கம் - திருவிடைமருதூர்த் திரிபந்தாதி - வண்டானம் முத்துசாமி ஐயர் - 'இந்தியா மீஞட்சிசுந்தரம்பிள்ளை' - சுந்தரதாஸ பாண்டியருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது - ஸ்ரீ சிவஞான யோகிகள் சரித்திரம்-சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறைப் புராணம் இயற்றுவிக்க விரும்பியது - திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா - திருவிடைமருதூர் சென்றது - மஹந்யாஸ ஜபம்-திருவாவடுதுறைக்கு வந்தது - மாயூரம் சென்றது - எனக்கு வஸ்திரம் வாங்கியளித்தது - இராமாயணப் புஸ்தகங்கள்-திருவாவடுதுறைக்கு வந்தது - நெல்லையப்பத் தம்பிரான் வெள்ளித் தொன்னை யளித்தது - 'கொடுப்பவன் கேட்பானை?' - திருவாரூர்க் கோவை - ஐயங்களைப் போக்கியது - வைத்தியன் கூறியது-சவேரிநாத பிள்ளைக்காகக் கடிதங்கள் எழுதுவித்தது - ஸ்ரீ அக்கினிலிங்க சாஸ்திரிகள் - சுப்பிரமணிய தேசிகர் விசாரித்துக் கொண்டேயிருந்தது - 'அடைக்கலப் பத்து' - இவர் சிவபதமடைந்தது - அபரக்கிரியை - சுப்பிரமணிய தேசிகர் எனக்கு ஆறுதல் கூறியது - பலர் பலவாறு வருந்தல் - கடிதங்கள் - இரங்கற் செய்யுட்கள் - சுப்பிரமணிய தேசிகர் இவர் குடும்பக் கடனைத் தீர்த்தது.

11. குடும்பத்தின் பிற்கால நிலை ... உருஊ-உசச

சிதம்பரம் பிள்ளை - குடும்பத்துக்கு உதவி - குடும்பத்தின் பிந்திய வரலாறு.

12. இயல்புகளும் புலமைத்திறனும் .... உசுரு-உஅஅ

தோற்றம் - வழக்கங்கள் - உணவு - குணங்கள் - பொறுமை - திருப்தி - தம்மை வியவாமை - பிறருடைய குற்றத்தைக் கூறுமை - பிறரைப் பாராட்டல் - இரக்கம் - நன்றி மறவாமை - சிவபக்தி - மாணக்கர்பாலிருந்த அன்பு - பாடஞ் சொல்லுதல் - கல்விப்பெருமை - கையெழுத்து - தமிழன்பு - கவித்திறன் - நூல்களின் இயல்பு - இவர் இயற்றிய நூல்களின் தொகையும் வகையும் - பேச்சு - புகழ் - இவரால் தமிழ்நாட்டிற்குண்டான பயன்.

அநுபந்தங்கள் ... உஅகூ-நஉச

1. வேறுசில வரலாறுகள் ... உஅகூ-உகஞ

எழுவாய் பயனிலை - சதுர்வேத தாத்பரிய சங்கிரகம் - நெல் அளித்த அன்பர்கள் - ஒரு பாட்டின் குறிப்பு - நோயை மறந்து பாடஞ் சொன்னது.

2. தனிச் செய்யுட்கள் .... உகூசு-நஅ0கூ

கடவுள் வணக்கங்கள் - அன்பர்களைப்பாராட்டிய செய்யுட்கள் - கடிதப்பாடல்கள் - வேறுவகைப் பாடல்கள் - சிறப்புப்பாயிரங்கள்.

3. பிறர் வரைந்து அனுப்பிய கடிதங்கள் நஅ0-நஅகஞ

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் - தி. சுப்பராய செட்டியார் - சி. சாமிநாத தேசிகர் - திருமங்கலக்குடி சேஷையங்கார்.

4 பாராட்டு .... நஅசு-நஉச

அழகிரிசாமி நாயகர் - ஆறுமுகத் தம்பிரான் - காஞ்சிபுரம் இரகுநாதையர் - திரு எவ்வுளூர் இராமசாமி செட்டியார் - இராமசாமி பிள்ளை - காஞ்சிபுரம் இராமானுஜ பிள்ளை - ஆறைமாநகர் ஐயாசாமி முதலியார் - நாகபட்டினம் இராம, அ. கிருஷ்ணசாமி உபாத்தியாயர் - குப்புமுத்தா பிள்ளை - காஞ்சிபுரம், சபாபதி முதலியார் - புரசை சபாபதி முதலியார் - புதுவை சவராயலு நாயகர் - சவேரிநாத பிள்ளை - திருவீழிமிழலை சாமிநாத கவிராயர் - சி. சாமிநாததேசிகர் - உ. வே. சாமிநாதையர் - சென்னை, சின்னசாமி பிள்ளை - சுந்தரம் பிள்ளை - தி. சுப்பராய செட்டியார் - சி. தியாகராச செட்டியார் - ச. தெய்வநாயகம்பிள்ளை - வல்லூர் தேவராச பிள்ளை - பாலகுரு உபாத்தியாயர் - தி. க. பெரியண்ணம் பிள்ளை - மெய்யூர் பொன்னம்பல நாயகர் - புரசை பொன்னம்பல முதலியார் - மழுவை மகாலிங்கையர் - காரைக்கால் முத்துசாமிக் கவிராயர் - மாயூரம் ந. முத்துசாமி பிள்ளை - முருகப் பிள்ளை - நாகபட்டினம் வீரப்பசெட்டியார் - திரிசிரபுரம் வீரராகவ செட்டியார் - தாராநல்லூர் வீராசாமிநாயகர் - குளத்தூர் ச. வேதநாயகம் பிள்ளை - வைத்தியலிங்க பத்தர்

செய்யுள் முதற்குறிப்பகராதி .... நஉஞ-நஉள

சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி நஉஅ-நஉசசு

இப்புத்தகத்தில் வந்துள்ள சிறப்புப்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

ஆறு - பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளை.

கச்சி - கச்சியப்ப முனிவர்.

கம்ப - கம்பராமாயணம்.

கலை - கலெக்டர்.

சுப் - மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், சுப்பையா பண்டாரம்

தியாக - தியாகராஜ சாஸ்திரிகள், தியாகராச செட்டியார்.

திருஞா - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

திருநா - திருநாவுக்கரசு நாயனார்.

திருவிளை - திருவிளையாடற் புராணம்.

தே - தேவாரம்.

நாலடி - நாலடியார்.

ப - பக்கம்.

பசு - பசுபதி பண்டாரம்.

மீ - மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

உ

கணபதி துணை

முகவுரை

தேவாரம்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

நன்றுடை யானைத் தீயது லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிரும்மே.

திருச்சிற்றம்பலம்

உடலை வளர்த்தற்குரிய பலவகையான பொருள்களை வழங்கும் அறங்களினும் உள்ளத்தின் உணர்வு வளர்ச்சிக்குக் காரணமான கல்வியை வழங்கும் வள்ளன்மை சிறந்ததாக ஆன்றோர்களால் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றது. ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையும் பயன் தருதலால் அதனை வழங்கும் பெரியோர்கள் உலகில் உயர்ந்தவர்களாகவும் பேருபகாரிகளாகவும் எண்ணப்படுகின்றனர். அவர்கள் செய்த பேரறத்தின் பயனாகவே கலைவளம் சிறந்து விளங்குகின்றது. மக்களுடைய மன உணர்வைப் பண்படுத்தும் அப்பெரியோர்கள் செய்த அருஞ்செயல்களும் இயற்றிய நூல்களும் எல்லோராலும் போற்றப்பட்டு வருவது யாவரும் அறிந்ததேயாகும். காலதேச வர்த்தமானங்கள் எங்ஙனம் மாறினும் அத்தகைய புலவர்களுடைய புகழ் குன்றுமல் ஒரே நிலைமையில் நிலவிவருகின்றது. சிலருடைய புகழ் வளர்ச்சியுற்றும் வருகின்றது.

இங்ஙனம் புகழ்பெற்றுத் தமிழ்நாட்டில் விளங்கியவர்களுள் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவானும் என்னுடைய தமிழாசிரியருமாகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் ஒருவ

ராவர். இவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் 1815-ஆம் வருஷம் முதல் 1876-ம் வருஷம் வரையில் இருந்து விளங்கியவர்கள். இவர்களுடைய சரித்திரத்தை எழுதிப் பதிப்பித்து வந்ததில் நான் பாடங்கேட்கப் போகுமுன் நிகழ்ந்த வரலாறுகள் (1815 முதல் 1870 வரையில் உள்ளவை) முதற் பாகத்தில் வெளியிடப் பெற்றுள்ளன. ஏனைய வரலாறுகளே இரண்டாம் பாகமாகிய இப்புத்தகத்தில் உள்ளவை.

தமிழ்ப் புலவர்கள் வரலாற்றின் நிலைமையைப்பற்றி நான் சொல்லவேண்டிய விஷயங்களையெல்லாம் முதற்பாகத்திற்சொல்லி விட்டமையால் அவற்றை மீட்டும் இங்கே தெரிவிக்கவில்லை.

பிரஜோற்பத்தி வருஷம் சித்திரைமாதம் (1870 ஏப்ரில்) இப் புலவர்பிரானிடம் நான் பாடங்கேட்க வந்து சேர்ந்தேன். அது முதல் இவர்கள் சிவபதமடைந்தகாலம் வரையில், இடையே சிலமாதங்கள் நீங்கலாக, இவர்களுடனே இருக்கும் பெரும் பேறு பெற்றேன்.

இச் சரித்திரத்தை எழுதி வரும்பொழுது என்னுடைய மனம் பழைய காட்சிகளை மீண்டும் கண்டு களிந்துகொண்டே யிருந்தது. இக்கவிஞர்பிரான் என்பால் வைத்திருந்த பேரன்பு இவர்களுடைய செயல் ஒவ்வொன்றையும் என் நெஞ்சிற் பதித்து விட்டது. அந்த நினைவே இப்பாகத்திற் காணப்படும் செய்தி களை எழுதுவதற்குத் துணையாக இருந்தது. முதற்பாகத்தின் முகவுரையிற் குறிப்பித்துள்ளபடி பல இடங்களிற் சென்று சென்று தேடிய முயற்சியினாற் கிடைத்த செய்திகளுள் சில இந் தப் பாகத்திற்கும் உதவியாக இருந்தன. இவர்கள் சொல்லச் சொல்ல என்கையினாலே எழுதிய தனிப் பாடல்கள் அளவிறந் தன; அக்காலத்தில் அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்னும் நோக்கம் இல்லாமையால் அவற்றை நான் தொகுத்து வைக்க வில்லை. என்னுடைய நினைவிலுள்ளவைகளும் வேறுவகையிற் கிடைத்தவைகளுமான செய்யுட்கள் இதன்கண் அமைந் துள்ளன. அவற்றிற்கு இன்றியமையாத இடங்களிற் குறிப்புரை களும் எழுதப் பட்டிருக்கின்றன.

இந்தப் புத்தகத்தால், இக்கவிஞர் கோமான் திருவாவடு துறை யாதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரால் நன்கு மதிக்கப்

பெற்று விளங்கினமையும், தம்பால்வந்து விரும்பினவர்களுக்குச் செய்யுள் இயற்றிக்கொடுத்துப் பயன் பெறும்படி செய்தமையும், யாரிடத்தும் எளிதிற் பழகி வந்தமையும், மாணாக்கர்களிடத்தில் அளவற்ற அன்பு காட்டிவந்தமையும், எந்த வகையிலும் அவர்களை ஆதரித்துப் பாடஞ் சொல்வது இவர்களுடைய பெரு நோக்கமாக இருந்தமையும், இவர்கள் ஒப்புயர்வற்ற குணங்களுடன் சிறப்புற்று விளங்கினமையும், இவர்களுடைய காலப்போக்கும், பல செல்வர்கள் இவர்களை அன்போடு ஆதரித்துப் போற்றியதிறமும், பலவகையான உபகாரிகளுடைய தன்மைகளும், அக்காலத்தில தமிழ் வித்துவான்களிடத்தில் தமிழ் மக்கள் வைத்திருந்த பேரன்புமம, வடமொழி தென்மொழி வித்துவான்கள் ஒருவரோடொருவர் மனங்கலந்து பழகியமையும், தமிழ் நாடு இப்புலவர் சிகாமணியால் இன்ன இன்ன வகையிற் பயனுற்ற தென்பதும், பிறவும் விளங்கும்.

ஸ்ரீ சிவஞான முனிவர் காஞ்சிப்புராணம் அரங்கேற்றிய வரலாறு, ஒரு போலிப் புலவருடைய வரலாறு, ஆலூர்ப் பசுபதி பண்டாரம் முதலியவர்களுக்குப் பாடல் அளித்த செய்தி, 'உடுக்கையும் பம்பையும் இல்லாததுதான் குறை', சுப்பையாபண்டாரம் மாம்பழம் வாங்கிவந்தது, சூரியனார் கோயில் அம்பலவாண தேசிகர் தொடுத்த வழக்கு, வண்டானம் முத்துசாமி ஐயரது இயற்கை முதலிய செய்திகளும், இவர்களுடைய பொதுவியல்புகளும், புலமைத்திறமும் அன்பர்களுக்கு இன்பத்தை அளிக்குமென்று நம்புகிறேன்.

இருபத்தெட்டுக் காப்பியங்களும் நாற்பத்தைந்து பிரபந்தங்களும் இவர்கள் இயற்றியனவாக இப்பொழுது தெரிய வருகின்றன. இவர்கள் இயற்றிய தனிப்பாடல்களோ அளவுகடந்தன. இவ்வளவு மிகுதியான நூல்களை இயற்றியவர்கள் தமிழ்ப்புலவர்களில் வேறு யாருமில்லை.

இப் பெரியாருடைய சரித்திரத்தில் அங்கங்கே எழுதப்படாமல் விடுபட்ட சில வரலாறுகளும், இவர்கள் அவ்வப்பொழுது பாடிய கடவுள் வணக்கங்கள, அன்பர்களைப் பாராட்டிய செய்யுட்கள் முதலிய தனிச் செய்யுட்களும், இவர்களுக்குப் பிறர் வரைந்து அனுப்பிய சில கடிதங்களும், சிலவற்றின் பகுதிகளும், மாணாக்கர்

கள் முதலியவர்கள் இவர்களுடைய நூல்களுக்கு அளித்த சிறப் புப்பாயிரங்களின் பகுதிகளும் முறையே இப்புத்தகத்தின் அது பந்தங்களாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

இம்மகாகவியினுடைய உருவப்படம் எடுக்கப்படவில்லை யென்பதை முதற்பாகத்தின் முகவுரையிலேயே தெரிவித்திருக் கிறேன் கடிதங்களில் இவர்கள் போடும் கையெழுத்தின் மாதிரி யும் இவர்கள் எழுதிய ஏட்டுச்சுவடிகளுள் ஓர் ஏட்டின் ஒரு பக்கத் தின் படமும் அன்பர்கள் அறிந்துகொள்ளுமாறு இதில் சேர்க் கப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய புலமையை அறிந்து ஆத ரித்தவரும் இவர்களைப்போலவே என்னிடம் அளவற்ற அன்பு பூண்டவரும் இந்தப் பாகத்தில் உள்ள வரலாறுகளிற் பல இடங் களிற் கூறப்படுபவரும் திருவாவடுதுறையில் 16 - ஆம் பட்டத் தில் வீற்றிருந்தவருமாகிய மேலகரம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரவர் களுடைய படம் இப்புத்தகத்தின் முதலில் சேர்க்கப் பெற் றுள்ளது.

இந்த வரலாற்றை எழுதுவதற்குக் கடிதங்கள், நூல்கள், ஏட்டுச்சுவடிகள் முதலியவற்றை அளித்தும் தமக்குத் தெரிந்த செய்திகளைச் சொல்லியும் எனக்கு உதவிபுரிந்த அன்பர்களை நான் ஒரு போதும் மறவேன்.

இச்சரித்திரத் தலைவர்களாகிய கவிஞர் கோமானைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் இவர்களுடைய தளர்ந்த வடிவமும், மாணாக்கர் கூட்டத்திற்கு இடையில் வீற்றிருந்து தமிழ்ப்பாடம் சொல்லுங் காட்சியும், தமிழ்ச்செய்யுட்களை எளிதிற்பூனையும் தோற்றமும் என் அகத்தே தோன்றுகின்றன. இனி அத்தகைய காட்சிகளையும், இவர்களைப்போல அருங்குணமும் பெரும்புலமை யும் வாய்ந்தவரையும் எங்கே பார்க்கப்போகிறோமென்ற ஆசாமை மீதூருகின்றது. 'இவர்கள்பாற் கல்விபயன்ற காலத்திலேயே இன்னும் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கலாமே!' என்றும் இரங்குகின்றேன். காலத்தின் போக்கை நோக்கும் போது இவர்களுடைய பெருமை மேன்மேலும் உயர்ந்து தோன் றிக்கொண்டே இருக்கிறது.

பெருங்கவிஞராகிய இவர்களுடைய புலமைத்திறத்தை நாம் அறிந்து மகிழவேண்டுமென்றால் இவர்களுடைய நூல்களைப் படிக்க

வேண்டும். பழம் புலவர்களுடைய வரலாற்றை அறிந்து, "அவர்கள் பெருங் கவிஞர்கள்" என்று பாராட்டும் அளவிலே நின்றுவிடாமல் அத்தகையவர்களுடைய நூல்களைப் படித்தலும், படிப்பித்தலுமே அவர்கள் திறத்திற் செய்யும் கைம்மாறாகும். இவர்களுடைய நூல்களிற் சில அச்சிடப்படவில்லை. பல அச்சிடப்பட்டும் இப்போது கிடைக்கவில்லை. ஆதலால் அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக அச்சிட்டு வெளிவரச் செய்தல் தமிழ்மக்களின் கடமையாகும்.*

தமிழ்மொழியறிவின் வளர்ச்சியைக் குறித்துப் பலவேறு வகையில் தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் ஈடுபடுத்திப் புகழுடம்புடன் விளங்குகின்ற இக்கவிச் சக்கரவர்த்தியின் திருநாளைத் தமிழ்நாட்டில் சில அன்பர்கள் கொண்டாடி வருவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

முதற்பாகத்தை எழுதும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து எழுதுதல் முதலிய உதவிகளைப் புரிந்த சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி வா. ஜகந்நாதையரும் இந்தப் பாகத்திற்கும் அங்ஙனமே உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எல்லா நலங்களையும் அளித்தருளும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

இதன் முதற்பதிப்பு 1934-ல்வரு வெளிவந்தது. தமிழ் நாட்டார் இச்சரித்திரத்தை விரும்பிப் படித்துப் பாராட்டி எனக்கு ஊக்கமளித்தனர். தம்முடைய மகிழ்ச்சியைக் கடிதங்களாலும், வாழ்த்துரைகளாலும் வெளியிட்ட அன்பர்கள் பலர்.

இதனைச் சில பரீக்ஷைகளுக்குப் பாடமாக வைத்த சென்னை ஸர்வ கலாசாலையாரிடத்தும் அண்ணாமலை ஸர்வ கலாசாலையாரிடத்தும் திருவாங்கூர் ஸர்வ கலாசாலையாரிடத்தும் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

---

* இதனைக் கண்ணுற்ற ஆற்றூர் ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியாரவர்களும், விளத்தொட்டி ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளையவர்களும் முறையே ஆற்றூர்ப் புராணத்தையும் விளத்தொட்டிப் புராணத்தையும் அச்சிடும்படி செய்தார்கள்.

இச்சரித்திரத்திலுள்ள சில வரலாறுகளைச் சில அன்பர்கள் என் அனுமதி பெற்றுத் தாங்கள் வெளியிட்ட பாட புத்தகங்களிற் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மகளின் திருவழகைக் காவியங்களாகிய ஓவியங்களில் அமைத்து மகிழ்ந்த வித்தகரும், மாணுக்கருடைய அறிவாகிய நிலத்தில் அன்பு நீர் பாய்ச்சித் தமிழாகிய வித்திட்டுத் தமிழ்ப் பெரும்பயிரை வளர்த்த சொல்லேருழவரும், காலம் இடம் நிகழ்ச்சி என்பவற்றால் வரும் துன்பங்களால் சோர்வுறுமலும் தமமுடைய மானமும் பெருமையும் குறையாமலும் நின்ற குணமலையும் ஆகிய பிள்ளையவர்களுடைய பெரும் புகழும், அரிய நூல்களும் தமிழ் மக்களால் நன்கு உணரப்பெற்று மேன்மேலும் விளக்கமுற்று வாழ்வனவாக!

சங்ககாலம் முதல் தமிழ்மொழியை வளம்படுத்திய புலவர் பெருமக்களின் வரலாறுகளை முறையாக வெளியிட வேண்டுமென்னும் எண்ணம் நெடுங்காலமாக எனக்குண்டு. இச்சரித்திரத்தை நிறைவேற்றி வைத்த இறைவன் திருவருள் அவ்வெண்ணத்தையும் நிறைவுறச் செய்யுமென்று நம்புகின்றேன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை.
16-6-1940.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்



இது, பிள்ளையவர்கள் எழுதிய தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரை ஏட்டுச் சுவடியிலுள்ள ஓரேட்டின் ஒரு பக்கத்தின் படம். இதில் கிளவியாக்கம் நடு, நகூ-ஆம் சூத்திரங்களும் அவற்றின் உரையும் அடங்கியுள்ளன.



பிள்ளையவர்கள் கடிதங்களில் போடும் கையெழுத்து

உ

கணபதி துணை

திரிசிரபுரம் மகாவித்துவான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

இரண்டாம் பாகம்

1. என்னை ஏற்றுக்கொண்டது

எனது இளமைக் கல்வி

என்னுடைய இளமைக் காலந்தொடங்கி எனக்குத் தமிழ் படிக்க வேண்டுமென்ற விருப்பமே மிகுதியாக இருந்து வந்தது. என் தந்தையாரே எனக்கு முதலில் தமிழாசிரியராக இருந்து நிகண்டு சதகம் முதலிய கருவி நூல்களைக் கற்பித்து வந்தனர். பின்பு அரியிலூர்ச் சடகோபையங்கார் முதலிய சில வித்துவான்களிடத்திற் கற்றுக்கொள்ளவுஞ் செய்வித்தனர். சில தமிழ்ப் பிரபந்தங்களையும் இலக்கணங்களையும் நான் அந்த வித்துவான்கள்பால் முறையே கற்றுக்கொண்டேன். பின்பு செங்கணமென்னும் ஊரிலிருந்த விருத்தாசல ரெட்டியாரென்ற கனவானிடம் பாடங்கேட்கத் தொடங்கினேன். அவர் பல நூல்களிலிருந்து அநேக விஷயங்களை அப்பொழுதப்பொழுது சொல்லி வந்தார். அதனால் நான் தமிழ் நூல்களின் பரப்பை அறிந்துகொண்டதன்றி மேலும்மேலும் பல நூல்களிற் பயிலவேண்டுமென்னும் விருப்பத்தை அதிகமாகக் கொண்டேன். அதனைக் கண்ட அவர், "என்னுற் சொல்லக்கூடிய நூல்களையெல்லாம் நான் சொல்லிவிட்டேன். இனி என்னுற் பாடஞ்சொல்ல இயலாது. திருவாவடுதுறை யாதீன வித்துவானாக விளங்கிவரும் திரிசிர

புரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் உங்கள் குமாரரை அழைத்துச் சென்றால் பல தமிழ் நூல்களை நன்றாகக் கற்று விருத்தியடைதற்கு அனுகூலமாகும்" என்று என் தகப்பனாரிடம் அடிக்கடி சொல்லி வந்தார். மூன்பே பிள்ளையவர்களைப்பற்றிப் பலர் வாயிலாகக் கேள்வியுற்று, 'அப் புலவர்பிரானிடம் படிக்குங்காலம் எப்போது கிட்டுமோ!' என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த என்னுடைய விருப்பத்தை முற்று வித்தற்கு அவர் சொல்லிய வார்த்தை மிகவும் உபயோகமாக இருந்தது. என் பிதாவும் அவ்வாறே செய்விக்கவேண்டுமென்று எண்ணி அதற்குரிய முயற்சியுடனிருந்தார். அப்போது எனக்குப் பிராயம் 17.

நான் பிள்ளையவர்களைக் கண்டது

இறைவன் திருவருள் கூட்டினமையால் என் தந்தையாரின் முயற்சியும் எனது விருப்பமும் பயன்பெறும் காலம் வந்து வாய்த்தது. பிரஜோத்பத்தி வருஷம் சித்திரை மாதமுதலில் (1871 ஏப்ரலில்) என்னை உடனழைத்துக்கொண்டு தந்தையார் மாயூரம் சென்று நல்ல நாளொன்றன் பிற்பகலில் பிள்ளையவர் களுடைய வீட்டிற்குப் போனார். அப்பொழுது அவ்வீட்டின் முதற் கட்டில் குற்றாலம் (திருத்துருத்தி) தியாகராச முதலியாரென் பவரும் சிவசின்னந் தரித்த வேறொருவரும் இருந்தார்கள்.

சிவசின்னந் தரித்துக்கொண்டிருந்தவரையே பிள்ளையவர்க ளாக என் தந்தையார் பாவித்து,"இவர்கள் தாம் மகாவித்துவான் பிள்ளையவர்களோ?" என்று அம்முதலியாரை மெல்ல வினவினார். முதலியார், "அல்ல; இவர்கள் திருவாவடுதுறை மகாலிங்கம் பிள்ளை யவர்கள்" என்றார். மகாலிங்கமென்ற சப்தத்தைக் கேட்டவுடன் என் தந்தையார் மகிழ்ச்சியுற்று, 'நாம் வந்த காரி யம் நிறைவேறுவதற்குரிய நற்சகுனமாகும் இது' என்று நினைத்த னர். அப்பால், "மகாவித்துவான் பிள்ளையவர்கள் எங்கே இருக் கிறார்கள்?" என்று முதலியாரைக் கேட்கவே அவர், "இந்த வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்தில் வேலை நடப்பதால் அதைக் கவனித்துக்கொண்டு அங்கே இருக்கிறார்கள்" என்று விடையளித்தார். உடனே தந்தையார் மகாலிங்கம் பிள்ளையைப் பார்த்து, "திருவாவடுதுறைக் கந்தசாமிக் கவிராயரை உங்களுக் குத் தெரியுமா? அவர் சௌக்கியமாக இருக்கிறாரா?" என்று

கேட்டனர். "அவரை நான் நன்றாக அறிவேன். சில தினங்களுக்கு முன்புதான் அவர் சிவபதம் அடைந்தார்" என்று அவர் சொன்னார். கவிராயர் தம்முடைய நண்பராதலாலும் அவரிடமாவது சிலகாலம் என்னை வைத்துப் படிப்பிக்கவேண்டுமென்று முன்னம் எண்ணியிருந்தமையாலும் என் தந்தையாருக்கு அவர் இறந்த செய்தியைக் கேட்டபோது மிக்க வருத்தம் உண்டாயிற்று. சிறிது நேரம் மௌனமாக இருந்தனர்; பின்பு அவருடைய குணவிசேடத்தைப்பற்றி மிகவும் பாராட்டி இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். அப்பொழுது அங்கே பிள்ளையவர்களுடைய தவசிப்பிள்ளை ஒருவர் வரவே அவரைப் பார்த்து என் தந்தையார், "எங்களுடைய வரவைப் பிள்ளையவர்களுக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டுக்கொண்டனர். அவர் சென்று தெரிவித்தவுடன் பிள்ளையவர்கள் நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தார்கள்.

நெடுநாளாக இப்புலவர் பெருமானைக் காணவேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்து வந்தமையால் இவரைக் கண்டவுடன் என்னை அறியாமலே ஒரு வகை மகிழ்ச்சியும் அன்புணர்ச்சியும் உண்டாயின. இவருடைய தோற்றப் பொலிவும் முகமலர்ச்சியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. 'இவரைப்பார்த்தல் கூடுமோ? கூடாதோ!' என்று ஏங்கியிருந்த எனக்கு அந்தச் சமயத்தில் உண்டான இன்பத்திற்கு எல்லையில்லை. இவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். தந்தையாரும் மகிழ்ச்சியுற்றனர்.

வந்த புலவர்பிரான் நின்றுகொண்டிருந்த எங்களையும் பிறரையும் இருக்கச் செய்துவிட்டுத் தாமும் இருந்து எங்களைப் பார்த்து, "நீங்கள் யார்? வந்த காரியம் என்ன?" என்று அன்புடன் விசாரித்தனர். என் பிதா, "நாங்கள் இருப்பது பாபநாசத்தைச் சார்ந்த உத்தமதானபுரம் கிராமம்; தங்களிடத்தில் தான் வந்தோம். இவன் என்னுடைய குமாரன்; என்னிடம் முதலில் சிலகாலம் சங்கீதத்தை அப்பியசித்து வந்தான். அப்பால் நிகண்டு சதகம் முதலியவற்றை முறையே கற்றான். தமிழ்ப் பாஷையிலேயே மிக்க பிரீதியுள்ளவனாக இருக்கிறான்; சில நூல்களை வித்துவான்கள் சிலரிடமிருந்து முறையே பாடங் கேட்டிருக்கிறான்; அந்த வித்துவான்களுக்கும் எனக்கும் தங்களிடத்திலேயே இவனைச் சேர்ப்பித்துப் படிப்பிக்க வேண்டுமென்ற விருப்

பம் மிகுதியாக இருக்கிறது. இவனுக்கும் அப்படியே இருந்து வருகிறது. ஸம்ஸ்கிருதம் இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் இவனுக்குச் சிறிதும் மனம் செல்லவில்லை. ஆதலால் இவனுடைய விருப்பத்தையும் என்னுடைய ஆவலையும் தயைசெய்து தாங்களே தணிக்க வேண்டும். எப்பொழுதும் இவன் தங்கள் ஞாபகமாகவே இருந்து வருகிறான். தங்களிடம் இவனைக்கொண்டு வந்து சேர்ப்பித்தலையன்றி நான் செய்யக்கூடியது வேறொன்றும் இல்லை. தங்கள் சமுகத்திற் சேர்ப்பித்தமையால் இவன் விஷயமாக இருந்த என்னுடைய கவலை அடியோடு நீங்கி விட்டது. இப்படி நேர்ந்ததற்குக் காரணம் * ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசருடைய திருவருளே. இவனைத் தயை செய்து அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்றார்.

இவர் என் தந்தையாரைப் பார்த்து, ''உங்கள் பெயரென்ன?'' என்று கேட்டார். அவர், ''வேங்கடஸுப்பன் என்று சொல்வார்கள்'' என்றார். உடனே இவர் உடனிருப்பவர்களை நோக்கி, ''இப்பெயர் திருவேங்கடமலையில் முருகக்கடவுள் எழுந்தருளி யிருத்தலையும் அது முருகக் கடவுளுக்குரிய ஸ்தலங்களுள் ஒன்றென்பதையும் புலப்படுத்துகின்றதன்றோ? ஸுப்பனென்பது சுப்பிரமணிய னென்பதன் மரூஉத்தானே?'' என்று சொன்னார்; அவர்களும் ''ஆம்'' என்றார்கள். நான், 'சாதாரணமாகப் பேசும்பொழுதே இத்தகைய அருமையான விஷயம் இவர்கள் வாக்கிலிருந்து வருகிறதே. இனி இவர்களிடத்தில் நன்றாகப் பழகினால் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமே' என்று நினைத்தேன். அப்பால் பிள்ளையவர்கள் என்னைப் பார்த்து, ''முன்பு யார் யாரிடத்தில் என்ன என்ன நூல்களைப் பாடங் கேட்டிருக்கிறீர்?'' என்று கேட்டார். ''முதலில் தந்தையாரிடத்தும் சிறிய தகப்பனாரிடத்தும் சங்கீதத்தை முறையே கற்று வந்தேன். அதனோடு சூடாமணி நிகண்டின் பன்னிரண்டு தொகுதியும், மணவாள நாராயணசதகமுதலிய சில சதகங்களும், இரத்தின சபாபதிமாலை முதலிய சில மாலைகளும், நன்னூல் மூலமும் மனனம்செய்து நாள்தோறும் முறையே தந்தையாரிடம் ஒப்பித்து வந்தேன். அப்பால்

* மீனாட்சி சுந்தரேசரென்பது என் தந்தையாருடைய பூஜையில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானது திருநாமம்.

பாபநாசம் பிரதம பாடசாலையில் உபாத்தியாயராக இருந்த *இராகவைய ரென்பவரிடம் முதலில் மகாலிங்கையரிலக்கணமும் பின்பு நன்னூற் காண்டிகையுரையில் முதல் இரண்டு இயல்களும் கேட்டேன்; பின்பு † அரியிலூர் ஜமீன் பரம்பரை வித்துவானாகிய சடகோப ஐயங்கா ரென்பவரிடத்தே திருவேங்கடமாலை முதலிய சில பிரபந்தங்களுக்குப் பொருள் கேட்டேன்; அவ்வூருக்கு வட பாலுள்ள † குன்றம் (குன்னம்) என்னும் ஊரிலுள்ள சிதம்பரம் பிள்ளை யென்பவரிடத்துத் திருவிளையாடற்புராணத்திலும் நைட தத்திலும் சிலசிலபடலங்களுக்குப் பொருளும், அவ்வூருக்கு அப் பாலதாகிய † கார்குடியென்னுமூரிலுள்ள கஸ்தூரி ஐயங்கா ரென்ப வரிடம் நன்னூற் காண்டிகையுரையில் எஞ்சிய பாகமும், அவ்வூரி லுள்ள ஸாமி ஐயங்காரிடத்துக் கம்பராமாயணத்திற் சுந்தர காண் டத்திற்குப் பொருளும் கேட்டேன்; பெரும்புலியூரைச் சார்ந்த செங்கண மென்னும் ஊரிலுள்ள சின்னப் பண்ணையாராகிய விருத் தாசல ரெட்டியா ரென்பவரிடம் காரிகை தண்டியலங்காரங்களின் உரையும், நவநீதப்பாட்டியல் முதலிய பொருத்த இலக்கணங் களும் வேறு சில நூல்களும் பாடங்கேட்டதுண்டு; ரெட்டியா ராலேதான் எனக்குத் தமிழில் விருப்பம் அதிகமாயிற்று. அவ ரிடம் காரிகைப்பாடம் மிகச் செம்மையாக நடந்தது; இடை யிடையே சந்தித்த வித்துவான்களிடத்துச் சில பிரபந்தங்களிற் சில சில பாகங்களும் பல தனிப் பாடல்களும் பொருளுடன் கேட்டுச் சிந்தித்திருக்கிறேன்" என்றேன்.

பிறகு இவர் என் தகப்பனாரைப் பார்த்து, "இசையில் எந்தமட்டும் பயிற்சி பண்ணிவைத்திருக்கிறீர்கள்?" என்றார். அதற்குத் தந்தையார், "முறையாகவே இவன் கற்றிருக்கிறான்; அதன் அடிப்படைகள் எல்லாம் செவ்வையாக இவனுக்கு ஆகியிருக்கின்றன; ஸரளி, வரிசை, அலங்காரம், கீதங்கள், வர்ணங்கள் ஆகிய இவைகளில் இவன் நல்ல பயிற்சி யடைந்தி ருப்பதுடன் கனம் கிருஷ்ணையர் முதலிய சங்கீத வித்துவான் களிற் சிலரியற்றிய சில கீர்த்தனங்களும் இவனுக்குப் பாட முண்டு" என்றார். பின்பு தந்தையாரை நோக்கி இவர், "நீங்கள்

* இவர் மதுரைக் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்து பிற் காலத்தில் ஸன்னியாசம் வாங்கிக்கொண்டார்; ஆந்திரர்.

† இவ்வூர்கள் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ளன.

யாரிடத்தே இசையைக் கற்றுக்கொண்டீர்கள்?'' என்று விசாரித்தார். அவர், ''உடையார்பாளையம் ஸம்ஸ்தானத்தில் சங்கீத வித்துவானாக இருந்த கனம் கிருஷ்ணையரென்பவர் என் தாயாருக்கு அம்மான் ஆவர்; பன்னிரண்டு வருஷம் பணிவிடை செய்து கொண்டேயிருந்து அவரிடம் சங்கீதத்தை முறையே கற்று வந்ததன்றி அவரும் பிறரும் இயற்றிய சில கீர்த்தனங்களையும் பாடம் பண்ணிக்கொண்டேன்'' என்றார். பின்பு இவர், ''இவ்வூரிலுள்ள முடிகொண்டான் கோபாலகிருஷ்ண பாரதியாரை அறிவீர்களா?'' என்று வினவவே என் தந்தையார், ''அவர் எனக்கு முக்கியமான நண்பர்'' என்றார்.

என்னைப் பரீட்சித்தது

அப்பால் இவர் என்னைப் பார்த்து, ''நைடதத்தில் ஏதேனும் ஒரு பாடலை இசையுடன் சொல்லும்'' என்றார். அவ்வாறு கேட்டவுடன் இவர்முன் எவ்வாறு சொல்வது என்று முதலில் அஞ்சினேன். பின்பு ஒருவாறு துணிந்து அந்நூலிலுள்ள விநாயகர் காப்பைக் கல்யாணி ராகத்தில் மெல்லச் சொன்னேன். சொல்லிவிட்டு இவர் நான் சொல்வதை எவ்வாறு கேட்கிறரென்று கவனித்தேன். இவருடைய முகத்தில் வெறுப்புக் குறிப்பில்லாமையால் எனக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. அப்பொழுது இக்கவிஞர்பிரான், ''இன்னும் ஒரு பாடலை இசையுடன் சொல்லும்'' எனவே, நான் அந்நூலின் சிறப்புப்பாயிரமாகிய ''நிலவுபொழி தனிக்கவிகை'' என்னும் செய்யுளை ஸாவேரி ராகத்தில் மிக்க விநயத்துடன் சொன்னேன். அந்த இரண்டு செய்யுட்களையும் மறுமுறை சொல்லச் செய்ததுடன் பொருள் சொல்லும்படியும் சொன்னார். சொல்லும்பொழுது நாக்குத் தழுதழுத்தது. அதனை அறிந்து இவர், ''அதைரியம் வேண்டாம்; தைரியமாகச் சொல்லலாமே'' என்று சொல்லிவிட்டு, ''நிகண்டு முதலியவற்றில் உள்ள செய்யுட்களை இப்பொழுது பாராமற் சொல்லக்கூடுமா?'' என்று கேட்டார். ''கூடும்'' என்றேன். ஒரு பொருட் பல பெயர்ச் செய்யுட்களிற் சிலவற்றையும் பலபொருளொருசொற் பாடல்களிற் சிலவற்றையும் குறிப்பிட்டுக் கேட்டார். மெல்லச் சொன்னேன். பின்பு இவர், ''நிகண்டு முதலியவை பாடமாக இருப்பது நல்லதே. இக்காலத்தில் அவற்றை எங்கே நெட்டுருப் பண்ணுகிறார்கள்?

அந்த வழக்கமே போய்விட்டது. படிக்கும்படி சொன்னாலும் கேட்கின்றார்களில்லை'' என்றார்.

இங்ஙனம் சிலநேரம் அளவளாவிக் கொண்டிருந்த பின்பு தந்தையார், ''எப்போது இவன் இங்கே பாடங்கேட்க வரலாம்?'' என்று கேட்டார். அதற்கு இவர் சிறிது நேரம் வரையில் யாதொன்றும் சொல்லாமற் சும்மா இருந்தனர்; அப்பால், ''படிப்பதற்கு அடிக்கடி சிலர் வந்துகொண்டேயிருக்கிறார்கள். முறையே படித்தும் வருகிறார்கள். குறிப்பறிந்து மிக்க வணக்கத்துடன் நடக்கிறார்கள். அவர்களுக்குப் பாடஞ்சொல்லி வருவதில் எனக்கும் திருப்தியாகவேயிருக்கிறது. ஆனாலும் சில மாதங்கள் இருந்து சிலவற்றைக் கேட்டபின்பு அவர்களிற்சிலர் தாமேதிருப்தியுற்று இங்கே இருப்பவர்களோடும் கலைத்துவிட்டுத் திடீரென்று என்னுடைய அனுமதியின்றியே போய்விடுகிறார்கள். வேறுசிலர், 'ஊர்போய்ச் சில தினங்களில் வருகிறோம்' என்று சொல்லிவிட்டுப்போய் அப்பால் வராமலே இருந்துவிடுகிறார்கள். அங்ஙனம் போகிறவர்கள் என்னிடம் அநேக நூல்களைப் படித்ததாக வெளியே சொல்லிக்கொண்டு அங்கங்கேயிருந்து வருகிறார்கள். அதில் எனக்குச் சிறிதும் திருப்தியில்லை. சில வருஷங்களேனும் இருந்து முறையாகப் பல நூல்களைப் பாடங்கேட்டு நல்ல பயிற்சியைப் பெற்று அப்பாற் சென்றால் அவர்களுக்கும் எனக்கும் பயனுண்டு. குறைந்த நிலையிலும் நல்ல பயிற்சியடைகிற காலத்திலும் பிரிந்து விடுகிறார்களே யென்ற வருத்தம் எனக்கு இடைவிடாமல் இருந்து வருகிறது. நூதனமாக வருபவர்களுக்கு ஆரம்பப்பாடம் முதலியவற்றை அடிக்கடி சொல்லிவருவதனால் எனக்கு மிக்க துன்பமுண்டாகிறதென்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை; ஆதலால், இவர் சில வருஷங்களாவது இருந்து படித்தால் எனக்குத் திருப்திகரமாக இருக்கும்; இவரும் நல்ல பயனை அடையலாம். சமீபகாலத்தில் தருமபுரம் மடத்திலிருந்து வந்து சில மாதங்கள் படித்துக்கொண்டேயிருந்து எனக்கு உவப்பைவிளைவித்து வந்த ஆறுமுகத் தம்பிரானென்பவர் நல்ல சமயத்தில் என்னிடம் சொல்லாமலே போய்விட்டார். அப்படியே பின்பு இராகவாசாரியாரென்ற ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவர் சில வருஷம் படித்துக்கொண்டிருந்துவிட்டு நல்ல தருணத்திற் பிரிந்துபோய்விட்டார். திரிசிரபுரத்திலிருந்து நான் இந்தப் பக்கத்திற்கு வந்த பின்பு சீகாழி

முதலிய இடங்களிற் சில காலம் படித்துக்கொண்டேயிருந்து விட்டுப் பிரிந்து சென்றவர்கள் பலர். பின்னும் சில வருஷம் இருந்து படித்துச் சென்றால் அவர்கள் நல்லபயனை அடையலாமேயென்று நான் அவர்கள் ஞாபகமாகவே இருந்து வருகிறேன். படிக்கவருபவர்களால் அடிக்கடி இப்படிப்பட்ட தன்பம் நேருதலால் நூதனமாக வருபவர்களுக்குப் பாடம் சொல்லுவதில் எனக்கு ஊக்கம் உண்டாகிறதில்லை. வருபவர்களை யோசித்துத்தான் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது'' என்று சொன்னார்.

இவர் இவ்வாறு சொல்லி வருகையில் இவருடைய சொற்களிற் காணப்படும் அன்பின் தன்மை, 'நம்மை ஏற்றுக் கொள்வார்' என்ற நம்பிக்கையை எனக்கு உண்டாக்கினாலும் பிரிந்து போன மாணவர்களைப்பற்றிச் சொன்ன வார்த்தைகள், 'நம்மை இவர் ஏற்றுக் கொள்வாரோ, மாட்டாரோ' என்ற சந்தேகத்தை எனக்கு விளைவித்தன.

என் தந்தையாரது வேண்டுகோள்

அப்பொழுது தந்தையார், ''எவ்வளவுகாலம் தாங்கள் படிப்பித்தாலும் அவ்வளவு காலமும் இவன் ஜாக்கிரதையாக இருந்து பாடங்கேட்பான். தங்களுக்குத் தோற்றுகிறபடி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் வைத்திருந்து இவனைப் படிப்பிக்கலாம். அழைத்துச் செல்லலாமென்று தாங்கள் சொன்னபின்பே இவனை அழைத்துச் செல்வேன். இதிற் சிறிதும் சந்தேகம்கொள்ளவேண்டாம். இவனைத் தங்கள்பால் அடைக்கலப் பொருளாக ஒப்பித்து விட்டேன். இவனைப்பற்றி இனி ஒன்றும் சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. இதற்குமுன் இவனுக்குப் பாடம் சொல்லிய ஆசிரியர்கள் எல்லோரும், 'பிள்ளையவர்களிடம் சேர்ப்பித்தால் தான் இவனுடைய குறையும் ஆசையும் தீரும்; சீக்கிரத்தில் அவர்களிடம் கொண்டுபோய்விடுங்கள். இனிச் சும்மாவைத்திருத்தல் தருமமன்று' என்று வற்புறுத்திச் சொன்னமையாலேதான் இங்கே அழைத்து வந்தேன். இவ்விஷயத்திற் சிறிதும் ஆலோசனை பண்ணவேண்டாம்'' என்று சொல்லிப் பின்னும் என்னை அங்கீகரித்துக்கொள்ளும்படி பலவிதமாகக் கேட்டுக்கொண்டார். அவரைப் பின்பற்றி நானும் விநயத்துடன் இயன்றவரையில் வேண்டிக்கொண்டேன்; எங்கள் கவலையை அறிந்து உடனிருந்தவர்களும் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மீ: ஆகாராதிகள் விஷயத்தில் இவருக்கு இவ்வூரில் ஏதேனும் சௌகரியமான இடமுண்டா?

தந்தையார்: இல்லை; அதையும் நாங்களே கவனித்துக் கொண்டால் நலமாயிருக்கும். அங்ஙனம் செய்வித்தற்கு எனக்கு இப்பொழுது சௌகரியம் இல்லை.

மீ: திருவாவடுதுறை, பட்டீச்சுரம் முதலிய இடங்களிலே நான் இருப்பதாயிருந்தால் இவருக்கு என்னால் சௌகரியம் செய்வித்தல் கூடும். இவ்வூரில் மட்டும் அங்ஙனம் செய்வித்தற்கு இயலாது. நீங்களே அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சைவராயிருந்தாலும் வேறு வகையினராக இருந்தாலும் என்னுடைய வீட்டிலேயே உணவளிக்கலாம். இவர் விஷயத்தில் அங்ஙனம் செய்வித்தற்கு இயலவில்லையே யென்று வருத்தமடைகிறேன்.

தந்தையார்: இவ்வூரில் இருக்கும் வரையில் ஆகாராதிகளுடைய செலவுகளுக்கு நானே எப்படியாவது முயன்று பணம் அனுப்பிவிடுகிறேன். எப்பொழுது இவன் இங்கே பாடங் கேட்க வரலாம்? தெரிவிக்க வேண்டுகிறேன்.

மீ: ஒரு நல்ல தினம் பார்த்துக்கொண்டு வந்தால் ஆரம்பிக்கலாம்.

இங்ஙனம் இவர் கூறியது எனக்குமிக்க ஆறுதலை அளித்தது. அப்போது இவரிடம் விடைபெற்றுக்கொண்டு மறுநாட் காலையில் வந்து பார்ப்பதாகச் சென்றோம். மாயூரத்தில் என் தந்தையார் சென்னை வரையில் அவரும் நானும் என் சிறிய தந்தையாரின் வேட்டகத்தில் இருந்து வந்தோம்.

---

2. நான் பாடம் கேட்கத் தொடங்கியது

மறுநாட் காலையில் நாங்கள் இவரைப் பார்ப்பதற்குச் சென்றோம். அப்பொழுது கல்விமான்கள் சிலர் இவரிடம் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ ஆறுமுக நாவலருடைய மாணாக்கர். நாவலர் சிதம்பரம் விட்டு யாழ்ப்பாணம் சென்றதையும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபுக்களும் வித்துவான்களும் நாவலரை வரவேற்றுச் செய்த உபசாரங்கள் முதலிய நிகழ்ச்சி

களையும் அவர் விரிவாகச் சொன்னர். மற்றவர்கள் தங்கள் தங்களுக்குத் தெரிந்த வித்துவான்களுடைய கேஷமலாபங்களை யும் அவர்கள் செய்வனவற்றையும் சொல்ல இவர் கேட்டு மகிழ்ந் தார். அப்பொழுது பல செய்திகளை நான் அறிந்தேன்.

யாப்பிலக்கணத்தில் என்னைப் பரீட்சித்தது

அன்று பிற்பகலிற் சென்றபொழுது திருநாகைக்காரோணப் புராணத்தை வருவித்து அதை என்பால் அளித்து அதில் நாட்டுப் படலத்திலுள்ள ஈஅ-ஆம் செய்யுளாகிய "புன்மைசால்" என் பதையும் அடுத்த செய்யுளையும் படிக்கச் சொல்லி அவ்விரண்டிற் கும் பொருள் கூறித் திரும்பச் சொல்லச் சொல்லிக் கேட்டார். ஜாக்கிரதையாகச் சொன்னேன் அவற்றிலுள்ள சொல்முடிபு பொருள்முடிபுகளைக் கேட்டார்; யோசித்துச் சொன்னேன். பின்பு, "வெண்பாக்களைச் சீர்பிரித்து அலகூட்டிச் சொல்வீரா?" என்று, "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க, நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்", "நெல்லுக் கிறைத்த நீர்வாய்க் கால் வழியோடிப், புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்ற பாடல்களை இவ்வண்ணமே கூறி அலகூட்டச் சொன்னர். இவர் பிரித்துச் சொன்னபடி சொன்னல் தளை கெடுமென்பதை அறிந்து ஜாக்கிரதையாகப் பிரித்துக் காட்டினேன். அதனைக் கேட்டு எனக்கு யாப்பிலக்கணம் கற்பித்த நாட்டாரைப் பாராட்டிய துடன் அவரைப்பற்றிக் கேள்வியுற்றிருப்பதாகவும் சொன்னர்.

பின் ஒருதினம் என் தந்தையார், "இவன் இலக்கணநூற் பாடம் சிறிது சிலரிடத்துக் கேட்டிருந்தாலும் திருப்தியுண்டாகா மையால் முதலில் தாங்கள் ஏதாவது இலக்கணநூலைக் கற்பித்தால் நலமாக இருக்கும். இவனுடைய கருத்து இது" என்று தெரிவித் தனர். "பதினாயிரம் பாடலுக்குக் குறையாமற் பாடம் கேட்ட பின்பே இலக்கணபாடம் தொடங்குதல் நலம். இவருக்கு இப் போது உள்ள இலக்கண அறிவே இலக்கிய பாடங் கேட்டற்குப் போதுமானது. அதைப் பின்பு கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று இவர் விடையளித்தார்.

நல்ல தினத்திற் பாடம் கேட்க ஆரம்பித்தது

அப்பால் என் தந்தையார் குறிப்பிட்டுச் சொன்னபடி ஒரு நல்லதினத்திற் சென்றேன். இவர் நைடதத்தை வருவித்து அளித்

துச் சில பாடல்களைப் படிக்கச் செய்து அவற்றிற்கு முறையே பொருள்களையும் செய்யுட்களில் அங்கங்கேயுள்ள விசேடக் கருத்துக்களையும் விளங்கச் சொன்னர். அதுவரையிலும் அவ்வண்ணம் கேளாதவனுகையால் இவருடைய போதனை எனக்கு மிக்க இன்பத்தை விளைவித்தது. பின்பு வினவியபொழுது இவர் சொல்லிய வண்ணமே நான் விடை பகர்ந்தேன். அப்பால், "சில தினங்களில் விரைவாக இதை முடித்து விடலாம். இது முடிந்தவுடன் வேறு புதிய நூலொன்றை ஆரம்பிக்கலாம்" என்று சொல்லி விட்டு எனக்குப் பாடஞ் சொல்லும்படி அங்கே வந்திருந்த பழைய மாணவரொருவருக்குக் கட்டளையிட்டார். அவ்வண்ணமே அவரிடம் அந்நூலை நாள்தோறும் கேட்டு வந்தேன்

அப்பொழுது இக்கவிஞர் தலைவரிடம் படித்துக்கொண்டிருந்த மாணுக்கர்கள்: காரைக்காற் சவேரிநாத பிள்ளை, கூறைநாட்டுக் கனகசபை ஐயர், அவருடைய சகோதரராகிய சிவப்பிரகாசையர் (இவ்விருவரும் வீரசைவர்கள்) என்பவர்கள். திருமங்கலக்குடி சேஷையங்கார், வல்லம் கந்தசாமி பிள்ளை, மாயூரம் முத்துசாமி பிள்ளை, நாகம்பாடிச் சாமிநாத பிள்ளை, மூவலூர்ச் சாமிப் பிள்ளை, திட்டைச் சோமசுந்தரம் பிள்ளை, சியாலம் சிதம்பரம் பிள்ளை முதலிய பழைய மாணுக்கர்கள் இவரிடம் அடிக்கடி வந்து தமக்குள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொண்டு போவார்கள்.

என் தந்தையார் விடைபெற்றுச் சென்றது

மாயூரத்தில் இருப்பதற்குச் சௌகரியப்படாமையால் தந்தையார் என்னுடைய உணவுச்செலவு முதலியவற்றிற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து ஒருபோஜன விடுதியில் ஏற்பாடு செய்து விட்டுத் தாம் ஊருக்குப் போவதாகநிச்சயித்து ஒரு நாட்காலையிற் பிள்ளையவர்களிடம் வந்து, "நான் விடைபெற்றுக் கொள்கிறேன். என்னுடைய பூஜை முதலியவற்றிற்கு இவ்வூர் சௌகரியப்படவில்லை. ஆதலால் இவனைப் பிரிந்து செல்லவேண்டியிருக்கிறது. தனியே இருந்து வேண்டியவற்றைச் செய்து கொள்ளுவது இவனுக்கு வழக்கமில்லை. நானும் இவன் தாயும் இதுவரையில் இவனைப் பிரிந்து இருந்ததில்லை; தயைசெய்து இவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னர்; சொல்லும்பொழுது அவருக்குக் கண்ணீர் பெருகியது. அதைக்கண்ட இப்புலவர்கோமான் அவருடைய

அன்பின் மிகுதியையும் பிரிவாற்றுமையையும் கண்டு மனமிரங்கி, "ஐயா, இவருடைய பாதுகாப்பைக் குறித்து நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். தைரியமாக ஊருக்குப் போய் உங்களுடைய பூஜை முதலியவற்றை நடத்திக்கொண்டு சுகமாக இருங்கள். பார்க்க விரும்பியபொழுது இவரை உங்கள்பால் அனுப்பி வருவித்துக் கொள்ளுவேன். அவகாசமுள்ள காலங்களில் நீங்களும் வந்து பார்த்துவிட்டுப் போகலாம்" என்று அன்புடன் விடையளித்தார். இவர் அங்ஙனம் கூறிய வார்த்தைகள் எனக்கு அமுதம் போன்றிருந்தன. இவர் 'பாதுகாப்பு' என்று கூறிய சொல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. அப்பால் தந்தையார் ஊருக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன் ஒருநாள் என்னை மாயூரத்திலிருந்த கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் அழைத்துச் சென்று பிள்ளையவர்களிடம் தமிழ் கற்க என்னைச் சேர்ப்பித்திருத்தலைச் சொல்லி எனக்குச் சங்கீதத்திலும் பழக்கமிருப்பதால் அவகாசமுள்ள காலங்களில் சங்கீதத்தில் பயில்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரும் அதற்கு உடன்பட்டார்.

எனக்கிருந்த குறை

எனக்குப் பாடஞ்சொல்லிவந்தவர் பின்புனைடதத்தின் மேற்பகுதிகளைச் சொல்லிவந்தார். என்னுடைய ஆவலை நிறைவேற்றுந்தகுதி அவர்பாற் காணப்படவில்லை. ஆனாலும் நாள்தோறும் வேகமாகக் கேட்டு வந்தேன். அவரும் விரைவாகவே சொல்லி வந்தார். நான் அந்நூலை முன்னமே பாடங்கேட்டதன்றிப் பலமுறை படித்து ஆராய்ந்து வந்திருந்தமையால் அவர் பாடஞ் சொல்லுவதில் விசேடமொன்றையும் காணவில்லை. அதனால், 'இவ்வளவுகாலம் முயன்று பிள்ளையவர்களிடம் வந்துசேர்ந்தும் அவர்களிட்த்திலேயே பாடம் கேட்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே!' என்ற குறை மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்தது. அக்குறையை நான் தெரிவிக்கவாவது இவரே தெரிந்து கொள்ளவாவது தக்க சமயம் வாய்க்கவில்லை. என்னுடைய கருத்தை இவரிடம் வெளிப்படுத்துவதற்கு அச்சமுற்றும் இருந்தேன். என்னைக் காணும்பொழுது இவர், "பாடம் நடந்துவருகிறதா?" என்று கேட்பார்; "நடந்துவருகிறது" என்றுமட்டும் சொல்லுவேன். இவருடன் அதிகமாகப் பழகி இவரிடம் பாடங்

கேட்பதற்கு நல்ல காலம் எப்பொழுது வாய்க்குமோவென்று அதனை எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தேன். அந்த விஷயத்தில் தக்கவாறு முயலும்படி என்மனம் என்னைத் தூண்டிக் கொண்டே வந்தது; நல்லூழும் அதற்குத் துணைசெய்தது.

தளிரால் தளிர்த்த அன்பு

கவிஞர்களுக்குப் பூஞ்சோலைகளிலும் பிற இயற்கைக் காட்சிகளிலும் ஈடுபாடு அதிகம் என்பது பலரும் அறிந்ததே. மரங்கள் பூச்செடிகள் முதலியவற்றைக் கண்டு மகிழும் வழக்கம் இவருக்கு மிகுதியாக உண்டு. இவர் புதிதாகத் தாம் வாங்கிய வீட்டின் தோட்டத்தில் அவ்வூர் வழக்கப்படியே நாரத்தை முதலியவற்றின் பெரிய செடிகளையும் பூஜைக்குரிய வில்வம் முதலியவற்றின் பெரிய செடிகளையும் வேரோடு மண் குலையாமல் தோண்டி யெடுத்து அம்மண்ணின்மேல் வைக்கோற் புரி சுற்றிக் கூறைநாட்டிலிருந்து வருவித்து ஆழ்ந்த குழிகளில் வைப்பித்து நீர் வார்த்துப் பாதுகாத்து வரும்படி செய்வித்திருந்தார். வேலைக்காரர்கள் அவற்றைப் பாதுகாத்து வந்தார்கள். சில தினங்கள் சென்றபின் நாள்தோறும் காலைமாலைகளில் இவர் சென்று பட்டுப் போகாமலிருக்கின்றனவா வென்று அவற்றைக் கவனித்து வருவதுண்டு. இவர் தனியாகவேனும் யாரையாவது உடனழைத்துக் கொண்டேனும் காலையிற் சென்று எந்தச் செடியில் எந்தக் கிளையில் தளிர் உண்டாயிருக்கிறதென்று பார்த்து, தோன்றிய தளிரைக் கண்டு திருப்தி அடைவார்.

இவர் இங்ஙனம் செய்துவருவதைச் சில நாள் கவனித்த நான், 'இவர்களுடைய அன்பை அதிகமாகப் பெறுவதற்கு இத் தளிர்களையே துணையாகக் கொள்வோம்' என எண்ணினேன். அதுமுதல் விடியற்காலையில் எழுந்திருந்து இவர் செல்லும் முன்பே நேராகத் தோட்டத்திற்குச்சென்று ஒவ்வொரு செடியிலும் ஏதாவது புதிய தளிர் உண்டாகியிருக்கிறதா என்று கவனித்து அறிந்துவந்து நிற்பேன். இவர் வரும்போது மெல்ல அருகிற் போய் நான் இவரை அழைத்துச் சென்று, இன்ன செடியில் இன்ன கிளை தளிர்த்திருக்கிறது, இன்ன கிளையில் இவ்வளவு தளிர்கள் உண்டாயிருக்கின்றனவென்று காட்டுவேன். இவர் ஆவலோடு என்னுடன் வந்து அவற்றை ஊன்றிப் பார்த்து அங்கங்கே நான் தெரிவித்தபடி தளிர்கள் இருத்தலைக் கண்டு மகிழ்

வார். இப்படிச் சில தினங்கள் செய்துவந்தேன். இவரும் ஒவ்வொருநாளும் காலையில் வந்து அங்கே கின்ற என்னை முன்னிட்டுக்கொண்டு சென்று தளிர்களைப் பார்த்து மகிழ்ந்து வருவாராயினர்.

தம்முடைய மனத்திற்கு உவப்பான இச் செயலை நான் மேற்கொண்டதை இவர் அறிந்து பின்பு ஒரு நாள் என்னை நோக்கி, "இவற்றை முன்னதாக நீர் பார்த்து வைத்துக் கொண்டது எதனால்?" என்று வினவினர். "*ஐயா அவர்களுக்கு இதில் மிக்க விருப்பம் இருப்பதை அறிந்து இவ்விடத்துக்கு (தங்களுக்கு) அதிகச் சிரமம் கொடுக்கக் கூடாதென்றெண்ணி முதல் நாள் பிற்பகலிலும் மறுநாட் காலையிலும் பார்த்து வைத்துக் கொண்டேன்" என்றேன். இவர், "யாரேனும் பார்த்து வைக்கும் படி சொன்னார்களா?" என்று வினவவே நான், "ஒருவரும் சொல்லவில்லை. இவ்விடத்திற்கு உவப்பாக இருக்குமென்று இவ்வேலையை நானாகவே செய்துவருகிறேன்" என்றேன் இவர், "நாள்தோறும் இப்படியே நீர் முன்னதாகவே கவனித்து நான் வரும்போது சொன்னால் நலமாயிருக்கும்" என்று சொன்னர். அவ்வண்ணமே நாள்தோறும் செய்து வந்தேன். இவரும் பார்த்துவந்தார். இவர் பார்த்துச் சென்ற பின்பே ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியுடன் தந்தசுத்தி முதலியவற்றைச் செய்யச் செல்வேன். இவர் அப்பொழுது பாடத்தைப்பற்றியும் விசாரிக்கத் தொடங்கினர். இங்ஙனம் நாடோறும் இவரைச் சந்தித்துப் பேச நேர்ந்ததற்கு ஒரு காரணமாக இருந்த தளிர்களை வாழ்த்தினேன்.

இவர்பால் நான் நேரே பாடம் கேட்டது

பின்பு ஒருநாள் நான் படிக்கும் பாடங்களைப்பற்றி இவர் விசாரிக்கையில், "இவ்விடத்திலேயே பாடங் கேட்கவேண்டுமென்னும் விருப்பம் எனக்கு மிகுதியாக இருக்கின்றது" என்பதை அச்சத்துடன் தெரிவித்தேன். கேட்ட இவர், "அவ்வாறே செய்யலாம்; இப்போது நடக்கும் நைடதப்பாடம் பூர்த்தியாகட்டும்" என்று விடையளித்தார். அது சில தினங்களில் ஒருவாறு முடிந்தது. அதை இவருக்குத் தெரிவித்தேன் மறுநாட் காலையில்

* படிப்பவர்களும் ஏனையோரும் பிள்ளையவர்களை, 'ஐயா அவர்கள்' என்று சொல்லுவது வழக்கம்.

2. நான் பாடம் கேட்கத் தொடங்கியது கரு

என்னை வலிந்து அழைத்து, "இனிமேல் பிரபந்தங்களைப் படிக்கத் தொடங்கலாம்" என்று சொல்லித் திருக்குடந்தைத்திரிபந்தாதிச் சுவடியை வருவித்துக் கொடுத்துப் படிக்கும்படி சொன்னர். அந்தப்படியே நானும் மற்றவர்களும் வாசித்துப் பொருள்கேட்டு வந்தோம். அந்நூல் இரண்டு தினங்களில் முற்றுப் பெற்றது. யமகம் திரிபுகளாகிய நூல்களில் ஐந்து ஆறு பாடல்களுக்குமேல் கேட்க முடியாமல் அதுவரையில் வருந்திக்கொண்டிருந்த எனக்கு மிகக் கடினமாகிய அந்நூல் இரண்டு தினங்களில் முற்றுப் பெற்றதும், பாடம் சொல்லுகையில் இவர் யாதொரு வருத்தமுமின்றி முகமலர்ச்சியோடு மனமுவந்து சொல்லியதும், மாணாக்கர்களுக்கு விளங்காதவை இன்னவையென்று அறிந்து அந்தப் பாகங்களுக்கு மட்டும் பொருள் சொல்லிக் கடினமான தொடர் மொழிகளைப் பிரித்துக் காட்டி விளக்கியதும், இன்றியமையாத சரித்திரங்களை விளக்கமாகக் கூறியதுடன் இலக்கணக் குறிப்புக்களைச் சுருங்கச் சொல்லித் தெரிவித்ததும் எனக்கு வியப்பையும் இன்பத்தையும் உண்டுபண்ணின. பாடம் முற்பகல் பிற்பகல் இரண்டு வேளைகளிலும் நடைபெற்றது. முற்கூறிய சவேரிநாத பிள்ளையும் கனகசபை ஐயரும் என்னோடு பாடங் கேட்டு வந்தார்கள். அவர்கள் பழக்கம் எனக்கு மிக்க உதவியாக இருந்தது.

அப்பாற் பழமலைத்திரிபந்தாதி, திருப்புகலூர்த்திரிபந்தாதி, மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்து யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி, மறைசையந்தாதி முதலிய அந்தாதிகளும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அழுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலிய சில பிள்ளைத்தமிழ்களும், அஷ்டப்பிரபந்தத்துள் சில பிரபந்தங்களும் கேட்டு முடித்தோம். மறைசையந்தாதி மட்டும் ஒரே நாளில் முற்றுப் பெற்றது.

இவ்வளவு நூல்களில் உள்ள பாடல்களும் இப்புலவர் சிகாமணிக்கு ஞாபகத்திலேயே இருந்தன. அதற்குக் காரணம் இடைவிடாமற் பாடஞ் சொல்லி வந்தமையே. உரிய இடங்களில் இவர் சொல்லி வரும் பதசாரங்கள் இன்பத்தை விளைவிக்கும். ஓய்வு நேரங்களில் நாங்கள் கேட்ட பாடங்களை மீட்டும் படித்துச் சிந்தனைசெய்து வைத்துக்கொள்வோம். பாடங்கேட்கும் காலமன்

றிச் சிந்திக்கும் காலத்திலும் இவரை விட்டுப்பிரிவதற்கு மனமில்லாமற் பக்கத்திலிருந்தே மெல்லப் படித்துவருவோம். தம்மிடம் வருகிற தக்கவர்களோடு இவர் பேசிக்கொண்டிருக்கும்போது பல அருமையான விஷயங்களை நாங்கள் எளிதில் அறிந்துகொள்ளுவோம். நாங்கள் படித்த நூல்களிலிருந்து நல்ல பாடல்களை வந்தவர்களுக்குச் சொல்லிக்காட்டிப் பொருள் சொல்லும்படியும் செய்வார். அங்ஙனம் செய்துவந்தமையால் எங்களுக்குத் தமிழ்ப்பயிற்சியும், ஊக்கமும், கூச்சமின்றிப் பேசும் வழக்கமும் நாளடைவில் அதிகரித்துவந்தன.

அச்சுப் புத்தகங்கள் அக்காலத்தே பெரும்பாலும் அகப்படா; ஆதலாற் படிக்கும் நூல்களை ஏட்டிலேயே எழுதிப்படித்துவந்தோம். அப்படி எழுதுவதற்குமுன்பு பனையோலைகளை வருவித்து வாரித் துளையிட்டுச் சேர்த்துப் புத்தகமாக்கி எங்களிடம் கொடுத்து எழுதச் செய்வார். ஓய்வு நேரங்களில் பழைய கவிஞர்களுடைய சரித்திரங்களை விளங்கச் சொல்லி ஒவ்வொரு சமயத்தில் அவர்கள் செய்த இனிய தனிப்பாடல்களைப் பொருளுடன் கூறி எங்களை எழுதிக்கொள்ளும்படி செய்வார்.

ஒரு தவசிப் பிள்ளை

இவரிடம் தவசிப் பிள்ளையாக உள்ள பஞ்சநதம் பிள்ளை யென்பவர் இவரிடம் நெடுங்காலமாக இருந்து பணிவிடை செய்து வந்தவர். சிலவகையில் இவருடைய மனம்போல அவர் நடப்பதில்லை அநாவசியமாக மாணவர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு இவர் கஷ்டப்படுகிறாரென்பது அவரது எண்ணம். படித்தவரிடத்திலாவது படிக்கும் மாணாக்கரிடத்திலாவது அவர் சிறிதும் அன்பே இல்லாதவர். முகந்திரிந்து நோக்கலும் கடுஞ்சொற் சொல்லுதலும் அவரிடம் இல்லாத வேளை பெரும்பாலும் இராது. நாங்கள் எல்லோரும்அவரைப் பின்பற்றித்தான் செல்லவேண்டும். இல்லாவிடின் ஏதாவது ஒரு கோளைச் சொல்லி இவர் மனத்தை வேறுபடுத்திவிடுவார். திருவாவடுதுறை மடத்துத் தவசிப்பிள்ளையாதலாலும் பல வருடங்களாக இருந்துவருபவராதலாலும் அவரை இவர் கடிந்து பேசுவதில்லை. இவருடைய நண்பர்களிடம் அவர், "இவர் மாணாக்கர்களிடம் எதற்காக இவ்வளவு கஷ்டப்படுகிறார்? தொண்டைத் தண்ணீர் வற்றும்படி கத்துவதனால் என்ன லாபம்? இந்த மாணாக்கர்களால் ஏதாவது பயனுண்டா?

ஒரு காசுக்குக்கூடப் பிரயோசனம் இல்லையே. காலத்தை வீணாகப் போக்கிக் கொண்டே யிருக்கிறாரே'' என்று அடிக்கடி சொல்வதுண்டு. அவர்களால் இவரும் கேள்வியுற்று மௌனமாயிருந்து விடுவது வழக்கம். அவர் எது செய்தாலும் இவர் பொறுத்துக் கொண்டேயிருப்பார். நாங்கள் இரவில் படிக்கும்பொழுது அங்கே படிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள விளக்கை அவர் மிரைவாக வந்து சமையற்கட்டுக்கு எடுத்துச் சென்றுவிடுவார். இவர், ''எடுக்கவேண்டாம்; படிக்கிறவர்களுக்கு இடையூறு செய்வது தவறு'' என்று மென்மையாகச் சொல்லி அவருடைய வேகத்தைத் தணிப்பார். அவரைப் போகச் செய்துவிட்டுப் பின்பு தம்பால் உள்ளவர்களில் இன்னார் இன்னாரிடம் இன்ன இன்னவாறு பழக வேண்டுமென்றும், இன்ன இன்ன மாதிரி பேசவேண்டுமென்றும், இல்லையாயின் எங்களுடைய நிலைமையை அறிந்துகொள்ளாமற் சிலர் துன்புறுத்தல் கூடுமென்றும், அச்செயல் தமக்கும் எங்களுக்கும் அதிக வருத்தத்தை உண்டுபண்ணுமென்றும், ஆகலால் அவர்களுக்குப் பிரீதியுண்டாகும்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் இவர் எங்களுக்குப் புத்தி புகட்டுவார். படிக்கப்போனவுடன் தவசிப்பிள்ளைதானேயென்று எண்ணி அவரை ஒருநாள் பஞ்சநதமென்று ஒருமையாக அழைத்தேன். அதனைக்கேட்ட இவர் அவர்போன பின்பு, ''பஞ்சநதம் பிள்ளையென்று அழையும்; அவனை அலட்சியம் செய்தால் ஏதாவது விபரீதத்தை விளைவித்து விடுவான்; பிறரைக்கொண்டும் துன்புறுத்துவான்'' என்று அவரிடத்தும் ஏனையோரிடத்தும் நடந்து கொள்ள வேண்டியமுறையைத் தனியே எனக்குச் சொன்னார்.

உள்ளன்பு

நான் போகுங்காலங்களிலெல்லாம் கண்டவுடன், ''ஆகாரம் ஆயிற்றா?'' என்றும், ''சௌகரியமாக இருக்கிறதா?'' என்றும் விசாரிப்பார். ஏதேனும் வேண்டியிருந்தால் வருவித்துக்கொடுப்பார். நான் ஆகாரம் பண்ணிக்கொண்டு வருவதற்கு நேரமானால் என்ன காரணத்தால் வரவில்லையோ வென்று கவலையுற்று நான் வரும் வழியையே நோக்கிக்கொண்டு தெருத்திண்ணையில் இருந்ததை நான் சிலமுறை கண்டிருக்கிறேன்.

திருக்குற்றால யமகஅந்தாதி படித்தது

இவராற் பார்க்கப்படாத நூல்கள் எவையேனும் கிடைக்குமாயின் அவற்றைத் தாமே வைத்துக்கொண்டு நன்கு ஆராய்ந்து

படித்துவருவார். விளங்காத விஷயங்களை யார் சொன்னாலும் விருப்பத்தோடு கேட்டு அறிந்துகொள்வார்; விஷயம் தெரிய வேண்டுமென்னும் நோக்கத்தை யன்றி, இன்னாரிடம் கேட்கலாம், இன்னாரிடம் கேட்கக் கூடாதென்னும் வேற்றுமை இவர்பால் இல்லை. அப்பொழுது இவர் நூதனமாகக் கிடைத்த திருக்குற்றால யமகவந்தாதிச் சுவடியைத் தாமே கையில் வைத்துப் படித்துப் பொருளாராய்ந்து வந்தார். தலசம்பந்தமாக அதிலே வந்துள்ள சண்பகக் கற்பக விநாயகர், இலஞ்சிக்குமாரர், சங்கவீதி, சங்கக் கோயில் முதலிய விஷயங்களை மாயூரத்திற்கு வந்து தங்கியிருந்த இவருடைய மாணாக்கரான திருநெல்வேலிச் சந்திரசேகரம் பிள்ளையென்பவரிடம் வினவி அறிந்துகொண்டார். அவரும் அன்புடன் தெளிவாகச் சொல்லிவந்தனர். அந்த அந்தாதியின் நடையைக் குறித்து அடிக்கடி இவர் பாராட்டுவதுண்டு.

என் பெயரை மாற்றியது

எனது இயற்பெயர் வேங்கடராமனென்பது; அதுவே எனது சர்ம நாமம். இவரிடம் என் தந்தையார் சொல்லியதும் வேங்கடராமனென்பதே. அப்பெயராலேயே என்னை அழைத்துவந்த இவர் சில தினங்களுக்குப்பின் ஒருநாள் என்னை நோக்கி, "வீட்டார் உம்மை அழைப்பது இந்தப்பெயராலேயா? அன்றி உமக்கு வேறு பெயருண்டோ?" என்றுகேட்டார். நான், "வேங்கடராமனென்பது மூதாதையின் பெயராதலின் தாய்தந்தையர்கள் அவ்வாறு அழையாமல் சாமிநாதனென்பதன் திரிபாகிய 'சாமா' என்று அழைப்பார்கள்" என்றேன். "சாமிநாதனென்ற பெயரே நன்றாயிருக்கிறது. இனி அப்பெயராலேயே உம்மை அழைக்கிறேன்" என்று கூறி அன்றுமுதல் அப்பெயராலேயே அழைத்து வருவாராயினர். இவருடைய விருப்பத்தின்படி பிறரும் அங்ஙனமே செய்துவந்தார்கள். அப்பெயரே நிலைத்துவிட்டது.

என் இசைப்பயிற்சியை நிறுத்தியது

நான் இவரிடம் படிக்கத்தொடங்கிய நாள்முதல் என் தந்தையாருடைய கட்டளையின்படியே ஒவ்வொரு தினத்தும் ஒய்வு நேரத்திற் சென்று அவ்வூரிலிருந்த மூடிகொண்டான் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சங்கீதம் கற்றுக்கொண்டு வந்தேன்.

நான் முன்னரே பயிற்சிபண்ணியிருந்த கீர்த்தனங்களை மறவாமலிருத்தற்கு இங்ஙனம் செய்தல் நலமென்று என்பிதா எண்ணினர். பாரதியாரும் அன்புடன் கற்பித்துவந்தார். அவர் இயற்றிய சில கீர்த்தனங்களும் பிறபெரியோர்கள் இயற்றிய சில பழைய உருப்படிகளும் எனக்கு அக்காலத்திற் பாடமாயின. பிள்ளையவர்களும் அவரும் அதிகப் பழக்கமுடையவர்களாகையால் எப்பொழுதேனும் சந்திக்கும்படி நேர்ந்தால் இருவரும் மனங்கலந்து சிலநேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். ஒருநாட் காலையில் இருவரும் சந்தித்தபொழுது, தம்மிடம் நான் படிக்க வந்திருப்பதாகவும் பாடல்களை இசையுடன் படிப்பதாகவும் கூறி அப்படிப் படிப்பதை ஒருநாள் வந்து கேட்கவேண்டுமென்று இவர் அவருக்குச் சொன்னர். அவர், "அந்தப் பையனுடைய தகப்பனர் சங்கீத வித்துவானதலால் அவருக்கும் எனக்கும் பல நாளாகப் பழக்கம் உண்டு. அவனுக்குச் சங்கீதப் பயிற்சி மேன்மேலும் பெருகும்படி கற்பிக்க வேண்டுமென்று என்னிடம் அவர் சொல்லிவிட்டுப் போனர். அவன் அந்தப்படியே என்னிடம் தினந்தோறும் வந்து சிகூூ சொல்லிக்கொண்டு போகிறன். சில கீர்த்தனங்கள் அவனுக்குப் பாடமாயிருக்கின்றன. தங்களிடம் பாடம்கேட்டு வருவதாகவும் சொன்னன்" என்று சொன்னதன்றி, "அந்தப் பையனைக் கவனித்துப் படிப்பிக்க வேண்டுமென்று நானும் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றனர். அப்பால் இவர் அவருடன் அதிகம் பேசாமல் விடை பெற்று நேரே விரைவாக வீட்டிற்கு வந்து அங்கே படித்துக்கொண்டிருந்த என்னைப் பார்த்து, "நீர் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சென்று இசைப்பயிற்சி செய்து வருவதுண்டோ?" என்று கேட்டார். கேட்ட குறிப்பையறிந்து நான் மிகவும் அஞ்சி, "என்னுடைய தகப்பனருக்கும் அவருக்கும் அதிகப் பழக்கம் உண்டு. இவ்வூரிலிருக்கையில் பாரதியாரிடம் சென்று சங்கீதத்தையும் விருத்தி பண்ணிக்கொள்ளும்படி அவர் சொன்னமையால் இதுவரையிற் கற்றவற்றை மறவாமலிருத்தற்பொருட்டுச் சென்று பயின்று வருகிறேன்" என்று விநயத்துடன் சொன்னேன். இவர், "நீர் அங்ஙனம் செய்து வருவதை நான் இதுவரையில் தெரிந்துகொள்ளவில்லை. இசையில் அதிகப் பழக்கம் வைத்துக்கொண்டால் இலக்கிய இலக்கண நூல்களில் நன்றாகப் புத்தி

செல்லாது. நூல்களின் கருத்தை நன்றாக ஆராய்ந்து படிப்பதையும் அது தடுத்துவிடுமே'' என்று சொன்னார். இவருடைய நோக்கத்தை அறிந்து மறுநாள் முதல் அம் முயற்சியை அடியோடே நிறுத்திக்கொண்டேன். பாரதியாரிடம் வேறொன்றும் சொல்லாமல், ''இங்கே வருவதற்கு எனக்கு ஒய்வு நேரம் இல்லை'' என்று சொல்லிவிட்டு நேர்ந்த காலங்களில் அவரிடம் சாதாரணமாகப் பழகி வந்தேன்.

ஒரு மாணாக்கர் எண்ணெய் வாங்கி வந்தமை

ஒருநாள் எங்களுக்குக் காலைப்பாடமானவுடன் இவர் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதற்குச் சென்று ஒரு பலகையில் இருந்தார். எப்பொழுதும் பாடஞ் சொல்லுவது இவருக்கு வழக்கமாதலால், பாடங் கேட்பவர்கள் புத்தகமும் கையுமாக அருகில் வந்திருந்தார்கள். எண்ணெய் தேய்க்கும் வேலைக்காரன் உள்ளே சென்று சமையற்காரனைக் கேட்டபொழுது அவன் எண்ணெய் இல்லையென்றான். அயலில் நின்ற மாணாக்கர் ஒருவர் அதனையறிந்து விஷயம் இவருக்குத் தெரியாதபடி தம்மிடமிருந்த ரூபாயொன்றை எடுத்துக்கொண்டு காவிரியாற்றின் கரையோரத்திலிருந்த கடைத்தெருவிற்கு வேகமாக ஓடிச் சென்று எண்ணெய் வாங்கிவந்து சமையற்காரனிடம் சேர்ப்பித்துவிட்டு யாதும் அறியாதவர்போல் வந்து இருந்தனர். எண்ணெய் தேய்த்துக்கொள்ள வெண்ணி, ஆசனத்தில் இருந்தும் உடனிருந்தவர்களுக்கு வழக்கம் போலவே பாடஞ்சொல்லிக்கொண்டிருந்தமையால் எண்ணெய் வாராமையின் காரணத்தை இவர் அறிந்துகொள்ளவில்லை.

மூன்று சமஸ்யைகள்

பின் ஒருநாள் மாலையில் அனுஷ்டானம் செய்துவிட்டு வந்து வீட்டின் மேல்புறத் திண்ணையில் இவர் இருந்தார். கனகசபை ஐயர், சவேரிநாத பிள்ளை, நான் ஆகிய மூவரும் கீழ்புறத் திண்ணையின்கீழே வரிசையாக இவரை நோக்கிய வண்ணமாக நின்றோம். அப்பொழுது எங்களைநோக்கி இவர், ''உங்களுக்குச் செய்யுள்செய்யும் பழக்கமுண்டா?'' என்று கேட்டார். ''உண்டு'' என்றோம். ''வெண்பாவின் ஈற்றடியைக் கொடுத்தால் ஏனை மூன்றடிகளையும் பாடி முடிப்பீர்களா?'' என்று வினவினர். ''ஏதோ உழைத்துப்பார்க்கிறோம்'' என்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு

சொன்னேம். சொன்னவுடன், "தேவா வெனக்கருளைச் செய்" என்பதைச் சவேரிநாத பிள்ளைக்கும், "சிந்தா குலந்தவிரச் செய்" என்பதைக் கனகசபை ஐயருக்கும், "கந்தா கடம்பாகு கா" என்பதை எனக்கும் ஈற்றடிகளாக அளித்தார். நாங்கள் மூவரும் ஏனை மூன்றடிகளையும் முடித்து முறையே தெரிவித்தோம். கேட்ட இவர், "இப்படியே பாடிப் பழகுவது நல்லது. பாடப் பாட உங்களுக்கு நல்ல வாக்கு உண்டாகலாம்; 'செந்தமிழு நாப்பழக்கம்' என்பது ஔவையார் திருவாக்கன்றே?" என்று கூறிவிட்டு என்னை நோக்கி, "உமக்குக் கொடுத்த இறுதி அடியை வைத்து நானும் ஒரு செய்யுள் செய்து முடித்திருக்கிறேன்" என்று கூறி,

(வெண்பா)

"* பாடப் படிக்கப் பயனு நினக்கன்பு
கூடக் கருணை கொழித்தருள்வாய்—தேடவரும்
மந்தா னிலந்தவழு மாபூர மாநகர்வாழ்
கந்தா கடம்பாகு கா"

என்ற செய்யுளைச் சொன்னார். நாங்கள் செய்த மூன்று பாட்டுக்களும் எனக்கு ஞாபகம் இல்லை. அதுமுதல் நாங்கள் செய்யுள் செய்யும் முயற்சியை மேற்கொண்டு வந்தோம்.

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

தமிழில் நல்ல அறிவுண்டாகவேண்டுமென்று கருதி நாள் தோறும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை முற்றும் பாராயணம் செய்து வருவது எனக்கு வழக்கமாக இருந்தது. அதனைக் கண்ட இவர் ஒருநாள், "இப்படியே நாள்தோறும் முற்றும் பாராயணம் செய்துவந்தால் உமக்குச் சிரமமாக இருக்கும். மற்ற வர்களோடு சேர்ந்து படிப்பதற்கும் இயலாது. முருகக்கடவுளை வழிபடுதல் தமிழ்ப்பயிற்சிக்கு மிகவும் நல்லதே. அப்பிள்ளைத் தமிழில் வருகைப்பருவத்தில் இரண்டு பாடல்களைமட்டும் மனனம் செய்துகொண்டு வந்தாற் போதும்" என்றார். அது தொடங்கி அவ்வண்ணமே செய்து வருவேனுயினேன்.

---

* இச்செய்யுளை அப்பொழுது கேட்டு மகிழ்ந்து மனனம் செய்திருந்த நான் என்ன காரணத்தாலோ மறந்துவிட்டேன். பல வருடங்களுக்குப்பின், திருவாவடுதுறையிலிருந்தவரும் இவர் மாணாக்கரும் சிறந்த கவிஞருமாகிய இராமலிங்கத் தம்பிரானென்னும் நண்பரால் அறிந்து அப்பால் நாள்தோறும் சொல்லி வருவேனுயினேன்.

பெரியபுராணப் பாடம்

சில மாதங்களுக்குப் பின் இவர்பால் விடைபெற்றுக்கொண்டு சொந்த ஊருக்குப் போனேன். அங்கே என் தகப்பனாரும் பிறரும் இவர்பால் நான் பாடம் கேட்டுவரும் முறைகளையும் இவருடைய குணவிசேடங்களையும் நான் விவரமாகச் சொல்லக்கேட்டு மிகவும் மகிழ்ந்தார்கள். அங்கே சில தினமிருந்து திரும்பிவந்தேன். அதற்குள் மாயூரங்கோயிற் கட்டளைப்பணியை அப்போது நடத்திவந்த ஸ்ரீபாலசுப்பிரமணியத் தம்பிரானென்பவரும் வேறு சிலரும் இவரிடம் முதலிலிருந்து பெரியபுராணத்தைப் பாடங்கேட்டு வருவாராயினர். நான் திரும்பி வந்த தினத்தில் தொடங்கிய பாடம் எறிபத்த நாயனார் புராணம். என்னைக் கண்டவுடன் அவர்களுடன் சேர்ந்து அப்புராணத்தைக் கேட்டு வரும்படி இவர் சொன்னார். அங்ஙனமே செய்து வந்தேன். என் தகுதிக்கு அந்நூல் எத்தனையோ மடங்கு மேற்பட்டதாக இருந்தாலும், இவர் பாடஞ் சொல்லும் பக்குவத்தால் அந்நூற் செய்யுட்கள் எளியனவாகவே இருந்தன. அவற்றிலுள்ள நயங்களும் புலப்பட்டன.

கண்ணப்ப நாயனார் புராணம்

இவ்வாறு பாடம் நடந்து வருகையில் ஒருநாள் திருவாவடுதுறை மடத்துக் காறுபாறாக இருந்த ஸ்ரீ கண்ணப்பத்தம்பிரானென்பவர் அங்கே வந்தார். தற்செயலாக அன்றைப்பாடம் கண்ணப்ப நாயனார் புராணமாக இருந்தமையால், பெயரொற்றுமை பற்றி அதனை அவர் முன்னிலையிற்படித்து அன்றைத்தினமே பூர்த்திசெய்து விடவேண்டுமென்ற எண்ணம் இவருக்கும் பிறர்க்கும் உண்டாயிற்று. அக்குறிப்பையறிந்து விரைவாகப்படித்து நாங்கள் பொருள்கேட்டுக்கொண்டு வந்தோம். கண்ணப்ப நாயனருடைய அன்பின் மிகுதியையும் அவர்பால் தமக்குள்ள அருளின் மிகுதியையும் ஸ்ரீகாளத்திநாதர் சிவகோசரியாருடைய கனவிற்கட்டளையிடும் பகுதியாகிய செய்யுட்கள் நாங்கள் படிக்கும் அச்சுப் புத்தகங்களுள் ஒன்றிலேனும் காணப்படவில்லை. உடனே இவர், "அங்கே ஐந்து பாடல்கள் இருக்கவேண்டுமே; அவை நிரம்ப நன்றாக இருக்கும். உங்கள் புத்தகத்தில் அச்செய்யுட்கள் இல்லாமை வியப்பை உண்டுபண்ணுகின்றது" என்றுசொல்லித் தம்முடைய புத்தகப் பெட்டியின் திறவுகோலைக் கொடுத்து அதைத் திறந்து பெரிய புராண ஏட்டுப்பிரதியை எடுத்துக்கொண்டு வரும்படி என்னை

அனுப்பினர். உடனே சென்று அதை எடுத்துவந்தேன். பிரித்து அந்த இடத்தைப்பார்க்கையில் மிக்க அருமையான ஐந்து பாடல்கள் அப்பிரதியிற் காணப்பட்டன.) அவை, "பொருப்பினில்", "உருகியவன்பு", "இம்மலைவந்து", "வெய்யகனல்", "மன் பெருமா" என்ற முதற்குறிப்புடையவை. அவற்றைப் படிக்கச் செய்து கேட்பித்து எல்லோரையும் மகிழ்வித்தார். (கேட்டவர்கள் இவருடைய ஞாபக சக்தியை மிகவும் பாராட்டினர்கள்.)

'இன்று நெய் கிடைத்தது'

அப் புராணத்தைப் படித்து முடிக்கும்பொழுது இரவு கடிகாழிகைக்குமேலாயிற்று. மடத்திலே ஆகாரம் பண்ணிக் கொள்ளும்படி தம்பிரான்மார்கள் சொன்னமையால் இவர் அவ்வண்ணமே செய்தார். அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு இவர் செல்லும்பொழுது நானும் உடன் சென்றேன்; இவர் என்னைப்பார்த்து, "மடத்தில் ஆகாரம் பண்ணினமையால், இன்று நெய் கிடைத்தது" என்றார்; அதற்கு முதன் மூன்றுநாளும் நெய்யில்லாமல் இவர் உண்டதை நான் அறிந்தவனதலால் என்னிடம் சொன்னர். இவர்பால் அன்பும் மதிப்பு முள்ளவர்கள் எத்தனையோ ஆயிரம்பேர் இருந்தும் இவருடைய குடும்ப நிலைமையை ஒருவரும் கவனிக்கவில்லையே யென்ற எண்ணம் அப்பொழுது உண்டாகி என்னை மிக வருத்தியது. அந்த வறுமை நிலையை ஒருகாலத்தும் இவர் புலப்படுத்தினரல்லர். சிறந்த கல்விமான்களுக்கு வறுமைத் துன்ப முண்டென்பதை,

(கட்டளைக் கலித்துறை)

"கொடுக்கச் சடைவற்ற வுன்னையும் பாடிக் குலாமர்முன்போய்
இடுக்கட் படுவ தழகல்ல வேயென்னை யீடழிக்கும்
நடுக்கத்தை யாற்றப் படாதுகண் டாயெந்த நாளுமுண்ண
உடுக்கக் குறைவருத் தாதேகுற் றூலத் துறைபவனே"

என்னும் அருமைச் செய்யுளால் அறியலாகும். உடனிருந்தமையால் இதைப்போன்ற சந்தர்ப்பங்கள் பலவற்றை நான் அறிந்திருப்ப துண்டு.

சடகோப ஐயங்காரைப் பாராட்டியது

ஒரு தினம் நான் உடன் படிப்பவர்களோடு பேசிக்கொண்டிருக்கையில், அரியிலூர்ச் சடகோபையங்கார் தம்மிடம் வரு

வோரிடத்துச் சமயோசிதமாகச் செய்யுட்களைக் கூறி அவற்றிற் குப் பொருள் சொல்லி உபந்யஸித்தல் நயமாக இருக்குமென் றும் அக் கேள்வியாலும் என் மனம் தமிழ்ப்பாஷையில் ஈடுபட்ட தண்டென்றும் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே வந்த இவர், "சடகோபையங்காரைப்பற்றி என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்க, உடனிருந்த ஒருவர் நிகழ்ந்ததைச் சொன்னார். அப்பொழுது இவர் என்னைப்பார்த்து, "அவர் சொல்லியவற்றுள் ஏதாவது ஒரு செய்யுளைச் சொல்லி அதற்கு அவர் சொல்லிய விசேஷ அர்த்தத்தையும் சொல்லும்" என்றார்.

"வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான்"

(கம்ப. கும்பகருணன். 1)

என்ற பாடலைச் சொல்லிவிட்டு நான் அதற்கு அவர் சொல்லிய படி முதலிலிருந்தே பொருள் சொல்லத் தொடங்கினேன். இவர், "மார்பு முதலியவற்றைக் களத்தில் அவன் போடாமலிருக்கையில் அவற்றை அவன் போட்டுவிட்டதாகச் சொல்லிய பகுதிகளுக்கு மட்டும் பொருளை விளக்கி இன்னவற்றைச் சொன்னரென்பதைச் சொன்னாற் போதும்" என்றார். "இராவணன் மார்பில் தைத் திருந்த திக்குயானைகளின் கொம்புகள் அவன் மார்பில் அனுமான் குத்தியபொழுது அவன் முதுகுவழியே உதிர்ந்துபோனமையால் மார்பின் வன்மையையும், வேலால் மூர்ச்சித்து விழுந்த இலக்கு வனை அவன் தூக்கிக்கொண்டு செல்வதற்கு மிக முயன்றும் எடுக்க முடியாமல் சலித்து நின்றமையால் தோள்வலியையும், 'ஊர்க்குப் போய்ப் படைகளைத் தொகுத்துக்கொண்டு யுத்தம் பண்ணுதற்கு நாளை வர எண்ணுகின்றனையா? சீதையை விட்டு விடுதற்கு எண்ணுகின்றனையா? உன் கருத்து யாது?' என்று இராமன் கேட்டபொழுது அவன் மௌனமாகவே இருந்துவிட்ட மையின் நாவின் வன்மையையும், அவன் கிரீடத்தை இராமபாணம் வீழ்த்திவிட்டமையால் கிரீடத்தையும், 'நல்ல சமயத்தில் நம்மை உபயோகியாமல் இருந்துவிட்டானே; இனி இவனிடமிருப்பதில் யாதும் பயனில்லை' என்று அவனை இகழ்ந்து, ஈசன் அளித்த கொற்றவாள் அவனை நீங்கி அவரிடஞ் சென்று விட்டமையால்

வாளையும் இழந்தானென்றும், மார்பு, தோள், நா என்பவை ஆகு பெயர்களென்றும் அவர் சொன்னதாக எனக்கு ஞாபகமிருக்கிறது'' என்று சொன்னேன். அவர் கூறிய பொருள் பொருத்தமாக இருக்கிறதென்று இவர் பாராட்டியதோடு அவரைத் தாம் முன்னமே அறிந்திருப்பதாகவும் சொன்னார்.

ஆனிக் குருபூஜைக்குத் திருவாவடுதுறை சென்றுவந்தது

இங்ஙனம் சில நாட்கள் சென்றன; திருவாவடுதுறையில் நடக்கும் * ஆனிக்குருபூஜைக்கு வரவேண்டுமென்று ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய திருமுகம் இவருக்குக் கிடைத்தமையால் மாயூரத்திலிருந்த சில அன்பர்களுடன் இவர் திருவாவடுதுறைக்குச் சென்றார். நாங்கள்மட்டும் இவர் சொல்லியபடி மாயூரத்திலிருந்தே பழையபாடங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தோம். சில தினம் இவர் திருவாவடுதுறையில் இருந்துவிட்டு மாயூரம் வந்து வழக்கப்படியே எங்களுக்குப் பாடஞ்சொல்லி வந்தார். ஒரு நாள் பாடஞ்சொல்லி வருகையில் அங்கே வந்த ஒரு கனவானிடம் தாம் திருவாவடுதுறைக்குப் போன காலத்தில் நிகழ்ந்த செய்திகளை இவர் கூறுபவராகி, ''ஸந்நிதானம் திருவாவடுதுறையிலேயே வந்திருந்து பாடம் சொல்லும்படி கட்டளையிட்டது; சீக்கிரம் வரவேண்டுமென்று அங்கேயுள்ள குட்டிகளும் வற்புறுத்தியதுண்டு. அங்கே நான் போனால் இந்தப் பிள்ளைகள் பாடம் கேட்பதற்கும் பிறவற்றிற்கும் மிகவும் சௌகரியமாயிருக்கும்'' என்று சொன்னார். அதைக் கேட்ட எங்களுக்கு மிக்க ஆறுதலுண்டாயிற்று. எனக்குமட்டும் 'குட்டிகள்' என்ற சொல்லுக்குப் பொருள் சரியாக விளங்காமையால் சிறுபெண்களென்று அர்த்தம் செய்துகொண்டு, 'துறவிகளிருக்கும் மடத்தில் பெண் பாலாரிருப்பதற்கு நியாயமில்லையே; இருந்தாலும் அவர்களைப் படிப்பித்தற்கு இயலாதே' என்று என்னுள் நினைந்து பக்கத்திலிருந்தவரை மந்தணமாக வினவத் தொடங்கினேன். அப்பொழுது அதனை அறிந்த இவர், ''சிறிய தம்பிரான்களைக் குட்டிகளென்று சொல்லுவது மடத்து வழக்கம்'' என்று சொன்னார்.

---

* இஃது அந்த மடத்தில் கடு-ஆம் பட்டத்திலிருந்து விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்குரியது; குருபூஜை நடக்கும் தினம் ஆனி மாதம் பூர நட்சத்திரம்.

ஆறுமுகத்தா பிள்ளை பட்டீச்சுரத்துக்கு அழைத்தது

ஒரு நாள் பட்டீச்சுரம் ஆறுமுகத்தாபிள்ளை மாயூரம் வந்தார். இவரை அழைத்துச் சென்று தம்முடைய வீட்டில் வைத்திருந்து உபசரித்து இவருடைய உதவியால் தம்முடைய குடும்பத்திலுள்ள சில முட்டுப்பாடுகளைப் போக்கிக்கொள்ள எண்ணி அவர் வந்து அழைப்பதும் இவர் அடிக்கடி பட்டீச்சுரம் சென்று சில நாள் இருந்துவருவதும் உண்டு.

இரண்டுதினம் சென்ற பின்பு ஆறுமுகத்தா பிள்ளை பட்டீச்சுரம் வந்து சில தினம் இருக்கவேண்டுமென்று இவரைக் கேட்டுக் கொண்டார். அதற்கு இவர் இசைந்து மாணாக்கர்களில் என்னையும் தவசிப்பிள்ளை பஞ்சநதம்பிள்ளையையும் உடனழைத்துக் கொண்டு அவரோடு புறப்பட்டார்; இடையில் திருவாவடுதுறையில் தங்கி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து விடைபெற்றுச்செல்ல எண்ணினர்.

---

3. திருவாவடுதுறை நிகழ்ச்சிகள்

திருவாவடுதுறை சென்றது

அங்ஙனமே இவர் திருவாவடுதுறை போகையில் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகருடைய பெருமையையும் வடமொழி தென்மொழிகளிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் இசையிலும் அவருக்குள்ள பயிற்சிமிகுதியையும் அவற்றிற் பாண்டித்தியமுள்ளவர்களை அன்புடன் அவர் ஆதரிக்கும் அருமையையும் பாராட்டிக்கூறி என்னை நோக்கி, "உம்மைச் சில செய்யுட்கள் சொல்லும்படி ஸ்ரீ நானம் கட்டளையிடக்கூடும். அப்போது இன்ன இன்ன நூல்களிலிருந்து இன்ன இன்ன வகையான செய்யுட்களை இசையுடன் சொல்லும். பொருள்கேட்டாற் பொருளையும் தவறின்றிச்சொல்லும். சொல்லி உவப்பித்தால் அவர்களுடைய பேராதரவைப் பெறலாம்" என்று சொன்னதன்றிப் பின்னும் நான் அங்கே உள்ளவர்களிடத்து நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றியும் மனத்திற்படும்படி போதித்துக்கொண்டே சென்றார். அப்பொழுது சாலையில் எதிரேவருபவர்களும் அயலிடங்களில் நிற்பவர்

களும் பிள்ளையவர்கள் செல்லுகிறார்களென்று தம்முள் நன்மதிப் போடு பேசிக்கொள்ளுதலையும் சிலர் வந்துவந்து பார்த்து, "எங் களுடைய ஞாபகமிருக்கவேண்டும்" என்று விநயத்துடன் சொல்லுதலையும் பார்த்த எனக்குப் பின்னும் இவரிடத்து நன் மதிப்பு உண்டாயிற்று. அப்பால் இவர் திருவாவடுதுறையை யடைந்து மடத்திற்குச் சென்றார். மடத்து ஒதுவார்களிற்சிலர் இவரைக்கண்ட உடனே இவர் வரவை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ரிடம் விண்ணப்பம்செய்ய, இவரை அழைத்துவரும்படி அவர் சொல்லி யனுப்பினர்.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகராற் பாராட்டப் பெற்றது

அதைக்கேட்டு இவர் மிக விரைந்து சென்று இரண்டு கைகளையும் உச்சிமேற் குவித்து அவரைப் பணிந்தார். அவர் அப்பொழுது * ஒடுக்கத்தின் வடபுறத்தே தென்முகம் நோக்கி யிருந்தார். அருகில் வடமொழி தென்மொழிகளிலும் சங்கீ தத்திலும் வல்ல வித்துவான்கள் இருந்தார்கள். வணங்கிய இவர் திருநீறு பெறுவதற்கு எழுந்து செல்லும்பொழுது தேசிகரைப்பார்ப்பதற்கு மிக்க ஆவலோடு இவர் பின்னே நின்ற யானும் சென்றேன். நெற்றியில் திருநீறு இட்டு இவரை இருக் கச்செய்துவிட்டுத் தேசிகர், "உங்களுக்குப் பின்னே வருகிற இவரோ முன்பு வந்தபொழுது பாடங்கேட்பதாகச் சொல்லிய சாமிநாதையரென்பவர்?" என்று விசாரித்தார். அப்பொழுது †"ஸ்வாமி" என்று இவர் சொல்லவே எனக்கு உண்டான உவப்பிற்கு எல்லையே இல்லை. ஒரு பொருளாக என்னை நினைந்து தாம் வந்தபொழுது நான் பாடங்கேட்டு வருவதாக இப்புலவர் பிரான் சொல்லிய அருமையையும் அதனை ஞாபகப்படுத்திக் கொண்டு விசாரித்த தேசிகருடைய பெருமையையும் எண்ணி எண்ணி இன்பம் அடைந்துகொண்டே சென்று தேசிகர் இருக்கும்படி சொல்ல இவருக்குப் பின்னே இருந்தேன். அப் பொழுது தேசிகர் இவரைப்பார்த்து, "இங்கே வந்திருந்த ஸ்ரீ மகாவைத்தியநாதையரவர்கள் நேற்று மாலையில் ஸ்ரீ சோமாசி மாறநாயனார் சரித்திரம் கதை பண்ணினார்கள். அதற்காக அழைக்கப்பட்டுத் திருவிடைமருதூரிலிருந்து ராஜா கனபாடி

* ஆதீனத்தலைவர்கள் ஏகாந்தமாக இருக்குமிடம்.

† ஸ்வாமியென்பதற்கு இந்தச் சமயத்தில் ஆமென்பது பொருள்.

கள், சுந்தரசாஸ்திரிகள், அண்ணு வாஜபேயர் முதலிய வித்துவான்களும், திருவாலங்காட்டிலிருந்து விசுவபதி தீக்ஷிதர். அப்பா தீக்ஷிதர், பெரியசாமி சாஸ்திரிகள், சின்னசாமி சாஸ்திரிகள், ராஜு சாஸ்திரிகள் முதலிய வித்துவான்களும், திருக்கோடிகா, திருவிசைநல்லூர் முதலிய ஊர்களிலுள்ள பண்டிதர்களும், செல்வவான்களிற் பலரும் வந்திருந்தார்கள். ஸதஸ் மிக நன்றாகவே இருந்தது. மகாவைத்தியநாதையரவர்கள் அந்தச் சரித்திரத்தைக் கதை பண்ணுகையில் சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்களிலிருந்தும், ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியார், அப்பைய தீக்ஷிதர் முதலிய பரம சாம்பவர்களுடைய வாக்கிலிருந்தும், தேவார திருவாசகங்கள் முதலியவற்றிலிருந்தும் அவ்வவ்விடத்திற்கேற்ப மேற்கோள்கள் காட்டிச் சபையை மகிழ்வித்ததுடன் உங்களுடைய வாக்காகிய சூத சங்கிதையிலிருந்தும் சில ஸ்தலபுராணங்களிலிருந்தும் வாட்போக்கிக் கலம்பகம் முதலியவற்றிலிருந்தும் உசிதமான செய்யுட்களை எடுத்துக்காட்டி உபந்யஸித்தார்கள். எல்லோரும் அளவற்ற மகிழ்வடைந்தார்கள். அவற்றுள் உங்களுடைய பாடல்கள் அவர்களுடைய சாரீரத்தோடு சேர்ந்து செயற்கையழகும்பெற்று எல்லாருடைய மனத்தையும் கவர்ந்தன. அவர்கள் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லிவிட்டு, 'இந்த விஷயமாகப் பிள்ளையவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்' என்று சொல்லிச் செல்லும் பொழுது கேட்டவர்கள் உங்களுடைய அறிவின் வன்மையையும் ஸாஹித்யத்தின் அழகையும் அறிந்து வியந்தார்கள். அது தொடங்கி உங்கள் ஞாபகமாகவே இருந்து வருகிறோம். மற்றவர்களும் அப்படியே இருக்கிறார்கள்" என்று சொன்னார். குணக்குன்றாகிய இவர் மிக்கபணிவுடன், "அடியேனுக்கு யாது செயலுளது? எல்லாம் ஸந்நிதானத்தின் திருவருளே" என்று விண்ணப்பம் செய்தனர். அங்கே உடனிருந்த மற்றப்பெரியோர்களும் பிள்ளையவர்களுடைய வரவால் தங்களுக்குண்டான மனமகிழ்ச்சியைத் தங்கள் முகங்களாற் புலப்படுத்தினர்கள்.

சுப்பிரமணிய தேசிகர் என்னைப் பரீட்சித்தது

அப்பால் தேசிகர் என்னை முன்னே வரச்செய்து, "படித்த நூல்களிலிருந்து ஞாபகமுள்ள எந்தப்பாடல்களையேனும் சொல்லிப் பொருளும் சொல்லும்" என்றார். நான் துறைசை யமகவந்தாதி, திருத்தில்லை யமகவந்தாதி, திருக்குற்றால யமகவந்

தாதி, புகலூரந்தாதி யென்பவற்றுள் ஒவ்வொன்றிலிருந்தும் சில சில பாடல்களைச் சொல்லிப் பொருளும் சொன்னேன். பொருள் சொல்லுகையில் அச்சத்தால் நாக்குத் தழுதழுத்தது; அதனால் தன்புற்றேன். அதனையறிந்து தைரியமாகச்சொல்லும்படி பிள்ளையவர்கள் தூண்டினமையால் பின்பு அச்சமின்றிச் சொன்னேன்.

அப்போது தேசிகர் பிள்ளையவர்களைப் பார்த்து, "சாரீரமும் சங்கீதஞானமும் இவருக்குள்ளன. தங்களிடம் படித்துக்கொண்டு வந்தால் முன்னுக்கு வருவாரென்று தோற்றுகிறது. தங்களை அடைந்தவர்களுக்கு யாதொரு குறையுமிராது" என்று சொல்ல, இவர், "அடியேனுல் ஆவது ஒன்றுமில்லை; ஸந்நிதானத்தின் திருவருளே எல்லோரையும் பாதுகாத்து வருகின்றது; இனிமேலும் பாதுகாத்தற்குரியது அதுவே; இவரும் அவ்விடத்துப் பிரியத்துக்குப் பாத்திரரே" என்று விண்ணப்பஞ் செய்தார்.

பின்பு தேசிகர், "இங்கே வழங்காத திருக்குற்றுல யமகவந்தாதி இவருக்கு எப்படிப் பாடமாயிற்று?" என்று கேட்க இவர், "அந்நூலை இதுவரையில் அடியேன் பார்த்ததில்லை; அடியேன் வருவித்துக்கொடுக்க வேண்டுமென்று சொன்னமையால் மேலகரம் சண்பகக் குற்றுலக்கவிராயர் அதனையும் திருக்குற்றுலப்புராண ஏட்டுப் பிரதியையும் வருவித்துக் கொடுத்தார். அந்தாதியை ஒருமுறை முற்றும்படித்துப் பொருள்வரையறை செய்துகொண்டு பாடம் சொன்னேன். அந்நூல் பலவகையிலும் சிறப்புற்று விளங்குகின்றது. புராணத்தையும் படிப்பித்துக் கேட்டுவருகிறேன்; அதுவும் அழகாகவே இருக்கின்றது" என்றுசொன்னர். அப்பால் நெடுநேரம்வரையில் சில அரிய விஷயங்களைப் பற்றிய ஸல்லாபம் நடந்துகொண்டே யிருந்தது. "நேரமாய் விட்டது; தாங்கள் பூஜையை முடித்துக்கொண்டு இங்கே * பூஜையின் தரிசனத்திற்கு வரவேண்டும்" என்று தேசிகர் சொல்லவே இவர் எழுந்து மீட்டும் பணியத்தொடங்கியபொழுது இவருக்குச் சிரமம் ஏற்படக்கூடாதென்று நினைத்து, † "ஒருமுறை வந்தனம் செய்ததேபோதும்; பிற்பாடும் செய்யவேண்டாமென்று முன்

---

* மடத்தில் நடைபெறும் சபாபதி பூஜை முதலியன.

† வந்தவுடனும் விடைபெற்றுக்கொண்டு போகும்பொழுதும் பணிதல் அடியார்கள் வழக்கம்.

னமே நாம் சொல்லியிருக்கிறோமே? இனி அவ்வண்ணமே நடக்க வேண்டும்'' என வற்புறுத்தினர்.

திருவாவடுதுறைக் காட்சிகள்

அப்பால் இவர் ஸ்நானஞ் செய்தற்குத் தெற்குக் * குளப் புரைக்கு வந்தார். வருங்காலத்தில் பெரிய தம்பிரான்கள், குட்டித்தம்பிரான்கள், மடத்துக் காரியஸ்தர்கள், ஓதுவார்கள் முதலியவர்கள் நல்வரவு கூறி இவரைப் பாராட்டித் தொடர்ந்து வந்து அனுப்பினர்கள். இவர் போவதற்குமுன் குளப்புரையில் வெந்நீர் போடப்பட்டிருந்தது. ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜைக்குச் சென்றார். அங்கே வடபாலுள்ள பூஜை மடத்தில் தம்பிரான்களிற் சிலர் நியமத்தோடு பூஜைசெய்தலையும் சிலர் பூஜையை முடித்துக்கொண்டு புறப்படுதலையும் பூஜைசெய்வதற்குச் சிலர் அங்கே வருதலையும் அவரவர்களுக்குத் தக்கபடி தூய்மையோடுகூடிய † தவசிப் பிள்ளைகள் வேண்டிய பணிவிடை செய்து கொண்டு நிற்றலையும் படித்துறையின் மேல்பாலுள்ள பூஜை மடத்தில் வரிசையாக இருந்து சிலர் உடையவர் பூஜை செய்து கொண்டிருத்தலையும் தவசிப்பிள்ளைகள் தனித்தனியே மல்லிகை முல்லை முதலிய நறுமணங் கமழும் மலர் வகைகளையும் வில்வ முதலிய பத்திரவகைகளையும் வேறு வேறாக வெள்ளித்தட்டங்களில் தொகுத்து வைத்துக்கொண்டு ஒவ்வொருவருக்கும் உதவுதலையும் அங்கேவந்து செல்லும் அயலார்கள் பக்தியோடு அவர்களுக்கு அஞ்சலிசெய்து கொண்டு ஒதுங்கிச் செல்லுதலையும் தம்பிரான்களுட் பெரியவர்களைக் காணுமிடத்து ஏனையோர் வந்தனம் செய்துவிட்டேனும் அஞ்சலிசெய்து விட்டேனும் செல்லுதலையும் நிருமாலியங்கள் கால்படாத இடங்களிற் குவியல் குவியலாகச் சேர்க்கப்பட்டிருத்தலையும் கண்டு விம்மிதமுற்று ஒன்றும் தோன்றாமல் நின்றேன். பின்பு அங்கே வந்த ஒருவரைக் கண்டு, ''இந்தக் காட்சி ஆனந்தத்தை விளைவித்

---

* குளக்கரையிலுள்ள ஒரு கட்டிடம்; புரை - வீடு; இது மலைநாட்டு வழக்கு.

† தவசிப்பிள்ளைகள் - தம்பிரான்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பவர்கள்; தவசி - துறவி; ''ஐயம் புகூஉந் தவசி'' (நாலடி.) இப்பெயர் பிற்காலத்தில் மடைத்தொழில் செய்பவர்கள் முதலியோர்க்கு வழங்கலாயிற்று.

கின்றது. இந்த மாதிரி எந்த இடத்தும் இதுவரையிற் கண்ட தில்லே'' என்று சொன்னேன். அதற்கு அவர், ''என்ன ஆச்சரியம் இது? மேல்பக்கத்துள்ள அபிஷேகக் கட்டளைமடம், வடக்கு மடம், அதன் பின்பாலுள்ள குளப்புரை, மறைஞான தேசிகர் கோயில், காவிரியின் படித்துறை ஆகிய இடங்களைப் பார்த்தால் உமக்கு இன்னும் ஆச்சரியமாக இருக்குமே'' என்று சொன்னர்.

அப்பால் நான் ஸ்நானம் செய்துவிட்டு நியமங்களை முடித்துக்கொண்டு ஆகாரம் செய்யவேண்டிய இடத்திற்குச் சென்றேன். சென்று பார்த்தபொழுது அங்கே ஸம்ஸ்கிருத வித்துவான்களிற் சிலரும், சங்கீதவித்துவான்களிற் சிலரும் தனித்தனியே இருவர் மூவராக இருந்து சுலோகங்களைச் சொல்லிக் கொண்டும் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும் இடையிடையே சுப்பிரமணிய தேசிகருடைய அருமையான குணவிசேடங்களைப் பாராட்டிக் கொண்டும் இருந்தார்கள். 'இங்கே வந்தமையால் இனி நமக்கு யாதொரு கவலையும் இராது' என்று நினைந்து நான் அவர்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே நின்றேன். அப்போது அவர்களுள் ஒருவர் என்னை அழைத்து, ''காலையில் நீர் பிள்ளையவர்களோடு ஸந்நிதானத்தைக் காண்பதற்கு வந்தபோது நாங்கள் அங்கிருந்தோம். ஸந்நிதானம் உம்மைப் பரீட்சித்த காலத்தில் நீர் உத்தரம் சொன்னதை யெல்லாம் கேட்டோம். மிகவும் சந்தோஷமாக இருந்தது. பிள்ளையவர்களிடம் நீர் பாடங்கேட்டுக் கொண்டு வருவதும் ஸந்நிதானத்தை இன்று பார்த்ததும் உம்முடைய பெரும்பாக்கியமென்றே எண்ணுகிறோம். அவர்கள் நேத்திரங்களுக்கு நீர் எப்பொழுது விஷயமானீரோ அப்பொழுதே பாக்கியசாலி ஆனீர். அவர்களுடைய அன்புக்கு நாங்கள் பாத்திரமான காலந்தொடங்கிப் பரம ஸௌக்கியத்திலேயே இருந்து வருகிறோம். இப்பொழுது யாதொரு கவலையும் எங்களுக்கு இல்லை. பிறருடைய போக்கியதையை அறிந்து ஸம்மானஞ் செய்தலில் அவர்களுக்குச் சமானமாக இப்பொழுது யாரிருக்கிறார்கள்?'' என்று சொன்னர். அவற்றை யெல்லாம் காதுகுளிரக் கேட்டேன். சிலர் என்னைச் சில பாடல்கள் சொல்லிப் பொருள் சொல்லச் சொன்னார்கள். அங்ஙனமே சொல்லி ஆகாரம் செய்துவிட்டு அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

தம்பிரான்கள் சந்தேகம் கேட்டது

அங்ஙனம் இருக்கையில் என்னை அழைப்பதற்கு மடத்திலிருந்து ஒருவர் வந்தார். உடனே விரைந்து சென்றேன். அப்பொழுது ஒடுக்கத்தின் தென்பாலுள்ள மேல்மெத்தையில் மேற்குமுகமாக ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் வீற்றிருந்தார். பிள்ளையவர்களோடு * குமாரசாமித் தம்பிரான் முதலிய சில தம்பிரான்களும் வேறு சிலரும் அயலில் இருந்தார்கள். அவர்கள் எழுத்திலக்கணம் முதலிய ஐந்தினையும் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங்கேட்டு முடித்தவர்கள். ஆதலால், அவற்றிலுள்ள மேற்கோள் சிலவற்றிற்கு இப்புலவர் சிகாமணிபாற் பொருள்வினவிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதப்பொழுது இன்ன இன்ன விஷயத்தைக் கேட்க வேண்டுமென்று தேசிகர் சொல்ல அப்படியே அவை அவர்களால் கேட்கப்பட்டன. அவர்கள் வினவுதலும் அதற்குப் பிள்ளையவர்கள் யாதொரு வருத்தமுமின்றி விடையளித்தலும் எனக்கு வியப்பை விளைவித்தன. அப்பால் தண்டியலங்காரத்துள்ள அஷ்டநாகபந்தச் செய்யுளை அடக்குவதற்கு நாகங்களைப் போட்டுக் காட்டும்படி குமாரசாமித் தம்பிரான் கேட்டபொழுது பிள்ளையவர்கள் எழுதுகோலையும் கடிதத்தையும் வருவித்துப் போடத்தொடங்குமுன் நான் ஒரு கடிதத்தில் அந்த நாகங்களைப் போட்டுக் காட்டினேன். நான் வலிந்து செய்த செய்கை பெருந்தவறுக இருந்தும் அதனைப் பொறுத்துக்கொண்டு, "நீர் இதை எங்கே கற்றுக்கொண்டீர்?" என்று இவர் கேட்டார். "செங்கணம் விருத்தாசலரெட்டியாரவர்களிடத்துத் தெரிந்து கொண்டதுண்டு. இன்னும் ரதபந்தம் முதலியவற்றையும் போடுவேன்" என்று சொன்னேன்.

சுப்பிரமணிய தேசிகர் எனக்குப் புத்தகங்கள் அளித்தது

அப்பொழுது இவர் அன்பு பாராட்டியதைக்கண்டு சுப்பிரமணிய தேசிகர் என்னைப் பார்த்து, "பிள்ளையவர்களிடம் நீர் நன்றுகப் படித்துக்கொள்ளும். அவர்கள் இங்கு வரும் பொழுது உடன்வாரும். உமக்குவேண்டிய அனுகூலங்கள் கிடைக்

* இவர் ஸ்ரீ ஆதிகுமரகுருபரஸ்வாமிகள் சரித்திரத்தை இயற்றுவித்த ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரானவர்களால் நியமிக்கப்பெற்று அவர்களுக்குப் பிற்காலத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக இருந்து விளங்கியவர்.

கும். உமக்கு வேண்டிய புஸ்தகங்களெல்லாம் கொடுப்போம்'' என்று சொல்லிவிட்டு உடனே எழுந்து சென்று அங்கே மேல்பக்கத்திலிருந்த பீரோ ஒன்றைத் திறப்பித்துக் கம்பரந்தாதி, துறைசையந்தாதி, அமுதாம்பிகைபிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், கலைசைச் சிலேடைவெண்பா முதலிய பிரபந்தங்களுள் ஒவ்வொன்றிலும் நந்நான்கு அச்சுப்பிரதிகளுக்குக் குறையாமல் எனக்கு அளித்து, ''இவற்றில் ஒவ்வொன்றை நீர் எடுத்துக்கொண்டு மற்றவற்றை உடன்படிக்கிற பிள்ளைகளுக்குக் கொடும்'' என்றார். பின்பு என்னைச் சில பாடல்களை இசையுடன் சொல்லச் செய்து கேட்டுவிட்டு இப்புலவர்திலகரை நோக்கி, ''நேர்ந்த காலங்களில் சங்கீதத்திலும் இவரைப் பழக்க வேண்டும்'' என்று சொன்னார். அவர் அங்ஙனம் பிரீதியைப் புலப்படுத்தியது என்பால் இயல்பாகவே அன்பு வைத்திருந்த என் ஆசிரியருக்கு அதனை எத்தனையோ மடங்கு அதிகமாக்கிவிட்டது. அக்குறிப்பை அந்த நிமிஷத்திலேயே அறிந்து நான் உள்ளம் குளிர்ந்தேன்.

திருவாவடுதுறையிலிருந்து பாடஞ்சொல்லும்படி வேண்டப்பட்டது

பின்பு தேசிகர் இவரை நோக்கி, ''இங்கே சில தம்பிரான்களுக்கும் வேறு சிலருக்கும் பாடங்கேட்க வேண்டுமென்னும் ஆவல் அதிகமாக இருக்கிறது. பாடஞ்சொல்வதற்கு நமக்குச் சிறிதும் நேரமில்லை. வித்துவான்கள் பலரும் பிரபுக்கள் பலரும் அடிக்கடி வருதலால் அவர்களை முறையே விசாரித்து அனுப்புவதற்குத்தான் பொழுது சரியாக இருக்கிறது. ஆதலால் வழக்கம் போலவே இங்கிருந்து அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி பண்ணவேண்டும். அது நமக்கும் சந்தோஷத்தை விளைவிக்கும். சிரமத்தைப் பாராட்டக்கூடாது'' என்றார். உடனே இவர், ''ஸந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படியே செய்யக் காத்திருக்கிறேன்'' என்று சொல்லவே அங்கே உடன் வந்திருந்த ஆறுமுகத்தாபிள்ளை திடீரென்று எழுந்து அஞ்சலி செய்து நின்று, ''ஐயா அவர்களை அழைத்துக்கொண்டு சென்று பட்டீச்சுரத்திற் சில காலம் வைத்திருந்து அடியேனுடைய குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சில குறைகளைத் தீர்த்துக்கொள்ள எண்ணியிருக்கிறேன். அதன் பொருட்டுத்தான் மாயூரம் சென்றேன். சிலகாலம் பட்டீச்சுரத்தில் இருந்துவரும்படி ஐயா அவர்களுக்குக் கட்டளையிட்டருள

வேண்டும்'' என்று வணக்கத்துடன் விண்ணப்பம் செய்துகொண்டார். தேசிகர், ''அப்படியே செய்யலாம்; பட்டீச்சுரம் போய்ச் சில காலம் இருந்துவிட்டு இங்கே வந்துவிடவேண்டும்'' என்று கூறவே, எழுந்து பணிந்து விடைபெற்று விபூதிப்பிரசாதம் வாங்கிக்கொண்டு இவர் புறம்போந்து வீதிக்கு வந்தார்.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டது

அப்பொழுது அங்கே படித்துக்கொண்டிருந்த தம்பிரான்களுட் சிலர் இக்கவிஞர் பெருமானைச் சூழ்ந்துகொண்டு *கோட்டுமாங்குளம் வரையில் வந்து வழியனுப்பினர்கள். அவர்களில் ஒருவர் என்னை அணுகி, நான் பாடங்கேட்டிருந்த நூற்பெயர்களை வினவி அவற்றிலுள்ள சில கடினமான பாடல்களுக்குப் பொருள் கேட்டார். கேட்டவற்றிற்குத் தெரிந்த அளவு சொல்லிவிட்டு, 'இந்த மகானை அடுத்துச் சில மாதங்களாகப் பாடங் கேட்டதனல்லவோ ஒரு பொருளாக நினைந்து இவர் நம்மைக் கேட்கிறார்! காலையிற் சுப்பிரமணிய தேசிகரவர்களைப் பார்த்தோம்; அவர்களுடைய பிரீதியையும் பெற்றோம்' என்றெண்ணி மகிழ்ந்தேன். இவரிடம் பல வருடங்கள் இருந்து படித்துக் கொள்ளவேண்டுமென்று எனக்கு இருந்த எண்ணம் பின்னும் உறுதிபெற்றது. உடன் வந்தவர்கள், ''விரைவில் இங்கே வரவேண்டும்'' என்று இவரைக் கேட்டுக்கொண்டு விடைபெற்று மீண்டும் சென்றார்கள்.

---

4. பட்டீச்சுரம் போய் வந்தது

திருவிடைமருதூர் சென்றது

வண்டியில் இவர் ஏறியவுடன் இவர் உத்தரவின்படி அதில் நான் ஏறச் செல்லுகையில் பஞ்சநதம் பிள்ளை விரைந்து வந்து என் கையில் இருந்த புதிய புத்தகங்களையெல்லாம் வெடுக்கென்று பறித்தார்; ''படிப்பதற்கு எனக்கு வேண்டாமா?'' என்றேன். ''ஒவ்வொன்று இருந்தால் உமக்குப் போதுமே. மற்றவைகளை வைத்துக் கொண்டு இப்போது நீர் என்ன செய்யப்போகிறீர்?'' என்று

---

* திருவாவடுதுறையின் மேற்கேயுள்ளதொரு பெரிய தாமரைக்குளம்.

சொல்லி என்னுடைய விருப்பத்தின்படி ஒவ்வொன்றைக் கொடுத்துவிட்டு மற்றவைகளைத் தாம் வைத்துக்கொண்டார்.

அப்பால் இவர் திருவிடைமருதூருக்குச் சென்றார். போகும் பொழுது வண்டியில் அநேக விஷயங்கள் இவருடைய சம்பாஷணையால் தெரியவந்தன.

திருவிடைமருதூரிலுள்ள ஓரன்பர் வீட்டிற்குச் சென்று அங்கே இவர் தங்கினர். அனுஷ்டானம் செய்துவிட்டுப் பின்பு சயனித்துக்கொண்டார். மிகவும் தளர்ந்த சரீரமுடையவராதலால் மடத்திலிருந்து பாடஞ்சொல்லும் பொழுதல்லாத சமயங்களிலெல்லாம் இவர் பெரும்பாலும் சயனித்துக்கொண்டே பாடம் சொல்லுதல் முதலியவற்றை வழக்கமாக வைத்துக்கொண்டிருந்தார். நான் இவர் அருகில் இருந்தேன். அப்பொழுது சில நூல்களில் உள்ள அரிய பாடல்களைச் சந்தர்ப்பத்துடன் கூறிப் பொருளும் சொன்னதன்றித் திருவாவடுதுறை மடத்தில் கச-ஆம் பட்டத்திலிருந்த வேளூர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகருடைய இயல்புகளையும் அவரைச் சார்ந்து தாம் அடைந்த பயன்களையும் சொன்னார்; அவர்பால் தாம் தெரிந்துகொண்ட * சில செய்யுட்களைச் சொல்லி என்னை எழுதிக்கொள்ளும்படி செய்து அவற்றின் பொருளையும் என் மனத்திற் படும்படி அறிவுறுத்தினர். அப்பால்,

(வெண்பா)

" † பண்டுமைக்கோர் பால்கொடுத்த பண்பளைக்கோ டீச்சரத்துக்
கண்டுமயல் கொண்டவன்முள் கண்ணுற்றுய்—ஞண்டொடியாய்
வந்திநின்றார் வந்தரக்கேண் மாலையெங்கண் மாதினுக்குத்
தந்திநின்றார் தந்திடென்று தான் "

என்பதை எழுதிக்கொள்ளச் செய்து அதற்குப் பொருளும் கூறச்சொன்னார். அச்செய்யுள் முடிந்ததுபோல முடியாது

---

* இச்செய்யுட்களையும் இவற்றின் பொருள்களையும் இச்சரித்திரத்தின் முதற்பாகத்தில் ஈசு-கூ-ஆம் பக்கங்களிற் காணலாம்.

† பால் - இடப்பாகத்தை. கோடீச்சரம் - கொட்டையூர். கொண்டு - கொண்டேன். கண்ணுற்று - கண்டு. ஆய் ஒண்டொடியாய் - ஆராயப்படுகின்ற ஒள்ளிய வளையலையுடைய பார்வதீ. வந்தி - பணிவாயாக. நின்று ஆர்வம் தர கேள். மாலை - மயக்கத்தை. தந்தி - தந்தாய். நின்றார் தந்திடு என்று ஆர்வம் தரத் தானைக் கேள். இச்செய்யுள் நிலைகூற்று.

நிற்றலே அறிந்து நான் பொருள் சொல்லுதற்குத் தடுமாறினேன். இவர் புன்னகைகொண்டு அச்செய்யுளுக்குப் பொருள் கூறி, "இச் செய்யுள் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப் பெற்றது; அவரால் நூற்றுக்கணக்கான தனிச்செய்யுட்கள் இதைப்போலவே செய்யப்பட்டுள்ளன" என்று அவருடைய கவித்துவசக்தியையும் வரலாற்றையும் பாராட்டிக் கூறினர்.

தியாகராச செட்டியாரைப் பார்த்தது

திருவிடைமருதூரிலிருந்து மறுநாட்காலையிற் புறப்பட்டுச் செல்லுகையில் நான், "தியாகராச செட்டியாரவர்களைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு அதிகமாக இருக்கிறது. இப் பொழுது கும்பகோணம் வழியாகவே பட்டீச்சுரத்திற்கு விஜயம் செய்யக்கூடுமோ?" என்று கேட்டேன். இவர், "தியாகராசை முன்னம் பார்த்திருப்பதுண்டா?" என்று கேட்டார். "அவர் களை இதற்குமுன்பு பார்த்ததில்லை; கும்பகோணத்திற்கு உத்தம தானபுரம் சமீபமாதலின் அவர்களுடைய புகழ் அந்தப்பக்கத்தில் மிகவும் பரவியிருந்தது. தமிழிற் சிறந்த பயிற்சியுடையவர்களென் றும் நன்றுகப் பாடம் சொல்லுபவர்களென்றும் பலர் அவர் களைப்பற்றி அடிக்கடி பேசிக்கொள்ளுவார்கள்; நான் கேட்டிருக்கி றேன். தக்கவர்களிடம் பாடம் கேட்கவேண்டுமென்னும் ஆவ லுடனிருந்த நான் அவர்களுடைய கீர்த்தியைக் கேட்டு அவர்க ளிடமே பாடம் கேட்க வேண்டுமென்று விரும்பியதுண்டு. அதற்குரிய சௌகரியங்கள் எனக்கு வாய்க்காமையால் வேறுசில ரிடம் படித்துக் கொண்டிருந்தேன். அப்பால் நாளாக நாளாக அவர்களையும் அவர்களைப் போன்ற பலரையும் படிப்பித்து முன் னுக்கு வரச்செய்தவர்கள் ஐயா அவர்களென்றும் இங்கே படித் தால் அடையும் பயன் அதிகமாக இருக்குமென்றும் செட்டியா ரவர்கள் மாணாக்கரும் பாபநாசம் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தவருமான இராகவையர் முதலியவர்கள் சொல்லக் கேட்ட தன்றி இவ்விடத்துப் புகழை அதன்பின்பு பலரிடத்தும் கேட்டு நன்றுகத் தெரிந்துகொண்டுதான் இங்கே வந்தேன்" என்று சொன்னேன். இவர், "தியாகராசு சிறந்த புத்திமான்; நல்ல பயிற்சியும் தெளிவும் சொல்வன்மையும் உள்ளவன். இன்று அவனைப் பார்த்து விட்டுத்தான் நான் பட்டீச்சுரம் போகக்

கூடும். ஆதலால் நீரும் அவனைப் பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே கும்பகோணம் சென்று ஸ்ரீ சக்கரபாணிப்பெருமாள் கோயிலின் தெற்கு வீதியிலுள்ள அவருடைய வீட்டுத் திண்ணையில் ஏனையவர்களோடும் இருந்தார். விசாரித்தபொழுது வீட்டில் செட்டியார் இல்லை யென்று தெரியவந்தது.

உடனே அவரிடம் படித்துக்கொண்டிருந்த திருக்கருகாவூர் மாதவிவனம் பிள்ளையென்பவர் ஓடிப்போய்ச் சொல்லச் செட்டியார் வேகமாக வந்து, ''ஏன் இங்கே இருக்கிறீர்கள்? உள்ளே போய் இருக்கவேண்டாமா?'' என்று சொல்லி வந்தனம் செய்துவிட்டு எழுந்து பஞ்சநதம் பிள்ளையைப் பார்த்து, ''சீக்கிரம் சமையலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று சொன்னார். அப்போது இவர், ''பட்டீச்சுரத்திற்கு இன்று அவசியம் போக வேண்டியிருக்கிறது. (என்னைச் சுட்டி) காலையில் ஆகாரம் செய்து கொள்வது இவருக்கு வழக்கம்; ஆதலால், சீக்கிரம் ஆகாரம் பண்ணுவித்தால் நலமாக இருக்கும்'' என்று சொன்னார். செட்டியார் உடனே தமக்குத் தெரிந்த ஒரு வீட்டுக்கு என்னை அனுப்பி ஆகாரம் செய்வித்தார்.

நான் ஆகாரம் செய்துகொண்டு வந்தபின்பு செட்டியார் என்னைச் சுட்டிப் பிள்ளையவர்களை நோக்கி, ''இவர் யார்?'' என்றார். ''இவர் சில மாதங்களாக என்னிடம் படித்து வருகிறார். சில பிரபந்தங்கள் பாடம் கேட்டிருக்கிறார்'' என்று சொல்லி விட்டு உடனே இவர் புறப்பட்டார். செட்டியாரும் வேறு சிலரும் உடன் வருவாராயினர்.

தியாகராச செட்டியாரோடு சம்பாஷித்தது

செட்டியார் என்னை நோக்கி, ''என்ன பாடங்கேட்கிறீர்?'' என்றனர். இவர், ''எங்கேனும் ஓரிடத்திலிருந்து கேட்கலாமே'' என்றார். அப்பாற் போய் ஸ்ரீ கும்பேசுவரர் கோயிலில் மேற்கு வாயிற்கு நேரே உட்புறத்துள்ள ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்தி கோயிலின் முன் மண்டபத்தில் இவர் அமர்ந்தார். மற்றவர்களும் உடன் இருந்தார்கள். தியாகராச செட்டியார், ''ஏதேனும் ஒரு பாடலைச் சொல்லி அதற்குப் பொருளும் சொல்லும்'' என்று என்னைக் கேட்டார். நான் துறைசையந்தாதியிலிருந்து,

(கட்டஷக் கலித்துறை)

* "அண்ணு மலையத் தனைஞானக் கோமுத்தி யண்ணலையாம்
அண்ணு மலையத் தனைவினை யாலயர்ந் தாந்தமிழை
அண்ணு மலையத் தனையாண்ட வாபல் லமரருக்கும்
அண்ணு மலையத் தனையொப்ப வாவென் றறைந்திலமே"

என்ற பாடலைச் சொல்லிப் பொருளுஞ் சொன்னேன். அப்பால் அவருடைய விருப்பத்தின்படி வேறு நூல்களிலிருந்தும் சில பாடல்களைக்கூறிப் பொருள் சொன்னேன். கேட்ட செட்டியார், "துறைசை யந்தாதியைப் பாடஞ் சொல்லுவீரா?" என்று வினவினர். அவருடைய கல்விப்பெருமையையும் புகழையும் தக்கவர்கள் சொல்ல நன்றாகக் கேட்டறிந்தவனுதலால் திடீரென்று விடை சொல்லுவதற்கு ஒன்றும் தோன்றாமல் சும்மா இருந்து விட்டேன். அப்போது இப்புலவர் கோமான், "நீ அந்த அந்தாதிக்குப் பொருள் கேட்ட தில்லையோ?" என்று செட்டியாரைக் கேட்டார். அவர், "திருச்சிராப்பள்ளியிலிருந்து நான் கும்பகோணம் வரும்வரையில் நீங்கள் இயற்றிய நூல்களுக்குப் பொருள் கேட்டிருக்கிறேன். அப்பால் நீங்கள் செய்த நூல்கள் சாதாரணமானவைகளாக இருந்தால் நான் ஒருவாறு தெரிந்து கொள்ளுவேன்; பாடமும் சொல்லுவேன். இந்த மாதிரியான யமகம் திரிபுகளாயிருந்தால் பெரும்பான்மையான பாகங்கள் எனக்கு விளங்கா. நீங்கள் திருவாவடுதுறை மடத்துக்குச் சென்று பழகுவதற்கு முன்பு பாடிய பாடல்களின் இயல்பு வேறு; அப்பாற் செய்த நூல்களின் இயல்பு வேறு. அவற்றுள் ஒவ்வொன்றிலும் அரிய விஷயங்களும், † சாஸ்திரக் கருத்துக்களும் நிரம்பியுள்ளன. ஏதேனும் ஒரு பிரபந்தத்தை எடுத்துக்கொண்டுவந்து யாரேனும் இதற்குப் பொருள் சொல்லுங்களென்று கேட்டாலும், சந்தேக நிவர்த்தி செய்யவேண்டுமென்றாலும் எனக்கு ஒன்றும் புரிவதில்லை. துறைசை யந்தாதியைப்

---

* திருவண்ணுமலைக்குத் தலைவனே; ஞானக் கோமுத்தி - திருவாவடுதுறை. யாம் அண்ணும். அலை அத்தனை வினையால் - அலைகளையுடைய கடலைப் போன்ற அவ்வளவு வினைகளால்; தமிழை அள்ள மலையத்தனை - அகத்திய முனிவரை; மலையம் - பொதியின் மலை. அண்ணு - தலைவனே. மலைய - போர் செய்தற்கு. ஆதலால் யாம் எவ்வாறு உய்வோமென்றபடி.

† சாஸ்திரம் - சைவசித்தாந்த சாஸ்திரங்கள்.

போன்ற நூல்களைப் பாடங்கேட்டே தீரவேண்டும். திருச்சிராப் பள்ளிச் * சதாசிவம் பிள்ளை சில மாதங்களுக்கு முன்பு இதைத் தூக்கிக்கொண்டு என்னிடம் வந்து பாடஞ்சொல்ல வேண்டு மென்றுசொன்னான். படித்துப்பார்த்தேன்; ஒன்றும் புரியவில்லை. ஐயா அவர்களிடத்திலேயே போய்க் கேட்டுக்கொள்ளென்று அனுப்பினேன். அவன் வந்திருக்கக் கூடுமே அவனைப் போல இன்னும் யாராவது இதைத் தூக்கிக்கொண்டு வந்து உபத்திரவம் செய்தால் இவரிடம் தள்ளிவிடலாமே என்று எண்ணித்தான் இப்பொழுது இவரைக் கேட்டேன்" என்று சொன்னார். அப் போது உடனிருந்த ஆறுமுகத்தா பிள்ளை, "ஐயா அவர்கள் முன்னமே பட்டீச்சுரத்திற்கு ஒரு பதிற்றுப்பத்தந்தாதி செய் திருக்கிறார்கள். அந்த நூலை நீங்கள் கேட்டதுண்டா?" என்றார். தியாகராச செட்டியார், "கேட்டதில்லை; அதில் ஒரு செய்யுள் ஞாபகமிருந்தாற் சொல்லவேண்டும்" என்று ஆவலுடன் கேட் கவே ஆறுமுகத்தா பிள்ளை,

(விருத்தம்)

"வரைமா திருக்கு மொருகூறு மழுமா னணிந்த திருக்கரமும்
அரைசேர் வெங்கை யதளுடையும் அரவா பரணத் தகன்மார்பும்
விரைசேர் கொன்றை முடியுமறை மேவு மடியும் வெளித்தோற்றி
நரைசேர் விடையான் றிருப்பழைசை நகரி லருளப் பெற்றேனே"

என்ற செய்யுளைச்சொன்னார். சொல்லியபொழுது செட்டியார் அவரையும் பிள்ளையவர்களையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஆறு முகத்தா பிள்ளையை நோக்கி, "இந்தப்புஸ்தகம் உங்களிடம் இருக்கின்றதா? இருந்தாற் கிழித்துத் † திருமலைராயனாற்றிற் போட்டுவிடுங்கள். இந்தப் பாடலையாவது இதிலுள்ள வேறு பாடலையாவது, படித்த யாரிடத்தும் ஐயா செய்ததாக இனிச் சொல்லவேண்டாம்; சொன்னால் ஐயா செய்ததேயன்றென்று தணியைக் கீழேபோட்டுத் தாண்டிப் பிரமாணம் செய்துவிடு வார்கள். இப்போது ஐயா அவர்கள் செய்கிறநூல்களோ தனிப் பாடல்களோ 'தங்கந்தங்கமாக' இருக்கின்றன; அர்த்தபுஷ்டி அமைந்தனவாகவும் கம்பீர நடையுள்ளனவாகவும் இருக்கின்றன. அவைகளைக் கேட்ட காதுக்கு இந்த அந்தாதிச் செய்யுட்கள் நன்

---

*. இவர் சித்தாந்த தீபிகையின் பத்திராசிரியராயிருந்த ஜே. எம். நல்லு சாமி பிள்ளையின் உறவினரில் ஒருவர்.

† இது பட்டீச்சுரத்திற்குத் தென்பால் ஓடும் ஒருநதி.

முகவே இரா. இந்தச் சமயத்திலேயா இந்தப்பாட்டை நீங்கள் சொல்லுகிறது! இனி மறந்தேவிடுங்கள். மறுபடியும் சொல்லுகிறேன்: புத்தகத்தைப் பரிகரித்துவிடுங்கள்'' என்று வற்புறுத்திக் கூறினர்; பின்பு பிள்ளையவர்களை நோக்கி, ''இப்படியும் ஒரு நூல் நீங்கள் பாடினதுண்டா? எதன்பொருட்டு இதைச்செய்தீர்கள்? செய்ததாக ஞாபகம் இருக்கின்றதா? சொல்லுங்கள்'' என்று கேட்டார். ''என்னப்பா மேலே மேலே ஓடுகிறாய்? இந்த மாதிரியான நூலை நான் செய்திருக்கக்கூடாதா? முன்பு * தம்பியின் தந்தையாராகிய நமச்சிவாய பிள்ளையவர்கள் காலத்தில் நான் செய்து அரங்கேற்றியதுண்டு. சாதாரணமான ஜனங்களுக்கு இப்படி இருந்தால்தானே தெரியவரும்? கடினமாக இருந்தால் அவர்கள் அறிவார்களா? மனத்திற் படுமா?'' என்று பக்குவமாக விடையளித்தார். செட்டியார், ''ஆனல் சரி. தங்களுக்கு அகௌரவம் உண்டாகக்கூடாதென்று சொன்னேனேயன்றி வேறொன்றுமில்லை. அது கிடக்கட்டும். நேரமாய்விட்டது. புறப்படவேண்டும்'' என்று சொன்னர்.

இங்ஙனம் சொல்லிவிட்டுச் செட்டியார் எழுந்து என்னைப் பார்த்து, ''நீர் நன்றாகப் படிக்கவேண்டியவற்றைப் படித்துக் கொள்ளும். கூட இருப்பதையே பெரும்பயனாக நினைந்து சிலரைப்போல் வீணே காலங்கழித்துவிடக் கூடாது; சிலகாலம் இருந்துவிட்டுத் தெரிந்துவிட்டதாகப் பாவித்துக்கொண்டு சொல்லாமல் ஓடிப்போய்விடவும் கூடாது. இப்படிப் பாடம் சொல்லுபவர்கள் இக்காலத்தில் யாரும் இல்லை. உம்முடைய † நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன்'' என்று சொல்லி இவரிடம் விடைபெற்றுத் தம் வீடு சென்றார்.

செட்டியாருடைய வார்த்தைகள் எனக்கு அமிர்த வர்ஷம் போலே யிருந்தமையால் அவற்றைக் கருத்திற் பதித்து அங்ஙனமே நடந்து வரலானேன்.

பட்டீச்சுரம் முதலியவற்றின் வரலாறு

அப்பால் இவர் பட்டீச்சுரத்திற்குப் புறப்பட்டார். போகும் பொழுது இடையிலுள்ள தாராசுரமென்னும் தலத்தின் பெருமை

---

* தம்பியென்றது ஆறுமுகத்தாபிள்ளையை.

† கும்பகோணம் காலேஜ் வேலையை எனக்குச் செய்வித்ததையே நன்மையாகக் கருதுகிறேன்.

யையும்* சோழன் மாளிகையின் வரலாற்றையும் சத்திமுற்றம், பட்டீச்சுரம் முதலிய தலங்களின் பெருமைகளையும் சொல்லிக் கொண்டே போனார். ஊர் சேர்ந்தவுடன் ஆறுமுகத்தா பிள்ளை தம்முடைய வீட்டிற்கு எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

பட்டீச்சுரம் முதலியவற்றின் பெருமை

பட்டீச்சுரம் முதலிய ஊர்களின் காட்சி என் கண்ணைக் கவர்ந்தது. பட்டீச்சுரமும் திருச்சத்திமுற்றமும் சோழவரசர்களுடைய அரண்மனையிருந்த இடத்தின் பக்கத்தன. பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், வடதளி அல்லது வள்ளலார்கோயில், முழையூர், பாற்குளம்,† கோபிநாதப்பெருமாள்கோயில், திருமேற்றளி முதலிய பலதலங்களைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக்கிற 'பழையாறை' என்னும் ஒரு பழையநகரம் பண்டைக் காலத்தில் இவ்விடத்தே நல்ல நிலைமையில் இருந்ததுண்டு; அது சோழவரசர்களுடைய பழைய இராசதானி. அது தனியே கீழைப்பழையாறையென்ற சிறியதோர் ஊராக இப்பொழுது தென்பாலுள்ளது; பெரிய புராணத்தில்,

"பாரி னீடிய பெருமைசேர் பதி‡ பழை யாறை"

(அமர்நீதி. க)

எனக்கூறி யிருப்பது இத்தலமே. இந்த நகரத்தினிடையே திருமலைராயனென்னும் ஓராறு ஓடுகின்றது. அது நானூறு வருடங்களுக்கு முன்பு திருமலைராயன்பட்டினத்தே இருந்து அரசாட்சி செய்த மாலைப்பாடித் திருமலைராயனென்னும்

---

* சோழனுடைய அரண்மனையிருந்த இடம் இப்பொழுது சோழன் மாளிகை என்னும் ஊராக இருக்கின்றது; பட்டீச்சுரத்துக்கு வடவெல்லையாகவுள்ளது. அங்கே இரண்டு சுவர்கள் கூடிய மூலையொன்று கக - நிலையுள்ள ஒரு கோபுரத்தின் உயரமுடையதாக இருந்ததை இளமையில் நான் பார்த்திருக்கிறேன். அதனை அரண்மனைச் சுவரென்று யாவரும் சொல்வார்கள். பிற்காலத்தில் அதனை இடித்து ஏலம் போட்டுவிட்டார்கள்.

† இப்பொழுது கோணப்பெருமாள் கோயிலென்று வழங்கும்; தக்ஷிணத்துவாரகையென்றும் சொல்லப்படும்.

‡ இந்த நகரத்தின் பெருமையையும் இதன்பால் வாழ்ந்த சோழ அரசர்கள் இன்னார் இன்னரென்பதையும் அவர்கள் புகழையும் யாப்பருங்கலவிருத்தி, வீரசோழியமென்பவற்றின் உரைகளிலுள்ள மேற்கோள்களாலும் சிலாசாசனங்களாலும் அறியலாகும்.

அரசனால் வெட்டுவிக்கப்பட்டதென்பர். இதன்கண் பழமையான கட்டிடங்கள் இருந்ததைத் தெரிவிக்கும் பல அடையாளங்களே இப்போது காணலாம். பட்டீச்சுரத்தின் வடக்குவீதியே திருச்சத்திமுற்றத்தின் தெற்குவீதியாகவுள்ளது. மதுரையை அடைந்து பாண்டிய அரசனுடைய அவைக்களத்தைச் சேரமுடியாமற் சில தினம் காத்திருந்து,

"நாராய் நாராய் செங்கா லராய்"

என்ற தொடக்கத்தையுடைய ஓர் அகவலைப் பாடி அரசனைக்கண்டு பரிசுகளைப் பெற்றுவந்த சத்திமுற்றப் புலவரென்ற சிறந்த தமிழ்க் கவிஞர் மிக்க செல்வத்தோடு இருந்து விளங்கிய இடம் இந்தச் சத்திமுற்றமே; "எம்மூர்ச்சத்திமுற்றத்து வாவியுட் டங்கி" என அச்செய்யுளிற் குறிக்கப்பட்ட வாவி (தடாகம்) இப்பொழுதும் இவ்வூர்ச் சிவாலயத்தின் தென்புறத்தே நல்ல நிலைமையிலுள்ளது.

தஞ்சைமா நகரத்திலிருந்து முன்பு அரசாண்ட அச்சுதப்ப நாயக்கரென்பவரிடம் மந்திரியாக இருந்து பல தருமங்களையும் அவரைக் கொண்டு நடத்துவித்ததன்றி வடமொழி தென்மொழிப் புலவர்களையும் சங்கீத வித்துவான்களையும் ஆதரித்த வரும் திருவையாறு திருநாகேச்சுரமென்னும் ஸ்தலங்களின் வடமொழிப் புராணங்களைத் தக்க கவிஞர்களைக்கொண்டு தமிழிற் செய்வித்தவருமாகிய ஸ்ரீ கோவிந்ததீக்ஷிதரென்னும் அந்தணர் பெருமான் வசித்த இடம் பட்டீச்சுரம் ஸ்ரீ தேனுபுரேசர் ஆலயத்தின் தென்பாலுள்ளதாகிய அக்கிரகாரத்தின் மேல்சிறகிலுள்ள வீடுகளில் ஒன்று. அவருடைய பூஜைமடம் திருமலைராயனாற்றின் வடகரையில் மிகப்பெரிதாக இருந்து பின்பு இடிந்து கிடந்தது; இப்போது அதுவும் இருந்த இடம் தெரியாமற்போயிற்று; கோவிந்த தீக்ஷிதருடைய பிம்பமும் அவருடைய பத்தினியார் பிம்பமும் கைகுவித்திருக்கும் வண்ணமாகப் பட்டீச்சுரத்தின் கோயிலில் தேவியின் சந்நிதானத்தின் தென்புறமாக உள்ளன

இக்கவிஞர் கோமான் பட்டீச்சுரம் சென்ற தினத்தின் மாலையில் திருமலைராயனாற்றிற்கு என்னை அழைத்துச்சென்றார். இடையிலே காணப்படும் இடங்களையெல்லாம் சுட்டிக்காட்டி அவற்றின் சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டே போனார். கோயிலில் ஸ்ரீ ரிஷபதேவர் சந்நிதியினின்றும் முற்றும் விலகியிருத்தலைக்கண்டு அதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். "திருச்சத்திமுற்

றத்திலிருந்து முத்துப்பந்தரின்கீழே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கோபுரவாயில் வழியே எழுந்தருளும் கோலத்தைத் தாம் பார்த்தற்கு விரும்பி ஸ்ரீ தேனுபுரேசர் விலகியிருக்கும்படி கட்டளையிட அதைக் கேட்டு ரிஷப தேவர் விலகியிருந்தனரென் பது பழைய வரலாறு'' என்று இவர் விடையளித்தார்.

தமிழபிமானிகள் முதலியோர் வரவு

பட்டீச்சுரத்திற்கு இவர் வந்திருத்தலை யறிந்து அவ்வூரி லுள்ள தமிழபிமானிகளும் கும்பகோணத்திலும் அயலூர்களி லும் இருந்த வித்துவான்களும் பிரபுக்களும் அடிக்கடி வந்து இவரோடு அளவளாவி இன்புறுவதன்றிப் படித்தவற்றில் தமக் குள்ள ஐயங்களைப் போக்கிக்கொண்டும் பல அரிய நூற்பொருள் களை அறிந்துகொண்டும் செல்வார்கள். தியாகராச செட்டியாரும் தம்முடைய மாணாக்கர்களோடு விடுமுறை நாட்களில் வந்து பார்த்துவிட்டுச் செல்வார்; பழைய மாணாக்கர்களாகிய தஞ்சைக் காலேஜ் உபாத்தியாயர் ஐயாசாமிபிள்ளை, இராமகிருஷ்ணபிள்ளை முதலியவர்களும். சுந்தரப்பெருமாள் கோயில் அண்ணாசாமி ஐயர், கதிர்வேற்பிள்ளை முதலியவர்களும் வந்து தெரிந்துகொள்ள வேண்டியவற்றைத் தெரிந்துகொண்டு போவார்கள். யார் வந்தா லும் தமிழ் நூல்களைப் பற்றிய சம்பாஷணைகளே நடைபெறும்.

முற்கூறிய சோழன்மாளிகையென்னும் ஊரில் மிக்க பூஸ்திதி யுள்ளவரான இரத்தினம்பிள்ளையென்னும் கனவான் அக்காலத் தில் இவருடைய ஓய்வு நேரங்களில் வந்து திருவிளையாடற் புராணம் முதலிய சில காப்பியங்களையும் சில பிரபந்தங்களையும் பாடங்கேட்டுச் செல்லுவார். சத்திமுற்றப் புலவர் மரபைச் சார்ந்த ஒருவர் அப்பொழுது வந்து நாலடியார் முதலிய நீதிநூல் களையும் அஷ்டப் பிரபந்தம் முதலிய பிரபந்தங்களையும் நாள்தோ றும் முறையே இவரிடத்திற் பாடங் கேட்டுவந்தார்.

ஒரு வேளை இரண்டு வேளை இருந்து செல்பவர்களுக்கும், சில தினமிருந்து செல்பவர்களுக்கும், ஸ்திரமாக உடன் இருப்பவர் களுக்கும் வேண்டிய உணவு, இடவசதி முதலியவற்றை ஆறு முகத்தா பிள்ளை அமைத்து நன்முகக் கவனித்துக் கொள்வார். நான் ஆறுமுகத்தா பிள்ளையின் உதவியால் அவ்வூர் அக்கிரகாரத் தில் ஒரு வீட்டில் சாப்பிட்டு வந்தேன்.

ஆறுமுகத்தா பிள்ளையின் அன்பு

திருமலைராயனூற்றிற்குத் தென்பாலுள்ளதாகிய * மேலைப் பழையாறை யென்னும் ஊர் ஆறுமுகத்தா பிள்ளைக்கே உரியதாக இருந்தது. அவ்வூர் தெற்கிலும் வடக்கிலும் இரண்டு நதிகளை எல்லையாகப் பெற்று விளங்குவது. ஊரின் நான்கு பக்கங்களிலும் வாழைப்புதர்கள் அடர்ந்த படுகைகளும் நடுவில் நன்செய் வயல்களும் இடையிடையே தென்னந்தோப்புக்களும் கமுகந்தோட்டங்களும் மாந்தோப்புக்களும் உண்டு. தென்னை பலா முதலிய மரங்கள் அடர்ந்துள்ள ஒரு தோட்டத்தினிடையில் மிகவும் அழகியதான கட்டிடமொன்று இருந்தது. ஓய்வுநேரங்களிலெல்லாஞ் சென்று இவர் அன்பர்களுடன் அதில் தங்கியிருப்பார். அங்கே பாடமும் நடைபெறும். நல்ல கனிவர்க்கங்களையும் இளநீர்களையும் இனிய பிறபொருள்களையும் ஆறுமுகத்தா பிள்ளை அடிக்கடி வருவித்து அங்கே இவருக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கச் செய்வார். நிலவளத்தால் அவை சுவை முதிர்ந்தன வாய் உண்பவர்களுக்கு இன்பத்தை உண்டுபண்ணும்.

எந்தக்காலத்தும் எனக்குப் பாடம் நடந்துகொண்டேயிருக்கும்; பாடம் சொல்லாவிட்டால் இவருக்குப் பொழுது போகாது. வருகிறவர்கள் தாம் கேட்க வேண்டியவற்றைக் கேட்டு முடித்த பின் நான் கேட்கும் பாடங்களையும் கேட்டு மகிழ்ந்து செல்வார்கள். ஒவ்வொருநாளும் பிற்பகலில் அயலூரார் வருவார்கள். அப்பொழுதப்பொழுது தாம் கேள்வியுற்ற பல செய்திகளை எங்களுக்கு இவர் சொல்வதுண்டு.

ஸ்ரீ சிவஞானமுனிவர் காஞ்சிப்புராணம் அரங்கேற்றிய வரலாறு

ஒருநாள் சிவஞானமுனிவரைப்பற்றிச் சொல்லுகையில் அவர் காஞ்சிப்புராணம் பாடி அரங்கேற்றியபொழுது நிகழ்ந்த ஒரு வரலாற்றை அடியில் வருமாறு கூறினர்.

மணியப்பமுதலியார் முதலிய செங்குந்தச்செல்வர்களுடைய உதவியினால் சிவஞான முனிவர் காஞ்சீபுரத்தில் இருந்துவந்தார். தாம் இயற்றி நிறைவேற்றிய காஞ்சிப்புராணத்தின் முதற்காண்டத்தை அப்போது அம்முனிவர் அரங்கேற்றத் தொடங்கினர். கச்சியப்ப முனிவரும் வேறு பல வித்துவான்களும் செல்வர்களும்

* இது பழையாறையென்னும் ஊருக்கு மேல்பால் இருத்தலால் இப் பெயர்பெற்றது.

வந்திருந்தனர். சிவஞான முனிவர்பால் அழுக்காறு பூண்ட சிலர், 'இவர் ஒருநூலைப் பாடுவதும், அதனை அரங்கேற்றுவதும் அதனை நாம் பார்த்திருப்பதும் சரியா? இவரது புராணத்தில் ஏதேனும் குறைகளைக்கூறி இவருக்குள்ள மதிப்பைக் குறைக்கவேண்டும்' என்று நினைந்து கோயில் ஓதுவார் ஒருவரை அழைத்து ஊக்கி விட்டு ஆட்சேபனை செய்யும்படி ஏவினர்கள். அவர் கல்விப்பயிற்சி யில்லாதவர்; தேவாரம்மட்டும் ஓதுபவர்; அவர்கள் சொல்லிய தற்கு உடன்பட்டுத் தைரியத்தோடு சபையில் வந்திருந்தனர்.

அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. விநாயகர் வணக்கங்களாகிய முதல் இரண்டு செய்யுட்களைப் படித்துப் பொருள் கூறியபின் மூன்றுவது செய்யுளாகிய ஸ்ரீ நடராஜப்பெருமான் துதியை முனிவர் படிக்க ஆரம்பித்தார்; "சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளும்" என்று தொடங்கும் அதனைக் கூறிவிட்டுப் பொருள் சொன்னர். ஓதுவார், "முதலில் * சங்கையா ஆரம்பித்தீர் கள்?" என்று இழிப்புத் தொனியோடு கேட்டார். உடனே சிவ ஞான முனிவர், "பாடலில் இருப்பது சங்கு என்னும் சொல்தான். உம்முடைய வாக்கில்தான் சங்கை உண்டாயிற்று" என்று விடை சொன்னர். ஓதுவார் மீட்டும் ஆட்சேபிக்கத் தொடங்கி, "முத்தி நகரங்கள் ஏழிலொன்றும் பிரசித்தஸ்தலமுமாகிய இந்தக்காஞ்சி புரத்திற்குப் புராணம் பாடவந்த நீங்கள் எப்படிச் சிதம்பரம் நடராஜருக்கு முதலில் துதி கூறலாம்? ஸ்ரீ ஏகாம்பரநாதர் துதியையல்லவோ முதலில் சொல்லவேண்டும்? எல்லாத் தலபுரா ணங்களிலுமுள்ள அமைப்பைப் பாருங்கள்" என்றார். அப் போது சிவஞான முனிவர் ஸ்ரீ சபாபதியின் பெருமை முதலியவற் றைக் கூறித் தக்க காரணங்களை எடுத்துரைத்தும், ஓதுவார் அவற்றை அங்கீகரியாமல் மேன்மேலும் விதண்டாவாதம் செய் தார்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டே அருகில் இருந்த கச்சியப்பமுனிவர் சிவஞான முனிவரைநோக்கி அஞ்சலிசெய்து, "இவரை அடியேன்பால் விட்டுவிடுக; நான் பார்த்துக்கொள்ளு கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓதுவாரைப்பார்த்து, "இங்கே நேரே வந்து இரும்; நீர் யார்? ஏதேனும் படித்ததுண்டா?" என்று கேட்டார்.

---

* சங்கை - ஐயம்.

ஓதுவார்: நான் இத்தலத்து ஓதுவார்களுள் ஒருவன்; ஏதோ ஒருவாறு தமிழ் கற்றிருக்கிறேன்.

கச்சி: உமக்குத் தேவாரம் தெரியுமா?

ஓதுவார்: நன்றாகத் தெரியும். என்னுடைய வேலையே தேவாரம் ஓதுவதுதானே? இதைக்கூடக் கேட்கவேண்டுமா?

கச்சி: அப்படியானால் இந்தத்தலத்துத் தேவாரத்தைச் சொல்லும் பார்க்கலாம்.

ஓதுவார் ஊக்கத்துடன் சொல்லத்தொடங்கி வழக்கம் போல் * 'திருச்சிற்றம்பலம்' என்றார். உடனே கச்சியப்ப முனிவர் கம்பீரமாக, "நிறுத்தும்; உம்மைக் காஞ்சீபுரத் தேவாரம் சொல்லச்சொன்னால் திருவேகம்பமென்று சொல்லாமல் திருச்சிற்றம்பலமென்பதை ஏன் சொல்லுகின்றீர்?" என்று கேட்டார்.

ஓதுவார்: எல்லாத் தலங்கட்கும் அது பொதுவானது.

கச்சி: இங்கே புராணத்திற்கூறப்பட்ட முறைக்குக் காரணமும் அதுவே. பல சைவநூல்களைப் படித்திருந்தால் இந்த மரபு உமக்குத் தெரிந்திருக்கும்.

உடனே ஓதுவார் தலைகவிழ்ந்து, "அடியேன் செய்த குற்றத்தை க்ஷமிக்கவேண்டும்" என்று வருந்திக் கேட்டுக்கொண்டு ஒடுக்க வணக்கத்துடன் இருப்பாராயினர்.

இவ்வரலாற்றைக் கேட்டு எல்லோரும் வியப்புற்றனர்.

நான் திருநாகைக் காரோணப் புராணப்பாடங் கேட்டது

நான் கொண்டுபோன பிரபந்த நூல்கள் கேட்டு முற்றுப் பெற்றன. மேலே கேட்பதற்குப் பாடபுத்தகம் என் கையில் இல்லாமையை அறிந்து ஒருநாள் ஆறுமுகத்தா பிள்ளையிடமிருந்த திருநாகைக்காரோணப்புராணத்தை வாங்கிக் கொடுத்து இவர் பாடஞ் சொல்லி வந்தார். சொல்லி வருகையில் அந்நூலில் தினந்தோறும் முதலில் நூ0-பாடல்களுக்குக் குறையாமல் க00-செய்யுள் வரையிலும், இரண்டுவாரங் கழித்த பின்பு க00-செய்யுள் முதல் உ00 வரையிலும் கேட்டு வந்தேன். ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள பொருள்நயங்களையும் சொன்முடிபு பொருள் முடிபுகளையும், மேற்கோள்களையும் அப்பொழுது அப்பொழுது சொல்லி என் பயத்திற் படிப்படி செய்துவந்தார். விரைந்து

* தேவாரம் சொல்லும்போது முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிவிட்டு ஆரம்பித்தலே முறை.

நான் படித்துச் செல்லுவேனுயின் அவ்வாறு படித்தலைத் தடுத்து ஒவ்வொரு செய்யுளின் சுருக்கத்தையும் நல்ல நடையிற் சொல்லும் படி செய்து வருவார்; இச்செய்யுளால் அறிந்து மனத்தில் வைத் துக்கொள்ள வேண்டியவை இன்னவை யென்றும் சொல்லுவார். இங்ஙனம் இவர் பழக்கிவந்தமை கவனிப்பையும் ஆராய்ச்சி முறையையும் எனக்கு உண்டுபண்ணியது. அந்தப் புராணத்தால் அறிந்துகொண்ட காப்பியச் சுவைகள் பலவாதலின், தமிழ்ப் பாஷையின் பெருமையையும் அந்நூலை இயற்றிய இவருடைய கல்வி மேம்பாட்டையும் அறிந்து இன்புறுவேனுனேன். அந் நூல் முற்றுப் பெற்றபின் இரண்டாவது முறையும் அதைக் கேட்க விரும்பினேன். அப்படியே படிக்கச்செய்து அரிய பகுதி களை விளக்கிக்கொண்டே வந்தார். இரண்டாமுறை பாடம் கேட்டதில் பின்னும் பல புதிய விஷயங்கள் தெரியவந்தன. சில தினங்களில் அந்நூல் முற்றுப்பெற்றது.

மாயூரப் புராணம் பாடம் கேட்டது

அப்பால் ஆறுமுகத்தாபிள்ளையிடமிருந்த மாயூரப் புரா ணத்தை வாங்கிப் பாடங்கேட்டு வந்தேன். உதயகாலந் தொடங்கியே பாடம் ஆரம்பிக்கப்படும். மணி எட்டானுல் காலையாகாரம் செய்துகொண்டு வரும்படி என்னை இவர் அனுப்பி விடுவார். காலை ஆகாரமானவுடன் பத்து அல்லது பதி னெரு மணிவரையிற் பாடம் நடைபெறும். மாலையில் திருமலை ராயனுறு சென்று அனுஷ்டானம் செய்துவிட்டுத் திரும்புகை யில் ஆகாரம் செய்துகொண்டு வரும்படி அக்கிரகாரத்திலுள்ள வீட்டினுள் என்னை அனுப்பி நான் உண்டுவரும்வரையில் அவ் வீட்டுத் திண்ணையில் தனியே இவர் இருப்பார். இவரிருத்தலை வீட்டுக்காரர் தெரிந்துகொண்டு தீபங்கொணர்ந்து வைத்தால் உண்டு; இல்லாவிட்டால் இருட்டிலேதான் இவர் தனியேயிருப் பார். அங்ஙனம் அமைந்த பேரன்பை என்னவென்று சொல்லு வேன்! இப்படி ஒருவர் இருந்ததாகக் கதையிலும் கேட்டதில்லை. அப்பால் ஆறுமுகத்தா பிள்ளையின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று பாடம் சொல்லுவார்.

மாலையனுஷ்டானத்தை முடித்த பின்பு ஆறுமுகத்தாபிள்ளை கந்தபுராணத்தைப் பாராயணஞ் செய்வது வழக்கம்; அதற்காகப் புத்தகமுங் கையுமாக அவர் வந்தவுடன் என் பாடம் நிறுத்தப்

படும். முதல் நாள் விட்ட இடத்திலிருந்து அப்புராணத்தை அவர் படிக்கத் தொடங்குவார். இவர் அதிலுள்ள கடினமான பாகத் திற்கு மட்டும் அவர் விரும்பும்பொழுது பொருள் சொல்லுவார். அது கூ-மணிவரையில் நடைபெறும். அதுவும் எனக்குப் பேருதவி யாக இருந்தது. அதற்கு மேலே இவருக்கும் ஆறுமுகத்தா பிள்ளை முதலியவர்களுக்கும் வேறு வேறிடங்களிற் படுக்கைகள் போடப்படும். முக்கியமானவர்கள் அங்கங்கே சென்று சயனித் துக் கொள்வார்கள். அப்படியே சயனம் பண்ணிக்கொள்ளும் பாவனையோடு இவர் வந்து படுத்துக்கொள்வார். இவருடைய பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் விளக்கின் அருகில் இருந்து இவருக்கு நித்திரை வரும்வரையில் நான் பாடம் கேட்டுக்கொண் டிருப்பேன். இவர் நித்திரைசெய்யத் தொடங்குவாராயின் நானும் அந்தச் சமயம் பார்த்து மெல்ல எழுந்து தூங்கச்செல்வேன்.

அதன்பின்பு கஉ-அல்லது ஒரு மணிக்குமேல் ஆறுமுகத்தா பிள்ளை விழித்து எழுவார். எழுந்தவுடன் வீட்டின் வெளிப்புறத்தே சென்று திண்ணையைப் பார்த்துவிட்டு வருவார்; திண்ணையில் யாரேனும் உண்பதற்கு வந்திருக்கிறார்களா என்று பார்த்து யாரேனும் இருந்தால் அவர்களை உள்ளே அழைத்துச்சென்று உண்பிப்பது பகற்காலத்திலும் இரவிலும் அவரது வழக்கம். பின்பு எழுப்பி உண்ணுதற்கு இவரை அழைத்துச் செல்வார். உண்பதற்கு இவர் அமர்ந்தவுடன் யாவரும் அமர்ந்து பேச் சின்றியே ஆகாரம் செய்வார்கள். எத்தனைபேர்கள் வந்தாலும் பந்தி போசனத்துக்கு உரியவர்களை உடன்வைத்துக்கொண்டு உண்பித்தலும் புறத்தேயிருந்து உண்ணுதற்கு உரியவர்களை அங் கங்கே வைத்து உண்பித்தலும் அவ்வீட்டு வழக்கம். ஆறுமுகத்தா பிள்ளை திருவாவடுதுறை மடத்தில் உணவளிக்கும் முறையைப் பந்தியிலிருந்து நன்றாக அறிந்தவராதலால் அங்கே நடத்தும் முறைப்படி எல்லாம் விமரிசையாக நடைபெற வேண்டுமென்பது அவரது கருத்து. அந்தப்படியே தினந்தோறும் நடைபெற்று வரும்; "வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணுதான்" என்னும் முதுமொழிப் பொருள் ஆறுமுகத்தா பிள்ளையிடம் நன்றாக அமைந்திருந்தது

ஒவ்வொரு தினத்தும் இரவில் பிள்ளையவர்கள்போய் உண் பதற்கு அமர்ந்தவுடன் நான் புத்தகமும் கையுமாகச் சென்று

பிள்ளையவர்கள் பக்கத்திலிருந்து படிக்கவேண்டியவற்றைப் படித்துப் பொருள்கேட்க வேண்டுமென்பது ஆறுமுகத்தாபிள்ளையின் கருத்து எந்தக் காலத்தும் இவர் தடையின்றிப் பாடம்சொல்லுவார். என்றைக்கேனும் தூக்கத்தால் அங்ஙனம் செய்வதற்குத் தவறிவிட்டால் அன்று ஆகாரம் செய்துகொண்ட பிறகாவது மறுநாட் காலையிலாவது ஆறுமுகத்தாபிள்ளை என்னைக் கோபித்துக்கொள்வார். "இவருக்கு ஏன் பாடஞ்சொல்ல வேண்டும்? படிப்பில் சிறிதேனும் இவருக்கு ஊக்கம் இல்லையே. சமயம் பார்த்து இவர் கேட்கவேண்டாமா? அஜாக்கிரதையுடன் இருக்கின்றீரே! இப்படிப்பட்டவருக்கு நீங்கள் பாடஞ் சொல்லுவதில் எனக்கு இஷ்டமில்லை. அப்பால் உங்களுடைய சித்தம்போலே செய்யலாம்" என்று சில சமயங்களிற் பிள்ளையவர்களிடம் சொல்லுவார். அதனோடு நில்லாமல் இவர் முன்னிலையில் என்னையும் கண்டிப்பார். இந்நிகழ்ச்சிகளைக் காணும் இக் கவிஞர்பிரான் யாதொன்றும் சொல்லாமலே சும்மா இருந்துவிடுவார். இவர் குறிப்பை யறிந்து நானும் மௌனமாகவே இருப்பேன்.

இங்ஙனம் எந்தக்காலத்தும் இவரிடம் தடையின்றிப் பாடங் கேட்டு வந்தமையினாலேதான் என் அனுபவத்தை,

".....அங்
கைத்தலவா மலகமென மாணவர்கள் பலர்க்குமின்ன
கால மென்ன
தெத்தகைய பெருநூலு மெளிதுரைத்துப் பயனுறுத்தும்
இணையி லாதோன்"

"அருத்திமிகு மெனையருகி லிருத்தியருந் தமிழ்நூல்க
ளறைந்து"
(உறையூர்ப் புராணச் சிறப்புப் பாயிரச் செய்யுட்கள்)

"அருத்திகூ ரெனையரு கிருத்திநூல் பலசொற்
றல்ல லகற்றிய நல்லிசைப் புலவனும்"
(மீ. பிரபந்தத்திரட்டு, உரிமையுரை)

என்ற பாடல்களாகப் பிற்காலங்களில் வெளியிடலானேன்.

ஆறுமுகத்தாபிள்ளை என் புத்தகத்தை ஒளித்து வைத்தது

ஒருநாள் இரவில் இவர் உண்ணும்பொழுது நித்திரையின் மிகுதியாலும் ஒருவரும் எழுப்பாமையாலும் நான் சென்றுபாடம்

கேட்கத் தவறினேன். வழக்கப்படியே மறுநாள் விடியற்காலம் ஐந்து மணிக்கு எழுந்த பிள்ளையவர்களுடன் ஆற்றிற்குச் சென்று காலைக் கடனை முடித்துக்கொண்டு வந்து படித்தற்கு மாயூரப் புராணத்தைப் பார்த்தேன். வைத்த இடத்தில் அது காணப்பட வில்லை. வேறொன்றையாவது எடுத்து வந்து படிக்கலாமென்றெண் ணிச் சென்று என் புத்தகக்கட்டைப் பார்த்தேன். அதுவும் வைத்த இடத்திலே காணப்படவில்லை. மிக்க கவலையோடு அச் செய்தியை இவர்பால் தெரிவித்தேன். உடனே இவர் தேடிப் பார்க்கும்படி அங்கிருந்த வேலைக்காரர்களிடம் சொன்னர். அவர்கள் மிக முயன்று தேடியும் கிடைக்கவில்லை. நான் வருத்த மடைந்து, 'பாடம் கேட்க இயலவில்லையே' என்று முகவாட் டத்தோடு நின்றேன். என்னுடைய நிலைமையை அறிந்த இவரும் வருத்தமுற்றனர். "இந்தச் செய்தியைத் தம்பி (ஆறுமுகத்தா பிள்ளை)யிடம் சொல்லலாமே" என்றார்.

அவரோ ஒவ்வொரு தினத்தும் காலையில் எட்டு மணிக்கு மேற்பட்டுத்தான் துயிலுணர்வது வழக்கம். உணர்ந்தாலும் உடனே விழித்து எழுந்திருக்கமாட்டார். "துரைசாமி!" என்று தம்முடைய பிள்ளையை அழைப்பார். அச்சமயம் பார்த்துக் கொண்டே அயலில் வந்து நின்று குமாரர் ஏனென்பார். அவ் வொலியைக் கேட்ட பின்பே தம்முடைய கண்ணைத் திறந்து அவர் முகத்தைப் பார்த்துவிட்டு எழுந்து புறத்தே வருவார். ஆதலால், அந்தச் சமயத்திற் சென்றால் அவர் என்ன சொல்லு வாரோவென்று அஞ்சி நான் பிள்ளையவர்களுடைய அருகி லேயே இருந்துவிட்டேன். இவரும் அங்ஙனம் செய்தது நல்ல தென்று சொன்னர்.

வீட்டினுள்ளே யிருந்து குறிப்பிட்டகாலத்தில் எழுந்து ஆறுமுகத்தாபிள்ளை வெளியே வந்தார். நான்பாடம் கேளாமற் சும்மா இருத்தலை அவர் பார்த்து, "ஏன் இவர் சும்மா இருக் கிறார்? சுத்த சோம்பேறி. இவருக்குப் பாடம் சொல்லவேண் டாம்" என்று கடிந்து சொல்லிவிட்டு அப்பாற்செல்லத் தொடங் கினர். அப்பொழுது நான் ஒன்றும் சொல்லவில்லை. இக்கவி ஞர்கோமான், "இவர் வைத்த இடத்திற் புத்தகம் காணப்பட வில்லையாம். அதைத் தம்பி வருவித்துக் கொடுத்தால் நல்லது" என்று சொன்னர். உடனே அவர் ஹுங்காரம் செய்துவிட்டு,

"படிக்கும் புத்தகத்தைக்கூடச் சரியாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லையே. நான் எண்ணியபடியேதான் இவர் இருக்கிறார். ஐயா அவர்கள் இவரியல்பை அறிந்துகொள்ளவில்லை" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அப்போது, "எப்படியாவது புத்தகத்தை வருவித்துக் கொடுக்க வேண்டும்" என்று இவர் அவரை வற்புறுத்தினர் அப்பால் மீண்டு வந்து நின்று இவரை நோக்கி ஆறுமுகத்தாபிள்ளை, "இவ்வளவு காலமாகச் சிரமப்பட்டு இரவும் பகலும் இவருக்குப் பாடம் சொல்லி வருகிறீர்களே. இவரும் படிப்பவர்போலவே பாவனை பண்ணிக்கொண்டிருக்கிறாரே. இவருக்குத் தமிழில் ஏதேனும் பயிற்சி ஏற்பட்டுள்ளதா? பல நூல்களைப் பாடங்கேட்டிருக்கிறாரே; புதிதாக ஏதேனும் ஒரு செய்யுள் செய்வாரா? அந்தப்பழக்கம் இவருக்கு இருக்குமென்று நான் நம்பவில்லை. நான் போய் வருவதற்குள் ஏதேனும் ஒரு செய்யுள் செய்து முடிப்பாராயின் புத்தகத்தை எப்படியாவது வருவித்துக் கொடுப்பேன். அது கிடைக்காவிடின் விலைக்காவது வேறொன்று வாங்கிக் கொடுப்பேன்" என்று சொல்லவே பிள்ளையவர்கள் ஒரு செய்யுள் இயற்றும்படி எனக்குக் கட்டளையிட்டார். பிறருதவியின்றிச் செய்யுள் செய்கின்றேனு வென்பதை அறிந்துகொள்வதற்குக் காவலாக ஒருவரை வைத்துவிட்டு ஆறுமுகத்தா பிள்ளை வெளியேசென்றார்.

பின்பு என்னை அழைத்துக்கொண்டு இக்கவிஞர்பிரான் வேறிடம் செல்லும்பொழுது காவலாக இருந்தவரும் உடன் வந்தார். நான் ஆலோசித்து ஒரு வெண்பாவை முடித்து அதனை இவருக்குச் சொல்லிக் காட்ட நினைந்து, "சீர்மருவு மாறுமுகச் செம்மலே" என்று தொடங்கினேன். உடனே இவர் என்னை மேலே சொல்லாதபடி கையமர்த்தி, "பூஜைக்கு இடம் பண்ணும்படி தவசிப்பிள்ளைக்குச் சொல்லி வாரும்" என்று உடனிருந்தவரை அனுப்பிவிட்டு என்னை நோக்கி, "நீர் சொல்லிய தொடர் 'மாறுமுகச்செம்மலே' என்றும் பிரிக்கப்படுமே! அதையறிந்து தம்பி கோபித்துக்கொள்வாரே. வெறுவாயை மெல்லுகிறவருக்கு அவல் கிடைத்தது போலவேயாகுமன்றே இது? விபரீதமான அர்த்தமாகும்படி ஒருபொழுதும் பாடலாகாது. ஜாக்கிரதையாகச் செய்யுளைச் செய்து முடிக்கவேண்டும்" என்று சொல்லி நான் இயற்றியதாகவே தாம் ஒரு வெண்பாவை விரைவிற் பாடிமுடித்து அதனை எனக்குச் சொல்லத் தொடங்கி

னர். தொடங்கிய பொழுது, பாதுகாப்பாளர் விரைந்து வருதலை யறிந்து ஒவ்வொரு வார்த்தையாகவே விரைந்து சொன்னர். அவற்றை முறையே அறிந்து அவ்வெண்பாவைப் பாடஞ்செய்து கொண்டேன். அச்செய்யுள்,

"ஆறுமுக பூபாலா வன்பிலார் போலென்பால்
மாறுமுகங் கொண்டான் மதிப்பவரார்—கூறுதமிழ்
வாசிக்க வந்தவென்மேல் வன்மமென்ன யாவருமே
நேசிக்கு மாதையைசெய் நீ"

என்பது.

இதற்குள் ஆறுமுகத்தாபிள்ளையும் வந்துவிட்டார். உடனே நான் சென்று இச்செய்யுளை அவரிடம் பக்குவமாகச் சொல்லிக் காட்டினேன். கேட்ட அவர் முதலிலிருந்த கோபம் தணிந்தவராய் என்னை நோக்கி, "நீர் இனி நன்றாகப் பாடங்கேட்பதுடன் செய்யுள் செய்வதிலும் பழக்கம் வைத்துக்கொள்ளும். அஜாக்கிரதையாக இருந்துவிடவேண்டாம்" என்று சொல்லிவருகையில் என்னுடைய பாடபுத்தகத்தையும் புத்தகக்கட்டையும் அங்கே ஒரு வேலைக்காரன் கொணர்ந்து வைத்தான். அவர் அந்தப் புத்தகக் கட்டை முன்னிருந்த இடத்தில் வைக்கும்படி சொல்லி அவன் பாற் கொடுத்தனுப்பிவிட்டு மாயூரப்புராணத்தைமட்டும் என்னிடம் கொடுத்தார்.

அதனை வாங்கிக்கொண்டு சென்று அதற்குள் அங்கே வந்திருந்த இவரிடம் பாடங்கேட்கத் தொடங்கினேன். தொடங்குமுன் நிகழ்ந்தவற்றை விவரமாக இவர் விசாரித்தார்; சொன்னேன். அப்பால் செய்யுள் செய்யும் முறைகளைச் சிறிது நேரம் வரையில் எனக்கு விளங்கச் சொல்லிவிட்டுப் பாடஞ்சொல்ல ஆரம்பித்தார். அன்றைத்தினம் தொடங்கிச் செய்யுள் செய்யும் முறைகளிற் சில எனக்குத் தெரியவந்தன. அவற்றைக் கொண்டு நாளடைவில் நான் பலவிஷயங்களை ஊகித்து அறிந்து கொண்டேன்.

ஒரு போலிப் புலவர் வந்து சென்றது

பின்பு இவருடைய கட்டளையின்படி சவேரிநாதபிள்ளையும் மாயூரத்திலிருந்து பட்டீச்சுரம் வந்து உடன் இருப்பாராயினர். அவரோடு சேர்ந்தே மாயூரப்புராணத்தைப் பாடங்கேட்டு வந்

தேன். ஒருநாள் இரவில் முன்வேளையில் அப்புராணத்தில் அகத்தியர் பூசைப்படலம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பாகத்தி லுள்ள செய்யுட்களை முறையே படித்து வந்தோம். தமிழாசிரிய ராகிய அகத்தியரைப்பற்றிய செய்திகளைக் கூறும் பகுதியாதலின் இவருடைய புலமைத்திறம் அதில் நன்றாக அமைந்திருந்தது. உடனிருந்தவர்கள் கேட்டு ஆனந்தபரவசரானார்கள்.

அச் சமயத்தில் வாயிற்படிக்கு வெளியே ஒருவர் வந்து நின் றார். அவர் தலையில் பெரிய பாகையொன்றை வைத்துக்கொண் டிருந்தார். முகத்தில் நீண்ட மீசையும் * புஸ்தியும் அவருக்கு இருந்தன. தேகத்தில் நெடுஞ்சட்டைமட்டும் அணிந்துகொண்டு கையில் நீண்ட பிரம்பொன்றை வைத்திருந்தனர். புராணம் கேட் டுக்கொண்டிருந்தமையால் அங்ஙனம் நின்றவரை ஒருவரும் கவனிக்கவில்லை. அவரைப் போன்றவர்கள் அடிக்கடி யாசகத்திற் காக வந்து அவ்வீட்டின் புறத்தே நிற்பதுண்டு. அங்கே வந்த வர் தம்மை ஒருவரும் கவனிக்கவில்லையென்பதை அறிந்து கனைத் தார். அவ்வொலியைக்கேட்ட எங்கள் ஆசிரியர், "யார்?" என்று கேட்கவே அவர், "நான் தஞ்சைமா நகரத்திலுள்ள தமிழ் 'வித்துவாம்ஷன்'; என்னை ஆதரித்த சிவாசி மகாராசா இறந்து போய் விட்டமையால் என்னுடைய அருமை அறிந்து ஆதரிப்ப வர் அங்கே யாருமில்லை. என்ன செய்கிறது! குடும்பத்தைக் காப்பாற்றவேண்டுமே. அதனால் இந்த நாட்டிலுள்ள பல பிரபுக் களிடம் போய் என்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டி அவர் களாற் கிடைக்கும் பொருளைக்கொண்டு காலங்கழிக்கிறேன். நான் வரகவி. அறம்வைத்துப் பாடுகிற வழக்கமும் எனக்கு உண்டு. அப்படியே பாடிச் சிலருக்குத் தீங்கும் விளைவித்திருக்கிறேன் அத னாலே என்னைக் கண்டால் யாரும் பயப்படுவார்கள். இந்த நாட்டி லுள்ள தனவான்களுக்கெல்லாம் என்னிடத்தில் விசேஷமான மதிப்புண்டு" என்றனர். கேட்ட இவர் புன்முறுவல் செய்து கொண்டு, "அப்படியானால் இங்கே வந்து இரும்" என்று ஓரிடத் தைச் சுட்டிக்காட்டினர். அவர் அங்கே வந்து இருந்தார்.

அவருடைய அறிவின்மையைக் குறித்து மந்தணமாகப் பேசிக்கொண்டிருந்த நாங்கள் பின்பு அதை விடுத்துப் படிக்கத்

* மீசையின்மேலுள்ள முக ரோமம்; ஹிந்துஸ்தானிச்சொல்.

தொடங்கினேம். எப்படியாவது தம்முடைய புலமையை வெளிப் படுத்தற்கு அதுதான் நல்ல சமயமென்று அவர் நினைத்தார்.

அநேக இடங்களிற் சில பிரபுக்கள் பிறரை ஏதாவது படிக் கச் சொல்லித் தாம் சயனித்துக்கொண்டிருந்து கேட்பதைப் பார்த்தவராதலால் இவ்விடமும் அவற்றைப்போன்ற ஓரிடமென் றும் பிள்ளையவர்களே அவ்வீட்டுத் தலைவரென்றும் அவர் எண்ணி விட்டார். நாங்கள் படித்துக்கொண்டு செல்லும் பாடல்களுக்கு இடையிடையே பொருள் சொல்லவும் தொடங்கினர். அப் பொருள் சிறிதும் பொருத்தமுள்ளதாகவே இல்லை. நாங்கள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மேலே படித்துக்கொண்டு சென்றோம். அவரும் சிறிதேனும் அச்சமும் சலிப்பும் இல்லாமல் பொருத்தமில்லாத சொற்களை இடையிடையே பொழிந்து கொண்டே இருந்தார். அப்போது சவேரிநாத பிள்ளை அவரை நோக்கி, "ஏன் இடை யிடையே முழக்கிக்கொண்டிருக்கிறீர்? சும்மா இரும்" என்று சொன்னர். வந்தவர் எங்களை நோக்கி, "நீங்கள் பொருள் சொல்லாமற் படித்துக்கொண்டே போவது நன்றாகவில்லை. அர்த்தம் சொல்லிக்கொண்டு சென்றால்லவோ எசமானவர்களுக்குத் திருப்தியாகவிருக்கும்? இப்படிப் படிப்பதனால் என்ன பயன்? பிரபுக்களிடத்திற் பழகும் முறை தெரியவில்லையே! அதை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றுதான் நீங்கள் படிக்கும் பாடல்களுக்குப் பொருள்சொல்ல முன்வந் தேன்" என்றார். சவேரிநாத பிள்ளை அவர் வாயை எப்படி யாவது அடக்கிவிட வேண்டுமென்று நினைந்து, "இந்தப்பாடலுக் குப் பொருள்சொல்லும்; பார்ப்போம்" என்று ஒரு பாடலைப் படித்துக் காட்டினர். அவர் சிறிதும் அஞ்சாமல், "இந்தப் 'பொஷ்தகத்தை' எனக்கு இனாமாகக்கொடுப்பீர்களானால் நான் சொல்லத் தடையில்லை" என்று சொல்லிவிட்டுப் பின்னும் தமது திறமையைக் காட்டவேண்டுமென்று நினைந்து வெற்றுரைகளை வர்ஷிக்கத் தொடங்கிவிட்டார். எங்களுக்கு அடக்க முடியாத சிரிப்புவந்தது. இவரும் மெல்லச் சிரித்துக்கொண்டே இருந்தார்.

அந்தச் சமயத்தில் தற்செயலாய் அங்கே வந்த ஆறுமுகத்தா பிள்ளை இந் நிகழ்ச்சியை யறிந்து அவரைப்பார்த்து, "நீர் யார் ஐயா? இந்த இடத்தில் சத்தம்போட்டுக்கொண்டிருக்கிறீர்! உம்மை

உள்ளே விட்டவர் யார்? இந்த நிமிஷமே வெளியே போய்விடும். உமக்கு மரியாதை தெரியவில்லையே'' என்று கடிந்து சொன்னார். பிள்ளையவர்களையே அந்த வீட்டின் சொந்தக்காரரென்று எண்ணியவராதலால், ஆறுமுகத்தாபிள்ளையைத் தம்மைப்போலவே யாசகத்துக்கு வந்திருப்பவரென்று தம்முள் அவர் நிச்சயித்துக் கொண்டு, ''நீர் யார்காணும் என்னை வெளியே போகச்சொல் வதற்கு? உமக்கு என்ன ஐயா அதிகாரம் இந்த இடத்தில்? வீட்டு எசமானவர்களிடத்தில் நான் 'பிரஷங்கம்' செய்துகொண்டி ருக்கிறேன். அவர்களோ சந்தோஷிக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அதைக்கெடுப்பதற்குப் 'பூஷை' வேலையிற் கரடியை விட்டோட்டு வதுபோல் நீர் எங்கிருந்தையா வந்து முளைத்தீர்? முதலில் நீர் வெளியிலே போய்விடும்'' என்றார். அப்போது வீட்டு எசமா னென்று பிள்ளையவர்களைச் சொன்னதில் உவப்புற்ற ஆறுமுகத்தா பிள்ளை கோபங்கொள்ளாமல் புன்முறுவல்செய்து மறுபடியும், ''நீர் யார் ஐயா?'' என்று அவரைக்கேட்டனர். அவர், ''நான் தஞ்சைமா நகரத்து அரண்மனைத் தமிழ் வித்துவாம்ஷன்'' என் றார். ஆறுமுகத்தாபிள்ளை, ''நீரா தமிழ் வித்துவான்! நீர் இது வரையில் இவர்களை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லையே. உம்மைத் தமிழ் வித்துவானென்று யார் மதிப்பார்?'' என்றார். நாங்களெல்லாம் மௌனமாக இருந்தோம். பிள்ளையவர்களும் ஒன்றும் பேசவில்லை. அதனால் வீட்டுத் தலைவர் தம் சார்பில் இருப் பதாக எண்ணிக்கொண்டு வந்தவர், ''நீர் என்னுடைய படிப்பை அறிந்து கொண்டீரா? அறிந்திருந்தால் என்னை வெளியிலே போகச் சொல்லுவீரா? நீர் என்னை அறிந்துகொள்ளாதவர். நீரே வெளியில் போம்'' என்று மீட்டும் சொன்னார். அப்பொழுது ஆறுமுகத்தாபிள்ளை அங்கே வெளியில் நின்றுகொண்டிருந்த ஒரு வேலைக்காரனைப் பார்த்துக் கோபித்துக்கொண்டு, ''ஏன் இந்த மனுஷனை உள்ளே விட்டாய்? வெளியே அழைத்துக்கொண்டு போய்விடு'' என்றார். அவன் உடனே வந்து அதட்டிக் கீழே இறங்கச் சொன்னான். அவர், ''நீர் யார் என்னை வெளியே அழைத் துக்கொண்டு போகச் சொல்லுவதற்கு?'' என்று கடிந்து சொன் னார். அந்த வேலைக்காரன் அவர் கையைப் பிடித்து மெல்ல அழைத்துக்கொண்டு வெளியே போய் ஓரிடத்தில் இருக்கச் செய்து உள்ளே வராதபடி பாதுகாத்துக்கொண்டிருந்தான்.

அப்பால் எங்களுக்குப் பாடம் நடைபெற்றது. பாடம் பூர்த்தியானவுடன் படுக்கப்போக வேண்டியவர்கள் போய்விட்டார்கள். பின்பு வழக்கம்போலவே எல்லோரும் ஆகாரம் செய்து கொண்டார்கள். அப்பால் பிள்ளையவர்கள் விருப்பப்படி ஆறுமுகத்தா பிள்ளை மனமிரங்கிக் காவலிலிருந்த அப்புலவரை வருவித்துச் செவ்வையாக ஆகாரம் செய்வித்துச் செலவிற்கும் சிறிது பணம் கொடுத்து, "இனிமேல் இப்படிப்பட்ட தப்புக்காரியங்களைச் செய்ய வேண்டாம்" என்று கண்டித்துச்சொல்லி அனுப்பினர். அவர் அந்த வீட்டுத் திண்ணையிலேயே படுத்துக்கொண்டிருந்து விட்டுக் காலையில் எழுந்து எல்லோரிடத்தும் சொல்லிக் கொண்டு சந்தோஷத்துடன் கும்பகோணம் சென்றார்.

அகால போஜனம் மாறியது

இங்ஙனம் சில தினங்கள் சென்றன. இரவில் அகாலத்தில் உண்ணுதலால் மிகவருந்திய சவேரிநாத பிள்ளை ஒருநாள், "இப்படி ஆகாரம் பண்ணிக்கொண்டிருக்க என்னால் இயலாது. இருக்கவும் வேண்டியிருக்கிறது. பசியோ பொறுக்க முடியவில்லை. விபரீதமான இந்த வீட்டு வழக்கத்தை இதுவரையில் நான் வேறெங்கும் கண்டிலேன். மற்றவர்கள் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. எந்த வழியிலாவது இந்தத் துன்பம் நீங்கினால் எனக்கும் பிறர்க்கும் மிகவும் சௌகரியமாக இருக்கும்" என்று சொல்லிவிட்டுச் சிலதினங்களுக்கு முன்னமே தாம் செய்துவைத்திருந்த பாட்டொன்றை எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே வந்த ஆறுமுகத்தா பிள்ளை சவேரிநாத பிள்ளையின் சுவையான பேச்சை அடிக்கடி கேட்பவராதலால் அவர் என்ன பேசுகின்றாரென்பதை அறிந்து கொள்ள எங்களை அணுகினார்; "என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார். நான் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்துவிட்டேன்; பிறரும் அப்படியே இருந்தார்கள்.

சவேரிநாத பிள்ளை: பேசுவது உங்கள் சங்கதிதான். கோபித்துக்கொள்ளாமல் இருந்தாற் சொல்லுவேன்.

ஆறுமுகத்தா பிள்ளை: சும்மா சொல்லும்.

சவேரிநாத பிள்ளை: நாங்கள் எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் சரியான காலத்திற் கூழையாவது குடிப்போம். இங்கே வருவதற்கு முன் ஒருநாளாவது அகாலத்தில் உண்டதில்லை. அந்த

வழக்கத்தால் இராத்திரியில் உங்கள் வீட்டில் அகாலத்தில் உண்ணும் உணவு எவ்வளவு நன்றாக இருந்தாலும் எங்களுக்குச் சிறிதேனும் செல்லவில்லை; பிடிக்கவும் இல்லை. அங்ஙனம் உண்ணும் காலத்திற்கு வெகுநேரத்திற்கு முன்பே பசியும் அடியோடே குடியோடிப் போய்விடுகின்றது. இந்தக் கஷ்டத்தை நினையாதவர் இங்கே ஒருவருமில்லை. உங்கள் கோபத்திற்கு அஞ்சியே யாவரும் இத்துன்பத்தை வெளிப்படுத்தாமல் பல்லைக் கடித்துக்கொண்டு காலங்கழித்து வருகிறார்கள். உங்களிடத்தில் எப்படியாவது இந்தக் கஷ்டத்தைச் சொல்லி இந்த வழக்கத்தை முற்றிலும் மாற்றவேண்டுமென்று வந்தநாள் முதல் எண்ணிக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தேன்; ஒரு பாடலையும் செய்தேன். நல்ல வேளையாக நீங்களே கேட்டீர்கள். அதனால் உண்மையைச் சொல்லி விட்டேன். அப்பால் உங்கள் இஷ்டம். அந்தப்பாடல் இதுதான்:

(கட்டளைக் கலித்துறை)

புரமாய வென்றரு டேனு புரேசர் புகன்றுறையும்
நிரமாம் பழைசையிற் காலத்தி லூணின்றித் தியபசி
உரமாய் வருத்த வருந்துறு வேமென் றுணர்ந்தறிவில்
மரமாப் படைத்தில னேபாவி யாய மலரயனே.

ஆறுமுகத்தா பிள்ளை: இது கும்பகோணத்திலிருந்து பல இடங்களுக்குச் செல்லும் வழியில் இருக்கும் ஊராதலின், பலர் இவ்வழியே செல்வார்கள். இரவில் நெடுநேரம் கழித்தும் சிலர் வருவார்கள். அவர்களுக்கு உணவளித்து உபசரிக்கும் வழக்கம் எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து நடைபெற்று வருகிறது. முன்பே உண்டுவிட்டால் பின்பு வருகிறவர்களுக்குச் சில சமயம் உணவு கிடைக்காமற் போய்விடும். கிடைத்தாலும் ஆறிப் பதனழிந்துவிடும். ஆகலால் யாவரும் நேரங்கழித்தே உண்ணுவதாயிருந்தால் வருபவர்கள் எல்லோரும் திருப்தியாக உண்பார்களென்ற எண்ணத்தினால் இவ்வாறு பெரியோர்கள் செய்துவந்தார்கள். அவ்வழக்கத்தைப் பின்பற்றியே நானும் நடத்தி வருகிறேன்.

சவேரிநாதபிள்ளை: அகாலத்தில் வருபவர்களுக்கு வேண்டிய வற்றை எடுத்துவைத்துவிட்டு மற்றவர்கள் முன்னால் உண்டுவிட

லாமே. அதனால் என்ன பிழை? பின்பு வருகிறவர்களுக்காக முன் புள்ளவர்கள் பசியோடு சோர்ந்து தூங்கியபின்னர்ப் பசியும் கெட் டுப்போகின்றது. தூக்கத்தையும் கெடுத்து எழுப்பி உண்பித்த லில் அவர்களுக்கு என்ன சுவை தெரியப்போகிறது? வயிரு ரத்தான் உண்பார்களா?

ஆறுமுகத்தா பிள்ளை சவேரிநாத பிள்ளை சொல்லிய பக்குவத் தினால் அவரிடம் கொஞ்சமேனும் சினங்கொள்ளாமல், "உங் ளுக்கெல்லாம் அசௌகரியமாக இருந்தால் அந்த வழக்கத்தை வைத்துக்கொள்வதில் எனக்குப் பிரியமில்லை; நீங்கள் சொல்லு கிறபடியே செய்கிறேன்" என்று சொல்லி அன்று முதல் 60-மணிக்குள்ளாகவே எல்லோரும் ஆகாரம் பண்ணும்படி ஏற்பாடு செய்துவிட்டார். பழையவழக்கம் மாறிய காரணத்தை அறிந்த இக்கவிஞர்பிரான் சவேரிநாதபிள்ளையின் தைரியத்தையும் சாதுரியத்தையும் பற்றி மகிழ்ந்ததன்றி அவர் செய்த செய்யுளை யும் கேட்டுப் பாராட்டினர். மற்ற யாவரும் அவரைப் புகழ்ந்து வாழ்த்தினர்கள்.

சில பிராமணர்களின் அன்பு

அயலூர்களிலுள்ள பிராசுதார்களாகிய பிராமணர்கள் சில ரிடம் ஆறுமுகத்தாபிள்ளை பெருந்த தொகைகளை வட்டிக்குக் கடன் வாங்கியிருந்தார். அப்பொழுதப்பொழுது கொடுக்கப் படாமையால் வட்டிகள் அதிகரித்துவிட்டன. பணங்கொடுத்த வர்கள் அடிக்கடி வந்து கேட்பாராயினர். அது தெரிந்த ஆறு முகத்தா பிள்ளை இப்புலவர் சிகாமணியை அழைத்துச் சென்று அவர்களோடு சிலநேரம் பேசிக்கொண்டிருக்கும்படி செய்துவிட்டு வட்டிகளிற் சிலபாகத்தையாவது முழுவதையுமாவது தள்ளிக் கொடுத்தால் உபகாரமாக இருக்குமென்று கேட்டுக்கொண்டனர். முதலாளிகளிற் சிலர் ஆறுமுகத்தா பிள்ளை பிள்ளையவர்களுடைய அன்பரென்பதை நினைந்தும், இவர் தங்கள் வீட்டுக்குவந்த கௌர வத்தை உட்கொண்டும் வட்டியிற் சிலசில பாகத்தைத் தள்ளிக் கொடுத்துப் பத்திரத்தில் வரவு வைத்துக்கொள்ளச் செய்தார்கள். ஊற்றுக்காடென்னும் ஊரிலிருந்தவரும் வடமொழியிற் சிறந்த வித்துவானுமாகிய காளிராமையரென்பவர் வட்டி முழுவதையுமே தள்ளிப் பத்திரத்தில் வரவுவைத்துக் கொள்ளச்செய்தார்; அங்ங

னம் செய்ததன்றி இவரைச் சிலதினம் தம்முடைய வீட்டில் வைத் திருந்து விருந்தளித்து உபசரித்து அனுப்பினர்.

நூலுக்கும் நீருக்கும் சிலேடை

ஒருநாள் பிள்ளையவர்களோடு ஆறுமுகத்தாபிள்ளையும் நாங் களும் ஸ்வாமிமலை சென்று முருகப்பிரானைத் தரிசனஞ் செய்து விட்டுத் திரும்பி வருகையில் காவிரியின் கரையை அடைந்தோம். அப்பொழுது பட்டுச் சாலியர்களிற் சிலர் நெய்தற்குரிய நூல்களை அந் நதியில் கழுவிக்கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட ஆறு முகத்தாபிள்ளை என்னைப் பார்த்து, "இந்த நூலுக்கும் நீருக்கு மாக நீர் பத்து நிமிஷத்தில் ஒரு சிலேடை வெண்பாப் பாடும், பார்ப்போம்" என்றார். 'அவ்வளவு சீக்கிரத்திற் செய்ய முடி யாதே; செய்யாவிட்டால் இவர் என்ன கடினமான வார்த்தை களைச் சொல்வாரோ!' என்று நான் யோசித்துக்கொண்டு நின் றேன். இவர், "இவ்வளவு கடினமான விஷயத்தைக் கொடுத்துச் சீக்கிரத்திற் பாடி முடிக்கச் சொன்னால் இவரால் ஆகுமா?" என்று சொல்லிவிட்டு உடனே முதலிரண்டடியைத் தாம் பாடி முடித்துப் பின் இரண்டடிகளைச் செய்யும்படி எனக்குச் சொன் னார்; அவ்வாறே பாடி முடித்தேன். அச்செய்யுள் வருமாறு:—

(வெண்பா)

"வெள்ளைநிறத் தாற்செயற்கை மேவியே வேறுநிறம்
கொள்ளுகையாற் ரூயக் குறியினால்—உள்ளவன்பிற்
ரூய்நேர்ந்த வாறுமுகத் தாளாளா நீமொழிந்த
ஆய்நூலு நீருமிக ராம்."

[தோய் அக்குறி - நீரில்தோய்க்கும் அச்செயல்; தோயம் குறி - தோயமென்னும் பெயர்.]

புறங்கூற்றாளர் அடங்கியது

திருவிடைமருதூராலைப் பற்றிச் சிலர் * அங்கங்கே சென்று சென்று இடையறாமற் கூறிவரும் புறங்கூற்றுக்களைக் கேட்டு ஆறுமுகத்தாபிள்ளை மிகவும் வருத்தமுற்று அங்ஙனம் கூறுவோர்களை எவ்விதமாகவேனும் அடக்கவேண்டுமென்று எண்ணினார். அப்போது அவர் செய்தற்குரிய திதி ஒன்று வந் தது. அதனை வழக்கத்திற்கு அதிகமாகச் செலவு செய்து முடித்

* முதற்பாகம், பக்கம், நகூ.

தற்கு நிச்சயித்து மேற்கூறிய புறங்கூற்றாளர்களையும் வேறு சில பெரியோர்களையும் அன்றைத்தினம் உணவிற்கு வருவித்தார். அவர்களுக்குத் திருப்தியுண்டாகும்படி ஆகாரஞ் செய்வித்துத் தக்ஷிணைகளையும் அளித்தார்.

பின்பு அவர்கள் எல்லோரையும் பகல் ஒருமணிக்கு ஓரிடத்தில் வந்து கூடியிருக்கும்படி செய்து அவர்களை நோக்கி, "திருவிடை மருதூருலாவைப்பற்றிக் குற்றஞ் சொல்லுபவர்கள் இப்போது எடுத்துச் சொல்லலாம். அவற்றிற்கு ஐயா அவர்கள் சமாதானம் சொல்லுவார்கள்" என்று சொல்லிவிட்டுத் தாம் ஓரிடத்தே இருந்தார்; அப்பொழுது தியாகராச செட்டியார் முதலியோரும் உடனிருந்தார்கள். அச்சபையில் அப்பொழுது வந்திருந்தவர்களுடைய தொகை சற்றேறக்குறைய நூறுக்கு மேலே இருக்கும். இந்தக் கவிஞர்பிரான் அவ்வுலா எழுதப்பட்டுள்ள ஏட்டுச்சுவடியொன்றை என்னிடம் கொடுத்துப் படிக்கச்சொன்னார். எனக்கு ஏட்டுப்பிரதியைப் பார்த்துப் படிக்கும் வழக்கம் அதிகமாக இல்லாமையாற் படிக்கும்பொழுது சில சில இடங்களில் தடுமாற்றம் அடைந்து வாசித்தேன். இவர், "இப்படி வாசித்தால் அடிப்பேன்" என்றார். உடனே அதிக ஜாக்கிரதையாகத் தவறின்றி மெல்லப் படித்து வந்தேன். புறங்கூற்றாளர் தவறென்று சொல்லிக்கொண்டிருந்தனவாகத் தாம் கேள்வியுற்ற இடங்களை எடுத்துக் காட்டித் தக்க சமாதானங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார். அந்த நூல் இராத்திரி பன்னிரண்டு மணிக்குப் படித்து முற்றுப்பெற்றது.

ஆதியுலா, ஏகாம்பர நாதருலா, திருவானைக்காவுலா, திருவாரூருலா, திருவெங்கையுலா முதலியவற்றிலிருந்து அப்பொழுதப்பொழுது இடத்துக்குப் பொருத்தமாக இவரால் மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டன. அப்பொழுது ஆவூர்ப் பசுபதி பண்டாரம், ஸ்வாமிமலை சபாபதிதேசிகர், கும்பகோணம் பேட்டைத்தெருவிலுள்ள வைத்தியநாத தேசிகர் முதலிய கல்விமான்கள் கேட்டு மிகவும் திருப்தியடைந்து, "இவ்வளவு அழகான உலாவை நாங்கள் இதுவரையில் அறிந்ததில்லை. பல ஸ்தல சரித்திரங்களும் சிவ புராணக் கதைகளும் நாயன்மார்களுடைய அருளை வரலாறுகளும் தேவார திருவாசகக் கருத்துக்களும் நிறைந்து எல்லா உலாக்களுக்கும்

மேற்பட்டு இந்த உலா விளங்குகின்றது. இன்றைத் தினம் இந்த உலாவின் மூலமாக அருமையான விஷயங்கள் பல வற்றை அறிந்துகொண்டோம். இந்த நூலில் என்ன குற்றம் இருக்கின்றது? ஒன்றும் இல்லையே. யாரேனும் இதிற் குற்றம் உண் டென்று சொல்லியிருந்தால் அவர்களைக் கல்வியறிவில்லாதவர்க ளென்று சொல்லுவதற்கு நாங்கள் பின்னிடோம். நீங்கள் இக் காலத்தில் எழுந்தருளியிருப்பது நாங்களும் தமிழும் செய்த பெரும்புண்ணியத்தின் பயனென்றே சொல்லத் தடையில்லை" என்று உலாவையும் பிள்ளையவர்களையும் மிகவும் பாராட்டினர் கள்; "அரோக திடகாத்திரத்தோடு சிரஞ்சீவியாயிருந்து தமிழ்ப் பாஷையைப் பரிபாலனம் செய்துகொண்டுவரவேண்டும்" என்று இவரை வாழ்த்தவும் செய்தார்கள்; முன்பு குறைகூறியவர் களும் பாராட்டி வாழ்த்தினர்கள்.

அப்பால் ஆறுமுகத்தாபிள்ளை புறங்கூற்றுளரைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது சொன்னது உண்மைதானே? இனி எங் கேனும் உலாவைப்பற்றித் தூஷணமான வார்த்தைகள் உங்கள் வாக்கிலிருந்து வெளிப்படுமானால் நான் சும்மா விடமாட்டேன்; அறிந்துகொள்ளுங்கள்" என்றார். அதன்பிறகு அவ்வுலா சம் பந்தமான புரளிவார்த்தைகளெல்லாம் எவ்விடத்தும் அடங்கி விட்டன.

அவ்வுலாவில் ஒவ்வொரு கண்ணியையும் இரண்டு மூன்று முறை படித்துக்கொண்டே வந்தமையால் மிகுந்த சோர்வை அடையவேண்டியவனாக இருந்தும் இடைவிடாமற் கேட்டுவந்த பல அரிய விஷயங்களால் அமுதத்தை உண்டவன்போலப் பசிதாகத்தால் உண்டாகும் களைப்பின்றி யிருந்தேன். பின்பு ஆகாரம் செய்யும்படி தூண்டி சேர்த்து என்னை அனுப்பிய பொழுது இப்புலவர்பிரான் அருகில் வந்து என்னை நோக்கி, "ஏதோ ஒரு வார்த்தை சொல்லி விட்டேன்" என்று சொல்லத் தொடங்கியபோது இவரது குறிப்பையறிந்த நான், "சொன்னபடியே செய்திருந்தால் எனக்குச் சந்தோஷமாக இருந்திருக்கும். படித்தற்குரிய பலர் இருக்கையில் என்னைப் படிக்கும்படி சொன்னது என்பாலுள்ள அன்பின் மிகுதியாலேயே என்று தெரிந்து இன்புற்றேன்" என்று ஒருவாறு தெரிவித்து விடைபெற்று ஆகாரம் செய்யச் சென்றேன்.

எனக்கு நைடதம் அளித்தது

சில நாட்களுக்குப் பின் இவரிடம் உத்தரவுபெற்று ஸரஸ்வதி பூஜையன்று பட்டீச்சுரத்துக்கு அருகிலுள்ள என் ஊராகிய உத்தமதானபுரம் சென்றேன். பூஜையை அங்கே முடித்துக்கொண்டு மறு நாளாகிய விஜயதசமியன்று புனர்பூஜையைச் செய்தபிறகு பிற்பகலில் புறப்பட்டுப் பட்டீச்சுரம் வந்து சு-மணிக்குப் பிள்ளையவர்களைக் கண்டேன். "ஏன் இவ்வளவு அவசரமாக வந்தீர்?" என்றார். "இன்று விஜயதசமியாதலால் ஐயா அவர்கள் கையால் ஏதாவதுபுஸ்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளலாமென்று எண்ணி விரைந்துவந்தேன்" என்றேன். உடனே அந்த வீட்டிற் பூஜையிலிருந்த சுவடிகளுள் ஏதாவதொன்றைக் கொண்டுவரும்படி இவர் ஒருவரை அனுப்பினர். போனவர் ஒரேட்டுச்சுவடியை எடுத்துக் கொணர்ந்து கொடுத்தார். அதனை என்னிடம் அளித்த இவர், "என்ன நூலென்று பிரித்துப் பார்த்துச் சொல்லும்" என்றார். அங்ஙனமே பிரித்து, "இது நைடதத்தின் மூலம்" என்றேன். கேட்ட இவர், "நைடதத்தைப் படித்தாற் கலிபீடை நீங்குமென்று சொல்வார்கள். ஆதலால் இப்புத்தகத்தைப்பெற்ற உமக்குக் கலி இன்றோடு நீங்கிவிட்டது. இனி ஒருபோதும் அணுகமாட்டாது" என்றார். அப்பொழுது நான், "இங்கே படித்தற்கு எப்பொழுது வந்தேனே அப்பொழுதே என்னைச் சார்ந்திருந்த அரிஷ்டமெல்லாம் நீங்கிவிட்டனவென்றே துணிந்திருக்கிறேன். அன்றியும் மாயூரத்தில் முதன்முறையாக இங்கே பெற்றுக்கொண்டதும் நைடதமே. அப்பொழுதே அவ்வாறு எண்ணினேன்" என்று சொன்னேன்.

பாடம் சொல்லப் பயிற்றல்

புதிய மாணாக்கர்களுக்குப் பழைய மாணாக்கர்களைக்கொண்டு பாடம் சொல்லுவிப்பது இவருக்கு வழக்கம். அதற்குக் காரணம் அவர்களுக்குப் பாடஞ்சொல்லும் ஆற்றல் உண்டாக வேண்டுமென்பதுதான். ஏதேனும் பிழையிருந்தால் சொன்னவரைத் தனியே அழைத்து உண்மையைத் தெரிவிப்பார்.

ஒருநாள் பட்டீச்சுரத்திலிருந்து கும்பகோணத்திற்குப் போகும்பொழுது நான் மற்றொருவருக்குக் கூடந்தைத் திரிபந்தாதிக்

குப் பொருள் சொல்லிக்கொண்டே சென்றேன். * "நாட்டஞ் சிவந்தனே" (கசை) என்னும் செய்யுளில் 'சிவந்தனே நேர்ந்தேயுறும்' என்பதற்குச் சிவமானது தன்னை ஒத்தே அத்தலத்தில் எழுந் தருளியிருக்கின்றதென்று சொன்னேன். கேட்ட இவர் அவ் விடத்திலேயே நின்றுகொண்டு என்னைத் தனியே அழைத்து 'நேர்ந்து' என்பதற்கு, 'கொடுத்து' என்பது பொருளென்றும் இனிக் கவனித்துச் சொல்ல வேண்டுமென்றும் சொல்லிவிட்டு முன்னே செல்வாராயினர்.

'தன்பெருமை தானறியாத் தன்மையன்'

கும்பகோணம் பட்டீச்சுரத்திற்குச் சமீபமாதலால் ஆறு முகத்தா பிள்ளைக்குரிய சில காரியங்களை முடித்துக்கொடுத்தற் கும், வரவேண்டுமென்று விரும்பிய அன்பர்களுடைய வேண்டு கோளை நிறைவேற்றுதற்கும் நினைந்து அடிக்கடி எங்களை அழைத் துக்கொண்டு இவர் அங்கே சென்று வருவார்.

ஒருநாள் அந்த நகருக்குச் சென்று ஓரிடத்திற் பல பிரபுக்க ளோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே இருந்த எதிராஜபிள்ளை யென்னும் கனவானொருவர் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி ஓர் இனிய செய்யுளைக் கூறினர். அங்கிருந்த யாவரும் அதனைக் கேட்டு அதன் இனிமையைப் பாராட்டினர். இவரும் அச்செய்யுளின் நயத்தை வியந்துவிட்டு, "இச் செய்யுள் எந்த நூலில் உள்ளது?" என்று கேட்டார். "தாங்கள் இயற்றிய கும்ப கோண புராணத்திலுள்ளது" என்றார் அவர். அதனைக் கேட்ட யாவரும் ஆச்சரியமுற்றனர். அளவிறந்த செய்யுட்களைப் பாடி யவராதலின் அது தாம் இயற்றிய செய்யுளென்பதை இவர் அறிந்திலர். இதைப்போன்ற நிகழ்ச்சிகள் சிலவற்றை யான் அறிந்திருப்பதுண்டு.

தியாகராச செட்டியார் வாதம் செய்தது

மற்றொருநாள் சென்று கும்பகோணத்தில் நாகேசுவரஸ்வாமி கோயில் வடக்கு வீதியிலிருந்த தபாலாபீஸ் வீட்டுத் திண்ணையில்

* "நாட்டஞ் சிவந்தனை பென்செய லாநம னேகுடந்தைக்
கோட்டஞ் சிவந்தனை நேர்ந்தே யுறுமங்குக் கூடிமலப்
பூட்டஞ் சிவந்தனை செய்தோங் கருணை புரிந்ததிலை
வாட்டஞ் சிவந்தனைப் பொன்சொரிந் தாலு மதிக்கலமே."

இவர் தங்கினர். அவ்வீட்டில் இருந்த போஸ்டுமாஸ்டர் முத்தப்பிள்ளை யென்பவர் இவர் வந்திருத்தலையறிந்து உடனே ஒரு புத்தகத்தோடு வந்து வந்தனம் செய்து இவருடைய குறிப்பின்படி அருகில் இருந்தார். "கையிலுள்ளது என்ன புத்தகம்?" என்று இவர் கேட்டனர். அவர், "ஐயா அவர்கள்செய்த திருநாகைக்காரோணப் புராணம். இதனைச் செட்டியாரவர்களிடத்துப் பாடங் கேட்டு வருகிறேன்" எனவே இவர், "அதில் ஒரு செய்யுளைப் படித்திடுக" என்று சொன்னார். அவர் அதிலுள்ள நைமிசப்படலத்தின் முதற்செய்யுளாகிய,

(கலிநிஸத்துறை)

"செங்கை யாட்டினா ரங்கைமா னேந்திய சிவனார்
பங்கை யோர்மகட் குதவிய பரமனார் பதத்துக்
கொங்கை யார்தனைச் சார்நரை யுய்த்திடு குணத்தாற்
கங்கை யாற்றரு கிருப்பது நைமிசக் காடு"

என்ற பாடலை மாலைக்காலமாதலாற் கல்யாணி ராகத்தில் நன்றாகப் படித்துக் காட்டினர். கேட்டு மிகவும் இன்புற்ற இவர் என்னைப் பார்த்துவிட்டு மேலேயுள்ள பாடல்களைப் படிக்கும்படி அவருக்குச் சொன்னார். இவர் படிக்கிற மாதிரி நான் படிக்க வேண்டுமென்று குறிப்பித்தாரென்பதை அப்பார்வையால் அப்பொழுது தெரிந்துகொண்டேன்.

மேற்பாகத்தை அவர் படித்துக்கொண்டே வருகையில் இவர், "பொருள் நன்றாகத் தெரிந்துகொண்டு வருகிறீரா?" என்று கேட்டனர். அவர், "செட்டியாரவர்கள் பொருள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சில செய்யுட்களின் ஒவ்வொரு பாகத்திற்குப் பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை. ஆனாலும் தைரியமாகவே ஏதேனும் சொல்லுகிறார்கள். அதில் எனக்குத் திருப்தி பிறக்கவில்லை. பட்டீச்சுரம் வந்து ஐயா அவர்களால் அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணியும் வேலை மிகுதியால் அங்கே வரமுடியவில்லை" என்றார். இவர் சந்தேகமுள்ள இடங்களில் ஏதாவதொன்றைக் குறிப்பிட்டுச் சொல்லும்படி கேட்டார். அப்பொழுது முத்தப்பிள்ளை,

---

* செங்கை - திருவாதிரை நட்சத்திரம். பதத்து உய்த்திடு. கொங்கை ஆர்தனை - நறுமணத்தைப் பொருந்திய தன்னை.

துவஜஸ்தம்ப வருணனை

(கொச்சகக் கலிப்பா)

* "ஊறுதெரி தலுந்தவிர்ந்தோ ருடம்புதரி யுட்புகுந்து
மாறுதவிர் காரோண வள்ளலா ரெதிர்நின்று
வேறுமல ரிலைபுனைந்து வேண்டுபலன் களுமுதவிப்
பேறுதவு சிவமேயாய்ப் பிறங்கிவிடை மேற்கொளுமே"

(திருநகரப். கூஅ)

என்ற செய்யுளைப் படித்துக் காட்டினர். இப்புலவர்பிரான், "தியாகராசு இதற்கு என்ன பொருள் சொன்னான்?" என்றனர். முத்தப்பிள்ளை, "அவர்கள் விளங்கவில்லையென்று முதலிற் சொல்லிவிட்டுச் சிறிதுநேரம் யோசித்துப்பார்த்து ஏதோ சொன்னார்கள்; எனக்கு இப்பொழுது அது ஞாபகத்திலில்லை" என்றார்.

அவர் அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் தியாகராச செட்டியார் பாடஞ் சொல்லுவதற்கு வழக்கம்போலே அங்கே வந்தார். வந்தவர் முத்தப்பிள்ளை நாகைக்காரோணப் புராணத்தைக் கையில் வைத்திருப்பதையும் இவர் அவரோடு பேசிக்கொண்டிருத்தலையும் பார்த்துவிட்டு ஆலோசித்துக்கொண்டு அருகில் வந்து நின்று இவருக்கு அஞ்சலி செய்து, "நீங்கள் எப்பொழுது இங்கே வந்தீர்கள்? வீட்டுக்கு வரலாகாதா? வருவதை முன்னதாக எனக்குத் தெரிவிக்கக்கூடாதா? தெரிவித்திருந்தால் முந்தியே இங்கு வந்திருப்பேனே" என்றார். இவர், "இருக்கட்டும்; 'ஊறுதெரிதலும்' என்ற செய்யுளுக்கு நீ இவருக்குச் சொல்லிய அர்த்தம் என்ன? சொல்லவேண்டும்" என்றார். தியாகராச செட்டியார், "எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த ஒரு பாட்டுக்காகப் பட்டீச்சுரம் வந்து நேட்பதென்றால் எனக்குச் சாத்தியப்படுமா? எனக்குள்ள வேலைகள் அதிகமென்பது ஐயா அவர்களுக்குத் தெரியுமே. இன்னும் இதைப்போன்ற பாடல்கள் இந்நூலிற் பல இருக்கின்றன. அவை எனக்கு மிக்க சங்க

---

* ஊறுதெரிதலும் - ஸ்பரிச உணர்ச்சியையும். ஓருடம்பென்றது மரத்தை. வேறு மலர் இலை புனைந்து - தனக்குரியனவல்லாத வேறு மலர்களையும் மாவிலை முதலிய இலைகளையும் சூடி. பலன் - நற்பயன்; பழமென்பது வேறு பொருள். துவஜஸ்தம்பம் பஞ்சலிங்கத்துள் ஒன்றாதலின் 'சிவம்' எனப்பட்டது. விடைமேற் கொள்ளும் - இடபக்கொடியை மேற்கொள்ளும்; இடபவாகனத்தின்மேல் எழுந்தருளியிருக்குமென்பது வேறு பொருள்.

டத்தை உண்டுபண்ணுகின்றன. இப்புத்தகத்தை அச்சிடுவித் தீர்களே. கடினமான பாடல்களுக்குப் பொருள் எழுதிப் பதிப் பிக்கச்செய்திருந்தால் எவ்வளவோ அனுகூலமாயிருக்கும். பொரு ளெழுதாவிட்டால் இதுபோன்ற கடினமான பாடல்கள் யாருக்கு விளங்கும்? ஒருசமயம் ஐயாவுக்கே விளங்காமற் போனாலும் போகுமே. நான் உண்மையைச் சொல்லுகிறேன். கோபிக்க வேண்டாம்'' என்று மேன்மேலே இதுபோன்ற விஷயங்களைப் பேசத் தொடங்கிவிட்டார் அப்பால் இவர், ''நான் சமீபத்தில் இருக்கும்பொழுது யாரையேனும் அனுப்பியாவது கேட்டுக் கொண்டு வரச்செய்து சொல்லலாமே. அது முடியாவிட் டால் தெரியவில்லை என்றுவது சொல்லிவிடலாமே'' என்றார். அப்பொழுது செட்டியார் சிறிதும் பின்வாங்காமல், ''இந்த நூலில் மட்டுமல்ல; நீங்கள் செய்த வேறு பல நூல்களிலும் இந்த மாதிரியான இடங்கள் பல உள்ளன. அவற்றிற்கு எனக்கும் பிறர்க்கும் பொருள் விளங்கவில்லை. அவற்றில் சிலவற்றை இப் பொழுது சொல்லுவேன்: மாயூரப் புராணத்தில் திருநாட்டுப் பட லத்தில் ''அம்மையார் நீழலில்யா மமர்ந்தோமென் றருள்செய்த, செம்மையார் வீற்றிருக்குந் திருத்தஞ்சை'' (நிச) என்பதில் உள்ள அம்மையார் வரலாறு எனக்குச் சுத்தமாகத் தெரியவில்லை. பலரைக் கேட்டேன். ஒருவரும் சொல்லவில்லை; நாகைக் காரோணப் புராணத்திலே தலவிசேடப் படலத்தில்,

(விருத்தம்)

* ''மருவொரு கொம்பு தாங்கு மார்புடை நமைப்பூ சித்துப்
பொருகரி கொம்போர் நான்கும் பெறப்பொலி தலமு முண்டால்''

† ''பருவத்து மடந்தாய் பூமேற் பசுவன்றி வான்மேற் றங்கும்
திருவத்தோர் பசுவைக் கொண்டு சிருட்டிசெய் தலமு முண்டால்''

‡ ''கொடுமைசெய் களிற்றை மாட்டிக் குலவுநீ முந்தி யீன்ற
வடுவறு களிறு போற்றி வழிபடு தலமு முண்டால்'' (நஉ, நஎ, நக)

---

* ஒரு கொம்பு - ஆதிவராகத்தின் கொம்பு. கரியென்றது ஐரா வதத்தை. தலம் - திருவெண்காடு.

† பூமேற் பசுவென்றது பிரமனை. தலம் - கருவூர்.

‡ களிற்றை - கயமுகாசுரனை. களிறு - விநாயகர். தலம் - திருச்செங் காட்டங்குடி.

என்று பாடியிருக்கிறீர்களே. இத்தலங்களின் பெயர்களையும் இத்தலங்களின் சரித்திரங்களையும் தெரிந்துகொள்வது எப்படி? இவற்றிற்கெல்லாம் குறிப்பு எழுதியிருந்தாலல்லவோ விளங்கும்? படிப்பவர்களுக்கு விளங்கும்படியல்லவோ பாடவேண்டும்? அங்ஙனம் செய்யப்படாத பாடல்கள் பாடல்கள் அல்லவே; நீங்கள் இப்பொழுது பாடும் நூல்களில் இம்மாதிரியான பிரயோகங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. முன்பு நீங்கள் இப்படிப் பாடியதில்லை. உங்கள் நூல்களைப் படிப்பவர்களெல்லாம் வந்து உங்களையே கேட்டுத் தெரிந்துகொள்ள முடியுமா? நான் சொன்னபடி கடினமான பாகங்களுக்குக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்திருந்தால் எல்லாரும் தெரிந்துகொள்வார்களே. இந்தத் துன்பம் உங்களுக்குத் தெரியவில்லையே! கோபித்துக் கொள்ள வேண்டாம்; என் அனுபவத்தைச் சொல்லுகிறேன்'' என்று மேலே மேலே பேசுவாராயினர்.

அருகில் இருந்த சில அன்பர்கள், ''செட்டியார் என்ன, இப்படிப் பேசுகிறாரே!'' என்று அஞ்சினர். முன்னொரு முறை* துறைசையந்தாதியைக் குறித்துச் செட்டியார் பேசியதை நேரில் நான் கேட்டவனுதலால் இதில் எனக்கு வேறுபாடு தோற்றவில்லை. ஆனாலும் இம்முறை இவ்விருவருடைய சம்பாஷணையும் சற்றுக் கடுமையாகவே இருந்தது. இக் கவிஞர்பிரான், ''என்னப்பா மிகுந்த கோபத்தோடே பேசுகிறாய்? இப்படிப்பட்ட இடங்களிலுள்ள அருமையை நீ பாராட்டாமற் பழிப்பதும் மிக உழைத்து அமைத்திருக்கும் அமைப்பை மதியாலிருப்பதும் நன்றாக இல்லையே. இவைபோன்ற பிரயோகங்கள் பழையநூல்களிற் பல உள்ளனவே. அங்ஙனம் பாடியவர்களெல்லாம் தெரியாதவர்களா? அப்படிப் பாடுவது ஓரழகன்றோ? சிலவகைப் பாடல்களைச் சிலர் விருப்பத்தின்படியே பாடவேண்டியிருக்கிறது. யோசித்துப் பேசு'' என்றார். ''பொருள் தெரிந்த பின்பல்லவோ கேட்பவர்களுக்கு அவற்றிலுள்ள அருமை புலப்படும்? அதற்குமுன் அவற்றின் அருமைப்பாடும் மதிப்பும் எப்படித் தெரியவரும்? உங்களோடு நெடுநாள் பழகிக்கொண்டிருக்கும் எனக்கே உங்களுடைய பாடல்களுக்குப் பொருள் விளங்காமல் இருக்குமானாற் பிறர் என்ன செய்வார்கள்? இப்படி நீங்கள் பாடுவதிற் சிறிதேனும் எனக்குத்

* இப்புத்தகத்தின் கஅ-கக-ஆம் பக்கம் முதலியவற்றைப் பார்க்க.

திருப்தியில்லை. இந்த மாதிரியான பாடல்களை இனி நீங்கள் பாடக் கூடாது. நிர்ப்பந்தத்தாற் பாடும்படி ஏற்பட்டால் பதிப்பிக்குங் காலத்தில் அந்தப் பாகங்களுக்குக் குறிப்புரை யெழுதியே பதிப்பிக்கும்படி செய்யவேண்டும். இன்னும் முன்பு குறிப்புரை இல்லாமற் பதிப்பித்த புத்தகங்களிலுள்ள கடினமான பாகங்களுக்கும் குறிப்புரை எழுதிப் பதிப்பித்து அவற்றோடு சேர்த்துவிடச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உங்கள் உழைப்புப் பிரயோசனப்படாது. என்னுடைய ஆசிரியருக்கு ஒரு பழிப்பும் இல்லாமலிருக்கவேண்டுமென்றே இப்போது இவற்றைச் சொல்லலானேன். நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் வேறு வேறு ஊர்களுக்குச் சென்று சிலகாலம் அங்கங்கே இருந்து வருகிறீர்கள். பொருள் தெரியாத ஒவ்வொருவனும் வந்து வந்து, 'அதற்குப் பொருள் சொல்; இதற்குப் பொருள் சொல்' என்று என் கழுத்தை யறுக்கிறான். ஏதாவது நான் சொல்லத்தானே வேண்டியிருக்கிறது? சொல்லாவிட்டால் வருகிறவன் விடுகிறானா? எனக்கு இதே வேலையாக இருக்கிறது. இப்படித்தானே ஒவ்வொருவரும் கஷ்டப்படுதல்கூடும்? நூல் நன்றாயிருந்தாலும் பிறருக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணுகின்றதல்லவா? இதைப்பற்றிப் பல நாளாகச் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந்தேன். முன்பு சில சமயங்களிற் குறிப்பாகவும் சொல்லியிருக்கிறேன். சந்தர்ப்பம் நேராமையால் இதுவரையில் விரிவாக நான் சொல்லவில்லை. பல தீட்டுக்கு ஒரு முழுக்கு என்றபடி இப்பொழுது எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன்; அப்பால் உங்கள் இஷ்டம்" என்றார்.

இப்படியே இருவரும் ஓய்வின்றிப் பேசிக்கொண்டிருக்கையில் இரவு மணி எட்டாகிவிட்டது. இருவரும் மிகப் பெரியவர்களானமையால் இடையிலே ஒருவரும் பேசமுடியவில்லை. அங்கே வந்திருந்த ஆறுமுகத்தாபிள்ளையின் ஜபமும் பலிக்கவில்லை; செட்டியாரிடத்தில் மிக்க கோபங்கொண்டவராய் இவரைப் பார்த்து, "நேரம் ஆய்விட்டபடியால் ஊருக்குப் புறப்படுவோம்" என்றார். இக்கவிதிலகர் எழுந்து நின்று, "போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். சரியென்றுசொல்லிச் செட்டியாரும் விடைபெற்றுக்கொண்டு தம்முடைய வீட்டிற்குச்சென்றார்; அவர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாமற்

போனரே யென்று நாங்கள் வருத்தமடைந்து பேசிக்கொண்டே சென்றோம்.

இங்ஙனம் கண்டிப்பாகப் பேசுவது செட்டியாருக்கு இயல்பாதலால் அதனையறிந்த பழையவர்களுக்கு இந்நிகழ்ச்சியில் வேறுபாடு தோற்றவில்லை; ஏனையோர்க்கு மட்டும் ஒரு பெருஞ் சண்டையாகவே தோற்றியது. பிள்ளையவர்கள்பால் செட்டியாருக்குள்ள அன்பின் மிகுதிதான் இங்ஙனம் பேசுவித்ததென்று சிலர் நினைத்தார்கள்.

மதவாரணப் பிள்ளையார் துதி

பட்டீச்சுரத்தில் ஒருநாட் காலையில் தரிசனம் செய்வதற்கு ஸ்ரீ தேனுபுரேசரது ஆலயஞ்சென்று ஸ்தல விநாயகராகிய ஸ்ரீமதவாரணப் பிள்ளையாரென்னும் விநாயக மூர்த்தியை இவர் தரிசித்துக்கொண்டு நிற்கையில் ஆறுமுகத்தாபிள்ளை, "மதவாரணமென்னும் பெயரை யமகத்தில் அமைத்து ஒருசெய்யுள் செய்யும்" என்று எனக்குச் சொன்னார். இது மிகவும் கடினமான காரியமாயிற்றேயென்று கவலையுற்று, 'இங்கே யிருப்பது பெருந்தன்பத்திற்கு இடமாக இருக்கிறதே' என்று நினைந்து முகவாட்டத்துடன் நின்றேன்

அந்தக் குறிப்பையறிந்த இக்கவிஞர் சிகாமணி, "தம்பி, இவ்வளவு கடினமான விஷயத்தை இவருக்குக் கொடுக்கலாமா? இனி இப்படிச் சொல்லுவது தருமமன்று" என்று சொல்லித் தரிசனஞ் செய்துவிட்டு வீடு சென்று அவர் விரும்பிய வண்ணம் ஒரு விருத்தம் இயற்றி அதை எழுதச்செய்து அவரிடம் படித்துக் காட்டும்படி சொன்னார். நான் அவ்வண்ணம் செய்தேன். அது,

* "நாமதவா ரணங்குறித்த படிகொடுதீ வளர்த்துமென
நவிலுந் தக்க
நாமதவா ரணங்குசிவ மிகப்பினென வுங்கொள்ளான்
நண்ணு மாற்றண்

---

* பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 3334. ஆரணங் குறித்தபடி நாம் அதவு கொடு தீ வளர்த்தும் என நவிலும் தக்க நாம - வேதம் குறித்தபடி நாம் அத்திக்கட்டையைக் கொண்டு யாகாக்கினியை வளர்ப்போம் என்று சொல்லும் தக்கனென்னும் பெயரை உடையாய், சிவம் இகப்பின் அணங்கு தவார் - சிவபெருமானை நீக்கி யாகம் இயற்றினால் வருத்தம் நீங்கார்; எனவும் - என்று ததீசி முனிவர் முதலியவர்கள் சொல்லவும், கொள்ளான் நண்

ணமதவா ரணங்குமிறுந் தடப்பட்டீச் சுரம்புகுந்து
நலியச் செய்தாம்
நாமதவா ரணங்குளிர்பூந் தாளருள வின்பநலம்
நண்ணி னேமால்''

என்பது.

நான் விடைபெற்றுச் சென்றது

பின்பு, ''தீபாவளிக்குத் தாய்தந்தையர் இருக்குமிடத்திற் குப்போக எண்ணியிருக்கிறேன்; விடையளிக்கவேண்டும்'' என்று இவரை நான் கேட்டுக்கொண்டேன். அப்படியே செய்யலா மென்று சொல்லிப் பட்டுக்கரை அங்கவஸ்திரம் இரண்டை வரு வித்துத் தீபாவளியில் உபயோகித்துக் கொள்ளும்படி இவர் கொடுத்தார். நான் புறப்படுதற்கு விடைபெறும் பொழுது, ''தீபாவளி ஸ்நானஞ் செய்துவிட்டு மாயூரத்திற்கே வந்துவிட லாம். அதற்குள் நானும் அங்கே போய்விடுவேன்'' என்றார். அப்பால் என் தந்தையார் இருந்த கோட்டூருக்குச் சென்றேன்; சென்றதுமுதல் ஜ்வரநோயால் மிகவும் பீடிக்கப்பட்டேன்; அத னால் குறிப்பிட்டபடி மாயூரம் செல்லுதற்கு முடியவில்லை. பின்பு இவர் மாயூரம் போய்விட்டார். சொல்லியிருந்தபடி பின்பு நான் அங்கே வாராமையாற் கவலையுற்று என்னைப் பார்த்து வரும்படி ஒரு மனிதரை அனுப்பினர். ''ஜ்வரத்தால் வரமுடிய வில்லை; சௌக்கியமானவுடன் வந்துவிடுவேன்'' என்று அவரிடம் சொல்லி அனுப்பினேன். அடிக்கடி யாரையேனும் அனுப்பி என் னைப் பார்த்துவரச் செய்து என் தேகநிலையை அறிந்துகொண்டே யிருந்தார்; நானும் இவருடைய ஞாபகமாகவே யிருந்தேன். மார் கழி மாதத்தின் இறுதியில் எனக்கிருந்த ஜ்வரநோய் நின்றது.

ணும் ஆற்று அண்ணும் - அவ்வுரையை மேற்கொள்ளாமல் அவன் அடைந்த தீயவழியிற் சேரமாட்டோம்; மத வாரணம் குமிறும் தடம் பட்டீச்சுரம் புகுந்து - வலிமையுடைய சங்குகள் முழங்கும் குளங்களையுடைய பட்டீச் சுரத்தை அடைந்து, நாம் நலியச் செய்தோம் - அச்சத்தைக் கெடச் செய் தோம்; மதவாரணம் குளிர் பூந்தாள் அருள - மதவாரணப் பிள்ளையார் தம் குளிர்ந்த மலர் போன்ற திருவடிகளை அளித்தமையால், இன்ப நலம் - ஆனந்தமாகிய பயனை, நண்ணினேம் - அடைந்தோம்.

அதவென்றது, அத்திக்கட்டையாற் செய்யப்பட்ட சிருக்குச் சிருவம் முதலியவற்றை; ஆகுபெயர்.

5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள்

திருவாவடுதுறையில் நான் இவரைப் பார்த்தது

தை மாதத்தில் திருவாவடுதுறையில் நடக்கும் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தியினுடைய குருபூஜைக்கு இவர் வரக்கூடுமென்று தெரிந்தமையால் நான் இவரைப் பார்த்தற்கு அசுவதி நக்ஷத்திரத்தன்று அவ்வூர் சென்றேன்; அவ்வூர்க் காட்சி என் மனத்தைக்கவர்ந்தது. குருபூஜைக்காக வெளியூர்களிலிருந்து சிஷ்யர்களாகிய பல பிரபுக்களும் வித்துவான்களும் ஆங்காங்குக் குழுமியிருந்தார்கள். கூட்டத்தின் மிகுதியால் இவரது இருப்பிடந் தெரிந்து சென்று இவரைப் பார்க்கமுடியவில்லை. பின்பு தேடிய பொழுது தெற்கு வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் சிலரோடு பேசிக்கொண்டு இவரிருத்தலைக் கண்டு சென்று பக்கத்தில் நின்றேன்; அப்பொழுது இவர் "எப்பொழுது வந்தீர்? உடம்பு சௌக்கியமா? ஆகாரம் ஆயிற்று?" என்றார். "இன்று காலையில் வந்தேன். தேகஸ்திதி சௌக்கியமாக இருக்கிறது. ஆகாரம் செய்தாயிற்று" என்று சொன்னேன்; அப்பால் இருக்கச் சொன்னபடி ஓரிடத்தில் இருந்து இவர் பேசுவனவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

உடன் இருந்தவர்கள் சென்ற பின்பு இவர், "இனிப் பாடங் கேட்க வரலாமே" என்று என்னிடம் சொன்னார்; "கேட்கும் காலத்தை எதிர் பார்த்தே ஒவ்வொரு நிமிஷமும் காத்திருக்கிறேன்" என்று சொன்னேன்; "மாயூரம் போனபின் அப்படியே செய்யலாம்" என்று சொல்லிவிட்டுப் பிற்பகலில் ஐந்து மணிக்குமேல் மடத்திற்குச் சென்றார். நானும் உடன்சென்றேன்.

தம்பிரான்கள் பாடம் கேட்டது

அப்பொழுது அங்கேயிருந்த குமாரசாமித் தம்பிரான், பரமசிவத் தம்பிரான் முதலியோர் எழுந்து நின்று இவரை வரவேற்றார்கள். இவரை அங்கே ஓரிடத்தில் இருக்கச்செய்து அவர்களும் இருந்தார்கள். சிலநேரம் சம்பாஷித்துக்கொண்டேயிருந்துவிட்டு அவர்கள், "ஏதேனும் ஒருநூலை நாங்கள் இப்போது பாடங் கேட்கலாமோ?" என்றார்கள். இவர் கேட்கலாமென்று சொல்லவே

அவர்கள் காசிக் கலம்பகம் கேட்கத்தொடங்கினர்கள்; "*காசிச் சாமி (பரமசிவத் தம்பிரான்) இருக்கும்பொழுது இக்கலம்பகம் நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையதே" என்று சொல்லி விட்டு இவர் பாடஞ்சொன்னர்; இரவு எட்டு மணிக்குள் ஐம்பது பாடல்கள் படிக்கப்பட்டன. அப்பால் அவரவர்கள் தத்தம் இடஞ் சென்றார்கள்.

சுப்பிரமணிய தேசிகர் பரிசளித்தல்

பத்து மணிக்குமேல் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகருடைய பட்டணப் பிரவேசமும் கொலு முதலியனவும் நடைபெற்றன. அவை வந்தவர்களுடைய கண்களையும் மனங்களையும் கவர்ந்தன.

குரு பூஜைக்காக வந்திருப்பவர்களுள் மறுநாளும் இருந்து செல்லுபவர்களை மட்டுமே வைத்துக்கொண்டு ஊருக்குச் செல்ல விரும்புகிற மற்றவர்களை வருவித்து அவரவர்களுடைய தகுதிக்கும் அவர்கள் வைத்த பாதகாணிக்கைத் தொகைக்கும் ஏற்றபடி மரியாதைகளைச் செய்து அனுப்புவது ஆதீனகர்த்தருடைய வழக்கமாதலால் அன்று அங்ஙனமே கொடை நடைபெற்று வந்தது. இப்புலவர்பிரான் தமக்காக அமைக்கப்பட்டிருந்த வீட்டின் இடைகழியில் வந்து சயனித்துக்கொண்டார். அப்போது சுப்பிரமணிய தேசிகரிடம் விடை பெற்றுக்கொண்ட பிரபுக்களிற் சிலரும் வித்துவான்களிற் சிலரும் இவரிடம் வந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுச் சென்றார்கள். அதனால் இவர் நித்திரை செய்யவேயில்லை.

ஆவூர்ப் பசுபதி பண்டாரத்திற்குப் பாடல் அளித்தது

அப்படியிருக்கையில், ஆவூர்ப் பசுபதிபண்டார மென்பவர் அங்கே வந்து இவரைப் பார்த்து நெடுநேரம் புகழ்ந்து பாராட்டிப் பேசிக்கொண்டேயிருந்தார். இவருக்கு மிகுந்த சிரமமிருந்தும் பழகியவராதலால் தமது சிரமத்தை அவர்பாற் சிறிதும் புலப்படுத்தவில்லை. அப்பால் அவர், "நீங்கள் மிகுந்த சிரமமடைந்திருப்பதாகத் தெரிகிறபடியால் நான் இப்போது பேசுவது ஸரியல்ல" என்றெழுந்து, "போய் வருகிறேன்" என்றார்; இவர் "சரி" என்றார். அடிக்கு ஒருதரம் திரும்பிப் பார்த்து,

* இவர் காசியிற் பல வருடங்கள் இருந்தவர்; அங்ஙனம் இருந்து வந்த துறவிகளைக் காசிச்சாமி யென்று அழைப்பது வழக்கம்.

"போய் வருகிறேன், போய்வருகிறேன்" என்று சொன்னார். கடைசியில் இவர் அஞ்சலி செய்தார். அப்பால் அவர் சிறிது தூரம் சென்று யோசனை செய்துகொண்டே நின்று பின்பு மீண்டுவந்து இவர் சயனித்துக் கொண்டுவிட்டதைத் தெரிந்து கனைத்தார். உடனே இவர் எழுந்து, "என்ன விசேஷம்? வந்த காரியத்தைச் சொல்லவேண்டும்" என்று கேட்கவே அவர், "இப்போது எழுந்தருளியிருக்கும் ஸந்நிதானத்திற்குப் படித்தவர்களிடம் மிகுந்த பிரியமிருப்பதாகவும் அவர்களுள் * ஸாஹித்ய சக்தி உள்ளவர்களிடத்தில் அதிக மதிப்பு இருப்பதாகவும் கேள்வியுற்றேன். அதற்குத் தாங்களே ஸாக்ஷி. இந்த ஆதீனத்தில் மூன்று பட்டத்திலிருந்தவர்களைப் பார்த்திருக்கிறேன், இவர்களைப்போல் விதரணை தெரிந்தவர்கள் யாருமில்லை. இங்கே குருபூஜை காலத்தில் எம்மவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் திட்டம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். குருபூஜையின் மறுநாட் காலையில் எங்களையெல்லாம் தனியே ஓரிடத்தில் இருக்கச்செய்து எங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டு தலைக்கு அரை ரூபாய் விழுக்காடு கொடுத்து அனுப்புவது வழக்கம் எங்களுடைய அதிர்ஷ்டம் அதற்குமேலே போவதில்லை. நான் கொஞ்சம் படித்தவனாக இருப்பதால் எனக்கு அந்தக் கூட்டத்திற் கலந்துகொள்ளப் பிரியமில்லை. மானம் போராடுகிறது. என்ன செய்வேன்! இந்த வருஷத்தில் தாங்கள் இங்கே விஜயஞ் செய்திருப்பது என்னுடைய அதிர்ஷ்டந்தான். என்னுடைய வித்வத்தின் திறமை உங்களுக்கு வெகு காலமாகத் தெரியும். என்னைப்போலவே பெரிய புராணம், திருவிளையாடல், ஸ்காந்தம் முதலிய காவ்யங்களுக்கும் பிரபந்தங்கள் பலவற்றிற்கும் அர்த்தஞ் சொல்லுதலிலும் தேவாரங்களைப் பண்ணோடு ஓதுதலிலும் பிரசங்கம் செய்வதிலும் எங்களவர்களில் இக்காலத்தில் யாரையாவது நீங்கள் பார்த்திருப்பதுண்டா? இப்படிப்பட்ட நான் அந்தக் கோஷ்டியிற் சேரலாமா? சேர்ந்தால் என் வித்தைக்கு என்ன ந்யூனதை ஏற்படும்? தாரதம்யமறிந்து கொடுக்கிற இந்த இடத்துக்குத்தான் என்ன கௌரவம்? பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? எல்லாவற்றையும்பற்றியோசிக்கும்பொழுதுஎன்னுடையயோக்ய

---

* இவர் பேச்சில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் விரவிவரும்.

தையை நன்றாகத் தெரிவிக்கும்படி ஒரு செய்யுள் செய்துகொண்டு இப்போதே தனியே சென்று பார்த்துவிட்டுப் போகலாமென்று எனக்குத் தோற்றுகிறது. அதற்கும் ஆதீனத்து மஹாவித்வானுக விளங்கிக்கொண்டிருக்கிற தங்களுடைய உடன்பாடு வேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் சோபிக்கமாட்டாது'' என்றார்.

அவர் இன்ன எண்ணங்கொண்டு சொல்லுகிறரென்பதை நன்றாக அறிந்தும் இவர், ''அப்படியே செய்யலாம்'' என்றார்.

பசு: அவசரத்தில் இப்போது செய்வதற்கு என்னால் முடியாது.

மீ: காலையில் இருந்து ஏதாவது பாடல் செய்துகொண்டு பார்த்துவிட்டுச் செல்லலாமே!

பசு: நாளைத்தினம் என் சிஷ்யரொருவருடைய கிருஹத்தில் ஒரு விசேஷம் நடக்கப்போகிறது. அதற்கு நானே நேரிற் போய்த் தீரவேண்டும். மற்றவர்கள் போலல் அந்தக் கிருஹஸ்தருக்கு அவ்வளவு திருப்தியாக இராது. என்ன பாருங்கள்! எங்களுடைய நிலைமை இப்படி இருக்கிறது!

மீ: ஆனால் இப்போதே ஒரு பாடல் செய்துகொண்டு ஸந்நிதானத்தினிடம் போய் வரலாமே.

பசு: எனக்கு ஸாஹித்யஞ்செய்வதிற் கொஞ்சங்கூட அப்பியாசமில்லை. இக்காலத்திலே கம்பராக விளங்குகின்றவர்களும் என்னிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவர்களும் மஹோபகாரிகளுமாகிய தாங்களே ஒரு செய்யுள் செய்து கொடுத்தால் எனக்கு அது பரமோபகாரமாக இருக்கும்

மீ: அப்படியிருக்கையில் ஸாஹித்ய விஷயத்தில் நீங்கள் ஏன் முயலவேண்டும்? ஸந்நிதானம் வேறுபாடாக நினைக்கக் கூடுமே.

பசுபதி பண்டாரம், ''இவ்வளவு கூட்டத்தில் அவர்கள் இதை எங்கே கவனிக்கப்போகிறார்கள்? கவனிக்கவேமாட்டார்கள். அவசியம் தாங்கள் ஒரு பாடல் செய்து கொடுக்கத் தான்வேண்டும்; கொடுத்தால் ஒரு ஜோடி வஸ்திரம் கிடைக்கும். பின்பு இந்த மடத்தில் நல்ல ஸ்தானத்திற் பதிவும் ஏற்படும். தங்களோடு வெகுநாளாகப் பழகிக்கொண்டே வரும் எனக்கு அது மஹத்தான ப்ரயோஜனமாக இருக்கும். தங்களை

நினைந்துகொண்டே அந்த வஸ்திரத்தைப் பலநாள் தரித்துக்கொள் வேன். தங்களை * முதன்முதல் பட்டீச்சுரத்தில் நமச்சிவாய பிள்ளையவர்கள்முன்னிலையில் பிரகாசப்படுத்தியவன் நான்தானே? நான் போகுமிடங்களிலெல்லாம் தங்களைப் பெருமைப்படுத்திப் பேசுவது எனக்கு வழக்கம்'' என்று மிகவும் மன்றாடி வற்புறுத் திக் கேட்டுக்கொண்டார்.

அன்பே ஒருருவமாக விளங்கும் இக்கவிநாயகர் ஒருசெய்யுளை இயற்றி அதனை ஒரு சீட்டில் எழுதுவித்து அவரிடம் கொடுத்து, ''இந்தப் பாடலை நன்றாகப் பாடம் பண்ணிக்கொண்டு அங்கே சென்று சொல்லுங்கள்; பொருள் கேட்டால் தைரியமாகக் கூறுங் கள்; அதைரியம் வேண்டாம்'' என்று சொல்லியனுப்பினர்.

பசுபதிபண்டாரம், ''சங்கீதத்தில் எனக்கு அதிகமான பயிற்சியிருப்பதாலும் ஸந்நிதானத்திற்கு அதில் பிரியமுண் டென்று தெரிதலாலும் பாடலை ராகத்தோடு சொல்லி ஸந்நிதா னத்தை ஸந்தோஷப்படுத்திவிடுவேன். அந்த விஷயத்தில் தங்க ளுக்குக் கவலையே வேண்டாம்'' என்று சொல்லி எழுந்து ஊக்கத் தோடு விரைந்து சென்றார்.

இவர் பாடலாற் பசுபதி பண்டாரம் பரிசு பெற்றது

செல்லும்போதே பசுபதிபண்டாரம் பாடலை நன்றாக மன னம் பண்ணிக்கொண்டு ஒடுக்கத்தின் வாயிலை அடைந்தார். அழைத்தவர்களன்றி மற்றையோர் செல்லக்கூடாத சமயம் அது; சென்றால் வாயில் காப்போன் உள்ளே விடமாட்டான். ஆனா லும் அவருடைய முதுமையையும் உத்ஸாகத்தையும் முகமலர்ச்சி யையும் தோற்றப்பொலிவையும் தைரியமாக வருதலையும் பார்த்த பொழுது, 'இவர் மிகப் பழகியவராக இருக்கலாம்; ஏதோ முக் கியமான காரியமாகப் போகிறார்' என்றெண்ணி அவன் யாதொரு தடையும் சொல்லாமல் உள்ளே அவரை அனுப்பிவிட்டான். அவர் உள்ளே சென்று நின்றார்.

அப்போது சுப்பிரமணிய தேசிகர், ''யார்?'' என்றார்.

பசு: நான் அபிஷிக்தர்களைச் சார்ந்தவன்; தரிசனஞ்செய்து விட்டு விடைபெற்றுக்கொள்வதற்கே வந்தேன்.

---

* இதன் முதற்பாகம், உசு-ஆம் பக்கம் பார்க்க.

சுப : உங்கள் இனத்தவர்களுக்கெல்லாம் காலேயிற் பணங் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. ஆதலால் இப்போது போய்விட்டுக் காலேயிற் * பன்னீர்க்கட்டிற்கு வாருங்கள்.

பசு : வித்துவானுதலால் அந்தக் கூட்டத்திற் சேர எனக்குப் பிரியமில்லே.

சுப : நீங்கள் வித்துவானென்பதை நாம் இதுவரையில் அறிந்து கொள்ளவில்லேயே.

பசு : அதற்கு இதுவரையில் சந்தர்ப்பம் வாய்க்கவில்லே. என்னிடத்தில் அன்புவைத்துச் சொல்லக்கூடியவர் யாரும் இல்லாமையால் ஸந்நிதானத்தின் ஸல்லாபம் எனக்கு இதுவரையில் நேரிற் கிடைக்காமற் போயிற்று. பரீக்ஷைசெய்து பார்த்தால் என் யோக்கியதை நன்றாகத் தெரியவரும்.

சுப : உங்கள் கல்வியை அளந்தறிவதற்கு இது சமயமன்று. அவகாசத்தில் வந்தால் அதற்கு அனுகூலமாக இருக்கும். சொல்லிக்கொண்டு போவதற்காகப் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்களே! தெரியவில்லேயா?

பசு : இவ்விடத்து ஆக்ஞையைப் பெற்றுக்கொண்டு இப்போதே புறப்படவேண்டியவனுக இருக்கிறேன். காலேயில் என் சிஷ்யரொருவர் வீட்டில் முக்கியமான காரியமொன்றிருக்கிறது. அந்த அவசரத்தாலேதான் இப்போது வந்தேன். நான் செய்திருக்கும் பாடலேக் கேட்டருளவேண்டும். சொல்லும்படி கட்டளேயிட்டாற் சொல்லுகிறேன். எப்படியாவது ஸந்நிதானத்தின் திருச்செவிகளுக்கு என்பாடல் விஷயமாக வேண்டுமென்பதுதான் எனது பிரார்த்தனே. பிரயோஜனத்தைக்கூட நான் பெரிதாக எண்ணவில்லே.

சுப : அப்படியானுல் சீக்கிரத்தில் அதனேச் சொல்லலாம்.

பசுபதி பண்டாரம்,

(விருத்தம்)

† "எந்நாடும் புகழ்துறைசை வருகுருசுப் பிரமணிய
எம்மா னேமுன்
இன்னுத புலியதனே யுடுத்தியிருந் திடுபொழுதில்
ஏத்தி னேர்க்குப்

---

* இது மடத்தின் ஒரு பாகம்.

† 'மூன்' என்றது சிவமாக இருந்த காலத்தையென்பர்; ஆசிரியரைச்

5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள் எ

பொன்னுடை கனையளித்தாய் பொன்னுடை புனைந்தவிந்தப்
பொழுத டைந்தால்
என்னுசை தீர்ந்திடவே யெவ்வாடை யளிப்பைகொலென்
றிங்குற் றேனுல்"

என்ற பாடலை இசையுடன் மிக நன்றுகச் சொல்லிக் காட்டினர். அச்செய்யுளைக்கேட்டு இன்புற்றுப் புன்முறுவல் செய்து சுப்பிர மணிய தேசிகர், "ஐயா, இச்செய்யுளை இன்னும் ஒருமுறை சொல்ல வேண்டும்" என்று கட்டளையிடவே பசுபதி பண்டாரம் அவ்வாறே பாடலைச் சொல்லி அதனை விரிவாக உபந்யசிக்கும் படி உத்தரவிட்டாலும் செய்வதாகக் கூறினர்.

சுப்பிரமணிய தேசிகர், "வேண்டாம். நீங்கள் அர்த்தம் சொல்லாமலே பாடல் தன்பொருளையும் தன்னையும் நன்றுக விளக்குகின்றது" என்று சொல்லிவிட்டு உயர்ந்த வஸ்திரங்களைக் கொண்டுவரச் செய்து தாம்பூலத்துடன் வழங்கி அவரை நோக்கி, "இந்தச் செய்யுள்தான் உங்களுக்கு இந்த மரியாதையைச் செய் வித்தது" என்று சொன்னர். அதைப்பெற்று அங்கேயே அந்த ஆடைகளைப் பிரித்துப்பார்த்து மிகுதியான சந்தோஷத்தை யடைந்து அவர் ஆதீனகர்த்தரவர்களை எல்லையின்றி ஸ்தோத்தி ரம் செய்ய ஆரம்பித்தனர்.

அப்போது சுப்பிரமணிய தேசிகர், "ஐயா, வெளியில் அநே கர் காத்திருக்கிறார்கள்; அனுப்பவேண்டும். விடைபெற்றுக் கொள்க" என்றார்.

உடனே அவர் எழுந்து ஜன்னல் வழியே நிகழ்ந்தவற்றைக் கவனித்துக்கொண்டே யிருந்து அருகில்வந்த தம்மவர் யாரையும் மதியாமல் மிக்க வேகமாகப் பிள்ளையவர்கள் விடுதிக்கு வந்தார்.

இக்கவிஞர் கோமான் நித்திரை செய்வதைக் கண்டு அவர் எழுப்பத்தொடங்கியபொழுது பக்கத்தில்நின்றவர்கள், "எழுப்ப வேண்டாம்" என்று சொல்லினர்கள். அவர் கனைத்தார். போன அவருடைய நிலை எவ்வாறுயிற்றே வென்ற கவலையுடன் கண்ணை

சிவமாகப் பாவிக்க வேண்டுமென்ற முறைபற்றி இச்செய்யுள் இயற்றப் பெற்றது. இதே கருத்து பின் உள்ள பாடல்களிலும் காணப்படும். குருபூஜையில் பட்டணப் பிரவேசகாலம் முதலியவற்றில் ஆதீனத் தலைவர் கள் பீதாம்பரம் தரிப்பது வழக்கம்.

மூடிக்கொண்டுமட்டும் இருந்த இவர் விழித்தெழுந்து, "ஐயா, வருக; ஏதாவது நீங்கள் நினைத்தபடி கிடைத்ததா?" என்று கேட்டார்.

பசுபதிபண்டாரம், "ஸந்நிதானத்தின் விவேகத்தை நான் என்னவென்று சொல்வேன்! வித்துவான்களுடைய தாரதம்யத்தை அறிவதில் அவர்களைப்போல் ஒருவரையும் இதுவரையில் நான் பார்த்ததில்லை. இன்றைக்குத்தான் என்னுடைய யோக்கியதையை அவர்கள் அறிந்துகொண்டார்கள்; ஒய்வுள்ள நேரத்திற் பேசிக்கொண்டிருந்தால் இன்னும் அதிகமாகக் கிடைக்கக்கூடும். என்னுடைய துரதிர்ஷ்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இவ்வளவு அநுகூலங்கள் உண்டானதும் தங்களாலேதான்" என்று சொல்லிவிட்டு அங்கே கிடைத்த வஸ்திரத்தை எடுத்து நீட்டி, "இதைத் தங்கள் அருமைத் திருக்கையினாலே கொடுக்க வேண்டும்" என்றார்.

மீ: (அதை வாங்கிப் பார்த்துவிட்டு மகிழ்ந்து) நீங்கள் பாடல் சொன்னீர்களா? ஸந்நிதானம் கேட்டருளியதா?

பசு. அந்தப் பாடலைச் சொன்னதனாலேதான் இவற்றை நான் பெற்றேன். இல்லாவிட்டால் இந்தச் சமயத்தில் அங்கே தலை நீட்ட முடியுமா?

மீ: ஸந்நிதானம் இன்னும் ஏதாவது கட்டளையிட்டதா?

பசுபதிபண்டாரம், "கொடுக்கும்பொழுது, 'இந்தச் செய்யுள் தான் உங்களுக்கு இந்த மரியாதையைச் செய்வித்தது' என்று ஸந்நிதானம் கட்டளையிட்டது" என்று சொல்லிவிட்டுச் சிரஞ்சிவிகளாக இருக்க வேண்டுமென்று இவரை வாழ்த்தி அந்த வஸ்திரத்தை வாங்கி விடைபெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன் ஊருக்குச் சென்றார்.

பலர் இவர் பாடலாற் பரிசு பெற்றது

அவர் சென்றபின் அடுத்த நிமிஷத்தில் அவருடைய சுற்றத்தாரும் முதியவருமாகிய ஒருவர் இவரிடம் வந்தார். எதற்காக வந்தாரோ என்றெண்ணி அவரை இவர் விசாரித்தார். வந்தவர், "பசுபதி பண்டாரத்துக்குக் கொடுத்ததுபோலவே எனக்கும் ஒரு செய்யுள் இயற்றித் தரவேண்டும். தந்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்" என்று மன்றாடினர். இவர் பலவகையாக மறுத்தும் அவர்

கேட்கவில்லை. பின்பு அவர் இவரிடம் ஒரு செய்யுள் பெற்றுத் தேசிகரிடம் சென்று வஸ்திரசம்மானம் அடைந்து சென்றார். இப்படியே உதயகாலம் வரையில் ஒருவர் பின் ஒருவராக வந்துவந்து முயன்று இவர் இயற்றிக் கொடுத்த பாடல்களைப் பெற்றுத் தேசிகரிடம் சென்று சென்று அவற்றைச் சொல்லிக்காட்டி வஸ்திர சம்மானம் பெற்று வந்தார்கள். ஒவ்வொருவருக்கும் மரியாதை செய்யும்பொழுது தேசிகர், "இந்தப்பாடலே உமக்குத் தக்க சம்மானத்தை அளிக்கின்றது" என்று சொல்லிச்சொல்லிக் கொடுத்து விடுத்தார். வஸ்திரங்களின் மதிப்பு, பாட்டல்களின் நயத்தால் ஒன்றற்கு ஒன்று அதிகமாகவே இருந்துவந்தது. பிள்ளையவர்களாலேதான் அந்தப்பாடல்கள் செய்யப்பெற்றன வென்பதைத் தேசிகர் அவற்றின் நடையால் தெரிந்துகொண்டா ரென்று நான் இங்கே எழுதுவது மிகை. பரிசுபெற்ற ஒவ்வொரு வரும் வந்து வந்து இப்புலவர் சிகாமணியை வாழ்த்திவிட்டே செல்வாராயினர்.

பிறருடைய நன்மைக்காக இப்புலவர் திலகர் செய்யுட்களைச் செய்து கொடுப்பதும் அவற்றைப் பெற்றவர்கள் அவை தம்மாற் செய்யப்பட்டனவென்றே சொல்லித் தேசிகரிடத்துச் சம்மானம் பெற்றுச் செல்வதும் அக்காலத்தில் வழக்கமாகவே இருந்து வந்தன. இதனால் பிள்ளையவர்களிடத்தே இயல்பாக அமைந் துள்ள ஜீவகாருண்யமும் தேசிகருக்கு இவர்பாலிருந்த நன் மதிப்பும் யாவருக்கும் புலனாகும்.

இப்படி அன்றிரவில் பாடல்பெற்றுச் சென்று பரிசுபெற்ற வர்கள் பலர். அவர்கள் கூறியனவாக அமைத்த செய்யுட்களில் இப்பொழுது தெரிந்தவை வருமாறு :

(விருத்தம்)

1. "தேமலி துறைசைச் சுப்பிர மணிய
தேசிகோத் தமமூன மொருவற்
காமலி சீர்ச்சு தரிசன மளித்தாய்
அஃதெவ ருக்குமின் றளிக்கும்
தூமலி நினது வள்ளன்மை யென்னைத்
தூண்டிட வின்றுவந் தடைந்தேன்
பாமலி நினது புகழினை மதித்துப்
பாடுவே னெனைப்புரந் தருளே."

[சுதரிசனம் - சக்கரம், நல்ல தரிசனம். ஒருவற்கு - திருமாலுக்கு.]

2 "குருவருக்கந் தனிலுயர்சுப் பிரமணிய தேசிகசிர்க்
குணக்குன் றேமா
மருவருக்கை கதலிசெறி பொழில்வீழி மிழலையிலோர்
வற்க டத்தில்
இருவருக்குப் படிக்காசன் றருளியநீ யதுபலர்க்கின்
நீதல் தேர்ந்தேன்
அருவருக்கு மிடியெனைவிட் டறப்படிக்கா சுடனுடை
அளிப்பாய் மன்னே."

[இருவரென்றது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும்
திருநாவுக்கரசு நாயனாரையும்.]

(கட்டளைக் கலித்துறை)

3. "தென்னருஞ் சிர்ச்சுப் பிரமணி யப்பெயர்த் தேசிகவந்
தொன்னரும் வேட்பப் பிரசங்கந் தான்பொழி யோர்முகிலே
பொன்னரும் வீதி நவகோடி சித்த புரமுடையாய்
என்னைசை தீர நவகோடி யின்றிரண் டீந்தருளே."

[பிரசங்கம் - உபந்யாஸம், தேனுகிய தண்ணீர்; கம் - நீர்.
நவகோடி சித்தபுரம் - திருவாவடுதுறை.
நவகோடி - புதிய ஆடை.]

[வெண்பா]

4. "ஒன்றளித்தாற் கோடியென வுன்னுவேற் குக்கோடி
இன்றளித்தா லென்னவென வெண்ணுவனே — நன்றுணர்வாய்
வண்ணமா டத்துறைசை வாழ்சுப் பிரமணிய
அண்ணலே யின்னே யருள்."

[கோடி - நூறு லட்சம், புதிய ஆடை.]

5. "ஆசையிலார்க் கேயொன் றளிப்பா யெனத்தெரிந்தும்
ஆசையுடை யாயென் றறிந்துவந்தேன் — ஆசையுடை
எங்கட்கொன் றீசுப் பிரமணிய வெம்மானே
வெங்கட் கலிநீங்க வே."

[ஒன்று - முத்தி. ஆசையுடையாய் - பொன்னுடையை யுடையாய்.
ஆசையுடை ஒன்று - பொன்னுடை ஒன்றை.]

6. "ஒன்றளிப்பா யென்றுணர்ந்து மோரிரண்டு கோடிநமை
இன்றளிப்பா யென்றெண்ணி யான்வந்தேன் — நன்றிமிகுத்
தித்தா ரணிமுழுது மெண்சுப் பிரமணிய
அத்தா வவற்றை யருள்."

[ஒன்று - முத்தி.]

7. "இல்லேனென் ரூரு மியம்ப விருப்பேனை
வல்லே யுடையேனை வாழுவருள்—நல்லோர்கள்
பேசும் புகழ்ச்சுப் பிரமணிய தேசிகநற்
றூசுஞ்செம் பொன்னுமளித் து."

[இல்லேன் - வீட்டிலிருப்பேன், வறியேன். உடையேன் - உடையை யுடையேன், செல்வமுடையேன். தூசு - ஆடை.]

இவ்வாறு முறையே கல்விப்பொருள், செல்வப்பொருளாகிய வற்றைத் தானம்செய்யும் இருபெருவள்ளல்களுடைய வள்ளன் மையைப் புலப்படுத்தி ஏழையர்களுடைய இரவும் அந்த நன்னுளி னது இரவும் விடிந்தன.

சுப்பிரமணிய தேசிகர் பாராட்டியது

இக் கவிஞர்பிரானுக்கு அந்த இராமுழுதும் நித்திரையே இல்லை. 'இந்நிகழ்ச்சியால் ஸந்நிதானத்தின் திருவுளத்தில் ஏதே னும் வேறுபாடான எண்ணம் நம்மைப்பற்றி உண்டாயிருக் குமோ!' என்ற கவலையை அடைந்து அவ்வாறு இருக்குமானல் எப்படியாவது அதைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று நினைந்து காலையில் அநுஷ்டானம் செய்துகொண்டு தேசிகரைத் தரிசித்தற்குச் சென்று வழக்கம்போலவே அவரை வந்தனம்செய் தெழுந்தார். அப்பொழுது தேசிகர் புன்னகைகொண்டு, "என்ன பிள்ளையவர்கள்! இராத்திரி வெகு வேடிக்கைகள் பண்ணிவிட்டீர் களே; மிகவும் சிரமமாக இருந்திருக்குமென்றும் தூக்கம் கெட் டிருக்குமென்றும் எண்ணுகிறேம்" என்று பாராட்டிக் கூறி அழைத்து நெற்றியில் திருநீறிட்டுப் பக்கத்திலிருக்கும்படி செய் தார். பின்பு அங்கேயிருந்த பிரபுக்களையும் வித்துவான்களையும் நோக்கி, "இவர்கள் இருப்பது ஆதீனத்திற்கு மிகவும் கௌரவ மாகவே இருக்கின்றது. என்ன பாக்கியம் இருந்தாலும் இதற்கு ஈடாகாது. குறைந்த கல்வியுடையோரையும் கௌரவிக்க வேண்டுமென்று எண்ணியிருக்கிற இவர்கள் குணம் யாருக்கு வரும்! ஆதீனத்தின் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்" என்று முதல்நாள் நிகழ்ந்தவற்றை விவரமாகச் சொல்லி எல் லோரையும் மகிழ்வித்தனர். அப்பொழுது இவர்,

"கடிப்பிகு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்

அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்" (நாலடியார், 200)

"ஆர்த்தசபை நாற்றொருவ ராயிரத்தொன் றும்புலவர்
வார்த்தை பதிஞ் யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு" (ஔவையார் பாடல்)

என்ற செய்யுட்களைக் கூறி, "எல்லாவற்றிலும் கொடை சிறந்த தென்பது யாவருக்கும் தெரிந்ததே. அதனாலேதான் வித்தைகளும் ஸாஹித்யங்களும் மேன்மேலும் பெருகிவருகின்றன. அக் கொடை இல்லையாயின் யாதும் இல்லையாய் விடும்;

'பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகம்
செயற்பால செய்யா விடினும்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு' (நாலடியார், 200)

என்னும் ஆன்றோர் வாக்கு இதற்குப் பிரமாணமன்றோ? எல்லாம் ஸந்நிதானத்தின் வண்மையாலுண்டாகும் விசேஷங்களேயன்றி அடியேன்போல்பவரால் உண்டாவது யாது?" என்று மிக்க விநயத்துடன் சொன்னர்.

காசிக்கலம்பகம் முதலியன பாடஞ் சொன்னது

பின்பு இவர் விடைபெற்றுக்கொண்டு உடனே கொலுமண்டபத்திற்கு விரைந்து வந்து அங்கே நின்ற மடத்துக் காரியஸ்தர் ஒருவரை யழைத்து என்னைச் சுட்டி, "இவருக்குக் காலையாகாரம்பண்ணுவித்து அனுப்பவேண்டும்" என்றார். அவர் அழைத்துச் சென்று அப்படியே செய்வித்து அனுப்பினர். ஆகாரம் செய்து கொண்டபின் விரைவிற் சென்று இவரைப் பார்த்தேன். அப்பொழுது காசிக்கலம்பத்தின் எஞ்சிய பாகத்தின் பாடம் அங்கே நடைபெற்று வந்தது. அதனைக் கேட்டுக்கொண்டே இருந்ததில் அரிய விஷயங்கள் பல எனக்குத் தெரியவந்தன. அன்று பதினொரு மணிக்குள் அந்த நூல் முற்றுப்பெற்றது.

பிற்பகலில் நெடுந்தூரத்திலிருந்து வந்த ஒருவர் சோழமண்டலசதக ஏட்டுப்பிரதியொன்றை இவரிடம் கொடுத்தார். பெற்று அதைப் படிக்கும்படி சொன்னர். நான் அப்படியே செய்தேன். கேட்டு அரிய விஷயங்கள் சிலவற்றை எனக்குப் புலப்படுத்திக் கொண்டே வந்தார்.

5. திருவாவடுதுறைக் குருபூஜை நிகழ்ச்சிகள் அரு

"சீக்கிரத்தில் வந்து இவ்விடத்திலேயே இருந்துகொண்டு எங்களுக்குப் பாடஞ்சொல்லவேண்டும்" என்று தம்பிரான்களிற் சிலரும் மேலகரம் சண்பகக் குற்றாலக் கவிராயர் முதலிய சிலரும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவர் அப்படியே செய்வதாக அவர்களுக்கு வாக்களித்துவிட்டு என்னைப் பார்த்து, "நீர் ஊர் போய் வேண்டிய புத்தகங்களை எடுத்துக்கொண்டு நேரே மாயூரம் வந்து படித்துக்கொண்டிரும்; நான் இங்கே வரும் பொழுது உடன்வரலாம்" என்று விடைகொடுத்து அனுப்பினர்.

மாயூரத்திற் பாடம் சொன்னது

நான் ஊர் சென்று சிலதினம் அங்கே இருந்துவிட்டு அப்பால் என் புத்தகங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு மாயூரம் சென்றேன். அதற்குள் இவரும் அங்கே வந்து மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். அங்கே நடந்த பாடம் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகள் பிரபந்தத் திரட்டில் நால்வர் நான்மணிமாலை முதலியன; நானும் உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

நான் திரு அம்பர்ப்புராணம் பாடம் கேட்டது

இரண்டு தினங்கள் சென்ற பின்பு அதற்கு முன்னமே பாடத் தொடங்கி முற்றுப்பெறுமலிருந்த திரு அம்பர்ப் புராணச் சுவடியை எடுத்து வரும்படி எனக்குச் சொன்னர். எடுத்துச் சென்றேன். அதை முதலிலிருந்தே படிக்கச் சொல்லிப் பொருளும் சொல்லிவந்தார். சில தினத்தில் அதில் எழுதியிருந்த பாகம் முற்றுப்பெற்றது. அந்நூலை இடையிடையே திருத்தச் சொன்னபடி திருத்திக்கொண்டே படித்தேன்; "எழுதுகிறவர்களில் நான் சொன்னபடியே எழுதுவோருமுண்டு; வேறுபடத் திருத்தித் தம் மனம்போனவாறே அங்கங்கே எழுதுபவருமுண்டு. இப்புத்தகத்தை இதுவரையில் எழுதிவந்தவர் இரண்டாம் வகையைச் சேர்ந்தவராதலால், ஐயமுற்றுப் படிப்பித்து இப்பொழுது திருத்தும்படி செய்தேன்" என்று திருத்துவித்ததற்கு இவர் காரணம் சொன்னர்.

---

6. திருவாவடுதுறை வாசம்

அம்பர்ப்புராணம்

அப்பால் இவர் முன்புதாம் வாக்களித்திருந்தபடி திருவாவடுதுறை செல்ல நிச்சயித்துப் புறப்பட்டார். அம்பர்ப்புராணத்தை எடுத்துக்கொண்டு உடன்வரும்படி சொன்னமையால் அதனையும் என் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு உடன்சென்றேன். மாயூரத்தின் மேல்பாலுள்ள கூறைநாடு செல்லும்வரையில் பொதுவாகப் பாடவகைகளைப்பற்றிப் பேசிக்கொண்டே இருந்துவிட்டு அம்பர்ப்புராணச்சுவடியையெடுத்துக்கொள்ளும்படி சொல்லி ஆனபாகத்தில் இறுதிப்பாடலைப் படிக்கச்செய்து கேட்டார். பின்பு மேலே தொடர்ச்சியாகச் செய்யுட்களை இயற்றிச் சொல்லிக்கொண்டேபோனார். இவர் பாடத்தொடங்கியது அப்புராணத்தில் நந்தன் வழிபடு படலத்தில் நிசை-ஆவது பாடல். திருவாவடுதுறைத் தெற்கு வீதி செல்லும்வரையில் மேற்பாகத்தைச் சொல்லிக்கொண்டே சென்றார்; நான் எழுதிக்கொண்டே போனேன். அந்தப் பகுதி நந்தனென்னும் அரசன் தனது நகரிலிருந்து புறப்பட்டு இடையிலேயுள்ள சிவஸ்தலங்கள்தோறும் சென்று சென்று தரிசனம் செய்துகொண்டு திருவம்பரை அடைந்தானென்பது. அதிலுள்ள செய்யுட்களில் தலப்பெயர்களை எதுகையில் அமைத்திருத்தலும் வழியெதுகைகளும் ஸ்தலங்களின் சரித்திரங்களும் இன்பத்தை உண்டுபண்ணின. இவர் விரைவாகச்செய்யுள் செய்யும் ஆற்றலையுடையவரென்று பலரும் புகழ்ந்துசொல்லுதலைக்கேட்டு அந்த நிலைமையை எப்பொழுதாவது பார்க்கும்படி நேருமோவென்று ஆவலோடு பலநாளாக எதிர்பார்த்திருந்த எனக்கு இவர் பாடல்களைச் சொல்ல அவற்றை எழுதும் பாக்கியம் அன்று கிடைத்ததைக் குறித்து மெத்தச் சந்தோஷம் அடைந்தேன். 'இனி யாரேனும் இவர்களைப்போலப் பாடப்போகிறார்களா?' என்ற எண்ணமும் எனக்கு அப்போது உண்டாயிற்று. ஏதேனும் ஒரு பாடலைச் செய்துவிட்டு அதைப் பிறரைக் கொண்டும் திருத்துவித்துத் தாமே கையில் எடுத்துக்கொண்டு, "இச்செய்யுள் எப்படியிருக்கிறது பாருங்கள்? நான் வெகுசீக்கிரத்திற் செய்தேன். இதைப்போலவே யாராவது பாடுவார்களா?" என்று

சிலர் பெருமை பாராட்டிக் கொண்டிருத்தலைப் பலவிடத்திற் கண்டிருக்கிறேன். இவரோ சிறிதேனும் பெருமிதமின்றியும் தம்முடைய கவியைப் பாராட்டாமலும் வேறு பேச்சின்றியும் மேலே மேலே செய்யுள் செய்துகொண்டு போதலைப் பார்த்த எனக்கு விம்மிதம் உண்டாயிற்று.

கவிஞர்களுடைய பேராற்றல் இத்தகையதென்பதைச் சரித்திரங்களின் மூலமாக அறிந்தவனேயன்றி அன்றுபோல நான் நேரிற்பார்த்ததில்லை. ஆதலின் ஒருமகாகவியின் வாக்கிலிருந்து ஆற்றொழுக்கைப் போலக் கவிதாப்பிரவாகம் பெருகிக்கொண்டிருப்ப அதனைக் காதினுற்கேட்டும் கையினுலெழுதியும் மனத்தினுலறிந்தும் இன்புற்ற எனது நிலை இங்கே எழுதற்கரியது.

வண்டியிற் செல்லும்பொழுது உண்டான அசைவால் ஏடுகளில் நான் எழுதிய பாடல்கள் வரிகோணியும் எழுத்துக்கள் நிலைகுலைந்தும் இருத்தலை அந்தச் சுவடியில் இன்றும் காணலாம்.

அந்தப் பகுதியிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :

(விருத்தம்)

"வெற்றியூ ரொருமூன் றட்ட விமலனைக் கமலத் துள்ளான்
பற்றியூர் கலுழப் புள்ளான் பறந்திடந் தினுங்கா ணுனைச்
சுற்றியூர் கோள்வ ளைந்த மதிநிகர் சோலை சூழ்ந்த
ஒற்றியூர் புகுந்து போற்றி யுவணின்று மெழுந்தா னன்றே"

"எயிலையன் றட்ட மூர்த்தி யெல்லாமா மட்ட மூர்த்தி
அயிலையங் கையிற் கொண்டா னைங்கையான் றந்தை மேய
கயிலையென் றெடுத்துப் பேசும் புன்னையங் கானல் சூழும்
மயிலையம் பதியுட் புக்கு வள்ளலை வணங்கிப் போற்றி"

"* ஒருகழு கும்ப ரேகி யுழன்றுங்கா ணரியான் பாதம்
இருகழு கென்றுங் காணூஉ விறைஞ்சொரு வரையும் போற்றி
அருண்மய மகலா தாக வழன்மய மாயி னன்செம்
பொருண்மய மவனே யென்னப் பொலிதிரு வரையும் போற்றி."

திருவாவடுதுறையிற் பாடம் ஆரம்பித்தது

திருவாவடுதுறையின் தெற்கு வீதி சென்றவுடன் இவர் தம்முடைய விடுதிக்குச் சென்று அநுஷ்டானம் செய்து கொண்டார்.

---

* பிரமதேவர் கழுகு வடிவங்கொண்டு சிவபெருமானுடைய திருமுடியைத் தேடினரென்றும் ஒரு வரலாறுண்டு.

பின்பு ஞானசிரியரைத் தரிசித்தற்காக மடத்திற்குச் சென்ற பொழுது இவருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டே இருந்த குமாரசாமித் தம்பிரான் முதலியோர் முகமலர்ச்சியோடு வரவேற்று ஒடுக்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இவர் தேசிகரை வழக்கம்போலவே தரிசித்து அவருடைய கட்டளையின்படி அருகிலிருந்தார். இவருடைய நல்வரவைக் குறித்துத் தேசிகர் பாராட்டியதன்றி, "படிப்பதற்குத் தம்பிரான்களும் பிறரும் மிக்க ஆவலோடிருக்கிறார்கள்; நாளைக் காலையிலேயே பாடம் தொடங்கி விடலாம். பாடங்களை இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். குமாரசாமித் தம்பிரான் நல்ல பயிற்சியுள்ளவராதலால் அவருக்கு ஒரு பாடமும் மற்றவர்களுக்கு ஒரு பாடமும் வைத்துக்கொண்டால் தங்களுக்கு அதிக சிரமம் இராது. ஒன்றைக் காலையிலும் மற்றொன்றைப் பிற்பகலிலும் வைத்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்.

மறுநாட் காலையில் இவர் அநுஷ்டானம் செய்துவிட்டு ஒடுக்கத்திற்குச் சென்றார். தம்பிரான்களும் பிறரும் அநுஷ்டானுதிகளை முடித்துக்கொண்டு அங்கே வந்து காத்திருந்தார்கள். 'என்ன பாடம் இப்போது ஆரம்பிக்கவேண்டும்?' என்று யோசித்தபொழுது சுப்பிரமணிய தேசிகர், "குமாரசாமித் தம்பிரானுக்குத் திருவானைக்காப் புராணமும் ஏனையோர்க்குச் சீகாளத்திப் புராணமும் தொடங்கலாம்" என்று சொன்னார். இவ்வாறு அவர்கள் கூறுவதைக் கேட்ட நான், "நம்மை ஒருவரும் கவனிக்கவில்லையே!" என்றெண்ணிச் சற்று முகவாட்டத்தோடு இருந்தேன். இப்புலவர்பிரான் என்னை நோக்கினார். பார்த்த குறிப்பை அறிந்த தேசிகர், "இவரை எந்த வகையிற் சேர்க்கலாம்?" என்றபோது இவர் என்னைப் பார்த்தார். ஆவல்மிகுதியால், "நான் இரண்டு பாடங்களையும் கேட்க விரும்புகிறேன்" என்று சொன்னேன். "புத்தகங்கள் உள்ளனவா?" என்று தேசிகர் என்னை விசாரித்தார். இல்லையென்றேன். உடனே மடத்துப் புத்தகசாலையிலிருந்த திருவானைக்காப் புராணத்தையும், சீகாளத்திப் புராணத்தையும் வருவித்து எனக்கு அளித்தார். "இந்த இரண்டு பாடமும் நடக்கும்பொழுது செய்யுட்களை நீரே படித்து வாரும்" என்று தேசிகர் கூறினமையால் நான் அவ்வாறே படித்து வரலானேன்.

முதலில் திருவானைக்காப் புராணத்தில் விநாயகர் துதி படிக்கப்பட்டது. அதற்குப் பொருள் சொல்லி முடித்த வுடன் மற்ற வகையாருக்குச் சீகாளத்திப்புராணப்பாடம் ஆரம் பிக்கப்பட்டது. அதில் விநாயகர் துதி முடிந்தவுடன் இவரைப் பார்த்து, "நாள்தோறும் பிற்பகலிற் சீகாளத்திப்புராணப்பாடத் தை வைத்துக்கொள்ளுங்கள். முற்பகலில் திருவானைக்காப் புரா ணம் நம்முன்னே நடக்கட்டும்" என்று தேசிகர் சொல்லவே இவர் அங்ஙனமே செய்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

எனக்கு ஆகாரம் பண்ணுவித்தது

அப்பால் மறுநாட் காலையில் திருவானைக்காப் புராணத்தின் மேற்பாகத்தைச் சுப்பிரமணிய தேசிகர்முன் படிக்கத் தொடங்கி னேம். இக் கவிநாயகர் எனக்குமட்டும் தெரியும்படி, "ஆகாரம் பண்ணி விட்டீரா?" என்று கேட்டார். "இல்லை" என்றேன். அதைக்கண்ட தேசிகர், "ஐயா, என்ன சொன்னீர்கள்?" என்ன, பிள்ளையவர்கள், "காலையில் ஆகாரம் பண்ணி யாயிற்றுவென் றேன்" என்று சொல்லிவிட்டு மேலே பாடம் சொல்லத் தொடங்குமுன், தேசிகர் அங்கே நின்ற பிராமணக்காரியஸ்த ரொருவரை யழைத்து, "ஒவ்வொரு நாளும் காலையில் இவருக்கு ஆகாரம் பண்ணுவித்து அனுப்பவேண்டும். மற்றக் காலங்களிலும் ஆகார விஷயத்தில் நீரே இவரைக் கவனித்துக்கொள்ளவேண்டும்" என்று உத்தரவு செய்து என்னைப் போய்வரும்படி சொன்னர்.

நான் போய்வரும் வரையிற் பாடம் நிறுத்திவைக்கப்பட் டிருந்தது. சீக்கிரத்திற் சென்றுவந்து படிக்கத்தொடங்கினேன். தேசிகர் கவனித்துக்கொண்டே யிருப்பவராகி இடையிடையே தோற்றிய அரிய கருத்துக்களை விளங்கச் சொன்னர். மணி பத்தானவுடன், "நீங்கள் போய்ப் பூஜையை முடித்துக்கொண்டு இங்கே பூஜையின் தரிசனத்துக்கு வரவேண்டும்" என்று தேசிகர் கட்டளையிட அங்ஙனமே இவர் சென்றார்.

நான் படித்த முறை

படிக்கும்பொழுது ஒவ்வொரு பாடலையும் முதலில் ஒரு முறையும், பொருள் சொல்லும்பொழுது சிறுசிறுபாகமாக ஒரு முறையும், பின்பு ஒருமுறையும் நான் படிப்பது வழக்கம். பாடம்

கேட்குங் காலங்களிலெல்லாம் இவ்விதமே நடைபெறும். திருவாலவாய்க்காப்புராணம் மிகவும் கடினமான நூலாதலால் இவர் எவ்வளவு தெளிவாகச் சொல்லியும் முதலில் நாளொன்றுக்கு ஐம்பது பாடல்களுக்குமேல் நடைபெறவில்லை.

உடையவர்பூஜை பெற்றது

இப்படி நடைபெறுகையில் ஒரு வாரத்திற்கெல்லாம் மகாசிவராத்திரி புண்ணிய காலம் வந்தது. அன்றைத்தினம் பன்னிரண்டு மணிவரையிற் காலைப்பாடம் நடைபெற்றது. எல்லோரும் உபவாசமிருக்கும் தினமாதலால் பிற்பகலிற் பாடம் நடைபெறவில்லை. அன்று உடையவர்பூஜை இவருக்குத் தேசிகரால் எழுந்தருளுவிக்கப்பட்டது. அப்பொழுது அதைக் குறித்துத் தேசிகர்மீது இவர் பின்னுள்ள பாடலை இயற்றி விண்ணப்பம் செய்துகொண்டனர்.

(கட்டளைக் கலித்துறை)

* "பெரும்புங் கவர்புகழ் கோமுத்தி வாழ்சுப் பிரமணிய
அரும்புங் கவன்பதம் யான்றொழ வென்கை யருட்குறியொன்
றிரும்புங் கரைய வெடுத்தளித் தானதை யேத்தல்செய்வேன்
கரும்புங் கனியு மெனவன்பு சாருங் கதியுமுண்டே."

அது தொடங்கி இவர் அபிஷேகம் அருச்சனை நைவேத்தியம் முதலியவற்றிற்குரிய பொருள்களை மிகுதியாக வருவித்து நாள்தோறும் நெடுநேரம் பூஜை செய்து வருவாராயினர். இளநீர் வழுக்கை, பஞ்சாமிர்தம், நிவேதனங்கள் முதலியவை அங்கேயுள்ளவர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

திருவாலவாய்க்காப் புராணம் உபதேசப்படலப் பாடம் நடைபெறும்பொழுது பிள்ளையவர்களும் அங்கேவந்திருந்த சைவசாஸ்திரங்களில் நல்ல பயிற்சியுள்ள பெரியோர்களும் கேட்டு இன்புறும்படி அப்படலத்திலுள்ள சாஸ்திரக் கருத்துக்களைச் சுப்பிரமணிய தேசிகர் நன்றாக விளக்கிச் சொன்னார். அந்த அருமை

---

* அருட்குறி - சிவலிங்கப்பெருமான். இச் செய்யுள் பின்பு இவர் இயற்றிய திருவிடைமருதூர்த் திரிபந்தாதியிற் குருவணக்கமாகச் சேர்க்கப்பெற்றது; ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு.

யைப் பிள்ளையவர்களும் ஏனையோரும் பின்பு அடிக்கடி பாராட்டிக்கொண்டே வந்தார்கள்.

நான் மல்லிகைமாலை பெற்றது

பாடம் நடைபெறுகையில் ஒருநாட் காலையில் திருவிடைமருதூர்க் கோயிலிலிருந்து வஸந்தோத்ஸவ விசேஷத்தை முன்னதாகத் தெரிவிப்பதற்கு வந்த ஆதிசைவர் முதலியோர்களால் திருநீற்றுப் பிரசாதம் முதலியன தேசிகரிடம் சேர்ப்பிக்கப்பெற்றன. அவற்றுள் ஒரு தாம்பாளத்தில் மல்லிகை மாலைகள் மிகுதியாக இருந்தன. அவற்றைப் பார்த்துவிட்டு இப்புலவர்தலைவர் என்னையும் பார்த்தார். அக்குறிப்பையறிந்த தேசிகர் அவ்வளவு மாலைகளையும் எடுத்து நான் வாங்கிக்கொள்ளும்படி வீசினார். அவற்றைக் கையிலேந்தி வைத்துக்கொண்டு பாடல்களைப் படிக்கத் தொடங்கினேன். இவர் மீட்டும் என்னைப்பார்த்து, "இம் மாலைகளைக் குடுமியிற் சுற்றிக்கொள்ளும்" என்று குறிப்பித்தார். குறிப்பித்தும் தேசிகருக்கு முன் அங்ஙனம் செய்வதற்கு அஞ்சினேன். அதனை அறிந்த அவர், "இம்மாலைகளைக் குடுமியிற் சுற்றிக்கொண்டே படியும்" என்றார். அவர் வார்த்தையை மறுத்தற்கு அஞ்சி அவ்வாறு செய்தேன். அது தொடங்கி நான் இருக்கும்பொழுது சிவப்பிரசாதங்களோடு மாலைகள் வந்தால் அவற்றைத் தேசிகர் எனக்கு அளித்து வருவதுண்டு. அவருடைய பரிபூர்ண தசை வரையில் அவ்வழக்கம் நிகழ்ந்து வந்தது.

ஸ்ரீ அப்பா தீட்சிதர் ஆட்சேபித்தது

காலைப் பாடத்தில் திருவானைக்காப்புராணம் முடிந்த பின்பு திருநாகைக்காரோணப்புராணம் தொடங்கப் பெற்றது. அதனைப் படித்துக்கொண்டு வருகையில் தலவிசேடப் படலத்திற் பிரளய கால வர்ணனைப் பகுதி நடைபெறும்போது திருவாலங்காட்டு அப்பாதீட்சிதரென்பவர் வந்தார். அவர் ஸ்ரீ அப்பைய தீட்சிதர் பரம்பரையினர்; வியாகரணத்திலும் சைவ சாஸ்திரங்களிலும் நல்ல பயிற்சியுடையவர். அவரிடத்தில் எத்தனையோ சிஷ்யர்கள் மடத்தின் உதவியாற் படித்துப் பெரிய வித்துவான்களாக ஆனதுண்டு. அப்பொழுதும் சிலர் படித்துக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் படிக்கும் பகுதியை அப்பாதீக்ஷிதர் கவனித்துக் கேட்பாராயினர். அங்ஙனம் கேட்டு வருகையில் அவர் ஒவ்

வொரு பாடலிலுமுள்ள விஷயத்தை என்ன காரணத்தாலோ *ஆக்ஷேபித்துக்கொண்டே வந்தார். பிள்ளையவர்கள் சுருக்கமாக விடை கூறியும் சமாதானம் சொல்லியும் அதனைப் பாராட்டாமல் அவர் மீட்டும் மீட்டும் ஆட்சேபம் செய்து வந்தனர். அதனால் இப்புலவர் பெருமானுக்கு அதிருப்தி உண்டாயிற்று. அதனையும் பாடம் தடைப்படுதலையும் அறிந்த சுப்பிரமணிய தேசிகர் அவர் வந்த காரியத்தை விசாரித்து முடிவு செய்து விடைகொடுத்து விரைவில் அவரை ஊருக்கு அனுப்பி விட்டு, "பாடம் நடக்கலாம்" என்றனர். வழக்கம்போலவே பாடம் நடைபெற்றது. இக் கவிஞர்பிரான், "திருவாலங்காட்டுத் †தியாகராஜ சாஸ்திரிகள் இருந்தால் இந்தப் பாகத்தைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைவார்கள். இங்கே இப்போது அவர்கள் இல்லாதது ஒரு குறையே" என்று எங்களிடம் சொல்லிக் கொண்டே தம்முடைய வீடு சென்றார்.

'தர்மசங்கடமான விஷயம்'

மறுநாள் பாடம் நடைபெற்றபொழுது மேற்கூறிய தியாகராஜ சாஸ்திரிகள் புதுக்கோட்டையிலிருந்து திருவாலங்காட்டுக்குப் போய்விட்டு உடனே ஆதீன கர்த்தரைப் பார்ப்பதற்காக மடத்திற்குத் தம் சிஷ்யர்களுடன் தற்செயலாக வந்தார்.

அவர் உள்ளே வந்தவுடன் சுப்பிரமணிய தேசிகர் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றுச் சிலநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

---

* யாரேனும் ஒன்றைச் சொன்னால் ஆட்சேபிப்பதும் ஆட்சேபிக்கப்பட்டவர்கள் சமாதானஞ் சொல்லுவதும் வாக்கியார்த்தமென்று வடமொழியிற் கூறப்படும்.

† இவர் ஸ்ரீ அப்பைய தீட்சிதர் பரம்பரையினர்; சில சாஸ்திரங்களிலும் வேதத்திலும் வல்லவர்; அலங்கார சாஸ்திரத்தில் நிபுணர்; சங்கீதத்திலும் ஸாஹித்யம் செய்தலிலும் நல்ல ஆற்றலுடையவர்; வீணை வாசிப்பதில் அதிகச் தேர்ச்சி பெற்றவர்; இங்கிலீஷ் முதலிய வேறு பாஷைகளிலும் இவருக்குப் பயிற்சியுண்டு; ஒவ்வொரு பாஷையிலும் செய்யுள் செய்யும் ஆற்றலுள்ளவர். இவர் உபந்யாஸம் செய்வது சுவையுடையதாயிருக்கும்; சிவகதை பண்ணுகிற வழக்கமும் இவருக்கு உண்டு. சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே கேட்பவர்கள் வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமல் ஆனந்தித்துக்கொண்டே யிருக்கும்படி செய்வார் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சின்னப்பட்டம் பெற்றது தொடங்கி ஸம்ஸ்கிருத பாடஞ் சொல்லி வந்ததன்றிப் பல சாஸ்திரங்களு

இக்கவிஞர்தலைவரும் சாஸ்திரிகளோடு சிலநேரம் சம்பாஷித்தனர். அப்பால், "நேற்று நடந்த பாகத்தை இவர்களுக்குப் படித்துப் பொருள் சொல்லவேண்டும்" என்று தேசிகர் சொன்னார். அவ்வண்ணமே நாலைந்துசெய்யுட்கள் ஆயின. ஒவ்வொருபாடலின் பொருளையும் கேட்கும்போது சாஸ்திரிகள் ஆனந்தமடைந்து, "உங்களைப்போல் பாடுகிறவர்கள் யார் இருக்கிறார்கள்? இவ்வளவு அழகாகக் கற்பனைகளை அமைக்கும் சக்தி உங்களுக்குத்தான் இருக்கிறது. தமிழிலே பயிற்சி இல்லாத எனக்கே இந்தப் பாடல்களின் பொருள்கள் நன்றாக விளங்குகின்றன. ஸாஹித்ய மென்பது இதுதான். பூர்வஜன்மத்தில் நீங்கள் கம்பராக இருந்திருக்கவேண்டும்" என்று இக்கவிநாயகரைப் பாராட்டிக்கொண்டிருந்தார்.

சுப: இந்தப் பாடல்களில் ஏதேனும் குற்றம் காணப்படுகிறதா?

தியாக: இந்தப்பாடல்கள் சஞ்சரிக்கிற இடங்களிற் கூடக் குற்றம் இராதே. அப்படியானால் இவற்றில் எப்படியிருக்கும்? நிர்த்தோஷமான வாக்கு.

சுப: இவற்றில் ஏதாவது குற்றமிருக்கிறதென்று யாராவது சொன்னால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

தியாக: அவனை மஹா அயோக்கியனென்றும் துஷ்டனென்றும் மூர்க்கனென்றும் மஹா அஹங்காரியென்றும் சொல்வேன். அப்படிச் சொன்னவன் யார்?

சுப: உங்களுடைய குருவே.

தியாகராஜ சாஸ்திரிகள், "அப்படியா!" என்று நடுநடுங்கி உடனே எழுந்து இரண்டுகைகளையும் தலைமேற்குவித்துக்கொண்டு *வடதிசையை நோக்கிக் கண்ணைமூடிக்கொண்டு, "ஹரஹர மஹாதேவா! சிவசிவா! என்னுடைய பதற்றமான வார்த்தைகளை

டைய நுட்பங்களையும் பல வடமொழிக் காவியங்களின் நுட்பங்களையும் அலங்காரப் பகுதிகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒய்வு நேரங்களில் தெரிவித்து அவரை உலகத்திற்கு மிகவும் பயன்படும்படி செய்தவர். தேசிகருடைய முக்கியமான ஸம்ஸ்கிருத வித்தியாகுரு இவரே. பிள்ளையவர்களிடத்துப் பேரன்புடையவர்,

* இவருடைய குருவாகிய அப்பா தீட்சிதருடைய ஊர் திருவாலங்காடு; அது திருவாவடுதுறைக்கு வடக்கேயுள்ளது.

க்ஷமிக்கவேண்டும். ஆசார்ய மூர்த்தே!'' என்று சொல்லிக் கொண்டும் கண்ணிற் கருவிழிகளே மேலே செலுத்தித் தியானித்துக் கொண்டும் நின்றார்.

சுப: (புன்முறுவல் கொண்டு) சாஸ்திரிகளே! இருக்கவேண்டும். இவ்வளவுதூரம் நீங்கள் மனத்தைச் செலுத்துவீர்களென்பது நமக்குத் தெரியாது. ஏதோ நடந்ததைச் சொல்லவேண்டியிருந்தமையால் சொல்லும்படி நேர்ந்தது. பொறுத்துக் கொள்ளவேண்டும் பிள்ளையவர்களிடத்தில் தாங்கள் மிகுந்த அபிமானமுடையவர்களாதலால் தங்களிடத்தில் படித்துக் காட்டித் தங்களுடைய சந்தோஷத்தைப் பெறவேண்டுமென்பதே நமது கருத்தாதலால் இங்ஙனம் செய்யலாயிற்று.

தியாகராஜ சாஸ்திரிகள், ''சந்நிதானம் என்னை இப்படிப்பட்ட தர்ம சங்கடமான நிலையிற் கொண்டுவந்து விட்டதே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! இனிமேல் இப்படிப்பட்ட சங்கடத்தில் என்னை இழுத்துவிடக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டே யிருக்கையில் நேரமாய்விட்டபடியால் எல்லோரும் விடைபெற்று எழுந்து சென்றார்கள். முதல்நாள் மிகுந்த வருத்தமடைந்துகொண்டேயிருந்த எங்களுக்கெல்லாம் இந்த நிகழ்ச்சி பெரியதோர் ஆறுதலை விளைவித்தது. எல்லோருக்கும் விடை கொடுத்துவிட்டுத் தேசிகர் ஸ்நானத்துக்குச் சென்றார்.

ஒரு பாடலின் சரியான பாடம்

ஒரு சமயம் பல அன்பர்களிடம் துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளுடைய புலமைத்திறத்தைப் பாராட்டிக்கொண்டிருக்கையில் அவர் பிடாரியென்னும் தெய்வத்திற்கு ஒரு சீட்டுக்கவி எழுதி விடுத்ததாகச் சொல்லி விட்டு இவர் என்னைப் பார்த்தார். அக்குறிப்பை அறிந்து நான்,

(விருத்தம்)

''திருந்துதமி ழிலக்கணைவந் திணைக்கோவை விருத்தகிரிச்
செல்வர்க் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை வெங்கனூர்ப்
பிடாரி காண்க

இரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா மற்காத்திங்
கிருக்கும் நீநம்
முருங்கைதனை வேரோடுங் களைவதென்ரு லீதுனக்கு
முறைநன் ரூமோ ''

என அந்தச் செய்யுளைச் சொன்னேன். இவர், ''விருத்தகிரிச் செல்வரென்பது பாடமன்று ; திருவெங்கைச்செல்வ ரென்பதே பாடம்'' என்ரூர் 'இவர் கூறுவது பிழையாயிருக்குமா ? இவருடைய பாடமன்ரே கொள்ளற்பாலது ?' என்பதை அச்சமயத்தில் உணராமல் நான் மறுத்து, ''தனிப்பாடற்றிரட்டின் அச்சுப் பிரதியில் அப்படித்தான் இருக்கிறது'' என்றேன். நான் அங்ஙனம் கூறியதைக் கேட்டு அருகிலிருந்தவர்கள் என்னைப் பார்த்தார்கள். அவர்கள் பார்வையினுல்தான் நான் மறுத்துச் சொன்னது பிழையென்பது புலப்பட்டது. நான் செய்தது குற்றமெனினும் இவர் அதனைக் காட்டிக்கொள்ளாமல், ''அச்சிலிருப்பதால் சரியான தென்று நினைக்கக் கூடாது. பாஷையிற் பயிற்சியில்லாதவர்கள் துணிந்து எதையும் அச்சிட்டுவிடுவார்கள். விஷயம் தெரிந்தவர்கள் அச்சிட்டால் சரியாக இருக்கும்'' என்று சொன்னர். பிற்காலத்தில், இவர் சொன்னதே சரியென்று என் அனுபவத்திலும் தெரியவந்தது.

மகாவைத்தியநாதையர் பெருமையை நான் அறிந்தது

பிள்ளையவர்கள் வேறு காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கையில் நானும் சில மாணவர்களும் அவர்களுடைய நோக்கத்தின்படியே இரவில் ஆதீன கர்த்தரிடம் சென்று சில சமயங்களிற் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவதுண்டு. அக்காலங்களில், ''இன்றைக்கு என்ன பாடம் நடந்தது ? பாடங்களில் என்ன என்ன விசேடங்களை அறிந்தீர்கள் ?'' என்று அவர் கேட்பார். கேட்டவற்றிற்கு ஜாக்கிரதையாக விடைசொல்லிவிட்டு வருவோம். நாங்கள் சொல்லுவதில் ஏதேனும் குற்றமிருந்தால் அவர் அதைத் திருத்துவார்.

நாங்கள் செல்லுங்காலங்களில் * அவருக்கு முன் திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, இலக்கண விளக்கம் முதலியவற்றுள் ஏதேனும் ஒரு பாடம் நடைபெற்றுக்கொண்

* தேசிகரும் ஓய்வு நேரங்களில் சிறந்த நூல்களை யாருக்கேனும் பாடம் சொல்லி வருவதுண்டு.

டிருக்கும். அதுவும் எங்களுக்குப் பேருதியமே. மாணக்கர்களோடு பழகுவதில் அவருக்கு மிகுந்த திருப்தியுண்டு; "ஏதேனும் ஆக வேண்டியதுண்டா?" என்று எங்களைக் கேட்டு நாங்கள் சொல்லுவனவற்றை அப்பொழுது அப்பொழுது முடித்துக் கொடுப்பார்.

ஒருநாள் தேசிகர் என்னை நோக்கி, "சங்கீதப் பழக்கத்தை விருத்தி செய்துகொண்டால் நலமாக இருக்கும்; அதனோடு சேர்ந்து தமிழ்க்கல்வியும் மிகவும் பயன்படும்; மகா வைத்திய நாதையரவர்கள் சங்கீதப் பயிற்சியோடு தமிழிலும் நல்ல பாண்டித்திய முள்ளவர்களாக இருப்பதால் அவர்களுடைய வித்தை உலகத்தில் நன்றாக விளங்குகின்றது" என்று சொன்னார்; அன்றியும் தாம் கல்லிடைக்குறிச்சியில் இருக்கும்பொழுது அவர் தம் தமைய னுருடன் அங்கே வந்ததும் அவருடையஒப்புயர்வற்ற கானத்தைக் கேட்டு மற்றச் சங்கீத வித்துவான்களைக் காட்டிலும் அவருக்கு அதன்பால் மிக்க ஆற்றல் இருத்தலையறிந்து ஒரு மகா சபை கூட்டி அவருக்கு மகா வைத்தியநாதையரென்ற பட்டத்தைத் தாமளித்ததும் பிறவுமாகிய வரலாறுகளையெல்லாம் சொன்னார். சொல்லிக்கொண்டு வரும்பொழுது, "அவர்களைத் தரிசிக்க வேண்டுமென்கிற விருப்பம் எனக்கு நெடுநாளாக உண்டு; அதற் குரிய நற்காலம் இதுவரையில் எனக்குக் கிட்டவில்லை இனிக் கிடைக்குமென்று நினைக்கிறேன்" என்று விநயத்துடன் சொல்லி விட்டு வந்தேன்.

இப்படிச் சென்று வருவதால், ஒவ்வொரு நாளிலும் நாங் கள் தெரிந்துகொண்ட அரிய விஷயங்கள் பலவாகும். நிகழ்ந்த வற்றை உடனுடன் பிள்ளையவர்களிடம் தெரிவித்துவிடுவோம்.

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் வந்தது

சில தினங்களுக்குப் பின்பு ஒருநாட் காலையில், கோடக நல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் திருவையாறு முதலிய ஸ்தலங்கள் ஏழனுக்கும் திருமழபாடிக்கும் திருப்பணி செய்வித்து ஒரேதினத் தில் அந்த எட்டனுக்கும் கும்பாபிஷேகம்செய்விக்க நினைத்து அந் தச் செலவிற்காகப் பலரிடத்தும் சென்று பொருள் சேகரித்துக் கொண்டு அதன்பொருட்டே திருவாவடுதுறைக்கும் வந்து ஓரிடத் தில் தங்கினர். மகா வைத்தியநாதையர் முதலிய பல சாம்பவர்

களும் திருநெல்வேலி ஐயாசாமி பிள்ளையவர்கள் முதலிய வேறு பல அடியார்களும் செறிந்த கூட்டம் அவருடன் வந்திருந்தது. அவருடைய வரவைக் கேட்ட இக்கவிஞர் கோமான் அவரைத் தரிசிக்க விரும்பி வந்தார். பிள்ளையவர்களைக் கண்டவுடன் ஸ்வாமிகள் எழுந்து நிற்க இவர் வந்தனம் செய்தார் அப்பொழுது ஸ்வாமிகள், "நீங்கள் சிவபக்த சிரோமணிகள். உங்கள் வந்தனத்துக்கு நான் உரியவனல்லேன். ஆதலின் அதனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று சொல்லிக் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டு அயலில் இருக்கச் செய்தார்; அப்பால் இருவரும் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அங்ஙனமிருக்கையில், ஸ்வாமிகள் எப்பொழுது பார்க்க வரலாமென்று சமயந்தெரிந்து வரும்படி ஆதீனகர்த்தரிடம் ஓரன்பரை அனுப்பினர்; அது தெரிந்த தேசிகர் உடனே அழைத்து வரும்படி தக்கவர் சிலரை அனுப்பினர். ஸ்வாமிகள் மடத்திற்குச் சென்றார்; முன்னே சென்று மகா வைத்திய நாதையர் ஸ்வாமிகளின் வரவைக் கூறவே தேசிகர் ஒடுக்கத்து வாயிற்புறத்தே வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று ஸ்வாமிகளுடன் இருக்க மற்றவர்களும் இருந்தார்கள். கும்பாபிஷேக விஷயமாக ஸல்லாபம் நடைபெற்றது.

மகாவைத்தியநாதையருடைய இசைப்பாட்டு

அதன் பின்பு ஆதீனகர்த்தர் மகா வைத்தியநாதையரை நோக்கி, "உங்களைத் தரிசிக்கவேண்டும்; உங்களுடைய இனிய கானத்தைக் கேட்கவேண்டுமென்று இங்கே படித்துக்கொண்டிருக்கும் சிலர் விரும்புகிறார்கள்; ஆதலால் பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களிலிருந்து சில பாடல்களைச் சொல்லிப் பொருளும் சொல்ல வேண்டும்" என்றார். உடனே அவர் சூதசங்கிதையிலிருந்து கயிலையங்கிரியிற் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவோலக்கக் காட்சியைப்பற்றிய சில பாடல்களை இசையோடு சொல்லிப் பொருளும் கூறிவரும்பொழுது கேட்டோரெல்லோருக்கும் உண்டான ஆனந்தத்திற்கு எல்லையில்லை. எப்பொழுதும் யாவருக்கும் இன்பத்தை விளைவிக்கும் பிள்ளையவர்களுடைய பாடல்கள் அவருடைய திவ்ய சங்கீதத்தோடு கலந்து வெளிப்படும்பொழுது தம்மைத் தாமே வென்றுவிட்டன. அதை நினைக்கும்பொழுது,

(விருத்தம்)

"தென்றல் நாடன் றிருமகளைத் தேவர் பெருமான் மணம்புரிய
மன்ற லழகா லொருநகரொப் பதிக மின்றி மதுரைநகர்
அன்று தானே தனக்கொப்ப தாகும் வண்ண மணியமைத்தார்
இன்று தானே தனக்கதிக மென்னும் வண்ண மெழிலமைத்தார்"

(திருவிளை. உக்கிரகுமாரனுக்கு. கஉ)

என்னும் பாடற்பொருள் ஞாபகத்திற்கு வந்தது.

இப்புலவர்திலகருடைய பாடல்களைக் கேட்டவர்களின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. இவருடைய கண்களிலிருந்தும் அது பெருகி வந்தது. பின்பு தேசிகர், * பெரிய புராணக் கீர்த்தனத்திற்குப் பிள்ளையவர்கள் கொடுத்த † சிறப்புப் பாயிரப்பாடல்களைச் சொல்லும்படி சொன்னர். அவர் சொல்லிக் காட்டியபொழுது அவற்றின் இறுதிப்பாடலில் ஆதீன ஸம்பிரதாயத்தை அமைத்திருந்த அருமை எல்லோருக்கும் மிக்க வியப்பை உண்டு பண்ணிற்று. அப்பால், பெரிய புராணக் கீர்த்தன அச்சுப் புத்தகங்களைத் தேசிகருக்கும் இக்கவிஞர் பிரானுக்கும் மகாவைத்தியநாதையர் சேர்ப்பித்தார். அப்பொழுது அதிலிருந்து சில கீர்த்தனங்களைப் பாடிக் காட்டும்படி தேசிகர் விரும்ப அப்படியே மகாவைத்தியநாதையராற் சில பாடிக்காட்டப்பெற்றன. அவை பெரும்பாலும் பெரியபுராணக் கருத்தையும் சொற்றொடர்களையுமே தழுவி இயற்றப்பெற்றனவாதலின் கேட்ட எல்லோரும் மகிழ்ச்சியுற்றார்கள்.

அப்பால் அம்பலவாணதேசிகர்கலம்பகத்திலிருந்தும் அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழிலிருந்தும் சில பாடல்களும் அவற்றிற்குப் பொருளும் அவராற் சொல்லப்பட்டன. சுப்பிரமணிய தேசிகர் பின்பு மகாவைத்தியநாதையரைப் பார்த்து, "தங்கள் தமையனார் இயற்றியவற்றிலிருந்து வேறு ஏதாவது சொல்லவேண்டும்" என்றார். உடனே அவர் தம் தமையனார் இயற்றிய திருவையாற்றுத்திரிபந்தாதியிலிருந்தும் மயூரகிரி இரட்டைமணிமாலையிலிருந்தும் சில செய்யுட்களைச் சொல்லிக் காட்டினர். தேனும் பாலும் கலந்தாற்போல இயலும் இசையும்

---

* இந்நூல் மகாவைத்தியநாதையரவர்கள் தமையனாரான இராமஸ்வாமி ஐயரால் இயற்றப் பெற்றது.

† முதற்பாகம், பக்கம், கஉஉ-க.

கலந்து வெளிப்பட்ட அந்தச் சுவை சொல்லற்பாலதன்று. வந்த காரியத்தை ஒருவாறு முடித்துக்கொண்டு சுந்தர ஸ்வாமிகளும் மற்றவர்களும் விடைபெற்றுத் திருவையாறு சென்றார்கள்.

பட்டீச்சுரப் புராணம்

பட்டீச்சுரத்திற்கு ஆறுமுகத்தாபிள்ளையின் வேண்டு கோளின்படி முன்னமே ஒரு புராணம் இவராற் செய்யத்தொடங் கப்பெற்று நாட்டுப் படலத்திற்சிலபாகம் வரையில்ஆகியிருந்தது. அந்தப் புத்தகம் எப்படியோ கைதவறிப் போய்விட்டது. மீட்டும் முதலிலிருந்து புராணத்தைச் செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டமையால் இவர் நல்லவேளையில் ஆரம்பித்து இயற்றி வருவாராயினர். அப்போது அத்தலத்துள்ள மதவாரணப் பிள்ளையார்மீது ஒரு துதிகவி செய்யத்தொடங்கி, 'மதவாரணப் பிள்ளையார்துதி' என்ற தலைப்பை எழுதுவித்துப் பாடல் இயற்ற யோசித்தபொழுது அதனையறிந்து, "முன்னமே அப்பிள்ளையார் மீது யமகமாக ஐயா அவர்கள் * ஒருபாடல் செய்திருப்பதுண்டு" என்றேன்; உடனே அதை இவர் சொல்லச் சொன்னார்; நான் சொன்னவுடன் அதனையே எழுதிக்கொள்ளும்படி சொல்லிவிட்டு அடுத்த பாடலைச் செய்யத் தொடங்கிவிட்டார்.

என்பால் உண்டான கோபம்

யாரோ ஒருவருடைய கோளினால் ஒருதினம் இவர் என்மீது கோபங்கொண்டு என்னுடன் பேசாமலே இருந்துவிட்டார். யார்மீது கோபம் வந்தாலும் சிலதினம் அவரோடு பேசாமலே இருந்துவிடுவது இவருக்கு இயல்பு; எந்தச்சமயத்தும் யாரையும் கடிந்து பேசுவதேயில்லை.

அன்று மாலை அநுஷ்டானஞ்செய்துவிட்டு வந்து தம்வீட்டுத் திண்ணையில் இவர் சயனித்துக்கொண்டார். ஏடுகளுடன் சென்று இவரது தலைப்பக்கத்திலிருந்த தீபஸ்தம்பத்தின் அருகில் வழக் கப்படியே காத்திருந்தேன். சிலநேரம் சென்ற பின்பு † "இறவி தபுத் தலையுணர்த்த" என்பது இவர் வாக்கினின்றும் எழுந்தது. உடனே அதனை எழுதிவிட்டு அச்செய்யுளின் மேற்பாகத்தையும் இவர் சொல்லச் சொல்ல எழுதிமுடித்தேன். வழக்கம்போலவே

---

* இந்தப் புத்தகத்தின் சுகூ - ஆம் பக்கம் பார்க்க.

† ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 3344.

படித்துக் காட்டினேன். அப்பால் 'சரி' என்று ஒரு சப்தம் இவர் வாக்கிலிருந்து உண்டாகவே அச்சொல்லுக்கு ஆகாரம் பண்ணிக்கொண்டு வரலாமென்பது பொருளென்றறிந்து சென்று போஜனம் செய்துவந்து வழக்கம்போலவே இருந்துவந்தேன்.

பாடம் நடக்கும்போது சென்று படிப்பதும் சொல்லுவனவற்றை எழுதுவதுமே அக்காலத்தில் என்னுற் செய்யப்பெற்று வந்தன. அந்த நிலை என் மனத்துக்கு மிகுந்த சங்கடத்தை உண்டு பண்ணிக்கொண்டே இருந்தது; அதைப்பற்றி யாரிடத்தும் நானும் சொல்லவில்லை; இவரும் சொல்லவில்லை.

கோபமாறியது

இங்ஙனம் சில தினங்கள் சென்றன. அப்பால் மாயூரம் வஸந்தோத்ஸவ தரிசனத்தின் பொருட்டுத் திருவாவடுதுறையிலிருந்து சுப்பிரமணியதேசிகர் பரிவாரங்களுடன் மாயூரத்திற்கு விஜயம் செய்தார். அவர் கட்டளையின்படி இவர் சென்றார்; நானும் மற்ற மாணாக்கர்களும் உடன் சென்றோம். செல்லும் பொழுது இவர் ஸ்ரீ சிவஞான முனிவரும் ஸ்ரீ கச்சியப்ப முனிவரும் காஞ்சிப்புராணம் இயற்றிய வரலாற்றையும் இடையிடையே நிகழ்ந்த செய்திகளையும் அந்நூலின் சிறப்பியல்புகளையும் எங்களிடம் சொல்லிக்கொண்டே சென்றார். ஒன்றையும் விடாமல் நான் கவனித்துவந்தேன்.

மாயூரம் வந்த ஆதீனகர்த்தர் ஸ்வாமி தரிசனஞ்செய்துவிட்டு அடியார்களோடு மடத்திற்குத்திரும்பிச்செல்லுகையில் ஒரு காரியஸ்தரை யழைத்து எனக்கு ஆகாரம் பண்ணுவித்து அனுப்பும்படி உத்தரவிட்டனர்; அப்படியே அவர் செய்வித்தனுப்பினர். நான் சென்று பிள்ளையவர்கள் வீட்டுத்திண்ணையில் ஒரு புறத்தில் இருந்தேன். ஆதீனகர்த்தர் மடத்திற்குச் சென்றபின் * அத்தாளம் நடைபெற்றது. அது, "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும், உடைப்பெருஞ் செல்வர்" என்றபடி நூற்றுக்கணக்கானவர்கள் அறுசுவையுள்ள நால்வகை யுணவுகளையும் முறையே யிருந்து மெல்ல உண்ணும் பெருமை வாய்ந்தது.

---

* இச்சொல் அற்ருலம் (அல் தாலம்) என்பதன் மரூஉ; இராப்போசன மென்பது இதற்குப் பொருள்; பகற்போசனம் முத்தாளம் (முற்ருலம் - முன்தாலம்) என வழங்கும்; இது மலைநாட்டு வழக்கம்.

*அங்கே இல்லறத்தாருடைய வரிசையில் முதல் ஸ்தானம் பிள்ளை யவர்களுக்கு உரியது. அங்கே பந்தியிற்சென்று இருந்த இவர் உண்ணத் தொடங்குவதற்கு முன்பு திடீரென்று எழுந்து புறத்தே செல்லும் குறிப்போடு சிறிது தூரம் வந்துவிட்டார். யாரும் பந்தியில் அங்ஙனம் செய்வதில்லை; செய்யவும் கூடாது; வழக்கமே கிடையாதென்பர். அதனைக் கண்ட தேசிகர், 'ஏதோ கவலைக் கிடமான செய்தி இவர்களுக்குக் கிடைத்தது போலும்' என்று நினைத்துக் கேட்பித்தபொழுது, "சாமிநாதையரை வெளியே விட்டு விட்டு வந்தேன். அவர் ஆகாரம் செய்தாரோ இல்லையோ தெரியவில்லை. விசாரித்துவரப் போகிறேன்" என்றார். தேசிகர், "அவருக்கு ஆகாரம் செய்விக்கும்படி முன்பே ஒருவரிடம் சொல்லியாய்விட்டது. அவர் இதற்குள் ஆகாரம் செய்துவிட்டு வந்திருக்கலாம் நீங்கள் கவலைப்படவேண்டாம். இங்கே யிருந்து மெல்ல ஆகாரம் பண்ணிக்கொண்டு செல்லலாம்" என்று வற்புறுத்திச் சொல்லவே இவர் திரும்பிப்போய் அமர்ந்து ஏதோ ஆகாரம் பண்ணுபவர் போலவே பாவனை பண்ணிவிட்டு எல்லோரும் எழுவதற்கு முன்னரே எழுந்து கையையும் சுத்திசெய்யாமல் வேகமாக அம்மடத்தின் மேல் பாலுள்ள தம்முடைய விடுதிக்கு வந்தார். இவர் வருவதைக் கண்டு எழுந்து நின்றேன். நான் நின்ற இடம் தீபம் இல்லாத இடம்; ஆகையால் என் சமீபத்தில் வந்து முகத்தை உற்று நோக்கி, நிற்பவன் நானென்று தெரிந்துகொண்டு, "ஆகாரம் செய்தாயிற்றா?" என்று கேட்டார். "ஆயிற்று" என்று சொன்னேன். உடனே இவர் கையைச் சுத்தி செய்துகொண்டு தீபத்தைக்கொணர்ந்து வைக்கும்படி சொல்லி என்னோடு அன்புடன் முன்போலவே பேசத்தொடங்கினர். †"முனிவினு மூளக்கும் அன்பினர்" ஆகிய இவருடைய இயல்பை அறிந்து மூன்றிய நிமிஷத்திற் கவலைக் கடலில் அழுந்திக்கிடந்த நான் அடுத்த நிமிஷத்தில் மிகுந்த ஆனந்தம் அடைந்தேன்.

அப்பொழுது மடத்திலிருந்த சிலர் வந்து என்னைப்பார்த்து, "உங்களிடத்தில் ஐயா அவர்களுக்கு இருக்கிற பிரியம் இன்றுபந்தியில் நன்றாக வெளிப்பட்டுவிட்டது. இவ்வளவு பிரியத்தை யாரிடத்

---

* முதற் பாகம், உ0ச-ஆம் பக்கம் பார்க்க.

† கம்ப. கிட்கிந்தைப். சூக.

தும் இவர்கள் வைத்திருந்ததாக நாங்கள் அறிந்துகொண்டதில்லை மடத்தில் இப்போது ஸந்நிதானம் இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது'' என்றார்கள். அந்தச் சமயத்திற் பிள்ளையவர்களை நோக்கி,

* ''எளிய னெங்ஙளா ரென்று தேர்ந்துதேர்ந்
தளியை யாவதுன் னருளின் வண்ணமே''

என்பதைச் சொல்லிவிட்டு ஒன்றும் பேசாமலிருந்தேன். அது முதல் பிறர் கோள்சொல்லுவதற்கு இடமில்லாதபடி கூடிய அளவு ஜாக்கிரதையாக நடந்து வரலானேன். அப்பால் இவர் பிரீதியும் என்பால் அதிகரித்துவிட்டது.

''தீபனெனும் பாம்பு செவியிலொரு வற்கவ்வ
மாயுமே மற்றைய வன்''

என்பது பெரியோர் கருத்தாக இருக்கவும் ஒருவருடைய கோள் எனக்கு அனுகூலத்தைப் பின்பு விளைவித்தமையால்,

(விருத்தம்)

''† பொன்னகரான் காலந்தாழ்த் துனையருச்சித் தயர்ச்சியொடும்
போன வாறும்
என்னெனையான் வினவியதும் வலாரியிறை கொடுத்ததுமவ்
விறைக்கு நேர்யான்
பின்னைவினை யதுமவன்சொல் வழியுன்னைச் சோதித்த
பெற்றி தானும்
முன்னவனே யுன்னருளா லென்பிணிக்கு மருந்தாகி
முடிந்த வாறே''

என்னும் அருமைச் செய்யுள் அப்பொழுது என் ஞாபகத்திற்கு வந்தது.

குமாரருக்கு விவாகம் நடைபெற்றது

அப்பால் இவர் திருவாவடுதுறை சென்று வழக்கம்போலவே பாடம் சொல்லியும் சொல்வித்தும் வந்தார். அப்படியிருக்கையில் இவருடைய குமாரர் சிதம்பரம் பிள்ளைக்கு விவாகம் செய்விக்கவேண்டுமென்ற முயற்சி நடந்தது. சீகாழியிலிருந்தவரும் சிறந்த கல்விமானுமாகிய ‡ குருசாமிபிள்ளை யென்பவருடைய குமாரி மீனாட்சியம்மையை அவருக்கு மணஞ்செய்விக்க

* திருவிளை. கரிக்குருவிக்கு. கடு.
† திருவிளை. நான்மாடக். உடு. ‡முதற் பாகம், பக்கம், களடு.

இவர் நிச்சயித்தார். அதனை ஆதீனகர்த்தரிடம் விண்ணப்பம் செய்தார். சுப்பிரமணியதேசிகர் இச்செய்தியைச் சொல்லிக் குருசாமி பிள்ளையை அழைத்து வரும்படி சில முதியோரை அனுப்பினர். அவர்கள் சென்று சொல்ல மனமுவந்து குருசாமி பிள்ளை வந்து இவரைக் கண்டபொழுது இருவரும் சம்பந்தம் செய்து கொள்ளுதலைக்குறித்து நெடுநேரம் சம்பாஷணைசெய்து களிப்புற்றார்கள். பின்பு அவர் தரிசனஞ்செய்யப் போனபொழுது தேசிகர் பலவாற்றலும் அவருக்கு மகிழ்வுண்டாகும்படி செய்ததன்றி அவரை நோக்கி, "ஐயா நீங்களும் குருசாமி; நாமும் குருசாமியே" என்று சொன்னர்; சிறந்த கல்விமானுதலால் அந்த அருமையான வார்த்தை அவருக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. முகூர்த்தம் வைத்துவிட்டு அவர் சீகாழி சென்றார்.

தேசிகர் அந்த விவாகச் செலவிற்கு ரூபாய் ஆயிரம் அளித்தல்லாமல், கல்லிடைக் குறிச்சியில் சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகருக்கும் ஆதீனத்தைச் சார்ந்த பெரியகாறு பாறுதம்பிரான் முதலியோர்களுக்கும் கலியாணச் செய்தியைத் தெரிவிக்கும்படியும் கட்டளையிட்டார். அப்படியே எல்லோருக்கும் இவர் விண்ணப்பம் செய்துகொண்டார். அங்ஙனஞ்செய்து கொண்ட கடிதங்களில் வழக்கம்போலவே முதலில் அவரவர்கள் தகுதிக்கு ஏற்பப் பாடல்கள் வரையப்பெற்றன. அவற்றுள் ஏனையோர் விஷயமாகச் செய்த பாடல்கள் இப்போது கிடைக்கவில்லை; ஸ்ரீ நமச்சிவாய தேசிகருக்கு எழுதிய ஐந்து பாடல்கள் மட்டும் என் கைவசமிருந்தன. அவை வருமாறு :—

(விருத்தம்)

1. "சீர்பூத்த கயிலாய பரம்பரையில் உமாபதிதே
சிகப்பி ரான்றன்
ஏர்பூத்த கண்மணியிற் சிவப்பிரகா சப்பெரியோன்
என்பாற் குற்ற
பார்பூத்த கண்மணியிற் றுறைசையிற்சுப் பிரமணிய
பரமற் குற்ற
வார்பூத்த கண்மணியாங் குருநமச்சி வாயனெனென்
மனஞ்சார்ந் தன்றே."

[ஏர்பூத்த கண்மணி - அருணமச்சிவாய தேசிகர். சிவப்பிரகாசப் பெரியோன் - சித்தர் சிவப்பிரகாசர். பார்பூத்த கண்மணி - திருவாவடுதுறை ஆதீனஸ்தாபகராகிய நமச்சிவாயமூர்த்தி.]

2. "அருண்மலிநின் பெயரேநின் னுருவுருவம் அருவுருவம்
அருவ மென்னப்
பொருண்மலிமூன் றுமதுவந் தடைந்தார்தந் தரநோக்கிப்
புகன்ற வாறே
இருண்மலிபெய் தாதவிதம் விரித்துணர்த்தி யவற்றடக்கி
எல்லா மின்பத்
தெருண்மலியச் செயுந்துறைசைக் குருநமச்சி வாயாகிற்
சேர்ந்து ளோமே."

3. "திருச்சமயத் துடனெமையும் விளக்கியநின் றிருப்பெயரே
சிந்தை யுட்கொண்
டருச்சனைசெய் யினுஞ்செபித்தல் செய்யினுஞ்சொற் றிடவருளி
அளவி லாத
கருச்சரிய வின்பநீலை காட்டுநினக் கியற்றுமொரு
கைம்மா றுண்டோ
குருச்சமையம் புகழ்த்துறைசை வளர்நமச்சி வாயாமெய்க்
குரவ ரேறே."

4. "தந்தைபெய ரெடுப்பானிம் மைந்தனென வொருவனீமண்
சாற்றல் பொய்யே
நிந்தையிலாத் தந்தைபெயர் தோற்றும்போ தேயெடுத்தோன்
நீயே நீயே
அந்தையிலா நினைப்போல்வார் நினைப்பணியு மெமைப்போல்வார்
அகிலத் தியாரே
சிந்தைகளிப் புறத்திருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவே."

[இங்கே பெரிய பட்டத்தில் இருப்பவர்களுக்குரிய பொதுப்பெயராகிய 'நமச்சிவாய' என்பதைத் துறவுபூண்டவுடன் இவர் தீட்சா நாமமாகவே பெற்றமையின், 'தந்தை பெயர் தோற்றும்போதே எடுத்தோன் நீயே' என்றார். அந்தை - அகந்தை.]

5. "ஒன்றுடையோன் நீயேமற் றிரண்டுடையோன் யானெனினும்
உயர்ந்தோ னீயே
என்றுநினக் கடிமையா தலினிரண்டு மசித்தெனப்பட்
டிடலி லென்றை
நன்றுபெற் விரும்பிநினைப் புணர்தலினிப் பொருப்பிடநின்
நாம மன்றே
குன்றுபுரை மாடக்கோ முத்திநமச் சிவாயாமெய்க்
குரவ ரேறே."

[ஒன்று - வகாரம்; அதற்குப் பொருள் அருள். இரண்டு - நகார மகாரம்; அவற்றிற்குப் பொருள் முறையே திரோதாயியும் ஆணவமும். அசித்து - சடம்.]

இவருடைய விண்ணப்பத்தைப்பெற்ற நமச்சிவாய தேசிகர் மகிழ்ச்சியடைந்து விடையனுப்பினர். அதில், "நீங்கள் ஐம் பதத்தால் ஆக்கிய ஐந்து பாடல்களையும் பார்த்து மகிழ்ச்சி யடைந்தோம்" என்ற வாக்கியம் வரையப்பெற்றிருந்தது. ஏனை யோர்கள் தங்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தார்கள். சோழ நாட்டுப் பிரபுக்களும் அயல்நாட்டுப் பிரபுக்களும் வந்து தங்கள் தங்களாலியன்ற பொருளுதவியைச் செய்து உடனிருந்து விவாகத்தை நடத்திச் சிறப்பித்தார்கள். கலியாணம் விமரிசை யாக ஆங்கிரஸ ஸ்ரு ஆனிமீ எ-ஆம் தேதி (19-6-1872) புதன் கிழமை மாயூரத்தில் நடைபெற்றது.

உள்ளூர்க் கனவான்களும் அயலூரார் பலரும் வந்து வந்து விசாரித்துச் சென்றார்கள். அவரவர்களுக்குத் தக்கபடி முகமன் கள் மாணாக்கர்களாலும் திருவாவடுதுறை மடத்திலிருந்து வந்த காரியஸ்தர்களாலும் நடத்தப்பெற்றன. சிறந்த சங்கீத வித்து வான்களுடைய இசைப்பாட்டும் நாகசுரக்காரர்களுடைய கான மும் ஒவ்வொருநாளும் நடந்தன.

விகடகவியும் வேதநாயகம் பிள்ளையும்

நல்ல திறமையுள்ள விகடகவியொருவர் அப்பொழுது பல வகைப்பட்ட ஹாஸ்யப் பேச்சுக்களைப் பேசி யாவரையும் சிரிக் கும்படி செய்துகொண்டிருந்தார். அச்சமயத்தில் அங்கே வந் திருந்த வேதநாயகம்பிள்ளை இப்புலவர்கோமானை நோக்கி, "விகடகவிகள் வித்துவான்களுக்கு நேர் விரோதிகள்; வித்து வான்கள் இழிந்தவற்றையும் உயர்ந்தனவாகக் கூறுபவர்கள்; விகடகவிகள் உயர்ந்தவற்றை இழிந்தனவாக நினைக்கும்படி பேசு பவர்கள்" என்றார். புத்திமான்கள் பேசும் எந்தப் பேச்சும் நய மாக இருக்குமென்பதை அவருடைய வார்த்தை புலப்படுத்தியது

* சவராயலு நாயகர் மாலை

எல்லோருக்கும் கலியாணபத்திரிகை அனுப்பியதுபோல இவர், தம் மாணவராகிய புதுவைச் சவராயலு நாயகருக்கும்

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, 5050-82.

அனுப்பியிருந்தார். அவர் இவரிடத்தில் அளவற்ற அன்புடையவர். புதுவையில் நல்ல நிலையில் இருந்தமையால் அவர் தக்க தொகை யொன்றை இவருக்கு அனுப்பினர். தாம் எதிர்பாராமலிருந்தும் வலிய அவர் செய்த அந்தப் பொருளுதவியை நினைந்து மனங் கனிந்து தம் செய்ந்நன்றியறிவிற்கு அறிகுறியாக அவர் மீது இவர் ஒரு மாலை இயற்றி அனுப்பினர். அது பின்பு அவரா லேயே பதிப்பிக்கப் பெற்றது.

சமாசாரப் பத்திரிகையில் வந்த செய்தி

கலியாணத்திற்குப் பின்பு சிலதினம் இவர் மாயூரத்தில் இருந்தார். அக்காலத்தில் ஒருநாள் இவர் வேதநாயகம் பிள்ளையைப் பார்க்கச் சென்றார்; நானும் உடன் சென்றேன். அவர் ஏதோ ஒரு சமாசாரப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார். இவரைக்கண்டவுடன் அவர், "இப்பத்திரிகையில் இப்போது படித்துக்கொண்டிருப்பது உங்கள் விஷயந்தான். 'இக்காலத்தில் தமிழ் நாட்டிற்கு இரண்டு கண்களாக விளங்குகிறவர் இருவர். அவருள் ஒருவர் வசனம் எழுதுவதில் ஆற்றலுடையவர்; மற்றொருவர் செய்யுளியற்றுவதில் ஆற்றலுடையவர். வசனம் எழுதுபவர் ஆறுமுக நாவலர்; செய்யுள் செய்பவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை. நாவலர் சிதம்பரத்தில் பாடசாலை வைத்துத் தமிழைப் பரிபாலித்து வருகிறார்; மற்றொருவர் தாமே நடையாடு புத்தக சாலையாக இருந்து தம்முடைய செலவிலேயே பிள்ளைகளைப் படிப்பித்து வருகிறார்' என்பது இதிலுள்ள விஷயம்" என்றார். கேட்ட நான் ஆனந்தமடைந்தேன்.

தமிழே நோய்க்கு மருந்து

அப்போது தஞ்சைவாணன் கோவையைப் பாடம் கேட்டு வந்தேன். ஒருநாள் கo-மணிக்குமேலே இவர் பூஜை செய்வதற்குச் சென்றார். பூஜை செய்துகொண்டிருக்கையிற் கடுமையான ஜ்வரம் வந்துவிட்டமையால் விரைவில் அதனை முடித்துக்கொண்டு ஆகாரம் பண்ணுமலே வந்து சாய்வுநாற்காலியிற் சாய்ந்துகொண்டார்; என்னைப் பார்த்து, "கையிலுள்ளது என்ன புத்தகம்?" என்றார்; "தஞ்சைவாணன் கோவை" என்றேன். படிக்கும்படி சொன்னார்; படித்துக்கொண்டு வந்தேன். மிகுந்த அயர்ச்சி

யோடு இருக்கிறரென்று நான் நினைந்து நிறுத்தினால் இவர் கண்ணைத் திறந்து பார்த்துப் படிக்கச்சொல்வார்.

இவர் இப்படி யிருக்கும்போது பிற்பகலில் ஐந்து மணி ஆயிற்று. இவரைப் பார்க்கவந்த அன்பர்களிற் சிலர் என்னைக் கோபத்தோடு நோக்கி, "இப்போது கூடவா பாடங்கேட்டு இவர் களுக்குத் தன்பத்தை உண்டுபண்ண வேண்டும்? நிறுத்திக்கொள் ளக்கூடாதா? பாடம் எங்கே ஓடிப்போகிறது? இதனை நீர் தெரிந்துகொள்ளவில்லையே!" என்று கடுமையாகச் சொன்னர்கள். கேட்ட இவர், "நிறுத்தச் சொல்லவேண்டாம்; அதுதான் இப் பொழுது எனக்கு மருந்தாக இருக்கிறது; சுரநோயின் தன் பத்தை மறந்து என்மனம் அந்நூலிலேயே ஈடுபட்டுவிட்டது" என்று சொல்லி அந்த நூலாசிரியருடைய பெருமையையும் வாக்கு விசேடத்தையும் அவர் முருகக்கடவுள் அருள்பெற்றவ ரென்பதையும் எடுத்துக் கூறினர்.

தமிழ்ச்செய்யுளில் இவருக்கு இருந்த ஈடுபாடும் அதனை இவர் நோய்க்கு மருந்தாக எண்ணிய இயல்பும் என்மனத்தை உருக்கின.

பலபட்டடைச் சொக்கநாதப்புலவருடைய செய்யுட்களைப் பாராட்டியது

மற்றொருநாள் இவர் ஆகாரம் செய்துவிட்டு வந்த பொழுது நான் தனிப்பாடற்றிரட்டைப் படித்துக் கொண்டிருந்தேன். "கையிலுள்ளது என்ன புத்தகம்?" என்று கேட்க, "தனிப் பாடற்றிரட்டு" என்றேன்; "அதில் இப்போது படிக்கும்பாடல் யார் வாக்கு?" என்று வினவினர். "பலபட்டடைச் சொக்க நாதப்புலவரியற்றிய பாடல்கள்" என்றேன். "அவற்றைப் படியும்" எனவே நான்,

(கட்டளைக் கலித்துறை)

*"வான்பணிந் தாலதன் என்பே யுரைக்கும் மலரிலையன்
தான்பணிந் தாலவன் றன்றலை யேசொலுந் தாரணியுண்
பான்பணிந் தாலவன் கண்ணே பரிந்து பரிந்துரைக்கும்
நான்பணிந் தாலெனக் கார்சொல்லு வார்சொக்க நாயகர்க்கே"

* வானென்றது தேவர்களை; ஆகுபெயர்.

"மெய்க்கே யணியும் பணியேயென் பேமுடி மேற்கிடந்த
கொக்கேவெண் கூன்பிறை யேயரை சேர்ந்த கொடும்புலியே
அக்கே யுமக்குக் கிடைத்த வுபாயங்க ளாவெனக்கும்
சொக்கேசர் பாதத்தைக் கிட்டு முபாயத்தைச் சொல்லுங்களே"

என்பவற்றைப் படித்துக் காட்டினேன். கேட்ட இவர், "செய்யு ளென்பவை இவையே ; பக்திரஸம் இவற்றில் ததும்புகின்றது" என்று பாராட்டி மனமுருகினர். தாம் மகாகவியாக இருந்தும் பிறகவிஞருடைய வாக்கைக் கேட்டு அவற்றின் நடையை அறிந்து சந்தோஷிக்கும் அரியகுணம் இவர்பால் அமைந்திருந்தமை இதனால் வெளியாயிற்று.

என்னைத் திருவாவடுதுறைக்கு அனுப்பியது

ஒருதினம் நாங்கள் பாடம்கேட்டு முடிந்தபொழுது இரவில் மணி கூ-ஆயிற்று. இவர் எங்களை ஆகாரம் செய்துகொண்டு வரும்படி அனுப்பிவிட்டுத் தாம் உண்ணச் சென்றார் ; அப்போது மழை வந்துவிட்டமையாலும் மிகவும் சிரமமாக இருந்தமையாலும் இவர் ஜாகையிலேயே நான் படுத்து அயர்ந்து நித்திரை செய்தேன். மற்றவர்கள் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

ஆகாரம் செய்துவிட்டுவந்த இவர் எல்லோரும் ஆகாரம் செய்துகொண்டு வந்துவிட்டார்களாவென்று கவனிக்கையில் நான் தூங்குவதைக் கண்டார். இவர் தூங்கச் செல்லும்முன் நான் தூங்கச் செல்வது வழக்கமில்லை. அதனால் ஏதோ அசௌகரியம் ஏற்பட்டிருக்கலாமென்று எண்ணி என்னை எழுப்பச்சொன்னார் ; நான் எழுந்தவுடன், "ஆகாரம் பண்ணிவிட்டீரா?" என்று இவர் கேட்டார் ; இல்லையென்று நான் சொல்லவே ஆகாரம் பண்ணிவிட்டு வரும்படி என்னை யனுப்பினர். போய்ப் பார்த்த பொழுது வழக்கமாக நான் உண்ணுமிடத்திலும் பிற இடங்களிலும் கதவுகள் மூடப்பட்டுவிட்டன ; சும்மா திரும்பிவந்தேன். அதுவரையில் விழித்துக்கொண்டே இருந்த இவர் நான் உண்ணுமையை அறிந்து அதிக வருத்தமடைந்து பாலும் பழமும் வருவித்துக் கொடுத்து உண்ணச் செய்தனர். மறுநாட் காலையில், "திருவாவடுதுறைக்குப்போய் மற்றவர்களுடன் பழைய பாடங்களைப் படித்துக்கொண்டிரும் ; சீக்கிரத்தில் நான் வந்துவிடுவேன்" என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அப்படியே திருவாவடுதுறை சென்று படித்துவந்தேன்.

திருப்பெருந்துறைப் புராணம் இயற்றும்படி சுப்பிரமணியத் தம்பிரானவர்கள் விரும்பியது

சில தினங்கள் சென்ற பின்பு ஒருநாள் சுப்பிரமணிய தேசிகர் என்னை வருவித்து, "நாளைக் காலையில் நீர் மாயூரம் போய்வர வேண்டும். திருப்பெருந்துறைக்குப் புராணம் இயற்றவேண்டிய தைப்பற்றி அத்தலத்துக் கட்டளைச் சுப்பிரமணியத் தம்பிரான் ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார். அதில் அவர், 'திருப் பெருந்துறைப் புராணத்தைச் செய்யுள் நடையாக நாட்டு வருணனை நகரவருணனை முதலிய காப்பிய உறுப்புக்களைச் சிறப் பாக அமைத்துப் புராணம் செய்யவேண்டுமென்று பிள்ளையவர் களுக்குக் கட்டளையிடும்படி பிரார்த்திக்கிறேன். அப்புராணத்தை அங்ஙனம் பாடிப் பூர்த்திசெய்து அரங்கேற்றி முடித்தால் அவர் களுக்குத் தக்க சௌகரியம் செய்விக்கலாம். அங்ஙனம் இயற்று விக்கும்படி இங்கே உள்ள அன்பர்கள் பலர் தூண்டுகிறார்கள் இத்தலத்தின் வடமொழிப் புராணத்திலிருந்து மொழி பெயர்த்த தமிழ் வசன நடைப் பிரதியையும் இத்தலத்திற்கு முன்னமே செய்யப்பட்டிருந்த பழைய தமிழ்ப் புராணங்களிரண்டையும் அனுப்பியிருக்கிறேன். இவற்றைத் தழுவிப் புராணம் செய்து விட்டால் இந்த வருஷத்து மார்கழித் திருவிழாவில் அப்புரா ணத்தை அரங்கேற்றத் தொடங்கலாம். இங்கே அவர்கள் இருக் கும் வரையில் அவர்களுடைய செலவை அடியேனே ஒப்புக் கொள்ளுகிறேன். புராணம் அரங்கேற்றப்பட்டவுன் ரூ உ,000 அடியேனுடைய சம்பளத்திலிருந்து அவர்களுக்குச் சேர்ப்பிக்கி றேன். புராணம் செய்வதற்குத் தொடங்கும்படி ஸந்நிதானம் கட்டளையிடவேண்டும்' என்று வரைந்திருந்தார். இந்த விவரங் களைப் பிள்ளையவர்களிடம் சொல்லி இப்புத்தகங்களையும் கொடுத்து உடன்படச் செய்து அவர்களுடைய உடன்பாட்டை நமக்கு விரைவில் வந்து சொல்ல வேண்டும்" என்று சொல்லி அப்புத்தகங்களையும் கொடுத்து என்னை அனுப்பினர்.

ஒரு செய்யுளின் ஈற்றடி

நான் மறுநாட் காலையில் மாயூரம் போய்ப் பிள்ளையவர்களைக் கண்டு அச்செய்திகளைத் தெரிவித்துப் புத்தகங்களையும் சேர்ப்பித் தேன். அப்பொழுது இவர் சந்தோஷமடைந்து புராணத்தை இயற்ற ஒப்புக்கொண்டு திருப்பெருந்துறையின் ஸ்தலவிநாயகரா

கிய வெயிலுவந்த பிள்ளையாரைத் தியானித்து, "நிலவுவந்த முடியினெடு வெயிலுவந்த மழகளிற்றை நினைந்து வாழ்வாம்" என்ற அடியைச் சொன்னார். அதனை உடனிருந்த கும்பகோணம் பேட்டைத் தெருத் தமிழ் வித்துவானாகிய ஸ்ரீ வைத்தியநாத தேசிகரென்பவர் கேட்டு வியப்புற்றார்.

திருவாவடுதுறை சென்றது

அப்பால் இக்கவிஞர்சிகாமணி மூன்றாவது தினத்தின் காலையில் திருவாவடுதுறைக்குப் புறப்பட்டார். நானும் உடன் சென்றேன். மாயூரத்திலிருந்து வேறு ஒரு கனவானும்வந்தார். நான் முன்னமே கேட்ட திருவேங்கட மாலையைப் படித்துச் சிந்தனை செய்வதற்குக் கையில் வைத்திருந்தேன். "இப்புத்தகம் என்ன?" என்று இவர் கேட்க, "திருவேங்கடமாலை" என்றேன்; இவர் கட்டளைப்படியே நான் அதனைப் படித்துக்கொண்டே வருகையில் சிலேடையின் வேறுபாடுகளும், அதுவரையில் அறிந்து கொள்ளாத பொருள் விசேடங்களும் எனக்கு அன்றைத்தினம் இவரால் தெரியவந்தன. திருவாவடுதுறை போவதற்குள் அது முடிந்தது. அக்காலத்திற்கு முன்பே அரியிலூர்ச் சடகோபையங்காரிடம் அந்நூலை நான் கேட்டிருந்தேன். ஆனாலும் இவர் பாடஞ்சொன்ன பொழுதுதான் அதன் உண்மையான பெருமையும் சுவையும் புலப்பட்டன. திருவாவடுதுறை போனதும் வழக்கம்போலப் பெரிய வகையில் காந்தம், உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம், காசி காண்டம் முதலியனவும் சின்ன வகுப்பில் திருவிளையாடல், திருநாகைக் காரோணப் புராணம், மாயூரப் புராணம் முதலியனவும் முறையே பாடங்கேட்கப்பெற்று வந்தன.

இரண்டுவகைப் பாடங்களும் நடவாத சமயங்களில் இவர் சொல்லும் நூல்களை ஏட்டில் எழுதுவதும், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய கடிதங்களை இவர்சொல்ல எழுதி முடித்துக் கையொப்பம் வாங்கித் தபாலுக்கு அனுப்புவதும், முன்பு கேட்டிராத எந்த நூலுக்காவது பொருள் கேட்டு வருவதும், நூதனமாக வந்த மாணாக்கர்களுக்கு இவருடைய கட்டளையின்படி பாடம் சொல்லுவதும் எனக்கு அக்காலத்தில் அமைந்த வேலைகள்.

சுப்பிரமணிய தேசிகர்க்கு இவர்பாலுள்ள பேரருள்

காலைப்பாடம் நடந்து முடிவதற்குள் பதினொரு மணி ஆகிவிடும்; சிலசமயம் கூ-மணியும் ஆவதுண்டு. இவர் பூஜையை

முடித்துக்கொண்டு வருவதற்கு நேரமானால், பந்திக்கு வரக்கூடிய திருக்கூட்டத்தார் அனைவரோடும்வந்து தேசிகர் காத்திருப்பார். அச்செய்தி தமது காதிற்கு எட்டியவுடன் தம் நியமங்களை விரைவில் முடித்துக்கொண்டு இவர் செல்லுவார்.

பந்திக்கட்டின் மேல்பக்கத்திலுள்ள வாயிலின்நிலை குறியதாயிருந்தமையின் அங்கே இவர் போகும்பொழுது சிரமத்தோடு குனிந்து விரைந்து செல்லுதலைக் கண்ட தேசிகர் அந்தப் பாகத்துத் திருப்பணி நடக்கும்பொழுது இவர் சௌகரியமாகச் செல்லுதற்குத் தக்க உயரமுள்ளதாக அந்த நிலையை அமைக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்; அங்ஙனமே அமைக்கப்பெற்றது. அதைக் கவனித்த பலர் இவரிடம் தேசிகருக்குள்ள பேரருளை மிகவும் பாராட்டினர்.

மொழிபெயர்ப்புப் பாடல்

ஒருநாள் திருவாலங்காட்டுத் தியாகராஜ சாஸ்திரிகளிடம் இவர் பேசிக்கொண்டிருந்தபொழுது அவர் ஒரு சுலோகம் சொல்லிப் பொருளும் சொன்னார். இவர் அதனை உடனே செய்யுளாக எழுதுவித்துப் படிக்கச் செய்தனர். அவர்கேட்டு விரைவில் பொருள் விளங்கும்படி இவர்மொழிபெயர்த்ததை அறிந்து வியந்தார். அச் செய்யுள் வருமாறு:

(விருத்தம்)

"நெற்றியி னீறு புனைந்திடப் பராகம்
நிமிர்ந்தெழப் பல்செவி தோறும்
சுற்றிய வராக்கண் அடைவொழித் திடுவான்
தருத்திபோன் மூச்சினை யெறியப்
பற்றிய நுதற்றீ யெழமதி யுருகிப்
பாயமு துகுத்திடப் புற்றேல்
வெற்றியா ருயிர்பெற் றெழுவிடை யோட
வெண்ணகை புரிபிரான் புரக்க."

[சிவபிரான் தமது திருநெற்றியில் திருநீறு புனைந்தனர்; அப்பொழுது அந்த நீறு அவர் திருச்செவியில் குண்டலமாக அணிந்திருந்த நாகங்களின் கண்களில் விழுந்தது; அதை நீக்குவதற்கு அவை பெருமூச்சு விட்டன; அக்காற்றுல் நெற்றிக்கண் நெருப்பு எரிந்தது; அந்த ஜ்வாலையினுல் திருமுடியிலிருந்த பிறை உருகி அமுதத்தை உகுத்தது; அவ்வமுதத்

துளிபட உடையாகிய புலித்தோல் உயிர்பெற்றெழுந்தது; அது கண்டு இடபவாகனம் அஞ்சி ஓடியது; இக்காட்சியைக்கண்டு அவர் நகைத்தார்; அத்தகைய சிவபிரான் காத்தருள்க.]

இவ்வண்ணம் அப்பொழுதப்பொழுது செய்த மொழி பெயர்ப்புப் பாடல்கள் பற்பலவென்று கேள்வி.

திருப்பெருந்துறைப் புராணம் பாடத்தொடங்கியது

இப்படி இருக்கையில் ஒரு தினத்தில் சுப்பிரமணிய தேசிகருடைய கட்டளைப்படி நல்லவேளையில் இவர் திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றத் தொடங்கினர். தொடங்கியவுடன் எழுத்தாணி கையில் இல்லாமையை யறிந்து மடத்துக் காரியஸ்தரொருவரை யழைத்து ஓர் * எழுத்தாணியையும் ஏடுகளையும் கொணர்ந்து என்னிடம் கொடுக்கும்படி சொன்னர். அவர் அப்படியே செய்தனர். யோசித்து வைத்திருந்த ஒரு விநாயகர் காப்புச் செய்யுள் வழக்கப்படியே பொதுவாக முதலிற் சொல்லி எழுதுவித்தார்.

அப்பால் ஸ்தல விநாயகராகிய வெயிலுவந்த விநாயகரது ஸ்துதியைப் பாடுவதற்கு இவர் யோசிப்பதை அறிந்து, "முன்னமே நான் மாயூரத்திற்கு வந்து மொழி பெயர்ப்புப் புத்தகம் முதலியவற்றைக் கொடுத்தவுடன், 'நிலவுவந்த முடியினொடு வெயிலுவந்த மழகளிற்றை நினைந்து வாழ்வாம்' என்று ஐயா அவர்கள் சொன்ன ஓரடி எனக்கு ஞாபகத்திலிருக்கின்றது" என்று குறிப்பித்தேன்; "அப்படியா? அது நன்றாகவிருக்கிறது" என்று சற்றுநேரம் யோசித்து முதல் மூன்றடியையும் சிறந்த கற்பனையுடன் முடித்து ஈற்றடியை இறுதியிலே எழுதும்படி சொல்லி மேலே பாடல்களைச் சொல்லி எழுதுவித்துக்கொண்டு போனர். அச்செய்யுள் வருமாறு:

(விருத்தம்)

"† இலவுவந்த செவ்வாயெம் பெருமாட்டி பார்வையொடும்
இருக்கு முன்னூல்

---

* அந்த எழுத்தாணி இன்னும் என்பாலுள்ளது.

† சந்திரன் உமாதேவியாருக்குரிய இடப்பாகத்துக் கண்ணுதலாலும், சூரியன் சிவபிரானுக்குரிய வலப்பாகத்துக் கண்ணுதலாலும் நிலவையும் வெயிலையும் அவ்விநாயகர் ஏற்றருளினமை அவ்விருவரது பார்வையையும் ஒருங்கே ஏற்றதைத் தெரிவிக்குமென்பது கருத்து.

செலவுவந்த நம்பெருமான் பார்வையுமேற் றமர்சிறப்புத்
தோற்றி யாங்குப்
பலவுவந்த பொழில்வளஞ்சால் குருந்துறையும் பெருந்துறையிற்
பண்பு கூரும்
நிலவுவந்த மூடியெடும் வெயிலுவந்த மழகளிற்றை
நினைந்து வாழ்வாம்."

இந்நிகழ்ச்சியைக் கண்ட அருகிலிருந்த அறிஞர்களுக்குப் பெரு வியப்புண்டாயிற்று; "மற்றவர்களாக இருந்தால் தம்மை எவ் வளவு புகழ்ந்துகொள்வார்கள்? நம்மையும் நிர்ப்பந்தித்துப் புக ழச் சொல்வார்களே!" என்று அவர்கள் தம்முட் பேசிக்கொண் டார்கள்.

'சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன்'

திருப்பெருந்துறைப் புராணத்தில் நாட்டுப்படலம் பூர்த்தியா யிற்று. நடந்த பாகங்களைச் சுப்பிரமணிய தேசிகரிடம் படித் துக் காட்ட இவர் விரும்பினர், தியாகராச செட்டியாரும் உடனிருந்தால் மிகவும் நலமாயிருக்குமென்று நினைந்து ஒருநாள் அவருக்கு என்னைக்கொண்டு ஒரு கடிதம் எழுதுவித்தனர்; "வரு கிற சனிக்கிழமையின் பிற்பகலில் திருப்பெருந்துறைப் புராணத் தில் நடந்த பாகத்தை ஸ்ரீலஸ்ரீ மகா ஸந்நிதானத்தின் திருச்செவி சார்த்த எண்ணியிருக்கிறேன். அக்காலத்தில் நீயும் உடனிருந் தால் திருப்தியாக இருக்கும். ஆதலால் சனிக்கிழமை சூரியோதய காலத்தில் கோட்டுமாங்குளக்கரையில் நான் பார்க்கும்படி நீ வந்துவிடவேண்டும். சிறவாதவற்றையும் சிறப்பிக்கவல்லவன் நீ யல்லவா?" என்பது அக்கடிதத்திற் கண்ட விஷயம். சனிக் கிழமை காலையில் எப்படியும் அவர் வரக்கூடுமென்று நினைந்து காலையில் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு கோட்டுமாங் குளத்து வடகரையின் கீழைக்கோடியில் அவருடைய வரவைப் பார்த்துக்கொண்டே இவர் நின்றார்.

கடிதத்தைக் கண்ட செட்டியார் வெள்ளிக்கிழமை இராப் போசனத்தை முடித்துக்கொண்டு உடனே கும்பகோணத்தி லிருந்து வண்டியில் ஏறிச் சூரியோதய காலத்திற் கோட்டுமாங் குளத்தின் வடகரையின் மேலைக்கோடியில் வருகையில் இவர் கிழக் கேநிற்பதைக்கண்டு வண்டியைவிட்டு இறங்கி ஆவலோடுவிரைந்து வருவாராயினர். அங்ஙனம் வந்த செட்டியார் இவருக்கு அஞ்சலி

செய்துவிட்டு உடனே கோபக்குறிப்புடன் என்னிடம் வந்து, "ஐயா எழுதச்சொன்னலும் நீர் எழுதலாமா? சிறவாதவற்றையும் சிறப்பிக்கவல்லவன் நானே? ஐயா அவர்கள் அவசரமாகச் சொன்னலும் யோசித்தல்லவோ நீர் எழுதவேண்டும்?" என்று மேலே மேலே கண்டிப்பாராயினர். இக்கவியரசர் அவரைப் பார்த்து, "ஏனப்பா அவலைக் கண்டிக்கிறாய்? நானே அப்படி எழுதச் சொன்னேன். நீ இடமறிந்து சந்தோஷிப்பதை நேரே பலமுறை பார்த்திருக்கிறேனே. நீஇருந்தால் ஸந்நிதானத்திற்கும் திருப்தியாயிருக்குமன்றே?" என்று சொன்னர்.

செட்டியார், "சுவை நிரம்பிய உங்களுடைய நூல்களிற் சிறவாத பாகம் ஏதேனும் இருந்தாலன்றே நான் சிறப்பிக்கவேண்டுவது? அது கிடையாதே. 'நீ வந்து கேட்டு மகிழ்ச்சியடையவேண்டும்' என்று எழுதியிருந்தால் எனக்குத் திருப்தியாக இருக்கும். போனது போகட்டும். இனிமேல் இப்படி எழுதச் சொல்லக் கூடாது" என்று கேட்டுக்கொண்டு பிள்ளையவர்களுடன் வீடு வந்து சேர்ந்தனர்.

பிற்பகலில் சுப்பிரமணிய தேசிகருடைய முன்னிலையில் புராணம் படித்துக் காட்டப்பட்டது. கடவுள் வாழ்த்திற் சிலசில பாடல்களிற் புராணத்திலுள்ள சரித்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைப்பற்றிச் சொல்லும்பொழுது இவர், "* நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி என்னும் பாயிரஇலக்கணம் அமைய இவ்வாறு பாடப்பெற்றது. இங்ஙனமே காஞ்சிப் புராணம் முதலியவற்றின் கடவுள் வாழ்த்துக்களிற் காணப்படும். அவற்றைப் பின்பற்றித்தான் அடியேன் இங்ஙனம் செய்தேன்" என்றார்.

உடனிருந்த தியாகராச செட்டியார் முதலியவர்களும் வடமொழி வித்துவான்களும் பிறரும் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். தேசிகர் மிகவும் பாராட்டியதுடன், "இந்நூலை விரைவில் முடித்தால் அரங்கேற்றுதற்குரிய ஏற்பாடு செய்யப்படும்" என்றும் கூறினர். அங்ஙனமே இவர் ஓய்வுநேரங்களிற் புராணச் செய்யுட்களை இயற்றி எழுதுவித்து வந்தார். செட்டியார் விடை

---

* அது முதற்கொண்டுதான் நூல் நுதல்பொருள் கடவுள் வாழ்த்தில் அமைந்திருத்தலைக் கவனித்து நாங்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேம்.

பெற்றுத் திங்கட்கிழமை காலையிற் புறப்பட்டுக் கும்பகோணம் சென்றார்.

பார்க்க வருபவர்கள்

பல செல்வர்களும் வித்துவான்கள் பலரும் சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துச் சிலதினங்கள் இருந்து சல்லாபம் செய்தற் பொருட்டுத் திருவாவடுதுறைக்கு வருவார்கள். சிலருடைய விருப்பத்தின்படி அவர்கள் செய்தனவாகப் பிறர்க்குத் தோற்றும்வண்ணம் புதிய செய்யுட்களைச் செய்து கொடுத்தும், சிலர் ஏதேனும் புதிய நூலொன்றைச் செய்து கொணர்ந்தால் அதைத் திருத்திக் கொடுத்துச் சிறப்புப்பாயிரமளித்தும், தாம் படித்த நூல்களில் உண்டான ஐயங்களை யாரேனும் வந்து வினவினால் அவற்றைத் தீர்த்தும், இன்னும் அவர்களுக்கு ஆகவேண்டியவற்றைக் கவனித்தும் அனுப்புவது இவருக்கு அப்போது வழக்கமாக இருந்தது. பின்னும் நகரப் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலுமுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் தாங்கள் சொல்லவேண்டிய பாடங்களிற் கடினமானவற்றிற்குப் பொருள் தெரிந்துகொண்டு போவதற்கு விடுமுறை நாட்களில் வந்து வந்து கேட்டுவிட்டுத் திருப்தியுற்றுச் செல்வார்கள். அப்படியே கிராமப் பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களும் வந்து தமக்கு வேண்டிய நூல்களுக்குப் பொருள் கேட்டுத் தெரிந்துகொண்டு போவார்கள். பிள்ளையவர்களுக்கு ஓய்வில்லையென்று தெரிந்தால் சுப்பிரமணிய தேசிகர் படிக்கவேண்டியவர்களைத் தம்மிடம் வரச்செய்து தாமே பாடம் சொல்லித் தெளிவித்து அவர்களை அனுப்புவார்.

வருபவர்கள் பலவகையாராக இருத்தல் கூடும். அவர்களிற் பந்திபோஜனத்துக்கு உரியவர்களைப் பந்தியில் வைத்து உண்பித்தலும் ஏனையோரை அவரவருடைய பிரிவுக்குத் தக்கபடி வேறு வேறிடங்களில் தனித்தனியே வைப்பித்து ஆகாரம் செய்வித்தலும் இடமளித்தலும் பிறவும் ஆதீனகர்த்தருடைய ஆஞ்ஞையால் ஒழுங்காக நடைபெறும். அந்த அனுகூலத்தை உத்தேசித்தே சிலர் பாடம்கேட்பதற்கு வருவதுபோல்வந்து சில தினம் இருந்து செல்வார்கள்.

தம்மூர்களிற் பாடம்சொல்லுவோர் இல்லாமையாலும் திரவிய சௌகரியம் இல்லாமையாலும் இவர் பாடஞ்சொல்லுகிறார் கேள்விப்புற்று அடிக்கடி வந்து படிக்க வருவோர் சிலர். சில

மாதங்கள் இருந்து வேண்டியவற்றைக் கேட்டுக்கொண்டு விடை பெற்றுப் போவோர் சிலர்.

வன்றொண்டரது ஞாபக சக்தி

கந்தபுராணப்பாடம் நடந்துவருகையில் அதிலுள்ள கயமுக னுற்பத்திப் படலத்தில் எ0-ஆவது செய்யுளாகிய, "மாண் டவவ்வலியகலன்" என்ற செய்யுளுக்குப் பொருள் விளங்காமை யால் இவர் நெடுநேரம் யோசனை செய்துவிட்டு, "வன்றொண்டர் இந்நூலை முன்பு பாடங்கேட்டதுண்டு. அவர் சிந்தித்தும் வைத் திருப்பார். அவர் வரும்பொழுது கேட்டால் விளங்கும்" என்றார். அவ்வாறே அவர் பின்பு ஒரு சமயம் வந்தபொழுது, "கந்தபுராணத்திற் கயமுகனுற்பத்திப் படலத்தில் ஒரு சந்தே கம்" என்று சொல்லிவிட்டுப் பாடலின் முதலை இவர் சொல்லத் தொடங்குமுன்பே, "இன்ன செய்யுளோ?" என்று அச்செய்யு ளின் முழுப்பாகத்தையும் சொல்லித் தாம் முன்பு கேட்டிருந்தபடி பொருளையும் அவர் கூறிவிட்டனர். மாணாக்கர்களெல்லாரும் அவருடைய ஞாபக சக்தியையும் பாடம் போற்றலையும் தெரிந் துவியந்தார்கள்.

என் தந்தையாருக்கு எழுதிய கடிதம்

அப்புராணத்தை நாங்கள் பாடங் கேட்டு வந்தகாலத்தில் * கார்குடி என்னும் ஊரில் இருந்த என் தந்தையார் முடக்கு ஜ்வரத்தால் மிகவும் துன்பம் உற்றார்; "பிள்ளையவர்களிடம் படித்துக்கொண்டிருந்த ஒரு பிராமணர் அவர்களை விட்டுப் பிரிந்துபோனார்" என்று யாரோ ஒருவர் கூறியதை அவர் கேள்வியுற்று நான்தான் அங்ஙனம் பிரிந்து விட்டேனென்று ஐயமுற்றார். உடனே வந்து என்னைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் அதிகமாக இருந்தும் தேக அசௌகரியத்தால் அவருக்கு வரக் கூடவில்லை. கவலையினால் அசௌகரியம் அதி கரித்து விட்டது. அதனால் உத்தமதானபுரத்தில் இருந்த என் சிறிய தந்தையாருக்குத் தம்முடைய தேக அசௌக்கியத்தைத் தெரிவித்ததோடு என்னுடைய நிலைமையைப்பற்றி நன்றாக விசா ரித்து உடனே எழுதவேண்டுமென்று ஒரு கடிதம் எழுதினார்.

* இவ்வூர், திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரும்புலியூர்த் தாலூகாவில் உள்ளது.

அவர் அக் கடிதத்தை ஓர் ஆள் வசம் திருவாவடுதுறைக்குக் கொடுத்தனுப்பினர். அதைக் கண்டவுடன் தகப்பனாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் கவலையும் எனக்கு மிகுதியாக உண்டாயின. அவருடைய தேக அசௌக்கியத்தை நினைந்து வருந்தினேன்; எவ்வாறேனும் போய்ப் பார்க்கவேண்டுமென்றெண்ணிப் பிள்ளையவர்களை உத்தரவு கேட்டேன். என்னுடைய விருப்பத்தையறிந்த இவர் தாமே யின்றி என்னை அனுப்பத் துணியாமல் எனக்குத் தக்க ஆறுதல் கூறி என் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுதுவித்தார். அது வருமாறு:—

உ

"சிவமயம்.

"சாது குலோத்தம சாம்பவர்களாகிய ஐயரவர்களுக்கு அநேக தண்டம்.

"இவ்விடம் யாவரும் க்ஷேமம். சாமிநாத ஐயரும் க்ஷேமமாக இருக்கிறார். தாங்களும் குழந்தை முதலியவர்களும் க்ஷேமமாக இருக்கிற செய்திக்குக் கடிதம் வரைந்தனுப்பவேண்டும்.

"தாங்கள் சரீர சௌக்கியம் இல்லாமலிருந்து தலைக்கு ஜலம் போட்டுக்கொண்டதாகவும் அன்னம் செல்லாமலிருக்கிறதென்றும் * சின்னசாமி ஐயரவர்களுக்கு எழுதிய கடிதம் இவ்விடம் வந்து சேர்ந்தது; பார்வையிட்டோம். சாமிநாத ஐயர் மிகவும் கிலேசப்பட்டு, 'இப்போதே போய் நான் பார்த்துக்கொண்டு வருவேன்' என்று தீவிரமாகப் பிரயாணப்பட்டார். அப்போது நீரும் நிழலும் இல்லாத காட்டு ராஜ்யத்தில் நிராதாரமாகப் போவது கூடாதென்று நான் தடுத்திருக்கிறேன். அப்படித் தடுத்திருந்தும் அவர் நீங்கள் என்ன சிரமப்படுகிறீர்களோ வென்று சதா கவலையுள்ளவராகவே இருக்கிறார். ஆகையால் இந்தக் கடிதம் கண்டவுடனே உங்கள் தேக சௌக்கியத்தைக் குறித்து ஒரு கடிதம் அனுப்புவதன்றியும் அவ்விடத்துக் காரியங்களைப் பார்த்துக் கொண்டு முன்பு எழுதியபடியே இங்கு வந்து சேரவேண்டும்.

"உங்கள தேக சௌக்கியத்தைக் குறித்துச் சீக்கிரம் கடிதம் அனுப்பிவிட்டால் நீங்கள் பத்து நாள் தாமதித்து வந்தாலும் வரலாம். 'சாமிநாதன் சௌக்கியந் தெரிந்தால்தான் எனக்கு ஸௌக்

* இவர் என்னுடைய சிறிய தந்தையார்.

கியமாகும்' என்று எழுதியிருக்கிறீர்களே. அவர் நிரம்பவும் சௌக்கியமாக இருக்கிறார் அவரைக் குறித்து யாதொரு கவலையும் வேண்டாம். நான் இப்பொழுது திருவாவடுதுறையிலேயே இருக்கிறேன். காகிதமும் திருவாவடுதுறைக்கே அனுப்ப வேண்டுவது. *.....இக்கடிதம் சாமிநாதையர் கையெழுத்து. ஆகையால் சீக்கிரம் பதிலனுப்பவேண்டும்.

இங்ஙனம்

ஆங்கிரசவரு ஆவணிமீ ஈஉ (17—8—1872) மீனுட்சிசுந்தரம்."

இக் கடிதத்தைப் பார்த்தவுடன் என் தந்தையார், "உங்களுடைய அருமையான கடிதம் வந்து எனக்கு மிக்க ஆறுதலை விளைவித்தது. எனக்குள்ள அசௌக்கியம் இதனால் சீக்கிரம் நீங்கிவிடுமென்று எண்ணுகிறேன். சௌக்கியமானவுடன் வந்து பார்க்கிறேன்" என்று இவருக்கு ஒரு பதில் எழுதிவிட்டுச் சௌகரியப்படுத்திக்கொண்டு சில வாரங்களுக்குப் பின்பு திருவாவடுதுறைக்கு வந்தார்; என்னுடன் சிலதினம் இருந்து பிள்ளையவர்களோடு சம்பாஷணை செய்துவிட்டு மனமுவந்து மீட்டும் மேற்கூறிய கார்குடிக்குச் சென்றார்.

'உலகெலாம்' என்னும் செய்யுளின் உரை

ஆங்கிரச வருஷம் கார்த்திகை மாதத்திற் பெரியபுராணப் பாடம் ஆரம்பிக்கப்பட்டது. தியாகராச செட்டியாரும் வந்து கேட்டு இன்புற்றனர். இயல்பாகவே மகா வைத்தியநாதையரும் அவர் தமையனார் இராமசாமி ஐயரும் மடத்திற்கு வந்திருந்தமையால் அவர்களும் சிலதினம் உடனிருந்து கேட்டு வருவாராயினர். அப்புராணத்தை நடத்தத் தொடங்கியபொழுது மூலம் மட்டுமுள்ள சில அச்சுப் புத்தகங்களும் சில பாகத்திற்கு மட்டும் உரை எழுதப்பட்ட புத்தகம் ஒன்றும் வந்திருந்தன. 'உலகெலாம்' என்ற செய்யுளுக்கு அந்த உரையாசிரியர் எங்ஙனம் பொருள் செய்திருக்கிறாரென்பதை அறிவதற்கு அதனுரையைப் படிப்பித்து இவர் கேட்டார். அச்செய்யுளின் நயத்தை அவ்வுரை நன்கு புலப்படுத்தவில்லை. 'மலர் சிலம்படி' என்பதற்கு இலக்கணப் பிழையாக மலர்போன்ற சிலம்படியென்று

* கடிதத்தில் சிதைந்துள்ள பகுதி இது.

பொருள் எழுதப்பட்டிருந்தது. அதனை யறிந்து இவர் மன வருத்தமடைந்து, "மலர் சிலம்படி யென்றது வினைத்தொகை; அதற்கு மலர்ந்தசிலம்படி யென்பதுதான்பொருள். மலர்போன்ற சிலம்படியென்று பொருள் கொள்ளவேண்டுமானால், மலர்ச்சிலம் படி யென்றிருத்தல் வேண்டும். அப்படி யிருத்தல் இங்கே பொருந்தாது" என்றார்; உலகெலாம் மலர் சிலம்படியென இயைக்க வேண்டுமென்றும் இப்பொருளுக்கு மேற்கோள் திரு வாசகத்திலுள்ள, "தில்லை மூதூராடிய சேவடி, பல்லுயி ரெல்லாம் பயின்றனஞக" என்பதென்றும் எங்களுக்குச் சொன்னார். அந்த உரையைச் சுப்பிரமணிய தேசிகரிடத்தும் படித்துக் காட்டச் சொல்லவே கேட்டு அவரும் அதிருப்தியுற்றார். அந்த வருத்தம் மனத்தில் இருந்தே வந்தது; அதன் பொருளை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளச் செய்யவேண்டுமென எண்ணியே, சேக்கிழார் பிள்ளைத் தமிழை இவர் இயற்றுகையில் * "மாமேவு" என்னும் காப்புச் செய்யுளில் விளக்கினர்; அச்செய்யுளிலுள்ள நான்காமடி முதலியவற்றால் இது விளங்கும்.

பெரிய புராணப் பாடத்தை நிறுத்தியது

பெரிய புராணத்திற் கண்ணப்ப நாயனார் புராணத்தைப் பாடம்கேட்டு வருகையிற் சில தினத்திற்குப் பின்பு எனக்கு முத லிற் கடுமையான ஜ்வரம் கண்டது. பின்பு பெரியம்மை (பின் யேறி யம்மை) பூட்டிவிட்டமையால் தைமாத முதலில் என் அம்மானுடைய ஊராகிய சூரிய மூலைக்கு நான் செல்லும்படி ஏற் பட்டது. நான் சென்றதனால் மனவருத்தமுற்றிருந்த பிள்ளையவர் களுடைய நோக்கத்தை அறிந்த ஆதீனகர்த்தர், "சாமிநாதையர்

---

* "மாமேவு வான்பிறை மூடிப்பிறை யிரண்டென்ன வாய்க்கடைத் தோற்றியவிரும் - மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன மார் பின்முத் தாரமென்னப், பாமேவு பேருதர பந்தமென வரைசூழ் படா மெனத் தாளின்முத்தம் - பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப் பண்ணவனே யஞ்சலிப்பாம், ஏமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியி னிணங்குற வெழுப்புலகெலாம் - என்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளும் இயல்பனைத் துந்தெரித்து, நாமேவு மம்முதலொ டொன்ற வினை யுருபுதொக நான்கனடி யாதிசெய்து - நாற்சீரி னெனறி விளக்கி யொளிர் சேக்கிழார் நற்றமிழ்க் கவிதழையவே."

(சேக்கிழார் பிள்ளைத் தமிழ்.)

சௌக்கிய மடைந்து வந்தபின்பே பெரிய புராணத்தில் எஞ்சிய பாகத்தைப் படிக்கலாம்'' என்றார். அதனால் அப்பாடம் சில காலம்வரையில் நடைபெறவில்லை.

பல ஊர்களுக்குச் சென்றது

அதற்குமேல் இவர் தம்முடைய மாணாக்கர்களுடன் புறப்பட்டுத் திருவாரூர், கீழ்வேளூர், நாகபட்டினம், ஆவராணி, காரைக்கால், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களுக்குச் சென்றார். தைமாதத்தில் இவர் திருவாவடுதுறைக்குத் திரும்புகையில் நீடாமங்கலத்துக்கு வரும்பொழுது இவருக்கு முடக்கு ஜ்வரம் கண்டுவிட்டது. அதனால் துன்பம் உண்டானமையால் அவ்வூரிலும் அயலூர்களிலுமுள்ள சில கனவான்களின் உதவியினால் அது நீங்கும்வரையில் அங்கே தங்கியிருந்தார்.

ஒரு பாட்டிற்குப் பொருள் கூறியது

தமிழில் நல்ல பயிற்சி இல்லாமல் நூல்களுள் அங்கங்கே ஐயத்திற்கிடமான சில செய்யுட்களை மட்டும் மனனம் செய்துகொண்டு படித்த யாரையேனும் கண்டால் அந்தப் பாடல்களைச் சொல்லிப் பொருள்கேட்பது சிலருடைய வழக்கமென்பது அறிஞர்களுக்குத் தெரிந்திருத்தல்கூடும். அத்தகைய செய்யுட்களின் பொருளைத் தெரிந்துவைத்துக்கொண்டதனாலேயே எல்லா வித்துவான்களிலும் தாம் மேற்பட்டவர்களென்ற தருக்கு அன்னோருக்கு உண்டாகிவிடும். அதனால் தம்முடைய சில வினாக்களுக்கு விடை அளியாதவர்கள் தமிழ் வித்துவான்களல்லரென்று தாமே தீர்மானித்து விடுவார்கள். அங்ஙனம் அவர்கள் சொல்லக்கூடிய செய்யுட்கள்: * ''வந்தெதிரே தொழுதானை', * ''நஞ்சமன்னவரை'', * ''ஆயமா நாகர்'', † ''மாதுலராகி வந்த'' என்பன முதலியவை.

அந்தவகையைச்சார்ந்த ஒருவர் இவருடையவரவை அறிந்து இவர்பால் வந்து கேள்வி கேட்கத்தொடங்கினர். இவர் முகமாக எவ்வளவோ பல அரிய விஷயங்களைக்கேட்டு அறிந்துகொள்ளலாமென்ற எண்ணம் அவருக்கு உண்டாகவேயில்லை. ஏதேனும் இயற்கையாகவேபடித்திருந்தாலல்லவோ அந்த எண்ணம்உண்டாகும்? அவர் கேட்ட ஒவ்வொரு வினாவிற்கும் இவர் எளிதில் விடை

* கம்பராமாயணம். † திருவிளையாடற் புராணம்.

யளித்து வந்தார். வந்தவர் தம்முடைய சரக்குக்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துவிட்டார். பலசெய்யுட்களுக்கும் இவர் பொருள்கூறி வருவதைக்கேட்ட அவர், அதுகாறும் மிக்க ஐயத் திற்கிடமாயிருந்ததும் அவராற் பொருள் அறிந்துவைக்கப் படாததுமாகிய,

(கட்டவளக் கலித்துறை)

"*காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணியுங்காற்
காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணிமுக்காற்
காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணியுநாற்
காணியுங் காணியுங் காணியுங் காட்டுங் கழுக்குன்றமே"

என்னும் ஒரு செய்யுளைக்கூறிப் பொருள் வினவினர்.

அவர் அதிலே உள்ள காணிகளைக் கூட்டி, "காலைக் காட்டு மென்பது இதன் பொருள். கழுக்குன்றத்தை யடைந்தால் அத் தலம் சிவபெருமான் திருவடியைக் காணச் செய்யுமென்பது இதன் கருத்து. இது, 'பிணக்கிலாத பெருந்துறைப்பெரும் பித் தனே .....என்வினை யொத்தபின், கணக்கிலாத்திருக் கோல நீ வந்து காட்டினாய்கழுக் குன்றிலே' என்பதை நினைந்து பாடப் பெற்றது" என்று விடையளித்தார். கேட்ட அவர் வியந்து, "இது வரையிலும் யாரும் இதற்குச் சரியாகப் பொருள் சொல்லவில்லை. கடினமான செய்யுளையே பொறுக்கி எல்லோரையும் கேட்டுக் கலங்கச் செய்துகொண்டு வரும் நானே தெரிந்துகொள்ளவில்லை. யாதொரு கவலையுமின்றி இதற்குப் பொருள் கூறிய தாங்கள் தெய்வப் பிறவியே" என்று பாராட்டிக் கூறி மகிழ்ந்துசென்றார்.

அவர் சென்றபின் இவர், "இப்படி ஒரு கூட்டத்தினர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இத்தகைய பாடல்களுக்குப் பொருள் கூறுவதுதான் உண்மையான புலமை யென்ற அபிப்பிராயத்தை அவர்கள் எப்பொழுதும் விடமாட்டார்கள்" என்றார். உடனி ருந்த அவ்வூராரிற் சிலர், "இந்தத் துஷ்டன் எந்தத் தமிழ் வித்துவான் வந்தாலும் இப்படியே கேள்வி கேட்பது வழக்கம். சாதுவான சிலர் இவனுடைய படாடோபத்தில் மயங்கி அடங்கி விடுவார்கள். அதனால் இவனுடைய கொழுப்பு மிகுந்து வந்தது.

* இதிலுள்ள காணிகள் இருபது; இருபது காணி கொண்டது காலென்னும் எண்; காலென்பது இங்கே பாதத்தைக் குறிக்கிறது.

இன்றைக்குத் தங்கள்மூன் இவனுடைய கர்வம் அடங்கிற்று. எங்களுக்கு அது சந்தோஷமாக இருக்கிறது'' என்றார்.

திருவாவடுதுறைக்கு மறுபடி வந்தது.

அங்கேயுள்ளவருடைய விருப்பத்தின்படி இவர் மேனுப்பல் லக்கை உபயோகித்துக்கொண்டுதிருவாவடுதுறைக்குவருவாராயி னர். உடன்சென்ற மாணாக்கர்களும் தவசிப்பிள்ளைகளும் இவரை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டு வந்தார்கள். இவருக்கு ஜ்வரம் வந்ததைக் கேள்வியுற்றுத் திருவாவடுதுறை யிலிருந்து சென்றவர்களுடன் இவர் மாணாக்கராகிய சாமிநாத பண்டார மென்பவரும் வழியிற் சென்று பார்த்தனர்.

என்னைப்பற்றிய கவலை.

அவரைப் பார்த்தவுடன் இவர், ''சாமிநாதா, சாமிநாதைய ருக்குப் பெரியம்மை எந்த மட்டிலிருக்கிறது? தலைக்கு ஜலம் விட் டாயிற்றா? சௌக்கியமாக இருக்கிறாரா?'' என்று கேட்டனர். பண்டாரம், ''நான் பார்க்க வில்லை; அதனால் அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று கூறவே இவர், ''அடிக் கடி சென்று அவரைப் பார்த்து வரும்படி சொல்லி அதற்காகத் தானே உன்னைத் திருவாவடுதுறையில் வைத்துவிட்டு வந்தேன்? நீ கவனியாமலிருந்தது எனக்குச் சிறிதும் திருப்தியாக இல்லை'' என்று சொல்லிவிட்டுத் திருவாவடுதுறைக்கு வந்தார்; வந்த வுடனே மேற்கூறிய சாமிநாதபண்டாரத்தோடு வெறொருவரையும் சேர்த்து என்னுடைய நிலையை அறிந்து வரும்படி சூரியமூலைக்கு அனுப்பினர். அவர்கள் வந்து என்னைக்கண்டு கவலைதீர்ந்து, ''உங் களுடைய தேகத்தின் நிலைமையை நன்றாக அறிந்துகொண்டு விரை வில் வந்து தெரிவிக்கும்படி சொன்னதன்றி ஏதாவது உங்களுக்கு ஆகவேண்டியிருந்தால் அதையும் தெரிந்து வந்து சொல்ல வேண்டுமென்றும் ஐயா அவர்கள் சொன்னார்கள். அவர்கள் உங்கள் விஷயமான கவலையோடே யிருக்கிறார்கள். சீக்கிரத் தில் நாங்கள் சென்று சொல்லவேண்டும்'' என்று சொன்னார்கள். உடனே நான், ''இங்கே யாதொரு குறைவுமில்லை. என்னுடைய அம்மானவர்கள் என்னை நன்றாகக் கவனித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் என் தேகநிலைமை நன்றாகச் சௌக்கியமாகி விடும். ஆனவுடன்வந்து அவர்களைப் பார்த்து எனக்கு உள்ள

விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள எண்ணியிருக்கிறேன். இதைத் தெரிவிப்பதோடு எனக்கு உள்ள இடைவிடாத ஞாபகத்தையும் தெரிவியுங்கள்" என்று சொன்னேன். அப்பால் மிகவும் அவசரமாக அவர்கள் செய்தி சொல்லுதற்குத் திருவாவடுதுறைக்குப் போய்விட்டார்கள். அவர்களால் என்னுடைய நிலையைத்தெரிந்துகொண்ட இப்புலவர் பெருமான் சில தினங்களுக்கு ஒருமுறை என்னைப் பார்த்துவரும்படி யாரையேனும் அனுப்பி வந்தார். எனக்கு அது மிகவும் ஆறுதலாக இருந்தது.

மகாமகம்

அப்பால் ஆங்கிரஸ வருஷம் (1873) மாசிமாதம் கும்பகோணத்தில் ஸ்ரீ மகாமக புண்ணிய காலமானதால் ஸ்நானத்தின் பொருட்டுத் திருக்கூட்டத்தோடும் மற்றப் பரிவாரங்களோடும் சுப்பிரமணிய தேசிகர் அந்நகருக்கு விஜயஞ்செய்து அங்கே பேட்டைத் தெருவிலுள்ள ஆதீன மடத்தில் தங்கினர். தம் முடைய மாணாக்கர் பலரோடும் இக்கவிஞர் கோமானும் உடன் சென்று அங்கே சிலதினம் இருந்து சிறப்பித்தார். தமிழ் நாட்டின் பல பாகங்களிலுள்ள ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் பிரபுக்களும் சிஷ்யகோடிகளும் வித்துவான்களும் அங்கு வந்து தேசிகரைத் தரிசித்து மகிழ்வடைந்தார்கள்; அந்த நகரிலுள்ள சைவப் பிரபுக்களிற் பலர் மகேசுவர பூஜையும், பட்டணப் பிரவேசமும் மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். சுப்பிரமணிய தேசிகர் ஒரு பெரிய சபைகூட்டி வித்துவான்களுக்கெல்லாம் ஏற்றபடி ஸம்மானம் செய்தனர். வந்தவர்களில் தமிழ்ப் பாஷையில் அபிமானமுள்ள பெரும்பாலோர் இவரைப் பார்த்து இவருடைய வாக்கின் பெருமையையும் அருமையையும் பாராட்டித் தங்களுடைய இடத்திற்குவந்து சிறப்பிக்கவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டு சென்றனர். சில தினங்கள் சென்றபின் தேசிகர் பரிவாரங்களுடன் திருவாவடுதுறைக்கு விஜயம் செய்தமையால் இவரும் உடன்வந்து அங்கே தங்குவாராயினர்.

சிறப்புப்பாயிரங்கள்

கும்பகோணத்துக்கு வந்த பிரபுக்களிற் சிலரும், வித்துவான்களிற் சிலரும் உடன்வந்து திருவாவடுதுறையில் தங்கிச் சுப்பிரமணிய தேசிகரை நாள்தோறும் தரிசிப்பதுடன் பிள்ளை

யவர்களோடு சம்பாஷணை செய்தும் வந்தனர். அப்போது இருதிறத்தாருக்கும் உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவர்களில் மதுரை இராமசாமிபிள்ளை யென்பவர் செய்யுள் நடையாகத் தாம் இயற்றிய 'சிவாலய தரிசன விதி' என்னும் நூலையும் வடமொழியிலுள்ள பர்த்ருஹரி சதகங்களின் மொழிபெயர்ப்பான நூல்களையும் படித்துக்காட்டிச் செப்பம் செய்துகொண்டு சிறப்புப்பாயிரங்களும் பெற்றனர். திருநெல்வேலியைச் சார்ந்த பேட்டையிலுள்ள * சுப்பிரமணியபிள்ளை யென்பவர் தம் வழிபடு கடவுளாகிய சருக்கரை விநாயகர்மீது தாம் இயற்றிய ஒரு பதிகத்தையும் வேறு சில நூல்களையும் படித்துக்காட்டித் திருத்திக்கொண்டு சிறப்புப்பாயிரங்களும் பெற்றனர். அவற்றுள் எனக்குக் கிடைத்த சருக்கரை விநாயகர் பதிகச் சிறப்புப்பாயிரம் வருமாறு :—

(விருத்தம்)

"பூமேவு நங்கைவளர் மங்கைநக ரைங்கையுடைப்
புத்தேண் மேனிப்
பாமேவு மருக்கரைநேர் சருக்கரைவி நாயகற்கோர்
பதிகஞ் சொற்றான்
மாமேவு சொக்கலிங்க வள்ளன்முன்றோன் றிடத்தோன்றி
வந்த செம்மல்
நாமேவு பெரும்புகழ்சார் கலியுணர்சுப் பிரமணிய
நாவ லோனே."

இங்ஙனம் தாங்களியற்றிய நூல்களை இவரிடம் படித்துக் காட்டிச் சிறப்புப்பாயிரம் பெற்றுச் சென்றோர் வேறு சிலரும் உண்டு.

சேற்றூர் ஜமீன்தார்

சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களுக்குப் பொருளுதவி செய்ய விரும்பியும், அவ்வாறு செய்தால் மடத்திலுள்ளவர்கள் மடத்துப் பணத்தை வரையறையின்றி இவருக்குத் தாம் கொடுத்துச் செலவிடுவதாகத் தம்மைக் குறைகூறக் கூடுமென்றெண்ணினர். அதனால் இவருக்கு வேறு வகையான ஆதரவை உண்டாக்கக் கருதி, யாரேனும் பிரபுக்கள் வந்தால் இவரைப் பார்க்கச் செய்தும்

* இவரும் இவர் தமையனாராகிய சொக்கலிங்கம் பிள்ளை என்பவரும் திருவாவடுதுறை ஆதீனத்தில் அப்பொழுது சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரின் பூர்வாச்சிரமத்து உறவினர்கள்.

அவர்களைக்கொண்டு இவருக்கு உதவி செய்வித்தும் வந்தார். அவ்வப்பொழுது அந்தப் பிரபுக்களால் இவருக்குப் பொருளுதவி கிடைத்து வந்ததுண்டு.

தமிழில் நல்ல பயிற்சியுள்ளவரான சேற்றூர் ஜமீன்தாராகிய முத்துச்சாமி பாண்டியரவர்கள் ஒரு சமயம் அங்கே வந்து சில தினமிருந்தனர். இவரோடு பழகவேண்டுமென்னும் விருப்பம் அவருக்கு இருந்தமையின் அவரைச் சந்தித்துச் சம்பாஷணை செய்து வந்தால் தமக்குத் திருப்தியாக இருக்குமென்று இவருக்குச் சுப்பிரமணியதேசிகர் சொல்லியனுப்பினர். அப்படியே இவர் அந்த ஜமீன்தாரைக் கண்டு நெடுநேரம் சம்பாஷித்து அவருடைய நற்குணங்களில் ஈடுபட்டு,

(விருத்தம்)

" திருவியலுஞ் * சேறைநக ரிராசதா னித்தலமாத்
திங்கள் போல
உருவியலுங் கவிகைமுத்துச் சாமிபாண் டியனுயிர்கள்
உவப்ப மேவி
மருவிய † சுந் தரமகா லிங்கவே ளமைச்சியற்ற
வழிந டாத்தும்
பொருவியலா வரசுரிமைக் கொப்பதென்னென் றியாவர்களும்
புகலு வாரே "

என்னும்பாடல்ஒன்றை இயற்றிப்படித்துக்காட்டும்படிசெய்தார்.

ஜமீன்தார் கேட்டு இன்புற்று இவருக்குத் தக்க சம்மானம் செய்து பாராட்டினர்; சேற்றூருக்கு வந்து சில தினங்களிருந்து தம்மையும் மற்றவர்களையும் மகிழ்விக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அங்ஙனம் செய்வதாக வாக்களித்து இவர் தம்முடைய விடுதிக்கு வந்து விட்டார்.

திருவாவடுதுறைக்கு நான் திரும்பிவந்தது

சூரியமூலைக்குச் சென்றிருந்த நான் மாசிமீ கள-ஆந் தேதி (26-2-1873) புதன்கிழமை மாலையில் என்தந்தையாரோடும் துறைசைசென்று மடத்திற் பல அறிஞர்களிடையே சல்லாபம் செய்துகொண்டு விளங்கிய இவரைக் கண்டேன். உடம்பின் அம்மை

---

* சேறை - சேற்றூர்.

† சுந்தர மகாலிங்கம் பிள்ளை யென்பவர் அக்காலத்திற் சேற்றூர் ஸம்ஸ்தானத்தில் ஸ்தானபதி உத்தியோகத்திலிருந்தவர்.

வடுக்கள் இவர் கண்ணுக்குப் புலப்படாதபடி அதிகமாக விபூதியைத் தூளனம் செய்துகொண்டிருந்தேன்; என்னைக் கண்டதும் அருகே யழைத்து இருக்கச்செய்து இவர், "அம்மை வடுக்கள் புலப்படாதபடி விபூதிக் கவசம் தரித்திருக்கிறீர் போலும்; அடையாளம் தெரியவில்லையே. உம்முடைய ஞாபக மாகவே இருந்தேன். நீர் இல்லாமையினால் பெரிய புராணப் பாடத்தை நிறுத்திவைக்கும்படி ஸந்நிதானம் கட்டளையிட்டது. அதனால் அது நடைபெறவில்லை. இனிமேல்தான் நடைபெற வேண்டும்" என்றனர். பின்பு அங்கே வந்திருப்பவர்களுள் ஒவ்வொருவரையும் எனக்குப் பழக்கம் செய்வித்தார். நான் பலநாளாகக் கேள்வியுற்றிருந்த அவர்களை அன்று தெரிந்து கொண்டேன்.

அதன்பின்பு பெரிய புராணத்தில் எஞ்சிய பாகமும் நன்னூல் விருத்தியுரை முதலியனவும் முறையே எங்களாற்பாடங் கேட்கப்பட்டு வந்தன. மற்றொரு வகையாருக்கு நன்னூற் காண்டிகையுரை முதலியன இவராற் பாடம் சொல்லப்பட்டு வந்தன.

சுப்பிரமணிய தேசிகர் விடுதி அமைத்துக் கொடுத்தது

பிள்ளையவர்களுக்கும் படிக்கிறவர்களுக்கும் வசதியான இடங்கள் இல்லையென்பதை அறிந்த சுப்பிரமணிய தேசிகர் திருவா வடுதுறைத் தெற்கு வீதியின் தென்சிறகிற் புதியனவாக மூன்று வீடுகள் கட்டுவித்து அவற்றில் நடு வீட்டை இவருக்காக அமைத்து இவர் வருத்தமில்லாதபடி சென்று வருவதற்காக முன்வாயிலின் நிலையை உயரமாக வைக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே அஃது அமைக்கப்பெற்றது. இப்போதும் அந்த வீடு பிள்ளையவர்கள் வீடென்றே வழங்கி வருகிறது.

அநந்தகிருஷ்ண கவிராயர்

விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீ நமச்சிவாய கவிராயருடைய வழித் தோன்றலும் சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரி டம் அநேக நூல்களைப் பாடங்கேட்டவருமாகிய அநந்தகிருஷ்ண கவிராயரென்பவர் மகாமகத்திற்காகக் கும்பகோணம் வந்திருந்து அப்பால் திருவாவடுதுறைக்கும்வந்து இவரிடத்திற் பாடங்கேட்டு வருவாராயினர். அவருடைய பரம்பரைப் பெருமையையும்

புத்தி நுட்பத்தையும் அறிந்து அவர்பால் இவர் அதிக அன்பு செலுத்தி வந்தனர். ஒரு நல்ல தினத்தில் அவர் சுப்பிரமணிய தேசிகரிடம் தீட்சை பெற்றுக்கொண்டமையால் 'அம்பலவாணர்' என்னும் தீட்சாநாமம் தேசிகரால் அப்பொழுது அவருக்கு அளிக்கப்பட்டது. அப்பெயர் அவருக்கு அமைந்ததைப் பாராட்டிய இவர் அவர்மீது,

(கட்டளைக்கலித்துறை)

"நம்பல மாகுந் திருவா வடுதுறை நண்ணிவள
ரும்பலர் போற்றும்பஞ் சாக்கர தேவ னுரைத்தபடி
*கம்பல வான்கண்ண னென்றே தினமுங் கரைவதினும்
அம்பல வாண னெனும்பெய ரேநன் கமைந்ததுவே"

என்னும் செய்யுளை இயற்றினர்.

அப்பால் ஸ்ரீமுக வருஷத்தில் தாம்பிரபரணி நதிக்கரையிலுள்ளதாகிய பாபநாசமென்னும் ஸ்தலத்தில் நடைபெறும் ஸ்ரீகலியாண சுந்தரேசுவர மூர்த்தியின் திருவிழாவிற்கு ஒவ்வொரு தினமும் வாகனகவிகள் சொல்லுவது அவருக்குப் பரம்பரை வழக்கமாதலால் அதற்குப் போகவேண்டுமென்று விடைபெற்றுக் கொள்ளுதற்கு அவர் முயன்றனர். அப்போது இவர், "போக வேண்டாம்; இங்கே இருப்பது எனக்குத் திருப்திகரமாயிருக்கிறது" என்று சொன்னதுடன், "அங்கே போய்ச் சொல்ல வேண்டிய பாடல்களை நானே செய்து தருவேன். அவற்றையனுப்பி யாரைக்கொண்டேனும் அங்கே படிக்கச் செய்க" என்று சற்றேறக்குறைய இருபதுக்குக் குறையாத †வாகனகவிகளை இயற்றி அவரிடம் கொடுத்து ஊருக்கு அனுப்பச் செய்தனர். அப்படியே அனுப்பிவிட்டு அவர் திருவாவடுதுறையிலிருந்தே பாடங்கேட்டு வந்தனர்.

ஸ்ரீ நமச்சிவாய கவிராயருடைய பாட்டைப் பாராட்டியது

இவருக்குக் கச்சியப்ப ஸ்வாமிகளிடத்தில் மிக்க பக்தியுண்டென்பது ‡முதற்பாகத்தால் அன்பர்களுக்குப்புலப்பட்டிருக்கும்;

---

* கம் பலவான் - பல தலைகளையுடைய ஆதிசேடன்; அநந்தன்.

† இச்செய்யுட்கள் முழுவதையும் நான் எழுதினமையினாலே பிற்காலத்தில் திருநெல்வேலிப் பக்கம் சென்ற பொழுது இரண்டுமுறை இவர் வீடு சென்று தேடிப்பார்த்தும் இப்பாடல்கள் கிடைக்கவில்லை.

‡ பக்கம், உஎ, எக, உஉடு.

எங்களுக்குப் பாடஞ் சொல்லிவருகையில் இடையிடையே அவருடைய கல்விப் பெருமையை இவர் எடுத்துக் கூறிவருவதுமுண்டு. மேற்கூறிய அநந்த கிருஷ்ண கவிராயரைச் சந்திக்கும் காலங்களில் அவர் முன்னோர்களாகிய நமச்சிவாய கவிராயர் முதலியோர்கள் இயற்றிய பிரபந்தங்களிலுள்ள பாடல்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டு இவர் இன்புற்று வந்தார். ஒரு சமயத்திற் சில பாடல்களைச் சொல்லி அப்பால்,

(சந்த விருத்தம்)

"வாழ்ந்த தென்னவி சாலத லங்களை
ஆண்ட தென்னப்ர தாபமி குந்திறு
மாந்த தென்னவ்ரு தாவின்ம தங்கொடு தலைகீழாய்
வீழ்ந்த தென்னவை யோபிற கங்கவர்
மாண்ட தென்னபொ யோவென விங்கினி
வேண்டி யென்னப்ர யோசன நின்பதம் அடைவேனே
சூழ்ந்து பன்னிரு காதம ணங்கமழ்
தேன்கள் விம்மியி ருள்கள்கி ழிந்திடை
தூங்கு தென்மல யாசல நின்றடி யவர்போலத்
தாழ்ந்து சன்னிதி யூடுபு குந்தலை
மோந்து தண்மலர் மாரிபொ ழிந்திடு
தாம்ப்ர பன்னிம காநதி நின்றவென் உலகாளே"

என்ற செய்யுளை அவர் சொன்னார்; இவர் கேட்டு மெய்ம்மறந்து ஆனந்த பரவசராகி, "இப்படிப் பாடுவதற்குக் கச்சியப்பஸ்வாமிகளாலும் முடியாது" என்று கூறினர் அருகே இருந்த நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்து, "கவிஞரெல்லாரினும் கச்சியப்ப ஸ்வாமிகளிடத்து இவருக்கு உள்ள நன்மதிப்பு வெளியாகிறது" என்று மந்தணமாகப் பேசிக்கொண்டோம்.

அண்ணுசாமி முதலியார்

திருநெல்வேலியில் நீதிபதியாக இருந்த புதுச்சேரி அண்ணுசாமி முதலியாரென்பவர் தம் ஊருக்குப் போகும்பொழுது திருவாவடுதுறையில் இறங்கிச் சுப்பிரமணியதேசிகரைத் தரிசித்து விட்டுச் செல்லுவது வழக்கம் ஒருமுறை அவர் வந்திருந்த பொழுது அவருடைய குண விசேடத்தையும் சுப்பிரமணிய தேசிகர்பால் அவருக்குள்ள அன்பின் மிகுதியையும் அறிந்து பிள்ளையவர்கள் சொல்லிய பாடல் வருமாறு :—

(விருத்தம்)

"சீர்பூத்த கல்வியுந்தக் கோர்விழையு மொழுக்கமும்வண்
சீர்த்தி தானும்
ஆர்பூத்த நடுநிலையுங் கலைஞர்களு நின்பால்வந்
தண்ண லானே
பேர்பூத்த புதுவையண்ண லேயண்ணு சாமியெனும்
பேர்பெற் றுயால்
நீர்பூத்த பரங்கருணைக் கடவுளரு ளால்வாழி
நீடு மாதோ."

குற்றாலச் சிலேடை வெண்பா

பிறகு வன்றொண்டச்செட்டியார்வந்து சிலதினங்கள்இருந்து ஓய்வுநேரங்களில் தமக்குள்ள சில ஐயங்களைத் தீர்த்துக்கொண்ட தன்றித் திருச்சிற்றம்பலக் கோவையாரை முறையே பாடங்கேட் டுக்கொண்டு வந்தனர்; குற்றாலச் சிலேடை வெண்பா, சிங்கைச் சிலேடை வெண்பா என்பவற்றின் கைபெழுத்துப் பிரதிகளை அவர் கொணர்ந்திருந்தார். அவற்றை நன்றாக ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டுமென்னும் நோக்கம் அவருக்கு இருந்தது. அதனால் மடத் திலிருந்த பிரதிகளையும் வாங்கி வைத்துப் படிப்பித்து இக்கவிஞர் பிரான் முன்னிலையிற் பொருள் வரையறை செய்து கொண்டே வந்தார். இவருடைய மற்ற மாணவர்களும் பிறரும் உடனிருந்து கேட்டுக்கொண்டும் இவருடைய கருத்தின்படி தமக்குத் தோற் றியவற்றை அப்பொழுதப்பொழுது சொல்லிக்கொண்டும் இருந் தார்கள். குற்றாலச் சிலேடை வெண்பாவை வாசித்துவருகையில்,

"வாடிய மெய்த்தவரும் வாரி மணித்திரளும்
கோடி வரம்படைக்குங் குற்றாலம்"

என்னும் செய்யுளில் 'கோடி வரம்படைக்குங் குற்றாலம்' என்ற அடிக்குக் கோடி வரங்களை அளிக்கும் குற்றாலமென்ற ஒரு பொருள் மட்டும் விளங்கிற்று; மற்றொன்று விளங்கவில்லை. அதைப்பற்றி யாவரும் யோசித்துக்கொண்டிருக்கையில் அங்கி ருந்த மாணவர்களில் ஒருவர் திடீரென்று, "கோடி இவர் அம்பு அடைக்கும் என்று சொல்லலாமோ?" என்று அச்சத்தோடு அறிவித்தனர். இக்கவிராயகரும் மற்றவர்களும் சந்தோஷித்து அவர் கூறியதை அங்கீகரித்தார்கள். வன்றொண்டச் செட்டியார் மட்டும் சிறிதும் வியவாமல், "மறுத்து" என்று சொல்லி மேலே

படிக்குமாறு குறிப்பித்தனர். அப்பால் சில பாட்டுக்கள் படிக்கப்பட்டன. தாம் சொன்ன பொருளைச் செட்டியார் சிறிதும் பாராட்டவில்லையே யென்ற வருத்தம் மேற்சொன்ன மாணவருக்கு இருந்தது. எழுந்து செல்லுகையில் அம்மாணவரை நோக்கி இவர், "செட்டியார் மதிக்கவில்லை யென்ற வருத்தம் உமக்கு இருப்பதாகத் தெரிகிறது. உண்மைப் பொருளுக்கு எப்பொழுதும் மதிப்புண்டு. அவர் மதியாவிட்டால் அதற்கு இழிவொன்றுமில்லை. பிறருடைய மதிப்பையும் அவமதிப்பையும் கவனிக்கக்கூடாது" என்று ஆறுதல் கூறினர். இக்கொள்கை பிறருக்குக் கூறப்படுவது மட்டுமன்று. பிறர் மதித்தாலும் மதியாவிட்டாலும் அதைக் கவனியாதவராகி உண்மைப்பொருளை வெளியிடலையே இவர் தமது வாழ்வின் பயனாகக்கொண்டிருந்தார்.

வீரபத்திர பிள்ளை

சுப்பிரமணிய தேசிகர் கல்லிடைக்குறிச்சியில் இருந்த பொழுது மிக்க உபகாரியும் சிறந்த கல்விமானுமாயிருந்த சிரஸ்தேதார் வீரபத்திர பிள்ளை யென்பவரைத் திருவாவடுதுறைக்கு வருவித்துச் சிலநாள் வைத்திருந்து உபசரித்து ஸல்லாபம் செய்யவேண்டு மென்றெண்ணி அவர் வரவை எதிர்பார்த்திருந்தார். வருவதற்குப் பிரியமிருந்தும் தளர்ச்சி மிகுதியால் வீரபத்திர பிள்ளையால் துறைசைக்கு வர இயலவில்லை. தம்முடைய அன்பர்களிடத்திற் பிரியத்தைச் செலுத்துவதிற் சிறந்த தேசிகருக்கு அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் மிகுதியாக இருந்தது; அதைத்தெரிந்து இவர் அதனைப் புலப்படுத்திக் கற்பனையுள்ள * கஉ - பாடல்களை இயற்றி அவருக்கு அனுப்பினர். அவர் அயலூருக்குச் செல்லுவதில்லையென்னும் உறுதியுடையவராக இருந்தும் அப்பாடல்களைப் பார்த்து அவற்றில் ஈடுபட்டு உடனே புறப்பட்டுத் தபால்வண்டிவழியே திருவாவடுதுறைவந்து தேசிகரைத் தரிசித்தும் இவரோடு ஸல்லாபம் செய்துகொண்டும் சிலதினம் இருந்து மகிழ்ந்து விடைபெற்றுத் தம்மூர் சென்றார்.

திருக்குற்றாலப்புராணம் படித்தது

ஒருசமயம் திருக்குற்றாலப்புராண அச்சுப்பிரதி கிடைத்தது. அதனிடத்து நெடுங்காலமாக இருந்த பிரீதியால் இவர் அதனை

* அப்பாடல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

உடனே படிப்பித்துக்கேட்டு முதலிலிருந்து பொருள் வரையறை பண்ணிக்கொண்டே சென்றார். அப்பொழுது மகாவைத்திய நாதையர், மேலகரம் * சண்பகக் குற்றாலக் கவிராயர் முதலியோர் உடனிருந்தார்கள். அப்படிக் கவனித்து வருகையில் ஸ்ரீ சண்டி கேசுவர ஸ்துதியாகிய,

(விருத்தம்)

"தான்பிறந்த தந்தையையும் இனிப்பிறக்கும் நிந்தையையும்
தடிந்து சேயென்
றுன்பிறங்கு மழவிடைமே லொருவரழைத் திடவிருவர்
அயிர்ப்ப வேகிக்
கான்பொலிதா ரரிபிரமா தியர்க்குமெய்தா இருக்கையெய்திக்
கடவுட் சேடம்
வான்புலவர் பெருப்பேறு பெற்றவனே நற்றவனே
வழுத்தல் செய்வாம்"

என்னும் செய்யுளில், 'சேயென்று ஒருவரழைத்திட இருவர் அயிர்ப்பவேகி' என்ற பகுதியில் இருவரென்பதற்குப் பொருள் விளங்காமையால் இவர் யோசித்துக்கொண்டிருந்தார். அப் பொழுது மகாவைத்தியநாதையர், "இருவரென்பதற்கு விநாய கர் சுப்பிரமணியரென்று சொல்லலாமோ?" என்று மெல்லச் சொன்னார். அப்பொருள் மிகவும் பொருத்தமுள்ளதாக இருந் தது; கேட்ட இக்கவிஞர்கோமான், "ஐயா, நிரம்ப நன்றாயிருக் கின்றது. உங்களுடைய ஈசுவர பக்தியே இவ்வாறு தோற்றச் செய்கிறது" என்று மனமுருகிக் கொண்டாடினார்.

இரண்டு புறங்கூற்றாளர் பாடம் கேட்டது

இவர் இயற்றிய திருவிடைமருதூருலாவைப்பற்றிப் பொறு மையாற் பலவகையான புரளிகளை அங்கங்கே உண்டாக்கி இவருக் கும் இவருடைய மாணாக்கர் முதலியவர்களுக்கும் மனவருத் தத்தை யுண்டுபண்ணி அதனாற் பலராலும் அவமதிப்பை அடைந் தவர்களில் முக்கியமானவர் இருவர். அவர்கள் எப்படியாவது தம் குறைவைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணி அதற்கு உபாயம் இக்கவியரசருடைய அன்பைப் பெறுவதுதானென்றும்

* இவர் திருவாவடுதுறை ஆதீன கர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பூர்வாச்சிரமத்தில் தம்பியாவார்.

அதனைப் பெறுதற்கு உபாயம் பாடம் கேட்பதாக இவர்பாற் செல்வதுதானென்றும் தம்முள் நிச்சயித்துக்கொண்டு ஒரு நாட் காலையிற் கையுறைடன் இவர்பால் வந்தனர். சாந்தமூர்த்தி யாகிய இவர் வந்தவர்களுடைய இயல்பை நன்றாக அறிந்திருந் தும் விசாரித்து அவர்களுடைய நோக்கத்தையறிந்து சிறிதும் வருத்தத்தைப் புலப்படுத்தாமல் அங்கீகரித்து மற்ற மாணாக்கர் களோடு சேர்த்து அவர்களுக்குப் பாடஞ்சொல்லி வந்தார்; அப்போது மாணவர்களிற் சிலர் அவ்விருவர் முன்பு செய்துள்ள தீங்குகளை எல்லாம் நினைந்து நினைந்து மனம் பொறுதவர்களாகி அவர்களைக் கண்டிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு சம யத்தை எதிர்பார்த்திருந்தவர்களாதலால் இடையிடையே கேள்வி களைக் கேட்டு அவ்விருவரையும் விழிக்கச்செய்து அடிக்கடி வருத்துவாராயினர். இக் கவியரசர் சும்மா இருக்கும்படி குறிப் பித்தும் அவர்கள் கேட்கவில்லை.

அதனைக் கண்ட இவர் ஒருநாள் திடீரென்று தனியே சுப்பிர மணிய தேசிகரிடம் சென்று அதனை விண்ணப்பித்தனர். அவர் உடனே பழைய மாணாக்கர்களை மட்டும் அழைப்பித்து நன்றாக விசாரித்து, "ஒருவன் தமக்குப் பரம விரோதியாக இருந்தாலும் தம்பால் வருவானுயின் அவனை ஏற்றுக்கொண்டு முன்னிலும் நன்கு மதித்துப் பாராட்டவேண்டுமென்பது பெரியோருடைய கொள்கை. அதனை அறியாமல் நீங்கள் வழுவி ஒழுகுவீர்களா யின் உங்களைமட்டுமன்றி உங்கள் ஆசிரியரையும் உலகம் அவமதிக் கும்; நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் மடத்திற்கும் அகௌர வம் உண்டாகும்; 'இணரெரி தோய்வன்ன வின்ன செயினும், புணரின் வெகுளாமை நன்று' என்னும் திருக்குறளை யறியீர் களோ? அதற்குச் சங்கர நமச்சிவாயரெழுதிய அருமையான உரையை நோக்குங்கள்" என்று பல நியாயங்களை எடுத்து மொழிந்தனர். அன்றியும் உடனே விருத்தியுரையில் உள்ள * அந் தப்பகுதியைப் படிப்பிக்கச்செய்து இடையிடையே வேண்டிய வற்றையும் சொல்லி அறிவுறுத்தினர். மாணாக்கர்கள் அவர் முக மதியினின்றும் தோன்றிய வசனாமிர்தத்தையுண்டு சாந்தமுற்றுச் சென்று அவ்விருவரோடும் நட்புற்று மனங்கலந்து பழகுவராயி னர். அவ்விருவரும் பின்பு திருச்சிற்றம்பலக் கோவையார், கல்லா

* நன்னூல், உ00-ஆம் சூத்திரவுரை.

டம், திருநாகைக்காரோணப்புராணம் முதலிய சில நூல்களைப் பாடம் கேட்டுத் தங்கள் எண்ணத்தை முடித்துக்கொண்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

வேலுச்சாமி பிள்ளை

பிள்ளையவர்களோடு கூடப் படித்த ஒரு சாலை மாணாக்கராகிய சென்னை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் தம்மிடம் படித்துக்கொண்டிருந்தவரும், தில்லைவிடங்கன்மாரிமுத்தாபிள்ளையின் பரம்பரையினருமாகிய வேலுச்சாமி பிள்ளை யென்பவரை மேலும் நன்றாகப் படிப்பிக்க நினைந்து தமக்கும் பிள்ளையவர்களுக்கும் உள்ள சிநேகபாவத்தைப் புலப்படுத்தி, 'இவரைப் படிப்பித்து முன்னுக்குவரச் செய்யவேண்டும்' என்று ஒரு கடிதமெழுதிக் கொடுத்தனுப்பினர். அவர் வந்து இவரை வணங்கி அக் கடிதத்தைக் கொடுத்தனர். அதைப் பார்த்துவிட்டு இவர் அவரை அங்கீகரித்து அப்படியே பாடம் சொன்னர். நாளடைவில் அவருடைய கல்வி மிகப்பெருகியது. இவரிடத்திற் படித்தமையாற் கவித்துவசக்தியும் நன்றாக அவருக்கு உண்டாயிற்று. பெரும்பாலும் வெண்பாவே பாடுவார். பாடுவதிற் கஷ்டமென்று சொல்லப்படும் அந்தப் பாவை விரைவாகப் பாடுவதைத் தெரிந்து உடன் படிக்கும் மாணாக்கர்கள் 'வெண்பாப்புலி' என்று அவரை அழைப்பாராயினர். அதுவே பின்பு அவருக்குரிய பட்டப் பெயராக அமைந்து வழங்கலாயிற்று. அவர் பிற்காலத்திற் காஞ்சீபுரம் ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்தனர்.

பு. சபாபதிமுதலியாருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது

சென்னையைச்சேர்ந்த கோமளீசுவரன் பேட்டையிலுள்ள திருவாதவூரடிகள் பக்தஜன சபையின் தலைவராகிய நாராயணசாமி முதலியாரென்பவர் சேக்கிழார் புராணத்திற்கும் திருமுறைகண்ட புராணத்திற்கும் உரைசெய்து தரும்படி புரசப்பாக்கம் வித்துவான் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரைக் கேட்டுக் கொண்டனர். அவரும் அப்படியே இரண்டிற்கும் உரைசெய்து முடித்துவிட்டு அவற்றிற்குச் சிறப்புப்பாயிரம் அனுப்பவேண்டுமென்று பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதினர். வேலைகளின் மிகுதியால் இவரால் அது செய்யப்படவில்லை. சீக்கிரம் பாடல்கள் செய்து அனுப்பினால் தமக்கு அநுகூலமாயிருக்கு மென்று அவர்

ஞாபகப்படுத்தி மீண்டும் ஒரு கடிதம் எழுதினர். ஒருநாள் பிற் பகலிற் பாடம் முடிந்தவுடன் அதனை நினைவுறுத்தினேன். அதுஷ்டானம் செய்து வந்து சயனித்துக் கொண்ட பொழுது என்னை நோக்கி எழுதும்படி ஐந்து பாடல்களை இடையிடின்றிச் சொல்லிக்கொண்டு வந்தார். அவற்றை நான் எழுதியவுடன் வேறொரு கடிதம் எழுதுவித்து மறுநாள் சபாபதி முதலியாருக்கு அனுப்பிவிட்டார்; அப்பாடல்கள் வருமாறு :—

(விருத்தம்)

(1) "சொல்லாரும் புனற்பெருக்காற் பாலாறு வளஞ்சுரக்கும்
தொண்டை நாட்டில்
எல்லாரும் புகழ்சென்னைக் கோமளீச் சுரன்பேட்டை
எனுமோர் தேத்தில்
நல்லாரும் பரும்போற்றுஞ் சிவானுபவச் செல்வராய்
நனிவி ளங்கு
தல்லாருந் திருவாத வூரடிகள் பத்தசன
சபைக்கு மாதோ"

(2) "தலைவராய் நல்லொழுக்க நெறிநின்ற பெருங்குணஞ்சால்
தக்கோ ராய
நிலைமைசால் புகழ்நாரா யணசாமி மான்முதலாம்
நிகரி லாதார்
கலைவலார் முடிக்கொளுநஞ் * சேக்கிழார் புராணமொடு
கருத்திற் கென்றும்
மலைவிலா முறைகண்ட புராணமும்யா வருமுணர்ந்து
மதிக்கு மாறு"

(3) "தங்கள்கருத் திடைமதித்து யாவரைக்கொண் டுரைசெய்தால்
தக்க தென்றே
திங்கண்முடி யவனடியார் முதலியயா வருமதித்தல்
செய்வா ரென்று
பொங்களவி லாராய்ச்சி கொடுதேர்ந்தே யிவனுரைத்தல்
பொருந்து மென்றே
அங்களவின் மகிழ்ச்சியின்நீ உரையியற்றித் தருகவென
அதுமேற் கொண்டு"

---

* இந்நூல்கள் இரண்டும் இச் சிறப்புப்பாயிரத்துடன் ஸ்ரீமுகவரு சித்திரைமீ (1873) பதிப்பிக்கப்பட்டன.

(4) "பாடமுத லாசிரிய வசனமீ ருகவுள
பலவு மாங்காங்
கூடமைய வெழுத்துமுதன் மூன்றதிகா ரத்துமியல்
உளவோ ரைந்தும்
தேடமுய லாதபடி காணிடமெ லாம்விளங்கத்
திகழ்யா வோரும்
நாடவுரை யாசிரியர் முதலியோ ரினுமுரைநன்
னயமாச் செய்தான்"

(5) "நிலம்பூத்த நகர்க்கெல்லா மரசையுறு புரசைநகர்
நீடு வாழ்வோன்
குலம்பூத்த பிறப்பொழுக்கங் கல்வியறி வியற்கைநலம்
கூடப் பெற்றோன்
நலம்பூத்த வொப்புரவு முதலியநற் குணங்களெலாம்
நன்கு வாய்ந்தோன்
வலம்பூத்த வட்டாவ தானச்ச பாபதிநா
வலவ ரேறே."

இடையீடின்றிச் சொன்னமையால், பாடஞ் சொல்லிய தற்குப் பின்பும் எழுதச் சொல்லுவதற்கு முன்பும் நன்றாகச் சிந்தித்துப் பாடி அவற்றை ஒழுங்குபடுத்தி மனத்தில் வைத்துக் கொண்டிருந்தாரென்று அப்பொழுது எண்ணினேன்.

---

7. பட்டீச்சுர நிகழ்ச்சிகள்

பட்டீச்சுரம் சென்றது

இங்ஙனம் திருவாவடுதுறையிலிருந்த காலத்தில் திருப் பெருந்துறைப் புராணத்தைப் பாடுதற்கு ஓய்வு நேரமில்லாமை யால் அதனை அரங்கேற்றச் செல்லுதற்கு இவருக்கு இயலவில்லை. அப்பொழுது அப்பொழுது இவருக்கு உண்டான செலவுகள் அதிகம். அவற்றால் கடன் அதிகரித்துக்கொண்டே வந்தது. வேறிடத்திற் சென்று வாங்கிக் கொடுப்பதற்கும் இயலவில்லை. மிகுதியான செலவுள்ளவராதலால் அடிக்கடி பல விடங்களிற் கடன்கள்வாங்கிச் செலவழிப்பதும் ஏதேனும் நூல் அரங்கேற்றிய பின்பு கிடைக்கும் ஊதியத்தில் எஞ்சியதைக்கொண்டு அவற்றைத் தீர்ப்பதும் இவருடைய வழக்கம்.

அதனால் இவர், "ரூபாய் ஐந்நூறு கொடுத்தால் திருப்பெருந் துறைப் புராணம் அரங்கேற்றியவுடன் முதலியும் வட்டியையும் சேர்ப்பித்துவிடுவேன்; அவசியமாக வேண்டியிருக்கின்றது" என்று குமாரசாமித் தம்பிரான் முகமாக அப்பொழுது மடத்தின் காறுபாறாக இருந்த ஒருவரிடம் தெரிவித்தார். பிள்ளையவர் களுடைய அருமையை அவர் சிறிதும் அறியாமல், "எதை நம்பி இவருக்குப் பணம் கொடுக்கிறது?" என்று குமாரசாமித் தம்பிரானிடம் மந்தணமாகச் சொன்னதுடன், "இப்பொழுது கொடுப்பதற்குச் சௌகரியமில்லை என்று சொல்லிவிடுக" என் றும் சொல்லி யனுப்பிவிட்டார். அன்புடையவராதலால் குமார சாமித் தம்பிரான் அதனை அப்படியே இவரிடம் வந்து சொன்னார். அதனைக் கேட்ட இவருடைய மனம் மிகப் புழுங்கிவிட்டது. அவ்வருத்தத்தை மனத்திலேயே வைத்துக்கொண்டு சிலகாலம் அங்கேயிருந்தார். பின்பு வேறிடம் சென்று சிலதினமிருந்து அவ்வருத்தத்தை ஆற்றிக்கொண்டு வரலாமென்று எண்ணிப் பட்டீச்சுரம் போய்வருவதாகச் சுப்பிரமணிய தேசிகரிடம் விண் ணப்பித்துக்கொண்டு புறப்பட்டார். மாணாக்கர்களெல்லாம் பிரிவாற்றாமல் வருந்தினார்கள். நான்மட்டும் உடன்சென்றேன். இன்ன காரணத்தால் இவர் பட்டீச்சுரத்துக்குப் புறப்பட்டா ரென்பது தேசிகருக்குத் தெரியாது.

திருப்பெருந்துறைப் புராணம் பாடிவந்தது

சென்றவர் ஐப்பசி மாதத்தின் இறுதிவரையில் பட்டீச் சுரத்திலேயே இருந்தார். அப்பொழுது தினந்தோறும் திருப் பெருந்துறைப் புராணத்தின் செய்யுட்கள் முறையே பாடப் பெற்று வந்தன. பழைய திருப்பெருந்துறைப் புராணங்களுள் ஒன்றில் படலந்தோறும் திருவாதவூரடிகள் தோத்திரம் ஒவ் வொன்று இருந்தது. அதனைக்கண்ட நான், நாட்டுப்படலஞ் செய்ய இவர் தொடங்குகையில் படலங்கள் தோறும் முதலில் திருவாசவூரடிகள் தோத்திரம் இருந்தால் நலமா யிருக்கு மென்று தெரிவித்துக்கொண்டேன். அவ்வாறே இவர் பாடி அமைத்துவந்தார். முதன்முறை பாடல்களை எழுதிப் படித் துக்காட்டி ஏதேனும் திருத்தம் செய்யவேண்டி யிருந்தால் இவர் சொல்ல அங்ஙனம் செய்துவிட்டு ஆன பாகங்களைத் தினந்தோறும் வேறு பிரதியில் எழுதிக்கொண்டே வருவது

அக் காலத்தில் எனக்கு வழக்கமாக இருந்தது. அதனல் பாடம் கேட்பதற்கு எனக்கு நேரமில்லை. அந்தப் புராணத்தை எழுதி அப்பொழுதப்பொழுது பொருள் கேட்டு வந்ததே என்னுடைய பயிற்சிக்கு அனுகூலமாக இருந்தது.

ஆறுமுகத்தா பிள்ளை எழுத்தாணியை ஒளித்து வைத்தது

அப்புராணத்தை மேலைப் பழையாற்றிலிருந்து எழுதிக் கொண்டு வருங்காலத்தில் ஒருநாட் காலையில் ஆகாரம் செய்து விட்டு வரும்படி இவர் சொன்னமைபால் அதற்காக ஏட்டையும் எழுத்தாணியையும் இவர் முன்னே வைத்துப் போய் ஆகாரம் செய்துவிட்டு விரைவாக வந்தேன். வந்தவுடன் இவர் பாடல் சொல்லத் தொடங்கினர். நான் ஏட்டை எடுத்து வைத்துக் கொண்டு எழுத்தாணியைப் பார்க்கையில் வைத்திருந்த இடத்தில் அது காணப்படவில்லை. "யாரேனும் எடுத்துச் சென்றிருக்கலாம்; விசாரித்து வாங்கிக்கொண்டு வருவேன்" என்று இவரிடம் சொல்லிவிட்டு அடுத்தபக்கத்திலிருந்த கணக்குப் பிள்ளையின் எழுத்தாணியை இரவலாக வாங்கி வந்தாவது எழுதலாமென்று எண்ணிக்கொண்டு போய் அவரைக் கேட்டேன். அவர், "இன்று எழுதும் வேலை ஒன்றும் இல்லாமையால் எழுத்தாணியை வீட்டில் வைத்துவிட்டு வந்தேன்" என்றார். ஒரு வகையான எழுது கருவியும் கிடைக்கவில்லை. அதனை அசட்டை செய்துவிட்டதாக இவர் எண்ணுவாரே யென்று அஞ்சி அங்கும் இங்கும் சென்று தேடிப் பார்த்தும் கிடைக்காமையால் இவரிடம் தெரிவித்தேன்.

அப்பொழுது அங்கே வந்த ஆறுமுகத்தா பிள்ளை என் காதிற் படும்படி, "ஏன் இவர் அலைகிறார்?" என்று பிள்ளையவர்களைக் கேட்டார்.

மீ: எழுத்தாணி வைத்த இடத்திற் காணப்படவில்லையாம்; பக்கத்திலுள்ளவரிடத்தும் இல்லையாம். அதனல்தான் அலைந்து தேடிக்கொண்டிருக்கிறார்.

ஆ: இந்த மனுஷ்யர் மிகவும் அஜாக்கிரதைக்காரர். இவருடைய சோர்வைப் பலமுறை நான் அறிந்திருக்கிறேன். ஐயா அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். இவரை வைத்துக் கொண்டு பாடம் சொல்லுவதிலும் எழுதச் சொல்லுவதிலும் யாதும் பயனில்லை.

மீ: தம்பி! சிரமப் படுத்தவேண்டாம். எங்கிருந்தாவது எழுத்தாணியை வருவித்துக் கொடுத்துவிடவேண்டும். கவலையை உண்டாக்கக் கூடாது. அவர் எழுத்தாணியை இங்கே என் முன்னே தான் வைத்துவிட்டுப் போனர்; நான் பாடலைப்பற்றி யோசனை பண்ணிக்கொண்டே யிருந்தமையால் அதைக் கவனியாமற் போனேன். தம்பியினுடைய ஆளுகைக்குட்பட்ட இந்த இடத்தில் எவன் வந்து எடுத்துப்போவான்?

ஆறு: இவர் சாப்பிடப் போகும்போது கையிற் கொண்டு போய் ஜாக்கிரதையாக வைத்திருந்து கொண்டுவருவதைவிட இவருக்கு வேறு என்ன வேலை? சாப்பாட்டிலிருக்கிற பிரியத்திற் சிறிதுகூடஐயாஅவர்களுடைய காரியத்தில்இல்லையென்பது எனக்குத் தெரியும். அதனாலேதான் நான் சொல்லுகிறேன் இவ்விஷயத்தில் ஐயா அவர்கள் ஒன்றும் சமாதானம் சொல்லக்கூடாது.

மீ: ஆகாரம் செய்துகொண்டு வரும்படி நான் வற்புறுத்திச் சொன்ன பிறகேதான் இவர் போனர். இவராகப் போகவில்லை.

ஆறு: எத்தனையோ நூற்றுக்கணக்கான பாடல்களை ஐயா அவர்கள் சொல்ல இவர் எழுதிக்கொண்டு வருகிறாரே. முன்னமே நான் சொல்லியபடி செய்யுளியற்றுதலில் இவர் பழகிவருவதாகத் தெரியவில்லையே. இதைப்பற்றி முன்னம் பலமுறை இவரிடம் சொன்னேனல்லவா? இன்னும் இவர் கவனியாமலிருந்தால் இவரை யார் மதிப்பார்? ஐயா அவர்களுடைய பேருக்கும் அது குறைவல்லவா? இப்போது எழுத்தாணி வேண்டுமென்று ஒரு பாடல் செய்வாராயின் நான் அதனை வருவித்துக் கொடுப்பேன். அது கிடைக்காவிட்டால் நல்லதாக வேறோர் எழுத்தாணியை யாவது விலைக்கு வாங்கிக் கொடுப்பேன்.

மீ: செய்யுள் செய்வதற்கு என்ன தடையிருக்கிறது? இந்த அவசரத்தில் ஏன் கவலைப்படுத்தவேண்டும்? அவகாசங் கொடுத்தாற் செய்வார்.

ஆறு: அவகாசமென்ன? இப்பொழுதே செய்து காட்டினால்தான் இவர் அதிற் பயிற்சியுள்ளவரென்பதை நான் நம்புவேன்.

உடனே இக்கவிஞர் கோமான் என்னை நோக்கி, "நீர் அக்கருத்தை அமைத்து ஏதேனும் ஒரு செய்யுள் செய்யும்" என்ற

வுடன் நான் செய்ய நினைந்து யோசிக்கத் தொடங்கினேன். ஆறுமுகத்தா பிள்ளை என்னைக் கவனித்தபடியே அந்தத் தோட்டத்திலுள்ள கொடி செடிகளைப் பார்த்துக்கொண்டு சுற்றிவரச் சென்றார். என்ன யோசித்தும் மனக்கலக்கத்தால் எனக்கு ஒன்றும் தோற்றவில்லை. 'இந்தக் கஷ்டத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே' என்று மிக்க கவலையோடு இருந்தேன். என் முகவாட்டத்தை அறிந்த இவ்வாசிரியர் ஆறுமுகத்தா பிள்ளையும் பிறரும் அறிந்துகொள்ளாமல் என் காதில் மட்டும் படும் வண்ணம் மெல்ல, "எழுத்தாணி ஒன்றெனக்கின் றீ" என்று சொன்னார். அது வெண்பா ஒன்றின் ஈற்றடியாகவும் நான் எதற்காகத் தடுமாறிக்கொண்டிருக்கிறேனோ அக்கருத்து அமைந்துள்ளதாகவும் இருந்ததை யறிந்து ஆறுதலடைந்து கவனித்துக் கேட்டேன். பின்பு, "அழுத்தாணிப்பொன்னுல் அமைந்தவுரு விற்றும்" என்று கூறினார். அப்பால் "மெழுகில்" எனவும், "வழுவில் புராணம் வரைய" எனவும், "தழுவுபுகழ் ஆறுமுகத் தாளாளா என்றும்" எனவும் தனித்தனியாகச் சொல்லிவந்தார். மிகவும் ஜாக்கிரதையாகக் கேட்டுவந்த நான் அவை முறையே ஒரு வெண்பாவின் மூன்றுமடி, தனிச்சொல், இரண்டாமடி, முதலடி என்பவைகளாக இருத்தலை யறிந்து ஒழுங்காகப் பொருத்திப் பார்த்தேன். அவை,

"தழுவுபுக ழாறுமுகத் தாளாளா வென்றும்
வழுவில் புராணம் வரைய - மெழுகில்
அழுத்தாணிப் பொன்னு லமைந்தவுரு விற்றும்
எழுத்தாணி யொன்றெனக்கின் றீ"

என்னும் அழகிய வெண்பாவாக அமைந்தன. இதை மனனம் பண்ணி அங்கேவந்த ஆறுமுகத்தா பிள்ளையிடம் சொன்னேன். உடனே அவர் எங்கேயோ போகிறவர்போலவே போய் அந்த எழுத்தாணியைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, "இனிமேல் இப்படி அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது" என்று கண்டிப்பாகச் சொல்லிப் போயினர்.

பின்பு புராணச் செய்யுட்கள் * பல இடங்களிலே பாடப்பட்டு வந்தன.

---

* பாடிய இடங்கள்: ஆறுமுகத்தா பிள்ளையின் வீடு, அவருடைய மேலைப் பழையாற்றுச் சவுகண்டி', திருமலைராயனாற்றங்கரையின் வடபாலுள்ள அரசமரத்தின் நிழலிலுள்ள மேடை, பட்டீச்சுரம், திருச்சத்தி

பாலசுந்தர முதலியார்

ஒருநாள் மூற்பகலில் கும்பகோணம் நாகேசுவர ஸ்வாமி கோயில் வடக்குவீதியில் ஒரு காரியமாக இவர் செல்லும்பொழுது இவர் மேலே வெயில் பட்டது. அப்போது பின்னே வந்த கனவான் ஒருவர் தாம் பிடித்திருந்த குடையை இவரறியாமல் இவருக்குப் பிடித்து வருவாராயினர். சற்று நேரத்தின் பின்பு அதனை இவர் அறிந்து திரும்பிப் பார்த்தார்; "என்ன தம்பி! இப்படியும் செய்யலாமா? இப்போது எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்கவே அவர், "திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் வேலையாக இருக்கிறேன். தங்களைத் தரிசித்த இன்றைத் தினத்தைப் புண்ணியதினமாகக் கொண்டாடுவேன். என் கை இன்றைக்குத்தான் நல்ல பயனை அடைந்தது" என்று சொல்லிச் சிலநேரம் பேசிக் கொண்டே வந்தார். அப்பால் அஞ்சலி செய்துவிட்டுத் தம் பரிவாரங்களுடன் விடைபெற்றுச் சென்றார். அவரை இன்னாரென்று தெரிந்துகொள்ள நாங்கள் விரும்பினேம். அதனையறிந்த இக்கவிஞர்பிரான், "இவர் பாலசுந்தர முதலியாரென்பவர்; எஞ்சினீயர் வேலைபார்த்து வருகிறார்; தமிழ்ப்பாஷையிற் பிரீதியும் நல்ல பயிற்சியும் உள்ளவர்; தர்மிஷ்டர்; ஏழைகள்பால் இரக்கமுடையவர்; கொள்ளிடத்துக்கு வடபால் பொன்னியாறு என்ற ஓர் ஆறு இவரால் புதிதாக வெட்டப்பட்டுள்ளது. இவருடைய பெருமையை நினைந்து பாலசுந்தரபுரமென்று ஒரூரை இவர்பெயரால் அமைத்துச் சிலர் அதில் வசித்து வருகிறார்கள்" என்றார்.

இவருடைய கௌரவம்

இதுபோலவே தக்கவர்கள் சந்தித்த காலங்களில் இவருக்கு வலிந்துசெய்த முகமன்கள் பலவற்றை நாங்கள் அவ்வப்பொழுது பார்த்திருக்கிறோம். பொருள் வருவாய் இல்லையென்ற குறைவு ஒன்றேயன்றி வேறு யாதொருவிதமான குறைவும் இவருக்கு இல்லை. தமிழ்க் கல்விமான்களுட் சக்கரவர்த்திபோலவே இவர் விளங்கினார். பெரிய செல்வவான்களும் பிரபுக்களும் வித்துவான்களும் தங்களைக்காட்டிலும் எவ்வகையிலும் உயர்ந்தவர்களுக்குச்

மூற்றக்கோயில்களுடைய கோபுரவாயிலின் இடைகழித் திண்ணைகள், இன்னும் இவர் உலாத்தும் இடங்கள்.

செய்யும் மரியாதைகளே இவருக்குச் செய்துவந்தார்கள். நினைத் தால் லட்சக்கணக்கான திரவியம் இவருக்கு எளிதிற் கிடைத்து விடும். ஆனல் அதைப்பற்றி முயற்சி செய்ய இவர் அதிகமாக நினைத்தவரல்லர்.

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்"

என்ற அருமைத் திருக்குறளுக்கு இலக்கியமாக இவர் எல்லாச் செல்வர்களுக்கும் மேலாகவே இருந்து விளங்கினர்; தமிழ்மொழி யிற் பிரியமும் மதிப்பும் அன்பும் உள்ளவர்களோடு மட்டுமே பழகுவார். பெரிய சபையிற் செல்வாராயின் அங்கே உள்ள எல்லோரும் எழுந்து நிற்பார்கள். சிலர் முன்னே வந்து அழைத் துச் செல்வார்கள். அவர்கள் முதல் ஸ்தானத்தைக் கொடுப்ப தன்றி முதல் மரியாதையையும் இவருக்கே செய்வார்கள்.

கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலிய ஊர் களிலுள்ள ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படிக்கும் தமிழ் மாணுக்கர்கள் தங்கள் தங்கள் ஆசிரியர்களால் இவருடைய பெருமையைக் கேள்வியுற்றிருப்பார்கள். எந்த ஊரிலேனும் வழியில் இவரைச் சந்தித்தால் அச்சமுற்றுத் தங்களுடைய வணக்கத்தைப் புலப்படுத்தி ஒதுங்குவதன்றி இவருடைய பெரு மையைப்பற்றித் தம்முள் அவர்கள் பேசிக்கொண்டே செல்லு வார்கள். இளைப்பாறுவதற்கு ஏதேனும் ஓரிடத்தில் இவர் இருப் பாராயின் தமக்கும் இவருக்கும் பழக்கமில்லாமலிருந்தும் அவ் விடத்திற்கு உரியவர்பால் நாங்கள் இவரை இன்னரென்று சொன்னவுடன் திடுக்கிட்டு எழுந்து அவர்கள் பெரிய தட்டங் களிற் பழம் கற்கண்டு வெற்றிலே பாக்கு முதலியவற்றைக் கொண்டுவந்து நேரே வைத்து முகமன் மொழிகளைக் கூறி உபசரிப்பார்கள்.

நெருங்கிப் பழகுகிறவர்களுக்குமட்டும் இவர் செல்வமில்லா தவரென்று தெரியுமேயன்றி வேறு யாருக்கும் இவருடைய உண்மைநிலே தெரியாது. பழகாதவர்களும் இவருடைய இயல் பையும் தோற்றப் பொலிவையும் கண்டு இவரைப் பெருஞ்செல்வ ராகவே மதிப்பார்கள்.

வரன்முறையாகத் தமிழ்க்கல்வியின் பெருமையை அறிந் தவர்களும் அடக்கமுடையவர்களும் அக்காலத்தில் அதிக

மாக இருந்தமையால் எந்த இடத்தும் யாவராலும் மதிக்கப் பெற்று இவர் விளங்கினர். படித்தவர்களும் ஏனையோர்களும் இவரைக் கண்டுவிட்டால் காணுதற்கரிய ஒரு தெய்வத்தைக் கண்டாற்போல எண்ணி வரவேற்று உபசரிப்பார்கள். அங்ஙனம் பிறர் கினைத்தற்குரிய ஓர் ஆச்சரியசக்தி இவர்பால் அமைந்திருந்தது.

'அத்துக் கெட்டுவிடும்'

ஒரு சமயத்தில் ஆறுமுகத்தாபிள்ளை தம்முடைய குடும்ப சம்பந்தமாகக் கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரமொன்று எழுதிக் கொடுக்கும்படி நேர்ந்தது. அதிற் கையெழுத்துப் போடத் தொடங்குகையில் அவர், "ஆறுமுகம் பிள்ளையென்று போடவா? ஆறுமுகத்தா பிள்ளையென்று போடவா?" என்று கேட்டனர். இவர், "ஆறுமுகம் பிள்ளையென்றால் * அத்துக் கெட்டுவிடுமே; ஆறுமுகத்தா பிள்ளையென்றே போடலாம்" என்றனர். கேட்டவர்கள் மகிழ்ந்தார்கள்.

'மூன்றுவது தெரு'

அந்தப் பத்திரத்தில் சாட்சி போடவந்த ஒருவருடைய இருப்பிடம் கும்பகோணம் சுண்ணும்புக்காரத் தெரு. அதை நீற்றுக்காரத் தெருவென்றும் வழங்குவார்கள். "இந்த இரண்டில் எந்தப்பெயரை என் பெயர்க்கு முன்னே சேர்க்கலாம்?" என்று அவர் கேட்டபொழுது இவர், "இரண்டும் வேண்டாம்; † மூன்றுவது தெரு என்று போட்டுவிடும்" என்று சொன்னார். அதன் சமத்காரத்தை அறிந்து யாவரும் வியப்புற்றார்கள். அப்போது காலேஜில் படித்துக்கொண்டிருந்த (தஞ்சை வக்கீல்) கே. எஸ். ஸ்ரீனிவாச பிள்ளை யென்பவர் அங்கே தியாகராச செட்டியாருடன் வந்திருந்தமையின் இவற்றைக்கேட்டு இன்புற்றதன்றித் தாம் தஞ்சையிலிருக்கும்பொழுது தம்மிடத்தில் வருபவர்களிடம் இச்செய்திகளை அடிக்கடி சொல்லிப் பாராட்டி இன்புறுவார்.

ஸ்ரீ பிரமவித்தியா நாயகி பிள்ளைத்தமிழ்

கபிஸ்தலத்தைச் சார்ந்த இராமானுசபுரமென்னும் ஊரிலுள்ள சிவப்பிரகாச பிள்ளையென்னும் கல்விமானொருவர் பட்டீச்

---

* அத்து - ஹத்து; அதிகார எல்லை.

† மூன்றுவதென்பது சுண்ணும்பைக் குறிக்கும் ஒருசொல்.

சுரம் வந்திருந்து இவரிடம் பாடங்கேட்டுக்கொண்டும் தாம் முன்னமே செய்துவைத்திருந்த திருவாவூர்த் திரிபந்தாதியைத் திருத்தஞ் செய்துகொண்டும் இருந்தனர். அவர் அந்தப்பக்கத்து ஊர்களில் வியாபகராக இருப்பவர். தாம் முன்னமே செய்து வைத்தும் அரங்கேற்றப்படாமலிருந்த *பிரமவித்தியாநாயகி பிள்ளைத் தமிழை இவர் மாயூரத்திலிருந்து வருவித்து அவருக்குக் காட்டி, "இதனை யாரிடமேனும் சொல்லி அரங்கேற்றுவிக்க வேண்டும். எனக்கு ரூபாய் ஐம்பது இப்பொழுது அவசரமாக வேண்டியிருக்கின்றது. யாரிடத்தேனும் சொல்லி முடிவு செய்து பணத்தை வாங்கிக்கொண்டு வாரும். †தம்பிக்குமட்டும் இது தெரிய வேண்டாம்" என்று சொல்லி அப்புத்தகத்தை அவரிடம் கொடுத்தனர். அவர் தமக்குத் தெரிந்த சிலரிடம் சொல்லிப்பார்த்தனர். அவரது முயற்சி பயன்படவில்லை.

சாமிநாத தேசிகர் செய்த உதவி

அப்பால் திருவனந்தபுரம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த ஸ்ரீ சாமிநாத தேசிகருக்கு அப்புத்தகத்தை அனுப்பி மேலே கண்ட விஷயத்தைக் குறிப்பித்து ஒரு கடிதமும் எழுதினர். வழக்கம்போல் அக்கடிதத்தின் தலைப்பில் எழுதிய பாடல் வருமாறு :

(விருத்தம்)

"அளிவளர் குணனு மேன்மே லருள்வளர் மனனு மோவாக்
களிவளர் செயலு மேவுங் ‡கண்வளர் நோக்குந் தீரா
ஒளிவளர் புகழும் வாய்ப்புற் றுருவளர் சிறப்பான் மிக்குத்
தெளிவளர் சாமி நாத தேசிக னினிது காண்க."

அந்தக் கடிதத்தையும் புத்தகத்தையும் பார்த்த அவர் ரூபாய் ஐம்பதைத் தபால் மூலம் உடனே அனுப்பினர். பணத்தையும் கடிதத்தையும் பெற்ற இவர் அப்போது அடைந்த மகிழ்விற்கு எல்லை இல்லை. இவர் மிகப் பாராட்டி அக்கடிதத்திற்கு விடையனுப்பினர்.

என்னுடைய தந்தையார் சேவை செய்துவந்த சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகத்தின்பொருட்டு வங்கள் விருப்பத்திற்கு இணங்கி அந்தச் சாமிநாத தேசிகருக்கு அனுப்பினர். இவர் எழுதி

---

*முதற்பாகம், பக்கம், ஙகஉ பார்க்க.

†ஆறுமுகத்தா பிள்ளைக்கு. ‡கண் - தாட்சணியம்.

ஒரு கவேசிருங்கம் வருவித்துக் கொடுத்தார். ஒரு சமயம் ஆறுமுகத்தா பிள்ளை முதலியோர் அசோகந்தளிரைப் பார்க்க விரும்பினர்கள்; அது தெரிந்து இவர் கடிதம் எழுத அத்தளிர்கள் உடனே அவரால் அடுத்த தபாலில் அனுப்பப்பட்டன.

எனக்குப் பாலபோத இலக்கணம் வாங்கித் தந்தது

நான் பாடங்கேட்டுக்கொண்டு வந்த புத்தகம் முடிந்துவிட்டமையால், பாலபோத இலக்கணத்தைப் படிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டேன். கும்பகோணத்திற்குச் சென்றிருந்த காலத்தில், அப்புத்தகத்தை எனக்கு இரவலாகக் கொடுக்கும்படி தியாகராச செட்டியாருக்கு இவர் சொன்னர். அவர், "நான் முதலில் வாசித்த புத்தகம் அதுதான். அதனாலேதான் எனக்கு இலக்கணத்தில் நல்ல பயிற்சியுண்டாயிற்று. அதனைப் பொன்போற் பொதிந்து வைத்திருக்கிறேன். ஆதலால் அதை இரவலாகக் கொடுப்பதற்கு என் மனம் துணியவில்லை" என்று மறுத்துவிட்டார். இவர் அதை அப்படியே மனத்தில் வைத்திருந்து மறுநாள் விடிய ஐந்து நாழிகையளவில் எனக்குத் தெரியாமல் மெல்ல எழுந்து கும்பகோணம் காலேஜில் இரண்டாம் தமிழ்ப் பண்டிதராக இருந்த நாராயணசாமி பிள்ளை என்பவருடைய *வீட்டிற்குத் தனியே சென்று அவரை யெழுப்பி அவரிடமிருந்த பாலபோத இலக்கணத்தை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு செய்யவேண்டிய அநுஷ்டானங்களை விடியற்காலத்தில் அரிசிலாற்றிற் செய்துமுடித்துவிட்டு அவருடன் செட்டியார் வீட்டுத் திண்ணையில் வந்திருந்தனர். தூங்கிக்கொண்டிருந்த நான் வழக்கம் போலவே எழுந்து பார்க்கும்பொழுது படுக்கையில் இவர் காணப்படவில்லை. "முன்னரே தனியே எழுந்து சென்றுவிட்டார்களே! நாம் தூங்கிவிட்டோமே!" என்று நெஞ்சொடு சொல்லிக்கொண்டு அஞ்சி வாயிற்பக்கம் வந்தேன். அப்போது அங்கேயிருந்த இவர் என்னை அழைத்து, "இது பாலபோத இலக்கணம்; வைத்துக்கொண்டு படியும்" என்று கொடுத்தார். நான் திடுக்கிட்டு அதனை வாங்கிக்கொண்டேன். இவர் அநுஷ்டானம் செய்திருத்தலையும் நாராயணசாமி பிள்ளை உடன் இருத்தலையும் அறிந்து அவருடைய வீட்டிற்கு இவர் சென்று

---

*அது தியாகராச செட்டியார் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு மேல் இருக்கும்.

அவருடைய புத்தகத்தை வாங்கிவந்திருக்கிறரென்பதை அறிந்து இவ்வாசிரியப்பெருமானுடைய பேரன்பை நினைந்து உருகி ஸந்தியாவந்தனஞ் செய்து கொண்டு வந்து உடனே அதைப் பாடங்கேட்கத் தொடங்கினேன்; சில நாளில் அதை இரண்டு முறை பாடங்கேட்டு முடித்தேன். அதுவரையில் அவ்விலக்கணத்தை இவர் பாராதவராதலால் அதன் பெருமையையும் விசாகப்பெருமாளையருடைய ஞானத்தையும் பாராட்டினர்.

திரு ஆலூர்த்திரிபந்தாதியின் அரங்கேற்றம்

முன்புகூறிய சிவப்பிரகாச பிள்ளை என்பவர் தாம் இயற்றிய ஆலூர்த்திரிபந்தாதி முழுவதும் பிள்ளையவர்களால் திருத்தப்பட்ட பின்பு அதனை அரங்கேற்ற நிச்சயித்தார். அதனை அங்கீகரித்த ஆலூர்க்கோயில் தருமகர்த்தா முதலியோர்கள் வந்து, "உடன்வருபவர்களையும் அழைத்துக்கொண்டுவந்து அரங்கேற்றுதலைச் சிறப்பிக்க வேண்டும்" என்று இப்புலவர் சிகாமணியைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இசைந்து இவர் ஆறுமுகத்தா பிள்ளை, சோழன்மாளிகை இரத்தினம் பிள்ளை முதலிய கனவான்களோடும் மாணாக்கர்களோடும் அவ்விடம் சென்றிருந்தார். இவர் வருவது தெரிந்து வேறு பலரும் அங்கே வந்திருந்தார்கள். அரங்கேற்றுவதற்கு முன்பு கோயிலாரைக்கொண்டு சிவசந்நிதியில் சிவப்பிரகாச பிள்ளைக்குப் பட்டுக்கட்டுதல் முதலிய மரியாதைகளை இவர் செய்வித்தார். அப்பால் அரங்கேற்றுதல் தொடங்கப்பெற்றது; தொடங்கிய தினத்தன்று சிலபாடல்கள் படிக்கப்பட்டு இவர் மாணாக்கருள் ஒருவரால் பொருள்கூறி உபந்நியாசம் செய்யப்பெற்றது. எஞ்சிய பாகம் படித்தலை மறுநாள்முதல் வைத்துக்கொள்ளலாமென்று நிச்சயித்து அங்கே ஆகாராதிகளை முடித்துக் கொண்டு எல்லோரும் மறுநாட் காலையிலே பட்டீச்சுரம் வந்துவிட்டார்கள். சிவப்பிரகாச பிள்ளையும் உடன்வந்தார்.

ஆறுமுகத்தா பிள்ளையின் கோபம்

வந்தபின்பு தங்களுடைய கௌரவத்துக்குத் தக்கபடி வசதியான இடத்தையும் ஆகார ஸௌகரியங்களையும் முன்னதாகவே கவனித்து அமைக்கவில்லையென்று சிவப்பிரகாச பிள்ளைமீது ஆறுமுகத்தா பிள்ளைக்கு மிகுதியான கோபம் உண்டாயிற்று; அவ

ரோடு பேசவில்லை; அவரை அங்கீகரிக்கக் கூடாதென்றும் எல்லோரிடமும் சொல்லி வந்தனர்.

"அரங்கேற்றுவதற்கு இன்று மாலையில் ஆவூருக்கு யாரும் போகவேண்டாம்; ஐயா அவர்களை மதியாமல் நடத்தின அவர் பழக்கத்தை இனி யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது" என்று எல்லோரிடமும் ஆறுமுகத்தா பிள்ளை வற்புறுத்திச் சொல்லிவிட்டார். அதனை யறிந்த சிவப்பிரகாச பிள்ளை பல முறை நயந்து கேட்டுக்கொண்டும் அவர் முகங்கொடுக்கவில்லை. எப்படியாவது அவருடைய கோபத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணிய சிவப்பிரகாச பிள்ளை,

(விருத்தம்)

"அனம்படியுந் தடப்பட்டீச் சுரமதனில் வருவாருக்
கனத்தை யிட்டுக்
கனம்படியும் புகழாறு முகப்புனிதன் தனைப்போலக்
காணே னென்று
மனம்படிந்து வந்தவென்னை யறியாது வந்தபிழை
வழியால் வந்த
சினம்படியிற் படியில்லாப் படிக்கினைநீ யெனப்படித்தல்
திண்ண மாமே"

என்ற பாடலைச் சொல்லி, "என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். உங்களுடைய கோபத்திற்கு நான் பாத்திரனல்லன்; என்னால் அது தாங்கமுடியாது" என்று பலமுறை மன்றாடிக் கேட்டுக் கொண்டார். ஆனாலும் அவர் சிறிதும் தணியாமற் கோபக் குறிப்போடே முகங்கொடாது இருந்துவிட்டார்.

ஆறுமுகத்தா பிள்ளை எதைப் பொறுத்தாலும் பிள்ளையவர்களுக்கு யாரேனும் அபசாரம் செய்தால் அதைப் பொறார். அதுதான் அவருடைய கோபத்திற்குக் காரணம். அப்பால் இன்னது செய்வதென்று தெரியாது சிவப்பிரகாச பிள்ளை ஆகாரம் பண்ணுமல் மிகவும் வருந்திக்கொண்டிருக்கும் நிலைமையை இவர் கேள்வியுற்றனர்; உடனே அவரை வருவித்து,

(விருத்தம்)

"பரம்பரையே தமிழருமை யறிகுலத்தில் வந்துதித்த
பண்பா நண்பு
நிரம்பறிஞர் குழாந்தழுவப் பொலிந்தோங்கு சுகுணதயா
நிதியே வாய்மை

வரம்புநமச் சிவாயமுகின் மைந்தாநல் லாறுமுக
மகிபா வென்மேல்
திரம்பெறுவெஞ் சினங்கொள்ளேல் கொள்ளுவது தருமமென்பார்
செகத்தில் யாரே"

என்னும் செய்யுளைப் பாடி அவர் கையிற் கொடுத்து, "நீர் இதைத் தம்பிக்குப் படித்துக் காட்டும்" என்று சொன்னர்; சிவப்பிரகாச பிள்ளை அங்ஙனமே செய்தனர். ஆறுமுகத்தா பிள்ளை கேட்டு நடையாற் செய்யுள் இன்னரதுதான் என்பதைத் தெரிந்துகொண்டு கோபம் தணிந்தனர்; பிறகு சிவப்பிரகாச பிள்ளைக்கு ஆகாரம் செய்வித்தனர்.

ஆவூர்த்திரிபந்தாதிச் சிறப்புப்பாயிரம்

அப்பால் இவரிடம் ஆறுமுகத்தா பிள்ளை வந்து, "ஐயா அவர்கள்மட்டும் ஆவூருக்கு எழுந்தருள வேண்டாம்; மற்றவர்கள் போய்வரலாம்" என்றனர். அதனல் சிவப்பிரகாச பிள்ளையுடன் நாங்களும் வேறு சிலரும் ஒவ்வொரு தினத்திலும் மாலையிற் சென்று அரங்கேற்றிவிட்டு வந்தோம். அது முதற் பத்து நாள் வரையில் அரங்கேற்றுதல் நடந்தது; கடைசி நாளன்று சிவப் பிரகாச பிள்ளையின் விருப்பத்தின்படி இவர் அந்நூல் விஷயமாக,

(கட்டளைக் கலித்துறை)

"தேடு மரியயற் கெட்டா திருந்துஞ்சிற் றம்பலத்தே
ஆடு மழகர்தென் னவூர்ப் பரம ரடிக்கணன்பும்
பீடும் படைத்த சிவப்பிர காசப் பெயர்க்கவிஞன்
நாடுங் கலித்துறை யந்தாதி நூறு நவின்றனனே"

என்ற ஒரு பாடலை இயற்றிக்கொடுத்து எல்லோரையும் அனுப் பினர். முடிவில் அது படிக்கப்பெற்றது. மாணக்கர்களும் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரங்களை இயற்றி அளித்தனர்.

'இன்னும் சில வருஷம் படிக்கட்டுமே'

குடும்ப நிலைமையைக்கருதி "எனக்கு ஏதாவது ஒரு வேலை செய்விக்கவேண்டும்" என்று ஒருநாள் சந்தித்த பொழுது தியாகராச செட்டியாரை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்பால் ஒருசமயம் பட்டீச்சுரத்துக்கு அவர் வந்தபோது, "கும்பகோணத்தில் எனக்கு வேண்டிய அன்பர்களாகிய மூவர்

நேடிவ் ஹைஸ்கூலென்று புதிதாக ஒரு கலாசாலையை ஏற் படுத்தப்போகிறார்கள்; அதில் தமிழ்ப்பண்டிதர் வேலைக்கு ஒரு தக்கவரைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று என்னிடம் தெரிவித்தார்கள். பிரியமிருந்தால் நீர் அதனை ஒப்புக்கொள்ள லாம். இப்பொழுது சம்பளம் கநி ரூபாய் கிடைக்கும்; செய்விக் கிறேன்'' என்றார். அச்செய்தியை இவரிடம் தெரிவித்தேன். அருகில் நின்ற செட்டியாரைப் பார்த்து இப் பெருந்தகையார், ''தியாகராசு, சாமிநாதையர் இன்னும் சில வருஷம் படிக் கட்டுமே; என் அவசரப்படுகிறாய்? பின்னாலே கூடுமானால் இவரைக் கவனித்துக்கொள்'' என்றார். அதனால் அம்முயற்சி நின்றது. பிற்காலத்தில் எனக்குத் தம் வேலையைச் செய்விக்க வேண்டுமென்ற எண்ணம் செட்டியாருக்கு உண்டானதற்குக் காரணம் இவர் சொல்லிய இந்த வார்த்தைதானென்றெண்ணு கிறேன்.

துரைசாமி பிள்ளைக்காகச் செய்த செய்யுட்கள்

ஆறுமுகத்தாபிள்ளையின் குமாரராகிய துரைசாமி பிள்ளை யை யாரேனும், ''நீ யார்?'' என்று கேட்டால் அவர், ''திருக் கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்து வான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய பேரனாகிய துரைசாமி பிள்ளை'' என்பார். அங்ஙனம் சொல் லும்படி ஆறுமுகத்தா பிள்ளை பழக்கியிருந்தனர்.

அவரை இவர் பட்டீச்சுரத்திலிருந்து ஒருமுறை சுப்பிர மணிய தேசிகரிடம் அழைத்துச் சென்றார். அப்பொழுது தேசிகர் அவரை, ''நீ யார் அப்பா?'' என்று கேட்க, அவர் மேற்கூறியவாறே விடை பகர்ந்தார் சில தினங்கள் கழித்து மறு முறை அவரையும் உடனழைத்துக்கொண்டு சென்றபோது,

> ''கண்ணன் மதனைக் கடிந்ததற்கேற் பப்புரப்பால்
> பெண்ணா ளருட்சுப் பிரமணிய—அண்ணா
> திருவா வடுதுறையாய் சிற்றடியே னின்ப
> மருமா வடுமாற வை''

என்னும் வெண்பா வொன்றை இயற்றி அதனை அவர் சொல்லும் படி இவர் செய்வித்தனர்; அங்ஙனமே அவர் அதனைத் திருத்த மாகச் சொல்லவே தேசிகர் கேட்டு மெச்சினர்.

மற்றொருமுறை இவர் ஒரு பாடலியற்றிப் பாடம் பண்ணுவித்து அவரை அழைத்துச் சென்றபோது, "இப்போது ஏதேனும் பாடலுண்டோ?" என்று தேசிகர் கேட்க அவர்,

(விருத்தம்)

"மாமேவு புகழ்த்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய
வள்ள லாய
தூமேவு குரவன்பேர் சொற்றவுட னென்பிறப்புத்
தொலைந்த தம்மா
பாமேவு மிதுகண்டும் பிறப்பொழிப்பா னிவனென்று
பலருஞ் சொல்வார்
தேமேவு நலந்தெரியென் ஞவினையே புகழாத
செய்கை யென்னே"

என்ற பாடலைச் சொல்லி மகிழ்வித்தார்.

தனுக்கோடி முதலியாருக்குக் கடிதமெழுதியது

இவர்பால் அன்புடையவரான *தனுக்கோடி முதலியா ரென்பவர், "எனக்குச் சம்பளத்தில் 20-ரூபாய் உயர்ந்திருக்கிறது. அது தங்களுடைய திருவருளே" என்று எழுதிய கடிதமொன்று ஒருதினம் இவருக்கு வந்தது. இவர் சந்தோஷப் பெருக்கினால் அவருக்கு உடனே,

"'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு'

என்றதற்கேற்ப உங்களுக்குக் கிடைத்த செல்வம் ஏனையோர்க்கும் உரியதன்றே?" என்ற ஒருவிடைக்கடிதம் எழுதுவித்து அனுப்பினர்.

'உடுக்கையும் பம்பையும் இல்லாததுதான் குறை'

பிறர் பேசுங்காலத்தில் ஏதேனும் குற்றம் காணப்படின் அவர்கள் ஒப்புக்கொள்பவர்களாக இருந்தால் இவர் மெல்லச் சொல்லித் திருத்துவார். அல்லராயின் அவர்கள் எது சொன்னாலும், "சரி, சரி; ஆம், ஆம்" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்.

"காணுதாற் காட்டுவான் மூன்காணன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு" (திருக்குறள், உகஙி)

---

* முதற்பாகம் பக்கம், கஙூ பார்க்க.

என்பது இவருடைய பெரும்பான்மையான கொள்கை. தாம் தேடித்துச் சொல்வதனால் யாதொரு பயனுமில்லை யென்பது இவருடைய கருத்து.

ஒரு சமயம் கும்பகோணத்திற் பெரிய உத்தியோகஸ்தராக இருந்த ஒரு கல்விமானுக்கும் இவருக்கும் மிக்க பழக்கமுண்டாயிற்று. அவர் பலமுறை வற்புறுத்தி அழைத்தமையால் இவர் ஒரு நாள் பிற்பகலில் அவருடைய வீட்டிற்குச் சென்றனர்; அப்போது தியாகராச செட்டியார், ஆறுமுகத்தா பிள்ளை முதலியோர்களும் உடன் சென்றார்கள். அந்த உத்தியோகஸ்தர் மகாவித்துவானுகிய இவராலே பற்பல அரிய விஷயங்களை அறிந்து கொள்ளலாமென்று நினையாமல் தாம் பலநாளாகச் சேகரித்து வைத்திருந்த வடமொழி தென்மொழியிலுள்ள நூல்களுக்கு வரன் முறையாக வன்றி நூதன முறையாகப் பொருள் செய்துகொண்டு, "இராமாயணத்திற்கு அர்த்தம் இவ்வாறு சொல்லவேண்டும்; பாரதத்திற்கு அர்த்தம் இதுதான்; அவற்றிற்கு இதுவரையில் எல்லோரும் சொல்லி வருபவை பிழையான பொருள்கள்" என்று விபரீதமாகவே சொல்லிவந்தார். கேட்டுக்கொண்டிருந்த இவர் அவருடைய நிலைமையை அறிந்து யாதோர் ஆட்சேபமும் செய்யாமல் சில சமயத்தில், "ஆம், ஆம்" என்றும் சில சமயத்தில், "சரி, சரி" என்றும் மொழிந்து வந்தார்.

இரவில் மணி பன்னிரண்டுக்கு மேலாயிற்று. உடனிருந்த தியாகராச செட்டியாருக்கு அந்த உத்தியோகஸ்தர்மேல்கோபம் உண்டானதன்றி அகாலம் ஆய்விட்டபடியால் அப்பாற் சென்று அத்தனை பேர்களுக்கும் எப்படி ஆகாரம் செய்விப்பதென்ற கவலையும் ஏற்பட்டது. நிறுத்தவேண்டுமென்று சொல்வதற்கும் அஞ்சினவராகிக் கடுகடுத்த முகத்தோடு ஒன்றும் சொல்லாமலே இருந்தார். அந்த உத்தியோகஸ்தர் தம்மிடம் வருபவரோடு இவ்வாறே நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அகாலத்தில் அனுப்பிவிடுவது வழக்கம். அவர் ஒருவேளை இவர்களுடைய ஆகாரத்திற்கு ஏற்பாடு செய்திருக்கலாமோ என்ற சந்தேகம் உடன்சென்ற எங்களுக்கு இருந்தது.

பின்பு அந்த உத்தியோகஸ்தர் வழக்கம்போல, "சரி; நேரமாய்விட்டது; உங்களுக்குச் சிரமமாக இருக்கும்" என்று சொன்னர். அக்குறிப்பை யறிந்து இவர் புறப்பட்டு அந்த வீட்டின்

வெளியே வந்தவுடன் செட்டியார் இவரை நோக்கி, "உங்களிருவர் கையிலும் *உடுக்கையும் பம்பையும் இல்லாததுதான் ஒரு குறை" என்று சொன்னார். இவர் பக்கத்தில் யாரேனும் அயலாருளரோ வென்று கவனித்துவிட்டு, "என்னப்பா, உபத்திரவம் செய்கிறாய்? அவ்வாறு சொல்லாமல் நான் வேறு என்ன செய்கிறது? அவருக்கே தெரியவேண்டுமல்லவா? சில சமயங்களில் இந்த மாதிரியான மனுஷ்யர்களிடமும் போகும்படி நேரிடுகிறது; எல்லாம் கால விசேஷமே; படிப்பை யார் கவனிக்கிறார்கள்? தங்கள் கௌரவத்தையும் தங்கள் படிப்பையுமே பெரிதும் பாராட்டுகிறார்கள்; அதை ஒட்டித்தான் நாமும் போகவேண்டியிருக்கிறது; என்ன செய்யலாம்?" என்று செட்டியாரிடம் சொன்னார்.

சுப்பையா பண்டாரம் மாம்பழம் வாங்கிவந்தது

பிள்ளையவர்களோடு உடனிருப்பவர்களிற் சுப்பையா பண்டாரமென்பவர் ஒருவர்; அவருடைய ஊர் திருவிடைமருதூர்; ஆறுமுகத்தா பிள்ளைக்கு மைத்துனர்; தமிழிற் சிறிது பயின்றவர்; தமிழ்ப் பாடல்களிற் பிற்காலத்தனவாகிய சிலவற்றை மனனஞ் செய்து வைத்திருப்பவர்; அப்பயிற்சியையே ஆதாரமாகக் கொண்டு தம்முடைய வறுமைத்துன்பத்தை மாற்றிக்கொள்ளுதற்குப் பல ஜமீன்தார்கள் முதலியோர்களிடம் போய் அவர்கள் நோக்கம்போலவே நடந்து அவர்களுடைய நிலைமையை அறிந்து பழைய பாடல்களை அவர்கள் பெயருக்கு மாற்றிச் சொல்லியோ வேறு பாடல்களைக் கூறியோ அவர்களை மகிழ்வித்துப் பரிசு பெற்றுக் காலங்கழிக்கும் இயல்பினர்; தோற்றப் பொலிவுள்ளவர்; பிள்ளையவர்களையன்றி வேறு யாரையும் மதியார்; தைரிய சாலி; இவருடைய காரியங்களைக் கவனித்துக்கொண்டு வருபவர். பாடம் கேட்கும் வழக்கம் மட்டும் இல்லை; அதிற் பிரியமுமில்லை.

ஒருநாள் பகற்போசனத்திற்குப்பின் பிள்ளையவர்களுடன் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது மேற்கூறிய சுப்பையா பண்டாரத்தை நோக்கி மைத்துனரென்ற முறைமையால் ஆறுமுகத்தா பிள்ளை, "சுப்பையா, நீ அநேகரிடம் சென்று

---

*உடுக்கையடிப்பவன் சொல்லச் சொல்ல எதிரிலுள்ளவன் பம்பையை முழக்கிவிட்டு ஆமாம் ஆமாம் என்று சொல்லுவான்.

சென்று நூதனமான பாடல்கள் செய்து பரிசுகள் பெற்று வருவ தாகச் சொல்லுகிறீயே; அதனை நாங்கள் தெரிந்துகொள்ளும்படி இன்று கும்பகோணம் போய்த் தியாகராச செட்டியார் மீது ஏதா வது ஒரு பாடலியற்றிப் பரிசுபெற்று ஐயா அவர்களுக்குப் பிரிய மான மாம்பழங்களை விலைக்கு வாங்கிவரமுடியுமா?'' என்றனர். அதனைக்கேட்ட இப்புலவர்பிரான் ஆறுமுகத்தா பிள்ளைக்குத் தெரியாதபடி, முடியுமென்று சொல்லும்வண்ணம் குறிப்பால் அவரைத் தூண்டினர். அதனால் சுப்பையா பண்டாரம் மிக்கதைரி யங்கொண்டு ஆறுமுகத்தா பிள்ளையை நோக்கி, ''அவசியம் நான் பாடல்செய்து சென்று செட்டியாரிடம் சொல்லிக் காட்டி மகிழ் வித்து அவரிடம் பரிசுபெற்று மாம்பழம் வாங்கிக்கொண்டு வந்துவிடுவேன்'' என்றார்.

ஆறு: ஒருநாளும் முடியாது.

சுப்: ஏன் முடியாது?

ஆறு: உனக்குப் படிப்பில்லையே!

சுப்: எனக்குப்படிப்பில்லை யென்பதை நீர் கண்டீரா? எவ் வளவோ இடங்களுக்குப்போய்த் திரவியமுதலியவற்றைப் பெற்று வருகிறேனே! படிப்பில்லாவிட்டால் முடியுமா?

ஆறு: படிப்பில்லாத இடமாகப் பார்த்துத்தான் நீ போய் வருகிறாய். எனக்கும் பிறர்க்கும் அது நன்றாகத் தெரியுமே.

சுப்: தோட்டத்துப் பச்சிலைக்கு வீரியம் மட்டு என்பதுபோல் என் படிப்பை நீர் மதிக்கவில்லை.

ஆறு: செட்டியாரிடம் போனால் உன்னுடைய படிப்பு நன் றாக வெளியாகும்!

சுப்: அவர் என்ன செய்வார்?

ஆறு: உன் நரம்பை எடுத்துவிடுவார்; வெளிக் கிளம்ப வொட்டார்.

சுப்: நான்தான் அவர் நரம்பை எடுத்துவிடுவேன். அவ ரிடத்தில் எனக்குக் கொஞ்சமேனும் அச்சம் இல்லை.

ஆறு: ஏன் அச்சமிருக்கும்? சிறிதேனும் படிப்பிருந்தா லல்லவோ படித்தவர்களிடத்தில் அச்சமுண்டாகும்? மகா மூட னாக இருக்கிற உனக்கு மகாபண்டிதராகிய அவரிடத்தில் எப்படி

அச்சமுண்டாகும்? நீ மாத்திரம் அவரிடம்போய் ஒரு பாடலைச் சொல்லுவாயாயின் உன் சரக்கு வெளியாகும்.

சுப்: நீர் இப்படிச்சொல்வது என்னுடைய கௌரவத் திற்குக் குறைவாக இருக்கிறது.

ஆறு: உனக்கு என்ன கௌரவமிருக்கிறது? இருந்தா லல்லவோ அது குறையுமென்று நீ கவலைப்படவேண்டும்?

சுப்: இருக்கட்டும். நீர் என்ன செய்யச் சொல்லுகிறீர்?

ஆறு: செட்டியார்மீது ஒரு பாடல் செய்து பரிசுபெற்று மாம்பழம் வாங்கிக்கொண்டு இன்று மாலைக்குள் வரவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நீ மனுஷ்யனே யல்ல.

சுப்: நீரென்ன சொல்லுகிறது? அப்படிச் செய்யாவிட் டால் நான் மனுஷ்ய னல்லவென்று நானே சொல்லுகிறேன்.

இவ்வாறு சொல்லிவிட்டு அவர் புறப்படுதற்குத் தொடங் கினர்.

அதனைக் கண்ட ஆறுமுகத்தாபிள்ளை வழக்கம்போலவே சயனத்துக்குப் போய்விட்டார். அவர் நன்றுகத் தூங்கிவிட்டாரா வென்பதை அறிந்துவரச் செய்து இக்கவியரசர் தியாகராச செட்டியார் மீது புதிதாக ஒரு பாடலை இயற்றி எழுதுவித்து எழுதிய ஏட்டைச் சுப்பையா பண்டாரத்தினிடம் கொடுத்தனர்; "இப்பாடலை நன்றுகப் பாடம் பண்ணிக்கொண்டு சென்று தியாகராசினிடம் நீர் செய்ததாகவே சொல்லிக் காட்டிப் பணம் பெற்று மாம்பழம் வாங்கிக்கொண்டு இன்று மாலைக்குள்ளே வந்துவிடும். அவன் என்ன சொன்னாலும் பயப்படாமல் எதிர் மொழி கொடும்; இதன் பொருளை நன்றுகத் தெரிந்துகொண்டு போம்" என்று சொல்லிவிட்டு அங்கே நின்ற மாணுக்கராகிய சரவணபண்டார மென்பவரை அவருடன் போய் வரும்படி அனுப் பினர். அந்தப் பாடலின் பொருளை நன்றுக அவருக்குப் போதித் தனுப்பும் வண்ணம் எனக்குக் கட்டளையிட்டார். பின்பு தாம் வழக்கம்போலவே சிரமபரிகாரம் செய்துகொள்ள ஆரம்பித்தார்.

சுப்பையா பண்டாரம் இவர் சொன்னபடி என்னிடம் அச் செய்யுளின் பொருளை நன்றுகத் தெரிந்துகொண்டு சட்டை முதலியன தரித்தவராகிக் கையிற் கோலொன்றை எடுத்துக் கொண்டு அந்தப் பாடலை நெட்டுருப்பண்ணிக் கொண்டும்

பொருளைச் சிந்தித்துக் கொண்டும் சரவண பண்டாரத்துடன் தைரியமுடையவராகி ஊக்கமுற்றுக் கும்பகோணத்திற்குச் சென்று தியாகராச செட்டியாருடைய வீட்டையடைந்து விசாரித்தார். செட்டியார் வீட்டில் இல்லை யென்பதை அறிந்து சுப்பையா பண்டாரம் அந்த வீட்டு வெளித்திண்ணையிலே இருந்தார்.

செட்டியார் ச-மணிக்குக் காலேஜிலிருந்து வந்தனர். வந்தவர் திண்ணையிலிருந்தவரைக்கண்டு பரபரப்புடன், "ஐயா அவர்கள் வந்திருக்கிறார்களா?" என்று வினவவே சுப்பையா பண்டாரம், "வரவில்லை; நான்மட்டும் இங்கே ஒரு காரியமாக வந்திருக்கிறேன்" என்றார். செட்டியார் வேகம் தணிந்து, "ஆனால் இங்கே இரும்; உள்ளே போய் வருகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்று உத்தியோக உடைகளைக் களைந்துவிட்டு வேறு மடியொன்றைத் தட்டுடையாக உடுத்திக்கொண்டு விசிறியும் கையுமாக வெளியே வந்து இருந்தனர்; பின்பு, "நீர் இவ்வளவு படாடோபமாக வந்த காரியமென்ன? வேறு யாரையேனும் பார்க்க வந்தீரா? ஐயா அவர்கள் ஏதாவது சமாசாரம் சொன்னதுண்டா?" என்று கேட்டார்.

சுப்: இல்லை; நான் உங்களைத்தான் பார்க்க வந்திருக்கிறேன். வந்தது ஒரு காரியத்தை உத்தேசித்து; உங்கள்மீது ஒரு பாடலும் செய்துகொண்டு வந்தேன். தனியே எங்காவது சென்றால் இந்த வேஷத்தோடுதான் நான் போவது வழக்கம்; ஐயா அவர்களுடன் வந்தால் சாதாரணமாக வருவேன்.

தியாக: பாடல் செய்துகொண்டு வந்திருக்கிறேனென்று சொல்லுகிறீரே; உமக்குப் பாடல் செய்கிற வழக்கமுண்டோ?

சுப்: ஏன் இல்லை? நான் செய்யுள் செய்வேனென்பது உங்களுக்குமட்டும் தெரியாது. பல இடங்களுக்குப் போய்ப் போய்ப் பாடிப் பாடிப் பரிசுபெற்று வருவது எனக்கு வழக்கம்; என்னுடைய காலக்ஷேபத்திற்கு அதுதானே வழி? இது பலருக்கும் தெரியுமே.

தியாக: நீர் வெளியிடம் சென்று யாசகம் செய்துகொண்டு காலக்ஷேபம் செய்வதுண்டென்பதுமட்டும் தெரியும். பாடல் செய்துகொண்டுபோய்ச் சம்பாதித்து வருவது இதுவரையில் எனக்குத் தெரியாது. பாடுவதென்றும் படித்திருக்கவேண்டுமே!

சுப்: ஏன் படிக்கவில்லே? படித்திருக்கிறேனென்று சிலரைப் போல நான் பறை யறைந்துகொண்டு திரிகிறதில்லே.

தியாக: படித்தவர்களெல்லாம் படித்திருக்கிறே மென்று சொல்லிக்கொண்டுதான் திரிகிறார்களா? நீர் சொல்வது நன்றாக இல்லையே. படித்திருந்தால் எப்படியும் பிறருக்குத் தெரியு மல்லவா? உம்மிடத்திற் புஸ்தகம் இருந்தலே நான் ஒருபொழு தும் கண்டதில்லையே. படிப்பிற்குரிய அடையாளத்தையும் உம் மிடம் இதுவரையில் நான் காணவில்லே. பிள்ளையவர்களோடு வந்து ஆகாரம் பண்ணிப் போவதை மட்டும் நான் பார்த்திருக்கி றேன். அந்த மதிப்புத்தான் உமக்கு ஏற்பட்டுள்ளது. மற்றவர் களைப்போலவே நீர் படித்துக் கொண்டிருந்ததையாவது பாடம் கேட்டதையாவது நான் இதுவரையிற் பார்த்ததுமில்லே; கேட் டதுமில்லே. அந்த விஷயம் இருக்கட்டும். நீர் செய்துகொண்டு வந்ததாகச் சொன்ன பாடலைச் சொல்லும்; கேட்கிறேன்.

சுப்:

புண்ணியமெல் லாந்திரண்ட வடிவென்கோ குறுமுனிவன்
பொதிய நீத்திங்
கண்ணியதோர் வடிவென்கோ தமிழிலுள பலகலைகள்
அனைத்துங் கூடி
நண்ணியதோர் வடிவென்கோ பின்னுமெந்த வடிவமென
நாட்டு கோயான்
மண்ணியமா மணியனைய தியாகரா சப்புலவன்
வடிவந் தானே.

தியாக (புன்னகைகொண்டு): இதனை இன்னும் ஒருமுறை சொல்லும்.

சுப்: நல்லது அப்படியே. (பாடலை மறுபடியும் சொன்னார்.) எப்படியாவது என் பாடலை உங்கள் காதிற் போட்டு நன்மதிப் பைப் பெற்றுச் செல்லவேண்டுமென்றே இங்கு வந்தேன்.

தியாக: இருக்கட்டும்; இந்தப் பாடலை நீரே செய்தீரா? வேறு யாரேனும் செய்துகொடுத்தார்களா? உமக்கு இப்படிப் பாட வருமா?

சுப்: ஏன் வராது? நானே செய்தேன்.

தியாக: இதனை ஐயா அவர்கள் இயற்றிய பாடலென்றே நிச் சயிக்கிறேன். எதற்காக இதை உம்மிடம் பாடிக்கொடுத்தார்கள்?

சுப: நீங்கள் இப்படிச் சொல்வது எனக்கு மிகவும் மானக் குறைவாக இருக்கிறது.

தியாக: நீர் செய்ததுதானே? உண்மையைச் சொல்லும்.

சுப: அதில் என்ன சந்தேகம்?

தியாக. பொருள் சொல்லுவீரா?

சுப: திவ்யமாகச் சொல்லுவேன்.

தியாக: முழுவதற்கும் சொல்லவேண்டாம். இதிலுள்ள 'என்கோ' என்பதற்குமட்டும் பொருள் சொன்னாற் போதும். சொல்லும்; கேட்கிறேன்.

சுப: அதற்கு என்பேனே வென்பது பொருள்.

தியாக: 'என்கோ' என்னும் சொற் பிரயோகத்தை வேறு எந்த நூலில் எந்த இடத்திற் கண்டிருக்கிறீர்? சொல்லும்.

சுப: இடம் ஞாபகமில்லை.

தியாக: இடம் தெரியாதபோது நீர் இந்தச் சொல்லை அறிந்தது எப்படி? எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது.

சுப: நீங்கள் செய்யும் செய்யுட்களில் பிரயோகிக்கிற சொற்களுள்ள இடங்களெல்லாம் உங்களுடைய ஞாபகத்திலிருக்குமா? பழக்கத்தினாலே வந்துவிடுமல்லவா?

தியாக: வீண் பேச்சை இப்பொழுது நீர் பேசவேண்டாம். இந்தப் பாடலை எதற்காக அவர்கள் செய்தனுப்பினார்கள்? சொல்லும்.

சுப: திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர்களே. நான்தான் பாடி வந்தேன். வந்த காரியத்தைக் கேட்டு முடித்து அனுப்பக் கூடுமானால் அனுப்புங்கள். இல்லையானால் முடியாதென்று சொல்லிவிடுங்கள்.

தியாக: சரி. இதில் 'என்கோ' என்பதில் ஓகாரத்தை ஏற்ற மொழி எது? ஓகாரம் என்ன பொருளில் வந்தது? சொல்லும்.

சுப: நீங்கள் பாடிய பாடல்களிலுள்ள சொற்களுக்கெல்லாம் இலக்கணம் சொல்லுவீர்களா?

தியாக: வீணை தைரியப் பேச்சிலல் ஒரு பயனும் இல்லை காணும்! இந்தச் செய்யுள் நீர் பாடியது அன்றென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டுவிட்டேன். நீர் என்ன சொன்னாலும் நம்பேன். இந்த மாதிரி பாடுகிறதென்றால் எவ்வளவு படித்திருக்க வேண்டும்?

சுப: படிக்காமலே கம்பன் காளிதாசன் முதலியோர் பாடவில்லையோ?

தியாக: அவர்கள் படிக்கவில்லை யென்பதை நீர் கண்டீரா?

சுப: வரகவியென்று சிலர் இப்பொழுதும் இருப்பது உங்களுக்குத் தெரியாதா? அவர்களெல்லாம் படித்துத்தான் பாடுகிறார்கள்? அருமையான வார்த்தைகளெல்லாம் அவர்கள் வாக்கிற் காணப்படவில்லையா?

தியாக: இவ்வளவு வார்த்தைகளும் நீர் படிக்கவில்லை யென்பதை நன்றாகக் காட்டுகின்றன. இருக்கட்டும். இந்தப் பாட்டை நீரே செய்ததாகச் சத்தியம் செய்வீரா?

சுப: இதோ செய்கிறேன்; எந்த மாதிரியாகச் செய்ய வேண்டும்?

தியாக: தணியைப் போட்டுத் தாண்டவேண்டும். அது செய்வீரா?

சுப்பையா பண்டாரம், "இதோ தாண்டுகிறேன்" என்று சொல்லித் தமது அங்கவஸ்திரத்தைக் கீழே குறுக்கே போட்டுவிட்டார். தியாகராச செட்டியார் நடுநடுங்கி அவர் கையைப் பிடித்துக்கொண்டு, "நீர் சத்தியஞ் செய்தாலும் இப்பாடலை நீர் செய்ததாக நான் நினையேன். தணியைத் தாண்ட வேண்டாம். நீர் வந்த காரியம் இன்னதென்று சொல்லிவிடும். உமக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறேன்; வீணாக ஏன் பொய் சொல்லுகிறீர்?" என்று நயமாகக் கேட்கவே அவர் நிகழ்ந்தவற்றை யெல்லாம் உள்ளபடியே சொல்லிவிட்டார்.

செட்டியார் உடனே பழக்கடை சென்று மிகவும் உயர்ந்தனவாக நூறு-மாம்பழங்களை விலைக்கு வாங்கி இரண்டு தென்னங் குடலைகளில் அடக்கி ஒரு குடலையை அவருடன் வந்த சரவண பண்டாரத்தினிடத்தும் மற்றொன்றை ஒரு கூலியாளிடத்தும்

கொடுத்து உடன் செல்லும்படி சொல்லிச் சுப்பையா பண்டாரத்தை அனுப்பிவிட்டார். அந்த இருவரும் தமக்குப் பின்னே வரச் சுப்பையா பண்டாரம் அவர்களுக்கு முன்னே விரைவாகப் பட்டீச்சுரம் வருவாராயினர்.

பட்டீச்சுரத்தில் இப்புலவர்பிரான் நித்திரைகலைந்து எழுந்து, "பண்டாரம் கும்பகோணஞ் சென்றுரா?" என்று விசாரித்து விட்டுப் பாடஞ்சொல்லத் தொடங்கினர்; ஆனாலும் பாடம் சொல்லுவதில் இவர் மனம் செல்லவில்லை; சுப்பையா பண்டாரத்தின் விஷயத்தில் இவருக்குக் கவலை உண்டாயிற்று; "தியாகராசு சுப்பையாவை என்ன செய்கிறானே? என்ன கேள்விகள் கேட்கிறானே? சும்மாவிட மாட்டானே! சுப்பையா விழிக்கக் கூடுமே!" என்று எங்களிடம் சொல்லிக்கொண்டே இருந்தார். சூரியாஸ்தமனத்திற்கு முன்னதாகவே புறப்பட்டு வழக்கப்படி அவ்வூரின் தெற்கேயுள்ள திருமலைராயனாற்றங்கரைக்குச் செல்லாமற் கும்பகோணத்திற்குச் செல்லும் வழியை நோக்கி வடக்கே சென்று அங்குள்ள ஒரு குளக்கரையில் சுப்பையா பண்டாரத்தின் வரவை எதிர்பார்த்து வடதிசையை நோக்கிக் கொண்டே நின்றார். நானும் உடன் சென்று அருகில் நின்றேன். சுப்பையா பண்டாரம் வரவில்லை. இவருக்குக் கவலை அதிகமாயிற்று; "யாராவது வருகிறதாகத் தெரிகிறதா? பாரும்" என்றார். பார்த்து நான், "ஒன்றும் தெரியவில்லை" என்றேன். "பார்த்துக் கொண்டே நின்று யாராவது கண்ணுக்குத் தோற்றினால் உடனே சொல்லும்" என்றார். அங்ஙனமே நான் வடதிசையை நோக்கி நிற்கையில் மூன்று உருவங்கள் முதலில் கண்ணுக்குத்தோற்றின.

நான்: மூன்று உருவங்கள் தோற்றுகின்றன.

மீ: அவர்களாக இருக்குமோ? சரவண பண்டாரம் மிகவும் உயரமுள்ளவனுதலால் அதைக்கொண்டு கண்டு பிடிக்கலாமே.

நான்: மூவரில் ஒருவருடைய உருவம்மட்டும் உயரமாகவே தெரிகிறது; அவர் சரவண பண்டாரமாகவே இருக்கலாம்.

மீ: பின்னும் நன்றாகக் கவனியும் தலையில் ஏதேனும் இருப்பதாகத் தெரிகிறதா?

நான் (அவர்கள் நெருங்க நெருங்க): ஒருவர் தலையில் ஏதோ ஒரு குடலை தெரிகிறது. வேறொருவர் தலையிலும் ஒரு குடலை காணப்படுகிறது.

மீ : சுப்பையா பண்டாரம் வருகிறூரா ?

நான் : வருகிறூர்.

அவர் வருவதை நோக்கி அவரோடு பேசவேண்டுமென்ற ஆவலுடன் இவர் நிற்கையில் அவர் வேகமாக அருகில் வந்து இவரை நோக்கி, " என்ன ஐயா ? உங்களை நான் பரமஸாது வென்று எண்ணியிருந்தேன். பெரிய ஆபத்திலே கொண்டுவந்து விட்டீர்கள். என்னை அவமானத்துக்குள்ளாக்கி விட்டு வேடிக்கை பார்க்கிறீர்களே. நீங்கள் இவ்வளவு செய்வீர்களென்று இதுவரை யில் நான் நினைக்கவில்லை அந்த மனுஷ்யர் புலிபோல என்னை உறந்துவிட்டாரே " என்றூர்.

மீ: என்ன ? என்ன ?

சுப் : என்னவா ? நீங்கள் பாடல் செய்து கொடுத்தீர்களே ! அந்தப்பாடலை என்னுடைய சக்திக்கு ஏற்றபடி செய்ததர வேண்டாமா ? அதில் நீங்கள் செய்ததாக நினைக்கும்படி ஏதோ அடையாளம் வைத்துப் பாடிவீட்டீர்களே ! நான் பாடிக் காட்டும்பொழுது, ' என்கோ என்பதற்கு என்ன அர்த்தம் ? அந்தப் பிரயோகம் எந்த நூலில் வந்துள்ளது ? இலக்கண மென்ன ?' என்று பல கேள்விகளைக்கேட்டு அந்த மனுஷ்யர் உபத்திரவம் செய்து என் பிராணனை வாங்கிவிட்டார். நான் சத்தி யம் பண்ணிக் கொடுப்பதாகச் சொல்லியும் அவர் நம்பவில்லை.

மீ: அப்பால் நீர் எப்படி அவனிடமிருந்து தப்பி மாம்பழம் வாங்கிவந்தீர்.

சுப் : பிற்பாடு சொல்லுகிறேன். இப்பொழுது அதைச் சொல்ல எனக்கு இஷ்டமில்லை.

இவ்வாறு சொல்லுகையில் அவர்முகம் மிக்க கோபக்குறிப் பைப் புலப்படுத்தியது. இவர் அந்நிலையை உணர்ந்து, " சரி ; வீட்டுக்குப் போம் " என்றூர்.

சுப்பையா பண்டாரம் தமக்குப் பின்னே வந்த இருவருட னும் வீட்டிற்குச் சென்றூர். திண்ணையிலிருந்த ஆறுமுகத்தா பிள்ளை அவரைக் கண்டு, " என்ன சுப்பையா ! போய் வந்தாயா ? என்ன குடலைகள் ? மாம்பழக் குடலைகளா ? செட்டியாரைப் பார்த்தாயா ? புதிய பாடல் சொன்னதுண்டா ? அவர் பழம் வாங்கிக் கொடுத்தாரா ? கௌரவத்திற்காக நீயே சொந்தப்

பணத்தைக்கொண்டு வாங்கி வந்தாயா? உண்மையைச் சொல்" என்றார்.

சுப: ஒரு பாடல் செய்து சொல்லிக்காட்டித்தான் செட்டியாரை மகிழ்வித்தேன். அவரே பழக்கடைக்கு வந்து பழங்கள் வாங்கிக்கொடுத்தார். அவர் அனுப்பிய ஆளே இவன்.

ஆறு: உன்னுடைய பாடலுக்காக அவர் பழம் வாங்கிக் கொடுத்திருந்தால் அவரைப்போலத் தெரியாதவர்கள் இல்லையென்று நான் உறுதியாகச் சொல்வேன்.

பின்னும் இப்படியே இருவரும் மேன்மேலும் வாக்குவாதம் செய்துகொண்டிருக்கையில் இக்கவிஞர் சிரோமணி அங்கே வந்து, "தம்பி, இவரை விட்டுவிடுங்கள்; கோபத்தோடு இருக்கிறார்" என்று சொல்ல அவர் எழுந்து வேறிடம் சென்றார். எல்லாரும் தத்தம் இடம் சென்றார்கள். பின்பு அந்த மாம் பழங்களை எல்லாரும் வாங்கியுண்டு திருப்தியுற்றுச் சுப்பையா பண்டாரத்தை வாழ்த்தினார்கள்.

மறுநாள் செட்டியார் பாடல்பெற்ற சந்தோஷத்தாற் பட்டீச்சுரத்துக்கு வந்து பிள்ளையவர்களை நோக்கி, "என்ன? நேற்றுப் பெரிய வேடிக்கை செய்துவிட்டீர்களே!" என்று சொல்லிவிட்டு எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொன்னார்; கேட்டு யாவரும் நகைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி சென்றது

பட்டீச்சுரத்தில் இருந்து வருகையில், ஆறுமுகத்தா பிள்ளையின் குடும்பக்காரியமாக இவர் பரிவாரங்களுடன் ஒருநாள் திருச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டார். நீடாமங்கலம் வரையில் சாலை வழியே வண்டியிற் சென்றார். நல்ல மரச்செறிவுள்ள சாலையைக் கண்டால் வண்டியிற் செல்லாமல் நடந்தே செல்லுவதும் பாடம் சொல்லுதல் நூலியற்றுதல் முதலியவற்றை அப்பொழுது மேற்கொள்ளுதலும் இவருக்கு இயல்பு. அப்பொழுது இவர் செய்யும் காரியம் எதுவும் நன்றாக நடைபெறும். அங்ஙனம் அச்சாலையிற் செல்லும்பொழுதுதான் திருப்பெருந்துறைப் புராணத்துள்ள பெருந்துறைப் படலத்தில் க க-ஆவதிலிருந்து சுo-ஆவது வரையிலுள்ள பாடல்கள் இயற்றப்பட்டன. அவற்றை எழுதிக்கொண்டு நானும் உடன் சென்றேன்.

அப்பால் நீடாமங்கலத்தில் ரயில்வண்டியிலேறித் திரிசிரபுரம் சென்று கீழைச் சிந்தாமணியிலுள்ள சொர்க்கபுரமடத்தில் இவர் தங்கினர். அந்த நகரத்தில் பத்து நாட்கள் இருந்தார். இவர் அங்கே வந்திருப்பதைக் கேள்வியுற்ற பழைய மாணாக்கர்களும் முக்கியமான பிரபுக்களும் காலைமாலைகளில் வந்துவந்து அளவளாவி ஆனந்தித்தத் தாம் தாம் படித்துவந்த நூல்களில் தத் தமக்குள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொண்டு சென்றனர். பலர் திருப்பெருந்துறைப் புராணத்துள்ள பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர். காப்பிய இலக்கணங்களைச் சுவை ததும்ப அமைத்துப்பாடும் முறை இவர் புராணங்களில் மிகுதியாகக் காணப்படுமாதலால் இவர் இயல்பை அறிந்த பலர், 'நாட்டுச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம்; நகரச் சிறப்பைக் கேட்க விரும்புகிறோம்' என்று தனித் தனியே தத்தம் ஆவலை வெளிப்பிட்டு அங்ஙனமே அவ்வப் பகுதிகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

சிலர் இடையிலே இவராற் செய்யப்பட்ட வேறு புராணங்களிலும் பிரபந்தங்களிலுமுள்ள பாடல்களைக் கேட்டு அவற்றில் அமைந்திருக்கும் கற்பனை நயங்களைப் பாராட்டினர். சிலர் தாம் இயற்றிய நூல்களைப் படித்துக் காட்டித் திருத்திக்கொண்டு சிறப்புப்பாயிரம் பெற்றனர். அக்காலங்களிற் சில பாடல்களுக்குப் பொருள் சொல்லிவிட்டு இவர் பதசாரம் சொல்லுதல் மிகவும் ஆச்சரியகரமாக இருந்தது.

சதாசிவபிள்ளை பாடல்

அங்ஙனம் வந்து செல்லும் பழைய மாணாக்கர்களிற் சிலர் அன்பின் மிகுதியால் இவர்மீது நூதனமாகப் பாடல்கள் இயற்றிப் படித்துக்காட்டிச் செல்வதுண்டு. அப்பாடல்கள் அருமையாக இருக்கும். அவற்றுள்ளே * சதாசிவபிள்ளை யென்பவர் இயற்றிய துதிகவிகளில்,

(விருத்தம்)

"என்னகத்தி லவிச்சைகெட மெய்ஞ்ஞானக் கதிர்வீசும்
இளம்பொன் றன்னைத்
தன்னகத்துச் சார்ந்தாரைத் தாளுக்கு மேருவையித்
தரணி தாங்கும்

---

* பக்கம், கூ.

பன்னகத்தின் மமதைகெடப் பாவிடியைத் தருமுகிலைப்
பன்னா னங்கள்
மன்னகத்து மீனாட்சி சுந்தரநா வலனடியை
வணக்கஞ் செய்வாம்"

[பொன் - சூரியன்]

என்ற பாடல் மட்டும் ஞாபகத்தில் இருக்கின்றது. இச்செய்யுள் இவரிடத்தில் மாணாக்கர்கள் கொண்ட அளவற்ற அன்பைப் புலப்படுத்துகின்றது. அந்தப் பத்துநாளும் ஆனந்தத்தை விளைவித்தன.

காலப்போக்கு

ஒவ்வொருநாளும் ஏதேனும் அருகிலுள்ள ஒவ்வொருகோயிலுக்குச் சென்று இவர் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வருவார்; அச்சமயத்தில் அந்தத் தலசரித்திரம், அதன் சம்பந்தமான தேவாரம், நூல்கள், தனிப்பாடல் முதலியவை இன்னவையென்று எங்களுக்கு எடுத்துரைப்பார்; அங்கே உள்ளவர்களைக் கொண்டும் எங்களுக்கு அவற்றைச் சொல்லச் செய்வார். இடையே சந்திப்பவர்களில், "நீங்கள் இவ்வூரைவிட்டுப் போன பின்பு இதற்குள்ள சோபை போய்விட்டது" என்போர் சிலர்; "உங்களால் இந்த ஊர் மிக்க கீர்த்தியை நாளுக்குநாள் அடைந்து வருகின்றது" எனப் பாராட்டுவோர் சிலர்; "உங்களுடைய அருமையான நூல்களை அடிக்கடி கேட்டு இன்புற இயலவில்லையே என்று வருந்துகின்றோம்" என்பவர் சிலர்; "இனி இந்த ஊருக்கு வந்துவிடுங்கள்" என்பவர் சிலர். சிலர் தங்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று விருந்து செய்வித்து உபசரித்து அனுப்பினர்

உபதேசியார் ஆட்சேபித்தது

ஒருநாள் வரகனேரிச் சவரிமுத்தாபிள்ளை யென்னும் செல்வர் இவரை அழைத்துச் சென்று அவ்வூர் அக்கிரகாரத்திலுள்ள ஒரு வீட்டில் விருந்து செய்வித்து உபசாரத்துடன் தம்முடைய வீட்டிற்கு அழைத்துப்போனர். அவர் பெரியபுராணத்தில் அதிபத்த நாயனர் புராணத்திற்குப் பொருள் சொல்லவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டனர். இவர் சொல்லிவருகையில் தமிழ்க் கல்விமானுகிய கிறிஸ்தவமத உபதேசியாரொருவர் அங்கே வந்தார். இடையிடையே மனம்பொறுமல் அவர் தூராட்சேபம்

செய்துகொண்டேயிருந்தனர்; அப்பொழுது அப்பொழுது இவர் சமாதானம் சொல்லிவந்தும் மேன்மேலே அவர் இவருடைய பெருமையை அறியாமல் கேள்வி கேட்டுவந்தனர். அவர் நோக்கத்தை யறிந்து, இவர்பாலுள்ள அன்பின் மிகுதியாலும் மதிப்பாலும் சவரிமுத்தாபிள்ளை பேசாமலிருக்கும்படி அவ்வுபதேசியாருக்கு முதலிற் கூறினர்; அப்படியும் அவர் அடங்காமையால் அவரை எழுந்து போகும்படி கண்டித்துச் சொல்லிவிட்டார்; அவர் திரும்பிப்பாராமல் விரைவாகப் போயினர். இவர் அவ்வுபதேசியாரை அன்புடன் அழைத்து, "ஐயா, ஞாபகமிருக்கட்டும்; மறவாதீர்கள்" என்றார். எங்களுக்கு அது மிகவும் வியப்பாக இருந்தது; இவருடைய பொறுமையைப் பாராட்டினேம்.

தஞ்சாவூர் சென்றது

காரியத்தை முடித்துக்கொண்டு இவர் திருச்சிராப்பள்ளியிலிருந்து புறப்பட்டுப் பட்டீச்சுரம் வந்துவிட்டார். அங்கே சில தினம் இருந்துவிட்டு ஆறுமுகத்தா பிள்ளையின் குடும்பக் காரியம் ஒன்றன் நிமித்தம் தஞ்சாவூருக்குப் புரட்டாசி மாதம் முதலிற் சென்றார். காந்தையிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் இவர் ஒருமாத காலம் தங்கியிருந்தனர். இவர் மாணாக்கரும் மார்ஷல் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான ஐயாசாமி பிள்ளை யென்பவரும் இலக்கணம் இராமசாமி பிள்ளை யென்பவரும் கோ. இராம கிருஷ்ண பிள்ளையென்பவரும் வேறு சிலரும் அடிக்கடி வந்து வந்து பார்த்துப்பார்த்துத் தாம்தாம் அறிந்துகொள்ள வேண்டியவற்றை அறிந்துகொண்டும் இவருக்கு ஆகவேண்டியவற்றைக் கவனித்துவிட்டும் சென்றனர் அப்பொழுது ஐயாசாமி பிள்ளை கல்லாடம் முழுவதையும் பாட்டுக்கேட்டு முடித்தனர். இவர் விஷயத்தில் அவர் காட்டிவந்த அன்புடைமையும் கவனிப்பும் அதிகம். திருவையாற்றிலிருந்து முத்துசாமி பாரதியாரென்பவர் அடிக்கடிவந்து தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுப் போக்கிக்கொண்டனர் இப்படியே வந்து சென்றவர்கள் பலர்.

சின்னத்தம்பியா பிள்ளை

தஞ்சாவூரை அடுத்த ரெட்டிபாளையமென்னும் ஊரிலுள்ள பெரியமிராசுதாராகிய சின்னத்தம்பியாபிள்ளை யென்பவர் தஞ்சைக்கு இவர் வந்திருப்பதை யார் முகமாகவோ கேள்வியுற்றுத்

தாமே வந்து பார்த்து அளவளாவி இவருடைய செய்யுள் நயங்களைத் தெரிந்து பெரிதும் இன்புற்று முடிவில் தக்க பொருளுதவி முதலியவற்றைச் செய்துவிட்டுச் சென்றார். அப்பால் இவர் அவருடைய பேரன்பில் ஈடுபட்டு,

(விருத்தம்)

"மழைபொழியு முகிலென்கோ வானுயர்கற் பகமென்கோ
மகிழ்ந்தெஞ் ஞான்றும்
தழையுமிரு நிதியென்கோ தருசிந்தா மணியென்கோ
தாவா மேன்மை
விழையுமொரு சுரபியென்கோ புண்ணியமென் கோவரன்றீ
விழிநே ராகாக்
கழைமதவேள் நிகர்சின்னத் தம்பிமகி பாலாநின்
கையைத் தானே"

என்றபாடலை முதலில் அமைத்து ஒரு கடிதம் எழுதியனுப்பினர்.

முத்துக்குமார பத்தரைப் பாராட்டியது

அந்தக்காலத்தில் தஞ்சாவூரில் இருந்தவரும் பித்தளையில் நுட்பமான சிற்ப வேலைசெய்வதில் அதிகத்திறமையுடையவரும் தமிழ் நூலறிவிற் சிறந்தவரும் சிவபக்திச் செல்வருமாகிய முத்துக்குமார பத்தரென்பவர் இவருடைய பூஜைக்கு உபயோகமாகக் கற்பூரப் பஞ்சஹாரத்தித் தீபமொன்றும் ஊதுவத்திச்செடியொன்றும் அரிய வேலைப்பாடுள்ளனவாகச் செய்து அவற்றைப் பல அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த இவரிடம் சேர்ப்பித்தனர். இவர் அவற்றை ஏற்று மகிழ்ந்து அவரது அன்புடைமையையும் அவற்றின் வேலைப்பாட்டையும் பாராட்டிவிட்டு,

(வெண்பா)

"மொய்வேலை சூழுலகில் முத்துக் குமாரபத்தன்
கைவேலை போலநாம் கண்டதில்லை—அவ்வேலை
செய்யு மவற்குத் திறல்விச் சுவகருமன்
கையும் பொழியும்பொன் காண்"

என்ற செய்யுளை இயற்றி அளித்தனர். இவருடைய மனத்தில் எழுந்த சந்தோஷமே விரைவில் அப் பாடலாக வந்ததை உணர்ந்து அங்கிருந்தவர்கள் மகிழ்ந்தார்கள்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ௧௬௩

பிரான்மலை ஓதுவார்

பின்பு ஒருநாள் பிரான்மலையிலிருந்து ஓதுவார் ஒருவர் மிக்க ஆவலோடு இவரைப் பார்க்க வந்தார். அவர் தேவாரங்களைச் சாரங்கி யென்னும் வாத்தியத்தில் அமைத்துப் பண்ணோடு ஓது தலில் வல்லவர்; பல வித்துவான்களுடைய கீர்த்தனங்கள் அவருக்குப் பாடமுண்டு; குணவான். அவருடைய ஞானத்தையும் விருப்பத்தையும் பக்தியையும் அறிந்து தம்முடைய பூஜாகாலத்தில் ஒவ்வொரு நாளும் தேவாரமோதுவதுடன் நல்ல கீர்த்தனங்களையும் பாடும்படி இவர் நியமித்து மாதவேதனம் கொடுத்து வந்தார். அவர் அதனை ஏற்றுக்கொண்டு அப்பணியை நாடோறும் செய்து வருவாராயினர். திருப்பெருந்துறைப் புராணத்தை அரங்கேற்றி மீளும் வரையில் உடனிருந்து விட்டு அப்பால் விடை பெற்று அவர் தம்மூர் சென்றார்.

---

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம்

விருத்தமும் கீர்த்தனமும்

பின்பு இப்புலவர் கோமான் தஞ்சையிலிருந்து பட்டீச்சுரத்திற்கு வந்து அங்கே சில தினம் இருந்தனர். அப்பால் திருவாவடுதுறைக்குப் புறப்படுகையில் முன்பு கூறிய பிரான்மலை ஓதுவார், பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் புதுக்கோட்டை மகாராஜாவாகிய இராமசந்திர தொண்டைமான்மீது இயற்றிய இங்கிலீஷ் நோட்டின் மெட்டுள்ள ஒரு கீர்த்தனத்தைப் பாடிக் காட்டினர். அந்த மெட்டில் ஒரு கீர்த்தனம் சுப்பிரமணிய தேசிகர்மீது செய்யவேண்டுமென்னும் எண்ணம் இவருக்கு அப்போது உண்டாயிற்று. உடனே ஒரு விருத்தமும், அந்த மெட்டில் ஒரு கீர்த்தனமும் இவர் இயற்றினர். அவை வருமாறு :—

(விருத்தம்)

"தேடுகயி லாயபரம் பரைத்துறைசை மேயநமச்
சிவாயன் றன்னைக்
கூடுதன்முன் னுள்ளபதி னால்வருமுற் றோன்றலெனக்
கொண்டா ரவ்வா

நாடுதவிர் தரக்கொண்டும் பிற்றேன்ற லெனவுங்கொண்
டுவக்குங் கோமான்
நீடுபெரும் புகழமைசுப் பிரமணிய குருமணியை
நினைந்து வாழ்வாம்."

[கூடு தன்னென்றது கசு - ஆம் பட்டத்திலிருந்த மேலகரம் சுப்பிர மணிய தேசிகரை. அவருக்கு முன்னும் ஆதீனஸ்தாபகராகிய நமச்சிவாய மூர்த்திக்குப் பின்னும் இருந்த பதினல்வராவர்: (க) மறைஞான தேசிகர், (உ) அம்பலவாண தேசிகர், (ஙு) உருத்திரகோடி தேசிகர், (ச) வேலப்ப தேசிகர், (ஞ) முற்குமாரசாமி தேசிகர், (சு) பிற்குமாரசாமி தேசிகர், (எ) மாசிலாமணி தேசிகர், (அ) இராமலிங்க தேசிகர், (கு) முன் வேலப்ப தேசிகர், (கo) பின் வேலப்ப தேசிகர், (கக) திருச்சிற்றம்பல தேசிகர், (கஉ) அம்பலவாண தேசிகர், (கஙு) சுப்பிரமணிய தேசிகர், (கச) அம்பல வாண தேசிகரென்பவர்கள். பிற்றேன்றல் என்றது சின்னப்பட்டத்தி லிருந்த நமச்சிவாய தேசிகரை.]

(கீர்த்தனம்)

ராகம்—கமாசு : தாளம்—ஆதிதாளம்.

[பல்லவி]

துங்கஞ்சார் தருதுறை சையில்வளர்
சுப்பிர மணிய தயாநிதியே
துன்றும்பே ரருணனி பொழிதரு
சுத்தமெய்ஞ் ஞான கலாநிதியே

[அனுபல்லவி]

தூய நயசுகு ணக்கடலே
நேய வுயிர்மரு வற்குடலே
தொண்டென்றுங் கொண்டின்பம் கண்டென்றும்
பண்பொன் றினர்நிறை (துங்கம்)

[சரணங்கள்]

1. மெய்கண்டான் சந்ததி யென்றும்
விளங்கவி ராவிய சூரியனே
மெய்யொன்று தாழ்பர சமயரை
வென்றுநி லாவிய வீரியனே
வைகுங்கா மாதிய கரிசில்
வளத்தவ ரேபெறு காரணனே

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் கசுரு

வையந்தா ஞகிய பலவு
மறுத்தவை மேலொளிர் பூரணனே
மாண்பார் புலவர்சி காமணியே
காண்பார் பரவுசிந் தாமணியே
மஞ்சொன்றுங் கஞ்சந்தங் கஞ்சம்புஞ்
சங்கொண் டொளிர்தரு (துங்கப்)

2. அடியார்தங் குறைபுமு தொழிதர
ஆரருள் புரிகரு ணாலயனே
அலரேவா னிடைமரு விபபகை
ஆதியி ளுறு மாலிபனே
கடியாரும் உறுகமு நீர்மலர்
காமுறன் மேயபு யாசலனே
கருதாதா ரொருவரு மிலையென
ஓர்பவர் பாசம்வெல் பூசலனே
கமழ்சித் தாந்தசை வப்பொருளே
தமிழிற் காந்தனி மெய்த்தெருளே
கம்பங்கொன் றன்பென்றுந் தங்குஞ்சம்
பந்தந் தந்தருள் (துங்கம்)

3. வந்தெங்கும் பசுமுகில் தவழ்தரு
மாகயி லாயப ரம்பரையாய்
மன்றின்கண் தனிநட நவில்பவ
மாறலி லாகம நூலுரையாய்
நந்தொன்றுங் குழைமறை தரவகன்
ஞாலம்வி ராயப ரம்பரனே
நங்கஞ்சந் திருவடி வுளமல
நாளுமி லாமைநி ரம்பரனே
பரவமு தேயெனும் வானவனே
குரவர்சி காமணி யானவனே
பந்தந்தங் கும்பண்பின் றென்றென்றுஞ்
சென்றந் தணர்புகழ் (துங்கம்)

[அனுபல்லவி : தொண்டு - கைங்கரியந்தை. சரணம் : (1) வையம் ஆதிய - பிருதிவி முதலிய தத்துவங்கள். அஞ்சம் - அன்னப் பறவைகள். புஞ்சம் கொண்டு - கூட்டம் கொண்டு. (2) அலர் ஏவான் - மன்மதன். மாலை - இயல்பு. கழுநீர்மாலை ஆசிரியர்களுக்கு உரியது. கம்பம் - நடுக் கத்தை. (3) நந்து - சங்கம். நங்கு - பழிப்பு.]

திருவாவடுதுறைக்கு வந்தது

அப்பாற் பரிவாரங்களுடன் இவர் திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் அவ்விருத்தத்தையும் கீர்த்தனத்தையும் சுப்பிரமணிய தேசிகரிடம் விண்ணப்பிக்கும்படி செய்தார். கேட்ட அவருக்கும் திருக்கூட்டத்தாருக்கும் அவை இன்பத்தை விளைவித்தன. மடத்திலுள்ள முதியவர்கள், தேசிகர் இரவில் ஆலயம் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு மடத்துக்கு வந்து ஒடுக்கத்திற் பீடத்தில் வீற்றிருந்து அடியார்களுக்கு விபூதிப்பிரசாதம் அளிக்கும்பொழுது மேற்கூறிய கீர்த்தனத்தைப் பாடச்செய்ய விரும்பினார்கள். அவ்வண்ணமே ஓதுவார்கள் நாள் தோறும் அச்சமயத்திற் பாடி வருவாராயினர்.

சுப்பராய செட்டியார் கடிதம்

ஒருநாள் நாங்கள் பாடங்கேட்டுக் கொண்டிருந்த பொழுது சென்னையிலிருந்த சுப்பராய செட்டியாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், "நான் திருச்சிராப்பள்ளியில் தங்களிடம் படித்துக் கொண்டிருக்கையில் வெஸ்லியன் மிஷன் ஸ்கூலில் எனக்கு வேலை கிடைத்தது. முதல்மாதச் சம்பளமாகிய ரூபாய் பதினைந்தை (ரூ * ௰௫)த் தங்களிடம் கொடுத்து வந்தனம்செய்து பெற்றுக்கொண்டபொழுது தாங்கள் இந்தப் பதினைந்தைத் திரும்பவைத்தால் என்ன தொகையோ அதனைப்பெற்று வாழ்ந்திருக்க வேண்டுமென்று அருளிச் செய்தீர்கள். அந்தப்படியே தங்களுடைய பெருங்கருணையினால் எனக்கு இன்று ரூ. ௫௰ சம்பளம் ஏற்பட்டது" என்று தெரிவித்திருந்தார். இவருடைய நல்வாக்குப் பலிதமாகு மென்பதைச் சிலராற் கேட்டிருந்த நாங்கள் அக்கடிதத்தால் அச்செய்தி உண்மையென்று அறிந்து மகிழ்ந்தோம்.

திருமாளிகைத் தேவர் பூஜை

ஒருதினம் மடத்திற் பகற் போஜனம் ஆனபின்பு இவர் மடத்தின் முகப்பில் இருக்கையில் மடத்திற்குள்ளே மணியோசை கேட்டது. அந்த ஓசைக்குக் காரணம் என்ன வென்று அங்கே உள்ளவர்களை இவர் வினாவியபொழுது திருமாளிகைத்தேவருக்கு நடக்கும் பூஜாகாலத்தில் அடிக்கப்படும் மணியோசை யென்று சொன்னார்கள். அப்பொழுது இவர் சுப்பிரமணிய தேசிகருக்கு,

---

* பழைய காலத்திற் பத்து, '௰' என்னும் வடிவமாகப் போடப்படும்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ககூஎ

"பேசு புகழ்ச்சுப் பிரமணிய தேசிகன்பொன்
வீசு கழற்கடியேன் விண்ணப்பம் நேசம்
வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே
கருதுபந்தி யாதல்வழக் கம்"

என்னும் வெண்பாவை எழுதுவித்தனுப்பினர்.

மடத்தில் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் திருமாளி கைத் தேவருக்குப் பூஜைசெய்பவர் ஆதி சைவராதலால் ஸ்ரீ கோமுத்தீசுவரர்க்கு உச்சிக் காலமான பின்பு அவர் அங்கே வந்து பூஜைசெய்வது வழக்கம். அன்றைத்தினம் என்ன காரணத்தாலோ கோயிலில் தாமதித்து உச்சிக்காலம் நடந்தமை யின் அவர் அகாலத்தில் வந்து பூசிப்பாராயினர்.

இப்பாட்டைக் கேட்டவுடன் மறுநாள் தொடங்கிக் காலையி லேயே வந்து பூஜை செய்யும்படி தேசிகர் ஸ்ரீ கோமுத்தீசுவரர் கோயில் அர்ச்சகர்களுக்கு உத்தரவு அனுப்பிவிட்டார். அவர்கள் அங்ஙனமே செய்வாராயினர். அதுபோல் இன்றும் நடைபெற்று வருகின்றது.

இரத்தினம்பிள்ளையின் உதவி

முன்பு அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய பொழுது இவருக்கு மடத்திலிருந்து போடப்பட்ட. ஏறுமுக உருத்திராட்ச கண்டியானது பணத்திற்கு முட்டுப்பாடு வரும்போ தெல்லாம் அடகு வைக்கப்பட்டிருக்கும்; பணங் கிடைத்தபின் கடன்காரர்களிடத்தில் வட்டியும் முதலும் கொடுத்து மீட்கப் படும். அந்தப்படியே அது மாயூரத்தில் ஒருவரிடம் அடகு வைக்கப்பட்டிருந்தது. புராணம் அரங்கேற்றுவதற்காகத் திருப் பெருந்துறைக்குப் போகும்பொழுது அதனை மீட்டுத் தரித்துக் கொள்ளவேண்டுமென்று நாங்கள் தெரிவித்துக்கொண்டோம். அப்போது கையிற் பணம் இல்லாமையால் கடன் வாங்கி மீட்ப தற்கு இவர் தீர்மானித்தார். சோழன் மாளிகை இரத்தினம் பிள்ளையிடம் ரூ. ஈ00 வாங்கிவர வேண்டுமென்றும் திருப்பெருந் துறைப் புராணம் அரங்கேற்றிவந்தவுடன் அத்தொகையை வட்டி யுடன் தாம் சேர்ப்பித்து விடுவதாகச் சொல்லவேண்டுமென்றும் கூறி என்னை அவரிடம் அனுப்பினர். அப்படியே நான் போய்த் தெரிவித்தவுடன் அத்தொகையை அவர் கொடுத்தார். நான்

அதனைப் பெற்றுக்கொண்டு புறப்படுங்காலத்தில் அவர், "இத் தொகையை ஐயா அவர்களிடம் மீட்டும் பெறுவதாக எனக்கு உத்தேசமே இல்லை. ஏதாவது என்னால் இயன்றதை அவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நெடு நாளாக இருந்தது. அந்த எண்ணத்தைப் பூர்த்தி பண்ணும்படி நேர்ந்த இந்தச் சமயத்துக்கு என்னுடைய வந்தனத்தைச் செலுத்துகிறேன். என்னுடைய வேண்டுகோளை அவர்களிடம் சமயம் பார்த்துத் தெரிவிக்க வேண்டும்" என்று சொல்லி என்னை விடுத்தனர். நான் மீண்டு வந்து அவருடைய வேண்டுகோளைத் தெரிவித்ததுடன் தொகையையும் இவரிடம் சேர்ப்பித்தேன். அத்தொகையைக் கண்டு இரத்தினம் பிள்ளையினுடைய அன்பின் மிகுதியை நினைந்து நன்றி பாராட்டி அவருக்கு ஒரு கடிதம் எழுதுவித்தார்; வழக்கம்போலவே அக்கடிதத்தின் தலைப்பில் எழுதிய செய்யுள் வருமாறு :—

(விருத்தம்)

"சீர்பூத்த விசும்பினிடை யொருபோகிக் குரியபணி
செய்து மேவும்
நீர்பூத்த விரத்தினமோ பழசையிடைப் பலவாய
நியம மேய
வார்பூத்த வொருதனியோ கிக்குரிய பணிகள்பல
வயங்கச் செய்யும்
ஏர்பூத்த விரத்தினமோ எதுசிறந்த தறிந்துரைமின்
இயல்வல் லோரே."

[ஒரு போகி - இந்திரன். நீர்பூத்த இரத்தினம் - சிந்தாமணி. பழசை - பழையாறு. பலவாய நியமம் - பலகோயில்கள்; அவை திருப்பட்டீச்சுரம் முதலிய ஊர்களிலுள்ள சிவாலயங்கள்; நியமம் என்பதற்கு ஒழுக்க மென்பது மற்றொரு பொருள். தனியோகி - சிவபெருமான். பணிகள் - திருப்பணிகள். இரத்தினம் - இரத்தினம் பிள்ளை. அவர் மேற்கூறிய கோயில்களுக்குத் தருமகர்த்தாவாக இருந்து வருவாயை விருத்திசெய்து திருப்பணிகளையும் இயற்றி நித்திய பூஜை முதலியவற்றையும் ஒழுங்காக நடத்திக் கும்பாபிஷேகங்களும் செய்வித்தமையின் இங்ஙனம் கூறப் பெற்றார்.]

இரத்தினம் பிள்ளை அளித்த அத்தொகையைக் கடன் வாங்கினவரிடம் சேர்ப்பித்துக் கண்டியை மீட்டு இவர் தரித்துக் கொண்டனர்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ஈசுஈ

திருப்பெருந்துறைக்குப் புறப்பட்டது

ஒரு நல்ல தினம் பார்த்துத் தேசிகரிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாதிரைத் தரிசனத்துக்கு இவர் திருப்பெருந்துறை போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்ரீமுகஸ்ரீ மார்கழி மாதத்தின் முதலிற் (1873 டிஸம்பரில்) புறப்பட்டனர். கூடவே சென்றோர் பழனிக்குமாரத் தம்பிரான், அரித்துவாரமங்கலம் சோமசுந்தரதேசிகர், சுப்பையாபண்டாரம், கும்பகோணம் பெரியண்ண பிள்ளை, *சவேரிநாத பிள்ளை, தில்லை விடங்கன் வேலுச்சாமி பிள்ளை முதலியோர். நானும் சென்றேன்.

செல்லும்பொழுது திருவிடைமருதூர்க் கட்டளை மடத்தில் தங்கி அங்கேயிருந்த நெல்லையப்பத் தம்பிரானென்பவரால் இவர் உபசரிக்கப்பெற்றார். அப்பாற் புறப்பட்டு மேற்கே சாலைவழியிற் செல்லும்பொழுது, "ஏதாவது படித்துக்கொண்டு வரலாமே" என்று சொன்னர். கையில் வெங்கைக்கோவை ஏட்டுப்பிரதியிருந்தமையால் அதனைப்படித்துப் பொருள் கேட்டுக்கொண்டே சென்றோம். இவர் அதிலுள்ள நயங்களைச் சுவைபட எடுத்துக் காட்டியதுடன் நூலாசிரியருடைய பெருமைகளை இடையிடையே பாராட்டிக்கொண்டும் வந்தார்.

ஒரு பழைய நண்பர்

அங்ஙனம் செல்லுகையில், கும்பகோணத்திற்குக் கிழக்கே அஞ்சுதலை வாய்க்காலின் தலைப்புள்ள இடத்தை அடைந்தவுடன் அவ்விடத்தில் ஒரு முதியவர் எதிரே வந்தார். அவருக்குப் பிராயம் சற்றேறக்குறைய அறுபத்தைந்து இருக்கலாம். அவர் ஒரு பெரிய மூட்டையைத் தலையில் வைத்துக்கொண்டும் எண்ணெய்க் கலயமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டும் வந்தார்.

அவர் இவரைக் கண்டு விரைவாக அருகில் வந்து, "என்னப்பா மீனாட்சிசுந்தரம்! சௌக்கியமாக இருக்கிறயா?" என்றார்.

---

* இவர் பிள்ளையவர்களிடத்துப் படிக்க வந்த சில தினத்திற்குப் பின்பு மற்றவர்களைப்போலே தாமும் இருக்க வேண்டுமென்றெண்ணித் திருநீறு தரித்துக்கொள்வாராயினர். அதனைக் கண்ட பிள்ளையவர்கள், "இனிச் சவேரிநாதைச் சிவகுருநாத பிள்ளையென்றே அழையுங்கள்" என்று சொன்னர். மடத்திலும் பிற இடங்களிலுமுள்ள யாவரும் அதுமுதல் அவ்வாறே அழைப்பாராயினர்.

"நீ சௌக்கியந்தானா? எங்கே போகிறாய்?" என்று இவர் கேட்கவே அவர், "நீ மிகுந்த சிறப்போடு விளங்குகிறாயென்பதைப் பலபேர் சொல்லக்கேட்டுச் சந்தோஷமடைந்துகொண்டே இருக்கிறேன். நீ நல்ல புண்ணியசாலி. அநேகம் பேர்களுக்குப் பாடம் சொல்லுகிறாயென்றும் கேள்விப்பட்டேன். இன்னும் நல்ல சௌக்கியத்திலிருக்கும்படி உன்னைச் செய்விக்கவேண்டுமென்று தாயுமானவரைப் பிரார்த்தித்துக்கொண்டேயிருக்கிறேன். நான் உன்னோடு படித்தவன்தான்; என் அதிர்ஷ்டம் இப்படி இருக்கிறது; என் மகளுக்கு இது பிரசவகாலமாம்; அதற்கு வேண்டிய மருந்துகளை நானே வாங்கி வரவேண்டுமென்று மருமகப்பிள்ளை எழுதினார்; அதற்காக எல்லாம் வாங்கிக்கொண்டு போகிறேன். என்ன செய்வேன்! திருச்சிராப்பள்ளி எங்கேயிருக்கிறது; மாப்பிள்ளை ஊர் எங்கேயிருக்கிறது பார்! ஊரை விட்டுப் புறப்பட்டு மூன்று நாட்கள் ஆய்விட்டன. வழியில் தங்கித்தங்கி வருகிறேன்; என் கஷ்டத்தை நான்தானே அனுபவிக்கவேணும்? மறுபடி ஒரு சமயம் வந்து உன்னைப்பார்க்கிறேன். நீ எங்கேயோ ஒருமுக்கியமான காரியமாகப் பலபேரோடு போகிறாயென்று தோன்றுகிறது; நல்லது போய்வா" என்று சொல்லி இவரிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். மீனாட்சிசுந்தரமென்று அவர் அழைத்ததைக் கேட்ட நாங்கள் இவரோடு இந்த மாதிரி ஒருமையாகப் பேசி அளவளாவினவர்களை அதுவரையிற் பார்த்திராமையால் வியப்புற்று அவரை இன்னாரென்று தெரிந்துகொள்ளுதற்கு நினைந்து இவருடைய முகத்தைப் பார்த்தோம்; அந்தக் குறிப்பை இவர் அறிந்து, "இவர் என் தகப்பனாரிடத்தில் என்னோடு பள்ளிக்கூடத்திற் படித்துக் கொண்டிருந்தவர். தொண்டைமண்டல வேளாளர். நான் திரிசிரபுரம் வந்த பின்பு அடிக்கடி நூதனமாகப் பெற்றுள்ள ஏட்டுச்சுவடிகளை வாங்கிவாங்கிச் சென்று அதிசீக்கிரத்தில் முற்றும் படித்துவிட்டு ஜாக்கிரதையாகத் திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடுவார். அந்நகரத்தில் இருந்த வரையில் நான் படித்த புத்தகங்களையெல்லாம் தவறுமல் ஒவ்வொன்றாக வாங்கிச் சென்று படித்தவர் இவர். ஒரு நாளுக்காவது இவருக்குப் பொருள் தெரியாது. பொருள் தெரிந்துகொண்டு படிக்க வேண்டுமென்ற விருப்பமும் இவருக்கு இல்லை. சில சமயங்களில் நான் சந்திப்பதுண்டு. இப்படியே பேசி முடிப்பார். இவரது

வறுமை நிலையை உத்தேசித்து ஏதேனும் நான் கொடுக்க முயன்றால் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டு விரைந்து சென்றுவிடுவார். அதைக் குறித்துப் பேசத் தொடங்கினாற் கோபமும் அவருக்கு வந்துவிடும். ஒருபொழுதும் நாளிருக்கும் இடத்திற்கு அவர் வந்ததுமில்லை; ஏதாவதொன்றை என்னிடம்பெற்றுக்கொண்டதுமில்லை. பிறரிடத்தும் அப்படியே. அதனால்தான் இப்பொழுது நான் ஒன்றும் கொடுக்கத் துணியவில்லை. கபடமில்லாத மனத்தினர்; நல்ல குணமுடையவரே. இளமையிற் பேசியது போலவே அவர் ஒருமையாகப் பேசுவது எப்பொழுதும் வழக்கம்" என்று அன்புடன் சொன்னார்.

வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

அப்பாற் கும்பகோணம், பாபநாசம், தஞ்சாவூர், முத்தாம்பாள்புரம் (ஒரத்தநாடு), பட்டுக்கோட்டை, ஒட்டங்காடு, காலகம் என்னும் ஊர்கள் வழியே சென்று திருப்பெருந்துறையை இவர் அடைந்தார்.

சில சமயங்களில் வண்டியினின்றும் இறங்கி நாங்கள் சாலையிலே நடந்து செல்லுவோம்; அப்போது பாடங்கேட்டுக்கொண்டும் போவோம். முத்தாம்பாள்புரத்தில் முன்பு தஞ்சை அரசரால் ஏற்படுத்தப்பட்டிருந்த பெரியதொரு தருமஸ்தாபனத்தில் தமிழ்ப்பாடம் சொல்லுதற்கு உபாத்தியாயராக நியமிக்கப் பெற்றிருந்தவரும் திருக்கண்ணபுர ஸ்தல புராணம் முதலிய வற்றைச் செய்தவருமாகிய வித்துவான் நாராயணசாமி வாத்தியார் என்பவருடைய குமாரர் வந்து இவருக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்வித்தனர்.

இடையே உள்ள இடங்களுக்குச் சென்றபோது இவருடைய வரவையறிந்து அங்கங்கேயுள்ள தமிழபிமானிகள் வந்து வந்து, "இங்கே சிலதினமிருந்து எங்களுக்குச் சொல்லவேண்டிய வற்றைச் சொல்லிவிட்டுச் செல்லவேண்டும்" என்று குறையிரந்தார்கள். "திருவாதிரைத் தரிசனத்திற்குத் திருப்பெருந்துறைக்குச் செல்லுகிறேன். அங்கே சிலதினம் இருப்பேன். அப்பால் திரும்பிவரும்போது நேர்ந்தால் இங்கே தங்கிச் செல்லுவேன்; இப்போது அவகாசமில்லை" என்று அவரவர்களுக்கு ஸமாதானம் கூறினர்.

* வேம்பத்தூர்ப் பிச்சுவையர்

அப்பால் திருப்பெருந்துறையை அடைந்து அதன் தெற்கு வீதியிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் இவர் பரிவாரங்களுடன் தங்கினர். இவர் அங்கே வந்துவிட்டதை ஸ்ரீ ஆத்மநாதஸ்வாமி கோயிற் கட்டளை ஸ்தானத்திலிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தம்பிரானுக்குத் தெரிவிப்பதற்குப் பழனிக்குமாரத் தம்பிரானும் நானும் கட்டளை மடத்திற்குச் சென்றோம். அப்பொழுது மடத்தின் வெளியே உள்ள ஒரு மண்டபத்தில் நாட்டுக்கோட்டை நகரத்துத் தனவைசிய கனவான்கள் சிலரோடும், வேம்பத்தூர்ப் பிச்சுவையர் முதலிய தமிழ்ப் பண்டிதர்களோடும் இருந்து வன்றொண்டச் செட்டியார் பேசிக்கொண்டிருந்தார். பிச்சுவையர் பாடல் சொல்லி எல்லோரையும் மகிழ்வித்துக்கொண்டிருந்தனர். அதைக் கவனித்த என்னை நோக்கி, "இவர்தாம் வேம்பத்தூர்ப் பிச்சுவையர்" என்று பழனிக்குமாரத் தம்பிரான் தெரிவித்தனர். அவர் பாடல் சொல்லுதலைக் கேட்டுக்கொண்டே சிறிதுநேரம் நின்றுவிட்டு உள்ளே சென்று சுப்பிரமணிய தம்பிரானைப் பார்த்துப் பிள்ளையவர்கள் வந்திருப்பதை நாங்கள் தெரிவித்தோம். இவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்த அவர் அதனைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அச்சமயத்தில்,

(வெண்பா)

"இன்றொண்டர் சூழ எழிலார்நின் சேவைசெய
வன்றொண்ட ரோடுகன வான்கள்சிலர்—இன்றொண்டு
பித்தற்கே செய்சுப் பிரமணிய நின்றலைக்
கத்திலே வந்திருந்தார் கள்"

என்னும் பாடலைச் சொல்லிக்கொண்டே பிச்சுவையர் வந்தார்; அவருடனிருந்த மற்றவர்களும் வந்தார்கள்.

வன்றொண்டர் முதலியவர்கள் வந்து வந்தனம் செய்து தம்பிரானிடம் விபூதிப்பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். பிச்சுவையர் நிமிஷப்பொழுதிற் கவிசெய்யும் ஆற்றலைக்குறித்து வியந்துகொண்டே நாங்கள் இக்கவிஞர்பிரான் இருந்த விடுதிக்குச் சென்றோம்.

அவ்விடத்திற் கோயிலார் மரியாதையுடன் வந்து பிரசாதங்களை இவரிடம் கொடுத்துத் தரிசனத்திற்கு வரவேண்டுமென்று

---

* வேம்பற்றூரெனவும் வழங்கும்.

அழைத்தார்கள். உடனே இவர் ஆலயத்துக்குச் சென்றார். சுப்பிரமணிய தம்பிரான் அங்கே வந்து இவரை வரவேற்று முன்னே நின்று தரிசனம்செய்வித்தார் அன்றைத்தினம் திருவாதவூரடிகள் கொண்டருளியிருந்த மந்திரிக்கோலக்காட்சி எங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

தரிசனமானபின்பு பிள்ளையவர்களுக்குத் தம்பிரானவர்களாற் காளாஞ்சிகள் கொடுக்கப்பெற்றன. அவற்றை இவர் வாங்கி வேறொருவரிடம் கொடுப்பதற்குத் திரும்பினர். உடனே அங்கே நின்ற வேம்பத்தூர்ப் பிச்சுவையர் வந்து அவற்றை அன்புடன் வாங்கிக்கொண்டனர்; அவரைக் கண்டு இவர், "துவடுக நாததுரை எப்பொழுது வந்தது?" என்று கேட்டனர்.

*'துவடுக நாததுரை' என்று அவரைச்சொன்னதன்காரணத்தை நாங்கள் இவரிடம் பின்பு கேட்டுத் தெரிந்துகொண்டோம். அப்பால் இவர் தமக்கு அமைத்திருந்த விடுதிக்குச் சென்றார். இவருடைய வரவைக்கேட்டதும் அங்கே திருவிழாவிற்கு வந்திருந்த பண்டிதர்கள் பலர் வந்து பார்த்து ஸல்லாபஞ் செய்துகொண்டு உடனிருந்தார்கள்.

மறுநாட் காலையிற் பிச்சுவையர் தாம் ஆலவாயடிகள் திறத்துச் செய்திருந்த நிரோட்டக யமகவந்தாதியை இவரிடம் படித்

---

* ஒரு காலத்திற் சிவகங்கை ஸம்ஸ்தானத் தலைவராக இருந்த முத்துவடுகநாத துரையென்பவர்மீது பிச்சுவையர், காதலென்னும் ஒரு பிரபந்தம் செய்து அரங்கேற்றி ஸம்மானம் பெற்றனர். அப்பொழுது அங்கே ஆஸ்தானபண்டித்ராக இருந்த முத்துவீரப்பப் பிள்ளை யென்பவர் அவரைப் பார்த்து, முத்துவடுகநாத துரையென்பதை ஒரு வெண்பாவிலமைத்து ஐந்து நிமிஷங்களிற் பாட வேண்டுமென்று கூறினர். பிச்சுவையர் அப்படியே செய்துவிட்டார். அச்செய்யுளின் முன்னிரண்டடிகள் எனக்குக் கிடைக்கவில்லை. பின் இரண்டடிகள் மட்டும் கிடைத்தன. அவை வருமாறு:

"கவடுக நாதனையே கைதொழுது வாழ்முத்
துவடுக நாத துரை."

[கவடு உகத் தொழுதென்க; கவடு - வஞ்சனை. நாதன் - சிவபெருமான்.]

அந்த வரலாற்றை ஒரு சமயம் பிள்ளையவர்கள் கேட்டு வியப்புற்று அது தொடங்கி அவரைக் காணுந்தோறும் 'துவடுக நாத துரை' என்றே அன்புடன் அழைப்பாராயினர்.

துக்காட்டிப் பொருள் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்பொழுது, "இது பிழை, அது பிழை" என்று உடனிருந்த * பழனிக்குமாரத் தம்பிரான் அடிக்கடி ஆட்சேபஞ் செய்தனர். பிச்சுவையர் உடனுடன் அந்தப்பதங்களை மாற்றி மாற்றி வேறு வேறு பதங்களை யமைத்துச் சிறிதும் வருத்தமின்றி முடித்துக்கொண்டே வந்தார். இதைக் கண்ட இக்கவிஞர்கோமான் தம்பிரானை நோக்கி, "சாமீ, நிரோட்டகத்தில் யமகமாகப் பாடல்கள் செய்திருக்கும் அருமையைச் சிறிதும் பாராட்டாமல் ஒவ்வொரு பாடலிலும் பல ஆட்சேபங்கள் செய்துகொண்டே செல்வது நன்றாக இல்லை. ஆட்சேபிக்க ஆட்சேபிக்க ஆலோசனை செய்யாமல் உடனுடன் வேறு பதங்களை அமைத்து விரைவில் இவர் முடித்து விடுவதைப் பார்த்து இவருடைய திறமையைப்பற்றி வியக்கவேண்டாமா? மேலே சொல்லும்படி தாராளமாக விட்டுவிடுக. ஊக்கத்தைக் குறைக்கக்கூடாது" என்று சொல்லவே அவர் ஆட்சேபியாமல் சும்மா இருந்துவிட்டனர். பின்னர் அந்நூல் முற்றும் படித்துக் காட்டப்பெற்றது.

இப்படியே வந்தவர்களுள் ஒவ்வொருவரும் தினந்தினம் தாம்தாம் செய்துவைத்திருந்த நூல்களை இவரிடம் படித்துக்காட்டித் திருத்திக்கொண்டனர். இவரும் சலிப்பில்லாமற் கேட்டு அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி ஆதரித்து வந்தார்.

அங்கே வந்திருந்த சிங்கவனம் சுப்புபாரதியார் முதலியவர்களிடம் ஆகாரம் முதலிய விஷயங்களிற் கவனித்துக் கொள்ளும்படி சொல்லி இவர் என்னை ஒப்பித்தனர்.

சின்னச்சாமி வீரப்பனைது

கட்டளை மடத்தின் கீழ்புறத்திலுள்ள 'சவுகண்டி' யில் இவருக்கு இருப்பிடம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கே இவர் பரிவாரங்களுடன் இருந்து வருவாராயினர். சின்னச்சாமி படையாச்சியென்ற மடத்து வேலைக்காரனொருவன் திருவாவடுதுறை மடத்திலிருந்து இவருடன் அனுப்பப்பட்டிருந்தான். அந்த வேலைக்காரனைத் தவசிப்பிள்ளைகள், "அடே சின்னச்சாமி" என்று அடிக்கடி கூப்பாடுபோட்டு அழைத்தலையும், "அங்கே போடா,

---

* இவரும் பிச்சுவையரும் சின்னப்பட்டம் ஸ்ரீ நமச்சிவாய தேசிகரிடம் கல்லிடைக் குறிச்சியிற் படித்தவர்கள்.

இங்கே வாடா'' என்று சொல்லுதலேயும் கேட்ட இவர் அவர்களை அழைத்து, ''இங்கே கட்டளைச்சாமியைப் பெரியசாமி யென்றும் உதவியாக இருந்தவரும் ஸ்ரீகாசிநாதசாமியைச் சின்னச்சாமியென்றும் ஸ்தலத்தார் மரியாதையாக வழங்கி வருவது உங்களுக்குத் தெரியுமே. ஆதலால் அவனை இன்று முதல் சின்னச்சாமியென்று அழையாமல் வீரப்பனென்று அழையுங்கள்'' என்று சொன்னர்; அன்றியும் அவனை அழைத்து, ''உன்னை இன்றுமுதல் சின்னச்சாமியென்று, யாரும் அழைக்க மாட்டார்கள்; வீரப்பனென்றே அழைப்பார்கள்; அழைக்கும் போது நீ ஏனென்று கேட்டு, சொன்னவேலைகளைச் செய்துவா'' என்று கட்டளையிட்டார். அதுமுதல் அவன் அவ்வாறே அழைக்கப்பட்டுப் பார்க்கவேண்டிய வேலைகளைப் பார்த்து வந்தான். இதனால் இவருடைய கவனம் ஒரு சிறு விஷயத்திலும் செலுத்தப் பட்டமை விளங்குகின்றது.

புராண அரங்கேற்ற ஆரம்பம்

நல்லதினத்திற் புராண அரங்கேற்றம் ஆரம்பிக்கப்பெற்றது. அப்போது தம்பிரானவர்கள் பல இடங்களுக்குச் சொல்லியனுப் பினமையால் சமீபமான இடங்களிலிருந்த சில ஜமீன்களின் பிரதி நிதிகளும், சேர்வைகாரர்கள் முதலியவர்களும், பெரிய மிராசு தார்களும், புதுக்கோட்டை அறந்தாங்கி முதலிய இடங்களில் இருந்த உத்தியோகஸ்தர்களும், பண்டிதர்கள் பலரும் வந்து கூடினர்கள்.

குறிப்பிட்டிருந்த நல்ல முகூர்த்தத்தில் திருப்பெருந்துறைப் புராணத்தின் ஏட்டுப்பிரதியை ஸ்ரீ ஆத்மநாத ஸ்வாமியின் திரு முன்பு பீடத்தில் வைத்துப் பூசித்துப் பிள்ளையவர்களிடம் * ஒரு நம்பியார் கொண்டுவந்து கொடுத்தனர். விபூதிப் பிரசாதத்தைக் கொடுத்து மாலைசூட்டிச் சிரத்திற் பட்டுக் கட்டுவித்த பின்பு இவரை உபசாரத்துடனழைத்து வந்து † குதிரைஸ்வாமி மண்ட பத்தில் இருக்கச்செய்து தொடங்கச் சொன்னர்கள். இவர்

---

* இவர் ஸ்ரீ ஆத்மநாத ஸ்வாமியை அர்ச்சிப்பவர்; அத்தலத்தில் உள்ள அந்தணர் முந்நூற்றுவர்களைச் சார்ந்தவர்.

† இதன்பால் ஸ்வாமி அசுவாரூட மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்ற மையின் இஃது இப்பெயர் பெற்றது; இத்தலத்துள்ள சபைகள் ஆறனுள் இது கனகசபை என்று கூறப்படும்.

கட்டளைப்படி முதலிலிருந்து பாடல்களை நான் படித்தேன். ஒவ்வொன்றிற்கும் அழகாகப் பதசாரஞ் சொல்லி இவர் உபந்யசித்தார். கேட்டு எல்லோரும் இன்புற்றார்கள்.

சுப்பிரமணிய தம்பிரானது கோபம்

நாள்தோறும் பகல் மூன்றுமணி தொடங்கி ஐந்துமணிவரையில் அரங்கேற்றுதல் நடைபெறும். நாகபட்டினத்திலிருந்து வந்து அந்தத் தலத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்தவர்களும் வடமொழி தென்மொழிகளிற் பயிற்சியுள்ளவர்களும் சிவபக்தியுடையவர்களுமாகிய சைவச்செல்வர்களிருவரும்வன்றொண்டர் முதலியோரும் நாள்தோறும் தவறாமல் வந்து வந்து மற்றவர்களுடன் கேட்டுக்கேட்டு மகிழ்ச்சியுறுவார்கள். ஒருநாள் வழக்கப்படி எல்லோரும் வந்தும் வன்றொண்டரும் மேற்கூறிய இருவரும் வருவதற்குத் தாமதித்தமையால் அவர்கள் வரும்வரையிற் படிக்கத் தொடங்கவேண்டாமென்று இக்கவிஞர் கோமான் சொன்னார்; அதனால் நான் படிக்கத்தொடங்கவில்லை. சிறிது நேரத்தில் அவர்கள் வந்தார்கள். வந்தவுடன் புராணப் பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அங்ஙனம் தாமதித்ததில் சுப்பிரமணிய தம்பிரானுக்கு இவர்மீது மிகுந்த கோபமுண்டாகிவிட்டது. வாசித்து முடியும்வரையில் பூமியை நோக்கிக்கொண்டே ஒருமாதிரியாக இருந்து நிறுத்தியவுடன் ஒன்றும் பேசாமல் திடீரென்று எழுந்து சென்றுவிட்டார். போனதுமுதல் இவரிடம் பேசவேயில்லை.

வழக்கப்படியே மறுநாள் அரங்கேற்று மண்டபத்திற்கு இவர் சென்றார். புத்தகத்தை எடுத்துக்கொண்டு நான் இவருடன் சென்றேன். அங்கே பலர் காத்திருந்தார்கள். தம்பிரானவர்கள் வரவில்லை. இன்ன காரணத்தால் வரவில்லையென்று தெரியாத இவர் புராணப் பிரசங்கத்தைத் தொடங்காமல் அழைத்து வருவதற்கு அவரைத் தேடிச் சென்றபொழுது அவர் கோயிலின் பின்புறத்தில் நடந்துகொண்டிருந்த திருப்பணி வேலையைக் கண்காணித்துக்கொண்டே நின்றார். அங்கே சமீபத்திற் போய் இவர் அஞ்சலி செய்து பார்த்தபொழுது ஏறிட்டுப் பாராமலும் யாதொன்றும் பேசாமலும் சரேரென்று அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்குப் போய்விட்டார். தொடர்ந்து செல்ல மனமில்லாமல் இவர் நின்றுவிட்டார்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் களள

அப்பால் இவருடைய குறிப்பறிந்து நான்மட்டும் அவரிடம் சென்று மனத்திலுள்ள கவலையை முகத்தில் நன்றுகப் புலப் படுத்திக்கொண்டு வாட்டத்தோடு அருகில் நின்றேன். நின்றதை அறிந்த அவர், "என்ன ஐயா! உங்கள் பிள்ளைக்கு மரியாதையே தெரியவில்லை? நான் வந்து காத்திருக்கையில் யாரோ சில பேர் கள் வரும்வரையிற் பொறுத்திருமென்று சொன்னீரே. அப் படிச் சொல்லலாமா? ஊரார் என்ன நினைப்பார்கள்? என்னை மதிப்பார்களா? அவர் செய்தது என் முகத்திற் கரியைத் தீற்றி யதுபோலவே இருந்தது. அவரைப் புராணம் பாடும்படி செய்து அரங்கேற்றுதற்கு வருவித்து உபசரிக்கின்றவன் நானு அவர்களா?" என்று சொல்லி மண்டபத்திற்கு வராமல் நின்று விட்டார். அதனால் சிலநாள் வரையில் புராணம் அரங்கேற்றப் படாமல் நின்றிருந்தது. அப்பால் சிலர் வேண்டுகோளால் அவர் சாந்தமடைந்து வழக்கம்போலவே வந்து படிப்பிக்கச் செய்து கேட்டு வருவாராயினர். தம்பிரானுக்குக் கோபம் ஒரு வகையாகத் தணிந்தாலும் இப்புலவர்பிரானுக்கு அவர் செய்த அவமதிப்பால் உண்டான வருத்தம் தீரவே இல்லை. அது மனத் தினுள்ளே வளர்ச்சியுற்று வந்தது.

மனவருத்தத்தோடு இயற்றிய செய்யுட்கள்

அதுவரையில் புராணத்திற் பாடப்பட்டிருந்த பகுதிகள் அரங்கேற்றப்பட்டு முடிந்துவிட்டமையால் மேலே உள்ள பகுதி கள் காலையிற் பாடி மாலையில் அரங்கேற்றப்பட்டு வந்தன. ஒரு நாட் காலை தொடங்கி இவர் பாடிவருகையில் அப்புராணத்தின் உபதேசப் படலத்தில் மாணிக்கவாசகர் குருந்தமூல குருமூர்த் தியைத் துதிக்கும் செய்யுட்களைப் பாடும் சந்தர்ப்பம் வந்தமை யின் நேரமாகியும் நிறுத்தாமல் மேலே எழுதும்படி செய்யுட் களைச் சொல்லிக்கொண்டே வந்தார். அப்பொழுது தவசிப் பிள்ளைகள் வந்து ஸ்நானம் செய்வதற்கு வற்புறுத்தி அழைத்தும் எழாமல் துதிப்பாடல்களை ஒரு தடையுமின்றி இவர் சொன்னார்; நான் எழுதிக்கொண்டே வந்தேன். அப்போது இவருக்குத் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக்கொண்டே இருந்தது. முன்னமேயிருந்த வருத்தமிகுதியே அப்பாடல்களாக வெளிப் போந்தென்று உடனிருந்தவர்கள் அறிந்து மனமுருகினர்கள். அப்பாடல்கள் வருமாறு:

(ஆசிரிய விருத்தம்)

1. "தொழுபவ ரொருபால் துதிப்பவ ரொருபால்
துதித்துளம் நெக்குநெக் குருகி
அழுபவ ரொருபால் இவரெலாம் நிற்க
அடியனேன் தனைப்பிடித் தாண்டாய்
பழுதில்நின் கருணைத் திறத்தையென் புகல்கோ
பாண்டிநா டியற்றிய தவத்தால்
கொழுமலர்ச் சோலைத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

2. "உள்ளுதோ றிழிபை யுள்ளுபு பவஞ்சத்
துழிதரூஉ வொதுங்கிய வெனக்கும்
அள்ளுதோ றன்பூ ருக்கையொன் றருளி
ஆண்டுகொண் டனையிது தகுமே
விள்ளுதோ றப்பா லாய்ப்பொலிந் தோங்கும்
விமலனே விமலமார் சிந்தை
கொள்ளுதோ றுவக்குந் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

3. "வழிவழி யடிமையு வந்திலேன் மலடு
மலர்க்கரங் கன்றிடக் கறந்து
கழிதுய ரடைந்து கிடக்கின்ற வெனையும்
கண்டுகொண் டாண்டநெத் திறமோ
மொழிதடு மாற நெஞ்சநெக் குருக
முனிவறத் தொடர்பவர் முதலே
கொழிமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

4. "ஏலவே யொருப்பட் டெற்றைக்கும் பாழுக்
கிறைத்தொரு பயனுமில் லேனைச்
சீலமார் முனிவர் திருக்குழாத் தோடும்
சேர்த்துநீ யாண்டது தகுமே
காலகா லாகங் காளவே தாள
கணம்புடை சூழ்தர நடிப்பாய்
கோலமார் செல்வத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் களகூ

5. "கனிவிள விருக்கக் காய்கவர்ந் துண்ட
கள்வனு மென்னையும் பற்றி
முனிவரு முனிவர் கூட்டத்து ளொருசார்
முனிவறக் கூடுமா றளித்தாய்
புனிதமென் கனியே புந்தியூ றமுதே
பொங்குமா னந்தவான் பெருக்கே
குனிகொடி மாடத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

6. "சுவைபடும் அவல்நீத் துமியுணக் கொள்ளும்
தொழுத்தையேன் தனைவலிந் திழுத்து
நவையிலா னந்த வமுதமூட் டினையால்
நகைவினைத் திடுமடி யேற்கும்
கவையழ லடைந்த மெழுகென வுருகக்
கற்றநற் றவருளத் துணையே
குவைமலர்ப் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

7. "திருநெடு மாலன் றெருகரு மாவாய்த்
திண்புவி பாதல மிடப்புற்
றெருவற முயன்றுங் காணரு மலர்த்தாள்
ஊத்தையேன் தலைக்கெளி தாமோ
அருமணி விளக்கே யானந்தப் பிழம்பே
அளிகனிந் தெழுசுவைக் கனியே
குருமணி மாடத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

8. "அண்டரு முனிவர் கணங்களு மற்றை
யவர்களு நறுமுறுப் படைய
வண்டரு மலர்த்தா ளென்கருந் தலைக்கு
மணிமுடி யாயதற் புதமே
பண்டரு மொழியாள் பங்கவோ மேலாம்
பரமவோ பரவியெஞ் ஞான்றும்
கொண்டலின் முழுவார் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!"

9. "என்னைநான் அறியேன் ஐயகோ பகலோ
டிரவெனப் படுவதும் அறியேன்
முன்னைநான் செய்த தவமெவ னென்னை
முழுமதோன் மத்தனுக் கினையால்

அன்னையே அப்பா ஒப்பிலா மணியே
அடியவர்க் கெய்ப்பினில் வைப்பே
கொன்னேமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!''

10. ''செம்மையொன் றில்லாச் சிறியனேன் கவலை
தீர்தர யோகநா யகியாம்
அம்மையோ டெழுந்து வந்தினி தாண்டாய்
ஆன்மநா யகவதற் கடியேன்
இம்மையே செயுங்கைம் மாறெவன் மறுமை
யேனுமொன் றில்லையென் செய்கோ
கொம்மைமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே!''

(உபதேசப்படலம், எo - எக.)

[யோகநாயகி: இத்தலத்து அம்பிகையின் திருநாமம்; ஆன்ம நாயகர்: ஸ்வாமியின் திருநாமம்.]

ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திரம்

இப் புராணத்தில் மாணிக்க வாசகர் சரித்திரமாகிய திருவாதவூரர் திருவவதாரப்படலம் முதலியன வடமொழியிலுள்ள ஸ்ரீ ஆதிகைலாஸ மாஹாத்மியம், மணிவசன மாஹாத்மியம், திருப்பெருந்துறைப் பழைய தமிழ்ப் புராணங்கள், திருவாதவூரடிகள் புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய இவற்றை ஆராய்ந்தே செய்யப்பெற்றன. அரங்கேற்றுகையில் ஒருநாள் திருவாதவூரடிகள் புராணத்தை ஆராய்ந்து வருங்காலையில் பாண்டியனுடைய தண்டற்காரர்கள் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தியபொழுது அவர் மனமுருகிச் சிவபெருமானை நினைந்து முறையிட்டனவாக அமைக்கப்பெற்ற,

(விருத்தம்)

''ஊனுடம் புடைய வாழ்க்கை யொழித்துனக் கடிமை யென்று
மானிலம் புகலு மாறு வந்துனை யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பான் மீள விடுத்தனை வேலை நீருள்
ஆனபி னந்நீ ராற்று நிரென வாவ துண்டோ''

''அறத்தனிச் செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் கஅக

செறுத்துயர் புரங்க ளெல்லாஞ் செற்றவ னடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி லென்ரு னின்புகழ்க் கேற்ற மாமோ''

''வானநா டவர்க்கு மேலோய் வந்துனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்ரு லாருனக் கடிமை யாவார்
நானெனு மனத்தார் சொல்லு நல்லுரை யன்றி நின்ற
ஈனனு மொருவன் சொல்வ தேறுமோ வுளத்தி லென்ரூர்''

(திருப்பெருந்துறைச் சருக்கம், கஙக-கூ)

என்னும் பாடல்களைப் படிக்கையிற் கேட்டுக்கேட்டு இவர் மன முருகினர்; கண்ணீர் உகுத்தார்; அதன் பொருளமைதியையும் நடையழகையும் பக்திச் சுவையையும் பாராட்டியதன்றி அந் நூலாசிரியர் அகத்திய முனிவருடைய அருள் பெற்றவரென்றும் அதனாலேதான் அந்நூற் செய்யுட்கள் அவ்வளவு சுவையுள்ளன வாக அமைந்திருக்கின்றனவென்றும் சொன்னர்.

ஆத்மநாத பாகவதர்

அந்த ஸ்தலத்தில் ஆத்மநாத பாகவதரென்று ஒருவர் இருந் தார். அவர் சிவகங்கை ஸம்ஸ்தானத்தைச் சார்ந்த பெருங்கரை யென்னும் ஊரிலிருந்த கவிகுஞ்சர பாரதியாரின் மருமகர்; ஒவ் வொரு நாளும் மாலையில் பூஜா காலத்தில் ஆத்மநாத ஸ்வாமியின் ஆலயத்தில் கீர்த்தனங்கள் முதலியவற்றைப் பாடும் பணியைப் பெற்றவர்களுள் ஒருவர்; சிவபக்தி வாய்ந்தவர்; அவர் சாரீரம் யாதொரு தடையுமின்றி மூன்று ஸ்தாயிகளிலும் செல்லும் வன்மையுடையதாதலின் அவர் வஜ்ரகண்ட பாகவதரென்றும் கூறப்படுவார். அவர் இக்கவிஞர்பிரானிடம் அடிக்கடி வந்து போவதுண்டு. அக்காலங்களில் கவி குஞ்சர பாரதியாரியற்றிய கந்தபுராணக் கீர்த்தனத்திலிருந்து சில கீர்த்தனங்களையும் வேறு கிர்த்தனங்கள் சிலவற்றையும் இவருடைய விருப்பத்தின்படி பாடிக் காட்டுவார். இவர் கேட்டு இன்புற்று அனுப்புவார். உட னிருப்பவர்களும் கேட்டு மகிழ்வதுண்டு. இங்ஙனம் அக்காலத் தில் வந்து பாடி மகிழ்வித்துச் செல்லும் சங்கீத வித்துவான்கள் அங்கே சிலர் இருந்தனர்.

சுப்பு பாரதியாருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது

ஒருநாள் சிங்கவனம் சுப்பு பாரதியார் தாம் இயற்றிய மதுரைச் சுந்தரேசர் நெஞ்சமாலை முதலிய மூன்று நூல்களை

இவரிடம் படித்துக்காட்டித் திருத்தஞ் செய்துகொண்டு அவற்றிற்குச் சிறப்புப்பாயிரங்களையும் பெற்றுச் சென்றார். அவற்றுள் நெஞ்சமாலையின் சிறப்புப்பாயிரம் மட்டும் கிடைத்தது; அது வருமாறு :

(கட்டளைக்கலித்துறை)

"ஆரதித் தன்மைய தென்றுரைப் பாரிவ் வகிலத்துளோர்
நாரதி யாய திதைப்படித் தென்பர்பன் னுவலரும்
பேரதி காரமு தல்யாவுந் தேர்சுப் பிரமணிய
பாரதி கூட லிறைநெஞ்ச மாலை பகர்ந்தனனே."

[அது இத்தன்மையது என்று உரைப்பார் ஆர். நார் அதி ஆயது. அன்பு அதிகரித்தது. பேரதிகாரம் - தொல்காப்பியம் முதலியவை.]

சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் சிறப்புப்பாயிரம்

தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரென்பவர் வந்து சிலதின மிருந்து திருப்பெருந்துறைப்புராணப் பிரசங்கத்தைக் கேட்டு இன்புற்று ஒன்பது பாடல்களைச் சிறப்புக் கவிகளாகச் செய்து சபையிற் படித்துக்காட்டிச் சென்றனர். அவற்றுள் இவரைப்பற்றிப் பாராட்டிய பாடல்களுள் ஒன்று வருமாறு :

(ஆசிரிய விருத்தம்)

"நாற்கவியாம் நாற்படையா லழுக்காற்றுக் கவிகளென
நவில்கு றும்பு
தோற்கவலங் கொண்டவர்பின் துதிக்குறுபாத் திறைகொண்டு
தொல்பார் முற்றும்
கோற்கியலும் புலமையெனு மாழியுருட் டிப்புகழ்வெண்
குடைக்கிழ்க் காத்து
மாற்குநிகர் மீனாட்சி சுந்தரனென் றுரைசெயும்பா
மன்னர் கோவே."

[நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்பன. நாற்படை - சதுரங்கசேனை. குறும்பு - குறுநில மன்னர். வலம்கொண்டு - வெற்றி கொண்டு. பா திறை - பாடல்களாகிய கப்பங்களை. கோற்கு - செங்கோலுக்கு. ஆழி - சக்கரம்; இங்கே ஆஞ்ஞாசக்கரம். புகழாகிய வெண்குடையின். பாமன்னர் கோ - கவிச்சக்கரவர்த்தி.]

எனக்கு ஜ்வரநோய் கண்டது

இப்படியிருக்கையில் எனக்கு ஜ்வரநோயும் வயிற்றில் ஜ்வரக்கட்டியும் உண்டாகி மிகவும் வருத்தின. அதனால் நான்

ஞாபகத் தளர்ச்சியுடன் படுக்கையிலேயே இருந்து விட்டேன். தக்க பரிகாரங்களை வைத்தியர்களைக்கொண்டு இவர் செய்வித்து வந்தும் ஜ்வரநோய் சிறிதும் தணியவில்லை. அதனால் புராணத்தை ஏட்டிலெழுதும் பணியைக் கும்பகோணம் பெரியண்ணம் பிள்ளை யென்பவரும், அரங்கேற்றும் காலத்துப் படிக்கும் பணியைச் சவேரிநாத பிள்ளையும் ஏற்றுக் கொண்டார்கள்.

புராணம் அரங்கேற்றும் காலமல்லாத மற்றக் காலங்களில் இக்கவிநாயகர் என்பக்கத்திலே இருந்து என்னைக் கவனித்துக் கொண்டும் மேலே அரங்கேற்றுவதற்குரிய பாடல்களைப் பாடி எழுதச்செய்தும் வந்தார்.

ஒருநாள் அரங்கேற்றுதல் ஆனவுடன் பிற்பகலில் என்பால் வந்த இவர் என்பக்கத்திலிருந்து மயக்கம் நீங்கி நான் விழித்துக் கொண்டபொழுது என்னை நோக்கி, "புராணப் பிரசங்கத்தைப் பற்றி மஹாஸந்நிதானத்தினிடமிருந்து (சுப்பிரமணிய தேசிகரிட மிருந்து) கட்டளைச் சாமிக்கு இன்று திருமுகம் எழுந்தருளியிருக்கிறது. அதில், 'புராணப் பாடல்கள் தமக்குத் திருப்தியை உண்டுபண்ணுவதன்றி அச்செய்யுட்களைச் சாமிநாதையர் படித்தல் தமக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடுமே' என்று கட்டளை யிட்டிருக்கிறது. உமக்கு உடம்பு இப்படியிருக்கிறதே!" என்று வருத்தம் அடைந்து சொன்னார்.

நான் ஊர் சென்றது

புராணப்பிரசங்கம் சிறப்பாக நடைபெற்று வந்தது. 'தினந் தோறும் இப்புலவர்கோமானுடைய பிரசங்கத்தைக் கேட்க முடிய வில்லையே!' என்ற வருத்தம் என் மனத்தில் வளர்ந்து வந்தது. எனக்கு இருந்த ஜ்வரம் தணியவில்லை. வருபவர்களோடு பேசிக் கொண்டிருப்பதிலும் அரங்கேற்றத்திற்கு வேண்டியவற்றைக் கவனிப்பதிலும் இவருக்கு நேரம்போயினமையின் என்னை நன் முகக் கவனித்துக்கொள்ள முடியவில்லையென்ற வருத்தம் இவருக் கும் இருந்துவந்தது. பலவகை வேலைகளுக்கு இடையில் என்னைப் பற்றிய கவலையையும் இவர் மேற்கொண்டதை அறிந்து நான், "உத்தமதானபுரத்திற்குப்போய்ப் பரிகாரம் செய்துகொண்டு சௌக்கியம் உண்டான பின்பு வருவேன்" என்று கூறி விடை பெற்றுக்கொண்டேன். இவருக்கு என்னைப் பிரிவதில் வருத்தம் உண்டாயிற்று. நானும் வருந்தினேன். வெண்பாப்புலி வேலுச்

சாமி பிள்ளை எனக்குத் துணையாகச் சேர்த்து வேண்டிய சௌகரியம் செய்வித்து என்னை இவர் அனுப்பினர். நான் உத்தமதானபுரம் சென்றேன்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

இக் கவி சிகாமணியின் பக்கத்தில் இருந்து நாள்தோறும் புராணப் பிரசங்கங் கேட்டு வந்த வன்றொண்டச் செட்டியார் மாணிக்கவாசகர் சரித்திரத்தை இவர் அருமையாகச் செய்திருப் பதை அறிந்து ஒருநாள் இவரிடம், "திருத்தொண்டர்களுடைய பெருமைகளை நன்றாக யாவரும் அறியும்படி பெரியபுராணத்தின் வாயிலாகப் புலப்படுத்தியருளிய சேக்கிழார் திறத்தில் பிள்ளைத் தமிழொன்று ஐயா அவர்கள் செய்தருளவேண்டும்" என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டனர். அப்போது, 'பெரிய புராணத்திற்கு வன்றொண்டர் வாய்மொழியாகிய திருத்தொண் டத்தொகை காரணமாக இருந்தது; அப்புராணத்தை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழுக்கு வன்றொண்டச் செட்டியாரது வாய்மொழியே காரணமாயிற்று. இது நல்ல அறிகுறி' என்று இவர் எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். அவர் கேட்டுக்கொண்ட வாறே சேக்கிழார் பிள்ளைத்தமிழைச் செய்யத்தொடங்கி மிக ஆராய்ந்து சில தினங்களிற் பாடி முடித்தனர்.

பெரிய புராணத்திலுள்ள பலவகை நயங்களையும் அறிந்து பலவருஷம் அனுபவித்து இன்புற்றும் இன்புறுவித்தும் வந்த வராதலின் இக்கவிஞர்பிரானுக்குச் சேக்கிழார்பாற் சிறந்த பக்தி இருந்ததென்பதை யாவரும் அறிவார். இயல்பாகவே நாயன்மார் களுடைய வரலாற்றைப் பலவகையில் எடுத்தாண்டு தம்முடைய நூற்பகுதிகளை அழகுபடுத்தும் இயல்புடைய இவருக்கு அந் நாயன்மார் சரிதையை விரிவுற வெளியிட்ட சேக்கிழார்பால் அத்தகைய அன்பு மிக்கிருத்தல் தக்கதன்றே?

சேக்கிழாருடைய குலம், குணம், அதிகாரம், கல்வி, பக்தி, ஞானம் முதலியவற்றின் பெருமைகளைப் பல படியாக அப் பிள்ளைத் தமிழில் இக்கவிஞர் கோமான் செவ்வனே பாராட்டி யிருக்கிறார்.

"மண்டலீக வேலைப் புவியிற் பத்திசெய் மார்க்க மறிந்தவரார்
வண்சுவை யமுத வொழுக்கென வார்த்தை வழங்கத் தெரிகுநரார்
கொண்டலீக நேர்பக டேர்தரு கூற்றங் குதித்துய்ந் திடவலர்யார்
கொற்றக் கைலைக் கணநா தர்களொடு கூடுபு மகிழ்பவரார்

விண்டலே யாரும் பெறலரு மின்பம் விராவுந் திறலினரார்
விமலா நீயவ தாரஞ் செய்யா விடின்'' (தாலப். கo)

[வார்த்தை - சைவ ப்ரிபாஷை]

என்பதனுல் சேக்கிழாரை எத்தன்கையவராக இவர் கருதியிருந்தா ரென்பதை அறிந்து கொள்ளலாம். பெரியபுராணம் பக்தியை மிகுவிக்குமென்பது இவர் அனுபவத்தால் அறிந்த உண்மையாத லின் அதனேயே பலவிடத்தும் பாராட்டுவார்:

''என்றும் பத்தி ரசங்கனி கனியே'' (செங்கீரைப். எ)

''பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ''
(தாலப். அ)

''புலஞ்சார் பத்தி விளேநிலமே'' (முத்தப். ரு)

''ஒழியாப் பத்திக் கடல்வருக.'' (வாராவனப். கo.)

பெரிய புராணப் பாயிரத்தில், ''எடுக்கு மாக்கதை'' என் னும் திருவிருத்தத்தின்கண், 'தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக், கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்' என்னும் பகுதியிலுள்ள 'நீண்முடி' என்ற குறிப்பினுல் அக்காப்பு ஸ்ரீவிநா யகமூர்த்தியின் விசுவரூபத்திருக்கோலத்தைத் தியானித்துச் சேக் கிழார் பாடியிருத்தல்வேண்டுமென்று இவர் கொண்டனர்; பெரிய புராணம் 'மாக்கதை' ஆதலின் அதற்கேற்ப விநாயகமூர்த்தியின் விசுவரூபத்தைத் தியானித்தாரென்று பொருத்தங்காட்டி இவர் பொருள் கூறுவதுண்டு. அக்குறிப்பை நினைந்து அப் பிள்ளேத் தமிழ்க் காப்புச்செய்யுளில் விநாயகக்கடவுள் வணக்கத்தில் அவ ரது விசுவரூபத்தையே எடுத்துப் பாராட்டியுள்ளார். அன்றியும் *''உலகெலாம்'' என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குப் பொருள் கொள்ளவேண்டிய முறையையும் அக் காப்பிற் புலப் படுத்தியிருக்கிறார்.

காப்புப்பருவத்தில் ஏனைய பிள்ளேத்தமிழ்களில் துதிக்கப் பெறும் திருமால் முதலிய தெய்வங்களே இவர் கூறவில்லே. விரி யாகிய பெரிய புராணத்திற்கு அதன் தொகையாகிய திருத் தொண்டத் தொகையிலுள்ள பதினெரு திருப்பாசுரங்களுள் ஒவ் வொன்றிற் கூறப்பட்ட நாயன்மார்களே ஒவ்வொரு செய்யுளால் துதித்துள்ளார். இவ்வாறு காப்புப்பருவத்தில் அமைக்கும்

* இப்புத்தகம் ககசு - ஆம் பக்கம் பார்க்க.

* புதுமுறை அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழில் இவரால் முதலில் மேற்கொள்ளப்பட்டது. காப்புப் பருவச் செய்யுளின் தொகைக்கு ஏற்ப அம்முறை இந்த இரண்டு நூல்களிலும் பொருத்தமாக அமைந்த வாய்ப்பைத் தியாகராச செட்டியார் அடிக்கடி பாராட்டுவதுண்டு.

'பெரிய புராணத்திற் பலவகைச் சொல்லணி, பொருளணி, பொருள்கோள்கள் அமைந்தும், பலவகை அழகுகள் நிரம்பியும், முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முதலியவை காப்பிய இலக்கணப்படி பாடப்பட்டுமுள்ளன. தமிழ் நடை செவ்விதாக அமைந்துள்ளது. தேவாரத்திலுள்ள பலவகை மந்தணப்பொருள்கள் அங்கங்கே வெளிப்படுத்தப்பட்டும் தொண்டர்கள் அருமை பெருமைகள், அவரவர்கிலை, சாதி, குணம், மார்க்கம் முதலியவை விளக்கப்பட்டும் இருக்கின்றன' என்ற செய்திகளை அங்கங்கே அப்பிள்ளைத் தமிழில் இவர் புலப்படுத்தியிருக்கின்றார் :

"செய்யமல ராதன மிருந்துபல சாதியும்
சேரப் படைத்ததேவும்
செப்பரிய வாயவவ் வச்சாதி குறிகுணம்
செய்கைகுடி கொளுமிலியல்பு
வெய்யமொழி யுணவுமுன் விரித்தெலா மறியவலர்
மெய்யறிஞ ரெனல்விளக்கி
மேம்பட்ட வேளாண் குலக்கதி ரெனுங்குன்றை
விமலனைக் காக்கவென்றே." (காப்புப். எ.)

"ஒப்பரிய தொண்டர்த மருமையும் பெருமையும்
உவக்குமவ ரவர்செய்கையும்
உவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமும்
உம்பர்கோ னருள்தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையு மடையும்
தவாப்பொரு ளணிச்சிறப்பும்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க." (செங்கீரைப். ஈ.)

"……..பொருளணி யாயின எவ்விட னும்வீற்று
வீற்றுக் கிடையிறை பட்டன வமைய விளம்பு வனப்பிலெடு

---

* முதற்பாகம், உசை-ஆம்பக்கம் பார்க்க.

४. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் கஅள

மேய முதற்பொரு ளாகிய மூன்றும் வேண்டுமிடத் தெய்த
ஆற்றுப் புனல்நா மப்பொருள் கோண்முத லறைமற் றுள்ளனவும்
அமையத் தொண்டர் புராணம் நவின்றவ." (தாலப். கூ.)

பின்னும் பெரியபுராணத்தில்,

" காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர் "

" மண்ணீர்மை நலஞ்சிறந்த வளவயல்க ளுளவயல்கள் "

" எய்தும் பெருமை யெண்டிசையும்
ஏறூ ரேமப் பேறூரால் "

" மன்னனு ரருளிச் செய்த
மறைத்திரு வாக்கூ ராக்கூர் "

என வரும் பகுதிகளை நினைந்து,

" ஈற்றுத் தலையொரு மவுவி புனைந்தா லென்னச் சொல்லணியொன்
றெய்திப் பொலிய " (தாலப். கூ)

என்பர்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் ஐந்திணைகளின் வளத்தைக் கூறுதலுடன் அவ்வத்திணையிலுள்ள சிவதலங்களைச் சொல்லியிருக்கும் முறை முதன்முதலாகப் பெரிய புராணத்திலேதான் காணப்படுகிறது. அதனை இவர் அறிந்தவராதலின் தாம் இயற்றிய புராணங்கள் பலவற்றில் அதனை மேற்கொண்டனர். அம்முறையை அறிவித்தது சேக்கிழார் திருவாக்கே என்பதை,

" படியிடை யொருபை திரவரு ணனைபுரி
பாவல ரைந்திணையும்
பகுத்தொரு மூப்பொரு ளோடும் விரித்துப்
பயனு கத்தெய்வம்
கடிதலில் சினகர மூள்ளன வோதக்
கற்பித்தவ "

(சப்பாணிப். அ)

[பைதிரம் - நாடு]

என்று புலப்படுத்தியிருக்கிறார். பின்னும்,

" சொல்லும் பொருளு நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய

*தோட்டி யமைய வமங்கலமாம்
சொற்கள் புணரா தறக்கவளந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதிதழுவி" (முத்தப். உ)

என்று பாராட்டுவார். 'அமங்கலமாம் சொற்கள் புணராது அறக்களைந்து' என்றது, மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரை வாளால் வீழ்த்தினனென்பதை வெளிப்படையாகக் கூறாமல்,

"பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தவப் பரிசே செய்ய"

என்று பாடியிருத்தலையும், ஏனாதிநாத நாயனார் புராணத்தில் அதிசூரனென்பவன் ஏனாதிநாத நாயனாரை வாளாலெறிந்ததை அங்ஙனமே,

"முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்"

என்று கூறியிருத்தலையும், இவைபோன்ற பிறவற்றையும் நினைந்தே யாகும்.

சேக்கிழாரைப்பற்றிக் கூறும் இடங்களில்,

"மூவரும் புகலும் வேதத் தமிழ்க்கணுள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர்
வேந்து" (காப்புப். உ)

"அருண்மூவ ரருண்மறைப் பொருள்தெரிய மூன்னெருவர்
அருண்மறைப் பொருள்விளக்கும்
நம்பரு வித்தியா ரணியமுனி வரனுளம்
நயப்பயாப் புறவிரித்த
நாவலர் பிரான்" (காப்புப். டு)

"அவையகம் வியக்குமுப் புலவரருண் முக்கனி
அருந்தமிழ்ச் சுவையனைத்தும்
ஆராய்ந் தெடுத்துப்பல் செய்யுண்முக மாவறிய
அறிவித்த பெருநாவலன்" (சிறுதேர்ப். உ)

எனத் தேவாரத்தின் பொருள்களை அவர் புலப்படுத்தியிருப்பதையும்,

---

* தோட்டி - அழகு.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் கஅக

"தமிழ்நா வலரேறே" (செங்கீரைப். எ)

"வலஞ்சார் பெருநா வலரேறே" (முத்தப். டு)

என அவரது நாவன்மையையும்,

"சகலா கமபண் டிததெய்வச் சைவா" (தாலப். உ)

"சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்" (தாலப். சு)

"உலவா தமைந்த சிவபோகம்
கொள்ளுஞ் சைவப் பயிர்வளர்க்கும்
கொண்டல் வருக வருகவே" (வாராவனப். க0)

"வயங்குஞ் சைவப் பெருவாழ்வே" (சிற்றிற். க0)

என அவர் சைவசமயத்திற்குச் செய்த பேருதவியையும்,

"நெஞ்சம், கனியக் கனியக் கண்ணீர் வாரக்
கவிபா டியவிறைவ" (சப்பாணிப். எ)

"கல்லுங் கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தந் தருகவே" (முத்தப். உ)

என அவருடைய செய்யுட்கள் மனத்தை உருக்கும் தன்மையை உடையன வென்பதையும்,

"அறுபதின்மர் மேலு மூவர் சரித்திரமாம்
கருப்பஞ் சாறு பொழிமதுரக் கனிவாய்" (முத்தப். க)

"பிதிருந் தரமற வின்பா லளவிப்
பிழிசுவை மதுவிரவிப்
பிறங்கிய புல்ல கண்டநி றீஇச்சுவை
பெறுகண் டுங்கூட்டி
எதிரும் பொருளில் பலாக்கனி மாங்கனி
இவைவா ழைக்கனிமுன்
இயையு முழுக்கனி முந்திரி கைக்கனி
இவ்விர தமுநாட்டி
அதிருங் கடலமிர் தமுமு ளுறுத்தி
அவாங்குழல் வீணையிசை
அத்தனை யும்புக வைத்துச் சிவமணம்
அகலா தேகமழ
முதிரு மருட்கவி பாடிய புலவன்" (சிறுபறைப். சு)

என அவருடைய பாடல்களின் இனிமையையும்,

"அத்தி தருங்கவி யென்மரு நன்ரு வறைகுதி ரம்மட்டோ
அவாவிய புத்தி தருங்கவி யென்மரு மதுமட் டோவின்னும்
சித்தி தருங்கவி யென்மரு மெல்லாத் தீர்த்தங் களுமுறுமா
செய்யாச் சுத்தி தருங்கவி யென்மருஞ் செப்பிய வம்மட்டோ
பத்தி தருங்கவி யென்மரு மாகிப் பாரிற் புலவரெல்லாம்
பல்லா ரோதுபு பாராட் டக்கதி பற்றிய பல்லோர்க்கு
முத்தி தருங்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே"

(சிறுபறைப். ஏ)

என அவற்றின் விசேடத்தையும் எடுத்துப் பாராட்டியுள்ளார்.

அவருடைய பலவகை ஆற்றல்களைப் பாராட்டும் பின்வரும் செய்யுள் அறிந்து இன்புறற்குரியது :

"நாடிய விரிநூல் சொற்றிடு திறனுல்
நன்னூ லாசிரியன்
நகுபா சுரமுத லுரைசெய் தலினுல்
நவிலுரை யாசிரியன்
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்னிவை
நிகழ்தொறு நிகழ்தோறும்
ஆடிய ஞானத் திறனுற லான்ஞா
ஞசிரி யனுமீயென்
ருன்ரோர் பலரும் புகழப் படுபவ."

(சப்பாணிப். கூ)

* சேக்கிழார் பிள்ளைத்தமிழை இவர்பால் வருடம் வித்துவான்களும் பிறரும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்து பாராட்டி வந்தனர். இவரே அதனை மீண்டும் மீண்டும் படிப்பித்துக் கேட்டு இன்புறுவதும் உண்டு. இவர் இயற்றிய பிள்ளைத்தமிழ்களுள் இறுதியிற் செய்தது அதுதான். தேவாரம் பெரியபுராணம் முதலிய நூல்களில் ஈடுபட்டுள்ள வித்துவான்கள் அந்தப் பிள்ளைத்தமிழில் ஈடுபடாமல் இரார்.

---

* இந்நூல் பிற்காலத்தில் இவருடைய மாணாக்கராகிய ஆறுமுகத் தம்பிரானவர்களால் சிறப்புப்பாயிரத்தோடு தனியே பதிப்பிக்கப்பெற்றது; மீ. பிரபந்தத்திரட்டு, 722-824.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ககக

அப்புசாமிப் புலவருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது

திருப்பெருந்துறையைச் சார்ந்த ஏம்பலென்னும் ஊரிலுள்ள அப்புசாமிப் புலவரென்னும் பரம்பரைக் கல்விமான் ஒருவர் தம்முடைய குமாரரான அருணாசலப் புலவரென்பவரை அழைத்துக்கொண்டுவந்து இவரிடம்விட்டு, "சில வருடம் இவனை உடன் வைத்துப் படிப்பித்து அனுப்பவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்; அவ்வாறே அவருக்கு இவர் பாடஞ் சொல்லிவந்தார்; அப்பால் அப்புசாமிப்புலவர் ஏம்பலிலுள்ள முத்தையனென்னும் ஐயனார்மீது தாம் பாடியிருந்த பிள்ளைத் தமிழொன்றைப் படித்துக்காட்டிச் செப்பஞ் செய்துகொண்டதன்றி இவருடைய சிறப்புப் பாயிரமொன்றையும் பெற்றுச் சென்றார். அச்சிறப்புப் பாயிரம் வருமாறு:—

(விருத்தம்)

"குவளையரு கதன்முதலல் லவைகூடப் பிறையெனவுட்
கொண்டு நாணித்
தவளைகுதித் திடுதடஞ்சா ரேம்பல்நகர் முத்தையன்
நன்ருட் கேயன்
புவளைதரும் படிபிள்ளைத் தமிழ்சொற்ரு னியற்சொல்லும்
பொருளும் வாய்ப்பத்
திவளையிலக் கணமுந்தே ரப்புச்சா மிப்புலவன்
திறன்மிக் கோனே."

[குவளையருகு - குவளைமலரின் பக்கத்தே. குவளையென்னுஞ்சொல்லின் முதலெழுத்தல்லாத எழுத்துக்கள்: வளை; வளை - சங்கு. அன்பு வளை தரும். திவள் ஐயிலக்கணம் - விளங்குகின்ற பஞ்சலட்சணம்.]

சிங்காரவேலுடையார்

திருப்பெருந்துறைக்கு அருகிலுள்ள தம்முடைய கிராமமொன்றைப் பார்க்கவந்த * தண்ணீர்க்குன்றம் சிங்காரவேலுடையாரென்னும் பிரபு ஒருவர் இவர் திருப்பெருந்துறையில் இருப்பதை அறிந்து சில அன்பர்களுடன் வந்தார். ஒரு தினம் இருந்து புராணப்பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டியதோடு, "இந்தப் புராணத்தை முடித்துவிட்டுத் திருவாவடுதுறைக்குச் செல்லும்பொழுது தண்ணீர்க்குன்றத்திற்கு வந்து சிலதினம்

---

* இது மன்னார்குடி தாலுகாவிலுள்ளதோர் ஊர்.

இருக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்; அன்றியும் தம்முடைய ஊருக்கு அருகிலுள்ள திருவெண்டுறையென்னும் ஸ்தலத்துக்கு ஒரு பிரபந்தமாவது புராணமாவது செய்து சிறப்பிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டு சென்றார்.

அரங்கேற்றத்தின் பூர்த்தி

அப்பால் ஒரு நல்லதினத்தில் திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றத்தின் பூர்த்திவிழா சிறப்பாக நடைபெற்றது. அதற்காக அழைக்கப்பட்டுப் பட்டுக்கோட்டைத் தாலூகாவிலுள்ள பாலவனம், நகரம் முதலிய சில ஜமீன்களிலிருந்து பிரதிநிதிகளும் உத்தியோகஸ்தர்களும், புதுக்கோட்டையிலிருந்து பல உத்தியோகஸ்தர்களும், நாட்டுக்கோட்டைத் தனவைசியப்பிரபுக்களிற் பலரும், வேறு சிலரும் வந்து சிறப்பித்தார்கள். அப்புராணம் ஒரு சிவிகையில் வைத்து ஊர்வலம் செய்விக்கப்பெற்றது. அச்சிறப்பு ஓர் அரசருடைய விவாக ஊர்வலம் போலவே நடைபெற்றது. அப்போது சுப்பிரமணிய தம்பிரான் முதலில் வாக்களித்திருந்தபடியே ரூபாய் இரண்டாயிரம் இவருக்கு ஸம்மானம் செய்ததன்றி உடன் இருந்த மாணாக்கர்களுள் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தகுதிக்குத் தக்கபடி மரியாதை செய்தார். அத் தொகைகள் அவருடைய சொந்தச் சம்பளத்திலிருந்து மிகுத்து வைக்கப்பெற்றவை.

அந்த விசேஷத்திற்கு வந்திருந்த கனவான்கள் ஊருக்குச் செல்லுகையில் இக்கவிச்செல்வரைக் கண்டு, திருவாவடுதுறைக்குப் போகும்பொழுது தத்தம் இடங்களுக்கு வந்து சில தினங்கள் இருந்து சிறப்பித்துச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் இருந்த ஜமீன்தார்களும் பிரபுக்களிற் பெரும்பான்மையோரும் கல்விமான்களோடு பழகுதலையும் அவர்களை ஆதரித்தலையும் தங்களுடைய கடமையாகக் கருதி வந்தார்கள். வித்துவான்களோடு சம்பாஷித்தலே அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. ஒவ்வொருவரிடத்திலும் வடமொழியிலும் தமிழிலும் ஸங்கீதத்திலும் வல்ல ஒவ்வொருவர் இருந்தே வருவார். அவரவருடைய வருவாயில் வேறு செலவுகள் அக்காலத்தில் அதிகமாக இல்லாமையால் வித்துவான்களை ஆதரிப்பதில் விஞ்சவேண்டு

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ககூக

மென்று ஒருவரைவிட ஒருவர் ஊக்கங் காட்டியும் வந்தனர். ஆதலால், பிள்ளையவர்கள் தங்கள் ஊருக்கு வந்து போதலே அவர்கள் பெரிய பாக்கியமாகவே கருதினர்கள்.

திருப்பெருந்துறைப் புராண அமைப்பு

திருப்பெருந்துறைப் புராணத்தில் முதலில் உள செய்யுட்களடங்கிய கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் திருநாட்டுப் படலம் முதலிய கூஉ படல உறுப்புக்களும் அமைந்துள்ளன. இதிலுள்ள செய்யுட்களின் தொகை ககூடுகூ.

உருவம், அருவம், அருவுருவமென்னும் மூவகைத் திருமேனிகளுள்ளே சிவபெருமான், அம்பிகையும் தாமும் அருவத் திருமேனிகொண்டு எழுந்தருளி விளங்கும் இடம் இத்தத் திருப்பதியே. இதனை இப்புராணத்திற் பல இடங்களிற் புலப்படுத்தியிருக்கிறார்; அவற்றுள் ஒன்று வருமாறு:

(விருத்தம்)

"தூயநா மத்தருவ முருவமெவை யெனினுமொரு
தோன்றல் போன்றே
பாயநா னிலவரைப்பின் கணுமமர்வா ளெனல்தெரித்த
படியே போல
ஆயநா தங்கடந்த வான்மநா தக்கடவுள்
அமர்தற் கேற்ப
மேயநா யகிசிவயோ காம்பிகைதன் விரைமலர்த்தாள்
மேவி வாழ்வாம்." (கடவுள் வாழ்த்து, கு.)

பிரமதேவர், திருமால், காலாக்கினியுருத்திரர், மாணிக்கவாசகர், சோழராசன், அதர்மன், இலக்குமி, ஒரு வேடன் என்பவர்கள் செய்தனவாக இந்நூலில் உள்ள துதிச் செய்யுட்கள் மனத்தை உருக்கி அன்பை மிகுவிக்கும்.

இப் புராணத்திலுள்ள அருமையான செய்யுட்களிற் சில வருமாறு:—

[சபாநாயகர் துதி]

(விருத்தம்)

"அரைப்புலித்தோல் மயிருகுப்பக் காற்புலித்தோல் மயிர்முகிழ்ப்ப
அணிபல் பாம்பும்
வரைப்பகன்று குலையவொரு பாம்புநிலை நின்றுநனி
மகிழ மேக்குத்

திரைப்பயமா தலைஇக்கவலக் கிழக்கிளங்கன் னிகையின்பந்
திளைப்ப நீர்சூழ்
தரைப்பயஞ மணிமன்றுள் நடநவிலு மொருமுதலைச்
சரணஞ் சார்வாம்."

[இச்செய்யுள் விரோதவணி. அரைப்புலித்தோல்: அரை - இடை. காற்புலி - காலாற்புலியாகிய வியாக்கிரபாத முனிவருடைய; இவற்றில் அரை, காலென்னும் பின்ன எண்களின் பெயர்கள் தொனிக்கின்றன. வரைப்பு - எல்லை. ஒரு பாம்பு - பதஞ்சலி முனிவர். மேக்கு திரை பயம் மாது - திருமுடிமேலுள்ள அலைபபுடைய நீராகிய கங்கை; மேக்கு - மேல்; இதில் திரையையும் அச்சத்தையும் உடைய முதியவளென்னும் வேரொரு பொருள் தோற்றுகின்றது. அலைஇ - அலைந்து. கிழக்கு - கீழ். இளங்கன்னி - சிவகாமியம்மை.]

[குமாரக்கடவுள் துதி]

"புரமுதல்வென் றுறுபுகழ்மாத் திரங்கொண்ட தந்தையினும்
பொருமோர் யானை
உரனறவென் றதலைடுமூர் தியுங்கொண்டு மிகுசிறப்பை
உறுமுன் னேனும்
பரவுறச்சூர் தடிந்தவற்றே டோங்குகே தனமொருகை
பற்றப் பெற்ற
விரவுமல ருந்துறையும் பெருந்துறைக் குமாரனடி
மேவி வாழ்வாம்."

[ஓர் யானை - கயமுகாசுரன். அதலைடு - புகழோடு. முன்னேன் - விநாயகக் கடவுள். அவற்றோடு - புகழோடும் வாகனத்தோடும். திரிபுரம் முதலியவற்றை வென்ற சிவபெருமான் புகழைமட்டும் அடைந்தனர்; கய முகாசுரனை வென்ற விநாயகக் கடவுள் அதலைடு ஊர்தியையும் பெற்றனர்; சூரபன்மனை வென்ற முருகக் கடவுள் அவ்விரண்டலைடு கொடியையும் பெற்றனரென்பன இங்கே அறியற்பாலன.]

[அவையடக்கம்]

"வென்றசீ ரான்ம நாதர் எனும்பெயர் விழைந்தார் ஞான
நன்றிலா வெனைவி லக்கார் நாவலூ ரருக்கு வெண்ணெய்
அன்றருள் செய்தா ரென்றும் அருச்சனை பாட்டே யென்றூர்
ஒன்றநின் பாட்டே யென்னூர் உறுதியென் னிதன்மேல் வேண்டும்."

[ஞானன்மநாத ரென்றன்றிப் பொதுப்பட ஆன்மநாத ரென்னுங் திரு நாமத்தைக் கொண்டிருத்தலின் ஞானமில்லாத ஆன்மாவாகிய என்னையும் ஆட்கொண்டருளுவா ரென்றபடி. நாவலூரர் - சுந்தரமூர்த்தி நாயனூர்.

8. திருப்பெருந்துறைப் புராண அரங்கேற்றம் ககூடு

வெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர். அன்று - அடிமை யோலையைக் காட்டி ஆட்கொண்ட காலத்தில். 'அருச்சனை பாட்டே' என்றதை, "மற்று நீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம், பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அற்சனை பாட்டே யாகு மாதலின் மண்மேல் நம்மைச், சொற்றமிழ் பாடு கென்றூர் தூமறை பாடும் வாயார்" (பெரிய. தடுத்தாட். எ0) என்பதனால் உணரலாகும்.]

[திருவாதவூர்ப் பெருமை]

(கொச்சகக் கலிப்பா)

"வாதவூர் மறையொழுக்க மல்லான்மற் றொன்றுமரு
வாத்வூ ரடைந்தாரை மலக்குரம்பை யகத்தினிரு
வாதவூர் சிவானந்த வாரியிடை யழுத்தலொரு
வாதவூ ரெனப்புகலும் வார்த்தைவா னிடத்துமுள."

(திருவாதவூரர் திருவவதாரப். கக.)

[இருவாத - இருத்தாத. ஒருவாத - நீங்காத.]

படலந்தோறும் முதற்கண் உள்ள திருவாதவூரடிகளின் துதிகளுள்ளே சில வருமாறு :—

(விருத்தம்)

"நண்ணிய மூகை பேச நல்லருள் நாட்டம் வைத்த
புண்ணிய வாத வூரர் பொன்னடி சென்னி சேர்த்தாம்
எண்ணிய விப்பு ராண மொன்றுகொ லெல்லாம் பாடத்
தண்ணிய வாக்கு முன்னு யாவையுந் தருவ ரன்றே."

(புராண வரலாறு, க.)

"சிரடி யாள்செய் நிந்தையில் வெந்தை
திருத்தக நாடொறு மூண்டார்
பாரடி யுள்ளாக் கியநெடு மால்கொள்
பாகமுள் ளார்க்குமீ னவனல்
ஓரடி கொடுப்பித் தார்நெடு மால்கொள்
பாகமில் லேற்கொரு தாமே
ஈரடி கொடுத்தார் ஞாயிறெங் கெழினும்
எவனென இருப்பன்யா னினியே."

(பிரமனுபதேசப். க.)

[வெந்தை - பிட்டு. நெடுமால்கொள் பாகம் உள்ளார் - திருமாலை யுடைய திருமேனிப் பாகத்தையுடைய சிவபெருமான். நெடுமால்கொள்

பாகமில்லேன் - மிக்க மயக்கத்தைக் கொண்டவனும் பரிபக்குவமில்லேனு மாகிய அடியேன்.]

திருவாதவூரடிகளுடைய வரலாற்றைக் கூறும் பகுதிகள் பெரியபுராணத்தைப் போன்ற அமைதியையும் அழகையும் உடையனவாக விளங்கும். நைமிசமுனிவர் பெருந்துறை யடைந்து பூசித்த படலத்தில், திருப்பெருந்துறையைச் தரிசித்தற்கு வரும் பொழுது சூதமுனிவர் சவுனகாதியருக்கு இடையிலுள்ள தலங்களைக் காட்டுவதாக உள்ள பகுதியில் அறுபத்துமூன்று தலங்கள் வெளிப்படையாகக் கூறுமல் பலவகைக் குறிப்புக்களால் கூறப்பட்டுள்ளன ; அவற்றுல் அத்தலங்களின் வரலாறுகளுள் அரியனவாகிய சில செய்திகள் புலப்படும்.

---

9. பல ஊர்ப்பிரயாணம்

திருப்பெருந்துறையினின்றும் புறப்பட்டது

பின்பு இக்கவிஞர் பெருமான் திருப்பெருந்துறையினின்றும் புறப்பட எண்ணிச் சுப்பிரமணிய தம்பிரானிடம் பிரியாவிடைபெற்றுக்கொண்டார். இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிதற்கு மனமில்லாதவராகி வருந்தினர்கள். பின்பு ஒருவாறு ஆறுதல் கூறி விடைபெற்று இவர் புறப்பட்டார்.

குன்றக்குடி சென்றது

அப்பொழுது இவரை அழைத்துவரவேண்டுமென்று குன்றக்குடியிலுள்ள திருவண்ணுமலை ஆதீனத் தலைவரான ஸ்ரீ ஆறுமுக தேசிகர் அனுப்ப, அவ்வாதீனத்தில் முதற் குமாஸ்தாவாக இருந்தவரும் சிறந்த தமிழ்க் கல்விமானும் அருங்கலை விநோதருமாகிய அப்பாப்பிள்ளை யென்பவர் வந்து அழைத்தார். அவருடன் புறப்பட்ட இவர் இடையிலேயுள்ள அன்பர்களின் வேண்டுகோளின்படி அவ்வவ்விடங்களுக்குச் சென்றுவிட்டுக் குன்றக்குடி சென்றார். அங்கே ஆதீனத் தலைவர் இவரை வரவேற்று உபசரித்துச் சிலதினங்கள் இருக்கும்படி செய்து தக்க ஸம்மானங்கள் வழங்கிப் பின்பு பல்லக்கு வைத்து அனுப்பினர்.

அக்காலத்தில் அவர்மீது இவர் இயற்றிய இல பாடல்கள் உண்டு. அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

குருபூசை மான்மியம்

அப்பால் இவர் வன்றொண்டச் செட்டியார், சத்திரம் அருணசல செட்டியார், வெளிமுத்தி வைரவ ஐயா என்பவர்களால் அழைக்கப்பட்டுத் தேவகோட்டைக்குச் சென்று சிலநாள் இருந்து அங்கேயுள்ள கனவான்களால் உபசரிக்கப்பெற்றார். பிறகு காரைக்குடி சென்று அங்கே அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் தங்கினர் அங்கே சிலதினம் இருந்தபொழுது குருபூசையின் பெருமையைப் புலப்படுத்திச் சில செய்யுட்கள் இயற்றித் தரவேண்டுமென்று அங்கேயிருந்த மெ. பெரி. ராம. மெய்யப்ப செட்டியா ரென்பவர் கேட்டுக்கொள்ளவே, குருபூசை மான்மியமென்ற ஒரு நூல் விரைவில் இயற்றி இவரால் அளிக்கப் பெற்றது. அது பதினேந்து செய்யுட்களை யுடையது; அச்சிடப் பெற்று வழங்குகின்றது. மெய்யப்ப செட்டியார் கேட்டுக் கொண்டதையும் உடனே விரைவில் யாதொரு தடையுமின்றி இவர் இயற்றியளித்ததையும் உடனிருந்து பார்த்தவராகிய காரைக்குடி சொக்கலிங்கையா அடிக்கடி சொல்லிப் பாராட்டிக் கொண்டேயிருப்பார். அம் மான்மியத்திலுள்ள மூக்கியமான செய்யுட்கள் வருமாறு :—

(விருத்தம்)

" கருதுமொரு மலமூமிரு வினையுமும்மா யையுமகலக்
கழற்றி நாளும்
ஒருவரிய சிவபோகச் செழுந்தேறல் வாய்மடுப்பான்
உள்ளங் கொண்டாம்
பருமணிமா ளிகைக்காரைக் குடிவயங்கப் பொலியுமறு
பத்து மூவர்
திருமடத்தில் வீற்றிருக்கு மனுகூல மழகளிற்றைச்
சிந்திப் பாமால்."

" அருவாகி யுருவாகி யருவுருவ மாகியிவைக்
கப்பா லாய
திருவாகி யநாதிமுத்தத் திரமாகி யானந்தத்
திரட்சி யாகிக்

கருவாகிக் கண்ணுகிக் கண்ணுண்மணி யாகியுயிர்க்
கணங்கட் கெல்லாம்
குருவாகி நிறைபரம சிவமொன்றே யனைத்துலகும்
குறிக்கொள் தேவாம்.''

'' அடியார்யார் அவர்பூசை செயும்விதமென் னெனவினவின்
அறைவாங் கேண்மோ
வடியார்வெண் ணீறணிவா ரதனெடுகண் மணிமாலை
வயங்கப் பூண்பார்
கடியார்சூற் படையானை யருட்குறிமுற் பலவினுட்க
னியப்பூ சிப்பார்
படியார்நந் தனம்புகுந்து மலர்பறித்துத் தொடுத்துதவும்
பணிமேற் கொள்வார்.''

'' தளிபுகுந்து திருவலகுப் பணிபுரிவார் திருமெழுக்குச்
சமையச் செய்வார்
ஒளிகிளர்பல் விளக்கமைப்பார் மணங்கமழும் படிபுகைப்பார்
உம்ப ராரும்
தெளிவரிய தமிழ்மறைபல் காலும்பா ராட்டிடுவார்
சிவபு ராணம்
அளியமையச் சிரவணஞ்செய் பவரிவரெ லாம்பரமன்
அடியா ராவார்.''

'' இன்னவடி யவர்வயிற்றுப் பசிதீர அனம்படைத்தல்
இன்னன் மேனி
மன்னவரு பிணியகல மருந்துதவல் குளிர்க்காடை
வாங்கி நல்கல்
சொன்னமுதல் யாதானும் வேண்டியவை மனமகிழ்ச்சி
தூங்க நல்கல்
நன்னரிடங் கொடுத்தலிவை முதற்பல்வும் பூசையென
நவில்வர் நல்லோர்.''

'' இந்தவித மடியவரைப் பூசித்த லெந்நாளும்
இனிய தேனும்
சந்தமிகு மரிபிரமா தியர்களெலா மேத்தெடுக்கும்
தகைய ராய
பந்தமிலோ ரறுபத்து மூவர்திரு நாள்வரவு
பார்த்துச் செய்யின்
மந்தரமு தனனுக்கு மொருவியருட் கலப்பினுறும்
வாழ்க்கை கூடும்.''

"நலமலிசெய் கையராய வறுபத்து மூவராம்
நாயன் மார்கள்
வலமலிமா தேவனடி யடைந்தநாட் சிவனேய
மாண்பி னுர்க்கு
நிலமலிவண் டிருவமுதுங் கறியமுதுஞ் சிற்றுணவும்
நெய்யும் பாலும்
தலமலிய நிறைத்தூட்டித் தொழுநர்பெறும் பேற்றினையார்
சாற்ற வல்லார்."

"நாடியவத் தினத்திலமு தூட்டுசிறப் பொடுமவ்வந்
நாயன் மார்க்குக்
கூடியமட் டுஞ்சிறப்ப வபிடேக நிவேதனமுங்
குலவச் செய்து
நீடியவுற் சவமுநடத் திடுதலதி விசேடமென
நிகழ்த்தா நிற்பர்
பாடியபன் னூலுமுண ராசார வொழுக்கமிகு
பண்பி னேரே."

"இந்தவிதம் பூசனைசெய் புண்ணியர்க ளெந்நாளும்
இனிமை மேய
சந்தமனை வியர்மக்கள் தவாதகடும் பினர்பலரும்
தழுவ வாழ்ந்து
கந்தமலர்க் கற்பகநா டாதியபல் போகமெலாம்
களிப்பத் துய்த்துப்
பந்தமினம் பரமசிவ னடிக்கலப்பாம் பெருவாழ்வும்
பற்று வாரால்."

குன்றைத்திரிபந்தாதிக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது

காரைக்குடியில் இருந்தபொழுது அவ்வூரிலும் அயலூரிலும் இருந்த தமிழ் வித்துவான்கள் வந்துவந்து இவரைப் பார்த்துத் தத்தம் கருத்துக்களை நிறைவேற்றிக்கொண்டு சென்றார்கள். அவர்களுள், மழவராயனேந்தலென்னும் ஊரினராகிய அஷ்டாவதானம் பாலசுப்பிரமணிய ஐயரென்பவர் இயற்றிய குன்றைத் திரிபந்தாதியைக் கேட்டு மகிழ்ந்து அவருடைய விருப்பத்தின் படியே இவர் ஒரு சிறப்புப்பாயிரம் அளித்தனர்; அது வருமாறு :—

(நேரிசை ஆசிரியப்பா)

* "திருமா மகளுஞ் சிறந்தவெண் டிங்களும்
ஒருவா ரணமூ முயரிரு நிதிகளும்
கோட்டிள மூலிநயங் காட்டர மகளிரும்
வாட்டமற் றண்டர் கூட்டுணு மமுதமும்
தருகவென் றிரப்பார் தரமூணர்ந் தன்னோர்
இருகரங் கொளவெலா மீந்தகற் பகமும்
வந்தா ருளத்துனு மாண்பொரு ளளிக்கும்
சிந்தா மணியுஞ் செழுங்காம தேனுவும்
இனையபல் வளனு மீன்றிடு முததி
புனையுடை யாகப் பொருந்துபு பூமகள்
வதனமா விலங்கு மழவையம் பதியான்
புதனிவ ஞமெனப் புலவர் குழாமும்
பார்க்கவ னிவனெனப் பார்த்திபர் பலரும்
தீர்க்கமா நவிலுந் திடத்தகல் வியினன்
கயிலையங் கிரியிற் கண்ணுதன் முன்னுள்
அயிலிலங் கியவே லரசினை யளித்தோன்
பருப்பதம் பயந்த பசுங்கிளி நெடுநாள்
விருப்பமுற் றணையு மெய்யுடை வேதியன்
அட்டமூர்த் தம்பெற் றளவிலாப் பேதம்
தட்டறக் காட்டுந் தகையே போல
அட்டாவ தானியென் றுனைப் பெயருறீஇ
மட்டடங் காவவ தானம் புரிவோன்
காரை நகர்க்கொரு கண்ண னவன்பெரி
யோரை வழிபடு முத்தம குணத்தான்
மறையவர் குலசிகா மணிமறை யொழுக்கினும்
திறனுடைச் சிதம்பர தீக்கிதர் புத்திரன்
தோமிலாப் பால சுப்பிர மணிய
நாமனெவ் வுலகும் நாட்டிய புகழான்
ஆறம் புலிமுய லன்றிவிண் ணிடத்தில்
வீறுட னிருக்கிலோர் விதநேர் தருமென
ஆன்றே ருரைசெயு மாறுமா முகத்தோன்
தோன்றுகுன் றக்குடித் தொன்னகர்ப் பாலதாத்
திரிபந் தாதி செப்பினன்
விரிகலை யுணர்ந்தோர் மிகவியப் புறவே."

---

* பின்பு கிடைத்தமையால் இச்செய்யுள் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டிற் பதிப்பிக்கப் பெறவில்லை.

அவர் தம்முடைய நண்பராகிய மகாலிங்கைய ரென்பவர் பிறந்த மழவராயனேந்தலென்னும் ஊரினராதலாலும் சிறந்த கல்விமானாதலாலும் அவரிடத்தில் இவருக்கு அன்பு அதிகமாக உண்டாயிற்று.

அதன் பின்பு முற்கூறிய பாலிவனம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்கேயுள்ள ஜமீன்தார்களால் உபசரிக்கப்பெற்றுச் சில தினங்கள் இருந்தார். அங்ஙனம் சென்ற இடங்களில் தம்மை அன்புடன் ஆதரித்தவர்கள் திறத்தில் நன்றி பாராட்டி இவர் செய்த தனிப்பாடல்கள் பல உண்டு. அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

சிங்கவனம் சென்றது

இவருடைய மாணாக்கராகிய சுப்பு பாரதியாரையும் அவர் பரம்பரையினரையும் ஆதரித்துவந்த சிங்கவனம் ஜமீன்தார் அந்தப்பாரதியார் முதலியவர்களை அனுப்பி இவரை அழைத்துவரச் செய்து இன்புற்றார். அந்த ஜமீன்தாருடைய நற்குண நற்செய்கைகளையும் அவருக்குத் தமிழில் இருந்த ஈடுபாட்டையும் அறிந்து மகிழ்ந்து அவர்மீது இவர் செய்த பாடல்கள் வருமாறு:

(விருத்தம்)

(1) "பூமேவு சிங்கவனம் புகுந்தனமப் பெயராய
பொருண்மை தோர்ந்தேம்
பாமேவு புருடசிங்கம் ராசசிங்கங் கல்விநலம்
பயின்ற சிங்கம்
மாமேவு மகராச மெய்க்கங்கோ பாலனெனும்
வள்ளற் சிங்கம்
தாமேவும் படிக்ண்டோ மதனுலிப் பெயரென்றும்
தக்க தாமே."

(2) "குணங்கொள்செவ்வாய் விசயரகு நாதமக ராசமெய்க்கங்
கோபா லப்பேர்
மணங்கொண்மகா புருட்னிரம் பியதிருவும் பெருங்கல்வி
மாண்புஞ் சேர்ந்தே

இணங்குதிறத் தினனிதனல் யாவோரும் வியப்புறுவார்
இயல்செந் நாவார்
அணங்கிருவே * றுலகத்தி யற்கையெனற் கிரங்காலுய்
அன்புற் றனே."

புதுக்கோட்டை சென்றது

அப்பால் வழியிலுள்ள ஊர்களிற் பல கனவான்களால் உபசரிக்கப்பட்டுத் திருவாவடுதுறையைநோக்கி வருகையில் புதுக் கோட்டையைச் சார்ந்த திருக்கோகர்ணம் சென்று அந்த ஸம்ஸ் தான வித்துவானை கணபதி கவிராயர் வீட்டில் தங்கினர்.

இவர் வரவைக் கேள்வியுற்ற புதுக்கோட்டையிலுள்ள தமி ழபிமானிகள் பலர் வந்துவந்து விசாரித்துவிட்டுச் சம்பாஷித்து வேண்டியவற்றை அப்பொழுது அப்பொழுது அளித்து வந்த தன்றிச் சிலதினம் இருந்து செல்லும்படியும் கேட்டுக்கொண் டார்கள்.

புதுக்கோட்டை மன்னராகிய கௌரவம் பொருந்திய இராமசந்திரத் தொண்டைமானவாகளுடைய மூத்ததேவியா ரான ஸ்ரீ பிரகதம்பா பாய்சாகேபவர்கள் அங்கே இவர் வந் திருத்தலைக் கேள்வியுற்றுத் தக்கவர்களை அனுப்பி இவரை அரண் மனைக்கு அழைத்து வரச்செய்து நாடோறும் பல அரிய விஷயங் களைக் கேட்டார்கள். தேவாரங்கள் சிலவற்றிற்கும் பெரியபுரா ணத்திலுள்ள பாடல்கள் சிலவற்றிற்கும் பொருள்கேட்டு அறிந்து தக்க ஸம்மானங்கள் பலசெய்வித்து இவருடைய பூஜைக்கு வேண் டிய பாத்திரங்களை வெள்ளியினலே செய்வித்து அளித்தார்கள்.

பின்பு இவர் புதுக்கோட்டையிலேயே ஒரு மாதம் இருந்தார். அப்பொழுது சிறந்த உணவுப்பொருள்கள் இவருக்கு அரண்மனை உக்கிராணத்திலிருந்து நாள்தோறும் அனுப்பும்படி திட்டம் செய்யப்பட்டிருந்தது. அப்பொழுது பாய்சாகேப் அவர்களுடைய அன்புடைமையைப் பாராட்டி இவர் ஐந்து பாடல்கள் இயற்றி னர். அவை கிடைக்கவில்லை. அப்பால் ஆறுமுகத்தாபிள்ளை முதலிய அன்பர்கள் இவர் புதுக்கோட்டைக்கு வந்திருப்பதைக் கேள்வியுற்று இவரைப் பட்டீச்சுரத்துக்கு அழைத்துச் செல்வ தற்கு அங்கே வந்து இவருடன் சிலதினம் இருந்தார்கள்.

---

* "இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" (திருக்குறள்.)

திருவரன்குளப் புராணம்

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ளதான திருவரன்குளமென் னும் சிவஸ்தலத்து அபிமானிகளாகிய வல்லநாட்டுப் பெருங்குடி. வணிகர் சிலர் வந்து இவரைப் பார்த்துப் பேசி மகிழ்ச்சியுற்ற னர்; திருவரன்குளத்திற்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அங்ஙன மே இவர் அங்கே சென்று ஸ்ரீ ஹரதீர்த்தஸ்தலேசரையும் பெரிய நாயகியம்மையையும் தரிசனம் செய்தனர். அக்காலத்தில் அத் திருக்கோயில் அர்ச்சகர்களாகிய ஆதிசைவர்களும் தருமகர்த் தர்களாகிய மேற்கூறிய வணிகர்களும் அத்தலத்திற்கு ஒரு வட மொழிப் புராணம் இருப்பதைச்சொல்லி அதனை மொழி பெயர்த் துத் தமிழ்க் காப்பியமாகப் பாடித்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அங்ஙனமே செய்வதாக இவர் வாக்களித்து வட மொழிப் புராணத்தை வாங்கிக்கொண்டு சென்றனர். புதுக் கோட்டைக்கு மீண்டு வந்தபின்பு அங்கேயே இருந்து அந்நூலிற் சில பாடல்களை இயற்றினர்: திருவாவடுதுறைக்கு வந்தபின்பும் சில செய்யுட்கள் இயற்றப்பெற்றன; * கடவுள் வாழ்த்து, ஆக்கு வித்தோர் வரலாறு, அவையடக்கமென்பனவும் திருநாட்டுப் படலத்தில் பத்துப் பாடல்களுமே இவராற் செய்யப்பெற்றன. பின்பு அது பூர்த்திசெய்யப் பெறவில்லை. அதிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :—

[அவையடக்கம்]

(விருத்தம்)

" சுவைபடு கருப்பங் காட்டிற் றேன்றவீற் றிருந்து ளோனச்
சுவைபடா வேப்பங் காட்டுந் தோன்றவீற் றிருத்த லாலே
நவைபடாப் பெரியோர் சொற்ற நயக்குமின் பாட லோடு
நவைபடு மடியேன் சொற்ற பாடலு நயந்து கொள்வான்."

[இத் தலவிருட்சம் வேம்பு.]

" விட்புனன் முடிமேற் கொண்டு மேவினோர் குடங்கர் கொண்டு
மட்புனன் முகந்தே யாட்டி வழுத்திட வுவப்பர் மேன்மேற்
கட்புனல் பொழிந்து நால்வர் கரைந்தபா வேற்றூர் கண்ணில்
எட்புன லுந்தோற் றுவென் பாட்டுங்கேட் டினிது வப்பார்."

[விட்புனல் - கங்கை. குடங்கர் - முதலை. எட்புனல் - எள்ளளவு நீர்.]

---

* மீ. பிரபந்தத்திரட்டு, 3370 - 3408.

[நாட்டு வளம்]

(கலிநிலைத்துறை)

" முதிரு மாக்கனி பலபடு விடபமேன் முழங்கி
அதிரும் வானரம் பாய்தர வாங்குநிர் கனியால்
உதிரு நெற்பல வேனைநாட் டறுத்தடித் துறச்செய்
பிதிரு ரூதநெற் பொலியெனப் பிறங்குவ நாளும்."

[விடபம் - மரக்கொம்பு.]

தியாகராச செட்டியாரைச் சந்தித்தது

அப்பால் அந்நகரிலிருந்து புறப்பட்டுத் தஞ்சை வழியாகக் கும்பகோணம் வந்து தியாகராச செட்டியார் வீட்டில் தங்கினர். அப்பொழுது திருப்பெருந்துறையிற் கிடைத்த ரூ. இரண்டாயிர மும் இடையிடையே சில ஜமீன்தார்கள் முதலியவர்களால் கிடைத்த ரூ. இரண்டாயிரமும் ஆக ரூபாய் நாலாயிரமும் இவரி டம் இருப்பதை உடன் வந்தவர்களால் அறிந்த தியாகராச செட்டியார் இவரைப் பார்த்து, " இந்தத் தொகையை என்னிடம் கொடுத்தால் வட்டிக்குக் கொடுத்து விருத்திபண்ணி வட்டியை அவ்வப்பொழுது ஐயா அவர்களுடைய குடும்ப ஸௌகரியத்திற் காக அனுப்பி வருவேன். அந்த நாலாயிரமும் குடும்பத்துக்கு மூலதனமாக இருக்கும். உங்கள் கையிலிருந்தால் சில தினங்களிற் செலவழித்து விடுவீர்கள். இளமைப் பருவத்தில் நீங்கள் பணத் தின் அருமையை அறிந்ததுபோல இப்பொழுது அறிந்து கொள்ளவில்லை. உங்களுக்கு என்னைப்போலச் சொல்லுபவர்கள் ஒருவருமில்லை. நான் சொல்வதைக் கேட்கவேண்டும்" என்றார். அதற்கு இவர் சிறிதும் உடன்படவில்லை. இவர் இளமையில் வறுமையால் துன்புற்றதை அவர் விரிவாக அறிவித்துப் பல முறை வற்புறுத்தியும் இவர் கேட்கவில்லை.

அப்பொழுது பிள்ளையவர்களுடன் இருந்த சுப்பையா பண் டாரத்தைத் தியாகராச செட்டியார் பார்த்து, " நீரும் உடன் போய்வந்தீரா? யாராவது உம்மைத் தெரிந்துகொண்டார்களா?" என்றுகேட்டார். அவர், " ஐயா அவர்களைக்கேட்டால் தெரியும்" எனவே, செட்டியார் பிள்ளையவர்களைப் பார்த்தனர்; இவர், " நான் சென்ற இடங்களிற் பெரும்பான்மையானவர்கள் இவருக் குத் தெரிந்தவர்களாகவே இருந்தனர்; இவர் உடன் இருந்தது

அவர்களுடன் பழகுவதற்கு எனக்கு அநுகூலமாக இருந்தது'' என்றார். கேட்ட செட்டியார் வியப்புற்றார்.

பட்டீச்சுரம் சென்றது

பின்பு ஆறுமுகத்தா பிள்ளையினது வேண்டுகோளால் இவர் அங்கிருந்து பட்டீச்சுரம் சென்று சில தினம் இருந்தார். அங்கே இருந்த நாட்களுள் ஒருநாள் இரத்தினம் பிள்ளை சோமன் மாளிகைக்கு இவரை அழைத்துச் சென்று உபசரித்தனர். அவருடைய அன்புடைமையை நினைந்து இவர்,

(விருத்தம்)

''சீர்பூத்த சிவபத்தி சிவனடியார் பத்திமிகு
சீலம் வாய்மை
கார்பூத்த கொடைமுதலா கியநலங்க ளொருங்குற்றுக்
கவினு கின்ற
பேர்பூத்த விரத்தினமொன் றினைச்சோழன் மாளிகையிற்
பிறங்கக் கண்டேன்
பார்பூத்த விதனுண்மை தனைநேரிற் கண்டுணர்வீர்
பாவல் லோரே''

என்னும் செய்யுளை இயற்றினர்.

திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தது

சில தினங்களுக்கப்பால் இவர் பட்டீச்சுரத்திலிருந்து திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் திருப்பெருந்துறை முதலிய இடங்களில் நிகழ்ந்தவற்றை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் விண்ணப்பிக்க அவர் கேட்டு மிகவும் சந்தோஷித்தார். புராணத்திலுள்ள சில பகுதிகளையும் சேக்கிழார் பிள்ளைத் தமிழையும் படிக்கச்சொல்லி மெல்லக் கேட்டுக்கேட்டுப் பிள்ளையவர்களுடைய பெருமையை உடனுடன் பாராட்டிக் கொண்டே வந்தார்.

கொண்டுவந்த தொகையில் அவசரமாகக் கொடுக்க வேண்டிய கடன்களைத் தீர்த்தபின்பு எஞ்சியதைத் தாமே வைத்துக் கொண்டு சில தினங்களில் சிறிதும் பாக்கியில்லாமல் தாராளமாக இவர் செலவழித்து விட்டனர்.

கஞ்சனூர்ச் சாமிநாதையர்

திருவாவடுதுறைக்கு வடமேற்கிலுள்ள கஞ்சனூரில் சாமிநாதையரென்ற ஒரு பிராசுதார் இருந்தனர். அவ்வூரிலுள்ள சில தமிழ்க்கல்விமான்களுடைய பழக்கத்தால் சில பிரபந்தங்களையும் நைடதம் திருவிளையாடல் முதலியவற்றையும் அவர் படித்தறிந்தார். இவரிடம் படிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இவர்பால் வந்து தம்முடைய விருப்பத்தைப் புலப்படுத்தி ஆங்கிரஸ வருஷந் தொடங்கிப் பாடங்கேட்டு வந்தார். அடிக்கடி இவரை மாணாக்கர்களுடன் தம்மூருக்கு அழைத்துச் சென்று விருந்து செய்வித்து அனுப்புவார்; சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர். அவரிடத்தில் இவருக்கும் விசேஷ அன்புண்டு. தம்முடைய தவசிப் பிள்ளைகளுள் ஒருவராகிய சாமிநாத செட்டியாரென்பவருக்கு வீடு கட்டுதற்கு விட்டம் முதலியவற்றிற்காக மரங்களை விலைக்கு வாங்கி அனுப்பவேண்டுமென்று இவர் அவருக்கு ஒரு கடிதம் எழுதி அதன் தலைப்பில்,

(விருத்தம்)

"திருவாத வூர்முதற் சிறந்தவர்போற் சிவபத்திச்
செல்வம் வாய்ந்து
பெருவாய்மை கல்வியறி வொழுக்கத்தா லளவாத
பெருமை மேவி
வெருவாத வொப்புரவு முதலியநற் குணங்களெலாம்
விட்டோர் போதும்
ஒருவாத புகழ்ச்சாமி நாதமா மறையவனீ
துவந்து காண்க"

[ஓர்போதும் ஒருவாத - ஒருபோதும் நீங்காத]

என்னும் பாடலை வரைந்தனுப்பினர்.

அவர் அதைப் பார்த்துவிட்டு உடனே ரூ. 200 மதிப்புள்ள மரங்களை வாங்கி அனுப்பினர். அவற்றின் விலையை இவர் கொடுக்கத் தொடங்குகையில் அவர் வேண்டாமென்று மறுத்து விட்டார். அம்மரங்களைக்கொண்டு வீடு கட்டப்பட்டு நிறைவேறியது; அவ்வீடு இன்றும் உள்ளது.

வீழிதாஸையினர்

ஒரு சமயம் திருவீழிமிழலையிலிருந்து வீழிதாஸையினரென்னும் ஒரு பிரபு திருவாவடுதுறைக்கு வந்து ஸ்ரீ சுப்பிரமணிய

தேசிகரைத் தரிசித்தார். அவர் திருவீழிமிழலை ஆலயத்திற்குப் பெரும்பொருள் செலவிட்டுப் பலவகைத் திருப்பணிகளைச் செய்தவர். பிள்ளையவர்களைக் கொண்டு அத்தலத்துக்குப் புதிதாக ஒரு புராணம் இயற்றுவிக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம். அதற்காக அத்தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தையும் பழைய தமிழ்ப் புராணத்தையும் கொணர்ந்திருந்தார். அவற்றை இக்கவிஞர்பெருமானிடம் கொடுத்துத் தம்முடைய விருப்பத்தை வெளியிட்டார். இவர் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டு அங்ஙனமே செய்வதாகக் கூறினர். ஆனாலும், இவருக்கு உண்டான தேக அசௌக்கியத்தால் அது பாடுதற்குத் தொடங்கப்படவேயில்லை.

*மருதவாணர் பதிகம்

பல வருஷத்தில் குமாரசாமித் தம்பிரானுக்குத் தேக அசௌகரியம் உண்டாயிற்று. ஆதீனத் தலைவருடைய கட்டளையின்படி திருவிடைமருதூர் சென்று கட்டளைமடத்தில் தங்கித் தக்க வைத்தியர்களிடம் மருந்து வாங்கி உட்கொண்டு வந்தார். அப்பொழுது அவரைப் பார்க்கச் சென்ற இவர், அவர் தேக நிலையையறிந்து வருத்தமுற்றார். அவர், "தினந்தோறும் நான் ஸ்தோத்திரம்பண்ணும்படி ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின்மீது ஒரு பதிகம் இயற்றித்தரல் வேண்டும்" என்று விரும்பவே, இவர் ஒரு பதிகம் இயற்றினர். அது மருதவாணர் பதிகமென்று வழங்கும். அதை அவர் தினந்தோறும் பாராயணம் செய்துகொண்டு வந்தார்.

அப்பதிகத்திலுள்ள க, ச, கூ-ஆம் செய்யுட்களால் நோயை நீக்கவேண்டுமென்று விண்ணப்பித்திருத்தல் விளங்கும். சில தினத்தில் அவருக்குப் பிணி நீங்கிவிட்டது. அப்பால் அவர் திருவாவடுதுறைக்கு வந்து வழக்கம்போலவே பாடங் கேட்டு வந்தார்.

'சூரியமூர்த்தி சாட்சி'

ஒருநாள் முன்ஷீப் வேதநாயகம் பிள்ளை சில உத்தியோகஸ்தர்களோடு மாயூரத்திலிருந்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய தரிசனத்திற்கு வந்தார்; அவர்களுள் டிப்டி கலெக்டராக இருந்த

* மீ. பிரபந்தத்திரட்டு, 21 - 30.

சூரியமூர்த்தியா பிள்ளையென்பவர் முக்கியமானவர் தேசிகருடைய குணங்களில் ஈடுபட்ட வேதநாயகம் பிள்ளை தாம் இயற்றிய சில புதிய பாடல்களைச் சொல்லிக் காட்டினர். அப்பொழுது மகிழ்ந்து இவர் சொல்லிய பாடல் வருமாறு :

(விருத்தம்)

"மாமேவு புகழ்த்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய
வள்ளற் கோமான்
பாமேவு சந்நிதியிற் பாக்கள்பல செப்துடனே
பயிலச் செய்தான்
நாமேவு வேதநா யகசுகுணன் சான்றெவரோ
நவில்க வென்னிற்
கோமேவு பலர்புகழ்சூ ரியமூர்த்திச் செம்மலிது
குறிக்கொள் வீரே."

ஏதாவது ஓர் உண்மையைக் கூறும்பொழுது 'சூரியன் சாட்சி' எனச் சொல்லும் உலக வழக்கைக் குறிப்பாக அமைத்து இவர் பாடிய இச்செய்யுளைக் கேட்ட எல்லாருடைய செவிகளும் குளிர்ந்தன.

ஷஷ்டியப்த பூர்த்தி

இவருக்கு அப்போது பிராயம் சுo - ஆகி விட்டமையால் அதனையறிந்த சுப்பிரமணிய தேசிகர் அக்காலத்தில் இவருக்கு நடத்த வேண்டிய ஷஷ்டியப்த பூர்த்தி யென்னும் விசேஷத்தைப் பங்குனி மாதத்தில் மடத்துச் செலவிலிருந்தே மிகவும் சிறப்பாக நடத்துவித்தார்.

அம்பர் சென்றது

அம்பர்ப்புராணம் பூர்த்தியாகியும் அரங்கேற்றப்படாமல் இருந்ததையறிந்த சுப்பிரமணிய தேசிகர் அப்புராணத்தை ஆக்குவித்தோராகிய அம்பர் * வேலாயுதம்பிள்ளை யென்பவருக்கு அந்நூலை விரைவில் அரங்கேற்றுவித்தல் உத்தமமென்று ஒரு திருமுகம் அனுப்பினர். அவர் அதனைச் சிரமேற்கொண்டு விஷயத்தைப் படித்தறிந்து உடனே திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரைத் தரிசனம் செய்துவிட்டுப் பரிவாரங்களுடன் இக்கவி நாயகரை அழைத்துக் கொண்டு சென்றார்; அங்கேயிருந்த சொர்க்கபுர ஆதீன மடத்தில் இவரைத் தங்கும்படி செய்து

* இவர் பெயர் வேலுப்பிள்ளை யெனவும் வழங்கும்.

வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்துத் தினந்தோறும் சென்று சல்லாபம் செய்து வந்தனர்.

நான் அம்பருக்குச் சென்று இவரைப் பார்த்தது

முன்பு திருப்பெருந்துறையிலிருந்து இவரிடம் விடைபெற்றுப் பிரிந்த நான் விரைவில் தீர்க்கவேண்டிய கடனுக்காகப் பொருளீட்டும்பொருட்டுப் பெரும்புலியூர் (பெரம்பலூர்)த் தாலூகாவிலுள்ள காரையென்னும் ஊருக்குச் சென்றேன்; அங்கே உள்ள சின்னப்பண்ணை கிருஷ்ணசாமி ரெட்டியாரென்பவர் முதலிய அன்பர்களின் விருப்பத்தின்படி திருவிளையாடற் புராணத்தைப் படித்துப் பொருள் சொல்லிக்கொண்டு வந்தேன். இடையிற் சிலநாட்கள் ஓய்வு ஏற்பட்டமையால் இவரைப்பார்த்து வரவேண்டுமென்னும் அவாவோடுபுறப்பட்டுத் திருவாவடுதுறைக்கு வந்தேன்; இவர் புராணம் அரங்கேற்றுதற்கு அம்பர் சென்றிருப்பதாகக் கேள்வியுற்று ஒருநாள் அங்கிருந்து அம்பர் சென்று இவரைப் பார்த்து ஆறுதலடைந்தேன்.

அன்று பிற்பகலில் ஆலயம் சென்று தரிசனம் செய்கையில் ஒவ்வொரு விசேஷத்தையும் சொல்லி வந்தார்; ஒரு பஞ்சகாலத்திற் பொருளில்லாமல் வருத்தமுற்ற நந்தனென்னும் அரசனுக்கு நாள்தோறும் படிக்காசு அருளினமையால் அத்தல விநாயகருக்குப் படிக்காசுப் பிள்ளையாரென்னும் திருநாமம் அமைந்ததை எனக்கு விளங்கச் சொன்னதோடு, அங்கே இருந்த தீர்த்தத்தைக் காட்டி, "இதுதான், *'அன்னமாம் பொய்கை சூழ் அம்பராணே' என்று தேவாரத்திற் சொல்லப்பட்டுள்ள அன்னமாம் பொய்கை; அன்ன வடிவங் கொண்ட பிரமதேவர் உண்டாக்கிய தீர்த்தம் இது" என்று கூறினர். சுவாமி எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலைக் காட்டி, "இது கோச்செங்கட் சோழ நாயனாரால் திருப்பணி செய்யப்பெற்ற பெருமை வாய்ந்தது; இத்தலத்துத் †தேவாரங்களால் இது விளங்கும்" என்று

---

* திருநா. திருநாகைக்காரோணம்.

† "அரிசிலம் பொருபுன லம்பர் மாகளிற், குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே", "ஐயனன் பொருபுன லம்பர்ச் செம்பியர், செய்யக ணிறைசெய்த கோயில் சேர்வரே", "அங்கணி விழவமர் அம்பர் மாகளிற், செங்கண விறைசெய்த கோயில் சேர்வரே" திருநா. தே. திருவம்பர்ப் பெருந்திருக்கோயில்.

சொன்னார்; பின்னும், "இந்த ஊர் மிகவும் பழைய நகரம். திவாகரத்தில், 'ஔவை பாடிய அம்பர்ச் சேந்தன்' என்றதிற் கூறப்பட்டதும், 'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணுவ துஞ்சோழ மண்டலமே - பெண்ணுவாள், அம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராம், செம்பொற் சிலம்பே சிலம்பு' என்ற தனிப்பாடலிற் சொல்லப்பட்டதும் இந்த அம்பரே" என்று அந்நகரத்தின் சிறப்பை விரித்துச் சொல்லி வந்தார்.

அப்போது சிலநாட்கள் உடன் இருந்து இவரிடம் சில நூல்களைப் பாடங்கேட்டேன். இவர் குறிப்பிட்டபடி அங்கே இருந்த குழந்தைவேற் பிள்ளை யென்னும் கனவானுக்குத் திருவிடைமருதூருலாவைப் பாடஞ் சொன்னேன். அது முற்றுப்பெற்ற பின்பு இவரே சில நூல்களை அவருக்குப் பாடம் சொல்லி வந்தார்.

கோங்குராய நல்லூர் சென்றது

ஒருநாட் காலையில் அம்பருக்குப் பக்கத்தில் உள்ளதாகிய கொங்குராயநல்லூரில் இருந்த ஒரு வேளாளப் பிரபுவின் வீட்டிற்கு அவருடைய விருப்பத்தின்படி இவர் சென்றார். அப்பொழுது அவர் குமாரராகிய ஐயாக்கண்ணுப் பிள்ளைக்கு முத்துவடுகநாத தேசிகரென்னும்வித்துவான் தமிழ்ப்பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். அத்தேசிகர் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையில் இருந்த ஒரு பெரியாரிடம் முறையே பாடங்கேட்டுத் தேர்ந்தவர்; வடமொழியில் தர்க்க சாஸ்திரத்திலும் காவிய நாடகங்களிலும் நல்ல பயிற்சியுடையவர்; நன்மதிப்புப் பெற்றவர்.

மேற்கூறிய பிரபு இவரைப் பார்த்துத் தம் குமாரரைப் பரீட்சிக்கும்படி கேட்டுக்கொண்டார்; "ஏதாவது ஒரு பாட்டுச் சொல்லப்பா" என்று இவர் வினவினர். அவர் திருவிளையாடலில் திருநாட்டுச் சிறப்பின் முதற் பாடலாகிய,

(கலிநிலைத்துறை)

"கறைநி றுத்திய கந்தரச் சுந்தரக் கடவுள்
உறைநி றுத்திய வாளினற் பகையிரு ளொதுக்கி
மறைநி றுத்திய வழியினல் வழுதியாய்ச் செங்கோல்
முறைநி றுத்திய பாண்டிநாட் டணியது மொழிவாம்"

என்ற பாடலைச் சொன்னார். அதற்கு இவர் பொருள் கேட்டார். அவர் பதவுரை சொல்லிவிட்டு முதலிரண்டடிகளுக்குப் பதசாரம்

சொல்லிக்கொண்டு வருகையில் 'வாளிறைப்பகையிரு ளொதுக்கி' என்பதற்கு, 'கத்தியாகிய ஒளியினைப் பகையாகிய இருளை ஓட்டி' என்று பொருள் சொல்லவே இவர் கேட்டு மகிழ்வுற்று, "இத்தகைய அரிய பொருள்களையெல்லாம் தெரிந்துகொள்வதற்கு ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையே காரணம். இந்த ஐயா நன்முகச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இவர்களை நீண்ட காலம் வைத்திருந்து உங்கள் குழந்தைக்கு நன்முகக் கற்பிக்க வேண்டும்" என்று அந்தக் கனவானை நோக்கிக் கூறினர். பின்பு அவ்வூரின் பக்கத்திலேயிருந்த சொர்க்கபுரஆதீனகர்த்தரிருக்கும் மடத்துக்குச்சென்று அங்கேயுள்ள குருமூர்த்தங்களைத் தரிசனம் செய்து அந்த மடத்தில் இருந்த ஏட்டுப் புத்தகங்களையெல்லாம் பார்த்துவிட்டு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு தம்முடைய இருப்பிடத்திற்கு வந்துவிட்டார்.

அப்பால் முத்துவடுகநாத தேசிகர் இவரிடம் நாள்தோறும் பிற்பகலில் வந்து இலக்கணக் கொத்தைப் பாடம் கேட்டு முடித்தார். அம்பர்ப் புராணம் அரங்கேற்றி முடிந்த தினத்தில் அவர் இயற்றிய சிறப்புப்பாயிரத்துள்ள,

"சிவபெரு மாற்குச் சிறந்திடு பூசனை
நாடொறு மன்பால் நடத்திடு நல்லோன்
தொல்காப் பியமும் தொல்காப் பியமும்
பல்காற் கூர்ந்து பயின்றே னின்றமிழ்
நூலுள முழுதுணர் நுண்மாண் தேர்ச்சியன்
கோவையந் தாதி குலவுசீர்ப் புராணம்
பிள்ளைத் தமிழ்முதற் பிரபந் தம்முள
முழுது மியற்றிய மூதறி வாளன்
இலக்கணக் கொத்தெனு மிருநூற் பொருளென்
கருத்துறத் தெருட்டியென் கருத்தினுங் கண்ணினும்
நீங்கா தென்றும் நிகழ்புகழ்க் குன்றம்
....
மாட்சியால் வாழ்மீ னாட்சி
சுந்தர னென்னுஞ் செந்தமிழ்க் கடலே"

என்னும் பகுதியால் இது விளங்கும்.

நான் மீண்டும் காரைக்குச் சென்றது

திருவிளையாடலைப் பூர்த்திசெய்ய வேண்டியவகை இருந்தமையின், "என்னை ஊருக்கு அனுப்பவேண்டும்" என்று நான்

கேட்டுக்கொண்டேன். பழக்கம் இல்லாமலிருந்தும் மேற்கூறிய கிருஷ்ணசாமி ரெட்டியாரென்பவருக்கு இவர் ஒருபாடல் இயற்றித் தலைப்பில் அமைத்து, "திருவிளையாடற் புராணத்தை விரைவிற் பூர்த்தி செய்வித்துச் சாமிநாதையரை இங்கே அனுப்பினால் எனக்குத் திருப்தியாயிருக்கும்" என்று ஒரு கடிதம் எழுதுவித்துத் தந்தார். நான் விடைபெற்றுச் சென்று காரைசேர்ந்து அந்த ரெட்டியாரிடம் கடிதத்தைச் சேர்ப்பித்தேன். அவர், "நான் அறியாதவனாக இருந்தும் என்னையும் ஒரு பொருட்படுத்திப் பிள்ளையவர்கள் கடிதம் எழுதினார்களே; பாக்கியசாலியானேன்; இதற்குக் காரணம் உங்கள்பால் அவர்களுக்குள்ள அன்பே" என்று வியந்தனர்; கடிதத்திற் கண்டவாறே என்னை விரைவில் அனுப்ப அவர் முயன்று வருவாராயினர்.

அம்பர்ப்புராண அரங்கேற்றம்

நல்ல தினம் பார்த்து அம்பர்ப் புராணம் அரங்கேற்றத் தொடங்கப்பெற்றது. அதனை அறிந்து பல வித்துவான்களும் கனவான்களும் பல ஊர்களிலிருந்து வந்து நாள்தோறும் கேட்டு வருவாராயினர் பழைய மாணாக்கராகிய * சொக்கலிங்கமுதலியாரென்பவர் அங்கே வந்து உடனிருந்து இவருக்கு ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்துச் செய்துவருவாராயினர். அரங்கேற்றம் நிறைவேறிய தினத்தில் புராணச் சுவடி சிறப்புடன் ஊர்வலம் செய்யப்பெற்றது. பிள்ளையவர்களுக்கு வேலாயுதம் பிள்ளை தம்முடைய குடும்பத்தாருடன் சேர்ந்து தக்க ஸம்மானம் செய்தார். அப்போது உடனிருந்த மாணாக்கர்களும் பிறரும் வேலாயுதம்பிள்ளையையும், பிள்ளையவர்களையும், நூலையும் பாராட்டிச் சிறப்புக்கவிகள் இயற்றிப் படித்தார்கள்.

சிவராமலிங்கம் பிள்ளை

அன்றைத்தினத்தில் தற்செயலாகத் திருவனந்தபுரம் வலிய மேலெழுத்துச் சிவராமலிங்கம்பிள்ளை யென்பவர் சிவஸ்தலயாத்திரை செய்துகொண்டே அங்கே வந்து ஸ்வாமி தரிசனஞ் செய்துவிட்டுப் புராணப் பூர்த்தி விழாவையும் கண்டுமகிழ்ந்து இப்புலவர் திலகருக்குத் தம்மாலியன்ற ஸம்மானத்தைச் செய்து வேறு

* இவர் பிற்காலத்தில் துறவியாகித் தொண்டர்சீர்பரவுவாரென்னும் நாமம் பூண்டு பலராலும் மதிக்கப்பெற்று விளங்கிவந்தார்.

ஸ்தலதரிசனத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். * திருநணா வென்பது இன்ன பெயரால் வழங்குகின்றதென்பது அவருக்கு விளங்கவில்லை. அதனையும் சில தேவாரங்களுக்குப் பொருளையும் அவர் இவர்பால் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

அம்பர்ப்புராணம் கரு படலங்களையும் கoo௭ செய்யுட்களை யும் உடையது. சோமாசிமாற நாயனார் வரலாறும் கோச்செங் கட் சோழநாயனார் வரலாறும் இப்புராணத்தில் உள்ளன. அப் பகுதிகள் இவருக்கு நாயன்மார்கள்பாலுள்ள பேரன்பையும் சிறிய வரலாற்றையும் விரிவாக அமைத்துப் பாடும் வன்மையை யும் புலப்படுத்தும். இந்நூலிலிருந்து சில செய்யுட்கள் வரு மாறு :—

[முருகக்கடவுள் துதி]

(விருத்தம்)

"வள்ளியபங் கயக்கிழவன் முடிகொடுத்த லொடுவணங்கி
மற்றை வானோர்
தெள்ளியபொன் முடிகொடுத்த புறச்சுவட்டுப் பொலிவினொடும்
சிறிய நாயேம்
கொள்ளியசூட் டலினெமது முடிகொடுத்த வகச்சுவடும்
குலவக் கொள்ளும்
ஒள்ளியகை காலொடம ரொருமுருகப் பெருமானை
உன்னி வாழ்வாம்."

[சேக்கிழார் துதி]

"ஓங்கு சைவத் துயர்பரி பாடையும்
வீங்கு பேரொலிப் பத்திசெய் மேன்மையும்
தேங்கு பேறுந் தெரித்தருள் சேக்கிழார்
பாங்கு சேர்மலர்ப் பாதம் பரசுவாம்."

[ஆக்குவித்தோர்]

"சொற்கொண்ட திருவம்பர் நகர்புரக்குங் கோமான்
தூயகங்கா குலன்மேழித் துவசன்மணக் குவளை
கற்கொண்ட புயத்தணிவோ னிராமலிங்க வள்ளல்
கனதவத்தில் வந்துதித்த வேளாளர் பெருமான்
விற்கொண்ட புருவவய லார்பொல்லா னென்று
விளம்புநல்லா னல்லொழுக்க முருக்கொண்டா லனையான்
நற்கொண்டல் பொருங்கரத்தான் சைவசிகா மணிநன்
னாவலர்கொண் டாடுவே லாயுதபூ பாலன்."

---

* திருநணா - பவானியென வழங்கும் ஸ்தலம்.

"பெருமையிற் பொலியு மம்பர்ப் பெருந்திருக் கோயின் மேய
கருமையிற் பொலியுங் கண்டக் கடவுளர் திருப்பு ராணம்
அருமையிற் பாடு கென்ன வடமொழி யினைத்து மாராய்ந்
தொருமையிற் பாட லுற்றேன் தமிழினு லுரைம ருதே."

[அவையடக்கம்]

"செறிகுறி லுடையைந் தோடு குறிலிலா விரண்டுஞ் சேர்த்து
மறிவினெட் டுயிரே ழென்று மாத்திரை நோக்கிக் கொள்வார்
அறியிய லுடைய பாவோ டியலிலா வடியேன் பாவும்
குறியிலான் சரித நோக்கிக் குறிகொள்பா வென்றே கொள்வார்."

[அம்பர் நகர்ச் சிறப்பு]

(கொச்சகக் கலிப்பா)

"பூமேவு தமிழரும்பும் பொதியவரைக் காலரும்பத்
தேமேவு மாந்தருவிற் செய்யபசுந் தளிரரும்பும்
காமேவு மகத்தூமங் கண்டுமுகி லெழுந்ததெனத்
தாமேவு சிறைமஞ்ஞை நடமாடுந் தனியம்பர்."

[சோமாசிமாற நாயனுர் யாகம் செய்ய எண்ணுதல்]

"இகமொன்று களிப்படைய வீரிரண்டு சூழநடு
முகமொன்று கொண்டபிரான் மொய்பனிகூர் வான்றடவும்
நகமொன்று மங்கையொடு நண்ணியவி யுணக்கொள்ள
மகமொன்று செயல்குறித்தார் மாதவத்து மாறனுர்."

(மாற நாயனுர் வழிபடு படலம், க, ஏ ப.)

[பஞ்சகால வருணனை]

(விருத்தம்)

"மாறுவேண் டினரலர் மள்ளர் மாதவப்
பேறுவேண் டினரலர் பெரிய ராடுதற்
காறுவேண் டினரல ரந்த ணாளருண்
சோறுவேண் டினர்பலர் துறையு ளார்களும்."

"ஒருவருண் டிடுபொழு தொருவ ரீர்ப்பர்மற்
றிருவரு மீர்ப்பர்மிக் கிவர்க ளாய்த்திட
மருவரு மயலுளார் வந்து பற்றுவார்
பெருகுவற் கடம்புரி பெற்றி யென்சொல்கேன்."

[வற்கடம் - பஞ்சகாலம்]

[பஞ்சநீக்கம்]

"உழவொலி யெழுந்தன வுறுசெய் யெங்கணும்
முழவொலி யெழுந்தன மொய்த்த வில்லெலாம்
மழவொலி யெழுந்தன வானு நாணுற
விழவொலி யெழுந்தன மேய கோயிலே."

(நந்தன் வழிபடு படலம், ககசு, ககக, கஉஅ.)

நைமிசாரணியப் படலத்தில் முதற்செய்யுளும் இறுதிச் செய்யுளுமாகிய இரண்டும் அல்லாத ஊக-செய்யுட்களிலும் சொல்லணிகளே இக்கவிஞர்கோமான் அமைத்திருக்கின்றனர். அவற்றில் அமைந்துள்ள அணிகள் வருமாறு: திரிபு, யமகம், பாடகமடக்கு, தகரவருக்கச் செய்யுள், ஏகபாதம், கோமூத்திரி, கூடசதுக்கம், மூரசபந்தம், அக்கரவருத்தனை, அக்கர சுதகம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், மாலைமாற்று, காதைகரப்பு, கரந்துறை செய்யுள், மாத்திரைப் பெருக்கம், மாத்திரைச் சுருக்கம், இரட்டை நாகபந்தம், அட்டநாகபந்தம், இரதபந்தம், கமல பந்தம், நான்காரைச் சக்கரம், ஆறரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம், பிறிதுபடு பாட்டு, திரிபங்கி, நிரோட்டகம், அநாசிகம், அகரவுயிரால் வந்த செய்யுள், ஆகாரவுயிரால் வந்த செய்யுள், இகர வுயிரால் வந்த செய்யுளென்பன.

அம்பர்ப் புராணம் அரங்கேற்றிய பின்பும் இவர் அம்பரிலேயே சிலதினம் இருந்தார்.

சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய விண்ணப்பம்

அங்கே இருக்கும் நாட்களுள் ஒருநாள் இவர் ஒரு ஸ்தலதரிசனத்திற்குச் சென்றிருந்தார். சென்றபொழுது அத்தல விசாரணைக் கர்த்தரும் ஓர் ஆதீனத் தலைவருமாகிய ஒருவர் இவரைச் சிறிதும் மதியாமலும், இவரை இன்னாரென்று அங்கே உள்ளவர்கள் எடுத்துச் சொல்லவும் கவனியாமலும் தம்முடைய பெருமைகளேமட்டுமே பாராட்டிக்கொண்டு பெருமிதத்துடன் இருந்து விட்டார். அப்பால் ஸ்வாமிதரிசனம் செய்துகொண்டு இவர் அம்பருக்கு வந்தார்.

விசாரணைக்கர்த்தரைக் கண்டு பேசி அளவளாவி வரவேண்டுமென்று எண்ணியிருந்த இவருக்கு அவருடைய இயல்பு வருத்தத்தை உண்டாக்கியது. ஓர் ஆதீன கர்த்தராக இருப்பவர்

பிறரை மதியாமலும் வந்தவர்களை விசாரியாமலும் இருப்பதைப் பார்த்த இவருக்கு எல்லா விசுத்திலும் உயர்ந்த நிலையில் இருந்து விளங்கும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய ஸௌலப்ய குணம் ஞாபகத்துக்கு வந்தது. எந்த வித்துவான் வந்தாலும் முகம் மலர்ந்து ஏற்றுப் பேசி ஆதரிக்கும் அவருடைய பெருந்தன்மை இவருடைய மனத்தை உருக்கியது. "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்" என்பது உண்மையல்லவா?

உடனே இவர், அம்பர்ப்புராண அரங்கேற்றம் பூர்த்தியானதையும் விரைவில் வந்து தரிசனம் பண்ணிக் கொள்ள எண்ணியிருப்பதையும் புலப்படுத்தி ஒரு விண்ணப்பக் கடிதம் சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதி ஒருவர் வசம் அனுப்பினர். அதன் முதலில் இவர் எழுதுவித்த பாடல் வருமாறு:

(விருத்தம்)

"ஒப்புயர்வில் லவன்சிவன்மூன் றும்முடைமை யாலிரண்டும்
ஒன்று மேற்றோர்
தப்பறத்தாழ்ந் தவரெனல்தேர்ந் தனந்திருவா வடுதுறைநற்
றலத்துள் ளார்தம்
வைப்பனைய சுப்பிரம ணியகுரவன் றன்பெயரை
வகித்து ளாரை
எப்படியும் விலக்கலின்மற் றிவன்மூன்று மிலனென்றே
இயம்பு வோமே."

[மூன்று - சிருஷ்டி முதலிய மூன்று தொழில்கள். மூன்றும் இலன்: மூன்று - ஒப்பு, உயர்வு, தாழ்வு.]

இதனைக் கண்ணுற்ற சுப்பிரமணியதேசிகர் பாடலின்பொருளையும் குறிப்பையும் அறிந்து, 'இன்ன இடத்திற்குப் பிள்ளையவர்கள் போயிருந்தார்களோ?' என்று வந்தவரைக் கேட்டார். அதனை அவர் இவரிடம் வந்து சொல்ல இவர்கேட்டு, "ஸந்நிதானத்தின் பேரறிவை அடியேன் என்னவென்று பாராட்டுவது!" என்று சொல்லி மனமுருகித் திக்குநோக்கி அஞ்சலிசெய்தார்.

திருவாவடுதுறைக்குத் திரும்பியது

அம்பர்ப்புராணம் அரங்கேற்றப்பெற்றபின் சில ஸ்தலங்களுக்குப் போய் ஸ்வாமிதரிசனம் செய்து வரலாமென்று இவர் நினைத்திருந்தார். இவருக்கு ஒருவகையான சரீரத்தளர்ச்சி ஏற்பட்டமையால் இவர் அவ்வாறு செய்வதை நிறுத்திக்கொண்டு திரு

வாவடுதுறைக்கே போய்ச் சேர எண்ணினர். வேலாயுதம் பிள்ளை முதலியவர்கள் தங்களுடைய பேரன்பையும் இவருடைய பிரிவால் உண்டான துயரத்தையும் புலப்படுத்தினர்கள் பின்னர் இவர் எல்லோரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு மாணாக்கர்களுடன் திருவாவடுதுறையை அடைந்தார்.

---

10. தேக அசௌக்கிய நிலை

நான் திருவாவடுதுறைக்கு வந்தது

அக்காலத்தில் நான் என்னுடைய வேலைகளையெல்லாம் ஒருவாறு முடித்துக்கொண்டு காரையிலிருந்து திருவாவடுதுறைக்கு வந்து இவரைப் பார்த்தேன். பார்த்ததுமுதல் இவரது குறிப்பறிந்து முன்பு நான் செய்து வந்த காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

கம்பராமாயணம் பாடம் சொல்லியது

பின்பு எங்களுடைய வேண்டுகோளின்படியே இவர் கம்பராமாயணத்தை ஆரம்பத்திலிருந்து பாடம் சொல்லத் தொடங்கினர். தேக அசௌக்கியத்தால் வழக்கமாக நடக்கிறபடி அதிகச் செய்யுட்கள் நடைபெற வில்லை. நூறு அல்லது நூற்றைம்பது செய்யுட்களே நடைபெற்றன. முக்கியமான இடங்களுக்குமட்டும் பொருள் தெரிந்துகொண்டு வந்தோம். அதைப் படித்துக்கொண்டே வருகையில் இவர், "இவை எவ்வளவு அழகாக இருக்கின்றன! இவை யெல்லாம் யோசித்துப் பாடிய பாட்டுக்களா?" என்று மனமுருகிக் கூறிச் சில சமயங்களிற் கண்ணீர் விடுவது முண்டு.

சூரியனார்கோயில் ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

பிள்ளையவர்களுக்கு இளமையில் கம்பரந்தாதியைப் பாடஞ் சொன்னவரும் திருவாவடுதுறை யாதீனத்தில் நெடுங்காலம் இருந்தவருமாகிய * அம்பலவாண முனிவர் பின்பு சூரியனார் கோயிலாதீனகர்த்தராக நியமிக்கப்பெற்று அம்பலவாண தேசிகரென்ற பெயருடன் விளங்கி வந்தார். முதுமைப்பருவமுடைய அவர் ஒருநாள் பரிவாரங்களுடன் திருவாவடுதுறை

---

* முகநூற்பாகம், ப. எசு - அக, பார்க்க.

மடத்துக்கு விஜயம் செய்திருந்தார். பிள்ளையவர்கள் அவரைப் பற்றியும் அவர்பால் தாம் பாடங்கேட்டதைப்பற்றியும் எங்களிடம் முன்னரே சொல்லியிருந்ததுண்டு. ஆதலின் அந்தப் பெரியவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் எங்களுக்கு மிகுதியாக இருந்தது.

மடத்தின் ஒரிடத்தில் நானும் உடன்படிப்பவர்கள் சிலரும் பழைய பாடங்களை வாசித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தோம். கம்பராமாயண அச்சுப்பிரதிகள் எங்கள் கையில் இருந்தன. அப்பொழுது அவ்வழியே முற்கூறிய அம்பலவாண தேசிகர் வந்தார். நாங்கள் அவரை இன்னாரென்று அறிந்து எழுந்து நின்றோம். அவர் நாங்கள் புத்தகங்களை வைத்துப் படித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து, "என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்? கையில் இருப்பது என்ன புத்தகம்?" என்று கேட்டார். "கம்பராமாயணம்" என்று விடை கூறினோம். உடனே அவர் வியப்பையடைந்து, "அப்படியா! இதைக்கூடப் 'புக்குப்' போட்டுவிட்டாளு?" என்று கூறினர். அந்த நூல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டதற்காக ஆச்சரியப்பட்டனரென்று நாங்கள் அறிந்தோம். உலக இயல்பு அதிகம் அவருக்குத் தெரியாதென்பதையும் சிவபூஜை செய்தல் புத்தகங்களைப் படித்தல் முதலியவற்றில் நல்ல பழக்கமுள்ளவரென்பதையும் பிள்ளையவர்கள் மூலமாக நாங்கள் அறிந்திருந்தோமாதலின் அப்பொழுது அவர் கூறிய வார்த்தைகள் எங்களுக்குச் சிரிப்பை உண்டாக்கிவிட்டன. அவர் போகும்வரையில் சிரிப்பை அடக்கிக்கொண்டே இருந்து போனபின்பு சிரித்தோம். எல்லாப் புத்தகங்களையும் வெள்ளைக்காரர்களே அச்சிற் பதிப்பிப்பவர்களென்ற எண்ணம் அவருக்கு இருந்து வந்தது.

அம்பலவாணதேசிகர் தொடுத்த வழக்கு

இந்த அம்பலவாண தேசிகர் தம்முடைய மடத்தைச்சார்ந்த மிராசுதார் ஒருவர் ஏதோ நிலத்தின் விஷயத்திற் சரியாக நடக்கவில்லையென்று எண்ணி அவர்மேல் நீதிஸ்தலத்தில் ஒரு வழக்குத் தொடுத்தனர். மிராசுதார்பால் பொறாமை கொண்ட சிலர் இந்த அம்பலவாண தேசிகரிடம் வந்து மிராசுதாரைப்பற்றிப்பல வகையாகக் குறைகூறி வழக்கை ஊக்கத்துடன் நடத்தும்படி தூண்டிவிட்டார்கள் அவர் வழக்கின்முறை, நியாயம் முதலிய விஷயங்களிற் சிறிதும் பயிற்சி இல்லாதவர்; பிறர் செய்யும் மரி

யாதையையும் உபசாரங்களையுமே அதிகமாக எதிர்பார்ப்பவர்; ஆதலால் அந்த மிராசுதார் தம்மிடத்தில் மரியாதையாக நடந்து கொள்ளாமையால் பெருங்குற்றம் செய்துவிட்டாரென்றும் அதற்குரிய தண்டனையை நியாயஸ்தலத்தின்மூலம் விதிக்கச்செய்வதே முறையென்றும் எண்ணிப் பிடிவாதமாக வழக்காடினர். தூண்டுபவர்களுடைய வார்த்தை அவருக்கு மேன்மேலும் ஊக்கத்தை உண்டாக்கியது. வழக்கின் இயல்பு தெரிந்தவர்களும் தக்கவர்களுமாகிய சிலர் அவர்பாற் சென்று அவ்வழக்குப் பயன்படாதென்று சொல்லிப் பார்த்தும் அவர் கேட்கவில்லை. மிராசுதார் இறுதியில் தமக்கே வெற்றியுண்டாகுமென்பதை நன்றாக அறிந்திருந்தாலும் இடையில் வீண்செலவாதலையும் அதனால் தமக்கு மிக்க துன்பமுண்டாகுமென்பதையும் எண்ணிச் சமாதானமாதற்காகப் பலவகையான முயற்சிகளைச் செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை.

பின்பு அவர் பிள்ளையவர்களைக்கொண்டு சொல்லச்செய்தால் ஒருகால் தேசிகர் உண்மையை உணர்வாரென எண்ணிச் சில கனவான்களைக்கொண்டு இக்கவிஞர்பிரானுக்குச் சொல்லும்படி செய்தார். அவர்கள் இவரிடம் வந்து விஷயங்களை விளக்கிச் சொன்னார்கள். உடனே இவர் சூரியனார்கோயில் சென்று அம்பலவாண தேசிகருக்குப் பலவாறு நியாயங்களை எடுத்துக் கூறி வழக்கை நடத்தாமல் நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர். தேசிகருடைய பிடிவாதம் குறையவில்லை. தர்மந்திரிகளுடைய போதனை அவர் மனத்தில் அதிகமாக உறைத்திருந்தது. இந்தக் கவிநாயகர் பின்பு திருவாவடுதுறைக்கு வந்துவிட்டார்.

பின்னரும் வழக்கானது தொடர்ந்து நடைபெற்றுவந்தது. வேறு சிலர் பிள்ளையவர்கள்பால் வந்து முறையிட்டனர். அப்பொழுது இக் குணமணி அல்பலவாண தேசிகருக்கு,

(விருத்தம்)

"வாய்ந்ததிரு வடிக்கன்பன் மீளுட்சி சுந்தரநா
வலவன் மாற்றம்
ஆய்ந்த*கதி ரவன்றளியம் பலவாண தேசிகன்பே
ரருளின் ஓர்க

* கதிரவன்தளி - சூரியனார் கோயில்.

வேய்ந்தவழக் கால்வீணே பொருட்செலவா மெனல்விளம்ப
வேண்டுங் கொல்லோ
ஆய்ந்தசிலர் சொற்படிச மர்தான மாதன்மிக
அழகி தாமே"

என்ற செய்யுளை எழுதி யனுப்பினர். அதனைப் பார்த்து அவர் சிறிது நேரம் யோசித்தார்; 'மகா வித்துவானும் நமக்கு வேண்டியவரும் மதிப்புப் பெற்றவருமாகிய இவருடைய வார்த்தையை அவமதிக்கலாமா?' என்று எண்ணினார். இத்தகைய சந்தர்ப்பங்களில் தூண்டிவிட்டு வாதிப்பிரதிவாதிகளுக்குள் மேன்மேலும் மனஸ்தாபத்தையும் கலகத்தையும் விளைவித்து அதனால் வரும் வருவாயால் பிழைக்கும் இயல்புடைய சிலர், "புராணம் பாடுவதற்குத்தான் மகா வித்துவானே யல்லாமல் வியாஜ்ய விஷயங்களில் அவருக்கு என்ன தெரியும்? தமிழ்ப் பாடல்களிற் சந்தேகம் இருந்தால் அவர் சொல்வதைக் கேட்கலாம். சட்ட விஷயத்தில் அவர்பால் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? ஸந்நிதானத்தில் தொடுத்த வழக்கைப் பாதியில் நிறுத்திக்கொண்டால் பிரதிவாதியினுடைய கொட்டம் எப்படி அடங்கும்? செலவையும், தப்பு வழக்கென்பதையும் எண்ணிப் பயந்து நிறுத்திக்கொண்டார்களென் றல்லவோ ஊரார் கூறுவார்கள்? இன்றைக்கு இந்த வழக்கில் இப்படிச் செய்துவிட்டால் நாளைக்கு வேறொருவன் வேண்டுமென்றே அக்கிரமம் பண்ணுவான். 'கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி' என்பது போலக் கொஞ்சம் சூடுபோடாவிட்டால் இவர்களெல்லாம் அடங்கி யிருப்பார்களா? பெரிய இடத்தை எதிர்க்கக் கூடாதென்பதை இவர்கள் எப்படித்தான் உணர்ந்துகொள்வது? நம்முடைய கட்சியில் நியாயம் இருக்கும்போது ஸந்நிதானத்தில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? பத்துப்பேர் பத்து விதம் சொல்வார்கள். ஆதீன நிர்வாகப் பொறுப்பு அவர்களுடையதா? ஸந்நிதானத்தினுடையதா?" என்று பலவகையில் தூபம் போட்டார்கள். பாவம்! பெரியவருக்கு அவர்களுடைய மாயவார்த்தைகள் உண்மையாகவே பட்டன. வழக்கைப் பின்னும் நடத்திவந்தார். வழக்கின் முடிவில் பலர் எதிர்பார்த்தபடியே தேசிகர் பக்கம் அபஜயந்தான் ஏற்பட்டது. திருவாவடுதுறைக்கு வந்த சில பிரபுக்கள் இந்தச் செய்தியை இவருக்கு அறிவித்தனர். இப்புலவர் கோமான் கேட்டு, "அம்பலவாண தேசிகரவர்கள பரமஸாது;

திருவாவடுதுறையில் இருக்கும்போது பூஜையும் புத்தகமுமே அவர்களுக்குத் தெரியும். உலக வழக்கமே தெரியாது. இப் பொழுது ஆதீனத் தலைமை பெற்றவுடன் அவ்வழக்கம் எப்படிப் புதிதாகத் தெரியவரும்? பிடிவாதமும் கடின சித்தமும் இப் பொழுது உண்டாயிருக்கின்றன. பணம் பண்ணும் வேலை அது; '*அறநிரம்பிய அருளுடையருந்தவர்க்கேனும், பெறலருந் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்' என்று சொன்ன கம்பர் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்'' என்று சொன்னர்.

சிங்கப்பூர் நாராயணசாமி நாவலர்

சிங்கப்பூரில் நாராயணசாமிநாவலரென்னும் ஒருவர் இருந்தார். அவர் இவருடைய புலமைத் திறத்தைப் பலர் வாயிலாக அறிந்தவர். இவருடைய பழக்கத்தைப் பெறவேண்டுமென்னும் விருப்பம் அவருக்கு மிகுதியாக உண்டு. ஆயினும் நேரிற்கண்டு பழகுவதற்கு இயலாத நெடுந்தூரத்தில் இருந்தவராதலின், கடிதங்கள் மூலமாகத் தம்மை அறிவித்துக்கொண்டார். இவருடைய பூஜைக்கு வேண்டிய பொருள்களையும் நல்ல பழங்களையும் சிறந்த வேறு பொருள்களையும் அனுப்பிவந்தார். இவர் விஷயமாகச் செய்யுட்களும் எழுதியனுப்பியதுண்டு. கம்பராமாயணம் முதலியவற்றில் தமக்கு விளங்காத பகுதிகளை எழுதியனுப்பி இவரிடமிருந்து விடைபெற்றுத் தெரிந்துகொண்டனர். தமக்கு வேண்டிய சில நூல்களை எழுதுவித்து வருவித்துக்கொண்டார்.

நோயின் தொடக்கம்

அக்காலத்தில் இவருடைய காலிலும் அடிவயிற்றிலும் வீக்கத்தைத் தோற்றுவித்துக்கொண்டு ஒருவகையான நோய் உண்டாயிற்று; இவருடைய தேகம் வரவரத் தளர்ச்சியடையத் தொடங்கியது; ஆகாரம் செல்லவில்லை. அதனால் இவர் நூல் இயற்றுதலும் பாடஞ் சொல்லுதலும் வழக்கம்போல் நடைபெறுமல் சில சமயத்தமட்டும் நடைபெற்று வந்தன.

† திருவிடைமருதூர்த் திரிபந்தாதி

இவருடைய மாணாக்கர்களுள் ஒருவர் அப்போது திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசர்மீது திரிபந்தாதியொன்று இயற்றி

* கம்ப. மந்தரை சூழ்ச்சிப். எ0. † மீ. பிரபந்தத்திரட்டு, 2237-2338.

அதைப் பல அன்பர்களுக்கு இடையே இருந்து இவரிடம் திருத்தம் செய்துகொள்வதற்காகப் படித்துக் காட்டினர். இவர் அதனை முற்றுங் கேட்டு முடித்தனர். பின்பு அவர் இல்லாத சமயம் பார்த்து, "இந்த அந்தாதி சிறிதும் நன்றாக இல்லை; மிகவும் சுடினமாக இருக்கின்றது; சரியான இடத்தில் மோனையில்லை; பொருள் நயமுமில்லை; அவருடைய நிர்ப்பந்தத்தினால் ஒப்புக்கொள்ள வேண்டி யிருந்தது. இவ்விடத்துவாக்கினால் இந்தத் தலத்திற்கு ஓரந்தாதி செய்து தரல்வேண்டும்" என்று மாணாக்கர்கள் எல்லாரும் இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவர், "அவர் செய்திருக்கும்பொழுது இத்தலத்திற்கு நான் செய்வது முறையன்று; வேண்டுமானால் திருவிடைமருதூருக்குச் செய்வேன்" என்று கூறி அவ்வாறே செய்யத் தொடங்கி விநாயகர் காப்பை முடித்தவுடன் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய துதிசெய்ய் ஆரம்பித்தார். அப்பொழுது நான், "ஐயா அவர்கள் உடையவர் பூஜை எழுந்தருளப்பண்ணிக் கொண்டபோது குரு ஸ்தோத்திரமாக ஒருசெய்யுள் செய்தருண்டு; எனக்கு அது ஞாபகமிருக்கிறது" என்று சொன்னேன். அதைச் சொல்லச் சொல்லிக்கேட்டு அதையே சேர்க்கும்படி சொன்னமையால் அப்படியே அது சேர்க்கப்பட்டது. சில தினங்களில் அவ்வந்தாதி முற்றுப் பெற்றது. அந்த நூல்தான் இறுதியில் இவராற் பாடப் பெற்றவற்றுள் முற்றுப் பெற்ற பிரபந்தம். அந்நூலிற் சில பாடல்கள் திருவிடைமருதூருக்குச் சென்றிருந்த பொழுது பாடப்பெற்றன.

அதன்பாலுள்ள சில செய்யுட்கள் வருமாறு :—

(கட்டவைக் கலித்துறை)

"இளங்கொடி யான வுமைபாகன் வாழு மிடைமருத
வளங்கொடி யானஞ் செயேன்பூச நீர்த்துறை வாஞ்சைவையேன்
களங்கொடி யானலே வேணையை யோவென்ன கன்மந்திரு
வுளங்கொடி யான னினைத்ததென் னேவொன்று மோர்கிலனே."

(உஅ)

[இடைமருதவளங்கொள் தியானத்தை. கள்ளங்கொடு யான் அலை வேன். திருவுள்ளம் கொடி ஆனன் நினைத்தது; கொடி ஆனன் - விடைக் கொடியை யுடையவன்.]

இவர் முன்பு அத்தலத்திற்கு உலாவொன்று இயற்றியிருத்தலை,

"சொல்லையப் பாக முருவே னுலாவுங்கொள் தூயவ" (கூங)

என்று குறிப்பித்திருக்கின்றார்.

"திறப்பா வினைய மனமோ ரணுத்துணை செப்பலென்ன
மறப்பா வினைய மனமிலை யோவிடை மாமருதும்
சிறப்பா வினைய மருதருந் தேவியுந் தேவிடையும்
அறப்பா வினையக் கொடுவைக வென்னு ளடக்கியதே" (கூ)

[திறப்பாவினைய - பலதிறப்பட்ட பாவினைகளை உடைய; மறப்பாவம் - மிகக் கொடிய பாவம்; நைய மனம் இலையோ - அணுவென்பவர்களுக்கு நைய மனம் இல்லையோ; நையவேண்டும் என்றபடி; சிறப்பா அனைய; தே - தெய்வத்தன்மை; அறப்பாவை வினையக்கொண்டு; கொடு; தொகுத்தல் விகாரம். மனம் அடக்கியது]

என்னும் செய்யுளை இவர் சொல்லிமுடித்தபொழுது அதனுடைய கருத்தை எங்களுக்குச் சொல்லத் தொடங்கி, "மனம் அணுத்துணையென்பது தார்க்கிகருடைய கொள்கை. இந்தத் திருவிடைமருதூரென்னும் ஸ்தலம் * திருவலஞ்சுழியை விநாயக ஸ்தலமாகவும், ஸ்வாமிமலையைச் சுப்பிரமணிய ஸ்தலமாகவும், திருமாந்துறையைச் சார்ந்த சூரியனார் கோவிலை நவக்கிரக ஸ்தலமாகவும், திருவாப்பாடியைச் சண்டேசுவர ஸ்தலமாகவும், சிதம்பரத்தை நடராஜ ஸ்தலமாகவும், சீகாழியைப் பைரவ ஸ்தலமாகவும், திருவாவடுதுறையை ரிஷப தேவஸ்தலமாகவும், திருவாரூரை ஸோமாஸ்கந்த ஸ்தலமாகவும், ஆலங்குடியைத் தட்சிணமூர்த்தி ஸ்தலமாகவும் இயல்பாகவே பெற்று விளங்குகின்றது. இங்ஙனம் விநாயகர் முதலியோர் தனித்தனியே சிறப்புற்று விளங்கும் ஸ்தலங்களையே பரிவார தேவதைகளுக்குரிய ஸ்தானங்களாகக் கொண்ட ஸ்தலம் வேறொன்றுமில்லை. இதனாலேதான் அடைமொழியின்றி மகாலிங்கமென்று வழங்கும் திருநாமம் இத்தலத்து மூர்த்திக்கே அமைந்துள்ளது. இங்ஙனம் பல வகையாலும்

---

* இச்செய்தி திருவிடைமருதாருலாவிலுள்ள, "ஒப்பேதும், இல்லா வலஞ்சுழியே யேரம்பன் வைப்பாக, மல்லே ரகமுருகன் வைப்பாக—நல்லார்சேர், தண்மாட வாப்பாடி தண்டீசன் வைப்பாக, வண்மாந் துறை யிரவி வைப்பாக—எண்மாரு, நன்காமர் தில்லை நடராசன் வைப்பாக, மன்காழி யேவடுகன் வைப்பாக—மூன்காணும், தென்னு வடுதுறையூர் சேவமர்வைப் பாவாரூர், மன்னுசோ மாக்கந்தர் வைப்பாக—உன்னிற், றடைதவிரா லங்குடியா சாரியன்வைப் பாக, இடைமருதில் வீற்றிருக்கு மீசன்" (கூக-சூ) என்னும் கண்ணிகளிலும் காணப்படும்.

பெரியனவாயுள்ள தலத்தையும் மூர்த்தி முதலியவற்றையும் தியானத்தால் தன்பால் அடக்கியுள்ள மனத்தை அணுவென் பது பிழையென்னும் கருத்து இதில் அடைக்கப்பெற்றுள் ளது'' என்று விரித்துக் கூறினர். நாங்கள் கேட்டு மகிழ்ந் தோம்.

* வண்டானம் முத்துசாமி ஐயர்

அக்காலத்தில் அயலிடத்திலிருந்து வந்தவர்களில் பெரி யோர்கள் சுப்பிரமணிய தேசிகரிடத்திலும் ஏனையோர் இவருடைய மாணாக்கர்களிடத்திலும் தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய நூல்களைப் பாடங்கேட்டுச் சென்றனர். குமாரசாமித் தம்பிரா னிடம் முத்துசாமி ஐயரென்ற ஒருவர் படித்துக்கொண்டிருந் தார். அவருடைய ஊர் எட்டையபுரத்தைச் சார்ந்த வண்டான மென்பது. சூடாமணி நிகண்டிலுள்ள பன்னிரண்டு தொகுதி களும் அவருக்கு மனப்பாடம் உண்டு. சில சிலேடை வெண்பாக் கள், சில அந்தாதிகள் முதலியவற்றை முறையாகப் பாடங்கேட் டார். இயல்பாகவே தமிழறிவுடைய குடும்பத்திற் பிறந்தவராகை யால் நல்ல தமிழ்ப்பயிற்சியடைந்தார். அவர் பிறரிடத்திற் பேசுதல் மிக அருமை; பிறர் சொல்வதையும் முகங்கொடுத்துக் கேளார்; யாரோடும் கலந்து பேசார்; எப்பொழுதும் தனியே இருப்பதன்றி மௌனமாகவும் இருப்பார்; அகங்காரத்தினால் அவ்வாறிருந்தவரல்லர். அவருடைய இயல்பே அது. சிலேடை யாகப் பேசுவார். அவர் ஜனங்களோடு பழக விரும்பாதவராகை யால் எல்லோரும் உண்ட பின்னரே மடத்தைச் சார்ந்த சத்திரத் தில் அகாலத்தில் வந்து ஆகாரம் செய்துகொள்ளுவார். அவரு டைய நிலைமையை உத்தேசித்து எல்லோரும் அவரை, "வண்டா னம் வந்தது, போயிற்று'' என்று அஃறிணையொருமையாகவே வழங்குவார்கள். படித்த கோஷ்டிக்கு அவரிடம் மதிப்பு இல்லை. அவர் வஸ்திரம் அழுக்கு மலிந்திருக்கும்.

ஒருநாள் சத்திரத்தின் சுவரில் கீழேகண்ட பாடல் மாக்கல் லால் எழுதப்பட்டிருந்தது:

---

* இவருடைய விரிவான வரலாற்றை, 'கலைமகள்' என்னும் பத்திரி கையின் முதல் தொகுதி 273-80-ஆம் பக்கங்களிற் காணலாம்.

(விருத்தம்)

"இந்தவறச் சாலேதனி லேயிரவும் பகலும்
வந்தவரி முதன்மதிதம் வரைவாங்கிக் கொண்டே
அந்தணருக் கடிசிலிட, யாதுமிலே யெனலால்
சுந்தரசுப் பிரமணிய தேவனிடம் சொன்மின்."

[வந்த அரி - வந்த அரிசி. மதிதம் - மோர்.]

அங்கே சென்று ஆகாரம் செய்து வெளியே புறப்படும்போது ஒருவர் சுவரில் இந்தப்பாடலைக் கண்டு ஞாபகப்படுத்திக்கொண்டு சென்று பிற்பகலில் இராமாயணம் பாடங்கேட்பதற்காக அங்கே வந்திருந்த நண்பர்களிடம் சொல்லிக்காட்டியதன்றிப் பின்பு இக் கவிஞர்கோமானிடத்தும் சொன்னர். 'இப்பாடலே யார் செய்திருத்தல்கூடும்?' என்ற ஐயம் எல்லோருக்கும் உண்டாயிற்று. அந்தச் சத்திரத்திற்கு வந்து செல்பவர்கள் பலருள் யார் செய்ததோவென்று ஒவ்வொருவரையும் அங்குள்ளோர் குறிப்பிடத் தொடங்கினர்.

அப்பொழுது குமாரசாமித்தம்பிரான், "வண்டானம் எழுதியிருக்கலாம்; அது பெரும்பாலும் அகாலத்திலேதான் சென்று உண்ணுவது வழக்கம்; தனக்கு ஆகாரம் சரியாக ஒன்றும் கிடைக்கவில்லே யென்று சில சமயங்களில் என்னிடம் சொல்லியிருக்கிறது. அதை விசாரிக்கவேண்டும்" என்றார். சாப்பிடும் இடத்தில் விசாரிக்கையில் சமையற்காரர், "வண்டானத்தான் ஏதோ நேற்றுக் கிறுக்கிக்கொண்டிருந்தது" என்றார். உடனிருந்தவர்களுக்கு அவரை எப்படியேனும் கண்டுபிடித்து அழைத்துவர வேண்டுமென்ற விஷயத்தில் ஊக்கம் உண்டாயிற்று. இரண்டு மூன்று பேர்கள் விரைந்து சென்று ஊருக்குள்ளே தேடிப்பார்க்கையில் எங்கும் அகப்படவில்லே. அப்பால் வடக்கு மடத்துத் தோட்டத்தில் ஒரு மரத்தின் அடியிலுள்ள மேடையில் ஏதோ யோசனை செய்துகொண்டு அவர் உட்கார்ந்திருந்தார். கண்டு அழைக்கையில் அவர் விரைவில் எழவில்லே. சென்றவர்கள் வலிய அவரை இழுத்துக்கொண்டுவந்து பிள்ளையவர்களுக்கு முன்னே நிறுத்தினர்கள்.

அவரை இவர் இருக்கச்செய்து, "இந்தப் பாடலைச் செய்தவர் யார்?" என்று கேட்டார். அவர், "நான் செய்யவில்லே" என்று கூறிவிட்டார். பின்னும் வற்புறுத்திக் கேட்கையில் அவர், "சரி

யாக நடந்துகொள்ளாமற் போனால் பின் என்ன செய்கிறது?" என்றார். குமாரசாமித் தம்பிரான், "நீ அகாலத்திற் போனால் உனக்கு என்ன கிடைக்கும்? உன்னுடைய தவறு அது" என்று கோபத்துடன் சொல்லுகையில், "சாமி, சும்மா இருக்கவேண்டும்; கோபித்துக் கொள்ளக்கூடாது" என்று பிள்ளையவர்கள் கையமர்த்திவிட்டு, "இந்தச் செய்யுளின் நடையைப் பார்க்கும் பொழுது, இதற்குமுன் இவர் பல பாடல்கள் செய்து பழகியிருக்கவேண்டுமென்று தோற்றுகின்றது. அதைப்பற்றி விசாரிக்கவேண்டும்" என்றார். விசாரித்ததில் அவர், "யாதொன்றும் செய்ததில்லை" என்று அஞ்சிச் சொன்னார். "பாடுதலில் நீர் பழக்கமுள்ளவரென்பதை இப்பாடலே தெரிவிக்கின்றது; செய்திருந்தால் அச்சமின்றிச் சொல்லும்" என்று பின்னும் இவர் வற்புறுத்திக் கேட்கவே, அவர் பல திரிபு, யமகம், சிலேடை முதலியன தாம் செய்தனவாகச் சொல்லிக் காட்டினர். அவற்றுள் பிள்ளையவர்கள் செய்துள்ள, "துங்கஞ்சார்" என்ற நோட்டின் மெட்டில், தம்மை ஆதரித்த பிச்சுவையரென்பவர்மேல் இயற்றிய கீர்த்தனம் ஒன்றைச் சொன்னார்; "உச்சஞ்சார் வண்டானத்துறை பிச்சுவைய தயாநிதியே" என்ற அதன் பல்லவி மட்டும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

அவற்றைக்கேட்ட இக்கவிஞர் பெருமான் அவரைப்பார்த்து மிகவும் வருந்தி, "இவர் இவ்வளவு அழுக்கான வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு தமிழருமையறிந்த இந்த ஊரில் ஆதரவின்றி இருத்தல் மிகுந்த வருத்தத்திற்கு இடமாக இருக்கிறது" என்று சொல்லி வஸ்திரங்கொடுக்கவேண்டுமென்று சுப்பிரமணிய தேசிகர் விஷயமாக ஒரு செய்யுள் பாடும்படி சொன்னார். அவ்வாறே அவர் உடனே,

(விருத்தம்)

"மாசாரக் கவிநுவல்வோர் குறைகள்தமை யடியோடே
மாற்ற வெண்ணித்
தூசார நிதியமுண வடிகள்தரல் தெரிந்துபெறத்
துணிந்து வந்தேன்
ஏசார வறுமையெனுங் கொடும்பிணியா னெடுந்துயருற்
றிருக்கின் றேற்கின்
ரூசார மளித்தருள்சுப் பிரமணிய தேசிகமெய்
யறிஞ ரேறே"

[மா சாரம் - மிக்க சுவையையுடைய. தூசு ஆரம் நிதியம் உணவு ஆகிய இவற்றை அடிகள் தருதலைத் தெரிந்து. ஏசு - பழிக்கப்படுதல் ஆசாரம் - ஆடை.]
என்னும் ஒரு செய்யுளைச் சொன்னர்.

இதைக்கேட்ட இவர் மகிழ்ந்தார். ''இச்செய்யுளைச் சந்நிதானத்தினிடம் விண்ணப்பம் செய்யும்'' என்றுசொல்லி அவரை அனுப்பியதன்றி உடன் சென்று வரும்படி எனக்கும் உத்தரவு செய்தார். கேட்ட அவர் பிள்ளையவர்களது முன்னே நிகழ்ந்த வற்றையும் அறிந்து மகிழ்ந்து கரைபோட்ட இரண்டுஜோடி வஸ்திரங்களை வழங்கி அவற்றைக் கட்டிக்கொண்டு பிள்ளையவர் களிடம் சென்று காட்ட வேண்டுமென்று கட்டளையிட்டார். அப் படியே உடுத்துக்கொண்டு பிள்ளையவர்களிடம் முத்துசாமி ஐயர் வரவே, இவர் கண்டு மகிழ்ந்தார்.

'இந்தியா மீனாட்சிசுந்தரம் பிள்ளை'

ஒருநாள் இவருக்கு லண்டனிலிருந்து ஒருகடிதம் வந்தது. அதில் 'மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இந்தியா' என்று மட்டும் விலாசத்தில் எழுதப்பட்டிருந்தது. அது யாதொரு தடையுமின்றி இவருக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் இவருடைய பெரும்புகழ் என்பதை அறிந்துமாணவர்களும் அன் பர்களும் மகிழ்ந்தார்கள். சுப்பிரமணிய தேசிகரும் இதனை யறிந்து பாராட்டினர்.

சுந்தரதாஸ பாண்டியருக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது

சேற்றூர் ஜமீன்தாராகிய முத்துசாமி பாண்டியருடைய குமாரரும் தமிழ்க்கல்வி கேள்விகளிற் சிறந்தவரும் ஆகிய சுந்தர தாஸ பாண்டிய ரென்பவருக்கும் திருவனந்தபுரம் அரசராயிருந்த ராமவர்மாவென்பவருக்கும் நட்புண்டு ஒருசமயம் பாண்டியர் திருவனந்த புரத்து அரசர்மீது ஒரு வண்ணம் பாடினர். அதற் குத் தக்க வித்துவான்களால் சிறப்புப்பாயிரம் பெறவேண்டு மென்பது அவருடைய விருப்பம். சேற்றாரிலிருந்த வித்துவான் கள், பிள்ளையவர்களிடமிருந்து பெற்றால் சிறப்பாக இருக்கு மென்று தெரிவித்தார்கள். சுந்தரதாஸபாண்டியருக்கும் அங்ஙன மே பெறவேண்டுமென்னும் வேணவா உண்டாயிற்று. ஆனால், அவருக்கும் இக்கவிஞர் பிரானுக்கும் பழக்கமில்லை. அதனால் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு அவ்வண்ணத்தை அனுப்பித் தம்

முடைய விருப்பத்தையும் விண்ணப்பம் செய்துகொண்டார். தேசிகர் பிள்ளையவர்களிடம் அதனை அளித்தனர். இவர் அவர் கட்டளைப்படியே உடனே அந்த வண்ணத்தைச் சிறப்பித்து ஐந்து செய்யுட்கள் இயற்றி யனுப்பினர். அவற்றில் திருவாவடுதுறை ஸம்ஸ்தானத்தைப்பற்றிச் சொல்லுகையில், 'இந்தக் கலி காலத்தில் மற்றத்தேசங்களில் ஒரு காலால் நடக்கும் தர்ம மாகிய ரிஷபம் நான்கு காலாலும் நடக்கும் இடம்' என்னும் கருத்தை அமைத்திருந்தார். அன்றியும் வண்ணத்தின் இலக்கணங்களையும் புலப்படுத்தியிருந்தார். அச்செய்யுட்களைச் சுப்பிரமணிய தேசிகர் சுந்தரதாஸ பாண்டியருக்கு அனுப்பினர். அவற்றைப்பெற்ற அவர் பிள்ளையவர்கள் தம்மை அறியாமலிருந்தும் தம் பாடலை மதித்துச் சிறப்புப்பாயிரம் அளித்ததைப் பாராட்டி நேரே இக்கவிஞர்பிரானுக்குத் தம் வந்தனத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியனுப்பினர்.

* ஸ்ரீசிவஞானயோகிகள் சரித்திரம்

சிவஞான யோகிகள் சரித்திரத்தைத் தமிழ்ச் செய்யுளாக இயற்றவேண்டுமென்றும் அதில் ஆதீனத்தின் பரம்பரை வரலாறுகள் முறையே கூறப்பட வேண்டுமென்றும் ஆதீனத்து அடியார்கள் பலர் நெடுநாளாக விரும்பியதை யறிந்து சுப்பிரமணிய தேசிகர் இவருக்குக் குமாரசாமித்தம்பிரான் மூலம் தெரிவித்தார். அங்ஙனம் செய்யவேண்டுமென்று தமக்கு நீண்ட நாளாக எண்ணம் இருந்ததென்றும் சந்நிதானம் கட்டளையிட்டது அனுகூலமாயிற்றென்றும் சொல்லிச் செய்வதற்கு இவர் உடன்பட்டார்.

கச்சியப்ப முனிவருடைய நூல்களில் இவர் மிக்க மதிப்பு வைத்துப் படித்தும் பாடஞ் சொல்லிக்கொண்டும் வந்தவராதலால், அவரிடம் இவருக்குப் பக்தி அதிகம். அவர் சிவஞான யோகிகளைப் போலவே புலமை வாய்ந்தவரென்பதும் உடன் படித்தவரென்பதும் இவருடைய கருத்து. இதனை அடிக்கடி எங்களிடத்தும் பிறரிடத்தும் இவர் சொல்லி வருவதுண்டு. சிவஞான யோகிகள் இயற்றிய செய்யுள் நூல்களிலும் வசன நூல்களிலும் மிக்க பயிற்சியுடையவராதையால் அவருடைய பயிற்சி உயர்ந்ததென்பதும், கச்சியப்ப முனிவர் அவருடைய மாணாக்கரென்பதும் சுப்பிரமணிய தேசிகருடைய கருத்து.

---

*சிவஞானமுனிவரெனவும் வழங்கப்பெறுவர்.

இந்த விவாதம் நெடுநாளாக நிகழ்ந்து வந்ததுண்டு. இரு திறத்தாரும் தம்பால் வந்தவர்களோடு பேசிக்கொள்வதேயன்றிச் சந்தித்தபொழுது நேரே தம்முள் பேசிக்கொண்டதில்லை. இவர், சிவஞானயோகிகளோடு கச்சியப்பமுனிவர் படித்தவரென்று பாடிவிடுவாரென நினைந்து கச்சியப்ப முனிவரைச் சிவஞான யோகிகளுடைய மாணாக்கரென்று பாட வேண்டுமென்று தேசிகர் இவருக்குத் தெரிவித்தார். அதற்கு இவருடைய மனம் உடன்பட வில்லை. அது தெரிந்த தேசிகர் மடத்துப் புத்தகசாலையிலிருந்த பழஞ்சுவடி ஒன்றை எடுத்துவரச்செய்து அதில் கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவருடைய மாணாக்கரென்று குறிப்பிட்டிருந்த,

(விருத்தம்)

"ஏர்தரு சாலி வாகன சகாத்தம்
ஆயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதா ரணவரு டத்தில்
இயைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தேதி பத்தினே டொன்று
தருசெவ்வாய் வாரம்பூ ருவத்திற்
சத்தமி புனர்பூ சத்திரு நாளில்
தவலருங் கும்பலக் கினத்திற்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான
தேவன்மா ணாக்கரின் முதன்மை
திகழ்ந்தூள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி லெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத்
தினகரன் முன்னிரு ளென்னத்
திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுத்திச்
சிறந்தபூ ரணமடைந் தனனே"

என்ற ஒரு செய்யுளைப் படித்துக் காட்டச்செய்தார்.

அப்பால் இவர் தேசிகருடைய நோக்கத்தை அறிந்து அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டு அக்கருத்தை அமைத்துப் பாடுவாராயினர். அது சிவஞான யோகிகள் சரித்திரத்திலுள்ள,

(விருத்தம்)

*"திருக்கிளர் முனிவ ஞஞ்சத் தியஞான தரிச னிக்குக்
கருக்கிளர் தரஞ்சா ராத பரஞ்சோதி கிடைத்த காட்சி

* மீ. பிரபந்தத்திரட்டு, 3941.

உருக்கிளர் துறைசை யெங்கள் சிவஞான யோகிக் குண்மைப்
பொருட்கிளர் கச்சி யப்ப முனிவரன் புணர்ந்த தொக்கும்"

என்னும் செய்யுளால் விளங்கும். அந்நூல் திருவாவடுதுறையில் தொடங்கப்பெற்றுத் திருவிடைமருதூருக்கு அருளக்கிய நிவிர்த்திக்காக இவர் போயிருந்தபொழுதும் செய்யப்பட்டு வந்தது; நடுநாட்டு வருணனையிற் பத்துப்பாடல்கள் வரையில்தான் நடைபெற்றது; எழுதியவன் யானே. அப்பால் தேகத்தளர்ச்சி இவருக்கு அதிகரித்து வந்தமையால் மேலே செய்யப்படாமற் போயிற்று. அந்நூலில் இவர் செய்த இறுதிச் செய்யுள்,

(கோச்சகக்கலிப்பா)

* "மருவுலகங் களிதூங்க † வண்சமயா சாரியராம்
இருவர்களுஞ் சந்தானத் திருவர்களு மவதரிக்கப்
பெருகுதவஞ் செய்ததெனிற் பிறங்குவள நடுநாட்டின்
அருகுதவிர் சிறப்புரைக்க வடியேனு லாகுவதோ"

என்பது அதன் இறுதியடியில் உள்ள 'அடியேனுலாகுவதோ' என்றதொடர் மேலே இவர் இயற்ற இயலாராயினரென்பதைத் திருவருள் குறிப்பிக்கின்றதென்று எல்லாரும் பலநாள் கழித்துச் சொல்லத் தொடங்கினர்கள்.

அது குமாரசாமித் தம்பிரான் விருப்பத்தின்படி செய்யப் பெற்றதென்பதும், கச்சியப்பமுனிவரே அச்சரித்திரத்தைப் பாட வல்லவரென்பதும் பின்வரும் பாடல்களால் விளங்கும்:

[ஆக்குவித்தோர்]

(விருத்தம்)

"குலவுமுரு கக்கடவுள் கருணையினே தாதனைத்தும்
கூட வோர்ந்தே
உலவுபுகழ்க் குமரகுரு பரமுனிவ னுதித்தமர
புதித்த மேலோன்
நிலவுபுக ழிலக்கணமு மிலக்கியமும் வரம்புகண்டோன்
நிகரொன் றில்லோன்
கலவுசிறப் புத்தமநற் குணங்களெலா மோருருக்கொள்
காட்சி போல்வான்."

---

* மீ, பிரபந்தத்திரட்டு, 3953.

† சமயாசாரியராம் இருவர் - திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார். சந்தானத்து இருவர்கள் - மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியாரென்பவர்கள்.

"கூடுபுகழ்க் கோமுத்திக் குருநமச்சி வாயனருள்
கொண்ட மேலோன்
பாடுபுகழ்ச் சித்தாந்த பாடியமுற் ரெருங்குணர்ந்த
பான்மை யாளன்
நீடுபுகழ்த் துறவொழுக்கந் தவருது காத்தோம்பும்
நெறியீல் வல்லோன்
தேடுபுகழ் வளர்குமர சாமிமுனி வரன்முனிவர்
செயசிங் கேறே."

[அவையடக்கம்]

"அன்னமுனி வரன்கனிவிற் சிவஞான யோகிவர
லாறு முற்றும்
நன்னர்வள முறப்பாடித் தருகவெனச் சொற்றமொழி
நலத்தை யோர்ந்தே
என்னவலி யுளமெனப்பா டுதற்கிசையேன் மறுப்பதற்கும்
இசையே னேனும்
சொன்னமொழி மருததிற மென்ரெருவா ரேதுதற்குத்
துணிபுற் றேனால்."

"நலம்பூத்த தென்கலையும் வடகலையும் பணிசெய்சிவ
ஞான யோகி
புலம்பூத்த வரலாற்றை யான்பாடப் புகுந்ததிறம்
புலவோர் தேரின்
வலம்பூத்த விலாமுறிய நகைப்பரெனும் வருத்தமுமென்
மனநீங் காதித்
தலம்பூத்த வஃதியற்றீர் தவிருதிரென் பாரொருவர்
தமைக்கா ணேனே."

"ஏய்ந்தவிளம் பூரணர்சே ஞவரையர் நச்சினர்க்
கினியர் மேலும்
வாய்ந்தபரி மேலழகர் மயங்குசிவ ஞானமா
தவத்தோன் சீர்த்தி
தோய்ந்தபுகழ்க் கச்சியப்ப முனிவர்பிரான் சொலிற்சொலலாம்
சொல்லா ரொன்றும்
பாய்ந்தநில வரைப்போர்மற் ரகத்தியனு மகத்துவமாப்
பாலிப் பானே."

"மிகப்பெரிய ஞெயசீர்ச் சிவஞான முனிவரன்சீர்
விளம்ப லாகும்
இகப்பின்மட மூடையேனு மெவ்வாற்ரு னென்னின்முனம்
இருவர் தேரு
நகப்படிவ மாய்வளர்ந்த சோதியையா ராதனைசெய்
நன்மை பூண்டோர்
உகப்பரிய மூன்றிழைநான் கிழைத்தீப மல்லாமல்
உளுற்ற வுண்டோ."

சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறைப் புராணம் இயற்றுவிக்க விரும்பியது

"திருவாவடுதுறைக்குச் சாமிநாத முனிவரென்பவராற் செய்யப்பெற்ற புராணம் ஒன்று உண்டு; இருந்தாலும் அதில் சிவஞான யோகிகளுடைய முறைப்படியே காப்பிய இலக்கணங்கள் அமைக்கப்பெறவில்லை. அம்முறையில் ஸ்தல புராணங்கள் பாடிவரும் பிள்ளையவர்கள் இந்தத் தலத்திற்குப் புராணம் இக்காலத்திற்கு ஏற்றபடி செய்தால் நாம் அதற்காகவும் இதுவரையில் இங்கிருந்து சிறப்பித்து வந்ததற்காகவும் மூன்று வேலி நிலங்கள் வாங்கித் தருவோம்" என்று சுப்பிரமணிய தேசிகர் சொல்லியனுப்பினர்; இவருக்கும் அங்ஙனம் செய்தலில் உடன்பாடே; அங்ஙனமே செய்யலாமென்றெண்ணியும் அசௌக்கிய மிகுதியால் அதனைப் பாடத் தொடங்கவில்லை.

திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா

தென்னாட்டிலிருந்து வந்த முதிய கவிராயர் ஒருவர் திருவாவடுதுறைக்குச் சிலேடை வெண்பா ஒன்றை இயற்றிக்கொணர்ந்து ஆதீனத்தலைவருக்கு அதனைப் படித்துக் காட்டினர். அதிற் பல பொருளொருசொல்லே சிலேடையாக அமைக்கப்பெற்றிருந்தது; ஒருவரும் பாராட்டவில்லை. ஆனாலும் வந்தவரைச் சும்மா அனுப்பக்கூடாதென்று நினைத்துத் தேசிகர் அவருக்கு ஸம்மானம் செய்து அனுப்பிவிட்டார். அதிற் சில பாடல்களைக்கேட்ட தம்பிரான்களிற் சிலர், "சிவஞானமுனிவர் முதலிய பெரிய கவிகள் எழுந்தருளியிருந்த இடமும், நீங்கள் பாடஞ் சொல்லிக்கொண்டும் நூல்களை இயற்றிக்கொண்டும் விளங்கும் இடமும் ஆகிய இந்தத் தலத்திற்குச் செய்யுள் செய்யும் ஆற்றலில்லாத அக்கவிராயரா

சிலேடை வெண்பாச் செய்கிறது? உங்களுடைய அருமையான வாக்கினல் ஒரு சிலேடை வெண்பா இயற்றித்தரவேண்டும்" என்று கேட்டுக்கொள்ள அவ்வாறே இவர் இயற்றத் தொடங்கினர். அதிற் காப்புச்செய்யுளும் நூலில் ஒரு செய்யுளுமே இயற்றப்பட்டன. தேகம் வரவர மெலிவடைந்து வந்த காலமான படியால் அந்நூல் முற்றுப்பெறவில்லை; காப்புச் செய்யுளின் முற்பாதியாகிய,

"சீர்வெண்பா மாலைத் திருவா வடுதுறையார்க்
கூர்வெண்பா மாலை யுரைப்பவே"

என்பது மட்டும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இக்காப்புச் செய்யுளை இவர் சொல்லியபொழுது சீர்வெண்பா மாலை யென்பதற்கு ஐயடிகள் காடவர்கோன் நாயனர் செய்த க்ஷேத்திரத்திருவெண்பாவென்றும் சிலேடை வெண்பா வென்பது ஊர்வெண்பா வென்னும் பிரபந்த வகையைச் சார்ந்ததென்றும் கூறினர்.

திருவிடைமருதூர் சென்றது

அப்பால் கால்வீக்கம், அடிவயிற்று வீக்கம், தோள்களின் மெலிவு, அன்னத்துவேஷம் முதலியவை அதிகரித்து இவரை வருத்தின. வந்து பார்த்த வைத்தியர்கள் அதனை இரத்தபாண்டு வென்னும் நோயென்று சொன்னர்கள். அந்நோயைப் பரிகரித்தற் பொருட்டுச் சுப்பிரமணிய தேசிகர் திருவிடைமருதூருக்கு இவரை அனுப்பி அங்கேயுள்ள சுட்டகோமடத்திலேயே தக்க வசதி ஏற்படுத்தித் திருவிடைமருதூர் அரண்மனை வைத்தியர்களைக் கொண்டு பார்க்கும்படி செய்வித்தார்.

இரவில் ஆகாரஞ்செய்துகொண்டு இரண்டு நாளைக்கு ஒரு முறை திருவாவடுதுறையிலிருந்து சென்று நானும் பிறரும் இவரைப் பார்த்து வந்தோம்.

இவருக்கு இரவிற் பெரும்பாலும் நித்திரை இராது. அக்காலத்தில் பெரியபுராணம் முதலாகிய நூல்களிலுள்ள பாடல்களைப் படிக்கச் சொல்லியும் முத்துத்தாண்டவர், பாவநாசமுதலியார், மாரிமுத்தா பிள்ளை முதலிய பெரியோர்கள் செய்த தமிழ்க் கீர்த்தனங்கள், அருணசல கவிராயரியற்றிய இராமாயணக் கீர்த்தனம், நந்தன் சரித்திரக் கீர்த்தனம் முதலியவற்றைச் சொல்லச் சொல்லியும் கேட்டு இவர் பொழுது போக்குவார்.

மஹந்யாஸ ஜபம்

தேக அசௌகரியம் இவருக்கு அதிகரித்தபொழுது சிறந்த வைதிகப் பிராமணர்களை வருவித்து அவர்களைக்கொண்டு யுவ வருஷம் புரட்டாசி மாதத்தில் ஸ்ரீ மஹாலிங்கமூர்த்திக்கு மஹந்யாஸ ஜபத்தோடு கால்மண்டலம் அபிஷேகம் முதலியனவும் இவர் செய்வித்தனர்; அதனைப் பிணி சிறிது நீங்கியும் சிலநாள் சென்றபின் திரும்பத் தோன்றி வருத்தத் தொடங்கிவிட்டது;

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்பது உண்மையன்றே?

நாளுக்கு நாள் இவருடைய நல்லுடல் மெலிவுறுவதை யறிந்து சுப்பிரமணியதேசிகர் திருவிடைமருதூருக்கு விஜயஞ் செய்து ஸ்வாமி தரிசனஞ் செய்துவிட்டு மடத்திற்கு வந்து இவரைப் பார்த்தனர்; அப்பொழுது இவர் திடுக்கிட்டு எழுந்து இரண்டு கைகளையும் சிரமேற் குவித்துக்கொண்டே ஒன்றும் பேசாமல் நின்றுவிட்டார். அவர் சற்றுநேரம் நின்று கவனித்து ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி அங்கேயுள்ளவர்களிடம் சொல்லிவிட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்றனர். ஆதீனகர்த்தர் இங்ஙனம் செய்வது வழக்கமல்லாமையால் எல்லோரும் வியப்புற்று இவர்பால் தேசிகருக்கு இருந்த நன்மதிப்பை நன்றாக அறிந்து பாராட்டினர்கள்.

திருவாவடுதுறைக்கு வந்தது

வியாதி குணப்படாமையைத் தெரிந்து இவரைத் திருவாவடுதுறையிலேயே வந்திருக்கும்படி தேசிகர் இவருக்குத் திருமுகம் அனுப்பினர். அப்படியே இவர் திருவாவடுதுறைக்கு வந்துவிட்டார். பூஜைசெய்வதற்கு முடியாமல் இவர் வருந்துவதை அறிந்த குமாரசாமித்தம்பிரான் நாள்தோறும் தம்முடைய பூஜையை முடித்துவிட்டுவந்து இவர் செய்துவரும் முறைப்படியே பூஜையை இவருடைய பார்வையிலேயே இருந்து செய்து பிரசாதத்தை அளித்து வந்தார். அப்பொழுது சின்ன ஒடுக்கப்பணி பார்த்து வந்த சுந்தரலிங்கத்தம்பிரானென்பவர் தேசிகருடைய கட்டளையின்படி இவருக்கு எந்தச் சமயத்தில் எந்தப் பொருள் வேண்டுமோ, அதனை விசாரித்து உடனுடன் சேர்ப்பித்து வந்தார்.

புதியவர்களாகப் பாடங்கேட்க வந்தவர்களுக்கு மாணாக்கர் களே பாடஞ்சொல்லி வந்தார்கள்; கடினமான பாகங்களேமட் டும் இவரிடம் கேட்டுத் தெளிந்துகொள்வார்கள்.

இரவில் தேவாரம் திருவாசகம் முதலியவற்றைப் படிப்பித் துக் கேட்டுவருவார். கடினமான பதங்களைப்பற்றியோ விஷயங் களைப்பற்றியோ கேட்டால் சுருக்கமாக விடையளிப்பார்.

மாயூரம் சென்றது

அப்பால் துலாமாதத்தில் தீபாவளி ஸ்நானத்திற்கு வர வேண்டுமென்று இவருடைய குமாரர் சிதம்பரம் பிள்ளை வந்து அழைக்கவே, மாயூரஞ் செல்லுவதற்கு இவர் புறப்பட்டார். அதனை யறிந்த சுப்பிரமணிய தேசிகர் தீபாவளி ஸ்நானம் செய்த பின்பு தரித்துக்கொள்ளும்படி வழக்கம்போலவே அப் பொழுது இவருக்கும் உடனிருந்தவர்களுக்கும் வஸ்திரங்கள் கொடுத்து மேனாப் பல்லக்கை வருவித்துச் சௌக்கியமாக அதிற் செல்லும்படி செய்வித்து உடன் செல்லக்கூடியவர்களையும் அனுப்பினர். நான்மட்டும் இவருடைய கருத்தின்படியே திருவா வடுதுறையில் இருந்துகொண்டு இடையிடையே மாயூரஞ்சென்று பார்த்துவந்தேன்.

எனக்கு வஸ்திரம் வாங்கி அளித்தது

தீபாவளிக்கு முதல்நாள் திருவாவடுதுறையில் மடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மற்ற அன்பர்களுக்கும் தேசிகர் வஸ்திரம் அளிப்பது வழக்கம். நான் இருப்பது அவருடைய ஞாபகத் துக்கு வராமையால் எனக்கு வஸ்திரம் கொடுக்கப்படவில்லை. நானும் அதனைப் பெறவேண்டுமென்று முயலவில்லை. அதற்கு முன்பு பலமுறை பெற்றவற்றை நினைந்து அப்போது அளியாத தைக் குறித்து வருந்தவும் இல்லை. எனக்கு வஸ்திரம் கொடுக்கப் படவில்லை யென்பதை அப்பொழுது திருவாவடுதுறையிலிருந்து மாயூரம் சென்ற காரியஸ்தரொருவர் மூகமாகத் தெரிந்து இவர் வருத்தமடைந்தார்.

துலாமாதமானவுடன் இவர் திருவாவடுதுறைக்கு வர எண்ணியிருப்பது தெரிந்தமையால் உடன் இருந்து அழைத்து வருவதற்காக மாயூரஞ் சென்று இவரைப் பார்த்தேன். பார்த்த வுடன், "தீபாவளிக்கு மடத்திலிருந்து வஸ்திரம் கிடைக்கவில்லை யாமே" என்று சொல்லிவிட்டுக் கடையிலிருந்து விலைகொடுத்து

ஒரு புதிய பத்தாறு மடி வருவித்து மஞ்சள் தடவி என்னிடம் கொடுத்து அதைத் தரித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அப்படியே தரித்துக்கொண்டேன்.

இராமாயணப் புத்தகங்கள்

அப்பால் சில தினங்கள் மாயூரத்திலேயே இருந்தேன். ஒரு நாள் கடைத்தெருவிற்குப் போய்ப் பார்த்தபோது ஒரு புத்தகக் கடையில் கம்பராமாயணம் ஆறு காண்டங்களும் உத்தர காண்டமும் இருந்தன. ஏழு ரூபாய் விலையென்று கடைக்காரர் சொன்னார். அதற்கு முன்பு அந்நூலைப் பாடங்கேட்கையில் புத்தகமில்லாமல் இரவற் புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்த எனக்கு அவற்றை வாங்கிவிட வேண்டுமென்ற அவா அதிகமாக இருந்தது. ஆனால் வாங்குவதற்கோ கையிற் பணமில்லை. உடனே புறப்பட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்று அங்கே இருந்த என் சிறிய தந்தையாரிடம் (சிறியதாயாரின் கணவரிடம்) ஏழு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு வந்து அந்தப் புத்தகங்களை விலைக்குப் பெற்றுக்கொண்டேன். எனக்கு அப்போது உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே சென்று பிள்ளையவர்கள் கையால் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்து இவரிடம் கொடுத்தேன். "என்ன புத்தகங்கள்?" என்றார். "இராமாயணம்; இவற்றை ஐயா அவர்கள்கையாற் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது என்னுடைய விருப்பம்" என்றேன். "எப்படி இவை கிடைத்தன?" என்று இவர் வினவவே நான், "விலைக்கு வாங்கினேன்" என்றேன். "பணம் ஏது?" என்றபோது நடந்ததைச் சொன்னேன். இக்கவிச் சக்கரவர்த்தி புத்தகங்களை வாங்கிப் பார்த்துவிட்டு, "எதற்காகச் சிரமப்பட்டு விலைகொடுத்து வாங்க வேண்டும்? என்னிடம் சொல்லக்கூடாதா? என்னிடமுள்ள புத்தகங்களை எடுத்துக்கொள்ளலாமே" என்று சொல்லிவிட்டு அவற்றை எனக்கு அன்புடன் அளித்தார். எனக்கு ஒருவிதமான கவலையும் ஏற்படக்கூடாதென்று இவர் எண்ணியிருந்ததை இவருடைய அன்பார்ந்த செயல்களும் வார்த்தைகளும் புலப்படுத்தின.

திருவாவடுதுறைக்கு வந்தது

அப்பால் மாயூரத்திலிருந்து மேனுவிலேயே இவர் திருவாவடுதுறைக்கு வந்தார். நானும் மற்றவர்களும் உடன் வந்துவிட்டோம்.

நோய் வரவர அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. வைத்தியர்கள் தக்க மருந்துகள் கொடுத்துவந்தும் அது தணியவே இல்லை. இவருக்கு விருப்பமுள்ள உணவுகள் இன்னவையென்று எனக்குத் தெரியுமாதலால், அக்காலத்தில் அவ்வூரில் இருந்த என் சிறிய தாயாரிடம் சொல்லி அவற்றைச் செய்வித்து எடுத்துச் சென்று இவருக்குக் கொடுத்துவந்தேன்; இவர் பிரியமாக உண்டு வந்தனர்.

நெல்லையப்பத் தம்பிரான் வெள்ளித்தோன்னை அளித்தது

தம்மிடமிருந்த வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் பூஜைக்கே இவர் உபயோகப்படுத்தி விட்டமையால் கஞ்சி பால் முதலியவற்றை உண்ணுவதற்குத் தக்க வெள்ளிப்பாத்திரம் இல்லை. நாங்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு வெள்ளித்தோன்னை செய்வித்து அனுப்பவேண்டுமென்பதைக் குறிப்பித்து இவர் திருவிடைமருதூர்க் கட்டளை விசாரணைத் தலைவராக அப்போது இருந்த நெல்லையப்பத் தம்பிரானுக்கு ஒரு கடிதம் எழுதுவித்து அதன் தலைப்பில்,

(விருத்தம்)

"எல்லையப்ப னையவிதி யிவற்குமேற் போயவிது
இவரே மாறச்
சொல்லையப்பன் மலங்கடிந்து துகளிலாச் சிவானந்தத்
தோயந் தோயத்
தொல்லையப்பன் துறைசைநமச்சி வாயவப்பன் திருவடியே
சூட்டுஞ் சென்னி
நெல்லையப்ப மூனிவர்பிரா னிக்கடிதம் நோக்கிமகிழ்
நிரம்ப மாதோ"

[எல்லை அப்பனைய - யுகாந்தப் பிரளய வெள்ளத்தை உடையவனாகிய, அப்பு - நீர். விது - திருமால். சொல் ஐயம்; சொல் லயமென்று பிரித்தலும் பொருந்தும்.]

என்னும் பாடலை இயற்றி அமைப்பித்து அனுப்பினர். உடனே அவர் தமது சம்பளத் தொகையிலிருந்து வெள்ளித்தோன்னை ஒன்று செய்வித்துக் கொடுத்தனுப்பினர். அது பின்னர் இவருக்கு மிக உபயோகமாக இருந்து வந்தது.

'கோடுப்பவன் கேட்பானை?'

மடத்திற்கு வருகிற பிரபுக்களும் வடமொழி தென்மொழி வல்லுநரும் ஏனையோரும் வந்துவந்து பார்த்துவிட்டு இவருடைய

தேக நிலைமையை அறிந்து மனம் வருந்திச் செல்வார்கள். ஒரு நாள் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் இவரைப் பார்த்தற்கு வந்தார்; அவர் இவருக்கு இளமையிலிருந்தே நண்பராக உள்ளவர். அவர் இவருடைய தளர்ச்சியை அறிந்து அருகில் வந்து இவரை நோக்கி, "ஐயா, இனிமேல் தங்களைப்போன்ற மகான்களை எங்கே பார்க்கப் போகிறோம்! தமிழ் நாட்டிற்கும் இந்த மடத்திற்கும் அணிகலனாக விளங்கும் நீங்கள் இவ்வளவு மெலிவை அடைந் திருப்பது என் மனத்தை வருத்துகின்றது. நாங்கள் இனி என்ன செய்வோம்! தங்கள் விஷயத்தில் தக்க உதவி செய்ய வேண்டுமென்று நெடுநாளாக எனக்கு ஓரெண்ணம் இருந்து வந்தது. இப்போது அதனை விரைவிற் செய்யவேண்டுமென்று தோற்றுகின்றது. என்ன செய்யச் சொன்னாலும் செய்யக் காத் திருக்கிறேன்; உத்தரவுசெய்யவேண்டும்" என்று வருந்திக் கேட் டுக்கொண்டனர். இவர் அவரைப் பார்த்து, "இங்கே என்ன குறைவு இருக்கின்றது? குறைவில்லாமல் சந்நிதானம் எல்லாம் செய்வித்து வருகிறது. ஏதேனும் குறை இருப்பதாகத் தெரிந்தா லல்லவோ உங்களிடம் நான் சொல்லுவேன்?" என்று விடை யளித்தார்.

கேட்ட அவர் விட்டுவிடாமல் மேலே மேலே, "அடியே னிடத்தில் தங்களுக்குக் கிருபையில்லை; என் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று வற்புறுத்திப் பலமுறை போராடினர். இவர் ஒன்றும் வேண்டுவதில்லை யென்பதை வார்த்தைகளாற் கூறாமல் கரத்தாலும் கரத்தாலும் குறிப்பித் தார். அப்பால் அவர், "நான் என்ன செய்வேன்! இவர்கள் விஷயத்தில் யாதொரு பணியும் செய்வதற்கு இயலவில்லையே!" என்று வருந்தி விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அப்பால் இந்நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டும் இவர் வேண்டாமென்று சொன்னதுபற்றிக் கோபமுற்றும் அங்கே அயலில் நின்ற சவேரிநாதபிள்ளை இவரைப் பார்த்து, "நீங்கள் இதுவரையில் எத்தனையோ ஆயிரக்கணக்கான திரவியங்களைச் சம் பாதித்தும் குடும்பத்திற்கு யாதொரு செளகரியமும் செய்விக்க வில்லை; வேறு வருவாயும் இல்லை; இதற்காகப் பிறரிடத்தே சென்று கேட்டு வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று இப்பொழுது நான் தங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவில்லை. தக்க

கனவானுகிய ஒருவர் வலியவந்து உதவி செய்வதாக வற்புறுத் துங் காலத்திலும் தாங்கள் ஒன்றும் வேண்டாமென்று சொல்லி விடலாமா? எத்தனையோ லட்சக்கணக்கான திரவியங்களை யுடைய அவருக்கு எதையேனும் உங்களுக்குக் கொடுப்பதனற் குறைந்து போமா? நல்ல மனமுடையவர்போற் காணப்படுகி றீரே. இப்பொழுது உங்களுக்குக் கடன் மிகுதியாக இருப்பத னல் ஏதேனும் திரவியம் கேட்கலாம்; இல்லையாயின் குமாரருக்கு ஒரு வேலை செய்விக்க வேண்டுமென்றும் சொல்லலாம்; செய்வித் தற்கு அவருக்கு ஆற்றலும் உண்டு. ஒன்றையும் வேண்டாமல் அவருடைய விருப்பத்தை மறுத்தது எனக்கும் பிறருக்கும் மிக வும் வருத்தத்தை உண்டுபண்ணுகின்றது. இனிமேல் இப்படி யிருத்தல் கூடாது; குடும்பத்திற்குத் தக்க சௌகரியம் பண்ணு விக்க வேண்டும். மிகவும் சுகமாகவே இதுவரையில் வாழ்ந்துவந்த சிதம்பரம்பிள்ளை இனி என்ன செய்வார்? நான் கேட்டுக்கொள் கிறவரம் இதுதான். இனிமேல் கவனிக்கவேண்டும்'' என்று அன் போடும் வருத்தத்தோடும் தெரிவித்து மேலும் மேலும் அதைப் பற்றியே சொல்லிக்கொண்டு வந்தனர்.

இவர் இடையிலே பேச்சை நிறுத்தும்படி குறிப்பித்து, ''என்னப்பா, தோற்றினபடியெல்லாம் பேசுகிறாய்? கொடுப் பவனுக இருந்தால் என்னைக் கேட்டுத்தானு கொடுப்பான்? அவன் எந்தக் காலத்திலும் பிறருக்கு ஒன்றும் கொடுத்ததே யில்லை. எனக்கு அது நன்றுகத் தெரியும். நான் வேண்டாமென்று சொல்லியபின்பும் பலமுறை வற்புறுத்தியதைக் கொண்டே அவ னுடைய நிலைமையை அறிந்து கொள்ளலாமே. நான் கேட்டிருந் தால் அவன் ஒன்றையுமே கொடான். கேட்டேனென்ற அப வாதந்தான் எனக்கு உண்டாகும். இளமை தொடங்கி அவ னுடன் பழகியிருக்கிறேன். அவன் யாருக்கும்கொடுத்ததே இல்லை. பொருளைச் சம்பாதித்தலில் அதிக முயற்சியும் விருப்பமும் உடையவன். நான் கேளாமலிருந்தது உத்தமம். கேட்டிருந்தால் ஒன்றும் கொடாமற் போவதுடன் அவன் பல இடங்களில் நான் கேட்டதாகச் சொல்லிக்கொண்டு திரிவான். இனிமேல் இப்படிச் சொல்லாதே. உசிதமாகத் தோற்றினால் நான் கவனியாமல் இருப்பேனு?'' என்றார். அப்பால் சவேரிநாத பிள்ளை விஷயம் தெரிந்து சமாதான முற்றிருந்தனர்.

திருவாரூர்க்கோவை

இவர் நித்திரை செய்யாமல் தளர்வுற்று இருத்தலையறிந்து ஒருவர் மாறி ஒருவர் இவரைக் கவனிப்பதற்கு விழித்துக் கொண்டே இருப்போம். அங்ஙனம் இருக்கும் நாட்களுள் ஒரு நாள் ஓசையுண்டாகாமல் மெல்லப் படித்துக் கொண்டேயிருக்க நினைந்து திருவாரூர்க் கோவைச் சுவடியைக் கையில் வைத்திருந்தேன். அதை இன்ன நூலென்று அறிந்து முதலிலிருந்தே படிக்கும்படி இவர் சொன்னார்; அங்ஙனம் படிக்கும்பொழுது,

(கட்டளைக்கலித்துறை)

(ஐயம்)

"வேதாவின் தண்ணிட மோமக வானுறை விண்ணிடமோ
வாதா சனவிறை நண்ணிட மோவிந்த மண்ணிடமோ
காதாருங் கண்ணி யிடத்தார் தியாகர் கமலையன்னூர்
பாதார விந்தத் துகள்வீழ மாதவம் பண்ணியதே"

(துணிவு)

"கார்க்குன் றுரித்தவர் செம்பொற் றியாகர் கமலையன்னூர்
வார்க்குன் றிரண்டினும் வேரோடும் வல்லியும் வள்ளையிலே
சேர்க்கின்ற தோடும் பிறைமே லிருக்குந் திலகமுநாம்
பார்க்குந் தொறுமிவர் பாராரென் றென்று பகர்கின்றவே"

என்ற செய்யுட்களைக் கேட்டு, "மிகவும் நன்றாயிருக்கின்றன" என்று சொன்னதுடன் மேலே வாசிக்கும்படியும் சொன்னார். அப்படியே படித்து வருகையில் அங்கங்கேயுள்ள செய்யுட்களின் நயத்தையும் நடையையும் அந்த நூலாசிரியருடைய குண விசேஷங்களையும் மெல்லப் பாராட்டிக்கொண்டே யிருந்தார்.

ஐயங்களைப் போக்கியது

மற்றொருநாள் இரவில் அகத்தியத் திரட்டைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் உள்ள, "தில்லைச் சிற்றம்பலம்" என்னும் பதிகத்தில் க0 - ஆவது செய்யுளில் வந்துள்ள 'ஊற்றத்தூர்' என்னும் ஸ்தலம் எங்குள்ளதென்று கேட்டபொழுது அது வைப்புஸ்தலங்களுள் ஒன்றென்றும் ஊட்டத்தூரென்று வழங்கப் படுகின்றதென்றும் அதிலுள்ள மூர்த்திக்குச் சுத்தரத்தினேசுவர ரென்பது திருநாமமென்றும் நாக்குக் குழறலுடன் சொன்னார். அப்பால், திருவாசகத்தில் திருக்கோத்தும்பி என்னும் பகுதி

யைப் படிக்கும்படி சொன்னர்; அதைப் படித்து வருகையில், "நோயுற்று மூத்தநா ளுந்துகன்று யிங்கிருந்து" என்பதிலுள்ள 'நுந்துகன்றுய்' என்பதற்குப் பொருள் விளங்கவில்லை என்றேன். 'வெறுத்துச் செலுத்தப்பட்ட கன்றைப்போன்று' என்று அதற்கு நாக்குழறலுடன் விடையளித்தார். அப்பொழுதுள்ள இவருடைய நிலைமையை அறிந்து ஒன்றும் தோன்றாமல், "எவ்வளவோ அரிய விஷயங்களை எளிதிற் சொல்லும் பெரியாரை அடுத்திருந்தும் இதுவரையில் விசேஷமாக ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் இருந்தோமே. இனி அரிய விஷயங்களை யார் சொல்லப்போகிறார்கள்!" என்ற மன வருத்தத்துடன் இவரைக் கவனித்துக்கொண்டே இருந்தேன்.

மாயூரத்திலிருந்து இவருடைய தேவியாரும், குமாரரும் இவருடைய தேக நிலையை அறிந்து திருவாவடுதுறைக்கு வந்து ஸ்திரமாக இருந்து கவனித்துக்கொண்டு வந்தார்கள்.

வைத்தியன் கூறியது

இவருடைய தேகஸ்திதி வரவர மெலிவையடைந்து வருவதைத் தெரிந்துகொண்ட சுப்பிரமணியதேசிகர் வலயவட்டமென்னும் ஊரிலுள்ள தனுக்கோடி யென்ற சிறந்த வைத்தியனை வருவித்து இவருடைய கையைப் பார்த்து வரும்படி அனுப்பினர். அவன் வந்து கைபார்த்துவிட்டு இவரிடத்தில் ஒன்றும் சொல்லாமல் புறத்தே வந்து எங்களிடம், "இன்னும் மூன்று பொழுதிலே தீர்ந்துவிடும்" என்று 'வெட்டென'ச் சொல்லிவிட்டுச் சென்றான். அவன் அங்ஙனம் கூறியது எங்களுக்கு இடி விழுந்தது போல இருந்தது. 'மிகவும் துக்ககரமான செய்தியைச் சொல்லுகிறோமே' என்பதையேனும், 'கிடைத்தற்கரிய ஒருவருடைய வியோகத்தைப் பற்றித் துணிந்து சொல்லுகிறோமே' என்பதையேனும் நினையாமல் அந்த வைத்தியன் பளிச்சென்று சொன்னது கேட்டு ஒருபாற் சினமும் ஒருபால் வருத்தமும் உடையவர்களானோம். நோயின் இயல்பையும் மருந்துகொடுக்க வேண்டும் முறையையும் அல்லாமல் வேறொன்றையும் அறியாத அவன் நோயாளிகள் யாவரையும் ஒரு தன்மையினராகவே பாவிப்பானென்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். அவன் சொல்லியதை இவருக்கு நாங்கள் சொல்லவில்லை. அவ் வைத்தியன்

தாதுக்களைப் பார்த்துச் சொல்வதில் அதிசமர்த்தனுகையால் அவன் வார்த்தையை நம்பினேம்.

சவேரிநாத பிள்ளைக்காகக் கடிதங்கள் எழுதுவித்தது

தம்முடைய தேகஸ்திதி மிகவும் தளர்ச்சி அடைந்துகொண்டு வருவதையறிந்த இவர் தம்மிடத்திற் படிக்கும் வியாஜத்தை வைத்துக்கொண்டு பல வருஷங்களாக இருந்து வேறொரு பயனையும் கருதாமல் தமக்குப் பணிவிடை செய்துகொண்டும் தம் குடும்பக் காரியங்களைக் கவனித்துக்கொண்டும் உண்மையாக நடந்துவந்த சவேரிநாத பிள்ளைக்கு விவாகம் செய்வித்து ஏதேனும் உபகாரம் செய்து சௌகரியப்படுத்தி வைக்கவேண்டுமென்று எண்ணினர். தம்முடைய நண்பர்களாகிய முன்ஷீப் வேதநாயகம் பிள்ளை, வரகனேரி சவரிமுத்தா பிள்ளை, புதுச்சேரி சவராயலு நாயகர், காரைக்கால் தனுக்கோடி முதலியார் முதலிய கிறிஸ்தவ கனவான்களுக்கும், பட்டீச்சுரம் ஆறுமுகத்தாபிள்ளை, சோழன்மாளிகை இரத்தினம் பிள்ளை முதலியவர்களுக்கும் தம் எண்ணத்தைப் புலப்படுத்தித் தனித்தனியே கடிதம் எழுதும்படி என்னிடம் சொன்னர். அப்படியே இவருடைய குறிப்பறிந்து எழுதினேன். ஒவ்வொரு கடிதத்தின் தலைப்பிலும் வழக்கம் போலவே அவர்கள்மீது ஒவ்வொரு பாடல் இவரால் அந்தத் தளர்ந்த நிலையிலும் இயற்றிச் சேர்ப்பிக்கப்பெற்றது. அச்செய்யுட்கள் மிகவும் சுவையுடையனவாக இருந்தன. சொல் மாத்திரம் தளர்ச்சிமிகுதியால் குழறி வந்ததேயன்றி அறிவின் தளர்ச்சி சிறிதேனும் உண்டாகவில்லை. சவேரிநாத பிள்ளையை அழைத்து அக்கடிதங்களை அளித்து, "அப்பா, சவேரிநாது, இக்கடிதங்களை உரியவர்களிடம் கொடுத்து அவர்கள் செய்யும் உதவியைப் பெற்று விவாகம் செய்துகொண்டு சௌக்கியமாக வாழ்ந்திருப்பாயாக; உன்னுடைய செயல் மிகவும் திருப்தியைத் தந்தது" என்றார். அவர் கண்ணீரொழுக அக்கடிதங்களை வணக்கஞ்செய்து பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ அக்கினிலிங்க சாஸ்திரிகள்

மடத்திற்கு வரும் ஸம்ஸ்கிருத வித்துவான்களும் பிற வித்துவான்களும் சுப்பிரமணிய தேசிகரைப் பார்த்து அவரோடு சல்லாபம் செய்துவிட்டு இவருக்குள்ள அசௌக்கியத்தைப்பற்றிக்

கேள்வியுற்று வந்து வந்து பார்த்துச் சிறிதுநேரம் இருந்து இவர் தளர்ச்சி அடைந்திருப்பதை அறிந்து வருந்திச் செல்வார்கள். ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியர் கிரந்தங்களிலும் திருவியலூர் ஐயா அவர்கள், ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதர், ஸ்ரீமத் நீலகண்ட தீக்ஷிதர் கிரந்தங்களிலும் நல்ல பழக்கமுடையவரும் சிவபக்திச் செல்வம் வாய்ந்தவரும் விபூதிருத்திராக்ஷதாரண முடையவரும் தோற்றப் பொலிவுள்ளவரும் இவர்பால் மிக்க அன்புடையவரும் வயோதிகருமாகிய கஞ்சனூர் ஸ்ரீ அக்கினிலிங்க சாஸ்திரிகளென்பவர் பார்க்க வந்தார்; இவருடைய உடல் நிலையை அறிந்து வருத்தமடைந்தார். அவருடைய சைவத் திருக்கோலத்தைக்கண்டு இவர் அதில் மிகவும் ஈடுபட்டு உள்ளம் குளிர்ந்து உருகிக் கண்ணீர் வீழ்த்தினர். பின்பு சாஸ்திரிகளை நோக்கி ஏதாவது சொல்ல வேண்டுமென்று இவர் குறிப்பித்தார். அப்படியே அவர் மேற் கூறிய பெரியோர்களுடைய வாக்கிலிருந்து சிவபெருமானுடைய பரத்துவத்தைத் தெரிவிக்கும் சில சுலோகங்களைச் சொல்லிப் பொருளும் கூறிக்கொண்டே வந்து ஸ்ரீ சங்கராசாரியார் செய்த சிவானந்தலஹரியிலுள்ள, "ஸதாமோஹாடவ்யாம்" என்ற சுலோகத்தைச் சொல்லிப் பொருளும் சொன்னர். இப்புலவர் சிரோமணி அதில் ஈடுபட்டு அவரைச் சும்மா இருக்கும்படி குறிப்பித்துவிட்டு ஓர் ஏடும் எழுத்தாணியும் கொண்டுவரும்படி குறிப்பித்தார். நான் அவற்றைக் கொண்டுவரவே அந்தச் சுலோகத்தின் மொழிபெயர்ப்பாக ஒரு செய்யுளை இயற்றி மெல்லச் சொன்னர். நான் எழுதிக்கொண்டேன். அச்செய்யுள் வருமாறு:—

(விருத்தம்)

"மோகமா மடவி திரிந்தரி வையர்தம்
மூலைக்குவட் டிடைநட மாடித்
தாகமா ராசைத் தருக்குலந் தோறும்
தாவுமென் புன்மனக் குரங்கைப்
பாகமார் பத்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்கயான் கொடுத்தேன்
ஏகநா யகனே தில்லையி லாடும்
இறைவனே யெம்பெரு மானே."

எப்பொழுதும் இவருக்கு ஸ்ரீ நடராஜமூர்த்தியின் குஞ்சித சரணத்திலேயே ஞாபகம் இருக்குமாதலின் இந்தச் செய்யுளின்

ஈற்றடி அந்நினைவிலெழுந்து சுலோகத்தின் ஈற்றடிக்குச் சற்று வேறுக அமைந்தது. அதைக் கண்ட நாங்கள் இந்தத் தளர்ச்சியிலும் பெரியோர்களிடத்திற் சம்பாஷணை செய்யும் இயல்பும் அரிய விஷயத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்னும் அவாவும் ஸ்ரீ நடராஜமூர்த்தியினிடத்துத் திடமான பக்தியும் இவருக்கு இருத்தலை அறிந்து வியந்து இவருடைய தளர்ச்சியை நினைந்து வருந்தினேம்.

பின்பு அந்தச் சாஸ்திரிகள் ஈசுவரத்தியானம் செய்து கொண்டே இருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டுப் பிரிவாற்றுமல் இவரிடம் விடைபெற்றுச் சென்றார்.

பிறரும் நானும் இவரை இடைவிடாது பாதுகாத்துக் கொண்டே வந்தோம். அப்போது திருவாவடுதுறையில் ஸ்ரீ கோமுத்தீசுவரருக்குப் பிரமோத்ஸவமும் மடத்தில் தைக் குரு பூஜையும் நடைபெற்று வந்தனவாதலால் தம்பிரான்கள் முதலியவர்களுடைய திருக்கூட்டமும் பல இடங்களிலிருந்து வந்த ஸம்ஸ்கிருத வித்துவான்களுடைய குழாமும் தமிழ் வித்துவான்களுடைய கூட்டமும் சைவப்பிரபுக்களின் குழுவும் மற்றவர்களின் தொகுதியும் நிறைந்திருந்தன; மடத்திலும் கோயிலிலும் திருவீதி முதலிய இடங்களிலும் அலங்காரங்கள் செய்யப்பெற்றிருந்தன; அவற்றால் திருவாவடுதுறை சிவலோகம்போல் விளங்கியது.

சுப்பிரமணிய தேசிகர் விசாரித்துக்கொண்டே இருந்தது

இவருடைய அசௌக்கிய நிகழ்தியைத் தெரிந்து சுப்பிரமணிய தேசிகர் அடிக்கடி பார்த்துவரும்படி தக்கவர்களை அனுப்பித் தெரிந்துகொண்டேயிருந்ததன்றி அவ்வப்போது வந்து சொல்லும்படி எனக்கும் கட்டளையிட்டிருந்தார். அப்படியே சென்று இவருடைய நிலையைத் தெரிவித்துக்கொண்டு வந்தேன்.

தை மாதம் 20-ஆம்தேதி மங்களவாரம் (1-2-1876) காலையிலிருந்து இவருக்குத் தேகத்தளர்ச்சி முதலியன அதிகரித்துக்கொண்டே வந்தன. அன்று இரவில் ஐந்து நாழிகைக்கு மேற்பட்டு இவருடைய உறவினர் ஒருவர்மீது ஏதோ ஒரு பெண் தெய்வம் ஆவேசமாக வந்து, "நான் இவர்களுடைய குலதெய்வமாகிய அம்மன்; பலவருஷங்களாக எனக்குப் பூசை போடுதலை இவரும் இவரைச்சார்ந்தவர்களும் மறந்துவிட்டார்கள். அதனாலே

தான் இவ்வளவு அசௌக்கியங்கள் இவருக்கு நேர்ந்தன. இனி மேலாவது எனக்குப் பூசைபோட்டால் இவருடைய அசௌக்கியத்தைத் தீர்த்து விடுவேன். நீங்கள் கவலைப்படவேண்டாம். இவர் மிகவும் நல்லவராதலால் நான் வலியவந்து சொன்னேன். இனி அதைச் செய்வதற்குப் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுங்கள்'' என்று சொல்லியது. அதை இவருடைய தேவியாராகிய காவேரியாச்சி ஒப்புக் கொண்டனர். இவரும் அக்குலதெய்வம் உண்மையையும் அதற்குத் தாம் பூசை போடாதிருத்தலையும் தம் முடைய முகபாவத்தாற் குறிப்பித்தார். ஆனல் ஆவேசங் கொண்டோரிடத்தில் இவருக்கு நம்பிக்கை யில்லை. மற்றவர்கள் பூசைபோட்டால் நல்லதென்று சொன்னர்கள். அந்தப்படியே ஒரு ரூபாயை மஞ்சள் நீரில் நனைத்த துணியில் இவருடைய தேவியார் முடிந்துவைத்துப் பிரார்த்தனை செய்துகொண்டார். அவ்விதம் செய்தாற் சௌக்கியப்படலாமென்ற எண்ணம் சிலருக்கு உண்டாயிற்று.

அன்றைத்தினம் கோயிலில் ஐந்தாம் திருவிழாவாதலால் ஸ்ரீ கோமுத்தீசர் ரிஷபாரூடராய்க் கோபுரவாயிலில் எழுந்தருளியிருப்பதை அறிந்து தரிசனத்திற்கு நான் அங்கே சென்றேன். அப்போது பரிவாரங்களுடன் வந்து தரிசனம் செய்துகொண்டே நின்ற சுப்பிரமணியதேசிகர் என்னை அழைத்துப் பிள்ளையவர்களுடைய தேகஸ்திதியைப்பற்றிக் கவலையுடன் விசாரித்தார்; ''பிறர் பேசுவதை அறிந்து கொள்கிறார்கள்; உத்தரம் கூறுவதற்கு மாத்திரம் அவர்களால் இயலவில்லை'' என்றேன். அதனை அவர் கேட்டு மிகவும் வருத்தமடைந்ததுடன், ''இந்த நிலையிலாவது பிள்ளையவர்கள் இங்கே இருக்கிறார்களென்ற பேச்சிருந்தால் மடத்திற்கு மிகவும் கௌரவமாக இருக்கும். ஸ்ரீ கோமுத்தீசர் திருவருள் என்ன செய்கின்றதோ!'' என்று சொன்னதோடு போய்க் கவனித்துக் கொண்டிருக்கும்படி எனக்கு உத்தரவிட்டார்.

'அடைக்கலப் பத்து'

உடனே சென்று நானும் சவேரிநாத பிள்ளை முதலியோரும் இவரைக் கவனித்துக்கொண்டு அயலிலே இருந்தோம். பால சிறிது சிறிதாகக் கொடுத்து வந்தோம். ஸ்ரீ கோமுத்தீசுவரர் ரிஷபாரூடராகத் திருவீதிக்கு எழுந்தருளினர். இவருடைய

குறிப்பின்படி நாங்கள் தேங்காய் பழம் கற்பூரம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு சென்று தீபாராதனை செய்வித்து ஆதிசைவர் கொடுத்த விபூதிப் பிரசாதத்தைக்கொணர்ந்து இவர்பாற் சேர்ப்பித்தோம். அதை இவர் மெல்ல வாங்கித் தரித்துக்கொண்டார்.

சிவபதம் அடைந்தது

பதினைந்து நாழிகைக்கு மேற்பட்டு இவருக்கு ஸ்வாதீனத் தப்பும் தேகத்தில் ஒரு துவட்சியும் உண்டாயின. அதனை யறிந்த சவேரிநாத பிள்ளை இவருடைய பின்புறத்திற் சென்றிருந்து இவரைத் தம்முடைய மார்பிற் சார்த்தி ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டார். அப்பொழுது சில நாழிகைவரையில் இவருக்குப் பிரக்ஞை இல்லை; சிலநேரம் கழித்துப் பிரக்ஞை வந்தது. உடனே திருவாசகத்தில் ஏதேனும் ஒரு பாகத்தைப் படிக்க வேண்டும் என்னும் குறிப்போடு, "திருவா" என்றார். அக் குறிப்பை அறிந்து அப்புத்தகத்தை எடுத்துவந்து அடைக்கலப் பத்தை வாசித்தேன்; கண்ணை மூடிக்கொண்டே இவர் கேட்டு வந்தார். அப்பொழுது இவருக்கு உடலில் ஓர் அசைவு உண்டாயிற்று. உடனே நாங்கள் சமீபத்திற் சென்றபொழுது வலக் கண்ணைத் திறந்தார். அதுதான் ஸ்ரீ நடராஜமூர்த்தியினுடைய குஞ்சித சரணத்தை இவர் அடைந்த குறிப்பாக எங்களுக்குத் தோற்றியது. அப்போது இவருக்குப் பிராயம் சுக. அந்தச் சமயத்தில் இவருடைய சரீரத்தைச் சார்த்திக்கொள்ளும் பாக்கியம் பெற்றிருந்த சவேரிநாத பிள்ளை அந்த நல்லுடலை உடனே படுக்கையிற் கிடத்திவிட்டு மற்றவர்களோடு புலம்பிக்கொண்டே அயலில் நின்றார். இவருடைய தேவியாரும் குமாரரும் மற்ற உறவினரும் கண்ணீர் விட்டுப் புலம்பினர்கள். அங்கே யிருந்த எல்லோருக்கும் உண்டான வருத்தத்திற்கு எல்லையே இல்லை.

அபரக்கிரியை

இக்கவிரத்னம் மண்ணுலக வாழ்வை நீத்தசெய்தி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குத் தெரிந்தது. காளிதாசன் இறந்தது கேட்டுப் போஜன் வருந்தியதைக் கதைகளில் கேட்டிருக்கிறோம். அந்தக் காட்சி இப்படித்தான் இருந்திருக்குமென்று எண்ணும்படியான நிலையில் தேசிகர் இருந்தார். தாமே அறிந்து ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் பலபடியாக இவருடைய நல்லாற்றலைத் தக்கவாறு எடுத்துக்கூறி ஆதீன வித்துவானாகச் செய்தது முதல் இது

திக்காலம் வரையில் பலவகையாலும் இக் கவிச்சக்கரவர்த்தியி னுடைய குணங்களையும் புலமைத்திறத்தினையும் நன்முக அறிந்து அறிந்து இன்புற்றவர் அவரே. பிள்ளையவர்களுடைய உண்மை யான பெருமையை அவரைப்போல அறிந்தவர்கள் வேறுயாவர்? தம்முடைய அவைக்களத்தை அலங்கரித்து மடத்திற்குத் தமிழ் வளர்த்த பெரும்புகழை உண்டாக்கிய இந்தமகாவித்துவானுடைய பிரிவைப் பொறுப்பதென்பது அவரால் இயலுவதா?

அன்று குருபூஜைத் தினமாதலின் சுப்பிரமணிய தேசிகர் கவனிக்க வேண்டிய பல காரியங்கள் இருந்தன. அவைகளில் அவர் மனம் செல்லவில்லை. அவருடைய முகம் அன்று மலர்ச்சி யின்றி யிருந்தது.

மிக்க வருத்தத்தோடு இருந்தும், தேசிகர் மேலே முறைப்படி மறுநாட் காலையில் நடக்கவேண்டிய அபரக்கிரியைகளை விரிவாக நடத்தும்படி மடத்துக் காரியஸ்தர்களுக்குக் கட்டளையிட் டனுப்பினர். காலையில் அதிர்வெடிகள் போடப்பட்டன. திருக் கோடிகா, திருத்துருத்தி, திருவிடைமருதூர் முதலிய ஊர்களி லிருந்து அபிஷிக்தப் பெரியார்கள் பலர் வருவிக்கப்பட்டார்கள்.

மற்றவர்களுக்கு நடக்கும் முறையிலும் செலவிலும் அதிகப் பட நடத்தி இவருடைய திவ்ய சரீரத்தை விபூதி ருத்திராக்ஷங் களால் அலங்கரித்து எடுப்பித்துக்கொண்டு செல்லத்தொடங் கியபொழுது இவருடைய மாணாக்கர்களாகிய தம்பிரான்கள் மடத்து முகப்பில் வரிசையாக வந்து நின்று கண்ணீரை வீழ்த் திக்கொண்டே கலங்குவாராயினர். வடமொழி வித்துவான்களா கிய அந்தணர்களின் கூட்டத்திலிருந்து, "தமிழ்க் காளிதாசா! தமிழ்க் காளிதாசா!" என்ற சப்தமும், தமிழ் வித்துவான்கள் வாக்கிலிருந்தும் அயலூரிலிருந்து வந்திருந்த இவர் மாணாக்கர் கூட்டத்திலிருந்தும், "கவிச்சக்கரவர்த்தியே! தமிழ்க்கடலே! எங் களுக்கு அரிய விஷயங்களை இனி யார் அன்புடன் சொல்வார் கள்! யாரிடத்தில் நாங்கள் செல்லுவோம்! எங்களைக் கவனிப் பார் யார்!" என்ற ஒலியும், வேறொரு சாராரிடத்திருந்து, "குணக்கடலே! சாந்த சிரோமணீ!" என்ற சப்தமும், பொது வாக மற்ற யாவரிடத்திலிருந்தும், "ஐயா! ஐயா!" என்ற சப்த மும் உண்டாயின. உடன் சென்ற அபிஷிக்தர்கள் திருவாசகம் சொல்லிக்கொண்டு போகையில், "இனிமேல் திருவாசகத்திற்கு

மிகவும் தெளிவாகவும் அழகாகவும் யார் பொருள் சொல்லப் போகிறார்கள்?'' என்று என் தந்தையார் முதலிய பலர் சொல்லி மனம் உருகினர்கள். உடன் சென்ற கூட்டம் மிக அதிகம்.

இவ்வண்ணம் திருக்கோயிலுக்கு வடக்கேயுள்ள மருதமரச் சாலைவழியே சென்று காவிரிக் கரையிலுள்ள ருத்திர பூமியை அடைந்தவுடன் இவருடைய தேகம் சந்தனக்கட்டை, பரிமளத் தைலம் முதலியவற்றோடு அமைக்கப்பட்ட ஈமப்பள்ளியில் வைத் துச் சிதப்பரம் பிள்ளையால் விதிப்படி தகனம் செய்யப்பெற்றது.

மாணாக்கர்களாகிய நாங்கள் அடைந்த வருத்தம் இங்கே எழுதி அடங்குவதன்று; செயலழிந்திருந்தோம்; ''உடலெலாம் உயிரிலா எனத்தோன்று முலகம்'' என்றபடி அவ்வூராரும் வந் தோர்களும் செயலற்று மிக்க வாட்டத்துடன் இருந்தார்கள்.

அப்பால் ஸ்நான முதலியவற்றை முடித்துக்கொண்டு மீண்டு வந்து நான் திருவாரூர்த் தியாகராசலீலையைக் கையில் வைத்துக் கொண்டு அதிலுள்ள அருமையான செய்யுட்களைப் படித்துப் படித்துப் பொருள் நயங்களை அறிந்து கண்ணீர் வீழ்த்திக் கொண்டே பகல் ஒரு மணிவரையில் இருந்துவிட்டேன்; ஆகாரத் திற் புத்தி செல்லவில்லை. மற்றவர்களும் அப்படியே இருப்பவர்க ளாகி இவர் இயற்றியவற்றுள் தமக்குப் பிரியமான ஒவ்வொரு நூலைப் பார்த்துக்கொண்டே இருந்து வருந்துவாராயினர்.

சுப்பிரமணிய தேசிகர் எனக்கு ஆறுதல் கூறியது

ஒடுக்கத்தில் வீற்றிருந்த சுப்பிரமணிய தேசிகரை ஒரு மணிக்குமேலே நான் பார்த்துவரச் சென்று அவருக்கு அயலில் நின்றேன். கையில் ஜனோபகாரமாக ஒரு தர்மசாலை கட்டிவைத்த முத்தைய தம்பிரானென்பவரும் அங்கு வந்திருந்தார். நின்ற என்னை நோக்கித் தேசிகர் இருக்கும்படி குறிப்பித்தார். அவரைக் கண்டவுடன் எனக்கு மிகுதியான வருத்தம் உண்டாயிற்று; கண் ணீர் ஆறுகப் பெருகிவிட்டது; அழத் தொடங்கிவிட்டேன்.

அவர் கையமர்த்தி, ''காலத்தை யாரால் வெல்லமுடியும்? அதே வருத்தத்துடன்தான் நாமும் இருந்துவருகிறோம். ஆனல் உம்மைப்போல் வெளிப்படுத்தவில்லை. பெரிய மணியை இழந்து விட்டோம் இனி இதைப்பற்றிச் சிந்தித்தலில் பயனில்லை. அவர் களிடம் கேளாமல் எஞ்சியுள்ள நூல்களை நம்மிடம் பாடம் கேட்

கலாம். அவற்றைக் கேட்டுச் சிந்தனை செய்துகொண்டும் புதிய வர்களாக வருபவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டும் சௌக்கியமாக நீர் இங்கே இருக்கலாம். அவர்களுடைய பக்கத்தில் இருந்ததுபோலவே நம்முடைய பக்கத்தில் இருந்து வர வேண்டும். இந்த ஊரை உம்முடைய சொந்த ஊராகவே பாவித்துக்கொள்ளும்; * வீடு முதலியவற்றை விரைவில் அமைத்துக் கொடுப்போம்; கவலையின்றி இருக்கலாம். பிள்ளையவர்களை மாத்திரம் வருவித்துக் கொடுக்க முடியாதேயன்றி வேறு இங்கே என்னதான் செய்விக்க இயலாது? உம்முடைய சகபாடிகளாகிய தம்பிரான்களைப் போலவே நீரும் மடத்துப் பிள்ளையல்லவா? உமக்கு என்ன குறைவு?'' என்று எவ்வளவு தைரியத்தை உண்டாக்க வேண்டுமோ அவ்வளவையும் உண்டாக்கி அபயமளித்தார்.

பின்பு, பிள்ளையவர்களுடைய பிரிவைப்பற்றித் துக்கித்துக் கொண்டிருந்த ஸகபாடிகள் இருக்குமிடஞ் சென்று இப்புலவர் பிரானுடைய குணங்களைப் பாராட்டி வருந்திக் கொண்டேயிருந்தேன்.

பலர் பலவாறு வருந்தல்

அஸ்தமித்த பின்பு தேசிரைப் பார்த்தற்குச் சென்றேன். அப்பொழுது பிள்ளையவர்களுடைய வியோகத்தைப் பற்றி அவரை விசாரித்தற்குப் பலர் வந்து வந்து பார்த்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தனர். மடத்து ஸம்ஸ்கிருத வித்துவான்களுள் ஒருவரும் மிக்க முதுமையை உடையவருமாகிய ஸ்ரீராம குட்டி சாஸ்திரிகளென்பவர் அப்பொழுது ஒடுக்கத்திலிருந்து எனக்கு எதிரே வந்தார். அவர் பிள்ளையவர்களோடு நெடுங் காலம் பழகியவர்; பல சாஸ்திரங்களில் நிபுணர்; தளர்ந்த உடலையும் தளரா நாவையும் உடையவர். அவர் என்னைக் கண்டு

---

* இங்கே கட்டளையிட்டபடியே ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் எனக்குத் திருவாவடுதுறை அக்கிரகாரத்தில் வடசிறகின் கீழைக்கோடியில் நூதனமாக இரண்டுகட்டு வீடொன்றைக் கட்டுவித்து அளித்தார்கள். அக் காலத்திற் பதிப்பிக்கப்பெற்ற சில அச்சுப் புத்தகங்களில் அவர்களுடைய கட்டளைப்படி திருவாவடுதுறைச் சாமிநாதையரென்றே என் பெயர் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அப்பால் நான் கும்பகோணம் காலேஜிற்கு வேலையாகப் போனபோது அந்த வீட்டை அவர்களிடமே ஒப்பித்து விட்டேன்.

ஒவென்றழுது, "தமிழ்க் காளிதாசன் போய்விட்டானையா!" என்று மூன்று முறைசொல்லி அரற்றினர். பலர் உடனே அங்கே வந்து கூடிவிட்டனர். அப்பால் ஒருவாறு சமாதானப்படுத்தி அவரை அனுப்பிவிட்டு அங்கே நின்ற மற்றவர்களோடு சேர்ந்து ஒடுக்கத்திற்குச் சென்றேன்.

சுப்பிரமணிய தேசிகர் தம்மைச் சூழ்ந்திருந்த பலரிடம் பிள்ளையவர்களுடைய குணங்களையும் கல்விச் சிறப்பையும்பற்றிப் பாராட்டியும் பிரிவைப்பற்றி வருத்தமுற்றும் பேசிக்கொண்டிருந்தனர்; "தேசாந்தரங்களிலெல்லாம் பிள்ளையவர்களுடைய பெரும் புலமைத் திறம் புகழப்படுகிறது. அவர்கள் பெயரோடு நமது மடத்தின் பெயரும் விளங்குகின்றது. அந்தப் புலவர்மணியின் ஆற்றல் இந்த மடத்தை எல்லோருக்கும் உரிய கல்வி நிலயமாகச் செய்தது. வைதிக மதஸ்தர்களும் பிற மதஸ்தர்களும் பல் வகைச் சாதியினரும் தமிழ் நூல்களைத் தடையின்றிப் பாடஞ் சொல்லும் அவர்களை எண்ணி எண்ணி இங்கே வந்தனர். நமது மடத்துக்கும் கௌரவத்தை அளித்தார்கள். முன் பழக்க மில்லாத எத்தனையோ உத்தியோகஸ்தர்களும் வேறு வகையான பிரபுக்களும் இந்த மடத்திற்கு வந்திருக்கிறார்கள். எல்லாம் அவர்களால் வந்த பாக்கியமே. பணமும் இடமும் அதிகாரமும் சாதியாத எவ்வளவோ காரியங்களை மடத்திற்காக அவர்கள் சாதித்து உதவியிருக்கிறார்கள். அவ்வளவுக்கும் இந்த மடத்தி லிருந்து அவர்கள் பெற்ற பயன் சிறிதளவேயாகும். எங்கே இருந்தாலும் அவர்கள் தம்முடைய தமிழரசாட்சியை நடத்தி யிருப்பார்கள். அதற்கு இம் மடத்தை அமைத்துக்கொண்டது ஆதீனத்தின்பாலுள்ள அபிமானமே. இந்த ஆதீன குலதெய்வ மென்று சொல்லப்படுகிற சிவஞான முனிவர் முதலிய பெரி யோர்களால் இவ் வாதீனம் தமிழ்க் கல்வியில் மிக்க சிறப்பை அடைந்ததாயினும் மடத்திலிருந்தே பாடம் சொல்லித் தமிழை விருத்தி செய்யவில்லையே என்ற குறை இந்த மடத்திற்கு இருந்துவந்தது. அக் குறை பிள்ளையவர்களாலே தான் தீர்ந்த தென்பதை நாம் சொல்ல வேண்டுமா? இனிமேல் அத்த கைய உபகாரிகள் எங்கே பிறக்கப்போகிறார்கள்! 'பிள்ளை யவர்களைப் பார்க்கும்படி செய்விக்க வேண்டும்' என்று இங்கே வந்தவர்க ளெல்லாம் சொல்லச் சொல்லக் கேட்டுக் குளிர்ந்த

இந்தச் செவிகள் இனிமேல் எதைக் கேட்கும்! பெரிய மனிதர்கள் வந்த காலத்திலும் சிறந்த வித்துவான்கள் வந்த காலத்திலும் சமயத்துக்கு ஏற்றபடியும் நம்முடைய உள்ளக் கருத்துக்கு ஒத்தபடியும் அரிய இனிய செய்யுட்களை விரைவிற் செய்து மகிழ்விக்கும் அவர்களுடைய திறமையை வேறு யாரிடம் பார்க்கப் போகிறோம்! எவ்வளவு பெரிய சபையிலும் அவர்கள் அங்கே நிகழும் நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கவியொன்று கூறி விட்டால் சபையோருக்கு உண்டாகும் குதூகலமும் நமக்கு உண்டாகும் ஆனந்தமும் இனிமேல் எங்கே வரப்போகின்றன! அவர்களுடைய கவியானது, சபை நிகழ்ச்சியின் முடிவில் மகுடம் சூட்டியதுபோல விளங்குமே! அவர்களிடம் மதிப்புள்ள எத்தனை பேர் தம்மாலான அனுகூலங்களை மடத்திற்குச் செய்திருக்கிறார்கள்! 'திருவாவடுதுறை ஆதீனம் செந்தமிழ்ச் செல்வியின் நடனசாலை' என்று பிற்காலத்திலும் யாவரும் கூறும் வண்ணம் செய்வித்த அவர்கள் இல்லாத குறை இனி என்றைக்கு நீங்குமோ தெரியவில்லை.

"வந்தவர்களில் அவர்கள் குணத்தைக் கண்டு வியவாதவர்களே இல்லை. என்ன அருமையான குணம்! நாமும் தினந்தோறும் எவ்வளவோ வித்துவான்களைப் பார்த்துக் கொண்டே வருகிறோம். சிறிது படித்திருந்தால் எவ்வளவு தருக்கு வந்துவிடுகிறது? இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ப்புலவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய அவர்கள் அலையற்ற கடல்போல அடங்கியிருந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்வோம்! அவர்கள் தம்முடைய ஆற்றலைத் தாமே புகழ்ந்துகொண்டதை யாரேனும் கேட்டிருக்கிறார்களா? அத்தகைய குணக்குன்றை இனிமேல் எங்கே பார்க்கப்போகிறோம்! மிகச் சிறந்த பண்டிதராகிய ஆதீனவித்துவான் * தாண்டவராயத் தம்பிரானவர்கள் கூட 'இவர்களைப்போல யாரும் இல்லை' என்று வியக்கும் புலமை

* ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குத் தாண்டவராயத் தம்பிரானவர்கள் பால் சிறந்த மதிப்பும் அன்பும் உண்டு; "நாம் வழிபடு தெய்வம் பிரத்தியட்சமாகி என்ன வேண்டுமென்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரானவர்களை நாம் பார்க்கும்படி செய்யவேண்டுமென்று கேட்போம்" என்று அவர் சொல்வதுண்டு. அத்தகைய மதிப்புடைய தாண்டவராயத் தம்பிரானவர்கள் பாராட்டத்தக்க புலமைத்திறம் பிள்ளையவர்கள்பால் இருந்தமையால்தான் தேசிகர் இவரிடத்து அதிகமாக ஈடுபட்டார்.

யும் இயல்பும் உடைய அவர்களுக்கு ஆயுள் மாத்திரம் இவ்வளவின தாக அமைந்ததை நினைந்து நினைந்து வருந்துவதை யன்றி நாம் என்ன செய்ய முடியும்? ஸ்ரீநமச்சிவாய மூர்த்தியின் திருவருள் இவ்வளவு தான் போலும்! கவித்துவ சக்தியை நேரிற் காணுமல் யாராவது கேட்டால் உண்மையென்று நம்பமுடியாதபடி அவ்வளவு ஆச்சரியமாகப் பாடும் அந்த மகாகவியைத் தமிழ் மொழி இழந்த நஷ்டத்தை நீக்குதற்கு இனி யாரால் முடியும்? இனி நமக்குப் பொழுது போவது எவ்வாறு?'' என்று அவர்பலவாறு சொல்லிக்கொண்டே இருந்தனர்.

பிள்ளையவர்கள் சிவபதமடைந்த தினத்தைப் புலப்படுத்தித் தில்லைவிடங்கன் வெண்பாப் புலி வேலுச்சாமி பிள்ளை யென்பவர்,

''மன்னும் யுவவருட மாதந்தை முன்பக்கம்
உன்னும் பிரதமைமா லோணநாள்—மின்னும்
துருவுபுகழ் மீனாட்சி சுந்தரநம் மேலோன்
திருவுருவ நீங்கு தினம்''

என்னும் வெண்பாவை இயற்றினர்.

கடிதங்கள்

உடனே தியாகராச செட்டியாருக்கு இந்த விஷயத்தைத் தேசிகர் கட்டளையின்படி குமாரசாமித் தம்பிரான் எழுதியனுப்பினர்; முதல் நாளில் அவருடைய நற்றாய் தேக வியோகமானமையின் அப்பிரிவாற்றுமல் வருந்திக்கொண்டிருந்த அவர் இச்செய்தி தெரிந்து, ''முதல்நாள் பெற்ற தாயையும் மறுநாள் ஞானபிதாவையும் இழந்துவிட்டேன்'' என்று மிக வருந்தி விடையனுப்பினர்.

இவர் சிவபதம் அடைந்ததைக் குறித்துப் பிறகு பல அன்பர்களுக்குச் சிதம்பரம் பிள்ளையைக் கொண்டும் என்னைக் கொண்டும் பிறரைக்கொண்டும் கடிதம் எழுதும்படி சுப்பிரமணிய தேசிகர் செய்வித்தார். ஒவ்வொருவரும் பிரிவாற்றுமையைப் புலப்படுத்தி விடைக் கடிதம் அனுப்பிவந்தனர்.

அவற்றுள் சின்னப்பட்டம் நமச்சிவாய தேசிகர் கல்லிடைக் குறிச்சியிலிருந்து சுப்பிரமணிய தேசிகருக்கு அனுப்பிய விண்ணப்பத்தில் பிள்ளையவர்களுடைய தேக வியோகத்தைப்பற்றி எழுதியுள்ள பகுதி வருமாறு:

''மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இன்னும் கொஞ்ச நாளாவதிருந்தாற் கல்வி அருமைபெருமையடை

யும். அதற்கு அதிட்டமில்லாமற்போய்விட்டது. அவர்கள் விஷயத்தில் மஹா ஸந்நிதானத்திற் கொண்டருளுவதெல்லாம்பெருங் கிருபையென்றே நினைத்துப் பெருமகிழ்ச்சியுற்றிருக்கிறேன்."

ஆறுமுக நாவலர் சிதம்பரம் பிள்ளைக்கு எழுதிய கடிதம் வருமாறு:—

உ

"சிவமயம்

"ஸ்ரீ சிதம்பர சபாநாயகர் திருவருளினாலே செல்வச் சிரஞ் சீவி தம்பி சிதம்பரம் பிள்ளைக்குச் சர்வாபீட்ட சித்தி யெய்துக.

"தாம் எழுதியனுப்பிய கடிதம் பெற்று வாசித்துச் சகிக்க லாற்றாத் துக்கமுற்று யாக்கை நிலையாமையை நினைந்து ஒருவாறு தெளிந்தேன். தம்முடைய தந்தையாராகிய ம-ா-ா-ஸ்ரீ பிள்ளை யவர்கள் தமிழ் வழங்கு நிலமெங்கும் உலக மழியுங்காறும் தங்கள் புகழுடம்பை நிறுத்திவிட்டுச்சென்றமையே தமக்கு வாய்த்த தொரு பெரும்பாக்கியம்! இன்னுஞ் சிலகாலம் இருப்பார்களா யின், இன்னுஞ் சில காரியங்கள் அவர்களாற் செய்யப்பட்டு விளங்கும். 'வினைதானெழிந்தாற் றினைப்போதளவு நில்லாது' என்னுந் திருவாக்கை நினைந்து, அவர்களருமையை யறிந்தோர் யாவரும் தங்கள் துக்கத்தை யாற்றிக்கொள்வதே தகுதி.

"தாம், தம்முடைய தந்தையாரவர்களைப் பரிபாலித்து அவர்களுடைய கீர்த்தியை வெளிப்படுத்தியருளிய பெருங்கருணை வெள்ளமாகிய திருவாவடுதுறை மகா சந்நிதானத்தின் திருவடிகளை மறவாத சிந்தையும், தம்முடைய தந்தையாரவர்களிடத்து மெய்யன்புடைய மாணாக்கர்களைச் சகோதரர்களாகவே கொண்டொழுகு நேசமும், எவராலும் நன்கு மதிக்கற்பாலதாகிய நல்லொழுக்கமும் உடையராய் இனிது வாழ்ந்திருக்கும்படி திருவருள் சுரக்கும்பொருட்டு ஸ்ரீ சிதம்பர சபா நாயகர் திருவடியைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
ஆறுமுக நாவலர்."

யாழ்ப்பாணம்
வண்ணார் பண்ணை
யுவஷ மாசிமீ ஙகூ

இந்தக் கடிதத்தை எழுதிய பின்னர் நாவலர் நெடுநேரம் வரையில் வருத்தத்தோடும் இருந்து பிள்ளையவர்களுடைய

அருமை பெருமைகளைப் பாராட்டிவிட்டு, பின்புதான் பூசைக்குச் சென்றனரென்று அக்காலத்து அவருடனிருந்து வந்த காரைக்குடி சொக்கலிங்கையாவும் பிறரும் சொன்னதுண்டு.

பிள்ளையவர்களுடைய மாணவருள் ஒருவராகிய தஞ்சை, கோ. இராமகிருஷ்ண பிள்ளை சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய விண்ணப்பக் கடிதம் வருமாறு:

உ

"அகண்டாகார நித்திய வியாபக சச்சிதாநந்தப் பிழம்பாய் நிறைந்த ஸ்ரீலஸ்ரீ சற்குருநாத சுவாமிகள் திவ்விய சந்நிதானத்திற்கு அடியேன் கோ. இராமகிருஷ்ணன் திக்கு நோக்கித் தண்டனிட்டெழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

"ஐயா அவர்கள் ஸ்ரீ சிவபெருமான் திருவடிக்கீழ் ஐக்கியமாயின செய்தி மகாசந்நிதானங் கருணைகூர்ந்து சுவாமிநாத ஐயரால் விடுத்த நிருபத்தைப் பார்க்கப்பார்க்க அதிகத் துயரத்திற்கு இடமாயிருப்பதும் தவிர, அவர்களாலடையவேண்டிய பெரும் பயன் யாவும் இழந்து கண்ணிலாக் குழவிபோல் நேரிட்டிருக்கும் பெருஞ்சந்தேகங்களை நிவர்த்திக்க மார்க்கமின்றி உழல்கின்றேன். ஒன்றையே பல தடவை கேட்பினும் அதற்கு வெறுப்பின்றிப் பிதாவைப் போல் யார் இனிக் கற்பிப்பார்கள்!

"இனி இக்குறைவை நிறைவேற்றச் சந்நிதானங் கருணைகூர்தலன்றி வேறு நெறியை அடியேனும் மற்றையோரும் அறியோம்.

"இவ்விண்ணப்பத்துடன் கல்லாடவுரைப் புத்தகமொன்று பங்கித் தபாலிலனுப்பி யிருக்கின்றேன். இது சந்நிதானஞ் சேர்ந்ததற்கும் அடியேன் இனி நடத்தவேண்டும் பணிவிடைகளுக்கும் கட்டளையிட்டருளப் பிரார்த்திக்கிறேன்.

தஞ்சாவூர்
யுவஹு
பங்குனிமீ ௰௬உ

இங்ஙனம்,
கோ. இராமகிருஷ்ணன்"

இரங்கற் செய்யுட்கள்

அந்தக் காலத்தில் அயலூருக்குச் சென்றிருந்த மகா வைத்தியநாதையரும் அவருடைய தமையனாராகிய இராமஸ்வாமி ஐயரும் பிள்ளையவர்கள் தேகவியோகமடைந்த செய்தியைக்

கேள்வியுற்று வந்து வந்து பார்த்துச் சிறிதுநேரம் இருந்து இவர் தளர்ச்சி அடைந்திருப்பதை அறிந்து வருந்திச் செல்வார்கள். ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியர் கிரந்தங்களிலும் திருவியலூர் ஐயா அவர்கள், ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதர், ஸ்ரீமத் நீலகண்ட தீக்ஷிதர் கிரந்தங்களிலும் நல்ல பழக்கமுடையவரும் சிவபக்திச் செல்வம் வாய்ந்தவரும் விபூதிருத்திராக்ஷதாரண முடையவரும் தோற்றப் பொலிவுள்ளவரும் இவர்பால் மிக்க அன்புடையவரும் வயோதிகருமாகிய கஞ்சனூர் ஸ்ரீ அக்கினிலிங்க சாஸ்திரிகளென்பவர் பார்க்க வந்தார்; இவருடைய உடல் நிலையை அறிந்து வருத்தமடைந்தார். அவருடைய சைவத் திருக்கோலத்தைக்கண்டு இவர் அதில் மிகவும் ஈடுபட்டு உள்ளம் குளிர்ந்து உருகிக் கண்ணீர் வீழ்த்தினர். பின்பு சாஸ்திரிகளை நோக்கி ஏதாவது சொல்ல வேண்டுமென்று இவர் குறிப்பித்தார். அப்படியே அவர் மேற் கூறிய பெரியோர்களுடைய வாக்கிலிருந்து சிவபெருமானுடைய பரத்துவத்தைத் தெரிவிக்கும் சில சுலோகங்களைச் சொல்லிப் பொருளும் கூறிக்கொண்டே வந்து ஸ்ரீ சங்கராசாரியார் செய்த சிவானந்தலஹரியிலுள்ள, "ஸதாமோஹாடவ்யாம்" என்ற சுலோகத்தைச் சொல்லிப் பொருளும் சொன்னர். இப்புலவர் சிரோமணி அதில் ஈடுபட்டு அவரைச் சும்மா இருக்கும்படி குறிப்பித்துவிட்டு ஓர் ஏடும் எழுத்தாணியும் கொண்டுவரும்படி குறிப்பித்தார். நான் அவற்றைக் கொண்டுவரவே அந்தச் சுலோகத்தின் மொழிபெயர்ப்பாக ஒரு செய்யுளை இயற்றி மெல்லச் சொன்னர். நான் எழுதிக்கொண்டேன். அச்செய்யுள் வருமாறு:—

(விருத்தம்)

"மோகமா மடவி திரிந்தரி வையர்தம்
மூலைக்குவட் டிடைநட மாடித்
தாகமா ராசைத் தருக்குலந் தோறும்
தாவுமென் புன்மனக் குரங்கைப்
பாகமார் பத்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்கயான் கொடுத்தேன்
ஏகநா யகனே தில்லையி லாடும்
இறைவனே யெம்பெரு மானே."

எப்பொழுதும் இவருக்கு ஸ்ரீ நடராஜமூர்த்தியின் குஞ்சித சரணத்திலேயே ஞாபகம் இருக்குமாதலின் இந்தச் செய்யுளின்

பொழுது ரூ. 3,000-க்கு மேற்பட்டுக் கடன் இருப்பதாக அவர் சொன்னார். உடனே சுப்பிரமணியதேசிகர், "கடன்களைத் தீர்த்து விடாமல் இறந்து போனார்களென்ற அபவாதம் மடத்து மகா வித்துவானாகிய நம் பிள்ளையவர்களுக்கு இருக்கக்கூடாது. அவ்வாறுயின் அது மடத்திற்கு ஏற்படும் அபவாதமே யாகும்" என்று சொல்லி, கடன்காரர்களைப் பத்திரங்களுடன் வருவித்துப் பிள்ளையவர்களுடைய குமாரரையும் சில மாணாக்கர்களையும் உடன் வைத்துக்கொண்டு கடன்களைக் கொடுக்கத்தொடங்கினார். பணப்பைகள் சில அங்கே கொணர்ந்து வைக்கப்பட்டன. அப் பொழுது தேசிகர், "இவை பிள்ளையவர்களுக்காகக் கொடுக்கப் படுவன. அவர்களிடம் அன்பு வைத்து வட்டியிற் சிறிதாவது முற்றுமாவது முதல் தொகையிற் சில பாகமாவது முற்றுமாவது தள்ளிப் பெற்றுக்கொள்ளலாம்; முற்றும் வேண்டுபவர்கள் அவ் வாறே பெற்றுக்கொள்ளலாம்" என்றார். அப்படியே சிலர், தங்களுக்குரிய தொகைகளில் ஒவ்வொரு பகுதியைத் தள்ளிப் பெற்றுக்கொண்டார்கள்.

பின்பு தேசிகர் சிதம்பரம்பிள்ளையை நோக்கி, "மடத்தி லுள்ளவர்கள் பெருந்தொகையை ஒரு குடும்பத்திற்கு நாம் கொடுத்துவிட்டதாகக் குறை கூறுவார்கள். அதற்கு இட மில்லாதபடி பிள்ளையவர்களுடைய புத்தகங்களை மடத்துப் புத் தகசாலையிற் சேர்த்துவிடும். அவற்றை நீர் வைத்துக்கொண்டு இனி என்ன செய்யப்போகிறீர்?" என்றார். அப்படியே சிதம் பரம் பிள்ளை செய்துவிட்டார். பிள்ளையவர்களுடைய ஏட்டுச் சுவடிகள்மட்டும் மூன்று கட்டுப் பெட்டிகள் நிறைய இருந்தன.

---

11. குடும்பத்தின் பிற்கால நிலை

சிதம்பரம் பிள்ளை

அப்பால் சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் தேசிகரிடம் விடை பெற்றுக்கொண்டு மாயூரத்திற்குப் புறப்படுகையில் தேசிகர் உசிதமாக அப்பொழுது செய்யவேண்டிய உதவிகளைச் செய்து அனுப்பினார். அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டு மாயூரம் சென்று சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தார்கள்.

11. குடும்பத்தின் பிற்கால நிலை உருள

சிதம்பரம் பிள்ளையினுடைய குடும்பம் வரவரப் பெருகிவிட்டமையினால் செலவு அதிகரிக்கவே குடும்பம் தளர்ச்சியை அடைந்தது. அதனை அவர் மடத்திற்குத் தெரிவிக்கவில்லை. வேதநாயகம் பிள்ளை அதனை அறிந்து அந்தத் துயரத்தை நீக்கியருள வேண்டுமென்று சுப்பிரமணிய தேசிகருக்கு ஐந்து பாடல்கள் எழுதியனுப்பினர். அவை வருமாறு :—

(விருத்தம்)

(1) "புயலிருக்குங் கரதலச்சுப் பிரமணிய வள்ளானின்
புலவன் பன்னூல்
இயலிருக்கு மீனாட்சி சுந்தரவேண் மைந்தனுறும்
இடர்க ளெல்லாம்
அயலிருக்கும் பலரானும் அறிவுற்றேன் பரிவுற்றேன்
அவனுக் கிங்கே
உயலிருக்குங் கயலிருக்கும் வயலிருக்கு மொன்றினைநீ
உதவி னம்மா."

[வயல் இருக்கும் ஒன்று - நெல். உதவின் உயலிருக்கு மென்க.]

(கட்டளைக் கலித்துறை)

(2) "கந்தனை நேர்சுப் பிரமணி யைய கவிஞரெலாம்
வந்தனை செய்தற் குரியன் பெரியன்மண் வாழ்வைவிட்டென்
சிந்தனை வாழ்பவன் மீனாட்சி சுந்தரச் செல்வனென்பான்
மைந்தனை நிந்தனைப் பஞ்ச மூருவண்ணம் வாழ்வருளே."

(3) "அருந்தவஞ் செய்த தவத்தாற் புவியி லவதரித்துப்
பெருந்தவஞ் செய்சுப் பிரமணி யையநின் பிள்ளையிவன்
வருந்து மிடிப்பிணிக் கோர்மரும் தின்றிமெய் வாடினனம்
மருந்து வினையு மிடம்யா தெனினின் வளவயலே."

(4) "பல்லார் புகழ்சுப் பிரமணி யையவிப் பாலனைத்தான்
இல்லாமை யென்னு மதகரி பற்றி யிடுங்கடும்போர்
வில்லா லடிப்பினுங் கல்லா லடிப்பினும் விட்டிலதால்
நெல்லா லடிக்கும் படிநீ பலகலம் நீட்டுவையே."

(5) "பாவிற் பெரியவன் மீனாட்சி சுந்தரப் பாவலனே
தாவிற் பெரிய னவன்சேய் நினக்கதைத் தானுரைக்க
நாவிற் பெரியவ னெனென்சொற் கேட்டு நலம்புரியப்
பூவிற் பெரியவ னீசுப்ர மண்ய புரவலனே."

[தா-வருத்தம். பூ-பூமி.]

இவற்றைப் பார்த்த சுப்பிரமணிய தேசிகர் சிதம்பரம்பிள்ளையை வருவித்து அவருக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்வித்து அனுப்பினர்.

சிதம்பரம் பிள்ளைக்கு ஆங்கிலத்திலும் பயிற்சி உண்டு. அவர் சும்மா இருத்தலையறிந்த வேதநாயகம் பிள்ளை அங்கே டிப்டி கலெக்டராயிருந்த முருகேசம் பிள்ளை யென்பவரிடம் சொல்லி மாயூரந் தாலூகாவிலுள்ள கப்பூரென்னும் ஊரில் கணக்குவேலை கிடைக்கும்படி செய்வித்தார். அவ்வேலையைப் பெற்றுக்கொண்டு அவர் வாழ்ந்திருப்பாராயினர். மேல் உத்தியோகஸ்தர்கள் பிள்ளையவர்களுடைய குமாரரென்பதை யறிந்து அவரிடம் பிரியமாக இருந்து பலவகையான அனுகூலங்களை அவருக்குச் செய்வித்து வந்தார்கள்.

சிதம்பரம் பிள்ளை அப்பொழுது அப்பொழுது தாம் வாங்கி வந்த கடன்பிகுதியால் தம்முடைய வீட்டைவிற்றுக் கடன்காரர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டிய தொகையைச் சேர்ப்பித்துவிட்டுப் பின் வாடகைவீட்டிற் குடியிருந்துவந்தனர்; அங்ஙனம் இருந்துவந்தமை அவர் குடும்பத்திற்கு மிகவும் அசௌகரியமாக இருந்தது. அதனை அறிந்த நான் அவருக்கு இடவசதி செய்விக்க வேண்டுமென்று நினைந்து பிள்ளையவர்கள் மாணாக்கர்கள் பலரிடத்தும் அன்பர்கள் பலரிடத்தும் சொல்லியும் கடிதவாயிலாகத் தெரிவித்தும் வந்தேன். ஒருவரும் கவனிக்கவில்லை. அப்பால் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பின்பு ஆதீன கர்த்தராக இருந்தவரும் அருங்கலை விநோதரும் கற்றவர் நற்றுணையுமாகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கு, சில செய்யுட்களால் சிதம்பரம் பிள்ளைக்கு ஒரு வீடுவாங்கிக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டேன். அச்செய்யுட்கள் வருமாறு :—

(விருத்தம்)

(1) "மாமேவு வடமொழிதென் மொழிவாணர் இசைவாணர்
மகிழ்ந்து போற்றக்
காமேவு பெருவண்மை மருவியவர்ப் புரக்குமருங்
கலிவி நோத
பாமேவு புகழுடையாய் ஆவடுதண் டுறையென்னும்
பதியின் மேய
கோமேவு விறன்மிகுமம் பலவாண தேசிகயான்
கூறல் கேண்மோ."

(2) "இனமளித்தற் கியலாமல் தனியடைந்த மாணக்கர்க்
கிரங்கி யென்றும்
அனமளித்தும் தனமளித்தும் அரியபல நூலளித்தும்
அவையா ராயும்
மனமளித்தும் விளங்கியசீர் மீனாட்சி சுந்தரநா
வலவர் கோமான்
முனமளித்த அரும்புதல்வன் இடமின்றி வருந்துதலும்
முறைமை யாமோ."

(3) "வரமளிக்கும் வள்ளலஞ்சல் நாயகியோ டினிதமரும்
மாயூ ரத்தில்
தரமளிக்குந் தென்மறுகி னினதுதிரு மடத்தருகே
சார்ந்த தாகத்
திரமளிக்கும் வீடொன்று கட்டுவித்தே அவனிருக்கச்
செய்வித் தாள்வாய்
உரமளிக்கும் அடியவர்க்கு வீடளித்தல் நின்மரபிற்
குரிய தன்றே."

[வள்ளலென்பது ஸ்ரீமாயூரநாதரது திருநாமம்; அஞ்சலென்பது அம்பிகையின் திருநாமம்.]

இச்செய்யுட்களைப் பார்த்த உடனே அம்பலவாண தேசிகர் மனமிரங்கி மாயூரத்தில் தெற்கு வீதியின் வடசிறகில் மடத்திற்குச் சொந்தமாக இருந்த வீடொன்றைக் கொடுக்கும்படி அவ்வூரிலிருந்த காரியஸ்தருக்கு உத்தரவு அனுப்பியதன்றி அச்செய்தியை எனக்கும் தெரிவித்தார். அது தெரிந்து அளவற்ற சந்தோஷமடைந்து மனமுருகிப் பின்னே உள்ள செய்யுட்களை அவருக்கு எழுதியனுப்பினேன்:—

(விருத்தம்)

(1) * "வான்பூத்த கயிலாய பரம்பரையிற் சயிலாதி
மரபிற் றோன்றித்
தேன்பூத்த சுவைபழுத்த தமிழ்மறையின் பொருளையனு
தினமுந் தேர்ந்தே
ஊன்பூத்த பவப்பிணியு மிடிப்பிணியு மடுத்தவருக்
கொழித்துப் போதிக்
கான்பூத்த நகர்வளரும் பலவாண தேவகடைக்
கணிக்க வீதே."

---

* (1) சயிலாதி - திருநந்திதேவர்; தமிழ்மறை - தேவாரம்; போதிக்கான்பூத்த நகர் - திருவாவடுதுறை; போதிக்கான் - அரசவனம்.

(2) "இந்தமதி தனிலிருப தாந்தேதித் திருமுகமீண்
டெய்தப் பெற்றேன்
சந்தவரைக் குறுமுனியு மதித்திடுமா ரொருமூன்று
தலைச்சை லப்பால்
வந்தபெரும் தமிழ்ச்செல்வன் மீனாட்சி சுந்தரநா
வலவர் கோமான்
மைந்தனுக்கு வசதியளித் திடலாதி தெரிந்துமிக
மகிழ்வுற் றேனால்."

(3) "அகத்தியனே குறியனின தருங்கவிநா வலனெடியன்
அவனேர் நூலே
சகத்தினிடை நவின்றனன்மற் றதுவுமற்ற தென்பர்நினைச்
சார்ந்தோன் யாரும்
மிகத்துதிக்க வியற்றியவை பலவையிந் நாண்மேன்மேல்
விளங்குந் தென்றல்
நகத்தினன்பன் னிருவர்க்கின் னவன்பலர்க்கா சானிவன்சீர்
நவிலற் பாற்றே."

(4) "இன்னபெரு நாவலனின் மொழிப்படிநின் னிடைப்பலவாண்
டிருந்தென் போல்வார்க்
குன்னரிய பலநூலு முளங்கொளுமா றன்புடனன்
குரைத்த லாலே
என்னவருத் தமுமின்றி யிருக்கின்றே மவன்புதல்வற்
கில்ல மாய
நன்னரமை செயலில்லம் நினக்கன்றி யெவர்க்கிதனை
நவிலு வேமால்."

(2) சந்தவரை - பொதியில் மலை. ஒரு மூன்றுதலைச் சைலம் - திரிசிர கிரி. வசதி - நல்லிடமாகிய வீடு.

(3) ஓர் நூலென்றது அகத்தியத்தை. மற்று அதுவும் அற்றது என் பர். பல - பலநூல்கள். ஆசானென்பதைப் பன்னிருவர்க்கே ஆசான் என மூன்னும் கூட்டுக.

(4) ஆதீனகர்த்தர்களாக வந்த யாவரும் ஒருவரே எனக் கொள்வதும் முன்னவர் செயல்களைப் பின்னவர்க்கும் ஏற்றிச் சொல்லுதலும் மரபு. இல்லம் - வீடு. செயல் இல்லம் - நானும் என்போல்வாரும் உதவி செய் தற்குரிய சாதனங்கள் இல்லேம்.

(5) "பார்பூத்த பருதியென விளங்கியடுத் தவர்துயரம்
பாற்றி யோங்கும்
சீர்பூத்த துறைசையிலம் பலவாண தேசிகவிச்
செய்தி தன்னைப்
பேர்பூத்த பலர்க்கெழுதிக் கைசோர்ந்தேன் நாச்சோர்ந்தேன்
பேசிப் பேசிக்
கார்பூத்த கொடையமைநின் றிருமுகங்கண் டல்லலொரீஇக்
களித்திட் டேனால்."

(6) "நினையடைந்தோர்க் கொருகுறையு மிலையெனினு முளதொன்று
நிகழ்த்து கென்னின்
அனையனைய அன்புடைச்சுப் பிரமணிய குருமணிநின்
அள்வி லாற்றல்
தனைநிகரில் கொடையினைக்கல் வியைமனை தைரியத்தைச்
சாந்தந் தன்னை
இனையபல வற்றைபிவ ணிருந்துணர்ந்து மகிழ்ந்திலனே
என்ப தாமால்."

(7) "என்னமொழிந் திடினுமெனக் காராமை மீக்கூரும்
ஈது நிற்க
முன்னடைந்தோர் தமைப்பிரம ராக்கிமறைப் பொருள்பலவும்
மொழிந்தே பின்னர்
அன்னவரை மாலாக்கி உடன்பீதாம் பரதரர்கள்
ஆக்கி நீசெல்
இன்னபரி சாதிகளைக் கலியாண சுந்தரன்வந்
தியம்பி னனால்."

(8) "மந்தரமா ளிகைவீதித் துறைசையிலம் பலவாண
வள்ள லேவான்
கந்தரநே ரருண்மிகுசுப் பிரமணிய குருமணியாற்
கவின்மீ னுட்சி
சுந்தரநா வலன்கவலை யிலனுனு னனையவன்பிற்
ரேன்ற லாகி
வந்தமைநீ யவன்புதல்வன் றனைக்காத்தல் வழக்குன்சீர்
வாழ்க மாதோ."

(7) பிரமர் - மயக்கமுடையவர், பிரமதேவர். மறைப்பொருள் - தேவாரப் பொருள், வேதத்தின் பொருள். மாலாக்கி - மயக்கமுண்டையவராகச் செய்து, திருமாலாக்கி. பீதாம்பரம் - பொன்னுடை; திருமாலுக்குப் பொன்னுடை உரியது. கலியாணசுந்தரன் : என் குமாரன்.

அப்பால் நகரவைசியச் செல்வராகிய வீரப்ப செட்டியா ரென்பவர் ஸ்ரீ மாயூரநாதர் கோயில் திருப்பணிக்குக் கொணர்ந்த பொருள்களைச் சிதம்பரம் பிள்ளைக்குக் கொடுக்கக் கருதியிருந்த வீட்டில் நிரப்பி விட்டதனால் அந்த வீடு அவருக்குப் பயன்படா மற் போயிற்று.

குடும்பத்துக்கு உதவி

கும்பகோணம் காலேஜில் நான் வேலை பார்க்கத் தொடங்கி யது முதல் அவ்வப்போது என்னால் இயன்ற உதவிகளை அக்குடும் பத்துக்குச் செய்துவந்ததுண்டு. நிலையான தொகை ஒன்று இருந் தால் அக்குடும்பத்திற்கு அனுகூலமாக இருக்குமென்று நினைத்து அது விஷயத்தில் முயற்சி செய்ய எண்ணினேன். 1915-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் பூவாளூர்ச் சைவசித்தாந்த சபைக்கு நான் போய்வர நேர்ந்தது. அங்ஙனம் போயிருந்தபொழுது அவ்வூரில் பிள்ளையவர்களுடைய பெருமையை நன்றாக அறிந்த தனவைசியச் செல்வர்கள் அக்காலத்தில் இருந்தனராதலின் அவர்கள் முன்னிலையில் என்னுடைய கருத்தை வெளியிட்டேன். அந்தச் சபைக்கு வந்திருந்த சேற்றூர் ஸம்ஸ்தான வித்துவான் ஸ்ரீமான் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களும் மகிபாலன்பட்டி பண்டிதமணி ஸ்ரீமான் மு. கதிரேசச் செட்டியாரவர்களும் அதனை ஆமோதித்துப் பேசினர்கள். சபைக்கு வந்திருந்த கனவான்கள் கேட்டு அங்கீகரித்து உடனே 250 ரூபாய் வரையில் சேர்த்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். என்னுடைய விருப்பத்தின் படி இக்காரியத்தை நிறைவேற்றுதற்குரிய முயற்சியைக் கவிராய ரவர்களும் செட்டியாரவர்களும் ஏற்றுக்கொண்டு தமிழ்நாட் டாருக்கு ஒரு வேண்டுகோளை அச்சிட்டு அனுப்பினர்கள். பின்பு மேலைச்சிவபுரி முதலிய ஊர்களிலுள்ள கனவான்களிடமிருந்தும் பூவாளூரிலிருந்தும் வேறு வகையிலும் ரூபாய் ஆயிரத்துக்குச் சிறிது மேற்பட்ட தொகை கிடைத்திருப்பதாக அவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். 1916-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் இங்ஙனம் சேர்ந்த அந்தத் தொகை திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்த பாஸ்கர விலாஸத்திற் கூட்டப்பெற்ற ஒரு மகாசபையில் சிதம்பரம் பிள்ளைக்கு எங்கள் விருப்பத்தின்படி ஸ்ரீ அம்பலவாண தேசிகரால் வழங்கப்பெற்றது. அவர் அதனைப்

பெற்று அந்தத் தொகையின் வட்டியினாலும் வேலையிற் கிடைத்த வரும்படியினாலும் சுகமாக வாழ்ந்துவந்தனர்.

குடும்பத்தின் பிந்தியவரலாறு

சிதம்பரம்பிள்ளைக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. அவர் களுள் மூதல்வரும் மூன்றும் புதல்வரும் அகாலத்தில் இறந்து விட்டனர். இரண்டாங் குமாரருக்கு * வைத்தியநாதசாமி பிள்ளை யென்று பெயர். தம் தந்தையார் பார்த்து வந்த கப்பூர்க் கணக்கு வேலையை அவர் பார்த்துக்கொண்டு வந்தனர். அவரை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு. "உமக்கு ஆண் குழந்தை பிறந் தால் அக் குழந்தைக்குப் பிள்ளையவர்களுடைய பெயரை வைக்க வேண்டும்" என்று அவரிடம் நான் சொல்லி யிருந்தேன். பின் ஒரு முறை அவரைக் கண்டபொழுது தமக்கு ஒரு குமாரன் பிறந் திருப்பதாகவும் அவனுக்கு மீனாட்சி சுந்தரமென்று பெயர் வைத் திருப்பதாகவும் சொன்னர். நான் அதனை அறிந்து மகிழ்ந் தேன். அவர் அடிக்கடி திருவாவடுதுறைக்கு வந்து அப்போது ஆதீனகர்த்தர்களாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக ரவர்களைத் தரிசனம் செய்துகொண்டு போவார். அவர்களும் அவர்பால் மிக்க அன்புடையவர்களாகி விசேஷதினங்களில் வஸ் திரம் முதலியன அளித்து ஆதரித்துவந்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன்பு நான் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்களாக இருந்த ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களைப் பார்க்கச் சென்றிருந்தபொழுது வைத்தியநாதசாமி பிள்ளை தம்முடைய குமாரனுடன் அங்கே வந்திருந்தார்; "இவன் தான் என்னுடைய குமாரன்" என்று அவர் சொன்னர். அப் பொழுது அவனுக்குப் பத்துப்பிராயம் இருக்கும். அவனைப் பார்த்து, "உன்னுடைய பெயரென்ன?" என்று கேட்டேன். அவன், "மீனாட்சிசுந்தரம்" என்று தைரியமாகச் சொன்னன். அந்தப் பெயரை அவன் கூறியபொழுது எனக்குப் பழைய ஞாப கங்களெல்லாம் வந்து இன்பமளித்தன. "தமிழ் வாசிக்கிறாயா?" என்றேன். "வாசித்து வருகிறேன்" என்றான். "ஏதாவது ஒரு பாடலைச் சொல்" என்றபோது ஒரு பாட்டை நன்றாகச் சொன் னன். பின்பு, "புதிதாக ஒரு பாட்டைப் பாடித் தந்தால் பாடம் பண்ணிக்கொண்டுதரியமாக ஸந்நிதானத்திடம் சொல்வாயா?"

* இவர் சில மாதங்களுக்கு முன்புதான் சிவபத மடைந்தார்.

என்று நான் கேட்கவே, "நன்றாகச் சொல்லுவேன்" என்று அவன்சொன்னான். அவனுடைய தைரியத்தைப்பாராட்டியதன்றி,

(கட்டளைக் கலித்துறை)

"படிதாங்கு சேடனும் கூறற் கருநின்றன் பாக்கியத்தை
மிடிதாங்கு சிற்றடி யேனே வறிந்து விளம்புவனின்
அடிதாங்கி வாழ வருள்புரி கோமுத்தி யாந்தலத்தெம்
குடிதாங்கி வாழும் வயித்திய லிங்க குருமணியே"

என்ற செய்யுளைச் செய்து கொடுத்துப் பாடம் பண்ணச்சொல்லி ஆதீனகர்த்தரவர்களிடம் அழைத்துச் சென்றேன். அவர்களுக்கு வந்தனம் செய்து திருநீறு பெற்றுக் கொண்டான். பின்பு பாட்டை விண்ணப்பிக்கச் செய்தேன். அவன் மிகவும் தைரியமாகவே அந்தச் செய்யுளைச் சொன்னான்; சொல்லும்பொழுது எங்கெங்கே எப்படி எப்படி நிறுத்திச் சொல்லவேண்டுமோ அங்கங்கே அப்படி அப்படியே நிறுத்தி அந்தப்பாடலைச் சொன்னான். கேட்ட தேசிகரவர்கள் மகிழ்ந்து பின்னும் இரண்டுமுறை அதனைச் சொல்லச் செய்து கேட்டார்கள்; "மேலும் மேலும் படித்துவா. அடிக்கடி இங்கே வந்து போ" என்று பேரன்புடன் கட்டளையிட்டதோடு பொருளும் வஸ்திரமும் அளித்து அனுப்பினர்கள்.

அவனைக் காணும்பொழுதெல்லாம், "பிள்ளையவர்கள் பரம்பரையிற் பிறந்த உனக்குத் தமிழில் இயல்பாகவே அறிவு விருத்தியாகும். ஊக்கத்தோடு படித்து வந்தால் சிறந்த பயனை அடைவாய். தமிழ்நாட்டாருடைய அன்புக்கும் பாத்திரனுவாய்" என்று கூறிக்கொண்டு வருகிறேன்; அவனும் படித்துக்கொண்டு வருகிறான். தமிழ்த்தெய்வத்தின் திருவருளும் தமிழ் நாட்டாருடைய பேரன்பும் அக் குடும்பத்தினருக்கு என்றும் இருந்து வரவேண்டுமென்பதே எனது வேணவா வாகும். இறைவன் திருவருள் அங்ஙனமே செய்விக்குமென எண்ணுகிறேன்.

சுபம்.

12. இயல்புகளும் புலமைத் திறனும்

தோற்றம்

பிள்ளையவர்களுடைய சரீரம் மாநிறமுடையது. இவர் நல்ல வளர்ச்சியமைந்த தோற்றமுடையவர். இவரைப் பார்த்த மாத்திரத்தில் யாரும் 'சிறந்த தகுதியுடையவர்' என்று எண்ணுவார். நெற்றியின் அகலமானது இவருடைய அறிவைப் புலப்படுத்தும். கைகள் முழங்கால்வரையில் நீண்டிருக்கும். வலக்கையில் உள்ளங்கையிலிருந்து நடுவிரலின் மத்தியில் ஊடுருவிச் செல்லும் ரேகை ஒன்று உண்டு. அது வித்தியாரேகை யென்றும் அதனை யுடையவர்கள் சிறந்த கவிஞர்களாகவும் நல்ல ஞாபக சக்தி யுடையவர்களாகவும் இருப்பார்களென்றும் அத்தகையவர்களைக் காண்டல் அரிதென்றும் அறிஞர் கூறுவர்; உள்ளங்கையானது பூவைப்போன்று மிகவும் மென்மையுடையதாக இருக்கும்; "எத்தகைய வறுமை நிலையை அடைவதாயிருந்தாலும் ஆகார விஷயத்தில் எந்த இடத்திலும் இவருக்கும் இவரைச் சார்ந்தவர்களுக்கும் யாதொரு குறைவும் வராது" என்று சாமுத்திரிகா லட்சணம் தெரிந்தோர் கூறுவதுண்டு. நான் பழகியபோது இவர் பருத்த தேகம் உடையவராக இருந்தார். தலையில் சிறிய குடுமி உண்டு. இளமையிலிருந்ததைவிட முதுமையில் பருத்த தேக முடையவராக ஆயினரென்று இவருடன் பழகியவர் சொல்லுவர்.

காட்சிக்கு எளிமையும், பணிவும், சாந்தமும் இவர்பாலுள்ளன வென்பதை இவரைக் கண்டவுடன் அறியலாம். ஆழ்ந்த அறிவும் இணையற்ற கவித்துவமும் வாய்க்கப்பெற்றிருந்தும், அலைகளெல்லாம் அடங்கி ஒலியற்றிருக்கும் ஆழ்ந்த கடலைப் போல் அறிவின் விசித்திர சக்தியெல்லாம் கண்டவுடன் அறிய முடியாவண்ணம் அடங்கியிருக்கும் தோற்றமுடையவராக இவர் இருந்தார்.

இடையில் ஆறுமுழ நீளமும் மூன்றுமுழ அகலமும் உள்ள தூய வெள்ளை உடை, ஆறுமுழ நீளமுள்ள மேலாடை, உதரபந்தனமாக ஒரு சிறிய சவுக்கம் ஆகிய இவ்வளவே இவர் எக்காலத்தும் அணியும் ஆடைகள். உடையை மூலகச்சமாக உடுத்திக் கொள்வார். முன்னும் பின்னும் கௌரிசங்கரமுள்ள ருத்திராட்ச கண்டியைத் தரித்திருப்பார். இவருடைய கையில் ஊன்றிச்

செல்வதற்குரிய பிரம்பு ஒன்று இருக்கும். நடந்து செல்லுங் காலத்தில் வலக்கையால் வஸ்திரத்தின் மூலையைப் பற்றிக் கொண்டு நடப்பார். இடையின் வலப்புறத்தில் நன்றாக வடிக் கட்டிய விபூதி நிறைந்த வெள்ளிச் சம்புடம் ஒன்றும் இடப்புறத் தில் மூக்குத்தூள் 'டப்பி' ஒன்றும் இவர் உடையிற் செருகப்பட் டிருக்கும். காலில் ஜோடு போடுவதுண்டு; ஆனால் திருவாவடு துறையில் மட்டும் இவர் அவற்றை உபயோகிப்பதில்லை. யானை போன்ற அசைந்த மெல்லிய நடையை உடையவர் இவர். அளவாக வும் மென்மையாகவும் நிறுத்தியும் பேசுவார். திடீரென்று அதட் டிப் பேசுதலும் கோபமாக இரைந்து பேசுதலும் இவர்பால்இல்லை.

வழக்கங்கள்

விடிய நான்கு நாழிகைக்குமுன் எழுந்திருப்பது இவர் வழக் கம்; உடனே ஒரு நாழிகைவழித் தூரத்திற்குக் குறையாமல் நடந்து சென்று தந்தசுத்தி முதலியவற்றைச் செய்து அநுஷ்டா னங்களை முடித்துக் கொண்டு வருவார். அப்பொழுது உடன் செல்பவர்களுடன் தமிழ்நூல்களிலுள்ள செய்யுள் நயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே நடப்பார். தம்முடன் உறையும் மாணாக்கர்கள் விழித்து எழுந்து வராவிட்டால், அவர்கள் எழுந்துவரும் வரையில் * பழந்தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லிக் கொண்டே வீட்டு வாயிலில் உலாத்துவார்; அவர்களைத் தாமாக எழுப்புவதில்லை.

நான் பழகிவந்த காலத்தில் இவர் பெரும்பாலும் வெந் நீரிலேயே ஸ்நானம் செய்துவந்தார். நல்ல புல்தரைகளையும் சோலைகளையும் ஆற்றின் கரைகளையும் பார்ப்பதில் இவருக்கு மனமகிழ்ச்சி உண்டு. கோடைக்காலத்தில் பிற்பகலிற் சென்று ஆறுகளில் ஊற்றுத் தோண்டி இறைப்பித்துச் சுத்தமான அந்த ஊற்றைப் பார்த்தலிலும் அதில் ஆடையைத் துவைக்கச் செய்தலிலும் துவைத்த ஆடைகளைக் கொய்து ஊற்றின் குறுக்கே போடுவித்து ஊறவைத்தலிலும் இவருக்கு விருப்பம் அதிகம். அந்த ஊற்றுக்களைப் பார்த்துக்கொண்டே வழக்க மாகச் செய்யும் செய்யுட்களை இயற்றுவதுமுண்டு. ஒருமுறை

* இங்ஙனம் சொல்லும் செய்யுட்களில் திருச்சிற்றம்பலக்கோவையாரி லுள்ள 'சிலம்பணிகொண்ட' என்பதும், புகலூரந்தாதியிலுள்ள 'தொழுந் துதிக்கைக்கு' என்பதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கின்றன.

12. இயல்புகளும் புலமைத் திறனும் உரை

நான்கு ஊற்றுக்களைப் போடுவித்து அவற்றைப்பற்றி நான்கு செய்யுட்கள் இயற்றினர்.

வண்டியிற் போவதைவிட நடப்பதில் இவருக்கு விருப்பம் அதிகம். வண்டியிற் பிரயாணம் செய்யும்போது சில சமயங்களில் சில மாணாக்கர்களை வண்டியிலேயே இருக்கச்செய்து தாம் இறங்கிச் சிலருடன் நடந்துவருவார்; அப்போது அங்கங்கே உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவார்.

உட்கார்ந்து பாடஞ் சொல்லும்பொழுது மடியில் ஒரு திண்டை வைத்து அதன்மேல் கைகளை மடக்கி வைத்துக் கொண்டே சொல்வார். மடத்திலிருந்து பாடம் சொல்லும் பொழுது திண்டை வைத்துக்கொள்வதில்லை. கைகளைக் கட்டிக் கொண்டே சொல்வது வழக்கம். ஆறுமணிநேரம் வரையில் காலைப் பெயர்த்துவையாமல் அமர்ந்தபடியே பிருந்து பாடம் சொல்வார். எந்த வகையான செய்யுளையும் * ஒரே வகையான இசையிலேதான் சொல்வது இவருடைய வழக்கம்.

உணவு

காலையில் எவ்வித உணவையும் இவர் உட்கொள்ளுவதில்லை. தினந்தோறும் பகலில் பூஜை பண்ணியபின்பே உண்பார். இரண்டு வேளையே உணவுகொள்வார். மிளகு சேர்த்த உணவு வகைகளிலும் கீரை வகைகளிலும் சித்திரான்னங்களிலும் புளி சேர்த்துச் செய்த அரைக்கீரை உணவிலும் நறு நெய்யிலும் மாம் பழத்திலும் தேங்காய் வழுக்கையிலும் இவருக்கு விருப்பம் உண்டு. இரவில் சீனிக்கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய பாலை உண்டு படுப்பார்; பாலுண்ணுதல் ஒருநாளும் தவறியதேயில்லை; திருவாவடுதுறையில் இருக்கும்பொழுது இரண்டு சேர் பால் இவருக்கு மடத்திலிருந்து அனுப்பப்படும்; ஒரு சேரைத் தாம் உண்டு மிகுதியை உடன் இருப்பவர்களுக்குக் கொடுத்துவிடுவார்.

குணங்கள்

இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, திருப்தி, தற்பெருமை வியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறுமை, பிறரைப்

---

* அவ்வகையான இசையைத் திருச்சிராப்பள்ளியிலும், அந்தகரைச் சார்ந்த இடங்களிலும் பெரும்பாலோரிடத்தில் அக்காலத்திற் கேட்கலாம். தியாகராச செட்டியார் பிள்ளையவர்களைப்போல அந்த இசையோடுதான் செய்யுட்களைச் சொல்லுவார்.

பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, சிவபக்தி, மாணுக்கர்பால் அன்பு முதலியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம்.

பொறுமை

இவர்பால் அமைந்திருந்த சாந்தகுணமே மாணுக்கர்களையும் பிறரையும் இவர்பால் இழுத்தது. பிறர் தம்மை அவமதித்தாலும் பிறரால் தமக்கு இடையூறுகள் நேர்ந்தாலும் பொறுத்துக் கொண்டிருக்கும் இவருடைய இயல்பை அறிந்து வியந்தவர்கள் பலர். தியாகராச செட்டியார் முதலியோர் சில சமயங்களில் இவர் மேற்கொண்ட பொறுமைக்காக இவரைக் குறை கூறியது முண்டு. யாரேனும் கடுமையாகப் பேசினால் எதிர்த்து ஒன்றும் கூறாமல் உடனே எழுந்து சென்றுவிடுவார். யாரிடத்தும் விரோ தம் பாராட்டக்கூடாதென்பது இவர் கொள்கை. தம் கொள் கைக்கு மாறுபாடுடையவர்களானாலும் தமக்குப் பல இடையூறு களைச் செய்தவர்களானாலும் அவர்களோடு பழக நேர்ந்தால் எல்லாவற்றையும் மறந்து அன்புடன் பழகுவார்; அவர்களுக்கு உதவியும் செய்வார். இவருடைய வாழ்க்கையில் வறுமையினு லும் பிறருடைய அழுக்காற்றினாலும் இவருக்கு நேர்ந்த இடையூறு கள் பல. அவற்றை யெல்லாம் பொறுமையால் வென்று புக ழோடு விளங்கினர்.

திருப்தி

பணத்திற்கு அடிமையாக இராமல் பணத்தை இவர் அடிமை யாக்கினர். எவ்வளவு வறிய நிலையில் இருந்தாலும் தம் கொள் கைக்கு விரோதமான எதையும் செய்யாத வீரம் இவர்பால் இருந்தது. வறுமையால் துன்பமுறுகையில் தமது விவேகத் தால் அத்துன்பத்தை இன்பமாக எண்ணி வாழ்ந்துவந்தார். இவரைக்கொண்டு தாம் பொருள் வருவாய் பெறலாமென்றெண் ணிப் பாடசாலை வைக்கலாமென்றும் புஸ்தகங்கள் பதிப்பிக்கலா மென்றும் வேறு வகைகளிற் பொருள் ஈட்டலாமென்றும் பலர் அடிக்கடி வந்து வந்து இவர்பால் கூறியதுண்டு. அவற்றிற்கு இவர் செவிகொடுக்கவேயில்லை. இவர் நினைத்திருந்தால் எவ்வ ளவோ செல்வத்தைப் பெற்றுப் பின்னும் சிறந்த நிலையில் இருந் திருக்கலாம். உள்ளதே போதுமென்ற திருப்தியே அத்தகைய முயற்சியில் இவரைச் செலுத்தாமல் இருந்தது. இவர் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இவருக்குத் தெரிந்த பிரபுக்களிற்

பலர் இவரைப் பெருஞ்செல்வராகச் செய்திருப்பார்கள். அவர்களிடம் தம் நிலையைக் கூறுதலே இவர் நினைத்தும் அறியார். கல்விச் செல்வத்தையன்றி வேறு செல்வத்தை இவர் மதியார்.

தம்மை வியவாமை

தம்மை வியத்தலென்னும் குற்றம் இவர்பால் ஒரு பொழுதும் காணப்படவில்லை. இவர் தமிழ்நூலாசிரியராக இருந்து செய்தற்கரிய பல செயல்களைச் செய்திருந்தாலும் அவற்றைப் பற்றித் தாமே பாராட்டிக்கொண்டதை யாரும் இவர்பால் ஒரு போதும் கண்டிலர்.

பிறருடைய குற்றத்தைக் கூறுமை

பிறருடைய குற்றங்களை இவர் எடுத்துக் கூறமாட்டார். ஒரு நூலாசிரியரிடமோ உரையாசிரியரிடமோ ஏனைப்புலவர்களிடமோ குற்றங்கள் காணப்படின் அவற்றை இவர் பெரும்பாலும் வெளியிடார்; வெளியிட்டாலும் குற்றமென்று பிறர் கருதாதவாறு பக்குவமாகச் சொல்லுவார்; யாரேனும் குற்றமென்று வலிந்து சொல்வாராயின் சமாதானம் சொல்லிப் பின்பு அவரை அவ்வாறு சொல்லாத வண்ணம் செய்விப்பார்.

பிறரைப் பாராட்டல்

பிறரைப் பாராட்டுதலும் பிற கவிஞர்களுடைய செய்யுட்களைப் போற்றுதலும் தம்பால் வந்தவர்கள் கல்வியறிவிற் குறைவுடையவர்களாக இருந்தாலும் அவர்களுடைய செய்யுட்களைப் பாராட்டி ஆதரித்து ஊக்கமளித்தலுமாகிய இவருடைய நற்குணங்கள் யாவரையும் இவர்பால் இழுத்தன. தமக்குப் புலப்படாத ஒரு கருத்து எவ்வளவு சிறிதாயினும் அதனை யார்கூறினும் அங்ஙனம் கூறியவருடைய நிலையைக் கருதாமல் இவர் மிகவும் பாராட்டுவார்; இவரால் அங்ஙனம் பாராட்டப்பெற்ற பின்பு அவர்களுக்கு ஒரு தனி மதிப்பு உண்டாகும்.

இரக்கம்

பிறருடைய துயரைக் கண்டவிடத்து இரங்கும் உள்ளமுடையவர் இவர். தமக்குக் குறைபாடிருப்பினும் பிறருக்குள்ள குறைபாடுகளை நீக்கும் தன்மையினர்; "தம்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறாஉம், வெங்குறை தீர்ப்பிக்கும்" விழுமியோர் இவர்.

நன்றிமறவாமை

பிறர்செய்த நன்றியை மறவாமற் பாராட்டும் தன்மை இவருடைய குணங்களில் தலைசிறந்து விளங்கியது; "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர்" என்னும் அருமைத்திருக்குறளுக்கு இலக்கியமாக இவர் இருந்தனர். பிறருடைய உதவியைப் பெற்றவுடன் நன்றியறிவினுல் மனங்கசிவதில் இவரை ஒப்பார் யாரும் இல்லையென்றே சொல்லலாம். அந்த உணர்ச்சி அவ்வப்பொழுது உபகாரிகளை இவர் பாராட்டிய செய்யுட்களில் வெளிப்பட்டிருத்தலைக் காணலாம். கொடுத்தாற் புகழ்தலும் கொடாவிடின் இகழ்தலுமாகிய புன்செயல்கள் இவர்பால் இல்லை. மனிதரைப் புகழ்வது பிழையென்று சிலர் கூறுவதுண்டு. ஒன்றை எதிர்பார்த்து ஒருவரைப் புகழ்தலும், எதிர்பார்த்தபடி கிடைக்காவிடின் வெறுத்தலும் பிழையெனவே இவர் கருதி வந்தார். "ஒவ்வொரு மனிதனும் பிறருடைய உதவிகளால் வாழ்க்கையை நடத்த வேண்டியவனாக இருக்கிறான். பிறருதவியின்றி ஒருவன் தனது ஆற்றலொன்றனையே கொண்டு வாழ்வது உலகத்தில் இயலுவதன்று. ஒருவருக்கொருவர் தம்மால் இயன்ற உதவிகளைச்செய்து இன்புற்று வாழ்வதே அறம். அங்ஙனம் ஒருவர் ஒருவருக்கு உதவிபுரியும்பொழுது அதனை மறவாமல் நினைத்தலும் வாயாரப் புகழ்தலும் இயன்றவரையில் உதவிசெய்தவருக்குத் தம்மால் ஆன உதவிகளைப் புரிதலும் வேண்டும். அந்த முறையில் புலமையுடையவர்கள் தமக்கு உதவிசெய்தவர்களை மறவாமல் வாயாரப் புகழ்தல் ஒரு கடமையாகும். நாவன்மையை அவ்வகையில் உபயோகிப்பது செய்ந்நன்றியறிவின் பயனுகுமேயன்றிப் பிழையாக எண்ணக்கூடியதன்று. சங்கப்புலவர்களும், கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்தி வில்லிபுத்தூரார் முதலிய புலவர் பெருமக்களும் செய்ந்நன்றியறிவு காரணமாகவே தம்மை ஆதரித்த உபகாரிகளின் புகழைப் பாராட்டி உரிய இடங்களில் பல செய்யுட்களில் அமைத்துள்ளார்கள்" என்று இவர் கூறுவதுண்டு.

சிவபக்தி

இவருக்கு இருந்த சிவபக்தி அளவிடற்கரியது. சிவதீட்சைகளை முறையே இவர் பெற்றவர். இவர் நெற்றியில் எப்பொழுதும் திருநீறு விளங்கிக்கொண்டேயிருக்கும். இரவில் சயனித்துக் கொள்ளுமுன் திருநீறு தரித்துக்கொண்டு சிறிது நேரம் ஈசுவரத்

தியானம் செய்துவிட்டு அப்பால்தான் சயனித்துக்கொள்வார். திருநீற்றுச் சம்புடம் தலையணையின் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். துயிலெழுந்தவுடன் திருநீறு தரித்துக்கொண்டுதான் புறத்தே வருவார். நாள்தோறும் சிவபூஜையை நெடுநேரம் செய்வார். பூஜைக்கு வேண்டிய பத்திரபுஷ்பங்களை அதிகமாகக் காணுமிடந்தோறும் எடுத்தும் எடுப்பித்துக்கொண்டும் வருவதுண்டு.

சிவஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதும், சிவஸ்தல வரலாறுகளை நன்முகத் தெரிந்துகொள்வதும், சிவபெருமானுடைய புகழைப் பலவகையாகச் சொல்லியும் பாடியும் வரும் வழக்கமும் இவர்பாற் சிறந்து விளங்கின. சைவசம்பிரதாயங்களுக்கு விரோதமான செயல்களைக் காண இவர் மனம் பொறார். இவருடைய மாணாக்கர்களுள் ஒருவர் தம்பால் பாடங் கேட்கும் ஒரு வீரசைவரைத் தமக்குக் கால் பிடிக்கும்படி சொன்னதுண்டு. அதனை அறிந்த இவர், "சிவலிங்க தாரணம் செய்துகொண்டவரை இங்ஙனம் ஏவுதல் பிழை" என்றுசொல்லி வருந்தினர். சிவத்துவேஷமான வார்த்தைகளைக் கேட்டால் வருந்துவார்.

இப்புலவர் பெருமானுடைய சிவபக்தியின் முதிர்வை இவர் நூல்களே நன்கு தெளிவிக்கும். இவர் இறுதிநாள்காறும் சிவபிரானுடைய திருவடிக் கமலத்தையே எண்ணி உருகினர். உலக வாழ்வை நீப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு சுலோகத்தை மொழிபெயர்த்து அதனுடைய ஈற்றடியில், "ஏகநாயகனே திலேயிலாடும் இறைவனே எம்பெருமானே" என்று அமைத்த செய்தியால் சிவபிரானுடைய திருவடி நிழலில் இவர் மனம் பதிந்திருந்தமை புலப்படுகின்றதல்லவா? இவர் பூத உடம்பை நீத்த அன்று திருவாவடுதுறையில் ஸ்ரீ கோமுத்தீசுவர ரது இடபவாகனக் காட்சிவிழா அமைந்ததும், திருவாசகத்தில் அடைக்கலப்பத்தை வாசிக்கையில் இவர் பூவுலகை நீத்ததுமாகிய வாய்ப்புக்கள் இவரது சிவபக்தியின் பயனென்றே சொல்ல வேண்டும்.

பிற மதங்களிடத்தில் இவர் அவமதிப்பில்லாதவராகவே இருந்தார். கும்பகோணத்தில் பெரிய தெருவில் அயலூரிலிருந்து வந்து வாழ்ந்த ஒரு பெருஞ்செல்வர் இருந்தார். 'முனிசிபாலிடி' தேர்தலில் அவருக்கு ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாள் கோயிலைச் சார்ந்தவர்கள் தங்கள் வாக்கை வழங்கவில்லை. ஒருநாள் பிள்ளை

யவர்கள் அவரோடு பேசிக்கொண்டிருந்த சமயம் திருவிழாக் காலமாதலின் அன்று ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாளது திருத்தேர் அந்த வீதி வழியாக வருகையில் அந்தப் பிரபுவின் வீட்டு வாசலில் சிறிதுநேரம் நிறுத்தப்பட்டது. வாக்குப்பெறுத கோபத்தையுடைய அந்தத் தனவான், "இந்தச் சார்ங்கபாணி என் வீட்டு வாசலுக்கு முன்னே வந்து ஏன் நிற்கிறான்?" என்று இகழ்ச்சிக் குறிப்போடு சொன்னார். கேட்ட இக்கவிஞர் கோமான் மிகவும் வருந்தி, "தெய்வதூஷணை பண்ணுகிற இவரோடு பழகுதல் சரியன்று" என்று எண்ணி அன்றுமுதல் அவரது பழக்கத்தை அடியோடே விட்டுவிட்டார்.

மாணாக்கர்பாலிருந்த அன்பு

இவருடைய வாழ்க்கையில் இவர் நூலாசிரியராகவும் போதகாசிரியராகவும் இருந்து செய்த செயல்கள் தமிழறிவை வளப்படுத்தின. அவையே இவர் வாழ்க்கையாக அமைந்தன என்று கூறுதல் மிகையன்று. தமிழ் நூல்களை ஒய்வின்றி முறையாகப் பாடஞ்சொல்லும் திறத்தில் இவர்காலத்தில் இவரைப்போன்றவர் வேறு யாரும் இல்லை.

பலரிடம் பல சமயங்களில் அலைந்து முயன்று தாம் படித்துவந்த வருத்தத்தை இவர் நன்றாக அறிந்தவராதலின் தம்பால் வந்த மாணாக்கர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக் கூடாதென்று கருதி அவர்கள்பால் அளவற்ற அன்பு பூண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும் இயல்புடையவரானார். மாணாக்கர்களிடம் இவர் தாயைப்போன்ற அன்புடையவராக இருந்தனர்; அவர்களோ தந்தையாகவே எண்ணி இவரிடம் பயபக்தியோடு ஒழுகினர். அவர்களுடைய குற்றங்களை இவர் மறந்து விடுவார். அவர்களுக்கு எந்த எந்த வகையில் குறைகள் உண்டோ அவற்றை நீக்குதற்காக முயல்வார்; அவர்கள் தெரிந்துகொள்ளாதபடி அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வார். மாணாக்கர்களையன்றிப் பிறர் சுற்றத்தாரல்லரென்பது இவருடைய வாழ்வின் நோக்கமாக இருந்தது.

தமிழ் படித்தவர் யாரும் இவரிடத்திற் கவலையின்றிப் பழகலாம்; ஏதாவது கேள்வி கேட்பாரென்றேனும், தருக்குற்றிருப்பாரென்றேனும், தங்களுடைய பிழைப்பைக் கெடுத்துவிடுவாரென்றேனும் ஒருவருக்கும் இவர்பால் அச்சம் உண்டாவதில்லை.

12. இயல்புகளும் புலமைத் திறனும் உளக

தம்முடைய மாணாக்கர்களை நல்ல நிலையில் இருக்கச் செய்ய வேண்டுமென்னும் நினைவு இவருக்கு எப்போதும் உண்டு. தம்மைப் பார்க்கவந்த செல்வர் முதலியோர் தம்முடைய அரிய பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கையில் தம்முடைய மாணாக்கர்களை அழைத்து இருக்கச்செய்து அவர்களுக்குத் தெரிந்த பாடல்களை இசையோடு சொல்லச்செய்வதும் பொருள் சொல்லிப் பிரசங்கிக்கச் செய்து கேட்பிப்பதும் இவருடைய வழக்கம். அவர்களுக்கு அநுகூலம் உண்டாகும் விஷயத்தில் எத்தகைய உழைப்பையும் மேற்கொள்வார்.

இவர்பாற் படித்த மாணாக்கர்கள் பலவகையினர். சாதி, சமயம், ஆச்சிரமம் முதலியவற்றில் வேறுபாடுடையவர்கள் பலர் படித்தனர். யாவருக்கும் இவர்பாலிருந்த அன்பு ஒருபடித்தானதே. இவரிடம் படித்தவர்கள் நல்லறிவையும் நன்மதிப்பையும் உயர்நிலையையும் அடைந்தார்கள்; சிலர் ஸம்ஸ்தான வித்துவான்களாகவும் கலாசாலைப் பண்டிதர்களாகவும் இருக்கும் பேறு பெற்றனர். தம்பிரான்களிற் சிலர் நல்ல அதிகாரத்தையும் உயர்ந்த நிலையையும் அடைந்தனர்; சிலர் ஆதீனத்தலைவர்களாகவும் ஆயினர். இவரிடம் ஒருவர் சில காலம் படித்தாலும் சிறந்த அறிவுடையவராகி விடுவார். இவருடைய மாணாக்கர்களென்றாலே அவர்களுக்குத் தனியாக ஒரு மதிப்பு உண்டு. இவருடைய கைராசியை யாவரும் புகழ்வார்கள். இவரிடம் புஸ்தகம் பெற்றவர்கள்கூடத் தமிழ்ப் பயிற்சி உடையவர்களாக விளங்கினார்கள். திருவாவடுதுறை மடத்தில் ராயஸ வேலை பார்த்துவந்த பொன்னுசாமி செட்டியாரென்பவர் இளமையில் இவரிடம் 'வாட்போக்கிக் கலம்பகம்' என்னும் புஸ்தகத்தைப் பெற்றுப் பின் பிறரிடம் முறையே அநேக நூல்களைப் பாடங்கேட்டுத் தமிழ் நூற் பயிற்சியும் செய்யுளியற்றும் வன்மையும் சொல் வன்மையும் உடையவராகிப் புகழோடு விளங்கினர்.

பாடஞ்சொல்லுதல்

பாடஞ் சொல்வதில் இந்நாவலர் பெருந்தகைக்குச் சலிப்பே உண்டாவதில்லை. தமக்குத் தெரிந்தவற்றை யாவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்னும் உபகார சிந்தையுடையவர். மாணாக்கர்களுடைய தரமறிந்து பாடஞ்சொல்வார். பாடஞ்சொல்லும் காலத்தில் கையில் புஸ்தகம் வைத்துக்கொண்டு இவர் சொல்வதை

கான் பார்த்ததேபில்லை. பாடஞ்சொல்லும் உரை நடை, செய்யுட்கள் எல்லாம் இவருக்கு மனப்பாடமாகவே இருக்கும்.) இவர் இன்ன சமயங்களிலேதான் பாடஞ்சொல்லுவது என்ற நியமம் வைத்துக்கொள்ளவில்லை. சமயம் நேரும்பொழுதெல்லாம் பாடஞ் சொல்வதே இவருடைய வழக்கமாக இருந்தது. வண்டியிற் செல்லும்பொழுதும் உண்ணும் பொழுதும் உறங்கத் தொடங்கிய பொழுதும்கூட இவரிடம் பாடம் நடைபெறும்.

இவர் பாடம் சொல்லும்பொழுது கடினபதங்களுக்கு மட்டும் பொருள் சொல்வார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன கருத்துக்களை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்க வேண்டுமென்று கூறுவார் தேவாரம், திருவாசகம், கல்லாடம், பெரியபுராணம், திருக்குறள், காஞ்சிப்புராணம், கம்ப ராமாயணம் என்பவற்றிலிருந்து மேற்கோள்களை எடுத்துச் சொல்லி மாணாக்கர் மனத்தில் கருத்துக்கள் தெளிவாகப் பதியும் படி செய்வார். பெட்டி நிறையப் பணத்தை நிரப்பிவைத்துக் கொண்டிருக்கும் வண்மையாளன் தடையின்றி எடுத்து வாரி வாரி வழங்குவதுபோலத் தமது உள்ளக் களஞ்சியத்தில் பலநாட்களாகச் சேமித்து வைத்த பொருள்களை யெல்லாம் பாடம் சொல்லுகையில் மாணாக்கர்களுக்கு வழங்கிவரும்பொழுது, 'இவ்வளவு நூல்களையும் இவர் எப்படி மனத்திற் பதித்து வைத்துக் கொண்டாரோ!' என்னும் ஆச்சரியம் அயலிலிருப்பவர்களுக்கு உண்டாகும். நடக்கும் புஸ்தகசாலையென்று இவரைக் கூறலாம். பாடஞ்சொல்லும் நூல்களின் உரைகளில் மேற்கோளாக வரும் செய்யுட்களுக்குப் பொருள் கூறுவார். புலவர்களைப்பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்லுவார். அருங்கருத்துக்களைச் சொல்லி வரும்பொழுது அவற்றைத் தாம் அறிந்த வரலாற்றையும் கூறுவதுண்டு. மாணாக்கர்களுக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாக வேண்டுமென்னும் எண்ணத்தினால் அடிக்கடி சமஸ்யைகளை அவர்களுக்குக் கொடுத்துச் செய்யுள் செய்யச்சொல்வார்.

பண்டைக்காலமுதல் நூல்களில் வழங்கிவந்த சொற்பிரயோகங்களை நாம் மாற்றுதல் பிழையென்று சொல்வார். வடமொழிச்சொற்களைத் திரித்து வழங்கும்பொழுது மனம்போனவாறு திரித்தலை இவர் விரும்பார். எல்லாச் சொற்களையும் திரித்தே வழங்கவேண்டுமென்பது இவருக்கு உடன்பாடன்று; "என்பெய

12. இயல்புகளும் புலமைத் திறனும் உளவு

ரைத் திரித்து மீனுக்கி சுந்தரமென்று வழங்கினால் நன்றாக இருக்குமா?'' என்று கேட்பார் கோகநகம், ஆதவன், மானிடன் என்ற சொற்பிரயோகங்கள் அடிப்பட்ட வழக்காக நூல்களில் அமைந்து விட்டமையால் அவற்றை வடமொழிப்படியே இருக்க வேண்டுமென்று கருதித் திருத்துதல் நன்றன்று என்பர். சொல்லுக்கு மதிப்பு உண்டாவது புலவர்களுடைய ஆட்சியில் அது வழங்கி வருவதனால்தான்; ஆதலின் சொல்லின் உருவத்தையும் பிற தொடர்புகளையும் ஆராய்வதினும் ஆன்றோர் ஆட்சியில் உள்ளனவா என்பதை ஆராய்வதே சிறந்ததென்பது இவர் கருத்து. மனஸ் என்பதை 'மனது' என்று வழங்கக் கூடாதென்பது இவர் கொள்கை; ''மனஸ் என்ற வடமொழிச்சொல் மனம் என்றுதான்வரும்; சிரஸ் என்பது சிரமென்று வருகிறதேயன்றிச் சிரது என்று வருவதில்லை'' என்பார். இத்தகைய செய்திகளையெல்லாம் பாடஞ்சொல்லுகையில் மாணாக்கர்களுக்குச்கூறுவார். ''இலக்கண அறிவு ஒருவனுக்கு இன்றியமையாததே. ஆயினும் இலக்கிய பாடங்களை வாசித்த பின்பே இலக்கண நூல்களைக் கற்றல் பயன்விளைக்கும்'' என்று இவர் சொல்வதுண்டு. (அயலிடம் சென்றபொழுது யாரேனும் இவரிடம் கடினமான பாடல்களுக்குப் பொருள் கேட்பின் அவர்களுக்கு அவற்றை விளக்கி விட்டுப் பின்பு வீட்டுக்கு வந்து மாணாக்கர்களுக்கும் அவற்றைக் கூறி விளக்குவது இவரது வழக்கம்.)

கல்விப் பெருமை

இவருடைய கல்வி மிகவும் ஆழமும் அகலமும் உடையதாக இருந்தது; ''அளக்க லாகா அளவும் பொருளும்'' உடைய இவரது அறிவின்திறம் ஒவ்வொருநாளும் புதியதாகவே தோற்றியது; இளமை தொடங்கியே தமிழ் நூல்களை முறையாகப் பயின்று பயின்று உரம்பெற்றதாக இருந்தது. படித்தவர்களாக எண்ணிய யாவரிடமும் பழகி அவரவர்களுக்குத் தெரிந்தவற்றை இவர் இளமை தொடங்கியே கற்றனர். தமிழ் நூலாக எது கிடைப்பினும் அதனை வாசித்து மெய்ப்பொருள் அறிந்தனர். இங்ஙனம் துளித்துளியாகச் சேர்த்த அறிவு பலதுளி பெருவெள்ளமென்பதுபோல ஒரு பெரிய கடலாகப் பெருகி நின்றது. பிற்காலத்தில் இவர் பாடஞ்சொல்லும்போது நன்றாகத் தெளிந்த அறிவோடு கருத்துக்களை எடுத்துக் கூறும் வன்மையும் பாடஞ்

சொல்லும் நூல்களிலுள்ள பொருள்களைத் தம்முடையனவாகக் கொண்டுவிட்ட நிலையும் இவர் இளமை தொடங்கிச் செய்துவந்த முயற்சிகளின் பயனென்றே கூறவேண்டும். சிலரைப்போலக் கல்வி விஷயத்தில் இவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. எந்த இடத்திற்குப் போனாலும் அங்கே பழைய சுவடி ஏதாவது இருக்கின்றதா வென்று பார்ப்பார். இருந்தால் உடனே வாங்கி ஒரு முறை வாசித்து விட்டுப் பொருள் சொல்வார்; சில சமயங்களிற் பிரதி செய்துவைத்துக் கொள்வதுமுண்டு. சந்தேகம் நேரிடின் தெரிந்தவர்களைச் சந்திக்கும்பொழுது விசாரித்துத் தீர்த்துக் கொள்ளுவார்.

இப்புலவர்பிரான் பல இடங்களில் பல வகையில் சேகரித்து வைத்திருந்த தம் அறிவைத் தம் மாணவர்களுக்கு வரையாது வழங்கினமையால், பிரபந்தங்கள் உயிர்பெற்றன. அதுகாறும் தெரிவிப்பாரின்றிக் கிடந்த குமரகுருபரசுவாமிகள் பிரபந்தங்களிற்சில, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்களிற்சில, சிவஞான முனிவர் பிரபந்தங்களிற்சில, இன்னும் வேறு சில தமிழ்நாட்டாருடைய கைகளில் விளங்கின. இவர் பாடஞ் சொல்லியதனாலேயே அப்பிரபந்தங்களின் நயங்களைத் தமிழ்மக்கள் உணரத் தலைப்பட்டனர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலிய நூல்களுக்கு இவர் சொல்லி எழுதுவித்த உரைகளே பின்பு மதுரை இராமசாமிப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டன. காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், திருவானைக்காப்புராணம் முதலியவற்றிற்கு இவர் பாடஞ்சொன்ன உரையே பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்குவதாயிற்று.

பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி இவர் செவ்வந்திப் புராணம், காஞ்சிப்புராணத்தின் முதற்பாகம், திருவானைக்காப் புராணம், கல்லாடமூலம் முதலியவற்றைப் பதிப்பித்தனர்

கையெழுத்து

நூல்களைத் தொகுத்து வைப்பதிலும் தாமே எழுதிச் சேர்ப்பதிலும் இவருக்கு அவா மிகுதி. இளமை தொடங்கியே ஏட்டில் எழுதும் வழக்கம் இவருக்கு இருந்தமையின் இவருடைய எழுத்து அழகாக முத்துக்கோத்தாற்போல இருக்கும். ஒவ்வொருவரியும் கோணமல் ஒழுங்காக இருக்கும்; எழுத்து ஒன்றுடன் ஒன்று சேராது. இவரால் எழுதப்பெற்ற சுவடிகளுக்குக் கணக்கேயில்லை.

கம்பராமாயணத்தை மூன்றுமுறை எழுதியிருக்கிறார். மாணாக்கர் களுக்கும் ஏட்டில் எழுதும் பயிற்சியை உண்டாக்கினர்.

இவர் தம் கையினால் நூல்களைக் காகிதங்களில் எழுதிய தில்லை. யாருக்கேனும் கடிதம் எழுத வேண்டுமாயின் காகிதத்தில் உடன் இருப்பவரைக்கொண்டு எழுதுவித்து இறுதியில் 'தி. மீனாட்சிசுந்தரம்' என்று கையெழுத்திடுவார்; 'தி' என்பது திருச்சிராப்பள்ளி என்பதன் முதற் குறிப்பாகும். ஒருவரும் அருகில் இல்லையானால் தாமே எழுதுவார். காகிதத்தில் எழுதும் எழுத் தின் அமைப்புக்கும் ஏட்டுச் சுவடியில் எழுதும் எழுத்தின் அமைப்புக்கும் சிறிது வேறுபாடுண்டு.

தமிழன்பு

தமிழ் நூல்களிடத்தில் இவருக்கு இருந்த அன்பு அளவற் றது. ஒரு நூலைப் படித்து வருகையில் அதில் முழுதும் ஈடுபட்டு, உணவு உறக்கம் முதலியவற்றையும் மறந்துவிடுவார்; தமிழ்நூல் சில சமயங்களில் இவருடைய நோய்க்கு மருந்தாகவும் உதவி இருக்கிறது. நல்ல நூல்களிலுள்ள சிறந்த பகுதிகளைப் படிக்கும் பொழுதும் பாடஞ் சொல்லும்பொழுதும் மனமுருகிக் கண்ணீர் வீழ்த்துவார். தமிழ்ப் புலவர்களுள் கச்சியப்ப முனிவரை இவர் பக்தியோடு வழிபட்டுப் பாராட்டுவார்; "செய்யுள் செய்துவரும் பொழுது தடைப்பட்டால் கச்சியப்ப முனிவரைத் தியானிப் பேன். உடனே விரைவாகக் கருத்துக்களும் சொற்களும் தடை யின்றி எழும்" என்று இவர் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். சேக்கிழார், கம்பர், நெற்குன்ற வாண முதலியார், அம்பிகாபதி, கவி வீரராகவ முதலியார், வரதங்கராமபாண்டியர், அதிவீரராம பாண்டியர், திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசி கர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் என்பவர் களுடைய நூல்களில் இவருக்கு விருப்பம் அதிகம். கம்பருடைய செய்யுட்களைப் படித்துவருகையில் இடையிடையே அவற்றின் சுவையில் ஈடுபட்டு, "இவையெல்லாம் நினைத்துப் பாடிய செய் யுட்களா?" என்று கூறுவதுண்டு. திருப்புகழ்ராந்தாதியிலுள்ள திரிபின் அமைப்பை வியப்பார். திருச்சிற்றம்பலக் கோவையாரி லுள்ள செய்யுட்களை அடிக்கடி சொல்லிக்கொண்டே யிருப்பார். கல்லாடப் பகுதிகள் இவருக்கு அடிக்கடி ஞாபகத்துக்கு வரும். தேவாரப் பகுதிகளின் கருத்தைச் சில சில சமயங்களில் எடுத்

துக் காட்டுவதுண்டு. இலக்கண விளக்கத்தில் இவருக்கு மதிப்பு அதிகம். சைவரால் இயற்றப்பெற்ற நூலென்பதும் அந்நூல் அகத்திணையியலில், திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள துறைகளை அமைத்துக்கொள்வதற்கு ஏற்ற இலக்கணங்களையும் பொருத்தி, அவற்றிற்கு அக்கோவையாரிலுள்ள செய்யுட்களை இடையிடையே உதாரணமாகக் காட்டியிருப்பதும் அதற்குரிய காரணங்களாம். அக்காரணங்களை அடிக்கடி கூறி வைத்திய நாததேசிகரை இவர் பாராட்டுவதுண்டு. சிவஞான முனிவருடைய செய்புள் நடையிலும் வசனநடையிலும் இவருக்கு உவப்பு அதிகம். கச்சியப்ப முனிவர் நூல்களில் உள்ள அரிய அமைப்புக்களையும் சங்க நூற் பிரயோகங்களையும் பற்றி இவர் அதிகமாகப் புகழ்வார். அவருடைய நூலமைப்பையே இவர் பெரும்பாலும் பின்பற்றிப் பாடுவார்.

கவித்திறன்

இக் கவிஞர் பெருமானது கவித்திறன் இவருடைய வரலாற்றாலும் நூல்களாலும் அறியப்படும். நினைத்ததை நினைத்தவண்ணம் வார்த்தைகளாற் சொல்வதே மிகவும் அரிய செயல். மனத்தில் தோன்றிய இனிய கருத்துக்களைச் செய்யுளுருவத்தில் அமைக்கும் கவித்துவம் பாராட்டற்குரியதேயாம். கருத்துக்களை நினைக்கலாம்; நினைத்தவற்றைச் சொல்லலாம்; சொல்வதையே அழகு பெறப் பன்னலாம்; அதனையே கவியாக அமைக்கலாம்; ஆனால் நினைத்தவற்றை நினைத்தபோதெல்லாம் நினைத்த வழியே தமிழ்ச் சொற்கள் ஏவல் கேட்ப வருத்தமின்றி விளையாட்டாகக் கவி பாடும் திறமை எல்லாக் கவிஞர்களுக்கும் வாய்ப்பதன்று; அத்தகைய திறமையையுடைய கவிஞரை மற்றப் புலவர்களோடு ஒருங்கு எண்ணுதல் தகாது. அவர்கள் பிறப்பிலேயே கவித்துவ சக்தியுடன் பிறந்தவர்களாவார்கள். அவ்வகைக் கவிஞர் வரிசையில் சேர்ந்தவரே இந்த மகா கவி. * சொற்களை வருந்தித் தேடி அகராதியையும் நிகண்டுகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு கவி பாடுவதென்பது இவர்பால் ஒருபொழுதும் இல்லை. சுவையற்ற பாடல்களை உண்டாக்கும் உலைக்கூடமாக இவர் மனம் இராமல், வளம்பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்தது. செய்

* இப் புத்தகம் உருரு-ஆம் பக்கத்திலுள்ள, "எனைவைத்தி எனை வைத்தி" என்னும் செய்யுளைப் பார்க்க.

யுள் இயற்றுவது இவருக்குத் தண்ணீர் பட்டபாடு. எவ்வளவோ ஆயிரக்கணக்காக இவர் செய்யுட்களை இயற்றினாலும் இவருக்கு முழுத்திருப்தி உண்டாகவில்லை. இவருடைய நாத்தினவு முற்றும் தீரவேயில்லை. இவருடைய ஆற்றலை இயன்றவரையில் பயனுறச் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தோடு தக்கவண்ணம் யாரேனும் இவரை ஆதரித்து ஊக்கத்தை அளித்து வந்திருந்தால் இவர் இன்னும் எவ்வளவோ நூல்களை இயற்றியிருப்பார். சிலசில காலங்களில் சிலர் சிலரால் தங்கள் தங்கள் கருத்துக்கு இயைய இன்ன இன்னவகையாகச் செய்யவேண்டுமென்று தூண்டப்பட்டுச் செய்த நூல்களே இப்பொழுது இருக்கின்றன. இவருடைய புலமைக் கடலிலிருந்து ஊற்றெடுத்த சிறிய ஊற்றுக்கள் என்றே அவற்றைச் சொல்லவேண்டும். அக்கடல்முழுதும் மடைதிறந்திருந்தால் தமிழ்நாடு முழுவதும் இவருடைய பலதுறைப் பட்ட கவி வெள்ளத்தில் முழுகி இன்புற்றிருக்கும்.

செய்யுள் இயற்றுவதெனின் அதற்கென்று தனியிடம், தனிக் காலம், தனியான சௌகரியங்கள், ஓய்வு முதலியவற்றை இவர் எதிர்பார்ப்பதே இல்லை. இன்னகாலத்தில்தான் பாடுவது என்ற வரையறையும் இல்லை. பிரபுக்களும் அன்பர்களும் வந்து பேசிக் கொண்டிருக்கையிலேயே அருகிலிருக்கும் ஒரு மாணாக்கரிடம் இவர் ஒரு நூலுக்குரிய செய்யுட்களைச் சொல்லி எழுதுவித்துக் கொண்டே யிருப்பார்.

இவர் பெரும்பாலும் யோசித்துக்கொண்டேயிருக்கும் இயல்புடையவர். பாடவேண்டிய விஷயங்களை ஒருவகையாக மனத்தில் ஒழுங்குபடுத்திக்கொண்டு பின்பு பாட ஆரம்பித்தால் ஒரே மூச்சில் நூற்றுக்கணக்காகப் பாடுவார். செய்யுட்களைச் சொல்லிக்கொண்டே வருகையில் மனப்பாடமான நூல்களில் உள்ள செய்யுட்களைக் கூறுகின்றாரென்று தோற்றுமேயொழியப் புதிய செய்யுட்களை யோசித்துச் சொல்லி வருகிறாரென்று தோற்றாது. மிகவும் அரிய கற்பனைகளை மனத்திலே ஒழுங்குபண்ணிச் சில நிமிஷ நேரங்களிற் சொல்லிவிடுவார். நூல்களுக்கு இடையிடையே அமைந்த எதுகைக் கட்டுள்ள பாடல்களை இளைப்பாற்றுப் பாடல்களென்பார்.

இவர் இயற்றியவற்றைப் புராணங்கள், பிரபந்தங்கள், தனிப் பாடல்கள், சிறப்புப்பாயிரங்களென நான்கு வகையாகப் பிரிக்க

லாம். புராணங்களைக் காப்பிய இலக்கணப்படி அமைக்கும் முறையை மேற்கொண்ட புலவர்களுள் இவரைப்போல அளவிற் பலவாகவுள்ள நூல்களைச் செய்தவர்கள் வேறெவரும் இல்லை. இவருக்கு முன்பிருந்த தமிழ்ப்புலவர்களிற் சிலர் சில புராணங்களை மொழிபெயர்த்துக் காப்பியங்களாகச் செய்திருக்கின்றனர். அவர்களுடைய நூல்களிற் காணப்படும் அமைப்புக்கள் அனைத்தையும் இவருடைய நூல்களிற் காணலாம்.

நூல்களின் இயல்பு

இவருடைய நூல்களிற் பெரும்பான்மையானவை புராணங்களே. இவருடைய வாக்கால் தங்கள் தங்கள் ஊருக்கு ஒரு புராணமேனும் ஒரு பிரபந்தமேனும் பெறவேண்டுமென்று அக்காலத்தில் சிவஸ்தலங்களில் இருந்தவர்கள் விரும்பினர்கள். பழையபுராணம் இருந்தாலும், நாட்டுச் சிறப்பு முதலிய காப்பிய இலக்கண அமைதியுடன் செய்யவேண்டுமென்னும் கருத்தால் பலர் இவரை மீண்டும் ஒரு புராணம் இயற்றித் தரும்படி வற்புறுத்தி வேண்டுவதுண்டு. இவர் புராணங்கள் இயற்றிய தலங்களிற் பெரும்பான்மையானவற்றிற்குப் பழைய புராணங்கள் உண்டு. ஆனாலும் இவருடைய புராணத்திற்கு மதிப்பு அதிகம். இவராற் புராணம் முதலியவை பாடப்பெற்ற தலங்கள் பல சொற்பணிகளும், கற்பணிகளும், பொற்பணிகளும் இயற்றப்பெற்றுப் பலவகையாலும் வளர்ச்சியுற்று விளங்குகின்றன என்பர். திருச்சிராப்பள்ளியில் சிரஸ்தேதாராக இருந்த ராவ்பகதூர் தி. பட்டாபிராம பிள்ளை யென்னும் கனவான் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குத் தம்முடைய கருத்தை அமைத்து அகவல் வடிவமாக விடுத்த விண்ணப்பமொன்றில் பிள்ளையவர்களை, "புராணம் பாடும் புலவன்" என்று குறித்திருக்கின்றனர்.

ஏறக்குறைய மூப்பது வருஷங்களுக்கு முன் நானும் என்னுடைய தம்பியும் சில நண்பர்களும் திரு எவ்வுளூரிலிருந்து திருவெண்பாக்கம் என்னும் சிவஸ்தல தரிசனத்திற்காக நடந்து போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது எதிரில் வந்த எழுபது பிராயமுடைய வேளாளரொருவரிடம் திருவெண்பாக்கத்தைப் பற்றிய விஷயங்களை விசாரிக்கத் தொடங்கினேன். அவர் அத்தல சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டே உடன் வந்தார். பின்பு நான், "இந்த ஸ்தலத்திற்குப் புராணம் உண்டா?" என்

றேன். அவர், "புராணம் பாடுவதற்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களா இருக்கிறார்கள்? அந்த மகான் இருந்தால் இதற்கும் ஒரு புராணம் பாடியிருப்பார்" என்றார். அந்தச் சொற்கள் எனது அகக்கண்ணின்முன் பிள்ளையவர்களுடைய திருவுரு வத்தையும் செயல்களையும் தோற்றச் செய்தன; நெஞ்சம் உருகி யது. வந்த அன்பர்களிடம், "ஜனசஞ்சாரமற்ற இந்தக் காட் டிலேகூடப் பிள்ளையவர்களுடைய புகழ் பரவியிருக்கிறது; பார்த் தீர்களா!" என்று சொன்னேன்.

சில புராணங்கள் முற்றுப்பெறுதற்கு முன்பே அரங்கேற் றம்தொடங்கப்பெறும்; செய்யுளியற்றுதலும் அரங்கேற்றுதலும் அடுத்தடுத்து நிகழும். உடனிருந்தவர்களால் சிறப்புப்பாயிரம் இயற்றிக் கடவுள் வாழ்த்தின் இறுதியிற் சேர்க்கப் பெறுவது வழக்கம். இங்ஙனம் செய்வித்துச் சேர்ப்பது பண்டைக்காலத்து முறையென்று தெரிகிறது.

இவர் இயற்றும் புராணக்காப்பியங்களில் கடவுள் வாழ்த்தி லும் அவையடக்கத்திலும், "நானுதல் பொருளைத் தன்னகத் தடக்கி" என்னும் இலக்கணப்படி நூலில்வரும் செய்திகளை உரிய இடங்களிற் பலவகையாக அமைப்பார். அவையடக்கங்கள் பலவற்றில் இலக்கணச் செய்திகளையும் சாஸ்திரக் கருத்துக்களை யும் காணலாம். பெரும்பான்மையான புராணங்களில் கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் வணக்கத்தில் மடக்கு அமைந்திருக் கும். நாட்டுச் சிறப்பில் இன்னநாடு என்று சொல்லும்பொழுது செய்யுட்களின் இறுதியில் மடக்கை அமைப்பதும் ஐந்திணைகளை வருணிக்கும்பொழுது அவ்வத்திணைகளில் அமைந்துள்ள சிவஸ்த லங்களைக் கூறுவதும் இவர் இயல்பு. இவை பெரிய புராணத்தால் அறிந்தவை. சித்திரகவிகளைத் திருநாகைக்காரோணப் புராணம் அம்பர்ப்புராணம் என்பவற்றில் இவர் அமைத்திருக்கிறார். காஞ் சிப் புராணத்தின் முதற்காண்டத்தில் இத்தகைய அமைப்புஇருக் கிறது. தோத்திரம் வருமிடங்களில் ஒத்தாழிசைக் கலிப்பா முத லியவற்றையும் அமைப்பர்; இது சிகாளத்திப் புராணம் முதலிய வற்றிலிருந்து அறிந்துகொண்டது. வரலாறுகளைச் சொல்லும் பொழுது வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை முதலிய சிறு செய்யுட் களாற் கூறுவர்; சில சமயங்களிற் கட்டளைக் கலித்துறையாலும் பாடுவர். தேவாரச் சந்தம் இவருடைய நூற்செய்யுட்களில்

அமைந்து விளங்குதலை அங்கங்கே காணலாம். சைவசித்தாந்த சாஸ்திரங்களிலுள்ள கருத்துக்களைப் பல வேறு உருவங்களில் இவர் நூல்களில் அமைத்துள்ளார். இவருடைய நூல்களிற் பெரும் பாலனவற்றின் இறுதிச் செய்யுளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்தைப்பற்றிய வாழ்த்தைக் காணலாம். எந்த நூலிலேனும் ஒரு புதுக்கருத்தை அறிந்தாராயின் அதனைப்பின்னும் அழகுபடுத்தித் தாம் இயற்றும் நூலில் பொருத்திவிடுவார். தாம் கண்டும் கேட்டும் அநுபவித்தும் அறிந்தவற்றைச் செய்யுட்களில் அங்கங்கே அமைத்துப் பாடுவார். தம்முடைய ஞானாசாரிய ஸ்தானமாகிய திருவாவடுதுறையிலுள்ள மடாலயத்தையும் குரு மூர்த்திகளையும் உரிய இடங்களிற் பாராட்டிக் கொண்டே செல்வது இவருடைய வழக்கம்.

இவருடைய பிரபந்தங்களில் அவ்வப்பிரபந்தங்களின் இலக்கணம் நன்முக அமைந்திருக்கும். பிள்ளைத் தமிழ்களில் இவர் பகழிக்கூத்தரையும் குமரகுருபரரையும் ஒப்பர். கோவைகளில் கற்பனைகளையும் நீதிகளையும் பண்டைப்புலவர் சொற்பொருள்களையும் காணலாம். இவர் இயற்றிய திருவிடைமருதூருலாவுக்கு இணையாக உள்ள ஒருலாவைக் காண்டலரிது. யமகந்திரிபுவகைகளில் வேறெவரும் இயற்றியிராத விசித்திரமான அமைப்புக்களை இவர் வாக்கிற்காணலாம்.

இவர் இயற்றிய தனிப்பாடல்கள் பலவகையாகும். சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவண்ணம் சாதுரியமாகப் பாடிய பாடல்கள் அளவிறந்தன. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. அவற்றையன்றி நன்றியறிவின் மிகுதியால் தமக்கு உபகாரம் செய்தவர்களை அவ்வப்போது பாடிய செய்யுட்கள் பல. அவை அன்பு மிகுதியால் பாடப்பட்டனவாதலின் சில செய்யுட்கள் உயர்வுநவிற்சியாகத் தோற்றும். யாருக்கேனும் கடிதமெழுதுகையில் தலைப்பில் ஒரு பாடலை எழுதுவிப்பது இவருடைய வழக்கம். அங்ஙனம் இவர் எழுதிய பாடல்கள் நூற்றுக்கணக்காக இருக்கும். வடமொழி வித்துவான்கள் அவ்வப்பொழுது கூறும் சுலோகங்களை உடனே மொழிபெயர்த்துச் சொல்லிக்காட்டுவார். அவ்வாறு இயற்றிய செய்யுட்கள் பல. பிறருக்காகப் பாடிக்கொடுத்தவை எத்தனையோ பல.

இவரால் இயற்றப்பெற்ற சிறப்புப்பாயிரங்கள் நூலாசிரியருடைய தகுதிக்கேற்ப அமைந்திருக்கும். இவரிடமிருந்து சிறப்

புப்பாயிரம் பெறுவதனல் நூலியற்றுபவர்களுக்கு உயர்ந்த மதிப்பு உண்டாயிற்று. அதனல் நூலியற்றுபவர்கள் பலர் இவருடைய சிறப்புப்பாயிரம் பெறப் பலவகையில் முயல்வார்கள். அகவலாகவும் விருத்தங்களாகவும் தரவு கொச்சகமாகவும் இவர் சிறப்புப் பாயிரங்கள் இயற்றியளிப்பதுண்டு. சிறந்த நூலாயின் அகவலாலும் பல விருத்தங்களாலும் சிறப்புப்பாயிரத்தை அமைப்பார். இல்லையெனின் ஒரு செய்யுளாலேனும், இரண்டுசெய்யுளாலேனும் இன்ன நூல் இன்னுர் செய்தார் என்னும் பொருள்மட்டும் அமையச்செய்து அளித்துவிடுவார். நூல்களுக்குச் சிறப்புப்பாயிரங்கள் அளிக்கும் முறை இவர் காலத்திலே தான் மிகுதியாக வழங்கலுற்றது.

இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில. தெரிந்தவற்றுள் புராணங்கள் 22; பிறகாப்பியங்கள் 6; பிரபந்தங்கள் 45; தனிப்பாடல்கள் அளவிறந்தன.

க. தலபுராணங்கள்

(1) ‡ அம்பர்ப் புராணம்
(2) ஆற்றூர்ப் புராணம்
(3) ¶ உறையூர்ப் புராணம்
(4) ¶ கண்டதேவிப் புராணம்
(5) ¶ ஸ்ரீ காசிரகசியம்
(6) ¶ குறுக்கைப் புராணம்
(7) ¶ கோயிலூர்ப் புராணம்
(8) ¶ சூரைமாநகர்ப் புராணம்
(9) தனியூர்ப் புராணம்
(10) * தியாகராச லீலை [ம்ண
(11) ¶ திருக்குடந்தைப் புரா
(12) ‡ திருத்துருத்திப் புராணம்
(13) ¶ திரு நாகைக் காரோ [ணப் புராணம்
(14) ¶ திருப்பெருந்துறைப் [புராணம்
(15) *† திருமயிலைப் புராணம்
(16) * திருவரன்குளப் புரா [ணம்
(17) *பட்டீச்சுரப் புராணம்
(18) மண்ணிப்படிக்கரைப் புரா [ணம்
(19) ¶ மாயூரப் புராணம்
(20) ¶ வாளொளி புற்றூர்ப் [புராணம்
(21) விளத்தொட்டிப் புரா [ணம்
(22) ¶ வீரவனப் புராணம்.

---

* இக் குறியிடப்பட்டவை பூர்த்தியாகாத நூல்கள்.
† இக் குறியிடப்பட்டவை இப்பொழுது கிடைக்கப் பெறுதவை.
‡ அச்சிடப்படாத நூல்கள்.
¶ அச்சிடப்பெற்றும் இப்பொழுது கிடைத்தற்கரியன.

உ. சரித்திரம்

(1) ஆதி குமரகுருபரஸ்வாமி கள் சரித்திரம்
(2) * சிவஞான யோகிகள் சரித்திரம்
(3) † மயில்ராவணன் சரித்திரம்.

ஊ. மான்மியம்

குருபூசை மான்மியம்.

ச. பிற காப்பியங்கள்

(1) குசேலோபாக்கியானம்
(2) சூத சங்கிதை.

டு. பதிகம்

(1) கச்சி விநாயகர் பதிகம்
(2) சுப்பிரமணியசுவாமி பதிகம்
(3) † திட்டகுடிப் பதிகம்
(4) மருதவாணர் பதிகம்.

சு. பதிற்றுப்பத்தந்தாதி

(1) † தண்டபாணி பதிற்றுப் பத்தந்தாதி
(2) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப்பத் தந்தாதி
(3) திருவூறைப் பதிற்றுப்பத் தந்தாதி
(4) பழசைப் பதிற்றுப்பத்தந் தாதி
(5) பாலவனப் பதிற்றுப்பத் தந்தாதி
(6) பூவாளூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி.

எ. திரிபந்தாதி

(1) குடந்தைத் திரிபந்தாதி
(2) திருப்பைஞ்ஞீலித் திரிபந் தாதி
(3) † திருவானைக் காத்திரிபந் தாதி
(4) திருவிடை மருதூர்த் திரி பந்தாதி.

ஏ. யமக அந்தாதி

(1) திருச்சிராமலை யமக அந் தாதி
(2) திருவாவடுதுறை யமக அந் தாதி
(3) தில்லை யமக அந்தாதி.

கூ. வெண்பா அந்தாதி

† எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி.

கo. மாலை

(1) அகிலாண்டநாயகி மாலை
(2) சுற்குடி மாலை
(3) சிதம்பரேசர் மாலை
(4) சுப்பிரமணியதேசிகர் மாலை
(5) சச்சிதானந்ததேசிகர் மாலை
(6) சவராயலு நாயகர் மாலை
(7) சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை.

12. இயல்புகளும் புலமைத் திறனும் உணர்தல்

கக. பிள்ளைத்தமிழ்

(1) அகிலாண்டநாயகிபிள்ளைத் தமிழ்
(2) காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்
(3) சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
(4) திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்
(5) திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்
(6) † பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழ்
(7) † பிரம்ம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ்
(8) பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ்
(9) மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ்
(10) அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ்

கஉ. கலம்பகம்

(1) வாட்போக்கிக் கலம்பகம்
(2) அம்பலவாண தேசிகர் கலம்பகம்.

கஙூ. கோவை

(1) சிகாழிக் கோவை
(2) குளத்தூர்க் கோவை
(3) வியாசைக் கோவை

கச. உலா

திருவிடைமருதூருலா.

கடு. தூது

(1) சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது
(2) † தானப்பாசாரியார் தசவிடு தூது.

கசூ. குறவஞ்சி

† திருவிடைக்கழிக் குறவஞ்சி.

கஎ. சிலேடை வெண்பா

* † திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா.

கஏ. வேறு

(1) கப்பற் பாட்டு
(2) குருபரம்பரை அகவல்
(3) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஆனந்தக்களிப்பு
(4) பொன்னூசல்
(5) மங்களம்
(6) லாலி
(7) வாழ்த்து.

இவற்றையன்றி இவர் வேறு பல நூல்களே இயற்றவேண்டுமென்று எண்ணியிருந்ததுண்டு. குறிஞ்சித்திணை வளங்கள் நிறைந்து விளங்கும் குற்றாலத்திற்கு ஒரு கோவை பாடவேண்டுமென்று எண்ணியிருந்தனர். அவ்வெண்ணம் என்ன காரணத்தாலோ நிறைவேறவில்லை.

வசனம் எழுதுவதைக் காட்டிலும் செய்யுள் இயற்றுவதிலே தான் இவருக்கு விருப்பம் அதிகம். இவர் எழுதும் கடிதங்கள் எளிய வசன நடையில் சுருக்கமாக அமைந்திருக்கும்.

பேச்சு

இவருடைய பேச்சு யாவருக்கும் விளங்கும்படி இருக்கும். பேச்சிலேயே இவருடைய சாந்த இயல்பு வெளியாகும். புராணப் பிரசங்கம் செய்யும்பொழுது ஒவ்வொரு கருத்தையும் விரிவாக எடுத்துக் கூறிச்செல்வார். விரைவின்றியும் தெளிவாகவும் இடையிடையே மேற்கோள்கள் காட்டியும் பதசாரங்கள் சொல்லியும் பிரசங்கம் செய்வார்.

'எல்லாம் கூடிக்கூடியும்' என்னும் தொடர் இவருடைய பேச்சில் அடிக்கடி வரும். 'ஊக்கம்' என்னும் சொல்லே இடையிடையே இவரோடு பேசிவருகையில் கேட்கலாம். மாணாக்கர்களிடம் ஏதாவது சொல்வதானால், 'என்னப்பா' என்றுவது 'அப்பா' என்றுவது சொல்லிவிட்டுத்தான் செய்திகளைச் சொல்லத் தொடங்குவார். கல்வியின் இயல்பை அறியாமல் கௌரவத்திற்காகமட்டும் யாரேனும் ஒருவர் உதாரகுணமுடையவராகத் தோற்றினால் அவர்பால் தம்முடைய மாணாக்கர்களேனும் வேறு யாரேனும் சென்று உதவி பெறலாமென்றெண்ணுவதுண்டு. அவர்களிடம், "அவரிடம் போய்த் தமிழ்ப் பாட்டைச் சொல்லி விடவேண்டாம். அவர் காதுக்கு அது நாராசம்போல இருக்கும். மற்ற ஆடம்பரங்களுக்குக் குறைவில்லாமற் சென்றுற் போதும்" என்பார். கல்வி யறிவில்லாதவர்கள் செய்யும் உபகாரத்தை, 'பெறுவான் தவம்' என்று குறிப்பாகக் கூறுவார்; "அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும், இல்லை பெறுவர்ன் றவம்" என்னும் திருக்குறளில் உள்ள தொடர் அது.

புகழ்

அருங்குணமும் நிறைந்த புலமையும் தளரா நாவன்மையும் அமைந்த இப்பெரியாருடைய கீர்த்தி இவருடைய காலத்திலேயே தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் பரவியிருந்தது. திருவாவடுதுறை மடத்தில் ஆதீன வித்துவானாக அமர்ந்தபின்னர்த் திருக்கூட்டத்தாருடைய பழக்கமும் ஆசிரியர்களின் திருவருளும் சிவ பூஜையும் மாணாக்கர்களுக்கு அதிகமாகப் பாடஞ் சொல்லுதலும் அவ்வப்போது நூல் இயற்றுதலுமாகிய இவற்

மேடு இவர் மனம் அமைதியுற்றிருந்தது. வேறு எவ்வகையான நிலையையும் இவர் விரும்பவில்லை. ஆயினும் இவருடைய புகழ் நாளுக்குநாள் பரவிக்கொண்டே யிருந்தது. சைவ மடாதிபதிகள் எல்லோருடைய நன்மதிப்பையும் இவர் நன்கு பெற்றிருந்தனர். சைவர்கள் இவரை, "சைவப் பயிர் தழைத்தழையும் புயல்" என்றே கருதிவந்தனர். அன்னம் அளித்துப் புஸ்தகம் வாங்கிக் கொடுத்து அன்போடு படிப்பிப்பவர் இவரென்ற பெரும் புகழ் எங்கும் பரவியது. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்ற பெயரை யுடையோர்கள் பண்டைக்காலத்தில் ஒவ்வொருவரே இருந்தனர்; ஆதலின் அவர்களுடைய பெயர்கள் மற்றவர்களைச் சாராமலே தனிச் சிறப்புற்றார்கள். இவருடைய பெயரை உடையவர்கள் பலரிருந்தும் 'மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்' என்று கூறின் இவரையே குறிக்கும் பெருமையை இவர் அடைந்திருந்தனர். தமிழ் வித்துவான்களில், "பிள்ளையவர்கள்" என்றே வழங்கும் பெரிய கௌரவம் இவருக்குத்தான் அக்காலத்தில் அமைந்திருந்தது சமீபகாலத்தில் இத்தகையோர் இருந்ததில்லை.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இவருடைய புகழைப்பற்றிச் சொல்லும்பொழுது, "நம்மிடம் வரும் தமிழ்வித்துவான்கள் யாராயினும் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டவரென்றேனும் அவர்களுக்குப் பாடஞ் சொன்னவரென்றேனும் அவர்களுக்கு ஐயம் தீர்த்தவரென்றேனும் அவர்களை ஜயித்தவரென்றேனும் தம்மைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். வருபவர்கள் தங்கள் தங்கள் புகழை வெளியிட எண்ணி அங்ஙனம் கூறுகிறார்கள். நமக்கோ அவர்கள் கூறக்கூறப் பிள்ளையவர்களுடைய புகழ்தான் உரம்பெற்று மிகுதியாகத் தோற்றிக்கொண்டே இருக்கிறது" என்று கூறுவார்.

இவரிடம் பாடங் கேட்க வேண்டுமென்று விரும்பியும் தங்களுக்குச் செவ்வி வாயாமையால் வருந்தினோர் பலர். வேறு யாவராலும் தீர்க்கமுடியாத சந்தேகங்களை இவரைப் பார்க்கும் சமயம் நேருமாயின் அப்பொழுது இவர்பால் கேட்டுத் தீர்த்துக் கொள்ளலாமென்னும் கருத்துடைய பலர் அங்கங்கே இருந்தனர். செங்கணம் சின்னப்பண்ணை நாட்டாராகிய விருத்தாசல ரெட்டியாரென்பவர் தாம் படித்துக்கொண்டுவரும் ஒவ்வொரு நூலிலும் உண்டாகும் ஐயங்களை இவர்பால் தெரிவித்து மாற்றிக் கொள்ள வேண்டுமென்று ஐயப்பகுதிகளை ஒரு குறிப்புப் புஸ்தகத்தில் பதிந்துகொண்டே வந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

இவரால் தமிழ்நாட்டிற்கு உண்டான பயன்

இப்புலவர் பிரானால் தமிழ்மக்கள் பெற்றபயன் மிகப் பெரிதாகும். புதிய புதிய நூல்களை இயற்றித் தமிழ் நயங்களை அமைத்துக் காட்டிய இவருடைய செய்யுளால் பலவகைச் சுவைகளை அறியும் பயனைத் தமிழ்மக்கள் பெறுகின்றனர். புது நூல்களை இயற்றியதோடு நில்லாமல் தாம் வருந்தித் தேடிய பழைய நூல்களை விளக்கிவைத்த இவருடைய செயல் தமிழ்நாட்டாரால் என்றைக்கும் நினைக்கத்தக்கதாகும். தமிழ்ப்பாடஞ் சொல்லிச் சொல்லி மாணாக்கர் கூட்டத்தை வளர்த்து அவர்கள் மூலமாகத் தமிழறிவைத் தமிழ் மக்களுக்குப் பயன்படச்செய்த வள்ளல் இவர். எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும் பழைய புராணங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பயின்று இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இவருடைய தொடர்பேனும் இவர்பாற் பாடங் கேட்டவர்களுடைய தொடர்பேனும் பெரும்பாலும் இருக்கும். இன்றளவும் ஓரளவில் புலவர்களுடைய நூல்களின்பால் உள்ள மதிப்புக்கு மூல காரணம் இவரென்றே சொல்லலாம். தமிழ்த் தெய்வத்தின் திருத்தொண்டர்களாகித் தமிழகத்தைத் தமிழன்பில் ஈடுபடுத்திய பெரியார்களுடைய வரிசையில் இவரும் நிற்பர். தமிழ் நூற் கோவைகளில் இவருடைய நூல்களும் முத்துக்களைப்போல விளங்குகின்றன. இனியும் அவை தமிழ்மக்கள் உள்ளத்தில் இன்பத்தை உண்டாக்கிக்கொண்டே என்றும் குன்று இளமையோடு விளங்கும். அவற்றை ஊன்றிப் படிப்பவர்கள் பிள்ளையவர்களின் புலமை உருவத்தை உணர்ந்து மகிழலாம். தமிழ் உள்ளளவும் இவருடைய பெரும்புகழ் நின்று நிலவுமென்பது திண்ணம்.

(ஆசிரிய விருத்தம்)

சுத்தமலி துறைசையிற்சுப் பிரமணிய தேசிகமெய்த்
தூயோன் றன்பால்
வைத்தமலி தருமன்பின் வாழ்ந்தினிய செந்தமிழை
வளர்த்தென் போல்வார்க்
கத்தமலி நூல்கணவின் மீனாட்சி சுந்தரப்பேர்
அண்ண லேகின்
புத்தமுத வாக்கினையு மன்பினையு மறவேனெப்
போது மன்னே.

அநுபந்தம் 1

* வேறு சில வரலாறுகள்

'எழுவாய் பயனிலை'

பிள்ளையவர்களுடைய இளம்பிராயத்தில் ஒருவர் பாடம் கேட்க வந்தார். "என்ன படிக்க வேண்டும்?" என்று இவர் அவரைக் கேட்கவே அவர், "இலக்கியம் படிக்கவேண்டும்" என்று கூறினர். அப்பால், "இலக்கணம் படிக்க வேண்டாமா?" என்று இவர் கேட்டபொழுது, "நன்முகப் படித்திருக்கிறேன்" என்று அவர் விடை கூறினர்; உடனே இப்புலவர்பிரான் அவரை ஒரு செய்யுள் சொல்லச் செய்து, "இந்தப் பாடலில் எழுவாய் பயனிலை என்ன?" என்று கேட்டார். அவர் நெடுநேரம் யோசித்தும் விளங்காமல் விழித்துக்கொண்டே இருக்கையில் இவர், "எழுவாய் பயனிலை" என்று சொன்னர்; "எழுந்து செல்லலாம்; யோசிப்பதில் பிர யோசனமில்லை" என்பது இவர் சொல்லியதற்குப் பொருள். அவர் அதனையும் உணராதவராகி யோசித்துக் கொண்டிருந்தார். உடனிருந்தவர்கள் குறிப்பாக அதனைப் புலப்படுத்தினர்கள். அப்பால் அவர் அதனை அறிந்து வணக்கமுடையவராகி இவ ரிடம் சிலமாதம் இருந்து பாடங் கேட்டு அப்பால் தம்மிடம் சென்றார்.

சதுர்வேத தாத்பரிய சங்கிரகம்

இக்கவிஞர் கோமானுக்குச் சைவத்தில் அழுத்தமான பற்று இருந்தமையின் வடமொழியிலுள்ள சைவநூல்களின் கருத்துக் களைத் தக்கோர் வாயிலாக அப்பொழுது அப்பொழுது தெரிந்து கொள்வார். ஸ்ரீ அரதத்தாசாரியர் முதலிய பெரியோர்களுடைய நூல்களிலிருந்து அவ்வப்போது வடமொழி வித்துவான்கள் கூறும் சுலோகக் கருத்துக்களை அறிந்து மகிழ்ந்து தனிச்செய்யுட் களாக மொழிபெயர்ப்பதுண்டு; அன்றித் தாம் இயற்றும் நூல்

* உரிய இடங்களில் எழுதப்படாமல், பின்பு ஞாபகத்திற்கு வந்த வர லாறுகள் இங்கே எழுதப்பட்டுள்ளன.

களில் உரிய இடங்களில் அக்கருத்துக்களே அமைப்பதுமுண்டு. அரதத்தாசாரியர் இயற்றிய சுருதி சூக்திமாலை யென்னும் நூலுக்குரிய வியாக்கியானமாகிய சதுர்வேத தாத்பரிய சங்கிரகத்தைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று மதுரையிலிருந்த சிவபுண்ணியச் செல்வர்களாகிய *வேங்கடாசல செட்டியார், மெய்யப்ப ஐயா என்னும் இருவரும் இவருக்குத் தெரிவித்துக் கொண்டனர். இவருக்கும் அம்மொழிபெயர்ப்புப்பணி உவப்புடைய தாக இருந்தது. அரதத்தாசாரியர் சரித்திரத்தையும் தமிழ்ச் செய்யுளாக இயற்றவேண்டுமென்று இவர் எண்ணினர். திருவாவடுதுறையிலும் வேறு சில இடங்களிலும் சதுர்வேத தாத்பரிய சங்கிரக வடமொழிப் பிரதிகள் கிடைத்தன. மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனமடத்தில் சில பிரதிகள் உண்டென்று தெரிந்தது. அவற்றையும் பெற்றுப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பம் இவருக்கு உண்டாயிற்று. ஆதலின் அப்போது அவ்வாதீனவித்துவானாக இருந்த குறுக்கைக் குமாரசாமிப்பிள்ளை என்பவருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியனுப்பினர். அதற்கு விடையாக அவர் பின்வரும் கடிதத்தை எழுதினர்.

உ

"சிவமயம்.

"ம-ஈ-ஈ-ஸ்ரீ ஐயா அவர்களுக்குக் குமாரசாமி எழுதிக்கொள்ளும் விஞ்ஞாபனம்.

"இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்தை எப்பொழுதும் தெரிந்து கொள்ள விருப்புற்றிருக்கின்றனன். தாங்கள் அன்போடு வரைந்தனுப்பு வித்த கடிதம் வரப்பெற்று மிக்க மகிழ்ச்சியை அடைந்தேன். அக்கடிதத்தை உடனே ம-ஈ-ஈ-ஸ்ரீ வேங்கடாசல செட்டியாரவர்களிடத்திற்கு அனுப்புவித்தேன். கடிதம் வருவதற்குச் சில நாள் முன்தொடங்கி எனக்கு ஒன்றரை மாதம் வரையிலும் கடினமான சுரம் அடித்துக்கொண்டிருந்ததனாலே பதிலெழுத இதுகாறும் தாமதித்தது. அரதத்தாசாரிய சாமி சரித்திரம் பலவிதமாக இருப்பதனாலே அதைப் பின்னாலே மொழி பெயர்க்கலாமென்றும், இப்போது சதுர்வேத தாத்பரிய சங்கிரக மூலத்தை மாத்திரம் மொழிபெயர்த்துச் செய்யுளாக்க வேண்டும் என்றும், அதற்கு இவ்விடத்தில் இருக்கிற புஸ்தகம் வேண்டுமாயின் எழுதினால் அனுப்புவிக்கிறே

* இவர்கள் சென்ற ஈசுவர (1877) வருஷத்தில் மதுரைத் திருக்கோயிற் கும்பாபிஷேகம் செய்வித்தவர்கள்.

மென்றும் ம-ா-ா-ஸ்ரீ வேங்கடாசலம் செட்டியாரவர்களும் மெய்யப்ப ஐயா அவர்களும் தங்களுக்கு எழுதியனுப்புவிக்கச் சொன்னார்கள். வேஷ்டியைக் குறித்து மாயாண்டி செட்டியாரவர்களை வினாவினதற்குத் தங்களுக்கு எழுதிக் கொள்ளுகிறோமென்று சொன்னார்கள். மதுரைக் கலம்பகம் எழுதி முடிக்கப்பட்டிருக்கின்றது. அதைத் தபால் வழியாகவாவது மனிதர் வசமாகவாவது அனுப்புவிக்கிறேன். ஸ்ரீ சின்ன சந்நிதானம் எப்பொழுதும் தங்கள் குணாதிசயங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றது. யான் குறுக்கைக்கு வருங்காலம் இன்னொரு காகிதத்தில் எழுதியனுப்புகிறேன். இங்கே எழுதிய சதுர்வேத தாத்பரிய சங்கிரகத்தின் வியாக்கியானத்தை மொழி பெயர்க்க வேண்டுவதில்லை யென்று சொன்னார்கள்.

சுக்கிலஹு கார்த்திகைமீ உஎஉ
(10—12—1869) மதுரை.

குமாரசாமி''

விலாஸம்

"இது, நாகபட்டினத்தில் ஓவர்ஸியர் அப்பாத்துரை முதலியாரவர்கள் பார்வையிட்டு ம-ா-ா-ஸ்ரீ திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வசம் கொடுப்பது."

இக்கடிதம் கண்டவுடன் இப்புலவர்பிரான் மீண்டும் குமாரசாமி பிள்ளைக்கு ஒரு கடிதம் எழுதினர். அது வருமாறு:

உ

"சிவமயம்.

"குலவர் சிகாமணி குமார சாமிப்
புலவர் சிகாமணி பொருந்தக் காண்க.

"இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமம் வரைந்தனுப்பவேண்டும்.

"தாங்களனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது.

"அதிசயமாகவும் சைவசமயம் நிலைபெறும்படியாகவும் சுரந்தீர்த்த தலத்தில் தங்களை அது வருத்தியது அதிசயமாயிருக்கிறது. இப்போது சவுக்கியமாயிருக்கிறது குறிப்பாற்றெரிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இது நிற்க.

"சதுர்வேத தாத்பரிய சங்கிரக மூலத்திற்குச் சுருதி சூக்குமம் என்று பெயர். அக்கிரந்தத் தொகை நூற்றைம்பது. அதை மொழி பெயர்ப்பதனாற் பிரயோசனமில்லை. யாகத்திற்குப் பதி பரமசிவமே என்பது ஒரு சுலோக தாத்பரியம். நமஸ்காரத்திற்குப் பதி பரமசிவமே என்பது ஒரு சுலோக தாத்பரியம். காயத்திரிக்குப் பொருள் பரமசிவமே என்பது ஒரு சுலோக தாத்பரியம். இந்தப் பிரகாரம் கரு0 சுலோகமுமிருக்குமே யன்றி

வேறில்லை. ஒவ்வொரு சுலோக தாத்பரியத்தையும் எடுத்துப் பாஞ்சராத்திர மூதலியோர் மதங்களைக் கொண்டு பூருவபட்சஞ் செய்து அப்பால் அநேக உபநிடதம் முதலியவற்றையுங்கொண்டு மேற்படி கட்சியை மறுத்துச் சித்தாந்தஞ் செய்வதுதான் சதுர்வேத தாத்பரிய சங்கிரகமென்பது. மூல மாத்திர மொழிபெயர்க்க வேண்டுமெனில் அதில் உள்ளதில் இரண்டுபங்கு நாம் சேர்த்துச் சொல்லலாமே. இன்ன சுருதியில் இன்ன உபநிடதத்தில் இதற்காதாரமிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டுதல் மாத்திரம் நமக்குக் கூடாது. அதற்குத்தான் வியாக்கியானத்தை மொழிபெயர்க்கவேண்டும். வியாக்கியானத்தின் பெயர்தான் சதுர்வேத தாத்பரிய சங்கிரகமென்பது. இதற்குமேல் வியாக்கியானமில்லை. சதுர்வேத தாத்பரிய சங்கிரகத்தை மூலமென்று கருதினர்கள் போலும். பாஞ்சராத்திர தந்திரங்களும் பிற தந்திரங்களும் அநேகமாய் அதில் வெளிப்படும். சைவாகமங்கள் பல வற்றிலுமுள்ள உண்மைகளெல்லாம் வெளிப்படும். பிரபலமான சண்டை செய்துகொள்ளுவதல்லவா! இவ்வளவுக்கும் இடங்கொடுப்பது சதுர்வேத தாத்பரிய சங்கிரகமேயன்றி அதன் மூலமாகிய சுருதி சூக்திமாலை யல்ல. மூலம் கரு0 சுலோகமுஞ் செய்தது அரதத்தாசாரிய சுவாமிகள். வியாக்கியானமாகிய சதுர்வேத தாத்பரிய சங்கிரகஞ் செய்தவர் மேற்படி சுவாமிகள் மாணாக்கரே; ஷை சுவாமிகள் அனுமதியாற் செய்ததேயன்றி வேறல்ல. மூலத்தின் பெயரிருக்க வியாக்கியானத்திற்கே பிரபலம் வந்துவிட்டது. அதன் பெருமை நோக்க, இவ்வளவு மூலத்தில் அடங்கியிருந்தாலும் நம் போலிகளாலும் பிறராலும் எளிதில் உணர முடியாது. ஆதலினல் சதுர் வேத தாத்பரிய சங்கிரகமே மொழிபெயர்க்க வேண்டும். உத்தேசம் அது ஈ000 சுலோகமிருக்கும். ஆதலால் இவ்விடத்துள்ள பிரதியினுடைய உயர்வு முன்னமே தெரிவித்திருக்கிறேனே. அவ்விடத்திலுள்ள பிரதியை யும் உடனே அனுப்ப வேண்டுவதுதான். இன்னும் சில பிரதிகளும் வர வழைக்கப்பட்டிருக்கின்றன, ஆதலால் இக்கடிதம் கண்டவுடனே தபால் பங்கியில் அனுப்பவேண்டும். மூலத்தையும் கூடச் சேர்த்தனுப்பவேண்டும். இது நிற்க.

"மாயாண்டிச் செட்டியாரவர்கள் வேஷ்டியைக் குறித்திதுவரையி லொன்றும் எழுதவில்லை. அவசியம் வேண்டியிருப்பதனல் முன்னெழு திய விவரப்படியே இவ்வளவு தொகையாகு மென்று தெரிவித்தாலுடனே யனுப்புவேன். அதற்குத்து ... செய்ய வேண்டுவதில்லை, கருணாநிதியாகிய சந்நிதானத்தை நானினைத்தறிவேன்.

"இக்கடிதங் கண்ட தினமே பதிலெழுதுக.

சுக்கிலவரு
மார்கழி உஉ (15—12—1869)

இங்ஙனம்
தி. மீனுட்சிசுந்தரம்."

"இவ்விவரங்களை யெல்லாம் ம-ரா-ரா-ஸ்ரீ செட்டியாரவர்களுக்கும் ஐயா அவர்களுக்கும் விவரமாய்த் தெரிவிக்கவேண்டும்."

விலாஸம்

"மதுரையில் தேவஸ்தான நிர்வாக சபையாரில் ஒருவராகிய ம-ரா-ரா-ஸ்ரீ வேங்கடாசலஞ் செட்டியாரவர்கள் மேல்விலாசம் பார்வையிட்டு ம-ரா-ரா-ஸ்ரீ வித்துவான் குமாரசாமிப் பிள்ளையவர்களுக்குக் கொடுப்பது."

இதன் பின்னர்ச் சதுர்வேத தாத்பரிய சங்கிரகம் என்ன காரணத்தாலோ இவரால் மொழி பெயர்க்கப்படவில்லை.

நெல் அளித்த அன்பர்கள்

இவர் திருச்சிராப்பள்ளியில் இருந்த காலத்தில் இவரைப் பல வகையில் ஆதரித்த அன்பர்கள் பலர். பெரிய செல்வர்களும் இவர்பாற் பாடங்கேட்டுத் தாமே வலிய உதவி செய்து வந்தனர். கள்ள வகுப்பினர் சிலர் இவர்பால் பாடங்கேட்டதுண்டு; பின்பு இக்கவிஞர்பிரானுக்கு அவ்வப்பொழுது வருஷாசனமாக அவர்கள் நெல்லளித்து ஆதரித்து வந்தனர்.

ஒரு பாட்டின் குறிப்பு

வரகனேரிச் சவரிமுத்தாபிள்ளை ஒருமுறை இவருக்குத் திருவிளையாடற்புராணத்திலுள்ள * "தன்கிளை யன்றி" என்னும் ஒரு செய்யுளைப்பற்றிய ஐயம் ஒன்றைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினர். அதற்கு விடையாக இவர் எழுதிய கடிதம் வருமாறு :—

ஒ

(வெண்பா)

"இக்கடித நோக்கி யியற்செந் தமிழ்வழுவும்
மிக்க தென்வளர்க்கு மேன்மையாற் - றொக்கபுகழ்த்
தென்னன் பொருவுந் திருவார் சவரிமுத்து
மன்ன னடையு மகிழ்.

"இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமம் வரைந்தனுப்ப வேண்டும்.

---

* "தன்கிளை யன்றி வேற்றுப் பறவைகள் தாபுந் தன்போல், நன்கதி யடைய வேண்டிற் றேகொலிந் நாரை செய்த, அன்பினில் வியப்போ வீச னருளினில் வியப்போ வன்பர்க், கின்புரு வான வீச னன்பருக் கெளிதே தையம்." (நாரைக்கு முத்தி. 24.)

"தாங்கள் குறிப்பிட்ட திருவிளையாடற் செய்யுள், 'அன்பினில் வியப் போ வீச னருளினில் வியப்போ வன்பர்க், கின்புரு வான வீச னன்பருக் கெளிதே தைய' என்றது சரியே. எளிதேது ஐய என்பதில் ஏதுவென் பது வினு.

"'ஈசனன்பர்க்கு அருளைப் பெறுதல் எளிது; அஃது அரியதன்று. அன்பு செய்தல் அரிது; அஃது எளியதன்று' என்பது பொருள். இஃது உடனே தோன்றியது. இப்போது அதைத் தெரிவித்தேன்.

"* சதாசிவத்திற்குச் சவுக்கியமானதை எனக்குத் தெரிவிக்கவில்லே. அதுபற்றிக் கவலேயில்லானென்று என்னே நினேத்தான் போலும். ம-ரா-ரா-ஸ்ரீ குமாரசாமி பிள்ளே, முருகப்ப பிள்ளே, சதாசிவம் பிள்ளே இவர் களேக் குருபூசைக்கு அவசியம் வரவேண்டுமென்று ஒரு மனுஷ்யனேக் கொண்டு தெரிவிக்க வேண்டும்.

"† ம-ரா-ரா-ஸ்ரீ பிள்ளேயவர்களிடத்தில் கந்தசாமியைத் தாங்கள் அழைத்துக்கொண்டு சென்றதும் அவனெடு வந்தவொரு செய்யுளேத் தாங்கள் பிரசங்கித்த விவரமும் தெரிய விரும்புகிறேன்.

"இவ்விடம் மகா சந்நிதானம் தங்களேப் பார்க்கும் அவா நிரம்ப வுடையது. குருபூசை முன்னிலேயில் எல்லாரும் வரும்போதாவது அல் லது தனித்தாவது தாங்கள் ஒருதினம் இவ்விடம் வந்துபோனுற் சிறப்பாக இருக்குமென்று நினேக்கிறேன். அப்பால் தங்களிட்டம்.

பவ வரு
கார்த்திகை மீ ககஉ
(25—12—1874)

இங்ஙனம்
தி. மீனுட்சிசுந்தரம்."

விலாசம்

"இது

"திருச்சிராப்பள்ளி வரகனேரியிலிருக்கும் கிராம முனிசீப் ம-ரா-ரா-ஸ்ரீ பிள்ளேயவர்கள் சவரிமுத்தா பிள்ளேயவர்களுக்குக் கொடுக்கப்படுவது."

நோயை மறந்து பாடஞ் சொன்னது

பிள்ளேயவர்கள் காலத்திற்குப் பிறகு ஒருமுறை மேற் கூறிய சவரிமுத்தா பிள்ளேயிடம் பிள்ளேயவர்கள் இயற்றிய நூல் கள் சிலவற்றின் கையெழுத்துப் புஸ்தகங்களேப் பெறுவதற்கு நான் சென்றிருந்தேன். அப்பொழுது அவர் கூறிய செய்தி ஒன்று வருமாறு:

---

* இவருடைய மாணுக்கராகிய சதாசிவம் பிள்ளே.

† திரு பட்டாபிராம பிள்ளேயவர்கள்.

"ஒருசமயம் ஐயா அவர்கள் என்னுடைய வேண்டுகோளின் படி இங்கே வந்து சில நாட்கள் இருந்தார்கள். அப்பொழுது நான் பெரிய புராணத்திற் சில பகுதிகளைப் பாடங்கேட்டு வந்தேன். ஒருநாள் நெடுநேரம் பாடம் சொல்லிக்கொண்டே வந்தார்கள். வரவர அவர்களுடைய சப்தம் பலமாயிற்று; கண்கள் சிவந்து தோன்றின. நெடுநேரம் ஆய்விட்டமையால், 'ஐயா அவர்கள் பூசைக்கு நேரமாயிற்றே' என்றேன். உடனே அவர்கள், 'உடம்பு ஒருவிதமாக இருக்கிறது; சுரம் வந்திருக்கிறது போல் தோற்றுகிறது' என்றார்கள். நான் அவர்கள் மார்பிற் கையை வைத்துப் பார்த்தேன்; கொதித்தது; சுரம் அதிகமாக வந்திருப்பது தெரிந்து உடனே, 'நோயையே மறந்து பாடஞ் சொல்லி வந்தார்களே! இவர்களுக்கு நம்மேல் உள்ள அன்பின் அளவுதான் எவ்வளவு! பாடஞ்சொல்லுவதில் எல்லாவற்றையும் மறந்து ஒன்றியிருக்கும் இவர்களைப்போல யாராவது இருக்கிறார்களா!' என்று நினைந்து உருகினேன்."

இச்செய்தியைச் சொல்லியபொழுது சவரிமுத்தா பிள்ளைக்கு இடையறுமல் கண்ணீர் பெருகிக்கொண்டே யிருந்தது.



அநுபந்தம் 2

தனிச் செய்யுட்கள்

கடவுள் வணக்கங்கள்

திருவலஞ்சுழி வெள்ளை விநாயகப்பெருமான்

(வஞ்சித்துறை)

1. வெள்ளை வாரணப், பிள்ளை யார்பதம்
உள்ளு வார்மனக், கள்ள மாறுமே.

திருக்கற்குடிமாமலைச் சிவபெருமான்

(ஆசிரியவிருத்தம்)

2. தலையானை முகற்பெறுமைந் தலையானை யரைக்கிசையத்
தரித்த புற்றேற்
கலையானை யமுதமதிக் கலையானைச் செஞ்சடைக்கா
டலைக்குங் கங்கை
அலையானை யிறந்துபிறந் தலையானைக் கடற்பிறந்த
அடுநஞ் சுண்ண
மலையானைக் கற்குடிமா மலையானை யனுதினமும்
மனத்துள் வைப்பாம்.

[தலை - தலைமை. புற்றேற்கலை - புலித்தோலாகிய ஆடை. மதிக்கலை - பிறை. உண்ண மலையானை - உண்ணுதற்கு மயங்காதவனை. இதில் அடி தோறும் மடக்கு அமைந்துள்ளது.]

திருப்பாதிரிப்புலியூர்ப் பெரியநாயகியம்மை

(குறள் வெண்பா)

3. ஒண்பா திரிப்புலியூ ருட்பெரிய நாயகித்தாய்
தண்பாதப் போதே சரண்.

திருவம்பர் வம்புவனப் பூங்குழல் நாயகி

(கீர்த்தனம்)

ராகம்—தர்பார்

பல்லவி

4. வம்புவனப் பூங்குழல்நின் அருளே—இந்த
மாநிலத்து மேனிலத்து மாரூத பொருளே.

அனுபல்லவி

அம்பரம ரெம்பரமர் ஐந்தொழில்பு ரிந்துகிளர்
நம்பமர்பெ ருந்தூணெ னும்படிகி ளர்ந்துவளர் (வம்பு)

[இக் கீர்த்தனத்தின் எஞ்சிய பகுதிகள் கிடைக்கவில்லை.]

(நாமாவளி)

5. பரமசை யோகவி நாயக ஆதி
படிக்கர் சுத்திருப் பெயர்ச்சுயஞ் சோதி. (க)

6. சரவண பவசுர லோக வுதாரா
தற்பர ஞானவி னோத குமாரா. (உ)

7. அருவுரு வாகிய போதா திருவா
வடுதுறை மேவிய சற்குரு நாதா. (ங)

[திருவம்பரில் பிள்ளையவர்கள் இருந்தபொழுது அங்கே பஜனை பண்ணிக்கொண்டிருந்த அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சில நாமாவளிகள் இயற்றினர்கள். அவற்றுள் கிடைத்தவை இம்மூன்றே.]

அன்பர்களைப் பாராட்டிய செய்யுட்கள்

அப்பாத்துரை முதலியார்

(வெண்பா)

8. தாணுமுடி மேலதுவுஞ் சங்கரிமுன் மேய்த்ததுவும்
பேணுஞ் சுவேதரையே பேசுவதும்—வாணிகர்கள்
வைப்பா யிருப்பதுவும் வந்தவரைக் கேட்பதுவும்
அப்பாத் துரைமுதலி யார்.

[இது நிரனிறையின்பாற்படும். தாணு - சிவபெருமான். சங்கு அரி - சங்கை உடைய திருமால். சுவேதர் - வெள்ளைக்காரர். வைப்பு - சேம நிதி. அப்பாத்துரை முதலியார் என்னும் தொடரை, அப்பு (நீர்), ஆ (பசு), துரை, முதல், யார் எனப் பிரித்து, தாணு முடிமேலது அப்பு, சங்கு அரி முன்

மேய்த்தது ஆ, சுவேதரையே பேசுவது துரை, வாணிகர்கள் வைப்பாயிருப் பது முதல், வந்தவரைக் கேட்பது யார் என முறையே முடித்துக்கொள்க.]

ஆறுமுகத்தா பிள்ளை

தம் புஸ்தகத்தைப் பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளை ஒளித்து வைத்த போது அதனைத் தரவேண்டுமென்று சாமிநாத பண்டாரம் பாடியதாக இவர் இயற்றியளித்த செய்யுள்.

(ஆசிரிய விருத்தம்)

9. சீர்பூத்த புகழ்பெருத்த வாறுமுக பூபாலா
செறிந்தோர் யார்க்கும்
பார்பூத்த சோறூட்டிப் புத்தகமும் ஈயவல்ல
பண்ப னீயே
ஏர்பூத்த சந்தனப்பூச் சில்லியென்றுய் மேற்பூச்சென்
றிருந்தேன் யானும்
வார்பூத்த புத்தகத்தை யொளித்தாயேல் வெளிப்படுத்த
வல்லார் யாரே.

இராகவையங்கார்

(கட்டவுக்கலித்துறை)

10. வாரா கவன நகின்மா நிறங்கொண்ட மாதவன்றன்
பூரா கவனச மொத்தபொற் றுளிணை போதுதொறும்
ஏரா கவன மருச்சித் திறைஞ்சுது மெண்மறைதேர்
சீரா கவற்கெழிற் கல்வியுஞ் செல்வமுஞ் சித்திக்கவே.

[இராகவையங்கார் : பிள்ளையவர்கள் மாணக்கர்களுள் ஒருவர். வார் ஆக வன்ன நகில்; வார் - கச்சு; ஆகம் - மார்பு. மா - இலக்குமியை. நிறம் - திருமார்பில். பூ ராக வனசம் - செந்தாமரை மலர்; பூ - பொலிவு; ராகம் - சிவப்பு. ஏராக - அழகாக. வனம் - திருத்துழாயால்.]

கோயிலூர்ச் சிதம்பர ஐயா

(கட்டவுக் கலித்துறை)

11. சீரார் கழனிச் சிதம்பர தேசிகன் செய்யகையால்
ஏரார் தரவருள் செய்மா நிதியையென் னென்றுரைக்கேன்
நீரார்சிந் தாமணி யென்கோ விரண்டு நிதியமென்கோ
ஆரார் தரவறி வாரவன் பேரரு ளாயினதே.

[இது கோயிலூர்ப்புராணம் இயற்றி அரங்கேற்றிய பின்னர், சிதம்பர ஐயா ஸம்மானம் செய்தபொழுது பாடியது. கழனி - கோயிலூர்.]

தேவகோட்டை, சிங்கயச்செட்டியார்

இவர் வன்றொண்டருடைய மாணாக்கர்; இவரைப் பார்த்தவுடனே பிள்ளையவர்கள் சொல்லியது.

(வெண்பா)

12. வன்றொண்டன் வார்த்தை மரீஇயென் செவிவழிபுக்
கின்றொண்ட நீயமர்ந்தா யென்னிதயத்—தின்றொண்டன்
அல்லனென வோவெளிவந் தாய்சிந் நயவேளே
செல்லவிடு வேன்கொல்புறத் தே.

இன்று ஒண்டன்; ஒண்டன் - ஒண்டி யிருப்பவன்.]

சுப்பிரமணிய தம்பிரான்

(ஆசிரிய விருத்தம்)

13. *வாதவூ ரடிகளுக்கு மாலியாணைப் புரூரவா
மன்னர் கோமான்
பேதமிலா கமப்படியே முன்னளி னடத்தியவப்
பெருவி ழாவை
ஏதமிலா கமப்படியே யிந்நாளு நடத்திவரும்
இயல்பு பூண்ட
போதமலி துறைசையெஞ்சுப் பிரமணிய முனிவர்பிரான்
புகழ்மேல் வாழ்க.

பக்கிள் துரை

திருநெல்வேலி ஜில்லா, தரம் பைஸல் கலெக்டராக இருந்த பக்கிள் துரைமீது சுப்பிரமணிய தேசிகர் விருப்பத்தின்படி பாடியவை.

(ஆசிரிய விருத்தம்)

14. மிக்குளபே ரிரக்கமுளாய் குடிகளெனும் பயிர்க்கினிய
மேகம் போல்வாய்
இக்குளசா றெனவென்று நயமொழியே பேசிடுவாய்
எக்கா லத்தும்
தக்குளகாட் சிக்கெளியாய் பெருஞ்சினத்துங் கையிகந்த
தண்ட மில்லாய்
பக்கிளெனும் பெயருடையாய் நின்கீர்த்தி யெவரா லும்
பகரொ ணாதே.

[இக்கு - கரும்பு. கை இகந்த - வரம்பு கடந்த.] (க)

---

* இது திருப்பெருந்துறைப் புராணத்தின் இறுதிச் செய்யுளாக முதலில் இயற்றப்பட்டது.

15. மறிவில்பெருங் கீர்த்தியினன் பக்கிளெனும் பெயர்பூண்ட
வளஞ்சான் மன்னன்
நெறிவழுவா காதவிதம் வரையணைத்துஞ் சாரல்மிக
நிரம்பு மாறு
செறிவுபெறத் தருவொருவர் தறியாது வளர்ந்துவரும்
செய்கை யாலோர்
அறிவுயிரு மினையவெனின் மற்றையுயி ரெனையவெவர்
அறைதற் பாலார். (உ)

16 நெடியபுகழ் படைத்தபக்கி ளெனும்வேந்த னடத்திவரு
நீதி நோக்கிப்
படியமையும் பன்னாட்டுப் பலகுடியெ லாமொருதென்
பாண்டி நாட்டே
குடியமையக் கொளனினைக்கு மிடம்போதா வண்ணமுளம்
குறித்தன் னனே
தடிவதறத் தமக்குரிய நாட்டுவரத் தவம்புரியுந்
தவாம லன்றே. (ஊ)

17. இரவுவழி நடக்கலாங் கைநிறையப் பொருளேந்தி
இவணுற் றீய
கரவுபுரி பலரொழிந்தார் கொலைஞருமெவ் வுயிரிடத்துங்
கருணை செய்வர்
உரவுமழை முகின்மதியந் தொறுமுக்கா லுறப்பொழியும்
உயர்ச்சி மேவப்
புரவுபுரி பக்கிள்மன்ன னதிகாரத் தெனிலவன்சீர்
புகழ்வார் யாரே. (எ)

18. வாழ்ந்தோமென் றுரைப்பாரு மேன்மேலு நாமடைந்த
வறுமை மாறப்
போழ்ந்தோமென் றுரைப்பாருஞ்செழித்தோமென் றுரைப்பாரும்
பொருமல் தீர்ந்து
தாழ்ந்தோம்பே ரின்பத்தென் றுரைப்பாரு மல்லாமற்
றுவாத் தின்பத்
தாழ்ந்தோமென் றுரைப்பார்க ளொருவரிலை பக்கிள்மன்னன்
அதிகா ரத்தே. (ஏ)

இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர்

பொன்னுசாமித் தேவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை மதுரைக்கு அழைத்துத் தம்முடைய பங்களாவில் எழுந்தருளச்செய்து மிகச் சிறப்பாக

மகேசுவர பூஜை, பட்டணப் பிரவேசம் முதலியன செய்வித்ததையும் துதியாகச் சில பாடல்களை இயற்றி விண்ணப்பித்ததையும் அறிந்து அச்செயலைப் பாராட்டிப் பிள்ளையவர்கள் பின்வரும் செய்யுட்களை இயற்றி எழுதியனுப்பினர்கள் :

(ஆசிரிய விருத்தம்)

19. கொந்தமலர்ப் பொழிற்றிருவா வடுதுறைச்சுப் பிரமணிய
குரவ னந்நாள்
நந்துதன தடியரமு துணவிடமுண் டதையுணர்ந்து
நயப்புற் றிந்நாள்
வந்துபல ரொடுமமுதே யுண்டுவக்கும் படிசெய்தாய்
வண்மை யோருள்
முந்துபெருங் கொடைப்பொன்னுச் சாமிமன்ன நின்சீர்த்தி
மொழிவார் யாரே. (க)

20. ஒருதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகன்முன்
ஒளிர்பொன் னுதிப்
பெருமலைவைத் திருந்துமென்பா திகள்புனைந்த பழிதீரப்
பிறங்கு பொன்னல்
வருமணியா லலங்கரித்துத் திருநெடுமா லென்றுரைக்கும்
வண்ணஞ் செய்தாய்
தருநிகருங் கொடைப்பொன்னுச் சாமிமகி பாவிதுவும்
தகுதி யாமே. (உ)

21. சொன்னயமும் பொருணயமு மணிநயமுங் கற்பனையாச்
சொல்லா நின்ற
நன்னயமுந் தொடைநயமும் வனப்புநய மும்பிறிது
நாட்டா நிற்கும்
எந்நயமுஞ் சிற்சிலவே பிறர்க்கமைபு நினக்கமைந்த
எல்லா மென்னிற்
பன்னயமு முணர்பொன்னுச் சாமிமகி பாநினது
பாட்டெற் றுமே. (ஙூ)

22. செறிபொழிலா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகனும்
சிவனே நாளும்
பொறிவளர்வண் டுவாதசாந் தத்தலத்து வாவழைத்துப்
பூசை செய்தாய்

நறியமலர்த் தொடைத்தடந்தோட் பொன்னுச்சா மிச்சுகுண
நரேந்த்ர நின்னே
அறிவின்மிகப் பெரியனென யாவருஞ்சொல் வாரதனுக்
கைய மின்றே.

[துவாதசாந்தத் தலம் - மதுரை.] (ச)

வேங்கடாசாரியர்

திருநெல்வேலி, தரம் பைஸல் டிப்டிகலெக்டர் வேங்கடாசாரியர்மீது திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் கட்டளையின்படி செய்யப்பட்டவை :

(ஆசிரிய விருத்தம்)

23. அதிகாரந் தனக்களித்த வேந்தனுக்கு நட்டமுறு
தவன்கோற் கீழாய்ப்
பிதிராத குடிகளுக்கு நட்டமுறு தாராய்ந்து
பெருக நாடித்
திதியாளு மிருவர்களு மனமகிழ முறைநடத்துஞ்
செல்வ னுய
மதிமேய வேங்கடா சாரியமால் போற்பிறர்க்கு
வருத லாமோ. (க)

24. சொல்லாரும் பிரபலமா மதிகார நாடோறும்
துணிபிற் செய்வார்
எல்லாரும் வேங்கடா சாரியைப்போற் பெருங்கீர்த்தி
இயைந்தா ரல்லர்
வில்லாரு மஃதியையா விதமென்னை யென்றென்னை
வினவு வீரேற்
பல்லாரும் புகழவுயர் கண்ணுட்ட மில்லாத
பாவந் தானே. (உ)

25. பாடுதொழி லாளரெலா மிவன்புகழே பாடுதற்குப்
படித்தே மென்பார்
ஏடுகொள வுலகிலுள பனையனைத்தும் போதாவென்
றிரங்கா நிற்பார்
காடுமலி பசுந்துழாய்க் கண்ணியா னடிக்கன்பு
கலந்தோ னுய
நீடுகுண மலிவேங்க டாசாரி தன்பெருமை
நினைந்து தானே. (ங)

26. உரவுமலி கடற்புடவி முழுதோம்பும் பெருங்கருணை
உடைய கோமான்
அரவுமிசைப் படுப்பவனென் றவன்றரந்தேர்ந் தவற்புகழ்வோ
ஞ்த லாலே
கரவுதவிர் தரவேங்க டாசாரி தரந்தேரும்
கடன்மை பூண்டு
விரவுபல குடிகளுக்கு முபகாரஞ் செய்வனெனின்
விளம்ப லென்னே. (ச)

[தரம் தேரும் கடன்மை - நிலத்தின்தரம் அறிந்து வரி விதிக்கும் உரிமை.]

முன்ஸீப் வேதநாயகம் பிள்ளை

வேதநாயகம் பிள்ளை திருவாவடுதுறைக்கு வந்து ஆதீனகர்த்தர்மீது சில செய்யுட்களை இயற்றிச் சொல்லிக்காட்டியபொழுது பிள்ளையவர்கள் இயற்றியவை.

(கட்டளைக் கலித்துறை)

27. தருவேசிந் தாமணி யேயென்று பாவலர் சாற்றிடவும்
பொருவேது மின்றியுந் தானே தனக்கொத்துப் பூமிசையே
இருவே றுலகத் தியற்கைக் குறளை யெதிர்மறுத்து
வருவேத நாயக மானீடு வாழ்கவிம் மாநிலத்தே.

28. தேனென் றெடுத்துப் புகல்கோ வடித்திடுந் தெள்ளமுதம்
தானென் றெடுத்துப் புகல்கோ சிறந்த தமிழ்ப்புலவோர்
வானென் றெடுத்துப் புகல்வேத நாயக மால்கவியை
நானென் றெடுத்துப் புகல்வோரு முண்டுகொல் நானிலத்தே.

கடிதப் பாடல்கள்

பிள்ளையவர்கள் எழுதிய கடிதங்களின் தலைப்பில் அமைத்த செய்யுட்களிற் சில வருமாறு. இவற்றிற்குரிய கடிதங்கள் கிடைக்கவில்லை.

அரியநாயகம் பிள்ளை

(கலிவிருத்தம்)

29. அரிய நாயகம் பிள்ளை யவர்களுக்
குரிய காகித மொன்றுமா யூரமா
புரியி லேகல்வி போதிக்குஞ் சாலையில்
தரித மாகவே தோன்ற வருவதே.

கலியாணசோழபுரம் அருணாசலம் பிள்ளை

(ஆசிரிய விருத்தம்)

30. அலங்கொருகைத் தடியாற்ற லபயகரம் போற்றலழல்
அனைத்து நீற்றல்
இலங்கொருதாண் மயக்கலினி தெடுத்ததா ளருளலிவை
என்று மோங்கத்
துலங்கொளிச்சிற் றம்பலத்து நடநவிலு நவிலரும்வான்
சோதி மேவி
மலங்குதலி லாமனத்து வள்ளலரு ணாசலவேள்
மகிழ்ந்து காண்க.

[இச்செய்யுள் எழுதப்பட்ட காலம் ரௌத்திரியூ மார்கழிமீ (ஜனவரி, 1861) கூ0-ஆம் தேதியென்று வேறு ஒரு கடிதத்தால் தெரிந்தது.]

கலியாணசோழபுரம் ஐயாறப்ப பிள்ளை

(விபவவூ ஆனிமீ கூஉ)

31. மெய்யா றடைந்து, பொய்யா றகன்று
கையா றிரித்த, ஐயா றப்ப முகிலுக்கு.

சரவண பிள்ளை

(இவர் மாயூரம் முதலிய இடங்களில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவர்)

(கோச்சகக் கலிப்பா)

32. உரைசிறந்த நயகுணனு முபசாரம் புரிதிறனும்
வரைசிறந்த புயத்தரசர் வழியொழுகு நுண்ணறிவும்
விரைசிறந்த பிரபலமு மேவுதலா லெஞ்ஞான்றும்
தரைசிறந்த சீர்படைத்த சரவணவே ளிதுகாண்க.

கலியாணசோழபுரம் சிதம்பரம் பிள்ளை

(ஆசிரிய விருத்தம்)

33. சிவபெருமான் றிருவுருவ நோக்குபணி விழிக்காக்கிச்
சிறந்த வந்த
நவவடிவோன் றிருநாம நவிற்றுமொரு பெரும்பணிநன்
னுவிற் காக்கி
அவமிலவன் றிருவடிகள் சிந்திக்கும் பணியென்றும்
அகத்துக் காக்கும்
தவமுடைய நயசுகுண சிதம்பரப்பேர் வள்ளலிது
தகவிற் காண்க.

கோயிலூர், சிதம்பர ஐயா

(கோச்சகக் கலிப்பா)

34. இதம்பரவு பிரமசபை யிடத்தினிது வீற்றிருந்து
முதம்பரவப் பொழிதருகொண் மூவெனச்சொன் மழைபொழிந்து
பதம்பரவு மடியவர்க்குப் பாசமொழித் தின்பருளும்
சிதம்பரதே சிகவினிது திருக்கண்ணுல் நோக்குகவே.

தரங்கம்பாடி வக்கீல் சௌந்தரநாயகம் பிள்ளை

(ஆசிரிய விருத்தம்)

35. சீர்பூத்த கல்வியறி வொழுக்கமுதற் பலவானுஞ்
சிறப்புற் றோங்கி
ஈர்பூத்த தொன்றுதொடு நட்பினைப்பெட் புறநாளும்
நனிபா ராட்டிப்
பார்பூத்த பெருங்கீர்த்திப் படாம்போர்த்தி யாவருக்கும்
பயனு மேவும்
தார்பூத்த வரைத்தடந்தோட் சவுந்தரநா யகமகிபன்
தகவிற் காண்க.

வேறுவகைப் பாடல்கள்

திரு. பட்டாபிராம பிள்ளையின் விருப்பத்தின்படி பாடியளித்தவை.

(ஆசிரிய விருத்தம்)

36. நல்லொழுக்கந் தலைநின்று னதுநிலத்தற் காங்கலைகள்
நயப்ப வோர்ந்தான்
இல்லொழுக்க மதுபூண்டான் றுறவொழுக்கந் தலையெடுத்தற்
கியன்ற செய்வான்
புல்லொழுக்கம் பூண்டார்தம் முகம்பாரா நடுநிலைமை
பொருந்தப் பார்ப்பான்
சொல்லொழுக்கமனைத்துமொருவடிவுகொண்டா லெனப்பொலியுந்
தூய னேயன். (க)

37. விளங்கதிகா ரத்தொடுகண் ணேட்டமுமுள் ளான்சிறப்பு
மேன்மே னல்கும்
களங்கமின்ஞா னத்தினொடு சாரமுமுள் ளானவனாக்
கவிக ளீனும்

வளங்கெழுமு கொடையினெடின் மொழியுமுளா னெஞ்ஞான்று
மாறு ரைது
தளங்கலிலாத் தெய்வபத்தி குடியிருக்கு மாலயமாம்
சுமன முள்ளான். (உ)

38. விரும்பிருகண் டனக்கென்ன விராவுமிரு கனிட்டருளான்
வெய்ய தீமை
அரும்புமழுச் காருதி கனவிலுமில் லான்குடிகள்
அனைத்தி னுக்கும்
பெரும்புகழ்சா லரசினுக்கு நன்மையே யுண்டாதல்
பேணிச் செய்வான்
இரும்புவியோர் கொண்டாடும் பட்டாபி ராமனெனும்
இயற்பே ருள்ளான். (ஊ)

39. இத்தகைய வள்ளலெப்பெற் றெடுத்தவனி யாவர்க்கும்
இனிய சொல்வான்
உத்தமநற் குணங்களெல்லா முறைதற்கோ ராலயமா
உள்ளா னென்றும்
வித்தகமாற் கன்புள்ளான் வேங்கடா சலநாமம்
விளங்கப் பூண்டான்
சத்தமையு மறம்பொருளின் பனுபவித்து மூற்றியபின்
தவத்தின் பேற்ருல் (எ)

40. சீர்பூத்த விரோதிகிரு தாண்டிடப மதிப்பதினற்
றேதி நாளும்
ஏர்பூத்த மதிவார மபரபக்கந் துவாதசியாம்
இனைய நாளில்
ஆர்பூத்த பிரகிருதிக் கப்பாலாம் விரசையெனும்
ஆற்றை நீந்திப்
பார்பூத்த பரமபத மண்டபநித் தியசூரிப்
படிவற் ருனே. (ஙு)

41. இனையபுகழ் வேங்கடா சலமகிபன் மனைக்குரிமை
இயையப் பூண்டாள்
புனையவரு மில்லறத்திற் காமெவையுங் காலத்தே
பொருந்த வீட்டி

நனையமொழி யொடுயார்க்கும் பதமருத்திப் பசியவிக்கு
நலத்தான் மிக்காள்
கனையவிருந் தவன்பணியே தலைக்கொண்டு மழைக்குதவும்
கற்பு வாய்த்தாள். (சு)

42. பரவுபுகழ்ச் சின்னம்மை யெனும்பெயர்பூண் டவள்பிரசோற்
பத்தி யாண்டில்
விரவுதுலா மதிப்பதிலே ழாந்தேதிப் புதவார
மேய தாகி
வரவுபயி லபரபக்கம் பஞ்சமியிற் றன்கொழுகன்
மதித்துச் சென்ற
புரவுவைகுந் தத்துமுனம் புகன்றபடி புகுந்தின்பம்
பொருந்தி னளே. (எ)

---

*சிறப்புப்பாயிரங்கள்

ஐயாத்துரை ஐயர்

(ஆசிரியவிருத்தம்)

43. சிறந்தவிரா மாயணசங் கிரகமிளஞ் சிறுவரெலாம்
தெரியு மாசீர்
உறந்தபுக ழெல்லாக்கி முத்தையபூ பன்குலத்தில்
உதித்த மேலோன்
அறந்தழுவு துரைசாமிக் குரிசில்சொல வங்ஙனமே
அறைந்திட் டான்தோம்
மறந்தவள முக்குறும்பூர் வருமையாத் துரைப்பெயர்கொள்
மறையோன் றனே.

(இராமாயண சங்கிரகம்)

சாமிநாத முதலியார்

(ஆசிரியவிருத்தம்)

44. கோடேந்து மிளநகிலார் குலவுமரங் கொளிர்மயிலே
குலவு மெம்மான்
ஏடேந்து மிணைக்கழன்மே லுலகுள்ளோ ரேக்கழுத்தம்
இயைந்து வாழச்

---

* பின் வருபவை பின்பு கிடைத்தமையால் பிள்ளையவர்கள் பிரபந்
தத்திரட்டிற் சேர்க்கப்படவில்லை.

சேடேந்து சிவநேசன் சாமிநா தப்பெரியோன்
செஞ்சொ லாற்றூல்
பாடேந்து பதிற்றுப்பத் தந்தாதி சொனனவன்சீர்
பகரொ ணுதே.

(மயிலைப் பதிற்றுப்பத்தந்தாதி—நளவரு ஐப்பசிமீ அக்டோபர், 1856)

திருப்பாதிரிப்புலியூர், சிவசிதம்பர முதலியார்

(ஆசிரியவிருத்தம்.)

45. உரிய ஞயகி யாதிநன் கடையவென்
றுரைசெயப் பொலிநல்லா
சிரிய ஞயகி பூண்பவர்க் கன்புடைச்
சிவசிதம் பரவண்ணல்
புரிய ஞயகி தந்தப வெனவருள்
பொலிவட புலிசைச்சீர்ப்
பெரிய ஞயகிக் கியற்றுசொன் மாலையைப்
பெட்டவர் பெரியோரே.

(பெரியநாயகிமாலை.)

[கியாதி - புகழ். நல் ஆசிரியனுய். அகி பூண்பவருக்கு - பாம்பை அணிபவராகிய சிவபெருமானுக்கு. அனுப் அகிதம் தப புரி - அன்னையே, அஹிதம் நீங்கும்படி செய்வாயாக. வடபுலிசை - திருப்பாதிரிப்புலியூர். பெட்டவர் - விரும்பியவர். இது நிரிபாதலின் பெரியஞயகி என்பதில் 'நா' 'ஞ' ஆயிற்று.]

(க)

(வெண்பா)

46. உண்மைநல முற்றுமினி தோர்சிவசி தம்பரவேள்
திண்மைமதில் சூழ்பா திரிப்புலியூர்—ஒண்மைப்
பணிமாலை சூடும் பரமர்க் கிரட்டை
மணிமாலை சூட்டினனம் மா.

(திருப்பாதிரிப்புலியூர் இரட்டைமணிமாலை.) (உ)

(ஆசிரியவிருத்தம்)

47. முயலுமா தவரு மமரருஞ் சூழும்
முதுபுகழ் வடபுலி சையிற்செம்
புயலுமா முகிலும் போலவெஞ் ஞான்றும்
பொலியிரு மூதுகுர வருக்கும்

இயலுமா சிரிய விருத்தமோர் பப்பத்
தியற்றின னினைப்பொடு மொழியும்
செயலுமன் னவர்க்கே செலுத்திடு மேலோன்
சிவசிதம் பரப்புல வோனே.

(ஸ்ரீ பாடலேசுவரர் ஆசிரிய விருத்தம்,
பேரியநாயகி ஆசிரிய விருத்தம்.)

(கு)

சுந்தரம் பிள்ளை

(ஆசிரிய விருத்தம்)

48. தந்தையென வரையகப்பெண் தழுவிநெடுங் கொக்கிறுத்துச்
சயிலங் கைக்கொண்
டந்தமுறு தலையாறு கொண்டுவய லூர்மருவி
அடியார்க் கின்பம்
சந்ததமுந் தருங்குமர வேளுக்கோ ரந்தாதி
சாற்றி னனல்
கந்தமிகு தமிழுணர்ந்த சுந்தரநா வலனென்னுங்
கருணை யோனே.

(வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.)

[வரையகப் பெண் - மலையில் உள்ள பெண்ணகிய வள்ளி, பார்வதி. கொக்கு - கொக்கென்னும் பறவை, மாமரம். சயிலம் - மலைகள், கைலை மலை. தலையாறு கொண்டு - ஆறுதலைகளைப்பெற்று, தலையிற் கங்கையாற் றைக்கொண்டு.]

அநுபந்தம் 3

*பிறர் வரைந்து அனுப்பிய கடிதங்கள்

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்

(சின்னப்பட்டத்தில் இருந்தபோது எழுதிய திருமுகம்.)

உ

" சிவமயம்

" சுவாமிஅம்பலவாண சுவாமி திருவுளத்தினுலே இகபரசவுபாக்கிய வதான்னிய மூர்த்தன்னிய சதுஷ்டய சாதாரண திக்குவிஜய பிரபுகுல திலக மங்கள குணகணலங்கிருத வாசாலக பரிபாக சிரோரத்ந மஹா புருஷச் செல்வச் சிரஞ்சீவி மஹாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுக்குச் சிவஞானமுந் தீர்க்காயுளுஞ் சிந்தித மனோரத சித்தியுந் தேவகுருப் பிரசாதமுஞ் சகல பாக்கியமு மேன்மேலு முண்டாகுக.

நாளது விபவஞ்ரு மீனரவி கசவ (25—3—1869) வரையும் தெய்வப் பொன்னித் திருநதிசூழ்ந்த நவகோடி சித்தவாசபுரமாகிய ஞானக்கோமுத்தி மாநகரத்தி லெம்மை யாண்ட ஞானசற்குருதேசிக சுவாமிகளாகிய மஹா சந்நிதானத் திருவடிநீழலின்கண் தங்களுடைய க்ஷேமாபிவிருத்தியையே சதாகாலமும் பிரார்த்தித்து வசித்திருப்பதில் ஞானநடராஜர் பூஜையு மஹேசுவர பூஜையும் வெகு சிறப்பாக நடந்துவருகின்றன. இவ்விடத்து வர்த்தமானங்களெல்லாம் இதற்கு முன்னெழுதியிருக்கிற லிகிதத்தாலுஞ் சுப்பு ஓதுவார் முகவசனத்தாலும் விசதமாகுமே. மேற்படி யோதுவாரிட மனுப்பிய வலிய மேலெழுத்துப் பிள்ளை யவர்கள் லிகிதங்களுங் காகிதப் புஸ்தகங்களும் வந்து சேர்ந்த விவரமும் மஹாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி அப்பாத்துரை மூதலியாரவர்கள் பிரார்த்தனைப்படி நல்ல சுபதினத்தில் நாகைப்புராணம் அரங்கேற்றி வருவதும் தெரிந்து கொண்டோம். வலிய மேலெழுத்துப் பிள்ளையவர்கள் செய்யுட்களைத் திருத்தியனுப்பி யிருப்பதில் இதுவரை சிறப்புப் பாயிரமுமமைத்

---

* பிள்ளையவர்களுக்குப் பிறர் எழுதிய கடிதங்கள் சில எனக்குக் கிடைத்தன. அவற்றுள் முக்கியமான சில கடிதங்களும், சிலவற்றின் பகுதிகளும் இங்கே வெளியிடப்படுகின்றன.

தனுப்பி யிருக்கக்கூடுமே. அதற்குத் தொகையும் இதுவரை சேர்ந்திருக் கலாம். கந்தசாமி முதலியாருக்குக் காஞ்சிப் புராணம் மூற்றுப்பெறச் செய்யும்படிக் கெழுதியதும் மற்றக் காரியாதிகளுந் தெரிய விவரமா யெழுதி யனுப்ப வேண்டும். ஆவராணி மஹாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி மூத்தைய பிள்ளையவர்கள் இவ்விடந் தரிசனத்திற்கு வருவதில் அவரைப் போன்ற கனவான்களைப் பார்க்க நாமும் விருப்பத்தோ டெதிர்பார்த்திருக்கிறோம். ஆசாரிய சுவாமிகளை அவ்விடந் திருக்கூட்டத்தார்களுடன் தாங்களும் போய்க் கண்டு தரிசித்த விவரமுந் தெரிந்து மகிழ்ச்சியாஞேம். அவ்விடம் நம்முடைய மடத்து இரண்டு கொட்டடியையுந் திறந்து விடும்படி மஹா புருஷச் செல்வச் சிரஞ்சீவி திருவாரூர் ஐயாப் பிள்ளையவர்களுக்கும் எழுதி யனுப்பியிருக்கிறது. நமச்சிவாயத் தம்பிரானுந் திருவெண்ணெய் நல்லூரி லிருந்து இன்னும் வந்து சேரவில்லை. பனசைத்தம்பிரானும் இவ்விடத்தில் வந்து தரிசித்துக் கொண்டுபோயிற்று. காசி இரகசியத்தைப் பற்றியும் நாச்சியார் கோவில் முதலியாரவர்கள்.....மேற்படி சாஸ்திரியாரை யழைத் துக்கொண்டு வருவதாகவும் எழுதியிருக்கிறார்கள். வந்த விவரம் பின் பெழுதுவோம். மற்றுள்ளன பின்பு எழுதுவதாயிருக்கும். நமது இருதய முழுவது நிறைந்து நற்றவமனைத்துமோர் நவையிலா வுருப்பெற்ற குரு புத்திர சிரோமணியாய் விளங்குகின்ற தாங்கள் அரோக திடகாத்திரரா யிருந்தின்னும் பெரிதாயிருக்கிற திகந்த விச்ராந்த கீர்த்திப் பிரதாப ஜயகர பிரபல பெரும் பாக்கியங்க ளெல்லாம் மேன்மேலும் வந்து சிவக்ஷேத்ர குருக்ஷேத்ரங்களைப் பரிபாலனஞ்செய்து கொண்டிருக்க வேண்டுமென்று சிவபூஜா காலங்களிலு மஹேச்வர பூஜை வேளைகளிலும் வேண்டிக்கொண் டிருக்கிறோம். மஹதைசுவரிய விபூதியனுப்பிஞேம். வாங்கித் தரித்துக் கொண்டு நித்யானந்த சிரஞ்சீவியாயிருந்து பெருவாழ்வின் வளர்ந்தேறி வரவேண்டும்.

அம்பலவாணர் துணை.''

விலாஸம்

''இது நாகபட்டினத்தில் மஹா புருஷச் செல்வச் சிரஞ்சீவி நமதாதீன மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர் களுக்குக் கொடுக்கற்பாலது.''

(பெரிய பட்டத்தில் இருந்தபொழுது எழுதிய திருமுகம்.)

உ

''சிவமயம்

* * * * *

"நாளது சுக்கில வருடம் கடகரவி கள-ஆம்உ (30—7—1869) வரையும் ஞான நடராஜர் பூஜையும் மகேசுவர பூஜையும் வெகு சிறப்பாக நடந்து வருகின்றன.

* * * *

"புராணம் அரங்கேற்றி முடிவுசெய்துகொண்டு விரைவில் நமதாதி ஞந்தரங்கமான பத்திபுத்தி பாகப் பண்புரிமையிற் சிறந்த விவேகசிரோமணியாய் விளங்குகின்ற தாங்கள் இவ்விடம் வந்து நமது நேத்திரானந்தம் பெறச் செய்து கண்டு கலந்துகொள்வதை எதிர்பார்த்திருக்கிறோம். மற்றுள்ளன பின்பு எழுதுவதாக இருக்கும்.

* * * *

"புராணம் முற்றுப்பெற்று வரும்போது மஹாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி ஓவர்சியர் முதலியாரவர்களையும் அழைத்துக்கொண்டு வர வேண்டும்.

நமச்சிவாயம்."

* * * *

தி. சுப்பராய செட்டியார்

உ

"சிவமயம்

"அருளொரு வுருவா மாரியன் கழற்கீழ்
மருளறப் புகுது மனங்குது கலித்தே.

* * * *

"தங்களைத் தரிசித்துவந்த செகநாத பிள்ளை முதலியோர் தங்கள் கேஷமலாபங்களையும் கருணையையும் சொல்லும்போது தங்களை எப்போது பார்ப்போமென்று மனம் பதையா நின்றது. அடியேன் பாவியாயிருந்ததனாலேதான் தங்களை விட்டுப் பிரியும்படி நேரிட்டதே தவிர வேறு அன்று.

* * * *

இங்ஙனம்,
தி. சுப்பராயன்
தங்களடியன்"

விபவ தை. இ-ஆம் உ
(26—1—1869)

சுப்பராய செட்டியார் பிள்ளையவர்களுக்கு எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் குரு வணக்கமாக இவ்விரண்டடி அமைந்த ஒவ்வொரு செய்யுள் எழுதுவது வழக்கம். கிடைத்த சில கடிதங்களில் உள்ள செய்யுட்கள் வருமாறு:

1. சிந்தை யிருள்பருகிச் சேர்ந்தொளிரு மீனாட்சி
சுந்தரமாஞ் செய்ய சுடர்.

பிரபவவரு ஆடிமீ உஅஉ
(11—8—1867)

2. தண்ணிய கருணை தந்தெனை யாண்ட
புண்ணிய போதகன் பொலிந்துவா ழியவே.
(விபவஷு புரட்டாசிமீ கசுஉ)
(30—9—1868.)

3. குருபரன் ருனைக், கருதுவை மனனே.
(விபவஷு மார்கழிமீ ககஉ)
(1—1—1869.)

4. எனையும் புலவ ரிருங்குழாத் தொருவ
நினைதரச் செய்தோ னிருசர ணினைகுவாம்.
(விபவஷு மாசிமீ சுஉ)
(15—2—1869.)

5. நீக்கமி லின்ப நிறுவுங் குருமணிதாள்
ஆக்கமொடு சேர்வா ரகத்தும்.
(சுக்கிலஷு சித்திரைமீ உஉ)
(12—4—1869.)

6. என்பிழை பொறுத்தரு ளெழிற்குரு ராயன்
தன்பத மலரிணை தழைத்துவா ழியவே.
(சுக்கிலஷு வைகாசிமீ ருஉ)
(16—5—1869.)

7. குலவிய பெரும்புகழ்க் குருமணி யிணையடி
நிலவிய வுளத்திடை நினைதரு வாமே.
(சுக்கிலஷு வைகாசிமீ உசுஉ)
(6—6—1869.)

8. திருந்திய வுண்மைத் திறந்தரும் போதகன்
பொருந்திய பூங்கழற் போதுபுனை தரினே.
(சுக்கிலஷு ஆனிமீ கஉ)
(15—6—1869.)

சாமிநாத தேசிகர்

உ

" சிவமயம்.

" அன்புள்ள அம்மானவர்களுக்கு விண்ணப்பம்.

" இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமம் அறிவிக்கச் சொல்லவேண்டும். மணியார்டர் செய்தனுப்பிய கடிதத்திற்கும், பதில் வர வில்லையென்று மனவருத்தத்தோடு பின் எழுதிய கடிதத்திற்கும் பதில் வர வில்லை. இந்தக் கடிதங் கண்டவுடன் மணியார்டர் வந்து சேர்ந்த செய்திக்குப்

பதிலெழுதச் சொல்லவேண்டும். மணியார்டர்கெடு தப்பிப் போகுமுன் பணம் வாங்கிவிடவேண்டும். கடிதம் வந்து சேரும் என்ற நம்பிக்கையினால் இதை * நட்பயிட்டாக அனுப்பினேன்.

சுக்கிலவரு
ஆடிமீ உஎஉ
(9—8—1869)
திருவனந்தபுரம்.

இங்ஙனம்,
சி. சாமிநாத தேசிகன்."

விலாஸம்

"இது நாகபட்டணத்தில் வந்திருக்கும் தமிழ் வித்துவான் திரிசிரபுரம் ம-ா-ா-ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சமூகத்திற் கொடுக்கப்படுவது."

திருமங்கலக்குடி சேஷையங்கார்

உ

"ஸ்ரீமது சகலகுண சம்பன்ன அகண்டித லக்ஷ்மீ அலங்கிருத ஆசிருத ஜனரக்ஷக மகாமேரு சமான தீரர்களாகிய கனம்பொருந்திய மகா ராஜ மான்ய ராஜ ஸ்ரீ பிள்ளையவர்கள் திவ்விய சமூகத்திற்கு ஆசிருதன் திருமங் கலக்குடி சேஷையங்கார் அநேக ஆசீர்வாதம்.

"இவ்விடம் தஞ்சையில் தங்கள் பெருங்கருணையால் க்ஷேமமா யிருக் கின்றேன். தங்கள் க்ஷேம சுபாதிசயங்கட்கெழுதி யனுப்பும்படி உத்தரவு செய்யப் பிரார்த்திக்கின்றேன். தாங்களன்புடன் வரைந்தனுப்பிய நாளது மாதம் உஉ உள்ள கடிதம் கிடைத்தது. கோயிலுக்கும் இதற்குமாயலைந்து கொண்டிருந்ததால் பங்கியனுப்பத் தவக்கப்பட்டது. அதை மன்னிக்க வேண்டும். இவ்விடம் † வேந்திருக்கைக் கலமகள் விளக்க இல்லத்தி லிருந்து எழுதுவித்த ஸ்ரீ அம்பர் க்ஷேத்திர புராணக் கிரந்த புத்தகம் க-க்கு ஏடு ச0; ஷை புத்தகத்தை இத்துடன் பங்கி மார்க்கமாய்த் தங்களிடத்திற்கு அனுப்பியிருக்கிறேன். வந்து சேர்ந்ததற்குப் பதில் கடிதமனுப்பப் பிரார்த் திக்கிறேன். சென்னையிலிருந்து ஷைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீநிவாசாசாரியரும் மற்றொரு துரையும் தரும நூல் சில வேண்டி அங்ஙனம் பெருநீதியிடத்து உத்தரவு இவ்விடம் கலெக்டருக்குப் பெற்றுவந்து ஒரு திங்கள் பிரயாசைப் பட்டுப் பார்த்தும் அகப்படாமையாற் போய்விட்டார்கள். பின்னும் மாயூரம் கலெ. அவர்கள் சில ஸ்தலக் கிரந்தங்களைத் தாம் பார்க்கவேண்டி உ00 கிரந்தங்களைக் குறித்து அனுப்ப ச0 கிரந்தம் அகப்பட்டு எடுத்து வைக்கப்

---

* notpaid ஆக.

† தஞ்சை அரண்மனைச் சரஸ்வதி மகால் புத்தகசாலை.

பட்டிருக்கின்றன. இப்படியாய் இன்னவின்ன பக்கத்திலிருக்கிறதென்று அறிய ஒரு நூறு அசாமிகளாய் ஒரு ஆண்டு பிரயாசைப்படினும் அமையாத மிகுதியுள்ளதாயும், பகிரங்கத்திற் கிடைக்கக்கூடாமல் பிரைவேட்டிலாக வேண்டியதாயுமிருந்தும், அத்தல மகாதேவனருளினலும், கனம்பொருந்திய தங்கள் கீர்த்திப் பிரதாபத்தினலும் இப்படிப்பட்ட அருமையான தல அபிமானிகள் முப்பணிகளிற் சிறந்த பணி யிஃதேயென்று கருதித் துணிந்த பத்திப் பொருளினலுமே இந்தக் கிரந்தம் அகப்பட்டதேயன்றி, ஏகதேசம் வழங்கிய பொருட் செலவினலென்று நினைக்கத் தகாது. வெகு பிரயாசைப் பட்டு சமாதகாலமாய்ப் பரிசிலனை செய்து பார்த்ததில் இனியகப் படாதென்றே நினைத்துவிட்டோம். ஏதோ அகஸ்மாத்தாய் ஒரு பெரும்புத்தகத்தின் மத்தியிலிருப்பதாய்ப் பார்த்து வந்ததில் அகப்பட்டது. ரூ. 20 செலவாயிருக்கிறது. பிரயாசைப்பட்ட பிராமணருக்கு உயர்ந்த * பட்டம் தருவதாயுஞ் சொல்லியிருக்கிறேன். இந்தச் சங்கதியை அத்தல அபிமானிகளுக்குச் சொல்லி அவ்வேதியருக்கு நடப்பித்தால் மிக்க புண்ணியமாகும்.

* * * *

சுக்கிலவரு
மார்கழிமீ எவ
(20—12—1869)
தஞ்சை.

இங்ஙனம்,
தங்களாசிருதன்,
தி. சேஷையங்கார்."

"இந்தப் பங்கியை ரயில் ஸ்டேஷனில் வந்து வாங்கிக்கொள்ளச்செய்ய வேண்டும்."

விலாஸம்

"இது நாகபட்டணம் கட்டியப்பர் கோவில் சந்நிதானம் திருவாவடுதுறை மடத்தில் விஜயமாயிருக்கிற திரிசிரபுரம் மகாவித்துவான் ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் திவ்விய சமூகத்திற்கு வருவது."



* பட்டம் - ஆடை

அநுபந்தம் 4

பாராட்டு

மாணாக்கர் முதலியவர்கள் இயற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் முதலியவற்றில் இவரைப் பாராட்டிய பகுதிகள் வருமாறு :—

அழகிரிசாமி நாயகர்

" துங்கநற் குணமீ ளுட்சிசுந் தரனென்
தோமறுத் தருள்செய்தே சிகனே."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

ஆறுமுகத் தம்பிரான்

" எங்கடுறை சையையடைந்தம் பலவாண தேவனடி
இனிது சூட்டத்
துங்கமுடி வாய்ந்துசிவ ஞானகலை யகங்கைநெல்லித்
தோற்றத் தாய்ந்து
கங்கைதரித் தருள்சடையோன் பலதலத்து மான்மியந்தன்
கருத்தி னேர்ந்து
சங்கையில்செந் தமிழின்மொழி பெயர்த்தியற்றுங் கடப்பாட்டிற்
றலைமை யானேன்."

" மின்னுமர னடியன்றிக் கனவிலும்வே றெண்ணுத
விரதம் பூண்டோன்
இன்னுமெம்போ லியர்பலருக் கிலக்கியமு மிலக்கணமும்
எளிது தந்தோன்
அன்னவன்பேர் மீனுட்சி சுந்தரநா வலவனென
ஆய்ந்தோர் யாரும்
பன்னுபுகழ் பூதலமு மீதலமும் பாதலமும்
பரவ நின்றோன்."

(சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.)

காஞ்சீபுரம் இரகுநாதையர்

" பொன்னனைய மலர்க்கடுக்கைச் சடிலவா னவன்போற்
புலவர்களின் முதலானேன் புனிதனைப்போற் றுதலிற்
றன்னிகர்தா னையவன்மீ ளுட்சிசுந் தரமால்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

திரு எவ்வுளூர் இராமசாமி செட்டியார்

"விதிமருவு சகலகலை யுணரும்வித ரணவிபவ
வித்வஜன சேகரனிதம்
மேதகுஞ் சீர்கொண்ட திரிசிர புரத்தினன் மீனாட்சி
சுந்தரப்பேர் விசயன்."

(காசிரகசியம்.)

இராமசாமி பிள்ளை

"எளியேன் நீமை, மண்ணியசீர் மீனாட்சிசுந்தர தேசிகன்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

காஞ்சீபுரம் இராமானுஜ பிள்ளை

"அருஞ்சிர புரஞ்செய் மாதவத் துதித்த
அண்ணல்செந் தமிழ்க்குயர் கந்தன்
அவிர்பதி பசுபா சப்பொருண் முடிபை
அடியடைந் தவர்க்கரு ணியன்
அறஞ்செய்மீ னாட்சி சுந்தரப் பெயர்கொ ளறிஞன்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

ஆறைமாநகர் ஐயாசாமி முதலியார்

"பவமிலார் துதிக்குந் தமிழ்க்கட லுண்டு
பாவல ரெனும்பயிர் தழைக்கப்
பனுன்மழை பொழிமீ னாட்சிசுந் தரப்பேர்
படைத்திடு கருணைமா முகிலே."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

நாகபட்டினம் இராம. அ. கிருஷ்ணசாமி உபாத்தியாயர்

"பேரெட்டா மீனாட்சி சுந்தரவே ளெனவுலகம்
பேச மேவி
ஈரெட்டாண் டினுக்குளிலக் கியக்கடனீத் திலக்கணவா
ரிதியை யெற்றிச்
சீரெட்டா மூர்த்தனெழிற் கைலாய பரம்பரையாம்
செல்வம் வாய்ந்த
காரெட்டா விகளடரும் தண்டுறைசை மடாலயத்தைக்
கலந்து நாடி."

"அறந்தழீஇ யமருமெய்யம் பலவாண தேசிகன்பால்
அரிய ஞானத்
திறந்தழைக்குங் கலைமுழுதுஞ் செவ்விதினேர்ந் துயர்தீக்கைத்
திருவ நீடி
நிறந்தழைக்குந் தமிழ்ச்சங்க மெவ்விடத்து நிறுவியருள்
நிமலன் மூலக்
கிறந்துபடாப் பாமாலை பல்வகைய பிரபந்தம்
இசைத்துப் போற்றி."

(திருநாகைக் காரோணப் புராணம்)

குப்பு முத்தா பிள்ளை

"எனையாண், ஞானநன் மணிமீ னாட்சிசுந் தரப்பேர் நாவலன்."
"தண்டமிழ்க் குருமீ னாட்சிசுந் தரமால்."
"..... ...புலமை முதிருமீ னாட்சிசுந் தரப்பேர் எந்தை."
"..... .....மன்னு மின்பம்
நல்குதமிழ்த் தேசிகனெம் மீனாட்சி சுந்தரப்பேர் நாதன்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

காஞ்சீபுரம் சபாபதி முதலியார்

"..... .....அகிலாண்ட வல்லி
புங்கமுறு கின்றபிள் ளைக்கவிதை பாமுது
புலவர்மகிழ் கொண்டருந்தப்
பொற்புட னளித்தனன் மீனாட்சி சுந்தரப்
பொன்னிறங் கொண்ட மாலே."

(அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.)

புரசை, சபாபதி முதலியார்

"...சிவநெறி சற்றும் பிறழ்விலாக்
குரிசில் திரிசிர புரமுறை புனிதன்
....
நளிகடற் றிசைதொறும் நனிதன் னிசைநிறூஉ
மேனாட் பெருந்தமிழ் விரகரும் விழைதரு
மீனாட்சி சுந்தர விற்பன சிகாமணி
ஓதுமா வடுதுறை யாதீன வித்துவான்."

(காசிரகசியம்.)

புதுவை, சவராயலு நாயகர்

"மீனாட்சி சுந்தரவென் ஞானன்."
"மீனாட்சி சுந்தர தேசிகன்."

"...முக்கணன் வாழிதயனிந்த
மண்கணுற்றோர் தொழுதேத்தெம் மீஞட்சி சுந்தரமால்."

"ஏர்குடிகொண் டோங்கிவளர் மீஞட்சி சுந்தரப்பே
ரெங்க ளாசான்."

".....தடமலி சிராமலை தனில்வாழ்,
தகுதிபெற் றருளிர்செந் தமிழ்முனி யென்னத்
தக்கமீ ஞட்சிசுந் தரமால்."

"தேசுற வொளிருஞ் சிரகிரி வாணன்
நற்குண மேன்மை நல்லொழுக் குடைமை
பொற்புறு வாய்மை பொலிவுறு தூய்மை
புண்ணியஞ் சீலம் பொறைகிறை தேற்றம்
உண்ணிறை யறிவினை யொருங்கு திரண்டு
வந்தென வொளிரு மாதவப் புனிதன்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை.)

சவேரிநாத பிள்ளை

1. "புண்ணியமென் கோபொறையே பொருவிலா வடிவெடுத்த
புதுமை யென்கோ
கண்ணியவின் தமிழ்மொழிசெப் நற்றவத்தின் பயனென்கோ
கருது வார்க்குள்
அண்ணியமா விருளகற்றி யருண்ஞான விளக்கென்கோ
அறையப் புக்கால்
நண்ணியபல் படியுநீத் தவிர்கின்ற திருமேனி
நயந்து ளானுல்."

2. "அலரடியி லிடுவாரு மகநெக்கு நெக்குருகி
அருளா யென்றே
புலர்வுறநாத் துதிப்பாரும் பொன்னடியே புகலென்று
புகன்று நாளும்
உலர்வறவந் தடைவாரு முளமாக வடியேற்கும்
உணர்வு கூட்டிக்
கலர்காணுக் கழனேர்ந்து கடைக்கணித்தாட் கொண்டவொரு
கருணை மூர்த்தி."

3. "சீர்பூத்த நாவலரும் காவலருஞ் செழுமறைதேர்
நிறைவு ளாரும்
நார்பூத்த ஞானநிறை மாதவரும் போதவரும்
நாளும் போற்றப்

பார்பூத்த நம்பெருமான் பாறலமான் மியந்தமிழாற்
பாட வல்லான்
வார்பூத்த சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(திருவம்பர்ப் புராணம்.)

திருவீழிமிழலை, சாமிநாத கவிராயர்

" தொல்காப் பியமும் பல்காப் பியமுமாம்
இலக்கண விலக்கிய மெனும்பெருங் கடலிற்
றிளைத்தினி தாடுஞ் செந்தமிழ்க் குஞ்சரம்
மடிமையேன் போல்வார் மனத்திரு ளகல
அருளொளி விடுத்துநல் லறிவை விளக்க
வந்த ஞான வரோதயப் பருதி
தென்பான் மலயத் திருமுனி யிருந்தாங்
கன்பார் வடபாற் கருண்முனி யானேன்
சைவசித் தாந்தத் தனிப்பெருஞ் சாகரம்
பொய்ம்மை யில்லாப் புலவர் சிகாமணி
கல்லாக் கலராங் கரிகளை வெல்ல
வல்ல வீர வாளரிக் குருளை
கங்கைச் சடையெங் கண்ணுதற் பெருமான்
வடாது கைலையாம் வரையினை யொரீஇத்
தெனாது கைலையாஞ் சிரகிரி யதனிற்
றமிழ்க்கர சியற்றத் தான்வந் ததுபோற்
ருனாட்சி யாகிய தலைவன்
மீனாட்சி சுந்தர விமலநா வலனே."

" ...திருச்சிரா மலையில் வாழெந்தை யருள்சேர்
மாட்சிமை விளங்குமீ னாட்சிசுந் தரமுகில்."

" நீர்கொண்ட வேணிக் கறைக்கந்த ரத்தெந்தை
நிலவுஞ் சிராமலையிடை
நிலைமைசேர் செந்தமிழ்ப் புலமையை நடாத்திநெறி
நீதிசெய வந்தகோமான்
ஏர்கொண்ட தண்டா மரைத்திரு வடிக்கடிமை
யென்னவெனை யாண்டபெம்மான்
இருநிலம் பரவுமீ னாட்சிசுந் தரனென்னு
மினியநா வலவரேறே."

"மருத்திகழ் கமல முகத்தினு ருலவு
மாடநீ டிரிசிரா மலையின்
வழுத்தரும் புகழ்மீ னுட்சிசுந் தரமால்
வஞ்சனே னெஞ்சகச் சிலையிற்
குருத்தினி தலருந் தாமரைத் தாளன்."

"தூநிலாத் தவழுஞ் சிரகிரி யதனிற்
றுளவணி யலங்கலாற் பொருவும்
சொல்லரும் புகழ்மீ னுட்சிசுந் தரப்பேர்த்
தூயநா வலர்சிகா மணியே."

"ஆரணி சடிலத் தெந்தைவீற் றிருக்கும்
அருட்சிரா மலையில்வா ழெம்மான்
அருந்தமிழ்க் கிறைமீ னுட்சிசுந் தரமால்."

"..... துயர்மாற் றிடுஞ்சீர்ச் சிரகிரியிற்
றங்கும் புகழ்நற் செந்தமிழ்க்குத்
தலைமைப் புலமை நடத்துபெருந்
தகைமீ னுட்சி சுந்தரமால்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

சி. சாமிநாத தேசிகர்

"சீர்கொண்ட சிதம்பரமால் செய்தவத்தின் மலிவிளக்கிற்
சிறக்கத் தோன்றிப்
பார்கொண்ட புகழ்மூழுது மொருபோர்வை யெனப்போர்த்த
பண்பின் மிக்க
ஏர்கொண்ட மீனுட்சி சுந்தரவேள்."

(திருக்குடந்தைத் திரிபந்தாதி.)

உ. வே. சாமிநாதையர்

"அத்தகைய பெருங்கீர்த்திக் கவிநாதன் யாவனெனின்
அமலை யோடும்
நித்தனுறை பலதலமான் மியமினிய செந்தமிழில்
நிகழ்த்தி னோனும்
கைத்தலவா மலகமெனத் தனேயடைந்தோர் பலர்க்குமின்ன
கால மென்னு
தெத்தகைய பெருநூலு மெளிதுணர்த்திப் பயனுறுத்தும்
இனையி லாதான்."

"அருத்திமிகு மெனையருகி லிருத்தியருந் தமிழ்நூல்கள்
அறைந்து பின்னர்த்
திருத்துறைசை யமர்தருசுப் பிரமணிய வருட்கடலின்
திருமுன் சாரப்
பொருத்தியனை யான்கருணைக் கிலக்காக்கி யிருபயனும்
பொருந்தச் செய்தோன்
மருத்தபொழிற் சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(உறையூர்ப் புராணம்.)

"எண்ணிய பலவு மாணவர்க் கன்பி னீந்திடு நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னுவலன்."

"தேனாட்சி செய்கவி யானின் செயன்மூற்றுஞ் செப்புமுன்னே
மீனாட்சி சுந்தர வள்ளலை யெங்கள் விழுப்பொருளை
வானாட்சி செய்யப் புரிந்ததென் னேமன் வடிவுகொடு
தானாட்சி செய்திரு வாரூர்த் தியாகசிந் தாமணியே."

(தியாகராசலீலை முகவுரை.)

"பூமலி துணர்ச்சினைக் காமலி கூலப்
பொன்னிமா நதிபாய் சென்னிநாட் டிடைவளம்
நிறையூ ராய வுறையூர்க் குணபாற்
கருமுதிர்ந் தயர்வுறு மொருமக ளுரறத்
தாயான செல்வந் தங்குமாத் தலமாய்த்
துரிசிரா திலங்குந் திரிசிரா மலைபில்
உதித்தொளி மிகுத்தே கதித்துறு மணியும்
மலர்தொறு நறவுகொள் வண்டின மேய்ப்பப்
பலரிடைக் கல்வி பயின்றேங் கண்ணலும்
யாவரு மென்று மேவரும் புலமை
வாய்ந்துநூல் பலமிக வாய்ந்துகிள ரேந்தலும்
சுவைசெறி பனுவல்க ளவைபல வியப்ப
எளிதிற் பாடிய வளிகிளர் சூரிசிலும்
புவித்தலம் வியப்பச் சிவத்தல புராணம்
பலசெய் தோங்குசீர் படைத்தசி ரியனும்
நலமா ணக்கர் பலபேர்ப் புரந்தே
அன்னர் குழாத்திடை நன்னர் மேவி
நூல்பல பயிற்றிச் சால்புறு பெரியனும்
அருத்திகூ ரெனையரு கிருத்திநூல் பலசொற்

றல்ல லகற்றிய நல்லிசைப் புலவனும்
நன்றிபா ராட்டுநர் நடுநா யகமும்
நிலமலி நிறைகோல் மலர்ந்கை ராய
மாட்சிசால் புகழ்மீ னாட்சிசுந் தரப்பேர்
உடையனுங் குவளைத் தொடையனுஞ் சுவைசெறி
இதிலுள நூலெலா மியம்புமா கவிஞனும்."

(பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, உரிமையுரை.)

சென்னை, சின்னசாமி பிள்ளை

" மலையமுனி தவப்பேரே கலிமகளின் தவப்பேரே
மறிநீர் வைப்பிற்
றலைமைபெறு மிவன்சனன மெனப்பலபிள் ளைத்தமிழைச்
சாற்றும் வல்லோன்
குலவில்புகழ் மீனாட்சி சுந்தரநா வலரேறு."

(மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்.)

சுந்தரம் பிள்ளை

" .....நளிர்சிர புரத்தில் வந்த
ஞானசம் பந்தனிகர் மீனாட்சிசுந்தரந லாரியன்."

" அடியார், கண்ணிய தருண்மீ னாட்சிசுந்த ரநங் கடவுள்."

" நாற்கவிக் கிறைமீனாட்சி சுந்தரன்."

" என், அல்லறீர்த் தாண்மீ னாட்சிசுந் தரமால்."

" மெய்ஞ்ஞானக் கடலெனையாண் மீனாட்சி சுந்தரமால்."

(சித்திரச். சத்திரப் புகழ்ச்சிமாலை.)

தி. சுப்பராய செட்டியார்

" மின்னுமணிக் குடந்தையுமை தமிழைச் சொன்ன
மீனாட்சி சுந்தரநா வல்லோன் றன்பாற்
றன்னமில்சீர்த் தலைமைதழைத் தோங்கும் பிள்ளைத்
தமிழ்பிள்ளைத் தமிழாகித் தயங்கிற் றன்றே"

(மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்.)

" பெரும்பொரு ளுளார்க்கே பெரும்பொரு ளுறல்போல்
ஈண்டுபுகழ் செறிய வாண்டுவரு பெரியோன்
பிறைமுடிப் பெம்மா னுறைதரப் பெற்ற
நறையூர் பொழில்சூ ழுறையூர்ப் புராணமும்

சுரும்புபடிந் துண்ண வரும்புக டோறும்
மட்டவிழ் குறுக்கைவீ ரட்டப் புராணமும்
உற்ற பவஞ்சப் பற்றகன் றவர்பலர்
துற்றெளிர் வாளொளி புற்றூர்ப் புராணமும்
உடைத்தெழும் வயன்மடை யடைத்திடக் கருப்புக்
கட்டி யிடும்விளத் தொட்டிப் புராணமும்
சேற்றூர் வீரவய லாற்றூர்ப் புராணமும்
எயிலை யுடுத்தொளிர் மயிலைப் புராணமும்
கமலைத் தியாக ரமல லீலையும்
ஜழியும் பேராக் காழிக் கோவையும்
எருதூர் பரனிடை மருதூ ருலாவும்
மேவுக ழூணைக் காவி னிடத்தருள்
பூண்டமர்ந் தருளகி லாண்டநா யகிக்கும்
உருத்தவத் துறைதெறுந் திருத்தவத் துறைவளர்
கருப்புகல் கடிபெருந் திருப்பிராட் டிக்கும்
முன்னவி லுறையூர் மன்னிய வடியவர்
ஏந்திமதி யமைக்குங் காந்திமதி யுமைக்கும்
தருப்பெரு மணந்தரு திருப்பெரு மணத்துறை
போற்றுவார்க் கருடிரு நீற்றுமை யவட்கும்
பெருவிடைப் பரனரு டிருவிடைக் கழியமர்
தருமரு கனுக்குந் திருமுரு கனுக்கும்
காவடுத் துறைதிரு வாவடு துறையில்
நம்பல மாக நயந்தெழுந் தருளும்
அம்பல வாண வருட்குரு பரற்கும்
பெருநயந் துவன்றிய பிள்ளைத் தமிழும்
அரதன சலத்துறை வரதனுக் கும்மேற்
சொன்னகுரு பரற்கும் பன்னுகலம் பகமும்
விற்குடி கொளுமுடிக் கற்குடிப் பரற்கும்
இதம்புகல் கலிசைச் சிதம்பரேச் சுரற்கும்
சொற்றவா னைக்கா வுற்றவன் னைக்கும்
தருமையில் வளர்தருஞ் சச்சிதா னந்த
குருபர னுக்குமேர் தருதமிழ் மாலையும்
அறைதுறை சையுமரு ணைசிராப் பள்ளியும்
அமரம லற்குநல் யமக வந்தாதியும்
நீலி வனத்துறை நிமலனுக் கும்முரற்
காலிப வனத்துமுக் கட்பரஞ் சுடர்க்கும்
விரிபொருள் கிடந்த திரிபந் தாதியும்

சீருறை பூவா ளூருறை யரற்கும்
நாருறை யூறை நண்ணிய பரற்கும்
தண்டபா ணிக்கும் வண்டமிழ் மதுரை
ஞானசம் பந்த நற்றே சிகற்கும்
உத்தமப் பதிற்றுப் பத்தந் தாதியும்
நறும்பலாச் சோலை யெறும்பி யூரின்
மேவுசோ திக்குவெண் பாவந் தாதியும்
நவின்றமா மதுரையிற் கவின்றருள் ஞானசம்
பந்ததே சிகற்கா னந்தக் களிப்பும்
ஒருகவி யேனு மொழிதர லின்றி
இருளகன் றொளிரு மெல்லாக் கவிகளும்
சொன்னலம் பொருணலஞ் சுவைமிகு பத்திமை
நன்னலம் பல்லணி நலங்கள் செறிந்து
முழங்குற வெளிதின் மொழிபெரு நாவலன்
குலத்திற் குடியிற் குணத்திற் குறையா
நலத்தின் மாண்பி னகுசிவ பத்தியில்
வாய்மையிற் பொறையின் மலிதரு நிறையிற்
றூய்மையிற் கொடையிற் றுகளறு நீதியின்
மயங்குறு பிறப்பி லுயங்கெனை யாண்ட
தயங்குபே ரருளிற் றலைமைபெற் றுயர்ந்தோன்
சந்த மலிந்த செந்தமிழ்க் கரசா
வந்தமீ னாட்சி சுந்தர வாரியன்."

(திருத்தில்லை யமகவந்தாதி)

"மூர்த்திதலந் தீர்த்தமான் மியமுமந்த மூர்த்தியருண்
முறையுங் குன்று
தார்த்திகொள்பா யிரமுதலா நைமிசம்வா ழறவர்பூ
சித்த தீறாப்
பாத்தியபஃ றுறைப்படுபா வாற்புலவ ரியற்றுநூற்
பண்பு தேர்வான்
சேர்த்தியநன் னிறைகோலாப் பலசெய்தோன் புராணமொன்று
செய்தா னன்றே."

'அன்னவன்யா ரெனினறைதுங் கேண்மினக லிடத்தளவாக்
கல்வி யொன்றாற்
றன்னனைய ருளரெனினும் பொறையினாற் றனக்குநிகர்
தானாக் கற்றோன்

பொன்னனைய கவிபாடும் புலமையினும் பாடுநரும்
புவியி லுண்டோ
என்னெனையா முரைப்பமெனப் புலவர்தம்மு ளெடுத்துரைப்பப்
பாடத் தேர்ந்தோன்."

"சின்னூலி னுணர்ச்சியுளோ ரஃதிலோர் செவிதெவிட்டச்
செறிந்து கேட்பிற்
பன்னூலு நனியுணர்ந்தோ ரிவரெனயா வருமதிப்பப்
பழுத்த செஞ்சொல்
முன்னூலும் பின்னூலுந் தலையெடுப்பப் பிரசங்க
மொழிய வல்லோன்
எந்நூலு மிவன்பினெவர் மொழியவல்லா ரெனக்கற்றோர்
இசைப்ப மிக்கோன்."

"அருள்கனிந்த பரசிவமே பொருளெனத்தேர்ந் துலகனைத்தும்
அருகா துய்யத்
தெருள்கனிந்த சைவநெறி நடையாலு முரையாலும்
தெரிக்குந் தூயோன்
இருள்கனிந்த வென்மனத்து மிடையறு தொளிபரப்பி
இருப்போன் கங்கைப்
பொருள்கனிந்த குலதீபன் மீனாட்சி சுந்தரனும்
புலவ ரேறே."

(திருநாகைக் காரோணப் புராணம்.)

சி. தியாகராச செட்டியார்

"நீரேறு செஞ்சடில நின்மலனே பதியென்று
நிலவச் சாற்றும்
நாரேறு ஞானக்லை முதலியநற் கலைபலவு
நன்கு தேர்ந்தோன்
காரேறு மகத்தெனையுங் கற்றோர்சே ரவைக்களத்தோர்
கடையிற் சேர்த்தோன்
சீரேறு மீனாட்சி சுந்தரநா வலரேறு."

(திருவேண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்)

".....பற்று வெனக்கு மறிஞர்
பரவவையி லிடமருளு மீனாட்சி சுந்தரப்
பைந்தமிழ்ப் புலவரேறே."

(மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்)

" .....கல்லா
இருள்பழுத்த மனத்தினரை யெவ்வறிவு முடையரென
இயற்றுந் தூய்மைத்
தெருள்பழுத்த மீனாட்சி சுந்தரநா வலன்."

(பாஸவனப் பதிற்றுப்பத்தந்தாதி.)

".....நாயேன்
தொண்டிருக்குங் கழற்பெரியோன் மீனாட்சி சுந்தரப்பேர்த்
தூய்மை யோன்வெண்
பெண்டிருக்கு நாவனன்றி மற்றொருநா வாற்புகழ்ந்து
பேச லாமோ."

(சித்திரச்சத்திரப் புகழ்ச்சிமாஸ.)

" என்னவதி சயநம்பா லிருந்தபெரும் புண்ணியமென்
றிதுவு மெம்மான்
தன்னனைய வருளாயிற் றடையெவனோ வெனவுவகை
சார்ந்து நின்று
சொன்னயமும் பொருணயமுந் துலங்குபல வணிநயமும்
தூய பத்தி
நன்னயமு மினிதார்ந்து நனிவிளங்கப் புனைவித்து
நல்கி னானால்."

" அனையபெரி யோன்யாவ னெனிற்புகல்வாஞ் சிராப்பள்ளி
அமர்ந்து வாழ்வோன்
கனைகடல்சூ ழுலகிற்றன் பெயர்நிறுவி னோனெல்லாக்
கலையு மோர்ந்து
தனையனைய னாயடைந்தோர் சரணாகி யொளிர்புனிதன்
தக்கோர் போற்றி
வனைபுகழ்ப்பூம் படாம்புனைந்த மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(திருநாகைக்காரோணப் புராணம்.)

" முன்னுளபல் புலவருளும் பின்னுளபல் புலவருளும்
முதியீர் செஞ்சொன்
மன்னுபன்னூ லொன்றொடொன்று தோலாது மாண்புபெற
வகுப்பார் யாரே
என்னினிவர் தமைக்குறிப்பே மினையனே யெனக்குறிப்ப
இசைமை வாய்ந்து
துன்னுநய குணமேலோன் மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(மாயூரப் புராணம்.)

ச. தெய்வநாயகம் பிள்ளை.

" விண்ணுலகத் தமர்ந்துதனை யடைந்தோர்க்கு விரைந்தழியும்
வெறுக்கை நல்கிக்
கண்ணுறுசிற் றின்புறச்செய் தறக்கழிவு கண்டிடுகற்
பகம்போ லாது
மண்ணுலகத் தமர்ந்தடைந்தோர்க் கழிவில்கல்விப் பொருள்வழங்கி
வனைபே ரின்பம்
நண்ணுறச்செய் தறம்பெருக்கு மீனாட்சி சுந்தரப்பேர்
நல்லோ னன்பால் "

" என்னறிவா லின்னவென வறிந்தறிந்து வகுத்துவகுத்
திசைத்தல் கூடாப்
பன்னலமு நனிசிறந்து விளங்கவனைத் தணிந்தபா
மாலை யாய
நன்னலஞ்சே ரொருபிள்ளைத் தமிழ்."

(அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.)

வல்லூர்த் தேவராச பிள்ளை

" அண்ட வருவா யவிர்விராட் புருடனுக்
கெண்டகு சென்னியா விலகுகா ரணத்தாற்
சென்னிப் பெயர்பெறுந் திருநா டதனில்
அம்முடிக் கென்று மழகுறக் கவித்த
பன்மணி முடியிற் பாங்குற வொளிரும்
திரிசிர் கிரியெனுந் திருநக ராளி
கலையுணர்ந் திடலாற் கற்பவ ருளத்தில்
நிலைமுக் குற்ற நிசியைத் துரத்தலாற்
சைவ சமயத் தாமரை மலர்த்தலாற்
புறமதத் துகினம் புறமிடக் கடிதலால்
மதிஞரிற் சிலரிவன் மார்த்தாண்ட னென்றும்
புலவருக் குக்கலி பொலிதரத் தரலாற்
கலாநிதி யாகலிற் கவினளி செயலால்
அறிஞரிற் சிலரிவ னம்புலி யென்றும்
செந்தமிழ் பரப்பலாற் சிவன்புகழ் பாடலால்
ஆகம மனைத்து மறிந்துயர்ந் திடலால்
ஆய்ந்தவர் சிலரிவ னகத்திய னென்றும்
மனநனி மகிழ்ந்து வழங்குவ ரென்ப
கதிரவன் வெய்யோன் கழறிவன் றண்ணியோன்

நகையிழந் தவனவ னகையிழ வானிவன்
எல்லிடை யுரைனவ னெர்போழ்து முளனிவன்
ஆதலி னவனிவற் கன்றிணை யென்ப
மதிகலை தேய்பவன் வளர்கலை யானிவன்
அவன்மா பாதக னிவன்மா புண்ணியன்
அவன்வெங் நோய னிவன்மிகு தூயன்
அவன்பக லைனிடை யவிரொளி பெறுவான்
இவனிபற் கையினி லென்று நிலகுவான்
ஆதலி னவனிவற் கன்றிணை யென்ப
கும்ப முனியோ குறியவ ருகும்
நம்பணைப் பணியிவ னவிலரும் பெரியோன்
மூன்றெனர்நற் சிடணை முனிந்தவன் சபித்தனன்
சீடர்செய் பிழையெலாஞ் சிந்தி யானிவன்
ஆதலி னவனிவற் கன்றிணை யென்ப
... ...
... ...
பகர்சுதந் திரனும் பரசிவ மூதலே
என்போன் றவருக் கின்னருள் புரிவான்
கடுவர வொடுசெழுங் கடுக்கை தவிர்த்து
மடலவிழ் குவளை மலர்த்தா ரணிந்து
பாலலோ சனமும் பனிமதிக் கோடும்
களத்திடைக் கறையுங் காணது மறைத்துச்
சிதம்பர வேண்முனஞ் செய்தமா தவத்தான்
மகிதல முற்றும் வாழ்த்துறச் சுதனு
வந்தன னெனலே வாய்மையா மென்று
தூயவ ரெவருஞ் சொற்றிடுந் தக்கோன்
மீனாட்சி சுந்தரப் பெயர்ச்செவ் வேளே.''

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

பாலகுரு உபாத்தியாயர்

''... ... ...நல்லறிஞ ரேத்தும்
தங்கியசிர் மீனாட்சி சுந்தரதே சிகனெனும்பேர்த்
தமிழ்ச்சிங் கேறை.''

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

தி. க. பெரியண்ணம் பிள்ளை

''நாவிற் சிறந்தவன் மீனாட்சி சுந்தர நங்குருவே.''

(திருக்குடந்தைத் திரிபந்தாதி.)

மேய்யூர், பொன்னம்பல நாயகர்

"கணிவளர் கூந்தற் பரையொடு பரமன்
களித்துவாழ் திருசிர புரியான்
கங்கையங் குலத்தான் செந்தமிழ் வாரிக்
கரைகண்ட நாவலர் பெருமான்
திணிவளர் சைவச் செழுமதம் விளங்கத்
திருவவ தாரஞ்செய் பெரியோன்
செய்யமீ னாட்சி சுந்தர நாமம்
திகழ்தரப் பெற்றசெவ் வேளே."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

புரசை, பொன்னம்பல முதலியார்

"... ... ...சிறந்தசைவ சமயமோங்கத்
தகரநறுங் குழல்பாகன் திருவருளாற் சிராப்பளியென்
தலத்தில் வாழ்வோன்
சிகரவட வரைப்புயத்தெம் மீனாட்சி சுந்தரமால்
திருந்தெந் நாலும்
பகரவலோன்."

(அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.)

மழவை மகாலிங்கையர்

"சிரபுரக்கோன் மீனாட்சி சுந்தரவேள் தன்பெயரின்
சீர்மைக் கேற்ப
வரனுறுநற் பிரபந்த விடயத்து முயர்ந்தெல்லாம்
வல்லோ னனன்."

(அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.)

காரைக்கால் முத்துசாமிக் கவிராயர்

"போராட்டச் செயலுணரா மீனாட்சி சுந்தரனும் புலவன்."

(அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.)

மாயூரம் ந. முத்துசாமி பிள்ளை

"கொத்துமலர்ப் பொழிற்றிருவா வடுதுறையம் பலவாண
சூரவன் பாலே
முத்தர்களும் புகழ்ந்தேத்து மூவகைத்தீக் கையுமுறையே
முற்றப் பெற்றுத்

தத்துவமெய்ஞ் ஞானகலை முதலாய பல்கலையிற்
றழைந்து மேலும்
எத்தலமு மதிக்கவரும் புகழோங்கு நாவலர்கள்
இனிதாப் போற்றும்"

"பொன்னுட்டிற் சுவைமிகுநல் லமுதினுமின் கவிமாரி
பொழியு மேகம்
கன்னுட்டும் புயத்தரசர் முடிதுளக்கப் பேசுகவி
வாண ரூய
தென்னுட்டிற் சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரப்பேர்த்
திறல்வல் லோன்."

(திருநாகைக் காரோணப் புராணம்.)

"இலங்குறுமெய்ஞ் ஞானகலை முதலியபல் கலையுணர்ச்சி
ஏய்ந்து தூய
நலங்குலவு பொறைவாய்மை யருளடக்க முறவாய்ந்து
நலத்தி னின்றும்
விலங்குறுமென் னெயுந்தனது மெய்யடியார் குழுவினிடை
மேவச் சேர்த்தோன்
வலங்குலவு சிரகிரிவாழ் மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(மாயூரப் புராணம்.)

முருகப்பிள்ளை

"... ... ...எளியேன்றீமை
மண்ணியசீர் மீனாட்சி சுந்தரதே சிகன்."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை.)

நாகபட்டினம் வீரப்ப செட்டியார்

"பூமேவு திருநாகைக் காயாரோ கணப்பெருமான்
புராணஞ் சொற்றான்
தேமேவு வீரசைவ சிகாமணியப் பாத்துரைமால்
சிறப்பிற் கேட்கக்
காமேவு சிராமலிவாழ் சைவசிகா மணிஞான
கலைமுற் றேர்ந்து
மாமேவு துணிபமைந்த மீனாட்சி சுந்தரநா
வலவ ரேறே."

(திருநாகைக் காரோணப் புராணம்.)

திரிசிரபுரம் வீராசாகவ செட்டியார்

" இப்புவிசெய் தவந்தானே தந்தைதாய் செய்தவமோ
இசைத்த வாசான்
செப்பமுடன் செய்தவமோ மீனாட்சி சுந்தரவேள்
சேனன மாகி
ஒப்பிலுயர் கல்வியுஞ்சற் குணமுநிறைந் தகிலாம்பை
உபய பாத
வைப்பிலன்பா லினியபிள்ளைத் தமிழுரைத்தான் புலவரெலாம்
மகிழத் தானே."

(அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.)

தாராநல்லூர் வீராசாமி நாயகர்

" அவ்விய மடியார்க் கறுத்தருள் புரிமீ
னாட்சிசுந் தரகுரு பரனே."

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

குளத்தூர் ச. வேதநாயகம்பிள்ளை

" வாதவூ ருதித்தந்நா டிருக்கோவை யுரைத்த
மாணிக்க வாசகரே சிரபுரத்தி லிந்நாள்
ஆதவனிற் ரோன்றிமீ னாட்சிசுந் தரனென்
றரும்பெயர்பூண் டொருகோவை யறைந்தனர்கா ழிக்கே
ஏதமில்தில் லைக்கோவை யாயுவதின் மூத்த
தென்னினுங்கற் பனைநயத்தி லிக்கோவை முன்னும்
மூதறிஞர் வைகலும்பா டப்பாட வாக்கின்
முதுமைகொள்வா ரெனவுலக மொழியுமொழி மெய்யே "

(வேறு)

" திருவமர்கோ வைமீ மகிழ்ந்து வாதவூ ரரைத்தன்பாற்
சேர்த்துக் கொண்ட
பொருவில்சிதம் பரநாதன் மின்னுமொர்கோ வைக்காசை
பூண்டன் னுரை
மருவுசிர புரத்தின்று மீனாட்சி சுந்தரப்பேர்
வழங்கிக் காழிக்
கொருகோவை செய்வித்தான் சிதம்பரநா தன்சேயென்
றுரைத்தன் மெய்யே."

" வித்தகமார் மீனாட்சிசுந்தரவே ளெயொருநூல்
விளம்பு மென்னைப்
புத்தமுதார் நின்வாக்காற் றுதித்தனீ பாடியதிப்
பொருணூ லொன்றே

எத்தனையோ கோவைகண்மற் றெத்தனையோ புராணமின்னும்
எண்ணி னூல்கள்
அத்தனையு மித்தனையென் றெத்தனைநா விருந்தாலும்
அறையப் போமோ."

" பன்னூலு மாய்ந்தாய்ந்தோர் பயனுமுறு துளம்வருந்தும்
பாவ லீரே
நன்னூலோர் மீனாட்சி சுந்தரமா லொருகோவை
நவின்றான் காழிக்
கந்நூலு ளொருபாவி லோரடியி லொருசீரை
ஆய்வீ ராயின்
எந்நூலுங் கற்றவரா யிகபரமும் பெற்றவரா
யிலகு வீரே."

(வேறு)

" தண்டமிழுன் பாலுணர வாசைகூ ரனந்தன்
தனமீய வகையின்றி நின்சேட னாகிக்
கொண்டனனந் நாமமே யகத்தியன்றான் றன்னைக்
கூடாம லுனைமேவிக் குலாவுதமி ழதனை
அண்டலரின் முனிந்ததனாற் றமிழ்முனிவ னெனும்பேர்
அடைந்தனனா தலினகிலத் தியாவருனை நிகர்வார்
வண்டமர்தார் மீனாட்சி சுந்தரவே ளேநீ
வளப்புறவக் கோவைசொலின் வியப்பவரா ரையா."

(வேறு)

" நலம்விளக்கு மீனாட்சி சுந்தரமா லொருகோவை
நவின்றான் சண்பைத்
தலம்விளங்க வவற்குநாம் புரிகைம்மா றெவனழியாத்
தனமே கங்கா
குலம்விளக்குங் கற்பகமே குருமணியே திருவணியே
குணக்குன் றேயிந்
நிலம்விளக்குந் தினகரனே யெனவவனை வாழ்த்திடுவாய்
நிதமு நெஞ்சே."

" கானோடு மிளிர்தாரான் மீனாட்சி சுந்தரமால்
காழிக் கோவை
தேனோடு பாலோடு நிகருமவன் பிரதாபம்
சீர்த்தி யோங்கி

வானோடு மண்ணோடு மற்றோடும் வகையின்றி
வடிவி ரண்டாய்
மீனோடு வான்றிரியும் பானுமதி யென்றுலகோர்
விளம்பு வாரால்.''

'' தண்டமிழ்மூந் நீர்பருகி மீனாட்சி சுந்தரப்போர்த்
தருமக் கொண்டல்
தொண்டர்கள்சூழ் சிரபுரத்திற் பொழிகோவை யெனுமமுதத்
தூய மாரி
மண்டலமும் விண்டலமுங் கரைபுரண்டு திரைசுருண்டு
வருத லேக்கி
அண்டர்தொழும் புகலியிறை தோணியுற்ற னஃதின்றேல்
அமிழ்ந்து வானே.''

'' தேவேநேர் மீனாட்சி சுந்தரக்கோ னெருகோவை
செப்பிப் பாரிற்
ருவேயில் புகழ்படைக்கி னமக்கென்ன வவற்குமவன்
தமர்க்கும் பாடாம்
நாவேகா தேமனனே யவன்சிரைச் சொலிக்கேட்டு
நனியிங் குன்னி
ஓவேயி லாதருங்கா லங்கழித்தீர் பிறவினைமற்
றொன்றி லீரோ-''

(சீகாழிக்கோவை.)

வைத்தியலிங்கபத்தர்

'' தூமேவு தன்னடிய ரொடுநாயி னேனையும்
துரிசறச் சேர்த்தருள்செயும்
சுகுணசிர புரமேவு விமலவெம் மீனாட்சி
சுந்தரப் பேர்க்குரவனே.''

'' ஏர்கொண்ட நதிகுலச் சலதிவந் தமர்மிக்
கேத்துசிர கிரியுதித்தன்
பெஞ்சலின லடியவ ருளத்தஞா னத்திமிரம்
இரியச் சவட்டியருள்செய்
தார்கொண்ட சிவஞான பானுமீ னாட்சிசுந்
தரகுரு பரன்.''

(சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.)

---

* செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - பக்க எண்.]

[மேற்கோள்கள், சிறப்புப் பாயிரங்கள், தனிப் பாடல்கள், நூற் செய்யுட்கள் ஆகிய இவற்றுள் முழுச் செய்யுட்களின் முதற் குறிப்புக்கள் மட்டும் இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.]

* அகத்தியனே, 260.
அடியார் யார், 198.
அண்டரு மூலிவர், 179.
அண்ணுமலையத்தனே, 38.
* அத்தகைய, 321.
அத்திதருங் கவி, 190.
அதிகாரந் தனக்களித்த, 302.
அரிய நாயகம், 303.
அருண்மலி நின், 102.
* அருத்திமிகும், 322.
* அருந்தவஞ் செய்த, 257.
அருவாகி யுருவாகி, 197.
அருவுருவாகிய, 297.
* அருள்கனிந்த, 326.
* அருளொரு, 312.
அரைப்புலித்தோல், 193.
அலங்கொருகைத், 304.
* அலரடியிலிடு, 319.
அளிவளர்குணனும், 141.
அறத்தனிச் செல்வி, 180.
* அறந்தழீஇ, 318.
அன்னமூனிவரன், 231.
* அன்னவன் யார், 325.
* அனம்படியும், 144.
* அனையபெரியோன், 327.
ஆசையிலார்க்கே, 80.
* ஆர்த்த சபை, 82.
ஆரதித் தன்மை, 182.
ஆறுமுக பூபாலா, 52.
இக்கடித நோக்கி, 293.
இகமொன்று களிப்பு, 214.
இத்தகைய வள்ளலே, 306.
இதம்பரவு, 305.
* இந்த மதிதனில், 260.
* இந்த வறச்சாலே, 225.
இந்தவிதம் பூசனை, 199.
இந்தவிதமடியவரை, 198
* இப்புவிசெய், 332.
இரவுவழிநடக்கலாம், 300.
இல்லேனென்றாரும், 81.
* இலங்குறுமெய்ஞ்ஞா, 331.
இலவுவந்த, 110.
இளங்கொடியான, 222.
* இன்றொண்டர் சூழ, 172.
* இன்னம்பரு, 60.
இன்னவடியவர், 198.
* இனமளித்தற்கு, 259.
இனையபுகழ், 306.
உண்மை நலம், 308.
உரவுமலி, 303.
உரியனுடகி, 308.
உரை சிறந்த 304.
உழுவலி, 215.
உள்ளுதோறிழிபை, 178.
* ஊருணிநீர், 147.
* ஊழிற் பெருவலி, 234.
ஊறு தெரிதலுந், 65.
ஊனுடம்புடைய, 180.
* எங்கடுறைசை, 316.
எந்நாடும் புகழ், 76.
எயிலெயன்றட்ட, 85.
எல்லையப்பனைய, 237.
* என்பிழை பொறுத்தரு, 313.
* என்னகத்தில், 159.
* என்னமொழிந், 261.
* எனன வதிசய, 327.
என்னே நானறியேன், 179.
* எனையும் புலவ, 313.
* எனைவைத்தி, 255.
ஏய்ந்தவிளம், 231.
* ஏர்தருசாலி, 229.
ஏலவே யொருப்பட்டு, 178.

* பிள்ளையவர்கள் வாக்கல்லாத செய்யுட்களின் முதற்குறிப்புக்களின் முதலில் இந்த நட்சத்திரக்குறி இடப்பட்டிருக்கின்றது.

ஒண்பா திரிப்புலி, 296.
ஒப்புயர் வில்லவன், 216.
ஒருகழுகும்பர், 85.
ஒருதிருவாவடு 301.
ஒருவருண்டிடு, 214.
ஒன்றளித்தாற் கோடி 80.
ஒன்றளிப்பாய், 80.
ஒன்றுடையோன், 102.
ஓங்குசைவத், 213.
* கடிப்பிகுகண், 81.
கண்ணன் மதனை 146.
* கந்தனேநேர், 257.
கருதுமொருமலமும், 197.
* கறைநிறுத்திய, 210.
கனிவிளவிருக்க, 179.
* காணுதாற் காட்டுவான், 147.
* காணியுங் காணியும், 119.
* கார்க்குன்றுரித்தவர், 240.
* காலேடு மிளிர், 333.
குணங்கொள் செவ்வாய், 201.
* கும்பனெனில், 255.
* குருபரன்றனைக், 313.
குருவருக்கந், 80.
குலவர் சிகாமணி, 291.
* குலவிய பெரும்புகழ், 313.
குலவு முருகக்கடவுள், 230.
குவளையருகதன், 191.
கூடுபுகழ்க்கோமுத்தி, 231
* கொடுக்கச் சடைவற்ற, 23.
* கொத்துமலர்ப், 330.
கொந்துமலர்ப், 301.
கோடேந்துமிள, 307.
சரவணபவ, 297.
* சிந்தையிருள், 312.
சிவபெருமான், 304.
சிறந்தவிராமாயண, 307.
* சின்னூலின், 326.
சீர்பூத்தகயிலாய, 101.
சீர்பூத்தகல்வி யறிவு, 305.
சீர்பூத்தகல்வியுந், 127.
சீர்பூத்த சிவபத்தி, 205.
* சீர்பூத்த நாவலருங், 319.
சீர்பூத்தபுகழ், 298.
சீர்பூத்த விசும்பு, 168.
சீர்பூத்த விரோதி, 306.
சீரடியாள்செய், 195.
சீரார்கழனிச், 298.
* சுத்தமலி, 288.
சுவைபடு கருப்பங்காட்டில், 203.
சுவைபடுமவல் 179.
செங்கையாட்டினர், 64.
செம்மையொன்றில்லா, 180.
செறிதறிலுடை, 214.
செறிபொழிலாவடு, 301.
சொல்லாரும் பிரபல 302.
சொல்லாரும்புனற் 132.
சொற்கொண்ட திரு, 213 [301
சொன்னயமும்பொருணயமும்,
தங்கள் கருத்திடை, 134.
* தண்டமிழ் மூன்நீர், 334.
* தண்டமிழ்மூன்பால், 333.
* தண்ணிய காவேரி, 313.
தந்தை பெயரெடுப்பான், 102.
தந்தையென, 304.
தருவே சிந்தாமணி, 303.
தலையானை, 296.
தலைவராய் நல்லொழுக்க, 132.
தழுவு புகழ், 137.
தளிபுகுந்து, 198.
* தன் கிளையன்றி, 293.
தாணு முடிமேல, 297.
* தான்பிறந்த தந்தையையும், 129.
திருக்கிளர் முனிவன், 229.
திருச்சமயத்துடன், 102.
* திருந்தியவுண்மைத், 313.
* திருந்து தமிழ், 92
திருநெடுமாலன்று, 179.
திருமா மகளும், 200.
* திருவமர்கோ, 332.
திருவாதவூரர், 206.
திருவியலும், 123.
திறப்பாவினைய, 223.
* தீயனெனும் பாம்பு, 100.
துங்கஞ்சார் (கீர்த்தனம்), 164.
தூயநாமத்தருவம், 193.
* தூவலரு மீனுட்சி, 255.
* தென்றனுடன், 96.
தென்னருஞ்சீர், 80.
தேடுகயிலாய, 163.
தேடுமரியயற்கு, 145.
தேமலி துறைசைச், 79.
* தேவேநேர், 334.
* தேனுட்சி செய், 322.
தேனென்றெடுத்து, 303.
நண்ணிய மூகை, 195.
நம்பலமாகும், 125.

நல்லொழுக்கந், 305.
நலம்பூத்த, 231.
* நலம்விளக்கு, 333.
நலமலி செய்கை, 199.
நாட்டஞ் சிவந்தனை, 63.
நாடிய வத்தினத்தில், 199.
நாமத வாரணங், 69.
* நாற்கவியாம், 182.
நிலம் பூத்த, 133.
* நினையடைந்தோர்க், 261.
* நீக்கமிலின்ப, 313.
நெடியபுகழ், 300.
நெற்றியினீறு, 109.
* படிதாங்கு, 264.
* பண்டுமைக்கோர், 35.
பரம்பரையே, 144.
பரமசையோக, 297.
பரவுபுகழ்ச் சின்னம்மை, 307.
* பல்லார் புகழ், 257.
* பன்னூலும், 333.
பாடப் படிக்க, 21.
பாடமுதலாசிரிய, 133.
பாடு தொழிலாளர், 302.
* பார்பூத்த, 261.
* பாவிற் பெரியவன், 257.
* பிணக்கிலாத, 119.
* புண்ணியமெல்லாந், 153.
* புண்ணியமென்கோ, 319.
* புயலிருக்குங் கர, 257.
* புரமாய வென்றருள், 57.
புரமுதல், 194.
பூமவுசிங்கவனம், 201.
பூமேவு தமிழரும்பும், 214.
* பூமேவு திருநாகைக், 331.
பூமேவு நங்கைவளர், 122.
* பெயற்பான்மழை, 82.
பெரும்புங்கவர், 88.
பெருமையிற் பொலியும், 214.
பேசுபுகழ்ச், 167.
* பேரெட்டா, 317.
* பொன்னகரான், 100.
* மந்தரமாளிகை, 261.
மருவுலகங்களி, 230.
மழைபொழியு, 162.
மறிவில்பெருங், 300.
* மன்னும் யுவவருடந், 252.
* மாசாரக்கவி, 226.
* மாமேவு வடமொழி, 258.
* மாமேவு.....வள்ளலாய, 147.
மாமேவு.....வள்ளற், 208.
மாமேவு வான்பிறை, 117.
மாறுவேண்டினர், 214.
மிக்குளபேரிரக்கம், 299.
மிகப் பெரியனாகிய, 232.
* மின்னுமரன், 316.
முதிரு மாக்கனி, 204.
முயலுமாதவரும், 308.
* முன்னுளபல், 327.
* மூர்த்திதலந், 325.
* மெய்க்கேயணியும், 106.
மெய்யாறடைந்து, 304.
மொய் வேலைசூழ், 162.
மோகமாமடவி, 243.
வம்புவனப் (கீர்த்தனம்), 297.
* வரமளிக்கும், 259.
வரைமாதிருக்கும், 39.
வழிவழி யடிமை, 178.
வள்ளிய பங்கயக், 213.
வன்றொண்டன், 299.
வாதவூர்மறை, 195.
வாதவூரடிகளுக்கு, 299.
* வாதவூருதித், 332.
வாய்நத திருவடிக், 219.
* வாரணம் பொருத, 24.
வாராக வனநகில், 298.
* வாழ்ந்ததென்ன, 126.
வாழ்ந்தோமென்று, 300.
* வான்பணிந்தால், 105.
* வான்பூத்த, 259.
வானநாடவர்க்கு, 181.
விட்புனன்முடிமேல், 203.
* விண்ணாடும், 255.
* விண்ணுலகத், 328.
* வித்தகமார், 332.
விரும்பிருகண், 306.
விளங்கதிகாரத்தொடு, 305.
வெள்ளை நிறத்தாற், 59.
வெள்ளைவாரணப், 296.
வெற்றியூரொரு, 85.
வென்ற சீரான்ம, 194.
* வேண்டாமையன்ன, 139.
* வேதாவின்தண்ணிடமோ, 240.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

[எண் - பக்க எண்.]

அக்கினிலிங்க சாஸ்திரிகள் (கஞ்ச
அகத்தியத் திரட்டு, 240. [னூர்) 243.
அகத்திய முனிவர், 53, 181.
அகத்தியன், 328, 333
அகிலாண்ட நாயகி பிள்ளைத்
தமிழ், 318, 324, 330, 332.
அகிலாண்ட நாயகி மாலை, 324.
அச்சுதப்ப நாயகர், 42.
அண்ணாசாமி ஐயர் (சுந்தரப்
பெருமாள் கோயில்), 43.
அண்ணாவாஜபேயர் (திருவிடைமரு
தூர்): இவர் திருவையாறு சம்ஸ்
கிருத காலேஜில் தலைவராக இருந்
தவர், 28
அண்ணாசாமி முதலியார் (புதுச்
அதிசூரன், 188. [சேரி, 126.
அதிவீரராம பாண்டியர், 277.
அநந்தகிருஷ்ண கவிராயர் (விக்கிரம
சிங்கபுரம்), 124, 126.
அப்பாத்துரை முதலியார், 291,
297, 310. [28, 89, 91.
அப்பாதீட்சிதர் (திருவாலங்காடு),
அப்பாப்பிள்ளை (குன்றக்குடி): மணி
மேகலை, சிலப்பதிகாரம் முதலிய
பழைய நூல்களின் ஏட்டுப் பிரதி
களை மிதிலைப்பட்டியிலிருந்து
கிடைக்கும்படி செய்தவர்; சாதுர்ய
மாகப் பேசும் ஆற்றல் வாய்ந்த
வர், 196.
அப்புசாமிப் புலவர், 191.
அப்பைய தீட்சிதர், 28, 89, 243.
அம்பர், 297.
அம்பர்ப்புராணம், 83-4, 212, 283,
அம்பலவாண சுவாமி, 310. [314.
அம்பலவாண தேசிகர், 25, 219,
258, 262, 318.
அம்பலவாண தேசிகர் (சூரியனார்
கோயில்), 218-20 [324.
அம்பலவாண தேசிகர் கலம்பகம்,
அம்பலவாண தேசிகர் பிள்ளைத்
தமிழ், 186, 324, 328.
அம்பலவாண முனிவர், 217.
அம்பலவாணர் துணை, 311.
அம்பிகாபதி 274. [33.
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், 15,
அரதத்தசிவாசாரியர், 28, 243,
289-9 , 292.
அரதத்த சிவாசாரியர் சரித்திரம்,
அரதனசலம் (ரத்னசலம்), 324. [290.
அரிசிலாறு, 142.
அரியநாயகம் பிள்ளை, 303.
அரியிலூர், 1, 5.
அரியிலூர் ஜமீன், 5.
அருணசல கவிராயர் (சீகாழி):
இராமாயண கீர்த்தனம் இயற்றி
யவர், 213. [197.
அருணசல செட்டியார் (சத்திரம்).
அருணசலப்புலவர் (ஏம்பல்), 191.
அருணசலம் பிள்ளை (கலியாண
சோழபுரம்), 304.
அழகிரிசாமிநாயகர், 316.
அறந்தாங்கி, 175.
அஷ்ட நாகபந்தம், 32.
அஷ்டப்பிரபந்தம், 15, 43.
ஆத்மநாத சுவாமி, 172, 175, 181.
ஆத்மநாத பாகவதர், 181.
ஆதி குமரகுருபர ஸ்வாமிகள், 32,
275.
ஆதி கைலாச மாஹாத்மியம், 180.
ஆதியுலா, 60.
ஆவராணி: ஓரூர், 118, 311.
ஆவூர்த் திரிபந்தாதி, 143.
ஆற்றூர்ப் புராணம், 283, 324. [7
ஆறுமுகத்தம்பிரான் (தருமபுரம்),
ஆறுமுகத்தம்பிரான் (திருவாவடு
துறை), 190, 316.
ஆறுமுகத்தா பிள்ளை (பட்டீச்சுரம்),
26, 33, 39, 48, 54, 97, 135, 137,
142, 157, 202, 298.
ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணத்து
நல்லூர்), 253.
ஆறைமாநகர், 317.
இபவனம், 324.
இரகுநாதையர் (காஞ்சீபுரம்), 316.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

இரத்தினசபாபதி மாலை, 4.
இரத்தினம் பிள்ளை (சோழன் மாளிகை) : இவர் ஜீவரத்தினம் பிள்ளையென்றும் வழங்கப்படுவர், 43, 143, 167-8, 205.
இராகவாசாரியர், 7.
இராகவையங்கார், 298.
இராகவையர் (பாபநாசம்), 5, 36.
இராமகிருஷ்ண பிள்ளை (தஞ்சாவூர்), 43, 161, 254.
இராமசந்திர தொண்டைமான், 202.
இராமசாமி ஐயர் (வையை), 96, 254-5.
இராமசாமி செட்டியார் (திரு எவ்வுளூர்), 317. [தஞ்சை), 161.
இராமசாமி பிள்ளை (இலக்கணம்-
இராமசாமிபிள்ளை (மதுரை), 122.
இராமநாதபுரம், 300.
இராமலிங்கத் தம்பிரான், 21, 32.
இராமானுஜ பிள்ளை, 317.
இராமாயணக் கீர்த்தனம், 233.
இராமாயண சங்கிரகம், 307.
இராமாயணம் (கம்பர்), 148, 225.
இலக்கணக்கொத்து, 211.
இலக்கண விளக்கம், 93, 278.
இலக்குமி, 298. [ஓசூர்), 18.
இலஞ்சிக்குமாரர் (இலஞ்சி :
உடையார்பாளையம் ஜமீன், 6.
உத்தமதானபுரம், 3, 36, 62, 183.
உபதேச காண்டம், 108.
உறையூர்ப் புராணம், 283, 322-3.
ஊர்வெண்பா, 233.
ஊற்றத்தூர் (ஊட்டத்தூர்), 240.
ஊற்றுக்காடு, 58.
எட்டையபுரம், 224.
எறும்பியூர் வெண்பாவந்தாதி, 325.
ஏகாம்பரநாதர், 45.
ஏகாம்பரநாதருலா, 60.
ஏலகிரிநாத நாயனார், 188.
ஐயடிகள் காடவர் கோனாயனார், 233.
ஐயாசாமி பிள்ளை (தஞ்சை): இவர் மார்ஷல் காலேஜில் முதல் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர்; திருத்தில்லை யமகவந்தாதிக்கு உரை இயற்றியவர், 43, 161. [95.
ஐயாசாமி பிள்ளை (திருநெல்வேலி),
ஐயாசாமி முதலியார், 317.
ஐயாத்துரை ஐயர், 307.
ஐயாப்பிள்ளை (திருவாரூர்), 311.
ஐயாறப்பபிள்ளை, 304.
ஒட்டக்கூத்தர், 210, 257.
ஒட்டங்காடு: ஓசூர், 171.
ஔவையார், 21, 82, 210.
கச்சியப்ப முனிவர், 44-6, 98, 125, 228-30, 277-8.
கட்டியப்பர் கோயில், 315.
கண்ணப்பத் தம்பிரான், 22.
கணபதி கவிராயர் (திருக்கோகரணம்), 202. [மாள் கோயில்), 43.
கதிர்வேற்பிள்ளை (சுந்தரப் பெரு
கதிரேசச் செட்டியார் (பண்டித
கந்தசாமி, 294. [மணி), 262.
கந்தசாமிக் கவிராயர் (சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவான்), 262.
கந்தசாமிக் கவிராயர் (திருவாவடுதுறை), 2-3.
கந்தசாமி பிள்ளை (வல்லம்), 11.
கந்தசாமி முதலியார், 311.
கந்தபுராணக் கீர்த்தனம், 181.
கந்தபுராணம், 47, 114.
கப்பூர், 258. [277, 287.
கம்பர், 74, 91, 155, 221, 270,
கம்பரந்தாதி, 33, 217, 276.
கம்பராமாயணம், 5, 24, 148, 217-8, 221, 225, 236, 274, 277.
கயை, 248.
கரந்தை : தஞ்சாவூரைச் சார்ந்த தோரூர்; கருந்தட்டாங்குடி யென
கருவூர் (கரூர்), 66. [வழங்கும், 161
கல்லாடம், 130, 161, 274, 276-7.
கல்லாடவுரை, 254.
கல்லிடைக்குறிச்சி, 101, 128.
கலியாணசுந்தரேசுவரர், 125.
கலியாண சோழபுரம், 304.
கலைசை, 324.
கலைசைச் சிலேடை வெண்பா, 33.
கவிகுஞ்சர பாரதியார் (பெருங்கரை): இவர் இயற்பெயர் கோடீசுவர ஐயரென்பது, 181.
கவி வீரராகவ முதலியார், 277.
கழுக்குன்றம், 119.
கற்குடிமாலை, 324.
கனகசபை ஐயர் (கூறைநாடு), 11, 15, 20, 21. [குன்னம), 5, 6.
கனம் கிருஷ்ணையர் (பெரிய திருக்
கஸ்தூரி ஐயங்கார் (கார்குடி), 5.

காசிக் கலம்பகம், 72, 82.
காசிநாதசாமி, 175.
காசிரகசியம், 311, 317-8.
காஞ்சிப்புராணம், 98, 112, 274, 276, 281, 311.
காஞ்சீபுரம், 44-5, 131, 316-8.
காந்தம் - கந்தபுராணம், 73, 108.
கார்குடி: பெரும்புலியூர்த் தாலூகாவிலுள்ள தோரூர், 5, 116.
காரிகை - யாப்பருங்கலக் காரிகை, 5.
காரை: ஓரூர், 209.
காரைக்கால், 118, 330.
காரைக்குடி, 197.
காலகம், 171.
காவேரியாச்சி: பிள்ளையவர்களுடைய மனைவியார், 245.
காளத்தி நாதர், 22.
காளிதாஸன், 155, 246.
காளிராமையர், 58. [(நாகை), 317.
கிருஷ்ணசாமி உபாத்தியாடர்
கிருஷ்ணசாமி செட்டியார் (காரை சின்னப்பண்ணை), 209, 212.
கீழ்வேளூர், 118.
கீழைப்பழையாறை, 41.
குடந்தை, 323.
குடந்தைத் திரிபந்தாதி, 62, 321.
குப்பு முத்தாபிள்ளை, 318.
கும்பகோண புராணம், 63.
கும்பகோணம், 36 - 7, 111, 121, 138 - 40, 148, 271.
கும்பகோணம் காலேஜ், 40.
கும்பேசுவரர், 37.
குமரகுருபரர், 276, 282.
குமாரசாமித் தம்பிரான், 32, 71, 86, 134, 207, 224 - 6, 228, 230, 234.
குமாரசாமி பிள்ளை, 290-91, 293-4.
குருசாமி பிள்ளை, 100-101.
குழந்தைவேற் பிள்ளை (அம்பர்), 210.
குளத்தூர், 332.
குற்றாலச் சிலேடை வெண்பா, 127.
குறுக்கை, 290.
குன்றக்குடி, 196.
குன்றம்: ஓரூர், 5.
குன்றைத்திரிபந்தாதி, 199.
கூறைநாடு, 13, 84.
கோள்ளிடம், 138.
கோச்செங்கட் சோழநாயனார், 209.
கோணப்பெருமாள் கோயில் (கோபிநாதப் பெருமாள் கோயில்), 41.
கோபாலகிருஷ்ண பாரதியார் (முடிகொண்டான்), 6, 12 18.
கோமுத்தி, 310.
கோமுத்தீசுவரர், 167, 244, 271.
கோயிலூர், 298, 305.
கோயிலூர்ப் புராணம், 298.
சக்கரபாணிப் பெருமாள், 37.
சங்கக்கோயில்: திருக்குற்றாலத்திலுள்ள ஆலயம், 18.
சங்கப்புலவர்கள், 270.
சங்கர நமச்சிவாயர்: நன்னூலுக்கு உரை எழுதியவர், 130.
சங்கராசாரியர், 243. [18.
சங்கவீதி: திருக்குற்றாலத்திலுள்ளது,
சச்சிதானந்த தேசிகர்மாலை, 324.
சடகோபையங்கார் (அரியிலூர்), 1, 5, 23-4, 108.
சண்டிகேசுவரர், 129.
சண்பகக் கற்பக விநாயகர், 18.
சண்பகக் குற்றாலக் கவிராயர் (மேலகரம்), 29, 83, 129.
சண்பை - சீகாழி, 333.
சத்திமுற்றப் புலவர், 42-3.
சத்திமுற்றம், 41. [159, 294.
சதாசிவம் பிள்ளை (திரிசிரபுரம்), 39,
சதுர்வேத தாத்பர்ய சங்கிரகம், 289-93.
சந்திரசேகரம் பிள்ளை (திருநெல்வேலி), 18.
சபாபதி தேசிகர் (சுவாமிமலை), 60.
சபாபதி முதலியார் (அஷ்டாவதானம்), 131-2. 318. [318.
சபாபதி முதலியார் (காஞ்சிபுரம்),
சரவண பண்டாரம், 151, 155-6.
சரவண பிள்ளை, 304.
சருக்கரை விநாயகர், 122.
சவராயலு நாயகர் (புதுச்சேரி), 103, 242, 318.
சவரிமுத்தா பிள்ளை (வரகனேரி) 160-61, 242, 293-5.
சவேரிநாத பிள்ளை (காரைக்கால்), 11, 15, 20-21, 52, 54, 56-8, 169, 183, 238-9, 242, 246, 319.
சாமிநாத தேசிகர், 141, 313, 321.
சாமிநாத பண்டாரம், 120, 298.

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி கூசக

சாமிநாத பிள்ளை (நாகம்பாடி), 11.
சாமிநாத முதலியார், 307-8.
சாமிநாதையர் (உத்தமதானபுரம்), 18, 99, 115, 254, 321.
சாமிநாதையர் (கஞ்சனூர்), 206.
சாமிப்பிள்ளை (மூவலூர்), 11.
சாமுத்திரிகா லட்சணம், 265.
சார்ங்கபாணிப் பெருமாள், 271.
சிங்கவனம், 174, 201.
சிங்கவனம் ஜமீன்தார், 201.
சிங்காரவேலுடையார் (தண்ணீர்க் குன்றம்), 191.
சிங்கைச் சிலேடை வெண்பா (சிங்கை-விக்கிரமசிங்கபுரம்), 127.
சித்திர கவிகள் (பிள்ளையவர்கள் இயற்றிய அம்பர்ப் புராணத்தில் உள்ளவை), 215.
சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை, 316-9, 321, 323, 327, 329-32, 334.
சிதம்பர ஐயா (கோயிலூர்,) 298, [305.
சிதம்பரநாதன், 332.
சிதம்பரம், 45.
சிதம்பரம் பிள்ளை (கலியாண சோழபுரம்), 304.
சிதம்பரம் பிள்ளை (குன்றம் கணக்குப் பிள்ளை), 5.
சிதம்பரம் பிள்ளை (சீயாலம்), 11.
சிதம்பரம் பிள்ளை (பிள்ளையவர்களுடைய குமாரர்), 100, 235, 239, 248, 253, 255-8, 262-3.
சிதம்பரேசுரர் மாலை, 324.
சிந்தயச் செட்டியார், 299.
சிபிகிரி, 319-22 331, 334.
சிராப்பள்ளி, 324, 327, 330.
சிராமலை, 321-21, 331.
சிவக்கொழுந்து தேசிகர் (கொட்டையூர்), 36.
சிவகங்கை ஸம்ஸ்தானம். 173, 181.
சிவகுருநாத பிள்ளை: சவேரிநாத பிள்ளையின் பூர்வபெயர், 169.
சிவகோசரியார், 22.
சிவசிதம்பர முதலியார் 303.
சிவஞான முனிவர் (சிவஞானயோகிகள்), 44-5, 98, 228-9, 276-8.
சிவப்பிரகாச சுவாமிகள் (துறைமங்கலம்), 92, 276 - 7.
சிவப்பிரகாச பிள்ளை (இராமானுசபுரம்): கவித்தலம் வேலையர் என்னும் வித்துவானிடம் கல்வி பயின்ற தாண்டவராய பிள்ளை என்பவரின் குமாரர், 140, 143-5.
சிவப்பிரகாசையர் (கூறைநாடு), 11.
சிவராமலிங்கம் பிள்ளை, 212.
சிவாலயதரிசனவிதிச்செய்யுள், 122.
சிவானந்தலஹரி, 243.
சிவாஜி மகாராஜா, 53.
சின்னச்சாமி படையாச்சி, 174-5.
சின்னசாமி ஐயர், 1 5.
சின்னசாமி சாஸ்திரிகள் (திருவாலங்காடு): மேலகரம் சுப்பிரமணிய தேசிகருடன் சம்ஸ்கிருத நூல்கள் பயின்றவர்; செல்வவான், 8.
சின்னசாமி பிள்ளை (சென்னை): இவர் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர், 323.
சின்னத்தம்பியா பிள்ளை, 161.
சின்னம்மை, 307.
சீகாழி, 100.
சீகாழிக் கோவை, 324, 334.
சீகாளத்திப் புராணம், 86-7, 281.
சுத்தாத்தினேசுவரர், 240.
சுந்தரகாண்டம், 5.
சுந்தர சாஸ்திரிகள் (திருவிடை மருதூர்): சைவ சாஸ்திரங்களிற் சிறந்த பயிற்சி வாய்ந்தவர்; மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் திராவிட மஹாபாஷியம் வாசிக்கும் பொழுது உடனிருந்து உதவி செய்தவர், 28. [94, 97.
சுந்தர சுவாமிகள் (கோடகநல்லூர்),
சுந்தரதாஸ பாண்டியர்: சேற்றூர் ஜமீன்தார், 227-8.
சுந்தரம் பிள்ளை, 309, 323.
சுந்தர மகாலிங்கம் பிள்ளை, 123.
சுந்தரலிங்கத் தம்பிரான், 234.
சுந்தரேசர் நெஞ்சமாலை, 181-2.
சுப்பராய செட்டியார் (தி), 312, 323.
சுப்பிரமணிய ஐயர் (தஞ்சை, சதாவதானம்), 182.
சுப்பிரமணிய சுவாமிகோயில் (கும்பகோணம்), 37.
சுப்பிரமணிய தம்பிரான், 107, 172-3, 176, 192, 196, 299.
சுப்பிரமணிய தேசிகர் (மேலகரம்)

25-8, 31-2, 34, 72, 75-7, 79-81, 86 - 91, 96, 101, 107-8, 110 - 113, 117, 121-2, 124-6, 128-30, 134, 146, 163-4, 166-7, 183, 206-8, 215-6, 222, 224, 226-8, 232-5, 241-2, 244 52, 254-8, 280, 287-8 299, 302, 310.
சுப்பு ஓதுவார், 310. [181, 201.
சுப்பு பாரதியார் (சிங்கவனம்), 174,
சுப்பையா பண்டாரம், 149-158,
சுருதி சூக்திமாலை, 290, 292. [204.
சூடாமணி நிகண்டு, 4, 224.
சூத சங்கிதை, 28.
சூரியமூர்த்தியா பிள்ளை, 208.
சூரியமூலை : திருவாவடுதுறைக்கு வடக்கேயுள்ள தோரூர், 117, 120,
சூரியனார்கோயில், 219. [123.
சூரியனார்கோயிலாதீனம், 217.
சேகநாத பிள்ளை, 312.
செங்கணம் : ஓரூர், 1, 5, 287.
செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், 15, 33.
செவ்வந்திப் புராணம், 276.
சென்னை, 314, 323.
சேக்கிழார், 277. [190, 316.
சேக்கிழார் பிள்ளைத்தமிழ், 117, 184,
சேக்கிழார் புராணம், 131.
சேற்றூர் ஜமீன்தார், 123. 227.
சேஷையங்கார் (திருமங்கலக்குடி), 11, 314 - 5.
சைவசித்தாந்த சாஸ்திரம், 26.
சொக்கநாதப்புலவர் (பலபட்டடை), 105. [வேலி), 122.
சொக்கலிங்கம் பிள்ளை (திருநெல்
சொக்கலிங்கையா (காரைக்குடி), 197, 254.
சொர்க்கபுர ஆதீனகர்த்தர், 211.
சொர்க்கபுர மடம், 159.
சோமசுந்தரதேசிகர் (அரித்துவார மங்கலம்), 169.
சோமசுந்தரம் பிள்ளை (திட்டை), 11.
சோழமண்டல சதகம், 82.
சோழன் மாளிகை, 41.
சௌந்தரநாயகம் பிள்ளை, 305.
தஞ்சாவூர், 140, 161, 171.
தஞ்சாவூர் ஸரஸ்வதிமஹால் புத்தக சாலை, 314.
தஞ்சைமாநகரம், 42, 53, 55, 314-5.
தஞ்சைவாணன் கோவை, 104.
தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, [325.
தண்டியலங்காரம், 5, 32.
தண்ணீர்க்குன்றம், 191.
தணிகைப்புராணம், 276.
தமிழ்க் காளிதாஸன், 247.
தரங்கம்பாடி, 305.
தருமபுரம், 7, 324.
தனிப்பாடற்றிரட்டு, 105.
தனுக்கோடி : ஒரு வைத்தியன், 241,
தனுக்கோடி முதலியார், 147, 242.
தாண்டவராயத் தம்பிரான்,
தாம்பிரபர்ணி நதி, 125. [251.
தாயுமானவர், 170.
தாராசுரம், 40.
தாராநல்லூர், 332. [காடு), 90-92.
தியாகராச சாஸ்திரிகள் (திருவாலங்
தியாகராச செட்டியார், 36 - 7, 60, 63, 65, 111-2, 116, 142, 143, 150-56, 204, 252, 267-8, 326. [2.
தியாகராச முதலியார் (குற்றாலம்),
தியாகராசலீலை, 248, 322, 324.
தியாகராசு, 156.
திரிசிரகிரி, 328. (5, 317-8, 332.
திரிசிரபுரம், 1, 7, 159, 277, 314-
திரிசிராமலை, 319, 321-2.
திரிசிராமலை யமக அந்தாதி, 324.
திரு எவ்வுளூர், 280, 317.
திருக்கண்ணபுரப் புராணம், 171.
திருக்கற்குடிமாமலை, 296.
திருக்குடந்தைத் திரிபந்தாதி, 15, 329.
திருக்குற்றாலப் புராணம், 29, 128.
திருக்குற்றாலம், 285. [28-9.
திருக்குற்றால யமகவந்தாதி, 18,
திருக்குறள், 93, 147, 269, 274, 286.
திருக்குறுக்கை, 290, 324.
திருக்கோடிகா, 28, 247.
திருக்கோவையார், 93, 332.
திருச்சிராப்பள்ளி, 38, 114, 118, 138-9, 158, 267, 293.
திருச்சிராமலை, 320.
திருச்சிற்றம்பலக் கோவையார், 127, 130, 266, 277-8.
திருச்செங்காட்டங்குடி, 66.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், 43. [(மதுரை), 290.
திருஞானசம்பந்தர் ஆதீனமடம்

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

திருஞானசம்பந்தர் ஆனந்தக் களிப்பு, 325. [தந்தாதி, 325.
திருஞானசம்பந்தர் பதிற்றுப்பத்
திருத்தில்லை யமகவந்தாதி, 28, 247.
திருத்துருத்தி (குற்றாலம்), 2, 325.
திருத்தொண்டத்தொகை, 184.
திருநஞ்ஞ-பவானி, 213.
திருநாகேச்சுரம், 42.
திருநாகைக்காரோணப் புராணம், 10, 46, 64, 66, 89, 108, 131, 281, 318, 326-7, 331.
திருநெல்வேலி, 18, 299, 302.
திருப்பாதிரிப்புலியூர், 296, 308.
திருப்பாதிரிப்புலியூர் இரட்டைமணி மாலை, 308. [266, 277.
திருப்புகலூர்த் திரிபந்தாதி, 15,
திருப்பெருந்துறை, 158-9
திருப்பெருந்துறைப் பழைய புராணங்கள், 107, 180.
திருப்பெருந்துறைப் புராணம், 107, 137, 158, 299.
திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி, 324.
திருமங்கலக்குடி, 314.
திருமலைராயன் பட்டினம், 41.
திருமலைராயனூறு, 39, 41, 56.
திருமழபாடி, 94.
திருமாளிகைத் தேவர்: ஒரு ஸித்தர்; திருவிசைப்பாக்களியற்றிய ஆசிரியர்களுள் ஒருவர், 166 7.
திருவண்ணாமலை யாதீனம், 196.
திருவந்தபுரம், 141, 212, 228, 313.
திருவம்பர்ப் புராணம், 320.
திருவரன்குளம்: ஒரு சிவஸ்தலம், திருவலஞ்சுழி, 296. [203.
திருவாசகம், 117, 246, 271.
திருவாதவூரடிகள், 131, 134, 173.
திருவாரூர், 118, 217, 311, 322.
திருவாரூர்க் கோவை, 240.
திருவாரூருலா, 60.
திருவாலங்காடு, 28, 89, 91.
திருவாவடுதுறை, 1, 9, 25-7, 85, 161, 217, 221, 230, 266-7, 271, 273, 282, 290, 297, 301-3, 324, 330.
திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா, 232.
திருவாவடுதுறை மடத்தில் நமச்சிவாய மூர்த்திக்குப் பின்பு இருந்த ஆசிரியர் பதினல்வர், 164.
திருவாவடுதுறை மடம், 48.
திருவாவூர்த் திரிபந்தாதி, 141-5,
திருவானைக்கா, 324. [324.
திருவானைக்காப்புராணம், 86, 276.
திருவானைக்காவுலா, 60.
திருவிசைநல்லூர் (திருவியலூர்) ஐயாவவர்கள், 243. [தமிழ், 324.
திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்
திருவிடைமருதூர், 35, 89, 149, 247.
திருவிடை மருதாருலா, 59, 60, 129, 210, 222, 282, 324.
திருவிளையாடற் புராணம், 5, 43, 73, 108, 180, 209, 293-4.
திருவீழிமிழலை, 320. [325.
திருவூறைப்பதிற்றுப்பத்தந்தாதி,
திருவெங்கையுலா, 60.
திருவெண்காடு, 66
திருவெண்டுறை, 192.
திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ் 324, 326.
திருவெண்ணெய்நல்லூர், 311.
திருவெண்பாக்கம், 280.
திருவேங்கடமாலை (திருவேங்கட வெண்பா), 5, 108.
திருவேரகத்துயமகவந்தாதி, 15.
திருவையாற்றுத்திரிபந்தாதி, 96.
திருவையாறு, 42, 94, 97, 161.
தில்லை யமகவந்தாதி (தில்லையந் தில்லைவிடங்கன், 252. [தாதி), 15.
திவாகரம், 210.
துரைசாமி பிள்ளை, 50, 146.
துறைசை (திருவாவடுதுறை), 123.
துறைசையமகவந்தாதி (துறைசையந்தாதி) 15, 28, 37-8, 67, 324.
துறைமங்கலம்: பெரும்புலிபூசைச் சார்ந்ததோரூர், 83, 277.
தெய்வநாயகம் பிள்ளை, 328.
தேவகோட்டை, 197, 299.
தேவராச பிள்ளை, 328.
தேவாரம், 235, 273, 277. [42-3, 69.
தேனுபுரேசுவரர் (பட்டீச்சுரம்),
தொல்காப்பியம், 320.
நடராசப் பெருமான், 246, 281.
நந்தன்: ஓர் அரசன்; திருவம்பரில் வழிபட்டுப் பேறு பெற்றவன், 209.
நந்தன் சரித்திரக் கீர்த்தனை, 233.
நமச்சிவாய கவிராயர் (விக்கிரம

சிங்கபுரம்), 124 126.
நமச்சிவாயத் தம்பிரான், 311.
நமச்சிவாய தேசிகர் (சின்னப் பட்டம்), 101, 164, 252.
நமச்சிவாய பிள்ளை: பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளையின் தந்தையார், 40, 75.
நமச்சிவாய மூர்த்தி: திருவாவடுதுறை ஆதீன ஸ்தாபகர், 71.
நமச்சிவாயம், 312.
நல்லுசாமி பிள்ளை ஜே. எம்., 39.
நவகோடி சித்தவாசபுரம், 310.
நவநீதப் பாட்டியல், 5.
நன்னூல் விருத்தியுரை, 124.
நன்னூற் காண்டிகையுரை, 5,124.
நாகபட்டணம், 291, 314-5.
நாகபட்டினம், 118, 176, 311, 317, 331. [கோணம்), 138.
நாகேசுவரஸ்வாமி கோயில் (கும்ப
நாகைப் புராணம், 310.
நாச்சியார்கோவில், 311.
நாராயணசாமி நாவலர் (சிங்கப்பூர்), 221.
நாராயணசாமி பிள்ளை, 142.
நாராயணசாமி வாத்தியார் (மூத்தாம் பாள்புரம்), 171.
நாலடியார், 30, 82.
நீடாமங்கலம்: ஒரு கொக்கு சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றமையால் இஃது இப்பெயர் பெற்றது; நீடா - கொக்கு, 118, 158-9.
நீலகண்ட தீட்சிதர் (மதுரை), 243.
நீலிவனம் – திருப்பைஞ்ஞீலி, 324.
நெல்லையப்பத் தம்பிரான், 169, 237.
நெற்குன்றவாண முதலியார், 277.
நைடதம், 5, 6, 10, 62.
பக்கிள் துரை, 299, 300.
பகழிக்கூத்தர், 282.
பசுபதிபண்டாரம் (ஆவூர்), 60, 72-8.
பஞ்சநதம்பிள்ளை, 16-7, 26, 34, 37.
பட்டாபிராம பிள்ளை, திரு, 280, 294, 305-6.
பட்டீச்சுரம்: ஒருசிவஸ்தலம்; காமதேனுவின் கன்றுகிய பட்டியென்பது வழிபட்டுப் பேறுபெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது, 9, 26, 30, 33-4, 36-7, 39, 40-43, 52, 62-3, 69, 70, 75, 97, 133-4, 137, 143, 145-6, 156, 158 161, 163.
பட்டுக்கோட்டை, 171, 192.
படிக்காசுப்பிள்ளையார், 209, 297-8.
பர்த்துருகரி சதகங்கள், 122.
பரமசிவத் தம்பிரான், 71.
பவானி: ஒருசிவஸ்தலம், 213.
பழசைப்பதிற்றுப்பத்தந்தாதி, 39.
பழமலைத் திரிபந்தாதி, 15
பழனிக்குமாரத் தம்பிரான்: பிள்ளையவர்கள் மாணக்கருள் ஒருவர்; திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்தவர்; பால வனத்தம் ஜமீன்தாரான பாண்டித் துரை சாமித் தேவருக்குச் சைவ நூல்களைப் பாடஞ் சொன்ன ஆசிரியர்; 169, 172, 174.
பழையாறை 41.
பனசை-திருப்பனந்தாள், 311.
பாடலேசுவரர் ஆசிரிய விருத்தம், 309
பாபநாசம், 3, 5, 36, 125, 171.
பாரதம், 148.
பாலகுரு உபாத்தியாயர், 329.
பாலசுந்தரபுரம், 138.
பாலசுந்தரமுதலியார், 138.
பாலசுப்பிரமணிய ஐயர் (அஷ்டாவதானம்), 199.
பாலசுப்பிரமணிய தம்பிரான் (மாயூரம் கட்டளை), 22.
பாலபோத இலக்கணம், 142.
பாலிவனப் பதிற்றுப்பத்தந்தாதி, 327.
பாலிவனம், 192, 201.
பாவநாச முதலியார் கீர்த்தனை, 233.
பாற்குளம்: ஒரு வைப்பு ஸ்தலம்; சோழ நாட்டிலுள்ளது, 41.
பிச்சுவையர் (வண்டானம்), 226.
பிச்சுவையர் (வேம்பத்தூர்), 172-4.
பிரகதம்பா பாய்ஸாகேப், 202.
பிரமசபை, 305.
பிரம வித்தியா நாயகி பிள்ளைத் தமிழ் (பெரிய நாயகி பிள்ளைத் தமிழ்), 140-141.
பிரமோத்தரகாண்டம், 108.
பிரான்மலை ஓதுவார், 163.
பிள்ளையவர்கள் இயற்றிய நூற்

சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி நேரடு

பெயர்கள், 282-5.
புகலூரந்தாதி, 29, 266, 277.
புகழேந்தி, 270, 287. [202-3.
புதுக்கோட்டை, 90, 175, 192,
புதுவை, 103-4, 318. [325.
பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி,
பெரியசாமி சாஸ்திரிகள் (திருவாலங்காடு), 28.
பெரியண்ண பிள்ளை (கும்பகோணம்), 169, 183, 329. [309.
பெரியநாயகி ஆசிரிய விருத்தம்,
பெரியநாயகி மாலை, 308.
பெரியநாயகியம்மை, 296.
பெரிய புராணம், 22, 41, 73, 96, 116-8, 160, 184-7, 190, 233, 274, 281, 295.
பெரும்புலியூர், 5, 114.
பெருமணம், 324. [330.
பொன்னம்பல நாயகர் (மெய்யூர்),
பொன்னம்பல முதலியார் (புரசை), 330.
பொன்னுசாமி செட்டியார், 273.
பொன்னுசாமித்தேவர், 300-302.
போஜன் (போஜராஜன்), 246.
மகாலிங்கம் பிள்ளை, 2.
மகாலிங்கமூர்த்தி, 207, 223, 234.
மகாலிங்கையர் (மழவை), 330.
மகாலிங்கையரிலக்கணம், 5.
மகா வைத்தியநாதையர், 27,93-6, 116, 129, 254-5. [323, 326.
மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்,
மங்கைநகர் : திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள பேட்டையின் பெயர், 122.
மணவாள நாராயண சதகம், 4.
மணியப்ப முதலியார் : சிவஞான முனிவரை ஆதரித்த செல்வர், 44.
மணிவசன மாஹாத்மியம், 180.
மதவாரணப் பிள்ளையார், 69, 97.
மதுரை, 276, 290, 293, 300, 302, 325.
மதுரைக் கலம்பகம், 291.
மயிலைப்பதிற்றுப்பத்தந்தாதி, 308.
மயிலைப்புராணம், 324.
மயூரகிரி இரட்டைமணிமாலை, 96.
மருதூர் யமகவந்தாதி, 15.
மழவராயனேந்தல் (மழவை), 199,
மறைசையந்தாதி, 15. [201, 330.
மறைஞான தேசிகர், 164.
மறைஞான தேசிகர் கோயில், 31.
மாசிலாமணி தேசிகர், 164.
மாணிக்கவாசகர், 177, 180, 332.
மாதவிவனம் பிள்ளை (திருக்கருகாவூர்), 37.
மாயாண்டி செட்டியார், 291-2.
மாயூரப் புராணம், 47, 50, 108, 327, 331. [330.
மாயூரம், 2, 9, 33, 83, 98, 303-4,
மாரிமுத்தாபிள்ளை(தில்லைவிடங்கன்): புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடுதூது முதலியவற்றையும் சில கீர்த்தனங்களையும் இயற்றியவர், 131, 233.
மீனாட்சிசுந்தரம், 263.
மீனாட்சிசுந்தரம் (தி), 276, 292, 294.
மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், 281, 287, 291, 310-11, 315, 329, 331.
மீனாட்சிசுந்தரேசர், 4.
மீனாட்சியம்மை, 100.
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 15.
முடிகொண்டான் : ஓரூர், 6. [64-5.
முத்தப்பிள்ளை (போஸ்ட்மாஸ்டர்),
முத்தாம்பாள்புரம் - ஓரத்தநாடு, 171.
முத்திநாதன், 188.
முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்,
முத்துக்குமாரபத்தர், 162. [15, 21.
முத்துசாமி ஐயர் (வண்டானம்) 224, 227. [கால்), 330
முத்துசாமிக் கவிராயர் (காரைக்
முத்துசாமி பாண்டியர் : சேற்றூர் ஜமீன்தார், 227.
முத்துசாமி பாரதியார், 161.
முத்துசாமிபிள்ளை(மாயூரம்), 11,330.
முத்துத்தாண்டவராயர் கீர்த்தனை,
முத்துவடுகநாத துரை, 173. [233.
முத்துவடுகநாத தேசிகர், 210-11.
முத்துவீரப்ப பிள்ளை, 173.
முத்தைய தம்பிரான், 248.
முத்தைய பிள்ளை, 311.
முத்தையன் : ஏம்பலென்னும் ஊரில் உள்ள ஐயனாரின் திருநாமம், 191.
முருகப்பிள்ளை, 294, 331.
முருகேசம் பிள்ளை : ஒரு டிப்டி கலெக்டர், 258.
முல்லையந்தாதி, 276.

முழையூர், 41.
மெய்ப்பொருள் நாயனார், 188.
மெய்யப்ப ஐயா, 290-91.
மெய்யப்ப செட்டியார், 197.
மெய்யூர், 330.
மேலைச்சிவபுரி, 262.
மேலைப்பழையாறை, 44, 135.
யாழ்ப்பாணம், 9, 253.
ராமகுட்டி சாஸ்திரிகள், 249.
ராமவர்மா: திருவனந்தபுரம் மகாராஜா, 227.
ராஜாகனபாடிகள், 27. [காடு), 28.
ராஜு சாஸ்திரிகள் (திருவாலங்
ரெட்டிபாளையம், 161.
லண்டன், 227.
வடதளி: தேவாரம் பெற்ற தலம், 41.
வண்டானம்: ஓரூர், 225.
வம்புவனப் பூங்குழல் நாயகி, 297.
வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, 309.
வரகனேரி, 293.
வரதுங்கராம பாண்டியர், 277.
வலயவட்டம், 241.
வள்ளலார் கோயில், 41.
வள்ளி, 309.
வன்றொண்டச் செட்டியார் (வன்றொண்டர்), 114, 127, 176, 184, 197 299.
வஜ்ரகண்ட பாகவதர், 181. [324.
வாட்போக்கிக் கலம்பகம், 28, 273,
வாதவூர், 332.
வாளொளி புற்றூர்ப் புராணம், 324
விக்கிரமசிங்கபுரம், 124.
விசாகப்பெருமாளையர், 143.
விசுவபதி தீட்சிதர் (திருவாலங்காடு),
விநாயகர், 297. [28.
விருத்தாசல ரெட்டியார் (செங்கணம்), 1, 5, 32, 287.
வில்லிபுத்தூரார், 270.
விளத்தொட்டிப் புராணம், 324.
வீரசோழியம், 41.
வீரப்ப செட்டியார், 262, 331.
வீரப்பன், 174-5.
விரபத்திர பிள்ளை (திருநெல்வேலி),
வீரராகவ செட்டியார், 332. [128.
வீராசாமி நாயகர் (தாரா நல்லூர்),
வீழிதாஸ நயினார், 206. [332.
வெங்கைக் கோவை, 169.
வெயிலுவந்த பிள்ளையார் (வெயிலுவந்த விநாயகர்), 108, 110.
வெள்ளவிநாயகப் பெருமான், 296.
வேங்கடாசலஞ் செட்டியார், 290-91.
வேங்கடாசலம் பிள்ளை, 306. [293.
வேங்கடாசாரியர், 302-3.
வேதநாயகம்பிள்ளை, 103-4, 207-8, 242, 255, 257, 303, 332.
வேந்திருக்கைக் கலைமகள் விளக்க இல்லிடம், 314.
வேலாயுதம் பிள்ளை, 208 217.
வேலுச்சாமி பிள்ளை (வெண்பாப் புலி), 131, 183 252.
வைத்தியநாதசாமி பிள்ளை • பிள்ளையவர்களின் பௌத்திரர், 263.
வைத்தியநாத தேசிகர் (குடந்தை), 60, 108; (திருவாரூர்), 277-8.
வைத்தியலிங்க தேசிகர வர்கள் (திருவாவடுதுறை), 263.
வைத்தியலிங்க பத்தர், 334.
வைரவ ஐயா (வெளிமுத்தி), 197.
ஸ்ரீநிவாசாசாரியர், 314.
ஸ்ரீநிவாஸ பிள்ளை (தஞ்சை), 140.
ஸ்வாமிமலை, 59.
ஸாமி ஐயங்கார் (கார்குடி), 5.
ஹரதீர்த்தஸ்தலேசர், 203.
ஹேத்திரத் திருவெண்பா, 233.

DR. T. P. M. LIBRARY, UNIVERSITY



தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
ஆசிரியம்